உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர்

அருளிய



பிரமசூத்திர

சிவாத்துவித சைவபாடியம்.

இது

காசிவாசி. செந்திநாதையரால்

தமிழில் மொழிபெயர்த்து

தேவிகோட்டை

ம-ா-ா-ஸ்ரீ அரு. அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

தமது

திருமங்கலம்

செந்திநாதசுவாமி யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்கஸ்ரீ ஐப்பசிமீ

[illegible]

உபோற்காதம்.

---o---

ஸ்ரீவேதவியாசமுனிவர்பிரான் அருளிய பிரமசூத்திரத்துக்கு ஸ்ரீநீல கண்டசிவாசாரியர் வரைந்தருளிய சைவபாடியம் சைவசித்தாந்தத்துக்கு ஓர் பேராணும் ஒங்கியது. இது அத்தியாயங்களும், பாதங்களும், அதிகர ணங்களும் தம்முள்ளே இயைபுவாய்ப்பச் சிறப்புற அமையப்பெற்றது. சூத்திரங்களைத் தொடர்ந்து பொருட்டிரிவுபடுத்தாது சத்தியார்த்தஞ் செய்யுந் திட்பம் படைத்தது. மகார்த்தங்களையுடைய அளவிறந்த நியாயங் கள் பொதியப்பெற்ற பொற்பினைத் தன்னுள்ளே கொண்டு நிற்பது. எளி தாய லளித மொழிகளாற் றொடுக்கப்பெற்ற பெருமையிற் சிறந்தது. சுருங் கிய சொற்களிலே விரிந்தபொருள் பொதியப்பெற்ற நுட்பம் வாய்ந்தது. சீவரத்தினமாகிய சிவசப்தங்களால் மிகுதியும் புனையப்பெறும் பொலிவினை யுற்றது. திராவிடவேதங்களாகிய தேவாரதிருவாசகமுதலிய அருட்பாக் களின் உண்மைப் பொருள்களைத் தன்னுள்ளே விளங்கக் காட்டுமியற்கை யுடையது. சைவசித்தாந்த சாஸ்திர தத்துவப்பொருள்களைத் தன்னுள்ளே இலங்கவைக்குந் தர்ப்பண நிகர்த்தது. "செவிச்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்று வாழ்த்துமாறு, கேட்போர் செவிகளையெல்லாம் மாதுரி யத்தினல் நிறைத்து ஆனந்தபாஷ்பம் உகுப்பச் செய்வது. சம்சார துக்க சாகரத்துழலும் மாநுடரை முத்திக்கரை நண்ணுவிக்கும் ஓர் அரும் புணை யாய்ப் பொலிந்தது. வறியார்க்கு மகாநிதி வாய்த்தாற் போல, முமூட்சுக் களுக்குத் தன்மீது பேரன்பு மீதூரச் செய்யுமியல்பினையுடையது. எக்கால முந் தன்னைச் சிரவணஞ் செய்தலாதி ஞானபூசையிற் றலைப்பட்டோரை நித்தியாசன ஞானயோகத்தில் முதிர்ந்துநிற்க உந்துவது. எவ்வுலகுக்கும் மேலாகிய சிவபுரத்தின்கண்ணே தேகவியோககாலத்தில் நீடு வாழச்செய் வது. இத்துணைப் பெரிய அரியபாடியம் வடமொழியிலிருப்பதால் இதன் மேன்மை யாவரும் அறிதல் கூடாமையின், இதனைத் தமிழ்வசனநடையில் மொழிபெயர்த்து அச்சிலேற்றிப் பிரகடனஞ் செய்ய வேண்டுமென்னும் ஆசையினல் மீதூரப்பெற்றேம். அறிவினலும், பொருளினலும், மற் றெவ்வாற்றானும் வலி குன்றிய எம்போலியர்க்கு அங்ஙனம் பிரகடனஞ் செய்தல் பெரிதும் கஷ்டமாயவிடத்தும், "பாருக்குளே கலியுகத்திலே கண்கண்ட பரமதெய்வமும்," "செந்தின் மேய வள்ளிமணளா" ருமாகிய செந்திநாதசுவாமியின் திருவருள்வன்மையால் இது முற்றுப்பெற்றதெனச் சிவநேயர் யாவரும் உணர்ந்துகொள்வாராக.

அங்கங்கே மொழி பெயர்ப்புக்களிற் பிழைகள் நுழைந்திருப்பின், அவற்றை அன்பர்கள் எமக்குத் தெரிவிப்பார்களாயின், இரண்டாம் முறை அச்சிடுங்கால் திருத்தி அச்சிடுவிப்பேம்.

இப்பாடியத்தில் அங்கங்கே மொழி பெயர்ப்பில் நேர்ந்த பிழைகளைத் திருத்தி மிகுதியும் உதவிபுரிந்த மதுரையைச் சார்ந்த பழங்காநத்தம் பிரம்மஸ்ரீ சே. சேஷசாஸ்திரியாரவர்கட்கு யாம் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம்.

திருப்பரங்குன்றம், பிலவங்கஞு ஐப்பசிமீ } ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

குறிப்புவிளக்கம்.

இரு. சங்
இரு. வே } = இருக்குவேதம்

இலிங். உத் = இலிங்கபுராணம் உத்தர பாகம்

ஈசா = ஈசாவாசியோபநிடதம்

ஐத = ஐதரேயோபநிடதம்

கட = கடோபநிடதம்

கண். சா = கண்ணுவசாகை (பிருகதாரணியோபநிடதம்)

கந். உமை = கந்தபுராணம் உமைவரு படலம்

கந். அன = கந்தபுராணம் அனந்தன் சாப நீங்கு படலம்

கவு. த = கவுதம தருமசூத்திரம்

காமி. மந் = காமிகாகமம் மந்திராவதாரப் படலம்

கூர் = கூர்மபுராணம்

கேந = கேநோபநிடதம்

கைலா = கைலாசசங்கிதை

கைவ = கைவல்லியோபநிடதம்

கௌஷீ = கௌஷீதகிப்பிராம்மணம்

சங் = சங்கராசாரியர் சூத்திரபாடியம்

சங். சம் = சங்கரசங்கிதை சம்பவகாண்டம்

சங். த = சங்கரசங்கிதை தக்ஷகாண்டம்

சத. பி = சதபதப்பிராம்மணம்

சாந் = சாந்தோக்கியோபநிடதம்

சுவே = சுவேதாசுவதரோபநிடதம்

சௌர = சௌரபுராணம்

தென். சிவ. போ = தென்மொழிச் சிவஞானபோதம்

தை.
தைத். க } = தைத்திரீயோபநிடதம் சிக்ஷாவல்லி

தைத். உ = தைத்திரீயோபநிடதம் பிரமானந்தவல்லி

தைத். ந = தைத்திரீயோபநிடதம் பிருகுவல்லி

தைத். சங் = யசுர்வேதம்

நன் = நன்னூல்

பவுட் = பவுட்கராகமம்

பா. வி = பாணினி வியாகரணம்

பா
பார. அநு } = பாரதம் அநுசாசனி பருவம்

பிரு = பிருகதாரணியோபநிடதம்

பிர = பிரசிநோபநிடதம்

பெரி. கண் = பெரியபுராணம் கண்ணப்பநாயனர் புராணம்

மகா
மகாநா. } = மகாநாராயணோபநிடதம்

ம. ஆ = மகாபாரதம் ஆதிபருவம்

மநு = மநுஸ்மிருதி

ம. து = மகாபாரதம் துரோணபருவம்

முண் = முண்டகோபநிடதம்

மைத் = மைத்திராயணோபநிடதம்

யசு. வே = யசுர்வேதம்

வட. சிவ. போ = வடமொழிச் சிவஞானபோதம்

வரு = வருணபத்ததி

வாயு. ச. பூ
வாயு. பூ } = வாயுசங்கிதை பூருவபாக

வாயு. உத் = வாயுசங்கிதை உத்தரபாகம்

வி = வித்தியேசுவரசங்கிதை

வே. சூ = வேதாந்தசூத்திரம் (பிரமசூத்திரம்)

☞ இலக்கம் என்று குறிக்கப்படுவன உபநிடத உபக்கிரமணிகையினும், பிரமசூத்திர உபக்கிரமணிகையினுங் குறிக்கப்பட்டவைகளேயாம்.

உ

சிவமயம்.

பிரமசூத்திர

சிவாத்துவிதசைவபாடியம்

அருளிய

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்.

பிரமசூத்திரம்.

"சிவபெருமான் பிரமா விஷ்ணு என்னும் இருவரையும் விளித்து, நீவிர் இருவரும் முறையே மறுவும் வியாசருமாகத் துவாபரயுகங்கடோறும் உதித்து, வரையறைப்படாத வேதங்களையும் சாஸ்திரங்களையும் (உபநிடதங்களையும்) சுருக்கி, கலியுகத்திலே அறிவு சுருங்கிய மானுடர் அறிவுக்கேற்றவாறு (அந்தக்) கன்மத்தையும் பிரமத்தையும் விதிக்குஞ் சாஸ்திரங்களைச் சூத்திரரூபமாக மற்றைய இருடிகளோடியைந்து விரைந்து செய்யுங்கள்" என்று ஆஞ்ஞாபித்தனர்.

𑌤𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 𑌮𑌹𑌾𑌦𑌵𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌹𑌰𑌿𑌣𑌾 𑌸𑌹। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 𑌵𑌿𑌧𑍇 𑌯𑍁𑌵𑌾𑌂 𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌯𑍁𑌗𑍇। 𑌵𑍍𑌯𑌾𑌸𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌵𑍇𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌤𑍇 𑌯𑍁𑌵𑌾𑌂। 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑍇𑌣 𑌤𑍇𑌨 𑌯𑌥𑌾 𑌨𑍃𑌣𑌾𑌂। 𑌕𑌲𑌿𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪 𑌵𑌿𑌹𑍀𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇। 𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑌿𑌃। 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌶𑌿𑌵𑌃 (சங். சம். உ. கஅ—உக)

என்று கூறப்பட்டது. ஆகவே, சிவபெருமான் ஆஞ்ஞாபிக்க, விஷ்ணு தமக்குரிய பல கலைகளுள்ளே ஓர் கலைகொண்டு வியாசராகத் திருவவதாரஞ் செய்து பிரமசூத்திரஞ் செய்தருளினர்.

பிரமசூத்திரஞ் செய்யுமாறு ஆஞ்ஞாபித்தவர் சிவபெருமான். இவ்விஷயத்தை உணர்த்திய கந்தபுராணமும் சிவபுராணத்ததே.

𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌨𑌵𑌿 𑌸𑌜𑍍𑌜𑌨𑍈𑌃।

(கைலா. அ. அ௫)

"அதாதோ பிரம்ம ஜிஞ்ஞாசா" எனப் பிரமசூத்திரத்து முதற்சூத்திரத்தை எடுத்துக்கூறிய கைலாசசங்கிதையும் சைவபுராணத்ததே. சிவபெருமானால் ஆஞ்ஞாபிக்கப்பட்ட விஷ்ணுவும் (௩௫௩-ஆம் இலக்கத்திற்) கூறப்பட்டவாறு சைவரே. சூத்திரஞ் செய்த முனிவராகிய வியாசருஞ் சைவரே. அவரால் இயற்றப்பட்ட பிரமசூத்திரமும் (௩௭௩—௪௩அ-ஆம் இலக்கம் வரையிற் கூறப்பட்டவாறு) சிவபரத்ததேயாம்.

சிவாசாரியர்.

𑌗𑍌𑌰𑌵𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 𑌸𑌂𑌜𑍍𑌞𑍇𑌷𑌾 𑌶𑌿𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾।
𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌚𑌰𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚𑌾𑌚𑌾𑌰𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿। 𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 𑌚
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌨 𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 (இலிங். உத். ௨௦. ௧௧, ௨௦)

"கவுரவமாயிருத்தலினாற் சிவாசாரியர்க்கு குரு என்னும் இப்பெயர் எய்திற்று; மற்றோர் பிரகாரத்தால் அன்று; தாம் நன்னெறிக்கண் ஒழுகிப் பிறரையும் நன்னெறிக்கண் ஒழுகச் செய்கின்றமையானும், சாஸ்திரார்த்தங்களை (இதயத்திலே) தொகுத்துவைத்தலானும் ஆசாரியர் எனப்படுகின்றனர்" என்று இலிங்கபுராணத்திற் கூறப்படுகின்றது.

[illegible]

"நிஷ்களசிவத்தினின்று உதித்த சதாசிவர் பிந்துக்ஷோபஞ் செய்த காலத்து, சைவகாயத்திரி உண்டாயிற்று; இந்தக் காயத்திரியினால் அதிட்டிக்கப்பட்டது சைவசந்தானம்; மேலும், அவ்விந்துக்ஷோபகாலத்திலே சுத்தவசரீரிகளாகிய *வித்தியேசுரர் என்மர் உதித்தனர்; இவருள்ளே சுதந்தத்துவத்தினராகிய அனந்தேசுரராற் பிரமாண்டமத்திய கைலாசாதிபதித்துவத்தோடு ஸ்ரீகண்டருத்திரர் உதித்தனர்; ஸ்ரீகண்டருத்திரரினின்று விஷ்ணுவும், விஷ்ணுவினின்று பிரமாவும், இவரினின்று இந்திராதி தேவரும்

---

* வித்தியேசுவரர் என்மராவார் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனவிவர்.

உற்பத்தியாயினர்; மீட்டும் ஸ்ரீகண்டருத்திரரினின்று துருவாசர் உதித்தனர்; இவரோடு ஸ்ரீகண்டராலே தீக்ஷிக்கப்பட்ட இருடிகள் கவுசிகர், காசிபர், பாரத்துவாஜர், கவுதமர், அகஸ்தியர் என்னும் ஐவர். இவர்களுக்கும் இவர்கள் சீடர்களாகிய சநற்குமாரர், சநகர், சநாதனர், சநந்தனர் என்போர்க்கும் பாரதவருஷத்துப் பரதகண்டத்திலே முக்கியமாகிய கதம்பவிருக்ஷத்தினுல் அலங்காரமுற்ற ஆமர்த்தகம் எனப் பெயரிய ஆச்சிரமம் ஒன்று துர்வாசரால் ஸ்தாபிக்கப்பட்டது" என்று சித்தாந்தசாராவளியிற் கூறப்படுகின்றது.

பஞ்ச கோத்ர ஸமுத்பந்நா ஸுஸ்நாதா ச ப்ரஜாபதே| ப்ரயதோ ஹ்யநாதிசைவஸ்து ஸ சைவஸ்து ஸதாசிவ:| ஆதிசைவோ த்விதீயஸ்து ஸ சிவப்ராஹ்மண: ஸ்ம்ருத:| ஆதௌ ஸதாசிவேநைவ தீக்ஷித ஸ்த்வாதிசைவக:| கௌசிக: காச்யபச்சைவ பாரத்வாஜோ (அ)த கௌதம:| அகஸ்த்யச்சைவ பஞ்சைதே பஞ்சவக்த்ரேண தீக்ஷிதா: (கார. பூரு. உகூ. க—ச)

(அநாதிசைவர், ஆதிசைவர், *மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர் என்னும் ஐவருள்ளே) அநாதிசைவர் சிவபெருமான், இவர் சதாசிவர் எனப்படுவர்; ஆதிசைவர் சிவப்பிராமணர்; இவர்கள் சதாசிவராலே தீக்ஷிக்கப்பட்ட கவுசிகர், காசிபர், பாரத்துவாஜர், கவுதமர், அகஸ்தியர் என்னும் ஐவர்" என்று காரணாகமங் கூறுகின்றது.

சதாசிவமூர்த்தியுடைய ஐம்முகங்களினின்றும் தீக்ஷிக்கப்பட்டவர் கவுசிகர் முதலாயினோர் என்று இங்கே கூறி, மேலே ஸ்ரீகண்டமூர்த்தியால் உபதேசிக்கப்பட்டவர் கவுசிகர் முதலாயினோர் என்று கூறினமை மலைவாம் பிறவெனின், ஆகாது;

தத்ஸம்ஸ்த்யாயிஷ்டித ஸ்ருஷ்டிஸ்தித்யேஷு ரவி விஷ்ணித:| தஸ்ய நாமாநி நாமாநி தத்ரூபேவ ஸ்ருஷ்டாயுக் காரணக:| தத்ஸம்ஹ்ருத்யவஹாரஸ்து ததா ஞாவசிவாத்மக: (வாயு. பூரு. கஉ. கூ, எ)

"பரமசிவனுக்குரிய எல்லாப் பெயர்களும் வடிவமும் தொழிலும் பெற்றுடையர் ஸ்ரீகண்டருத்திரர்" என்று வாயுசங்கிதாரப்பிருங்கண்ணங் கூறு

* மகாசைவராவார் பிரமாவின் முகத்திற்றோன்றிய வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றவர்; அநுசைவராவார் சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியரும் வைசியரும்; அவாந்தரசைவராவார் சிவதீக்ஷை பெற்ற சூத்திரர். பிரவரசைவராகிய சிவதீக்ஷை பெற்ற அநுலோமரும், அந்தியசைவராகிய சிவதீக்ஷை பெற்ற மற்றையோரும் உபலக்ஷணவினைத்தமுவப்பட்டனர்.

மாறு, இவர்க்குஞ் சதாசிவர் என்னும் பெயரும், ஐம்முகங்களும், பிறவும் உளவாம் என்று கோடற்பாற்றுமாதலின்.

பெயரினால் ஒற்றுமையுடையரேனும் சிவசிருஷ்டர்களாகிய கவுசிகர் முதலாயினோரும் வேறு ; பிரமசிருஷ்டர்களாகிய கவுசிகர் முதலாயினோரும் வேறு.

இந்தச் சிவசிருஷ்டர்களாகிய கவுசிகர் முதலிய ஐந்து இருஷிகோத்திரத்தில் ஜனித்துச் சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் பெற்றவர்களே சர்வாதிகாரிகள் என்றும், உத்தமோத்தம சிவாசாரியர்கள் என்றும், பரார்த்தப்பிரதிஷ்டை பரார்த்தபூசைகள் செய்தற்கு உரியவர்கள் என்றும், மற்றையோர் அதற்கு உரியரல்லர் என்றும், அதனால் அவர்களே வேதாகம விற்பன்னர்களாகிக் கிருதகிருத்தியர்களாய் முப்பொழுதுஞ் சிவலிங்கத்தை அர்ச்சித்தலான் முப்பொழுதுந் திருமேனி தீண்டுவோர் என்றும் சொல்லப்படுவர். இவர்களே, "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" என்று ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனாரும்,

> நெறிவார் சடையரைத் தீண்டிமுப் போதுநீ டாகமத்தி
> னறிவால் வணங்கியர்ச் சிப்பவர் நம்மையு மாண்டமரர்க்
> கிறையாய்முக் கண்ணுமெண் டோளுந் தரித்திறில் செல்வத்தொடு
> முறைவார் சிவபெரு மாற்குறை வாய வுலகினிலே.

என்று நம்பியாண்டார்நம்பியும்,

> செப்பலருந் தவமுடைய செம்மையாள
> சிறுகாலே மலர்வாவி திகழமூழ்கி
> யொப்பிறிரு நீறணிந்து நியதியாற்றி
> யோவாமே யைந்தெழுத்து முரைத்துமேன்மைத்
> தப்பில்சிவா கமவிதியா லின்பாலன்பாந்
> தன்மையா னன்மையாந் தகையாரென்று
> முப்பொழுதுந் திருமேனி தீண்டவல்ல
> முறைமையார் பிறவிதெறுந்திறமையாரே.

என்று உமாபதிசிவாசாரியசுவாமிகளும்,

> தெரிக்குணரின் முப்போதுஞ் செல்கால நிகழ்காலம்
> வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
> விரும்பியவர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே யுரியனவப்
> பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ.

என்று சேக்கிழார்நாயனாரும் அருளிச்செய்தமை காண்க.

மேலே கூறிய ஆமர்த்தகமடத்தினின்று புஷ்பகிரி, கோளகி, இரணபத்திரம் என மூன்று மடங்கள் பிரிந்தன. ஆமர்த்தகமுதலிய நான்கு மடங்கட்கும் சநற்குமாரர் முதலிய நால்வரும் அதிபதிகளாயினர்.

ஆமர்த்தகமடத்துக்கதிபதி சநற்குமாரர்; அதற்குக் கதம்பவிருக்ஷம் உள்ளது; அவர் சந்ததியார் அம்மடத்துக்கதிபதிகளாயினர்.

புஷ்பகிரிமடத்துக்கதிபதி சநகர்; அதற்கு அர்ச்சனவிருக்ஷம் உள்ளது; அவர் சந்ததியார் அம்மடத்துக்கதிபதிகளாயினர்.

கோளகிமடத்துக்கதிபதி சநாதனர்; அதற்கு ஜம்புவிருக்ஷமுள்ளது; அவர் சந்ததியார் அம்மடத்துக்கதிபதிகளாயினர்.

இரணபத்திரமடத்துக்கதிபதி சநந்தனர்; அதற்கு வடவிருக்ஷம் உள்ளது; அவர் சந்ததியார் அம்மடத்துக்கதிபதிகளாயினர்.

கோதாவரிதீரத்திலே மந்த்ரகாளீசுவரத்தைச் சூழ்ந்து அவ்வாமர்த்தக முதலிய *நான்கு மடங்களும் இருந்தன.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர்.

இந்நான்கு மடங்களுக்கு அதிபதிகளாயிருந்த சிவத்துவிஜர் எனப்படும் சிவாசாரியர் வகுப்பைச் சார்ந்தவர் பிரம சூத்திர சிவாத்வைத சைவபாஷியஞ் செய்த ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்.

[illegible]
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] (௫)

"துருவாசர், பைங்கலசிவாசாரியர், உக்கிரஜ்யோதிசிவாசாரியர், சத்தியஜ்யோதிசிவாசாரியர், ஸ்ரீவிஷ்ணுகண்டசிவாசாரியர், வித்தியாகண்டசிவா

---

* இவ்வண்ணம் [illegible] ஆசாரியர்களுக்கும் புஷ்பகிரி முதலிய மடங்கள் இருந்தனவாக அறியப்படுகின்றது.

[illegible] ।
[illegible] ।

([illegible])

என்னுஞ் சுலோகத்தினுல் தேசிகர் என்பதும் சிவாசாரியர்க்கு மற்றொரு பெயர்.

சூரியர், இராமகண்டசிவாசாரியர் பெயர்களோடு ஸ்ரீகண்டசிவாசாரிய ருடைய பெயரும் ஒருங்கு காணப்படுகின்றது.

கூர்மபுராண பூர்வபாகத்து ஐம்பத்துமூன்றும் அத்தியாயத்தினும், இலிங்கபுராண பூர்வபாக ஏழாம் அத்தியாயத்தினும், (கூஎஉ-ஆம் இலக்கத் திற் கூறப்பட்டவாறு) வாயுசங்கிதையினுங் காணப்படும் சுவேதர் முதலிய யோகாசாரியர்களுள்ளே முதற்கணின்ற சிவாவதாரரூப சுவேதாசாரியரே ஸ்ரீநீலகண்டசிவாசாரியருடைய ஆசாரியர். இவ்வுண்மை பாடியத்து முதற் கண்ணும் இறுதிக்கண்ணும் அச்சுவேதாசாரியரை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் வழிபட்டிருத்தலானும், அது பின்னர்ச் சிவார்க்கமணிதீபிகையில் விளக்கப் பட்டமையானும் அறியப்படும். இவர் இன்ன இடத்திலே, இன்ன காலத் திலே அவதரித்தார் எனப் புலப்படவில்லை. அங்ஙனமாகவும், கோகர்ணத்தி லே ஏகான்மவாதியாரோடு வாதஞ் செய்தனர் என்று சங்கரதிக்விஜயத் திற் கூறப்படுகின்றது. இது அசங்கிக்கற்பாலதொன்றன்று.

ஸ்ரீநீலகண்டபாடியத்து (கூ. கூ. கூஉ) ஆஞ் சூத்திரபாடியத்திறுதியினும், (௪. ௧. கக) ஆஞ் சூத்திரபாடியத்திறுதியினும் "கேசித்" (கெஶிசு) என்றற் றொடக்கத்தனவாகவும், (௪, கூ. க) ஆஞ் சூத்திரபாடியத்திறுதியின் "நிரங்வ யோபாசகாநாம்" (நிரஙயொவாஸகாநாஂ) என்றற்றொடக்கத்தனவாக வும், (சிவார்க்கமணிதீபிகையில் கூ. கூ. கூஉ. ஆஞ் சூத்திரபாடியத்திறுதி யில் "கேஷாஞ்சித்" (கெஷாஂசிதூ) என்றற்றொடக்கத்தனவாகவும்) வரை யப்பட்டவை பிரக்ஷிப்தவாக்கியங்களேயாம். இவை ஏகான்மவாதிகளாலே தம்மதச் சார்பாக நமது பிரமசூத்திர சைவபாடியத்திறுதிகளிலே முன்பின் பாடியக்கருத்துக்கு முற்றும் விரோதமுறப் புகுட்டப்பட்டன என்பது ஒரு தலையாம். இங்ஙனமாயின், ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் அவ்வேகான்மவாதி யார் காலத்திருந்து, கோகர்ணத்திலே அவரோடு வாதித்து அபசயப்பட் டிருப்பாரேல், அச்சிடப்படாதனவாய், கைகளினால் மிகச் சிரமத்தோடு எழு தப்பட்டுச் சேமிக்கப்பட்டுச் சிற்சில்வாய்க் கிடந்த சைவபாடிய ஏடுகள் அக் காலத்தே [illegible] ஏகான்மவாதிகளாலே த்வம்சஞ் செய்யப்படாது உயிரோடு விடப்பட்டிருப்பனவாமோ !! ஆகலின், நமது சிவாசாரியர் ஏகான்மவாதி யார் காலத்துக்கு முற்பட்ட நெடியகாலத்திருந்தார் என்றும், அக்காலத்தி லே நீலகண்டபாடியம் மிகுந்தும் பரந்து படிக்கப்பட்டிருந்தன என்றும், அ[illegible] பிரதிகளுட் புகுட் டுரை வாக்கியங்களை இயைக்க வேண்டி நேர்ந்தன என்றும் அநுமானிக்கப் படுகின்றன. இந்நீலகண்டபாடியத்தை ஏகான்மவாதியார் படித்துப் பார்த்து அதின் உண்மைப்பொருள்களை நன்கு அறிந்துகொண்ட பின்னர்த்தான், ஏ[illegible] சூத்திரங்கட்கு அப்பாடியத்தைக் கண்டித்தல்போலக்,

...டுதற்கு ஒவ்வோர் அத்தியாயத்து ஒவ்வோர் பாதத்திலும் சிற்சில சூத்திரங்களைப் பிளந்தும், சிற்சிலவற்றை ஒழித்தும், சிற்சிலவற்றைப் புதிதாகப் படைத்தும், சிற்சில அதிகரணங்களை நீட்டியும், சூத்திரங்களுக்கு ஒவ்வாத் திரிபர்த்தங்கள் செய்தும் ஏகான்மவாதபாடியஞ் செய்தனர்.

கங்காதீரத்திலே ஏகான்மவாதியாரோடு *வேதவியாசர் வாதஞ்செய்து, அவ்வேகான்மவாதியாலர இந்த வியாசர் வாதத்திலே எட்டுநாள் வரையும் செயிக்கமாட்டாதவராயவிடத்தும், அவ்வேகான்மவாதியார் வேண்டுகோளுக்கிரங்கி அவ்வியாசர் அவர் பாடியத்தை ஒரு முகூர்த்தத்துள்ளே உற்றுநோக்கி, "சங்கரரே! நீவிர் போமும்!! இன்னிரவு [illegible] உள்ளவாறு இங்ஙனம் வெளிப்படுத்தலாற்றீர்! இதனைப் பார்த்ததினால் எமது சந்தேகங்களும் ஒழிந்துபோயின" என்று சங்கரவிஜயத்தில் [illegible] படலான், வேதாந்தசூத்திரத்துக்கு ஏகான்மவாதியார் செய்தது [illegible] மெய்ப்பொருள் பொதிந்த தென்பது ஏகான்மவாதிகள் கருத்து [illegible]

இராமாநுசாசாரியர் தாம் பிரமமீமாஞ்சைக்கு வைணவபரமாகப் பாடியஞ் செய்தற்குப் போதாயனவிருத்தி வேண்டும் என்று எங்குந் தேடி அகப்படாமையின், அவர் சாரதாபீடத்துக்குப் போக, அங்கே சரசுவதி அதனை எடுத்துக்கொடுக்கப்பெற்று, அதனை ஒருதரம் விமரிசித்து, பின்னர் அவ்விருத்தியின் தாற்பரியத்தை அநுசரித்துப் பாடியஞ் செய்தனர் என்றும், சில காலங்கழித்த பின்னர் [illegible] அங்கங்குள்ள வித்துவான்களைச் செயித்துவிட்டுச் சாரதாபீடத்துக்குச் செல்ல, சரசுவதி வாசலிற் பிரத்தியக்ஷமாகி அந்தரதிகரணத்து (க. க. உக)ஆஞ் சூத்திரபாடியத்தில் உதகரிக்கப்பட்ட

[illegible]

என்னும் இம்மந்திரத்தின் பொருள் என்னை என்று இராமாநுஜரை வினவ, அதற்கு இராமாநுசர் "கம் என்றால் ஜலம், கபி என்றால் அந்த ஜலத்தைக் கிரணங்களினாற் பானஞ் செய்கின்ற சூரியன், கப்பியாசம் என்றால் அந்தச் சூரியனால் மலர்ந்த தாமரைப் புஷ்பம், இதனை ஒத்த நேத்திரங்களையுடையவர் சூரியமண்டலமத்தியிலிருக்கும் நாராயணர்" என்று அர்த்தஞ் சாதிக்க, அதனைக் கேட்ட சரசுவதி, "நீவிர் இந்தச் சுருதிக்கு வாஸ்தவார்த்தங் கூறினமையின், உமக்கு ஸ்ரீபாடியகாரர் என்னும் திருநாமம் ஆகுக என்றும், இவர் சாதித்த ஸ்ரீபாடியத்தைத் தாம் சிரசில் வைத்துக்கொண்டு இதற்கு ஸ்ரீபாடியம் என்று திருநாமம் ஆகுக என்றும் பெயரிட்டனர்" என்றும்

* இந்த வேதவியாசர் கற்பித வேதவியாசரன்றி பிர[illegible] ரல்லரென்பது [illegible]ம்.

கூறப்படுகின்றது. அதுகொண்டு, வைணவர் விசிட்டாத்துவித பாடியத்திற்கு ஸ்ரீபாடியம் என்றும் திருநாமம் உண்டாயிற்றென்றும், அதனால் இராமாநுஜபாடியமே மெய்ப்பொருள் பொதிந்ததென்றும் வைணவர் சொல்வர்.

கம் ஜலம் ரஶ்மிபி: பிபதீதி கபி: ஸூர்ய: | தேநாஸிதம் விகஸிதம் புண்டரீகம் யதா ஶோபதே ததா பரமேஶ்வரஸ்ய நேத்ரே ஶோபேதே |

“நீரைக் கிரணங்களினாற் குடிக்கின்றமையிற் சூரியன் கபி எனப்படும்; அந்தச் சூரியனால் விகசிதமாய தாமரை பிரகாசிக்குமாறு போல, சிவபெருமானுடைய இரு கண்களும் பிரகாசிப்பனவாயின” என்று (க. க. உக)ஆம் சூத்திரபாடியத்தில் உண்மைப் பொருள் செய்தவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர். இவ்வாசாரியர் செய்த பொருளையே இராமாநுசர் படித்து ஞாபகத்தில் வைத்துப் பாடியஞ் செய்து, “கப்யாசம்” (சா. க. ஙு. எ) என்றற்றொடக்கத்தவற்றுக்கு யாது பொருள்? என்று வினவிய சரசுவதிக்கு அப்பொருளை ஒப்பித்தனர் எனலே யுத்தம்.

சங்கராசாரியர் இராமாநுஜாசாரியர்களுக்கு
ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்
முற்பட்டவர்.

இராமாநுசர்க்குப் பிற்பட்டவர் நீலகண்டசிவாசாரியர் என்றும், அது கொண்டோன் அந்நீலகண்டசிவாசாரியர் பாடிய ஆரம்பத்து ஐந்தாஞ் சுலோகத்திலும், பாசபத்யதிகரணத்து (உ. உ. கூஅ) ஆஞ் சூத்திரபாடியத்திலும் “பூருவாசாரியர்” என்று வரைந்தமையான் அது அவர்க்கு முற்பட்டிருந்த இராமாநுசரையும் சங்கராசாரியரையும் குறித்ததாம் என்றும் வைணவரும் ஏகான்மவாதிகளுங் கூறின், அது பொருந்தாது. “பூருவாசாரியர்” என்று ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் உரைத்தமை சங்கராசாரியர்க்கு ஆசிரியர்களாய் முற்பட்டிருந்த ஏகான்மவாதப் பிரவர்த்தகர்களையேயன்றி மற்றியாரையும் குறித்ததன்றாம். (ச. உ. கஉ) ஆஞ் சூத்திரத்துக்கு ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் மத்தியந்தினசாகை கொண்டு வித்துவானுக்குத் தலைநாடியாயிவாக உத்கிரமணம் உண்டென்று கூறிய பொருளைச் சங்கராசாரியர் மறுத்தற்கு அந்தச் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்து, முற்பாதிச் சூத்திரத்திலே அந்நீலகண்டசிவாசாரியர் வித்துவானுக்கு உத்கிரமணம்

உண்டென்று கூறிய பொருளைப் பூருவபக்ஷமாக நிறுத்தி, பிற்பகுதிச் சூத்திரத்தில் சித்துவஸ்துக்கு உற்கிரமணம் இல்லை என்று சித்தாந்தஞ் சாதிக்கப்போந்தனர். சங்கராசாரியர் பிளந்த சூத்திரங்களை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கூறியவாறு இராமாநுசர் ஒன்றாய் இணைத்து, சங்கராசாரியர் கூறிய பொருளைக் கண்டித்து ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கூறிய பொருளையே ஸ்தாபித்துவிட்டனர். இராமாநுசர்க்குப் பிற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரேயாமாயின், இவர் இராமாநுசர் எடுத்தாண்ட உபநிடதவாக்கியங்களை உதகரித்து, தாமுஞ் சங்கராசாரியரைக் கண்டித்திருப்பார். சங்கராசாரியர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரைக் கண்டிக்கப்போந்தமையினாலும், சங்கராசாரியரை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கண்டிக்காமையாலும் இவ்விருவருள்ளும் முற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரே.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் சீவான்மாவுக்கும் சிவபெருமானாகிய பரமான்மாவுக்கும் பேதம் உண்டென்று சாதிக்க, சங்கராசாரியர் கடாகாச மகாகாசங்கொண்டு அவ்விருவரையும் அபேதமாக்கப்போந்தமையாலும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் உமையம்மையாரைச் சிற்சத்தி என்றும், அவரைச் சிவபெருமானுக்குக் குணமும் சொரூபமுமாயுள்ளார் என்றும் கூற, சங்கராசாரியர் அவ்வுமையம்மையாரை மாயாசத்தி என்றும், சடசத்தி என்றும் கூறிப்போந்தமையாலும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் பரமவியோமத்தை (ஆகாசத்தை) சிதம்பரத்தின் பெயராய்க் கொள்ள, சங்கராசாரியர் அவ்வியோமத்தை மாயை, அவ்வியாகிருதம், அவித்தை, ஜடசத்தி என்று கூறினமையாலும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் அத்துவா என்றதற்கு அறுவித அத்துவா என்று (௪. ௩. ௧௫) ஆம், (௪. ௪. ௨௨) ஆம் சூத்திரபாடியங்களிற் கூற, சங்கராசாரியர் அந்த அத்துவாவுக்குச் சம்சாரகதி என்று பொருள் செய்யப்போந்தமையாலும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் சிவகுணங்கள் ஆன்மாவிற் பதிதலையே சிவசாமியம் என்று உபப்பிருங்கணப்பிரகாரம் கூற, சங்கராசாரியர் கடாகாச மகாகாசம்போலக் கூடஸ்தனும் பிரமமும் ஐக்கியமாதலை பரமசாமியம் என்று உரைத்தலாலும் சங்கராசாரியர்க்கு முற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர். மேலும்,

[illegible]

[illegible]

என்று ([illegible]) [illegible] கூறிய மந்திரத்தின் பொருள் [illegible]

றப்படுகின்றது. அதுகொண்டு, வைணவர் விசிட்டாத்துவித பாடியத்திற்கு ஸ்ரீபாடியம் என்றும் திருநாமம் உண்டாயிற்றென்றும், அதனால் இராமாநுசபாடியமே மெய்ப்பொருள் பொதிந்ததென்றும் வைணவர் சொல்வர்.

கம்ஜலம் பிபதீதி கபி ராதித்ய:| தேநாஸிதம் விகஸிதம் புண்டரீகம் யதா ஸூர்யோதயே ததா பரமேசுவரஸ்ய நேத்ர யுகலம்|

"நீரைக் கிரணங்களினாற் குடிக்கின்றமையிற் சூரியன் கபி எனப்படும்; இந்தச் சூரியனால் விகசிதமாய தாமரை பிரகாசிக்குமாறு போல, சிவபெருமானுடைய இரு கண்களும் பிரகாசிப்பனவாயின" என்று (க. க. உக)ஆம் சூத்திர சைவபாடியத்தில் உண்மைப் பொருள் செய்தவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர். இவ்வாசாரியர் செய்த பொருளையே இராமாநுசர் படித்து ஞாபகத்தில் வைத்துப் பாடியஞ் செய்து, "கப்பியாசம்" (சா. க. சு. எ) என்றதற்குப் பொருள் யாது? என்று வினவிய சரசுவதிக்கு அப்பொருளை ஒப்பித்தனர் எனலே யுக்தம்.

சங்கராசாரியர் இராமாநுஜாசாரியர்களுக்கு

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்

முற்பட்டவர்.

இராமாநுசர்க்குப் பிற்பட்டவர் நீலகண்டசிவாசாரியர் என்றும், அது கொண்டோன் அந்நீலகண்டசிவாசாரியர் பாடிய ஆரம்பத்து ஐந்தாஞ் சுலோகத்திலும், பாசுபத்தியதிகரணத்து (உ. உ. கூஅ) ஆஞ் சூத்திரபாடியத்திலும் "பூருவாசாரியர்" என்று வரைந்தமையான் அது அவர்க்கு முற்பட்டிருந்த இராமாநுசரையும் சங்கராசாரியரையும் குறித்ததாம் என்றும் வைணவரும் ஏகான்மவாதிகளுங் கூறின், அது பொருந்தாது, "பூருவாசாரியர்" என்று ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் உரைத்தமை சங்கராசாரியர்க்கு ஆசாரியர்களாய் முற்பட்டிருந்த ஏகான்மவாதப் பிரவர்த்தகர்களையேயன்றி மற்றியாரையும் குறித்ததன்றாம். (ச. உ. கஉ) ஆஞ் சூத்திரத்துக்கு ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் முத்தியர்தினசாகை கொண்டு வித்துவானுக்குத் தலைசாடியாயினாக உற்கிரமணம் உண்டென்று கூறிய பொருளைச் சங்கராசாரியர் மறுத்தற்கு அந்தச் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்து, முற்பாதிச் சூத்திரத்திலும் அந்நீலகண்டசிவாசாரியர் வித்துவானுக்கு உற்கிரமணம்

உண்டென்று கூறிய பொருளைப் பூர்வபக்ஷமாக நிறுத்தி, பிற்பகுதிச் சூத்திரத்தினால் சித்தவானுக்கு உத்க்ரமணம் இல்லை என்று சித்தாந்தஞ் சாதிக்கப்போந்தனர். சங்கராசாரியர் பிளந்த சூத்திரங்களை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கூறியவாறு இராமாநுசர் ஒன்றுப் இணைத்து, சங்கராசாரியர் கூறிய பொருளைக் கண்டித்து ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கூறிய பொருளையே ஸ்தாபித்துவிட்டனர். இராமாநுசர்க்குப் பிற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரேயாமாயின், இவர் இராமாநுசர் எடுத்தாண்ட உபநிடதவாக்கியங்களை உதகரித்து, தாமுஞ் சங்கராசாரியரைக் கண்டித்திருப்பார். சங்கராசாரியர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரைக் கண்டிக்கப்போந்தமையினும், சங்கராசாரியரை ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கண்டிக்காமையானும் இவ்விருவருள்ளும் முற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரே.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் சீவான்மாவுக்கும் சிவபெருமானாகிய பரமான்மாவுக்கும் பேதம் உண்டென்று சாதிக்க, சங்கராசாரியர் கடாகாச மகாகாசங்கொண்டு அவ்விருவரையும் அபேதமாக்கப்போந்தமையானும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் உமையம்மையாரைச் சிற்சத்தி என்றும், அவரைச் சிவபெருமானுக்குக் குணமும் சொரூபமுமாயுள்ளார் என்றும் கூற, சங்கராசாரியர் அவ்வுமையம்மையாரை மாயாசத்தி என்றும், சடசத்தி என்றும் கூறிப்போந்தமையானும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் பரமவ்யோமத்தை (ஆகாசத்தை) ஞானமயாத்தின் பெயராய்க் கொள்ள, சங்கராசாரியர் அவ்வியோமத்தை மாயை, அவ்வியாகிருதம், அவித்தை, ஜடசத்தி என்று கூறினமையானும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் அத்துவா என்றதற்கு அமலித அத்துவா என்று (ச. ங. ௧௰) ஆம், (ச. ச. ௨௨) ஆம் சூத்திரபாடியங்களிற் கூற, சங்கராசாரியர் அந்த அத்துவாவுக்குச் சம்சாரகதி என்று பொருள் செய்ய போந்தமையானும்,

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் சிவகுணங்கள் ஆன்மாவிற் பதிதலையே சிவசாமியம் என்று உபப்பிருங்கணப்பிரகாரம் கூற, சங்கராசாரியர் கடாகாச மகாகாசம்போலக் கூடஸ்தனும் பிரமமும் ஐக்கியமாதலே பரமசாமியம் என்று உரைத்தலானும் சங்கராசாரியர்க்கு முற்பட்டவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர். மேலும்,

[illegible] ।
[illegible] ।

என்று (தைத். உ. ௬. ௩) ஆங் கூறிய மந்திரத்தின் பொருள் [illegible]

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ ।
ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதஸ்சன ।

"மனசும் வாக்குஞ் செல்லமாட்டாது எங்கிருந்து மீண்டுவிடுகின்றனவோ, அந்தச் சிவபெருமானுடைய ஆனந்தத்தை எவன் அநுபவிக்கின்றானோ அவனுக்கு ஒன்றும் பயமில்லை" என்று (சுவ. த. கஉ. ௪அ) னும், இங்ஙனம் இந்தப்பொருளே (லிங். சங். க. கo—கஉ. னுங், கைலா. அ. ௬. எ. னும், வாயு. பூ. ௬. ௩௩—௩௬. னும், வாயு. உத். ௫. எஎ—அo) னும் உபநிடதங்களுமாகக் கூறப்பட்டிருக்க, இந்தச் சுலோகங்களுக்கெல்லாம் மாறுபட,

யதோ வாசோ நிவர்த்தந்தே நிமித்தானாமபாவத꞉ ।
நிர்விசேஷே பரே தத்வே கதம் தேவா꞉ ப்ரவர்த்ததே ।
விசேஷம் கிஞ்சிதாச்ரித்ய ஸப்த꞉ ப்ரவர்த்ததே ।

(பிரமகீதை. ௩. ௬௪, ௬௫)

"தேவர்களே! சப்தத்துக்கு நிமித்தமின்மையின் எங்கிருந்து வாக்குகள் மீண்டுவிடுகின்றனவோ, அந்த நிர்விசேடமாகிய (நிர்க்குண) சிவத்திலே சப்தமானது எங்ஙனும் பிரவர்த்திக்கும்? விசேடத்தை (சத்திவிசேஷத்தைச்) சிறிதுபற்றியன்றோ சப்தம் பிரவர்த்திக்கின்றது" என்று பொருள் பொதிந்த கற்பனா சுலோகங்கள் பிரமகீதையிற் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு நிமித்தத்தைக்கொண்டே சப்தம் பிரவர்த்திக்கின்றதென்றும், அந் நிமித்தமின்மையால் நிர்விசேட (நிர்க்குணப்) பிரமத்தில் எங்ஙனம் சப்தம் பிரவர்த்திக்கும்? என்றும், அதுபற்றி மேலே குறித்து உதகரிக்கப்பட்டது சவிசேஷப் பிரமத்தைப் பற்றியதாம் என்றும், இந்தச் சவிசேடப்பிரமத்திலேதான் சப்தம் பிரவர்த்திக்கும் என்றுங் கூறி, அப்பிரமகீதையிற் குறிக்கப்பட்ட நிமித்தாநாமபாவத꞉ (நிமித்தாநாமபாவத꞉) என்பதை நிமித்தாபாவாத் (நிமித்தாபாவாத்) என்று (தைத். உ. ௪. க) ஆம் மந்திரபாடியத்தினும் புகட்டி வரைந்து, சவிசேடப்பிரமத்தைப்பற்றிக் கூறிய ஸ்ரீநீலகண்டசிவாசாரியரைக் கண்டிக்கத் துணிந்தனர். ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் சத்தி குணங்களால் விசேடிக்கப்பட்ட (சவிசேஷ) சகுணப்பிரமத்தைக் கூறினர் என்றும், தாம் நிர்விசேட (நிர்க்குண) பிரமத்தைக் கூறினர் என்றும் புலப்படுத்தலானும், (௪அ-ஆம் இலக்கத்தின்) "சிவேதிவாசம்" (ஶிவேதிவாசம்) என்னும் வாசிஷ்டலைங்க சுலோகத்துக்கு மூலமாய், நீலகண்டசிவாசாரியரால் "அக்கினிகோத்திராதிகரணத்தில்" முண்டகோபநிடதத்தினின்று அபிரா (அஶிவன) என்பதற்கு ஆதாரமாயுள்ள மந்திரம் எடுத்து உதகரிக்கப்பட்டிருக்கின்றது. அம்முண்டகோபநிடத மந்திரம் பின்

விருந்தவரால் உபநிடதத்தினின்று தொலைக்கப்பட்டமையாலும் [illegible] (எஅ-ஆம் இலக்கத்தின்) கீழ்க் சங்கரசங்கிதையினின்றும் [illegible] யினின்றும் உதகரிக்கப்பட்ட உபப்பிருங்கண [illegible] சுலோகங்களுக்கிடையே [illegible] கண்டசிவாசாரியரால் (சுவே..சு..வு)ஆம் மந்திரம் [illegible] பத்து உதகரிக்கப்பட்டிருந்தவிடத்தும், அம்மந்திரத்திலே சிவ [illegible] நேரே குறிக்கும் சிவசப்தம் தொலைக்கப்பட்டுத் தேவசப்தம் புகட்டி [illegible] பட்டமையாலும், இன்னோரன்ன பிற வியாயங்களாலுஞ் சங்கராசாரியர்க்கு முற்பட்டவர் நீலகண்டசிவாசாரியர் என்பது தெள்ளிது. [illegible]

மத்துவாசாரியர் சந்நியாசியாகி இமாசலத்துள்ள வியாசரை வணங்கப் போனார் என்றும், அவருக்கு வியாசர் ஞானோபதேசஞ் செய்து வேதங்களுக்கும் சூத்திரங்களுக்கும் தமது சேர்ந்த அபிப்பிராயார்த்தத்தை உலகினர்க்குப் பிரகடனஞ் செய் என்று அவர்க்கு ஆஞ்ஞாபித்தனர் என்றும், அங்ஙனம் மத்துவாசாரியர் பாடியங்கள் செய்தனர் என்றும் மத்துவமதத்தினர் கூறுவர். இதனால் மத்துவபாடியப்பொருளும் வியாசரது சொந்த அபிப்பிராயம் என அம்மதத்தினர் வாக்கினாற் பெறப்படுகின்றது. [illegible] ஏகான்மவாத பாடியத்துக்கும் மத்துவபாடியத்துக்கும், சர்சுவதி இராமாநுசபாடியத்துக்குமாகப் பிரசம்சாவாக்குகள் சொல்லப்பட்ட [illegible] திரத்தோடமையாது,

வ்யாஸஸூத்ராணாம் [illegible] [illegible]
[illegible] ஸூத்ரார்த்தம் [illegible] [illegible]

"சிவையே! (சீவான்ம பரமான்மாக்களைக் கூறும்) வியாசமருளிய [illegible] வாக்கிய சூத்திரங்களுக்கு அத்துவைதந்தான் சூத்திரார்த்தம் என்று [illegible] ணமாகச் (சங்கராசாரியர் பாடியஞ்) செய்வார்" என்றற்றொடக்கத்தன வாக ஓர் சிவனும் பார்ப்பதிக்கு அருளினதாகச் சிவரகசியத்திற் புகட்டப் பட்டிருக்கின்றமையின், அச்சிவனும் ஏகான்மவாத பாடியத்தை ஒப்புக் கொண்டனராகச் சித்திக்கின்றது. (ந௫௭—ந௭௰-ஆம் இலக்கவுரையிற் கூறப்பட்டவாறு) சகுணம், நிர்க்குணம், அத்தியாசிரமம் என்னும் மூன்று பாவனைகளுள்ளே இறுதி அத்தியாசிரமத்தில் முற்றற்பாலனவாகிய வேதார்த்தங்களை இரண்டாவது நிர்க்குணோபாசனையிலே முற்ற,

[illegible] [illegible] நாஸ்தி [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] நாஸ்தி [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]

"தேவர்களே! இதுதான் வேதார்த்தம், இதற்கு மேலானதில்லை; சத்தியமாகும் சம்சயம் இல்லை என்று தீயிற் காய்ச்சிய மழுவைப் பிடிக்கின்றேன்; இதுதான் வேதார்த்தம், இதற்கு மேலானதில்லை; தேவர்களே! இதற்கு வேறாக ஒன்றிருக்குமேல் சத்தியமாய் என் தலை அறுந்துவிழும்" என்று பிரமசபையிற் பிரமாவைக் கண்டு சத்தியத்துக்கு ஆளாக்கிக் கற்பனு சுலோகம் புகட்டிய வீரரைச் சார்ந்தோர் சிவரகசியத்தில் அங்ஙனம் கற்பனு சுலோகம் இயைத்துவைக்க மறந்துவிடுவார்தாமோ!! சிவன் கூறியதாக உரைக்கப்பட்ட கற்பனு சுலோகத்தினால் வேதாந்த சூத்திர முழுமையும் ஜீவான்மா பரமான்மா என்னும் இரண்டையும் பேதித்தமென உரைக்கும் துவிதவாக்கியமுடைத்தென்பது (கற்பனு சிவன் உரைத்த உரையால்) ஏகான்மவாதிகளுக்கும் கருத்தாய் முற்றியது. அந்தக் கற்பனு சிவனுக்கு உள்ளவாறு துவிதான்மவாத பரமாயுள்ள வியாச சூத்திரங்களில் வெறுப்பும், அசத்தியமுற ஏகான்மவாதபரமாகத் திரிக்கப்பட்ட சூத்திரார்த்தத்தில் விருப்பும் சேர்ந்தமைக்குக் காரணம் பாவவிசேஷந்தான்!!

மூன்று பாடியங்களும் ஒன்றுக்கொன்று விரோத முறுவனவாக, சிவனும், வியாசரும், சரசுவதியும் அம்மூன்று பாடியங்களையும் சத்திய பாடியங்கள் என்று எங்ஙனம் அங்கீகரித்தனரோ? ஆகலின், "வியாசர் கருத்திது," "சிவன் கருத்திது," "சரசுவதி கருத்திது" என்று சங்கரதிக்விஜயாதிகளினும், சிவரகசியத்தினும், பிறவிடங்களினும் தத்தம் பாடியங்களை மெய்யெனச் சாதிக்குமாறு எழுதிவைத்தனவயனைத்தும் துதிபரமாகிய அர்த்தவாதங்களாம் என்று யூகிக்க. இராமாநுசரும் போதாயனவிருத்தியைப் பார்த்துவரைந்தோம் வரைந்தோம் என்று புறத்தே எழுதி, நீலகண்டபாடியத்தை அந்தரங்கத்திற் பார்த்தே தமது பாடியத்தைச் சரிப்படுத்திக்கொண்டனர். "நீலகண்டபாடியத்துக்கும் இராமாநுசபாடியத்துக்கும் சில பேதங்கள் இருக்கின்றன" என்று ஓர் வைணவரும் எழுதிவைத்தமையானும் அறியப்படும்.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் பிரமமீமாஞ்சாசூத்திரத்துக்கு எழுதிய பாஷ்யம் சிவாத்துவிதபாஷ்யம் எனப்படும்; இந்தச் சிவாத்துவிதப் பெயர்

[illegible]

[illegible] 88 [illegible]

(கைலா. ஸ. கசு, கன)

கைலாச சங்கிதையிற் காணப்படுகின்றது.

மேலே கூறியவாற்றால், இராமாநுசாசாரியர் சங்கராசாரியர் முதலியோர்க்கெல்லாம் பிரமசூத்திர சைவபாடிய கர்த்தாவாகிய நீலகண்டசிவாசாரியர் முற்பட்டவரேயாம்.

ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உபநிடத உபக்கிரமணிகை.

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத்³ யத்³ருக்³வேதோ³ யஜுர்வேத³: ஸாமவேதோ³(அ)த²ர்வாங்கி³ரஸ இதிஹாஸ: புராணம் வித்³யா உபநிஷத³: (பிரு. ௪. ௪. ௧௦; சு. ௫. ௧௧)

(௧) "இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், இதிகாசம், புராணம், வித்தை, உபநிடத முதலியவைகள் பரம்பொருளினது சுவாசம்" எனப் பிருகதாரணியத்திலும்,

ஈஶான: ஸர்வவித்³யானாம் (மகா. ௧௭. ௫)

(௨) "வித்தைகள் அனைத்துக்கும் (கர்த்தா) ஈசானர்" என மகோபநிடதத்திலும்,

அஷ்டாத³ஶானாமேதாஸாம் வித்³யானாம் பி⁴ன்னவர்த்மனாம் |
ஆதி³கர்த்தா கவி: ஸாக்ஷாச்சூ²லபாணிரிதி ஶ்ருதி: ||
(வா. ச. பூ. ௧. ௨௪)

(௩) "பல மார்க்கமுடைய இந்தப் பதினெண் வித்தைகளுக்கும் சாக்ஷாத்தாக முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என ஸ்மிருதியிலும் காணப்படுகின்றது. ஆகலின், புராணங்களை அருளினவர் சிவபெருமான் என்பது வெளிப்படை. இந்தச் சிவபெருமான் சாத்துவிக இராசச தாமச குணங்களையுடைய பிரகிருதி எனப்படும் தமசைக் கடந்த உமாசகாயர் என்று கைவல்லியோபநிடதம் கூறுகின்றது. இந்த அம்பிகாபதியானவர் சாத்துவிக, இராசச, தாமசங்களையுடைய விஷ்ணு, பிரமா, உருத்திரர் என்னும் மூவர்க்கும் துரியராவர்.

த்ரயஸ்தே காரணாத்மானோ ஜாதா: ஸாக்ஷான்மஹேஶ்வராத் | சராசரஸ்ய விஶ்வஸ்ய ஸர்க³ஸ்தி²த்யந்தஹேதவ: | பிதா [illegible] ஶிவம் த்ரயோ(அ)பி த்ருஷ்டா: கர்த்ருஸ்ய: | ப்³ரஹ்மா ஸர்கே³ ஹரிஸ்த்ராணே ருத்³ர: ஸம்ஹாரணே ஸ்ம்ருத: | ததா²ப்யன்யோன்யஸ்த²யா [illegible]

ப்⁴ராத்ருபி⁴: | தபஸா தோஷயித்வா ஸ பிதரம் பரமேஶ்வரம் | ருத்³ர: கல்பாந்தரே ஸ்ராக்ஷீத் ப்³ரஹ்மநாராயணௌ ஸுதௌ | கல்பாந்தரே புந: ப்³ரஹ்மா ருத்³ர விஷ்ணூ ஜக³ந்மய: | விஷ்ணுஶ்ச ப⁴க³வாந் ருத்³ரம் ப்³ரஹ்மாணமஸ்ருஜத் புந: | நாராயணம் புந: ப்³ரஹ்மா ப்³ரஹ்மாணம் ச புநர்ப⁴வ: | ஏவம் கல்பேஷு கல்பேஷு ப்³ரஹ்மவிஷ்ணுமஹேஶ்வரா: | பரஸ்பரேண ஜாயந்தே பரஸ்பரஜயைஷிண: | தத்தத்கல்பவ்ருத்தாந்தமதி⁴க்ருத்ய மஹர்ஷிபி⁴: | தாநி தாநி புராணாநி விஸ்தராத்து ந ஸம்ஹ்ருதி (வா. ச. பூ. கக. கச—உக)

(ச) "இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய இவ்வுலகத்திற் சிருஷ்டி திதி சங்காரங்களுக்கு ஏதுவாகிய காரணன்மாக்கள் மூவரும் மகேசுவரரினின்று நேராக உதித்தனர்; பிரமா படைப்பினும், அரி அளிப்பினும், உருத்திரர் அழிப்பினுமாக மூவரும் முத்தொழிலினும் பிதாவினால் முதற்கண்ணே நியமிக்கப்பட்டனர்; அங்ஙனம் நியமிக்கப்படினும், ஒருவரோடொருவர் பொறாமைமேற்கொண்டு, தம்முண் மேம்படக் கருதினோராய், உருத்திரர் தமது தாதையாகிய சிவபெருமானைத் தவத்தினால் மகிழ்வித்து ஓர் கற்பத்திலே பிரமன் நாராயணர் என்னும் இருவரையும் படைத்தனர்; பின்பு பிரமா மற்றோர் கற்பத்தில் நாராயணர் உருத்திரர் என்னும் இருவரையும் படைத்தனர்; பின்பு விஷ்ணு (மற்றோர் கற்பத்திலே) உருத்திரர் பிரமா என்னும் இருவரையும் படைத்தனர்; இங்ஙனம் கற்பந்தோறும் பிரமா, விஷ்ணு, உருத்திரர் என்பார் ஒருவரை மற்றொருவர் வெல்ல நினைந்து ஒருவர்பால் ஒருவர் பிறக்கின்றனர்; பெரிய இருஷிகள் அவ்வக்கற்ப விருத்தாந்தங்களைக்கொண்டு அவ்வச்சரித்திரங்களைக் கூறினர்; அறிவினையுடையான் அவைபற்றி மோகமெய்தான்" என்று சிவபுராணத்திற் கூறப்பட்டவாறு பிரம விஷ்ணு உருத்திரர் என்னும் மூவருடைய மான்மியத்தை மிகுத்துக் கூறும் இயற்கையுடையது அந்தந்தக் கற்பம். இது நோக்கியே,

யஸ்மிந்கல்பே து யத்ப்ரோக்தம் புராணம் ப்³ரஹ்மணா புரா | தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே | அக்³நே: ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம் | ராஜஸேஷு ச மாஹாத்ம்யமதி⁴கம் ப்³ரஹ்மணோ விது³: | ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாம் ச நிக³த்³யதே | ஸாத்த்விகேஷு ச கல்பேஷு மாஹாத்ம்யமதி⁴கம் ஹரே: |

(ரு) "எந்தக் கற்பத்திலே எந்தப் புராணம் பிரமாவினாற் கூறப்பட்டதோ, அந்தந்தக் கற்பத்தின் மான்மியம் அந்தச் சொரூபத்தோடு

வர்ணிக்கப்படுகின்றது ; அக்கினியுடையவும் உருத்திருடையவும் மான்மியம் தாமசகற்பங்களினும், பிரமாவின் மான்மியம் இராசச கற்பங்களினும், சரசுவதியுடையவும் பிதிர்களுடையவும் மான்மியம் சங்கீர்ண கற்பங்களினும், விஷ்ணுவுடைய மான்மியம் சாத்துவிக கற்பங்களினும் கூறப்பட்டன" என்று சிவபுராணங்களுள் ஒன்றாகிய மற்சபுராணம் கூறுமாற்றான், தாமசகற்பத்திலே (துரிய உருத்திரராகாத காரிய) உருத்திருடைய மான்மியம் மற்றிருவரினும் மிகுத்தும், சாத்துவிக கற்பத்திலே விஷ்ணுவின் மான்மியம் மற்றிருவரினும் மிகுத்தும், சங்கீர்ண கற்பத்திலே சரசுவதியுடையவும் பிதிர்களுடையவும் மான்மியம் மிகுத்துங் கூறப்பட்டிருக்கின்றன என்றோர்க.

(௬) சரசுவதியின் புராணம் தனிப்புராணமாகாது சங்கீர்ண கற்பத்திலே புராணமத்தியிற் கூறப்பட்டாற் போல, தாமசகுண காரிய ருத்திரர் முதலாயினோர் மான்மியங்கள் துரியமூர்த்தியாகிய சிவபெருமான் முதலாயினோர் புராணமத்திகளில் மிகுத்துக் கூறப்படுவனவாம்.

(எ) ஒவ்வோர் இருதுவிற் பனிமுதலாயின மிகுத்தும், வருஷா காலத்தில் மேகம், மின்னல், இடி முதலியன மிகுத்தும் நிகழுமாறு போல, அத்தந்தச் சாத்துவிகாதி கற்பங்களிலே அவ்வவ் விஷ்ணுவாதி தேவருடைய மான்மியம் மிகுத்துக் கூறப்படும் என்பதே பொருளாம்.

𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌤𑌪𑌸𑍍𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃। 𑌆𑌰𑌾𑌧𑍍𑌯
𑌗𑌿𑌰𑌿𑌶𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑌦𑌮𑍍।

(௮) "தியானம், தபம், ஞானம் என்பனவற்றை யோகிகள் அக்காலங்களிற்றானே எய்தப்பெற்று என்னையும் சிவபெருமானையும் ஆராதித்து அப்பரம பதத்தினை எய்துகின்றனர்" என்று சாத்துவிக கற்பங்களைப் புகழ்ந்தெடுத்தோதும் கூர்மபுராண வசனமும் அவ்வுண்மையை வலியுறுத்துமென்க. சாத்துவிக கற்பத்திலே சாத்துவிக குணம் மேலிடப் பிரமா விஷ்ணு புராணங்களைக் கூறினர் ; தாமச கற்பத்திலே தாமசகுண மேலிடப் பிரமா சிவபுராணங்களைக் கூறினர் என்றற்றொடக்கத்தனவாகத் தப்புரைவிடுத்துச் சிவபுராணங்களை அப்பிராமாண்ணியப் படுத்தத் துணிதல் கூடாது ; மற்ச புராண சுலோகங்களிலே பிரமாவுக்குச் சாத்துவிக குணமேனும் தாமசகுண முதலியவேனும் மேலிட்டு அவ்விப் புராணம் கூறினர் என்றமைக்குப் பதப்பிரயோகம் யாதுமின்மையின்.

𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌃। 𑌕𑌥𑌿
𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵[illegible]𑌃। 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍇𑌷𑍁 𑌕𑌲𑍍𑌪𑍇

ஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:| தாமஸேஷு ஹரஸ்யோக்தம் ராஜஸேஷு ப்ரஜாபதே:| ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாஞ்ச நிகத்யதே| நாநேந தேஷாமைஶ்வர்யம் ந்யூநதா வா கதஞ்சந|

(௯) "பிரம விஷ்ணு உருத்திர சம்பந்தமாகிய கற்பங்கள் எண்ணிறந்தன; மெய்யுணர்வினையுடைய முனிவர்களால் (அவ்வவர் மான்மியம்) கூறப்பட்டன; சாத்துவிக கற்பத்திலே விஷ்ணுவின் மான்மியம் அதிகமும், தாமச கற்பங்களிலே உருத்திரருடைய மான்மியம் அதிகமும், இராசச கற்பத்திலே பிரமாவுடைய மான்மியம் அதிகமுமாகக் கூறப்பட்டன; ஓரிடத்திற் பிரமாவும், ஓரிடத்தில் விஷ்ணுவும், மற்றோரிடத்தில் உருத்திரருமாக ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வின்றித் துதிக்கப்படுகின்றனர்" என்று கூர்ம புராண முதலிய கூறலின், பிரமா தாமசகுண மேலிட்டுப் பிரமை முதிர்ச்சியினாற் கூறப்பட்டன தாமச வசப்பட்ட சிவபுராணங்கள் என்று கூறுவது பித்துரை என்று மறுக்க.

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை|

(௧௦) "சிவபெருமான் பிரமாவைப் படைத்து, அவருக்கு வேதங்களையும் உபதேசித்தனர்" என்னுஞ் சுருதியிற் கண்ட (சகார) எச்ச உம்மையினாற் புராணங்களும் உபதேசிக்கப்பட்டன என்று பெறப்படும்.

யோ(அ)க்ரே மாம் விததே பூர்வம் ஜ்ஞாநம் ப்ரஹிணோதி ச| யத்ப்ரஸாதாந்மயா ப்ராப்தம் ப்ராஜாபத்யமிதம் பதம்| ப்ரஹ்மாணம் ஜநய: பூர்வம் ஸ்ருஷ்ட்வா தஸ்மை மஹேஶ்வர:| தத்தவாநகிலாந் வேதாநாத்மநி ஸம்ஸ்திதாந்|

(௧௧) "சிவபெருமான் என்னை முதற்கண்ணே படைத்து ஞானத்தை உபதேசித்தனர்; அவர் அருளினாலே இந்தச் சத்தியலோக பதம் எனக்கு எய்திற்று" என்றும், "சிவபெருமான் பிரமாவைப் படைத்து, அவர் அறிவின்கண் (இப்போது உள்ள) சமஸ்த வேதங்களையும் உபதேசித்தனர்" என்றும் கூர்ம புராணத்தினும்;

ஸ்ருஷ்டிஸ்ஸம்ஹாரகாரீஶ்வர: ப்ரபு: ஸர்வாதிபோ(அ)வ்யய:| தஸ்ய [illegible] மஹாதேவோ மஹேஶ்வர:| ....ப்ராஹ்மணம் யஜுர்ஸாமாத்ருசாம் விஷ்ணோர்தேவாஸ்ய தாஸ்ய யஜுஷம்| ருசஸ்ஸாமாநி ச விஷ்ணுதாவதாம் யஜுஷ்ஷு ஸம்ஹிதா:| ருச: ஸாமாநி ச விஜ்ஞேயா: [illegible] யஜு ஸம்ஹிதா:|

(௧௨) "சூலபாணியும், மகாதேவரும், மகேசுவரருமாகிய சிவபெருமான் சமஸ்த சாஸ்திரங்களையும் படைத்தனர்; (அந்தச் சாஸ்திரவித்தைகள் வேத வேதாந்த முதற்) புராணம் தருமசாஸ்திரம் இறுதியாயுள்ள பதினான்காம்; பத்தும் பதினெட்டுமாகிய புராணங்கள் தருமசங்கிதைகள் எனவும், யஞ்ஞசங்கிதைகள் எனவும் படும்" என்று மகாபாரதத்திலுங் கூறப்படலான், புராணங்களையெல்லாம் முதற்கண்ணே அருளிய பிரணேதா சிவபெருமான் என்றும், சிவபெருமானினின்று பெறப்பட்ட வேதபுராணங்களை இருஷிகளுக்குப் பிரகடனஞ் செய்த பிரவக்தா பிரமா என்றும், புராணங்கள் பதினான்கு வித்தைகளுள் ஒன்று என்றும், அவை தருமசங்கிதை எனப்படும் என்றும் அறியக்கிடந்தன. ஆகலின், பதினெண் புராணங்களுள்ளே எப்புராணங்களும் (பிரக்ஷிப்த அத்தியாயங்களேனும் சுலோகங்களேனும் இல்லாவிடத்து) அப்பிராமாண்ணியப்படுத்தப்படுவனவன்று.

தேந ப்ரோக்தம் (௪. ௩. ௧0௧)

என்னும் பாணினிசூத்திரத்திலே காணப்படும் "புரோக்தம்" என்னும் பதம் பிரகடனஞ் செய்தலின் மேற்றுமாதல் போல, மற்ச புராணத்திலே பிரமாவினாற் "புரோக்தம்" (கூறப்பட்டது) என்றதும் அப்பொருண் மேற்றும். ஆகவே, சிவபெருமானாற் சுவாசம் போல எளிதானே அருளிச் செய்யப்பட்ட வேத இதிகாச புராணாதிகளைப் பிரமா தமது சீடர் முதலாயினோர்க்கு உபதேசித்தனர் என்பதே பொருளாம்.

(௧௩) உபநிடதத்திலே சில பாகங்கள் சிவபரமாகவும், சில பாகம் ஏகான்மவாதபரமாகவும், சில பாகம் விஷ்ணுபரமாகவும், பிறர் பரமாகவும் இருப்ப, அங்ஙனம் புராணங்களும் சிவபரமாகவும், ஏகான்மவாதபரமாகவும், வைஷ்ணவபரமாகவும், பிறர் பரமாகவும் அவ்வவ்வுபநிடதங்களுக்கியைந்து பொருள் கொடுத்தலான்

ஏகார்த்தாநி புராணாநி வேதா: ஸர்வேச ஸம்ஸ்ரயா: ||

(௧௪) "வேதங்களும் புராணங்களும் ஏகார்த்தமுடையன" என்று மகாபாரதம் கூறுகின்றது. சாவதி பிரகிருதி தத்துவப்பொருள் பொதிந்த ஏகான்மவாத, விண்டுவாத உபநிடதங்களினும், நிரவதி சிவதத்துவார்த்தப் பொருள் பொதிந்த *உபயான்மவாதோபநிடதங்கள் உயர்வொப்பிறந்து ஓங்கிச் சிறந்து நின்றாற்போல, சாவதிதத்துவப்பொருள் பொதிந்த ஏகான்மவாத, விண்டுவாத புராணங்களினும் நிரவதிதத்துவப்பொருள் பொதிந்த

* பரமான்மா சீவான்மா என்னும் இரண்டின் வாதம்.

உபயான்மவாத சிவபுராணங்கள் உயர்வொப்பிறந்து ஓங்கிச் சிறந்து நிற்பன வாம்.

ஏகோ ஹ வை நாராயண ஆஸீந் ந ப்ரஹ்மா நேஶாந:|

(கரு) "பிரமா இல்லை, உருத்திரர் இல்லை, நாராயணர் ஒருவரே இருந்தனர்" என்று இராமாநுசபாஷ்யத்திலும் (உ. உ. ௩௬)

யம் காமயே தம் தமுக்ரம் க்ருணோமி தம் ப்ரஹ்மாணம் தம்ருஷிம் தம் ஸுமேதாம்|

(கசு) "எவனை விரும்புகின்றேனோ அவனைப் படைக்கின்றேன்; நான் உக்கிரரையும் (உருத்திரரையும்), இருஷியும் புத்திமானுமாகிய பிரமாவையும் சிருட்டிக்கக் கூடும்" என்று மத்துவபாடியத்திலும் (உ. உ ௩எ) உதகரிக்கப்பட, மகாபாரதத்திலும் சுபாலோபநிடதத்திலும் "நாராயணர் கோபத்தினின்று உருத்திரர் பிறந்தனர்" என்றும், அந்த உருத்திரரே பிரமாவின் நெற்றியினின்று (மற்றோர் கற்பத்திலே) புதல்வராய் உதித்தனர் என்றும், இவர் ஸ்தாணுருத்திரர், நீலலோகிதருத்திரர் எனப் படுவார் என்றும், (துரிய சிவனுர்க்குரிய) பசுபதி, சர்வர், பவர், உருத்திரர், உக்கிரர், பீமர், ஈசானர், மகாதேவர் என்னும் அஷ்டநாமங்கொண்டு இவரை இவர் தந்தையாராகிய பிரமா விளித்தனர் என்றும் இருக்குவேத சாங்காயனப் பிராம்மணத்திலும், வாச சநேய சதபதப் பிராம்மணத்திலும் கூறப்பட்டிருப்பதால், இந்த உருத்திரர் சைவரால் வழிபடப்படும் துரிய உருத்திரர் அன்று; கிருஷ்ணர் அர்ச்சுனர் இருவரும் பாசுபதாஸ்திரத்தின் பொருட்டுக் கைலாசத்துக்குச் சென்ற அமையத்து,

தத: பார்ஶ்வே வ்ருஷாங்கஸ்ய ப்ரஹ்மசாரீ மிதவ்ரத:| பிங்காக்ஷஸ்தபஸ: க்ஷேத்ரம் பலவாந் நீலலோஹித:|

(கஎ) "சிவபெருமானுடைய ஓர் பக்கத்தினின்ற பிரமசாரியும், பிங்கல நேத்திரரும், தபசுக்கு ஸ்தானமாயினரும், பலவானுமாகிய நீலலோகிதர் வந்தனர்" என்று துரோணபருவத்திலும் காணப்படலானும், அஃதன்றி

வைஷ்ணவேஷு புராணேஷு யோऽபகர்ஷோ ஹரஸ்ய த்ருஶ்யதே| ந ஸ ருத்ரஸ்ய ஶைவஸமாஶ்ரயஸ்ய விஷ்ணோரிவ கேவலம்|

(கஅ) "வைஷ்ணவ புராணங்களிலே எந்த உருத்திரர் அபகர்ஷமுடையராய்த் தோற்றுகின்றோரோ, அந்த உருத்திரர் இந்தத் துரிய சிவனு

ரது கேவலம் விபூதியாம் (காரியமூர்த்தியாம்)" என்று பராசர புராணாதிகளினும் காணப்படலானுமாம். ஆகலின், சுருதிகளில் உருத்திரர்க்கு அபகர்ஷம் காணுமிடத்தும் அங்ஙனமே பொருள் கொள்க.

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् । बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रहरिष्यति (ம. ஆ. க. உசுஎ, உசுஅ)

(கக) "இதிகாச புராணங் கொண்டு வேதத்தை உபப்பிருங்கணம் செய்ய வேண்டும்; அற்பக்கேள்வியினையுடையான் தனக்குத் தீங்கு விளைப்பான் என்று வேதம் பயப்படுகின்றது" என்று மகாபாரதத்தினும், இங்ஙனம் வாயுசங்கிதை முதலிய புராணங்களினும் கூறப்படுகின்றது.

अभ्यर्हितं पूर्वम् ।

"(துவந்துவசமாசத்தில்) அதிமுக்கியமாயது முதற்கண்ணே வரவேண்டும்" எனப் பதஞ்சலியார் (உ. உ. ங௪) ம் சூத்திர வார்த்திகத்திற் கூறினமையான், இதிகாசமே புராணத்தினுஞ் சிறந்தது என்றும், அதனாற் புராணத்துக்குமுன் இதிகாசம் வைக்கப்பட்டதென்றும், அந்த இதிகாசம் பாரதமே என்றும் பூருவபக்ஷஞ் செய்யின், அது பொருந்தாது;

अजाद्यदन्तम् (உ. உ. ஙங)

என்னும் பாணினி சூத்திரத்தில் உயிர் எழுத்தை முதலினும் அகரத்தை இறுதியினும் கொண்டு முடிகிறபதம் முதற்கண்ணே வைக்கப்படல் வேண்டும் என்று கூறப்படலானும், இங்கியாயங்கொண்டே

लक्षणहेत्वोः क्रियायाः (ங. உ. கஉசு)

பாணினியார் தாமே சூத்திரஞ் செய்தமையானுமாம். ஆகலின், இதிகாசமும் புராணங்களும் பிரமாணத்தின்ற் சமானமுடையன.

शैवेष्वपि [illegible] श्रेष्ठो [illegible] ।
[illegible] प्रत्यक्षं [illegible] साक्षात्परोक्षं प्रदर्शितः । [illegible]
विद्या ज्ञेयः [illegible] । क्रियातत्त्वो [illegible]
ज्ञानात् [illegible] । [illegible]
[illegible] । परोक्षापरोक्षश्च ज्ञानं यत्र च मोक्षदः । [illegible] ।

धर्मशास्त्रादिवेदेषु प्रमाणं श्रुतिरेव नः । परो योगपर्यन्तो धर्मः श्रुतिशिरोगतः । स चायमपरो धर्मः परधर्मस्य साधनम् । धर्मशास्त्रादिभिः साङ्गः सम्यगेव च बृंहितः । तत्राप्ययं परो धर्मो योगानुष्ठानसंहितः । इतिहासपुराणाभ्यां कथंचिदुपबृंहितः । शैवागमेषु साङ्गोपाङ्गं सविस्तरः । संस्काराधिकारस्तु सम्यगेव च बृंहितः ।

(உ0) "சைவமே பரமதருமம் என்றும், அதுவே முக்கியமாக அநுஷ்டிக்கற்பாலதாம் என்றும், அச்சிவதருமத்திலேயே சாக்ஷாத்தாக வீடளிக்கும் சிவபிரானுர் அபரோக்ஷமாக அறியப்படுகின்றனர் என்றும், கன்மயாகம், தபயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என்னும் அநுத்தரமாகிய ஐவகைப் பருவங்களால் (பிரிவினல்) கிரமமாகப் பிரிவுறுவது அந்தப் பரதருமம் என்றும், சோத்தரமாகிய அப்பருவங்களாலே தான் சித்தமாயது அபரதருமம் என்றும், பரோக்ஷஞானம் அபரோக்ஷஞானம் என்னும் இரண்டும் மோக்ஷத்தைக் கொடுப்பனவாம் என்றும், பரதருமம் அபரதருமமாகிய இரண்டும் வேதங்களிற் கூறப்பட்டன என்றும், தருமசாஸ்திரங்களிற் கூறப்படும் பொருள் அனைத்துக்கும் வேதமே பிரமாணம் என்றும், யோகத்தை முடிவாகக் கொண்ட பரதருமம் உபநிடதங்களிலே அமைந்தது என்றும், பரதருமத்துக்குச் சாதனமாயுள்ளது இந்த அபரதருமம் என்றும், (மனு) தருமசாஸ்திர முதலியவைகளினல் அது நன்கு சாங்கமாக உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும், முதற்கண் உள்ளதும் முக்கியமாய் அநுஷ்டிக்கற்பாலதாம் எனக் கூறப்பட்ட (யோகபரியந்தமுள்ள) பரதருமம் இதிகாசபுராணங்களினுற் பிரயாசையோடு உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும், அது பின்னர்ச் சிவாகமங்களினுற் சாங்கோபாங்க விஸ்தாரமாகச் சம்ஸ்கார அதிகாரத்தோடு நன்கு உபப்பிருங்கணஞ் செய்யப்படும்" என்றும் வாயுசங்கிதையிற் கூறப்படலான், யோகபரியந்தமே முக்கிய உபநிடதங்களிற் கூறப்பட்டிருக்கின்றது என்றும், அவ்வுபநிடதங்கள் இதிகாசபுராணங்களாலும் சிவாகமங்களாலும் உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும் பெறப்படுகின்றது.

உபநிடதம் இதிகாசபுராணங்களால் மிகு பிரயாசையோடு உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும், அது பின்னர்ச் சைவாகமங்களினுற் சாங்கோபாங்கமாய் ஷடத்துவசுத்தியாகிய சம்ஸ்கார அதிகாரத்தோடு நன்ருக உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும் மேலே வாயுசங்கிதை கூறுமாற்றுல் உபநிடதங்கள் சூத்திரமாக, புராணங்கள் உபப்பிருங்கண

மாகவும், சைவாகமங்கள் மகோபப்பிருங்கணமாகவும் கொள்ளப்படும். படவே,

ஸாரோ ந்யம் வேதஜாலம் யதெஹவம் வெமேஷிகம் வசஃ |

(உக) உபநிடதங்கள் சூத்திரம்போலப் பொதுவுற நிற்றலாற் சாமானியசுருதி என்றும், சைவாகமங்கள் பாஷ்யம்போற் சிறப்புற நிற்றலால் விசேஷசுருதி என்றும் மோகசூரோத்தரத்திற் கூறப்பட்டது. அங்ஙனமாயின்,

பௌவாமஹெரா ஙவி ஷிவியஃ பௌளதொ ஙபௌளதஷ வ ஷ்ஃதஃ | ஸுதிஸாரமயஃ பௌளதஃ ஷதஷ ஜதரொநாநதஃ | ஷதஷ உஷயா வஷெவஷம தஷாஷா உஷயா வநஃ | காமிகாதி ஸாவோ ஷிஷிஷிதாதஸாநஷதஃ | ஸுதிஸாரமயொ யஷ ஷதகொடிவஷ விஷரஃ |

பூருவபக்ஷம்—"சிரௌதம் என்றும், அசிரௌதம் என்றும் இருபிரகாரமாகச் சைவாகமம் நினைக்கப்படும்; சுருதிசாரமயமாயுள்ளது சிரௌதம்; சுவதந்திரமாயுள்ளது இதரம் (மற்றது, அஃதாவது அசிரௌதம்) என்று கொள்ளப்படும். முற்பத்தும் பிற் பதினெட்டுமாகிய இருபத்தெட்டுச் சுவதந்திராகமம் காமிக முதலிய பெயர்களோடு முடிந்த சித்தாந்தம் என்று பெயர் பெறும். சுருதிசாரமயமாயுள்ளது நூறு கோடி விரிவினையுடையது" என்று வாயுசங்கிதை கூறலான், காமிகாதி ஆகமங்கள் சுவதந்திராகமங்கள் என்றும், அசிரௌதமாகிய அவைதிகம் என்றும் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளப்படின்,

வேதாந்தஸாரஸவஷம் வராணம் ஸாவயரஷ நஃ |
(வி. க. ஞ; வா. உத். க. கக)

(உஉ) "வேதாந்தசார நிதியாயது புராணம்" என வித்தியேசுவர சங்கிதையினும் வாயுசங்கிதையினுங் கூறப்பட்டவாறு,

வெதஸாரமிதஞ்ஜும் தஷா வைதிக மாசரெத |

(உங) "இந்த ஆகமம் வேதசாரம்; ஆகலின், வைதிகத்தை அநுசரிக்க"

வேதாந்தாதஷிதம் ஜானம் ஸிதாநம் வரம் மாஷ |

(உச) "இந்த வேதாந்தப் பொருளாகிய ஞானம் பரமசுப்பிரதிஷ்டிசித்தாந்தம்" என மகுடாகமத்திலும்,

ஸித்தாந்தம் வேதஸாரத்வாத் |

(௨௫) "சித்தாந்தம் வேதசாரமாயிருத்தலின்" எனச் சுப்பிரபேதாகமத்திலுங் கூறப்பட்டவைகளுக்கெல்லாம் அவ்வாகமங்கள் அவைதிகமாய் விரோதமுறுமே என ஆக்ஷேபிக்கின்,

சித்தாந்தம்—கூறுதும். அங்ஙனம் அச்சுலோகங்கட்குப் பொருள் கொண்டவர் தவறுண்டனர்; மேலே கூறிய வாயுசங்கிதாசுலோகங்கட்கு அவ்வாறுபொருள் செய்தவர்கள் சப்தார்த்தஞானமுடையரன்றிச் சாத்திர விஷயஞானமில்லாதவராகலின். அச்சுலோகப் பொருள் வருமாறு:—

(௨௬) ஶைவாகமோ(அ)பி த்விவிதஃ ஶ்ரௌதோ(அ)ஶ்ரௌதஶ்ச ஸம்ஸ்ம்ருதஃ=அந்தச் சைவாகமமும் சிரௌதம் அசிரௌதம் என இருதிறப்படும்; ஶ்ருதிஸாரமயஃ ஶ்ரௌதஃ=சுருதிசாரமாயுள்ள சிரௌதமானது; ஸ்வதந்த்ர இதரோ மதஃ=சுவதந்திரமும் இதரமுமாகக் கொள்ளப்படும்; ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாஷ்டாதஶதா பரஃ காமிகாதி ஸமாக்யாபிஃ ஸித்தாந்தஸம்ஜ்ஞிதஃ=சுவதந்திராகமமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமாய் (இருபத்தெட்டுக்) காமிகாதி பெயர்களோடு முடிந்த சித்தாந்தம் எனப் பெயர் பெறும; ஶ்ருதிஸாரமயோ யஸ்து ஶதகோடிப்ரவிஸ்தரஃ=சுருதிசாரமயமாயுள்ள இதரமானது (மற்றது) நூறுகோடி விரிவினதாகும் என்று பொருள் கோடற் பாற்று;

ஶ்ரௌதாஶ்ரௌத விபேதேந த்விவிதஸ்து ஶிவாகமஃ | ஶ்ருதிஸாரமயஶ்ஶ்ரௌதஸ்ஸ புநர்த்விவிதோ மதஃ | ஸ்வதந்த்ர இதரஶ்சேதி ஸ்வதந்த்ரோ தஶதா புரா | ததாஷ்டாதஶதா பஶ்சாத் ஸித்தாந்த இதி கீயதே | இதரஶ்ஶ்ருதிஸாரஸ்து ஶதகோடிப்ரவிஸ்தரஃ |

(௨௭) "சைவாகமம் சிரௌதம் அசிரௌதம் என இருவகைப்படும்; சுருதிசாரமாயுள்ளது சிரௌதம்; அது பின்னர்ச் சுவதந்திரமும் இதரமும் (மற்றதும்) என இருவகைப்படும்; சுவதந்திரமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமாய்ச் சித்தாந்தம் என்று கூறப்படும்; சுருதிசாரமாயுள்ள இதரமானது (மற்றது) நூறுகோடி விரிவினையுடையதாகும்" என்று சனற்குமாரசங்கிதையானது வாயுசங்கிதாசுலோகத்தின் சப்தங்களைத் தொடர்ந்து இங்ஙனம் பொருள் கோடல் வேண்டும் என்று வழிதிறந்துவிட்டமையின். ஈண்டுச் சிரௌதாகமம் இவை என்று கூறி, அசிரௌதாகமத்தையுற்றுக் கூறுதொழிந்தமை காபாலம், இலாகுளம், பாசுபதம், சாக்தம், பைரவம், பாஞ்சராத்திரம், காளாமுகமுதலிய அசிரௌதாகமங்

களை ஈண்டு எடுத்தாளவேண்டியதோரவகாசமின்மையானும், அவை கூர்ம புராணமுதலியவற்றிற் கூறப்படலானுமாம். இது கொண்டு காமிகாதி ஆகமங்களை அசிரௌதம் என்றும், அவைதிகம் என்றும் வைரிகள் ஏற்றும் தூஷணைகள் அவற்றை எட்டுணையும் பற்றாவாம். வேதோக்தமாகிய விபூதி, உருத்திராக்ஷம், பிராசாதம், பஞ்சாக்ஷரம், பதிபசுபாசம் என்பவற்றைக் காமிகாதி ஆகமங்கள் நிரூபித்தலின், இவை சிரௌதம் எனவும், சுருதி யிலே பிரதிபாதிக்கப்படாத ஆலயநிர்மாணம், பிரதிஷ்டை, உற்சவமுதலிய வைகளை அவ்வாகமங்கள் சுவதந்திரமாக எடுத்து விரித்துரைத்தலாற் சுவதந்திரம் எனவும் கூறப்படும்; ஆகலின், உபநிடதங்கள் இதிகாசபுரா ணாகமங்கள் கொண்டு பொருட்படுத்தற்பாலன.

(உஅ) ஈச, கேன, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்கிய, பிருகதாரணிய, கௌஷீதகிப்பிராம்மண, மகோப நிடத, பிருகச்சாபால, சரப, ஜாபால, கைவல்லிய, காலாக்கினிருத்திர, சுவேதாசுவதர, மைத்திராயண, அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உப நிடதப் பொருள்களை ஆதாரமாகக் கொண்டு வேதாந்த சூத்திரம் எழுந்த மையானும், இவ்வுபநிடதங்களிற் பலவற்றையே மற்றைப் பாடியகர்த்தாக் கள் தத்தம் பாடியங்களில் எடுத்தாளுகின்றமையானும், இவ்வுபநிடதங் களே ஏகான்மவாத விண்டுவாதோபநிடதங்களினும் உற்கிருஷ்டமாய்ச் சிறந்தன. இவற்றுள்ளே அதர்வசிரசு என்னும் பெயர் கௌதமதரும சூத்திரத்து (கக. கஉ) னும், போதாயனதருமசூத்திரத்து (ங. கo. கo) னும், அதன் பொருள் இலிங்கபுராணம் (உத். கஅ) னும், ஆதித்திய புரா ணத்து இரண்டாம் அத்தியாயத்தினும், அதர்வசிகைப்பொருள் (கைலா. கo. ஙஉ) னும், (வா. பூ. உ. உசு) னும், சுவேதாசுவதரப்பொருள் (வா. பூ. ச) னும், (கூர். பூ. கச) னும், (சௌ. உஎ) னும், கைவல்லியோபநிடதப் பொருள் மானவ புராணத்து ஆறும் அத்தியாயத்தினும், வேதாந்தசூத் திரத்து "ஆசிநாதிகரண" த்தினும் குறிக்கப்பட்டிருத்தலின் இவற்றை நவீனோபநிடதம் என்பார் மதி விரிவிலதாமெனவிடுக்க.

ஏவம் ஸம்போதிதோ ருத்ரோ மாதவேந முராரிணா |
சகார மோஹசாஸ்த்ராணி கேசவோऽபி சிவேரித꞉ | காபாலம்
நாகுலம் வாமம் பைரவம் பூர்வபச்சிமம் | பாஞ்சராத்ரம்
பாசுபதம் ததாந்யாநி ஸஹஸ்ரச꞉ |

(உகூ) "முராரியாகிய மாதவரால் உருத்திரர் கேட்கப்பட்டும், உருத்திரரால் கேசவர் தூண்டப்பட்டும் காபாலம், இலாகுளம், சாக்தம், பைரவம், பாஞ்சராத்திரம், பாசுபதமுதலிய ஆயிரக் கணக்காக மற்றைய

[illegible] இறைவர்களைச் செய்தனர்" என்று (கூர். பூ. கசு)ற் கூறப் [illegible] பாசுபதமும் மோகநூலாய்விடின், பின் அது பிரமாண மாதல் எவ்வாறெனின்,

ஸ்ருஷ்டம் ஹி மயா பூர்வம் ஶ்ரௌதம் பாஶுபதம் ஶுபம் | குஹ்யாத் குஹ்யதமம் ஸூக்ஷ்மம் வேதஸாரம் விமுக்தயே | ஶ்ரௌதபாஶுபதே யோகே ஸேவநீயோ முமுக்ஷுபிஃ | அந்யாநி சைவ ஶாஸ்த்ராணி லோகே ஸ்மிந் மோஹநாய வை | வேதவாத விருத்தாநி மயைவ கதிதாநி து | வாமம் பாஶுபதம் ஸோமம் லாகுலம் சைவ பைரவம் | ந ஸேவ்யம் ஏதத் கதிதம் வேதபாஹ்யம் ததேதரம் |

(கூ-0) "மறையினும் அதிமறைவாய், சூக்குமமாய், வேதசாரமாய், சுபமாயுள்ள சிரௌதபாசுபதமானது எம்மால் (உருத்திரரால்) இயற்றப் பட்டது; இந்தப் பாசுபதயோகம் முமூட்சுக்களாலே சேவிக்கற்பாலது; வேதவிருத்தமாகிய வாமம், பாசுபதம், சோமம், இலாகுளம், பைரவம் என் னும் அன்னியசாஸ்திரங்களும் இவ்வுலகின்கண் மயக்கும்பொருட்டு எம் மூற் செய்யப்பட்டன, இங்ஙனம் வேதபாகியமாகக் கூறப்பட்டது சேவிக்கற்பாலதன்று" எனக் (கூர். உத். கூஅ)ற் கூறப்பட்டிருப்பதாற் பாசுபதமானது சிரௌதபாசுபதம் எனவும், அசிரௌதபாசுபதம் எனவும் இருதிறப்படும் என்றும், இந்த அசிரௌத பாசுபதத்தில் நகுலீசபாசுபத முதலியவும் அடங்கும் என்றும் ஓர்க.

அத ஏதத் அதிகரணம் ஈஶ்வரஸ்ய நிமித்தகாரணவாதிநீ ஹிரண்ய கர்பயோகஸ்ம்ருதி விஷய இதி வயம் வதாமஃ | அதோ ஹிர ண்யகர்பாகம நிராஸபரம் இதமதிகரணம் இதி யுக்தம் |

(கூக) "இந்தப் பசுபதி அதிகரணம் ஈசுவரரை நிமித்தகாரணமாகக் கூறும் * இரண்ணியகருப்ப யோக ஸ்மிருதியைப்பற்றியதேயாமாதலின், அது இரண்ணியகருப்பாகமத்தை நிரசிக்கும் பொருட்டுப் போந்ததா மெனல் யுக்தம்" என நீலகண்டசிவாசாரியர் தமது "பாசுபத்தியதிகரண" த்திற் கூறுகின்றனராதலின், சிரௌதபாசுபதாகமம் தண்டிக்கப்படவில்லை என அறியற்பாற்று. ஸ்ரீஉமாபதிசிவாசாரிய சுவாமிகளும் அவ்வதிகர

---

* ஹிரண்யகர்போ யோகஸ்ய வக்தா நாந்யஃ புராதநஃ |

"யோகமார்க்கத்தைப் பிரகடனஞ் செய்தவர் பழையோருள் இரண்ணிய கருப்பரன்றிப் பிறரன்று" எனப் பாரதங் கூறுகின்றது.

ணத்திற் கண்டிக்கப்பட்டது நிருடபாசுபதமன்றிச் சித்தாந்த சைவாகமமன்றென்று பவுட்கரவியாக்கியையிற் கூறினர்.

𑌮𑌾𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌯𑍋𑌗𑌵𑌿𑌧𑌿𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑍋 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌕𑌾𑌰𑌣𑌮𑌿𑌤𑌿 𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿 ।

(௩௨) "காரியம், காரணம், யோகம், விதி, துக்கமுடிவு என்னும் ஐந்து பதார்த்தங்களும் பசுவின் பாசத்தை அறுக்கும்பொருட்டுப் பசுபதியீசுவரராற் கூறப்பட்டன என்றும், பசுபதியாகிய ஈசுவரரே நிமித்த காரணர் என்றும் (சைவர்கள்) கொள்கின்றனர் என்று சங்கராசாரியரால் வேதாந்தசூத்திர பாடியத்திலே (௨. ௨, ௩௭) கண்டிக்கப்பட்ட பாசுபதம் நகுலீசபாசுபதம் என்றும்,

𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌰𑍂𑌪𑌾𑌦𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌦𑌶𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌨𑍀𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 । 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌿 𑌰𑍂𑌪𑍋 𑌯𑍋𑌗𑌃 । 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃 । 𑌸 𑌵𑍍𑌰𑌤𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌃 । 𑌭𑌸𑍍𑌮𑌸𑍍𑌨𑌾𑌨 𑌭𑌸𑍍𑌮𑌶𑌯𑌨𑌾𑌵𑌸𑌾𑌨𑌾𑌦𑌿 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 । 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 । 𑌉𑌪𑌹𑌾𑌰𑌃 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑌃 । 𑌹𑌸𑌿𑌤 𑌗𑍀𑌤 𑌨𑍃𑌤𑍍𑌤 𑌡𑍁𑌡𑍁𑌕𑍍𑌕𑌾𑌰 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰 𑌜𑌪𑌭𑍇𑌦𑍇𑌨 । 𑌤𑌤𑍍𑌰 𑌹𑌸𑌿𑌤𑌮𑌟𑍍𑌟𑌹𑌾𑌸𑌃 𑌗𑍀𑌤𑌂 𑌗𑌾𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 । 𑌡𑍁𑌡𑍁𑌕𑍍𑌕𑌾𑌰𑍋 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌤𑌾𑌲𑍁𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌵𑍃𑌷𑌭𑌨𑌾𑌦 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌨𑌾𑌦𑌃 । 𑌜𑌪𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑍌 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 । 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌕𑍍𑌰𑌾𑌥𑌨 𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌨𑌮𑌨𑍍𑌦𑌨 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌣 𑌅𑌵𑌿𑌤𑌤𑍍𑌕𑌰𑌣 𑌅𑌵𑌿𑌤𑌦𑍍𑌭𑌾𑌷𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 । 𑌅𑌸𑍁𑌪𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍁𑌪𑍍𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌕𑍍𑌰𑌾𑌥𑌨𑌂 । 𑌵𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌭𑌿𑌹𑌤𑌸𑍍𑌯𑍇𑌵 𑌶𑌰𑍀𑌰𑌾𑌵𑌯𑌵𑌾𑌨𑌾𑌂 𑌕𑌮𑍍𑌪𑌨𑌂 𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌨𑌂 । 𑌉𑌪𑌹𑌤𑌪𑌾𑌦𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑍇𑌵 𑌮𑌨𑍍𑌦𑌗𑌮𑌨𑌂 𑌮𑌨𑍍𑌦𑌨𑌂 । 𑌰𑍂𑌪𑌯𑍌𑌵𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌿𑌨𑍀𑌮𑌵𑌲𑍋𑌕𑍍𑌯 𑌕𑌾𑌮𑍁𑌕𑌸𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌲𑌾𑌸𑍈𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌣𑌂 । 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌕𑌲𑌸𑍍𑌯𑍇𑌵 𑌲𑍋𑌕𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑌣𑌮𑌵𑌿𑌤𑌤𑍍𑌕𑌰𑌣𑌂 । 𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌾𑌪𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌦𑌿 𑌶𑌬𑍍𑌦𑍋𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌮𑌵𑌿𑌤𑌦𑍍𑌭𑌾𑌷𑌣𑌂 । 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌃 । 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌶𑍍𑌚 । 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋𑌚𑍍𑌛𑍇𑌦𑌃 । 𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌯 𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 ।

(௫௫) "அங்கே காரியங்கள் என்றவை பிருதிவிமுதலிய ஐந்து தத்துவங்களும் ரூபமுதலிய பஞ்சகுணங்களுமாகிய பத்துமாம் என்றும், காரணங்கள் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாகிய பதின்மூன்றுமாம் என்றும், தியான முதலிய ரூபமே யோகம் என்றும், தர்மார்த்தவியாபாரம் விதி என்றும், இது விரதம் துவாரம் என இருவகைப்படும் என்றும், பஸ்மஸ்நானம் பஸ்மசயனம் உபகாரமுதலியன விரதமாம் என்றும், பஸ்மஸ்நானமும் பஸ்மசயனமும் பிரசித்தம் என்றும், உபகாரம் அறுவிதப்படும் என்றும், அவை ஹாசம், கீதம், நிருத்தம், உடுக்காரம், நமஸ்காரம் செபம் என்பனவாம் என்றும், இவற்றுள் ஹாசம் அட்டகாசம் என்றும், கீதம் காந்தருவசாஸ்திரப் பிரகாரமாயுள்ளது என்றும், உடுக்காரமாவது நாக்கை உதடுகளோடு மருவி உண்டாக்கும் இருஷபநாதத் தொனி என்றும், செபநமஸ்காரம் என்பன பிரசித்தம் என்றும், துவாரங்களாவன காயனம், ஸ்பந்தனம், மந்தயானம், சிருங்காரணை, தத்காரணம், தத்பாஷணம் என அறுவகைப்படும் என்றும், இவற்றுள் நித்திரை செய்யாதவனும் நித்திரைக் குறியைக் காட்டலே காயனம் என்றும், வாதநோயாற் பீடிக்கப்பட்டான் போலச் சரீர அவயவங்களை நடுங்கச் செய்தலே ஸ்பந்தனம் என்றும், நொந்த காலுடையான் போலப் போதல் மந்தயானம் என்றும், ரூபயௌவனமுடைய காமுக ஸ்திரியைப் பார்க்கும் காமுகன்போல விலாசங்களினாற் காட்டும் ஒழுக்கம் சிருங்காரணை என்றும், காரியாகாரிய விவேக விகற்பமற்றவன் போல உலகத்தினால் நிந்திக்கப்படும் கர்மகரணமே தத்காரணம் என்றும், கூறியதை அப்பிரயோசன மொழிகளை உச்சரித்தலே தத்பாஷணம் என்றும், அநான்மகம் சான்மகம் என இருதிறப்படுவது துக்கத்தின் முடிவு என்றும், சகல துக்கங்களையும் மிகுதியும் ஒழித்துவிடலே அநான்மகம் என்றும், ஞானக் கிரியா சத்தி பல இலக்ஷணமுடைய ஐசுவரியமே சான்மகம் என்றும்" அப்புயதீக்ஷிதர் தமது வேதாந்த கற்பதரு பரிமளத்திலும், வித்தியாரணியர் தமது சர்வதரிசன சங்கிரகத்திலுங் கூறியிருக்கின்றனர். இதனால் அச்சங்கராசாரியரால் அசிரௌத நகுலீச பாசுபதம் கண்டிக்கப்பட்டதன்றி வைதிக சைவபாசுபதம் கண்டிக்கப்பட்டதன்று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] ।

(௩௪) "அப்பசுபதி மதத்தினர் காபாலம், காளாமுகம், பாசுபதம், சைவம் என்னும் நான்கு வகுப்பைச் சார்ந்தவர் என்றும், இந்நான்கு மதங்களும் வேதவிரோதமாயுள்ளதைக் கற்பிக்கின்றன என்றும், அவற்றுள்ளே ஆறு முத்திரைகளின் தத்துவஞானமுடையனாய், பரமுத்திரையை அறிந்தவனாய், பகாசனஸ்தனாயிருந்து ஆன்மாவைத் தியானம்பண்ணி நிர்வாணத்தை அடைகின்றனன் என்று காபாலரும், கபால பாத்திரத்திற் போசனஞ் செய்பவராய், பிணஞ் சுட்ட சாம்பலைப் பூசுவோராய், அப்பிண மாமிசத்தை உண்பவராய், ஓர் பெரிய தண்டத்தையுடையவராய், சுரா கும்பஸ்தாபனஞ் செய்து தேவதா பூசாதிகளுக்கு அதனை ஆதாரமாய்க் கொள்பவராய் ஒழுகுதலே இம்மை மறுமைக்குரிய சகல பல சாதனங்களென்று காளாமுகரும் கூறுகின்றனர்" என்றும் இராமாநுசாசாரியர் தமது "பாசுபத்தியதிகரண"த்திலே காபாலர் காளாமுகர் என்னும் இருவர் மத இலக்ஷணமாத்திரங் கூறிச் சைவர் பாசுபதர் இலக்ஷணங் கூறுதொழிந்தனர். காபாலர் காளாமுகர் என்பார் வேதநெறி தவறினவர் என்பது நமக்கும் உடன்பாடே. அங்ஙனம் சைவமும் பாசுபதமும் அவைதிகம் என்று கோடற்குரிய இலக்ஷணம் கூறப்படும் வரையும் அவை கண்டிக்கப்படவில்லை என்றோர்க.

(௩௫) வேதாந்த சூத்திரத்துக்கு ஆதாரமாய் நின்ற முக்கியோபநிடதங்களுள்ளே ஈசாவாசியோபநிடதத்து,

ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் (ஈசா. க)

என்னும் முதன் மந்திரபாகத்துக்குக் கைலாசசங்கிதை

॥ ஈசோऽஸ்ய ரக்ஷணீயத்வாத் ஈசாவாஸ்யமிதம் ஜகத் (கைலா. கக. சரு)

(௩௬) "ஈசராற் காக்கப்படுதலின் இவ்வுலகம் ஈசாவாசியம் எனப்பட்டது" என்று பொருள் உரைத்தலின் "ஈச" என்றது ஏகான்மவாதிகளும், வைணவரும், மத்துவரும் கூறும் ஆன்மாவுக்கேனும் நாராயணர்க்கேனுஞ் செல்லாது சிவபெருமான்மேற் சென்றது.

அத ஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசு: கிம் ஜப்யேநாம்ருதத்வம் ப்ரூஹீதி । ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய: சதருத்ரியேணேத்யேதான்யேவ ஹ வா அம்ருதஸ்ய நாமதேயானி । ஏதைர்ஹ வா அம்ருதோ பவதி ।

(௩௭) "பிரமசாரிகள் யாஞ்ஞவற்கியரை நோக்கி, எதனைச் செபிக் கல (எமக்கு)அமிர்தத்துவம் எய்தும்? என்றனர்; அதற்கு அவர் சதருத்திரீயத்தை செபித்தலினல் (என்றும்), இந்தச் சதருத்திரீயத்தடங்கிய இவை அமிர்தத்தின் பெயர்கள் என்றும், இவற்றைச் செபித்தலினல் அமிர்தத்துவம் எய்தும் என்றும் விடை இறுத்தனர்" என்று சாபாலோபநிடதத்திற் கூறப்பட்டிருக்கின்றது. சதருத்திரீயத்திற் கூறப்பட்ட நீலக்கிரீவர், விலோகிதர், அபர்த்தின், சிவன், இரண்ணியபாகு, உருத்திரர், சிதிகண்டர், கிரீசர் முதலிய நாமமனைத்துஞ் சிவபெருமான் திருநாமமாதலின், இவை அமிர்தத்தின் பெயர்களெனவே "அவ்வமிர்தம்" என்பது சிவபெருமானுக்குப் பெயராயிற்று. இங்ஙனம் நீலகண்ட சிவாசாரியர் "அந்தரதிகரண" த்திலும் (க. க. உஉ), "அந்தரியாமியதிகரண" த்திலும் (க. உ. கசு), "காரியாதிகரண"த்திலும் (ச, ௩. க௩) "அமிர்தம்" என்றது சிவபெருமான் திருநாமம் என்று உரைத்தருளினர். அமிர்தம் என்றது யோகமாத்திரையால் நித்தியமும் இனிமையும் தூய்மையுமுடைய அமிர்தமுதலிய பலபொருட்குஞ் செல்லுமேனும், ரூடமாத்திரையாய்ச் சிவபெருமானுக்கே சேறலானும் யாஞ்ஞவற்கியர் முதலிய இருஷிகளால் அமிர்தம் என்றது சிவபெருமானுக்கே யோகரூடமாய் வழங்கப்பட்டதென அறியற்பாற்று.

। ஶிவஂ த்யாயதே ।

(௩௮) "சிவானந்தந் துய்க்கின்றனன்" என்று (சசா. கக, கச) லும்,

விஷ்ணுத்ஸோமஃ ஶிவம் ।

(௩௯) "சிவானந்தத்தைத் தினைக்கின்றனன்" என்று(கேந.கஉ)லும்,

ஶிவோ ஹம் ஸ்மி ।

என்னும் மந்திரத்துக்கு நீலகண்டசிவாசாரியர் (ச. ச. ச) சூத்திர பாடியத்தில் ஆன்மாவுக்குச் சிவசாமியம் எய்துவதாகக் கூறிய பொருள் கொண்டே,

ஶிவஂ ஸ்மி ।

என்றற்றொடக்கத்தவற்றுக்கும் பின்வருமாறு சாமியப் பொருள் கொள்ளப்படுகின்றது. எங்ஙனமெனின்,

ஶிவதா ஸ்மி

(௪0) "சிவசாமிய மறுகின்றனர்" என்று (கேந. க௩) லும்,

தஸ்மாஜ்ஜநதேவாஃஶிவம் உபாஸ்யதே ।

(சக) "அது பிரமம், அதுவே சிவன் என்று கூறப்படுகின்றது" என்று (கட. இ. அ. ஹும், ௬. க) ஹும்,

அத மர்த்யோऽம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே ।

(சஉ) "பின், மனிதன் சிவசாமிய முற்றுப் பிரமானந்தந் துய்க்கின்றனன்" என்று (கட. ௬. கச) ஹும்,

தம் வித்யாச்சுக்ரமம்ருதம் தம் வித்யாச்சுக்ரமம்ருதமிதி ।

(சங) "அதனைப் (பரமான்மாவைத்) தூயதென்றும், சிவமென்றும் அறிக; அதனைத் தூயதென்றும் சிவமென்றும் அறிக" என்று (கட. ௬. கஎ) ஹும்,

[illegible] ।

(சச) "இதுதான் உயிர்கட்கு உறைவிடம்; இது சிவம்" என்று (பிர. க. க0) ஹும்,

[illegible] ।

(சரு) "சத்தும் அசத்தும் சிவமுமாயவர் தேவர்" என்று (பிர. உ. ரு) ஹும்,

அம்ருதோ பவதி ।

(சசு) "சிவசாமியமுறுகின்றனன்" என்று (பிர. ௩. கக) ஹும்,

விஜ்ஞாய [illegible] விஜ்ஞாய [illegible] ।

(சஎ) "அறிந்து சிவானந்தம் அநுபவிக்கின்றனன்; அறிந்து சிவானந்தம் அநுபவிக்கின்றனன்" என்று (பிர. ௩. கஉ) ஹும்,

[illegible] ।

(சஅ) "(அறிஞன்) சாந்தமாயும், ஐரையிலதாயும், பயமிலதாயும், பரமாயுமுள்ள சிவத்தை (சிவானந்தத்தை) அடைகின்றனன்" என்று (பிர. ரு. எ) ஹும்,

[illegible] அம்ருதோ பவதி ।

(சகூ) "அவ்வியல்பினனாகிய இவன் கலையிலனாய்ச் சிவசாமியமுறுகின்றனன்" என்று (பிர. ௬. ரு) ஹும்,

[illegible] ।

(௫௦) "எந்தப் பிரமலோகத்திலே புருஷரும், அழிவிலாவியல்பினருமாய சிவனார் உளரோ" என்று (முண். ௧. ௨. ௧௧) னும்,

தடுைத ஜூஷ்தூஜெஷதூசo தடுதுஹவ்யo வொாஹு விஸீ ।

(௫௧) "சௌமிய, அவ்வியயஃபினதாகிய இது சத்தியம்; அது சிவம்; அது ஆலோசிக்கற்பாற்று; என்று அறி" என்று (முண். ௨. ௨. ௨) னும்,

ஊஂூத ரெஸொூஷ ஸெ.தஃ।

(௫௨) "இது சிவனது அணை" என்று (முண். ௨. ௨. ௫) னும்,

தழ்ஜாரெநந வரிவஶ்யூஜி யீரா கூநoஷரூவ் ஊஂூதo யதூஹாதி।

(௫௩) "எந்தப் பிரமம் ஆனந்தவடிவாகிய சிவமாய் விளங்குகின்றதோ, அந்தப் பிரமத்தை (அருண்) ஞானத்தினாற் பெரியோர் (இடையீடின்றித்) தியானிக்கின்றனர்" என்று (முண். ௨. ௨. ௭) னும்,

ஸுரெஹவெஷ ஊஂூதழ்।

(௫௪) "இந்தப் பிரமமே சிவம்" என்று (முண். ௨. ௨. ௧௧) னும்,

விஊஂரெகூதா zஊஂூரெதா ஹவதி।

(௫௫) "வீடுற்றவனாய்ச் சிவசாமியமுறுகின்றனன்" என்று (முண். ௩. ௨. ௬) னும்,

ஊஂூத ஸாஊஹவஸ।

(௫௬) "சிவசாமியனாகின்றான்" என்று (ஐத. ௪. ௬. னும், ௫. ௪) னும்,

ஊஂூரெதா ஹிரணூயஃ।

(௫௭) "சிவனார் பொன்வண்ணர்" என்று (தை. ௧. ௬. ௧) னும்,

ஶாந்தி ஷஊஂூஜ ஊஂூதழ்।

(௫௮) "சாந்தியினுள் நிறைந்த சிவம்" என்று (தை. ௧. ௬. ௨) னும்,

ஊஂூரெதா ஹவதி।

(௫௯) "சிவசாமியனாகின்றனன்" என்று (சாந். ௪. [illegible]) னும்,

வஷ்த ஊஂூத ஊஹய ரெஊதஃ ஊூவஹ।

(சூ0) "இது அபயமாய்ச் சிவமாயுள்ளது; இது பிரமம்" என்று (சாந். ச, கநு. க) னும்,

யொ வெ ஹுமா தடிரூதழு|

(சூக) "எது முடிவிலாவின்பமோ, அது சிவம்" என்று (சாந். எ. உச. க) னும்,

வாத டிரூத ஸெய ஒெத ஸூரவறு|

(சூஉ) "இது அபயமாகிய சிவம், இது பிரமம்" என்று (சாந். அ. ங. ச. னும், அ. எ. ச. னும், அ. அ. ங. னும், அ. க0. க. னும், அ. கக. க) னும்,

தஷூ வறு தடிரூதம ஸ ரூதா|

(சூங) "அது பிரமம், அது சிவம், அது ஆன்மா" என்று (சாந். அ. கச. க) னும்,

கூயம தெநாரூதா ஸூாழு|

(சூச) "அதனைக்கொண்டு சிவத்தை அடைவேனு?" என்று (பிரு. ச். ச். உ) னும்,

யொய ஊதெஷூடி ஊரூத ஜிஷ0 ஸூரவெஹஷ0 ஸவஷழு|

(சூரு) "எது ஆன்மாவோ, அது சிவம், அது பிரமம், அது எல்லாம்" என்று (பிரு. ச. ரு. க—கச) னும்,

த ரூதாஜயூாஷூரூதந|

(சூசூ) "உனக்கு ஆன்மாவாயுள்ளவர் *அந்தரியாமியாகிய சிவன்" என்று (பிரு. ரு. எ. ங—உங) னும்,

கூய ஊஷெூா ரூரூதொ ஹவகூரு ஸூரவறு ஸவஊரூதெ|

(சூஎ) "மனிதன் சிவசாமியமுற்றுப் பிரமானந்தத்தை அடைகின்றனன்" என்று (பிரு. சூ. ச. எ) னும்,

---

*வஷத ரூதாஜயூாஷீ யொ ரூரூதஹ ஸிவஊஸய்யு (ஙஎம் இலக்கத்தில்) ஜாபாலோபநிடதங் கொண்டு நாம் அமிர்தத்துக்குக் கூறும் பொருட்கியைய, "எவர் அந்தரியாமியும் அமிர்தமுமாயிருக்கின்றனரோ, அவர் சிவன்" என்று (கைலா. கக, ௫0) கூறுகின்றது.

𑌅𑌮𑍃𑌤𑍋𑌽𑌮𑍃𑌤𑌮𑍍।

(சு அ) "அழியாதவனாகிய (நான்) சிவமாகப் (பாவிக்கின்றேன்)" என்று (பிரு. சு. ச. கஎ) னும்,

𑌮𑌾 𑌮𑌾𑌯𑍁 𑌰𑌮𑍃𑌤 𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌵।

(சுகூ) "என்னை ஆன்மாவாகவும், சிவனாகவுங் கொண்டு வழிபடு" என்று (கௌஷீ. ங. உ) னும்,

𑌸 𑌏𑌷 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑍋𑌽𑌜𑌰𑍋𑌽𑌮𑍃𑌤𑌃।

(எ0) "இந்தப் பிராணனே அருளோடு கூடிய ஆன்மாவாய், அநந்தமாய், அஜரமாயுள்ள சிவன்" என்று (கௌஷீ. ங. கூ) னும்,

𑌏𑌷𑌾 𑌗𑌤𑌿 𑌰𑍇𑌤 𑌦𑌮𑍃𑌤𑌮𑍍।

(எக) "இது கதி, இது சிவம்" என்று (மைத். சு. உஉ) னும்,

𑌏𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌤𑌦𑌮𑍃𑌤 𑌮𑍇𑌤𑌦𑍍𑌭𑌰𑍍𑌗𑌃।

(எஉ) "இது பிரமம், இது சிவம், இது பர்க்கர்" என்று (மைத். சு. ஙரு) னும் சிவபெருமான் திருநாமமாகிய அமிர்தம் என்னும் மொழி காணப் படுகின்றமையானும்,

(எங) ஈசர்

என்று (ஈசா. க) னும்,

(சுவே. க. அ) னும்,

(,, ங. எ, உ0) னும்,

(,, ச. எ) னும்,

(மைத். சு. கஅ) னும்,

(முண். ங. க. ங) னும்,

(மகாநா. கசு. ங) னும்,

(கைவ. உ0) னும்,

(எச) ஈசுவரர்

என்று (பிரு. ங. ச. அ) னும்,

(,, சு. ச. கச—கஅ) னும்,

(சுவே. சு. எ) னும்,

(மகாநா. ச. அ) னும்,

(,, கஎ. ரு) னும்,

அதர்வசிகையினும்,

(எரு) ஈசானர்

என்று (பிரு. சு. ச. கரு, உஉ) னும்,

(கட. ச. ரு, கஉ) னும்,

(சுவே. ங. கஉ, கரு, கஎ) னும்,

(,, ச. கக) னும்,

(மைத். சு. அ; எ. க, எ) னும்,

(மகாநா. கஎ. ரு) னும்,

(எக) பதி
என்று (முண்ட. க. உ. ௫) னும், (மகாநா. கக. ௩) னும்,
(சுவே. சு. எ, ௯) னும், (பிர. உ. ௯) னும்,

(எஎ) சத்து என்றதை
(உபப்பிருங்கணப் பிரகாரம்) மகாதேவதை (வே. சூ. ௩. ௩. ௩எ) என்று கூறவேண்டித் "தேவதை" என்று (சாந். சு. ௩. உ) னும்,

(எஅ) சிவ
என்று (மாண்டூ. எ, கஉ) னுமாகச் சிவனார் திருநாமங்கள் காணப்படுகின்றமையாலும் முக்கிய உபநிடதங்கள் முழுமையும் அச்சிவநாமங்களால் அலங்கரிக்கப்பட்டிருத்தல் புலப்படுகின்றது.

ஶ்வபசோ யத்யஸௌ ஶிவ இதி வாசம் வதேத்। தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்வஸேத் தேந ஸஹ புஞ்ஜீத।

(முண். ௩. உ. ௯*)

"சண்டாளனேனுஞ் சிவனெனும் மொழியைச் செப்புவானாயின், அவனொடு பேசுக, அவனொடு வசிக்க, அவனொடுண்க" என்னும் மந்திரம் முண்டகோபநிடதத்ததெனப் பிரம சூத்திர சைவபாடியத்து "அக்கினி கோத்திராதியதிகரண" த்திற் (ச. க. கசு) காணப்படுகின்றது.

ஶிவேதி வாசம் யோ நித்யம் சண்டாலோ(அ)பி வதேந்நர:। ஸஹ தேந வதேத்வாசம் ஸஹ தேந வஸேத்ஸதா॥

"சண்டாளனேனுஞ் சிவனென்னு மொழியை நித்தமு மானந்தத்தோடுரைப்பானாயின் அவனொடு சல்லாபம் புரிக, அவனொடெப்போதும் வசிக்க" என்னும் வாசிஷ்டலைங்கோபப்பிருங்கண சுலோகமானது ஏகான்மவாதியார் காலத்துக்கு முன் அம்முண்டகோபநிடத மந்திரம் உளதாதலையும், அவர்க்குப் பின் இலதாதலையும் வலியுறுத்துகின்றது.

யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா:। ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி॥

"எப்போது ஆகாயத்தைத் தோலாக உரித்து உடுக்கின்றனரோ, அப்போது 'சிவத்தை அறியாது (பிறவித்) துக்கத்தின் முடிபும் எய்தும்'" என்று (சுவே. சு. உ0) ற் காணப்படுகின்றது; இங்ஙனம் இதற்கு

சர்மேவ வ்யோம மநுஜா வேஷ்டயிஷ்யந்தி சேத்யதி। ஶிவஜ்ஞாதா தே(அ)விஜ்ஞாய முக்திமேஷ்யந்த்யஸம்ஶய:॥

என்று (சங். ௩. க. உ௫) னும்,

*இம்மந்திரம் மதவைரிகளால் இம்முண்டகோபநிடதத்தினின்று ஒழிக்கப்பட்டது

யதா சர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மானவா:। ததா சிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி॥

என்று (ஶ்வே. பூ. ச. கஉ) னும்,

உபப்பிருங்கணங்கள் கூறப்பட்டுள்ளனவேயாக, ஏனைமவாதியரும் பிறரும் அவ்வுபப்பிருங்கணங்களுக்கு மாறுகச் சுவேதாசுவதரத்திற் "சிவம்" என்று சிவபெருமானை நேரே குறிக்கும் பதத்தை எடுத்து விட்டுத் "தேவம்" (தெவஂ) என்று திரித்துக் கொண்டனர். மகாநாராயணம், சுவேதாசுவதரம், கைவல்லியம், அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்களிலே சிவன் என்னும் திருநாமம் வெளிப்படையாக யாண்டும் புலப்படுவதாக,

ஶிவ ஏவேதி வேதாந்தா நான்ய: கர்த்தேதி வதந்தி ஹி।

(எசு). "சிவன் ஒருவரே கர்த்தா, பிறர் ஒருவர் இன்று என வேதாந்தங்கள் கூறுகின்றன" வாதலின், ஈசகேநாதி உபநிடதமனைத்துஞ் சைவோபநிடதங்களாம். அங்ஙனமாயின்,

தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய: திவீவ சக்ஷுராததம்।

(அ0) "கண்ணனது ஆகாயத்து நிறுத்தப்பட்டாற்போல, அந்த விஷ்ணுவின் பரமபதத்தைப் பெரியோர் எஞ்ஞான்றும் பார்க்கின்றனர்" என்று (இரு. வே. க. உஉ. உ0) னும், (யசுர். வே. ச. உ. கூ. ச) னும், (சாம. வே. உத். கூ. ரு) னும் கூறப்படுதலின், இந்த விஷ்ணு நாமத்தையுடைய நாராயணரே கடோபநிடதாதிகளிற் பிரதிபாதிக்கப்பட்டனரெனின், அன்று; இருக்குவேதாதிகளிற் கூறப்பட்ட விஷ்ணு எத்தத்துவத்தினர் என உணர்த்த,

ஸோ(அ)த்வன: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்।

(அக) "அத்துவாவின் எல்லையை அடைகின்றனன்; அது விஷ்ணுவின் பரமபதம்" என்று (கட. ௩. கூ) கூற,

மந்த்ராத்வா ச பதாத்வா ச வர்ணாத்வா புவனாத்வக:। தத்த்வாத்வா ச கலாத்வா ச ஆஹுரத்வா: ஷடேவ ஹி (வா. பூ. உரு. க0)

(அஉ) "மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா" என அத்துவா அறுவகைப்படும் என்றும், இவற்றுள்ளே

ஶிவதத்வாதி ஶக்த்யந்தம் தத்வாத்வா ஸமுதாஹ்ருத:|

(அக) "சிவதத்துவமுதற் பிருதிவியீறாய்க்கிடந்த (முப்பத்தாறும்) த்த்துவாத்துவா என்பபடும் என்றும் வாயுசங்கிதை கூறலானும், அகஸ்திய சங்கிதையும் பிருகச்சாபாலமும்

ஆத்மதத்வமதோபாகே வித்யாதத்வம் து மத்யமே| அக்ரே து ஶிவதத்வம் ஸ்யாதிதி ஶ்ருதி:||

(அச) (நான்காவது பிரசினம் எட்டாம் மந்திரத்திற் கூறப்பட்ட ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், சப்தாதி ஐந்தும், பூதாதி ஐந்தும், அந்தக்கரணம் நான்குமாகிய இருபத்து நான்கையுங் அடக்கிய) ஆன்மதத்துவம் அதோபாகத்தினும், (சுவேதாசுவதரத்து முதலாம் அத்தியாயத்து இரண்டாம் மந்திரத்தினும், இதற்கு உபப் பிருங்கணமாய்ப் போந்த கைலாசசங்கிதை ஒன்பதாம் அத்தியாயத்து இரு பத்தொன்பதாஞ் சுலோகமுதலிய ஐந்து சுலோகங்களினுங் கூறப்பட்ட காலம், கலை, நியதி, வித்தை, இராகம், புருஷன், மாயை என்னும் ஏழு தத் துவங்களையும் அடக்கிய) வித்தியாதத்துவம் மத்தியபாகத்தினும், (பிருகச் சாபாலோபநிடதத்து நான்காவது பிராம்மணத்துப் பத்தொன்பதாம் மந்தி ரத்தினும், கைலாசசங்கிதை ஒன்பதாம் அத்தியாயத்து முப்பத்துநான்காம் முப்பத்தைந்தாம் சுலோகங்களினுங் கூறப்பட்ட சிவதத்துவம், சத்திதத் துவம், சாதாக்கியதத்துவம், சுத்தவித்தியாதத்துவம், ஈசுவரதத்துவம் என் னும் ஐந்தையும் அடக்கிய) சிவதத்துவம் அக்கிரபாகத்தினும் அமைவன என்று கூறலானும்,

ஸாங்க்யயோக ப்ரஸித்தானி தத்வான்யபி கதிசித்| ஶிவ ஶாஸ்த்ர ப்ரஸித்தானி ததோऽன்யான்யபி க்ருத்ஸ்நஶ:|

(அரு) "சாங்கியயோகத்திலே பிரசித்தமாயுள்ள தத்துவங்கள் சில வாம் என்றும், சிவாகமங்களிலே பிரசித்தமாயுள்ள தத்துவங்கள் பிறவ னைத்துமாம்" என்றும்,

ப்ரக்ருத்யந்தர்கதானீஹ புவநானி து கானிசித்| பௌராணி கானி அந்யானி விஜ்ஞேயானி ஶிவாகமே|

(அசு) "பிரகிருதி தத்துவத்துள் அடங்கிய அண்டபுவனங்கள் சில வே புராணங்களில் உள்ளன; (பிரகிருதிக்கு மேலுள்ள பன்னிரண்டு தத்து வங்களில் அடங்கிய) மற்றைப் புவனங்கள் சிவாகமத்திலே அறியற்பாலன என்றும் வாயுசங்கிதை கூறலானும்,

பஞ்சாரம் சக்ரம் பரிவர்த்ததே ப்ருது।

(அஎ) "சிருஷ்டியாதி ஐந்து ஆரங்களையுடைய சக்கரம் மேலே விரிவாயுள்ளது" என்னும் மந்திரத்துக்குக் கைலாசசங்கிதை பத்தாம் அத்தியாயம் ஐம்பத்தைந்து சுலோகங்களால் உபப்பிருங்கணஞ் செய்யப்போந்து, பிருதிவிதத்துவம் ஒன்றடக்கிய சிருட்டிக்குரிய நிவிர்த்திகலாசக்கரம், அப்பு தத்துவமுதற் பிரகிருதி ஈறுயுள்ள இருபத்துமூன்று தத்துவங்களை அடக்கிய ஸ்திதிக்குரிய பிரதிஷ்டாகலாசக்கரம், புருஷதத்துவமுதல் அசுத்தமாயை இறுதியாக்கிடந்த ஏழு தத்துவங்களை அடக்கிய சங்காரத்துக்குரிய வித்தியாகலாசக்கரம், சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் என்னும் முத்தத்துவங்களை அடக்கிய திரோதானத்துக்குரிய சாந்திகலாசக்கரம், சத்திதத்துவ சிவதத்துவங்களை அடக்கிய அநுக்கிரகத்துக்குரிய சாந்தியாதீதகலாசக்கரம் என்னும் ஐந்து சக்கரங்களை விளக்கி, நிவிர்த்திகலாசக்கரத்துக்கு மேல் நின்ற ஸ்திதி சக்கரத்தையுடைய நாராயணரையுற்றுக் கூறுமிடத்து,

ஸ வாமதேவ சக்ராத்மா வாரிதத்த்வைக நாயக:। ஸர்வஸ்ய ரக்ஷிதா வாமே ஸஹ லக்ஷ்ம்யா ஹரி:। ஸஹைவாஸ்ய வாஸுதேவாதி சதுஷ்கம் வ்யூஹிதம் பத:। வாஸுதேவோ அநிருத்தஸ்ச ஸங்கர்ஷண: பர:। ப்ரத்யும்நஸ்சேதி விக்யாதம் ஸ்திதிசக்ரமிதம் பதம்। ஸ்திதிசக்ரமிதம் ஸ்ரேஷ்டம் ப்ரதிஷ்டாரூபமுத்தமம்। ஜநார்த்தநாதிஷ்டிதம் ச பரமம் பதமுச்யதே। யதேவ பதம் ப்ராப்யம் விஷ்ணுபாத ப்ரஸேவிநாம்। வைஷ்ணவாநாமிதம் சக்ரம் ஸாலோக்யாதி பத ப்ரதம்।

(அஅ) "அந்த வாமதேவசக்கரத்துக்கு ஆன்மாவாயுள்ளார் வாரி தத்துவநாயகர் (நாராயணர்); அனைத்தையும் இரக்ஷிக்கும் இயல்பினராகிய இவர் வாமபாகத்தில் இலக்குமியோடு இயைந்தவர், அவருக்கு வாசுதேவர், அநிருத்தர், சங்கர்ஷணர், பிரத்தியும்நர் என்னும் நான்கு வியூகர் உளர், இது மேலாகிய ஸ்திதிசக்கரம், இது உத்தமமாகிய பிரதிஷ்டாரூபம், இது நாராயணரால் அதிட்டிக்கப்படும் பரமபதம், நாராயணரது பாதங்களைச் சேவிக்கும் வைணவரால் அடையப்படும் பதம் இதுவே, இது சாலோக்கியாதி பதத்தைக் கொடுப்பது" என்று கைலாசசங்கிதை கூறலானும்,

ஷடத்வபதே ஸ்ரேஷ்டஸ்யாத்வந: பாரமசீய।

(அக) "(மந்திர, வர்ண, பத, புவன, தத்துவ, கலை) என்னும் ஷட்த்துவாவுக்குப் பதியே! அத்துவாக்களுக்குச் சிரேட்டமாகிய அத்துவாவின் கரைக்கண்ணதாய பரமபதத்தை அடைவேனாக" என யசுர்வேத மந்திரப் பிரசின பாகங் கூற

அத்வநா மத்வபதி மத்வவிதோ வதந்தி தமேஷு நம ஸ்ஸகலலோக விலக்ஷணாய।

(௧௦) "எவரை (ஆறு) அத்துவாக்களுக்கும் அத்துவபதியாக அத்துவாவை அறிந்தவர்கள் கூறுகின்றனரோ, உலகத்துக்கு விலக்ஷணமாயிருக்கும் அவர்க்கு நமஸ்காரம்" (வா. பூ. எ. ௨௫) என்றும்,

அத்வாதீதம் துரீயாக்யம் நிர்வாணம் பரமம் பதம்।

(௧௧) "(இந்தத்) துரியம் எனப் பெயர்படைத்த அத்துவாதீதமானது நிர்வாணமாகிய பரமபதம்" (வா. உத். ௨எ. அ௨) என்றும் வாயுசங்கிதை கூறலாலும், சத்திசமேதராகிய சிவபெருமானது ஸ்தானம் பரமபதம் எனப்படுகின்றது. படவே, நிவிர்த்திகலைக்கு மேலுள்ள பிரதிஷ்டாகலையில் நாராயணரது பரமபதம் என ஒன்றும், பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலைகளைக் கடந்த சாந்தியாதீத கலையிற் சிவபெருமானது பரமபதம் என ஒன்றுமாக இரு பரமபதங்கள் பெறப்படுகின்றன.

ஏவம் ப்ரகார மமலம் நித்யம் வ்யாபக மக்ஷயம்। ஸமஸ்தஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம்।

(௧௨) "இந்தப் பிரகாரம் அமலமும், நித்தியமும், வியாபகமும், அழியாததும், தீங்கியாதுமிலாததுமாகிய விஷ்ணுவுக்குரிய பரமபதம்" என்று (விஷ்ணுபுராணம். க: ௨௨. ௫௩) கூறப்பட்டிருத்தலின், நாராயணம் சுபால முதலிய நாராயணோபநிடதங்களிற் கூறப்பட்ட சுருதிவிஷயங்களும் விஷ்ணுபுராணாதிகளிற் கூறப்பட்ட விஷயங்களும் பிரதிஷ்டாகலைப்பாலதாம் நாராயணருடைய பரமபதத்தில் முற்றும் என்று கடைப்பிடிக்க;

ஶிவோ மஹேஶ்வரஶ்சைவ ருத்ரோ விஷ்ணு: பிதாமஹ:। ஸம்ஸாரவைத்ய ஸ்ஸர்வஜ்ஞ: பரமாத்மேதி முக்யத:। நாமாஷ்டகமிதம் நித்யம் ஶிவஸ்ய ப்ரதிபாதகம்।

(௧௩) "சிவன், மகேச்வரர், உருத்திரர், விஷ்ணு, பிதாமகர், சம்சார வைத்தியர், சர்வஞ்ஞர், பரமான்மா என்னும் நாமாட்டகமும் எப்பொழுதுஞ் சிவபெருமானுக்குப் பிரதிபாதிக்கப்படுகின்றது" (வா. பூ. ௨அ. ௨௨) என்றும்,

ஶிவதத்வாதி ஸம்ருத்யம் ஶரீராதி வடாதிவ। வ்யாப்யவ்யாபித்வமிஷ்டம் ஶிவஸ்யைதா விஷ்ணு ரூபாதயஸ்தத:।

(கூச) "சிவதத்துவ முதற் பிருதிவி ஈறுய்க்கிடந்த சரீர முதலியவற்றையும் கட முதலியவற்றையும் வியாபித்து நின்றமையாற் சிவபெருமான் விஷ்ணு எனப்படுவர்" என்றும் வாயுசங்கிதை பூருவபாகத்து இருபத்தெட்டாம் அத்தியாயத்திற் காணப்படலான், (௴0-ம் இலக்க) இருக்குவேதாதிகளினும், (கட.கூ. க) னுங் கண்ட விஷ்ணுநாமம் சிவபெருமான் மேலதன்றி நாராயணர் மேலதன்று என நன்கு வலியுறுத்தப்பட்டது. படவே, ஆறு அத்துவாவைக் கடந்துள்ளதே சிவபெருமானது பரமாகாய பரமபதமுமாம் என்க. ஆகலின், இருக்குவேதாதிகளும், ௬ச, கே௬, கடமுதலிய உபநிடதங்களும் வேதாந்த சூத்திரங்களும் நிறுத்திக் கூறும் பிரமலோகம் ஷடத்துவாதீத சிவபெருமானது பரமபதமேயாம். ஏகான்மவாதிகள், வைணவர், மத்துவராதியோர் தத்தம் கோட்பாட்டுக்கியைய உபநிடதங்களுக்கும், அவற்றை ஆதாரமாய்க்கொண்டு எழுந்த வேதாந்த சூத்திரத்துக்கும் உரைக்கும் பொருள்கள் ஒவ்வாதனவேயாக, நீலகண்டசிவாசாரியர் வேதாந்தசூத்திரத்துக்கும் உபநிடதவாக்கியங்களுக்கும் உபப்பிருங்கணப்பிரகாரம் சிவபரமாகக்கொண்டு வரைந்த பொருளே சத்திய முக்கியப்பொருளாய்ச் சிறந்தது.

(கூரு) பிரமம் என்பது "பிரும்ஹ" (ப்ருஹ) என்னுந் தாதுவினின்று பிறத்தலால், அது பிரும்மணம் என்னும் வளர்ச்சிவன்மையும், பிருகத்துவம் என்னும் மிக்க மேன்மையுமாகிய இரு குணங்களையுமுடையது. ஆகலின், பிரமம் என்னும் மொழியே துணிப்பொருளாகக் காணப்படுகின்றமையின், முக்கியோபநிடதங்கடோறும் சிவபெருமானது திருநாமமாகக் காணப்படும் பிரமம் துணிப்பொருளேயாம் என்றோர்க.

ஸர்வோ ஹி நாமதேயேஷு ஸ்ரீதஸ்ஸர்வேஸ்வர:। ப்ருஹத்வாத் ப்ருஹணத்வாச்ச ஸிவோ ப்ரஹ்மேதி யோகத:॥

(கூகூ) "ஏகராகிய பரமேசுவரரே நாமதேயங்களினுல் நிலையுற்றனர்; மேன்மையினாலும் பெருத்திருத்தலாலும் சிவபெருமானே பிரமம் எனப்படுவர்" என்று பராக்கியையினும்,

ஸச்சிதாநந்தரூபோ யஸ்ஸர்வஸ்மாத்வ்யதிரிக்த:। ஸ ஸிவ: ஸர்வவேதாந்தே ப்ரஹ்மஸப்தேந ஸப்தித:॥

(கூஎ) "சச்சிதானந்த ரூபியாய், சேதனசேதனப் பிரபஞ்சத்துக்கு வேறாய், வியாபகராயுள்ள சிவபெருமான் பிரமசப்தத்தினுற் கூறப்படுகின்றனர்" என்று அஜிதாகமத்தினுங் கூறப்படுதலிற் பிரமசப்தம் சிவபெருமானுக்குப் பெயராமாறு தெள்ளிது.

ஶக்தி ஶிவஸ்ய ஸர்வஸ்வப்ரக்ருதிப்ரத்யயோதிதௌ।

(கூஅ) "சத்தியும் சிவமும் சத்சப்தத்தின் பிரகிருதிப் பிரத்தியயங்களாகக் கூறப்படுகின்றனர்" என அபியுக்தருக்தி யுண்மையின், சத்து என்றது உமாபதியார்க்குப் பெயராமன்றி ஏகான்மவாதிகள் கூறும் நிர்விசேடப் பிரமத்துக்குச் செல்லாது.

அக்நேருஷ்ணேவ ஶிவஶக்திரவிநாபாவிநீ விபோ:। ஶக்திஹீந ஶிவோ நாஸ்தி ஶிவஹீநா ந ஶக்திகா।

(கூகூ) "அக்கினிக்கு உஷ்ணம் போலச் சத்தியார் சிவபெருமானினின்று வேறுஆர்; சத்தியின்றிச் சிவபெருமான் இல்லை; சிவனின்றிச் சத்தி இல்லை" என்று ஞானந்தபரிபாஷையினும், "சர்வத்திரப் பிரசித்தாதிகரண"த்தினுங் கூறப்படலான், சத்தின் பொருளாகக் கண்ட சத்தியாரும் சிவபெருமானும் குணகுணிபாவத்தினுல் வேறுஆர்.

(க00) "பிரஞ்ஞானம் பிரமம்" என்னும் ஐதரேயமந்திரத்துக்குப் பொருள் போமாறு:—

ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்மவாக்யே(அ)த்ர ப்ரஜ்ஞாநார்த: ப்ரதர்ஶ்யதே। ப்ரஜ்ஞாநஶப்தஸ்யைதஸ்ய பர்யாய ஸ்யாத ஸம்ஶய:। சைதந்யமிதி விக்யாதம் ஸர்வஜ்ஞாநக்ரியாத்மகம்। ஸ்வாதந்த்ர்யம் ஜஷ்ஹாவோ யஸ்ய ஸூத்ரேத்தி ப்ரகீர்த்தித:। இத்யாதி ஶிவஸூத்ராணாம் வார்த்திகம் கதிதம் மயா। ஜ்ஞாநம் பந்த இதீதம் த்விதீயம் ஸூத்ரமீஶிது:। ஜ்ஞாந சித்வாத்மந ஸ்வஸ்ய கிஞ்சிஜ்ஜ்ஞாநக்ரியாத்மகம்। இத்யாதர்த்யவஶே நேஶ: ப்ரோக்தவாநஸ்ய லக்ஷணம்।

(க0க) "பிரஞ்ஞானம் பிரமம்' என்னும் வாக்கியத்துள்ள 'பிரஞ்ஞான'த்தின் அர்த்தம் காட்டப்படுகின்றது; பிரஞ்ஞானசப்தத்தின் பரியாயம் சந்தேகமின்றிச் சைதன்னியமே; முனிவரே! 'சைதன்னியம் ஆன்மா' என்று சிவசூத்திரமானது முதற்கண்ணே ஆரம்பிக்கப்பட்டது; சைதன்னியம் என்பது முற்றறிவு முற்றுத்தொழிலாகிய சுவாதந்திரியமாம்; அதனை எவர் இயல்பாயுடையரோ அவர் ஆன்மா எனக் கூறப்பட்டனர் என்றற்றொடக்கத்தனவாகச் சிவசூத்திரங்களுக்கு வார்த்திகம் *எம்மால் உரைக்கப்பட்டது; சிவபெருமானது இரண்டாவது சூத்திரம் 'ஞானம் பந்த' என்பது; இந்த ஆன்மாவின் ஞானம் சிற்றறிவு சிறுதொழிலுடையது எனச் சிவபெருமான் முதற்பதத்தின்ற் சொன்மாவுடைய இலக்கணம் கூறினர்"

*முருகப்பெருமானுல்

என்று கைலாயசங்கிதை பத்தாம் அத்தியாயத்திற் கூறப்படலான், ஈச கேநாதி முக்கிய உபநிடதங்களிலே பரமான்மாவை உணர்த்தும் ஆன்மா வானவர் முற்றறிவு முற்றுத்தொழிற் குணமுடையர் எனவும், சீவான்மாவை உணர்த்தும் ஆன்மா சிற்றறிவு சிறுதொழிலுடையதெனவும் பொருள் கொள்க.

வியாசமுனிவரருளிய வேதாந்த சூத்திரங்களுக்கு முன்னர்ச் சிவ சூத்திரங்களும், அவற்றிற்குச் சுப்பிரமணியப்பெருமான் அருளிய வார்த்திகார்த்தமும் இருந்தனவாகப் பெறப்படுகின்றது. அவையனைத்தும் எங்கே போயினவோ!!!

[illegible] வ்யவஹார: [illegible] ஸம் ஶிவ [illegible] ஶிவஶக்திஸமாயோக: [illegible] (கைலா. [illegible])

(௧௦௨) "[illegible] சத்திமானும் என வியவகாரம் காணப்படுகின் [illegible] சத்தினும் பரமான்மாவிற் கட்டப் [illegible]; சிவமும் சத்தியும் இயைந்ததே பரமான்மா என நிச்சயிக்கப்படுகின் [illegible]" எனக் கைலாசசங்கிதையினும்,

[illegible] [illegible] ஸர்வதா [illegible] ஶிவ: ஸ்ம்ருத:।

(௧௦௩) "பரமமாகிய (சர்வஞ்ஞதை முதலிய) இந்தக் குணங்களால் எப்பொழுதும் இயைந்திருத்தலாலும், தம்மினும் பரமாகிய ஆன்மா மற்றொன் [illegible] சர்வான்மாவாகிய சிவபெருமான் பரமான்மா எனப் படுவர்" என்று வாயுசங்கிதை பூருவபாகத்து இருபத்தெட்டாம் அத்தியாயத்தினும் கூறப்படலான், மைத்திராயணோபநிடதத்து ஆறுவது பிரபாடகத்து ஒன்பதாம், பதினேழாம் மந்திரங்களினும், மகாநாராயணத்தினும், அதர்வசிகையினும், கைவல்லியத்தினும் காணப்படும் "பரமான்மா" சத்தியோடியைந்த சிவபெருமான் எனப் பொருட்படுக்கப்படும்.

[illegible] ....।

(௧௦௪) "அம்மையே! நம்மைச் சிலர் வித்தை என்றும், சிலர் புனை என்றும், சிலர் அம்பரம், ஆகாயம், வியோமம், ககனம், கம் (வழு) என்றும், சிலர் ஆனந்தம், கம் (கழு) என்றும், சிலர் மாயை என்றுங் கூறுவர்" என

ஏகான்மவாதியார்க்கு மிக மிக நீடித்த காலத்துக்கு முன்னிருந்த காளிதாசப்பெருந்தகையார் அம்பாஸ்தவத்திற் கூறியிருக்கின்றனர்.

யஸ்ய ஸா பரமாதேவீ ஶக்திராகாஶஸம்ஜ்ஞிதா।

(கoஙு) "பரமதேவியானவர் எந்தச் சிவபெருமானுக்குச் சத்தியாயினரோ, அவர் ஆகாயம் எனப்படுவர்" என்று கூறிற்றுக் கூர்மபுராணம்.

யதேதத்ஹ்ருதயம் மனஶ்சைதத் ஸம்ஜ்ஞானம் ஆஜ்ஞானம் விஜ்ஞானம் ப்ரஜ்ஞானம் மேதா த்ருஷ்டிர் த்ருதிர் மதிர் மனீஷா ஜூதி: ஸ்ம்ருதி: ஸங்கல்ப: க்ரதுரஸு: காமோ வஶ இதி ஸர்வாண்யேவைதானி ப்ரஜ்ஞானஸ்ய நாமதேயானி பவந்தி।

(கoசு) "இருதயம், மனசு, சம்ஞானம், ஆஞ்ஞானம், விஞ்ஞானம் பிரஞ்ஞானம், மேதை, திருஷ்டி, திருதி, மதி, மனீஷை, ஜூதி, ஸ்மிருதி, சங்கற்பம், கிரது, அசு, காமம், வசம் என்பன (பதினெட்டும்) பிரஞ்ஞானத்தின் பெயர்களாகின்றன என்று ஐதரேயோபநிடதங் கூறுகின்றமையானும்,

ஸா ஶக்தி: ஸர்வகா ஸூக்ஷ்மா ப்ரபோதானந்தரூபிணீ। ஶக்திமானுச்யதே தேவ: ஶிவ: ஶீதாம்ஶுபூஷண:। வேத்ய: ஶிவ: ஶிவா வித்யா ப்ரஜ்ஞா சைவ ஶ்ருதி: ஸ்ம்ருதி:। த்ருதிரேஷா ஸ்திதிர் நிஷ்டா ஜ்ஞானேச்சாகர்மஶக்தய:। ஆஜ்ஞா சைவ...........।

(கoஎ) "சர்வவியாபகரும், சூக்குமரும், ஞானாநந்தரூபிணியுமாயுள்ளார் அந்தச் சத்தியார், சந்திரசேகரராகிய சிவபெருமான் சத்திமான் எனப்படுவர்; சிவபெருமான் வேத்தியர்; சத்தியார் சிவை, வித்தை, பிரஞ்ஞை, சுருதி, ஸ்மிருதி, திருதி, ஸ்திதி, நிஷ்டை, ஞானேச்சாக்கிரியை, ஆஞ்ஞை எனப்படுவர் என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து எட்டாம் அத்தியாயங் கூறுதலானும்,

ப்ரஸவித்ரீ ப்ரசண்டாஜ்ஞா ப்ரதிஷ்டா ப்ரகடாக்ருதி:।

(கoஅ) பிரதிஷ்டை, ஆஞ்ஞை (பிரசாசனம்—ஆணை) முதலியன சிவசத்தியாரின் திருநாமம் என்று லளிதாசகசிரநாமங் கூறலானும், ஐதரேயோபநிடதத்திற் காணப்பட்ட இருதய முதலிய பெயரனைத்துஞ் சிவபெருமானுடைய ஞானசத்தியாரின் திருநாமங்களாம், எனப் புலப்படும். பழைய படவே,

(௧௦௯) வித்தை
என்று (நசா. ௧௦, ௧௪) னும்,
(கேந. ௧௨) னும்,
(கட. ௨. ௪) னும்,
(,, ௬. ௧௮) னும்,
(சாந். ௪. ௬. ௫) னும்,
(பிரு. ௫. ௬. ௧௬) னும்,
(,, ௬. ௪. ௧௦) னும்,

(௧௧௦) பரை*
என்று (முண். ௧. ௧. ௬) னும்,

(௧௧௧) பராசத்தி
என்று (சுவே. ௬. ௮) னும்,

(௧௧௨) ஆகாயம்
என்று (சாந். ௧. ௯. ௧) னும்,
(,, ௫. ௧௨. ௭, ௯) னும்,
(,, ௪. ௧௦. ௬) னும்,
(,, ௬. ௧௬. ௧) னும்,
(,, ௮. ௧. ௧, ௫) னும்,
(,, ௮. ௧௪. ௧) னும்,
(பிரு. ௪. ௧. ௧௭) னும்,
(,, ௬. ௨. ௫) னும்,
(,, ௬. ௪. ௨௨) னும்,
(,, ௬. ௮. ௪, ௭) னும்,
(,, ௬. ௪. ௨௨) னும்,
(தைத். ௧. ௬. ௧) னும்,
(,, ௨. ௭. ௧) னும்,
அதர்வசிகையினும்,
(வே. சூ. ௧. ௧. ௨௫) னும்,

(௧௧௩) பிராணன்
என்று (தைத். ௧. ௬) னும்,
(சாந். ௧. ௧௧. ௬) னும்,
(வே. சூ. ௧. ௧. ௨௪) னும்,

(௧௧௪) வியோமம்
என்று (இரு. வே. ௧. ௧௬௪. ௩௯) னும்,
(தைத். ௨. ௧. ௧) னும்,
(,, ௫, ௬. ௧) னும்,
(சுவே. ௪. ௮) னும்,
(மைத். ௯. ௫௬) னும்,

(௧௧௫) கம் (வழு)
என்று (சாந். ௪. ௧௦. ௫) னும்,
(பிரு. ௭. ௧. ௮) னும்,

(௧௧௬) ககனம்
என்று (மகாநா. ௧௦. ௭) னும்,

(௧௧௭) அம்பரம்
என்று (வே. சூ. ௧. ௩. ௯) னும்,

---

* பிரமஞானத்தை உணர்த்துதலின் உபநிடதங்களுக்கும் பராவித்தை எனப் பெயர் வழங்குகின்றது.

(கக அ) ஆனந்தம்

என்று (தைத். உ. ச. க) ளும், (,, ரு. ரு. க) ளும்,
(,, உ. ௬. க) ளும், (பிரு. ௬. கூ. உ அ) ளும்,
(,, உ. எ. க) ளும், (,, ரு. ரு. ரு உ, ரு ரு) ளும்,
(,, உ. அ. க) ளும், (வே. சூ. ரு. ரு. கக) ளும்,
(,, உ. கூ. க) ளும்,

(க க கூ) இரசம்

என்று (தைத். உ. எ. க) ளும்,

(க உ0) சுகம்

என்று (சாந். எ. உ உ. க) ளும், (வே. சூ. க. உ. க௬) ளும்,

(க உ க) ஆனந்தமயம்

என்று (தைத். உ. ௬. க) ளும், (வே. சூ. க. க. க ரு) ளும்,

(க உ உ) கம் (கஞ்)

என்று (சாந். ச. க0. ௬) ளும்,

(க உ ரு) மாயை*

என்று (பிரு. ச. ௬. க கூ) ளும்,

(க உ ச) மனசு

என்று (சாந். அ. க உ. ௬) ளும், (பிரு. ரு. ச. க கூ) ளும்,
(தைத். க. ரு. உ) ளும், (கட. ச. கக) ளும்,

(க உ ௬) கிரது

என்று (ஈசா. ௧எ) ளும்,

(க உ ரு) ஸ்மிருதி

என்று (மகாநா. க0. ரு) ளும்,

(க உ எ) புத்தி

என்று (சுவே. ரு. ச) ளும்,
(,, ச. க, க உ) ளும், (கட. ரு. க உ) ளும்,

(க உ அ) பிரக்ஞை

என்று (கௌஷீ. ௩. ௬) ளும்,
(சுவே. ச. க அ) ளும்,

---

*மாயை என்றது வைணவாதிகள் கூறும் அநிர்வசநீய ஜடமாயா சத்தியாகாது மித்திய அல்ல அஜ்ஞானமயமாம் என்க. இவ்வுண்மையை வேதாந்த சூத்திரத்து "ஜகத்வியாபாரவர்ஜ" த்திற் காண்க.

(கஉகூ) விஞ்ஞானம், மனம்
என்று (கட. ரு. கூ) னும்,

(கரு0) விஞ்ஞானம்
என்று (முண். உ. உ. எ) னும்,

(கருக) ஆதேசம்
என்று (கேந. உகூ) னும், (சாந். சு. க. க) னும்,

(கருஉ) மேதை
என்று (தைத். க. ச. க) னும், (மகாநா. கசு. ச) னும்,

(கருரு) மநீஷை, இருதயம், மனம்
என்று (மகாநா. உரு. க) னும்,

(கருச) பிரசாதம்
என்று (கட. உ. உ0) னும், (மகாநா. அ. ரு) னும்,
(சுவே. ரு. உ0) னும்,

(கருரு) பிரசாசனம்
என்று (பிரு. ரு. அ. கூ) னும், (வே. சூ. க. ரு. க0) னும்,

(கருசு) ஆஞ்ஞை
என்று (வட. சிவ. போ. சூ. உ) னும், (பவுட். ச. சஎ) னும்,

(ஆணை)
என்று (தென். சிவ. போ. சூ. உ) னும், (பெரி. கண். க0ரு) னும்,

(கருஎ) வச என்னும் சத்தியையுடைமையாற் சிவபிரான் வசீ எனப்படுவர்
என்று (பிரு. சு. ச. உஉ) னும், (சுவே. ரு. கஅ) னும்,
(கட. ரு. கஉ) னும், (,, சு. கஉ) னும்,
(மகாநா. ரு. சு) னுங் காணப்படுதல் காண்க

தஸ்ய தஸ்மிம் ஶ்ரீமஹாஸ்ரீமது மஹேசைஷ்வர்ய ஶாஸ்த்ர விஷயே ஞாவாம் யஃ ஶிவதத்வோ ரஸ ஐக்யேக zயவாகேஸ்ராது ஞக்ஷேப ஙீநஃ வ்ராண ஐக்யேக zய வாசீ யூக்திஃ ஷூக்திஃ வஜ்ஞா தத்தி ஐக்யேக।

(கருஅ) "இலக்ஷணமில்லாதவருடைய இலக்ஷணம் அக்கினியிற் சூடும் நீரில் மிக்க இரசமும் போலச் (சத்தி) சேர்ந்திருக்கும் என்றும்," அதனைச் சிலர் வாக்கு, சுரோத்திரம், சட்சு, மனம், பிராணன் என்றும், வேறு சிலர்

புத்தி, திருதி, ஸ்மிருதி, பிரஞ்ஞை" என்றும் (மைத். ௬. ௩௧) லும், "சர்வத்திரப்பிரசித்தாதிகரண" த்தினும், ஞானந்த பரிபாஷையினும், பிறவற்றினுங் கூறப்பட்டவாறு, பராசத்தியார் தீயிற் சூடும் நீரில் இரசமும் போன்று பிரியாதுள்ளனர் என்றும், (கேந. ௨) ல் வாக்கு, சுரோத்திரம், சட்சு, மனம், பிராணன் எனக் கூறப்படுவார் என்றும், ஐதரேயாதி உபநிடதங்களிற் புத்தி, திருதி, ஸ்மிருதி, பிரஞ்ஞை எனக் கூறப்படுவர் என்றும் உணர்க.

(௧௩௯) • உமை, ஐமவதி
என்று (கேந. ௨௫) லும்,

(௧௪0) உமை, அம்பிகை
என்று மகாநாராயணத்திலும்,

(௧௪௧) ஈசநீ
என்று அதர்வசிரசினும், (சுவே. ௩. ௩) லும்,

(௧௪௨) தேவான்மசத்தி
என்று (சுவே. ௧. ௩) லும்,

(௧௪௩) பராசத்தி
என்று (சுவே. ௬. ௮) லும்,

(௧௪௪) ஐநநீ, பரமசத்தி
என்று அதர்வசிரசினும்,

(௧௪௫) அம்பிகை
என்று தைத்திரீய ஆரணியகத்தினும்,

(௧௪௬) பரமாகாயத்தைத் தேவதை
என்று (பிரு. ௫. ௬. ௧. லும், சிவா. ம. தீ. ௧. ௩. ௬) லும் கூறப்படுதல் காண்க. இங்ஙனமாகவும், சிவசத்தியாரின் திருநாமங்களாகிய மனசு ஸ்மிருதி புத்தி என்பவைகளை அந்தக்கரணவிருத்திகள் என்று சூதசங்கிதையினும், ஏகான்மவாத பாடியத்தினும் புக்கிட்டியும் வரைந்தும் வைத்தவையனைத்தும் பொய்யுரையாம் என மறுக்க.

(௧௪௭) ஓர்கால் சுரர்க்கும் அசுரர்க்கும் போர் நிகழ்ந்துழி, பிரமமானது சுரர் பக்கம் நின்று வெல்விப்பெறச் செய்தது. அங்ஙனம் பிரமம் வெல்வி பெற்றும், சுரர் அம்மகிமையைப் பிரமத்துக்கேற்றாது தமக் கேற்றிக்கொண்டனர். இதனை அறிந்த பிரமம் அவர்க்கு நடுவே யக்ஷராய்

ஆவிர்ப்பவித்து, தன்னை யார் என வினவிய அக்கினியினதும் வாயுவினதும் கர்வத்தை ஓர் துரும்புகொண்டு அடக்கிவிட, அதனை அறிந்த இந்திரன் சமீபத்தனாக, பிரமம் அந்தர்த்தானமாயிற்று; அவ்வமையத்து ஆகாயத்திலே மிக்க பிரகாசமுடைய ஐமவதியாகிய உமையம்மையார் பிரசன்னராகிப் பிரமத்தின் சகாயத்தினால் நீவிர் மகிமைபடைத்தீர்கள்; அது பிரமம் என்று உபதேசித்தாராகக் கேநோபநிடதத்து மூன்றும் நான்காம் கண்டத்திற் கூறப்படுகின்றது. இந்தக் கேநோபநிடதத்திற் கூறப்பட்ட பிரமம் சைவர்கள் கூறும் சிவபெருமானா? இன்றேல் ஏகான்மவாதிகள் கூறும் நிர்க்குணப் பிரமமா? இன்றேல் வைணவர் கூறும் நாராயணரா? என ஆராயுங்கால்,

அஸுராந்ஸமரே ஜித்வா ஜேதாஹம் ஜேதாஹமிதி ப்ருவந். ததா தேஹ ஸுரா ஸர்வே தேஷாம் தேஷாம் ஸமாவேஷ்யத்ர। ஸலக்ஷணே விஹீனாஞ்ச ஸ்வயம் யக்ஷ இவாபவத்।

(௧௪அ) "யுத்தத்திலே (சுரர்) அசுரரை செயித்து, (தனித்தனியே) நானே செயித்தவன் நானே செயித்தவன் என்று கூற, சிவபெருமான் அவருக்கு மத்தியிலே தமக்குரிய இலக்ஷணவடிவை யொழித்து, தாழ்ந்த வேடம் பூண்டு யக்ஷனொருவனைப் போற் போய் அமர்ந்து" துரும்புகொண்டு அக்கினி முதலிய லோகபாலரையெல்லாம் செயித்துவிட, இந்திரன் யக்ஷரை நோக்கி நீவிர் யார்? என, அவர் அவர்கள் பார்த்துக்கொண்டிருப்ப அந்தர்த்தானமாயினர் என்றும்,

ததஸ்தே தேவதா தேவீ திவ்யாபரணபூஷிதா।
ஆவிராஸீந்மஹா ரம்யே வ்யோமநா சாருஹாஸிநீ।

(௧௪௯) "அவ்வமையத்துத் திவ்யாபரணம் பூண்டு தூய நகையினராய் ஆகாயத்திலே ஐமவதியாகிய மகாதேவியார் ஆவிர்ப்பவித்து" யக்ஷர் யாரென வினவிய தேவர்கட்கு, அவர் இன்னர் என அறியுமாறு சிவபெருமானை அறிவுறுத்தி அந்தர்த்தானமாயினர் என்று வாயுசங்கிதை உத்தரபாகத்து மூன்றும் அத்தியாயங் கூறுகின்றமையின், இந்தப் பிரமம் உமாபதியாகிய சிவபெருமானேயன்றி, மாயாவாதிகள் கூறும் அநிர்வசநீய ஜடமாயாசத்திப் பிரமமுமன்று, வைணவர் கூறும் இலட்சுமீசமேத நாராயணப் பிரமமுமன்று.

பிரமவாதிகள் ஒருங்கு கூடி, சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கும் அதிகாரியாவார் யாவர் என்று அறியவேண்டி,

𑌤𑍇 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌗𑌤𑌾 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌨𑌿𑌗𑍂𑌢𑌾𑌮𑍍 ।

(௧௩௦) "அவர்கள் தியானயோகத்துற்றவராய்ச் சுவகுணங்களி ருல் ஆவரிக்கப்பட்ட தேவான்மசத்தியைக் கண்டனர்" என்று (சுவே. க. ௩) கூறலின், இந்தத் தேவான்மசத்தி சைவர்கள் கூறும் உமையம்மை யாரா? இன்றேல் ஏகான்மவாதிகள் கூறும் அநிர்வசநீய சத்தியா? இன் றேல் வைணவர் கூறும் ரமாசத்தியா என உபப்பிருங்கணம் வாயிலாக ஆராயப்புகுங்கால்,

𑌤𑍇 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌗𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍀𑌮𑍍 । 𑌪𑌾𑌶𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌿𑌕𑌾𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌿𑌗𑍂𑌢𑌾𑌂 𑌸𑍍𑌵𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌭𑍃𑌶𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ।

(௧௩௧) "அவர்கள் (பிரமவாதிகள்) தியானயோகமுடையராய், பாசத்தை அறுப்பவராய், (சர்வஞ்ஞாதி) குணங்களால் மிகுதியும் நேரே ஆவரிக்கப்பட்டவராயுள்ள சிவசத்தியைத் தரிசித்து, அவராற் பாசமனைத் தும் நீங்கப் பெற்றுச் சர்வகாரண காரணரும், உமா சகாயருமாகிய மகா தேவரை ஞானதிருட்டியினாற் கண்டனர்" என்று வாயுசங்கிதை உத்தர பாகத்து எட்டாம் அத்தியாயத்தினும்,

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌆𑌵𑌿𑌰𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍀 𑌤𑌦𑌾 𑌗𑌿𑌰𑌿𑌵𑌰𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 । 𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌶𑌾 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌮𑌾𑌲𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌾 । [illegible] ।

(௧௩௨) "இங்ஙனம் தியானமார்க்கம்பற்றிச் சிந்திக்கின்ற இருடிக ளுக்கு மலையரசன் புதல்வியாகிய மகாதேவியார் கோடி சூரியப்பிரகாசராய்,

ஜ்வாலமாலைகள் சூழ ஆவிர்ப்பவிக்க, அவர்கள் விசுவேசர் பத்தினியாரா யிவரை நமஸ்கரித்து, உலகத்துக்குப் பரமகாரணமாயினரை அறிந்து, ககனம் எனப் பெயர்படைத்த அம்மையாரே எங்களுக்குக் கதியும் ஆன்மாவுமாம் (என்றனர்); அவரிடத்தே (நிலைபெற்றிருக்கும்) ஆன்மாவையும் பிறவற்றையுங் கண்டு, முனிவர்கள் மகிழ்வடைந்தனர்; அங்ஙனம் அவர் பார்க்கும் அமையத்து உமையம்மையாரோடு அனைத்துக்குங் காரணராகிய தேவரும், சம்புவும், கவியும், ஈசரும், உருத்திரரும், பெரியரும், புருஷரும், பழையருமாயினரைக் கண்டனர்; (முன்னர்) மகாதேவியாரைத் தரிசித்து, அதன்பின் மகாதேவராகிய பரமேசுவரரை நமஸ்கரித்து, மிகுந்த ஆனந்தம் அடைந்தனர்; ஆகாயத்திலே அநாதி சித்தராயுள்ள வியோமம் எனப் பெயர் படைத்த சிவசத்தியார் பிரகாசிப்பாராக, அவர்க்கு மேலாயினர் பரமேஷ்டியும், மகானும், மகேசுவரருமாகிய சிவன் ஒருவரே; அவர் உருத்திரர்" என்று கூர்மபுராணம் உத்தரபாகத்து முப்பத்தெட்டாம் அத்தியாயத்தினும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், சுவேதாசுவதரத்திற் கூறப்பட்ட தேவான்மசத்தியார் சிவபிரானரது சிற்சத்தியாரேயாமன்றி, ஏகான்மவாதிகள் கூறும் அநிர்வசனீய மாயாசத்தியுமன்று, வைணவர் கூறும் ரமாசத்தியுமன்று, இங்ஙனமாகவும்

ஸம்ஸாரகே ஶக்திரூபாஸ்யா மாயா ஜ்ஞாநாதி ஸஂஜ்ஞிதே |
நிஹிதம் ப்ரஹ்ம யோ வேத பரமே வ்யோம ஸஂஜ்ஞிதே |

என்று பரவித்தியா தேவியாரின் திருநாமமாகிய வியோமம் என்றதை மாயை, அவித்தை, அஞ்ஞானம், ஜடம் என்று சூதசங்கிதையிலுள்ள பிரமகீதையில் இயைத்து வைத்தன வெல்லாம் புகட்டுரைகளாம் என மறுக்க.

(கருரு) ஏகான்மவாதியார் தாம் இயற்றும் உபநிடத சூத்திரபாடியங்கட்குப் புராணப்பிரமாணம் ஒன்று வேண்டுமென்று கொண்டு, பதினெட்டுத்தரம் படித்துத் திரித்த சூதசங்கிதையில் யஞ்ஞவைபவகண்டத்துப் பதின்மூன்றும் அத்தியாயத்தில்

ஶிவாபேதா ஶிவா ஶேநாம் ஜ்ஞபாஸ்தி ஶதயேவ ச |

உமையம்மையைச் சடசத்தி என்றற் றொடக்கத்தனவாகச் சூதாகப் புகட்டப்பட்ட கற்பனா சுலோகங்கள் நாம் காட்டும் வலிய பிரமாணங்களுக்கு முன் எதிர் நிற்கமாட்டாவாய் உடைந்துபோயின.

பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச |

(௧௫௪) "அவரது பராசத்தியார் சுவாபாவிக ஞானசத்தியும் பலசத்தியும் கிரியாசத்தியுமாகப் பலதிறப்படுவர் என்று கேட்கப்படுகின்றது" என்று (சுவே. சு. அ) ற் கூறப்படுகின்றது. இந்தப் பராசத்தியார் சிவபிரானது குணசத்தியாமன்றி ஏகான்மவாதிகளது பிரமத்திற்றுேங்கும் ஜகதங்குரரூபிணியாய், கற்பிதையாய், அநிர்வசநீயமாயுள்ள மாயாசத்தியுமன்று, நாராயணரது ரமாசத்தியும் அன்று;

ஸைநா ஶைவ பராம ஶக்திம் ஶ்வேதாஶ்வதராஶாவிந꞉ | ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ஶைதந்யஸ்வரூபிணி | ஜ்ஞாநக்ரியேச்சாரூபம ஹி ஶம்போர் த்ருஷ்டித்ரயம் விது꞉ | ஸைதந்மநோகதம் ஸத்க்ருத்ய ஆராதொபவ꞉ | ஜந்துர்விஶ்வ ஜாநாதி கரோதி ச பஶு꞉ ஸதா | பராஶக்தேஸ்து ஸஞ்ஜாதா சித்ஶக்திஸ்ததோ(உ)பவா | ஆநந்தஶக்தி ஸ்தஜ்ஜா இச்சாஶக்திஸ்ததோ(உ)பவத் | ஜ்ஞாநஶக்திஸ்ததோ ஜாதா க்ரியாஶக்திஸ்து பஞ்சமீ |

(௧௫௫) "இந்தப் பராசத்தியையே சுவாபாவிகமாகிய ஞான பலக்கிரியை என்று சுவேதாசுவதர சாகையுடையார் மகிழ்விஞேடு துதித்தனர்; ஞானேச்சாக் கிரியாசொரூபமே சிவபெருமானது திரிநேத்திரம் எனக் கொள்ளப்படுகின்றது; இந்திரியவாயிலாக மனசில் எய்திய இந்தச் சத்தியை அடைந்தே (சீவான்மாவாகிய) பசுவானது எப்போதும் (ஒன்றை) அறிந்து, விரும்பிச் செய்கின்றது; பராசத்தியினின்று பிறந்தது சிற்சத்தி; இதினின்று பிறந்தது ஆனந்தசத்தி; இதினின்று பிறந்தது இச்சாசத்தி; இதினின்று பிறந்தது ஞானசத்தி; இதினின்று பிறந்தது ஐந்தாவதாகிய கிரியாசத்தி" என்று கைலாசசங்கிதை பத்தாம் அத்தியாயத்தினும்,

ந பாதி விஶ்வோ(அ)பி நோ தயா ஶக்த்யா விநா ஶிவ꞉ |
ப்ரபயா ஹி விநா யத்வத் பாநுரேஷ ந விக்ஷ்யதே |
ஸமவேதா பராஶக்தி ஶ்ஶிவஸ்ய ஸ்வாவபிநீ |

(௧௫௬) "கிரணமின்றிச் சூரியன் பிரகாசியாதவாறு போல, சத்தியின்றிச் சிவபெருமான் பிரகாசிப்பாரல்லர்; பராசத்தியார் சிவபெருமானுக்குச் சமவாயசம்பந்தத்தினர்" என்று (வா. உத். ரு. ௧௦, ௧௧. னும், பூ. உரு. ௩௨) னும்

|| ஶாணஸ்தா பராஶக்தி ஸ்தாஶ்ரயஶாணீ ஶிவ꞉ |

(௧௫௭) "பராசத்தியார் குணம்; சிவபெருமான் குணி" என்று மகோபப்பிருங்கணத்திலும்,

(௬. ௨) ற் "குணி" என்றும், (௬. ௧௬) ற் "குணேசர்" என்றும் சுவேதாசுவதரத்திலும் கூறப்படலான்.

(௧௫௮) இந்தச் சுவேதாசுவதரமானது ஆறாம் அத்தியாயத்திற் சிவபெருமானைக் குணி என்றும், குணேசர் என்றும் கூறி, அவ்வாறாம் அத்தியாயத்துப் பதினோராம் மந்திரத்தில் அவரை "நிர்க்குணர்" என்றும், பத்தொன்பதாம் மந்திரத்தில் "நிஷ்களம், நிஷ்கிரியம்" என்றுங் கூறுதலின், இவை மேலே கூறியவற்றோடு விரோதமுறாவோ எனின், விரோதமுறா;

நிர்குணத்வாத் விசேஷேண நாமய இதி ச்ருதேஃ |

(௧௫௯) "நிர்க்குணமென்றமையான் விசேஷமாய்ப் (பசுக்களுக்குரிய) ஆமயம் இல்லை என்பது சுருதியின் பொருள்" என்றும், பாசகலைகள் அற்றிருத்தலின் "நிஷ்களம்" என்றும், ஆன்மாக்களுக்குரிய கிரியைகள் அற்றிருத்தலின் "நிஷ்கிரியம்" என்றும் கூறும் சுருதியுபப்பிருங்கண மகோபப்பிருங்கணங்களுக்கு மாறுறாது நீலகண்டசிவாசாரியர் "தத்வசநாதிகரண" த்தில் (௩. ௩. ௪௦) விளக்கியிருத்தலான்.

தஸ்ய வாவ ப்ரஹ்மவித்யாத்மகோ தேஹஃ உமேத்யுச்யதே |

(௧௬௦) "அவருடைய பிரமவித்தியாசொரூபமாயுள்ள சரீரம் உமை எனப்படும்" என்று தைத்திரிய ஆரணியகத்திலும்,

ஆகாசசரீரம் ப்ரஹ்ம |

(௧௬௧) "ஆகாய (பராசத்தி) சரீரமுடையது பிரமம்" என்று (தைத். ௧. ௬. ௨) லும்,

ஜ்ஞாநமூர்த்திர் மஹாதேவஸ் ஸத்யாநந்தகுணஸ் ஸதா |
நாஸ்தி தஸ்ய சரீரஞ்ச சக்திம் த்யக்த்வாவ்யயாம் |

(௧௬௨) "ஞானமூர்த்தியாகிய மகாதேவர் சத்தியானந்த குணமுடையர்; அவர்க்கு அவ்வியயமாகிய சத்தியை விட்டுச் சரீரம் இல்லை" என்று (சங். த. ௧௨. ௨௩) லும்,

சக்தி சரீரம் |

(௧௬௩) "சத்திசரீரம்" என்று காளிதாசரருளிய அம்பாஸ்துதியிலுங் கூறப்படுகின்றது.

ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோ(அ)பிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:।

(௧௬௪) (சாந். ௮. ௧. ௫. உம், ௮. ௭. ௧, ௩) உங் காணப்படும் இம்மந்திரம் சிவபெருமான் அபகதபாப்மத்துவாதி (சர்வஞ்ஞதாதி) எண் குணங்கள் உடையர் என்றுணர்த்துவதாகச் "சங்கற்பாதிகரண" த்தில் (௪. ௪. ௯) உணர்த்தப்பட்டிருக்கின்றது.

(௧௬௫). சிவபெருமான் சர்வஞ்ஞர்
என்று (பிர. ௪. ௧0) உம், (முண். ௧. ௧. ௯) உம்,
(மாண். ௬) உம், (மைத். ௭. ௧) உம்,

(௧௬௬) சர்வகதர் (சர்வவியாபகர்)
என்று (சுவே. ௩. ௧௧, ௨௧) உம், (முண். ௧. ௬) உம்,

(௧௬௭) சர்வாநுபூ (சர்வவியாபி)
என்று (பிரு. ௪. ௫. ௧௩) உம்,

(௧௬௮) சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்ம
என்று (தைத். ௨. ௧) உம்,

(௧௬௯) பிரம்மணா விபச்சிதா (சர்வஞ்ஞதையுடைய பிரமத்தினோடு) என்று (தைத். ௨. ௧) உம் பிரமம் குணங்களால் விசேடிக்கப்பட்டிருத்தல் காணப்படும். "பரப்பிரம சிவனுக்குப் பராசத்தியார் சொரூபமும் குணமுமாகின்றனர்; இச்சத்தியாரை யொழிந்து அவர்க்குச் சர்வஞ்ஞதாதி குணங்கள் இல்லை" என்று "சர்வத்திரப்பிரசித்தாதிகரண" த்தினும் (௧. ௨. ௧)

யஸ்ய ஸ்வரூபம் பராஶக்தி ஸர்வஜ்ஞத்வாதி லக்ஷணா।
நிர்குணா ஸகுணேநைவ ஸைவ நிர்மலா நிஷ்கலா ஶிவா।

(௧௭0) சிவபெருமானுக்குப் பராசத்தியார் பாவகம்மியராயும் மனோகரராயும், பசுக்களுக்குரிய ஆமயமிலாமையான் நிர்க்குணராயும், (பாசகலைகள் அற்றிருத்தலான்) நிஷ்களராயும், (சர்வஞ்ஞதாதி) குணங்களினால் ஆவரிக்கப்பட்டவராயும், சிவையாயுமுள்ளார் என்று (கைலா. அ. ௧0, ௧௧) உம்,

ஶக்தயோ(அ)ஸ்ய ஜகத்க்ருத்ஸ்நம் ஶக்திமாம்ஸ்து மஹேஶ்வர:। ஶக்திஸ்து ஶக்திமத்ரூபாத் வ்யதிரேகம் ந வாஞ்சதி। தாதாத்ம்யமநயோர் நித்யம் வஹ்நிதாஹகயோரிவ।

(௧௭௧) "சத்திதான் உலகமெல்லாம் என்றும், சத்தியுடையார் சிவ பெருமான் என்றும், சத்தியார் சத்திமானையொழிந்து வேறுகார் என்றும், இவ்விருவரும் அக்கினியும் சூடும் போல எப்பொழுதும் தாதான்மிய சம்பந் தத்தினர்" என்றும் அந்தச் "சர்வத்திரப்பிரசித்தாதிகரண" த்திலும் கூறப் படலாலும், மேலே கூறிய ஈசகேநாதி முக்கிய உபநிடதங்கள் யாண்டும் சத்தி குணங்களால் விசேடிக்கபபட்ட ஒரே சகுணப்பிரமமே கூறப்பட்ட தன்றி நிர்க்குணப்பிரமமென மற்றொன்றன்றுமென்று நன்கு நோக்க.

(௧௭௨) "சத்தியவதியின் குமாரரும், வேதங்களை நான்காக வகுத்த வரும், அட்டாதசபுராணம் அருளிய மகாகவியும், சமஸ்த சாஸ்திரங்களை யுங் கசடற உணர்ந்த சர்வஞ்ஞசிகாமணியும், பெரியோருமாகிய வேத வியாசர் பாரதம் அருளினர்" என்று ஓர் வியாச சரித்திரப்புஸ்தகத்தில் ஓரிடத்து அவரை விசேஷணங்களோடு வரைந்தும், மற்றோரிடத்தில் அவரை "வியாசர்" "கவி" என்றற்றொடக்கத்தனவாக விசேஷணம் புணர்த்தாது வரைந்தும் விடின், சகுணவியாசர் என ஒருவரும், நிர்க்குணவியாசர் என மற்றொருவருமாக இருவியாசர் பெருமை அவ்வியாசசரித்திரத்திற் கூறப்பட் டிருக்கின்றதென்று எந்த விவேகியாயினும் கொள்வானோ? அங்ஙனங் கொள் வானாயினன்றோ, சத்தியஞானானந்தாதி குணங்களையுடைய பிரமத்தையுற்று உபதேசிக்கக் கிளர்ந்த ஈசகேநாதி உபநிடதங்களில் விசேடணமின்றி வாளா பிரமம், ஆன்மா, சத்து என்று வரையப்பட்டிருத்தல் கண்டு சகுணப்பிர மம் என ஒன்றும், நிர்க்குணப்பிரமமென மற்றொன்றுமாக இரு பிரமங்கள் ஆங்குக் கூறப்பட்டன என்று ஒருவன் கூறத் துணிவான்!!! அங்ஙனங் கூறல் அடாதாமாதலின், நிர்க்குணப்பிரமம் என ஓர் பிரமம் முக்கிய உபநிடதங் களிலேனும் வியாசசூத்திரங்களிலேனுங் கூறப்படவேயில்லை என நன்கு வலியுறுத்தப்பட்டது.

(௧௭௩) "வானத்துக்கு மேலும் பூமிக்குக் கீழுமாக, வானம், பூமி, இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பவற்றை அடக்கிக் குறுக்கும் மறுக்குமாய் அமைந்ததெதுவோ, அது ஆகாயத்தில் (அமர்ந்தது)" என்று (பிரு. நி. அ. எ) ல் அக்ஷரத்தைப்பற்றி யாஞ்ஞவற்கியர் கூற, "ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் எங்குற்றதெனக் கார்க்கி வினவினர்", என்று கூறப்பட்டிருக்

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌖𑌲𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑍇 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌾𑌕𑌾𑌶 𑌓𑌤𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑍋𑌤𑌶𑍍𑌚 ,

(௧௭௪) "இந்த அக்ஷரத்திலன்றோ, கார்க்கியே ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் இயைந்திருக்கின்றது" என்று (பிரு. நி. அ. ௧௧) ல் உத்தரம் இறுக்கப்பட்டது. இந்த ஆகாயம் பராசத்தியார் திருநாமம் என்றும்,

பராசத்தியார் சிவபெருமானுக்குக் குணமும் சோரூபமுமாயுள்ளார் என்றும் மேலே வலிய பிரமாணங்கொண்டு நிரூபிக்கப்பட்டதன்றே. ஆகலின், (பிரு. ௫. அ. ௭) வது மந்திரத்திற் கூறப்பட்ட ஆகாசம் பராசத்தியாராக, அது நிறீஇ நின்ற அக்ஷரப்பிரமம் சகுணப்பிரமம் என்று சித்தித்தது.

(௬௭) (பிரு. ௫. அ. ௯) வது மந்திரத்தில் "அந்த அக்ஷரத்தினுடைய ஆஞ்ஞையினாற் சூரிய சந்திரர் தாங்கப்படுகின்றனர்; பூமியும் ஆகாயமும் தத்தம் நிலையில் நின்றன" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்பட்டிருத்தலின், இந்த அக்ஷரப்பிரமமானது சகுணப்பிரமம் என்பது யாவர்க்கும் உடன்பாடே.

(௬௮) அங்ஙனமாக, (பிரு. ௫. அ. ௭) வது மந்திரத்துக்கும், (பிரு. ௫. அ. ௯) வது மந்திரத்துக்கும் இடைக்கணின்ற (பிரு. ௫. அ. ௮) வது மந்திரத்தில் "அது ஸ்தூலமன்று, அணுவன்று, குறுக்கமன்று, நீட்டமன்று, சிவப்பன்று, சிநேகமன்று, நிழலன்று, இருளன்று, வாயுவன்று, ஆகாயமன்று" என்றற்றொடக்கத்தனவாக அக்ஷரப்பிரமம் இவ்வியல்பினதெனக் கூறப்பட்டிருக்கின்றது. (பிரு. ௫. அ. ௮) ம் மந்திரத்துக்கு மேலுள்ள (பிரு. ௫. அ. ௭) ம் மந்திரமும், (பிரு. ௫. அ. ௮) க்குக் கீழுள்ள (பிரு. ௫. அ. ௯) வது மந்திரமும் சகுண அக்ஷரப்பிரமத்தின் பாலனவாக, இந்த (பிரு. ௫. அ. ௮) ம் மந்திரமாத்திரம் நிர்க்குணப்பிரமத்தைக் கூறியதென எந்த ஏகான்மவாதியேனும் சாதிக்கப்புகுதல் "அரக்கர் சேனை நீறுபட்டழிய" என்ற வைணவக் கம்பராமாயணச் செய்யுட் பாகத்தில் நீறு என்னும் மொழிகண்டு, "விபூதி" மான்மியம் கூறப்பட்டிருக்கின்றதென்று அதனை ஒருவர் சாதிக்கப்புகுந்தமை போலாம். அங்ஙனமாயின், அந்த (பிரு. ௫. அ. ௮) ம் மந்திரத்திற் கூறப்பட்ட "ஸ்தூலமன்று அணுவன்று" என்றற்றொடக்கத்தவற்றின் பொருள்தான் என்னையெனின், சிவபெருமான் ஸ்தூலப் பொருள்களுள் வியாபித்து நின்றாரேனும் ஸ்தூலப்பொருள்களாகார், அணுப்பொருள்களுள்ளே நின்றாரேனும் அணுக்களாற்றொடக்குண்ணார் என்றற்றொடக்கத்தனவாகக் கோடலே பொருளாம். இவ்வுண்மையைப் "பிரகிருதைதாவத்துவாதிகரண" த்தில் (௩. ௨. ௨௯) நீலகண்ட சிவாசாரியரருளிய பொருள்கொண்டு மயக்க நீங்குக.

உபநிடத மகோததியில் ஆழ்ந்துகிடந்த சிவ சத்தி இரத்தினங்களைத் திருவருட்சத்தி காட்டக்கண்டு ஒருபிரகாரம் அவற்றைச் சைவநேயர்க்கு மேலே கூறியவாறு எடுத்து உத்கமித்து உணர்த்தினோம். பின்னர் (ஜீவ) ஆன்மா, (பரம) ஆன்மா என்னும் ஆன்மாக்கள் இரண்டனுள் ஒன்றோ? இன்றேல் இரண்டோ? அவ்வுபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்பட்டவென்பதை ஆராய்குதும்.

யஸ்ய விஜ்ஞாநம் ஶரீரம்।

(கஎஎ) "எவர்க்கு (சிவபெருமானுக்கு) (ஜீவ) ஆன்மாவானது" என்று (பிரு. 3. எ. உஉ) னும்,

யஸ்யாத்மா ஶரீரம்।

(கஎஅ) "எவர்க்குச் (சிவபெருமானுக்கு) (சீவ) ஆன்மா சரீரம்" என்று மாத்தியந்தினசாகையினும்,

க்ஷரம் த்வவித்யா ஹ்யம்ருதம் து வித்யா வித்யாவித்யே ஈஶதே யஸ்து ஸோ அந்ய:।

(கஎகூ) "அவித்தை என்றது அசேதனம்; வித்தை என்றது சேதனம் (ஆன்மா), இவ்விரண்டையும் ஆளுபவர் அவற்றிற்கு வேறாயுள்ள ஈசர்" என்று (சுவே. 3. க) னும்,

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶாநீஶௌ।

(கஅ0) "பிறவாதவராகிய ஞனும் (சிவனும்), அஞ்ஞனும் (ஆன்மாவும்) ஆகிய இருவரும் ஈசரும் அநீசனுமாம்" என்று (சுவே. க. கூ) னும்,

ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா।

(கஅக) "உளுற்றுபவரையும் (சிவபெருமானையும்), (அவர்க்கு) வேறாக ஆன்மாவையும் அறிந்து" என்று (சுவே. க. சு) னும்,

க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:।

(கஅஉ) க்ஷரத்தையும் (பாசத்தையும்), (சீவ) ஆன்மாவையும் ஆளுபவர் ஏகராகிய தேவர்" என்று (சுவே. க. க0) னும்,

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா।

(கஅங) "இரண்டு அழகிய பட்சிகள் (சீவான்மாவும், பரமான்மாவும்) கூடி நண்பினோடுற்றன" என்று (இரு. வே. க. கசுச. உ0. னும், சுவே. ச. சு. னும், முண். ங. க. க) னும்,

த்வே ப்ரஹ்மணீ வேதிதவ்யே பராபரே।

(கஅச) "பரமும் அபரமுமாகிய (சீவப்) பிரமம் (சீவான்மா), (பரப்) பிரமம் (பரமான்மா) என்னும் இரண்டும் அறியற்பாலன" என்று (மைத். சு. உஉ)னும்,

ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:|

(கஅ௲) "மகிழ்வுடையனும் (ஜீவான்மாவுக்கு) வேறாகிய சிவபெருமானையும் அவரது சர்வஞ்ஞதாரூபத்தையும் எப்போது பார்க்கின்றானோ அப்போது (பாசத்) துக்கம் நீங்கினோனவன்" என்று (முண். ௩. க. ௨. ஹும், சுவே. ௪. எ) ஹும்,

யேஷாமீஶே பஶுபதி: பஶூநாம்|

(கஅசு) "எவைகளைப் பசுக்களுக்குப் பசுபதியாயினர் ஆளுகின்றார்" என்று (தைத். சங். ௩. க. ௪) ஹும்,

ஸர்வே நித்யா:|

(கஅஎ) சீவான்மாக்கள் பல என்பது தொனிக்க, "ஆன்மாக்கள் அனைத்தினும்" என்று (சாங். ரு. கஅ. க) ஹும்,

ந ஜீவோ ம்ரியதே|

(கஅஅ) "சீவன் அழிவதில்லை" என்று (சாங். சு. கக. ௩) ஹும்,

அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய|

(கஅகூ) "இந்தச் சீவான்மாவோடு தேவதை (சிவனார்) பிரவேசித்து" என்று (சாங். சு. ௩. ௨) ஹும்,

ஸத்யஸ்ய ஸத்யம்|

(ககூ0) "சத்தியத்தின் சத்தியம்" (எனவே, முற் சத்தியம் (ஜீவ) ஆன்மாவும், பிற் சத்தியம் சிவபிரானும்) என்று (பிரு. ௪. க. ௨0) ஹும்,

நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந| யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்|

(ககூக) "இந்த (பரம) ஆன்மா (சிவபெருமான்) வேதாத்தியயனத்தினாலும், புத்தியினாலும், மிகு கேள்வியினாலும் அடையப்படார்; எவனை (எந்தச் சீவான்மாவை) அவர் (பக்குவநோக்கி) தெரிகின்றனரோ, அவனால் இந்த (பரம) ஆன்மா (சிவபெருமான்) பெறப்படுகின்றனர், இவர் தமது வடிவத்தை அவனுக்குப் பிரகாசிப்பிக்கின்றனர்" என்று (முண். ௩. ௨. ௩. ஹும், கட. ௨. ௨௨) ஹும்,

ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யதி।

(கசஉ) "(ஜீவ) ஆன்மாவிலே (பரம) ஆன்மாவைப் பார்க்கின்றனன்" என்று (பிரு. சு. ச. உரு) னும்,

தமாத்மஸ்தம் யேநுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்।

(கசரு) "ஆன்மாவில் இருப்பவராக அவரை எந்தப் பெரியோர் பார்க்கின்றாரோ, அவர்க்கு ஆனந்தம்; பிறர்க்கில்லை" என்று (கட. ரு. கரு. னும், சுவே. சு. கஉ) னும், அதர்வசிரசினுங் கூறப்பட்டிருக்கின்றது.

த்யாத்வா த்வஹ தயா ஸார்த்தம் ஹ்ருதி பஶ்யந்தி யே ஶிவம்।
தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்தி நேதரேஷா மிதி ஶ்ருதி:।

(கசச) "சிந்தையிலே (ஆன்மாவிலே) அந்தச் சத்தியாரோடு கூட எவர்கள் சிவபெருமானைப் பார்க்கின்றனரோ, அவர்களுக்கு நித்தியமாகிய ஆனந்தம், பிறர்க்கின்றும் எனச் சுருதி கூறுகின்றது" என்று (கசஉ-ம் இலக்க) மந்திரத்துக்கு வியாசமுனிவர் (வாயு. உத். அ. உ0) ல் இங்ஙனம் பொருள் கூறியிருக்கின்றனர். மேலே (சுசு-ம், க0எ-ம், கருசு-ம் இலக்கங்களிற்) சிவபெருமான் சத்தியோடிசைந்தவர் என்று பிரமாணங் காட்டியிருக்கின்றேமன்றே. அங்ஙனமே வேதவியாசரும் இதயத்திலே (ஆன்மாவிலே) அவரைச் சத்தியின்றிக் காண்டல் கூடாதாமாதலின், சத்தியாரோடு கூடச் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும் எனப் பொருட்படுத்தினமை காண்க. அங்ஙனமே "ஆன்மாவில் ஆன்மாவைக் காண்கின்றனன்" என்றவிடத்தும், (ஜீவ) ஆன்மாவிலே சத்தியோடு கூடச் சிவபெருமானைத் தியானிக்கின்றனன் என்று பொருள் கொள்க.

அந்தரிச்சந்தி தம் ஜநே ருத்ரம் பரோ மநீஷயா க்ருப்ணந்தி ஜிஹ்வயா ஸஸம் (இரு. வே. அ. எஉ. ரு)

(கசரு) "மனிதரிடத்தில் அந்தரியாமியாயிருக்கும் அந்தச் சிவபெருமானை எவர்கள் *சத்தியாரோடு கூட உள்ளே தியானிக்கின்றனரோ, அவர்கள் அன்னத்தை நாவினாற் கிரகிக்கின்றனர்" என்று இருக்குவேதங் கூற,

---

* ஐதரேயத்துச் சிவசத்தியாரது பதினெண் பெயர்களுள்ளே காணப்படும் "மநீஷா" என்னும் பதத்துக்குப் பொருள் "பவாநீ" என்று மாசரபுராணமும் கூறி, வாயுசங்கிதை கூறிய சத்தியென்னும் பொருளை வலியுறுத்திற்று.

அந்தஸ்ஸ்மரந்தி யே ருத்³ரம் ஸதா³ ஸார்த⁴ம் உமயா। ஸ்வத³ந்தி ஜிஹ்வயா தே ஹி ரஸவத்பீயூஷதா⁴ரகம்। அந்தர்ந ஸ்மரந்தி யே ருத்³ரம் ப⁴வானீஸஹிதம் ஶிவம்। புரீஷமேவ ஸ்வத³ந்தி ஜிஹ்வயா தே ந ஸம்ஶய꞉।

(௧௧௬) "சத்தியாரோடு கூட எக்காலமும் வழிபடற்பாலராகிய சிவபெருமானை எவர்கள் உள்ளே தியானிக்கின்றனரோ, அவர்கள் இரசநிறைந்த அமிர்தோதகத்தை நாவினால் உண்கின்றனர்; சத்தியாரோடு கூட எவர்கள் உள்ளே சிவனாராகிய உருத்திரரைப் பற்றவில்லையோ, அவர்கள் நாவினால் ஐயமின்றி மலத்தையே கிரகிக்கின்றனர்" என்றது பராசரோபபிருங்கணம்.

(௧௧௭) பிராமணர்கள் காலை மாலை உச்சிகளிலே செபிக்கற்பாலதாயும், பஞ்சாக்ஷரப்பொருளைத் தன்னுட் கொண்டதாயும், வேதசாரமாயுமுள்ள காயத்திரிக்கும் "சிவசூரியனுடைய எந்த (ஞானேச்சாக்கிரியையாம்) பராசத்தி ஒளியானது (பசுக்களாகிய) நம்முடைய ஞானேச்சாக்கிரியைகளை உளுற்றுகின்றதோ, அந்த முக்கியப் பொருளை (சிவசத்தியைத்) தியானிக்கின்றோம்" என்பதே பொருளாம்.

ஶிவார்கஶக்திதீ³ப்த்யா து ஸமுத்தேஜிதயா த்³ருஶா।
ஶிவம் ஶக்த்யாதி³பி⁴꞉ ஸார்த⁴ம் பஶ்யத்யாத்மா க³தாவ்ருதி꞉।

(௧௧௮) "சிவசூரியனுடைய பராசத்தி ஒளியினால் வன்மையுடைய தாக்கப்பட்ட (ஸ்தூலசித்தாகிய) ஆன்மக் கண்ணினாற் சத்தியாதியோடு கூடச் சிவத்தைப் பார்க்கின்றனன்; பாசம் நீங்கிப்போயிற்று" என்று சிவாகமமும் அக்காயத்திரிப்பொருளை வலியுறுத்திற்று.

ஆகலின், முக்கிய உபநிடதங்களினெல்லாம் சீவான்மா பரமான்மா என்னும் இரண்டையும் நித்தியமென உணர்த்தும் துவிதவாக்கியங்களே உள்ளனவாகவும், சர்வசாரம், அன்னபூரணி, ருத்திரவிருதய முதலிய ஏகான்மவாதோபநிடதங்களிலே சிவனையேனும், சிவேசுரரையேனும் மித்தை கற்பிதம் என்றுணர்த்தற்குப் பிரயோகிக்கப்பட்ட கடாகாய மகாகாயங்களை அங்ஙனம் அச்சிவேசுரர்களை மித்தை கற்பிதம் என்றுணர்த்துமாறு ஓர் காலும் மறந்தும் பிரயோகிக்காத ஈசகேநாதி பரோபநிடதங்களுக்கும் வேதாந்த சூத்திரத்துக்கும் பாடியங்கள் செய்கின்றேமென்று தொடங்கிப் பிரமகீதையினும் பாடியங்களினும் அச்சிவேசுரர்களை மித்தை கற்பிதம் என்றுரைக்கவேண்டி அக்கடாகாய மகாகாயங்களைச் சுலோகரூபமாகப்

புகுத்தியும் வரைந்தும் வைத்த எகான்மவாதியார் கூற்றெலாம் மித்தையும் கற்பிதமுமாமென மறுக்க.

வீக்ஷாஸ்மா ஹா்தஃ பவதெ ।

(கசுசு) பிரமத்தினால் யாவும் இயங்குகின்றன என்பதுணர்த்துமாறு, அந்தப் "பிரமத்துக்குப் பயந்து காற்று வீசுகின்றது" என்றற்றொடக் கத்தனவாக (தைத். உ. அ. னும், கட. ரு. கரு. னும், சு. உ. னும், முண். உ. உ. க0. னும், சுவே. சு. கச. னும், பிரு. ரு. அ. கூ) னும் கூறப்படுகின்றது.

(உ00) அவர் செய்யும் பஞ்சகிருத்தியங்களுட் சிருட்டிகிருத்தியம் (சாங். சு. உ. ங) னும், திதிகிருத்தியம் (பிரு. ஏ. ச. உஉ) னும், சங்கார கிருத்தியம் (கட. உ. உச) னும், திரோபவகிருத்தியம் (கௌஷீ. ங. கூ) னும், அநுக்கிரககிருத்தியம் (கட. உ. உஉ) னும், (முண். ங. உ. ங) னுங் காணப்படுகின்றன.

(உ0க) உற்கீதவித்தை
(பிரு. ங. ங. எ) னும், (வே. சூ. ங. ங. சு) னும்,
(சாங். க. உ. எ) னும்,

(உ0உ) பிராணவித்தை
(சாங். ரு. க. க)னும், (வே. சூ. ங. ங. க0) னும்,
(பிரு. அ. க. கச) னும்,

(உ0ங) சாண்டில்லியவித்தை
(பிரு. எ. சு. க) னும், (வே. சூ. ங. ங. கக) னும்,
(சாங். ங. கச. ங) னும்,
மாத்தியந்தினசாகையினும்,

(உ0ச) வியாகிருதிவித்தை
(பிரு. எ. ரு. உ, ங) னும், (வே. சூ. ங. ங. உ0) னும்,
(தைத். க. ரு. க) னும்,

(உ0ரு) மண்டலவித்தை
(சாங். க. சு. சு) னும், (வே. சூ. க. க. உக, உஉ) னும்,
(மகா. கங. கஅ) னும், (,, ங. ங. உஉ) னும்,

(உ0சு) புருஷவித்தை
(சாங். ங. கசு. க) னும், (வே. சூ. ங. ங. உச) னும்,

(உ0எ) பஞ்சாக்கினிவித்தை
பரியங்கவித்தை
(சாந். ரு. ரு. க—கூ) னும், (வே. சூ. ங. க. க) னும்,

(உ0அ) உபகோசலவித்தை
(சாந். ச. கரு. க) னும், (வே. சூ. க. உ. கங) னும்,
(பிரு. ரு. எ. கஅ) னும்,

(உ0கூ) சத்வித்தை
(சாந். சா. உ. க) னும், (வே. சூ. க. க. ரு) னும்,
(,, ங. ங. ஙஎ) னும்,

(உக0) உஷஸ்தவித்தை
(பிரு. ரு. ச. க, உ) னும்,

(உகக) ககோளவித்தை
(பிரு. ரு. ரு. க) னும்,
(வே. சூ. ங. ங. ஙரு) னும்,

(உகஉ) வைசுவாநரவித்தை
(சாந். ரு. கஉ. உ) னும், (வே. சூ. ங. ங. ருரு) னும்,
(,, ரு. கஅ. க) னும்,

(உகங) தகரவித்தை
(சாந். அ. க. க) னும், (வே. சூ. க. ங. கங—உஉ) னும்,
(பிரு. சா. ச. உஉ) னும், (,, ங. ங. ஙஅ) னும்,
(மகா. க0. எ) னும், கைவல்லியத்தினும்
காணப்படுகின்றன.

(உகச) இவ்வித்தைகளொழிந்த மதுவித்தை முதலிய பிறவித்தைகளும் சுருதியிலே கூறப்பட்டிருப்பினும், ஏகான்மவாதிகட்குரிய நிர்க்குணோபாசனை இந்த ஈசகேந முதலிய உபநிடதங்கள் எங்காயினுங் காணப்படவில்லை.

(உகரு) மேலே கூறப்பட்ட வித்தைகளுள் எவ்வெவர்க்கு எந்தெந்த வித்தையிஷ்டமோ, அவ்வவர் அதனைக் குரு உபதேசத்தினால் அறிந்து உமாசகாயராகிய சிவபெருமானை உபாசனை செய்து நிரதிசயானந்தமடைக. இவ்வித்தைகள் அனைத்துள்ளும் தகராகாயவித்தையே மிகுந்து எல்லாவுபநிடதங்களினுங் கூறப்பட்டிருக்கின்றது. இது சாந்தோக்கியம், பிருகதாரணியம், மகாநாராயணம், கைவல்லியம் என்பவற்றில் விரிவுறவும், பிறவிடங்களிற் சுருக்கமுறவும் குறிக்கப்பட்டிருக்கின்றது. விளக்கிருந்த இடம் விளக்கெனத் தானியாகுபெயராய்ப் போந்தவாறு போலத் தகராகாயம்

எனப்படும் சூக்ஷுமாகாயம் விளங்கும் தில்லையானது சிதம்பரம் எனப்படும். அந்தச் சிதம்பரத்தின் பெயர்களாகிய

(உகசு) இரண்மயகோசம்
(முண். உ. உ. கூ) னும்,

(உகஎ) சத்து
(சாந். சு. உ. க) னும்,

(உகஅ) பரம்
(சுவே. ரு. எ) னும்,

(உகக) விவிக்தம் (தனி)
(கைவ. க) னும்,

(உஉ0) புண்டரீகம்
(கைவ. கக) னும்,
(சாந். அ. க. க, உ) னும்,
(மகா. க0. எ) னும்,

(உஉக) குகை
(தைத். உ. க) னும்

(உஉஉ) ககனம்
(மகா. க0. எ) னும்

(உஉரு) அற்புதம்
(கைவ. சு) னும்,

(உஉச) சத்தியமாயதனம் (மெய்ப்பதம்)
(கேந. ருரு) னும்,

(உஉரு) சபை
(சாந். அ. கச. க) னும்,

(உஉசு) சத்தியம்
(சாந். சு. அ. எ) னும்,

(உஉஎ) பரமவியோமம்
(சுவே. ச. அ) னும், (தைத். ரு. சு. க) னும்,
(தைத். உ. க. க) னும், (இரு. வே. க. கசுச. ருசு) னும்,

(௨௨௮) பரமாலயம் (சிவாலயம்)
(மைத். ௬. ௨௭) னும்,

(௨௨௯) ஆகாயம்
(சாந். ௧. ௯. ௧) னும், (பிரு. ௬. ௪. ௨௨) னும்,
(,, ௩. ௧௨. ௯) னும், (தைத். ௧. ௬. ௧) னும்,
(,, ௮. ௧. ௧) னும், (,, ௨. ௭. ௧) னும்,
(,, ௮. ௧௪. ௧) னும், அதர்வசிகையினும்,
(பிரு. ௪. ௧. ௧௭) னும், (வே. சூ. ௧. ௧. ௨௩) னும்,

(௨௩0) கம் (வழ) ஆகாயம் (சாந். ௪. ௧0. ௫) னுமாகக் காணப்படுகின்றன. இவை சிதம்பரத்தின் நாமங்களாமாறு

அம்பரம் ஸத்பரம் நித்யம் ஸபா க்ஷேத்ரோ ஹிரண்மய:|
ஆகாசம் பரமம் விவிக்தஞ்ச புண்டரீகம் குஹாவரம்|
தஹரம் பரிஸ்பந்தஞ்ச பரமேஷ்டாந்த ஸாந்தரம்|
ஸத்யாஸ்த்ரம் ஸாக்ஷாத்ப்ரயா ஸாக்ஷாந்நஸாமோக்ஷயம்|
சிதம்பரம் ஸ்வாத்மஸித்தம் ப்ரஸித்தம் ஸாமோக்ஷதம்|
சக்திஸ்த²ம் ஸபா தி³வ்யா விஷ்ணு ஸ்த²லம் சிவாலய:|
ஏதாநி வேதசாஸ்த்ராணி ப்ரோக்தாநி கோடிச:|
உக்தாநி நியதம் வேதே நாமதேய ரஹஸ்யகம்|
ஏவமாதீநி நாமானி ந்ருத்தஸ்தாநஸ்ய ஸர்வதா|

என்னுஞ் சிதம்பரமான்மியத்துப் பத்தாம் அத்தியாயச் சுலோகங்களானும், அச்சுலோகங்களின் பொருளை அடக்கிய

அத்தன் பரதத் துவனித் தநடத் தமரும் பொதுவின் பெயர்மன் றமலஞ்
சத்தும் பரிரண் மயகோ சமகத் தனிபுண் டரிகங் குகைவண் ககனஞ்
சுத்தம் பரமற் புதமெய்ப் பதமச் சுமுநா வழிஞா னசுகோ தயநற்
சித்தம் பரமுத் திபரப் பிரமந் திகழுஞ் சபைசத் திசிவா லயமே.

என்னும் கோயிற்புராணச் செய்யுளானும் அறியப்படும்.

(௨௩௧) கைவல்லியோபநிடதமுதலியவற்றிற் கூறப்பட்டவாறு, உமாசகாயராகிய சிவபெருமான் நீலகண்டத்துவமுதலிய இலக்ஷணங்களையுடையராய் இதய தகராகாயத்தின்கண்ணே தியானிக்கப்படுவாரேல், அவர் சரீரம் நமது சரீரம் போலத் துக்கமுதலியவற்றுக்கு ஆஸ்பதமாய்விடுமாலோ எனின், ஆகாது; நம்மைப் போல அவர் சரீரம் ஜரை, மரணம், சோகமுதலியவற்றுக்குறைவிடமாகாதெனை மறுத்தற்கு (சாந். ௮. ௧. ௫) ல் அபஹதபாப்மத்துவாதி குணங்கள் கூறப்பட்டனவாதலின்.

(உகஉ) எங்கும் வியாபகராயினாரை இங்ஙனம் ஓர் இடத்துள் வரையறுத்துத் தியானித்தல் பழுதாமெனின், அன்று: அவர் கொண்ட வடிவம் உபாசகர்பொருட்டாம் என்றும், கடத்துள் அடங்கிய ஆகாயம் உபாதி வசத்தினாற் சிறிதாயினும், சொரூபத்தினாற் பெரிதாம் என்று (வே. சூ. க. உ. எ) ல் நிரூபிக்கப்பட்டிருக்கின்றமையின், சிவபெருமான் பிண்டம் அண்டம் இரண்டினும் உபாசிக்கற்பாலர் என்று பெறப்படுகின்றது. பிண்டம் என்றது பிரமபுரமாகிய சரீரம், அண்டம் என்றது பிருதிவிமுதற் சிவதத்துவாந்தமீறாய முப்பத்தாறு தத்துவபுவனங்கள் அடங்கிநின்ற உலகம்.

(உகங) தகராகாசம் என்றதில் தகரம் என்றது சிறுமையையும் ஆகாயம் என்றது அம்பலத்தையும் உணர்த்துதலின், தகராகாசமானது சிற்றம்பலம் எனப்படும். எங்ஙனமெனின்,

தகராகாசம்=தகரம் + ஆகாசம்
=சிறுமை + அம்பலம். இது நன். கக௫-ம், ககசு-ம்
=சிற்றம்பலம் என்றாயிற்று. [சூத்திரப்பிரகாரம்

வடமொழியிலே ஸ்ரீ என்பது போல, தமிழிலே திரு என்னும் பலபொருளொருசொல் மேன்மையுடைய எப்பொருட்கும் விசேடணமொழியாகி அவற்றிற்கு முன்னர் மகிமைப்பொருளை உணர்த்திவரும். வடமொழியில் ஸ்ரீ தகராகாசம் எனற்பாலது தென்மொழியிலே திருச்சிற்றம்பலம் எனப்படுகின்றது.

(உகச) (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னும்) மூவர் (அருளிய) தேவாரமும், ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருக்) கோவை திருவாசகமும், திருமூலநாயனார் (அருளிய) திருமந்திரமுமாகிய இவை தங்கருத்தெலாம் திருச்சிற்றம்பலத்திலே நிறீஇ நிற்பனவாக, (திருவள்ளுவ) தேவர் (திருக்) குறளும், (சிவபெருமானருளிய) திருநான்மறை முடிவும் (உபநிடதங்களும்), வேதவியாசமுனிவர் (அருளிய) வேதாந்த சூத்திரமும் ஆகிய இவைகளும் திருச்சிற்றம்பலத்திலேயே தங்கருத்தெலாம் நிறீஇ நின்றவென்று உணர்த்துவாராய் ஔவையார்

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு"
மொருவா சகமென் றுணர்.

என்றருளிச் செய்தார்.

தேவர் குறள்.

(உகரு) மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

ஈண்டு மலர் என்றது தகரபுண்டரீகத்தின் மேற்று. "தகரபுண்டரீகமிசை ஏகினான்" எனவே, அது "தகரபுண்டரீகத்துள்ளேயுள்ள தகராகாயத்தின் கண்ணே ஏகினான்" எனச் (சாந். அ. க. க) சுருதிப்பிரகாரம் பொருட் படுத்தப்படும். ஏகினான் என்றது ஆதிபகவன் மேற்று. ஆதிபகவன் என்றது உமையோடியைந்த பகவானாகிய சிவபெருமான் மேற்று.

அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய்நின்ற சிவத் துக்குச் சகளம், சகளநிஷ்களம், நிஷ்களம் என முத்திறத் திருமேனிக ளுண்டென்றும், சகளத் திருமேனியுடையார் மகேசுவரர் எனவும், நிஷ் கள சகளத் திருமேனியுடையார் சதாசிவர் எனவும், நிஷ்களத் திருமேனி யுடையார் சிவன் எனவுங் கூறப்படுமென்றும்,

ஆதிசக்தி: சிவஸ்ய ஸ்யாத் ஸதாசிவஸ்ய மனோன்மநீ | மஹேசஸ்ய பவாநீ ஸ்யா திதி சக்திஸ் த்ரிதா ஸ்ம்ருதா (காமி. மந். கருசு)

(உகசு) காமிகாகமத்திலே "மகேசுவரருடைய சத்தியார் பவானி எனவும், சதாசிவனுடைய சத்தியார் மனோன்மனி எனவும், சிவனாருடைய சத்தியார் ஆதி எனவும் திருநாமம்பெறுவர் என்றும்" கூறப்படுகின்றது. ஞானயோகஸ்தானமாய தில்லை என்கின்றவராகிய சிவனாரது சத்தி ஆதி எனப்படுவாராதலின்,

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
லோதிய வொண்பொரு ளெல்லா—முதைத்ததனாற்
றூதவிழ் தார்மாற னாம்ம னமைபயக்கு
வேதமே மேற்கண.

என்று சங்கப்புலவருள் ஒருவராகிய பெருஞ்சித்தனார் கூறியாங்கு, வேதப்பொருள்களையெல்லாம் குறள் வெண்பாக்களினலருளினோராய், வேதாகமப்பொருள்களெல்லாம் உணர்ந்தோராயுள்ள திருவள்ளுவநாயனார் விஷ்ணு, தேவர், இருடிகள்முதலிய பலர்க்கும் செல்லும் பகவன் என்னும் மொழியை அங்ஙனமாகவொட்டாது சிவபெருமானுக்கே ஈண்டுச் செல் லுமாறு, உமையம்மையாரை உணர்த்தும் ஆதி என்னும் விசேஷணமொழி யைப் புணர்த்தி ஆதிபகவன் என்றனர். ஆதலின், ஆதிபகவன் என்றது

சாந்தோக்கிய கைவல்லிய உபநிடதங்களிற் கூறப்பட்ட கிருஷ்ணபிங்களரா கிய உமாசகாயனை உணர்த்திற்று.

சாந்தோக்கியத்திற் கூறப்பட்டவாறு, தகரபுண்டரீகத்துள்ளேயுள்ள ஆகாயத்துள்ளே "ஏகினன்" என்றவாறு கூறாது "ஆகாயத்தை" விடுத்து மலரைமாத்திரங்கொண்டு "மலர்மிசையேகினன்" என்று கூறினமை சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளைக் கூறும் அழகுபற்றியாம்; இமாசலத்துள்ளார் ஒருவர் "காசிக்கப்புறத்துள்ளார் இராமநாதர்" என்றவிடத்து இடையிற் சிதம்பரமில்லை என்று கொள்வாருண்டா? அதுபோல மலருக்குமேல் "ஏகினனை"க் கூறியவிடத்தும், திருச்சிற்றம்பலமாகிய தகராகாயம் தகரபுண்டரீகத்ததெனக் கோடற்பாற்று. இத்திருக்குறள் கைவல்லியோபநிடதப்பொருளைத் தொடர்ந்து அருளிச்செய்யப்பட்டது; இரண்டினும் மலராகிய இதய புண்டரீகமும் ஆதிபகவனாகிய உமாசகாயரும் பிரதிபாதிக்கப்பட்டிருத்தலின்.

சேர்ந்தார் என்றது ஆவிருத்தியதிகரணத்திற் (ச. க. உ) கூறப்பட்டவாறு திருச்சிற்றம்பலத்தின்கண்ணேயுள்ள சிவனாரோடு ஒற்றுமையுற இடையறாது சோஹம்பாவனையாகிய சிவோஹம்பாவனை செய்தலின்மேற்று.

"**நிலம்**" என்றது சாந்தோக்கியாதி உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட பிரமலோகமாகிய சிவலோகத்தின் மேற்று.

ஞானயோகிகள் மகாமாயோற்பன்ன விசுத்தகாரியகரணர்களாய் (தைத். உ. க. னும், சாந். அ. கஉ. ந) னுங் கூறப்பட்டவாறு, நிரதிசய பிரமானந்தத்தோடு மற்றைய வேட்ட போகங்களையும் நீடு துய்த்து வாழ்வார் என்றுணர்த்துவாராய் வள்ளுவநாயனார் "**நீடுவாழ்வார்**" என்றனர்.

திருநான்மறைமுடிவு.

இருக்குவேதம்.

சுவேதாசுவதரோபநிடதம்.

ருசோ அக்ஷரே பரமே வ்யோமந் யஸ்மிந் தேவா அதி விச்வே நிஷேது:| யஸ்தந்ந வேத கிம்ருசா கரிஷ்யதி ய இத்தத்விதுஸ்த இமே ஸமாஸதே|

(௪.௮) "மூன்று வேதங்களின் நிதியாய்ப் பெரியோர் பற்றிநிற்கும் பரமாகாயத்ததாயுள்ள அழியாப் பொருளை அறியாதவனெவனோ,

அவனுக்கு அவ்வேதத்தினால் பயன் என்? அதனை அறிபவர்களே இருதார்த்தராயமர்ந்தனர்" என்று (இரு. வே. ௧. ௧௬௪. ௩௯. ஹும், ௪வே. ௪. ௮) ஹும்,

தைத்திரீயோபநிடதம்.

𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾।

(௨௩௮) இதய குகைக்கண்ணதாகிய பரமாகாயத்தில் இருக்கும் (சச்சிதானந்த பிரமத்தை) எவன் அறிகின்றானோ, அவன் சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு சமஸ்த வேட்ட போகங்களையுந் துய்க்கின்றனன்" என்று (வே. சூ. ௩. ௩. ௪௦)ற் கூறப்பட்டவாறு (தைத். ௨. ௧)ஹும்,

𑌸𑍈𑌷𑌾 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍀 𑌵𑌾𑌰𑍁𑌣𑍀 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾।

(௨௩௯) "பரமாகாயத்திலே நிறுத்தப்பட்ட அந்த வித்தை (வருணன் கூற) பிருகுவாருணியினால் அறியப்பட்டது" என்று (தைத். ௩. ௬) ஹும்,

கடோபநிடதம்.

𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍।

(௨௪௦) அவன் (அறிவித) அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அந்தப் பரப்பிரமத்தின் பரமாகாய சிவபதத்தை அடைகின்றனன்" என்று (வே. சூ. ௪. ௪. ௨௨. ஹும், ௪. ௩. ௧௬) ஹுங் கூறப்பட்டவாறு, (கட. ௩. ௯) ஹும்,

பிருகதாரணியோபநிடதம்.

𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌞𑍍𑌛𑍇𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃।

(௨௪௧) "எது இதயத்துள் ஆகாசமாயிருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத்துக்கும் ஈசானரும், அனைத்துக்கும் அதிபதியுமாயினார் அமர்கின்றனர்" என்று (பிரு. ௬. ௪. ௨௨) ஹும்,

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌖𑌲𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑍇 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌾𑌕𑌾𑌶 𑌓𑌤𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑍋𑌤𑌶𑍍𑌚।

(௨௪௨) "கார்க்கியே! அந்த அக்ஷரப்பிரமத்திலன்றோ ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் உற்றது" என்று (பிரு. ௫. ௮. ௧௧) ஹும்,

சாந்தோக்கியோபநிடதம்.

अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशस्तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यम् ।

(உசங) "பிரமபுரம் என்னும் இதிலே தகரபுண்டரீக வீடு உள்ளது; இதிலே தகராகாசம் உள்ளது; இந்தத் தகராகாசத்துக்குள்ளேயுள்ளது நாடற்பாற்று; அறியற்பாற்று" என்று (சாந். அ. க. க) ஆம்,

सर्वाणि ह वा इमानि भूतान्याकाशादेव समुत्पद्यन्ते आकाशं प्रत्यस्तं यन्ति ।

(உசச) "ஆகாயத்திலிருந்து இப்பூதமனைத்தும் உற்பத்தியாகி, ஆகாயத்தைப் போய் அடைகின்றன" என்று (சாந். க. கூ. க) ஆம்,

கைவல்லியோபநிடதம்.

हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विशदं विशोकम् । अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् ।

(உசரு) "இதயபுண்டரீகத்தைத் துகளற்ற சுத்தமாகக் கருதி அதன் மத்தியிலே தெளிவுடையராய், சோகமில்லாதவராய், எண்ணப்படாதவராய், வெளிப்படாதவராய், அனந்தரூபராய், சிவனாய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமயோனியாயுள்ளாரை .... தியானித்து" என்றற்றொடக்கத்தனவாகக் கைவல்லியோபநிடதத்தினும்,

மகாநாராயணோபநிடதம்.

तदेतदक्षरे परमे व्योमन् ।

(உசசு) "இந்த அந்தப் பிரமம் அழியாத பரமாகாயத்துள்ளது" என மகாநாராயணத்தினும்,

* दहरं विपाप्मं परवेश्मभूतं यत्पुण्डरीकं पुरमध्यसंस्थम् । तत्रापि दहरं गगनं विशोक-स्तस्मिन्यदन्तस्तदुपासितव्यम् ।

* दहरं विपापं वरवेश्मभूतम् என்று பாடாந்தரமுண்டு.

(௨௪௭) "(பிரம)புரமத்தியிலே இருப்பதாய்ப் பாவமிலதாயுள்ள தகர புண்டரீக வீடு என எதுவுண்டோ, அதிற் சோகமிலதாகிய தகராகாசம் உள்ளது; அதனுள் உள்ளது உபாசிக்கற்பாற்று" என்று மகாநாராயணத்தினும்,

முண்டகோபநிடதம்.

𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃।

(௨௪௮) "திவ்ய பிரமபுரத்திலே உள்ள ஆகாயத்திலே ஆன்மா (சிவபெருமான்) அமர்ந்தனர்" என (முண். ௨. ௨. ௭) னும்,

அதர்வசிகோபநிடதம்.

𑌶𑌮𑍍𑌭𑍁 𑌰𑌾𑌕𑌾𑌶𑌮𑌧𑍍𑌯𑍇 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃।

(௨௪௯) "சிவபெருமான் ஆகாயமத்தியிற் றியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகையினும்,

பிரசிநோபநிடதம்.

𑌸 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾 𑌜𑍍𑌜𑍀𑌵𑌘𑌨𑌾 𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇।

(௨௫0) "அவன் இந்தச் சீவகனராகிய (இரணியகருப்பரினின்றும்) உற்கிருட்டராகிய (நாராயணர்க்கும்) பரமாய்த் (தகரபுண்டரீக) புரிக்கணுள்ள புருஷரைச் (சிவனுரைக்) காண்கின்றனன்" என்று (பிர. ௫. ௫) னும்,

மாண்டூக்கியோபநிடதம்.

𑌅𑌮𑌾𑌤𑍍𑌰 𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃 𑌶𑌿𑌵𑍋 𑌦𑍍𑌵𑌤 𑌏𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌃।

(௨௫௧) "அளவில்லாதவராய், வாக்கிந்திரிய வியவகாரத்துக் கெய்தாதவராய், சமஸ்தப் பிரபஞ்சோபசாந்தராய், அத்துவிதராய், துரியராய், ஓங்காரராய் நின்ற சிவபெருமான்" என்றவிடத்துக் கூறப்பட்ட சிவபெருமான் நிவிர்த்திகலாசக்கரம், பிரதிஷ்டாகலாசக்கரம், வித்தியாகலாசக்கரம், சாந்திகலாசக்கரம் என்னும் நான்குக்கும் மேலாய் (௧0-ம் இலக்கத்திற்) கூறப்பட்ட சாந்தியதீத அத்துவாதீத பரமாகாய துரியமூர்த்தியாம் என்பது போதர மாண்டூக்கியோபநிடதத்தினுங் கூறப்பட்டிருக்கின்றது.

ஈசாவாசியோபநிடதம்.

(உருஉ) ஈசாவாசியோபநிடதத்து முதன் மந்திரத்திற் கூறப்பட்ட ஈசரும் அச்சிவபெருமானையே உணர்த்திற்று.

கேநோபநிடதம்.

(உருங) கேநோபநிடதத்திற் கூறப்பட்ட உமை பிருகதாரணிய சாந்தோக்கியாதி உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பரமாகாயமாம்.

தைத்திரீயோபநிடதம்.
கண்ணுவசாகை.
சதபதப்பிராம்மணம்.

(உருச) (தைத். உ. அ. னும், கண். சா. சு. ந. நஉ, நந.) னும் மநுஷ்யானந்தமுதல் ஒன்றுக்கொன்று மேன்மேலாகக் கூறி உயர்த்திக் கொண்டுபோய் முடித்த பதினோராவது பிரமானந்தம் (சத. பி. கச. சு. சு. க. னும், பிரு. ரு. சு. க) னும் பிரதிபாதிக்கப்பட்டு, பிருதிவி சலில வாயு அந்தரிக்ஷலோக கந்தருவலோக ஆதித்தியலோக சந்திரலோக நக்ஷத்திரலோக தேவலோக இந்திரலோக பிரஜாபதிலோகம் என்னும் லோகங்களையெல்லாம் கடந்த பிரமலோகமாகிய சிவலோகத்தின்பாலதாம் என்றும்,

ஐதரேயோபநிடதம்.
அதர்வசிரோபநிடதம்.

(உருரு) இந்தப் பிரமலோகத்தையே ஐதரேயமும் அதர்வசிரசும் (ஐத. ஙி. சு. னும், சு. ச) னும் சுவர்க்கலோகம் என்றுங் கூறியவாம் என்க.

(உருசு) (தகரா) காசம் நுட்பமாய்விடின் பிரமபுரமாகிய சரீரத்துள் மாத்திரம் அடங்கிய தொன்றாய்விடுமே எனின், அன்று;

ஸ ஹோவாச யாவாந்வா அயமாகாஶஸ்தாவாநேஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ: உபே அஸ்மிந் த்யாவாப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே உபாவக்நிஶ்ச வாயுஶ்ச ஸூர்யாசந்த்ரமஸாவுபௌ வித்யுந்நக்ஷத்ராணி।

(பிரு. ஙி. அ. எ)

(௨௫எ) "கார்க்கியே, வானத்துக்கு மேலும் பூமிக்குக் கீழுமாக வானம், பூமி, இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பவற்றை அடக்கிக் குறுக்கும் மறுக்குமாய், அமைந்ததெதுவோ அது ஆகாயத்தில் (அமர்ந்தது)" என, (அரைமாத்திரையிலடங்கும்படி யகலமளக்கிற்பாரில்லாவடி * என்றவாறு) கூறப்பட்டிருத்தலின், அந்த ஆகாயம் அனைத்துக்கும் மேலாய் அளவுட் படாது விரிந்துபோந்தமை உணரற்பாற்று. இங்ஙனம் வேதாந்த சூத்திரத்துக்கு ஆதாரமாய் நின்ற ஈசகேநாதி உபநிடதமனைத்தும் ஆகாசம் பரமாகாசம் எனப்படும் தகராகாசத்தில் தங்கருத்தெலாம் நிறீஇ நின்றமை வெளிப்படை.

மூவர் தமிழ்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

(௨௫அ) கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே.

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட் சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே.

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தைதிற்றேர்வதில்லைதேவரே.

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவார்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநின்னைப்பதேறியமமே.

பெரியபுராணம்.

ஒன்றுவே றுணர்வு மில்லே னொழிவற நிறைந்த கோல
மன்றினுன் மறைக ளேத்த மானுட ருய்ய வேண்டி

* திருவதிகை, திருவடித்தாண்டகம். எ.

நின்றுநீ யாடல் செய்கை நினைப்பதே நியம மாகு
மென்றுமும் புகலி மன்ன ரின்றமிழ்ப் பதிகம் பாட.

திருநாவுக்கரசு நாயனார்.

(உ௫௯) வில்லைவட்டப்படவாங்கியவுணர்தம்
வல்லைவட்டம்மதின்மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டந்திசைகைதொழுவார்வினை
யொல்லைவட்டங்கடந்தோடுதலுண்மையே.

பெரியபுராணம்.

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொ னம்பலத்து
ளரவும் புனலுஞ் சடையாட வாடு வார்கூத் தாராமை
விரவுங் காதன் மிக்கோங்க வேதம் படியுந் திருப்படிக்கீ
ழிரவும் பகலும் பணிந்தேத்தி யின்பஞ் சிறக்கு மந்நாளில்.

ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார்.

(உ௬௦) பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனூர்தமர்செக்கிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகொங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே.

பெரியபுராணம்.

அத்திருப் பதியை யணைந்தமுன் றம்மை யாண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனார் தில்லை மன்றுணின் றாடல் நீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார்.

முனிமொழி.

(உ௬௧) வேதாந்த சூத்திர நீலகண்டபாடியத்து ஜன்மாதிகரணத்திலும் (௧. ௧. ௨), ஆகாயப்பிராணாதிகரணத்திலும் (௧. ௧. உ௩, உ௪), சர்வத்திரப்பிரசித்தாதிகரணத்திலும் (௧. உ. ௧), அக்ஷராதிகரணத்திலும் (௧. ௩. ௯, ௧௦), ஈக்ஷதிகர்மாதிகரணத்திலும் (௧. ௩. ௧௨), தஹராதிகரணத்திலும் (௧. ௩. ௧௩—உ௨), பிறவிடங்களிலும் ஆங்காங்கே தகராகாயவிஷயம் கூறப்பட்டிருத்தல் சிவார்க்கமணிதீபிகையினுள் நன்கு புலப்படும்.*

திருக்கோவையார்.

(உசுஉ) எலும்பாலணியிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற் றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே.

(இ—ள்) சிலம்பா, எலும்புகளால் அலங்கரிக்கும் இறைவர், திருச்சிற்றம்பலத்தின்கண்ணர், அவரது (சிற்றம்பலத்தில்லை) எல்லைக்கண்ணே அவரை அருண்ஞானத்தினல் வியாபித்தணுகுதற்குக் கருதும் சீவன் முத்தராயினரது நன்மைபரந்த (பிருதிவி முதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள) பிரபஞ்சமனைத்தையும் நீ கொடுப்பினும், எம்முடைய தமராகிய கல்வரைநாடர் வடுவகிர்போலும் கண்ணையுடையாளது சிறிய இடைக்கே விலையாகச் சொல்லுதல் இயையார், கலம்பரந்த முலையின் விலையாக யாதனை நீ கருதுவது? ஒன்றற்கும் அவர் உடம்படார்; என்பதாம்.

பெரியபுராணம்.

அறிவி னெல்லை யாயதிருத் தில்லை யெல்லை யமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப் பெருகு முள்ளத் தினிற்பெற்றுச்
செறியு ஞான போனகர்வந் தருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார்.

திருவாசகம்.

(உசுங) எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
யும்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி.

திருமந்திரம்.

(உசுச) விம்மும் வெருவும் விழுமெழு மெய்சோருந்
தம்மையுந் தாமறி யார்கள் சதிர்கெடுஞ்
செம்மை சிறந்த திருவம் பலக்கூத்து
ளம்மலர்ப் பொற்றிருப் பாதத் தன்புவைப் பார்கட்கே.

இங்ஙனம் திருக்குறள்முதலிய நூல்களிலிருந்து ஒவ்வோர் பிரமாண மாத்திரம் ஸ்தாலீபுலாக நியாயங்கொண்டு எடுத்துக் காட்டினம். மற்ற வைகளை முன்பின் மலைவற ஆராயவல்ல பெரியோர் திருச்சிற்றம்பலத்தி லேயே எப்பொருள்களுங் கோவைபட்டிருத்தல் காணவல்லுநராவர்.

> ஜ்ஞாநம் க்ரியா ச சர்யா ச யோகஶ்சேதி ஸுரேஶ்வரி।
> சதுஷ்பாத: ஸமாக்யாதோ ஶிவதர்மஸ் ஸநாதந:॥
>
> (வாயு. உத். கக. ந௦)
>
> தத்ராஜ்ஞாத: ஸமோ யஸ்ய ஶ்ரூயதே ஜ்ஞாதவிஸ்தர:।
> தேஷு பாஶுபதோ யோக: ஶிவம் ப்ரத்யக்ஷயேத்த்ருவம்॥
>
> (வாயு. பூ. உஅ. கஎ)

(உசுரு "சரியை கிரியை யோகம் ஞானம் எனச் சிவபுண்ணியம் நால்வகைப்படும்; அவற்றுட் பாசுபதயோகம் உறுதியாய்ச் சிவபிரானை ரைப் பிரத்தியக்ஷமாக்கும்" என்று வாயுசங்கிதை கூறலானும், அந்தப் பாசுபதயோகத்தையே நீலகண்டசிவாசாரியர் கன்மயாகம் தபயாகம் ஜப யாகம் என்னும் இந்த மூன்றுக்கும் மேற்பட்ட ஞானதியானம் (ஞான யோகம்) என்றும், இது பிரமசொரூபத்தை அடைதற்கு நேரே ஹேது வாயுள்ளதென்றும் அக்கினிஹோத்திராதிகரணத்தில் (ச. க. கக) கூறினராக, சைவசித்தாந்த சந்தான சாரியருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியர் தில் லைச் சிற்றம்பலத்தை ஞானயோகஸ்தானம் என்பாராய்

> பிறந்திலை மாரூர் தன்னிற் பேசிய காசி மேவி
> யிறந்திலை யிரண்டு முத்தி யின்பமும் பின்ப தாநா
> முறைந்திடுந் தில்லை ஞான யோகமார் தான மாமாற்
> செறிந்தடி காணச் சீவன் முத்தராய்த் திரியலாமே

என்றருளிச் செய்தனர்.

ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் முத்திறத் தத்துவங்களுள்ளே அதோபாக ஆன்மதத்துவத்தினின்ற ஏகான்மவாதியார் அக்கிரபாக சிவதத்துவத்தின்பாலராம் திருச்சிற்றம்பலவரை மந்தபுத்தி யினர் உபாசனையின்பொருட்டுள்ளார் என்று தூஷித்தலானும், அங்ங னம் வைணவருக்கும் அத்திருச்சிற்றம்பலம் உருசிக்காமையானும், சமஸ்த சாஸ்திரப்பிரதிபாதிதமாகிய திருச்சிற்றம்பலமானது சைவசமயிகளுக்கே ஏற்புடைத்தாய் வாய்த்த பெருஞ் செல்வமாயிற்றெனக.

(உசுசு) "இருடி வாமதேவர் நான் மனுவாயினேன் சூரியனாயினேன் என்றனர்; இங்ஙனம் நான் பிரமமாகின்றேன் என்று அறிபவன் (பாவிக்கிற

வன்) எல்லாமாயாகின்றனன்; தான் வேறு தேவதை வேறெனக்கொண்டு அன்னியமாய்த் தேவதையை வழிபடின் அவன் அறிந்தவனுகான்" என்று (பிரு. க. ச. ௧௦) கூறுகின்றமையின், அவிதபாவனையொழிந்து அத்துவித பாவனை செய்யக்கடவன். "தேவனென்றோ, இராஜனென்றோ, நானே யிதெல்லாம் என்றோ தியானிக்குங்கால், அவன் ஆசை துறந்தவனும், அபகத பாப்மத்துவகுணமுடையனும், பயமிலனுமாகின்றான். அவன் மனைவியினால் ஆலிங்கனஞ் செய்யப்பட்டவிடத்தும் யாதும் அறியானும், (அருள்) ஞான பரமான்மாவினாற்றழுவப்பட்டு, உள்ளும் புறம்பும் அறியாது நிற்கின்றனன் (எனவே, பரமானந்தமடைந்து நிற்கின்றனன்)" என்று (பிரு. ௬. க. ௨௧) ற் கூறப்படுகின்றது.

ஹிரெ தெஹெ ஶிவொ ஸ-ூகா ஶிவயூ-ஞஸ்ஙிதஃ|
ஶிவா நஂத நுவ்ராவு அவிஜாகாய கஜவெத|

(௨௬௭) "பின்னமாகிய தேகத்திலே சிவகுணங்களோடியைந்து சிவனுகிச் சிவானந்தம் அநுபவித்து வேறுபடாதிருக்கின்றனன்" என இரௌரவாகமத்தினுங் கூறப்பட்டிருக்கின்றது. பரமான்மாவைக் (குருப் பிரசாதத்தினாற்) கண்டு, கேட்டு, நினைந்து, அறிந்தால் இஃதெல்லாம் அறியப்பட்டதாயிற்று என (பிரு. ௬. ரு. ௬) பிரமபாவனை கூறி, சைந்தவ வுப்புக்கட்டியானது உள்ளும் புறமுமின்றி எல்லாம் இரசகனமாயிருத்தல் போல, இந்தப் பரமான்மாவும் உள்ளும் புறம்புமாகியவெல்லாம் (அருண்) ஞானகனமாயிருக்கின்றதென்று (பிரு. ௬. ரு. ௧௩) னும்,

அவிநாஶீ வா அரெ அயமாத்மா அநுஜிதிய-ஞா|

(௨௬௮) "இந்தப் பரமான்மா நாசமிலாததும் சேதிக்கப்படாதது மாகிய குணத்தையுடையது" என்று (பிரு. ௬. ரு. ௧௪) னும், "அங்கே துவிதமாயிருந்தாலன்றோ ஒருவன் ஒன்றைப் பார்ப்பதும், ஒருவன் ஒன்றை மணப்பதும், ஒருவன் ஒன்றை உருசிப்பதும், ஒருவன் மற்றொருவனை வாழ்த்துவதும் பிறவும் நிகழும்; அவன் பிரமபாவனையினால் எல்லாம் பிரமமாய் இருக்குங்கால், அவன் மற்றொன்றைப் பார்ப்பதெங்ஙனம்! மணப்பதெங்ஙனம்! உருசிப்பதெங்ஙனம்! வாழ்த்துவதெங்ஙனம்! கேட்பதெங்ஙனம்! பரிசிப்பதெங்ஙனம்! அறிவதெங்ஙனம்!" என்று (பிரு. ௬. ரு. ௧௬) னுங் கூறியதூஉம் அப்பரமானந்தநிலைபற்றியேயாம். மேலும், பிரமபாவனை (தைத். க. ௧௦. ச, ௫, ௬) னும், (முண். க. ௧. ௨, ௩) னுங் கூறப்பட்டிருக்கின்றது.

ஶிவொ ஶுஜாஹ ஜெவாநஂ வூயஹாவ விஜஷயெஜ| யஶ்ஶு வெொஹஜெவெதி ஐமெஷக ஹாவயெஜா

(௨௬௬) "இவன் வேறு தான் வேறு என்னுந் துவிதபாவனை யொழிந்து சிவமே நான் என்னும் அத்துவிதபாவனையை எப்போதும் பயில்க" என்று சர்வஞ்ஞானோத்தரங் கூறியதூஉம் மேலே கூறிய சுருதிப் பொருளையேயாம்; இந்தச் சிவானந்தநிலையில் நிற்பவன் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் பார்ப்பதில்லை என்றதற்றொடக்கத்தனவும் ஆனந்த மேலீட்டினால் அவன் மனசு பிற விஷயம்பற்றிக் கவரப்படாதென்பதை உணர்த்தின. பெத்தாவஸ்தையில் ஆன்மாவேனும், மற்றைச் சடப்பொருளேனும் அறிவித்தால் அறிவதுங் காட்டினாற் காண்பதும், இயக்கினால் இயங்குவனவுமாயிருத்தலால், அறிபவரும், காட்டுபவரும், இயக்குபவரும் பரப்பிரமசிவனார் என்று பிருகதாரணியத்து அந்தரியாமிப்பிராம்மணங் கூறிற்று.

ஏஷ ஹ்யேவாநந்தயாதி|

(௨௭௦) "இவரே ஆனந்தத்தை விளைவிக்கின்றாரன்றோ" என்று (தைத். ௨. ௭) னும்,

ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி|

(௨௭௧) "இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றனன்" என்று (தைத். ௨. ௭) னும்,

ப்ரஹ்மரஸம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா|

(௨௭௨) "பிரமானந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றனன்; மற்றோர் பிரகாரத்தால் அன்று" என்று சிவாகமத்திலுங் கூறப்பட்டது. இங்ஙனம் சர்வஞ்ஞாதி குணங்களையுடையவனாய் விளங்குதலே சிவத்துவம் எனப்படும்.

வித்யயா தஸ்ய நாசேந ஸ்வஸாம்யம் யாதி நாந்யதா|
அத ஸாம்யம் தயோ ஸாக்ஷாத் ஐக்யம் சைவ து கேவலம்|

(௨௭௩) "வித்தையினாலே அவித்தை நீங்கியவிடத்துத் தானே சித்தித்த ஐக்கியமே சிவேசுரர்க்கு எய்துகின்றது; அதுதான் சாமியம் என்று பிரமகீதையிற் புகுத்திய சுலோகமும், அதன் தாற்பரிய தீபிகையும், ஏகான்மவாதிகளார் (முண். ௩. க. ௩)ற் பொறித்த உரையும் கற்பனைகளாம் என்பது பின்வரும் பிரமாணங்களாற் சித்திக்கின்றது.

ஸர்வஜ்ஞதா த்ருப்தி ரநாதிபோத: ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்தசக்தி:|
அநந்தசக்திஸ்ச நிராமயாத்மா விசுத்ததேஹஸ்ஸ ஸிவஸ்ய ஏதி|

(உஎ௪) "முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களினீங்குதல், தன்வயமுடைமை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, இயற்கையுணர்வினனாதல், தூயதேகமுடையனாதல் (என்னும் எண்குணங்களை) அடைபவன் சிவத்துவத்தைப் பெறுகின்றான்" என்று சர்வஞ்ஞானோத்தரம் கூறுகின்றது.

[illegible]

(உஎ௫) "சிவபெருமானிலிருந்து அக்குணமனைத்தும் அப்போது ஆன்மாவிற் சங்கிரமிக்கின்றன; புண்ணியபுருஷசம்பர்க்கத்தினாற் புண்ணியங்கள் ஒருவனுக்கு எய்துமாறு போல என்றற்றொடக்கத்தவற்றால் வெளிப்படை; அங்ஙனமே சிவபெருமானைப் போல முக்தராயினோரும் சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடையராகின்றனர்; இங்ஙனம் குணங்கள் ஆன்மாவிற் சங்கிரமிக்கும் என்னும் சாமியபக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தசேகரத்திலும்,

[illegible]

(உஎ௬) "எவனுக்கு இந்த நாற்பது சம்ஸ்காரங்களும் பரமான்மாவின் (சர்வஞ்ஞதாதி) எண் குணங்களும் எய்துகின்றனவோ, அவன் பிரமத்தின் சாயுச்சியத்தை அடைகின்றனன்" என்று கௌதமசூத்திரத்து எட்டாவது கண்டத்திலும்

(உஎஎ) [illegible] என்று (அக். அஅ. சசு)ம் சுலோகத்துக்குப் பின்னும்,

(உஎஅ) [illegible]

அஜ—வூ௱ஷ்ஙிம் ஷூா தஜூ) உநஜாம ஶூதிஶேவ ஷ என்று (வாயு. உத். கஏ. கoக, கoஉ) னும் உணர்த்தப்பட்டவாறு

ஆன்மாவிலே சர்வஞ்ஞதைமுதலிய சிவகுணங்கள் பதிதலே சாமியம் என்பது போதர

உ—கூ ஶிவஸஶோ ஹவெக॥

(உஎகூ) "முக்தன் சிவசமமாகின்றான்" என்று (வாயு. பூ. உ. எசு. னும், உ அ. உஉ) னும்,

ஸாஜூ்ஶிவஸோ நதா॥

(உஅ0) "சாதிக்கப்பட்டது சிவசாமியம்" என்று (வாயு. உத். கக. கஉ0) னும்,

(உஅக) ஸூஷூ்ரா ஞு ஷ நியொஜூ் தத்ர வரயா ஶிஷூஸ்ூ ஷிஅூ்திகாம ஸவஜ்ஞஶ—தூ்வஜூ் நாஷிகஶதி ஷூா தஜூ) ஸஜ்ஞாதி அ॥ ஶூிம் வு—ிதீ—ஶதீஶநக விஷயாம ஷட்கம் மு—ணாநாம தத ஞூாவா ஜூாநஜூத ஶிவெந ஸஷூஶம ஶிஷெூ் தஷா யொஜயெக॥

என்று சித்தாந்தசாராவளியினுங் கூறப்படுகின்றது. இந்தச் சிவத்துவத்தை உபநிடதங்கள் அமிர்தத்துவம் என்று வழங்குகின்றன.

அஶூதக்வம் ஹி விஂஷதெ॥

(உஅஉ) "சிவத்துவத்தைத் திளைக்கின்றனன்" என்று (கேந. கஉ) னும்,

ஐூஹஸஂஷூா ஶூதக்வ ஶதி॥

(உஅ௩) "பிரமத்திலே (சிவோஹம்பாவனையினால்) நிறீஇ நின்றோனே சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சாங். உ. உ௩. க) னும்,

தயொூ—ஶாயஜூஶூதக்வஶதி॥

(உஅச) "(தலைநாடிவாயிலாக) மேலே போய்ச் சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சாங். அ. சு. சு. னும் கட. சு. கசு) னும்,

அஶூதக்வஸூ் தூ நாஶாஷூி விதெூந॥

(உஅரு) "செல்வத்தினாற் சிவத்துவம் எய்தும் என்னும் நம்பிக்கை இல்லை" என்று (பிருகதா. உ. அம், ௪. ரு. ௩) னும்,

உபநிடத உபக்கிரமணிகை.

ஊதாவதிரெ வஷீ௱தகவு |

(உஅசு) "இவ்வளவுதான் சிவத்துவம்" என்று (பிரு. ௬. ௫. ௧௫) உம்

ஷுமு-ம்ெரொகா ஊஷீ௱தகவு௦ ஹஜெஷ |

(உஅஎ) "சுவர்க்கலோகத்துள்ளார் (சிவலோகத்துள்ளார்) சிவத்துவத்தை அடைகின்றனர்" என்று (கட. க. கநு) உம்,

ஊய யீாா ஊஷீ௱தகவு௦ விஷிகூா |

(உஅஅ) "வித்துவான்கள் சிவத்துவத்தை அநுபவித்து" என்று (கட. ச. உ) உம்,

ஊஷீ௱தகவுஷ மஹுதி |

(உஅகூ) "சிவத்துவத்தையும் அடைகின்றனன்" என்று (கட. ௬. அ) உம்,

ஊஷீ௱தகவுெஷதி |

(உகூ௦) "சிவத்துவத்தை அடைகின்றனன்" என்று (சுவே. ௬. ௬) உம் கூறப்பட்டிருத்தலான் வேதாந்தாகமாந்தங்களெல்லாம் ஒரே பொருட்பட நின்றவாறு தெள்ளிது.

இங்ஙனம் சிவத்துவம் அடையும் வித்துவானுக்குத் தலைநாடிவாயிலாக உற்கிரமணமுஞ் சிவலோகப் பிராப்தியும் உளவாம்.

(உகூக) "இதயத்துள்ள நூற்றோர் நாடிகளுள்ளே ஒன்று தலைவாயிலாகப் போந்தது. இந்நாடிவாயிலாக (மரணகாலத்தில்) உற்கிரமணஞ் செய்வோன் மேலுலகத்தை (பிரமலோகத்தை) அடைந்து சிவத்துவம் எய்துகின்றனன். மற்றைய நாடிகள் மற்றைய உலகங்களைப் பிறர் (அவித்துவான்கள்) அடைதற்கு உதவாநின்றன" என்று (சாந். அ. ௬. ௫) உம், (கட. ௬. க௬) உங் காணப்படுகின்றது. படவே, வித்துவான் சிரநாடிவாயிலாகவும், அவித்துவான் மற்றைய நாடிகள்வாயிலாகவும் உற்கிரமிக்கின்றனர் என்றாயிற்று. இங்ஙனம் புறப்படுவார்க்கு உத்தராயணமார்க்கம் தக்ஷிணாயனமார்க்கம் என இரண்டு கூறப்படுகின்றது. உத்தராயணமார்க்கமானது அர்ச்சிராதிமார்க்கம் எனவும், ஒளிமார்க்கம் எனவும், தேவயானம் எனவும், தக்ஷிணாயனமார்க்கமானது தூமமார்க்கம் எனவும் படும். பஞ்சாக்கினிவித்தை அறிந்தவர்களும், வனத்திலிருந்து பத்திஞானம்வாயிலாக உபாசிப்பவர்களும் ஒளியை அடைந்து, இதிலிருந்து பகலை அடைந்து,

இதிலிருந்து பூருவபக்கம் அடைந்து, இதிலிருந்து உத்தராயணமடைந்து, இதிலிருந்து தேவலோகத்தை அடைந்து, இதிலிருந்து ஆதித்தியலோகத்தை அடைந்து, இதிலிருந்து மின்னலை அடைய, அங்கே ஓர் அமானவன் வந்து அவர்களைப் பிரமலோகத்துக்கு நடாத்தச் சென்று அங்கே போய்ப் பெரியோராய் நீடு வசிக்கின்றனர்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை (மீளுதல் இல்லை) என்றும், வேள்விகளாலும், தானங்களாலும், தபசுகளாலும், உலகத்தை வெல்வோர் தூமமார்க்கம்வாயிலாகப் போய்ச் சந்திரனை அடைகின்றனர் என்றும், அங்கே கன்மம் புசித்து எஞ்சிய கன்மத்தோடு அங்கிருந்து பின்னர்ப் பூமிக்கு மீளுவார் என்றும், இவ்விரு மார்க்கமும் அறியாதோர் பறவை புழு முதலியவைகளாய்ச் செனிப்பார் என்றும் (பிரு. ௮. ௨. ௧௫, ௧௬. ஆம், சாந். ரு. ௧௦. ௧—௮. ஆம், கௌஷீ. ௧. ௨. ௩) ஆங் கூறப்பட்டிருக்கின்றது.

(௨௯௨) உபகோசலவித்தை கூறியவிடத்துத் தேவயானம் (ஒளிமார்க்கம்) வாயிலாகப் பிரம (லோக)த்தை அடைந்து, மீளத் திரும்புவானல்லன் என ஒளிமார்க்கமாத்திரம் (சாந். ௪. ௧௫. ௫—௬) ற் கூறப்பட்டுள்ளது.

(௨௯௩) உத்தரம் தக்ஷிணம் என்னும் இரு மார்க்கங்களையும் சுருக்கிச் சூசித்து, "ஆன்மாவை நாடினோர் சிவனோர் (அமிர்தர்) லோகத்தை அடைந்து மீளத் திரும்புவாரல்லர்" என்று (பிர. ௧. ௧௦) ற் கூறப்பட்டிருக்கின்றது.

(௨௯௪) இங்ஙனமாக, வித்துவான் ஆப்தகாமனாயாவது, அகாமனாயாவது, நிஷ்காமனாயாவது, பிரம (சிவ) பாவனையினாற் பரமசாமியம் அடைந்து (முண். ௩. ௧. ௩), மரணகாலத்திலே தன் ஆன்மாவைப் பிராணன்களெல்லாம் பிரியாது சூழும, தனது உடற்கணுள்ள நூற்றோர் நாடிகளுட் சிறந்த தலைநாடிவாயிலாகப் புறப்பட்டுத் தேவயானம் எனப்படும் உத்தராயணமார்க்கமாகப் போய்ப் பிரமலோகத்தை அடைந்து, புநராவர்த்தியின்றிப் பிரமானந்தத்தோடு சமஸ்த போகங்களையும் துய்த்து நீடு வசிக்கின்றனன் என்பதே எல்லா முக்கிய உபநிடதங்களின் கருத்து. ஈண்டு ஆன்மா போக்கு மீட்சியின்றி இலயமடைவதாக முக்கிய உபநிடதங்களில் ஓர் பிரமாணத் துணுக்கை வாக்கியமேனும் இல்லை.

(௨௯௫) சிரத்துத் தலைநாடிவாயிலாகச் செல்பவன் (வித்துவான் சிவலோகத்தை அடைந்து) அமிர்தத்துவத்தை அடைகின்றனன் என்றும், மற்றவர்கள் (அவித்துவான்கள்) கந்தருவலோக முதலியவைகளுக்கு மற்றைய நாடிகள்வாயிலாகச் செல்கின்றனர் என்றும் (கட. ௬. ௧௬) ற் கூறப்படுகின்றது.

(உகசு) தன் இதயத்துள்ள ஆசைகளெல்லாம் நீங்கப்பெற்று நிஷ்காமனுயுள்ள மனிதன் (வித்துவான்) அமிர்தனுகிப் பிரமத்தைப் பேரயடைகின்றனன் என்று (கட. சு. கச) கூறுகின்றது; பிரமத்தை அடைகின்றனன் என்றமையால், அவன் சென்ற மார்க்கம் தேவயானம் (உத்தராயணம்) என்றும், ஆசையறுத வித்துவான்கள் சென்ற மார்க்கந் தக்ஷிணுயனம் என்றும் பெறப்படுகின்றது.

(உகள) "வித்துவான் புண்ணியபாவமொழிந்து நிரஞ்சனுய் (மலமிலனுய்) பரமசாமியத்தை (சிவசாமியத்தை) அடைகின்றனன்" என்று (முண். ங. க. ங) ற் கூறி, "மெய்ப்பொருளால் விரிக்கப்பட்டது தேவயானம் என்றும், ஆப்தகாமர்களாகிய (ஆசைகளில் இனிப்பற்று வேண்டாம் என்று திருப்தி பூண்டவர்களாகிய) இருடிகள் இந்தத் தேவயானம்வாயிலாக அந்த மெய்ப்பொருளாகிய சிவபெருமானது (பரமாகாய) உலகத்தை அடைகின்றனர் என்றும் (முண். ங. க. சு) ற் கூறப்படுகின்றது. இதனுற் சிவபாவனை செய்து சிவப்பிரமத்தினுற் தேவயானம்வாயிலாக ஆப்தகாமர்களாகிய இருடிகள் (வித்துவான்கள்) சிவலோகத்தை அடைகின்றனர் என்று பெறப்படுகின்றது.

(உகஅ) ஜனகவைதேகர் என்பார் யாஞ்ஞவற்கியரை நோக்கி மோக்ஷத்தின்பொருட்டுக் கூறல் வேண்டுமென்று (பிரு. சு. ங. கஙு) ல் வேண்ட, யாஞ்ஞவற்கியர் கேவல சகலாவஸ்தைகளை (பிரு. சு. ங. கஅ, ககூ) ல் உணர்த்தி, பிரமாஹம்பாவனை செய்யுமியல்பை (பிரு. சு. ங. உ0) ற் கூறி, (பிரு. சு. ங. உக) ற் சிவோஹம்பாவனை செய்வோனுக்குச் (சாந். அ. க. ங) ற் கூறப்பட்ட சர்வஞ்ஞதாதி குணங்களை உணர்த்தும் அபகதபாப்மத்துவாதி எண் குணங்களும் ஆன்மாவிற் பரமசாமியமாய் விளங்குதல் சிவானந்த மிகுதிக்கு வேண்டப்படும் என்பதுணர்த்த அவ்வெண்குணங்களுள் முதற்கணின்ற அபகதபாப்மத்துவத்தை (சர்வஞ்ஞதையை) உணர்த்தி, அந்த ஆனந்தமேலீட்டினுல் மனைவி முதலாயினோர் தழுவினும் அவன் அதனை அறியமாட்டான், இவன் ஆப்தகாமனுய், ஆன்மகாமனுய் (பரமான்மாவிற் பற்றுடையனுய்), அகாமனுய் (வேறு பற்றிலனுய்), சோகமிலனுய் இருப்பனென்றுரைத்து, பின்னரும் அந்தச் சிவமுக்தனுடைய (சுத்தாவஸ்தை) நிலையைப் பலபிரகாரம் (பிரு. சு. ங. உஉ—ங௦) விரையும் உணர்த்தி, அவனது ஆனந்தம் புலன்வழி ஆனந்தத்தினும் சிறந்த பரமானந்தமாம் என்று (பிரு. சு. ங. ஙங) ற் கூறி, மரணகாலத்தில்

ஸ்வெ–த் ப்ராணா உத்க்ரமந்தி
ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்யேதி |

(உகூகூ) "பிராணன்களெல்லாம் அவன் ஆன்மாவைச் சூழ்ந்திருக்கின்றன, அவன் ஊர்த்துவமாக உச்சுவாசஞ் செய்பவனுகின்றனன்" என்று (பிரு. சு. ங. ஙஅ)ல் விளக்கினர். இதனுற் பிரமபாவனை செய்து பிரமானந்தமடைந்த வித்துவான் ஆப்தகாமனுய், அகாமனுய், ஆன்மகாமனுயிருப்பான் என்றும், மரணகாலத்தில் அவன் பிராணன்கள் அவன் ஆன்மாவைச் சூழ்ந்திருப்ப, அவன் உயிர் உற்கிரமணஞ் செய்கின்றதென்றும் பெறப்படுகின்றது.

(ங00) (அவித்துவான் விஷயநோக்கி) (பிரு. சு. ச. சு) ற் கூறுமிடத்து, எதிலே ஒருவனுக்கு மனசு பதிந்ததோ, அதனையே தொடர்ந்து அவன் செய்கின்றனன் என்றும், அந்த உலகத்திலே தனது கன்மபயன் அநுபவித்து, சேஷித்து நின்ற கன்மத்தோடு இந்தக் கன்ம பூமிக்கு மீளுகின்றனன் என்றும், இதுதான் பற்றுடையானது (அவித்துவானது) இயற்கை என்றும் (பிரு. சு. ச. சு) ல் முற்பாதி மந்திரம் உணர்த்திற்று; எனவும்

(ங0க) ஆசை நீங்காத வித்துவான் சரீரத்தை விடுத்து மற்றோர் பிதிரர்வடிவத்தையோ, கந்தருவர்வடிவத்தையோ, தேவவடிவத்தையோ, பிரஜாபதிவடிவத்தையோ, பிறர் வடிவத்தையோ எடுப்பன் என்று அம் மந்திரம் உணர்த்திற்றெனவும், அதனுல் அவன் சென்ற மார்க்கந் தக்ஷிணமார்க்கம் எனவும் பெறப்படும்.

(ங0உ) வித்துவான் இலக்ஷணங் கூறப்போந்து (பிரு. சு. ச. சு) ற் பிற்பாதி மந்திரம் (வித்துவானுவான்) அகாமனுய், நிஷ்காமனுய், ஆப்தகாமனுய், ஆன்மகாமனுய் உள்ளவனென்றும், "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்றும், பிரமமாகிப் (பிரமசாமியமுற்று) பிரமத்தைப்போய் அடைகின்றனன்" என்றுங் கூறுகின்றது. (பிரு. சு. ங. உக. லும், முண். ங. க. ங, சு. லும், கட. சு. கச) லும் பிரமபாவனையுற்ற வித்துவானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்ட ஆப்தகாமத்துவம், அகாமத்துவம், ஆன்மகாமத்துவம் என்னும் குணங்களுக்கும், ஈண்டு (பிரு. சு. ச. சு) ற் பிற்பாதி மந்திரத்திற் பிரமபாவனையினுற் பிரமசாமியமுற்ற வித்துவானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்ட ஆப்தகாமத்துவம், அகாமத்துவம், நிஷ்காமத்துவம், ஆன்மகாமத்துவமுதலிய குணங்களுக்கும் பேதமேதுமில்லை.

(ங0ங) (கட. சு. கசு) ல் தலைநாடிவாயிலாகச் செல்லும் வித்துவானுக்கு இலக்ஷணமாகக் (கட. சு. கச) ற் கூறப்பட்ட மந்திரமே ஈண்டு (பிரு. சு. ச. எ) லுமுள்ளது. அவ்வித்துவான்கள் செல்லும் தேவயானமும், அது பிரமத்திலாக்கப்பட்டமையும், தேவயானம்வாயிலாக அடையப்படும் பரமபதானமும் (சிவலோகமும்) கூறும் (முண். ங. க. சு) ற் காணப்படும் மந்

திரப் பொருள்களே ஈண்டு (பிரு. ங. ச. அ, க) லுங் காணப்படுகின்றன. (பிரு. ங. ட. ட அ) ல் தலைநாடிவாயிலாக, ஊர்த்துவகவாசஞ் செய்து போகும் வித்துவானுடைய ஆன்மாவைப் பிராணன்கள் சூழ்ந்து குழு மிக்கிடக்கின்றன என்னும் பொருளே (பிரு. ங. ச. ங) ல்

ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி।

(டoச) "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்றதற்கும் பொருளாம்.

தேவோ பூத்வா தேவா நப்யேதி।

(தேவோ பூத்வா தேவா நப்யேதி. பிரு. ங. க. ட) என்றவிடத்து,

(டoரு) "தேவனுகித் தேவர்களைப் போயடைகின்றனன்" என (பிரு. ங. க. ட) ல் அப்யேதி என்றதற்குப் போயடைகின்றனன் என்று கூறிய பொருளே, ஈண்டு

ப்ரஹ்மாப்யேதி।

(பிரம்மாப்யேதி. பிரு. ங. ச. ங) என்றவிடத்து,

(டoங) "பிரமத்தைப் போயடைகின்றனன்" என (பிரு. ங. ச. ங)ல் "அப்யேதி" என்றதற்கும் எய்தும் பொருளாம். (அப்யேதி) "அப்யேதி" என்னும் பரஸ்மைபதமானது இடப்பெயர்ச்சியை உணர்த்திற்று. உணர்த்தவே, அது மற்றோர் உலகத்தை அடைதலின் மேற்றுமன்றி இங்கே போக்கு மீட்சியின்றி இலயமடைதலை ஒர்காலும் உணர்த்துமாறின்றாம்.

யோ ऽகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி।

(டoஎ) எவன் அகாமனாய், நிஷ்காமனாய், ஆப்தகாமனாய், ஆன்மகாமனாய் இருக்கின்றானோ, அவனை விட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்று மத்தியந்தினசாகாமந்திரம் கூறலான், (டoச-ம் இலக்க) மந்திரமானது அவனுடைய ஆன்மாவைப் பிராணன்கள் சூழ்ந்துகிடக்கின்றன என்னும் இந்த (பிரு. ங. ட. ட அ) ம் மந்திரம் கூறும் பொருளையே தழுவி நின்றது. ஈண்டு (பிரு. ங. ச. ங) ல் ஆறும் வேற்றுமையிற் கூறப்பட்ட (தஸ்ய) "தஸ்ய" (அவனுக்கு) எனப் பொருள்படும் பதத்துக்கு அவனை விட்டு (தஸ்மாத்) "தஸ்மாத்" என்று பொருள் கொள்ள வேண்டுமென்று அம்மத்தியந்தினசாகாமந்திரம் வெளிப்படையாய் விளக்கிக் காட்டிற்று.

(௲௦அ) (பிரு. ௩. ௪. ௬)ன் முற்பாதி மந்திரம் அவித்துவான் விஷயமும், (பிரு. ௩. ௪. எ-ம், அ-ம், ௯-ம்) மந்திரங்கள் (கடம், முண்டகம், சாந்தோக்கிய முதலியவற்றிற் காணப்படும்) வித்துவான் விஷயமுமாகப் போதர, இவ்விரு விஷயத்துக்கும் நடுவே மற்றோர் மகாவித்துவானைக் கண்டு பிடித்து, அவன் அங்கே போக்கு மீட்சியின்றி இலயமடைந்தான் என்றமை விந்தையினும் விந்தையே!!! ஈண்டுப் பிராணன்கள் என்றது வாயுக்களின் மேற்றன்றி ஆன்மாக்களின்மேற்றன்று; ஒருவனுக்கு ஆன்மா ஒன்றேயாதலின். பிராணன்கள் பிரிந்தால் என்! பிரியாதிருந்தாலென் !! சீவான்மா இங்கே இலயமடைவதாக வேதாந்த சூத்திரங்களுக்கு ஆதாரமாய் நின்ற இந்த முக்கிய உபநிடதங்களுள்ளே பிரமாணம் காட்டினாலன்றோ ஏகான்மவாதியார் பக்கம் செயம் பெறும்!!! ஏகான்மவாத உபநிடதங்களும் பிரமகீதை முதலியவற்றின் கற்பனா சுலோகங்களும் பிரமாணமாக அங்கீகரிக்கப்படமாட்டா.

(௲௦௯) (பிரு. ௩. ௨. ௧௦) ம் மந்திரத்திலே ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "ஒவ்வொன்றும் மரணத்துக்கு உணவாயிருக்கின்றனவே, மரணம் எந்தத் தெய்வத்துக்கு உணவாகின்றது? என, யாஞ்ஞவற்கியர் (மரணம்) அக்கினிக்கு உணவாகும்; அது சலத்துக்கு உணவாகும் என்றனர், பின் மரணஞ் செயிக்கப்பட்டது."

(௲௧௦) (பிரு. ௩. ௨. ௧௧) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "இந்த மனிதன் இறக்கும்போது பிராணன்கள் அவனை விட்டுப் புறத்தே போகின்றனவா? இல்லையா?" என,

யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச யத்ராயம் புருஷோ ம்ரியத உதஸ்மாத்ப்ராணா: க்ராமந்த்யாஹோ நேதி

(௲௧௧) "யாஞ்ஞவற்கியர் அந்தப் பிராணன்கள் இவனிலே குழுமுகின்றன; அவன் வீங்கி உப்பிச் செத்துக்கிடக்கின்றனன்" என்றனர்.

(௲௧௨) பின்னர் (பிரு. ௩. ௨. ௧௨) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் "அப்படிப்பட்ட மனிதன் இறக்குங்கால் அவனை யாது விட்டுப் பிரிவதில்லை" என, "அவன் நாமம் அழிவதில்லை" என்றும், "அந்த நாமமும் முடிவில்லாதது" என்றும், "விசுவதேவர் முடிவில்லாதோர்" என்றும், "அதனால் அவன் அளவிறந்த உலகத்தை அடைகின்றனன்" என்றும் கூறினர்.

(௲௧௩) பின் (பிரு. ௩. ௨. ௧௩) ம் மந்திரத்தில் ஆர்த்தபாகர் யாஞ்ஞவற்கியரை நோக்கி, "இந்தப் புருஷன் செத்தபோது அவனது வாக்கு

அக்கினியையும், பிராணன் வாயுவையும், கண் சூரியனையும், மனசு சந்திரனையும், சுரோத்திரம் திக்குகளையும், சரீரம் பிருதிவியையும், இருதயம் ஆகாயத்தையும், சரீரத்து உரோமங்கள் ஒஷதிகளையும், தலை உரோமங்கள் விருக்ஷங்களையும், இரத்தமும் இரேதசும் சலத்தையும் அடையுமாயின், அந்த மனிதன் எதனைப் பற்றுகின்றனன்" என, அதற்கு யாஞ்ஞவற்கியர் "சௌமிய! எனது கையைப் பற்று; நாங்கள் இருவர்மாத்திரமே இதனைப்பற்றி அறியக்கடவேம்; இந்த வினு யாரும் அறிய வாதிக்கப்படுவதன்று" எனக் கூறி, "இருவரும் புறத்தே போய் வாதித்தனர்; வாதித்து நற்கருமத்தினுற் புண்ணியமும், தீக்கருமத்தினுற் பாவமும் எய்தும் எனக் கர்மத்தையே விதந்து பேசினர்; அதன் பின் ஆர்த்தபாகர் பேசாதிருந்தனர்" எனக் கூறப்பட்டிருக்கின்றது. ஈண்டு ஆர்த்தபாகர் வினுவியது அவித்துவத்விஷயமே. ஈண்டுக் கூறப்பட்ட வினுக்களினும் விடைகளினும் ஒன்றுயினும் பிரமவித்தியாவிஷயத்தைப்பற்றியதின்று. வினுவிடைகளைப்பற்றிய விஷயங்கள் கிரஹம் அதிக்கிரஹமாகக் கொள்ளப்படும் இந்திரிய விஷயங்களின் இயற்கையும், சலம் அக்கினிக்கு உணவாதலும், மரணகாலத்திற் பிராணன்கள் ஆன்மாவைவிட்டுப் பிரியாமையும், செத்தவன் நாமத்தின் அறுவிருத்தியும், புண்ணியபாவங்களுக்கியைவாயுள்ள கதிப்பிராப்தியுமாம். ஆகலின், பிராணன்கள் பிரிவதில்லை என்றதற்குப் போக்குமீட்சியில்லாத முத்தி எனப் பொருட்படுத்தல் எவ்வாற்றுனும் ஒவ்வா வெற்றுரை என்று மறுக்க.

II வித்துவான் அடையும் புநராவர்த்தி கொடாத உலகம் பிரமலோகமாம் (சிவலோகமாம்). ஆகவே,

(௩௧௪) பிரமலோகம்

என்று (சாங். அ. ச. ௩) னும், (பிரு. அ. உ. கரு) னும்,
(,, அ. கரு. க) னும், (முண். ௩. உ. ௬) னும்,
(பிரு. ௬. ௩. ௩௩) னும், (பிர. க. கரு) னும்,
(,, ௫. ௰. க) னும், (,, ரு. ரு) னும்,

(௩௧௫) சுவர்க்கலோகம்

என்று (பிரு. ௬. ௪. அ) னும், (ஐத. ௫. ச) னும்,
அதர்வசிகையினும், (கேந. ௩௪) னும்,
(ஐத. ச. ௬) னும், (கட. க. கஉ) னும்,

(௩௧௬) பிரமதாமம்

என்று (முண். ௩. உ. க) னும், (முண். ௩. உ. ச) னும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த உபநிடதங்களிலே வித்துவானுல் அடையப்படும்

பிரமலோகம், சுவர்க்கலோகம் எனக் கூறப்படும் பரமஸ்தானம் சிவலோக மேயாம். இதனையே,

ததூர்த்வம் உந்மநாலோகாத் ஸோமலோக: ஸ கத்யதே| ஸோம: ஸஹோமயா யத்ர நித்யம் நிவஸதீஶ்வர:| ததூர்த்வம் உந்மநாலோகாந் நித்யம் ப்ராப்தோ ந நிவர்த்ததே (வாயு. உத். ௨௭. ௧௨, ௧௩)

(௩௧௭) உன்மனா உலகத்துக்கு மேலுள்ளது அலௌகிகமாகிய சோமலோகம்; உமையோடிசைந்த சோமர் எனப்படும் சிவபெருமான் அந்தச் சோமலோகத்தில் எக்காலமும் வசிக்கின்றனர்; உன்மனா உலகத்துக்கு மேலுள்ள இந்தச் சோமலோகத்தை அடைந்தவன் மீளப் பிறவியிற் செல்வானல்லன்" என்று வாயுசங்கிதோபப்பிருங்கணங் கூறிற்று. அச்சிவலோகத்தை அடைந்து திவ்ய மகாமாயோற்பன்னமாய, ஸ்திரமாய அங்கங்களோடு சரிக்கின்ற சீவன்முக்தர்கள் பிரமானந்தத்தோடு சமஸ்த திவ்ய போகங்களையும் அடைகின்றனர்" என்று (தைத். ௨. ௧)னும், "ஸ்திரீகளோடாயினும், யானங்களோடாயினும், ஞாதிகளோடாயினும் உண்டு ஆடிக் களிக்கின்றனன்" என்று (சாங். ௮. ௧௨. ௩) னும், "ஞானத்தினாலே இந்தப் போகங்களைக் கண்டு இரமிக்கின்றான்; அவனுக்கு ஞானமே திவ்ய கண்" என்றும், "பிரமத்தை உபாசித்தவனுக்கு உலகமனைத்தும் போகமனைத்தும் எய்துகின்றன" என்றும் (சாங். ௮. ௧௨. ௫) னுங் கூறப்பட்டிருக்கின்றது. கார்க்கிப்பிராம்மணத்திற் பிரமலோகம் என்றதைப் பிரமலோகங்கள் என்று பன்மையாற் கூறியது அச்சிவலோகத்தில் அநாசிருதைமுதலிய பற்பல திவ்ய புவனங்களுண்மையான்.

ஏகான்மவாதிகள் ஈசகேநாதி முக்கிய உபநிடதங்களுள்ளே அத்துவித வாக்கியங்களும் (அபேதசுருதிகளும்), துவிதவாக்கியங்களும் (பேதசுருதிகளும்) இருக்கின்றன என்றும்,

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் (சாங். ௬. ௨. ௧)

(௩௧௮) "சௌமிய, சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது" எனவும்,

ஏகமேவாத்விதீயம் (சாங். ௬. ௨. ௧)

(௩௧௯) "ஏகமே அத்துவிதீயமாயுள்ளது" எனவும் போந்த வாக்கியங்கள் அத்துவித சுருதிகளென்றும்,

யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் (பிரு. ௫. ௭. ௩)
யஸ்யாத்மா ஶரீரம் (மத்தியந்தினசாகை)

(௱௨௰) "எவருக்குப் பிருதிவி சரீரமோ," "எவருக்கு ஆன்மா சரீரமோ" என்றற்றொடக்கத்தன துவித சுருதிகள் என்றும், (௱௧௮-ம், ௱௧௯-ம் இலக்க) வாக்கியங்களை ஆதாரமாய்க்கொண்டு ஏகான்மவாதியார் பாடியஞ் செய்தனர் என்றும், (௱௨௰-ம் இலக்க) வாக்கியங்களை ஆதார மாய்க் கொண்டு விண்டுமதாசாரியர் விசிட்டாத்துவிதபாடியஞ் செய் தனர் என்றும் கூறுவர். (௱௧௮-ம் இலக்கத்து) சத்து என்னும் சப்தத்தின் பொருள் சுத்தியும் சிவமுமாம் என்று (௩௮-ம் இலக்கத்தில்) பிரமாணங் காட்டப்பட்டிருத்தலின், அந்தச் சுத்பதம் அடங்கிய சுருதி நிர்விசேடப் பிரமத்தை உணர்த்தாது சத்தி விசிஷ்ட சிவபெருமானையே உணர்த்திற்று. (௱௧௯-ம் இலக்கத்து) ஏகம் என்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம். அதற்குத் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்றே, இரண்டில்லை; என்பதாம்.

இங்ஙனம் ஏகம் என்று சொல்கின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாகிய பசுவாம். பதியுஞ் சேதனமாக, யானுஞ் சேதனமாக என்னைப் பசுவென்ற தென்னையெனின், நீ மலத்தோடு கட்டுண்டுநின்றமையாற் பசு எனப்பட் டாய்; அதை,

(௱௨௧) ஏகமேயெனுமிருக்கெனினிருக்கினுட்பொருள்கே
ளேகமேபதிபலவலவெனுமதுகாண்டி
யேகமேயெனச்சுட்டுவாறொருவனீங்குளனவ்
வேகன்போலலனிருண்மலத்தோடுளனிவனே.

என்னுஞ் செய்யுளான் உணர்க.

(௱௨௨) பண்ணும் அதனின் வேறன்றாய் எண்ணப்படும் இசையும் போலவும், பழமும் அதனின் வேறன்றாய் எண்ணப்படும் சுவையும் போல வும், யாங்கணும் வியாபகமாய முதல்வன்றிருவருள் உயிர்களின் வேற்று மையின்றி நிற்பதாகலான், சுருதிகள் பிரமம் அத்துவிதம் என்று அவ் விடங்களிற் கூறும்; இது

(௱௨௩) பண்ணையு மோசையும் போலப் பழமது
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணா
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னா
தத்துவித மென்றறையு மாங்கு.

என்னும் திருவெண்பாவானும்,

(௱௨௪) மன்றவேதமத்துவிதமென் றுரைத்திடுமரபா
லொன்றலாற்பொருளிலையெனினுணர்த்துமந்நெறி

யென்றும்வேறன்மையுணர்த்துமிக்கிளவியேயிதனை
னின்றவாருயிர்பலவுந்தானுய்நிற்குநிமலன்.

என்னுஞ் செய்யுளானும் அறியப்படும்.

(௩௨௫) நஞ் + துவிதம் = அ + துவிதம்
= அத்துவிதம் என்பதின்

நகரத்துக்கு (நஞ்னுக்கு) (௧) சாதிருசியம், (௨) அபாவம், (௩) பேதம், (௪) அற்பதை, (௫) அப்பிராசஸ்தியம், (௬) விரோதம் என ஆறு பொருள் உண்டு; இந்த ஆறு பொருள்களுள்ளே சாதிருசியம் (அன்மை), அபாவம் (இன்மை), விரோதம் (மறுதலை) என்னும் மூன்று பொருள்களே ஈண்டு எடுத்தாளற்பாலன. சாதிருசியப்பொருள் சைவசித்தாந்திகளானும், வைதிக பாசுபதயோகிகளானும், வைஷ்ணவரானும், இன்மைப் பொருள் சாங்கியயோகிகளானும் (நிர்க்குணோபாசகர்களானும்), மறுதலைப்பொருள் மத்துவரானும் கொள்ளக்கிடந்தன.

(௩௨௬) அப்பிராமணன் (அப்ராஹ்மண:) என்றது பிராமணனல்லாதானும், பிராமணனைப்போல (அபேதமாய்) யஞ்ஞோபவீதந் தரிப்பவனுமாயுள்ள க்ஷத்திரியனையாவது வைசியனையாவது சுட்டுவது போல, சீவான்மாவானது பரமான்மசிவனின்று வேறாய் (பேதமாய்), அச்சிவபெருமானைப்போல (அபேதமாய்) சர்வஞ்ஞாதி குணங்களை எய்தும் என்னும் சாதிருசிய (சாமியப்) பொருளிலே செல்லும் என்பதுணர்த்த (முண். ௩. ௧. ௩) ல்

நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி |

(௩௨௭) "மலநீங்கினவனைப் பரமசாமியத்தை அடைகின்றனன்" என்று கூறப்பட்டது. இந்தச் சாதிருசியப்பொருளே,

(௩௨௮) | நஞிவயுக்தமந்யஸத்ருசாதிகரணே ததாஹ்யர்த்தகதி: |

என்று வேதஷடங்கங்களுள் ஒன்றாகிய வியாகரணத்திற் கூறப்பட்டது. படவே, சாதிருசியம் என்றது அன்னிய அபேத (அன்மைப்) பொருளிற் போந்தவாறு தெள்ளிது.

(௩௨௯) "அது நீயாகின்றனை" (தத்துவமசி) எனவும், "அது நானாகின்றேன்" (அகம்பிரம்மாஸ்மி) எனவும், "அது விதுவாகின்றது" (அயமாத்துமா பிரம்ம) எனவும் மூவிடம்பற்றி நிகழும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பதை ஒரு பொருள் நீ என்பது ஒரு பொருளாகலின், ஒரு பொருள் மற்றொருபொருளாமாறு

பாவனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்ததாகலின், அது இதுவாதற் கேதுவாய் அவ்விரண்டற்கும் உள்ளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துதலே அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள். இது,

சொன்னதத்துவமசியெனுஞ்சுருதியின்மொழியு
மன்னுகாரணபதியுநானெனவரும்பசுவு
மென்னவேபொருளிருமைகண்டியைந்து வேறன்மை
தன்னைநாட்டியதல்லதுதனியென்றதின்றே.

என்னுஞ் செய்யுளால் அறியப்படும்.

(௱௩௦) வேதமுடனாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா வெடுத்து ரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞான மாகும்

என்றற்றொடக்கத்ததாகத் தாயுமானவர் கூறிய செய்யுளால், "வேதாகம புராணேதிகாசமுதலிய கலைஞானமனைத்தும் மேலாயதாக (முத்திதசையிலே) அத்துவிதமாதற்குரிய துவிதமார்க்கத்தையே விரிவாக எடுத்துக் கூறும், (அத்துவிதமார்க்கத்தையும் துவிதமார்க்கத்தையும் எடுத்துக் கூறும் என்று பொருட்படுத்தல் கூடாதென்பாராய், மீட்டும்) கூறற்கரிய துவிதமார்க்கந்தான் (சீவான்ம பரமான்மாவாம் உபயான்மவாதமார்க்கந்தான்) அத்துவித ஞானத்தை (௱௨௭-ம் இலக்கத்திற் கூறியவாறு) உண்டு பண்ணுமென்று" உரைக்கப்பட்டதன்றி, ஏகான்மவாதிகள் கூறுமாறு வேதாகமாதிகளிலே ஏகான்மவாதமார்க்கமும் உபயான்மவாத மார்க்கமுமாகிய இரண்டும் கூறப்பட்டவென்று பொருட்படுத்தல் கூடாது; பின் அவையனைத்தினும் துவிதமார்க்கமே கூறப்பட்டதென்பது பொருளாம்.

(௱௩௧) ஏகான்மவாதிகள் "சோகம்" "சிவோகம்" என்று கூற, சைவர்களும் "சோகம்" "சிவோகம்" என்று கூறுமின், இருதிறத்தார்க்கும் மகாவாக்கியங்களிலே கருத்தும் பயனும் ஒன்றுமே எனின், ஆகா. விளையாட்டயரும் சிறுவர் "அதிரசம்" "இலட்டுகம்" என்னும் இனிய உண்டிகளை உண்டாராகப் பாவித்து, தனித்தனி "அதிரசம் உண்டேன்" "இலட்டுகம் உண்டேன்" என்று கூறி, உள்ளபடி "அதிரசத்"தையும் "இலட்டுகத்"தையும் உண்டார்க்ளோடு சமமாய்க் கூறினன், மன்னினையவிடுச் சிறுவர் உண்டவர்களாக கூறிய "அதிரச இலட்டுகம்" சனுக்கும்,

உள்ளபடி உண்டவர்கள் கூறிய "அதிரச இலட்டுகங்"களுக்கும் பேதம் வெளிப்படையன்றோ. அதுபோல, ஏகான்மவாதிகள் "சோகம்," "சிவோகம்" என்றவைகளுக்குக் கடாகாசத்தையும் மகாகாசத்தையும் ஒன்றென்றாற் போல, கூடஸ்தனையும் பிரமத்தையும் ஒன்றென்று நிருபசரிதவைக்கியங்கொள்வர். சைவர்கள் மந்திரியை இராஜா என்றும், ஆன்மாவைக் கருடன் என்றும் பாவிக்குமாறு போல, ஆன்மாவைச் சிவம் என்று உபசரிதவைக்கியங்கொள்வர். ஆகலின், இருவர்க்கும் மகாவாக்கியங்களிற் கருத்தும் வேறும், பயனும் வேறும் என்றோர்க. இஃதுணர்ந்தே,

ஐமெஷத ஶாஶ்ஸிரொஹி ஶரீவாஸநாயா ஶமநத ஐமெதிவா ஶாஷ்டயா நவாவ்ஷ|| ஸெஷஃ ஷுமெடா ஶஶீவஶாஜிகயொரஶீக ஷாடாதூஷாவந ஶயாஷி விஷம ஶாஷி|

(நுஙூஉ) "சுவாமீ, உபநிடதமுடிபுகளால் உம்முடைய உபாசனையிலே அத்துவைதங் கூறப்பட்டது; அதற்கு (ஆன்ம பிரமம் என்னும் இரண்டின் ஐக்கியத்தைக் கூடஸ்தப் பிரம ஐக்கியம் போல) நிருபசரிதவைக்கியமாகக் கூறல் கூடாது; கருடனும் மாந்திரிகனும் தம்முள் வேறாதல் வெளிப்படை; (ஏகவாதசுருதியினர்) அந்த ஆன்மா கருடனோடு தாதான்மியபாவனையுறலைப் பொய்யென்றாலும், கருடபாவனை விஷத்தை (நீக்காதிருக்கவில்லை) நீக்குகின்றது" என்றனர் அரதத்தாசாரியர். மாந்திரிகன் தனது சரீரத்தைக் கருடனாகப் பாவிப்பானல்லன்; பாவிக்குமாறென்னையெனின், அவன் தன் ஆன்மாவைக் கருடனுக்கதிதெய்வமாம் மந்திரரூபனாகப் பாவிப்பன். ஆண்டு,

ஸமெஷ யஜ்ஷா ஞூதூந ஸஷி|

(நுஙுநு) "எல்லாத் தருமங்களும் ஆன்மாவுக்குண்டு" என்று முடிந்த வார்த்தையால், ஆன்மலக்ஷணந் தெரிவித்த சர்வஞ்ஞானோத்தரச் சுருதியானே தற்பாவபாவமாய்ச் சார்ந்ததன்வண்ணமாமியல்புடைய ஆன்மா அந்த மந்திர தர்மதருமியாய் அம்மந்திர சொரூபியேயாவன். அங்ஙனம், பாவனை சத்தியமாதலினன்றோ சத்தியபலமாக விஷவிலக்கு காணப்படுகின்றது. அது போல, உபசரிதவைக்கியங்கொண்டு அத்துவித பாவனையால் ஆன்மாக்கள் சிவகுணங்கள் தங்கண் விளங்கப்பெற்றுச் சிவமாயிருப்பனவன்றிக் கெட்டு ஒன்றாயொழியா; அதனாற் பாசம் நீங்குகின்றது. கருடன் நான் என்று நிருபசரிதவைக்கியங் கூறின், விஷம் நீங்குமாறில்லை; அதனால் ஏகான்மவாதிகள் கூறும் நிருபசரிதவைக்கியம் பொருந்தாது. சத்தியபாவனை செய்வோராகிய சைவர்கள் "சோகம்" "சிவோகம்"

என்பவற்றுக்குக் கூறும் உபசரிதவைக்கியமே பொருத்தமாமென்று கடைப்பிடிக்க.

(௩௩௪) ஆகவே, பரமோபநிடதங்களில் யாண்டாயினும் நிர்க்குணப் பிரமவிஷயமென ஒன்று கூறப்படவே இல்லை. மாயாவாதச் சுருதிப்பொருள் களிலே நெடுங்காலம் பழக்கவாடையினால் அடிபட்டுவந்தமையாற் கதாநு கதிகயாய்க்கொண்டு சிவபெருமானது ஞானசத்தியினும் சர்வஞ்ஞாதி குணங்களினும் பற்றின்றிப் பலர் தங்கருத்துக்கியைய வேதாந்தத்திற் பொதிந்துள்ள உண்மைப்பொருள்களைத் திரித்துப் பொருள் செய்து கெடுகின்றனர், பிறரைக் கெடுக்கின்றனர்.

இத்யாத்யாய த்விஜா ந்ஸ்வ்யஜ்வாந: ஸர்வதாநத: | யஸ்யாம் விஷ்ய யதோ ஸ்வயம் கர்மாரத்யாஸ்ததோ நவா: | ஸிவஸாஸ்த்ராஹவாநி த்யம் ஸிவார்சநவாரதவா: | வேதோக்தகர்மவ்வோ ஸிவஸ்ய விநிந்தகா: | நரகேஷு ச ஸர்வேஷு பதந்த்யஜ்ஞா ந்விதா: |

(சங். த. உகூ. உ௫, உசு)ம் சுலோகங்களினும், இவற்றின் பொருளையடக்கிய

(௩௩௫) பேசரியமறைகளெலாம்பராபரனீயெனவணங்கிப்பெரிதுபோற்று
மீசனையுமன்பரையுநீற்றெருடுகண்டிகையினையுமிகழ்ந்துநீவிர்
காசினியின்மறையவராயெங்காளும்பிறந்திறந்துகதிபெறுது
பாசமதனிடைப்பட்டுமறையுரையாநெறியதனிற்படுதிரென்றுன்.

என்னும் (கந். அன. ௩எ) ம் செய்யுளினும் கூறப்பட்ட ததீசிசாபமே அதற்குக் காரணம் போலும்!

இந்த்ரம் மித்ரம் வருண மக்நிமாஹுரதோ திவ்ய: ஸ ஸுபர்ணோ கருத்மாந் | ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்த்யக்நிம் யமம் மாதரிஸ்வாநமாஹு: |

(௩௩௬) "பெரியோர் ஏகராயினாரை இந்திரன் என்றும், மித்திரன் என்றும், வருணன் என்றும், அக்கினி என்றும், திவ்ய நல்ல சிறகினையு டைய கருடன் என்றும், யமன் என்றும், மாதரிச்சுவா (வாயு) என்றும் பல நாமங்கொண்டு கூறுவர்" என (இரு. க. கசுச. சசு) ற் கூறப்படுகின் றது. ஈண்டுக் கூறப்பட்ட ஏகர் யார் என ஆராயற்பாற்று;

ஸ ஏவ தேவோ யஜ்ஞ: பாவயஜ்ஞஸ்ய ஸாயநஸ்,
யஜ்ஞாரம்ஜ்ஞா ஸ்ஸ்ந்ரு ஸாமக ஸவே வப்யந்தி,

(௩௩௭) "பாதருமத்துக்குத் (தியானயோகத்துக்குச்) சாதனமாக (அடிச் சுருதியாகிய கன்மகாண்டத்திற் கூறப்படும்) அபூதருமம் சாங்கமாக

(மநுமுதலிய) தருமசாஸ்திரங்களினல் நன்கு உபப்பிருங்கணஞ் செய்யப் பட்டது" என்று (வாயு. பூ. உ௮. ௮) கூறலான்,

ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம்ஸமணோரபி |
ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம் |
ஏதமேகே வதந்த்யக்நிம் மநுமந்யே ப்ரஜாபதிம் |
இந்த்ரமேகே பரே ப்ராணமபரே ப்ரஹ்ம ஶாஶ்வதம் |
(மநு. க௨. க௨௨, க௨௩)

(௩௩௮) (பிரு. ௫. ௮. ௯. ற் கூறப்பட்டவாறு) சேதநாசேதனப் பிர பஞ்சங்களைத் தமது ஆஞ்ஞையினல் ஆளுகின்ற அக்ஷரப்பிரமமும், (கட. உ. ௨௦. னும், சுவே. ௩. ௨௦. னும், மகா. ௮. ௩) னும், கைவல்லியத்தி னுங் கூறப்பட்டவாறு அணுவுக்கணுவாகிய தாதாவும், (முண். ௩. க. ௩. னும், மைத். ௬. க௮) னுங் கூறப்பட்டவாறு பொன்வண்ணராகிய ஈசரும், (சாந். ௬. ௮. க. னும், ௮. ௩. ௨) னுங் கூறப்பட்டவாறு சொப்பனத்திலே அடையற்பாலதாகிய சத்தும் (தகராகாசமும்), (பிர. ௫. ௫. ற் கூறப்பட்ட வாறு) புருஷரும், (முண். உ. உ. க) ற் பரமுமாகக் கூறப்படும் ஏகரைச் சிலர் அக்கினி என்றும், சிலர் பிரஜாபதி என்றும், சிலர் இந்திரன் என் றும், சிலர் பிராணன் என்றும், சிலர் சாசுவதமாகிய பிரமம் என்றுங் கூறு வர். இந்த மநுஸ்மிருதியில் எடுத்தாளப்பட்ட அக்ஷரப்பிரம முதலிய வெல்லாம் சிவபெருமான்மேலவென்று மேலே நிரூபிக்கப்பட்டமையின், (௩௩௬-ம் இலக்கத்து) ஏகர் என்றது பிரமமாகிய சிவபெருமான் மேற்று.

விப்ராணாம் தைவதம் ஶம்பு: க்ஷத்ரியாணாந்து மாதவ: |
வைஶ்யாநாந்து பவேத்ப்ரஹ்மா ஶூத்ராணாம் கணநாயக: |*

(௩௩௯) பிராமணர்களுக்குச் சிவபிரானும், க்ஷத்திரியர்களுக்கு விஷ்ணுவும், வைசியர்களுக்குப் பிரமாவும், சூத்திரர்களுக்குக் கணநாயகருந் தெய்வம்" என்று மநுஸ்மிருதி உபக்கிரமத்திற் கூறினமையின், உபசங் காரத்திற் கூறப்பட்ட பிரமமும் சிவபெருமான் மேற்று. சிவபெருமான் அக்கினி முதலிய பெயர்களாற் கூறப்படுவது இருக்குவேதாதிகளில் மிகப் பிரசித்தம். (வே. சூ. க. ௪. உ௬) ஞ் சூத்திரபாடியத்தில் ஸ்மிருதிகளும், இதிகாசங்களும், புராணங்களும் ஒரே பரமான்மாவைக் கூறாது, சில பிரமா வையும், சில விஷ்ணுவையும், சில உருத்திரரையும், சில சத்தியையும், சில அக்கினியையும், சில சூரியனையும், சில வாயுவையும், சில மற்றொன் றையும் பரப்பிரமமென்று கூறுகின்றன என்பதை ஆசேஷபித்து நீக்கி, புருஷ சூக்தம், சதருத்திரீயம், ஸ்மிருதி, இதிகாசபுராண முதலியவனைத்தும் உமை

* இதன் பொருள் கந்தபுராணம், தக்ஷயாகபடலம், உ௩-ல் காணப்படுகின்றது.

யோடு கூடிய சிவபெருமானையே உணர்த்தின என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுக் காண்க.

ஸர்வாங்கோத்தூளநம் யத்து பஸ்மநா வேதசோதிதை꞉ ।
தத் வேதஶிரோநிஷ்டா꞉ ப்ராஹு꞉ பாஶுபதம் ஶிவே ।
ஸைவ ஶிரோவ்ரதம் ப்ராஹு꞉ ஸைவ அத்யாஶ்ரமம் விது꞉ ।
ஸைவ து ப்ரதிஜ்ஞாதா꞉ ஸைவ ஸம்ஸாரமோசநம் ।

(௩௪௦) அதர்வசிரசிற் கூறப்பட்டவாறு அக்கினி என்றற்றொடக்கத்த மந்திரங்கொண்டு விபூதி தரித்து, விதிப்படி அநுஷ்டிக்கப்படும் விரதம் பாசுபதவிரதம் எனப்படும்; இந்த விரதம் (முண். ௩. ௨. ௧௦) ற் சிரோவிரதம் என்றும், (சுவே. ௬. ௨௧) னும், கைவல்லியத்தினும் * அத்தியாசிரமம் என்றும், காலாக்கினிருத்திரத்தில் விரதம் சாம்பவம் என்றும், (தைத். ௧. ௧௧) ற் பூதி என்றும், (ஈசா. ௧௭. னும், பிரு. ௭. ௧௫. ௧) னும் பஸ்மம் என்றுங் கூறப்படும்.

அக்நிரித்யாதிபி꞉ மந்த்ரை꞉ ஷட்பி꞉ ஶுத்தேந பஸ்மநா ।
ஸர்வாங்கோத்தூளநம் குர்யாத் ஶிரோவ்ரதஸம்ஜ்ஞிதம் ।

(௩௪௧) "அக்கினி முதலிய மந்திரம் ஆறுங்கொண்டு சுத்தமாகிய விபூதியினாற் சிரோவிரதம் எனப்படும் சர்வாங்கோத்தூளனத்தைச் செய்யக்கடவன்" என்று சௌரசங்கிதையினும்,

அதர்வஶீர்ஷோதிதம் ஶிரோவ்ரதம் ஶிவப்ரியம் பர்வதராஜநந்திநி । பஸ்மேதி ப்ரோக்தோ ந விமுஹ்ய உபேக்ஷேத தே தைத்திரீயா ஹி ஸதாப்ருவந் ।

(௩௪௨) சிவபெருமான் உமையம்மையாரை விளித்து, "மலையரசன் புதல்வியே! சிவப்பிரியமாகிய இந்தச் சிரோவிரதம் அதர்வசிரசிலுள்ள நியமம்; விபூதி எனப்படும் பாசுபதவிரதத்தை அநுஷ்டித்தலில் உபேக்ஷையாயிருத்தல் கூடாது எனத் தைத்திரீயசாகையினர் எஞ்ஞான்றுங் கூறுகின்றனர்" என்று சிவரகசியத்தினுங் கூறப்படுகின்றது. மேலும்,

ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம் । தர்மாந்ந ப்ரமதிதவ்யம் । குஶலாந்ந ப்ரமதிதவ்யம் । பூத்யை ந ப்ரமதிதவ்யம் । ஸ்வாத்யாயப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ।

---

* உத்தரதேசத்தார் பாசுபதவிரதம் என்னும் உண்மைப்பொருளையுடைய அத்தியாசிரமம் என்றதைச் சந்நியாசிக்குப் பொருள்படுமாறு அந்தியாசிரமம் என்று சில உபநிடதங்களிலும் புராணங்களிலும் திரித்தெழுதினார்கள்.

(௩-௪௩) சத்தியத்தினின்று தவறற்க; தருமத்தினின்று தவறற்க; நீதியினின்று தவறற்க; விபூதியை அசட்டை செய்யற்க; (பிரணவம், சதருத்திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என்பவற்றைச் செபித்தலாகிய) சுவாத்தியாயத்தினின்றும் வேதாத்தியயனத்தினின்றும் தவறற்க" என்று (தைத். க. ௧௧) ற் கூறப்பட்டிருக்கின்றது.

ப்ரணவ ஶதருத்ரீய ததா²தர்வஶிர ஶிகா |
ஏதேஷாம் ஜபம் ப்ராஹு: ஸ்வாத்⁴யாய இதி ஸூரய: |

(௩-௪௪) "பிரணவம், சதருத்திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என்பவற்றின் செபமே சுவாத்தியாயம் எனப்படும்" என ஆதித்தியபுராணத்துச் சிவயோக நிரூபணத்தினும்,

ஸத்யாத் த⁴ர்மாத் ததா² நீதே: ப⁴ஸ்மோத்³தூ⁴ளநாத³பி |
த்ரிபுண்ட்³ரதா⁴ரணாச்சாபி ஸ்வாத்⁴யாயாத்⁴யயநாத³பி |

(௩-௪௫) "சத்தியத்தினின்றும், தருமத்தினின்றும், நீதியினின்றும், பஸ்மோத்தூளனத்தினின்றும், திரிபுண்டரதாரணத்தினின்றும், பிரணவ முதலிய நான்கையுஞ் செபித்தலாகிய சுவாத்தியாயத்தினின்றும், (கன்மகாண்ட) வேதாத்தியயனத்தினின்றும் (நழுவற்க)" என ஸ்காந்தபுராணத்தினுங் கூறப்பட்டிருத்தலின், தைத்திரீய சிக்ஷாவல்லியிற் கண்ட பூதி என்றதற்குப் பஸ்மம் என்றும், சுவாத்தியாயம் என்றதற்குப் பிரணவம், சதருத்திரீயம், அதர்வசிரசு, அதர்வசிகை என்றும் பொருட்படுத்தப்பட்டமை காண்க.

யைஸ்த்வாஶ்ரமாதீதமித³ம் வ்ரதம் சீர்ணம் ததா² |
தேஷாமேவ பரம் ஜ்ஞாநம் ஸம்ஸாரச்சே²த³காரணம் |

(௩-௪௬) "எவர்களால் இந்த அத்தியாசிரமவிரதம் (பாசுபதவிரதம்) ஆசரிக்கப்படுகின்றதோ, அவர்களுக்கே சம்சாரத்தை நீக்கும் பரமஞானம் எய்தும்" என்று பிரமோத்தரகாண்டங் கூறுகின்றது.

ஶிரோவ்ரத மித³ம் ப்ரோக்தம் த்³விஜா உபநிஷத்ஸ்வபி |
வைதி³கீ விரஜாதீ³க்ஷா வ்ரதமேதம் பாபநாஶிநீ |
மந்த்ரஸம்ஸ்காரதீ³க்ஷேதி கத்²யதே ஶைவாக³மே |

(௩-௪௭) "உபநிடதங்களில் இப்பாசுபதவிரதம் சிரோவிரதம் எனப்படும்; இது பாவத்தைப் போக்கவல்ல வைதிக விரஜாதீக்ஷை எனவும், சிவாகமங்களில் மந்திரசமஸ்காரதீக்ஷை எனவுங் கூறப்படுகின்றது" எனக் ஞானகாண்டத்திற் காணப்படுகின்றது.

ஐடிo விரஜா நஹஸ்ய ।

(௩௪அ) "இந்த விரஜாக்கினியில் எய்திய பஸ்மம்" என்று அலோக மத்திற் பாசுபதவிரதத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. இராமருக் குத் தண்டகாரணியத்தில் அகஸ்தியமகாமுனிவர் செய்த பாசுபததீக்ஷை யும், அப்பாசுபத விரதத்துக்கு உள்ள அத்தியாசிரமமுதலிய பெயர்களும் பதுமபுராண சிவகீதையிற் காணப்படுகின்றன.

வ்ரதம் பாசுபதம் ரௌத்ரம் யேந-ஸ்ரீராமோ ப்ரதஷ்டி।
வ்ரத மேத ஸ்ரீகரமேத ஸ தம் பேவ பேநஷ்டிகம் வ்ரதம்।
லோகா ஊர்த்வாச்ரமீ ச விஜ்ஞேயோ மஹாபாசுபத ஸ்ஸ்யா।

(௩௪௧) "வைதிக பாசுபதவிரதம் அதர்வசிரசிற் கூறப்பட்டது; இவ்விரதத்தை அநுஷ்டிப்பவனாகிய நைஷ்டிகன் அத்தியாசிரமி, மகாபாசு பதன் எனப்படுவன் என்று (வாயு. பூ. உக. உ, அ௩) ஞ் சுலோகங்களிற் கூறப்படுகின்றது.

அஷ்டம்யாம் தம் விப்ரேண தீக்ஷிதோ ஹம் யதாவிதி।

(௩௫௦) "அஷ்டமியில் நான் (கிருஷ்ணர்) விப்பிரரால் (உபமன்னி யுவால்) சாஸ்திரோக்தமாகத் தீக்ஷிக்கப்பட்டேன்" என்று (பார. அநு. கச. ௩எச) ஞ் சுலோகத்திற் காணப்படுகின்றது.

உபேதா ஹி தேவகீஸுதே தேவேந்த்ர ரக்ஷயத।
உத ஸ்ரீவாஸுதேவஸ்ய ஸ க்ருஷ்ணோ ஸமோயி தந்நவாத।

(௩௫௧) "உபமன்னியுமுனிவர் தேவகிநந்தனராகிய கிருஷ்ணர்க்குப் பாசுபததீக்ஷை செய்தனர் என்றும், அவ்வுபமன்னியுமகாமுனிவரிடத்தி ருந்து கிருஷ்ணர் சிவாகமார்த்தங்களை உணர்ந்துகொண்டனர்" என்றும் (சித. உச. ௩௪) கூறுகின்றது.

அத ஸ்வம் விரஜாதீக்ஷாம் ப்ரூஹி மே மேநிஸத்தம।

(௩௫௨) "ஆகஸின் முனிசிரேட்டரே, விரஜாதீக்ஷையை எனக்கு அருளுதிர்" என்று இராமர் அகஸ்தியரைப் பிரார்த்தித்து அப்பாசுபத தீக்ஷை பெற்றனர் என்று (சிவகீதை. அத்தி. ௩) ற் கூறப்பட்டிருக்கின்றது.

ப்ரஹ்மாத்யா ஸர்வ தத்வஜ்ஞா ஸர்வே பாசுபதாஸ் ஸ்ம்ருதா।

(௩௫௩) "பிரமாமுதலாயினோர் பாசுபதவிரதத்தை அநுஷ்டித்துப் பாசுபதராயினர்" என்று (வாயு. பூ. உக. க) ற் கூறப்பட்டிருக்கின்றது;

முதலாயினோர் என்றமையான் விஷ்ணு, மார்க்கண்டேயர், ததீசி, துருவாசர், கவுதமர், ஜாபாலர், ஆதர்வணர், காத்தியாயனர், அகஸ்தியர், ஸ்கந்தர், கணபதி, பிருங்கி, இராமர், உபமன்னியு, கிருஷ்ணர் முதலாயினோர் இந்த விரஜாதீக்ஷை பெற்றனர் என்று ஸ்காந்தபுராண காசிகாகண்டத்திற் கூறப் படுகின்றது. இவ்விரதத்தை அநுஷ்டிக்கும் முறைமை கைலாசசங்கிதை யினும், இலிங்கபுராண கூர்ம புராணங்களினும் கூறப்பட்டிருக்கின்றது. ஈண்டு அதனை வரையின் விரியுமென்றஞ்சி விடுத்தனம். ஈசகேநாதி உப நிடதங்களிற் கூறப்பட்ட பரவித்தை அநுஷ்டித்தற்கு இந்த விரதம் அங்க மாய் இன்றியமையாது கொள்ளப்படவேண்டும் என்றன்றே "விபூதியை உபேக்ஷைசெய்யாதொழிக" என்றற்றொடக்கத்தனவாகத் தைத்திரீய, முண்டக, சுவேதாசுவதரோபநிடதங்கள் விதந்து கூறியிருக்கின்றன.

(௬௫௪) "அதர்வணவேத அத்தியயனஞ் செய்யவேண்டினோர் தீச் சட்டியைத் தலையிலே தரித்தல் வேண்டும் என்பது பற்றியன்றே சிரோவிர தம் என்று முண்டகோபநிடதங் கூறிற்று; அங்ஙனமாகவும், அதர்வசிர சிலுள்ள பாசுபதவிரதம் என்று பொருள்கொண்டமை பொருந்தாதாம் எனின், அது பொருந்தும்; முண்டகோபநிடதம் முதற்கண்ணே அபர வித்தை பரவித்தைகளைக் கூறி, இறுதியில் அபரவித்தையாகிய அதர்வண வேத அத்தியயனமுரியார்க்கே சாதனமாகத் தாங்கவேண்டிய தீச்சட்டியை யும், பரவித்தையாகிய பிரமவித்தை அறிய அதிகாரமுடைய யாவர்க்குஞ் சாதனமாக அநுஷ்டிக்கவேண்டிய அதர்வசிரசிற் பாசுபதவிரதத்தையும் உணர்த்தற்குப் பொதுவுறச் சிரோவிரதம் எனக் கூறினமையான். (௬௫—௬௪ளும் இலக்கவரையிற்) கூறிய நியாயங்களானும், ஈசகேநாதி உபநிடதங் கள் விபூதிமான்மிய பாசுபதவிரதம் உணர்த்துதலினானும் அவை சைவோப நிடதங்களாம் என்பது.

மூவிதபாவனை.

த்ரிவிதாம் பாவநாம் ப்ரூஹி [illegible]|
[illegible]|
[illegible]|
[illegible] (கூர். பூ. க)

(௬௫௫) "இந்திரத்தியும்நர் கூர்மரை (நாராயணரை) நோக்கி, சுவாமி! மூன்று பாவனைகளையும் எனக்கு அருளுக என்று வேண்ட, நாராயணர் முதலாவது பாவனை என் [illegible] (சகுண [illegible]), இரண்டாவது பாவனை [illegible] (நிர்க்குணம்) பற்றியது; மூன்றாவது பாவனை [illegible]

கடந்த பிராம்மிபாவனை; இம்மூன்று பாவனைகளுள் ஒன்றை அறிஞன் பாவிக்க" (என்றும்),

முதலாவது பாவனை (சகுணம்).

அஸக்தஸ்ஸமாஶ்ரயே தாத்யாம் பூர்வோக்தாம் பாவநாம் ஶ்ருதி: (கூர். பூ. க)

"அசக்தன் (சகுணபாவனையாகிய) முதலாவது பாவனையையே ஆசிரயிக்க என வைதிகசுருதி கூறிற்று" என்றும் கூர்மர் இந்திரத்தியும்மனுக்கு மூவித பாவனைகளைத் தொகுத்துக் கூறி, முதலாவது பாவனை இன்னதென வுரைத்தனர்.

அஶக்தோ ஹரம் விஷ்ணும் ப்ரஹ்மாணம் வா ஸமாஶ்ரயேத்।

(கூ௫௬) "அசக்தன் அரனையும் நாராயணனையும் பிரமாவையும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து இறுதி அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது பாவனை (நிர்க்குணம்).

பரா த்வத்த: பரம் ப்ரஹ்ம ஸத்யம் ஏகம் அவ்யயம்।
நித்யாநந்தம் ஜ்யோதி: அக்ஷரம் தமஸ: பரம்॥
ஐஶ்வர்யம் தஸ்ய யந்நித்யம் விபூதிரிதி கீயதே।
கார்யம் ஜகதத: வ்யக்தம் காரணம் ஶுத்தமக்ஷரம்॥
ஸ ஹி ஸர்வஸ்ய பூதாநாம் அந்தர்யாமீ மஹேஶ்வர:।
ஸர்கஸ்தித்யந்தகர்த்ருத்வம் வ்ருத்தி: ஸேயம் உதீர்யதே॥
ஏதத் விஜ்ஞாய பாவேந யதாவத் அகிலம் த்விஜ।
ததஸ்த்வம் கர்மயோகேந ஶாஶ்வதம் ஸம்ய கர்சய॥

(கூ௫௭) "மூலப்பிரகிருதிக்கு (தமசுக்கு) மேலாயும், சோதியாயும், அக்ஷரமாயும், சச்சிதானந்தமாயும், அவ்வியக்தமாயும், பரத்துக்குமேல் அதிபரமாயும், பரதத்துவமுமாயுள்ளது பிரமம்; அதின் ஐசுவரியம் விபூதி யெனப்படும்; காரியம் உலகம்; காரணம் சுத்தமும் அக்ஷரமுமாகிய அவ்வியக்தம்; சர்வபூதங்களுக்கும் அந்தரியாமியாகிய பரமேசுவரன் தான், சிருட்டி திதி சங்காரம் என்னுமவை விருத்தியமாம்; (குருவுபதேசத்தினுலே) இவ்வுண்மையை உள்ளவாறு அறிந்து கன்மயோகத்தினால் எக்காலமும் வழிபடுக" என்று கூர்மபுராணத்து முதலாம் அத்தியாயத்தில் இரண்

டாவது பாவனையாகிய நிர்க்குணோபாசனை கூறப்பட்டது. இது அக்ஷர பாவனை எனவும், நிர்ப்பீஜயோகம் எனவும், அபாவயோகம் எனவும் படும்.

விகல்பரஹிதம் தத்வம் பரமித்யபிதீயதே ।

(௫௮) "விகற்பம் ஒழிந்த தத்துவமே பரம் எனப்படும்" எனச் சிவபுராணத்திலும்,

வதந்தி வேதவித்வாம்ஸ: ஸாக்ஷிணம் ப்ரக்ருதே: பரம் ।
போக்தாரமக்ஷரம் ஶுத்தம் ஸர்வத்ர ஸமவஸ்திதம் ।
ஆத்மாயம் கேவல: ஸ்வச்ச: ஶுத்த: ஸூக்ஷ்ம: ஸநாதந: ।
அஸ்தி ஸர்வாந்தர: ஸாக்ஷாச்சிந்மாத்ரஸ்தமஸ: பர: ।

(௫௯) "போக்தாவும், அக்ஷரமும், புத்தமுமாயுள்ள சாட்சியை அறிஞர்கள் பிரகிருதிக்கு மேலுள்ளதாகக் கூறுகின்றனர்; இவ்வான்மா தனியாயும், சுவச்சமாயும், சுத்தமாயும், சூக்குமமாயும், சநாதனமாயும், சர்வாந்தரியாமியாயும், சின்மாத்திரமாயும், மூலப்பிரகிருதிக்கு மேலாயும் உள்ளது" எனக் கூர்மபுராணத்துச் சாங்கியயோகம் உரைத்த அத்தியாயத்திலும்,

ஸர்வக்ஷேத்ரேஷு ஸந்தாநஸூத்ரவச்ச யதா ப்ரகாஶதே ஆத்மா ததாந்தர்யாமீத்யுச்யதே ।

(௬௦) "அகம் என்னும் பதத்தினாற் குறிக்கப்பட்ட ஆன்மா மணிகளின் நூல்போலத் தொடர்ச்சியாய்ச் சர்வசரீரங்களுக்குள்ளிருந்து நியாமகனாய்ப் பிரகாசிக்குங்கால் அந்தரியாமி எனப்படுவன்" என ஏகான்மவாத சர்வசாரோபநிடதத்திலும்,

அஹமேவ ஹி ஶுத்தாத்மா அஹமேவ ஹி ஸர்வதா ।
அஹமேவ ஹி நித்யாத்மா அஹமேவ ஹி தத்பர: ।
அஹமேவாந்தர்யாமீ ச அஹமேவ பரேஶ்வர: ।
ஏவம் நிரூபப்ரகாரேண பாவயித்வா ஸதா ஸ்வயம் ।

(௬௧) "நானே சுத்தான்மா, நானே எப்போதும் நான், நான்தான் நித்தியான்மா, நான்தான் தற்பரன், நான்தான் அந்தரியாமி, நானே பரமேசுவரன் என இந்தப்பிரகாரம் (நிருபசரிதமாய்) எக்காலமும் பாவிக்க" எனச் சிருதிகளிலும் கூறப்படலான் இந்த இரண்டாவது பாவனை ஏகான்மவாதிகளுக்குரிய நிர்க்குணபாவனை என்பது எளிதானே அறியப்படும்.

மூன்றாவது பாவனை (ஞானயோகம்).

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍍𑌨𑍇𑌹𑌂 𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌨𑌿𑌷𑍍𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑌰𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃।
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌤𑍍।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑌾𑌵𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌮𑌕𑍍𑌷𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌮𑍍।
𑌅𑌵𑌾𑌪 𑌪𑌰𑌮𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍇𑌨𑍈𑌕𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿।

(௧௬௨) புத்திராதியரிடத்துள்ள பற்றை அறுத்து நிர்த்துவந்துவனாய், நிஷ்பரிக்கிரகனாய், சர்வகன்மங்களுமொழிந்து மிக்கவைராக்கியமுடையனாய், பரமைசுவரியம் பூண்டவன் (பாசுபதயோகநெறியானே) ஆன்மாவிலே அருட்பராசத்தியோடு பரமான்மாவாகிய சிவபெருமானைக் கண்டு, பின்னர்த் தனக்குப் பரமான்மாவாயுள்ளவரிலே உலகம் எல்லாம் இருப்பனவாக நோக்கி, இங்ஙனம் அக்ஷரபாவனை பூருவமாக (நிர்க்குணோபாசனை வாயிலாக) எய்தும் இந்த இறுதியாகிய பிராம்மிபாவனையை அடைதலாம் பரமயோகத்தினாலே ஏகராகிய சிவபெருமானைக் காண்கின்றனன்" எனக் கூர்மபுராணம் மூன்றாவது பாவனையை விதந்து கூறிற்று.

𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌧𑌨𑍇𑌨 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑍈𑌕𑍇 𑌅𑌮𑍃
𑌤𑌤𑍍𑌵𑌮𑌾𑌨𑌶𑍁𑌃।

(௧௬௩) "சிரௌதஸ்மார்த்தக்கிரியையினாலாவது, புதல்வனையுடைமையினாலாவது, பொருளுடைமையினாலாவது, அப்பிரமவித்தை கிட்டாது, பின் இம்மூன்றையும் பரித்தியாகஞ் செய்தலினாற் சிவத்துவம் அடைந்தனர் பெரியோர்" என உமையாரோடு கூடிய சிவபெருமானது பாவனை உரைக்கும் அத்தியாசிரம கைவல்லியோபநிடதங் கூறுமாற்றானும்,

𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍌𑌤𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌮𑍍।
𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।

(௧௬௪) "அநேக ஜன்மங்களிலே முற்றிய வைதிக ஸ்மார்த்த கன்மங்களையுடையராய், அதனாற் பற்றற்றவராய், அறிவுடையராய் எய்தினோர்க்கே சிவபெருமான் அருள்பாலிக்கின்றனர்" என வாயுசங்கிதை கூறுமாற்றானும் மூன்றாவதுபாவனை வலியுறுத்தப்படும். சகுணபாவனை, அக்ஷரபாவனை, பிராம்மிபாவனை என்னும் மூன்றும் முறையே யௌதிகயோகம், சாங்கியயோகம், அத்தியாசிரமயோகம் என மூவகைப்படும். இவ்வுண்மை,

இது ஆனந்தமாகிய சிவனார் உலகம்; அதுவே எல்லை; அதுவே மேலாகிய முக்திஸ்தானம்" என்று கூர்மபுராணம் கூறினமையின், இது (௯௧௭-ம் இலக்கத்திற் கூறப்பட்ட) புநராவர்த்திகொடாத சிவலோகம் என அறியற் பாற்று.

𑌶𑍍𑌵𑍇𑌤 𑌸𑍁𑌤𑌾𑌰𑍋 𑌮𑌦𑌨 𑌸𑍁𑌹𑍋𑌤𑍍𑌰𑌃 𑌕𑌂𑌕 𑌏𑌵 𑌚।
𑌲𑍌𑌗𑌾𑌕𑍍𑌷𑌿𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌮𑌾𑌯𑍋 𑌜𑍈𑌗𑍀𑌷𑌵𑍍𑌯 𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚। 𑌦𑌧𑌿𑌵𑌾𑌹𑌶𑍍𑌚
𑌋𑌷𑌭𑍋 𑌮𑍁𑌨𑌿 𑌰𑍁𑌗𑍍𑌰𑍋 𑌽𑌤𑍍𑌰𑌿𑌰𑍇𑌵 𑌚। 𑌸𑍁𑌪𑌾𑌲𑌕𑍋 𑌗𑍌𑌤𑌮𑌶𑍍𑌚
𑌤𑌥𑌾 𑌵𑍇𑌦𑌶𑌿𑌰𑌾 𑌮𑍁𑌨𑌿𑌃। 𑌗𑍋𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌗𑍁𑌹𑌾𑌵𑌾𑌸𑍀 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑍀 𑌚𑌾
𑌪𑌰𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃। 𑌜𑌟𑌾𑌮𑌾𑌲𑍀 𑌚𑌾𑌟𑍍𑌟𑌹𑌾𑌸𑍋 𑌦𑌾𑌰𑍁𑌕𑍋 𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑍀 𑌤𑌥𑌾।
𑌮𑌹𑌾𑌕𑌾𑌲𑌶𑍍𑌚 𑌶𑍂𑌲𑍀 𑌚 𑌦𑌣𑍍𑌡𑍀 𑌮𑍁𑌣𑍍𑌡𑍀 𑌸 𑌏𑌵 𑌚। 𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁 𑌸𑍋𑌮
𑌶𑌰𑍍𑌮𑌾 𑌚 𑌨𑌕𑍁𑌲𑍀𑌶𑍍𑌵𑌰 𑌏𑌵 𑌚। 𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌯𑍋
𑌗𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾 𑌯𑍁𑌗𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍॥

(௯௭௨) "சுவேதர், சுதாரர், மதனர், சுகோத்திரர், கங்கர், லௌகாக்ஷி, மகாமாயர், ஜைகிஷவ்யர், ததிவாகர், இருஷபர், உருத்திரர், அத்திரி, சுபாலகர், கவுதமர், வேதசிரர், கோகர்ணர், குகாவாசி, சிகண்டி, ஜடாமாலி, அட்டகாசர், தாருகர், லாங்கலி, மகாகாலர், சூலி, தண்டி முண்டி, சகிஷ்ணு, சோமசர்மா, நகுலீசுவரர்" (வாயு. உத். ௧௦. ௨—௬) என்போர் இருபத்தெட்டு வைதிக பாசுபதயோகாசாரியர்களாம். இவர்கள் ஒவ்வொருவர்க்கு நந்நான்கு சீடராக நூற்றுப்பன்னிரு சீடர் உளர். இந்த நூற்றுநாற்பது ஆசாரியர்களுட் டலைவராகிய சுவேதாசாரியருடைய சீடர் இந்தச் சைவபாடியம் அருளிய நீலகண்டசிவாசாரியர்.

பிரமசூத்திர உபக்கிரமணிகை.

(௩௭௩) ஈசகேநாதி முக்கிய உபநிடதங்களை ஆதாரமாய்க்கொண்டு கிளர்ந்த பிரமமீமாஞ்சை எனப்படும் உத்தரமீமாஞ்சையாகிய பிரமசூத்திரம் (வேதாந்தசூத்திரம்)

கயாதொ ஬்ரஹஜிஜ்ஞாஸா |

(௩௭௪) "பின்னர், ஆகலின், பிரமவிசார விருப்பம்" என (க. க. உ) ற் கூறி,

ஜந்மாத்யஸ்ய யதஃ |

(௩௭௫) "எங்கிருந்து இதின் சிருஷ்டி முதலியன" என (க. க. உ) ற் சிருஷ்டி முதலியன செய்வது பிரமமென்று அப்பிரமத்தின் இலக்ஷணங் கூறிற்று. சிருட்டி முதலிய என்றமையான்,

ஸ்ருஷ்டிஃ ஸ்தி஥ிஷ் ஸஂஹார ஸ்திரோஹாவோநுக்ரஹஃ|
பஞ்சைவ தெ ஜகந்த்ருத்யம் நித்யஸித்ஜஸ்யாத்மநஃ |

(௩௭௬) "சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தும் பிரமத்தின் கிருத்தியம்" என்று வித்தியேசுவரசங்கிதை (அ. உ) ற் கூறப்பட்டது. படவே, இக்கிருத்தியம் ஐந்தும் ஏகான்மவாதிகளுடைய கூடஸ்தப் பிரமத்தினின்று? இன்றேல் வைணவருடைய நாராயணப் பிரமத்தினின்று? இன்றேற் சிவாத்துவிதிகளுடைய சிவதத்துவப்பிரமத்தினின்று? உதிக்கின்றவென்றும், இம்மூன்றில் எது வாஸ்தவமாய்ச் சிறந்ததென்றும் முதற்கண் ஆராயற்பாற்று.

(௩௭௭) சூதசங்கிதை சூதகிதை (உ. ௩—ரு) ல் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், சப்தாதி ஐந்தும், பூதாதி ஐந்தும், வாயுக்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், அவித்தை ஒன்றும், சீவன் ஒன்றுமாகச் சேர்ந்த முப்பத்தாறு தத்துவங்களுக்குமேற் பரசிவம் (கூடஸ்தப்பிரமம்) அறியப்படுகின்றது. புறக்கருவிப்பாற்பட்ட தசவாயுக்களும் பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய வாயுதத்துவத்தில் அடங்க, மற்றைத் தத்துவமெல்லாம் பிரசிநோபநிடதத்திற் (ச. அ) கூறப்பட்ட ஆன்மதத்துவ அதோபாகத்தில் அடங்கின்றன. ஆகலின், ஏகான்மவாதிகள் கூறும் உலக சிருட்டி ஆன்மதத்துவத்துக்கு மேற்பட்டிலது.

𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌸𑍁 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌆𑌪𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌿 𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌾𑌯𑍌 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑍇 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌆𑌕𑌾𑌶𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌦𑍌 𑌵𑌿𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌰𑍍𑌮𑌹𑌤𑌿 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌤𑌮𑌃 𑌪𑌰𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿 |

என்னும் சுபாலோபநிடத மந்திரத்தை நோக்குங்கால்,

(௩௭௮) நாராயணரினின்று தமசும், அதினின்று அக்ஷரமும், அதினின்று அவ்வியக்தமும், அதினின்று மகானும், அதினின்று பூதாதிகளும், அதினின்று தன்மாத்திரைகளும், அதினின்று இந்திரியங்களும், அதினின்று ஆகாயமும், அதினின்று வாயுவும், அதினின்று தேயுவும், அதினின்று அப்புவும், அதினின்று பிருதிவியும் உதிப்பனவாகப் பெறப்படுகின்றது. இங்ஙனம் சுபாலோபநிடதத்திற் கூறப்பட்ட நாராயணப் பிரமத்தினின்று எய்தும் சிருட்டிக்கிரமமும் மூலப்பிரகிருதிக்குமேற்போந்திலது. ஆகவே, நாராயண சிருட்டியும் ஆன்மதத்துவ அதோபாகத்ததெனப் புலப்படுகின்றது.

(௩௭௯) (சுவே. ௧. ௨. னும், பிரு. சா. ௪. ௧௯) னுங் காணப்படும் மந்திரங்களுக்கு உபப்பிருங்கணமாகக் (கைலா. ௯. ௨௯—௩௪) ற் காணப்படும் காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருஷன், மாயை என்னும் வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் என்னும் சிவதத்துவம் ஐந்துமாக (ஆன்மதத்துவத்துக்குமேற்) பன்னிரு தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தப் பன்னிரு தத்துவங்களேனும், மூலப்பிரகிருதிக்கு மேற்பட்ட சூக்குமப்பிரகிருதி பரப்பிரகிருதி என்னும் இரு பிரகிருதிகளேனும், ஏகான்மவாதிகளுடைய சர்வசார முதலிய உபநிடத பாஷ்யங்களிலேனும், அவர்பிரகரணங்களிலேனும், வைணவருடைய சுபால முதலிய உபநிடதபாடியங்களிலேனும், அவர் விண்டு புராணாதிகளிலேனும் காணப்படாமையானும், அவ்விருதிறத்தாரும் தமது கூடஸ்தப்பிரமத்துக்கேனும், நாராயணப்பிரமத்துக்கேனும் முழுமுதற்றன்மையும் சர்வவியாபகத்துவமும் ஏற்றிச் சாதிக்கப்போதல் எவ்வாற்றானும் இயலாது.

𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌣𑌂 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 |

(௯௮௦) "சர்வஞ்ஞத்துவாதி குணங்களினால் விசேடிக்கப்பட்டு, பவர் சிவன் முதலிய அஷ்டநாமங்களுக்கு அதிகரணமாயது சிவதத்துவம்; இது ஜகத்காரணமாகிய பிரமம்" என்று நீலகண்டசிவாசாரியர் "ஜந்மாத்யதிகரண"த்தில் (க. க. உ) வரைந்திருக்கின்றனர்.

ஸர்வேஷாம் சைவ தத்வாநாம் ஸ்வாமித்வாச்ச ப்ரபோ: ஸ்ருத:।
ஶிவதத்வம் இதி ப்ரோக்தம் தத்வாநாம் சைவமாஶ்ரய:

(௯௮௧) "தத்துவங்களனைத்துக்குந் தலைமையாய் வாய்ந்தமையின் நாயகமாய்க் கொள்ளப்படுவதும், தத்துவங்களுக்கெல்லாம் உறைவிடமாயிருப்பதும் சிவதத்துவமே" என்றது காரணகமமும். ஆகலின், இதினின்று எய்தும் பஞ்சகிருத்தியம் பிரதமமகாசிருஷ்டியாய் முடிய, கீழ் நிலைக்கண்ணதாகிய நாராயணர் முதலியோர் சிருட்டி அவாந்தரசிருட்டியாம் என்று கோடற்பாற்று. இந்த அதிகரணத்திற் பொதுவுறப் பஞ்சகிருத்தியங்கள் கூறப்படினும், (க. ச. உ௫) ற் சிருட்டிகிருத்தியமும், (க. ௫. ௬) ல் திதிகிருத்தியமும், (க. உ. ௬) ற் சங்காரகிருத்தியமும், (௫. உ. ௫எ) ல் திரோபவகிருத்தியமும், (௫. உ. உ௫, க. க. எ) ல் அநுக்கிரககிருத்தியமுமாகப் பஞ்சகிருத்தியங்களும் சிறப்புறக் கூறப்பட்டன.

ஸர்வஜ்ஞோ யத ஏவ ஶம்பு: ஸ்ருஜத்யவதி ஹந்தி ச।
ஸ்வதந்த்ர ஶக்திர் தேவோ(அ)ஸௌ பஶூந் மோசயதி ப்ரபு:।
த்ருப்தோ யத: ஸதா தேவ: ஸர்வாநுக்ராஹக: ஸ்ம்ருத:।

(௯௮௨) "சம்புவானவர் சர்வஞ்ஞராயிருத்தலின் படைத்து, காத்து, அழிக்கின்றனர் என்றும், சுவதந்திரசத்தியுடையராதலின் பக்குவர்களைப் பாசத்தினின்று நீக்குகின்றனர் என்றும், எஞ்ஞான்றும் வரம்பிலின்பமுடையராதலின் அநுக்கிரகஞ் செய்கின்றனர் என்றும் வாதுளமகோபப்பிருங்கணங் கூறலான், சிருட்டியாதிகிருத்தியம் செய்யும் பிரமம் சர்வஞ்ஞாதி குணங்களையுடையதாயிருக்கின்றதென்று நன்கு பெறப்பட்டது. இந்தச் சிருட்டியாதி கிருத்தியங்களுக்கும் காரணமாய்நின்ற பிரமத்துக்கு

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம (தைத். க. ௬. உ)

(௯௮௩) ஆகாயத்தை (பராசத்தியை) சரீரமாகக் கூறலான்,

நித்ய ஜ்ஞாநேச்சா ஸ்வாதந்த்ர்ய நிராகாரஸ்ய ஜகதீஶ்வரஸ்ய
பரம்ப்ரஹ்ம திரோபாவ பராஶக்தி ஶரீரம் இஷ்யதே।

(௩அ௪) "*சமஸ்த ஜகதண்ட ஷண்ட புத்புத சமூக இரத்நாகர பரப்பிரகிருதிரூப பரமசத்தியே சிதம்பரம் எனப்படும்" என்று சைவபாடியத்திற் கூறப்பட்டது.

ஸஹஸ்ர ஸஹஸ்ரம் பரிவத்ஸரேத் ஸ்ருஜ: |

(௩அ௫) என்னும் தைத்திரீயமந்திரத்துக்கு உபப்பிருங்கணம் கூறியாங்கு, நிவிர்த்திகலாசக்கரம், பிரதிஷ்டாகலாசக்கரம், வித்தியாகலாசக்கரம், சாந்திகலாசக்கரம், சாந்தியதீதகலாசக்கரம் என்னும் ஐவகைச் சக்கரங்களுள்ளே ஏகான்மவாதிகளுடையவும், வைணவருடையவும் நிலை பிருதிவிமுதற் பிரகிருதியீறுய்க்கிடந்த தத்துவங்களைமாத்திரம் அடக்கிய பிரதிஷ்டாகலாசக்கரத்தின்பாலதாக, சிவாத்துவிதிகளுடைய பரமாகாசமாகிய பரமவியோமம் பிரதிஷ்டை வித்தை சாந்திகலாசக்கரங்களுக்கு மேற்பட்ட சாந்தியதீதகலாசக்கரத்தின்பாலதாம்.

ஶாந்த்யா ஊர்த்வம் அத்வனாம் மூர்த்னி விஶுத்தி: ஶாந்த்யதீதயா |
யா கலா ஸா பரம் வ்யோம பரப்ரக்ருதியோகத: |

(௩அ௬) "சாந்திகலைக்கு மேல் அத்துவாவின் முடிவிற் சாந்தியதீதையோடு விசுத்தியானது எய்துகின்றது; பரப்பிரகிருதியோடிசைந்தமையால் அதனைப் பரமாகாயம் என்பர்" என்று (வாயு. பூ. உ௫. உஉ) ற் கூறப்பட்டது.

(உஅஎ) ஈக்ஷத்தியதிகரணத்தில் (க. க. ரு—கஉ) உலகத்துக்குக் காரணம் (சாங்கியர் கூறும்) பிரதானமன்று, (சத்தி சிவப்பொருளாகிய) சத்தென்று (க. க. ரு) ம் சூத்திரபாஷ்யத்திலும், (அந்தச் சத்து) (சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமுடைய) ஆன்மா என்று (க. க. ௬) ஆம், (௬௧-ம் இலக்கத்திலும்), அந்தச் சத்தாகிய பரமான்மநிஷ்டனுக்கு மோக்ஷம் எய்துவதென்று (க. க. எ) னும், இந்தச் சத்தை அறிந்தால் எல்லாம் அறிந்தாயிற்று என்று (க. க. ௯) னும், ஆன்மா நித்திராகாலத்திற் சத்திற் போய் ஒடுங்குகின்றான் என்று (க. க. க0) னும், இந்தச் சத்தே (சாந். அ. ௩. உ) ற் குறிக்கப்பட்ட தகராகாயம் என்னும் உண்மை (க. ௩. க௪) ஞ் சூத்திரபாடியத்திலும், இந்த ஆன்மாவாகிய சத்தை ஐங்கலைகளுள் உயர்ந்த சாந்தியதீதகலைப்பாலராகிய (மகா) ருத்திரர் என்று சூத்திரபாடியத்து (க. க. கக) னும் கூறப்படலான், (க. க. க) ம் சூத்திரத்திலே சிருட்டியாதி இல

*"சமஸ்த உலக அண்டங்களின் தொகுதியாகிய குமிழிக் கூட்டங்கள் தோன்றப் பெறும் சமுத்திரமாகிய பரமகாரண பராசத்தியே சிதம்பரம் எனப்படும்" என்பது பொருள்.

சுணத்தினுற் புகழப்பட்ட பிரமம் சத்தென்றும், (பரம) ஆன்மாவென்றும், உருத்திரனென்றும், தகராகாசம் என்றுங் கூறப்படுமென்பது தானேபெறப் பட்டது.

(௩-அஅ) ஆனந்தமயாதிகரணத்தில் (௧. ௧. ௧௩—௧௭) மநுஷ்யானந்த முதலாக ஆனந்தத்தை ஒன்றுக்கொன்று நூறு மடங்காக உயர்த்திக் கொண்டுபோய் முடித்த (ஆனந்த மிகுதிப்பாட்டினல்) * ஆனந்தமயமாயுள்ளவர் பரப்பிரமசிவபிரான் என்று (௧. ௧. ௧௩) னும், இங்கே மயம் என்றது அன்னமயம் பிராணமயம் மநோமயம் வரையில் விகாரசப்தத்தினும் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்பவற்றில் மிகுதிப் பொருளினும் சென்றதென்று (௧. ௧. ௧௪) னும், தம் அன்பர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றூர் என்று (௧. ௧. ௧௫) னும், "சத்திய ஞான அனந்தமாகிய பிரமமே" "உள்ளே உள்ள ஆனந்தமயமாகிய ஆன்மா" என்று தைத்திரீயமந்திரத்திற் கூறப்பட்டதென (௧. ௧. ௧௬) னும் கூறப்படலான், சிவப்பிரமமாகிய சத்து ஆனந்த மிகுதிக் குணத்தையுடையதென்றும், இந்தச் சிவனுரே சூரியமண்டலத்துள்ள பொன்மயபுருஷராக அந்தரதிகரணத்தில் (௧. ௧. ௨௧, ௨௨) கூறப்பட்டாரென்றும், பிராணுகாசபரப்பிரகிருதிரூப பரமாகாசமே சிவபெருமான் என்று (௧. ௧. ௨௩, ௨௪)ற் கூறப்பட்டதென்றும், பரமாகாயம் (௧0௫-ம் இலக்கத்திற் கூறியாங்கு) பிரமத்துக்குப் பராசத்தியாய் முடிந்ததென்றும், அதனுல் இந்தப் பிரமசூத்திரமுதற்பாதம் முற்றினும் பிரதிபாதிக்கப்பட்ட பிரமம் சகுணப்பிரமமாமன்றி நிர்க்குணப்பிரமம் அன்றுமென்றும் ஓர்க.

(௩-அகூ) இந்தச் சகுணப் பிரமத்தை உபாசிப்போர்க்கு எய்தும் பயன் பிரமலோகம் (சிவலோகம்) என்பதுபோதரப் "பிரமலோகத்திருந்து புநராவர்த்தி இல்லை, புநராவர்த்தி இல்லை" என்று (சாந். அ. ௧௫. ௧) ற் கூறிய பொருளே பிரமசூத்திரத்திறுதியில் "மீளத்திரும்புதல் இல்லை, மீளத்திரும்புதல் இல்லை" என்று சூத்திரிக்கப்பட்டது.

(௩-௯0) பிரமசூத்திரமானது (௧. ௧. ௧) ற் பிரமத்தைச் சகுணமாக உபக்கிரமத்தினும், அந்தப் பிரமத்தை உபாசிப்போர்க்கு எய்தும் பயன் பிரமலோகம் என்று உபசங்காரத்தினுங் (௪. ௪. ௨௨) கூறுதலாகிய உபக்கிரமோபசங்காரலிங்கத்தினுல், பிரமசூத்திரஞ் செய்த வியாசர் தாற்பரியம் சகுணப்பிரமத்தின்பாலதேயாம்.

ஸர்வஜ்ஞ ஸர்வஶக்தி ஶ்ரீபரோ ஜகதாம் ஜந்மஸ்திதி லயகாரணமி
த்யுபக்ரமஸ்ய வ்ருத்திகாரஸம் ந்யாயமேவம் வ்ருத்திகாரிதம்॥

---

* கௌன்மவாத சர்வசாரோபநிடதத்திற் கூறப்பட்ட ஆனந்தமயப் பொருள் ஈண்டுச் செல்லாது.

(கூகக) "ஜகத்தின் சிருட்டி திதி சங்காரங்களுக்குக் காரணர் சர்வஞ்ஞரும் சர்வசத்திமானுமாகிய ஈசுவரர் என்று நியாயபூருவமாகப் பிரதிபாதிக்கப்பட்டது" என்று ஏகான்மவாதியார் தமது (க. க. கக) ஞ் சூத்திரபாடியத்திற் கூறலான், அவர் கருத்தும் நம் கருத்துக்கியையச் சகுணப்பிரமத்தின்பாலதாயிற்று.

(கூகஉ) முதற் பத்துச் சூத்திரபாடியமே நியாயபூருவமாகப் பிரதிபாதிக்கப்பட்டதென்று கூறும் அவர் வாயினாற்றானே, எஞ்சிய சூத்திரங்களுள்ளே சிற்சில இரண்டாகப் பிளக்கப்பட்டும், சிற்சில நீக்கப்பட்டும், சிற்சில புதிதாய்ப் படைக்கப்பட்டும், அதிகரணங்கள் அளவுக்கு மேலே நீட்டப்பட்டும், சீவான்மா பொய் என்று திரித்துணர்த்தப்பட்டும், கடாகாய மகாகாயங்கள் புகுத்தப்பட்டும், இரச்சு சர்ப்பங்கள் விரிக்கப்பட்டும், உயர்ந்த சகுணப்பிரமம் நிர்க்குணமெனத் தாங்கொள்ளும் பிரமமாகிய (சீவ) ஆன்மாவுக்குக் கீழென்று தாழ்த்தப்பட்டும், தாழ்ந்த (சீவ) ஆன்மாவானது நிர்க்குணப்பிரமம் எனச் சிவபதிக்கு* மேலாக உயர்த்தப்பட்டும், உடன்பாட்டெதிர்மறைக்குணங்களாற் கூறப்படும் ஒரு பிரமமானது இரு பிரமங்களாகப் பிளக்கப்பட்டும், நியாயபூருவமாகாமற் பாடியம் பிழையற்றுப்போகாதிருக்க இயற்றப்பட்டதெனச் சித்தித்தது.

(கூகங) வியாசருக்குச் சகுணப்பிரமமொழிந்து நிர்க்குணப்பிரமத்திலே தாற்பரியமுளதாயின், நிர்க்குணப்பிரமத்தைக் கூறற்கியன்ற நெறியினாலன்றோ முதற்சூத்திரஞ் செய்திருத்தல் வேண்டும்; வியாசருக்கு அமுக்கியம் எனப்பட்ட நிர்க்குணப்பிரமம் ஏகான்மவாதியார்க்கு முக்கியமாயும், அவ்வியாசரால் முக்கியம் எனக் கொள்ளப்பட்ட சகுணப்பிரமம் ஏகான்மவாதியார்க்கு அமுக்கியமாயும் முடிந்ததே!! அந்தோ! அந்தோ!! அந்தோ!!!

(கூகச) | யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம |

என்னும் தைத்திரீயசுருதியே ஏகான்மவாதியார் உதகரித்த பிரகாரம் (க. க. க, உ) ஞ் சூத்திரங்களுக்கு ஆதாரமாய் நின்றது. "ஆகாய (பராசத்தி) சரீரமுடையது பிரமம்" என்றும், "இந்த ஆகாசம் ஆனந்தமாகாவிடின்" என்றும், "ஆனந்தமுடையது பிரமம்" என்றும் பலபிரகாரமாக அந்தப்

---

* "ஆண்டவன்றன்னை யடிமை யென்றுரைப்பாரடிமையை யாண்டவனென்பார்
மாண்டகுபதியைப் பசுவென்றும் பசுவைப் பதியென்று மதித்தனையிகழ்ந்தே
தாண்டரு நிரயக் கிடங்கினில் வீழுஞ் சழக்கரோடிணங்குறுவரமே
வேண்டினேனருளாய் கலைசைமாநகரின் மேவி வாழ்ந்தருள் பசுபதியே"
என்றார் ஸ்ரீசிவஞானசுவாமிகள்.

பிரமம் தைத்திரீயத்திலே சகுணப்பிரமமாய் நிற்ப, ஏகான்மவாதியார்க்கு நிர்க்குணப்பிரமம் என ஒன்று தைத்திரீயத்துள் எங்ஙனம் வாய்த்ததோ? இந்தச் சகுணப்பிரமசுருதியை விடுத்து, இவர் "இரச்சுவிற் சர்ப்பத் தோற்றம் போல, பிரமத்தோடியைந்த அநிர்வசநீயமாயையில் நின்று உலகத்தோற்றம் எய்தும்" என்று விவர்த்தவாதங் கூறுஞ் சர்வசாரமுதலிய உபநிடத ஏகான்மவாதசுருதியை ஈண்டு உதகரிக்க மறந்ததென்னையோ? இங்கே முதற் சூத்திரப் பிரமம் தனக்கு இலக்கணங் கூறிய இரண்டாஞ் சூத்திரத்தினுலே சகுணப்பாற்பட்டுப்போக, அவர் மீட்டும் உதகரித்தற்கு எடுத்தாளும் மந்திரங்களுக்கு ஆதாரமாய்நின்ற சாந்தோக்கிய முதலிய சுருதிகளெல்லாம் உபநிடத உபக்கிரமணிகையிற் கூறியாங்கு சகுணப்பிரமத்தின்பாற்பட்டமையானும், அவர் ஆன்மா பிரமம் என விசேடணமின்றிக் காணப்படும் சொற்கள் அமைந்த வாக்கியங்களை நிர்க்குணமென நினைந்து எடுத்துவிடுப்பாராக, அவைகளெல்லாம் முன் பின் உள்ள சகுணச் சுருதிகளால் நசுக்குண்டு போதலினுலும், இவர் எவ்வுபநிடதத்து எச்சுருதிகொண்டு நிர்க்குணப்பிரமத்தை ஸ்தாபிக்கவல்லுநராவரோ!! சகுணப் பிரமத்தைக் கூறினும் நிர்க்குணப்பிரமத்திலே தாற்பரியம் என்று வெறும் வாயாற் கூறலாமன்றி, பிரமாணசகிதமாய் ஸ்தாபிக்க ஏகான்மவாதிகள் எவரும் வல்லுநராகார்!!!

(௫௯௫) ஏகான்மவாதியார்க்குப் பிரம சூத்திரத்து முதற்கண் நின்ற சிருட்டியாதிக்கு நாயகமாகிய பிரமமே அவர் கருத்துப் பிரகாரம் ஈசுரனாய், கற்பிதமாய்ப் போக, முதற்கோளுதலாற் பின் நின்ற சூத்திரமனைத்துஞ் சகுணப்பிரமப்பாற்பட்டு முற்றும் கற்பிதமாய்க் கோளுதலடைய, வியாச சூத்திரமுழுமையும் நிர்க்குணப்பிரமத்தைக் கூருமையின், அவர்க்கு அவை வியர்த்தமாய்ப் போயின என்றன்றே கொள்ளப்படும்!!!

(௫௯௬) சர்வத்திரப்பிரசித்தாதிகரணத்து (க. உ. க) ல் மநோமயம் (ஞானமயம்) என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படுங் குணங்களையுடையவர் சிவபெருமான் என்றும்,

விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச ।

(௫௯௭) "உரைக்கப்பட்ட குணங்கள் பொருத்தமாதலினுலும்" (க. உ. உ) என்னுஞ் சூத்திரத்தினுற் சத்தியசங்கற்பத்துவம் சர்வகாமத்துவ முதலிய குணங்களும் அச்சிவபெருமானுக்கே வாய்ந்த குணங்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஸர்வவிஶிஷ்டாஹியாநா ஷேவ அ ।

(ங்கூஅ) "(அவர்) ஆனந்த குண விசிஷ்டமுடையராகவே கூறப்படலானும்" என்று அந்தராதிகரணத்து (க. உ. கரு)-ம் சூத்திரமே நேரே சிவனைச் சகுணரென்று கூறிற்று. ஈண்டு,

கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம |

"ஆனந்தம் பிரமம், ஆகாயம் பிரமம்," என்று (சாந். ச. கo. ரு) உதகரிக்கப்பட்ட மந்திரத்துள்ள (கம்) ஆகாயமும் (ககரு-ம் இலக்கத்திற் கண்டவாறு) பராசத்தியின் மேற்றுமதலின், ஆகாயமாகிய பராசத்திவிசிட்டர் சிவபெருமான் என்றும் பெறப்பட்டது. இந்தச் சூத்திரம் ஆனந்தசத்தி விசிட்டமுடையது பிரமம் என நேரே கூறுமையான்,

அத ஏவ ச ப்ரஹ்ம|

(ஙகூகூ) (ஆனந்தகுணவிசிஷ்டமுடையராகக் கூறப்படும்) "அந்நியாயத்தினல், அவர் பிரமம் என்று (க. உ. கசு) வது அடுத்த சூத்திரம் கூறிற்று. ஈண்டு (க. உ. கரு) ல் "ஆனந்த விசிட்டமுடைமையான்" என்று கூறி, அந்த ஆனந்த விசிட்ட குணமுடையது பிரமம் என்று (க. உ. கசு)ற் கூறப்படுமாயின், சூத்திரகாரர் கருத்தும் உபநிடதங்களின் கருத்தும் சகுணப்பிரமத்திலா? நிர்க்குணப்பிரமத்திலா? தாற்பரியம் என்பதை விவேகிகள் எவரும் எளிதில் ஆராயற்பாலர்!

அந்தரியாமியதிகரணத்தில் (க. உ. ககூ—உக)

அந்தர்யாம்யதிதைவாதிஷு தத்தர்மவ்யபதேசாத் (க. உ. ககூ)

(சoo) "தேவர்களினும் உலகமுதலியவைகளினும் அந்தரியாமியாய் இருப்பவர் அவரே; அவர் குணங்கள் கூறப்படலான்" என்று சூத்திரம் கூறுதலானும், அங்ஙனம் பாடியத்தினும் அந்தரியாமித்துவாதி குணங்களுடையர் என்றும், அதர்வசிரசிற் கூறப்படும் ஐசுவரியாதி மங்கல குணங்களுடையராதலிற் பகவன் எனப்பட்டனர் என்றுங் கூறப்படலானும், ஈண்டு அந்தரியாமியதிகரண சூத்திரத்தினும் சகுணப்பிரமமே கூறப்பட்டதாயிற்று. "அந்த அக்ஷரம் (பிரமம்) எதனால் உணரப்படுகின்றதோ, அது பரைஞானம்; எது காணப்படாததாய், பற்றப்படாததாய், கோத்திரமிலாததாய்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறும் (முண். க. க. ரு, சு)-ம் மந்திரங்களை ஆதாரமாய்க்கொண்டு எழுந்த

(சoக) அத்ருச்யத்வாதிகுணகோ தர்மோக்தே: (க. உ. உஉ)

என்னும் சூத்திரம் "அத்திருசியத்துவமாதனமை முதலிய குணங்களையுடையவர் (சிவபெருமான்); அவர் குணங்கள் கூறப்பட்டமையின்" என்று கூறி, சிவ

பெருமானார் அம்முண்டகோபநிடதத்திற் கூறப்பட்ட இலக்கணங்களை யுடையர் என்று குறிப்பித்தது. இங்கே அருவிலுள்ளிக் காணப்பட்டார், உலகத்துப் பொருள்போலப் பற்றப்படார் என்பதுணர்த்தற்கு அதிருசியர் அக்கிராகியர் என்றும், (கன்மத்தினால் நமக்கு வாய்த்த கோத்திரமுதலிய இன்மையின்) அகோத்திரர் என்றற்றொடக்கத்தினராகக் கூறப்பட்டனர் என்றுமோர்க.

இந்தச் சூத்திரம் சிவபெருமானைக் குணங்களையுடையர் (குணக:) என்று தெளிவாகக் கூறலானும், ஈண்டும் சகுணப்பிரமமே கூறப்பட்டதென்பது வெளிப்படை. அக்ஷரப்பிரமசிவனுக்கு அதிருசியத்துவம் நித்தியத்துவம் வியாபகத்துவமுதலிய குணங்களைக் கூறின்றே தொடமையாது

யः ஸர்வஜ்ஞः ஸர்வவித் (முண். க. க. கூ)

(சா௦உ) அவரைச் "சர்வஞ்ஞர் என்றும், சர்வவித்தென்றும்" அம்முண்டகமானது கூறுகின்றது. ஆகலின், (பிரு. ௫. அ. எ—கஉ) ற் கூறப்பட்ட அக்ஷரப்பிரமமும், இந்த முண்டகத்தில் (க. க. ௫, கூ) ற் கூறப்பட்ட அக்ஷரப்பிரமமும் ஒன்றும் என்றும், இரண்டும் நிர்க்குணப்பிரமமாகாத ஒரே சகுணப்பிரமமாம் என்றும் அறிக.

அக்ஷராதிகரணத்தில் (க. ௩. கூ—கக)

அக்ஷரமம்பராந்ததிः|

(சா௦௩) "அக்ஷரம் ஆகாயம் இறுதியாயுள்ள அனைத்தையும் தாங்குதலான்" என்னும் (க. ௩. கூ) ம் சூத்திரத்தில், அம்பரம் (ஆகாயம்) பராசத்தி என (க௦ச-ம், ககஎ-ம் இலக்கங்களில்) நிரூபிக்கப்பட்டதன்றோ. சமஸ்தப் பிரபஞ்சத்தையும் தாங்கும் ஆகாயமாகிய பராசத்தியார்க்கு நிலையம் அக்ஷரப் பிரமமாகிய சிவபெருமான் என்று பெறப்படலான், இந்தச் சூத்திரமும் சகுணப்பிரமத்தின்பாலதே. ஸ்தூலமன்று அணுவன்று என்றற்றொடக்கத்தனவாக (பிரு. ௫. அ. அ) ற் கூறப்பட்டனவெல்லாம் சகுணப்பிரமத்தைச் சாரும் என்பாராய், வியாசர் ஆகாயாந்தமாகிய அனைத்துக்கும் நிலையும் சிவபெருமான் என்றும், அக்ஷரப்பிரமம் பராசத்தி விசிஷ்டமுடையுதென்றும் கூறுவாராய், "அக்ஷரப்பிரமமானது ஆகாய (பராசத்தி) இறுதியாகிய அனைத்தையும் தாங்குதலான்"

(சா௦ச) அக்ஷரமம்பராந்ததேः (க. ௩. கூ)

என்று சூத்திரித்தார். இங்ஙனம் கூறுதலோடமையாது (க௦ ககஉ ௯௦) ல் "அந்த அக்ஷரத்தின் பிரசாசனத்திலும் (ஆஞ்ஞையிலும்) (கஉ௦-ம் இலக்கத்திற் கண்டவாறு) எல்லாம் நடைபெறுகின்றன" என்றது, புருஷனுக்கு

[illegible]த்தையும் இயக்கும் [illegible] பராசத்தியையுடையது பிரமம் என்றும், அது சகுணப்பிரமமாமன்றி நிர்க்குணப்பிரமமன்று என்றும் போதர, அன்னணம் வலியுறுத்துவாராய்ச் சூத்திரஞ் செய்தார்.

தகராதிகரணத்தில் (க. ங. கங—உஉ)

தஹர உத்தரேப்⁴ய꞉ (க. ங. கங)

(சஂ௫) "தகரம் சிவபெருமான்; அடுத்துக் கூறப்படும் குணங்களுண்மையான்" என்று சூத்திரம் கூற, (சாந், அ. க. க) ல் தகராகாயம் கூறப்பட்டு அடுத்த (சாந், அ. க. ரு) ல் "அபகதபாப்மத்துவாதி" (சர்வஞ்ஞதாதி) எண்குணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தத் தகராகாசமாகிய ஆன்மப் பிரமம் அபகதபாப்மத்துவாதி குணங்களையுடையதென்று சூத்திரமே வெளிப்படையாய்க் கூறுதலான், எல்லாவித்தைகளுள்ளுஞ் சிறந்த தகரவித்தியாகாசப்பிரமஞ் சகுணப்பிரமம் என்பது தெள்ளிது.

த்⁴ருதேஶ்ச மஹிம்நோ(அ)ஸ்யாஸ்மிந்நுபலப்³தே⁴꞉ (க. ங. கரு)

(சஂசா) "இதிலே (தகராகாசத்திலே பிரபஞ்சத்தை) தாங்குதலாகிய அவர் புகழுங் காணப்படலான்"

என்னுஞ் சூத்திரத்தினால் அந்தப் பிரமத்துக்கு மகிமை (புகழ்) என்னும் குணம் கூறப்படுகின்றது. (க. ங. உஉ) ல் தகராகாயத்துப் பரமான்மாவைப் பரமானந்த வடிவினர் என்று ஸ்மிருதி கூறுவதாகப் பிரமாணம் காட்டப்பட்டிருக்கின்றது. (க. ங. உங, உச) பிரமிதாதிகரணத்து (க. ங. உங) ல் உபாசகர்பொருட்டு அங்குஷ்ட அளவினராய் நின்றனர் என்றும், இவர் சிவபெருமான் என்றும், பிரமசூத்திரம் செய்த வியாசர் கருத்துச் சிவபெருமான்மீதன்றி நிர்க்குணப்பிரமத்தின்பாலதன்று என்றும் அறிவுறுத்துமாறு அப்பயதீக்ஷிதர்,

(சஂஎ) நிஸ்ஸ்[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ஶிவபரமேவ [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இதி|

பிறகய மாகும் புருடனங் குட்டப் பிரமிதி தனைவிரும் பரம
லறவனே புனதீ சானகற் சுருதி யாற்பர மென்றுரிச் சயித்தோன்
[illegible]
[illegible]
[illegible]

அங்ஙனமாயின், ஏகான்மவாதிகள்பொருட்டு அப்பயதீக்ஷிதர் தாம் எழுதிய சித்தாந்தலேசசங்கிரகத்தினுள் இறைவிலை அறப்பது ஏகான்மவாதியார் (சூக்தி) திருவாக்கென்று கூறியிருக்கின்றாரெனின், அது ஒவ்வாது; (கூடு—கூஎசும் இலக்கவரையிற் கூறியாங்கு), சகுணம் (பௌதிகயோகம்), நிர்க்குணம் (சாங்கியயோகம்), அத்தியாசிரமம் (பாசுபதயோகம்) என யோகங்கள் மூன்றென்று கூர்மபுராணம் வெளிப்படையாய்க் கூறி, அவற்றுள்ளே நிர்க்குணபாவனை (சாங்கியயோகம்) இரண்டாவது பாவனை என உரைத்தவிடத்தும், பிரமகீதையில் ஐந்தாம் அத்தியாயத்து நூற்றிருபத்தெட்டாம் சுலோகத்தில் இந்த நிர்க்குணப்பிரமநிலைக்கு மேலாக மற்றோர் நிலையில்லையென்று பிரமாவானவர் அக்கினி மழுவேந்திச் சத்தியஞ் செய்தார் என்று கூறி அப்பிரமாவைப்பொய்ச் சத்தியத்துக்கு ஆளாக்கியும், நீலகண்டசிவாசாரியர் அருளிய சைவபாடியத்துள்ளும், அப்பயதீக்ஷிதர் எழுதிய சிவார்க்கமணிதீபிகையுள்ளும் புகட்டுரைகள் செய்தும், அத்துவிதயோகியார் வரைந்த இரத்தினத்திரயபரீக்ஷை, ஆனந்தலகரி, சிவாத்துவைத நிர்ணய முதலிய கிரந்தங்களில் வேண்டியவாறு திரித்துத் திரித்து எழுதியும் வைத்த ஏகான்மவாதக் குழுவினர்க்கு அச்சித்தாந்தலேசசங்கிரகத்துமுதற் கண் அங்ஙனம் இயைத்துவைத்தல் அரிதன்றுமாதலின்.

(க. ங., சஉ—சச) அர்த்தாந்தரத்துவாதிவியபதேசாதிகரணத்து,

ஆகாசோ ர்த்தாந்தரத்வாதி வ்யபதேசாத்|

(௬௦அ) (க. ங. சஉ) ல் "ஆகாயம் சிவபெருமான், அவர் பிறவன்ன முதலியவைகளுக்கு வேறாகக் கூறப்படலான்" என்னுஞ் சூத்திரத்திலே பராசத்தியாகிய ஆகாயமாயுள்ளார் சிவபெருமான் என அறியப்படுகின்றது.

இருத்சிநப்பிரசத்தியதிகரணத்தில்

ஸர்வோபேதா ச தத்தர்சநாத் (உ. க. ௩௦)

"அவரது சத்தி அனைத்தையும் கூடிற்று என்று சுருதியிற்காண்டலான்" என்னும் சூத்திரத்தில் அவருக்குச் சத்தியாவார் பராசத்தி என்று (சுவே. ௬/ அ) உதகரிக்கப்படலான், அவர் பராசத்தியுடையார் என்று அறியப்படுகின்றது.

சர்வதர்மோபபத்தியதிகரணத்தில்

ஸர்வதர்மோபபத்தேஸ்ச (உ. க. ௩௬)

(௬௦க) "சர்வகுணங்களும் அவருக்கு இயைதலானும்" என்னும் சூத்திரத்தில், பிரதானம், அணு, கன்மம், காலமுதலியவற்றுக்கின்மையில்

மாத) எல்லாக் குணங்களும் சிவபெருமானுக்கே உரியவெனச் சூத்திரமே கூறுதலான், வியாசர் கருத்துமுழுதும் சகுணப்பிரமத்தின்பாலதாம்.

பராபித்யாநாத்து திரோஹிதம் ததோ ஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ (௩. ௨. ச) ௲

(சக0) "பரத்தின் (சிவனுர்) சங்கற்பத்திஞல் அது திரோபவிக்கப் பட்டது" என்றற்றொடக்கத்த சூத்திரத்தில் தியானம் என்றது சங்கற்பத் தின் பெயராய்ப் பிரமத்துக்குக் குணமாயிற்று.

(சகக) உபயலிங்காதிகரணத்தில் (௩. ௨. கக—உ0) சிவபெருமா னுக்கு உடன்பாட்டானும் எதிர்மறையானும் கூறப்படும் இரு குணங்கள் எடுத்தெடுத்துக் கூறப்பட்டுள்ளன. "சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என் றும், "சர்வஞ்ஞர்" என்றும், "சர்வகதர்" (சர்வவியாபகர்) என்றும், "சத்தியசங்கற்பத்துவம் சத்தியகாமத்துவம்" என்றும் சுருதிகளிற் கூறப் பட்டனவெல்லாம் உடன்பாடுமுகத்தாற் கூறப்பட்ட குணங்கள்; "ஸ்தூல மன்று, அணுவன்று, நீட்டமன்று, குறுக்கமன்று" என்றற்றொடக்கத்தன வாகவும், "நிர்க்குணம், நிஷ்கிரியம், நிரஞ்சனம்" என்றற்றொடக்கத்தனவாக வும் கூறப்படுவன எதிர்மறைமுகத்தாற் கூறப்பட்ட குணங்கள்; உடன் பாட்டுக் குணங்களைமாத்திரம் கூருது எதிர்மறைக்குணங்களைக் கூறிய தெற்றுக்கெனின், "சத்தியஞானனந்தாதி" உடன்பாட்டுக் குணங்கள் பிறபொருள்களாற்றொடக்குண்ணுங் குற்றம் ஒன்றும் பற்றுது தூயனவாய் நிற்பன என ஸ்திரப்படுத்தற்காம்; "அவர் பிருதிவியில் நின்றூர், அப்புவில் நின்றூர், ஆன்மாவில் நின்றூர், திக்குகளெல்லாம் பிரவேசித்துளார்" என்றற் றொடக்கத்தனவாகப் பிருகதாரணியம், மத்தியந்தினசாகை, அதர்வசிரசு முதலியவைகளிற் கூறப்பட்டவிடத்தும், அவர் ஸ்தூலமாய், அணுவாய், நீட்டமாய், குறுக்கமாய் நிற்கும் உலகத்துச் சடப்பொருள்களையெல்லாம் வியாபித்து நின்றூரேனும், அநாதிமலத்தினையுடைய பசுக்களோடு கலந்து நின்றூரேனும், அச்சடப்பொருள்களின் தூலத்துவமேனும், அணுத்துவ மேனும், நீட்டம் குறுக்க முதலியவேனும், பசுக்களின் அஞ்சனமேனும் (மலமேனும்), (சாத்துவிக இராசச தாமச) குணங்களேனும், அப்பசுக்களுக் குரிய தொழில்களேனும் சிறிதும் அவரைத் தொடக்காவென்றுணர்த் தற்குமாமெனக் கொள்க. ஆன்மாக்களுடைய கைகால் முதலியவைகளாய் நின்றூரேனும், இந்தப் பிராரப்த கன்மத்துக்குரிய கைகால் முதலிய அங்கங் கள் அவருக்கு இல்லை என்பவாய் "அபாணி அபாதம்" என்றற்றொடக்கத்த னவாகச் சுருதிகள் புகழ்ந்தன என்றும், அச்சட அசடப்பொருள்களுள்ளே நின்று தாம் இயக்குவாரேனும் அச்சடப்பொருள்களாலேனும் பசுக்களா

லேனும் காணப்படாமலும் கேட்கப்படாமலும் நின்று தானேயனைத்தை யெல்லாம் காண்டல் கேட்டல் செய்வராதலின், "அதிர்ஷ்டோ த்ரஷ்டா அசுருத: சுரோதா" (அத்ருஷ்டோ த்ரஷ்டா அஶ்ருத: ஶ்ரோதா) என்ப (பிரு. ௫. எ. உ௩) ம் சுருதி கூறிற்றென்றும், பசுக்களுக்குரிய பசியே னும், ஜரையேனும், மிருத்தியுவேனும், சோகமேனும், பசியேனும், தாக மேனும் அவருக்கு இல்லை என்பனவாய்ச் (சாந். அ. க. ௫) வரு சுருதி முதலிய அவருக்கு அபகதபாப்மத்துவாதி குணங்களை விதந்தெடுத்தோதின என்றும், இங்ஙனம் எவ்வகைத் தோஷங்களும் பற்றாமையால், சர்வஞ்ஞதை சத்திய ஞானானந்த முதலிய கல்யாணகுணங்களுக்கெல்லாம் அவர் ஆஸ்பத மாயினர் என்றும் வலியுறுத்தப்படுகின்றன. ஆகலின், உடன்பாட்டு எதிர் மறைக்குணங்களால் ஒரே சகுணப்பிரமமே வேதாந்த சூத்திரத்திலும், அதற்கு ஆதாரமாய் நின்ற உபநிடதங்களினும் பிரதிபாதிக்கப்பட்டதேயாக, நிர்க்குணப்பிரமம் என மற்றோர் பிரமம் முக்கிய உபநிடதங்களினும், வே தாந்த சூத்திரத்திலும் கூறப்பட்டதெனச் சாதிக்கப்போந்தமை முற்றும் வழு! முற்றும் வழு!! அங்ஙனம் ஒன்றுள தென்று கூறுபவரெல்லாம் சுருதிகளுக்கு இதிகாசபுராணங்கொண்டு பொருண்முடிக்காது, அச்சுருதி களுக்குத் தாமே தோர்ந்தவாறு பொருள் செய்து அவற்றைக் கொன்ற வரே யாவர்; ஒரே சகுணப்பிரமம் கூறப்பட்டதென்னும் உண்மையை (௩. உ. சஉ) ஆஞ் சூத்திரமுதலியவற்றிற் காண்க. (பிரு. ௪. ௩. ௬. ஆம், ௬. உ. ௪. ஆம், ௬. ௪. உஉ. ஆம், ௩. ௫. ௩௫) ஆங் காணப்படும் "நேதி நேதி" என்னும் பிரயோகம் பிரமத்துக்குமேல் மற்றோர் வஸ்து இல்லை என்றுணர் த்தற்காம். இவ்வுண்மை (௩. உ. உக) என்றற்றொடக்கத்து சூத்திரங்களிற் பார்த்துணர்க.

ப்ரகாஶவச்சாவையர்த்யாத் (௩. உ. கரு)ல்

(சகஉ) பிரகாசம் போன்று அவர் திவ்ய குணங்களுடையர், சிவ பெருமானுக்கு நூற்றுக்கணக்காகிய குணங்கள் இருப்பனவாக, அக்குணங் கள் அவர்க்கு இல்லையென்று சாதிக்கத்துணிதல் அக்குணங்களை விதந்தெ டுத்தோதிய சுருதிகளையெல்லாம் வியர்த்தமாக்கிவிட்டதாய் முடியுமென் றும், ஆகலின் அநேக கல்யாண குணங்களுக்கு ஆஸ்பதமாயினர் சிவபெரு மான் என்றும் அறியற்பாற்று.

ஆஹ ச தந்மாத்ரம் (௩. உ. கசு) (ஸ்ரீ.)

(சகந) "சுருதியும் அவ்வளவுமாத்திரம் கூறுகின்றது" ([illegible]) திரத்தினால் சத்திய ஞான மனந்தம் பிரமம் என்று அவ்வளவு மாத்திரம்

கூறிய சுருதியினது அடுத்துத் தொடர்ந்து பிரமத்துக்கு அங்கே கூறிய (சர்வஞ்ஞத்வ) விபச்சித் என்னுங் குணத்தை மறுக்கவில்லை; ஆகலின், சகுணப் பிரமமே சூத்திரங்களிற் பிரதிபாதிக்கப்படுகின்றதென்பதை அது வலியுறுத்துகின்றது.

ஸர்வாபேதாச்ச ததர்சநாத் (௩. ௨. ௨௫)

(௪௪) "அவர் அனந்த குணங்களோடியைந்தவர்; ஆகலின், அவர் இயல்பை" என்னுஞ் சூத்திரத்திலும் கூறப்படும் பிரமம் சகுணத்தின் பேற்று.

அநேந ஸர்வகதத்வமாயாமஸப்தாதிப்ய: (௩. ௨. ௩௧)

(௪௫) "அதனால் அவருக்குச் சர்வவ்யாபகம்; ஆயாமமாகிய விஸ்தீரணமுதலிய சப்தங்களுண்மையின்" என்னுஞ் சூத்திரம் சிவபெருமானுக்குச் சர்வஞ்ஞத்துவம் சர்வவியாபகத்துவம் என்னும் குணத்தைச் சாற்றுகின்றது.

உபஸம்ஹாரோ அர்த்தாபேதாத் விதிசேஷவத்ஸமாநே ச (௩. ௩. ௫)

(௪௬) "அர்த்தத்திற் பேதமின்மையின் (குணங்களைப்பற்றி) உபசங்கரஞ் (செய்யப்படல் வேண்டும்); விதியின் சேஷங்களிற் போலவே (உபாசனவிஷயத்திலுஞ்) சமானமுமாம்" என்னுஞ் சூத்திரத்தில் உபநிடதங்களிலே தகாலித்தியாசம்பந்தமாகக் கூறப்பட்ட குணங்கள் தகரோபாசனையில் உபசங்கரிக்கப்படல்வேண்டும் என்று கூறுகின்றமையின், உபாசனைகள் அனைத்திலும் பிரமத்தின் குணங்கள் தியானிக்கப்படல்வேண்டும் என்னும் நெறி பெறப்படுகின்றது.

ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய (௩. ௩. ௧௧)

(௪௭) என்னுஞ் சூத்திரம் "முக்கியப்பொருளாகிய பிரமத்துக்கு ஆனந்தாதிகுணங்கள் தியானத்தில் ஒருங்கு கொள்ளப்படல் வேண்டும்" என்று கூறுகின்றது.

ஸைவ ஹி ஸத்யாதய: (௩. ௩. ௩௭)

(௪௮) "தேவதை ஒன்றே பேசப்பட்டது; சத்திய முதலிய குணங்கள் கூறப்பட்டமையின்" என்னுஞ் சூத்திரபாஷ்யத்தில் மகாதேவராகிய (தேவதைக்கு) சத்தியமுதலிய குணங்கள் வர்ணிக்கப் பெறப்படுகின்றன.

[illegible] (ஈ. ஈ. ஈ(அ)[illegible])

(சகக) "(சத்திய) காமாதி குணங்கள் அங்கங்கே உபசங்கரிக்கற்பாலன" என்று கூறப்பட்டமையின், (பிரு. அ. க. ரு) ல் தகரவித்தியா சம்பந்தமாகக் கூறப்பட்ட சத்தியகாம சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் உபசங்கரிக்கற்பாலன என்று கூறப்பட்டிருக்கின்றது.

[illegible] (ஈ. ஈ. ஈக)

(சஉ0) என்னுஞ் சூத்திரத்தினால், அவருக்கு உமாசகாயத்துவம், அனுக்ரகசக்தித்துவம், கிருஷ்ணபிங்களத்துவம், விருபாக்ஷத்துவ முதலிய குணங்களைத்தும் உபாசகன் உபாசிக்குங்கால் உள்ளவாகி, பின் இல்லாது போகவில்லை, அவை எப்போதும் பரப்பிரமத்தை விட்டு நீங்காதனவாம் என்று கூறப்படுதலின், வியாசசூத்திரமுழுமையும் சகுணப்பிரமத்தையே பிரதிபாதிப்பனவாயின.

(சஉக) சூத்திரகாரரும் நீலகண்டசிவாசாரியரும் பிரமத்துக்கு உடன்பாட்டானும் எதிர்மறையானுங் கூறிய குணங்களின் உண்மை அறிய மாட்டாது, உடன்பாட்டுக் குணங்களாற் கூறப்படுங்காற் சகுணப்பிரமம் என ஒன்றும், எதிர்மறைக் குணங்களோடேனும், வாளா சத்து, பிரமம், ஆன்மா என்று தனிச்சொற்களோடேனும் சுருதி கூறப்படுங்கால் நிர்க்குணப்பிரமம் என மற்றொன்றுமாக இரு பிரமங்கள் உபநிடதங்களினும் வேதாந்த பிரம சூத்திரங்களினும் பிரதிபாதிக்கப்பட்டன என்று ஒரே பிரமத்தை இரண்டாகப் பிளக்கப்போந்தமை ஏகான்மவாதியார்க்கு அடாது. (ஈக அ-ம் இலக்கத்திற்) கண்ட (க. உ. கரு) ஞ் சூத்திரத்திலே "சுகவிசிட்டமுடையராக (ஆனந்தவிசிட்டமுடையராகக்) கூறப்பட்டமையின் அவர் (சிவபெருமான்) பிரமம்"

(சஉஉ) [illegible] (க. உ. கஅ)

என்னும் சூத்திரத்தைத் தமது வேதாந்த பிரமசூத்திரத்தினின்று இல்லா தொழியச்செய்தனர். இச்சூத்திரம் நீலகண்டசிவாசாரியருடைய மதத்துக்கு இசைவாயிருத்தலினானும், ஏகான்மவாத நிர்க்குணப்பிரமக்காரர்க்கு விரோதமுற்றிருத்தலினானும், அவர் அப்பிரமசூத்திரத்தைச் சூத்திர எல்லையினின்று நீக்கிப் பரதேசத்துக்கனுப்பிவிட்டார். இதனாலேனும் சூத்திரங்கள் ஒருபுறமிருப்ப, ஏகான்மவாதியரும் மற்றோர் புறமாகப் பாடியஞ் செய்தனர் [illegible] ॥

[illegible]
[illegible]

(சவஅ) "பிரமசூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரங்களின் தாற்பரியம் சகுணசிவத்திலேயாம்; இதனை உலகத்துக்குப் பிரகடனஞ் செய்யும் பொருட்டே நீலகண்டசிவாசாரியர் உத்தமமாகிய பாடியத்தை இயற்றினர்" என்று அப்பயதீக்ஷிதர் சிவார்க்கமணிதீபிகை ஆரம்பத்தில் வரைந்திருக்கின்றார்.

விஶிஷ்டாத்³வைத ஶைவ ஸூத்ரகாரவ்யாஹிதாஶ:।

(சஉ௦) (சிவசத்தி குணங்களால் விசேடிக்கப்பட்ட) விசிட்டாத்துவிதமே சூத்திரகாரருடைய அபிப்பிராயம்" என்றும் அச்சிவார்க்கமணிதீபிகையுள்ளும் கூறினர். விசிட்டாத்துவிதம் என்றது சிவாத்துவிதம்; இது "சிவைகாயதாதி சிவாத்துவிதம்" என எல்லாச் சமயங்களினும் உயர்ந்ததாய், அகச் சமயங்களுள் தலையாயதாகிப் பிரமலோகம், உண்மை லோகம், பரலோகம், சுவர்க்கலோகம் எனப்படும் சிதம்பரத்தின் மேலாயிற்று. இந்தச் சிவாத்துவிதமானது தியானயோகம் எனப்படும் ஞானயோகத்தை உள்ளவாறு முக்கிய வேதாந்தங்களுக்கும் சிவாகமங்களுக்கும் மாறுபடாவண்ணங் கூறுகின்றது.

(சஉ௫) (க. க. எ. லும், க. உ. கக, கஉ. லும், க, உ. உக. லும், க, ௩. உ. லும், க, ௩. ச, லும், க. ௩. ௬. லும், க. ச. உஉ. லும், உ. க. உஉ. லும், உ. க. உ௩) லுஞ் சீவான்மாவும் பரமான்மாவும் வேறென்று கூறப்படுகின்றது. சீவான்மாவை மித்தை என்று கூறும் மாயாவாதபக்ஷம் (உ. ௩. ௪௮—௫உ) லும் கண்டிக்கப்பட்டிருக்கின்றது.

(சஉ௬) (உ. ௩. க௬) ல் ஞன் என்று சீவான்மாவைக் கூற, ஏகான்மவாதியார் ஞானம் என்று பொருள் செய்தனர். ஞன் என்பது ஞாதாவாகிய ஆன்மாவின்மேற்று. அறிவென்றது குணம்; அறிவினையுடையவன் (ஞன்) குணி என்றோர்க. இங்ஙனமாகவும், ஞன் என்றதற்கு ஏகான்மவாதியார் "அறிவு" என்று பொருள் கூறியது அடாது. பிரமமானது உபாதியினாற் கட்டுண்டு சீவான்மாவாகின்றதென்று கூறல்

ஆபா⁴ஸ ஏவ ச (உ. ௩. ௫௧)

(சஉ௭) "ஆபாசமுமே" அஃதாவது (போலி பிரதிபிம்பமாம்) என்று நீலகண்டசிவாசாரியர் கூறியிருப்ப, ஏகான்மவாதியார் "சலத்திற் சூரிய பிம்பம்போலச் சீவான்மா கற்பிதம்" என்று சூத்திரப் பொருளைத் திரித்துரைத்தனர். இங்ஙனம் கூறல் அநேக சுருதிகளுக்கு விரோதம் என்பாராய் நீலகண்டசிவாசாரியர்

(௪௨௮) ஸர்வஜ்ஞ ஸர்வ ஜ்ஞாநா ஜீவஸ்யைகத்வே ஸர்வ ஶ்ருதிவிரோதாதிதோஷப்ரஸக்தி ஸம்ப்ரதாயா |

என்று பிரமசூத்திரபாஷ்யத்தில் (௨. ௩. ௪௩) வரைந்தருளினர்.

(௨௨௯) ந வா த்வஜ்ஞாநேஹவாதிநஃ
ஶக்திகாரஜதயோரிவைகதாஸித்த்யாதேவ ந|

(௪௩௦) “நாம் இப்பி வெள்ளி என்பவற்றிற்போல, ஒன்றை (சீவான்மாவை) மித்தை என்று கூறும் அத்தியந்த அபேதவாதிகள் (ஏகான்மவாதிகள்) அன்று” (௨. ௧. ௨௨) என்றற் றொடக்கத்தனவாக மாயாவாதத்தைக் கண்டித்திருக்கின்றனர்.

(௪௩௧) சிவபெருமான் முக்தரால் அடையற்பாலர் என்பது (௧. ௧. ௭. னும், ௧. ௩. ௨) னும், அம்முத்தர் உபாசனை செய்யுமாறு (௪. ௧. ௨) னும், அவர் சிவசாமியமடைதல் (௧. ௩. ௨௧) முதலியவற்றினும், சிவபெருமான் அங்ஙனம் உபாசித்துச் சிவசாமியமுறுபவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிப்பவர் என்பது (௧. ௧. ௧௫) னும், முக்தர் ஆனந்தம் அடைவர் என்பது (௪. ௪. ௧௪. ம், ௪. ௪. ௧௯) னும், அங்ஙனமடைந்த ஆனந்தம் முடிவுகாண்கிலாப் பேரின்பமாகிய பூமா என்பது (௧. ௩. ௭) னும், அவர் எய்தும் உலகம் சிவலோகம் என்பது (௪. ௪. ௨௨) னும் அறியப்படுகின்றது.

(௪௩௨) இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்திற் பிரதான காரணவாதம், பரமாணுகாரணவாதம், பௌத்தமத நிராகரணம், ஞானஞ்ஞேயவாதம், விஞ்ஞானமாத்திரவாதம், சர்வசூனியவாதம், சைனமத நிராகரணம், (பசுபதி அதிகரணத்து) இரணியகருப்பமத நிராகரணம் (௨. ௨. ௩௫—௩௮), பாஞ்சராத்திரமத நிராகரணம் (௨. ௨. ௩௯—௪௨), மாயாவாத நிராகரணம் (௨. ௩. ௪௯) கூறப்பட்டது.

(௪௩௩) சீவான்மவிஷயம் (௨. ௩. ௧௯—௫௨) னும், (௩. ௧. ௧—௨௭) னும், (௩. ௨. ௧—௧௦) னுங் கூறப்பட்டிருக்கின்றது.

(௪௩௪) நீலகண்டசிவாசாரியர் பசுபதியதிகரணத்தில் இரண்ணிய கருப்பமதத்தைக் கண்டிக்க, ஏகான்மவாதியார் நகுலீசபாசுபதத்தையும், வைணவர் காபாலம் காளாமுகம் என்பவற்றையுங் கண்டித்தனர்; அவை நம்மாலும் கண்டிக்கற்பாலனவாதலின், அது நமக்கும் உடன்பாடே. பாஞ்சராத்திர மதத்தை நீலகண்டசிவாசாரியரும் சங்கராசாரியரும் நிராகரணஞ் செய்ய, அதற்கு உடன்படாது பாஞ்சராத்திரமதம் ஸ்தாபிக்கப்பட்டதென்று வைணவர் கொண்டனர், மாயாவாதத்தை நீலகண்டசிவாசாரியரும்

இவ்விருவரும் கண்டிப்ப, அதற்கு உடன்படாது மாயாவாதம் நிறுத்தப்பட்டதென்று ஏகான்மவாதியார் ஸ்தாபிக்கப்போந்தனர். (நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர், * இராமாநுஜாசாரியர்) மூவரும், (நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர்) இருவரும், (நீலகண்டசிவாசாரியர் இராமாநுஜாசாரியர்) இருவரும் முறையே (சைவசித்தாந்தமல்லாத) அவைதிக பசுபதிமதத்தையும், பாஞ்சராத்திரத்தையும், ஏகான்மவாதத்தையுங் கண்டித்தாராதலின் மிகுதிபற்றிக் கண்டனமே ஒப்புக்கொள்ளற்பாலதன்றி, அப்பாசுபதமதமேனும், பாஞ்சராத்திரமதமேனும், ஏகான்மவாதமேனும் ஸ்தாபிக்கப்பட்டனவாகக் கோடல் ஓர்காலும் ஒவ்வாது. இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதம் மதகண்டனத்துக்கேற்பட்டமையின், பாஞ்சராத்திரங் கண்டிக்கப்பட்டதன்றி ஆங்குப் பாஞ்சராத்திரம் ஸ்தாபிக்கப்படற்குரிய குறியொன்றுஞ் சூத்திரங்களில் இல்லையாம் என்பது வெளிப்படை.

(௪௩௫) உடன்பாட்டெதிர்மறைக் குணங்களாற் கூறப்படுஞ் சகுணப் பிரம சொரூபலக்ஷணம் (௩. ௨. ௧௧—௪௦) ற் கூறப்பட்டிருக்கின்றது. பரப்பிரம உபாசனாகுணங்களின் தொகுப்பு மூன்றாம் பாதமுழுதினுங் கூறப்பட்டிருக்கின்றது. மூன்றாம் அத்தியாயத்து நான்காம் பாதத்திற் பிரமசரிய கிரகஸ்த வானப்பிரஸ்த சந்நியாச ஆச்சிரமங்களின் இயல்பும், (௩. ௪. ௪௮, ௪௯), ல் எல்லா ஆச்சிரமத்தார்க்குமுரிய வைதிகபாசுபத விரத அநுட்டானமும் (௩௪௦—௩௫௪-ம் இலக்கவரையிற் கண்டவாறு) கூறப்பட்டிருக்கின்றன.

(௪௩௬) நான்காம் அத்தியாயம் உபாசனைகளின் பயனைக் கூறலிற் பலாத்தியாயம் எனப்படும். இந்த நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனாப்பிரகாரங் கூறப்பட்டிருக்கின்றது.

(௪௩௭) ஆஸீந ஸம்பவாத் (௪. ௧. ௭) ல் உபாசகர்க்குரிய ஆசன நியமம் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஆசன நியமம் கைவல்லியோபநிடதத்திலன்றி மற்றோர் உபநிடதத்திற் கூறப்படவேயில்லை. நீலகண்டசிவாசாரியர் சிவபெருமானை வெளிப்படையாய் உணர்த்தும் அதர்வசிகை முதலிய பரோபநிடதங்களினின்று பிரமாணங் காட்டுங்கால், அந்தப் பிரமாணத்தை நிகர்ப்பப் பிறிதோர் பரோபநிடதத்தினின்று ஏகான்மவாதியரும் வைணவாசாரியரும் பிரமாணம் நிரூபிப்பது வழக்கம். கைவல்லியம், அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்களிலிருந்து பிரமாணம் காட்டாது பிறிதோர் முக்கியோபநிடதத்தினின்று நீலகண்டசிவாசாரியர் நிரூபிப்பின், அதனை மற்றிருவரும் எடுத்து நிரூபிப்பதும் வழக்கம். இங்ஙனமாகவும்,

---

* இராமாநுஜாசாரியரும் மத்துவாசாரியரும் சகுணநாராயணரிலே தாற்பரிய முடையாராதலின், ஈண்டு மத்துவபாடியத்தை வேறாகப் பொருட்படுத்தி யாதுங் கூறினோமில்லேம்.

தொன்மவாதியரும் வைணவாசாரியரும் "ஆசனியம" விதிக்குக் கைவல்லிய சுருதியையொப்ப மற்றோர் உபநிடதத்திற் சுருதி தம் பக்கத்துக்கு இடங்கொடுக்காமையின், பிரமாணம் யாதுங் காட்டாது வாளாவிடுத்தனர். இதனாலேனும் இவ்விருவரும் சூத்திரத்துக்குப் பொருள் செய்வதெல்லாம் ஒவ்வாவென்று நன்று புலப்படவில்லையா?

(சஙஅ) நான்காம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்தில் சீவான்மா தேகத்தை விட்டு உற்கிரமணஞ் செய்தலும், மூன்றும் பாதத்தில் சிவான்மா செல்லும் அர்ச்சிராதிமார்க்கமும், நான்காம் பாதத்தில் சிவான்மாவுக்கெய்தும் பரப்பிரமலோக சிவப்பேறும் கூறப்படுகின்றன.

இனி (உகஅ—கககூ-ம் இலக்கவுரையில்) கூறப்பட்ட உற்கிரமண விஷயம் ஆராயப்படுகின்றது.

(சஙகூ) (பிருகதாரணியமாகிய) கண்ணுவசாகை (பிரு. சு. ச. உ) ல் அவித்துவான் உற்கிரமணஞ் செய்யுமாறு கூறத்தொடங்கி, (சு. ச. சு) ன் முற்பாதி மந்திரத்தில் "இதுதான் பற்றுடையனாகிய அவித்துவான் விஷயம்" என்று கூறி முடிக்கப்பட்டது; அக்கண்ணுவசாகை (பிரு. சு. ச. சு) ன் பிற்பாதி மந்திரத்தில் பற்றற்ற வித்துவான் விஷயம் கூறப்போந்து "அகாமனாய், நிஷ்காமனாய், ஆப்தகாமனாய், ஆன்மகாமனாய் இருக்கின்றானே அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை; பிரமமாகிப் பிரமத்தைப் போயடைகின்றனன்" என்று கூறப்பட்டிருக்கின்றது;

(சச0) ப்ரதிஷெயாதிதி செநு ஶாரீராத௯ ஸ்ஷெ ஹி கெஷாம் (ச. உ. கஉ)

"(வித்துவானுக்கு உற்கிரமணம் இல்லை, இங்கே பிரமப்பிராப்தி அடைந்துவிடுகின்றான் என) மறுப்பின், (வித்துவானுடைய) ஆன்மாவினின்று பிராணேந்திரியங்கள் (பிரிவ) தில்லை (என்பதே பொருளாம்); (அதற்குப் பிரமாணம்) சிலர் சாகையிலே ஸ்பஷ்டமாயிருக்கின்றது" என்பது (ச. உ. கஉ) ம் சூத்திரப்பொருள்; வித்துவானுக்குப் பிராணன்கள் சரீரத்தை விட்டு உற்கிரமிப்பதில்லை என்றும், இங்கே பிரமப்பிராப்தி அடைந்துவிடுகின்றான் என்றும் பிரதிஷேதஞ் செய்யின் (மறுப்பின்), பிராணேந்திரியங்கள் அந்த வித்துவானுடைய ஆன்மாவைப் பிரியாதிருப்ப, அவன் நாடிவழியிலாய்த் தேவயான மார்க்கமாகச் சுவர்க்கலோகம் (பிரமலோகம்) போயடைகின்றான் என்று (பிரு. சு. ச. எ, அ, சு) ற் கூறப்பட்டிருக்கின்றதன்றோ; அற்றனமாயின்,

(சசக) ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிரு. ௬. ௪. ௬)

"அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்னும் மந்திரத்தில் அவனுக்கு (தஸ்ய) என்று சுருதியிற் காணப்படலான், பிராணன்கள் அவனுக்கு உற்கிரமிப்பதில்லை என்று பொருள் கொள்ளல் வேண்டுமே, இதற்கு யாது சமாதானம்? என ஆக்ஷேபிக்கப்படின், அந்த ஒரே வித் துவான் விஷயத்தை ஒரே பொருள் கொண்ட ஒரே மொழிகளாற் கூறு மிடத்து, மத்தியந்தினசாகையானது பிருகதாரணிய கண்ணுவசாகையிற் காணப்படும் அவனுக்கு (தஸ்ய) என்னும் பதம் நின்றவிடத்து அவனிலிருந்து (தஸ்மாத்) என்னும் ஐந்தாம் வேற்றுமைப் பொருட்பதத்தை ஸ்பஷ்டமாகப் பிரயோகித்தமையின், ஈண்டு பிருகதாரணியத்து அவனுக்கு (தஸ்ய) என்ற பதத்துக்கு அங்ஙனமே ஐந்தாம் வேற்றுமைப் பொருள் கோடல் வேண்டும் என்றுணர்த்த வியாசமுனிவர் சிலர் சாகையில் "ஏகேஷாம்" (ஏகேஷாம்) "வெளிப்பட" (ஸ்பஷ்டோ) என்று சூத்திரித்தனர். அஃ தாவது, வித்துவானுடைய சரீரத்திலே பிராணேந்திரியங்கள் சீவான்மா வைவிட்டு உற்கிரமியாது பிரியாதிருப்ப, ஆன்மாவானது ஊர்த்துவநாடி வாயிலாக உற்கிரமிக்கின்றதென்பதே பொருளாம். ஆகலின், அவித்து வானும் வித்துவானும் சரீரத்தை விட்டுப் புறப்படுதலிற் சமமாயினும், அவித்துவான் செல்லும் மார்க்கமும் அடையும் உலகமும் வேறு; வித்து வான் செல்லும் மார்க்கமும் அடையும் பிரமலோகமும் (சிவலோகமும்) வேறு என்பதாம்.

இங்ஙனம் அதன் உண்மைப்பொருள் கண்டுரைத்தவர் நீலகண்டசிவா சாரியர்.

(சசஉ) நீலகண்டசிவாசாரியர் காலத்துக்கு நீடிய காலத்துக்குப்பின் இருந்த ஏகான்மவாதியாருக்கு அந்தப் பொருள் உடன்பாடன்று. இவர் க்கு வித்துவான் உற்கிரமணஞ் செய்யாது இங்கே பிரமத்தில் இலயமாதல் வேண்டும் என்பது பேரவா. அதற்காக அவர் (சசo-ம் இலக்கத்திற்) கண்ட (ச. உ. கஉ) ஞ் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்தார். இங்ஙனம் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்துகொள்ளலாம் என்று காட்டற்கு முற்பாதங்களிற் சிற் சில சூத்திரங்களைப் பிளந்து பிளந்து காட்டிப் போந்தனர். பிளந்து முதற்கணின்ற

ப்ரதிஷேதாதிதி சேந்ந ஶாரீராத் (சங். ச. உ. கஉ)

(சசங) என்னும் முற்பாதிச் சூத்திரத்துக்கு, (பிரமத்தை அறிந்த வித்துவானுக்கு உற்கிரமணமில்லை என்று சுருதி) மறுக்கின்றதென்று கூறின், (சுருதியானது பிராணேந்திரியங்கள்) ஆன்மாவிலிருந்து (பிரிவ) தில்லை என்று கூறுகின்றது என (இதனை மறுப்பேம்)" என்று பொருள் செய்துகொண்டு.

"ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிரு. ௬. ௪. ௬)

(௪௪௪) "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்னுஞ் சுருதியைத் தமது கருத்துப் பிரகாரம் ஸ்தாபிக்கவும், வியாசர் கருத்துக் கியைந்து நீலகண்டசிவாசாரியர் சித்தாந்தஞ் செய்ய மத்தியந்தினசாகைப் பிரமாணத்தைப் பூருவபக்ஷஞ் செய்யவும் தொடங்கினர்; (ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி) "நதஸ்ய பிராணு உற்கிராமந்தி" "அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்னுஞ் சுருதியின் பொருள் ஆன்மாவிலிருந்து பிராணன்கள் பிரிவதில்லை" என்பதேயாம் என்றும், (ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி) "நதஸ்மாத் பிராணு உற்கிராமந்தி" அவனிலிருந்து பிராணன்கள் பிரிவதில்லை" என்று மத்தியந்தினசாகை கூறுதலினாலேயாம் என்றும், ஆகலின் இறக்கின்றவனுடைய உயிர் பிராணன்களோடு உடலை விட்டுப் பிரிகின்றதென்றும், நீலகண்டசிவாசாரியர் கூறியவாறு பொருள் கொள்கின்றேம் என்பவர் போன்றுங்காட்டிப் பாடியமியைத்து, பின் இந்த மத்தியந்தினசாகைப் பிரமாணத்தைப் பிற்பாதிச் சூத்திரம் மறுக்கின்றதென்று எடுத்துக்கொண்டனர்; அப்பாதிச் சூத்திரம் வருமாறு:—

(௪௪௫) ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம் (சங். ௪. ௨. ௧௩)

"ஏனெனின், ஆன்மா உற்கிரமணஞ் செய்வதில்லை என்பது சிலர் சாகையில் வெளிப்படையாயிருக்கின்றது" என்று சூத்திரத்துக்குப் பொருட்படுத்திக் கொண்டனர்.

சிலர் சாகை என ஏகான்மவாதியார் எடுத்துக்கொண்டது பிருகதாரணிய கண்ணுவசாகையேயாம். இதில் (பிரு. ௫. ௨. ௧௧) ல்

(௪௪௬) அத்ரைவ ஸமவநீயந்தே|

பிராணன்கள் இவனைவிட்டுப் பிரிகின்றனவா? இல்லையா? என்று ஆர்த்தபாகர் வினவ, யாஞ்ஞவற்கியர் "இவனிலேதான் அவை (பிராணன்கள் குழுமுகின்றன"* என்று கூறினர் என்றும், இதனால் மத்தியந்தினசாகையுடையார் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் மறுக்கப்பட்டதென்றும், (பிரு. ௬. ௪. ௬) ல் அவனுக்குப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்று கூறிய பொருள் ஆர்த்தபாகர்க்கு இறுத்த உத்தரத்தினால் நிறுத்தப்பட்டதென்

*௪௪௬-ம் இலக்க மந்திரமும் பொருளும் இங்ஙனமேயாகவும், ஏகான்மவாதியார் (சங். ௪. ௨. ௧௩) ற் கண்டவாறு அத்ரைவ ஸமவலீயந்தே "இங்கே பிராணன்கள் லயமாகின்றன" என்று மந்திரத்தைத் திரித்துக்கொண்டனர்.

றும், அதனால் வித்துவானுக்கு உற்கிரமணமில்லை, இங்கேதான் அவன் பிரா ணன்கள் இலயமாகின்றன என்றும் சாதித்தனர்.

(சசஎ) இந்த ஆர்த்தபாகர்க்கும் யாஞ்ஞவற்கியர்க்கும் இடையே நிகழ்ந்த வாதத்திற் பிரமத்தை அறிந்த வித்துவான் விஷயமாக யாதும் குறிப்பிடப்படவில்லை. ஆகலின்,

(சசஅ) அயம் புருஷஃ (பிரு. ௩. உ. கக)

என்று அங்கே கூறப்பட்ட புருஷன் எங்ஙனம் வித்துவானைச் சுட்டிற் றோ? "அயம்புருஷஃ" என்றது ஏகான்மவாதியாருடைய (பிரு. ௩. உ. கக) ற் பாடியமே வித்துவான் என்று பாவித்ததென்பாரேல், ஒரே சகு ணப் பிரமத்தைச் சகுணம் என்றும், நிர்க்குணம் என்றும் தவறுண்டு இரண்டாகப் பிளந்தவாறே, பிரத்தியக்ஷத்திற் கிடந்த ஒரு முழுச் சூத்தி ரத்தையும் தம்பக்கம் சாதிக்க இரண்டாகப் பிளந்த வீரர், அங்கே "புரு ஷன்" என்ற மொழிக்கு அறிந்தவன், ஞானி, வித்துவான் என்று எழுதி வைக்க மறந்துவிடுவார்தாமோ!! "புருஷஃ" என்னும் பதத்தினுற் சுட்டப் பட்டவன் அவித்துவானன்றி வித்துவானன்று, இது மேலே (ஙக0—ஙகங-ம் இலக்கவரையிற்) கூறியாயிற்று. இது நிற்க. இவர் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்தமை தவறு. கண்ணுவசாகையிற் கண்ட மந்திரப்பொருளை முற் பாதிச் சூத்திரமாக வரைந்து, அந்த ஒரே கண்ணுவசாகையிற் கண்ட மற் றோர் மந்திரம் முற்பாதிச் சூத்திரத்துக் கண்ணுவசாகைப்பொருளை மறுத்த தேயாமாயின்,

(சசகூ) ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம் (சங். ச. உ. கங)

"சிலர் சாகையில் வெளிப்படை" என்று வியாசமுனிவர் மற்றோர் சூத்திரஞ் செய்தனர் என்றமையும் தவறு. கண்ணுவசாகை முதலியவற் றின் மந்திரப்பொருளை ஸ்தாபித்தற்கு மத்தியந்தினசாகை முதலிய பிறி தோர் சாகையின் மந்திரத்தை உதகரிக்கவேண்டியன்றோ (ஏகேஷாம்) "சிலர் சாகையில்" என்று வியாசமுனிவர் கூறினர். ஒரே சாகைச் சுருதிப் பொருளாற் கண்டித்து நிறுத்தற்குச் சில சாகையினர் என்று கூறும் வழக் கம் சூத்திரகாரர்க்கும் மற்றியார்க்கும் இல்லை. அஃதன்றிச் சூத்திரத்தை இரண்டாகப் பிளந்து ஒன்று முன்னும் ஒன்று பின்னுமாக நிறுத்தி எழுதி வைத்தால், ஒரே கண்ணுவசாகையாயிருப்பினும் குற்றமில்லை என்று நினைந் து அங்ஙனம் செய்தனரோ?

(சநு0) ஓர் முற் சூத்திரத்தைப் பூருவபக்ஷஞ் செய்ய மற்றோர் பிற் சூத்திரம் வருமாயின், "ஏனெனின்" (ஹி) என்னும் மொழி எய்தமாட்டாது;

ஆனால் (ஈ") என்னும் மொழியே பிற் சூத்திரத்திருத்தல்வேண்டும்; (இதி) என்று வைத்தமையாற் பிற் சூத்திரம் முற் சூத்திரத்தை மறக்கவில்லை என்றன்றோவாயிற்று. சூத்திரம் ஒரு புறமும் பாஷ்யம் ஒரு புறமுமாகச் செய்பவர்க்கு நாம் என் செய்குவம் !!

(சருக) நீலகண்டசிவாசாரியர் கண்ணுவசாகையில் ஆர்த்தபாகர் விஷயம் கண்டு, அது அவித்துவான் விஷயமென்றன்றோ முதற்கண்ணே பொருட்படுத்தாது விட்டனர். வித்துவான் உற்கிரமிப்பதில்லை என்று காட்டுதற்கு, அவ்வேகான்மவாதியார் அவித்துவான் விஷயத்திலிருந்து காட்டிய உதாரணத்தினுல் அவித்துவானும் உற்கிரமிப்பதில்லை என்றன்றோவாயிற்று.

(சருஉ) இவர் இங்ஙனம் (பிரு. சு. ச. சு) கண்ணுவசாகை மந்திரப் பொருளை நிறுத்தவந்த மத்தியந்தினசாகைப் பொருளைப் பூருவபக்ஷஞ் செய்தற்கு (பிரு. ங. உ. கக) ஆம் (கண்ணுவசாகையின்) மற்றோர் மந்திரப் பொருளைக் கொண்டு, அந்தக்கண்ணுவசாகைப் பொருளை நிறுத்துவரேல், முற் கூறிய கண்ணுவசாகை (பிரு. சு. ச. சு) ம் மந்திரப்பொருளோடு பின்னர்ச் சித்தாந்தம் என இவர் விடுத்த கண்ணுவசாகை (பிரு. ங. உ. கக) ம் மந்திரப்பொருளையும் ஒருங்கு சேர்த்து முன் நிறுத்தி, மத்தியந்தின சாகைப்பொருள் கொண்டு நீலகண்டசிவாசாரியர் பக்கநின்று, "அவனது ஆன்மாவைவிட்டுப் பிராணன்கள் பிரியாதிருக்க, அவன் உற்கிரமணஞ்செய்கின்றான்" என்று ஸ்தாபித்துவிடலர்மன்றோ, அங்ஙனஞ் செய்யின் அவ்வேகான்மவாதியாரைத் தொடர்ந்து நிற்குமவரெல்லாம் வாய்ப்பிரமாணம் விடுத்து மற்றெப்பிரமாணங்கொண்டு யாது சமாதானஞ் செய்ய வல்லுநர்! பல சுருதிப் பிரமாணங்கொண்டு ஆன்மாவை விட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை என்று நம்மால் வலியுறுத்தப்பட்டிருத்தலின், அந்தச் சுருதிப் பொருள்களை இவர் சத்திய உபப்பிருங்கணங்கள் வாயிலாகத் தம் பக்கத்துக்கு உயிர்ப்பித்துக்கொண்டாலன்றோ, சூத்திரத்துக்கும் தமக்கிசைந்தவாறு பொருள் திரித்துச் செய்ய வல்லுநராவர் !!

(சருங). வேதவியாசர் சகுணப்பிரமவிஷயத்தையே முதலாஞ் சூத்திரத்தில் ஆரம்பித்து, சூத்திரங்கடோறும் சகுணப்பிரம விஷயமே கூறி, உபசங்காரத்திலும் சகுணப்பிரமக்காரர் எய்தும் பிரமலோகத்தைக் குறிக்கும்சுருதியை மூலமாகக்கொண்டே சூத்திரஞ்செய்தார். இந்தப் பிரமலோகம் எனப்படும் சிவலோகத்தையே (ஙகச—ஙகஎ-ம் இலக்கவரையிற்) கண்டவாறு, சுருதிகளெல்லாம் ஒருங்கு கோஷிப்பனவாக, நிர்க்குணோபாசனையொன்று மறந்தும் கூறுத பரோபநிடதங்களுள்ளும் பிரமசூத்திரங்களுள்ளும் போக்கு மீட்சியின்றிப் பிராணன்களெல்லாம் இங்கே லயமடைந்துவிடவேண்டு

மென்று நினைத்து கபடத்தேரெழுதிவைத்தவைம இனி ஓர்காலும் தலையெடுக்காது! பிராணன்கள் கூடுகின்றன, குழுமுகின்றன என்றுணர்த்தும் (பிரு. ரு. உ. கக) "சமவரீயந்தே" (ஸவநீயஹெ) என்னும் பதத்தையும் (சங். ச. உ. கரு) சமவலீயந்தே (ஸமேவஹீயஹெ) என்று திரித்து, சூத்திரங்களையும் திரித்து, சூத்திரப்பொருள்களையும் திரித்து, அதிகரணங்களையும் திரித்து, நீலகண்ட சைவபாடியப்பொருளையும் திரித்து இவர் செய்த பாடியம் கதாநுகதியாயங்கொண்டு அபிமானமாத்திரையினால் இவரைத்தொடர்ந்து நிற்கும் ஏகான்மவாதிகளுக்குத்தான் உவப்பாகும் போலும்!!!

(சருச) மூன்றாம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனைப் பிரகாரமும், இரண்டாம் பாதத்தில் சீவான்மா தேகத்தை விட்டு உற்கிரமணஞ் செய்வதுமாகக் கூறப்படும் சகுணப்பிரம விஷயத்துக்குள்ளே, நிர்க்குணோபாசனையேனும், ஆன்மா இங்கே இலயமாதலாம் பயனேனும் கூறாத சூத்திரங்களுக்குள்ளே தமக்குப் போக்குமீட்சியில்லா முத்தி ஒன்று சித்தித்ததென்று வரைந்து புகுத்தினமை எவ்வளவு விந்தை!! இங்ஙனம் வலிந்து வலிந்து சூத்திரங்களுக்குப் பொருளைத் திரித்துணர்த்திக்கொண்டு போய் (ச. ச. எ) ஞ் சூத்திரம் இவர்க்குத் திரித்துப் பொருள் கொள்ள இடங்கொடாமையான், முத்தர்களுக்கு எய்துவனவாக இவர் ஓர்காலும் உடன்படாத குணங்கள் உண்டென்பாராய்,

(சருரு) [illegible]
[illegible]
[illegible] |

"உபந்நியாசாதிகளினாற் பெறப்படும் பிரமத்தின் ஐசுவரிய ரூபமாகிய முற்குணம் (ஆன்மாவுக்கு எய்தாதென்று) தவிர்க்கப்படமாட்டாது என்று பாதராயணர் கொள்கின்றார்" என்றனர்; அஃதாவது ஆன்மாவுக்குப் பிரமத்தின் குணங்கள் எய்தும் என்றாராயிற்று. இதில் "வியவகாராபேக்ஷை" என்று ஒருபொடிசேர்த்தார். வியவகாரம் யாதும் ஒழிந்தவிடத்திற் பேசப்படும் முத்தர் விஷயத்தில் வியவகாரம் என்று வாளா எழுதிவிட்ட இவர் வியவகாரப்பொடி பறந்துபோய் விட்டது. இதனால் தாம் எடுத்த நிர்க்குணப் பிரமவிஷயத்தை நீடு சாதிக்க இயலாது இந்தச் சூத்திரத்துக்குள்ளும் சிக்குண்டு போயினர்.

ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

சிவமயம்.

பிரமசூத்திர

சிவாத்துவிதசைவபாடிய

அத்தியாயப்பொருள்.

முதலாம் அத்தியாயம்

சச்சிதானந்தரூபரும், சர்வஞ்ஞத்துவ சர்வசக்தித்துவாதி சுவரூப லக்ஷணமுடையரும், சகல ஜகத்தையும் பிறப்பிப்பவரும், அனைத்துக்கும் வேறானவரும், அனைத்துக்கும் ஆன்மாவானவரும், விரூபாக்ஷத்துவ கிருஷ்ண பிங்களத்துவ நீலகண்டத்துவமுதலிய விசிஷ்ட லீலா மங்கள சுவரூப சுபாவமுடையரும், பவர் முதலிய முக்கிய அஷ்டநாமங்களின் பொருளானவரும், பரமகாருணிகரும், பரப்பிரமமுமாகிய சிவபெருமானிடத்திலே சமஸ்த உபநிடத வாக்கியங்களும், அவற்றின் அநுகுணமாகிய மிருதிகளும் தாற்பரியத்தினுற் சமந்வயமாதலை உணர்த்துகின்றது.

இரண்டாம் அத்தியாயம்

சிவபெருமானிடத்திலே சமந்வயமாய் நிற்கும் உபநிடத முதலியவற்றுக்கு விருத்தமாக ஸ்மிருதி தர்க்காதிகளினுல் எய்திய விரோதம் பரிகரிக்கப்படுதலை உணர்த்துகின்றது.

மூன்றும் அத்தியாயம்

உபாசகன், உபாசியன், உபாசனம் என்பவற்றின் பேதங்களையும், ஆச்சிரமதரும பேதங்களையும் விளக்குகின்றது.

நான்காம் அத்தியாயம்

உபாசனுப்பிரகாரமும், சீவான்மாவின் உற்கிராந்திதசையும், அர்ச்சிராதிகதியும், பிரமமாகிச் சிவத்தை அடைந்த சீவன்முக்தனுடைய நிலையுமாகிய இவற்றை நிரூபிக்கின்றது.

பாதப்பொருள்.

———o———

முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் பரப்பிரம சிவபெருமானைப் பற்றி வெளிப்படைக் குறிகளையுடைய சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

” ” இரண்டாம் பாதத்தில் அதிகம் வெளிப்படையாகாத குறிகளையுடைய சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

” ” மூன்றும் பாதத்தில் வெளிப்படையானவும் வெளிப்படையிலாதனவுமாகிய குறிகளையுடைய வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

” ” நான்காம் பாதத்தில் வெளிப்படையாகாத சில வாக்கியங்களின் ஆராய்ச்சியும்,

இரண்டாம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் சாங்கியாதி தர்க்கவிரோத பரிகாரமும்,

” ” இரண்டாம் பாதத்தில் பிரதான காரணவாதங்களுள்ளே தர்க்கவிரோதமும்,

” ” மூன்றும் பாதத்தில் பூதசிருட்டியின் அவாந்தர விரோதத்தைப் பரிகரித்தலும், சீவான்மா நித்தியத்துவாதி குணங்களையுடையதாக உணர்த்தலும்,

” ” நான்காம் பாதத்தில் பிராணன் இந்திரியம் என்பவற்றின் சொரூபமும், பிரமத்தினின்றே அவைகளுக்கு உற்பத்தியாதலும்,

மூன்றும் அத்தியாயத்து முதற்பாதத்தில் சீவான்மா போக்குவரவு செய்தலும்,

இரண்டாம் பாதத்தில் சீவான்மாவின் அவஸ்தா நிரூபணமும், பரப்பிரமசிவனுர் சொரூபலக்ஷணமும்,

,, ,, மூன்றாம் பாதத்தில் வேதத்திலே பலவிடங்களில் உரைக்கப்பட்ட பல்வகைப் பரப்பிரம சிவோபாசனையின் குணோபசங்காரமும்,

,, ,, நான்காம் பாதத்தில் ஆச்சிரமதருமமும்,

நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்தில் உபாசனைப்பிரகாரமும்,

,, ,, இரண்டாம் பாதத்தில் சீவான்மாவாகிய உபாசகனுடைய உற்கிராந்திதசையும்,

,, ,, மூன்றாம் பாதத்தில் அர்ச்சிராதிகதியும்,

,, ,, நான்காம் பாதத்தில் பரப்பிரம சிவபெருமானை அடைந்தவனுடைய நிலையும் நிரூபிக்கப்படுகின்றன.

அதிகரணப்பொருள்.

முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ஜிஞ்ஞாசாதிகரணம் (க):—மகாதேசிகரும் சர்வானுக்கிரகருமாகிய பரப்பிரமசிவனாருடைய அருளாதிக்கியத்தினால் அதிகாரியாவான் பாசபடலம் நீங்கி, பிரத்தியக்ஷமாக்கப்பட்ட நிரதிசயானந்த சொரூபமாகிய அப்பரப்பிரமசிவனாரது சாமியகுண கைவல்லிய இலட்சுமியை அடையுமாறு, அப்பரப்பிரமசிவனை ஆராயவேண்டும் என உணர்த்துகின்றது.

(உ) ஜந்மாத்யதிகரணம் (உ):—உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் செய்பவர் சிவபெருமானென்று அப்பரப்பிரமசிவனார் இலக்கணங் கூறுகின்றது.

(ங) சாஸ்திரயோநித்வாதிகரணம் (ங):—உலகத்துக்குக் காரணர் பரப்பிரமசிவனார் என்பதற்குப் பிரமாணம் என்னை என, வேதாந்தசாஸ்திரங்களாமென்று கூறி, இந்தச் சாஸ்திரங்களுக்கும் கர்த்தா பரப்பிரமசிவனார் என நிரூபணஞ் செய்கின்றது.

(ச) சமந்வயாதிகரணம் (ச):—வேதாந்த வாக்கியங்கள் தாற்பரியலிங்கசம்பந்தத்தினாற் பரப்பிரம சிவபெருமானை உணர்த்துஞ் சாமர்த்தியமுடையன என உணர்த்துகின்றது.

(கு) சக்ஷத்தியதிகரணம் (கு—கஉ):—சமஸ்தப் பிரபஞ்சத்துக்கும் காரணமாய சத்து என்னும் வஸ்து சேதனமாகிய சிவபரப்பிரமமாமன்றிச் சாங்கியர் கூறும் அசேதனமாகிய பிரதானம் அன்றெனக் கூறுகின்றது.

(சு) ஆனந்தமயாதிகரணம் (கந—கசு):—பிரதானம் பிரபஞ்சத்துக்குக் காரணமாகாதவாறுபோல, சேதனனாகிய சீவான்மாவும் ஆனந்தமயனாகாமையின், அவன் அங்ஙனம் பிரபஞ்சகாரணனாகாதுபோக, சிவபெருமானே ஆனந்தமிகுதியுடைமையின் ஆனந்தமயர் என்றும், அவரே உலக காரணர் என்றுங் கூறுகின்றது.

(எ) இதராறுபபத்தியதிகரணம் (கள—உ0):—பிரபஞ்சத்துக்குப் பிரதானமேனும், சீவான்மாவேனும் காரணமாகாதொழிய, சீவசமஷ்டிரூபராகிய இரண்ணியகருப்பரும் (பிரமாவும்) அங்ஙனமாகாரென்றும், அவர் சிவபெருமானுக்குக் கீழ் உள்ளார் என்றும் நிரூபிக்கின்றது.

(அ) அந்தரதிகரணம் (உக, உஉ):—பொற்றாடியோடும், பொற்கேசத்தோடும், இரு புண்டரீக விகசித நேத்திரமும் (ஒரு முகுளித நேத்திரமுமாகச்) சேர்ந்த முக்கண்களோடும், திருநகந் தொடுத்துத் திருமேனி முழுதும் பொன்வண்ணமாய், ஞாயிறு மத்தியில் சாதகர் சம்சாரநோய்க்கு ஔஷதமாய் எழுந்தருளினவர் சிவபெருமானேயன்றி நாராயணர் அன்றென்றும் உணர்த்துகின்றது.

(கூ) ஆகாசாதிகரணம் (உந)
(க0) பிராணாதிகரணம் (உச) } :—

சிவபெருமானுக்குக் கூறிய உலகத் தோற்ற நிலை இறுதி இலக்ஷணம் (ஜடப்) பிராணாகாச முதலியவற்றுக்குச் செல்லாதென்றும், ஈண்டுக் கூறப்பட்ட பிராணாகாசம் அச்சிவபெருமானினின்று வேறுறாத பரமாகாய பரப்பிரகிருதி ரூப பராசத்தியாமென்றும் உணர்த்துகின்றது.

(கக) ஜ்யோதிரதிகரணம் (உகு—உஅ):—ஞாயிறு மண்டலமத்தியிலே உபாசிக்கற்பாலர் என நிரூபிக்கப்பட்ட அம்பிகாபதியாகிய சிவபெருமான் விசுவரூபியாகத் தியானிக்கற்பாலரென மற்றோர் உபாசனாப் பிரகாரம் உணர்த்துகின்றது.

(கஉ) இந்திரப்பிராணாதிகரணம் (உகூ—நஉ):—பரமேசுவரசோரூபமாகவும், இந்திரன், கிருஷ்ணன், வாமதேவன் முதலிய போக்தாக்கள் சரீரமாகவும், பிராணன் முதலிய போக்கியசடரூபமாகவும் உபாசிக்கலாம் என்பதுபற்றி உபாசனை முப்பிரகாரமாகும் என்றும், இவற்றுள் முதற்கட் கூறியது காலவிளம்பமின்றியும், மற்றிரண்டும் காலவிளம்பத்தினும் முத்தி பயக்கும் என்றும் கூறுகின்றது.

முதலாம் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(க) சர்வத்திரப்பிரசித்தாதிகரணம் (க, உ):—சீவான்மா உபாசியனல்லன்; அவன் உபாசகன் என்றுணர்த்துகின்றது.

(உ) *சாரீராதிகரணம் (௩—அ):—இரண்ணியகருப்பர்க்கு உபாதானராகிய நாராயணர் உபாசகசிரேட்டர் எனவும், சிவபெருமானே உபாசியர் எனவும் கூறுகின்றது.

(௩) அத்திராதிகரணம் (௯, க0):—சிவபெருமானே சர்வசங்கார கர்த்திருத்துவ இலக்கணமுடையர் என உணர்த்துகின்றது.

(௪) குகாதிகரணம் (கக, கஉ):—சிவபெருமான் இதயகுகைக்கண்ணே சீவான்மாக்களோடு எப்பொழுதும் இயைந்திருக்கின்றனர் என உணர்த்துகின்றது.

(௫) அந்தராதிகரணம் (க௩—க௭):—இதயகுகையில் உபாசிக்கற்பாலராகிய சிவபெருமானுக்கு நேத்திரமும் மற்றோர் உபாசனஸ்தானம் எனக் கூ.

(௬) அநவஸ்தித்தியதிகரணம் (க௮):—உபாசனையின்பொருட்டு அங்குஷ்ட அளவினராகக் கூறப்பட்ட சிவபெருமான் பிராணுக்கினிஹோத்திரத்தினுல் வழிபடப்படும் பிராணரூபராய் நின்றனர் என உணர்த்துகின்றது.

(௭) அந்தரியாமியதிகரணம் (க௯—உக):—சிவபெருமான் பிருதிவி முதலிய அனைத்தினும் வியாபித்திருக்கின்றனர் என உணர்த்துகின்றது.

(அ) அதிருசியத்துவாதிகரணம் (உஉ—உ௪):—சிவபெருமான் பிருதிவிமுதலியவற்றில் வியாபித்திருப்பினும், அவர் அவற்றைப்போலக் காணப்படார் என உணர்த்துகின்றது.

(௯) வைசுவாநராதிகரணம் (உ௫—௩௩):—சிவபெருமான் ஜாடராக்கினிரூபராகப் பிராணுக்கினிஹோத்திரத்தினுல் ஆராதிக்கற்பாலர் என உணர்த்துகின்றது.

முதலாம் அத்தியாயத்து மூன்றும்பாதம்.

(க) தியுப்புவாதிகரணம் (க—௬):—சிவபெருமான் ஆகாயம் பூமிக்கு ஆதாரமாயுளர் என உணர்த்துகின்றது.

(உ) பூமாதிகரணம் (௭, அ):—சிவபெருமானை அடைதலால் எய்தும் பயன் அந்தமிலாவானந்தம் என உணர்த்துகின்றது.

---

* அதுபபத்தியதிகரணம் எனவும்படும்.

(ந) அக்ஷராதிகரணம் (கூ—கக):—சிவபெருமானே அக்ஷரப்பிரமம் என்று கூறுகின்றது.

(ச) ஈக்ஷதிகர்மாதிகரணம்:(கஉ):—சிவபெருமான் பிரத்தியக்ஷப்பிரமாணாதீதரேனும், அவர் பரமகாருணிகராதலின் உபாசகர்களுக்குப் புலப்படுகின்றனர் என உணர்த்துகின்றது.

(ரு) தகராதிகரணம் (கந—உஉ):—அவர் தகரபுண்டரீகத்தில் உளராதலையும், அவரை உபாசிக்கும் நெறியையும் உணர்த்துகின்றது.

(சு) பிரமிதாதிகரணம் (உந, உச):—சிவபெருமான் மனிதாகள உபாசித்தற்குரிய அங்குட்டரூப லிங்கவடிவினராய் இதயமத்தியில் உளர் என்றுணர்த்துகின்றது.

(எ) தேவதாதிகரணம்(உரு—நஉ):—மனிதர்மாத்திரமன்றித் தேவர்களும் சிவோபாசனைக்கதிகாரமுடையர் என உணர்த்துகின்றது.

(அ) அபசூத்திராதிகரணம் (நந—நசு):—பிரமவித்தைக்கு அதிகாரி யாவர் என உணர்த்துகின்றது.

(கூ) கம்பநாதிகரணம் (ச0):—சிவபெருமானால் யாவும் பிரவர்த்திக்கின்றன எனக் கூறுகின்றது.

(க0) ஜ்யோதிதர்சனாதிகரணம் (சக):—முக்தரால் எய்தப்பெறும் பரஞ்சோதிசொரூபர் சிவபெருமான் என உணர்த்துகின்றது.

(கக) அர்த்தாந்தரத்துவாதிவ்யபதேசாதிகரணம்(சஉ—சச):—ஆகாயசப்தவாச்சியர் சிவபெருமானன்றிச் சீவான்மா அன்றெனக் கூறுகின்றது.

முதலாம் அத்தியாயத்து நான்காம்பாதம்.

(க) ஆநுமாநிகாதிகரணம் (க—எ):—அவ்வியக்தம் என்றது சரீரம், சாங்கியர் கூறும் பிரதானமன்று எனக் கூறுகின்றது.

(உ) சமசவதாதிகரணம் (அ—க0):—அஜா என்றது (க0ச-ம், கஉந-ம் இலக்கங்களிற் கூறியவாறு) சித்ரூபமாகிய மாயாசத்தியன்றிச் சாங்கியர் கூறும் பிரகிருதி அன்றெனக் கூறுகின்றது.

(ந) சங்கியோபசங்கிரகாதிகரணம் (கக—கரு):—"பஞ்ச பஞ்சஜநா:" என்றது சாங்கியர் கூறும் இருபத்தைந்து தத்துவங்கள் அன்று எனவும், அவை இந்திரியங்களின்மேலவாம் எனவும் உரைக்கின்றது.

(ச) ஜகத்வாசித்துவாதிகரணம் (கரு—கஅ):—சிவபெருமான் சிவான்மாவுக்கு வேறானவர் எனவும், உலகம் அனைத்தையும் படைத்தவர் அவரே எனவும் உணர்த்துகின்றது.

(ரு) வாக்கியான்வயாதிகரணம் (க௯—உஉ):—(சிவ) ஆன்மாவிலே சிவபெருமான் (பரம) ஆன்மாவாக இருத்தலின், ஆன்ம சப்தத்தினுற் சிவபெருமான் கூறப்படுகின்றனர் என உணர்த்துகின்றது.

(சு) பிரகிருதியதிகரணம் (உங—உஅ):—சிவபெருமானே உலகத்துக்கு முதற்காரணர் என (க. க. உ) ற் கூறியதை விரித்துணர்த்துகின்றது.

(எ) சர்வவியாக்கியாநாதிகரணம் (உ௯):—கன்மகாண்டத்துப் புருஷசூக்தம், சதருத்திரீயம், மந்திரப்பிராம்மணம், ஸ்மிருதி, இதிகாசபுராணமனைத்தும் பரப்பிரமசிவபெருமானைப் போதிப்பன என உணர்த்துகின்றது.

முதலாம அத்தியாயத்து நான்கு பாதங்களினும் அதிகரணம் (ங௯); சூத்திரம் (கங௮).

இரணடாம அத்தியாயத்து முதலாம்பாதம்.

(க) ஸ்மிருதியதிகரணம் (க, உ):—சாங்கியஸ்மிருதிப் பிரகாரம் சுருதிப்பொருளைத் திரிவுபடுத்தல் கூடாதென உணர்த்துகின்றது.

(உ) யோகப்பிரத்தியுக்தியதிகரணம் (ங):—பிரதானத்தைக் காரணமாகக் கூறும் இரண்ணியகருப்பஸ்மிருதிப் பிரகாரம் சுருதிப்பொருள் மாற்றப்படுவதன்றென்கின்றது.

(ங) நவிலக்ஷணத்துவாதிகரணம் (ச—எ):—காரியகாரணம் ஒன்றென்பதில் இழுக்கில்லையென்கின்றது.

(ச) அபீதியதிகரணம் (அ—கஉ):—பிரதானகாரணவாதந் தவிர்க்கற்பாற்றன்றி, பிரபல சுருதிப் பிரமாணசித்தமாகிய சிவப்பிரமகாரணவாதந் தவிர்க்கப்படுவதன்றென்கின்றது.

(ரு) சிஷ்டாபரிக்கிரகாதிகரணம் (கங):—சாங்கியர் பிரதானகாரணவாதம் போல, கணாதர் அக்ஷபாதர் முதலாயினோர் வாதங்களும் ஒழிக்கற்பாலனவென்கின்றது.

(சு) போக்திராபத்தியதிகரணம் (கச):—சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சத்தைச் சரீரமாகவுடையரேனும், சுவதந்திரராய் நிஷ்களங்க மங்கல சரீரியாயுள்ள சிவபெருமானுக்குப், பரதந்திரனாய்ச் சம்சாரசரீரத்தையுடையனாயுள்ள சிவான்மாவுக்கெய்துந் தோஷமில்லை என்றுணர்த்துகின்றது.

(எ) ஆரம்பணாதிகரணம் (கரு—உக):—காரணமாகிய பரப்பிரமசிவ பிரானினின்று அநந்நியமாயுள்ளது காரியமாகிய பிரபஞ்சம் என்றும், அவர் விசுவாதிகர் என்றும் கூறுகின்றது.

(அ) உபசங்காரதர்சநாதிகரணம் (உச, உரு):—சிவபெருமான் அனந்தசத்தியுடையர் என்று கூறுகின்றது.

(கூ) கிருத்ஸ்நப்ரசக்தியதிகரணம்(உசு—நக):—சர்வசக்தியினால் எதனையும் இயற்றும் அவர்க்கு எது கூடும் கூடாதென்றில்லை; எல்லாம் அவரால் இயலும் என உணர்த்துகின்றது.

(க0) லீலாகைவல்லியாதிகரணம் (நஉ, நந):—சிவபெருமான் லீலாமாத்திரத்தினாற் சிருட்டியாதி செய்கின்றனர் என உரைக்கின்றது.

(கக) வைஷம்மியநைர்க்கிருண்ணியாதிகரணம் (நச, நரு):—உலக சிருட்டி செய்யும் சிவபெருமானுக்குப் பாரபக்ஷமும் இரக்கமின்மையும் இல்லை என்கின்றது.

(கஉ) சர்வதர்மோபபத்தியதிகரணம்(நசு):—பிரதானத்துக்கும், பரமாணுவுக்கும், கன்மத்துக்கும், காலமுதலியவற்றுக்கும் இயையாதனவாகிய குணமனைத்துஞ் சிவபெருமானுக்கே இயைவன; ஆகலின், இவரே உலக சிருட்டி முதலியவற்றுக்குக் காரணர் எனக் கூறுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம்பாதம்.

(க) இரசநாநுபபத்தியதிகரணம் (க—கூ):—பிரதான காரணவாதம் நிஷ்பிரமாணமுடைத்தென நிரூபிக்கின்றது.

(உ) மகத்தீர்க்காதிகரணம் (க0—கசு):—பரமாணுகாரணவாத வைசேஷிகமதத்தை நிரசனஞ் செய்கின்றது.

(ந) சமுதாயாதிகரணம் (கஎ—உச):—வேதபாகிய பௌத்தமதத்தை நிராகரிக்கின்றது.

(ச) திருஷ்டத்துவாதிகரணம் (உரு, உசு):—ஞானானுமேயவாதத்தை மறுக்கின்றது.

(ரு) உபலப்தியதிகரணம் (உஎ—உகூ):—விஞ்ஞானமாத்திர வாதத்தை நிராகரிக்கின்றது.

(சு) சர்வதாநுபபத்தியதிகரணம் (ந0):—சர்வசூனியவாதத்தை மறுக்கின்றது.

(எ) ஏகஸ்மிந்நசம்பவாதிகரணம் (நக—நச):—ஜைனமதத்தை நிராகரிக்கின்றது.

(அ) *[illegible]திகரணம்(௩௫—௩௮):—நிமித்தகாரணவாதங் கூறும் இரணியகருப்பமதத்தை நிரசனஞ் செய்கின்றது.

(௯) பாஞ்சராத்திராதிகரணம்(௩௯—௪௨):—பாஞ்சராத்திரமதத்தை நிராகரிக்கின்றது.

இரண்டாம் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

(௧) வியததிகரணம் (௧—௭):—ஆகாயத்துக்கு உற்பத்தி உண்டென்கின்றது.

(௨) மாதரிச்சுவாதிகரணம் (௮):—வாயுவுக்கு உற்பத்தி உண்டென்கின்றது.

(௩) அசம்பவாதிகரணம் (௯):—பரப்பிரமசிவபிரானுக்குப் பிறப்பில்லை, மற்றெல்லாவற்றுக்கும் அப்பிறப்பு உண்டென்கின்றது.

(௪) தேஜோதிகரணம் (௧௦—௧௪):—சிவபிரான் தேயுமுதலிய அனைத்துக்குங் காரணர் என்று கூறுகின்றது.

(௫) பாரம்பரியாதிகரணம் (௧௫, ௧௬):—எல்லாம் சிவதத்துவத்தினின்று உற்பத்தியாகின்றமையின், சர்வகாரணர் சிவபெருமான் என்கின்றது.

(௬) சராசரவியபாசிரயாதிகரணம் (௧௭):—சராசரசரீரங்களைப் பிரவேசித்த சிவபெருமான் அவ்வம் மொழிகளால் உரைக்கப்படுதல் முக்கியம் எனக் கூறுகின்றது.

(௭) ஆன்மசுருத்யதிகரணம் (௧௮):—சீவான்மா சிவபெருமானினின்று உற்பத்தியாகவில்லை என உணர்த்துகின்றது.

(௮) ஞாதிகரணம் (௧௯):—சம்சாரத்தில் சீவான்மா கிஞ்சிஞ்ஞன்; முத்தியில் அவன் சர்வஞ்ஞன்; ஆகலின், ஆன்மா ஞாதா எனக் கூறுகின்றது.

(௯) உற்கிராந்தியதிகரணம் (௨௦—௩௨):—உற்கிராந்தியிற் போக்குமீட்சியுண்மையின், சீவான்மாவுக்கு அணுத்துவம் உண்டென்கின்றது.

(௧௦) கர்த்திரதிகரணம் (௩௩—௩௯):—சீவான்மாவுக்குச் சுவகாரியத்திற் கர்த்திருத்துவமுண்டென்றும், அது புத்திக்கேனும் பிரகிருதிக்கேனும் இல்லை என்றும் உணர்த்துகின்றது.

(௧௧) பராயத்தாதிகரணம் (௪௦, ௪௧):—சீவான்மாவுக்குச் சுவாதீனப் பிரவிருத்தியுண்மையின், விதி நிஷேத முதலிய வியர்த்தமாகா என்கின்றது.

* பத்யுரசாமஞ்சஸ்யாதிகரணம் எனவும் படும்.

(கஉ) அம்சாதிகரணம் (சஉ—௫உ):—சீவான்மாவை அம்சம் என்றுரைக்கின்றது.

இரண்டாம் அத்தியாயத்து நான்காம் பாதம்.

(க) பிராணோற்பத்தியதிகரணம் (க—ங):—பிராணசப்தம் இந்திரியங்களைக் குறிக்குமென்கின்றது.

(உ) சப்தகத்தியதிகரணம் (ச, ரு):—இந்திரியங்கள் பதினொன்று என்கின்றது.

(ங) பிராணாணுத்துவாதிகரணம் (சு):—இந்திரியங்கள் அணுக்கள் என்கின்றது.

(ச) சிரைஷ்டியாதிகரணம் (எ—கக):—பிராணவாயு சீவான்மாவுக்கு உபகாரமாயதென்கின்றது.

(ரு) பிராணாணுத்துவாதிகரணம் (கஉ):—பிராணனை அணு என்கின்றது.

(சு) ஜ்யோதிராதியதிஷ்டானாதிகரணம் (கங, கச):— இந்திரியங்களுக்கு மேலாகிய சூரியாதிகளுடையவும் சீவான்மாவுடையவும் அதிஷ்டானம் சிவபெருமான் வசத்ததென்கின்றது.

(எ) இந்திரியாதிகரணம் (கரு, கசு):—இந்திரியங்கள் பிராணவிருத்தியினின்று வேறென்கின்றது.

(அ) சம்ஞாமூர்த்திக்லுப்தியதிகரணம் (கஎ—கக):—முத்திறப்படுத்துஞ் சிவபெருமான், நான்முகப்பிரமாவாகி நாமரூபங்களைச் சிருட்டித்தனர் எனக் கூறுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்து நான்கு பாதங்களினும் அதிகரணம் (சக); சூத்திரம் (கசகூ).

மூன்றாம் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ததந்தரப்பிரதிபத்தியதிகரணம் (க—எ):—சீவான்மா பிறிதோர் சரீரம் எடுக்குங்காற் சூக்குமசரீரத்தோடு செல்கின்றதென்கின்றது.

(உ) கிருதாத்தியயாதிகரணம் (அ—கக):—சீவான்மா சுவர்க்கத்திருந்து கன்மசேடத்தோடு மீளுகின்றான் என உணர்த்துகின்றது.

(ங) அநிஷ்டாதிகாரியாதிகரணம் (கஉ—உக):—பாவிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர் என்கின்றது.

(௪) தத்கணாபாஸ்யாபத்தியதிகரணம் (௨௨):—சீவான்மா சுவர்க்கத்திருந்து மீளுங்கால் ஆகாயமுதலிய போல் வருகின்றான் என்கின்றது.

(௫) நாதிசிராதிகரணம் (௨௩):—சீவான்மா நென்முதலிய தானியத்திலே தாமசமாயும், ஆகாயமுதலியவற்றிலே தாமசமின்றியும் வருகின்றான் எனக் கூறுகின்றது.

(௬) அந்நியாதிஷ்டிதாதிகரணம் (௨௪—௨௭):—சீவான்மா ரேதசித் சம்பந்தமாத்திரமுறுகின்றான் எனக் கூறுகின்றது.

மூன்றாம் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(௧) சந்தியாதிகரணம் (௧—௬):—சிவபெருமானாலே சொப்பன சிருஷ்டி எய்துவதென்கின்றது.

(௨) ததபாவாதிகரணம் (௭, ௮):—சீவான்மா நாடிவாயிலாகச் சென்று சிவப்பிரமத்திலே துயில்கின்றானென்கின்றது.

(௩) கர்மாநுஸ்மிருத்தியதிகரணம் (௯):—முதற்கண் நித்திரைக்குப் போந்தவனே மீண்டும் விழிக்கின்றான் என்கின்றது.

(௪) முக்தாதிகரணம் (௧௦):—மூர்ச்சை சுழுப்திக்கு வேறாயதென்கின்றது.

(௫) உபயலிங்காதிகரணம் (௧௧—௨௦):—சத்தியம் ஞானம் அனந்தம் என உடன்பாட்டானும், நிர்க்குணம், நிஷ்களம், ஸ்தூலமன்று, அணுவன்று என்றற்றொடக்கத்தனவாக எதிர்மறைமுகத்தானுங் கூறப்படும் இரு இலக்ஷணகுணமுடையர் சிவபெருமான் என உரைக்கின்றது.

(௬) பிரகிருதைதாவத்துவாதிகரணம் (௨௧—௨௬):—சிவபெருமானுக்கு விகார அஞ்ஞான முதலிய அபுருஷார்த்தமொன்றுமின்றிச் சர்வஞ்ஞத்வாதி பரமபுருஷார்த்த குணங்கள் உண்டென்கின்றது.

(௭) பராதிகரணம் (௩௦—௩௪):—சிவபெருமானுக்கு மேலாயினார் யாருமில்லை என்கின்றது.

(௮) அந்நியப்பிரதிஷேதாதிகரணம்(௩௫, ௩௬):—சிவபெருமானுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்கின்றது.

(௯) பலாதிகரணம் (௩௭—௪௦):—சகல தேவதாரூபராய், சமஸ்த கன்மங்களினால் வழிபடற்பாலராயுள்ள சிவபெருமானே பலதாதா என்றுரைக்கின்றது.

மூன்றும் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

(க) சர்வவேதாந்தப்பிரத்தியயாதிகரணம் (க—ச):—(முக்கிய) உபநிடதமனைத்திலும் விதிக்கப்பட்ட உபாசனை ஒன்றென்கின்றது.

(உ) உபசங்காராதிகரணம் (ரு):—வெவ்வேறு சாகைகளிற் கூறப்பட்ட சிவனார் குணங்கள் தகராதி உபாசனைகளில் உபசங்கரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(ங) அந்நியதாத்துவாதிகரணம் (சு—அ):—சாந்தோக்கிய பிருகதாரணியங்களிற் கூறப்பட்ட உற்கீதவித்தைகள் பெயரினால் ஒற்றுமையுடையவேனும், உபாசனையினாற் பேதமுறுகின்றன எனக் கூறுகின்றது.

(ச) வியாப்தியதிகரணம் (கூ):—பிரணவமே உபாசிக்கற்பாற்றென்கின்றது.

(ரு) சர்வாபேதாதிகரணம் (க0):—பிராணோபாசனையில் ஐசுவரியாதி குணங்கள் உபசங்கரிக்கற்பாலன வென்கின்றது.

(சு) ஆநந்தாதியதிகரணம் (கக):—குணியாகிய சிவப்பிரமம் யாண்டும் அபேதமாகலின், ஆனந்தாதி குணங்கள் உபசங்கரிக்கப்படல் வேண்டும் என உரைக்கின்றது.

(எ) பிரியசிரஸ்துவாதிகரணம் (கஉ, கங):—பிரியசிரஸ்துவாதி குணங்கள் சிவோபாசனையில் உபசங்கரிக்கற்பாலன அன்றென்கின்றது.

(அ) ஆத்தியானாதிகரணம் (கச—கஎ):—அன்னமயமுதலியன அநுசந்தானஞ் செயற்பாலன அன்றென்றும், சிவனை யொழிந்த பிறரை உபாசிக்கும் உபாசனைகள் சிவத்துவத்தைக் கொடுக்கமாட்டாவென்றும் கூறுகின்றது.

(கூ) காரியாக்கியானாதிகரணம் (க௮):—பிராணனுக்கு வாசஸ்த்துவம் கோடற்பாற்றென்கின்றது.

(க0) சமானாதிகரணம் (ககூ):—வசித்துவாதிகுணங்கள் சத்தியசங்கற்பத்துவாதிகுணங்களினின்று பேதமுறுவன அன்றென்கின்றது.

(கக) சம்பந்தாதிகரணம் (உ0, உக):—ஆதித்தியன் கண் என்னும் ஸ்தான சம்பந்தமாக உபாசனை பேதமுறுதலின், வித்தைகள் ஒன்றன்றென்கின்றது.

(கஉ) தர்சயதியதிகரணம் (உஉ):—சாந்தோக்கியத்திலும் தைத்

திரீயத்திலும் கூறப்பட்ட மண்டலவித்தை ஒன்றுமாதலின், உமாபதித்து வாதி குணங்கள் இரண்டிலும் உபசங்கரிக்கற்பாலன என்கின்றது.

(௧௩) சம்பிருதியதிகரணம் (௨௩):—வைசுவாநராதி உபாசனைக ளில் ஆகாயவியாபகமும் மகாவீரியச்செய்கைகளும் உபசங்கரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(௧௪) புருஷவித்தியாதிகரணம் (௨௪):—சாந்தோக்கியத்திலும் தைத் திரீயத்திலும் கூறப்பட்ட புருஷவித்தைகள் பலத்திலும், அவயவங்களிலும் பேதமுறலான் இரண்டும் ஒன்றன்றெனக் கூறுகின்றது.

(௧௫) வேதாத்தியதிகரணம் (௨௫):—"உண்மைபேசவேன்" என் றற்றொடக்கத்த தைத்திரீயமந்திரங்கள் வித்தியாங்கங்கள் அன்று எனக் கூறுகின்றது.

(௧௬) ஹாநியதிகரணம் (௨௬):—வித்துவான் செய்யும் புண்ணிய பாவங்கள் முறையே மித்திரர் சத்துருக்களை அடையுமென்றுரைக்கின்றது.

(௧௭) சாம்பராயாதிகரணம் (௨௭—௩௦):—சமஸ்த கன்மங்களினின்று நீங்கிய யோகிகள் விஷ்ணுபதத்தைக் கடந்து, பரமானந்தமய சிவபதத்தைப் பிரவேசிக்கின்றனர் எனக் கூறுகின்றது.

(௧௮) அதிகாரிகாதிகரணம் (௩௧):—ஞானிகளுக்கும் பிராரப்தகன் மம் அநுபவித்த பின் நசிக்கின்றதென்றும், ஆகலின் அதிகாரிகளும் அதி காரம் நீங்கிய பின்னர்த்தான் முத்தியடைகின்றனர் என்றும் உணர்த்துகின் றது.

(௧௯) அநியமாதிகரணம் (௩௨):—உபகோசலாதி வித்தைகளை உபா சிப்பவர்க்கு அர்ச்சிராதிகதி நியமமாய் உண்டென்கின்றது.

(௨௦) அக்ஷரதியதிகரணம் (௩௩, ௩௪):—அக்ஷரப்பிரம சம்பந்தமா கக் கூறப்பட்ட அஸ்தூலத்துவமுதலிய குணங்கள் பரவித்தியோபாசனைக ளில் உபசங்கரிக்கற்பாலன என்று கூறுகின்றது.

(௨௧) அந்தராபூதக்கிராமாதிகரணம் (௩௫, ௩௬):—உஷஸ்தவித் தைக்கும் ககோளவித்தைக்கும் பேதமில்லை என்கின்றது.

(௨௨) சத்தியாதியதிகரணம் (௩௭):—சத்திய முதலிய குணங்கள் ஆவிருத்தியாய்க் காணப்படுகின்றமையின், சத்வித்தையிற் பேதமில்லை என் கின்றது.

(உ௩) காமாதிபதிகரணம் (௩௮):—சாந்தோக்கியம், பிருகதாரணியம், தைத்திரீயம், கைவல்லியம் என்னும் உபநிடதங்களிற் கூறப்பட்ட தகரவித்தை ஒன்றேயெனக் கூறுகின்றது.

(உ௪) அலோபாதிகரணம் (௩௯):—விசேஷகுணங்கள் சிவப்பிரமத்தினின்று ஓர்காலும் நீங்கா என்கின்றது.

(உ௫) தத்வசநாதிகரணம் (௪0):—முக்தரால் அடையப்படும் சிவப்பிரமம் சகுணப்பிரமமென்கின்றது.

(உ௬) தந்நிர்த்தாரணாநியமாதிகரணம் (௪௧):—யஞ்ஞகன்மங்களில் உபாசனைகள் நியமம் இல்லை என்கின்றது.

(உ௭) பிரதாநாதிகரணம் (௪௨):—சிவபெருமான் ஒருவரேயெனினும், வெவ்வேறு குணங்கள்பற்றி உபாசனை பேதமுறும் என்கின்றது.

(உ௮) லிங்கபலீயஸ்துவாதிகரணம் (௪௩):—வித்தைகள் அனைத்தினும் உமையோடிசைந்த பரவஸ்துவானது உபாசிக்கற்பாற்றெனக் கூறுகின்றது.

(உ௯) பூருவவிகற்பாதிகரணம் (௪௪—௫0):—அக்கினிரகசியப்பிராமணத்திலே, அக்கினிகள் ஞானயஞ்ஞத்துக்கு அங்கமாகின்றன என உரைக்கின்றது.

(௩0) சரீரேபாவாதிகரணம் (௫௧, ௫௨):—சிவபெருமானைத் திரிநேத்திரராகத் தியானித்தலில் யாதும் விரோதமின்றெனக் கூறுகின்றது.

(௩௧) அங்காவபத்தாதிகரணம் (௫௩, ௫௪):—உபாசகர் அனைவராலும் விபூதி தரிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(௩௨) கிரதுவச்சியாயஸ்துவாதிகரணம் (௫௫):—வைசுவாநரவித்தை அம்சமாகவன்று, சமஸ்தமாகவே உபாசிக்கற்பாற்றென்கின்றது.

(௩௩) நாநாசப்தாத்தியதிகரணம் (௫௬):—உபாசனை அனைத்தையும் ஒருங்கு அநுட்டித்தல் கூடாதென்று கூறுகின்றது.

(௩௪) விகற்பாதிகரணம் (௫௭):—உபாசகனுக்குப் பல உபாசனைகளுள் ஒன்றே அமையும் என்கின்றது.

(௩௫) யதாகாமாதிகரணம் (௫௮):—காமியபலங்களை உத்தேசித்த உபாசனைகளுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் உபாசிக்கலாம் என்றுரைக்கின்றது.

(கஅ) யதாச்ரயபாவாதிகரணம் (௬௯—௬௪):—உபாசனைகள் யஞ்ஞ கன்மங்களுக்கு வேண்டும் என்னும் நியமமில்லை என்கின்றது.

மூன்றும் அத்தியாயத்து நான்காம் பாதம்.

(க) புருஷார்த்தாதிகரணம் (க—கஎ):—பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம் என ஆச்சிரமங்கள் மூன்றுளவென்றும், பலத்தை நோக்காத விகிதகன்மங்களை அங்கமாகக்கொண்டது புருஷார்த்தமாகிய ஞானம் என்றும் கூறுகின்றது.

(உ) பராமர்சாதிகரணம் (கஅ—உ0):—ஆச்சிரமதருமமனைத்தும் சித்தித்தவென்று உணர்த்துகின்றது.

(ங) ஸ்துதிமாத்திராதிகரணம் (உக, உஉ):—உற்கீத முதலியவற்றின் தியானத்துக்கு விதியுண்டென்கின்றது.

(ச) பாரிப்பிலவாதிகரணம் (உங, உச):—உபநிடதங்களில் நேரும் கதைகள் உபாசனவிதிகளோடிசைந்து, அவைகளைத் துதிக்கும் பொருட்டேயுள்ளன என்கின்றது.

(ரு) அக்நீந்தனாத்தியதிகரணம் (உரு):—ஆச்சிரமத்துக்குரிய தருமங்களைச் செய்வதில் அபேக்ஷையுடையது வித்தை என்கின்றது.

(சு) சர்வாபேக்ஷாதிகரணம் (உசு):—ஆச்சிரமிகள் அனைவர்க்கும் அந்தந்த ஆச்சிரமத்துக்குரிய கன்மங்களோடு வித்தை சேர்ந்திருத்தல் வேண்டும் என்கின்றது.

(எ) சமதமாத்தியதிகரணம் (உஎ):—விவேகமுதல் மோக்ஷவிச்சை பரியந்தமுள்ள பரதர்மங்களெல்லாம் வித்தையை விரும்பும் ஆச்சிரமிகள் அனைவராலும் அநுட்டிக்கற்பாலனவென்கின்றது.

(அ) சர்வாந்நாநுமத்தியதிகரணம் (உஅ—ங௧):—பிராணனுக்குச் சம்சயம் நேருமிடத்து, வித்துவான் சர்வான்னம் புசிக்க அநுமதியுண்டு என்றும், அஃதொழிந்தகாலத்தில் நிஷித்தாசரணஞ்செய்யில் சிவாஞ்ஞாத்துரோகியாவான் என்றும் கூறுகின்றது.

(௯) ஆச்சிரமகர்மாதிகரணம்(ஙஉ—ஙரு):—வித்தைக்கு இசைவாகிய கன்மாநுஷ்டானகாரியத்தை உணர்த்துகின்றது.

(க0) அந்தராதிகரணம் (ஙசு—ங௯):—ஆபத்து விஷயங்களில் ஆச்சிரமமில்லாதோர்க்கும் செபமுதலியவற்றால் ஞானம் எய்துகின்றதென்கின்றது.

(கக) தத்பூதாதிகரணம் (சo—சஉ):—உயர்ந்த ஆச்சிரமங்களினின்று வழுவினோர்க்குப் பிராயச்சித்தாதியினால் வித்தியாதிகாரமின்றென்கின்றது.

(கஉ) சுவாமியதிகரணம் (சச, சடு):—இருத்துவிக்குக்களினாற் செய்யப்பட்ட கன்மபலம் யஜமானனுக்குச் சேர்கின்றதென்கின்றது.

(கங) சககாரியந்தரவித்தியதிகரணம் (சசு):—வித்தையுடையவனுக்கு மௌனவிதி நேர்கின்றதென்கின்றது.

(கச) கிருத்சினபாவாதிகரணம் (சஎ):—ஆச்சிரமிகளனைவர்க்கும் ஞானம் உண்டென்கின்றது.

(கடு) பாசுபதவிரதாதிகரணம் (சஅ, சகூ):—பாசுபதவிரதம் சிவப்பிரசாதத்தைப் பாலிக்கின்றதென்கின்றது.

(கசு) ஐகிகாதிகரணம் (டுo):—இப்பிறப்பிலே வீடுபேறு எய்தவேண்டும் என்னும் நியமமில்லை என்கின்றது.

(கஎ) முக்திபலாநியமாதிகரணம் (டுக):—யஞ்ஞகன்மங்களிற் பேதமுளதாதல் போல, ஞானபலனாக எய்தும் மோக்ஷபலத்திற் பேதமில்லை என்கின்றது.

மூன்றாம் அத்தியாயத்து நான்கு பாதங்களினும் அதிகரணம் (சுஅ); சூத்திரம் (கஅஉ).

நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதம்.

(க) ஆவிருத்தியதிகரணம் (க, உ):—சிவோபாசனை பலோதயம் வரையும் ஆவிருத்தி செயற்பாற்றென்கின்றது.

(உ) ஆத்துமாதிகரணம் (ங):—சிவோபாசனை உபாசகனுக்கு முக்தி பாலிக்கின்றதெனக் கூறுகின்றது.

(ங) பிரதீகாதிகரணம் (ச):—சிவபெருமான் குறியிற் சாக்ஷாத்தாக உபாசியராகார் என்கின்றது.

(ச) பிரம்மதிருஷ்டியதிகரணம் (டு):—விசேஷாதிகமாகிய சிவதிருஷ்டியினாலே மனமுதலியவற்றுக்கும் உபாசியத்துவம் உண்டென்கின்றது.

(டு) ஆதித்தியாதிமத்தியதிகரணம் (சு):—உத்கீத முதலிய கன்மாங்கங்கள் ஆதித்தியன் முதலியோராக உபாசிக்கற்பாலன என்கின்றது.

(௬) ஆசீநாதிகரணம் (௭—௧௦):—ஒருவன் இருந்தே சிவபிரானைத் தியானித்தல் வேண்டும் என்கின்றது.

(௭) யத்திரைகாக்கிரதாதிகரணம் (௧௧):—ஏகாக்கிரசித்தத்தைமாத்திரம் சாதகஞ் செய்யும் தியானரூபமாயுள்ள உபாசனைக்குத் திக்தேசகால நியமமின்றென்கின்றது.

(௮) ஆப்பிராயணாதிகரணம் (௧௨):—சிவபரியந்தஞ் சிவோபாசனை இடையீடின்றி அப்பியசித்தல் வேண்டும் என்றும், அதனை இடையில் விடுதல் கூடாதென்றும் கூறுகின்றது.

(௯) ததிகமாதிகரணம் (௧௩):—உபாசகர் விஷயத்திற் சகல பாவ கன்மமும் ஒழிந்துபோம் எனவும், பாவப்பயன் தீய்க்கப்படாது தொலையாதென்றது அஞ்ஞானிக்காம் எனவும் கூறுகின்றது.

(௧௦) இதராசிலேஷாதிகரணம் (௧௪):—வித்துவானுடைய புண்ணியமும் முத்திக்கு விரோதமாய் விரும்பாத பலத்தையுடைமையான், அவனை அது பற்றுது நாசமுறும் என்கின்றது.

(௧௧) அநாரப்தகாரியாதிகரணம் (௧௫):—பேற்றைக் கொடுக்கமுயன்ற பிராரப்த புண்ணிய பாவத்துக்கு நாசமின்றெனக் கூறுகின்றது.

(௧௨) அக்கினிஹோத்திராதிகரணம் (௧௬—௧௮):—அக்கினிகோத்திரமுதலிய அநுட்டிக்கப்படல் வேண்டும் என்கின்றது.

(௧௩) இதரக்ஷபணாதிகரணம் (௧௯):—செனனமரணம் வித்தியாலோபத்துக்கு ஏதுவாயிராதென்கின்றது.

நான்காம் அத்தியாயத்து இரண்டாம் பாதம்.

(௧) வாக்சம்பத்தியதிகரணம் (௧, ௨):—வாக்காதிகளின் லயம் விருத்திலயம் எனப்படும் என்கின்றது.

(௨) மநஸ்சம்பத்தியதிகரணம் (௩):—மனசு பிராணனிலே விருத்திலயம் எய்தும் என்கின்றது.

(௩) பிராணசம்பத்தியதிகரணம் (௪—௬):—சீவான்மாவோடு கூடப் பிராணன்கள் பூதங்களில் இயைகின்றவென்கின்றது.

(௪) அசிருத்தியுபக்கிரமாதிகரணம் (௭):—அர்ச்சிராதிமார்க்கத் தொடக்கத்துக்குமுன் வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் உற்கிராந்தி சமம் என்கின்றது.

(௬) ததாபீத்தியதிகரணம் (அ—௧௩):—அர்ச்சிராதி வித்துவானுடைய உற்கிராந்தி செய்யும் ஆன்மாவுக்கு இயைந்ததென்கின்றது.

(௬) பரமசம்பத்தியதிகரணம் (௧௪, ௧௫):—சம்பத்திவசனத்தினால் சிவப்பிரமத்திலே பூதங்கள் பிரிக்கப்படாதிருக்கின்றன என்கின்றது.

(எ) ததோகோக்கிராதிகரணம் (௧௬):—அவித்துவானுக்கும் வித்துவானுக்குமுள்ள கதி பேதமென்கின்றது.

(அ) இரச்சுமியநுசாரியதிகரணம் (௧எ—௨௦):—எப்பிரகாரத்தாலும் வித்துவானுக்குச் சிவப்பிராப்தியிலே இரவு, தக்ஷிணாயனம், கிருஷ்ணபக்ஷம் என்னும் நிஷேதமின்றெனவும், எப்போது தேகம் நீங்குமோ அப்போதே சிவப்பிராப்தி உண்டெனவும் உணர்த்துகின்றது.

நான்காம் அத்தியாயத்து மூன்றாம் பாதம்.

(௧) அர்ச்சிராதியதிகரணம் (௧):—சிவப்பிராப்தி ஒளிமார்க்கத்தினால் எய்தும் என்கின்றது.

(௨) வாயுவதிகரணம் (௨):—வருஷத்துக்குப் பின்னும் ஆதித்தியனுக்கு முன்னும் வாயு வைக்கற்பாலன் என்கின்றது.

(௩) தடிததிகரணம் (௩):—வருணாதியர் அர்ச்சிராதிமார்க்கத்தில் வைத்தற்குரியர் என்கின்றது.

(௪) ஆதிவாகிகாதிகரணம் (௪, ௫):—வருணன் முதலியோர் அநுக்கிரகம் பண்ணுவது காரணமாகப் பிரமத்தை அடைவிக்கின்றனர் என்கின்றது.

(௫) காரியாதிகரணம் (௬—௧௫):—அறுவித அத்துவாவையும் கடந்த பதமானது விசுவாதிகராகிய சிவனார்க்கே பொருத்தம் என்கின்றது.

நான்காம் அத்தியாயத்து நான்காம் பாதம்.

(௧) சம்பத்தியாவிர்ப்பாவாதிகரணம் (௧—௩):—அபகதபாப்மத்துவாதி குணங்கள் ஆவிர்ப்பவிக்கப்பெற்ற முத்தன் சிவசாமியகுணசொரூபனாகின்றான் என்கின்றது.

(௨) அவிபாகேநதிருஷ்டத்துவாதிகரணம் (௪):—முத்தனுக்குச் சிவசாமியம் உண்டென்கின்றது.

(௩) பிராம்மாதிகரணம் (௫—௭):—சிவசாமியமாதலே முக்தனுடைய சொரூபம் என்கின்றது.

(௪) சங்கற்பாதியதிகரணம் (௮, ௯):—சிவசாமியமுற்ற முக்தனுக்குச் சுவாதந்திரியம் யுக்தம் எனக் கூறுகின்றது.

(௫) அபாவாதிகரணம் (௧௦—௧௪):—பரமானந்தத்திற் பிரவேசித்த முக்தர்களுக்குத் துக்கத்தொடர்ச்சி இன்றென்கின்றது.

(௬) பிரதீபவதாவேசாதிகரணம் (௧௫, ௧௬):— முக்தியில் ஞானமுதலிய நிஷேதிக்கப்படுதல் இன்றெனக் கூறுகின்றது.

(௭) ஜகத்வியாபாராதிகரணம் (௧௭—௨௨):—முக்தனுக்கு ஜகத்சிருட்டியாதி வியாபாரம் இன்றெனக் கூறுகின்றது.

நான்காம் அத்தியாயத்து நான்கு பாதங்களினும் அதிகரணம் (௩௩); சூத்திரம் (௭௬).

நான்கு அத்தியாயத்துப் பதினாறு பாதங்களினும் அதிகரணம் (௧௮௧); சூத்திரம் (௫௪௫).

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவேதவியாசமுனிவரருளிய பிரமசூத்திரத்துக்கு

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்

இயற்றியருளிய

சிவாத்துவித சைவபாடியப்

பிராரம்பம்.

---o---

நமஸ்காரம்*

ஓம் நமோ ऽஹம்பதார்த்தாய லோகாநாம் ஸித்திஹேதவே
ஸச்சிதாநந்தரூபாய ஶிவாய பரமாத்மநே ||க||

(இதன் பொருள்) ஓங்காரப்பொருளாயும், சத்திவிசிட்டப்பொருளா யும், (சிவசாக்ஷாத்காரமுடைய) உலகினர்க்குச் சித்திமுத்திகளைக் கொடுத் தற்குக் காரணப்பொருளாயும், சச்சிதானந்தப்பொருளாயும் உள்ள சிவபெரு மானும் பரமான்மாவுக்கு நமஸ்காரம்.

‡ ஸ்ரீவேதவியாசமுனிவர் அருளிய பிரமசூத்திரரூபமாயுள்ள வேதாந்த மீமாஞ்சாசாஸ்திரத்துக்கு, ††உலகினர்பொருட்டுப் பாடியஞ் செய்கின்ற ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் இடையறாச் சிவத்தியானத்தினாலே தமக்கு இடை யூறு சிறிதும் அணுகப்பெறாராயினும், ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டுத் தமது வழிபடுகடவுளாகிய சிவபெருமானைத் துதிப்பாராயினர்.

---

* நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம், ஆசி என மங்கலவாழ்த்து மூவகைப்படும். இவற்றைத் தமிழ்நூலார் முறையே வணக்கம், பொருளியல்புரைத்தல், வாழ்த்து என்பர்; இப்பாடியகாரர் மூவகை மங்கல வாழ்த்தையும் முறையே மூன்று சுலோகங் களினாற் கூறுவாராயினர்.

† அஹம்பதஸ்யார்த்தஶ்ச ஶக்த்யாத்மா பரமேஶ்வரஃ

(கைலா. கக. கூஅ)

"அகம் பதத்தின் அர்த்தம் சத்தியோடியைந்த சிவபெருமான்."

‡ சிவார்க்கமணிதீபிகையிலிருந்து எடுத்துரைக்கப்படுவனவாய சில குறிப்புகள்.

†† உயர்ந்தோர்.

மகோபநிடதத்துள்ள தகரவித்தியா சம்பந்தமாகிய "இருதம் சத்தியம் பரம்பிரமம்" என்னும் மந்திரத்தை மீட்டும் மீட்டும் இச்சைவ பாஷ்யத்தில் எடுத்தாளுகின்றனராதலின், இப்பாஷ்ய கர்த்தாவாகிய சிவாசாரியர் தகரவித்தியா நிஷ்டர். "காமாதியதிகரண" த்திலும் (ங. ங. ஙஅ) தாமே தகரவித்தையின்மேற் கொண்ட பிரியத்தினுற் பரவித்தைகள் அனைத்திலும் *தகரவித்தையே உத்கிருஷ்டமுடைத்தென்று கூறுகின்றனர்.

பரமான்மா:— தமது சர்கையிலே கூறப்பட்ட தகரவித்தையில் உபாசிக்கற்பாலரும், நமஸ்கரிக்கற்பாலருமாய மெய்ப்பொருளைப் பரமான்மா என்னும் விசேஷார்த்த மொழியினுல் ஈண்டு விதந்தருளினர்.

தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: (மகா. கக. கங)

"அந்தச் சிகையின் மத்தியிலே பரமான்மா உளர்" என்று தைத்திரீயத்திற் கூறப்படுகின்றது.

சிவாய:—சிலர் சிவபெருமானுக்கு வேருயுள்ளவர் அந்தப் பரமான்மா என்று கூறிப் பிறரை மயங்கவைக்கின்றனர். அதனுற் சாதுக்கள் மயங்கற்க என்றுணர்த்தச் சிவாய என்னும் மொழி பரமான்மாவை விசேடித்து நின்றது. தகரவித்தியோபாசியராகிய பரமான்மாவானவர் சிவபெருமானே என்று சிவாசாரியர் "சாரீராதிகரண" த்தில் (க. உ. ங—அ) மிகு நிபுணமாய்ச் சாதிக்கின்றனர். அங்ஙனமாயினும், தைத்திரீயத்திற் போற்றப்பட்ட பரமான்மா என்னும் சப்தத்தை விசேடித்துக் கூறும்பொருட்டு, உபக்கிரமத்திலே,

தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீஶம் (மகா. அ. ங)

"சிவப்பிரசாதத்தினாலே (சர்வஞ்ஞதை எனப்படும்) மகிமைக்குணத்தையுடைய ஈசனா" என்றும், உபசங்காரத்திலே

விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (மகா. க0. ங.)

"விசுவாதிகராகிய உருத்திரர் மகா இருடி" என்றும், உபக்கிரமத்திலே

ய: பரஸ்ஸ மஹேஶ்வர: (மகா. க0. அ)

"எவர் மேலானவரோ, அவர் மகேசுவரர்" என்றும், உபசங்காரத்திலே

ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் (மகா. கஉ. க)

---

* இது தகராகாய சிதம்பரத்தின் மேற்று.

“ஊர்த்துவவீரியமுடைய விரூபாக்ஷர்” என்றும் (உபக்கிரம உபசங்காரங்களிலே) கூறப்பட்ட ஈசர், உருத்திரர், மகேசுவரர், விரூபாக்ஷர் என்னும் நாமங்களுள் ஒன்றை எடுத்தாளுதல் யுக்தமேயாக,

ஸமேதயதி யந்நித்யம் ஸர்வார்தாநுபக்ரமாந் |
ஶிவமிச்சந் மநுஷ்யாணாம் தஸ்மாத்தேவ: ஶிவ: ஸ்ம்ருத: |

(ம. து. உ0௯., கஉக)

“மனிதர்க்கு இன்பஞ் செய்ய விரும்பி எப்பொருள்களுக்கும் நித்தியமாய் உபக்கிரமமாயுள்ளதை விருத்தி செய்தலினால், அந்த (மகா) தேவர் சிவன் எனப்படுவர்” என்னும் சுலோகம் “மனிதர்க்கு இன்பஞ் செய்ய விரும்பி” எனப் புருஷார்த்தத்துக்கு உபயோகமாய சமஸ்த முயற்சியையும் விருத்தி செய்து, பிரவிருத்தி செய்தற்குச் சிவபெருமானே காரணர் என்று வியாக்கியானஞ் செய்கின்றமையான், மாணவர்கள் சிவநாமசங்கீர்த்தனஞ் செய்து அதன் பொருளை அறிதல் வாயிலாக, ஆரம்பித்த இந்தச் சைவபாஷ்யபாடம் சிவப்பிரசாதத்தினால் இடையூறின்றி இனிது முற்றுப் பெற்று, அவர்கள் விரும்பிய சகல புருஷார்த்தமும் சித்தியாகுக என உணர்த்தற்கே சிவசப்தமானது எடுத்தாளப்பட்டது.

“தேவாதிகரண” த்திற் (க. ௩. உ௫) கண்ட சூத்திரத்திற் போல

ஸமா ஹ்யஸ்மி மே ஸர்வே தாநவாஸுரராக்ஷஸா: |
ஶிவோऽஸ்மி ஸர்வபூதாநாம் ஶிவத்வம் தேந மே ஸுரா: |

“சுரர்களே! இராக்ஷதர் அனைவரும் தேவர் அனைவரும் எனக்குச் சமமே; சமஸ்த சேதனப்பிரபஞ்சங்களுக்கும் சிவத்துவத்தைக் கொடுக்க விரும்புதலாற் சிவன் எனப்படுகின்றேன்” என்னும் மகாபாரதத்துக் கண்ட சிவபிரானார் திருவாக்கினால், மனிதர் மாத்திரமன்றித் தேவர் முதலாயினோருஞ் சிவபிரானை உபாசித்தற்குரியர் என்பது பெறப்படுகின்றது.

இச்சித்தல் எனப் பொருள்படுகின்ற வச என்னும் தாதுவினின்று வர்ணவியத்தியயத்தினாலே சிவ என்னும் சப்தம் சித்திப்பது பாணினிவியாகரணம் (சு. ௩. க0௬) ம் சூத்திரத்தினாலாம்.

ஹிம்ஸாயா ஸிம்ஹஶப்தோ வஶகாந்தே ஶிவ: ஸ்ம்ருத: |
வர்ணவ்யத்யயஸித்தேந பஶ்யக: கஶ்யபோ யதா |

“பச்யக” என்பதினால் “கச்யப” என்னும் பதமும், ஹிம்சித்தல் எனப் பொருள்படும் “ஹிசி” தாதுவினின்று “சிம்ம” சப்தமும் வர்ணவியத்தி

யயத்தினால் எய்தினாற்போல, இச்சித்தல் எனப் பொருள்படும் வசதாதுவி னின்று சிவ சப்தமும் எய்தியதென்ப. எனவே, சிவசப்தத்துக்கு இச்சை யுடையர் (அன்புடையர்) என்பது பொருள். இவ்வன்பு எவ்விஷயத்தில் நிகழ்ந்ததாமோவெனின், தேவர் அசுரர் மனிதராயினோர்க்குச் சிவபெரு மான் சிவத்துவஞ் செய்ய அன்புறுதலினால் என மேலே கூறிய மகாபாரத இருஷிவசனத்தினால் உணரற்பாற்று.

பின்னரும் சுபம் எனப் பொருள்படுகின்ற சிவ சப்தமானது சுபத்தைச் செய்கின்றனர் என்னும் பொருளினும் "பசாத்தியச்" பிரத்தியயஞ் செய் தலினாற் போந்தது. இவ்விரு வியுற்பத்தியினாலும் சிவபெருமானுக்குச் சிவ என்னுந் திருநாமம் எய்திற்று. சிவநாமத்தை ஓர் முறை உச்சரித்து விடின் சகல பாவங்களும் ஒழிந்துவிடும். இவ்வுண்மைக்கு,

சுவபிவா யஹுணாஉ ஶிவ ஐதி வாசம வடெ தெநு ஸஹ ஸம வடெதெநஸஹஸமவஸெ தெநு ஸஹ ஹுாஂஜீத।*

"சண்டாளனேனுஞ் சிவனெனும் மொழியைச் செப்புவானாயின் அவ னொடு பேசுக, அவனொடு வசிக்க, அவனொடுண்க" (முண். ௩. உ. ௧) என் னும் முண்டகோபநிடதசுருதியும்,

யதிஅ்யக்ஷரம நாம கிரெரிதம நுணாம ஸக்ருஸ்வீஸம்ரா ஈவ மோஹ ஹநதி।

"இரு அக்ஷரமாகிய (சிவ) நாமத்தை வாக்கினால் ஓர்முறை உச்சரிப்பின், அது விரைந்து மனிதர் பாவங்களையெல்லாம் நாசமாக்கும்" என்னும் புராணவசனமுமே பிரமாணம்.

விஜ்ராவஸ முராதிராதிரயஷா ஈமெ்ெகாஷமிநீ முராதெள। தத்ர வஷாக்ஷரீ தஸ்யாம ஶிவ ஐத்யக்ஷரஷயம்।

---

* இம்மந்திரத்தின் உபப்பிருங்கணத்தை (எஅ-ம் இலக்கத்தின்) கீழ்க் காண்க.

யஷாம வாஸம யோ வா ஶிவ ஐத்யக்ஷரஷயம்। ஸக்ரு ஜவதி யதாவீ ஜநோ மோக்ஷம ஸ விஂஷதி (சங். த. ௩௦. ௫அ)

சிவனெனுந் துணைச்சொரெழுத்தினை
நவலுவோர்கதிகொய்திலெய்துவா
ரவனையெள்ளினையாரிதாற்றுவா
ரெவனையுய்குதிபிழைதைநீரைரீ.

(கர், உண்மை, ௫௪)

"பதினெண் வித்தைகளுள்ளும் சுருதி மேலானது; அச்சுருதியுள்ளும் ஸ்ரீருத்திரம் மேலானது; அவ்வுருத்திரத்துள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரம் மேலானது; பஞ்சாக்ஷரத்துள்ளும் சிவ என்னும் ஈரெழுத்து மேலாயிற்று" என்று அபியுக்தர் கூறினர்.

பாவம் அனைத்தையும் தகிக்கும் சிவநாமத்தை முதற்கண்ணே விதந்து கூறினமை மாணவர்களுடைய சிரவணாதிகளில் நிகழும் பாவங்களை அது ஒழித்துவிடும் என்னும் மற்றோர் பயன் நோக்கியாம்.

உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட தகரவித்தியாப் பிரகரணங்களிற் காணப்படும் ஓம் முதலிய நான்கு விசேஷணங்களினாற் சிவபெருமான் விசேடியராய்க்கொண்டுரைக்கப்பட்டார்.

ஓமிதி ப்ரஹ்ம (தைத். க. அ. க)

"ஓம் என்பது பிரமம்" என்னுஞ் சுருதியினாலும்,

ஸம்ஹர்த்தா ஸர்வ ஜகதோ ஹரஸ் ஸர்வத்ர வ்யாபக:।
ஸர்வஜ்ஞோ பகவான் பாதா ஓமிதி ஸ்மர்யதே ஶிவ:॥

"அனைத்தையும் சங்கரிப்பவராதலின் அரன் எனவும், வியாபகராதலின் விஷ்ணு எனவும், சர்வஞ்ஞராதலிற் பகவான் எனவும், காப்பவராதலின் ஓம் எனவும் திருநாமங்கள் சிவபிரானுக்குப் பொருந்தன" என்னும் கூர்மபுராணப் பிரமாணத்தினாலும் ஓம் என்பது பரப்பிரம சிவவாசகமாம்.

அவதேஷ்டிலோபஶ்ச।

என்னும் உணாதி சூத்திரத்தினாலே, இரக்ஷணார்த்தத்திலுள்ள அவ என்னும் தாதுவுக்கு மந் பிரத்தியயஞ்செய்து, அந்தப் பிரத்தியயத்து அந்னும் டிக்கு உலோபஞ் செய்தலால், அது அவ+ம் என நிற்க,

ஜ்வரத்வரஸ்ரிவ்யவிமவாமுபதாயாஶ்ச (பா. வி. சூ. ச. ௨0)

என்னுஞ் சூத்திரத்தினாலே, "அவ" என்னுந் தாதுவிலுள்ள அகரத்துக்கும் வகரத்துக்குந் தனித்தனி ஊகாரஞ் செய்ய, அது (ஊ+ஊ+ம்) என நிற்குங்கால்,

அக: ஸவர்ணே தீர்க: (பா. வி. சூ. க. க0க)

என்னுஞ் சூத்திரத்தினால் அது ஊம் என நின்று,

ஸாவ-்யாத-்காஜ-்யா த-்கயொ꞉ (பா. வி. எ. கூ. அச)

என்னுஞ் சூத்திரத்தினுற் குணமாகி ஓம் என முடிந்தது. இதனுற் "சிவ" என்பது "சிவாய" என நான்காவது வேற்றுமையில் நிற்க, ஓம் என்னும் பதமும் அங்ஙனம் நான்காம் வேற்றுமையில் இருக்கவேண்டுமே எனின், அது

ஸ்ரூ‌ெநூஜஙூ꞉ (பா. வி. க. க. கூக)

என்னுஞ் சூத்திரத்தினுல், அவ்வியயம் எனப்பட்டு,

அவ்யயாதாப்ஸுவ꞉ (பா. வி. உ. ச. அஉ)

என்னுஞ் சூத்திரத்தினுல் நான்காம் வேற்றுமை உலோபம் எய்தப்பெற்றது.

ய꞉ புநரெதஂ த்ரிமாத்ரெணொமித்யெதெநைவாக்ஷரெண பரம்புருஷமபித்யாயீத (பிர. ரு. ரு)

"எவன் மும்மாத்திரையுடைய பிரணவவாயிலாகவே பரமபுருஷரைத்தியானஞ் செய்வானே" என்று பிரசிநோபநிடதத்திலே தகரோபாசனையானது பரப்பிரமவாசகமாகிய மும்மாத்திரையுடைய பிரணவங்கொண்டு அநுசந்தானஞ் செய்தல் வாயிலாக இயற்றப்படவேண்டும் என விதிக்கப்படலான், ஈண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் தொகுத்து அநுசந்தானஞ் செயற்பாற்றென்று குசிப்பிக்கப்பட்டது.

அகம்பதார்த்தாய:—ஆன்மாவுக்குப் பிரயோகிக்கற்பாலதாகிய அகம்பதமானது ஆன்மாவுக்கு அந்தரியாமியாய் வேறுபடாததாயுள்ள உபாசகனுடைய பரமாஹம்பாவனைக்கேனும் முக்கியார்த்தத்துக்கேனுஞ் செல்வதாம். இதனுல்

ய ஏஷொ௵ந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிந்ஶெதெ (பிரு. சு. ச. உஉ)
"எவர் அந்தர் இதயத்திலே அமர்கின்றனரோ" எனப் பிருகதாரணியத்திற் கூறப்பட்ட தகரவித்தியாப் பிரகரணத்தோடியைந்து,

அஹமெவெதஂ ஸர்வொ௵ஸ்மீதி மந்யதெ ஸொ௵ஸ்ய பரமொ லொக꞉ (பிரு. சு. கூ. உ0)

"நானே இஃதெல்லாமாகின்றேன் என்று தியானிக்கின்றுனே, அது அவனது பரமலோகம்" என்னும் வாக்கியத்திற் கூறப்பட்ட அகம்பதமானது தியானிக்கின்ற ஆன்மாவினது அந்தரான்மாவினின்றுவேறுறுத அகம்பாவனையிலேனும் சிவபெருமானிலேனும் முற்றுதலான், ஈண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரத்தினுல் அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

லோக்காநாம் சித்திகேதவே:—என்பது தகரோபாசகன் விரும்பிய சமஸ்த உலகப்பிராப்திக்கும் ஹேதுவாயினார் மேற்று.

𑌯 𑌇𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌯 𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌾𑌮𑌚𑌾𑌰𑍋 𑌭𑌵𑌤𑌿 (சாந். அ. க. சு)

"எவன் பரமான்மாவையும் இந்தச் சத்திய காமாதி குணங்களையும் அடைந்து இங்கிருந்து புறப்படுகின்றானோ, அவன் சமஸ்த லோகங்களினும் *காமசாரனாய் ஆகின்றனன்" என்று சாந்தோக்கியத்திலே தகரோபாசகன் சமஸ்தலோகத்தையும் அடைதலாகிய பயன் கூறப்படலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரமாய் அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

சச்சிதானந்தரூபாய:—𑌆𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌹𑍀𑌨𑌮𑍇𑌕𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 (கைவ.)

"முதல் நடு இறுதியின்றி ஏகராய், வியாபகராய், சிதானந்தராய், அரூபராய், அற்புதராய்" எனக் கைவல்லியோபநிடதத்திற் சச்சிதானந்தரூபத்துவம் கூறப்படலான், ஆண்டுக் கூறப்பட்ட குணவிசேஷம் உபசங்காரமாக அநுசந்தானஞ் செயற்பாற்றெனச் சூசிப்பிக்கப்பட்டது.

மேலும் ஓம் முதலாகிய நான்கு விசேஷணங்களானும், இந்தச் சாஸ்திரத்திலே கூறப்படுகின்ற நான்கு அத்தியாயங்களிற் பிரதிபாதிக்கப்படும் பொருள்கள்கொண்டு, பரமான்மா விசேடிக்கப்படுகின்றனர்.

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌪𑌾𑌂𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌯𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 (கட. உ. கரு)

"எல்லா வேதங்களும் எப்பதத்தைச் சொல்கின்றனவோ, தபங்களெல்லாம் எப்பதத்தைக் கூறுகின்றனவோ, பிரமசரியத்தொழுகுவோர் எப்பதத்தை விரும்புகின்றனரோ, அப்பதத்தைச் சங்கிரகமாக ஓம் என உனக்குச் சொல்கின்றேன்" என்று கடவல்லியுபநிடதம் கூறுதலின், ஓம் என்னும் பதப்பிரயோகம் சமஸ்த வேதாந்தங்களும் பரப்பிரமசிவத்திலே அமைவுறுவனவாயின என உணர்த்திற்று.

மேலும் பிரணவத்தின் அகார உகார மகாரம் என்னும் மும்மாத்திரைகளும் இருக்கு யசுர் சாமம் என்னும் முத்திறரூபமென அதர்வணவேதசி

*இட்டமாய்ச் சஞ்சரிப்பவன்.

களிலே பிரசித்தம். பிரபஞ்சசாரமுதலியவற்றினும் "அக்கினிமீளே" (അഗ്നിമീളേ) என ஆதி இருக்குவேதத்தில் ஆதியக்ஷரமாகிய அகாரமும், *"யோநிஸ் சமுத்திரோ பந்துঃ" (യോനിസ്സമുദ്രോ ബന്ധുഃ) என மத்திய வேதமாகிய யசுர்வேதத்தில் மத்திய வருணமாகிய உகாரமும், "சமாநம் வரம்" (സമാനം വരം) என இறுதி வேதமாகிய சாமத்தில் இறுதி அக்ஷரமாகிய மகாரமும் ஒருங்கியைந்து வேதங்களெல்லாம் ஓம் என்னும் பதத்தின் பொருளென உணர்த்தின. இதனாற் சமஸ்த வேதாந்தங்களும் பரப்பிரமசிவபெருமானிலே சமந்வயமாதல் "நூற்றில் ஐம்பது" †என்னும் நியாயத்தினாற் பெறப்படுகின்றது.

சமஸ்த வேதாந்தங்களினும் சிவபெருமான் பிரதிபாதிக்கப்படுதல் சாக்ஷாத் ஓம் என்னும் பதப்பிரயோகத்தினாற் பெறப்படுகின்றது. அங்ஙனமாயினும், வேதாந்தங்கள் பிரமத்திலே சமந்வயமாதல் வேறு விசேஷணத்தினால் விளங்கற்பாலதாயவிடத்தும், பிரதமபாதத்திலுள்ள "ஓம்நமঃ" என்னும் பதங்களோடு நான்காம் பாதத்துள்ள "சிவாய" என்னும் பதமியைந்து, ஆறக்கரமாக முடிந்து, ஸ்ரீசடாக்ஷர மகாமந்திரஸ்மரணமும் மாணாக்கர்க்கு எய்துவதாம் என்னும் அபிப்பிராயத்தோடு ஓம் என்னும் பதப்பிரயோகஞ்செய்தமை பிரதமாத்தியாயத்தின் அர்த்தப்பயனைச் சிவாசாரியர் உணர்த்தும்பொருட்டாம்.

சமஸ்தப் பிரபஞ்சாகார சத்திவிசிட்டராகிய சிவபெருமான் அத்துவிதீயமாயிருத்தலின், உள்ளே கணிக்கப்படுவனவாய், துவிதீயாத்தியாயத்திற் கண்டிக்கப்படுவனவாய்க்கிடந்த (சமய) பேதங்களான் வேறுபாடுடைவாரல்லர் என்பதுணர்த்த அகம் என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டது.

மேலும்,

அகம் என்னும் பதம் சமஸ்தப்பிரபஞ்சாகார சத்திவிசிட்ட சிவாத்துவைதவாசகம் என்று சிவாசாரியர் (ச. ச. கக) ற் கூறுகின்றனர்.

தங்கள் பரமான்மாவாகிய சிவபெருமானைப் பார்ப்பவர்களாதலின் லோகர்கள் எனப்படுகின்ற சிவசாக்ஷாத்காரமுடையோர்க்குச் சித்தி முத்திகளாகிய பலத்தைக் கொடுத்தற்குக் காரணராதலின், மூன்றுவஃது விசேஷணம் புணர்த்தப்பட்டது. அதுபற்றிச் சிரவண மனன உபாசனையின்

---

* இது தைத்திரீய யசுர்வேத இறுதிக்காண்டத்திறுதிக்கண்ணது.

† ஐம்பது வேண்டும் என்ற ஒருவனுக்கு நூறு கிடைத்துவிடின் ஐம்பதும் கிடைத்தது என்பது சித்தித்தது. ஈண்டு ஐம்பது என்பதற்கு உபநிடதங்களும், நூற்றுக்குச் சமஸ்த வேதங்களும் சாமியம். இது வடமொழியில் சதேபஞ்சாசத்தியாயம் எனப்படும்.

பின்னர்ச் சாக்ஷாத்கரிக்கப்பட்ட சிவபிரானே பஞ்சகிருத்திய அதிகாரியாய் முத்திபாலிக்கின்றனர். அதனால் அவர் முத்திக்குச் சாக்ஷாத் சாதனமாக மூன்றும் அத்தியாயங்கொண்டுரைக்கப்பட்டனர் என்பது பொருள்.

சச்சிதானந்தரூபர்:—(என்னும் நான்காம் விசேஷணத்திற்) கண்ட ஆனந்தரூபம் என்றதினால் நிரதிசயானந்த ரூபமாகிய பிரமாநுபவமானது முக்தான்மாக்களுக்குப் பலத்தைக் கூறும் பலாத்தியாயத்திற் கூறப்பட்டதென்றுணர்த்தப்பட்டது.

வஸ்துநிர்த்தேசம்.

நிஜஶக்தி பித்தி நிர்மித நிகில ஜகஜ்ஜால சித்ர நிகுரும்ப: ।
ஸ ஜயதி ஶிவ: பராத்மா நிகிலாகம ஸார ஸர்வஸ்வம் ॥ உ ॥

(இ—ள்) தமது பராசத்தியாகிய பித்திகையிலே நிருமிக்கப்பட்ட சமஸ்த (சேதன சேதனப்) பிரபஞ்சஜால சித்திர சமூகத்தையுடையரும், சகல வேதாகமசாரநிதியாயினருமாகிய அந்தப் பரமான்ம சிவபிரானார் சர்வோத்கிருஷ்டராகின்றனர்.

ஆசி.

யஸ்ய ச யதாம் பிரபஞ்ச: பராத்மா ஸர்வமங்கலோபேத: ।
திஶதி பராயண ஶ்ரேஷ்ட ஸம்ஶ்லேஷ ஸமயேஷ: ॥ ங ॥

(இ—ள்) எவர்க்குச் சித்தும் அசித்துமாயுள்ள பிரபஞ்சம் முழுமையும் (சேஷமாய்) அம்சமாயுளதோ, சமஸ்த மங்கல குணங்களினின்று வேறாகாத உமாசமேதரும், உற்கிருஷ்ட இலட்சுமியோடியைந்தவருமாகிய அந்தச் சிவபிரானார் (சைவபாடிய சிரவணஞ் செய்பவர்களாகிய) உங்களுக்குப் (பல) சித்தியைக் கொடுப்பாராக.

ஸ பராபரஷம் க்ருஷ்ணபிங்களம் (மகா. கஉ. க)

"அவர் புருஷரும் கிருஷ்ணபிங்களரும்" எனச் சுருதியிலே பிரசித்தமாதலின், சகல மங்கலமாகிய பராசத்தி எனப்படும் கவுரியோடும் சமஸ்த கல்யாண குணங்களோடும் இயைந்த பரமான்மா எனப்படும் சிவபிரானார் சுரோதாக்களாகிய மாணவர்களுக்கு அநுக்கிரகித்து, விரும்பிய சம்பூர்ண இஷ்டசித்தி எய்துமாறு செய்வாராக. பரா என்பது உற்கிருஷ்டம் எனவும், மா என்பது இலட்சுமி எனவும் பொருள்படுதலின், உற்கிருஷ்ட இலட்சுமியோடு கூடினவரே பரமான்மா எனப்படுவர். சர்வோத்கிருஷ்ட

இலட்சமியுடையார்க்கே விரும்பிய அனைத்தையும் கொடுக்கும் சாமர்த்தியம் உள்தாம். (சேதநாசேதன) இருவகைப் பிரபஞ்சம் சிவபிரானுக்கு ஆராதனரூபமாய்ப் போந்தது; சேதனப்பிரபஞ்சமெல்லாம் தத்தம் அதிகாரபூருவமாகச் சிவாராதனரூப ஞானத்தையும் கன்மத்தையும் அநுஷ்டித்துநிற்றல்; அசேதனப்பிரபஞ்சமெல்லாம் அந்த ஆராதனத்துக்கு உபகரணமுதலியவாக உபகரித்துநிற்றல்.

குருஸ்துதி.

நம: ஶ்வேதாக்யநாதாய நாநாகமவிதாயிநே।
கைவல்யகல்பதரவே கல்யாணகுரவே நம:॥ ௪॥

(இ—ள்) ஒன்றுக்கொன்று மாறுதல்போலப் பொருள் போதிக்கும் ஆகமவேதங்களை விரோதமுறுவண்ணம் உபதேசிப்பவரும், முத்தியாகிய கைவல்லியத்தை விரும்பினவர்களுக்குப் பிரசாதிக்கும் கற்பகதருவும், இவ்வுலக இன்பத்தை விரும்பினவர்களுக்குப் பிரசாதிப்பவருடைய குருவுமாகிய சுவேதாசாரியர்க்கு நமஸ்காரம்.

சூத்திரார்த்தம் நின்மலமானமை.

வ்யாஸஸூத்ரமிதம் நேத்ரம் விதுஷாம் ப்ரஹ்மதர்ஶநே।
பூர்வாசார்யை: கலுஷிதம் ஶ்ரீகண்டேந ப்ரஸாத்யதே॥ ௫॥

(இ—ள்) சிவத்தை அடைந்த வித்துவான்களுக்கு அந்தப் பிரமமாகிய சிவத்தை (மறவாது) தரிசிப்பித்தலிலே இவ்வியாச சூத்திரம் நேத்திரமாகும்; *பூருவாசாரியர்களால் வியாக்கியானங்களில் மலினமாக்கப்பட்டுப்போன வேதாந்த சூத்திரம் ஸ்ரீநீலகண்டசிவாசாரியராலே (நின்மலமாக) முற்றுவிக்கப்பட்டது.

சைவபாடியச்சிறப்பு.

ஶ்ருதீநாம் வ்யாஸஸூத்ராணாம் ஶ்ரீகண்டீய: ப்ரகாஶ்யதே।
யேநார்தோ பாஷ்யஸந்தோஹோ மஹார்தோ நாதிவிஸ்தர:॥ ௬॥

(இ—ள்) இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களின் பொருளைக்கொண்ட வேதாந்தசூத்திரங்களுக்கு, இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களையும் கண்டத்திலே கொண்ட ஸ்ரீகண்டசைவபாஷ்யகார

* சங்கராசாரியர்க்கு முன்னிருந்த ஏகான்மவாதப் பிரவர்த்தகர்கள்.

ரால் அருளப்பட்டமையின் மகார்த்தமுடைய இந்தப் பாஷ்ய புஸ்தகமானது விஸ்தாரமாகவும் சுருக்கமாகவும் பிரகாசஞ் செய்யப்பட்டது.

ருசஸ்ஸாமாநி யஜூம்ஷி ஸா ஹி ஶ்ரீரம்ருதா ஸதாம்।

(தைத்திரீயப்பிராம்மணம். க. உ. க. உசு)

"ஸ்ரீ என்பது இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களின்மேற்று; அந்தஸ்ரீயானது சத்துக்களுக்கு அமிர்தமாயிருப்பதன்றோ" என்றது சுருதி. எந்த வேதாந்த சூத்திரத்திலே இந்த மூன்று வேதங்களும் மிகுத்து நிகழ்கின்றனவோ, அந்த வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீமத் என்னும் பெயர் உளதாம். மூன்று வேதங்களையும் கண்டத்திற் கொண்டமையால் ஸ்ரீகண்டர் என்னும் திருநாமம் சிவாசாரியர்க்கு எய்திற்று. சமஸ்த வேதங்களையும் அறிந்தவராகிய வியாசபகவானால் அருளப்பட்ட வேதாந்த சூத்திரங்களுக்கு, அங்ஙனம் சமஸ்த வேதங்களையும் உணர்ந்த ஸ்ரீகண்ட சிவாசாரியர் எழுதிய பாஷ்யமே மிகப் பொருத்தம் என்று கடைப்பிடிக்க.

சைவபாடியப்பயன்.

ஸர்வவேதாந்தஸாரஸ்ய ஸௌரப்யாஸ்வாதஶாலிநாம்।
ஆர்யாணாம் ஶிவநிஷ்டாநாம் பாஷ்யமேதந்மஹாநிதி:॥எ॥

(இ—ள்) சர்வவேதாந்தசாரமாகிய சுகந்தத்தின் இனிமையினாலே ஆனந்தமடைந்த ஆரியராகிய சிவநிஷ்டர்க்கு இப்பாஷ்யம் மகாநிதியாம்.

நிரதிசயரசரூபமாகிய பரப்பிரமத்தின் தாற்பரியமே ஈண்டுச் சௌரபம் எனப்பட்டது. ஓரிடத்திலேயுள்ள புஷ்பசுகந்தம் அநேக இடத்திலே வியாபகமாயிருக்குமாறு போல, பரப்பிரமசிவபெருமானிலே முற்றுகின்ற வேதாந்ததாற்பரியமாகிய சுகந்தம் குருசிஷ்ய பரம்பராக்கிரமத்தினால் யாண்டும் வியாபித்துள்ளதென்பதாம். ஆகவே, வேதாந்தசாஸ்திரத்தைப் பாரிஜாத விருக்ஷத்துள்ள பூங்கொத்துக்குச் சமானமாகக் கூறுவது உசிதமாம். பாரிஜாதபுஷ்பம் போல வேதாந்த சாஸ்திரமும் தனது பத்தர்களுக்கு மோக்ஷத்தைப் பாலித்தல் மாத்திரமன்றி,

ஸ யதி பித்ருலோககாமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்டந்தி (சாந். அ. உ. க)

"பிதிர்லோகத்தை அடைய விரும்புகின்றவனுடைய சங்கற்பஞானமாத்திரையினாலே அவன் பிதிரர் அவனை எதிர்கொள்கின்றனர்" என்னும் சுருதிப் பிரகாரம் சமஸ்த போகங்களையும் அவனுக்குக் கொடுக்கின்றது. அங்ஙனமே வேதாந்தவிருந்தசார சுகந்த சுவாது மகரந்தத்தை விரும்புவோர்

களாய், சுபாவசித்த வேதாந்த சாஸ்திரத்திலே சிரத்தா தாற்பரியம் செய்பவர்களாய், சிவநிஷ்டர்களாய், சிவபெருமானைச் சதாகாலமும் தியானஞ் செய்யும் ஆரியர்களாய், பூச்சியர்களாயுள்ள உத்தமபுருஷர்களுக்கு இந்தப் பாஷ்யம் மகாநிதியாம். மகாநிதியானது தரித்திரனுக்குப் புலப்பட்டமாத்திரத்தில் மகானந்தத்தை விளைத்துக் கைக்குக் கிட்டியபோது அவனுடைய எண்ணமெல்லாம் முற்றுவிக்குமாறு போல, இந்தப் பாஷ்யமும் மேலே கூறிய சிவநிஷ்டர்க்குத் தரிசனமாத்திரத்தில் அதிக ஆனந்தத்தை விளைத்து, வேதாந்தார்த்த நிர்ணயஞ் செய்யுமிடத்து நிரந்தர சிவத்தியானத்துக்கு உபயோகமாகிய அவரது (சிவபிரானுரது) சமஸ்த கல்யாணகுண சொரூபாதிகளின் உண்மையை உணர்த்துவதாயிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமசூத்திர

சிவாத்துவித சைவபாடியம்.

முதலாம் அத்தியாயம்.

முதலாம் பாதம்.

(க) ஜிஞ்ஞாசாதிகரணம்.

ஈண்டு உபநிடதமீமாஞ்சை ஆரம்பிக்கப்படுகின்றது. இப்பொழுது இந்த ஆரம்பம் எப்புருஷார்த்தம் பற்றியது? அப்புருஷார்த்தமானது இடையறா விருப்புக்கு ஆஸ்பதமாகிய இன்பத்தை அடைதலாம், இன்றேல் இடையறா வெறுப்புக்கு ஸ்தானமாகிய துன்பத்தை முழுதும் ஒழித்துவிடுதலாம் என்க.

(இவ்வுபநிடத மீமாஞ்சைக்கு) அதிகாரி யாவன்? இதனை அறியவேண்டும் என்பனவாதியாய ஆசையுடையவனே அதிகாரி.

இதன் விஷயம் என்னை? வெளிப்படையாயும் அதிகம் வெளிப்படையாகாமலும் சந்தேகமென்னும் ஊஞ்சல் பற்றி நிகழ்வதே விஷயம்.

எதற்குப் பின்னர் இது ஆரம்பிக்கற்பாற்று? எது எக்காலமும் உபயோகமாய் முற்பட்டு நிகழ்கின்றதோ, (அதற்குப் பின்னர் இது ஆரம்பிக்கற்பாற்று).

இங்ஙனஞ் சிரவணஞ் செய்வோருடைய மனசிலே நிகழ்ந்த சங்கை எனப்படும் முளையை நிர்மூலஞ் செய்யுமாறு சர்வஞ்ஞசிகாமணியாகிய வியாசபகவானால் அருளிச்செய்யப்பட்டது இந்தச்

சூத்திரம்.

அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா (க. க. க)

(க) பின்னர், ஆகலின், *பிரமத்தை அறிய †ஆசை.

இச்சூத்திரம் ஓர் அதிகரணம். ஈண்டு விஷயம், சம்சயம், பூருவபக்ஷம், சித்தாந்தநிர்ணயம், சங்கதி என்பவற்றுக்கு நிலைக்களமாயது அதிகரணம்.

இங்கே அத (அத) சப்தம் (இன்ன விஷயத்துக்குப் பின்னர் இன்னது ஆரம்பிக்கற்பாற்று) என்னும் அனந்தர அர்த்தத்திற் போந்ததன்றி,

அத யோகாநுசாஸநம்।

"இப்பொழுது யோகத்தைப்பற்றிய விவரணம் (ஆரம்பிக்கற்பாற்று)" என்னும் யோகசூத்திரமுதலியவைகளிற் கண்ட அத என்பது போல, அதிகாரப் பொருண்மேற் போந்ததன்று. அதிகாரம் என்பது ஆரம்பம்.

பிரமத்தை அறியவேண்டும் என்னும் ஆசையானது செயற்பாலதாதலின், அது ஆரம்பிக்கப்படுவதின்றன்றே; அது விஷயத்தின் மேற்கொண்ட ஆசையினால் மாத்திரம் உதிக்கற்பாலது.

ஓங்காரஶ்சாதஶப்தஶ்ச த்வாவேதௌ ப்ரஹ்மண: புரா।
கண்டம் பித்வா விநிர்யாதௌ தஸ்மாந்மாங்கலிகாவுபௌ॥

"ஓங்காரம் அத என்னும் இரு மொழிகளும் முன்னரே பிரமாவுடைய கண்டத்தைப் பிளந்து வெளிப்பட்டமையின், அவ்விரு மொழிகளும் மங்கல மொழிகள்" என்னும் ஸ்மிருதிபற்றி, இந்த அத சப்தம் மங்கலப் பொருளிற் கூறப்படுவதன்று; (பிரமத்தை) அறியவிருப்பம் என்பதுபற்றிப் பொருள் பொருந்துமாறின்மையின். சிஷ்டாசாரம் பாதுகாக்கும்பொருட்

---

*ப்ரஹ்மேதி ஶிவஶக்த்யாத்ம ஸர்வாத்மத்வ விவக்ஷயா।
(கைலா. கக. சO)

"சிவனாதும் சத்தியாரதும் சர்வான்மகத்துவமே பிரமம் என்பது வெளிப்படை" என்று கூறப்படலாற் பிரமம் என்பது சத்தியோடியைந்த சிவபெருமான் மேற்று.

†மொய்ப்பானரம்புகயிறாகமூளையென்புதோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்ககில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னாரமுதேயோ
வப்பாகாணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.
(திருவாசகம், ஆசைப்பத்து, உ.)

டுச் சாஸ்திராரம்பத்தில் மங்கலாசரணம் செயற்பாலதெனின், அதுவும் அத என்று (வாயினால்) அக்ஷரத்தைத் தோனித்தல் மாத்திரையானே சித்திக்கின்றது.

இந்த அத சப்தமானது (ஓர் விஷயஞ் சொல்லி மற்றோர் விஷயஞ் சொல்வதாகிய) பக்ஷாந்தரத்திற் கொள்ளும் பொருளுமுடைத்தன்று; முன்னர் யாதும் கூறப்படாதாக, அதன் பிரசங்கமின்மையின்.

அத என்னும் மொழி போசனமேனும் போதலேனும் செய்தல் என்மை போல, நியமமில்லாததாய் முன் நிகழ்வதொன்றைக் குறித்ததும் அன்று; இம்மொழி நியமமாய் உள்ளதொன்றைக் குறித்து ஈண்டுக் கூறப்படலான். எவனுக்குச் சம்பத்தியானது அதிகாரிவிசேஷத்தினாற் பிரம விசாரத்துக்குச் சாதனமாகின்றதோ, அந்தச் சாதனம் முன் உளதாவதாக அறியப்படுகின்றது.

பின்னர் எட்டு வயசுமுதலியவற்றையுடைய பிராமணர் முதலியோரால் உபயோகிக்கப்பட்ட உபநயனசம்ஸ்காரத்தை முற்கொண்டதாயும்,

ஸ்வாத்⁴யாயோ(அ)த்⁴யேதவ்ய꞉ (தைத்திரீய ஆரணியகம். உ. கரு)

“சுவாத்தியாயம் அத்தியயனஞ் செயற்பாற்று” என்று தனக்கு விதிக்கப்பட்ட பிரகாரம் தினந்தோறும் எய்தப்பெற்றதாயும், நியமமாக வழிபடப்படும் ஆசாரியர் வாயிலாக எய்தும் அக்ஷரக்கிரஹணவடிவமாயும், அர்த்த ஞானப்பயனையுடையதாயுமுள்ள வேதாத்தியயனமே பிரமவிசாரத்துக்கு முன் உளதாக உரைப்பது யுக்தம்; தருமம்போலப் பிரமமும் வேதவாயிலாகச்சித்தித்தலின், வேதாத்தியயனஞ் செய்யாதவனுக்குப் பிரமவிசாரங் கூடாதாகலின்.

கேவலம் வேதாத்தியயனத்துக்குப் பின்னாப் பிரமவிசாரம் செயற்பாலதோ எனின், அப்பெற்றித்தாய அத்தியயனம் (ஆகுக); அதன் பின்னர்த் தருமவிசாரம் (ஆகுக); அவ்வேதாத்தியயனமின்றித் தருமவிசாரஞ் சித்திக்காமையின். அங்ஙனம் ஆசாரியராலே (சைமினிமுனிவராலே)

அதா²தோ த⁴ர்மஜிஜ்ஞாஸா (பூருவமீமாஞ்சை. க. க. க)

“பின்னர், ஆகலின், தருமவிசாரவிருப்பம்” எனப் பிரதிபாதிக்கப்பட்டது. முதற்கண்ணே உபாத்தியாயரிடத்து அத்தியயனஞ் செய்த பின்னர்த் தரும விசாரஞ் செயற்பாற்று; ஆகலின், எதற்குப் பின்னர் இது (பிரமவிசாரம்) ஆரம்பிக்கற்பாற்று? தருமவிசாரத்தின் பின்னர், எங்ஙனம்? நாம் தரும

விசாரம் பிரமவிசாரஞ் செய்யும் (பூருவமீமாஞ்சா உத்தரமீமாஞ்சா) சாஸ்திரங்கட்கு ப்ருதியும் பேதஞ் சாற்றுவேமல்லேம்; ஆயின் (அவை) ஒரே (சாஸ்திரம் என்னும்) அபிப்பிராயமுடையேம். தருமவிசாரத்தையும் பிரமவிசாரத்தையும் ஆராதன ஆராத்தியங்களாகப் பிரதிபாதிக்கும் (இரு சாஸ்திரங்களும் முறையே) "பின்னர், ஆகலின், தருமவிசாரவிருப்பம்" (பூ. க. க. க) என்று தொடங்கி, "மீளத் திரும்புதல் இல்லை; சுருதியுண்மையின்" (வே. சூ. ச. ச. உஉ) என முடியும்வரையும் ஒரே சாஸ்திரம். (உத்தரமீமாஞ்சையில்) "பின்னர், ஆகலின், பிரமவிசார ஆசை" என்னும் ஆரம்பமானது பூருவமீமாஞ்சையில்

அயாத ஶேஷலக்ஷணம் (பூ. ௩. க. க)

"பின்னர், ஆகலின், சேஷலக்ஷணம்" என்றற்றொடக்கத்தவற்றிற்போல, அவாந்தரபரிச்சேதப் பொருண்மேற் போந்தது.

இன்றேல் தருமவிசாரமானது பிரமஞானத்துக்குக் காரணமாதலின், அதனை விசாரித்தற்கு உபயோகமுடையனவாய சுருதிலிங்கமுதலியவும், பிரமாணங்களாகப் பிரதிபாதிக்கப்படும் வேதவிதியும், அர்த்தவாதமும், ஸ்மிருதிமுதலியவும் பிரமவிசாரத்துக்கு உபயோகமாதலின், தருமவிசாரத்துக்குப்பின் பிரமவிசாரஞ்செயற்பாற்று; சாதனமின்றிச் சாத்தியம் பெறப்படாமையின்.

பிரமஞானத்தையுற்றுத் தருமம் சாதனமாங்கால்,

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா நாஶகேந (பிரு. சு. ச. உஉ; அ. உ. கசு)

"இதனைப் பிராமணர் வேதாத்தியயனத்தினாலும், யஞ்ஞத்தினாலும், தானத்தினாலும், தபசினாலும், விரதத்தினாலும் அறிய விரும்புகின்றனர்" என்னும் பஞ்சுதி சுருதியே பிரமாணம்.

கருமமானது பிரமஞானத்துக்குச் சாதனமாயின், தருமமே விசாரிக்கற்பாலதும் அநுட்டிக்கற்பாலதுமாக, இந்தப் பிரமத்தைப்பற்றிய வேதாந்த வாக்கியங்களை விசாரஞ் செய்தலாம் சிரமத்தினாற் போதரும் பயன் என்னை? என்று கூறற்பாற்றன்று, பலத்தை விரும்பாத அதிகாரிக்கு (அந்தக் கருமமானது) பாவமாகிய மலத்தை நீக்கும் சம்ஸ்காரவாயிலாகச் சித்த சுத்தியைப் பிறப்பித்தற்குவாயிலாய்ப் (பிரம) ஞானத்துக்கு ஏதுவாகலின். அங்ஙனம்,

யஸ்யைதே சத்வாரிம்ஶத்ஸம்ஸ்காரா: (கௌ. த. அ. ௨௪. ௨௫)

"எவனுக்கு இந்த * நாற்பது சம்ஸ்காரங்களும் (உண்டு)" என்று தொடங்கி,

ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யஞ்ச கச்சதி
(கௌ. த. அ. ௨௪. ௨௫)

"அவன் பிரமத்தின் சாயுச்சியத்தையும் சாலோக்கியத்தையும் அடைகின்றனன்" என்பதிறுதியாக, கர்ப்பாதான முதலிய சகல கருமங்களும் பாவ மலங்களை ஒழிக்கும் சம்ஸ்காரஹேதுவுடையன என அபியுக்தஸ்மிருதி பிரகாசிப்பிக்கின்றது.

(ஆக்ஷேபம்) (யஞ்ஞத்தின்பொருட்டுச்) சாலியின்மீது (ஜலங்கொண்டு) புரோக்ஷித்தலாம் சம்ஸ்காரம் போல, சமஸ்தகருமங்களுக்கும் சம்ஸ்காரம் எய்துமாயின்,

ஸர்வ ஏதே புண்யலோகா பவந்தி (சாந். உ. ௨. ௨௩. ௧)

"இவரெல்லாம் புண்ணியலோகத்தினர் ஆகின்றார்" என்று சுருதியிற் கூறப்பட்ட ஆச்சிரமபலங்களுக்குச் சுவாதந்திரியம் இன்றாய் விடுமாலோ எனின்,

(உத்தரம்) அன்று; (சுவர்க்கமுதலிய) புண்ணியலோகரூபமாகிய பலத்தை அவாவிச் செய்யப்படும் கர்மங்கள் சுவாதந்திரியங்களாயினும், பலத்தை அவாவாது அக்கர்மங்களை அநுட்டித்த புருஷனுக்கு அக்கருமங்கள் சித்தசுத்திமுதலியவற்றைப் பிறப்பித்தற்குக் காரணமாயிருத்தலின்; அங்ஙனமே, அந்தப் புருஷனுக்கு எது ஞானபலமாயுள்ளதோ, அது கருமபலமுமாம்; விரீகிப்புரோக்ஷணமானது அதிர்ஷ்டபலத்தைப் பிறப்பிக்

* நாற்பது சம்ஸ்காரங்களாவன:—(௧) கர்ப்பாதானம், (௨) பும்சவனம், (௩) சீமந்தோந்நயனம், (௪) ஜாதகருமம், (௫) நாமகரணம், (௬) அன்னப்பிராசனம், (௭) சௌளம், (௮) உபநயனம், நான்கு (௯, ௧௦, ௧௧, ௧௨) வேதவிரதங்கள், (௧௩) சமாவர்த்தனம், (௧௪) விவாகம், பஞ்சமகாயஞ்ஞம் (௧௫) தேவயஞ்ஞம், (௧௬) பிதிர்யஞ்ஞம், (௧௭) மனிதயஞ்ஞம், (௧௮) பூதயஞ்ஞம், (௧௯) பிரமயஞ்ஞம், ஏழு பாகயஞ்ஞம் (௨௦) அஷ்டகை, (௨௧) பார்வணம், (௨௨) சிராத்தம், (௨௩) சிராவணி, (௨௪) ஆக்கிரகாயணி, (௨௫) சைத்திரி, (௨௬) ஆசுவயுஜி, ஏழு ஹவிர்யஞ்ஞம் (௨௭) அக்கினியாதேயம், (௨௮) அக்கினிஹோத்திரம், (௨௯) தர்சபூர்ணமாசம், (௩௦) ஆக்கிரயணம், (௩௧) சாதுர்மாசியம், (௩௨) நிரூடபசுபந்தம், (௩௩) சௌத்திராமணி, ஏழு சோமயஞ்ஞம் (௩௪) அக்கினிஷ்டோமம், (௩௫) அத்தியக்கினிஷ்டோமம், (௩௬) உக்தி, (௩௭) சோடசி, (௩௮) வாஜபேயம், (௩௯) அதிராத்திரி, (௪௦) அப்தோர்யாமம் என்பனவாம்.

கத் தர்சபூர்ணமாசயஞ்ஞத்துக்கு அங்கமாய், சுவர்க்கமடைதற்கு முடிவாய் நிலையுறல் போல, கர்மங்கள் ஞானத்துக்கு உபயோகமாய் முத்தி அடைதற்கு முடிவாய் ஒருங்கு நிலையுற்றன. குணகர்மங்களாயிருத்தலின், அக் கர்மங்கள் அங்கங்களாம்.

(ஆக்ஷேபம்) நித்தியம் செயற்பாலனவாய் விதிக்கப்பட்ட ஜ்யோதிஷ்டோமமுதலாயின மற்றோர் முக்கிய பேற்றைக் கொடுப்பதில் விரோதமுறுதலின், அவை சம்ஸ்காரங்களாய் எய்தமாட்டாவோ எனின்,

(உத்தரம்) அன்று; சுவதந்திரவிதிகொண்டு முக்கிய காரணங்களாக விதிக்கப்பட்ட சௌத்திராமணி பிருகஸ்பதிமுதலியன முறையே அக்கினிசயனம் வாஜபேயமுதலிய யஞ்ஞங்களுக்கு அங்கமாயிருத்தல்போல, (ஓர் கர்மத்துக்கு) இரு விதியின் பலத்தினால் ஈரியல்பு சித்தித்தலின். ஆகலின், ஞானோற்பத்திவரையும் கர்மங்கள் அநுட்டிக்கற்பாலன.

(ஆக்ஷேபம்) விவிதிஷந்தி (பிரு. ௬. ௪. ௨௨)

“அறிதற்கு விரும்புகின்றனர்” என்பதினால் ஞானத்தின்மேல் இச்சை பிறக்கும் வரையும் கர்மம் அநுஷ்டிக்கற்பாற்றே எனின்,

(உத்தரம்) இது சாரமின்று; வாளா இச்சையானது புருஷார்த்தமாகாமையின். ஆகலின் பிரமஞானத்துக்குச் சாதனமாகிய கர்மவிசாரஞ் செய்தபின்னரே, பிரமஞானத்தைப் பிறப்பிக்கும் சாஸ்திராரம்பஞ் செய்தல் மிகவும் உசிதம்.

(ஆக்ஷேபம்) கன்மப் பிரமவிசாரம் என்பவற்றுக்குக் கிரம நியமம் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? (இரண்டுக்கும்) கர்த்தா ஒருவனேயாமாதலின் எனின், அன்று. ஆகார அங்கத்துக்கும் தர்சபூரணமாச அங்கிக்கும் கர்த்தா ஒருவனேயாயிருத்தல் போல, தர்மவிசார அங்கத்துக்கும் பிரமவிசார அங்கிக்கும் கர்த்தா ஒருவனேயாயிருப்பதா? ஒரு அங்கியாகிய ஆக்கிநேய யஞ்ஞத்தின்பொருட்டுள்ள அநேகாங்கங்களாகிய பஞ்சப்பிரயாஜங்களுக்குக் கர்த்தா ஒருவனேயாயிருப்பதுபோல, மூன்றுவதாகிய அங்கிக்குத் தர்மப்பிரமவிசாரங்களை அங்கமாகக் கொண்டு இவற்றுக்கு ஒருவனே கர்த்தாவாயிருப்பதா? சமசத்திலே ஜலம் புரோக்ஷணம் செய்பவனே யஜமானுடைய பசுகாமனையின் பொருட்டுக் கோதோகனத்திலே ஜலம் புரோக்ஷணம் செய்தற்கு அதிகாரியாயிருத்தல் போல, தர்மவிசாரத்துக்குக் கர்த்தாவாயிருப்பவனே பிரமவிசாரத்துக்குங் கர்த்தாவாயிருப்பதா? ஆக்கிநேயமுதலிய ஆறு யஞ்ஞங்களும் ஒரே சுவர்க்கபலத்தைக்

கொடுப்பனவேயாக, இவற்றுக்கு ஒருவனே கர்த்தாவாயிருத்தல் போல, தருமவிசாரம் பிரமவிசாரம் என்னும் இரண்டும் ஒரே பலத்தைக் கொடுப்பனவேயாக, இவற்றுக்குக் கர்த்தா ஒருவனேயாயிருப்பதா? தருமவிசாரம் பிரமவிசாரம் என்பவற்றுக்கு அங்ஙனம் ஓர் இயைபிருப்பதாகச் சுருதி முதலிய பிரமாணம் பெறப்படவில்லை. ஆகலின், கர்மப் பிரமவிசாரத்துக்குக் கிரமநியமம் பொருந்தாதெனின்,

(உத்தரம்) சுருதிமுதலிய பிரமாணம் இன்றேல், அப்போது அங்ஙனம் (கிரமநியமமின்றி) இருக்கும்.

விஷ்யா ஞாவிஷ்யாஞ யஷு வெபெஷாஹயம ஸஹ (ஈசா. கக)

"எவன் வித்தை (ஞானம்), அவித்தை (கர்மம்) என்னும் இரண்டையும் அறிகின்றவன்" எனவும்,

தெநெநதி ஞுஹவிக்ஷ்ணுக்ஷஜஸ (பிரு. ௬. ௪. ௯)

"இந்தக் காரணத்தினாலே பிரமத்தை அறிபவனும் புண்ணியத்தைச் செய்பவனும் (மேலே) போகின்றான்" எனவும்,

ஸதெ்யந ஐஹ்யஷஷவஸா ஹெஷ்ஷ க்ஷஷூா ஸஜீரக்ஷாதெந ஞுஹ வயெ்ஷண நிக்ஷுஃ (முண். ௩. க. ௫)

"சத்தியத்தினாலும், தபசினாலும், நல்ல ஞானத்தினாலும், பிரமசரியத்தினாலும் நித்தமும் இந்தப் பரமான்மா அடையப்படுகின்றனர்" எனவும் பிறவுமாக ஞானத்தையும் கர்மத்தையுஞ் சேர்த்து விதிப்பனவாகிய சுருதிகள் காணப்படுகின்றன. கர்மத்துக்கும் ஞானத்துக்கும் மோக்ஷபயன் ஒன்றேயுண்மையின், அந்தக் கர்மப்பிரமவிசாரங்களுக்குக் கிரமநியமம் யுக்தம்.

இங்ஙனமாயினும், அத்தியயனவிதி அக்ஷரத்தைப் படித்தல் மாத்திரத்தில் முற்றுவதாயினும், அது (தர்மப்பிரம) விசாரத்துக்குப் பிரவிருத்தியிலதாய் ஒழியாது; ஷடங்கத்தோடு வேதாத்தியயனஞ் செய்தலினாலே முதற் பார்வையினால் உடனே வாக்கியார்த்தமாத்திரம் எய்துவதாகுமாதலின், பின்னர்ப் பிரமத்தின் ஸ்தூலோபாசனையாயுள்ள சோதிஷ்டோமாதிகளை விதிக்கும் வசனங்களுக்கும், சூக்குமோபாசனையாகிய * தகரவித்தையை விதிக்கும் வாக்கியங்களுக்கும் ஒன்றுக்கொன்று விரோதாபாசவுண்மை நோக்கி, புருஷார்த்தத்தை விரும்பும் புருஷன் கர்மப்பிரமவிசாரத்திற் சுவயமாகப் பிரவர்த்திக்கின்றான். ஆகலின், (கர்மப்பிரம) விசாரத்துக்கு நியமமில்லாமல் இல்லை.

* திருச்சிற்றம்பலம்.

(ஆக்ஷேபம்) "சிரவணஞ் செயற்பாற்று" ஶ்ரோதவ்ய: (பிரு. சு. ச. ரு) என்னும் வாக்கியத்தினால் வேதாந்த சிரவணம் நேரே விதிக்கப்படு கின்றதே எனின்,

(உத்தரம்) அன்று; விதியைப் பிரயோகிக்கும் சம்பத்தியின்மையின். அங்ஙனமாயின், வேதாந்த சிரவணம் அபூருவவிதிப்பாற்பட்டதன்று; பிராப்தமாதலின். பிராப்தமும் வேதாந்தசிரவணம்; இது வேதத்தின் பொருளை அறிதற்குச் சாதனமாயுள்ளது, சாஸ்திரசிரவணமாயிருத்தலின், வைத்தியசாஸ்திரசிரவணமுதலிய போல். இது நியமவிதிப்பாலதுமன்று, அவகாதி முதலிய போல (யஞ்ஞத்தின் சாலியுமியைப் போக்கவல்ல பல் வகை உபாயங்களுள் ஒன்றினைற் போக்கவேண்டும் என விதியுளதாதல் போல), (வேதாந்த விசாரமொழிந்து) அநுபவத்திற் கண்ட ஓர் பயனை விளைக்கக்கூடிய பிறிதோர் உபாயம் பிரத்தியக்ஷத்திற் பெறப்படாமையின். பரிசங்கியாவிதிப்பாற்பட்டதும் அன்று; இங்ஙனம் (அவ்விதியினால்) வேதாந்தசிரவணமாத்திரம் எய்துவதாமன்றி, வேதாத்தியயனம் பெறப் படமாட்டாது முடிந்துவிடுமாதலின். அங்ஙனமாகும்போது, வேதாத் தியயனஞ் செய்யாதவர்க்கு வேதாந்தவிசாரம் எய்தமாட்டாதாய், அதனாற் புருஷார்த்தம் எய்தமாட்டாது. வேதாந்தசிரவணமானது பரிசங்கியா விதிப்பாற்பட்டதாய்க் கர்மகாண்டசிரவணஞ் செய்யவொண்ணாதெனக் கொளின், (கர்ம) விசாரஞ் செய்யாது கர்மாநுஷ்டானம் எய்தாமலும், கர் மாநுஷ்டானம் இல்லாது சித்தசுத்தி எய்தாமலும், சித்தசுத்தியில்லாது ஞானம் உற்பத்தி ஆகாமலும் போம். ஆகலின், (கர்மவிசாரஞ் செய்த பின்னர்ப் பிரமவிசாரஞ் செய்யவேண்டும் என) மேலே யுரைத்தமையே சால்புடைத்து.

சமஸ்த சேதன அசேதனப் பிரபஞ்சாகாரமாகிய பராசத்திவிசிஷ்ட அத்துவிதீய வைபவமாய், சகல வேதசாரரகசிய களஞ்சியமாய், பவர், சிவன், சர்வர், பசுபதி, பரமேசுவரர், மகாதேவர், உருத்திரர், சம்பு முத லிய பரியாயவாசகசப்தங்களின் சாரத்தினாற் பிரகாசிக்கின்ற உற்கிருஷ்ட மகிமாவிலாசத்தையுடையதாய், தனது சேஷ அம்சரூபமாகிய சமஸ்த சேதன (ஆன்மாக்களுடைய) உபாசனைகளுக்கு அநுகுணமாகக் கூறப்பட்ட தனது அருட்பிரசாதத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புருஷார்த்தங்களையுடை யதுமாகிய பரப்பிரமத்தைப் பிரதிபாதனஞ் செய்யும் உபநிடதசாஸ்திரமா மானது விசாரஞ் செயற்பாற்று. தனக்குப் பிரேரகமாயுள்ள சோதனா லக்ஷணமாகிய யாகரூபமாயும், தன்னை ஆராதித்தலான் எய்தும் விசேஷ சாதனரூபமாயும், அந்தந்த அர்த்தவாதத்தினாலே பிரகடனஞ் செய்யப் -ற்கிருஷ்டவிலாசமாயும், சுருதியாதிகளினாலே பெறப்பட்ட சமஸ்த

அங்கங்களோடு இசைந்ததாயும், தனக்குப் பிரமாணுநுகூலமாகிய ஸ்மிருதி, இதிகாசபுராணத்தின்பாலதாம் அபியுக்தருக்திப் பிரமாணத்தினல் இசைந்த உபப்பிருங்கணத்தையுடையதாயும், விதி, நிஷேதம், விகற்பம், சமுச்சயம், உற்சர்க்கம், அபவாதம், வாதம், அப்பியுச்சய முதலியவைகளோடியைந்த தாயும், சமஸ்த புருஷார்த்த இரத்நாகரமாயும், பரமஞானத்துக்குச் சாத னமாயுமுள்ள சிரேஷ்டமாகிய (பூர்வமீமாஞ்சையாகிய) தர்மவிசாரஞ் செய்த பின்னர் என அத சப்தத்துக்கு அர்த்தநிர்ணயஞ் செய்யப்பட்டது.

அதஃ (சூ-அ°) "ஆகலின்" என்பது நிகழ்ந்துபோனமையின் ஏதுப் பொருண்மேற்று; எதுபற்றி வேதாத்தியயனஞ் செய்தமையால் தர்மவிசா ரஞ் செய்ற்பாற்றே, அதுபற்றி அக்கர்மாநுஷ்டானஞ் செய்தல் வாயிலாகப் பிறந்த சித்தசுத்தியினல் வாய்ந்தவனும், அச்சித்தசுத்தி எய்திய காலத்திலே உதித்த விவேகாதி குணத்தோடியைந்த பரமபக்தியுடையனுமாய அவ னலே நிரதிசய மங்களகரமாகிய பிரமமும் விசாரஞ் செயற்பாற்று.

(பிரம்ம ஜிஞ்ஞாஸா) என்பது "பிரமத்தின் அறியவிருப்பம்" (அஃ தாவது, பிரமத்தை அறிய ஆசை) என ஆறும் வேற்றுமைகாரகப்பொருட் கண் வந்தது.

பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந்நாஸ்த்யக்ருத: க்ருதேந। தத்விஜ்ஞாநார்த²ம் ஸ கு³ருமேவாபி⁴க³ச்சே²த் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்³ரஹ்மநிஷ்ட²ம் (முண். க. உ. கஉ)

"எந்தப் பிராமணன் கர்மங்களாலாய உலகங்களைப் பரீக்ஷித்துப் பற்றற்ற வனுப், நித்தியப்பொருளானது அநித்திய கர்மத்தினல் அடையப்படா தென்னும் சிந்தையுடையவனுகின்றனே, அந்தப் பிராமணன் அம்மெய்ப் பொருளை *அறியும்பொருட்டு வேதாந்தமறிந்தவனும் பிரமநிஷ்டையுடைய வனுமாயிருக்கிற குருவையே சமித்தைக் கையிற்கொண்டு அடைவானுக" என்றற்றொடக்கத்த விஷயமே ஈண்டு ஆராயற்பாற்று.

பிரமம் விசாரிக்கயோக்கியமுடையதா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமம் விசாரயோக்கியமுடைத்தன்று; அதிற் சந்தே கமின்மையின். சந்தேகமிலாமை எங்ஙனம்?

*மெய்யன்வெண்பொடிபூசும்விகிர்தன்வேதமுதல்வன்
கையின்மான்மழுவேந்திக்காலன்காலமறுத்தான்
பைகொள்பாம்பரையார்த்தபடிறன்றன்பனங்காட்டூ
ரையனெங்கள்பிரானையறியாதாரறிவென்னே.
(தேவாரம், திருவன்பார்த்தான்பனங்காட்டூர், கங், எ)

அயமாத்மா ப்ரஹ்ம (மாண்டூக்கியம். உ; பிரு. ச. ரு. கக)

"இந்த ஆன்மா பிரமம்" என்னுஞ் சுருதியானது "அயம்" என்னும் பிரத்தியயத்தினாற் பிரத்தியக்ஷசித்தமாயுள்ள ஆன்மாவைப் பிரமம் என்று கூறுகின்றது; ஆகலின் இதிற் சந்தேக களங்கப் பிரசங்கம் எற்றுக்கு? இன்னும் விசாரத்தின் பயன் அந்த விஷயஞானமே. ஞானமும் ஞேயத்தின் பரிச்சேதமாம். வேதாந்தவிசாரம் வாயிலாகப் பிறந்த ஞானம் பிரமத்தைப் பரிச்சேதஞ்செய்கின்றதா? அன்று? பிரமத்துக்குப் பரிச்சேதம் கூறின், அது பரிச்சேதங் கடந்திருக்கின்றதென்பதைப் பங்கஞ் செய்யும்; பரிச்சேதம் கூறுதொழியின், பிரமம் உள்ளவாறு விளங்காது. "இதுதான் கடம்" என்று பரிச்சேதம் கூறுங்கால், அது அறியப்பட்டதாகின்றது; ஆகலின், பிரமவிஷயத்தைப்பற்றிய ஞானமும் எய்தாது; மேலும், (விசாரத்தினால் எய்தும்) பயன் சிறிதும் காண்கிலேம்; முத்திப்பயனும் இல்லை; அநாதி சித்தமாயுள்ள சம்சாரம் நீக்கக்கூடாமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். எவ்வாற்றானும் (வேதாந்த) சாஸ்திரம் நன்கு ஆரம்பிக்கற்பாற்று; பிரமம் சந்தேகத்துக்கிடமாய் ஆராயற்பாலதாகிய விஷயமாயிருத்தலினாலும், அதனை நிர்ணயித்தல் பிரயோசனத்தை விளைத்தலானுமாம். "இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் அகங்காரத்தினாற் கட்டுண்ட இந்தச் சம்சாரியைப் பிரமம் என்று சொல்கின்றன; இதனாற்றான் சந்தேகம்.

சமஸ்த கிலேச களங்கமில்லாத நிரதிசய ஞானனந்தாதி சத்திமகிமாதிசயத்தையுடையதே பிரமத்துவம்.

அநாதியாயுள்ள அஞ்ஞானவாசனையினாற் பற்றப்பட்டு வெளிப்பட்ட சராசர அநேக சரீரங்களிற் பிரவேசித்தலும் நீங்குதலுமாகிய வியாபாரத்தினால் வசப்பட்டு எல்லையில்லாத துக்கத்தைச் சகித்தலே சீவத்துவம்.

ஒன்றுக்கொன்று விலக்ஷணமாயுள்ள (பரமான்மா சீவான்மா என்னும்) இரண்டுக்கும் சுருதிகள் எங்ஙனம் ஒரியல்பு கூறும்? அங்ஙனமாயின், எங்ஙனம் சந்தேகம் இலதாகும்? இன்னும் இங்ஙனஞ் சந்தேகம் நிகழ்கின்றது;

அந்நம் ப்ரஹ்ம। ப்ராணோ ப்ரஹ்ம। மநோ ப்ரஹ்ம। விஜ்ஞாநம் ப்ரஹ்ம (தைத். ௩. உ, ௩, ச, ரு); ஆதித்யோ ப்ரஹ்ம (சாந். ௩. கக, க); நாராயணோ ப்ரஹ்ம।

"அன்னம் பிரமம்," "பிராணன் பிரமம்," "மனம் பிரமம்," "விஞ்ஞானம் பிரமம்," "ஆதித்தியன் பிரமம்," "நாராயணன் பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் வெவ்வேறு பொருளைப் பிரமம் என்று கூறுகின்றன. இவை

களில் எது பிரமம்? ஆகலின் அநேகபிரகாரமாய்ச் சந்தேகமுண்டாகின்றமையின், பிரமம் விசாரஞ் செய்தற்கு அருகமாகின்றது.

கேட்டல், சிந்தித்தல் முதலியவற்றால் நிச்சயிக்கப்பட்டவரும், பக்தியினாலும், ஞானத்தினாலும் விசேஷமாக எதிர்முகமாக்கப்படுபவரும், பரமகாருணிகரும், மகாதேசிகரும், சர்வாநுக்கிரகருமாகிய பரப்பிரம சிவனாரின் அருளாதிக்கியத்தினாலே இந்த அதிகாரிக்குப் பாசபடலம் நீங்கி; பிரத்தியக்ஷமாக்கப்பட்ட நிரதிசயானந்த சொரூபமாகிய அந்தச் சிவப்பிரமத்தின் *சாமியகுணசாரமாயுள்ள கைவல்லிய இலட்சுமியை (அடைதலே) பிரயோசனமாம்.

இதனால் வேதாந்த சிரவணமானது (ஆராயற்பாலதாகிய) விஷயத்தோடும் பயனோடும் இயைந்துளது. ஞானமானது ஞேயத்தின் பரிச்சேதமாயிருத்தலின், பரிச்சின்னங்கடந்த பிரமம் விஷயமாகாதேயென ஆக்ஷேபமாகக் கூறினமை ஆராய்வில்லாத விலாசத்தினாலேயாம்; பிரமம் இவ்வியல்பிற்று, இது என்று பரிச்சேதம் கூறல் கூடாதாயினும், இலக்ஷணவாயிலாகப் பிறவற்றினின்று வேறுபடுத்தல் மாத்திரத்தினாலே பரிச்சேதம் எய்துமாகலின், யாண்டும் இலட்சியவிஷயத்தை இலக்ஷணவாயிலாகப் பிறவற்றினின்று பிரித்துக் கூறும் ஞானமே பரிச்சேதம் எனப்படும்.

உத்தேசிக்கப்பட்ட பிரமத்துக்கு இலக்ஷணங் கூறி வேதாந்தவாக்கியங்களினாலே நிரூபித்துப் பரீக்ஷிக்குங்கால், சஜாதீய விஜாதீயங்களாய், (பிரம) இலக்ஷணங்கள் இல்லாதனவாயுள்ள மற்றைச் சகல பதார்த்தங்களினின்று பிரிக்கப்பட்டதாய் எதுவுண்டோ அதுவே பிரமம் என அறியற்பாற்று.

ஆகலின் பிரமவிஷயமாயுள்ள இந்தச் சாஸ்திராரம்பம் சமீசீனம்; சந்தேகத்துக்கிடனாகாததும், பிரயோசனம் விளக்காததுமாயுள்ள ஒன்று அறிஞர்க்கு விசாரவிஷயமாகாது. வேதாந்த சாஸ்திர விசாரமானது பிரமாணம், யுக்தி, ஆபாசம், பிரதிபாசம் என்பவற்றுக்குட்பட்டமையின், சந்தேகத்துக்கிடமாய்ப் பிரமம் விசாரத்துக்குரிய விஷயமாகின்றது.

ப்³ரஹ்மவிதா³ப்நோதி பரம் (தைத். உ. க. க)

"பிரமோபாசகன் நிரதிசய †பிரமானந்தத்தை அடைகின்றனன்" எனவும்,

*அப்பார்சடையப்பனானந்தவார்கழலே
யொப்பாகவொப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய்.
(திருவாசகம், திருவம்மானை, ...)

†தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே.
(வு., தனித்திருக்குறுந்தொகை, க)

ஜ்ஞாத்வா ஶிவம் ஶாந்திமத்யந்தமேதி (சுவே. ச. கச)

"சிவபெருமானை அறிந்து அத்தியந்த அநர்த்த துக்கநிவிர்த்தியை அடைகின்றனன்" எனவும்,

ஶிவம் ஜ்ஞாத்வாம்ருதா பவந்தி (சுவே. ரு. எ)

"சிவபெருமானை அறிந்து புநராவர்த்திகொடாத பிரமானந்தாநுபவ நிலையுடையராகின்றனர்" எனவும்,

தமக்ரதும் பஶ்யதி வீதஶோகோ தாதுஃ ப்ரஸாதாந்மஹிமாநமீஶம் (சுவே. ரு. உ0)

"விராகமும் (அப்பிராகிருத) மகிமையுமுடைய சிவபெருமானை ஜகத்துக்குத் தாரகமாகிய அவரது பிரசாதத்தினாற் சோகம்நீங்கினவனாய்க் காண்கின்றனன்" எனவும்,

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்। ஜ்ஞாநநிர்மதநாப்யாஸாத் பாஶம் தஹதி பண்டிதஃ (கைவ. கக)

"(இதயகுகையின்கண்ணே) ஆன்மாவையும், பிரணவத்தையும் முறையே கீழ் அரணியாகவும், மேல் அரணியாகவுங்கொண்டு தியானித்தலாம் *கடைதலினாலே பாசத்தைத் தகிக்கின்றனன் அறிஞன்" எனவும்,

---

* திலேஷு தைலம் ததநீவ ஸர்பிராபஃ ஸ்ரோதஃஸ்வரணீஷு சாக்நிஃ। ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேஸௌ ஸத்யேநைநம் தபஸா யோநுபஶ்யதி (சுவே. க. கரு)

"எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய்போன்றும், (வறந்த) நதியில் ஜலம் போன்றும், அரணியில் அக்கினி போன்றும் (யாண்டும் வியாபித்துள்ள) இந்தப் பரமான்மா ஆன்மாவில் அறியப்படுகின்றார்; சத்தியமும் (உறவும்), தபசும் (ஞானமும்) கொண்டு இவன் அவரைக் காண்பானாயின்."

திலேஷு வா யதா தைலம் தத்நி வா ஸர்பிரர்பிதம்।
யதாபஃ ஸ்ரோதஸி வ்யாப்தா யதாரண்யாம் ஹுதாஶநஃ।
ஏவமேவ மஹாத்மாநமாத்மந்யாத்மவிலக்ஷணம்।
(வாயு. பூ. ச. எச, எரு)

"திலத்தில் எண்ணெய் போன்றும், தயிரில் அமைந்த நெய் போன்றும் (வறந்த) நதியில் வியாபித்த ஜலம் போன்றும், அரணியில் அக்கினி போன்றும், (பிரபஞ்சம் எங்கும் பரமான்மா வியாபித்துள்ளார்); இங்ஙனம் ஆன்மாவிலே ஆன்மாவுக்கு வேறாகிய பரமான்மாவை (ஒருவன்) சத்தியமும் தபசுங்கொண்டு எப்போதும் இயைந்து நின்று காண்கின்றான்."

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியா
னுறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே.
(நா., தனித்திருக்குறுந்தொகை, க0)

ஜ்ஞாத்வா தேவம் ஸர்வபாசாபஹாநி: (ச்வே. க. கக; க. அ)

"சிவபெருமானை அறிந்து சமஸ்த (மல மாயா கர்ம) *பாசங்களினின்று விடுகின்றனன்" எனவும் (போந்த) சுருதிகள் அநுசாரமாக, அப்பிரமோபாசனையினாலே இந்த அதிகாரிக்குப் பாசத்தை நீக்குதலாகிய முத்திப் பிரயோசனமும் உண்டென இம்முதல் அதிகரணத்திற் பிரதிபாதிக்கப்பட்டது. (க)

(உ) ஜந்மாத்யதிகரணம்.

ஈண்டு நிர்ணயஞ் செய்யப்பட்ட பிரமத்தை நிச்சயஞ் செய்யும் அந்த இலக்ஷணம் என்னை? என விசாரிக்குங்கால், அப்பிரமத்தின் இலக்ஷணத்தை விளக்குவதாகிய இரண்டாவது அதிகரணசூத்திரம் ஆரம்பிக்கின்றனர் பகவான் சூத்திரகாரர்.

ஜந்மாத்யஸ்ய யத: (க. க. உ)

(உ) எங்கிருந்து இதன் †சிருஷ்டி முதலியன.

இலட்சியம் அறியப்பட்டவிடத்து, அதன் இலக்ஷணம் (வேண்டப்படாது) வியர்த்தமாய் முடிதலினாலும், அவ்விலட்சியம் அறியப்படாதொழியின் அதனை (இலக்ஷணத்தை) ஆராய்தல் பொருந்தாமையாலும், ஈண்டு பிரமத்துக்கு இலக்ஷணம் எங்ஙனம் உரைப்பதாகும் என ஆக்ஷேபிக்கற்பாற்றன்று; வேதாத்தியயனவாயிலாக முதற்கண்ணே அறியப்பட்ட பிரமத்துக்கு அது (இலக்ஷணங் கூறல்) யுக்தமாதலின்.

*விளையாததொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டளையாயினதவிரவ்வருள்தலைவன்னதுசார்வாங்
களையார்தருகதிராயிரமுடையவ்வவனோடும்
முளைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே.
(தேவாரம், திருமுதுகுன்றம், ஞான., ௩)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.
(திருவாசகம், அச்சோப்பதிகம், க)

†"விண்முதல்பூதலமொன்றியவிருசுடரும்பர்கள்
பிறவும்படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை"
(தேவாரம், ஞான., திருவெழுகூற்றிருக்கை)

"அரியாகிக்காப்பானயனாய்ப்படைப்பா
னரனாயழிப்பவனுந்தானே."
(பதினொராந்திருமுறை, திருக்கைலாசஞானவுலா)

[illegible] (...) [illegible]சுதம். *சிருஷ்டி, திதி, சங்கார, திரோபவ, அநுக்கிரகம் என்னும் கிருத்தியம் இந்தச் சம்மேளன சம்பிரசம்ப சேதனாசேதனரூப பிரபஞ்சவிலாசத்துக்கு எங்கிருந்து உளதா கின்றதோ, அதுவே பிரமம்.

†யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம (தைத். ௩. ௧. ௧)

"எங்கிருந்து இவ்வுலகங்கள் பிறக்கின்றனவோ, எதினாற் பிறந்தவை நிலை யுறுகின்றனவோ, ஒழியுங்கால் அவை எங்கே பிரவேசிக்கின்றனவோ, அதனை அறிய முயலுதி; அது பிரமம்"

ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேச: ஸம்ஸாரமோக்ஷஸ்திதிபந்தஹேது: (சுவே. சு. கசு)

"பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்), க்ஷேத்திரஞ்ஞனுக்கும் (சீவான்மாவா கிய பிரமத்துக்கும்) பதியாயுள்ளார் சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய ஈசர்; அவர் சம்சாரத்தின் மோக்ஷ ஸ்திதி பந்தத்துக்குக் காரணர்"

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் |
ஏகமேவாத்விதீயம் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது; ஏகமே அத்துவிதீய மாயுள்ளது"

ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்கலம் |
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விச்வரூபாய வை நம: |
(மகா. கஉ. க)

"இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவவீரியரும், விரூபாக்ஷரும், விசுவரூபருமாயுள்ளார்க்கு நமஸ்கா ரம்" என்றற்றொடக்கத்ததே விஷயம்.

---

* இதற்குப் பிரமாணம் (௩எசு-ஆம் இலக்கத்திற்) காட்டப்பட்டது.

† ஈண்டு சிருஷ்டி, திதி, சங்காரம் என் முத்தொழில் கூறி ஐந்தொழில் என்றது மலவாம் பிற எனின், ஆகாது; திரோபவம் திதியினும், அநுக் சங்காரத்தினும் அடங்கியிருத்தலின்.

ஈண்டு பிரபஞ்சசிருஷ்டி முதலாயின பிரமத்துக்கு இலக்ஷணமாக எய்துமோ? எய்தாவோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எய்தா; சம்பந்தமின்மையின். மேலும்,

ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத் (தைத். ௩. ௬)

"ஆனந்தம் பிரமம் என அறிந்தான்" என்று கூறியவிடத்து, ஆனந்தம் பிரபஞ்சோற்பத்தி இலக்ஷணமுடையதாக மூற்றுகின்றது. மற்றோரிடத்து,

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் (சாந். ௬. ௨. ௧)

"சௌமிய! சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியினாற் "சத்து" ஜகத்காரணமாக அறியப்படுகின்றது.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். ௨. ௧. ௧)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என்னுஞ் சுருதியினால் முடிவிறந்த ஞானமே பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகிய பிரமம் எனப் பிறிதோரிடத்துப் பெறப்படுகின்றது. மற்றோரிடத்து,

யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர் ந ஸந் ந சாஸச்சிவ ஏவ கேவல: (சுவே. ௪. ௧௮)

"இருள் உளதாய், பகலும் இரவும் இலவாய், சத்தும் அசத்தும் இலவாய் இருந்தபோது, கேவலம் *சிவபெருமான் ஒருவர் மாத்திரம் உளராயினர்" என்னுஞ் சுருதியிலுள்ள சிவசப்தத்தினால் உணர்த்தப்படும் வஸ்துவே காரணமாய், அனைத்துக்கும் முன் உளதாம் பிரமமென உணரப்படுகின்றது. ஈண்டு ஆனந்தமுதலியன பிரமம் என்னுமிடத்து, இவையெல்லாம் தனித்தனி பிரமமாதலாம் விகற்பத்தின் பாலனவா? இன்றேல் இவையனைத்தும்

இருளிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே.
(தேவாரம், திருமறைக்காடு, ஞான., ௯)

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போ
யிருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமுங்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே.
(தேவாரம், பொது, நாவு., தனித்திருவிருத்தம், ௪)

ஒருங்கியைதலாம் சமுச்சயத்தின்பாலன்வர்? விகற்பமாயின் மேலே காட்டிய சுருதிகளுக்கு ஹாநியாதிதோஷப்பிரசங்கமும் (சிவபெருமான் எப்பெற்றியரென இலக்ஷணங் கூறற்கொண்ணுத) அவ்வியவஸ்தையும் நேரும். (ஆனந்த முதலியன) தனித்தனி சிவபெருமானுய் முடியின், சிவப்பிரமத்துக்கு அநேகத்துவப் பிரசங்கம் எய்தும். (ஆனந்தமுதலியவனைத்தும்) ஒருங்கியைந்து (சிவபெருமானும் எனின்), அவை குணங்களானமையின் பிரபஞ்சமனைத்தையும் நிருமித்தற்கியன்ற ஞானத்தையுடைய சிவபெருமானுகா என்க. மேலும்,

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத் (சுவே. ச. க0)

"மாயையைக் காரணம் (பிரகிருதி) என உணர்க" என்னுஞ் சுருதி அசேதனமாகிய மாயையைப் பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகக் கூறுகின்றது; அதுவே அமைவுடைத்து; ஞானரூபமுடைய சிவபெருமானைப் பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமாகக் கூறின், அச்சிவபெருமான் விகாரமுறுவாராய்,

நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் (சுவே. சு. ககூ)

"நிஷ்களரும், நிஷ்கிரியரும், சாந்தரும்" என்றற்றொடக்கத்த சுருதிகட்குப் பங்கம் நேருமாகலின். ஆகலின், எவ்வாற்ருனும் சிவபெருமானுக்குப் பிரபஞ்சோற்பத்தியிலக்கணமுரைத்தல் அமைவுடைத்தன்றெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிருட்டியாதி தொழில்கள் பிரபஞ்சத்திருத்தலின், அவை சிவபெருமானுக்குச் சம்பந்தமுரு எனக்கொள்ளினும், (அவை) தடஸ்தத்தினற் (அச்சிவபெருமானுக்கு) இலக்ஷணமாகப் பொருந்தமுறுகின்றன. சர்வஞ்ஞத்துவாதி குணங்களுடையதும், அஷ்டநாமங்களுக்கு அதிகரணமாயுள்ளதுமாய * சிவதத்துவமே பிரபஞ்சத்துக்குக் காரணமாகிய

---

* ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் பிரசிநோபநிடதம் ச. அ. னும், வித்தியாதத்துவம் எழும் சுவேதாசுவதரம் க. உ. னும், சிவதத்துவம் ஐந்தும் பிருகச்சாபாலம் ச. கக. னும், இவற்றின் உபப்பிருங்கணங்களாகிய கைலாயசங்கிதை அத்தி. க. னும், வாயுசங்கிதையினும், அக்கினிபுராணத்தினும், தேவீபாகவதத்தினும், பிரமாண்டபுராணத்தினும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றின் விரிவு வருமாறு:—

(க) பிருதிவி, (உ) அப்பு, (ங) தேயு, (ச) வாயு, (ரு) ஆகாசம், (சு) வாக்கு, (எ) பாதம், (அ) பாணி, (கூ) பாயுரு, (க0) உபஸ்தம், (கக) சுரோத்திரம், (கஉ) துவக்கு, (கங) சட்சு, (கச) சிங்குவை, (கரு) ஆக்கிராணம், (கசு) சப்தம், (கஎ) பரிசம், (கஅ) ரூபம், (ககூ) இரசம் (உ0) கந்தம், (உக) மனம், (உஉ) சித்தம், (உங) அகங்காரம், (உச) புத்தி, (பிரகிருதி), (உரு) புருஷன், (உசு) இராகம், (உஎ) வித்தை, (உஅ) நியதி, (உகூ) காலம், (ங0) கலை, (ஙக) அசுத்தமாயை, (ஙஉ) சுத்தவித்தை, (ஙங) ஈசுவரம், (ஙச) சாதாக்கியதத்துவம், (ஙரு) சத்திதத்துவம், (ஙசு) சிவதத்துவம். இவற்றுட் சிவதத்துவமே முப்பத்தாறு தத்துவங்களுள்ளும் தலையாய்ச் சிறந்து நின்றது.

சிவபெருமான் எனக் கூறப்படுகின்றது. ஞானாதி குணங்கள் ஆறுடன் முடிவுறுகின்றன. சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு), நித்தியதிருப்தத்துவம் (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களினீங்குதல்), சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை), அலுப்தசத்தித்துவம் (பேரருளுடைமை), அனந்தசத்தித்துவம் (முடிவிலாற்றலுடைமை) என்பவைகளே சர்வஞ்ஞாதி குணங்கள் என்க.

ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோத: ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தஶக்தி:।
அநந்தஶக்திஶ்ச விபோர்விதிஜ்ஞா: ஷடாஹுரங்காநி மஹேஶ்வரஸ்ய॥
(கூர். உத். அ; வி. கஈ. கஉ)

"சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுப்தசத்தி, அனந்தசத்தி என்பவற்றைச் சர்வவியாபியாகிய சிவபெருமானுக்கு *ஆறு அங்கங்கள் என்று (வேதாகம) விதியுணர்ந்தோர் கூறுவர்" என்று புராணமுங் கூறுகின்றது.

(க) சர்வஞ்ஞதை:—புறக்கரணமின்றி நிஷ்களங்க அநுபவவிஷயமாய்ச் சமஸ்த வஸ்துக்களையும் எப்போதும் பிரத்தியக்ஷமாய் அறிதலே சர்வஞ்ஞத்துவம்;

யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்யஸ்ய ஜ்ஞாநமயம் தப:।
(முண். க. க. கூ; உ. உ. எ; மைத். [illegible])

"எவர் சர்வஞ்ஞராய், எவற்றையும் அறிபவராய் (இருக்கின்றாரோ), எவர்க்குத் தபசு ஞானமயமாயுள்ளதோ" என்றற்றொடக்கத்த சுருதிகளான், இது சிவபெருமானுக்குரியதாகச் சித்தித்தது. இதனாற் சமஸ்த சேதனத்தின் (ஆன்மாக்களின்) வெகுவித கர்மபலபோகத்துக்கு உபயோகமாகிய அவ்வச்சரீரங்களை ஆக்கும் உபாயமானவைகளைப்பற்றிய விசேஷ ஞானமுடைய சிவபெருமானே (பிரபஞ்சத்துக்குக்) காரணராகின்றனர்.

(உ) நித்தியதிருப்தத்துவம்:—விபத்துக்கள் எனப்படும் களங்கமெலாமொழிந்த நிரதிசயானந்தப் பரிபூர்ணத்துவமே நித்தியதிருப்தத்துவம். இதுபற்றியே [illegible]

---

* ஸர்வஜ்ஞதாதி ஷடங்க [illegible] விக்ரஹ:।
* சர்வஞ்ஞதை முதலிய ஆறு சத்திகளைய ஆறு அங்கங்களுடையர் [illegible] என்று [illegible] கூறப்படுகின்றது. [illegible] சர்வஞ்ஞதையும், சிரசு திருப்தியையும், சிகை அநாதிபோதத்தையும், கவசம் சுவதந்திரத்துவத்தையும், நேத்திரம் அனந்தசத்தியையும், [illegible] அலுப்தசத்தியையும் [illegible] குறிப்பிடுகின்றன [illegible].

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ௩. ௬)

"ஆனந்தம் பிரமம்" என்று சுருதி கூறுகின்றது.

அந்யோ(அ)ந்தர ஆத்மா(ஆ)நந்தமய: (தைத். ௨. ௫. ௧)

"அன்னியமாய் அந்தரமாயுள்ள ஆன்மா *ஆனந்தமயம்" என்று தோற்றுவாய் செய்து,

ஸைஷா(ஆ)நந்தஸ்ய மீமாꣳஸா பவதி (தைத். ௨. ௮. ௧)

"இந்த ஆனந்தத்தின் மீமாஞ்சை" என ஆரம்பித்து, அப்பியாசத்தினால் நிரதிசயானந்தத்தைத் தலையானதாகக் கொண்டு

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: (தைத். ௨. ௮)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என நிரூபிக்கப்பட்டது. பரப்பிரமத்துக்குக் குணமாகலின் அதுவே,

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ௩. ௬)

"ஆனந்தம் பிரமம்" எனப் பிரமம் (ஆனந்த) மிகுதியுடைமையின், அங்ஙனம் கூறப்படுகின்றது. அப்பெற்றித்தாகிய ஆனந்தபோகரசத்தையுடையது பிரமமாகலின், அது நித்தியதிருப்தத்துவமுடைத்தெனக் கூறப்படுகின்றது. பிரமத்துக்கு †மனசினாலே (ஞானசத்தியினாலே) மகானந்தாநுபவம், பிறகரணவாயிலாக அன்று; இதுபற்றியன்றே,

ஆகாசசரீரம் ப்ரஹ்ம (தைத். ௧. ௬. ௨)
ஸத்யாத்ம ப்ராணாராமம் (தைத். ௧. ௬. ௨)
மந ஆநந்தம் (தைத். ௧. ௬. ௨)
சாந்திஸம்ருத்தமம்ருதம் (தைத். ௧. ௬. ௨)

"ஆகாச சரீரம் பிரமம்" எனவும், "சத்தியான்ம பிராணாராமம்" எனவும், "மன ஆனந்தம்" எனவும், "சாந்திசமிர்த்தமமிர்தம்" எனவுஞ் சுருதிகள் கூறின். எங்கும் பிரகாசித்தலின் ‡ஆகாயம் சிதம்பரம் எனப்படும்; பூதாகாசம் அன்று, கிரேசடமின்மையின். சமஸ்த உலக அண்டங்களின்

---

*அழிவிலாவானந்தவாரிபோற்றி (திருவாசகம், போற்றித்திருவகவல், கஉ௨)

†பிரமம் தன் ஆனந்தத்தை அநுபவிக்கும் எனச் சுருதி கூறியது சிவபெருமானுடைய தடஸ்த மூர்த்தங்களுட்டலையாய சொரூப சதாசிவ அதிகாரத் தோற்ற மிங்ஙன இவ்விருப்பருமாகலின், அங்ஙனம் பொருள்கொண்டமைபற்றி [illegible] சிவஞானயோகியரிலே "பராபரை பரமுகச்சம் அவள் [illegible] தனையனுபவிப்பு [illegible]" எனத (க௬-ஆம்) செய்யுளிற் கூறப்பட்டமையுங் காண்க. [illegible]

‡இவ்வுண்மை (க௦௯, ௮௦௩, [illegible], உஉக, [illegible]) [illegible]

தொகுதியாகிய குமிழிக்கூட்டங்கள் தோன்றப்பெறும் இரத்தினாகரமாகிய பரப்பிரமசொரூப பராசத்தியே சிதம்பரம் எனப்படும். இந்தப் பிரகாச ரூபத்தையுடைய பிரமம் ஆகாசசரீரம் (என்று கூறப்படுகின்றது). சிதாகாசம் பரமானந்தமானதால்,

ஸர்வாணி ஹவா இமாநி பூதாந்யாகாஶாதேவ ஸமுத்பத்யந்த ஆகாஶம் ப்ரத்யஸ்தம் யந்தி (சாந். க. க. க)

"இச்சத்துக்கள் அனைத்தும் ஆகாயத்தினின் உற்பத்தியாகின்றன; ஆகாயத்திலே ஒடுங்குகின்றன"

ஆகாஶோ வை நாம நாமரூபயோர் நிர்வஹிதா।

(சாந். அ. கச. க)

"நாமரூபங்களாய அனைத்தையுந் தோற்றுவிப்பது ஆகாயம்" என்றுஞ் சுருதிகளிலுஞ் சித்தித்தது.

"சத்தியான்மா" என்றது சத்தாரூபரின் மேற்று; "பிராணாராமம்" என்றதின் பிராணன் அனைத்துக்கும் ஆதாரமாயுள்ள சிதம்பரசத்தியின் மேற்று. சொரூபமாயுள்ள அந்தப் பிராணனிலே எதற்கு (பிரமத்துக்கு) இன்பமுளதோ, அது பிராணாராமம் எனப்படும். புறக்கரணமின்றி மனசில் (ஞானசத்தியில்) ஆனந்தம் எந்தப் பிரமத்துக்கு உளதோ, அது மன ஆனந்தம் எனப்படும். என்டும் ஆனந்தம் என்றது காரணமாகிய சிதம்பரத்தின் மேற்று. இது பற்றி,

யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத் கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்

(தைத். உ. எ. க)

"இந்த ஆகாயம் †ஆனந்தமாகாவிடின், யார் உயிர்ப்பார்? யார் பிழைப்பார்?" எனச் சுருதி கூறுகின்றது.

---

*செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே.

(தேவாரம், கோயில், ஞான., ௧)

†தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ.

(திருவாசகம், திருச்சாழல், 40)

பரமாகாயத்தினின்று வேறுபடாத பெருமான் தாமே ஆனந்தத் தேனாயிருந்து முத்தர்களைத் தமது ஆனந்தத்தில் அழுத்திவைப்பர் [illegible] என்று அவ்வாறு கூறிற்று. [illegible]

“சாந்திசமிருத்தமமிர்தம்” என்றது சிவத்துவத்தை அடைதலின் பேற்றை; அமிர்தம் என்றது அநாதிமுத்தம் எனப்படும் [illegible] பரமாநந்தப் பெருவுடைய சிவபெருமான் சொரூபானந்தத்தைப் புற அந்தக்கரணம் வேண்டாத ஞானசத்தியினாலே அனுபவிக்கின்றனர் என்பது “மன அனந்தம்” என்றதனாற் சித்தித்தது. இதுவே சிவபாவனை அடைந்த முத்தான்மாக்கள் புறக்கரணம் வேண்டாது நிரதிசய சொரூபானந்தானுபவத்தை அடைதற்குச் சாதனமாகிய அந்தக்கரணத்தையுடையரென்பதையும் ஞாபகப்படுத்துகின்றது. ஆதலின், புறக்கரணமின்றிச் சுத்தஞானபோத சத்திரூபமனசினாலே (சிதம்பரசத்தியினாலே) முடிவிறந்த சொரூபானந்த மெய்துவது அநுபவசித்தமாதலின், சிவபெருமான் நித்தியதிருப்தியுடையர் எனப் பெறப்பட்டது. சிவபெருமானுக்கு எக்காலத்தும் பாகிய சம்சாரக் லேசமேனும் இல்லை என்பது பொருள்.

ரு. அநாதிபோதம்:—இயல்பாகிய நிரதிசயஞானமே அநாதிபோதம். சொரூபானந்தானுபவ சாதனமாய அந்தக்கரணஞானம் அநாதிசித்தமே; ஆதலின், அநாதிபோதமுடையர் சிவபெருமான்; சம்சாரத்தினின்று நீக்கும் ஞானம் அநாதியேயுண்மையின். எக்காலத்துஞ் சஞ்சார தோஷத்தை நீக்கி நிற்றலின் “சாந்திசமிருத்தமமிர்தம்” என்றது சுருதி.

சா. சுவதந்திரத்துவம்:— பிறரால் ஏவப்படும் இழிவின்றித் தனக்கு இன்றியமையாவன்றுக்கள் அனைத்தையும் தன்வசப்படுத்தி வசீகரித்து நிற்றலே சுவதந்திரத்துவம்.

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசாநீசௌ (சுவே. க. கூ).

“பிறவாதவராகிய ஞனும் அஞ்ஞனுமாம் இருவரும் (முறையே) ஈசனும், அநீசனுமாம்”

போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா (சுவே. க. கஉ)

“போக்தா (பசு), போக்கியம் (பாசம்), பிரேரிதாரா (பதி) என்பவற்றை அறிந்து”

விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (சுவே. ங. ச)

சுத்தியதோட[illegible]பெரும்பகுத்
திற்றெனவுணர்விலமேதர்நீர்[illegible]
சித்தனையுடையதோர்[illegible]
[illegible]

([illegible] திருவிளையாடற்புராணம்)

வித்தை (பசு), அவித்தை (பாசம்) என்னும் இரண்டையும் ஆளுபவர் மற்றொருவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கண்ட பிரகாரம், க்ஷரம் (அசேதனமாகியபாசம்), அஜடம் (சேதனமாகிய பசு) என்னும் இருவகைப் பிரபஞ்சத்தையுஞ் செலுத்துந் தன்மையின், சிவபெருமானுக்குச் சுவாதீனத்துவஞ் சித்தித்தது. சமஸ்தவிஷயத்தினுஞ் சுவதந்திரமாயிருத்தலின் சிவபெருமானுக்குச் சர்வகர்த்திருத்துவஞ் சித்திக்கின்றது. 1

௫. அலுப்தசத்தி:—சுவாபாவிகமாகிய சத்தியையுடைமையே அலுப்தசத்தித்துவம். இது பற்றி,

பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச
(சுவே. ௬. ௮)

"அவரது பராசத்தியானது சுவாபாவிகமாய், ஞானசத்தி, பலசத்தி, கிரியாசத்தி எனப் பலவாறாகக் கேட்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்தனவே சுருதிப் பிரமாணம். சேதனாசேதனப் பிரபஞ்சரூப சத்திவிசிட்டத்துவம் சிவபெருமானுக்குச் சுவாபாவிகமே; இதனால் ஓர்காலுஞ் சிவபெருமான் *நிர்விசேடர் அல்லர் என்பது சித்தித்தது.

௬. அனந்தசத்தி:—முடிவிறந்த விசேஷசத்தியுடைமையே அனந்தசத்தித்துவம். இம் முடிவிறந்த சத்திகளினாலே சிவப்பிரமமானது பிரபஞ்சத்தை ஆக்கவும் ஆளவும் இயைந்தது. இது பற்றியே,

ஏகோ ஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்துர்ய இமாம்ல்லோகாநீஶத ஈஶநீபி: (சுவே. ௩. ௨)

"உருத்திரர் ஒருவர் உளர்; (அவர்கள்) இரண்டாவதொன்றைக் கொள்வாரல்லர்; இந்த உலகம் அனைத்தையும் படைப்பனவும் காப்பனவுமாகிய சத்திகளினாலே ஆளுகின்றனர்"

"ய இமாம்ல்லோகாநீஶத ஈஶநீபிர்ஜநநீபி: பரமஶக்திபி:"
(அதர்வசிரசு)

"ஆளுவனவும், படைப்பனவுமாகிய தமது பரமசத்திகளினாலே இவ்வுலகம் அனைத்தையும் ஆளுகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் (எழுந்தன). அனந்தசத்தியுடைமையாற் சிவபெருமானுக்கு முடிவிறந்த பிரபஞ்ச சமவாயிகாரணத்துவஞ் சித்திக்கின்றது.

---

*இதனால் உபநிடதப் பிரசித்தமாகிய பிரமம் சகுணப்பிரமமேயன்றி நிர்க்குணப்பிரமம் அன்றெனப் பெறப்படுகின்றது.

அஷ்டநாமாதிகரணம்:—பவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்திரர், உக்கிரர், பீமர், மகாதேவர் என்னும் அஷ்டநாமங்களுக்கும் அதிகரணமாயுள்ள (சிவதத்துவ) வாச்சியர் பரப்பிரம சிவபெருமான். இந்தப் பரப்பிரம சிவபெருமான் சமஸ்த சப்தங்களால் உரைக்கப்படுவாரேனும், பரத்தியல்பை முக்கியமாய் உணர்த்துதலினாற் பவாதி சப்தங்களாற் கூறப்படுகின்றார். (இந்த அஷ்டநாமங்கள் ஒழிந்த) மற்றைய நாமங்களினாலே அச்சிவபெருமான் கூறப்படாதிருத்தலும் இல்லை.

க. பவர்:—எக்காலத்தும் எவ்விடத்தும் உண்மையினாற் பவர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்குப் போந்தது; பூ (ஊ) தாதுவுக்குச் சத்து (உள்ளது) என்னும் பொருளுண்மையின், யாண்டும் வஸ்துவனைத்தையும் ஊடுருவி நிற்குஞ் சத்தின் வடிவம் பிரமமென அறியப்படுகின்றது. இது பற்றி,

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்।

(சாந். உ. க, தைத். உ. க. ௯)

"சௌம்ய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; (அது) ஏகமாம் அத்துவிதீயம்"

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஸத்யாத்மா ப்ராணாராமம் (தைத். க. ௬. உ)

"சத்தியான்ம பிராணாராமம்

மந ஆநந்தம் (தைத். க. ௬. உ)

"மன ஆனந்தம்"

ஸதாஶிவோம் (மகா. கங. உ)

"சன்மஹ" என்றற்றொடக்கத்த சுருதிகள் போந்தன. "சங்கடம்" "சங்படம்" எனச் சமஸ்த வஸ்துக்களினும் ஊடுருவி நிற்றலால், சத்ரூபமாகிய சிவபெருமானே அனைத்துக்கும் உபாதானமாதல் சித்திக்கின்றது; மண்ணோடு கூடிய கட முதலியன மண்ணையே உபாதானமாகக் கொள்கின்றன. ஆகவின், சத்ரூபமாகிய சிவபெருமான் பவசப்தவாச்சியராகின்றனர்.

உ. சர்வர்:—இம்சித்தல் எனப்படும் "சிரு" (ஶ்ரு) என்னுந் தாதுவினின்று பிறத்தலின், அது அனைத்தையுஞ் சங்கரிக்குங் கர்த்தா சிவபெருமானே—எனப் பிரதிபாதிக்கின்றது.

தஸ்மாதுச்யதே ஸர்வமித்யேகோ ருத்ரஸ்தஸ்மை வை நம:

(அதர்வசிகை)

"ஸம்சங்காரஞ் செய்பவராய், ஸ்காகவளிகரணஞ் செய்பவராயினுர்க்கு நமஸ்காரம்"

யஸ்ய ஸ்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதநம் (கட. உ. உ௫)

"எவர்க்கு (சிவபெருமானுக்கு) பிராமணரும் க்ஷத்திரியருமாகிய இருவரும் உணவாகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சர்வசங்காரஞ் செய்பவர் சிவபெருமான் எனக் கூறப்படுகின்றனர்.

ங. ஈசானர்:—உபாதியிலாத பரமைசுவரிய விசிஷ்டகுணமுடையராகலின் ஈசானர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று

ய ஈசே அஸ்ய லோகஸ்ய ஈசனீபி: (அதர்வசிரசு)

"எவர் இவ்வுலகம் அனைத்தையும் ஆஞ்ஞாசத்திகளினாலே (ஈசசத்திகளினாலே) ஆளுகின்றனரோ" எனச் சுருதி கூறுதலின்.

ச. பசுபதி:—சகலராசயுள்ளார் எவற்றையும் ஆளவேண்டிய தன்மையின், பசுபதி என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்கெய்திற்று. இதுபற்றியே,

* ஈஶாநஃ பஶுபதிஃ பஶூநாஂ சதுஷ்பதாமுத த்விபதாம் (தைத். சங். ங. க. ச. ங)

"நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பசுக்களுக்குப்பதியாயுள்ளார் ஆளுகின்றனர்" என்றற்றொடக்கத்தனவாகச் சுருதி கூறுகின்றது. பாச சம்பந்தத்தினாற் பசு என்னும் வியவகாரமுண்மையின், பசு என்னுமிடத்துப் பசு பாசம் என்னும் இரண்டுங் கொள்ளக்கிடந்தன. இதுகொண்டு சேதனத்துக்கும் அசேதனத்துக்கும் நாயகர் சிவபெருமான் என அறியப்படுகின்றது.

ரு. உருத்திரர்:—சம்சாரரோகத்தைத் திராவகஞ் செய்தலின் உருத்திரர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று;

தரதி ஶோகமாத்மவித் (சாந். எ. க. ங)

"பரமான்மாவை அறிந்தவன் சோகத்தைத் தாண்டுகின்றனன்" எனக் கேட்கப்படலான்.

(சா) உக்கிரர்:—(சூரிய சந்திரர் முதலிய) பேரொளிகளின் அடக்கப்படாமையின், உக்கிரர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்காயிற்று;

[illegible]

"அவ்விடத்திற் சூரியனும் பிரகாசிக்கவில்லை, சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கவில்லை" எனச் சுருதி கூறலின்.

எ. பீமர்:—சேதனம் அசேதனத்துக்கும் பயத்தை விளைக்குங் காரணராயும், அவைகட்கு நியாமகராயுமிருத்தலிற் பீமர் என்னுந் திருநாமஞ் சிவபெருமானுக்கெய்திற்று;

பீஷாஸ்மாத் வாத: பவதே (தைத். உ. அ)

"இவர்க்குப் பயந்தே வாயு வீசுகின்றது" என்றற்றொடக்கத்த சுருதியுண்மையின்.

அ. மகாதேவர்:—மகத்துவமாய்ப் பிரகாசித்தலினால் மகாதேவர் எனச் சிவபெருமான் கூறப்படுகின்றனர். இதுகொண்டே,

அத கஸ்மாது[ச்]யதே மஹாதேவ: யஸ்ஸர்வான் பாவான் பரித்யஜ்ய ஆத்ம ஜ்ஞானயோகைஸ்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாது[ச்]யதே மஹாதேவ: (அதர்வசிரசு)

"இவர் மகாதேவர் என்று எதுபற்றிக் கூறப்படுகின்றனர்? எவ்வியல்புகளையும் விடுத்து மகத்தாகிய பரமான்மஞானயோகைசுவரியத்தின்பொருட்டுப் பூசிக்கப்படுகின்றமையின் மகாதேவர் எனப்படுவர்" என அதர்வசிரசு கூறுகின்றது. சமஸ்த சம்சாரதோஷமெலாம் அறுத்துச் சமஸ்த மங்கல குணங்களுக்கு ஆதாரமாகச் சிவதத்துவம் என அறியப்படுவதொன்றுண்டோ, அது (ஈண்டு) கூறப்பட்ட இயற்கையினையுடையதாய்ச் சமஸ்தப் பிரபஞ்சத்தையும் படைத்தலாதி கிருத்தியஞ் செய்தற்குக் காரணமாயிருக்கின்றது; அவ்வியல்பினதனுடைமையினாய்ந்த சிவதத்துவத்திலே பிரபஞ்சத்தின் உபாதானத்துவமும் சேர்தலின். அவ்வியல்பினதாய மகத்துவமுடைமையிற் பிரமம் என்று கூறப்படும். அந்தப்பிரமமே சிவபிரான் என்று கூறப்பட்டு ஆனந்தாதி குணமனைத்துக்கும் ஆசிரயமாய்ச் சித்திக்கின்றது. ஆகவின், ஆனந்தாதிகளைத் தனித்தனியே சிவபெருமான் என விகற்பமுறக் கோடல் வியர்த்தம்.

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத் (சுவே. ச. கo)

"மாயையைப் பிரகிருதி என அறிக" என மாயையானது காரணமாகின்றமை அது சிவனுகவே (வே. சூ. க. ச. கo. ற் கண்டவாறு) வேறுபடாதிருத்தலினுமையர்ம்

மாயினந்து மஹேஸ்வரம் (சுவே. ச. கo)

"மாயையுடையாராகிய மகேசுவரரை" என்னுஞ் (சுருதி) வாக்கிய சேஷமுண்மையின், [illegible] பிரமம் காரணமும், [illegible] விசிஷ்ட பிரமமாகிய அதுவே காரியமுமாகின்றது. ஆகலின், பிரபஞ்சோற்பத்தியாதி இலக்கணமுடைத்தாயிருப்பது பிரமம் என்பது சித்தாந்தம். (உ)

(ங) சாத்திரயோநித்துவாதிகரணம்.

யதார்த்தஞானமானது இலக்ஷணத்தையும் பிரமாணத்தையும் பற்றி யுள்ளது. பிரபஞ்சகாரணர் பரப்பிரம சிவபெருமான் என்பதற்குப் பிர மாணம் என்னை? என,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஶாஸ்த்ரயோநித்வாத் (க. க. ங)

(ங) *சாஸ்திரம் பிரமாணமாயிருத்தலின்.

சாஸ்திரம் பிரமாணமாயிருத்தலிற் பிரபஞ்சோற்பத்தி முதலிய இலக் கணமுடையவர் பரப்பிரமசிவபெருமான்.

பிரபஞ்சோற்பத்திக்குக் காரணராகிய சிவபெருமான் சாஸ்திரவாயி லாகமாத்திரம் எய்தற்பாலரா? இன்றேல் வேறு பிரமாணங்களாற் பெறற் பாலரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவயவத்தோடிசைந்த இப்பிரபஞ்சம் காரியமே. காரியமும் விசித்திரமாயடங்கியிருத்தலின், அது தனக்கு வாய்ந்ததோர் கர்த்தாவையுடைத்தாதல் வேண்டும். கர்த்தா ஒருவர் சர்வஞ்ஞதையுடையராக அநுமிக்கற்பாலர். இந்தக் கர்த்தா சாஸ்திரத்தினுன் மாத்திரம் பெறப் படார்; இவ்விஷயத்திற் சாத்திரம் பிரமாணம் இல்லை; சாஸ்திரம் வேறு பிரமாணங்களாற் பெறவியலாத விஷயத்தைக் கூறலின். பிரபஞ்சகாரணஞ் சாஸ்திரவாயிலாகப் பெறப்படுவதன்றும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிரபஞ்சகாரணராகிய பரப்பிரம சிவபெரு மான் வேதாந்தசாஸ்திரமொன்றினுற் பெறற்பாலர்,

நாவேதவிந்மநுதே தம் ப்ருஹந்தம்।

(தைத்திரீயப்பிராம்மணம், ங., கஉ., கூ)

"வேதம் அறியாதவன் அப்பெரும் பொருளை நினைக்க இயலான்" என்றற் றொடக்கத்த சுருதிகளில் வேதாந்தசாஸ்திரமொழிந்து, பரப்பிரமசிவனுரை

---

* தோத்தவனருமறையங்கமாகமம்
வருத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்
மிருத்தவன்மிருத்தவர்புரங்கள்வெந்தறச்
செருத்தவனுறைவிடந்திருவிற்கோலமே
(தேவாரம், திருவிற்கோலம், ஞான., க)

அறிதல் கூடாதெனக் கேட்கப்படலான். அவயவமுடைமையின் (பிரபஞ்சம்) காரியமாய் முற்ற, அதனால் அது தனக்கு வாய்ந்ததோர் கர்த்தாவை யுடைத்தாக அநுமிக்கற்பாற்றென மேலே உரைத்தமை உசிதமன்று; விசித்திரமாகிய தொழில்கள் பூண்ட கோபுரம் பிராசாதமுதலியன அநேக கர்த்தாக்களையுடையனவாகக் காணப்படலான். இதுகொண்டு பிரபஞ்சம் ஒரே முதல்வனைமாத்திரமுடைத்தென அநுமானிக்க இயலாது. அநுமானத்தினால் எய்திய அந்தக் கர்த்தாவும் கர்மமுதலியவற்றிற்றொடக்குண்டவனாக அறியப்படுவன்.

ஏதுவின்பக்ஷதர்மாநுமானவாயிலாகப் பிரபஞ்சத்துக்கு விலக்ஷணமாகக் கர்த்தா ஒருவன் உளனாகச் சித்திப்பானேனும், நிமித்தோபாதான சத்தியோடியைந்த ஒரே கர்த்தா உளன் எனச் சாதித்தல் கூடாது. ஆகலின் வேதாந்தசாஸ்திரமொன்றினாற் பெறப்படுபவரும், அந்த வேதாந்தப் பிரமாணமொன்றினாலே தாபிக்கற்பாலரும் பரப்பிரம சிவபெருமான் எனச் சித்தமாயிற்று.

இன்னும் மேலை அதிகரணத்திற் பிரதிபாதிக்கப்பட்ட பிரபஞ்சோற்பத்திக்கு இன்றியமையாதுள்ள சிவபெருமானுடைய சர்வஞ்ஞதையானது வேதசாத்திரங்கட்குங் காரணமாகச் சித்திப்பதெனப் பிரதிபாதிக்கப்பட்டதாமென்பர் சிலர்.

ஈண்டுச் சிலேஷார்த்தமுடைய காவியம் போல, இரண்டர்த்தம் கூறுதலைச் சூசிப்பிக்கும் (இந்தச்) சூத்திரத்துக்கு வாக்கியபேதமுதலிய தோஷமின்மையின், பின்னரும் மற்றோர் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஃச்வஸிதமேதத்ருக்வேதோ யஜுர்வேதஸ்ஸாமவேத: (பிரு. ச. ச. க௦)

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன இந்தப் பரம்பொருளின் சுவாசம்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படும் விஷயமே ஈண்டு ஆராயற்பாற்று.

சிவபெருமானை வேதத்துக்குக் கர்த்தா எனல் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது ஒவ்வாதென்பது;

தஸ்மை நூநமபித்யவே வாசா விரூப நித்யயா।

(தைத். சங். உ. ௬. கக. உ)

"பல்வகை வடிவங்கொள்ளும் (அக்கினியே), நித்தியமாயவாக்கினாலே இந்நிலை வணங்குதற்கு உனக்கு ஏற்றுகின்றனே" என வாக்குக்கு நித்தியத்துவஞ்

சாதிக்குஞ் சுருதிக்கு விரோதமுறுதலினாலும், வேதங்கள் சிவபெருமானின் காரியமாயின் (அவை) பௌருஷேயமாய் அப்பிராமாண்ணியப் பிரசங்க முறுதலினாலுமாம். ஆகலின், வேதத்துக்குச் சிவபெருமானைக் கர்த்தா வாகக்கோடல் எங்ஙனமோ எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வேதத்துக்குச் சிவபெருமானைக் கர்த்தாவாகக் கோடல் யுக்தமே;

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத்யத்ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேத: (பிரு. ச. ச. க0)

“இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன இந்தப் பரம் பொருளின் சுவாசம்” என்றற்றொடக்கத்த சுருதியினாற் சுவாசம் போல, பரப்பிரம சிவபெருமானிலிருந்து பிரயத்தின மொன்றுமின்றி வேதத்தொகுதி உதித்தன எனப் பெறப்படலானும்,

। அஷ்டாதஶாநாமேதாஸாம் வித்யாநாம் பின்னவர்த்மநாம்।
ஆதிகர்த்தா *ஶிவஸ்ஸாக்ஷாச்சூலபாணிரிதி ஶ்ருதி:।
(வாயு. பூ. க. உச)

“பல்வகை மார்க்கமுடைய இந்தப் †பதினெண் வித்தைகளுக்குஞ் சாக்ஷாத்தாக முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது” என்றமையின், வித்தைகள் அனைத்துக்கும் சிவபெருமானே கர்த்தாவாகக் கேட்கப்படலானுமாம். சிருட்டிக்கு முன்னே தம்மிடத்தொடுங்கின வேதங்களைப் பண்டு போலாக, முன் முன் வர்ணங்களைக் கிரமமாக ஒத்தபிரகாரம் இசைத்தருளினமையின், பின் (அவற்றுக்குக்) கர்த்தா சர்வஞ்ஞராகிய சிவபெருமான். இதுபற்றி வேதங்கள் அபௌருஷேயமாயும், சிவபெருமானுடைய காரியமாயும் ஆகின்றன. எவர் விருப்பு வெறுப்புடையரோ, அவர் வசனம் பிரமாணமன்று. சமஸ்த தோஷ களங்கமில்லாதவரும், தடையிறந்த நிரதிசய ஞானப்பிரத்தியக்ஷத்தினாலே முக்காலத்துள்ள பொருள்களையும் நேரே அறியும் விலாசமுடையவரும், சுவதப்பிரமாணமாயுள்ளவரும், பரமேசுவரரும், பராமாப்தரும்,

*“ஸவி” பாடாந்தரம்.

†இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்குவேதங்களும், சிக்ஷை கற்பம் வியாகரணம் நிருத்தம் சோதிடம் சந்தோவிசிதி என்னும் ஆறு அங்கங்களும், புராணம் நியாயம் (கன்மகாண்ட பிரமகாண்டங்களாகிய பூருவ உத்தர) மீமாஞ்சை தருமசாஸ்திரம் என்னும் நான்கு உபாங்கங்களும், ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தருவவேதம் அர்த்தவேதம் என்னும் நான்குஉபவேதங்களுமாகிய பதினெண்வித்தைகளுள்ளே பிரமகாண்டத்தினாலேனும் உபப்பிருங்கண புராணசப்தத்தினாலேனும் சிவாகமம் சங்கிரகிக்கப்படும்.

விரும்பிய அனைத்துமுடையருமாம் சிவபெருமானுடைய பிரமத்தின் வசனம் பிரமாணமே.

𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 (மகா. கஎ. ௫)

"சமஸ்தவித்தைகளுக்கும் ஈசானர்"

𑌸 𑌨𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌶𑍁𑌭𑌯𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾 𑌸𑌂𑌯𑌨𑌕𑍍𑌤𑍁 (மகா. க0. ௩)

"அந்தச் சிவபெருமான் நம்மைச் *சிவஞானத்தினலே சேர்ப்பாராக" என்னுஞ் சுருதிகளினற் சிவபெருமானே சமஸ்த வித்தைகளுக்குப் பிரவர்த்தகராதலும் அருண்ஞானத்துக்குக் காரணராதலுங் கேட்கப்படுகின்றது. இதுகொண்டு சமஸ்த வஸ்துக்களையும் பிரகாசிப்பிக்கும் வேதங்களுக்குச் சிவபெருமானே கர்த்தாவாதலின், அவருக்குச் சர்வஞ்ஞதை உண்டென நிச்சயிக்கப்படுகின்றது; அறியாததொன்றைக் கூறல் கூடாமையின். சர்வவியாபகராகிய சிவபெருமான் பொருள்களனைத்தினும் இயைந்து நிற்றலான், அவர்க்குச் சர்வஞ்ஞத்துவஞ் சித்திக்கின்றது. அங்ஙனமாயினும், சர்வவஸ்துக்களையும் விளக்கும் வேதங்களுக்கு அவர் கர்த்தாவாதலும் ஓர் விசேடத்தைக் காட்டுகின்றது. தீபமானது தன்னெளியோடு சம்பந்தமுற்ற இரசமுதலியவற்றை விளக்காது ரூபத்தையே விளக்குமாறு போல, சிவபெருமான் அங்ஙனஞ் செய்வாரல்லர்; பின் அவர் சத்தியோடிசைந்த அனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றனர்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுடைய சர்வஞ்ஞதையானது வேதத்திலே கூறப்பட்ட பொருள்கள் அனைத்தையும் அறிதலே. அங்ஙனமாயின், வேதார்த்தங்களை உணர்ந்த மகா இருஷிகளுக்குஞ் சர்வஞ்ஞத்துவஞ் சித்தமாகின்றது. பின் வேற்றுமை என்னை எனின்,

(உத்தரம்) அன்று; வேதங்களுக்குக் கர்த்தாவாகிய சிவபெருமான் அதிகஞானமுடையர். வியாகரணமுதலியவைகளிலே மிகுந்த அர்த்தங்களை அறிந்த பாணினிமுதலாயினோர் அவ்வியாகரணமுதலியவற்றிற்கு ஆக்கியோர்களாதல் காணப்படுகின்றது. வேதமானது சர்வார்த்தங்களையும் விளக்குமேனும், அனைத்தையும் முக்கியமாய் விளக்கவில்லை; அது சிலவற்றை இலக்ஷணையாகவும், சிலவற்றைச் சாமானியமாகவும், சிலவற்றை

*இப்பொருள்படவே "அவனருளாலேயவன்றாள் வணங்கி" (திருவாசகம், சிவபுராணம், கஅ) எனவும், "அப்படியுமந்நிறமுமவ்வண்ணமுமவனருளே கண்ணாகக் காணினல்லால்" (பொது, நாவு., திருவினைத்திருத்தாண்டகம், க0) எனவும், "நின்னருட்கண்ணுலேனக்காதாரல்லாதாரே" (திருவாரூர், திருத்தாண்டகம், க) எனவும் கூறப்பட்டிருக்கின்றன. கஎஎ-ஆம் இலக்கம் பார்க்க.

விசேஷமாகவும் (உணர்த்துகின்றது). சிவபெருமானே சர்வசாக்ஷியாய் அனைத்தையும் அறிகின்றனர். வேதத்துக்கும் சிவபெருமானுக்கும் இத் துணைதான் வேற்றுமை கொள்ளப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) சிவபெருமான் மாத்திரம் வேதத்துக்குக் கர்த்தாவாதல் நியமமில்லை;

ஷஹோதா வெ ஸஂஹா வ்ரஜாவதிரிஷ0 ஸவஂ ஃஸுரஜஷூ வொ யஜுஂஷி ஸாமாநி (தைத். பிரா. உ. ங. உ. ங)

"ஷட்ஹோத்திரியாகிப் பிரஜாபதி இருக்கு யசுர் சாமங்களாகிய இவை அனைத்தையும் (படைத்தனர்)" என்றற்றொடக்கத்த சுருதிகள் கேட்கப் படலான், இரணியகருப்பர் முதலாயினோரும் வேதங்களுக்குக் கர்த்தா வாகப் பெறப்படுகின்றனரே எனின்,

(சித்தாந்தம்) அன்று; இரணியகருப்போற்பத்திக்கு முன் வேதங்கள் இருந்தமையின்.

யொ ஸ்ரஹாணம் வி஢யாதி வஂஸவ0 யொ வெ வெ஢ாஂஷ வ்ரஹிணொதி தஸெு (சுவே. சு. கஅ)

"பிரமாவை முதற்கண்ணே படைத்து, அவருக்கு வேதங்களை அருளினர்" எனச் சுருதி கூறுகின்றது. எவர் தேவர் அனைவர்க்கும் தலைவராய் இர ணியகருப்பர்க்குக் கர்த்தாவாய், இவருக்குச் சமஸ்த வேதங்களையும் உப தேசித்தாரோ, அவரே சர்வாதிகரும், வேதகர்த்தாவும், பரமதேசிகருமாம். இதுபற்றியே,

யொ தெவாநா0 வ்ரயவ0 வஂரவஸ்ரயொ ருஂஜெ்ா ஃஹ ஷிஃ ஹிரண்யுமஂ0 வஸ்ரூத ஜாயமாந0 ஸ நொ தெவஸ்ஹயா ஸூஜூா ஸ0யுநக்து (சுவே. ச. கஉ)

"தேவர்கள் எல்லோருக்கும் முன் உளராய், இரணியகருப்பர் பிறக்க எந்த விசுவாதிகரர்கிய உருத்திர மகா இருஷி முதற்கண்ணே கண்டனரோ, அவர் நம்மை அருண்ஞானத்தினுற் சேர்ப்பாராக" எனச் சுருதி தெளி வுறக் கூறுகின்றது.

"எவர் மகா இருஷியாயும், வேதகர்த்தாவாயும், சர்வஞ்ஞத்துவமுத லியவற்றுற் சித்தும் அசித்துமாம் பிரபஞ்சத்திற்கு அதிகராயும், பரப்பிரம மாகிய உருத்திரருமாகி, சர்வதேவர்களுக்கும் இந்திரர்களுக்கும் ஆதியா

யும், தமது சங்கற்பத்தினாலே காரணமாகிய் தம்மிலிருந்து தோன்றுபவரு மாயுள்ள இரணியகருப்பராகிய பிரமாவைச் சிருட்டிகாலத்திலே சர்வ ஞானோபாய சகல வேதோபதேசரூபமாகிய அநுக்கிரகதிருஷ்டியினால் திரு நோக்கஞ் செய்தாரோ, அந்தப் பரமதேசிகரே சகல சம்சார பாசமாகிய பெரிய அநர்த்தத்தை நிவாரணஞ் செய்தற்குக் காரணமாயும், பரமாமிர்த இலக்குமியை அடையச் செய்வதாய பரமானந்தத்தை விளைப்பதாயும், அத னாற் பரம மங்கல ரூபமாய் வேதாந்தசாரசமரசஞ் சித்திக்கப்பெறுவதாயு முள்ள ஸ்மிருதி எனப்படுந் தம்மைப்பற்றிய ஞானகலையோடு நம்மையுஞ் சேர்ப்பாராக" என்பதே (மேலே கூறிய) சுருதியின் தாற்பரியம். ஆக லின், சமஸ்த வேதங்களுக்குங் கர்த்தாவாதல் சிவபெருமானுக்குச் சித்தித் தவாறுயிற்று. "வாக்கு நித்தியம்" என்னும் சுருதியானது விரோத முறுது; முன்னரே சத்தாரூபமாயிருந்த வேதங்கள் சிவபெருமானால் ஆக் கப்பட்டமையின். இங்ஙனம் வேதங்கள் சிவபெருமானால் அருளப்பட்ட வென்பதும், அவை நித்தியமென்பதும் விரோதமுறுவன அன்றே. (௩)

(௪) சமந்வயாதிகரணம்.

முதலாம் அதிகரணத்தில் ஆராயற்பாலதாம் விருப்பத்தினாலே பிரதி பாதிக்கப்பட்ட பரப்பிரம சிவபெருமானை அறியும் பொருட்டுப் பிரமலக்ஷ ணம் வேண்டப்பட்டவிடத்து, இரண்டாம் அதிகரணத்தினாலே பிரபஞ் சோற்பத்திரூபமாகிய இலக்ஷணம் கூறப்பட்டது. இதற்குப் பிரமாணம் என்னை என்று வினவ, மூன்றும் அதிகரணத்தினால் வேதாந்தசாஸ்திரம் அந் தப் பரப்பிரம சிவனை அறிதற்குப் பிரமாணமாதலும், அந்தச் சிவபெருமான் வேதாந்தசாஸ்திரத்துக்கு மூலமாதலும் நிரூபிக்கப்பட்டன. எதனால் எந் தப் பொருள் மாறுபடாது சித்திக்கின்றதோ, அதுவே அந்தப் பொருட் குப் பிரமாணமாகக் கூறப்படுகின்றது. வேதாந்தவாக்கியங்கள் எங்ஙனஞ் சிவபெருமானைச் சாதிப்பவென ஆக்ஷேபிக்க, (அதற்கு உத்தரமாக) நான் காம் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

தத்து ஸமந்வயாத் (க. க. ௪)

(௪) அதனையே *(வேதாந்தம்) ஒரே சம்பந்தமுற இசைக்கின்றமையின்.

தத் (அதனை) என்னும் மொழியானது (௩ண்டு) ஆரம்பித்துக் (கூறிய) பிரமத்தின் மேற்று. "து" என்னும் மொழியினால் வேத வாக்கியம் அனைத்

---

*"வேதத்தின்பொருளானை" (திருவன்பார்த்தான்பனங்காட்டூர், ௬., ௧) எனவும், "மருவினிய மறைப்பொருளை மறைக்காட்டானை" (திருமாற்பேறு, திருத் தாண்டகம், ௬) எனவும் கூறப்பட்டமையும் ஓர்க.

துந் தொகுக்கப்படுகின்றன. சமந்வய சப்ததாற்பரியத்தினாலே சம்பந்தங் கூறப்படுகின்றது.

படவே, "பிரமத்தை வேதாந்த வாக்கியங்கள் தாற்பரிய லிங்க சம்பந்தத்தினால் உணர்த்துகின்றன"

என்பது சூத்திரார்த்தம். இவ்வதிகரணத்துக்குச் சமஸ்த வேதாந்த வாக்கியங்களும் விஷயம்.

வேதாந்த வாக்கியங்கள் பிரமத்தை உணர்த்துவது யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சப்தத்தின் பொருளை உணர்த்துவது யாண்டும் (அவ்விரண்டுக்குமுள்ள) சம்பந்தக்கிரகணத்தை அபேக்ஷித்துள்ளது; சப்தம் அர்த்தம் என்னும் இரண்டின் சம்பந்த ஞானமின்றிப் புருஷனுக்குச் சப்தார்த்த ஞானம் எய்தமாட்டாது. சம்பந்த ஞானமும் விருத்தவியவகாரம் பற்றியது. வியவகாரமும் காரியமொன்றை விஷயமாய்க்கொண்டது. எங்ஙனமெனின், "பசுவைக் கொணர்க," "பசுவைப் பிணிக்க" என்று ஏவுகின்ற விருத்தனுடைய வாக்கியத்தைக் கேட்ட பின்னர், அதனைச் செய்யமுயன்றவனும் ஏவப்பட்டவனுமாகிய விருத்தனை அறிந்து பக்கத்தில் நின்றவன் இம்மொழிகளின் பொருள் என்னை என இங்ஙனம் யோசிக்கின்றான்; எப்பிரகாரத்தினாலும் இம்மனுஷன் (தான் இன்ன) காரியஞ் செய்யவேண்டும் என்று அறிந்தபின்னர், (அது) செய்யப் பிரவர்த்திக்கின்றனன்; அந்தக் காரிய ஞானமும் (பசுவைக் கொணர்க என்றற்றொடக்கத்த) இவ்வாக்கியத்தினால் உற்பத்தியாயிற்று; அங்ஙனமின்றேல், இந்த (ஆஞ்ஞா) வாக்கியங் கேட்டபின்னர், இவனுக்குப் பிரவர்த்தி எங்ஙனம் பிறக்கும்! பின்னர்ப் பசுவைக் கொணர்ந்து பிணித்தலைக் கண்டபோது இன்னகாரியம் நடந்ததென நிச்சயிக்கின்றான். சப்தத்தின் பொருள் காரியமாயிருத்தலின், (முன்னுளதாமெனச்) சித்தித்த பிரம விஷயத்திலே சப்தத்துக்குப் பிரமாணமில்லை.

மேலும், காரியவிசேஷமாயுள்ள பிரபஞ்சத்துக்குப் பிரமமாகிய விசேடகர்த்தா அனுமானத்தினாற் சித்திக்கின்றமையின், இவ்விஷயத்தில் அப்பிராப்த விஷயங்களையுணர்த்தும் வேதாந்தவாக்கியங்கள் எங்ஙனம் பிரமாணமாகும்! இன்றேல் வேதாந்தவாக்கியம் அனைத்தும் விதிகளைக் காட்டுவனவன்றி, பிரமத்தை உணர்த்தா. இந்த இரண்டையும் உணர்த்துமாயின், வாக்கியபேதம் எய்தும். ஆகலின், வேதாந்தவாக்கியங்கள் பிரமத்தை உணர்த்துதல் யுக்தமன்றாம் எனின்,

(சித்தாந்தம்) அது யுக்தம்; வேதாந்தவாக்கியங்கள் தாற்பரியலிங்கசம்பந்தத்தினாற் பிரமத்தை உணர்த்துஞ் சாமர்த்தியமுண்மையின்.

வியுற்பத்தியனைத்து காரியத்தினின்று பெறப்படுதலாற் சித்தித்தபிரம விஷயத்திற் சுருதியானது பிரமாணமில்லை என்றமை பொருந்தாது; "உனக்குப் புத்திரன் பிறந்தான்" என்றற்றொடக்கத்த சித்தித்த அர்த்த வாக்கியங்களினுஞ் (சப்தார்த்த) சம்பந்த ஞானம் பெறப்படுகின்றமையின். விருத்தவியவகாரத்தினும் அறிபவனனவன் (வியுற்பித்சுவானவன்) தான் முயற்குக் காரணமாய காரியஞானமானது பதார்த்தஞானத்துக்குப் பின் உளதாகப் பெறப்படலான், ஏவப்பட்ட விருத்தனுடைய பிரேரகவாக்கியம் பதார்த்தஞானத்தைப் பிறப்பிக்கின்றதென நிச்சயிக்கின்றனன். ஆகலின். சித்தித்த பொருள்களினுஞ் சப்தத்துக்கு அபிதானநிச்சயமுண்டு.

இன்றேல், ஈண்டு விருத்தவியவகாரத்தைமாத்திரம் பற்றவேண்டியதென்? வியுற்பத்தி வேறு பிரகாரமாயுஞ் சித்தித்தலின். மாதா முதலாயினோர் பாலர்களுக்குக் கைவிரன் முதலியகொண்டு சந்திரன் பசு முதலியவைகளைக் காட்டி, அந்தந்தச் சப்தங்கள் அந்தந்தப் பொருள்களிலே பிரயோகிக்கப்படுதலை மிருதியும் படிப்பிக்க, அப்பாலர்கள் அந்தந்தப் பொருள்கள் இவை இவை என்று அறிந்துகொள்கின்றார்கள். காவிய நாடகங்களை அறியாதவர்கள் அவற்றை அறிந்த புருஷனை அடைந்து பதச்சேதம் செய்து, இன்ன சப்தத்துக்கு இன்னபொருள் என்று கூற, சப்தம் அனைத்தின் பொருள்களையும் அறிந்துகொள்கின்றார்கள். இங்ஙனஞ் சித்தமாயுள்ள வஸ்துவினும் ஞானமுண்மையான், அங்கே சப்தத்துக்குப் பிரமாணமுண்டு; ஆகலின், வேதாந்தவாக்கியங்களும் பிரமத்தைக் குறித்துப் பிரமாணமே.

பிரபஞ்சம் காரியவிசேடமாயிருத்தலின், விசேஷகர்த்தாவாகிய பிரமமும் அனுமானத்தினாற் சித்திக்கின்றதென்றமை பொருந்தாது; விசித்திரமாகச் செய்யப்பெற்ற இரதம், கோபுரம், பிராசாதமுதலியன (தனித்தனியே) பல கர்த்தாக்களையுடையனவாய்க் காணப்படுதல்கொண்டு அனுமானத்தினால் இந்த உலகம் ஒரே கர்த்தாவையுடையதென்று சாதிக்கக் கூடாமையின். கர்மமுதலியவற்றின் வயத்தனாயிருக்கின்றான் கர்த்தா என்பது அனுமானத்தினால் மேலே கூறப்பட்டமையின், பிரமம் அனுமானத்தினாற் பெறற்பாலதொன்றன்று. மேலும், சுருதியோடியைந்து நிற்றலின் அனுமானமும் பிரமத்தையுற்றுப் பிரமாணம் ஆகுக. எந்த இடத்திலே வாக்கியங்களுக்குத் தாற்பரியமுளதோ, அந்த இடத்திலே அவைகள் பிரமாணம்; பிரத்தியக்ஷாதி விஷயங்களுக்குப் போல, எல்லாப் பொருள்களுக்குமன்று.

வேதாந்தவாக்கியங்கொண்டு பிரமத்தைத் தாற்பரியத்தினால் நிர்ணயஞ் செய்தற்கியன்ற இலிங்கங்கள் எவை எனின், அவை உபக்கிரம உபசங்

காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி என்பனவாம் என்று கூறுகின்றனர்.

ஆகலின், ஈண்டு உபக்கிரமமுதலிய இலிங்கங்களினால் வேதாந்தவாக்கியங்கள் பிரமத்திலே தாற்பரியமுடையவென நிச்சயஞ் செய்யப்படுகின்றது. எது உபக்கிரமாதிகளினாலே தாற்பரிய நிர்ணயஞ் செய்யப்படுகின்றதோ, அதுவே வேதாந்தவாக்கியங்களின் சிரவணம் என்று கூறப்படுகின்றது.

அஜ்ஞானப்ரபவம் து:கம் ஜ்ஞாநம் தஸ்ய நிவர்த்தகம்। ஸர்வவேதாந்தவாக்யாநாம் ச்ரவணம் தத்ப்ரவர்த்தகம்। ச்ரவணம் நாம வாக்யாநாம் சிவேஷிகாநாம் பராத்பரே। உபக்ரமாதிபி லிங்கைஸ் தாத்பர்ய நிர்ணயம்॥

"அஞ்ஞானத்தினாலாவது துக்கம், அந்த அஞ்ஞானத்தை ஒழிப்பது ஞானம், அந்த ஞானத்தை உதிப்பிப்பது சர்வவேதாந்தவாக்கிய சிரவணம், வேதாந்தவாக்கியசிரவணமானது உபக்கிரமாதிலிங்கங்களினாலே பரத்துக்குமேற்பரராகிய சிவபெருமானிலே தாற்பரியநிர்ணயஞ் செய்கின்றது" என்பது.

வேதாந்தவாக்கியங்களுக்குத் தாற்பரியநிர்ணயம் பிரமமாகிய சிவபெருமானிலேயாமென உணர்த்தும் உபக்கிரமோபசங்காரம் ஒரு இலிங்கம். ஈண்டு தாற்பரியம் என்பது அந்தச் சிவப் பிரமசொரூபோபாசனா விஷயம் (பற்றியது). பின் வரும் சுருதிகள் முறையே உபக்கிரமோபசங்காரத்தை உணர்த்துவனவாயின:—

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்பது உபக்கிரமம்.

தத்வமஸி (சாந். சு. க. ரு)

"அது நீயாகின்றனை" என்பது உபசங்காரம்.

யதா பச்யதி யோகீசம் (மகா. அ. ரு)

"சிவப்பிரசாதத்தினாலே அவரது நிரதிசயானந்தரூபத்தை அநுபவிக்கின்றனன்" என்பது உபக்கிரமம்.

யஃ பரஸ்ஸ மஹேச்வரஃ (மகா. ௰. அ)

"எவர் பரரோ அவர் மகேசுவரர்" என்பது உபசங்காரம். இங்ஙனம் (உபக்கிரமோபசங்காரங்களைப்) பிறவிடங்களினுங் காண்க.

தத்வமஸி।

* அது நீயாகின்றனை.

ஸர்வோ வை ருத்ர꞉ (மகா. ௧௬. ௨)

"எல்லாம் உருத்திரரே"

அம்பிகாபதயே உமாபதயே (மகா. ௧௬. ௪)

"அம்பிகாபதியார்க்கு உமாபதியார்க்கு" (நமஸ்காரம்)

யோ வை ருத்ரஸ்ஸ பகவான் யச்ச பூர்புவஸ்ஸுவ꞉ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரும் பகவானுமாயினரோ, அவர் பூமி அந்தர சுவர்க்கம்" என்பன அப்பியாசலிங்கம். வேத மொழிந்த மற்றைப்பிரமாணத்தினும் (பிரமம்) அறியப்படாதென்பது அபூர்வதை. பிரமஞானம் பலம். பிரபஞ்சத்தின் பிறப்பிருப்பிறப்பு முதலியன அர்த்தவாதம். உபபத்தியாவது (ஈக்ஷத்தியதிகரணமுதலியவற்றிற் போல உதாகரணத்தினாற் சர்வவேதாந்த வாக்கியங்கள் வியாபகமுடைமையின் எப்பிரமாணத்தையும்) விரோதிக்காவெனல்; இன்றேல் (சென்மாத்தியதிகரணத்திற் கூறியது போல ஜகத்காரணத்துக்கு வேண்டிய) சர்வஞ்ஞதாதி குணங்கள் அமைந்திருத்தல். இந்த இலிங்கங்கள் கொண்டே வேதாந்தவாக்கியங்களுக்குப் பிரமத்திலே தாற்பரியஞ் செயற்பாற்று. வேதாந்தங்கள் கேவலம் பிரமபரமாக இன்று; பின் அவை,

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய꞉ (பிரு. ௪. ௪. ௫)

*"ஆன்மாவே காணற்பாற்று" என்றற்றொடக்கத்த சுருதிகள் (பிரம) தியானவிதிபரமாயும் இருப்பனவாக அறியப்படுகின்றன. இந்த இருதிறத்தனவாகவும் வேதாந்தவாக்கியங்கள் பேதமுறுவனவாம் என்று கூறினமை பொருந்தாது; ரூபத்தை விளக்கும் கண்ணினாலே திரவியம் அறியப்படுமாறு போல, விதிபரமாகிய வேதாந்தவாக்கியங்களினாலும் பிரமம் அறியப்படுதலின், வேதாந்தவாக்கியங்கள் உபயபரத்துவமாதல்பற்றி விரோதமில்லை.

(ஆக்ஷேபம்) சாப்தமே பிரமஞானம்; இந்தப் பிரமஞானம் பிரமத்தை உணர்த்துஞ் சுருதிகளினாற் பெறப்படுகின்றது. அங்ஙனமாயின், அந்த விதியினாற் பிரயோசனம் என்னை எனின்,

(உத்தரம்) பிராப்தமாயிருந்தாலும் (அஃதாவது பிரமஞானம் விதிக்கப்பட்டிருந்தாலும்) மந்திராதிகளிலே போல் விதித்தல்பற்றி விரோதமின்று; திரவியங்களையுந் தேவதைகளையும் அறிவிக்கும் மந்திரங்களை உரைக்குங்கால், திரவியமுதலியவற்றின் ஞானம் எய்துமேனும், பின்னர் அனுஷ்டானகாலத்திலே,

* ௪0௧-ஆம் இலக்கம் பார்க்க.

மந்த்ரை: ஸ்மர்தவ்யம்।

"மந்திரங்கொண்டு (திரவியங்களையுந் தேவதைகளையும்) நினைக்கத்தக்கது" என்னும் பிரயோகவிதியானது மற்றோர் ஞானத்தை அநுஷ்டிக்க உணர்த்துகின்றது; அங்ஙனம் ஈண்டுமாம். உற்பத்திவிதி, விநியோகவிதி, அதிகாரவிதி என்பன இன்மையின், பிரயோகவிதியும் இல்லை எனச் சங்கிக்கத்தக்கதன்று. பிரகரணவசத்தால் உற்பத்திவிதியானது அத்தியாகாரத்தினாற் சித்திக்கும்போது, சமமுதலியவற்றைக் கற்பித்து ஆன்மாவைக் காண்க" என விநியோகவிதி எய்துகின்றது. பின்னும் இராத்திரிசத்திரநியாயங்கொண்டு,

ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை: (சுவே. உ. கரு)

"சிவபிரானை அறிந்து பாசங்களனைத்தினின்றும் விடுறுகின்றான்" என்றற்றொடக்கத்த அர்த்தவாதத்தினாற் பெறப்பட்ட முத்திகாம அதிகாரி கற்பிக்கற்பாலனாகின்றான். ஆகலின், முத்திகாமன் அடக்கமுதலியவுடையனாய்ப் பிரமஞானத்தைப் பெறுக என்பது பிரயோகவிதி.

(ஆக்ஷேபம்) பிரமஞானமானது விதியின்பாலதொன்றன்று.

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: (பிரு. ௪. ௪. ரு; சு. ரு. சு)

"ஆன்மா காணற்பாற்று" என்றற்றொடக்கத்தவற்றிலே நித்தியமும், வியாபகமும், நிர்விகாரமும், விசுத்தமாயுமுள்ள பிரமமாகிய ஆன்மாவை விதிசம்பவமாகிய கர்மகாரகமாகக் (காணற்பாலதாம் ஓர் வஸ்துவாகக்) கொள்ளல்கூடாது; பிரமத்துக்கு உற்பத்தியேனும், பிராப்தியேனும், விகாரமேனும் எய்தாமையின். சுவதந்திரபலத்தின் பொருட்டுச் சத்துநியாயங்கொண்டு கர்மகாரகமாகிய இரண்டாம்வேற்றுமையைத் தவிர்த்துக் கருவிப்பொருளாகிய மூன்றாம் வேற்றுமையாகத் திரித்து,

ஆத்மாநம் பஶ்யேத் (பிரு. ௪. ௪. சு)

"ஆன்மாவினாலே காண்க" என்று விதித்தலும் கூடாது; பேதமுறாதலான். (அக்கினியில் எறிந்தமையால்) சத்துக்களின் பஸ்மீகரூபமாகிய வேறுபாடு நேர்வதால், அவைகளிற் சப்தத்தினாற் கரணத்துவம் இருப்பினும், பொருளினாற் கர்மத்துவம் உண்டு; இது ஆன்மாவில் எய்தாது. ஆகலின் வேதாந்தம் பிரமஞானவிதிபரம் அன்றாம் எனின்,

(உத்தரம்) அன்று; கர்மத்துக்குரிய பிறப்புமுதலாயின பரமான்மாவுக்கு இன்றேனும், கர்த்தாவிலிருந்து பெறப்படும் மோக்ஷத்தின்பொருட்டு விதித்தல் யுக்தமாமாதலின்.

(ஆக்ஷேபம்) பிராப்தமாயுள்ளதற்கு விதி என்பதொன்று எற்றுக்கெனின்,

(உத்தரம்) பிராப்தமாயுள்ள கர்மம் இடைவிட்டுச் செய்வதாயேனும், இடைவிடுதலின்றிச் செய்வதாயேனும் இருக்கின்றது. இவ்விரு பிரகாரமாகவும் நியமவிதி நேர்கின்றது.

(ஆக்ஷேபம்) அவ்வாறிருக்குங்கால், வேதாந்தங்கள் விதிபரமாயிருக்கும்போது பிரமபரமாயிருத்தல் ஒவ்வாது. ரூபத்தை அறியும் கண்ணினாலே இரசமும் (காணப்பட்டாற்) போல, விதிபரமாயுள்ள வேதாந்தங்களாற் பிரமஞ் சித்திப்பதென (முற்) கூறினமை யுக்தமன்று. சம்பந்த முள்ளவர்களில் ஒவ்வோர் வஸ்துவையும் நிரபேக்ஷமாய்க் குறிப்பதிற் கண்ணானது பிரமாணம்; சப்தம் (சுருதி) அவ்வாறின்று. ஆயின் யாண்டுத் தாற்பரியமுளதோ, ஆண்டுப் பிரமாணம். ஆகலின் வேதாந்த வாக்கியங்களுக்கும் பிரமத்தை உணர்த்துதலும் பிரமஞானத்தை விதிப்பதுமாகிய இரண்டும் எய்தாவாம் எனின்,

(உத்தரம்) அன்று;

ஸமிதோ யஜதி (தைத். சங். க. சு. க)

"சமித்துக்களை ஓமிக்கின்றான்" என்றற்றொடக்கத்த வாக்கியங்கள் பஞ்சப்பிரயாஜத்தை விதித்தலும் அதின் அநுஷ்டானக்கிரமத்தை விதித்தலுமாகிய உபயபரமாக இருக்கக் காண்டலின், வேதாந்தவாக்கியங்களும் பிரமசொரூபத்தையும் மோக்ஷோபகாரகமாகிய பிரமஞானத்தையும் விதித்தல் யுக்தமே.

(ஆக்ஷேபம்) பிரமம் வேதவாக்கியத்தினாலேதான் அறியப்படுங்காலல், அந்தப் பிரமஞானவிதி பிரயோசனமுடைத்தன்று; அந்த ஞானம் பூர்வ ஞானத்தினாற் சம்பவித்தலான் எனின்,

(உத்தரம்) அன்று; வாக்கியம் வாயிலாகப் பிரமம் பரோக்ஷமாக அறியப்படினும், பிரமசாக்ஷாத்காரத்தின் பொருட்டு ஞானவிதி பொருத்தமாதலின். பேதம் என்னை எனின், சப்தத்தினாலாய ஞானம் சாக்ஷாத்காரஞானத்துக்கு ஹேதுவாகாது; பின் அது உபாசனரூபஞானமே, இங்ஙனம்,

[illegible] (கைவ. எ)

"பூதயோனியும், சமஸ்தசாக்ஷியுமாயுள்ளாரைத் தியானித்து முனியானவன் * இருளுக்கு மேலே போகின்றான்"

---

* "அண்டமாரிருளூடுகடந்தும்ப
ருண்டுபோலுமோர்பேரொளிச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே"
(சித்ததொகை, திருக்குறுந்தொகை, உ)

என்று ஸ்ரீவாகீசர் இச்சுருதிப்பொருள் தொனிக்குமாறு அருளினார்.

ஜ்ஞாநநிர்மதநாப்யாஸாத் பாசம் தஹதி பண்டித: (கைவ. கக)
"பண்டிதன் தியானங்கொண்டு கடைதலான் மாத்திரம் பாசத்தைத் தகிக்கின்றனன்" என்றற்றொடக்கத்த சுருதிகளினும்,

ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை: (சுவே. கஅ)
"சிவபெருமானை அறிந்து சமஸ்தபாசங்களினின்றும் வீடுறுகின்றனன்"

ஈசம் தம் ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி (சுவே. ௩. எ)
"அவ்வீசுவரரை அறிந்து சிவசாம்யராகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினும்,

ச்ரோதவ்ய: ச்ருதிவாக்யேப்யோ மந்தவ்யச்சோபபத்திபி:|
மத்வா ச ஸததம் த்யேய ஏதே தர்சனஹேதவ:||

"சுருதி வாக்கியங்களினாலே * சிரவணஞ் செய்யத்தக்கது; பொருத்தமாற்றான் மனனஞ் செய்யத்தக்கது; சிந்தித்த பிற்பாடு இடையீடின்றித் தியானஞ் செய்யத்தக்கது; இவை (பிரம) தரிசனத்துக்கு ஏதுக்கள்" என்று ஸ்மிருதியினுஞ் சிரவணமனனத்தினால் எய்திய பேற்றைப் பிரியாதுள்ள நிதித்தியாசனமானது பிரமசாக்ஷாத்காரத்துக்கு நிமித்தம் எனக் கொள்ளப்படுகின்றது; இதுகொண்டு உபாசனரூபமாகிய ஞானமே மோக்ஷபலம் என விதிக்கப்படுகின்றது.

† ஆத்மந்யேவாத்மாநம் பச்யேத் (பிரு. சு. ச. உ௩)
"ஆன்மாவிலே (சத்தியோடு கூடப் பரம) ஆன்மாவைக் காண்க (உபாசிக்க)"

சம்புராகாசமத்யே த்யேய: (அதர்வசிகை)
"ஆகாயமத்தியிலே சம்புவானவர் தியானிக்கற்பாலர்"

தஜ்ஜலாநிதி சாந்த உபாஸீத (சாந். ௩, கச. க)
"இந்த உலகமானது அவரிலே தோன்றி நின்று ஒழிதலைக் கண்டு, ஒவ்வொருவரும் சாந்தமாக அவரை உபாசிக்க"

ப்ராசீநயோக்யோபாஸ்வ (தைத். க. சு. உ)
"பிராசீனயோக்கியனே, உபாசி" என்றற்றொடக்கத்த சுருதிகளினும், அங்ஙனமே

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் (தைத். உ. க)

* "கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றவூர்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே"
(திருப்பிரமபுரம், ஞான. உ)

† இது திருச்சிற்றம்பலத்தின் மேற்று.

"பிரமத்தை அறிபவன் நிரதிசயபிரமானந்தத்தை அடைகின்றான்" என்றற் றொடக்கத்த சுருதிகளினும் பிரம்சொரூபமும், (அதன்) உபாசனையும், பயன் முதலாயினவும் உபதேசிக்கப்படுகின்றன. அங்ஙனமின்றேற் சத்திய முத லிய குணங்களுடையதாக விசேடிக்கப்பட்ட பிரமத்தோடு கூடச் சகல காமப் பேறும், அப்படிப்பட்ட பிரமசாக்ஷாத்காரபலமும் எங்ஙனம் சித்திக்கும்! ஆகலின்,

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஆநந்தம் ப்ரஹ்ம (தைத். ௩. கூ. உஅ)

"ஆனந்தம் பிரமம்"

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம (தைத். க. சு. உ)

"ஆகாசசரீரம் பிரமம்"

ஸத்யாத்ம ப்ராணாராமம் மந ஆநந்தம் (தைத். க. சு. உ)

"சத்தியான்ம பிராணாராமம்; மன ஆனந்தம்"

ஶாந்தி ஸம்ருத்த மம்ருதம் (தைத். க. சு. உ)

"சாந்தி சமிர்த்தம் அமிர்தம்"

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்கலம் ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் (மகா. கஉ. க)

"இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், கிருஷ்ணபிங்களமும், ஊர்த்துவ வீரியமும், விரூபாக்ஷமும்" என்றற்றொடக்கத்த (சுருதிகள்) சத்திய ஞானா னந்தரூபமும், சுவான்மாராமமும், சமஸ்த களங்கமில்லாமையும், சகல மங்களமுடைமையும், பராசத்தியை நீங்காதிருக்கும் சபளரூபமுடைமை யாற் கிருஷ்ணபிங்களமும், விரூபாக்ஷமும், திரிலோசனமுமுடையது பரப் பிரமம் என உபக்கிரமாதி தாற்பரியலிங்கங்களினாலே நிர்ணயிக்கப்படுகின் றது.

யோ வேத நிஹிதம் குஹாயாம் (தைத். உ. க.க)

"குகைக்கண்ணே அமர்ந்தவரை அறிபவன்"

ப்ராசீநயோக்யோபாஸ்வ (தைத். க. சு. உ)

"பிராசின யோக்கியனே, உபாசி"

விஶ்வரூபாய வை நமோ நம: (மகா. கூ. க)

"விசுவரூபராயுள்ளார்க்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே ஞானத்தினின்று வேறாகாத அவருடைய பிரமோபாசனை விதிக்கப்படுகின்றது.

ஸொ ஽ஶ்நுதெ ஸவ்வாந்காமாந் (தைத். உ. க)

"சமஸ்த போகங்களையும் அடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சகல போகப்பேறுகளும் பிரமானந்தத்தோடு உபாசகர்களுக்கு எய்துகின்றன எனக் கூறப்படுகின்றது. இங்ஙனம் நிஷ்காமமாகத் தான் (செய்யும்) தருமங்களையுடையவனும், நிஷித்த காமிய கர்மங்கள் இல்லாதவனும், சுருதி ஸ்மிருதிகளிலே கூறப்பட்ட கர்மானுஷ்டான சம்பன்னனும், அதனாற் சித்தசுத்தியுடையனும், சமமுதலியவற்றோடு அனுக்கிரகிக்கப்பட்ட பரமசிவபக்தியுடையனுமுள்ள முமுட்சுவானவன் சுருதிசாரவாயிலாகப் பரப்பிரமம் எனப்படுஞ் சிவபெருமானை அறிந்து அவரைத் தியானிக்க என்னும் ஞானோபாசன விதி பொருத்தமே. ஈண்டுச் சிவபதத்தை விசேஷணமாகப் பிரயோகித்தமை அது விரூபாக்ஷமுடைய பரமப்பிரமத்தினது பரமவிசுத்திக்கும் மங்கலத்துக்கும் களஞ்சியமாயிருத்தலின் முமுட்சுக்களுடைய உபாசனையின் முக்கிய விஷயத்தை விளக்கும் பொருட்டாம். அங்ஙனம்,

ஶிவ ஏகொ த்யேய ஶிவங்கரஸ்ஸவ்வமந்யத் பரித்யஜ்ய।

(அதர்வசிகை)

"அனைத்தையும் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என அதர்வசிகையிலே சிவசப்தப்பொருளாம் வஸ்துவே தியானிக்கற்பாலது எனக் கூறப்படுகின்றது. இன்றேற் சம்சாரநிவிர்த்தி எங்ஙனம் எய்தும்! சமஸ்ததோஷகளங்கமின்றி நிரதிசயமங்களத்துக்கு ஆதாரமாயுள்ளதே சிவத்துவம். சிவஞானத்திலே மோக்ஷரூபபலம் கூறப்படுகின்றது.

யதா சர்மவ தாகாஶம வெஷ்டயிஷ்யந்தி மாநவாஃ।
ததா ஶிவ மவிஜ்ஞாய து:கஸ்யாந்தொ பவிஷ்யதி।

(சுவே. சு. உ0)

*"எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உடுக்கின்றனரோ, அப்போதுதான் சிவபெருமானை அறியாது துக்கத்தின் முடிவு எய்துவதாகும்."

ஶிவ ஏகொ த்யேய ஶிவங்கரஸ்ஸவ்வமந்யத்பரித்யஜ்ய।

(அதர்வசிகை)

---

* பரசிவனுணர்ச்சியின்றிப் பல்லுயிர்த்தொகையுமென்றும்
விரவிய துயர்க்கீறெய்தி வீடுபேறடைதுமென்ற
லுருவமில்விசும்பிற்றோலைப்புரித்துடுப்பதற்கொப்பென்றே
பெருமறையியம்பிற்றென்னிற்பின்னுமோர்சான்றுமுண்டோ.

(கந். உபதேசப்படலம், உ0)

"ஒத்த ரூபமாக அநேக பிரஜைகளைப் பிறப்பிப்பது" எனக் கேட்கப்படலான், சாங்கியப்பிரகிருதிக்கு ஜகத்காரணங் கூறல் அசங்கதம். (௧. ௪. ௮)ஆம் சூத்திரத்திற் சிவபிரானைக் காரணமாகக்கொண்ட பிரகிருதியே அநேக பிரஜைகளைப் பிறப்பிக்கும் என நிரூபிப்பேம். இராசச சாத்துவிக ரூபமாகிய கிரியாசத்தி ஞானசத்தியின் சம்பந்தம் பிரதானத்துக்கென்று கூறினமை அயுக்தம்; முக்குணமுடைய பிரகிருதியானது தாமசகுணத்தைத் தவிர்த்து இராசச சாத்துவிகங்களோடிசைதல் கூடாமையின். தாமசகுணமானது குறைந்துவிட, இராசச சாத்துவிக குணங்கள் மேற்படுமிடத்து, ஞானக்கிரியாசம்பந்தம் பிரதானத்துக்குளதெனக் கூறற்பாற்றன்று; சாத்துவிக இராசச தாமசகுணங்களின் சாமியாவஸ்தையுடையது பிரகிருதி என அங்கீகரிக்கப்படுதலின். சேதனராகிய சிவபெருமான் ஜகதாகாரமாகப் பரிணமமுற்று விகாரமுறுவர் என்றமை அஞ்ஞானவிலாசம்; நாமரூபவிபாகத்துக்கு அருகமல்லாத சூக்கும சிதசித்சத்தி விசிட்டராகிய சிவபெருமான் காரணர் என்றும், நாமரூபவிபாகத்துக்கு அருகமாகிய ஸ்தூல சிதசித்சத்திவிசிட்டராயிருக்கும்போது அவர் காரியமாதலும் உளவென்று கூறும் எமக்கு அப்பிரசங்க பயம் இல்லையாதலின்.

(ஆக்ஷேபம்) ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்।
ஏகமேவாத்விதீயம் (சாங். ௬. ௨. ௧)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; ஏகமேவாத்துவிதீயம்" என்றற்றொடக்கத்தவற்றாற் சத்ரூபமாகிய வஸ்து நிர்விசேஷம் என உறுதியாய்ப் பெறப்படுகின்றது; காரண அவஸ்தையுடைய இந்தச் (சத்து) சூக்குமப்பிரபஞ்சவிசிட்டமுடையதாய் எங்ஙனங் கூறப்படுமெனின்,

(உத்தரம்) சத்தே என உறுதியாய் நிச்சயிக்கப்பட்ட இது விசேஷ குணங்களை நிஷேதிக்கவில்லை; பின் அது அசத்துக் காரணம் அன்றென்பதை நிஷேதித்தது;

அஸத்வா இதமக்ர ஆஸீத்।
ததோ வை ஸதஜாயத (தைத். ௨. ௭. ௧)

"அசத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது; அசத்திலிருந்தே சத்துப் பிறந்தது" என்ற சுருதியைக் கேட்டு அசத்தைக் காரணம் எனல் அஞ்ஞானமுதிர்ச்சியாதலின். மேலும்,

ஸௌம்யேதமக்ர ஆஸீத்।
ஏகமேவா த்விதீயம் (சாங். ௬. ௨. ௧)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது; ஏகமே அத்துவிதீயம்" என்றவிடத்துப் பிரமத்துக்கு விசேஷணம் இல்லை என்பது எங்ஙனம்பெ

இச்சுருதியில் "ஆஸீத்" (இருந்தது) என்பது கிரியாவிசேஷம். "அக்ரே" (முதற்கண்) என்பது காலவிசேஷம். "ஏகமேவ" (ஒன்றே) என்னும் நிச்சயம் வேறு அதிஷ்டாதா இல்லை என்பதின்மேற்று. அத்துவிதீயம் என்றமையான் ஜகதுபாதானம் கூறப்படுகின்றது. அதனாற் சர்வஞ்ஞதையும் அனந்தசத்தியும் (பிரமத்துக்கு) உண்டு; சர்வஞ்ஞத்துவமும் சர்வசத்தித்துவமுமின்றிப் பிரமத்துக்கு ஜகத்தின் உபயகாரணம் எவ்வாறாம்! இன்றேல், பிரகிருதிப்பிரத்தியயமாகிய சத்பதமானது ஒரே வஸ்துவின் மேலதாகக் கோடல் யுக்தம் அன்று; சத்பதமானது பிரகிருதியினாலும் பிரத்தியயத்தினாலும் இரு வஸ்துவைப் பிரதிபாதித்தலின். அங்ஙனம்,

𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌿𑌵𑌶𑍍𑌚 𑌸𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍋𑌦𑌿𑌤𑍌 ।
𑌤𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌾𑌮𑌰𑌸𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌜𑌗𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑍌 ॥

"சத்தியும் சிவனும் சத்து என்னும் பதத்தின் பிரகிருதியும் பிரத்தியயமுமாகக் கூறப்பட்டனர்; அவ்விருவரும் பிரமம்; (அவ்விருவரும்) சாமரசத்தினாற் சமஸ்த உலகங்களுமாயினர்" என்றது அபியுக்தருக்தி. ஸ்தூல சூக்ஷும சிதசித் பிரபஞ்சரூபசத்திவிசிட்டராகிய சிவபெருமானே காரியகாரணரூபராய்ச் சத்து என்னும் பதப்பொருளாயுள்ளார் என்பது நிர்ணயம். (௫).

பின்னருஞ் சூத்திரகாரர் ஆக்ஷேபித்துப் பரிகரிக்கின்றனர்.

𑌗𑍌𑌣𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 (க. க. ௬)

(௬) கவுணமெனின், அன்று; ஆன்மசப்தவுண்மையின்.

(ஆக்ஷேபம்) சேதனத்தின் தருமமாகிய சங்கற்பமானது அசேதனமாகிய பிரதானத்துக்கு இல்லாமையின், சேதனராகிய சிவபெருமானே சத்தெனப்பட்டுக் காரணம் என்று பிரதிபாதிக்கப்பட்டார்; இது அசங்கதமே;

𑌤𑌤𑍍𑌤𑍇𑌜 𑌐𑌕𑍍𑌷𑌤 (சாங். ௬. உ. உ)

𑌤𑌾 𑌆𑌪 𑌐𑌕𑍍𑌷𑌨𑍍𑌤 (சாங். ௬. உ. ௩)

"அந்த அக்கினி சங்கற்பித்தது; அந்த அப்புக்கள் சங்கற்பித்தன" என்றற்றொடக்கத்தவற்றில் அசேதனத்தினும் சங்கற்பம் கவுணமாகக் கேட்கப்படுமாறு போல, பிரதானத்தினும் கவுணமாகச் செல்லுமாலோவெனின்;

(உத்தரம்) அன்று: ஆன்மசப்தம் சேதனத்தை உணர்த்துதலானும், "சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்று தொடங்கி,

𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 (சாங். ௬. அ. எ)

"அது ஆன்மா; அது நீயாகின்றனை" என்று உபசங்காரத்திற் கேட்கப்படுதலானும், தேயு முதலியவற்றினும் சங்கற்பம் கவுணமாகக் கேட்கப்

படாது, அவற்றுக்கு ஆன்மாவாயுள்ள சிவபெருமானுமே சேதனர் அந்தத் தேயுமுதலியவற்றுக்கு ஆன்மாவாக ஊடுருவித் தொடர்ந்திருத்தலானுமாம். (க)

(ஆக்ஷேபம்) சங்கற்பத்தைக் கவுணமாகக்கொண்டாலும், அசேதனமாகிய பிரதானத்தைச் சத்ரூபம் என்றும், ஜகத்துக்குக் காரணம் என்றும் கூறல் அடாது; சேதனத்தை உணர்த்தும் அது (சத்து) ஆன்மசப்தங்கொண்டு நிரூபிக்கப்பட்டது. ஆன்மசப்தம் அசேதனமாகிய பிரதானத்தை உணர்த்தவேண்டாம்; பின் சேதனனாகிய ஆன்மாவை ஆன்மசப்தத்தினால் முக்கியமாய்க் கூறலாமே. ஆகலின், சேதனனாகிய ஆன்மாவே ஜகத்காரணமும் சத்துமாம் எனின்.

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

தனிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத் (க. க. ஏ)

(ஏ) (சத்து ஆன்மா அன்று), *சத்தைப் பற்றினோற்கு மோக்ஷம் கூறப்படலான்.

சத்பதப்பொருளைப்பற்றிய தத்துவநிஷ்டனுக்கு மோக்ஷம் கூறப்படுகின்றது;

---

*(க. க. ஙு) ஆஞ் சூத்திரக் குறிப்பிலே சாந்தோக்கியத்துச் சந்தானது சிவன் திருவடி என்று பொருட்படுத்தப்பட்டமையின், சத்தாகிய இறைவர் திருவடியே பிறப்பறுப்பதும், தொண்டர் துயர்வெயிற்கு நிழலாவதும், முத்திக்கரை நண்ணுதற்கு வாய்ந்த நல்ல புணையாவதும், பிற பற்றுக்களையெல்லாம் அறுப்பதுமாயுள்ளதெனத் திராவிட சுருதிமுதலியன முன்வருமாறு உணர்த்துவனவாயின:—

நாலூர்மயானத் துநம்பான் றனடிநினைந்து
மாலுருஞ்சிந்தையர் பால்வந் தூராமறுபிறப்பே.
(திருநாலூர்த்திருமயானம், ஞான, ௪)

சுழலார் துயர்வெயிற்சுட்டிடும்போது அடித்தொண்டர் துன்னு
நிழலாவனவென்று நீங்காப்பிறவிநிலைகெடுத்துக்
கழலாவினைகள்கழற்றுவகாலவனங்கடந்த
வழலாரொளியனகாண்கவையாறனடித்தலமே.
(திருவையாறு, நாவு, கக)

செல்லடியேநெருக்கித்திறம்பாதுசேர்ந்தவர்க்கேசித்திமுத்திசெய்வானை
(திருவலிவலம், சுந், உ)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்யர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே.
(அடைக்கலப்பத்து, ௬)

முடிமன்னர் சீரின்மூவுலகமுதாள்வ
ரடிமன்னர் இன்பத் தன்வில்லை கேட்கின்
முடிமன்னராயின் தேவர்க்கீசன்
குடிமன்னராய்க்குற்ற மற்றுநின் றூரே.
(திருமந்திரம், திருவடிப்பேறு, ௮)

𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌅𑌥 𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑍇 ।
(சாந். ௬. ௧௪. ௨)

"அவன் (புண்ணியபாவத்தினின்று) விடுபடாதவரையின், அவனுக்கு அங்கே தாமசமே; பின்னர் அவன் (பரம) சம்பன்னனுவான்" என்றது சுருதி. ஆகலின், பிரதானமும் ஆன்மாவும் சத்பதத்தினுற் சுட்டப்படவில்லை. பிரதானகாரணவாதிகளுக்கும் அப்பிரதானநிஷ்டனுக்கு மோக்ஷம் உண்டெனல் உடன்பாடன்று; அந்தப் பிரதானந் தவிர்க்கப்படவேண்டிய தொன்ருகலின். ஆன்மநிஷ்டனுக்கு (மோக்ஷம்) இல்லை,

𑌶𑌿𑌵 𑌏𑌕𑍋 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌂𑌕𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 ।

அறிவொழுக்கமும் பிறிதுபடுபொய்யுங்
கடும்பிணித்தொகையு மிடும்பையீட்டமு
மினையனபலசரக் கேற்றிவினையெனுந்
தொன்மீகாம னுய்ப்பவந்நிலைக்
கருவெனுநெடுநக ரொருதுறைநீத்தத்துப்
புலனெனுங்கோண்மீ னலமந்துதொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந்தலைக்குந்
துயர்த்திரையுவட்டிற் பெயர்ப்பிடமயர்த்துக்
குடும்பமென்னு நெடுங்கல்வீழ்த்து
நிறையெனுங்கூம்பு முரிந்துகுறையா
வுணர்வெனுநெடும்பாய் கீறிப்புணரு
மாயப்பெயர்ப்படு காயச்சிறைக்கலங்
கலங்குபுகவிழா முன்னமலங்கன்
மதியுடனணிந்த பொதியவிழ்சடிலத்துப்
பையரவணிந்த தெய்வநாயக
தொல்லெயிலுடுத்த தில்லைகாவல
வம்பலர்தும்பை யம்பலவாணநின்
னருளெனு நலத்தார்பூட்டித்
திருவடிநெடுங்கரை சேர்த்துமாசெய்யே.
(கோயினுன்மணிமாலை, ௧௬)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.
(உத்தரவேதம். ௧௦)

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க வவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ் சீர்த்திச் சிவனர் செய்ய கழல்பற்றி
யெப்பற் றினையு மறவெறிவா ரெல்லை தெரிய வொண்ணுதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையா ரெம்பி ரானுர் விறன்மிண்டர்.
(விறன்மிண்டநாயனுர்புராணம், ௪)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் முதலிய வைதிக சைவசமயஸ்தாபனுசாரியர் முதலாயினுேர் (௧. ௧. ௭-ஆம் பிரமசூத்திரங் கூறியவாறு) சத்தாகிய இறைவன்றிருவடியையே மோக்ஷத்துக்கு வாய்க்த நன்னெறி எனப் பற்றினுர் என்று பெறப்படுகின்றது. இந்தச் சத்தாம் திருவடியையே தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளும் மற்றைய வைதிக சைவசாஸ்திரங்களும் யாண்டும் உயிராயும் பொருளாயங் கொண்டு புகழ்ந்து திறிப்பனவாயின.

"பிற அனைத்தையும் விடுத்து இன்பஞ் செய்வோராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என்னுஞ் சுருதிகொண்டு அது நிஷேதிக்கப் படலான். (எ)

பின்னருஞ் சூத்திரகாரர் பிரதானத்தை நிராகரிக்கும்பொருட்டு மிகு ஸ்பஷ்டமாகக் காரணங் கூறுவாராயினர்.

ஹெயத்வா வசநாச்ச (க. க. அ)

(அ) (சத்தானது பிரதானம் அன்று); சத்துத் தவிர்க் கப்படல்வேண்டும் என வசன மின்மையானும்.

பிரதானமே ஆண்டுக் கூறப்பட்டதாயின், சத்துக்கு ஹேயத்துவமே கூறப்பட்டிருக்கும்; தத்துவமசி என்றதினால் மோக்ஷகாரணமாகத் தியே யத்துவம் கூறப்படுகின்றது. ஆகலின், பிரதானம் அன்றெனல் யுக்தம். (அ)

மேலும் பிரதானபக்ஷத்தில் விரோதம் என்று சூத்திரகாரர் கூறுவா ராயினர்.

ப்ரதிஜ்ஞா விரோதாச்ச (க. க. கூ)

(கூ) பிரதிஞ்ஞைக்கு விரோதமுறலான்.

மேலுஞ் சத்பதப்பொருள் பிரதானம் அன்று; ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்படும் என்னும் பிரதிஞ்ஞைக்கு விரோதமுறலான். சத் பதப்பொருளாகிய தத்துவஞானத்தினால் இந்தச் சத்தின் காரியமாகிய சமஸ்தசேதன அசேதனப்பொருளின் ஞானமெய்துகின்றது.

யெநாஶ்ருதம் ஶ்ருதம் ஭வதி (சாந். சு. க. க)

"கேட்கப்படாதது எதினாற் கேட்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்தவற் றாற் பிரதிஞ்ஞை செய்யப்படுகின்றது. பிரதான காரணவாதத்தில் இது விரோதம்; சேதனத்துக்குப் பிரதானம் காரணமாதல் ஏலாமையின். (கூ)

(ஆக்ஷேபம்) பிரதானம் காரணமாக அறியப்படுங்கால், சடமாயும் விகாரமுறுதற்கு ஸ்தானமாயுமுள்ள இதன் காரியமெல்லாம் அறியப்படு கின்றன; மண்ணானது அறியப்படலான் காரியமாகிய கடமுதலியன அறியப்படுவது போல்.

ஆகலின், இங்கே யாது விரோதமென ஆக்ஷேபித்து, சூத்திரகாரர் உத்தரமிறுப்பாராயினர்.

ஸ்வாப்யயாச்ச (க. க. கo)

(கo) (ஆன்மா சத்திற்போய்) ஒடுங்குதலான்.

மேலும், பிரதானஞ் சத்பதப்பொருள் அன்று;

ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி ஸ்வமபீதோ பவதி தஸ்மாதேநம் ஸ்வபிதீத்யாசக்ஷதே (சாந். சு. அ. க)

“சொப்பனத்தியல்பை என்னிடத்து அறிந்துகொள்; சௌமிய! ஓர் புருஷன் நித்திரை செய்யுங்கால் அவன் சத்தோடியைந்தவனாகின்றான்; அவன் தன் (பரம) ஆன்மாவை அடைகின்றான்; ஆகலின் அவன் நித்திரைசெய்கின்றான் என்பர்” எனச் சேதனனாகிய ஆன்மா சத்தோடியைந்து ஒடுங்குகின்றனன் என்று சுருதி யுண்மையின். ஒடுங்குவது என்பதின் பொருள் இலயம். அசேதனமாகிய பிரதானத்திற் சேதனன் இலயமுறுதல் பொருத்தமின்று. ஆகலின், பிரதானம் சத்தன்று. (க0)

சத்பதத்தினாற் சிவபெருமானே பிரதிபாதிக்கப்படுகின்றனர், பிரதானம் அன்றெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கதி ஸாமாந்யாத் (க. க. கக)

(கக) கதி சமானமாதலின்.

இவ்வுபநிடதத்திற் சத்பதமானது சிவபெருமானுக்குச் செல்லுமாறு போல,

புருஷோ வை ருத்ர: *ஸந்மஹோ நமோ நம: |

(தைத்திரீய ஆரணியகம். க0. உச. சஉ.)

“புருஷராவார் மகானாகிய சத்தெனப்படும் உருத்திரரே; நமஸ்காரம்! நமஸ்காரம்!” எனப் பிற சுருதியினும் (சத்தென்பது சிவபெருமானுக்குச்) சமமாய்ச் (செல்கின்றது). ஆகலின், சத்தென்னும் பதத்தினாற் சுட்டப்பட்டவர் சிவபெருமான் என்பது வெளிப்படை. (கக)

இந்தச் (சாந்தோக்கிய) உபநிடதத்திலே வெளிப்படையாகச் சத்பத வாச்சியமாகிய (பரம) ஆன்மாவிலிருந்து எல்லாம் உற்பத்தியாகின்றன வெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ச்ருதத்வாச்ச (க. க. கஉ)

(கஉ) சுருதியிற் கூறப்படலானும்.

ஈண்டும்,

ஆத்மத: ப்ராண ஆத்மத ஆகாஶ: (சாந். எ. உசு. க)

“(பரம) ஆன்மாவிலிருந்து பிராணன்; (பரம) ஆன்மாவிலிருந்து ஆகாயம்” என்று தொடங்கி,

* ச0க-ஆம் இலக்கத்திற் பார்க்க.

(ஆத்மத ஏவேதம் ஸர்வம் (சாந். எ. உசு. க)

*"(பரம) ஆன்மாவிலிருந்தே இஃதெல்லாம் (உண்டாகின்றன)" என்று கேட்கப்படுகின்றது. ஆகலின், ஜகத்காரணமாய சத்பதப்பொருளாயுள்ளது பிரமமே, பிரதானம் அன்றெனச் சித்தித்தது. (கஉ)

(ரு) ஆனந்தமயாதிகரணம்.

ஈண்டுச் சிவபெருமானுக்கு இலக்ஷணமாகக் கூறப்பட்டுச் சாஸ்திரமொன்றினால் அறியற்பாலதாகிய ஜகத்காரணம் (சாங்கிய) தாந்திரிகர் பிரதானத்தினுஞ் செல்லுமே என்னும் அதிவியாப்தியை ஆசங்கித்து, சேதனத்துவ முதலியன காரணமாதல்பற்றிப் பிரதானத்தில் அதிவியாப்தியாய்ச் செல்லாதவாறு நிரூபிக்கப்பட்டது. அசேதனமாகிய பிரதானத்திற் போலச் சேதனமாகிய ஆன்மாவினும் அதிவியாப்தியில்லையென்று கூறும் பொருட்டு, மற்றோர் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஆனந்தமயோऽப்யாஸாத் (க. க. கந)

(கந) (சிவபெருமான்) †ஆனந்தமயர்; அப்பியாசத்தினால்.

---

* சத்பதவாச்சியராய்ப் பரமான்மாவாகிய சிவபெருமான் சிருட்டியாதி கிருத்தியங்களுக்குக் காரணர் என்பது,

படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூ[illegible]டையானூர்
குடைப்பாளையின்கமுகின்னெ[illegible]மலர்நாற்றம்
விடைத்தேவருதென்றன்மிகுவே[illegible]ரமதுவே.
(திருவேணுபுரம், ஞாந, உ)

என்னுந் திராவிடசுருதியினாலும் கூறப்படுகின்றது.

† ஆனந்தமிகுதியுடையார் சிவபெருமான் என்று தைத்திரீயத்திற் (உ. க) கூறப்பட்டவாறு, திராவிடசுருதியில்

"ஈறிலாப்பதங்களியாவையுங் கடந்த வின்பமே யென்னுடையன்பே"
(கோயிற்றிருப்பதிகம், க)

எனவும்,

"கருணைக்கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"
(திருக்கோத்தும்பீ, கூ)

எனவும்,

"போற்றிநின்கருணைவெள்ளப்புதுமதுப்புவனநீர்தீ"
(திருச்சதகம், சுந)

எனவும் சிவபெருமான் போற்றப்பட்டார்.

மாயாவாத சர்வசாரோபநிடதத்தில் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களுங் கூறி, அவை தனித்தனி இன்னது இன்னதென இலக்ஷணமுங் கூறி, இவ்வைங்கோசங்களுக்குமேல் ஆன்மா (நிர்க்குணப்பிரமம்) உண்டென்று உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஐங்கோச அதீதத்திற் கூறப்பட்ட ஆன்மா "வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப் படவிளைவிடை" யினும் இந்தப் பரம உபக்கிரமணிகையிலும் நிரூபிக்கப்பட்டவாறு மூலப்பிரகிருதிப்பாற்பட்ட [illegible] பரப்பிரகிருதிப்பாற்பட்ட பரப்பிரமமென்னும் என்னும், இந்த [illegible]துள்ள சிவமாானே தைத்திரீயத்தி

"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" (தைத்-உ-க) "(பரம) ஆத்மாவிலிருந்தே நிச்சயமாக ஆகாயம் பிறந்தது" என்று தொடங்கி, "தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய:" (தைத்-உ-ரு) "விஞ்ஞானமயத்துக்கு வேறுபட்ட அந்தராத்மாவானவர் ஆனந்தமயர்" என்று கூறும் பிரும்மானந்தவல்லியில் அன்னமயாதி கோசத்துள் மறைந்த ஆனந்தமயராகிய பரமாத்மாவானவர் ஆகாயமுதலிய சகலபூதங்களுக்கும் காரணர் என்று கூறப்படுகின்றது. இங்கு ஆனந்தமய ஆத்மா என்பது ஜீவாத்மாவா? பரமாத்மாவா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷியின் அபிப்பிராயம்). ஜீவாத்மா என்பது பூர்வபக்ஷம்; ஜீவாத்மாவுக்குரிய குணங்களனைத்தும் இங்குக் காணப்படுதலின். எங்ஙனமெனின் - "ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோऽந்நம், அந்நாத் புருஷ:" (தைத்-உ-க):- "பிருதிவியிலிருந்து ஓஷதிகளும் ஓஷதியிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து புருஷனும்" என்று தொடக்கத்தவற்றால், ஐந்து அவயவமுடைய சரீரமுதலிய நிரூபிக்கப்படுகின்றன. இங்கு அன்னமயம் என்றது சரீரம்; பிராணமயம் என்றது சரீரத்தினுள்ளிருக்கும் பிராணன்; மனோமயம் என்றது அதனுள்ளிருக்கும் மனம்; விஞ்ஞானமயம் என்றது அதனுள் இருக்கும் புத்தி; ஆனந்தமயம் என்றது இவையனைத்திற்கும் ஆதாரமாகிய ஜீவாத்மாவே. அன்னாதிகளுக்குத் தலைமுதலிய கற்பனை பாவனையின் பொருட்டே. அன்னாதிகளைப் பிரமமாக உபாசனை செய்தலின், அவ்வவற்றுக்குரிய பயனைக் கூறியுள்ளது. சம்சாரதசையிலிருந்து விடுபடும் ஜீவாத்மா, எங்ஙனம் ஆனந்தமயம் என்று கூறப்படும் எனின்

னும் (உ-அ), வேதாந்தசூத்திரத்திலும் (க-க-கரு), சைவபாஷ்யத்திலும் போற்றப்பட்ட அவைகளுக்கெல்லாம் ஆனந்தமுடையவனென்று அறியற்பாற்று. ஆகலின், ஐந்து கோசங்கள், மாயாவாதசைவசாரம், சித்தாந்த தைத்திரீயம் என்னும் இவற்றிலுள்ள உபநிடதங்களிலும் கூறப்பட்டுள்ளதும், அவைகளுக்கு வேறுபாடில்லையென்றும், வ்யாசர் (க-க-கசு) ல் கூறியவாறு, அன்னமயம், பிராணமயம், மனோமயம், என்பவற்றின் வேறாகக் கூறப்பட்ட விஞ்ஞானமயன் - (அறிவுமிக்குடைய) ஜீவாத்மா என்றும், "ஆனந்தமயர்" - (ஆனந்தமிக்குடைய) பரமாத்மா என்றும் பெறப்படுவார் என்று ஏகாத்மவாதியார் சர்வஞானோபநிஷத்தின் பொருளையும் தைத்திரீயோபநிஷத்தின் பொருளையும் இணக்கித் தங்கள் அனைத்தும் இவையே என்று ஆனந்தம் பெற்று பின்னும் ஜீவாத்மாவில் சேர்க்கப்பட்டதை மறுத்ததும். அஃதன்றி இவைப்பிரமம் ஆனந்தமயனாக வியாசர் சூத்திரஞ்செய்ய, ஏகாத்மவாதாசாரியர் அதற்கு ஆனந்தமயமில்லை என்று சூத்திரத்துக்கு வேறுபொருள் கூறிச் சூத்திரம் நிரூபணமும் தமது பாஷ்ய மொழிபெயர்ப்பாகக் கூறப்படப் போகச்செய்தார்.

(பூருவபக்ஷியின் உத்தரம்) அன்று; ஈண்டு ஆனந்தசப்தம் பரப்பிரம சிவபெருமான் மேற்று;

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ரு. சு. க)

"ஆனந்த(குண)முடையது பிரம்" என்று கூறப்படலான். மயசப்தம் விகாரப்பொருளை உணர்த்துதலின், சிவபெருமானுடைய காரியமாகிய சீவனே ஆனந்தமயம் என்று கூறப்படுகின்றது. நித்தியசிவத்துவத்தையுடைய சிவபெருமானை ஆனந்தமயமா அங்கீகரிப்பின்,

அந்நமய ப்ராணமய மநோமய விஜ்ஞாநமய ஆநந்தமய மே ஶுத்யந்தாம்

(தைத். ஆரணியகம். கO. சுசு. அச)

(பூருவபக்ஷியின் ஆக்ஷேபம்) "எனது அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் சுத்தியாகுக" என்னுஞ் சுத்திப் பிரார்த்தனை வியர்த்த[மா]கும். ஆகலின், இவ்வானந்தமய ஆன்மா சீவான்மாவே; சிவபெருமா[ன்] அன்றெனின்,

ஆனந்தமயமாகிய ஆன்மா சிவபெருமானே;

...டையதாக அப்பிய சத்தினால் (மீட்...

...ப்பியசிக்கப்படுகின்றது?

... (தைத். உ. அ)

...தொடங்கி, விசேடமனிதருடைய

...ம் அவ்வவ்வானந்தத்துக்கு மேன்

...ஆநந்த: (தைத. உ. அ)

...திறுதியாகப் பிரமானந்தம் நிரதி

...ப்பியசிக்கப்படுகின்றது. இந்த நிரதி

...ம்சாரக்கெய்தாது.

...சுத்தராகிய சிவபெருமான் ஆனந்த

...ரப் பிரார்த்தித்தல் என்னையெனின்?

...ன் உத்தரம்) உற்கிருஷ்ட பிரகாசமுடைய சந்திரனை மறை

...யவிட்டது ...தாய்த் தாய் விளங்குதல் போல, நித்திய

...வரை... ...து மறைக்கும் திரோதானமலம்

...தியே... ...லின், ஆ... ...மயர் சிவபெருமானே. (கரு)

...யம்) ... ... எ... கூறப்படுகின்றது. அதின்

...ந்தமயம் ... ... என்... பிரசுரயத்துக்கு விகாரார்த்த

[illegible] உத்தரம்) அன்று, [illegible] ஆனந்தமயம் [illegible] பிரம்ம சிவபெருமான் [illegible]; "ஆநந்தோ [illegible] (தைத்- [illegible]). "ஆனந்த [illegible] பிரமம்" என்று [illegible] மயட் [illegible] சிவபெருமானே ஆனந்தமயம் என்று [illegible]

[illegible] (தைத்- ஆரணியகம் - [illegible]) (பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம்). "[illegible] அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞாநமயம், ஆனந்தமயம் [illegible]" என்றும் [illegible] ஆகலின், [illegible] சிவபெருமான் [illegible] "ஆனந்தமய" [illegible] சிவபெருமானே; [illegible]

[illegible] (தைத்- உ- அ). [illegible] ஆனந்த [illegible] (தைத்- உ- அ). [illegible]

[illegible] சிவபெருமான் [illegible] (சித்தாந்தியின் உத்தரம்) [illegible] ஆகலின் ஆனந்தமயர் சிவபெருமானே. கங.

[illegible] ஆனந்தமே பிரமம் என்று [illegible] ஆனந்தமயம். "மய" என்றும் [illegible]

முண்மையின். சிவபெருமான் ஆனந்தமயராயின், பிரமத்திருந்து அவ்விசுவரர் வேறாவர் எனக் கொள்ளப்படுவர். அங்ஙனஞ் சிவபெருமான் விகாரரூபராயின், அவரும் அநித்தியராவர் என்னுஞ் ஆசங்கைக்கு,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

𑌵𑌿𑌕𑌾𑌰𑌶𑌬𑌦𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌾𑌚𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 (க. க. கச)

(கச) விகாரசப்தமுண்மையின் ஆனந்தமயம் பிரமம் அன்றாம் எனின், அன்று; அது *மிகுதிப்பொருட்டாகலின்.

(ஆக்ஷேபம்) அன்னமயமுதலியன அன்னமுதலியவற்றின் விகாரமாதல் போல, ஆனந்தமயமும் ஆனந்தத்தின் விகாரமாம்; விகாரமாயுள்ள கடமுதலியன மண்மயமாதல் போல. ஆகலின், சிவபெருமானுக்கு விகாரமின்மையின் ஆனந்தமயம் ஆன்மாவேயாம் எனின்,

(உத்தரம்) அன்று; ஈண்டு "மய" சப்தம் மிகுதிப்பொருண் மேற்றாமாகலின். அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்பவற்றிற்றான் மய சப்தம் விகாரப்பொருளின்மேற்று; விஞ்ஞானமயம் என்றது விஞ்ஞானமிகுதியையுடைய ஆன்மாவின் மேற்று; ஆனந்தமயம் என்றது ஆனந்தமிகுதியையுடைய சிவபெருமான் மேற்று. (கச)

(ஆக்ஷேபம்) எப்பிரகாரத்தினாலேனும் மயசப்தம் விகாரப்பிரகரணத்திற் படிக்கப்படுதலின், விகாரார்த்தம் கோடலே உசிதம் என ஆசங்கிப்ப,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚 (க. க. கரு)

(கரு) (அவர்) அதற்கு ஏதுவாகக் கூறப்படலானும்.

𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿 (தைத். உ. எ)

"இவர் நிச்சயமாக †ஆனந்தத்தை விளைவிக்கின்றனர்" என உயிர்களையுற்று ஆனந்தத்துக்குக் காரணராதலின் ஆனந்தமயர் என்று கூறப்படுகின்றார். தாம் மிக ஆனந்தமுடைமையினன்றோ, அவர் பிறர்க்கு ஆனந்தத்தை விளைக்கின்றனர். ஆகலின், சிவபெருமானே ஆனந்தமயர். (கரு)

---

* மய சப்தம் (ஆனந்த) மிகுதிப்பொருளிலே சென்றதென்று வியாசர் சூத்திரம் நேரே கூறியவிடத்தும், அதனைப் பொருட்படுத்தாது ஏகான்மவாதியார் அன்னமயாதிகளிற் போல் (ஆனந்த) மயமும் விகாரப்பொருளிற் சென்றதென்றுணராச் சூத்திரார்த்தம் வழுவுறச்செய்தனர்.

† தாம் ஆனந்தக்கடலாதலின் முத்தர்க்கு ஆனந்தம் விளைக்கின்றார் என்பது,

கோல்மாகரியுரித்தவ்வரவொடுமேனக்கொம்பினவாமை
சால்பூண்டுத்ணமதிய தருடியசங்கரனார்தம்மைய

(ஆக்ஷேபம்) ஆனந்தமிகுதியுடைய சிவபெருமான் ஆனந்தமயர் எனக் கூறப்படினும், இவர் பிரமத்தினின்று வேறானவர் எனப் பெறப்படுகின்றது;

ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா (தைத். உ. ங)

"ஆதாரமாகிய பிரமம் புச்சம்" என்னுஞ் சுருதியினாற் சிவபெருமான் தமக்குப் பிரமத்தை ஆதாரமாகக் கொண்டனர் எனப் பெறப்படலான். சிவபெருமானினின்று பிரமத்தை வேறாகக்கொள்ளின், சுவாதந்திரியமின்மையான் பிரமத்துக்கு ஜகத்காரணமாதன்முதலியன அசம்பவமாகும். ஆகலின், ஈண்டு ஆன்மா என்று கோடலே சமீசீனமெனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே (க. க. கரு)

(கரு) மந்திரத்திற் குறிக்கப்பட்ட (பிரமம் ஆனந்தமயமாகக்) கூறப்படலான்.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினைநில்லாவே.
(திருச்சிரபுரம், ஞான, உ)

எரிநிறைந்தனையசெல்வன்கண்டாயின்னடியார்க்கின்பம்விளைப்பான்கண்டாய்
(திருமறைக்காடு, திருத்தாண்டகம், நாவு, ங)

தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கமுதரும்பி
யின்னல்களைவனவின்னம்பரான்றனிணையடியே.
(திருவின்னம்பர், நாவு, க)

கல்லைப்பிசைந்துகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனை.
(திருவம்மானை, ங)

அண்டமுதலாயினனர்தமிலாவானந்தம்
பண்டைப்பரிசேபழவடியார்க்கீந்தருளு
மண்டம்வியப்புறுமாபாடுதுங்காணம்மானாய்.
(திருவம்மானை, க)

தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்தேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ.
(திருச்சாழல், ௧௰)

பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற வென்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றும் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாள் [illegible]
([illegible])

என்னுந் திராவிட சுருதிகளானும் [illegible]

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என்னும் மந்திரத்திற் கூறப்பட்ட அந்தப் பிரமமே,

அந்யோ(அ)ந்தர ஆத்மா(ஆ)நந்தமய: (தைத். உ. ரு)

"மற்றோர் அந்தரான்மாவானவர் ஆனந்தமயர்" எனச் சுருதியில் ஆனந்தம் மிகுத்திருத்தலின் ஆனந்தமயம் என்று கூறப்படுகின்றது.

ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா (தைத். உ. ரு)

"ஆதாரமாகிய பிரமம் புச்சம்" என்னுஞ் சுருதியிலுள்ள பிரமம் என்னும் மொழி பிரணவத்தின் மேற்று. அப்பிரணவம் சிவபிரானது வாசகமாதலின், (அது) அவர்க்கு ஆதாரம்.* (கசு)

(எ) இதரானுபபத்தியதிகரணம்.

பிரமமாகிய சிவபெருமானுக்குச் சமந்வயசித்தியினால் வாய்ந்த ஜகத்காரணத்துவ முதலிய இலக்ஷணம் பிரதானம் ஆன்மா என்பவைகளுக்கு அதிவியாப்தியினாற் செல்லாதென்று தாபிக்கப்பட்டது. இதன்பின் சீவசமஷ்டிரூபராகிய இரண்ணியகருப்பருக்கு ஜகத்காரணத்துவ முதலிய கேட்கப்படுகின்றதே என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

நேதரோ(அ)நுபபத்தே: (க. க. கஎ)

(கஎ) பிறரும் அன்று; பொருத்தமின்மையின்.

யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம் | யதோஷதீபி: புருஷாந் பசூம்ஶ்ச விவேஶ பூதாநி சராசராணி (தைத். ஆரணி. க0. க, க)

"பிரபஞ்சோற்பத்தி எங்கிருந்து உளதாயிற்றோ, அதுவே நீரினாற் பூமியிலே (உயிர்களுக்கு) சரீரத்தைத் தோற்றுவித்தது; அதுவே ஓஷதிகள் வாயிலாகப் புருஷர்களையும், மிருகங்களையும் சராசரப்பொருள்கள் அனைத்தையும் பிரவேசித்தது" என்னும் மகோபநிடதசுருதியே விஷயம்.

ஜகம் அனைத்தையுந் தோற்றுவித்தற்குக் காரணராகக் கேட்கப்படும் புருஷர் சிவபெருமானோ? பிறரா? என்பது சந்தேகம்.

---

* இதற்குப் பின்னர் [illegible] வடமொழிச்சிரியர்கள் [illegible] ளுக்கு முற்றும் [illegible] மொழிபெயர்க்கப்படுகின்றது [illegible] கப்பட்டன. [illegible]

(பூருவபக்ஷம்) இரணியகருப்பர் என்பது பூருவபக்ஷம். என்னை யெனின்? அவருக்கு (ஈண்டுக் கூறப்படும்) குறிகளுண்மையின்.

ஏகார்ணவே த்ரைலோக்யே ப்ரஹ்மா நாராயணாத்மக:|
ஸுஷ்வாப ஸர்பஸயனே த்ரைலோக்யம் க்ரஸ்ய ஸம்ஸ்தித:||

"மூவுலகமும் ஒரே சமுத்திரமாய்விட, பிரமாவானவர் நாராயணருபராய் மூவுலகங்களையும் உண்டு சர்ப்பசயனத்திற் சயனிக்கின்றனர்" என்னும் புராண வசனத்தினாற் பிரமாவுக்குச் சமுத்திர சயனம் பெறப்படுகின்றது.

யஸ்மின் ஸமுத்ரே கவயோ வயந்தி (தைத். ஆரணி. க௦. க. க)

"எவரைப் பெரியோர் சமுத்திரத்தில் (உளராகத்) தியானிக்கின்றனரோ" என்னுஞ் சுருதியினால், அவர் இலக்கணம் அறியப்படுகின்றது.

ப்ரஜாபதிஸ்சரதி கர்பே அந்த: (தைத். ஆரணி. க௦. க. க)

"பிரஜாபதி உள்ளே உள்ள கர்ப்பத்திற் சரிக்கின்றனர்" என (உபநிடத அநுவாகத்தின்) உபக்கிரமத்திலே, அவர் அனைத்தையும் பிரவேசித்தார் எனக் கூறப்படுகின்றது,

ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்|
திவஞ்ச ப்ருதிவீஞ்ச (தைத். ஆரணி. க௦. க. கச).

"இரண்ணியகருப்பர் முன்போலச் சூரியனையும் சந்திரனையும் ஆகாயத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்" என உபசங்காரத்திற் கூறிய சுருதியும் அவரைக் காரணர் என்று கூறுகின்றது. கூறவே, உபக்கிரமோபசங்காரங் கொண்டு முடித்த இரண்ணியகருப்பருக்கே (அவ்வுபக்கிரமோபசங்காரத்துக்கு) இடையே போந்த சுருதிகள் கூறும் குணங்களுஞ் செல்லாநின்றன. மேலும், இரண்ணியகருப்பரைப் பிரதிபாதிக்கும் பிற இடங்களினும் உபசங்காரஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

அத்ப்யஸ்ஸம்பூதோ ஹிரண்யகர்ப இத்யஷ்டௌ|
(தைத். ஆரணி. க௦. க. ௩)

"நீரிலிருந்து இரண்ணியகருப்பர் பிறந்தார் என்பதிறுதியாயுள்ள எட்டு மந்திரங்களினும்" பிரஜாபதியே பிரதிபாதிக்கற்பாலர்;

ப்ரஜாபதிஸ்சரதி கர்பே அந்தரஜாயமானோ பஹுதா விஜாயதே|
(தைத். ஆரணி. ௩. கங. ௪௦)

"உள்ளேயுள்ள கர்ப்பத்திலே பிரஜாபதி சரிக்கின்றனர்; பிறவாதவர் அநேகருபமாய்ப் பிறந்திருக்கின்றார்" என்று காணப்படலானும், இ-

ஹிரண்யகர்ப: ஸமவர்த்ததாக்ரே| [illegible]
(தைத். சங். ௪. க. அ. ௩)

"இரண்ணியகருப்பர் முதற்கண் இருந்தார்" என்னும் இடத்திலும்,

ப்ரஜாபதி ர்வை ஹிரண்யகர்ப:।

(தைத். சங். ரு. ரு. க. உ)

"பிரஜாபதியே இரண்ணியகருப்பர்" எனக் கேட்கப்படலானுமாம். ஆகலின், இரண்ணியகருப்பரே பிரபஞ்சோற்பத்திக்குக் காரண முதலியனவாகப் பிரதிபாதிக்கப்படுகின்றனர் எனின்,

(உத்தரம்) கூறுதும். ஈண்டுச் சிவபெருமானுக்கு வேருக மற்ரோர் இரண்ணியகருப்பர் கூறப்பட்டனரல்லர்; பிரபஞ்சகாரணமாதன் முதலிய சிவபெருமானுர் குணங்கள் இரண்ணியகருப்பர்க்குச் செல்லாமையின்.

யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதி: (தைத். ஆரணி. ௧0. க. க)

"எதினின்று பிரபஞ்சோற்பத்தி உளதாயிற்று" என்று தொடங்கி, பிரபஞ்சகாரணராகிய சிவபெருமான்

மஹதோ மஹீயாந் அணோரணீயாந் ஹி ஸர்வதோ யஸ்ஸஹதோ ஹேதோருணநீய।
யஸ்மிந்நிதம் ஸம் ச வி சைதி ஸர்வம் ஸ புராணம் தமஸ: பரஸ்தாத்॥

(தைத். ஆரணி. ௧0. க. க)

"மகத்துக்கு மகத்தாயும், பரத்துக்குப் பரமாயும், அணுவுக் கணுவாயும், ஒன்ருயும், வெளிப்படாததாயும், அனந்தரூபமாயும், விசுவமாயும், புராணமாயும், தமசுக்கு மேலாயுமுள்ளது" என்றற்ருெடக்கத்தனவாகப் போந்தவற்றில், அவர் சர்வோற்கிருஷ்டராகவும், பிரகிருதிக்கு மேலானவராகவும் அறியப்படுகின்றனர். ஆகலின், இந்த இலக்ஷணம் அண்டத்துட்பட்டிருக்கும் இரண்ணியகருப்பருக்கு (பிரமாவுக்கு)ச் செல்லாது. மேலும்,

ய ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி।

(தைத். ஆரணி. ௧0. க. உ)

"எவர்கள் இவரை அறிகின்ருர்களோ, அவர்கள் *அமிர்தராகின்ருர்கள்" என்னுஞ் சுருதி அவரது ஞானத்தினல் எய்தும் சிவத்துவம் முத்தியாம் என்று கூறுகின்றது. இது இரண்ணியகருப்பர்க்கெய்தாது; சிவபெருமானுக்கு முத்திஹேதுத்துவமே அசாதாரணலிங்கம்;

யதா சர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா:।
ததா சிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி॥

(சுவே. ௬. ௨0)

"எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உடுக்கின்ருர்களோ, அப்போது தான் சிவபெருமானை அறியாது (அவர்) துக்கத்துக்கு முடிவு எய்

* உபநிஷத் பத்திரிகை ௨0-ஆம் இலக்கம் பார்க்க.

தும்" என்னும் சுருதி கேட்கப்படலான். உபக்கிரமோபசங்காரத்தினுல் (இரண்ணியகருப்பர்) சித்தித்தார் என்று கூறுவதிற் பயனில்லை. அவர்க்குப் பொருந்துமாறின்மையின், பிரஜாபதி தாதா என்னும் மொழிகள் இரண்ணியகருப்பரை விடுத்து, பிரஜைகளாகிய பசுக்களுக்குப் பதியும், உலகத்தைத் தாங்குபவருமாகிய சிவபெருமானையே பிரதிபாதிக்கின்றன. (தைத். சங். ச. க. அ. ச; தைத். ஆரணி. ரு. கரு. சo) என்னும் ஈரிடத்தும் சிவபெருமானே பிரதிபாதிக்கற்பாலர்; எங்ஙனமெனின்,

ய ஈஶே அஸ்ய த்விபதஶ்சதுஷ்பத꞉ (தைத். சங்கி. ச. க. அ. ச)

"இருகாலும் நாற்காலுமாயுள்ளவற்றை எவர் ஆளுகின்றாரோ" எனவும்,

ஆதித்யவர்ணம் தமஸ꞉ பரஸ்தாத்।
(தைத். ஆரணி. ரு. கரு. சo)

"தமசுக்குமேலே ஆதித்தியவர்ணராயுள்ளார்" எனவும் சுருதிகள் அவருக்கு (முறையே) விசுவேசுவரத்துவத்தையும் விசுவாதீதத்தையும் இலிங்கமாகக் கூறலான். ஜகத்காரணமுதலியவற்றாற் பிரஜாபதிசப்தவாச்சியர் சிவபெருமானன்றி இரண்ணியகருப்பர் அன்று. (கஎ)

சிவபெருமானுக்கும் இரண்ணியகருப்பர்க்கும் பேதமின்மையின், பிரபஞ்சகாரணம் இரண்ணியகருப்பர்க்கு ஆகலாம் என, அதனை ஆசங்கித்து

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

பேதவ்யபதேசாச்ச (க. க. கஅ)

(கஅ) பேதங் கூறப்படலானும்.

யோ தேவாநாம் ப்ரதமம் புரஸ்தாத்விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி꞉ ஹிரண்யகர்பம் பஶ்யத ஜாயமானம்।
(தைத். ஆரணி. கo. கஉ. உஅ)

"விசுவாதீதரும் மகர்ஷியுமாகிய உருத்திரர் தேவர்களுள்ளே முற்பட்டவராகிய இரண்ணியகருப்பர் முதற்கட் பிறக்கக் கண்டனர்" என்னும் இம்மகோபநிடதத்திலே, சிவபெருமானுக்கும் இரண்ணியகருப்பர்க்கும் (முறையே) காரணகாரியத்தினுற் பேதமாம் முறைமை கூறப்படுகின்றது. ஆகலின், இரண்ணியகருப்பர்முதலிய பிரபஞ்சம் அனைத்துக்கும் காரணர் சிவபெருமான் என்று சித்தமாயிற்று. (கஅ)

பின்னரும் சூத்திரகாரர் ஆசங்கித்துக் கூறுகின்றனர்.

ஊரோது நாநுரோநாவெக்ஷா (க. க. கக)

(கக) சங்கற்பமுண்மையாலும் அனுமானாபேக்ஷையில்லை.

ஸோகாமயத ப்ரஜாஸ்ருஜேய।

(தைத். சம். ரு. க. க. க)

"யான் பிரஜைகளைச் சிருஷ்டிசெய்வேனாக எனப் பிரஜாபதி காமுற்றனர்" என யாண்டும் சுருதிகளிலே உலகசிருஷ்டிவிஷயத்தில் இரண்ணியகருப்பருடைய சங்கற்பம் கூறப்படுகின்றது. அங்ஙனமாயினும், அவர் உலகத்துக்குக் காரணமாதலையுற்று அனுமானாபேக்ஷை யுக்தியபேக்ஷை இல்லை; அவரது காமம் (சங்கற்பம்) அவாந்தர சிருட்டி விஷயம் பற்றினமையின். வேதாந்த சூத்திரத்து (உ. ச. கஎ) லே இந்த இரண்ணியகருப்பரது அவாந்தரசிருஷ்டியும் சிவபெருமானுக்கே உரித்தென்று (சூத்திரகாரர்) கூறுவர். (கக)

அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபெ வ்யாகரவாணி

(சாந். சு. ரு. உ)

"இந்தச் சீவனாகிய ஆன்மாவோடு பிரவேசித்து நாமரூபத்தைப் பேதமுறுத்துவேன்" என இரண்ணியகருப்பரூபமாகப் பிரபஞ்சத்துள்ளே பிரவேசித்த சிவபெருமானே நாமரூபங்களுக்குக் கர்த்தாவாம் எனக் கேட்கப்படுகின்றமையின், இவ்விருவர்க்கும் அபேதமே அங்கிகரிக்கற்பாற்றெனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் ஶாஸ்தி (க. க. உ0)

(உ0) ஈண்டு இவருக்கும் அவர் சம்பந்தம் கூறுகின்றது.

ப்ரஹ்மாதிபதி ப்ரஹ்மணோதிபதி: ।

(தைத். ஆரணி. க0. உக. ரு௬)

"பிரமாவுக்கு அதிபதியாகிய பிரமமே அதிபதி" என்னும் இவ்வுபநிடததந்திரத்து மந்திரபாகம் சிவபெருமானுக்கு இந்த இரண்ணியகருப்பர் அதிகாரச் சேஷத்துவசம்பந்தமுடையரென்று கூறுகின்றது. ஆகலின், சிவபெருமானே உலககாரணர், இவர்க்கு இரண்ணியகருப்பர் சேஷபூதர் என்று சித்தித்தது. (உ0)

(அ) அந்தராதிகரணம்.

மேலை அதிகரணநியாயங்களினாற் சர்வஞ்ஞரும், நித்தியதிருப்தரும், அநாதிபோதமுடையரும், சுவதந்திரரும், அலுப்தசத்தியினரும், அனந்தசத்தியினரும், சர்வப்பிரபஞ்சோபாதானகாரணரும், சமஸ்த உபநிடத தந்தி

ரங்களினுற் சமன்வயமாகப் பிரதிபாதிக்கப்படுபவரும், சுவப்பிரகாசமாகிய சமஸ்தப் பிரபஞ்ச விசிட்டாத்துவிதிய சுபாவமுடையரும், சச்சிதாநந்த சொரூபரும், சம்சாரமாகிய பாசத்தைச் சேதிக்கும் காரணரும், சித்து அசித்து என்னும் இரண்டுக்கும் வேறானவருமாகிய சிவபெருமானே பரப்பிரமம் என்று சித்தித்தது. சாதகர்களுடைய சம்சாரத்துக்கு ஔஷதமாயும், மனதைச் சமாதானஞ் செய்ய யோக்கியமுடையதாயுமுள்ள அவருடைய வடிவமொன்றை உணர்த்துமாறெழுந்தது இவ்வதிகரணம்.

𑌅𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 (௧. ௧. ௨௧)

(௨௧) உள்ளேயுள்ளார் (சிவபெருமான்); அவர் குணங்கள் கூறப்படலான்.

𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌰𑍍𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶 𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 (சாந். ௧. ௬. ௬, ௭)

"பொற்முடியோடும், பொற்கேசத்தோடும், *நகந் தொடுத்து முழுமையும்

---

*சாந்தோக்கியத்திலே (௧. ௬. ௬) கேசாதி பாதாந்தம் பொன்வண்ணராகக் கூறப்பட்டவர் விஷ்ணுவா? சிவபெருமானா? எனின்,

கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன்.
(முதலாயிரம், நாச்சியார்திருமொழி. ௧. ௬)

கடல்வண்ணன்கண்ணன்
(திருவாய்மொழி, ௩. ௬. ௧0)

என்றற்றொடக்கத்தனவாக நாலாயிரப்பிரபந்தத்தினும், அங்ஙனம்

பெருங்கடல்வண்ணனும்பிரமனுமோரா
வருமையரடிநிழல்பரவிநின்றேத்து மன்புடையடியவர்க்கணியருமாவர்.
(திருவிடைச்சுரம், ஞான, ௧0)

கரியவனான்முகன்காணவொண்ணுத்
தெரியவன்வளநகர்திருவல்லமே.
(திருவல்லம், ஞான, ௧)

என்றற்றொடக்கத்தனவாகத் திராவிட சுருதிகளினுங் கூறப்பட்டவாறு, நாராயணர் கருமைத் திருமேனியுடையரேயாக, பிரமாவின் முகத்திற் றேன்றிய (அரியருத்திரராகாத) ஸ்தாணுருத்திரரைப் புகழ்ந்தவிடத்தும்

பொன்றிகழும்மேனிப்புரிசடையம்புண்ணியனும்
(இயற்பா, முதற்றிருவந்தாதி, ௪. ௯)

எனறு நாலாயிரப்பிரபந்தத்தினும்,

செம்பொன்னூற்செய்தழகுயெய்தாற்போலுஞ்செஞ்சடையெம்பெருமானேதெய்வம்.
(திருவதிகைவீரட்டானம், அடையாளத்திருத்தாண்டகம், நாவு, ௧)

அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்குமடி.
(திருவதிகைவீரட்டானம், திருவடித்திருத்தாண்டகம், நாவு, ௪)

பொன்னேர்தருமேனியனேபுரியு
மின்னேர் [illegible]

பொன்வண்ணமாயும் (கபி எனப்படும்) சூரியனால் விகசிதமாய இரு †புண்டரீகம் போலும் கண்களுமுடையர் இந்த ஞாயிறு மத்தியிலுள்ள இரண்ணிய

னன்னீர்வயனூகேச்சுரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே.
(திருநாகேச்சுரம், ஞான, ௧)

பசும்பொன்னிறத்தானைப்பானீற்றானை.
(திருவாலவாய், திருத்தாண்டகம், நாவு, ௨)

என்றற்றொடக்கத்தனவாகத் திராவிடசுருதிகளிற் கூறப்படலானும்,

நமோ ஹிரண்யபா³ஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே, நம꞉।

"பொற்புயமுடையார்க்கு, பொன்வண்ணருக்கு, பொன்வடிவினர்க்கு நமஸ்காரம்" என்று தைத்திரீய ஆரணியகம் (௧0. ௨௨. ௧0) கூறலானும் பொன்வண்ணமுடையார் சிவபெருமானே என நேரே சுருதிகளாற் பெறப்படுவதேயாக, கரிய திருமேனியுடைய நாராயணர்க் கேற்றுதற்கு இரண்ணியசப்தம் நேரே பொன்னிறமெனப் பொருட்படுத்த இடங்கொடாமையின்,

ஹிரண்ய ஶப்³தோ³ ரமணீயத்வபர꞉ ।

"இரண்ணியசப்தம் விரும்பற்பாலதின்மேற்று" என்று இராமாநுஜ வைணவ சூத்திரபாஷ்யத்துக்குப் பிரகாசமாய்ப் போந்த சுருதிப் பிரகாசிகையுடையார் பொருட்படுத்தினமை ஒவ்வாது கவுணார்த்தத்தின் மேலாயிற்று. ஆகலின், சுருதிப்பொருள் பொன்வண்ணராகிய சிவபெருமானுக்கே வாய்ப்புடைத்தாகி கருநிறத்தினராகிய நாராயணர்க்கு வாய்ப்பிலதாயிற்று.

†சாந்தோக்கியத்திற் (௧. ௬. ௭) கண்ட புண்டரீகம் செந்தாமரையின் மேற்றெனப் பொருட்படுத்தினமை பூருவமீமாஞ்சை (௪. ௩. ௩—௮) ஆஞ்சூத்திர (௨-ஆம்) அதிகரணத்திற் கூறப்பட்ட நியாயங்கொண்டாம். சிவபெருமான்றிருக்கண்கள் செந்தாமரைபோற் செந்நிறமுடைமையானன்றே திராவிட சுருதிகள்

முளைஞாயிறன்னமலர்க்கண்கண்மூன்றும்.
(திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், நாவு, ௬)

என்றும்,

செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
(திருவாரூர், சுந், ௨)

என்றும் கூறின.

"செக்கர்வானச்சடையோன்சேவடிக்கீழந்நாளின்
மெய்க்கணிட்டுச்சக்கரம்பெற்றவிளையாட்டேபோல்"

என்று பழைய திருவாய்மொழிப் பிரதியினும்,

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ.

என்று திருவாசகத்தினுங் கண்டவாறு, நாராயணர் ஜலந்தராசுரன் உடலைப் பிளந்த சக்கரத்தைப் பெறவேண்டிக் காஞ்சிபுரத்திற் சிவபெருமானை நாடோறும் ஆயிரந் தாமரைகளால் அர்ச்சித்துவந்தபோது, ஓர்நாட் கமலபுஷ்பம் ஒன்று குறைய, தமது கண்ணை இடந்து பூசித்துச் சிவபெருமானிடத்துச் சக்கரப்படை பெற்று,

ஸோ(அ)ர்சயந் ப⁴க³வந்தம் பத்³மஸஹஸ்ரேண நேத்ரமாத்மந꞉ ।
ஸசக்ரம் இதி விஷ்ணு꞉ ஸுத³ர்ஶநம் தபஸா(அ)லபத்॥

புருஷர்" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாகிய விஷயம்.

ஞாயிறுள்ளே உள்ள இந்தப் பொன்மயபுருஷர் சிவபெருமானோ? இன்றேல் வேறு தேவதா விசேஷமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அனைத்துக்கும் ஆதாரராயும், சர்வவியாபகருமாயுள்ள சிவபெருமானுக்குச் சூரியனுக்குள்ளாதலும், இரண்ணியரூபராதலும் இல்லை. அவர் சுவேச்சையாகக்கொண்ட வடிவமேயாயின், அவருக்கு நியதமாய் முக்கட்டிருமேனி இருக்கவேண்டும். அவ்வடிவம் ஈண்டு இல்லையாயிற்று. "புண்டரீகமேவ மக்ஷிணீ" என்பதினாற் புண்டரீகக் கண்கள் இரண்டே கேட்கப்படுகின்றன. அங்ஙனம் அவர் சுவேச்சையாய் (வடிவங்) கொண்டாலும், தேகமானது சம்சாரிக்குப் போலச் சிவபெருமானுக்குத் துன்பத்தை விளைக்கும். சுவேச்சா சம்பந்தமாய்க்கொள்ளினும், அக்கினிக்குச் சுடுகை சுபாவமன்றோ; ஆகலின், சிவபெருமானுக்குச் சரீரசம்பந்தம் (கூறல்) ஒவ்வாது. அதுபற்றி இவர் மற்றோர் தேவதாவிசேஷமே, சிவபெருமான் அன்றாம் எனின்,

(சித்தாந்தம்) அவர் சிவபெருமானே; எதனால்? அவர் குணங்கள் கூறப்படலான்.

"தமக்குத் தாமரையை நிகர்த்த கண்வேண்டுமென்று வரம் வேண்டி அதனையும் பெற்றுப் பதுமாக்ஷன் (தாமரைக்கண்ணன்) என்று பிரசித்திபெற்றனர்" என்று புராணங் காரணங் கூறலானும், "அரவிந்தலோசனன்," "புண்டரீகங்கள் போலுங் கண்ணன்" என்று திருவாய்மொழியினும் (சு. எ. க0; சு. அ. எ) பிறவிடங்களினுங் கூறப்படலானும், சாந்தோக்கிய சுருதியிற் கண்ட தாமரைக் கண்கள் சிவபெருமான் மேலனவாமென்க.

தேவஸ்ய ஸவிதுர்மத்யே பர்கோ யோ நோ தியஃ க்ரியா: |
ப்ரசோதயாத் தம் வரேண்யம் தீமஹீ த்ருதயஃ க்ரமாத் |

"தேவ (சிவ) சூரியனுக்கு மத்தியிலேயுள்ள எந்தப் பர்க்கர் எங்கள் அறிவிச்சை கிரியைகளைச் செலுத்துகின்றாரோ, அம்முக்கியப்பொருளாயினரைத் தியானிக்கின்றோம்" என்று யாஞ்ஞவற்கியர் கூறலானும்,

ஹர: ஸூர்யமயோ ஹர: |

என்று வடமொழிநிகண்டு கூறலானும்,

ய ஏஷ ருத்ரோ பர்காக்யோ ப்ரஹ்மவாதின: |

"இந்த உருத்திரர் பர்க்கர் எனப்படுவர் எனப் பிரமவாதிகள் கூறுவர்" என்று மைத்திராயணோபநிடதம் (சு. எ) கூறலானும்,

விரிந்தபல்கதிருடையதோர் வெய்யவனடுவட்
பொருந்திவைகியகண்ணுதற்பரமனேபோன்றான்.
(கந், அவைபுகுபடலம், ௬௧)

மாதிலாவருக்கனுப்பன்வைகியபரமனேபோ
லாறுமாமுகத்தவள்ளலலங்குளைப்புரவிமான்றேரேறினன்.
(கந். சூரபன்மன்வதைப்படலம், ௪௭)

என்று கந்தபுராணங் கூறலானும் சூரியனுக்கு மத்தியிலுள்ளார் சிவபெருமானேயாம்.

𑌸 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌿 𑌨𑌾𑌮 𑌸 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑍍𑌮𑌭𑍍𑌯 𑌉𑌦𑌿𑌤𑌃।
(சா. ௧. ௬. ௭)

"அவர் உலகம் அனைத்துக்கும் இச்சைகள் அனைத்துக்கும் நாயகர்; அவருக்கு உத் நாமம் (பேர்தமை) அவர் பாவம் அனைத்துக்கும் மேலே உதித்தமையின்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சமஸ்த லோகங்களுக்கும் இச்சைகளுக்கும் நாயகத்துவமும், சர்வபாவமிலாமையும், பிறவும் சிவசம்பந்தமாகிய குணங்களாம் என்று பிரதிபாதிக்கப்பட்டன;

𑌏𑌕𑍋 𑌹𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍁𑌰𑍍𑌯 𑌇𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍀-
𑌶𑌤 𑌈𑌶𑌨𑍀𑌭𑌿𑌃 (சுவே. ௩. ௨)
𑌅𑌜𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍍।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌶𑍈𑌃 (சுவே. ௨. ௧௫)
𑌏𑌕𑍋 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌯𑍋 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍।
(கட. ௫. ௧௩; சுவே. ௬. ௧௩)

"உருத்திரர் ஒருவரே; அவர்கள் இரண்டாவதின் பொருட்டிருந்திலர்; இவர் தமது ஆளுஞ் சத்திகளினாலே இவ்வுலகம் அனைத்தையும் ஆளுகின்றனர்"

"பிறவாதவரும், நித்தியரும், தத்துவமனைத்தாலுந் தொடக்குண்ணாத தூயருமாகிய சிவபெருமானை அறிந்து சர்வபாசங்களினின்றும் வீடுறுகின்றான்"

"ஒருவர் அநேகருக்கு இச்சைகளை நியதஞ் செய்கின்றனர்"

என்றற்றொடக்கத்தனவாகக் கேட்கப்படலான். சர்வாதாரரும், சர்வவியாபகருமாயினார்க்கு ஞாயிறுள்ளேயாதல் பொருந்தாதென்றமை விரோதமின்று. சர்வாதாரரும் சர்வவியாபகருமாயுள்ள சிவபெருமான் அன்பர்களை அநுக்கிரகிக்கும் பொருட்டு ஓர் பொன்வடிவங்கொண்டு ஞாயிறு மண்டலத்துள்ளார். சரீரமுடைமையின், எம்மனோர்க்குப் போலச் சிவபெருமானுக்குச் சம்சாரதோஷத் தொடக்கில்லை. அவருக்குச் சரீரசம்பந்தமுளதாதலையும், சமஸ்தபாவமிலாமையையும் பகவதியாகிய சுருதியே பிரதிபாதிக்கின்றது. யாம் சுருதிப் பிரமாணத்தையே சரணைக் கொண்டேம்; யுக்தியைப் பெரிதும் மதிப்பேமல்லேம். தீயும் தன்னொடு சம்பந்தமுற்ற அதிபலமுடைப் பொருள்களைத் தகிக்கமாட்டாது. திரிநேத்திராகிய சிவபெருமான் (கபி எனப்படும்) சூரியனால் விகசிதமாய இரு புண்டரீகம்போலும் கண்களை உடையர் எனக் கூறினமை செந்தாமரையை நிகர்த்த நிறத்தைக் காட்டுவதற்காகவன்றி மூன்றாவது கண் இல்லை என்று காட்

டப்போந்ததன்று; முப்புதல்வர்களையுடையராம் பிராமணர் ஒருவரை யுற்று, (அவர்) இரு புதல்வர் அக்கினிதுல்லியர் எனின், இரண்டு என்னும் எண்ணுனது மூன்றுவது புதல்வர் இல்லை என்று மறுக்கவில்லை; பின் அது இரு புதல்வரையும் அக்கினிதுல்லியர் என்று உணர்த்துதன் மேலாயிற்று; அங்ஙனம் ஈண்டுமாம். நீரைக் கிரணங்களினுற் குடிக்கின்றமையிற் சூரியன் (கபி எனப்படும்). இந்தச் சூரியனுல் விகசிதமாய செந்தாமரை பிரகாசிக்கு மாறுபோல, சிவபெருமானுடைய இரு கண்களும் பிரகாசிப்பனவாயின்; (அவரது) மூன்றுவது நேத்திரம் முகுளிதசுவபாவமுடையது; மலர்ந்த தாமரையை ஒவ்வாது; முகுளித தாமரையை நிகர்த்துள்ளதென்பது அபிப்பிராயம். (உக)

(ஆக்ஷேபம்)

அஸௌ யொ zவஸவ-ெ்தி நீல஗்ரீவொ விலொஹித꞉ ।
உடெ⁴நம் ெ்காவா அத்⁴ருஶந்நத்⁴ருஶந்நுத³ஹார்ய꞉ ।
உடெ⁴நம் விஶ்வா பூ⁴தாநி ஸத்³ருஷ்டோ ம்ருட³யாதி ந꞉ ।

(தைத். சங். ச. ரு. க. ந)

"(சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ்தமனஞ் செய்விக்கும் பொருட்டுச் சிவபிரான்) பிரவிருத்திக்கின்றனர்; இவர் நீலகண்டமும் செந்நிறமுமுடையர்; (*ஆதித்தியரூபராகிய) இவரைக் கோபாலரும், உதகம் எடுக்கும் மடவோரும் கண்டார்கள்; அவரைக் (கோமகிஷாதி) செந்துக்களும் பார்க்கின்றன; அவ்வியல்பினராகிய அவர் (அகக் கண்ணுக்குப்) புலப்படின், அவர் எங்களுக்கு ஆனந்தத்தை விளைவிப்பாராக" என்னுஞ் சுருதியினுல், நீலகண்டராகிய சிவபெருமான் சமஸ்த செந்துக்களுக்கும் பிரத்தியக்ஷமாயிருக்கின்றனர் என அறியப்படுகின்றுராக,

ஸூர்யோ வா அஸித ஸஹஸ்ரரஶ்மிர் நேத்ர꞉ ரவி꞉ ।

"தன் ஒளியினுல் வியாபித்த மண்டலத்தையுடைய முக்கட் சூரியன்" என்றற்றொடக்கத்த அபியுக்தவசனத்தினுல், சூரியன் மூன்று கண்களையுடையதாக அறியப்படலானும், ஆதித்தியனே பிரபாமண்டலத்துள்ள முக்கண்ணுடைய சிவபெருமான்; இன்றேல் நீலகண்டமும் முக்கண்களும் சூரியனுக்கு எங்ஙனம் கூறப்படும்.

அவாவ்ருதிர் நேத்ரா ஸூர்ய꞉ (சாந். ந, சக; க)

---

* அருக்கன்பாற்றம்வணங்குவர்தியி
னருக்கனுவானரனுருவல்லனே
யிருக்குநான்மறையீசனையேதொழுங்
கருத்தினைநினையார்கன்மனவரே.

(ஆதிபுராணத்திருக்குறுந்தொகை, நால், அ)

"இந்தச் சூரியன் பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, (சூரியன்) பிரமமாகவும் கூறப்படுகின்றது. ஆகலின், சூரியனுக்குள்ளிருப்பவராகச் சுருதியிற் கூறப்பட்டு மண்டலத்துள்ளிருக்கும் ஆதித்தியமூர்த்தியே இரண்மயபுருஷர் எனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஹெடவுூவஷெமாஜா நூஃ (க. க. உஉ)

(உஉ) பேதம் கூறப்படலாலும் அவர் வேறு.

ய ஆஷிதெ்யு திஷ்ணாஷிதெ்யாஜெரா யமாஷிதெ்யா நவெஷ யஸூ ஷிதெ்யு ஶரீரம் ய ஆஷிதெ்யுமெலரா யமயதி வஷ த ஆணாயு்ுகாமெ்ு தஃ (பிரு. ரு. எ. க)

"எவர் சூரியனுக்கு வேறாய், சூரியனுக்குள்ளே உள்ளார்; இவரை ஞாயிறு அறிந்திலதோ, எவருக்கு ஞாயிறு சரீரமோ, எவர் ஞாயிற்றுள்ளேயிருந்து அதனைச் செலுத்துகின்றனரோ, அவரே உனது ஆன்மாவும், அந்தரியாமியும், அமிர்தருமாம் (சிவனுமாம்)" என்னுஞ் சுருதியில் (அவ்விருவர்க்கும்) பேதங் கூறப்படலான், பொன்வண்ணராகிய சிவபெருமான் சூரியமண்டலத்தபிமானியாகிய இந்தச் சேதனரூப ஆதித்தியமூர்த்தியினும் வேறாவர். ஈண்டு அமிர்தசப்தம் சிவபெருமான் மேற்று;

வதாநி ஹவா அ மேநுதவு நாமெயாநி (ஜாபா. ந)

"இவைகளே அமிர்தத்தின் பெயர்கள்" எனச் சதருத்திரீயத்தைப் புகழுங்கால் (அங்ஙனம்) ஜாபாலோபநிடதம் கூறலின். சூரியனால் அவர் அறியப்படாமை முதலிய குணங்களுண்மையின், ஆதித்தியனுக்கு வேறாயினர் சிவபெருமான் என்றே கூறப்படுகின்றார். ஆகலின், சேதனனாகிய ஆதித்தியனினும் *பொன்வண்ணராகிய சிவபெருமான் வேறு.

நீலமீவொ விலொஹிதஃ (தைத். சங்கி. ச. ரு. க. ந)

"நீலகண்டரும் செந்நிறமுடையரு" மாகக் கூறப்பட்ட காளகண்ட சிவபெருமானே ஆதித்தியனுக்குள்ளிருப்பவராகப் பிரதிபாதிக்கப்படுகின்றனர்; சூரியனுக்குள்ளிருக்கும் உயிராதலின், அவர் அந்தச் சூரியசப்தத்தினாற் கூறப்படுகின்றார்.

---

* பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமேனி பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட
வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசனுக்கே.

என்னுஞ் சேரமான்பெருமாணாயனார் திருவாக்கும் சிவபெருமான்றிருமேனியைப் பொன்வண்ணமென்று கூறிற்று.

(ஆக்ஷேபம்) சூரியனுக்குள்ளிருக்கும் நீலகண்டர் சிவபெருமான் அன்று; பின் அவர் நாராயணரே. அங்ஙனம்,

த்⁴யேய꞉ ஸதா³ ஸவித்ருமண்ட³லமத்⁴யவர்தீ நாராயண꞉ ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட꞉ ।

"சூரியமண்டலமத்தியினராகிய நாராயணர் கமலாசனத்திருப்பவராக எக்காலமுந் தியானிக்கற்பாலர்" என உலகினர் யாண்டும் படிக்கின்றனர். அவர்க்கே புண்டரீகாக்ஷித்துவயசம்பந்தம் (கூறுவது) யுக்தம்; அவர் புண்டரீகாக்ஷர் எனப் பிரசித்தமுண்மையின். வேறுபிரகாரமாகப் பிரதிபாதனஞ் செய்தலாம் பிரயாசை எற்றுக்கென ஆக்ஷேபிப்பின்,

(உத்தரம்) அன்று; இரண்மயபுருஷரிற் சம்பந்தமுடையனவாகக் கூறப்படுஞ் சிவபெருமானுடைய விசேஷலிங்கங்கள் நாராயணரிற் பொருந்துமாறின்மையின். சூத்திரவிஷயமாய்ச் சந்தேகத்துக்கிடமாகிய இந்த வாக்கியம் சந்தேகத்துக்கு இடனாகாத வேறு வாக்கியங்கொண்டு நிர்ணயித்தல் யுக்தம்.

ஆதி³த்யோ வா ஏஷ ஏதந்மண்ட³லம் தபதி ।
(தைத். ஆரணி. ௧0. ௧௪. ௧)

"இந்த ஆதித்தியனே இந்த மண்டலத்தைத் தகிக்கின்றான்" என்றற்றொடக்கத்தனவாக மகோபநிடதத்திற் கூறப்படுகின்றது.

ய ஏதஸ்மிந்மண்ட³லே(அ)ர்சிர்தீ³ப்யதே ।
(தைத். ஆரணி. ௧0. ௧௪. ௧)

"இவன் இந்த மண்டலத்திலே ஒளியைக் காலுகின்றான்" எனச் சூரியமண்டலப்பிரகாசத்தை உரைத்தும்,

ய ஏஷ ஏதஸ்மிந்மண்ட³லே புருஷ꞉ ।
(தைத். ஆரணி. ௧0. ௧௪. ௧)

"இந்தச் சூரியமண்டலத்திற் புருஷர் இவர்" என மண்டலாபிமானியாகிய ஆதித்தியமூர்த்தியை உரைத்தும்,

ய ஏஷோ(அ)ந்தராதி³த்யே ஹிரண்மய꞉ புருஷ꞉ ।
(சாந். ௧. ௬. ௬)

"இவர் ஆதித்தியனுக்கு அந்தரியாமியாயுள்ள இரண்மயபுருஷர்" என ஆதித்தியாந்தரியாமியாய் (ஆதித்தியமூர்த்திமானுயுள்ள) இரண்மயபுருஷரைக் கூறியும்,

ஆதி³த்யோ வை தேஜ ஓஜோ ப³லம் யஶ꞉ ।
(தைத். ஆரணி. ௧0. ௧௫. ௧)

"ஆதித்தியன்றன் தேஜசும், உரமும், பலமும், கீர்த்தியும்" என்றற்றெ டக்கத்த சுருதியினல், அந்த ஆதித்தியரூபமுடையாரது (சிவபெருமானது) விபூதியைக் கூறியும்,

ஏஷ பூ⁴தானாமதி⁴பதி:|
(தைத். ஆரணி. ௧௦. ௧௬. ௬௨)

"இவர் புருஷர்; இவர் பூதங்களுக்கு அதிபதி" என்பதினல் அவரைப் பூதபதியாக நிர்த்தேசஞ் செய்து, பின்னரும் (இவர்) எவ்வியல்பினராகிய புருஷர் என்று வினவ,

ஸர்வோ ஹ்யேஷ ருத்³ர:|
(தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௭௨)

"எல்லாம் உருத்திரரே" என்று தொடங்கி,

நமோ ஹிரண்யபா³ஹவே ஹிரண்யபதயே அம்பி³காபதய உமாபதயே (தைத். ஆரணி. ௧௦. ௨௨। ௭௦)

"இரண்ணிய பாகுவினர்க்கு, இரண்ணியபதியாயினர்க்கு, அம்பிகாபதி யார்க்கு, உமாபதியார்க்கு (நமஸ்காரம்)" என உபசங்கரிக்கப்பட்டது. இச்சுருதியில் (அவரது) பாகுவைப் பொன்னிறமாகக் கொள்ளவே, உப லக்ஷணயினற் (சிவபெருமான்) பொற்றிருமேனியடையர் என்பது தாற் பரியமாயிற்று. ஆகலின், பொன்போலும் மேனியையுடைய உமாபதியார் ஆதித்தியனுக்கு மத்தியிலிருப்பவராகச் சித்திக்கின்றர்; ஈண்டு நீலகண்டத் துவம் உமாபதித்துவமுதலிய விசேஷலிங்கம் சிவபெருமானுக்கன்றி மற்றை யோர்க்குப் பொருந்தாமையின். புண்டரீகத்தை ஒத்த கண்ணுடைமை சாதாரணலிங்கம்; நாராயணர் ஒழிந்த மற்றைப் பொருட்கும் (இயைவ தாகக்) காணப்படலான். கமலலோசனி நாரி எனவும், கமலலோசனன் புருஷன் எனவும் வழங்கப்படுகின்றது. (இரு லிங்கங்கள் ஒருங்கு கூறப் படுங்கால்) விசேடலிங்கத்தினற் சாமானியலிங்கம் பாதிக்கப்படும். "சூரி யனுள் இருக்கும் தெய்வமாக நாராயணர் எப்பொழுதுந் தியானிக்கற் பாலர்" என்னும் இலௌகிகவசனம் கவுணமே. ஆகலின், இரண்ணிய நல்லியருபரும், திரிலோசனரும், நீலகண்டரும், உமாபதியும், சமஸ்த லோக காமேசுவரரும், சர்வபாபத்தொடக்கிலாதவரும், பகவானுமாகிய சிவபெருமானே ஆதித்தியனுக்குள்ளே இருப்பாரும், சாவித்திரியினற் பிரதி பாதிக்கப்படுபவரும், முமுட்சுக்கள் அனைவர்க்கும் தியேயப்பொருளாயு முள்ளார் என்று சித்தித்தது. (௨௨)

(கூ) ஆகாசாதிகரணம்.
(கo) பிராணுதிகரணம்.

சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய பரப்பிரமசிவனுரது பரமமங்கலத்துக்கு ஆஸ்பதமாய் உபாசிக்கற்பாலதாம் வடிவத்தை உரைத்து, அந்த இலக்ஷணத்துக்கு நாமரூடிவசத்திறை பிறிதோரிடத்தில் அதிவியாப்திபற்றி ஆசங்கை உண்டாக, அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஆகாஶஸ்தல்லிங்காத் (க. க. உங)
அத ஏவ ப்ராண: (க. க. உச)

(உங) ஆகாயம் (பிரமம்), அதின் இலிங்கமுண்மையின்.
(உச) அந்த நியாயத்திறை பிராணன் (பிரமம்).

ஸர்வாணி ஹவா இமாநி பூதாநி ஆகாஶாதேவ ஸமுத்பத்யந்தே ஆகாஶம் ப்ரத்யஸ்தம் யந்தி (சாந். க. கூ. க)

"இப்பூதமனைத்தும்* ஆகாயத்திருந்தே உற்பத்தியாகின்றன, ஆகாயத்துக்கு மீள்வனவாயின" எனவும்,

ஸர்வாணி ஹவா இமாநி பூதாநி ப்ராணமேவாபிஸம்விஶந்தி ப்ராணமப்யுஜ்ஜிஹதே (சாந். க. கக. ரு)

"இப்பூதமனைத்தும்* பிராணனிலே ஒடுங்குகின்றன; பிராணனிலிருந்தே அவை உதித்தன" எனவும் போந்த சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயக்கிடந்த விஷயம்.

ஈண்டுச் சமஸ்த பூதங்களுக்கும் உற்பத்தி பிரளயங்களைப் பிரதிபாதிப்பனவாய "பிராணன்" "ஆகாயம்" என்னும் மொழிகள் சிவபெருமானைப் பிரதிபாதிப்பனவா? இன்றேற் பூதாகாயம் பிராணவாயு என்பனவற்றைப் பிரதிபாதிப்பனவா? என்பது சந்தேகம்.

ப்ராணாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே ப்ராணேந ஜாதாநி ஜீவந்தி ப்ராணம் ப்ரயந்தி (தைத். ௩. ௩)

"இப்பூதமனைத்தும் பிராணனிலிருந்தே பிறந்தன; பிராணனாற் பிறந்தன நிலையுறுகின்றன; பிராணனை நோக்கிச் செல்வனவாயின" என்றற்றொடக்கத்த சுருதியுண்மையானும்,

---

* ஆன்மதத்துவம் இருபத்துநான்குமடங்கிய மலினப்பிரபஞ்சமும், வித்தியாதத்துவம் எழும் அடங்கிய மிசிரப்பிரபஞ்சமும், சிவதத்துவம் ஐந்துமடங்கிய சுத்தப்பிரபஞ்சமும் அனைத்தும் என்றதனாற் றழுவப்படும்.

ஆகாஶாத்³வாயு꞉ (தைத். உ. க)

“ஆகாயத்தினின்று வாயு” என்றற்றொடக்கத்த சுருதி யுண்மையாலும், பிராணனுக்கும் ஆகாயத்துக்கும் சகல பூதகாரணத்துவம் கூறப்படுதலின், அவ்விரண்டுமே ஈண்டு பிரதிபாதிக்கற்பாலன எனின்,

(உத்தரம்) கூறுதும். பிராணகாயசப்தவாச்சியர் சிவபெருமானே; சர்வகாரணத்துவமுதலியன அவர்க்கு இலிங்கமாதலின். பிராணன் ஆகாயம் என்னும் இரண்டுக்கும் சர்வகாரணத்துவ முதலிய எய்தமாட்டா. “(இப்பூதமனைத்தும்) பிராணனிலிருந்தே (பிறந்தன)” என்றற்றொடக்கத்த சுருதிக்கு ஆனந்தரூபமுண்டைய பரப்பிரமமே காரணம் என்பது தாற்பரியம். பிராணன் காரணமன்று; பின் அது அநுவாதமாத்திரம். பூதங்களுள்ளே ஒன்று ஆகாயமாதலின், (அது பூத)மனைத்தும் என்பதனுள் அடங்கிவிடும்.

ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூ⁴த꞉ (தைத். உ. க)

“ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது” என்னுஞ் சுருதியினாற் சர்வபூதோற்பத்தியும் சிவபெருமானிலிருந்தே ஆகும். ஆகலின், சர்வபூதகாரணத்துவம் பூதாகாசம் பிராணன் என்பவைகளுக்குச் செல்லாதென்பது சித்தாந்தம்.

(வினா) பூதாகாயம் என்றதிலே போந்த பூத என்னும் உபபதவிசேடத்தினாற் பயன் யாதெனின்,

(உத்தரம்) (பூதாகாயத்தினின்று வேறாக) பரப்பிரகிருதிரூப பரமாகாயம் என (முற்றொன்று) சர்வபூதகாரணமாதயிருத்தலை உணர்த்துவதே பயனாம்.

(வினா) அங்ஙனமாயின் (ஆகாயத்தைச்) சிவபெருமான் என்று நிர்ணயிப்பதெங்ஙனம்?

(உத்தரம்) (சிவபெருமானுக்கும் * பரமாகாயத்துக்கும்) பேதமில்லாமையான். (உச)

(கக) ஜ்யோதிரதிகரணம்.

சமஸ்த புவனநாயகரும், சமஸ்த தோஷவாசநாகளங்கமில்லாதவரும், நிரதிசயமங்கல இரத்திநாகரருமாகிய உமாபதியாம் பரப்பிரமத்துக்கு ஆகாதியமண்டலம் ஆஸ்பதமாயினமை மேலே நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுச் சூத்திரகாரர் அந்தச் சிவபெருமானுக்கு மற்றோர் ஸ்தானம் உரைப்பாராயினர்.

---

* இது திருச்சிற்றம்பலத்தின் மேற்று; உபக்கிரமணிகை சுo-ஆம் இலக்கம் பார்க்க.

ஜ்யோதிஶ்சரணாபிதாநாத் (க. க. உ௫)

(உ௫) (பிரமம்) சோதி;* சரணம் கூறப்படலான்.

அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விஶ்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷ்வநுத்தமேஷூத்தமேஷு லோகேஷ்விதம் வாவ தத்யதிதமஸ்மிந்நந்த: புருஷே ஜ்யோதி: (சாந். ௩. கங. ௭)

"இதற்குமேற் பிறிதோர் உலகம் இல்லை எனற்பாலதாம் உயர்வாகிய உலகத்திலே ஒவ்வொன்றுக்கும் மேலாய், அனைத்துக்கும் மேலாய், இந்த ஆகாயத்துக்கு மேலாய்ப் பிரகாசிக்கின்ற அந்தச் சோதியே புருஷனுக்குள்ளேயுள்ள சோதி" என்னும் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாகிய விஷயம்.

சமஸ்த லோகத்தையும் வியாபித்து ஆகாயத்துளதாகக் கூறப்பட்ட பரஞ்சோதியானது சிவபெருமானா? மற்றோர் தேவதையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) "திவ்" என்னும் மொழி ஆகாயம் எனப்பொருட்பட, "பரோதிவ:" (ஆகாயத்துக்கு மேலாய்) என்றமையின், ஆகாயத்துள்ள ஆதித்தியனே சோதி என ஈண்டுப் பிரதிபாதிக்கப்படுகின்றது; இன்றேல், புருஷனுக்குள்ளேயுள்ள சோதி என்றமையின், அது புருஷனுக்குள்ளேயுள்ள ஜாடராக்கினியாம் எனின்,

(சித்தாந்தம்)

அத யதத: பரோ திவோ ஜ்யோதி: (சாந். ௩. கங. ௭)

"ஆகாயத்துக்கு மேலேயுள்ள சோதி" என அனைத்துக்கும் மேலாய்க் (கூறப்பட்ட) பரஞ்சோதி சிவபெருமானே; மேலே,

பாதோஸ்ய ஸர்வா பூதாநி (சாந். ௩. கஉ. ௬)

"பூதமனைத்தும் அவரது பாதம்" என்னுஞ் சுருதியிற் பூதமனைத்தும் இந்தச் சோதியின் அம்சம் என உரைக்கப்படுதலின், இது ஜாடராக்கினிக்கும் சூரியனுக்குஞ் செல்லாது, பரிச்சின்னமுடைமையின். (உ௫)

(ஆக்ஷேபம்)

காயத்ரீ வா இதம் ஸர்வம் பூதம் (சாந். ௩. கஉ. க)

* சடையானேதழலாடதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனை
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே.
(திருப்புலம்பல், ௯)

"(மேலே) இப்பூதமனைத்தும் காயத்திரி" என்று கூறப்படுதலின், காயத்திரியின் சர்வவியாபகத்துவம் பிரதிபாதிக்கப்படுகின்றது. படவே, பிரகரணத்தில்

ஸர்வேஷாம் பூதாநி (சாந். ந. கஉ. சு)

"செந்துக்களெல்லாம் அவரது பாதம்" என்னுஞ் சுருதியானது பிரபஞ்சமனைத்தும் காயத்திரியின் அம்சம் எனக் கூறுகின்றதெனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஸ்தோ பிதாநாந்நேதி சேந்ந ததா சேதோர்ப்பணநிகதாத்ததா ஹி தர்சநம் (க. க. உசு)

(உசு) சந்தசைக் கூறினமையின் (பிரமம்) அன்றாம் எனின், அன்று; அங்ஙனம் அறிவானது (பிரமத்தில்) அர்ப்பணஞ் செய்யப்பட்டதாகக் கூறப்படலான்; அது பற்றியன்றே (பிரமாணமும்) காணப்படுகின்றது.

காயத்ரீ வா இதம் ஸர்வம் பூதம் (சாந். ந. கஉ. க)

மேலே "இப்பூதமனைத்தும் காயத்திரி" எனச் சந்தசைப்பற்றிக் கூறப்படலான், அதுவே ஈண்டுக் கூறப்பட்டதன்றிச் சிவபெருமான் அன்றெனின்,

(உத்தரம்) அங்ஙனம் எய்தாது; காயத்திரி எனப்படும் சந்தசுக்கு மாத்திரம் சர்வவியாபகத்துவம் எய்தாது. பின் காயத்திரிக்கொப்பாகச் சிவபெருமான் (தியானஞ்) செய்யப்படுகின்றனர். (பாதம் ஒன்றுக்கு) ஆறு அக்ஷரங்களாக அமைந்த நான்கு பாதங்களைக் காயத்திரி உடைத்தாமாறுபோல, பிரமமும் நான்கு பாதமுடையது. அங்ஙனம் பிறவிடங்களினும் சந்தசைக் குறிக்கும் சப்தமானது ஒருபுடையொப்புமையான் மற்றோர் பொருட்குஞ் செல்வதாகக் காணப்படுகின்றது. சம்வர்க்க வித்தையில்,

தே வா ஏதே பஞ்சாந்யே பஞ்சாந்யே தச ஸந்தஸ் தத்க்ருதம்
(சாந். ச. ந. அ)

"(இந்த) ஐந்தும் மற்ற ஐந்துஞ் சேர்ந்து பத்து; அது கிருதம்" என்று தொடங்கி,

ஸைஷா விராட் (சாந். ச. ந. அ)

"*இது விராட்டு" என்று உபசங்கரிக்கப்பட்டது. அங்ஙனஞ் சிவபெருமானுக்குக் கூறப்பட்ட சர்வவியாபகத்துவலிங்கத்தினுற் காயத்திரிப்பிரகரணம் பாதிக்கப்பட்டது. ஆகலின், சிவபெருமானே சோதி என்பது. (உசு)

*பத்து அக்ஷரங்களாலாய சந்தசின் பெயராகிய விராட்டு என்பது வேறு பத்துத் தொகையினையும் உணர்த்துமாறுபோல என்பது தாற்பரியம்.

...ருஞ் சூத்திரகாரர் பொருத்தமின்மை உரைக்கின்றார்.

...ரூதாதிவாத வ்யபதேசோபபத்தேச்சைவம் (க. க. உஎ)

(உஎ) பூதமுதலியவற்றைப் பாதங்களாகக் கூறல் பொருத்தமுறினும், அதுவும் அங்ஙனம்.

பூதம் (பிராணிகள்), பிருதிவி, சரீரம், இருதயம் என்பவற்றைப் (பாதங்களாகக் கொண்டமைபற்றி) நான்குபாதமுடைத்தெனல் காயத்திரீ சந்தசுக்குப் பொருந்துமாறின்று; அது சிவபெருமானுக்கே பொருத்த முறுகின்றது. (உஎ)

சூத்திரகாரர் பின்னரும் ஆக்ஷேபித்துப் பரிகரிக்கின்றனர்.

உபதேஶ பேதாந்நேதி சேந்நோபயஸ்மிந்நப்யவிரோதாத்

(க. க. உஅ)

(உஅ) உபதேசம் (கூறல்) பலதிறப்படுதல்பற்றி, அது பிரமமன்றுமெனின், அன்று; ஈரிடத்தும் விரோதமின்மையின்.

(ஆக்ஷேபம்)

பாதோஸ்ய ஸர்வா பூதாநி (சாந். ந. கஉ. சு).

"பூதமனைத்தும் அவரது பாதம்" எனவும்,

த்ரிபாதஸ்யாம்ருதம் திவி (சாந். ந. கஉ. சு)

"அவரது அமிர்தமாகிய மூன்று பாதமும் ஆகாயத்தனவாம்" எனவும் போந்தவிடத்து, ஆகாயத்தோடு சம்பந்தமுளதாதல்பற்றிச் சோதி வாக்கியத்திற் சிவபெருமான் பிரதிபாதிக்கப்படுகின்றனர் எனல் சாரமன்று; உபதேசபேதத்தினால் விரோதமாக அறியப்படலான்.

த்ரிபாதஸ்யாம்ருதம் திவி (சாந். ந. கஉ. சு)

"அவரது அமிர்தமாகிய மூன்று பாதம் ஆகாயத்திலே" என (ஏழாம் வேற்றுமையினும்)

அத பரோ திவோ ஜ்யோதி: (சாந். ந. கந. எ)

"ஆகாயத்தின் மேல் சோதி" என (ஐந்தாம் வேற்றுமையினும்) போந்த சுருதிகளில், விபத்திபேதத்தினால் உபதேசம் பேதமுறுகின்றது. ஆகலின், விரோதமே எனின்,

(உத்தரம்) அன்று; ஈரிடத்தும் விரோதமின்மையின். "மரநுனியிலே பருந்து (என ஏழாம் வேற்றுமையினும்), மரநுனியின் மேல் பருந்து"

(என ஐந்தாம் வேற்றுமையினும்) கூறப்பட்ட சரிடத்தும் ம... ...ம் மேல் என உரைக்கப்பட்டது. அங்ஙனம் சரிடத்தும் ஆ... மேல் (சோதி) எனக் கூறப்பட்டது. இந்த இலிங்கத்தினுற் சி... மானே புருஷசூக்தத்திற் கூறப்பட்ட புருஷர் எனச் சித்தித்தது;

𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿

(புருஷசூக்தம். ௩)

"சமஸ்த பூதங்களும் அவரது பாதம்" எனப் புருஷசூக்தத்திற் கேட்... படலான். அதுபற்றித் தமது ஓர் அம்சத்தில் அடங்கிய சமஸ்தப் பிரப... சத்தையுடையதும், ஆகாயத்தில் விளங்குவதுமாகிய பரஞ்சோதி சிவபெரு... மான் என நிர்ணயிக்கப்பட்டது.

பகவானுகிய சூரியனுடைய மண்டலத்திலே நேரே உபாசிக்குமாறு உணர்த்தப்பட்ட சிவபெருமானே இந்த அதிகரணத்தில் விசுவரூபியாகக் கூறப்பட்டனர். (உஅ)

அவரது அபேத வியாபகத்தினுல் அனன்னிய வஸ்துக்களும் உபாசிக்கற்பாலன, மற்றோர் பிரகாரத்தால் அன்று எனப் பிரதிபாதிப்பதற்கு ஆரம்பிக்கப்படுகின்றது இவ்வதிகரணம்.

(கஉ) இந்திரப்பிராணாதிகரணம்.

𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌨𑍁𑌗𑌮𑌾𑌤𑍍 (க. க. உகூ)

(உகூ) அங்ஙனம் பிராணன் (பிரமம்; அவர் குணங்கள்) சம்பந்தமுறலான்.

𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌂 𑌮𑌾𑌮𑌾𑌯𑍁𑌰𑌮𑍃𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌵।

(கௌஷீ. ௩. உ)

"நானே பிராணன், என்னைப் பிரஞ்ஞையோடு கூடிய ஆன்மாவாகவும், ஆயுளாகவும், அமிர்தமாகவுங்கொண்டு வழிபடு" என இந்திரன் கூறிய விசன்மாக நேர்ந்த கௌஷீதகியுபநிடத சுருதியே ஈண்டு ஆராயக்கிடந்த விஷயம்.

ஈண்டு உபாசனுவிதிவிஷயமாய்ப் பிராணசப்தத்தின் சாமானுதிகரணியத்திற் சுட்டப்பட்டவர் இந்திரனு? இன்றேற் சிவபெருமானு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌂 𑌮𑌾𑌂।

(கௌஷீ. ௩. உ)

ணன், பிரஞ்ஞாத்துமா, அப்பெற்றியனுகிய என்னை'' என்
தனை என்றது சாக்ஷாத்தாக இந்திரனிலே சாமானுதிகரண
ாகப் பெறப்படுகின்றது.

ஸ்ரீ-உபாஸ்வ (கௌஷீ. ௩. உ)

"என்னை வழிபடுக" என்னும் விஷயத்திலேதான் உபாசனுவிதி கேட்கப் படுகின்றது. மற்று வாயிலாக அனைத்தையும் காத்தலின் இந்திரன் பிராணனுகின்றான். பரமைசுவரியத்துவமுடைமையின் அவன் அனைவராலும் வழிபடற்பாலனுகின்றான்.

ஐ இ ராஜா ஐ ர ய ஸா

(தைத். ஆரணி. ௩. கக. உ௫)

"உலகத்தைப் பரிபாலிக்கும் அரசன் இந்திரன்" என்று சுருதி கூறுகின்றது. அதுபற்றி இந்திரனே உபாசிக்கற்பாலன் என உரைக்கப்படுகின்றான் எனின்,

(சித்தாந்தம்) சிவபெருமான் (உபாசியர்) என்பது. எதனால்? ஆனந்தர், ஜரையில்லாதவர், அமிர்தர், பிரஞ்ஞாத்துமா என்னும் விசேஷகுணமனைத்தும் பிராணசப்தத்தினுற் சுட்டப்பட்டவரிடத்துச் சம்பந்தமுறலான்.

ஸஷ பாண ஸவ ப்ரஜ்ஞாத்மா நந்தோ ஜரோ மிருத:

(கௌஷீ. ௩. அ)

"அவரே பிரஞ்ஞாத்துமாவும், ஆனந்தரும், ஜரையிலாதவரும், அமிர்தருமாயுள்ள பிராணன்" என்றது சுருதி.

இ ராஜா (தைத். ஆரணி. ௩. கக. உ௫)

"இந்திரன் இராஜா" என்றவிடத்து, இந்திரசப்தம் சிவபெருமான் மேற்றும் எனப் பிரகரணத்தினுற் சித்திக்கின்றது. (உ௩)

பின்னரும் ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றனர்.

ந வக்துராத்மோபதேசாதிதி சேதத்யாத்ம ஸம்பந்த ஸூமாஹ்யஸ்மிந் (க. க. ௩௦)

(௩௦) வக்தா தன்னையே குறித்து உபதேசித்தலான் அவர் அன்றெனின், இந்தப் பிரகரணத்திலே அத்தியாத்தும சம்பந்தமாகிய குணங்கள் மிகுத்துக் கூறப்பட்டன என (இருக்கப்படும்).

(ஆக்ஷேபம்) உபாசியர் சிவபெருமான் அன்று.

ஸாமேவ விஜாநீஹி த்ரிசீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹநம்

(கௌஷீ. ௩. க)

"என்னையே அறிக; முத்தலையுடைய துவஷ்டாவின் மகனைக் கொன்றேன்" என்றற்றொடக்கத்தனவாக உபக்கிரமத்தில் அறிவுடைய ஆன்மாவாக அறியப்படும் இந்திரனே உபாசியன் எனக் கூறப்படலான். ஆகலின், உபசங்காரவாக்கியமும் உபக்கிரமவாக்கியம்போற் (பொருள்) கோடற்பாலதெனின்,

(உத்தரம்) இது உசிதமன்று; உபக்கிரமத்தினின்று ஆரம்பித்து, இந்தப் பிரகரணத்திலே அத்தியான்ம சம்பந்தமுடைய சிவபெருமானது குணம் பாகுள்ளியமாயிருத்தலின்.

யக்ஷூ8நாஷூாய ஹிதகூ8o 8நஷூவெ (கௌஷீ. ௩. க)

"மனிதனுக்கு எதனை உத்தமமென நினைக்கின்றனை" என உபக்கிரமித்து *இததமோபாசனை ஆரம்பிக்கப்பட்டது. அவ்வுபாசனை சிவதருமம்; அவரை உபாசித்தலே முத்திசாதனத்துக்கு மிக்க பயனுடையதாகலின். (பிரகரண) மத்தியினும்,

வஷெஷூவ ஸாயு கூ8-ஃ காரயதிதo யமெ8ஷூா ஷொகெஷூ உஸிநீஷதெ வஷ ஸவாஸாயு கூ8-ஃ காரயதிதo ய8யொ நிநீஷதெ (கௌஷீ. ௩. அ)

"இவ்வுலகினின்று மேலே அவனை உயர்த்த விரும்புங்கால், அவனை நற்கருமஞ் செய்யுமாறு உஞற்றுகின்றனர்; எவனை மேலுலகத்திருந்து கீழுலகத்துக்குச் செலுத்த விரும்புகின்றரோ, அவனைத் தீக்கருமஞ் செய்ய உஞற்றுகின்றனர்" என்னுஞ் சுருதியினல், சமஸ்த கருமங்களையும் (அவர்) உஞற்றுதல் பெறப்படுகின்றது.

தஷூா ரயஸூாரெஷூ நெமி ரவிகூ-ஃதா நாஹாவரா சவிகூ-ஃதா வவெ8வெதாஹ-ுதமாத்ரா8 ப்ரஜ்ஞாமாத்ராஸூவிகூ-ஃதா8 ப்ரஜ்ஞாமாத்ரா8 ப்ராணெzவிகூ-ஃதா8 (கௌஷீ. ௩. அ)

"இரதத்தின் சக்கரம் பழுக்களினும், பழுக்கள் (ஆரங்கள்) நாபியினும் அர்ப்பிக்கப்பட்டாற் போல, பூதமாத்திரைகள் பிரஞ்ஞாமாத்திரையில் அர்ப்பிக்கப்பட்டன; பிரஞ்ஞாமாத்திரைகள் பிராணனில் அர்ப்பிக்கப்பட்டன" என்னுஞ் சுருதியினுற் சேதனு சேதனப் பிரபஞ்சம் அனைத்துக்கும் ஆதாரத்துவம் பெறப்படுகின்றது. இதுவும் சிவதருமம். இங்ஙனம் சிவபெருமானுடைய் குணம் பாகுள்ளியமாயிருத்தலின் உபாசியன் இந்திரன் அன்று. (௩o)

* மிக்க பயனுடைய உபாசனை.

(ஆக்ஷேபம்) இந்திரன் பசுவாய் உபாசியனல்லனாயினும், (அவன்) தன்னை உபாசிக்குமாறு உபதேசிப்பதென்னை? என ஆக்ஷேபிப,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஶாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத் (க. க. ௩க)

(௩க) வாமதேவரைப் போலச் சாஸ்திரதிருஷ்டியினால் (அவன் தன்னை) உபதேசிக்கின்றான்.

அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி।
(சாந். சு. ௩. உ)

"இந்தச் சீவான்மாவோடு பிரவேசித்து நாமரூபங்களை வகுத்தேன்" என்றற்றொடக்கத்த சாஸ்திரதிருஷ்டியினாலே சர்வசப்தவாச்சியர் சிவபெருமான் (என்று இந்திரன் ஓர்ந்து, சிவபெருமான்) தன் சரீரமாயிருத்தலின், தன் (இந்திர) சப்தத்தின் பொருளாயுள்ள சிவபெருமான் உபாசிக்கற்பாலர் என உபதேசித்தனன். ஆகலின், இந்திர சப்தத்தினாற் சிவபெருமான் உபதேசிக்கப்படுகின்றனர். *"வாமதேவர் போல" எனத் திருஷ்டாந்தம் (சூத்திரகாரர்) கூறுகின்றனர். வாமதேவர் தமக்குச் சிவபெருமான் ஆன்மாவாயிருக்கின்றனர் என்னும் (சோஹம்பாவனை) திருஷ்டியினால்,

அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச (பிரு. ௩. ச. க0)

"நான் மனுவும் சூரியனுமாயினேன்" என உபதேசித்தாற் போல்வது இந்திரனது உபதேசமுமாம். இன்றேல், வேதாந்த ஞானத்தினாற் கிடைத்த பிரம ஆன்மபாவனையின்றிப் பிரமபாவத்தை அடைந்து, மனுஷ்யாதி தேக விஷயத்திற் கற்பிக்கப்படும் அஹம்பாவம் குவிய, உலகாகாரமாயிருக்கும் கரையிறந்த †பரமாஹம் பாவமுற்ற வாமதேவர் தமது ஆன்மசோஹம் பாவனையினாலே வியாபகமுற்று வேற்றுமையின்றி உலகமாய் நின்றமையினாலே, சூரியன் மனு முதலியோரை அடக்கிய பிரபஞ்சம் தாம் என்று உரைத்தார்; இங்ஙனம் இந்திரன் விஷயத்தினுமாம் என நிச்சயிக்கற்பாற்று.

ப்ராணோ஽ஸ்மி ப்ரஜ்ஞாத்மா (கௌஷீ. ௩. உ)

---

*உபக்கிரமணிகை உ௬௬-ஆம் இலக்கம் பார்க்க.

†சோகம்பாவனையினால் வாமதேவர் கிருஷ்ணர் என்போர் உலகெலாமாகி நின்றமை சிவஞானபோதச் சிற்றுரை உ-ஆஞ் சூத்திரத்து ௪-ஆம் அதிகரணத்து "அரக்கொடு" என்னுங் கிருவெண்பாவின் கீழ்க் காண்க.

"பிரஜ்ஞாத்துமாவாகிய பிராணனாயிருக்கின்றேன்" என்றவிடத்துப் பிராணசப்தம் பரப்பிரமத்தின் மேற்று;

ப்ராண ஏஷ ப்ரஜ்ஞாத்மா நந்தோ ஜரோ ம்ருத:|
(கௌஷீ. ௩. ௨)

"பிராணனே பிரஜ்ஞாத்துமா, ஆனந்தம், அஜரம், அமிர்தம்" எனச் சுருதி கூறுமாறு, அவர் ஆன்ந்தரூபராய் அனைத்துக்கும் பிராணஹேதுவாயிருத்தலின். அங்ஙனம்,

அஹம் ப்ரஹ்மாஸ்மி (பிரு. ௩. ௪. ௧0)
மாமுபாஸ்வ (கௌஷீ. ௩. ௨)

"நான் பிரமமாயிருக்கின்றேன்; என்னை வழிபடுக" என்னுஞ் சுருதிகளும் பிரமதிருஷ்டியினாற் போந்த உபதேசமே; அங்ஙனமன்றோ கிருஷ்ணர் முதலாயினோர் அர்ச்சுனர் முதலாயினோர்க்கு உபதேசித்தனர். (௩௧)

பின்னரும் சூத்திரகாரர் ஆக்ஷேபித்து உத்தரம் இறுப்பாராயினர்.

ஜீவமுக்ய ப்ராணலிங்காந்நேதி சேந்நோபாஸா த்ரைவித்யா தாஶ்ரிதத்வாதிஹ தத்யோகாத் (௧. ௧. ௩௨)

(௩௨) ஆன்மாவுக்கும் பிராணமுக்கியத்துக்கும் இலிங்கமொன்றுதல்பற்றி, அது (பிரமம்) இல்லையாமெனின், அன்று; (பிரம) உபாசனை மூவகைப்பட்டதாய், அது அவற்றிற்கு ஆதாரமாய், பொருத்தமாயிருத்தலின்.

(ஆக்ஷேபம்) பிரமஞானோபாசனையினாலே பிரமபாவத்தை அடைந்து, ஆன்மபாவமொழிந்து, அந்தப் பிரமரூபதிருஷ்டியினாலே (இந்திரன்) தன்னை வழிபடுக என்றும், தான் சர்வவியாபகன் என்றும் உரைத்தமை யுக்தம்.

த்ரிஶீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹநம் யாவத்த்யஸ்மிஞ்சரீரே ப்ராணோ வஸதி தாவதாயு: (கௌஷீ. ௩. ௧)

"நான் முத்தலையுடைய துவஷ்டாகுமாரனைக் கொன்றேன்; சரீரத்திலே பிராணன் இருக்கும் வரைக்கும் ஆன்மா இருக்கின்றது" என்றற்றொடக்கத்த சுருதிகளில் ஆன்மத்துவலிங்கமும் பிராணமுக்கியத்துவலிங்கமும் காணப்படுகின்றன. ஆகலின், இவ்வுபதேசம் யுக்தமின்றாம் எனின்,

(உத்தரம்) அங்ஙனங் கூறுவது தக்கதன்று; ஆன்மா பிராணன் என்னும் இரு மொழிகளின் பொருளாயினர் சிவபெருமான் எனல் உசிதம்; உபாசனை முத்திறப்படுதலின். பரப்பிரமசொரூபமாகவும், போக்தாவின் (ஆன்மாவின்) சொரூபமாகவும், போக்கியத்தின் (புலப்படும் பொருளின்) சொரூபமாகவும் ஈண்டு உபாசனை முத்திறத்ததாகக் கூறப்பட்டது; (போக்தா போக்கியம்) என்னும் இரண்டும் அவர் வடிவமாய் அவரை ஆதாரமாய்க் கோடல்பற்றிப் பொருத்தமாதலின். சிவபெருமானுடைய சொரூபோபாசனை தாமசமின்றி மோக்ஷத்துக்கு ஏதுவாகும். *(போக்தா போக்கியம்) என்னும் இரண்டும் காலவிளம்பத்தில் முத்திபாலிக்கும். ஆகலின், இந்திரனுக்குச் சிவபெருமான் ஆன்மாவாதல்பற்றி, இந்திரன் உபாசிக்கற்பாலன் என நிர்ணயிக்கப்பட்டது.

---

* முத்திற உபாசனைகளுள்ளே போக்தாவாகிய இந்திரன் தன்னைப் பிரமமாகக் கூறியது போலவே, (போக்தாவாகிய) கிருஷ்ணரைப் பிரமமாகப் பகவற்கீதை கூறியதூஉமாம். ஆகலின் இவ்வுபாசனை காலவிளம்பத்திற் பயன் கொடுக்குமன்றி நேரே மோக்ஷத்துக்கு ஏதுவாகாது.

முதலாம் அத்தியாயத்து

இரண்டாம் பாதம்.

———o———

(க) சர்வத்திரப்பிரசித்தாதிகரணம்.

பிரமத்தைப் போதிக்கும் வேதாந்த வாக்கியங்கள் அனந்தமாதலின், ஒவ்வோர் வாக்கியத்தையுமெடுத்துதகரித்து விசாரித்தல் கூடாது. அது பற்றிச் சந்தேகாஸ்பதமாகிய சில வாக்கியங்களை உதகரித்தல் வாயிலாக, மற்றைய வாக்கியப் பொருள்களும் அந்நியாயங்கள் கொண்டு நிர்ணயம் செயற்பாலன. சில வாக்கியங்கள் தாற்பரியலிங்கசமன்வயத்தினாற் பிரமத்தை உணர்த்துவன என்று சூத்திரிக்கப்பட்டன.

அவற்றுள்ளே ஸ்பஷ்டலிங்கங்கள் சில முதற்பாதத்தில் விசாரிக்கப்பட்டன.

அதிகம் ஸ்பஷ்டமாகா இலிங்கங்கள் சில இரண்டாவது பாதத்திற் சூத்திரகாரரால் விசாரிக்கற்பாலனவாயின.

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 (க. உ. க)

(௩௩) *சர்வவியாபியாயினாரை உபதேசிப்பதால் (இவ் வாக்கியம் சிவபெருமான் மேற்று).

𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑍋 𑌭𑌾𑌰𑍂𑌪𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪 𑌆𑌕𑌾𑌶𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌃 (சாந். ௩. கச. உ)

“மனோமயரும், பிராணசரீரரும், சோதிசொரூபரும், சத்தியசங்கற்பரும், ஆகாயவியல்பினரும், சர்வகர்மரும், சர்வகாமரும்” என்னும் சாந்தோக்கியோபநிடத சுருதியே விஷயம்.

ஈண்டு மனோமய (ஞானமய) முதலிய தர்மமுடையாராகக் கேட்கப்பட்டவர் சிவபெருமானா? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இது ஆன்மாவை உணர்த்திற்று. எதனால்? இவன் மனுதியும் அடுத்துநின்றமையின்.

---

*எல்லாவுலகுமானாய்நீயேயேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயேஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயேபுகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ.
(திருவையாறு, ௩௮, எ)

ஊய ஹவா க்ரதுமயேஷு புருஷோ யதா க்ரதுரஸ்மிம்ஸ்லோகே புருஷோ ஹவதி தயேதஃ ப்ரேத்ய ஹவதி ஸ க்ரதும் குர்வீத (சா. ௩. ௧௪. ௧)

"பின்னரும் மனிதன் அறிவுடையவன்; எங்ஙனம் இவ்வுலகில் அவன் அறிவு நிகழ்கின்றதோ, அங்ஙனமே இவ்வுலகத்தைத் துறந்த பின்னும் அவன்; ஆகலின் அவன் இவ்வறிவையும் விசுவசிப்பையும் அடைவானாக" என [மேலே உதகரித்த (விஷய) வாக்கியத்துக்கு (சாங். ௩. ௧௪. ௨) முன் வாக்கியமாகக் காணப்படும் இவ்வாக்கியத்திலே (சாங். ௩. ௧௪. ௧)] இவ்வு லகத்திலும் மறு உலகத்திலும் கன்மவயத்தினாற் சுழன்று திரிபவன் ஆன்மா என்று கூறிய பின்னர், "மனோமயன்" என்பது கேட்கப்படுகின்றது. ஆகலின் மனோமயமுதலிய தருமமுடையவன் ஆன்மா; மனோமயமுடை மை பிராணசரீரமுடைமை முதலிய சம்சாரலக்ஷணம் சிவபெருமானுடைய இலிங்கம் அன்று, 'சத்தியசங்கற்பம்' என்றதைச் சதி அசங்கற்பம் என்று பிரித்து, யதார்த்தமாகிய "சத்திலே கருத்திறங்காதவன்" எனப் பொருட் படுத்தல்பற்றிச் "சத்தியசங்கற்பம்" என்றது சம்சாரியாகிய ஆன்மாவுக் குரிய குணமாக யோஜிக்கற்பாற்று. ஆகலின் எப்பிரகாரத்தானும் மனோ மய முதலிய தர்மமுடையவன் ஆன்மாவேயாம், சிவபெருமான் அன்று என ஆசங்கிப்பின்,

(சமாதானம்) கூறுதும். *மனோமயமுதலிய தர்மமுடையார் சிவ பெருமானே. எங்ஙனம்?

ஸவ-ும் வஜிதம் ப்ரஹ்ம தஜ்ஜாநிதிராந உபாஸீத|
(சாங். ௩. ௧௪. ௧)

"இவை அனைத்தும் பிரமம்; தோற்றம், நிலை, இறுதியாம் இவை பிரமத்தி னாலாகலின், ஒருவன் அதனை உபாசிப்பானாக" என்னும் உபக்கிரமசுருதி யிலே சிவபெருமானே அனைத்துக்குங் காரணராய் உபாசிக்கற்பாலரென உபதேசிக்கப்படுகின்றமையின். இச்சுருதியின் தாற்பரியம் வருமாறு:— படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் பிரமத்தின்பாலன; சித்தும் அசித்துமாயுள்ள இவையனைத்தும் பிரமமேயாகலின், ஒருவன் சாந்தமுடையனாய்ப் பிரமத்தை உபாசிக்க என்பதாம். சமுத்திரத்திற் றோன்றி நின்றொடுங்கும் குமிழிக்கூட்டங்கள் ஜலமாயிருத்தல் போன்று, (பரா) சத்தியாரோடியைந்த பிரமத்தினுலெய்தும் படைப்பு முதலியன அப் பிரமமயமாகவேயன்றி, மற்றோர் பிரகாரமாகக் காணப்படுகின்றில. அங் ஙனமே,

* மனோமயன் என்றதில் மயசு ப்ரத்யயம் இலக்கத்திற் கண்டவாறு ஞான சத்தியின் மேற்று.

அஹமேக: ப்ரத²மமாஸம் வர்த்தாமி ச ப⁴விஷ்யாமி ச நாந்ய: கஶ்சிந்மத்தோ வ்யதிரிக்த: (அதர்வசிரசு. க)

"நான் ஒருவனே முதற்கண் இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன், எனக்கு வேறாகப் பிறர் யாரும் இல்லை" என அதர்வசிரசிலே சிவபெருமானால் நிரூபிக்கப்பட்டது. பின்னரும்,

ப்³ரஹ்மாஹம் (அதர்வசிரசு. க)

"பிரமம் நான்" என்றற்றொடக்கத்தவற்றால் பிரபஞ்சம் அனைத்தும் அவர் வடிவமென விரித்துரைக்கப்பட்டது.

ஸோऽந்தராத³ந்தரம் ப்ராவிஶத் (அதர்வசிரசு. க)

"அவர் மறையினும் மறைவாய் உள்ளவற்றுள்ளே பிரவேசித்தனர்" என்னும் சுருதியிலே "பிரபஞ்சத்துட் பிரவேசித்தமை" என்றது பிரபஞ்சம் அனைத்தும் அவர் சொரூபம் என உணர்த்துதற்குப் போந்த காரணமாதலை உணர்த்திற்று. பிரமத்துக்கு வேறாகப் பிரபஞ்சத்துக்குப் படைப்பு, நிலை, இறுதி இல்லையாமாகலின், அப்பிரபஞ்சம் பிரமத்தினின்று வேறுபடாது. இதுபற்றியே,

ஶக்தயோऽஸ்ய ஜக³த்க்ருத்ஸ்நம் ஶக்திமாம்ஸ்து மஹேஶ்வர:।
ஶக்திஸ்து ஶக்திமத்³ரூபாத்³வ்யதிரேகம் ந வாஞ்ச²தி।
தாதா³த்ம்யமநயோர்நித்யம் வஹ்நிதா³ஹகயோரிவ
ஶக்திஶக்திமதோர்யஸ்மாத³தோ ஹேதோ ஸ்வஸம்பா⁴வ்யதித:।
அத: ஸ்த³ஞ்சேயஶ்ச்யேஷா த்³வாராஶக்தி: பராத்மந:।
நவஹ்நேர்தா³ஹிகாஶக்திர்வ்யதிரிக்தா விபா⁴வ்யதே॥

"இவ்வுலகெலாம் அவர் சத்திகளே; மகேசுவரர் சத்திமான்; சத்திமானை விட்டுச் சத்தி வேறுபடார்; *(சத்தியும் சிவமுமாம்) இருவரின் தாதான்மியம் அக்கினியும் சூடும் போல நித்தியம், சத்திக்கும் சத்திமானுக்கும் எக்காலத்தும் †பிரிவில்லையாமாகலின். அவ்விருவரும் ‡குணமும் குணியுமாதல்பற்றிப் பராசத்தியார் பரமான்மாவுக்கு உரியர். அக்கினியின் சுடுஞ்சத்தி தீயினின்று வேறாகக் கொள்ளப்படுவதில்லை" என்றற்றொடக்கத்தனவாக அபியுக்தர் உரைக்கின்றனர்.

---

* உபக்கிரமணிகை ௧௧-ஆம், ௪௦௨-ஆம், ௧௩௮-ஆம், ௧௫௬-ஆம், ௧௭-ஆம் இலக்கங்களைப் பார்க்க.

† ஊரானையுலகேழாய்நின்றான் றன்னையொற்றைவெண்பிறையானையுமை
யோடென்றும், பேரானைப்பிறர்க்கென்று மரியான்றன்னை.
(திருவாலவாய், திருத்தாண்டகம், ...)

‡ விரிக்கிமொளியைத்திகிரியேமதியுளாயிறும்விளக்கிடமாட்டா
திருக்கியவொளியுமன்னவைதம்மைநீங்கியேசேர்ந்திடாததுபோல

ஶக்த்யாதி ச ப்ருதிவ்யந்தம் ஶிவதத்த்வஸமுத்பவம்।
தேநைகேந து தத்வ்யாப்தம் ம்ருதா கும்பாதிகம் யதா॥

(வாயு. பூ. உ௫: க௮, க௯)

பராஸ்ய விவிதா ஶக்தி: ப்ரபோதாநந்தரூபிணீ।
ஏகாநேகஸ்வரூபேண பாதி பாநோரிவ ப்ரபா॥

(வாயு. உத். அ: க)

"சத்திதத்துவமுதற் பிருதிவி ஈருயுள்ள தத்துவம் *சிவதத்துவத்தினின்று பிறந்தது; கும்பமுதலியன மண்ணினுல் வியாபிக்கப்பட்டாற் போல, அச் சிவதத்துவத்தினுல் அது வியாபிக்கப்பட்டது; ஞானனந்தரூபிணியாய்ப் பலதிறப்படும் பராசத்தி சூரியனிற் கிரணம் போல ஏகாநேகரூபமாய் விளங் குகின்றனர்" என வாயுசங்கிதையிற் கூறப்பட்டது.

பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபல க்ரியா ச (சுவே. சு. அ)

ஏகோ ஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்துர்ய இமாம்ல்லோகாநீஶத ஈஶநீபி: பரமஶக்திபி: (சுவே. ந. உ)

"இவர்க்குச் (சிவபெருமானுக்குப்) †பராசத்தியார் சுவாபாவிகமாய் ஞான சத்தி, பலசத்தி (இச்சாசத்தி), கிரியாசத்தி எனப் பலதிறப்படுவாராய்க் கேட்கப்படுகின்றனர்; எவர் ஆளுகின்றனவும் பிறப்பிப்பனவுமாகிய பரம சத்திகொண்டு உலகம் அனைத்தையும் ஆளுகின்றனரோ, அவர் ஏகராகிய உருத்திரர்; இரண்டாவதற்காக அவர்கள் இருந்திலர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் பரப்பிரமமானது உலகத்தைப் படைத்து ஆஞ்ஞாபித்துக் காக் கும் முடிவிலாச் சத்தியை இயல்பாகவுடையதெனக் கூறுகின்றன. அநே கஞ் சொல்லி என்! சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களினுலும், அபி யுக்தருக்திப்பிரமாணத்தினுலும் சகல சேதனுசேதனப் பிரபஞ்ச மகாவிபூதி ருடையாய், மகாசச்சிதானந்த சத்தையாய், சுவதந்திரமுடையதாய், தேச காலங்களினுல் வரையறுக்கப்படாததாயுள்ள பராசத்தியார் அப்பரப்பிரம சிவனுர்க்கு இயல்பாய் வாய்ந்து, அவர்க்கு ‡உருவமும் குணமுமாய் மூற்று

விருந்தம்பிறையுமிறைவியுமொன்றுபுறைகுவரிறைவியாலிறைவன்
பொருந்திடப்போகமுத்திநன்குதவிப்பொற்புறுசத்திமானுவான்.
(வாயுசங்கிதை, சிவஞ்சத்தி விபூதியுரைத்தவத்தியாயம், ௫)

*"வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட விஞவிடை" க-ஆம் இலக்கந் தொடுத்து கச-ஆம் இலக்கம் வரையிற் பார்க்க.

†உபக்கிரமணிகை கஙெ-ஆம் இலக்கத்திற் பார்க்க.

‡உமையலாதுருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராகவர்தன்மையேதிமையில்லை.
(திருவையாறு, திரிநேரிசை, நாவு, க)

ின்றனர். அப்பராசக்தியாரை விடுத்துப் பரப்பிரமத்துக்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவம், சர்வகாரணத்துவம், சர்வநியந்திருத்துவம், சர்வோபாசியத்துவம், சர்வாநுக்கிராககத்துவம், சர்வபுருஷார்த்தஹேதுத்துவம், சர்வவியாபகத்துவமுதலியவும் இன்று. மேலும் மகேசுவரர், சிவன், மகாதேவர், உருத்திரர் முதலிய பரமநாமங்களும் அவர்க்கு எய்தா. அங்ஙனம் சர்வசேதநாசேதனப் பிரபஞ்சசரீரவிசிஷ்டமுடைய பிரமம் சர்வசப்தத்தினாற் கூறப்படுகின்றது. நீலம் என்னும் பதமானது நீலநிறத்தை மாத்திரமன்றி, தன்னையுடைய நீலோற்பலத்தையும் உணர்த்தினாற் போல, பிரபஞ்சம் என்னும் பதமும் பிரமத்தை உணர்த்துகின்றது. ஆகலின்,

ஸர்வோ ஹ்யேஷ ருத்ர: (தைத். ஆரணி. க௦. உச. சஉ)

"(சர்வமும்) அனைத்தும் நிச்சயமாய் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் சர்வ என்னும் சப்தத்தினால் உணர்த்தப்படுவது பிரமமெனக் கூறுகின்றன. அங்ஙனமே,

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம (சாந். ௩. கச. க)

"(சர்வம்) இஃதெல்லாம் நிச்சயமாய்ப் பிரமம்" என்ற சுருதி சர்வசேதநாசேதனப் பிரபஞ்சத்தைச் சரீரமாகவுடைய பிரமத்தை உணர்த்துகின்றது. இந்தப் பிரபஞ்சம் பிரமத்தின் சொரூபமாய்த் துவேஷமுதலியவற்றுக்கு விஷயமாகாமையின், யாவரும் சாந்தமுடையராய்ப் பிரமத்தை உபாசிப்பாராக. இந்தப் பொருள் பௌராணிகர் வாக்கினாலும் வெளிப்படுகின்றது.

விஷ்ணோஸ்து தேவதேவஸ்ய விஶ்வரூபஸ்ய சாவ்யய:।
ஸங்கர்ஷணஞ்ச ஸர்வம் பாவம் பரமேஶ்வர:॥

(வாயு. உத். சு: க)

விசேஷசிந்திதானாம் ப்ராஹ்மணாநாம் வ்யோமவிக்ஷேதானாம்।
விஷ்ணு விஷ்ணுர்வம் ஸர்வம் விஶ்வம் விஶ்வரூபதாமவித்தம:।
ரூபமேவஸ்ய ஸதேவோபா விஶ்வம் தஸ்ய வபு யத:॥

(வாயு. உத். சு: எ)

ஸர்வஸ்ய ஸாக்ஷிண ஸத்யஸ்ய ஸர்வேஶ்வர ப்ரயோஜகே।
விகல்பிதே ச ஸஹஸ்ரை: கல்பிதே தேவதாதிபி:।
ஸஹஸ்ரஸ்ய ஜகத்விஶ்வம் ஶரீரம் பரமேஷ்டிந:॥

(வாயு. உத். சு: கக, கஉ)

ப்ரக்ஷஸ்ய ஶ்ரேஷ்டஸ்ய தஸ்ய ஸர்வ: ஸம்ஷ்டிதி தேவ யயா।
ஶிவஸ்ய பூஜயா தத்த்வஷ்டஸ்ய வபுர்ஜகத்॥

(வாயு. உத். ச: உக)

ஆத்மா தஸ்யாஷ்டமீ மூர்த்தி: ஶிவஸ்ய பரமாத்மந:|
வ்யாபிகேதரமூர்த்தீநாம் விஶ்வம் தஸ்மாச்சிவாத்மகம்||
(வாயு. உத். ச: உஅ)

தேஹிநோ யஸ்ய கஸ்யாபி நிக்ரஹ: க்ரியதே யதி|
அநிஷ்டமஷ்டமூர்த்தேஸ்தத் ஸ்ம்ருதம் நாத்ர விசாரணா||
(வாயு. உத். ச: ஙஉ)

ஸர்வோபகாரகரணம் ஸர்வாநுக்ரஹணஞ்சயா|
ஸர்வாபயப்ரதாநஞ்ச ஶிவஸ்யாராதநம் விது:||
(வாயு. உத். ச: ஙo)

*"தேவாதிதேவருடைய வடிவம் இந்தச் சராசரம்; இவ்வுண்மையைப் பாசமிகுதியினுற் பசுக்கள் அறிகின்றில; சேதனத்தை (பசுவை) வித்தை எனவும், அசேதனத்தை (பாசத்தை) அவித்தை எனவும் கூறுவர்; வித்தை அவித்தை என்னும் பிரபஞ்சம் அனைத்தும் சந்தேகமின்றி வியாபகராகிய விசுவகுருவின் சரீரம்; விசுவம் அவர் வசத்ததாகலின். சத் என்னும் மொழி சத்துக்கும் சாதுவுக்கும் செல்லும் என்று சத்துக்களாற் பிரயோகிக்கப்படுகின்றது. அசத்து என்றது அவற்றுக்கு மாறுனவற்றை உணர்த்தும் என்று வேதவாதிகள் கூறுவர். சத்தும் அசத்துமாயுள்ள விசுவம் அனைத்தும் சிவபிரானுருடைய சரீரம்; † விருக்ஷமூலத்திலே இறைத்த நீரால் அம்மரச் சாகைகள் புஷ்பிக்குமாறுபோல், சிவபெருமானுடைய பூசையினுல் அவர் சரீரமாகிய உலகம் செழிக்கின்றது; பரமான்மாவாகிய சிவபெருமானுக்கு எட்டாவது மூர்த்தம் மற்றைய மூர்த்தங்களுள்ளே வியாபகமாகிய ‡ ஆன்மா; ஆகலின் உலகமனைத்தும் சிவசோரூபம்; எந்தத் தேகமு

* நிறைந்தானைநீர்நிலந்தீவெளிகாற்
ருகிநிற்பனவுநடப்பனவுமாயினனை.
(திருநாகேச்சரம், திருத்தாண்டகம், நாவு, கூ)

நிற்பனநடப்பனயாவுநோர்ந்திடிற்
பொற்புறுசடையுவனுருவம்போலுமா
லற்புதப்படவிவ்வாறமர்வனென்பதைச்
சொற்படுபசுக்கடாந்தோன்றவோர்ந்திடா.
(வாயுசங்கிதை, பரசிவப்பிரபாவமுரைத்தவத்தியாயம், ௲க)

† வேரினிற்றெண்ணீர்வார்த்திடத்தருவின்கொம்புகள்மிகத்தழைப்பதுபோற்
சூரணிகொன்றையண்ணலைப்பூசைசெய்திடிலுலகெலாந்தழைக்கு
மேர்பெறவாதலான்மணிவண்ணுவிறைவனைப்பூசியென்றுரைத்தான்
பாரொடுவிசும்பும்புகழ்ந்தெடுத்தேத்திப்பணியுபமன்னியுவென்பான்.
(வாயு, பஞ்சப்பிரமவட்டமூர்த்தமுரைத்தவத்தியாயம், அ)

‡ இருநிலனுய்த்தீயாகிநீருமாகியியமானனுயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிருகியாகாசமாயட்டமூர்த்தியாகி.
(பொது, நின்றதிருத்தாண்டகம், நாவு, க)

டிய ஆன்மாவேனும் நிக்கிரகத்துக்கு ஆளாயின், அது முழுமையும் அட்டமூர்த்தமுடையார்க்கு வெறுப்பாய் முடியும்; இதனையுற்று ஆராயவேண்டியதின்று; எல்லோர்க்கும் உபகாரமாயிருத்தலும், யாவர்மீதும் அருளுடைமையாதலும், எல்லோர்க்கும் அபயப்பிரதானஞ் செய்தலுமாம் இவையனைத்தும் சிவாராதனம் என்று கொள்ப; பிரமம் சர்வாகாரமாயிருத்தலிற் சர்வம் பிரம்ம" என்றும்,

ஶாஂத உபாஸீத (சாந். ங. கச. க)

"ஒவ்வொருவரும் சாந்தமாய்ப் பிரமத்தை உபாசிக்க" என்றும் கூறல் பொருத்தம். ஆகலின், உபக்கிரமத்திலே உபாசிக்கற்பாலதாகக் கூறப்பட்ட பிரமமே மனோமய (ஞானமய)த்துவமுதலிய தர்மத்தையுடையதாகும். (இதற்குரிய) மனோ (ஞான) மயத்துவாதி குணம் சம்சாரிக்குரிய இலக்ஷணமன்று; பிரமமானது உபாசிக்கற்பாலதாம் ஓர் வடிவம் வாயிலாகப் பரிச்சேதமுறலான். தனது நினைவு உடையனாகக் கூறப்படும் ஆன்மாவை ஞானமயமுடையனாக மேலே உரைத்தமை அயுக்தம். உபாசனை விதிக்கும் வாக்கியத்திலே, படைப்பாதி விசிஷ்டகுணத்தையுடைய பிரமம் உபாசனைப்பொருளாகப் பொருட்படுத்தப்படவேண்டியவிடத்து, இடையில் ஆன்மாவை உபாசனைப் பொருளாகக்கொண்டு புகுத்தல் கூடாது; விசுவதேவர் சம்பந்தமாகிய * ஆமிக்ஷாவில் வாஜின்களுக்குரிய வாஜினைவைப் பிரவேசிப்பித்தல் (மீமாஞ்சையிற்) கூடாதவாறுபோல. ஆகலின், பிரமமே ஞானமயமுதலிய குணங்களோடு உபாசிக்கற்பாற்று. (க)

(ஆக்ஷேபம்) உபக்கிரமத்திலே கூறிய பிரமமே மனோமயமுதலிய விசிஷ்டதருமமுடையதாகக் கூறப்பட்டவிடத்து, அவாந்தரத்தில் எய்திய ஆன்மாவைப்பற்றிப் பிரசங்கித்தல் அநர்த்தமாகுமாம் என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

விவக்ஷித குணோபபத்தேஶ்ச (க. உ. உ)

(ங. ச) உரைக்கப்பட்ட குணங்கள் பொருத்தமாதலினாலும்.

"சத்தியசங்கற்பத்துவம்" "சத்தியகாமத்துவம்" என்பனவாதியா உரைக்கப்பட்ட குணங்கள் பிரமத்துக்குப் பொருந்துதலான், அந்தப் பிரமமே உபாசிக்கற்பாற்று; அவாந்தரமாகச் சித்தித்த ஆன்மா உபாசகன்

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்
(திருத்தோணோக்கம், ௫)

என்ப இயமானன், மைந்தன் என்பன சிவபிரானது எட்டாவது மூர்த்தமாகிய ஆன்மாவின் மேற்று.

* பூருவமீமாஞ்சை. ௨. ௨. ௨௩.

ஆண்டு உபாசியப்பொருளாகிய பிரமத்துக்கு உபாசகன் ஆவசியகம் அபே க்ஷிக்கப்படுதலின், அந்த ஆசங்கை ஒவ்வாது. (௨)

(௨) சாரீராதிகரணம்.

ஈண்டுச் சாமானியமாக ஆன்மா உபாசியனுகான், பின் உபாசகனும் என்று மேலே நிரூபிக்கப்பட்டது. பின்னும் சமஸ்த ஜீவசமஷ்டிரூப இரண் ணியகருப்பருக்கு உபாதானகாரணராகிய நாராயணரும், விசுவாதிகப் பிர மத்தை உபாசிப்பவராமன்றித் தாம் உபாசியராகார் என உரைத்தற்கெழுந் தது இவ்வதிகரணம்.

ஈநாவவமெதூஷாந ஶாரீரஃ (க. உ. ௩)

(௩௫) ஆயின் பொருந்துமாறின்மையிற் சரீரி அன்று.

வஶ்வஂவிஶ்வஸ்யாமெத்ஶ்வரஂ ஶாஶ்வதஂ ஶிவமச்யுதஂ நாராயணஂ ஈஹாஜேயஃ (தைத். ஆரணி. க௦. கரு. உசு)

"விசுவபதியும், ஆன்மாவும், ஈசுரரும், நித்தியரும், நல்லோரும், அழிவில் லாதவருமாயுள்ள நாராயணரே மிகுதியும் அறியற்பாலர்" என்றற்றொடக் கத்த மகோபநிடத சுருதியே ஆராயற்பாலதாகிய விஷயம்.

விசுவபதித்துவாதி இலக்ஷணமுடையராகக் கூறப்பட்டவர் நாராயணர் எனப்படும் மூர்த்தியான்மாவா? சிவபெருமானு? மற்றொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்).

ஸஹஸ்ர ஶீஷ-ஂ தேவஃ।

(தைத். ஆரணி. க௦. கரு. உசு)

(முதலாவது). "ஆயிரஞ் சிரசுடைய தேவர்" என்று சுருதி தொடங்கி ஆயி ரம் தலை முதலியவற்றை விதித்தல் வாயிலாக, மூர்த்தியான்மாவாகிய நாரா யணரே உத்தேசியமாக அப்பியாசலிங்கத்தினுற் கூறப்படலானும்,

ஸமுத்ரெ௨ந்தஂவிஶ்வஶஂஹுவஃ।

(தைத். ஆரணி. க௦ கரு. ௩௦)

(இரண்டாவது). "சமுத்திரத்தில் இருப்பவரும், உலகத்துக்கு நன்மை செய்பவரும்" எனச் சமுத்திரத்திற் சயனித்தலாதிய இலக்ஷணங்கள் அவ ருக்குக் கூறப்படலானும்,

(மூன்றுவது). நாராயணரது பரியாய நாமங்களாகிய அச்சுதன், அரி முதலிய சப்தப்பிரயோகங்கள் காணப்படலானும் நாராயணராகிய மூர்த்தி

யான்மாவே விசுவபதித்துவ முதலிய இலிங்கத்தினுற் பிரதிபாதிக்கப்பட்டா ரெனின்,

(சித்தாந்தம்) நாராயணரது ஆன்மா சிவபெருமான். எங்ஙனம்? விசுவ பதித்துவமுதலிய சிவ குணங்கள் நாராயணர்க்குச் செல்லாவாமாகலின்.

வஶூநாம பதயெ வ்ருக்ஷாணாம பதயெ ஜகதாம பதயெ|

(தைத். சங்கிதை. ௪. ரு. ௨, க, ௨)

“பசுக்களுக்குப் பதியாயினர்க்கும், விருக்ஷங்களுக்குப் பதியாயினர்க்கும், உலகுக்குப் பதியாயினர்க்கும் (நமஸ்காரம்)” என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சமஸ்த புவனுதிபத்தியம் சிவபெருமானுக்கே அடுத்தடுத்து உரைக்கப்பட்டது.

ஏகொஹி ருத்ரொ நத்விதீயாய தஸ்து ய இமாந் லொகாந் ஈஶத ஈஶநீபி: (சுவே. ௩. ௨)

“எவர் உலகங்களையெல்லாம் ஆளுஞ் சத்தியினுலே ஆளுகின்றனரோ, அவர் ஏகராகிய உருத்திரர்; அவர்கள் இரண்டாவதற்காக இருந்திலர்” என்னும் சுருதியினுல் உருத்திரர்க்கு வேருக (மற்றொருவர்க்கு) ஜகதீசுவரத்துவம் இல்லை என்றுரைக்கப்பட்டது.

விஶ்வாதிகொ ருத்ர:|

(தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

“விசுவாதிகர் உருத்திரர்” என்னும் சுருதியானது பிரபஞ்சத்துக்கெல்லாம் நாயகத்தன்மை அவர்க்கே என்று கூறுகின்றது. உலகத்துப் பதித்துவமாதன் முதலிய இலக்ஷணமுடையார் நாராயணர்க்கு ஆன்மாவாயுள்ள சிவ பெருமானே என்பது சமீசீனம். (௩)

(ஆக்ஷேபம்) “நாராயணுன்மா” என்றதை நாராயணர்க்கு அந்தரியாமியாயுள்ள சிவபெருமான் எனப் பொருளுரைத்தல் அயுக்தம்.

நாராயணபரம ப்ரஹ்ம (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௨௯)

“நாராயணபரம்பிரம்ம” என்னுஞ் சுருதி “நாராயணர் பரப்பிரமம்” எனக் கூறி,

ப஦்மகொஶ ப்ரதீகாஶம் (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௩௦)

பின்னரும் “கமல முகையை யொத்த” என்னும் சுருதி இதயகமலத்திலே புருஷன் இருக்கின்றனன் என உரைத்து,

தஸ்யாஶிகாயா மத்யெ (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௩௦)

"அதன் மத்தியிலே அக்கினி சிகை" என்னும் சுருதி சிவான்மசொரூபம் கூறி,

தஸ்யாஶ்ஶிகாயா மத்⁴யே பரமாத்மா வ்யவஸ்தி²த:।

(தைத். ஆரணி. க0. க௩. ௬0)

"அந்தச் சிகையின் மத்தியிலே பரமான்மா ஸ்தாபிக்கப்பட்டனர்" என்னுஞ் சுருதி நாராயணரே சிவாந்தரியாமியும் பரமான்மாவுமாம் என்றும் கூறலான், நாராயணர் உபாசியரென அறியப்படுகின்றனர்.

ஸ ப்³ரஹ்மா ஸ ஶிவ: (தைத். ஆரணி. க0. க௩. ௬0)

"அவர் பிரமன், அவர் சிவன்" என்றற்றொடக்கத்த சுருதியாற் பிரமன் சிவன் முதலாயினோரெல்லாம் அவரது விபூதி என்று கூறப்படுகின்றனர். ஆகலின், நாராயணரே விசுவபதியாகிய பரப்பிரமமாயும் சிவனுக்கு அந்தரியாமியாயும் உபாசிக்கற்பாலர். ஆகலின் சிவபெருமானை நாராயணருடைய ஆன்மா என்றும், நாராயணர்க்கு மேலானவர் என்றும், அவரால் உபாசிக்கற்பாலர் என்றும் கூறல் நியாயமன்றென ஆக்ஷேபிக்க,

(சமாதானம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கர்மகர்த்ருவ்யபதே³ஶாச்ச (க. உ. ௪)

(௬௯) (அவர்கள்) *கர்மமும் கர்த்தாவுமாக உரைக்கப்படலானும்.

ஈண்டுச் சிவபெருமானும் நாராயணரும் முறையே தியேயப்பொருளும் தியாதாவுமாம் கர்மமும் கர்த்தாவுமாகக் கூறப்படுகின்றனர். எங்ஙனமெனின்,

பத்³மகோஶ ப்ரதீகாஶம்।

"தாமரை முகையை நிகர்த்த" என்றமையான் இப்போது உரைக்கப்படும் நாராயணரது இருதயமே கூறப்படுகின்றது.

பரமாத்மா வ்யவஸ்தி²த: (தைத். ஆரணி. க0. க௩. ௬0)

---

* மங்கலக்குடியீசனை மாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணொடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுர்முக
னங்கத்தியனுமர்ச்சித்தாரன்றே.
(திருமங்கலக்குடி, திருக்குறுந்தொகை, நாவு, ௩)

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
வாறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணை மீண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே.
(திருக்குறுக்கைவீரட்டம், திருநேரிசை, நாவு, ௫)

"பரமான்மா ஸ்தாபிக்கப்பட்டார்" என்றமையாற் பரமான்மாவாகிய சிவ பெருமான் நாராயணருடைய இதயத்திற் *தியேயப் பொருளாயினர் எனக் கூறப்படுகின்றது. இங்ஙனம் தியாதாவாதலின் நாராயணர்க்குக் கர்த்திருத் துவமும், தியேயப்பொருளாதலின் சிவபெருமானுக்குக் கர்மத்துவமும் கூறப் படுகின்றன. ஆகலின், நாராயணர்க்கு வேருகவே பரமான்மா உபாசியரா கின்றனர்.

"அவர் பிரமா, அவர் சிவன்" என்றற்றொடக்கத்தவற்றாற் பிரமா விஷ்ணு உருத்திர இந்திராதி பிரபஞ்சவிபூதி விசிஷ்டத்துவம் சிவபெருமானுக்கே கூறப்படுகின்றது. ஈண்டு †விஷ்ணுவானவர் சிவபெருமான் விபூதியாகக் கூறப்படாதொழியினும், கைவல்லியோபநிடதத்தில் அங்ஙனம் கேட்கப்படு கின்றது. இதயகமலத்தையுற்றுக் கூறிய பின்னர்,

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 ।
𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂
𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।
𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 ।
𑌸 𑌏𑌵 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌸 𑌕𑌾𑌲𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 ॥

(கைவல்லியம்)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்ட ரும், பிரசாந்தருமாயுள்ளாரைத் தியானித்து முனிவன் சமஸ்த பூதங்களுக் கெல்லாம் காரணரும் சமஸ்தசாக்ஷியுமாயினாரைத் தமசுக்குமேல் அடை

---

* பொறுத்திருந்தபுள்ளூர்வானுளானாகியுள்ளிருந்தங்குணர்வாய்களை வான்றானை.
(திருக்கருகாவூர், திருத்தாண்டகம், நாவு, க0)

காலமுநாள்களூழிபடையாமுனேகவுருவாகிமூவருருவிற்
சாலவுமாகிமிக்கசமயங்களாறினுருவாகிநின்றதழலோன்
ஞாலமுமேலைவிண்ணொடுலகேழுமுண்டுகுறளாயொராலினிலைமேற்
பாலனுமாயவற்கொர்பரமாயமூர்த்தியவனாநமக்கொர்சரணே.
(பொது. தசபுராணம், நாவு, ௩)

என்றற்றொடக்கத்த திராவிட சுருதிகளானும் நாராயணர் இதயத்துளாராகிய பரமமூர்த்தி சிவபெருமான் என்பது பெறப்பட்டது. நாராயணர் சிவபிரானைத் தியா னித்தார் என்றவிடத்து, தியானித்தார் என்னும் கிரியைக்கு (தியாதாவாகிய) நாரா யணர் எழுவாயாய் நின்றமையின் இவர் கர்த்தா என்றும், அக்கிரியைக்குத் (தியே யப் பொருளாகிய) சிவபிரான் செயப்படுபொருளாதலின் இவர் கருமம் என்றும் கூறப்பட்டார்.

† இக்காலத்துள்ள தைத்திரிய ஆரணியகத்துப் பத்தாம் பிரசினமாகிய மகா நாராயணத்தில் விஷ்ணுவை உணர்த்தும் ஹரி என்னும் பெயர் சுருதியின் மெய்ப் பொருளேயும் பாடியகாரர் கருத்தையும் மாறுபடுத்துமாறு புகுத்தப்பட்டிருக்கின் றது. பெரியோர் அதுபற்றியங்காா் என்பது.

னென்றான். அவர் பிரமா, அவர் உருத்திரன், அவர் இந்திரன், அவர் அக்ஷ ரர், பரமசுவராட்டு, அவரே விஷ்ணு, அவர் பிராணன், அவர் காலர், அவரே அக்கினி" என்றற்றொடக்கத்தனவாக அது கூறுகின்றமையின், அந்த பிரமமே ஈண்டு யோஜிக்கற்பாற்று.

யொ வை ரு₃த்₃ர ஸ ப₄க₃வாந் யஶ்ச ப்₃ரஹ்மா தஸ்மை வை நமோ நம꞉ யஶ்ச விஷ்ணுஸ்தஸ்மை மஹேஶ்வராய꞉ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரோ, அவர் பகவான்; (அவர்) பூர், புவர், சுவர்; (அவர்) பிரமா (அவர்க்கு நமஸ்காரம்); எவர் விஷ்ணுவும் மகேசுவரருமோ (அவர்க்கு நமஸ்காரம்)" என்றற்றொடக்கத்தனவாகப் போந்த ஆதர்வணிக சுருதியும் கவனிக்கற்பாற்று. மகோபநிடதத்தினின்று உதகரிக்கப்பட்ட வாக்கியத்திலே (தைத். ஆரணி. க0. கரு. ௩0) பிரமாவுக்கும் சிவனுக்கும் (உருத்திருக்கும்) [illegible]பிலே விஷ்ணு கூறப்படாதொழிந்தமை அவர் [illegible]கராகக் கொள்[illegible]பட்டமையான். ஆகலின் இவ்வாக்கியங்க [illegible] தமில்லை (௪)

[illegible])

ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ꞉ (இரு. வே. க0. கூ0. க)

"ஆயிரந்தலையுடைய புருஷர்" என்று ஆரம்பித்துக் கூறப்பட்ட புருஷர்க்கு

பாதோ₃(அ)ஸ்ய விஶ்வா பூ₄தாநி (இரு. வே. க0. கூ0. ௩)

"விசுவமாகிய பூதமெல்லாம் பாதம்" என அவரது ஓர் அம்சம் உலக முழுதுமாமென்று கூறப்பட்டது.

ஸஹஸ்ரஶீர்ஷம் தே₃வம் (தைத். ஆரணி. க0. கரு. உக)

"ஆயிரம் தலையுடைய தேவர்" என்று கூறப்பட்டவரே ஈண்டு நாராயணர் என்று அறியப்படுகின்றனர்.

நாராயணபரம் ப்₃ரஹ்ம (தைத். ஆரணி. க0. கரு. உக)

"நாராயணபரம் பிரம்ம" என்றவிடத்தும் அவர் பிரமமாகக் கூறப்பட்டனர். பிரமமே எல்லோராலும் வழிபடற்பாலதாக, இதற்கு மற்றொருவர் தியேயப்பொருளானமை எங்ஙனம்? என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

ஶப்₃த₃விஶேஷாத் (க. உ. ௫)

(௩எ) சப்தவிசேஷத்தினால்,

"நாராயணபரம் பிரம்ம" என்னும் விசேஷசுருதி "நாராயணர்க்கு மேலாயது பிரமம்" என்று கூறுகின்றது. ஆகலின் நாராயணர்க்கு வேறாகிய

பரப்பிரமமே உபாசியப் பொருள்; பரப்பிரமம் ஆயிரந்தலையுடைமை முதலிய புருஷரூபத்தோடு உலகுக்கு உபாதானமாயிருத்தலின். நாராயணரானர் பரப்பிரமத்தைத் தமக்கு ஆன்மாவாகவுடையராகிப் பிரபஞ்சாகாரமாதலை (க. ௪. உ௩) ஆம் சூத்திரவதிகரணத்திற் கூறுவம். (௬)

நாராயணர் உபாசகர் என மற்றோர் பிரமாணம் சூத்திரகாரர் தொடுப்பாராயினர்.

ஸ்ம்ருதேஶ்ச (க. உ. சு)

(௬அ) ஸ்மிருதி உண்மையாலும்.

ஏவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகேஶ்வரோ ஹரி:।
தர்ஶயாமாஸ பார்தாய பரமம் ரூபமைஶ்வரம்॥

"இங்ஙனம் கூறிய பின், மகாயோகேசுவரராகிய நாராயணர் பரமேசுவரரூபத்தை அர்ச்சுனர்க்குத் தரிசிப்பித்தனர்" என்னும் (பகவற்கீதை. கக. க) ஸ்மிருதியினால், மகாயோகஸ்வாமியாகிய நாராயணர் "பரப்பிரம சிவபெருமானை யோகசமாதியினற் றியானித்தனர்" என்பது வெளிப்படுகின்றது. இவ்விஷயத்தையுற்றுச் சிவபெருமான் அசுவத்தாமற்குக் கூறியவிடத்து,

ஸத்யம் யதாவதாராத்: க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா।
தஸ்மாதிஷ்டதம: க்ருஷ்ணாதந்யோ மம ந வித்யதே।

(ம. சவுத்திகபருவம். எ: சுஉ)

"யான் இளைப்புறாத் தொழில் பூண்ட கிருஷ்ணரால் விதிப்படி ஆராதனை செய்யப்படுகின்றேன்; ஆகலின் கிருஷ்ணரினும் எனக்கு அதிப்பிரீதியுடையர் பிறர் இலர்" என்றனர். ஆகலின் நாராயணர்க்கு வேறாக உபாசியமாகிய பரப்பிரமம் உளது என்பது பெறப்படுகின்றது. (௬)

சூத்திரகாரர் பின்னரும் ஆக்ஷேபித்து மறுக்கின்றனர்.

அர்பகௌகஸ்த்வாத்தத்வ்யபதேஶாச்ச நேதி சேந்ந நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச (க. உ. எ)

(௭௧) அவர் சிறு நிவாசமுடைமையாலும், அங்ஙனம் கூசிக்கப்படலாலும் (அவ்வாறு) இல்லை (எனக் கொள்ளின்) இன்று; அவரே அங்ஙனம் (கூசிக்கப்பட்டார்) வழிபடற்பாலராகலின்; அவர் ஆகாயமும் போல்வர்.

(ஆக்ஷேபம்)

நீவார ஶூகவத் தந்வீ பீதா பாஸ்வத்யணூபமா।
தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:॥

(நாரா. ஆரணி. ௧௦. ௬௩. ௧௦)

"நீவாரதானியக் கூர்நுனியிலும் மெல்லியதாய், மஞ்சள்நிறமுடையதாய் அணு ஒன்றுளது; அந்த (நுனிச்) சிகை மத்தியிலே பரமான்மா நிலைபெற்றிருக்கின்றனன்" என்பது கருதி, சிறிய அக்கினிச் சோதியினன்றே இருத்தலை யும், சிறு இடத்தை உடைமையாலும், சிறியதென்று கூறப்படுதலானும், இவர் சர்வவியாபகராகிய சிவபெருமானல்லராமெனின்,

(சமாதானம்) அங்ஙனமன்று. உபாசிக்கப்படுபவராதலின் அங்ஙனம் கூறப்பட்டனர். சொரூபத்தினால் அற்பரல்லர்; ஆகாயம் போற் சொரூபம் பெரிதாய் முற்றுதலின்; குடங்களுள்ளே அமைந்த ஆகாயம் அக்குடவுபாதியால் அற்பத்துவமும், சுவரூபத்தினால் மகத்துவமுமாயிருத்தல் போல. ஆகலின் விரோதமின்று. (எ)

(ஆக்ஷேபம்) பின்னரும் சூத்திரகாரர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

ஸம்போகப்ராப்திரிதிசேந்ந வைசேஷ்யாத் (க. உ. அ)

(அ) போகம் அடைதற்பொருட்டாமெனின் அன்று; பேதமுண்மையின்.

(ஆக்ஷேபம்)

நாராயணபரம் ப்ரஹ்ம (தைத். ஆரணி. க0. கங. உக)

(நாராயணபரம்பிரம்ம) நாராயணர்க்கு மேலாய அவ்வஸ்துவே உபாசியமாகிய பிரமம்; அவ்வஸ்துவானவர்

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்கலம் ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் (தைத். ஆரணி. க0. உங. சக)

"இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவவீரியரும், விரூபாக்ஷரு"மாகக் கூறப்படுகின்றனர்; பரமசத்தி எனப்படும் உமாசத்தியோடியைந்து சபளாகாரமுற்றமையாற் கிருஷ்ணபிங்களர் எனவும், அக்கினியை வீரியமாகவுடைமையின் ஊர்த்துவவீரியர் எனவும், முக்கண்ணுடைமையின் விரூபாக்ஷர் எனவும், மேலே உரைத்த தகரபுண்டரீகத்திற் கிடத்தலாற் புருஷர் எனவும், மலமும் பாசங்களுட் பேதமின்மையான் இருதம் சத்தியம் எனவும் பரப்பிரமத்துக்கு இவ்விடம் கூறப்பட்டது. அதுவே; முக்கண் முதலிய இலக்கணமுள்ள வாய்ந்த சரீர சம்பந்தமுடைமையின் சுகதுக்கபோகங்களுக்கு அப்பிரமம் ஆளாகின்றதெனின்,

[illegible]

(உத்தரம்) அன்று; பேதமுண்மையின். சுகதுக்கபோகத்துக்கேதுவாம் ஆன்மசரீரங்களினின்று பிரமரூபத்துக்குப் பேதமுண்டு; பிரமம்

[illegible]

[illegible]ருயிரின் விடியம் எடுத்தலினும், ஆன்மாக்கள் கன்மகாரணமாகச் சரீரங் கோடலானுமாம். அதுபற்றியே சிவபெருமானுக்குச் சம்சாரிக்குரிய சரீர சம்பந்த குணமின்றாமின்மையின்,

ஸ ஏஷ ஆத்மாऽபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோ ऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: (சாந். அ. க. ரு; அ. எ. கக).

"பாவமில்லாதவரும், ஜரையில்லாதவரும், மரணமில்லாதவரும், சோகமில்லாதவரும், பசியில்லாதவரும், தாகமில்லாதவரும், சத்தியகாமரும், சத்தியசங்கற்பருமாம்" என்று சுருதியிலே கூறப்படுகின்றனர். சம்சாரியாகிய ஆன்மா இவ்வாறு இலன். ஆகலின் சிவபெருமானுக்கு அப்பிராகிருதங்களாய், பாவ ஜரை மரண சோக முதலிய இலாதனவாய், விரும்பியாங்குக் கொள்ளப்படுவனவாய லீலாமங்களரூபசரீரங்கள்

ஸ்ரீரோஹிண்யே[illegible] வாஹாஹாவை உரு: |

(இரு. வே. உ. [illegible])

"ஸ்திரமாகிய அங்கங்களோடு அநேக வடிவுடையரும் உக்கிரருமாயினர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, பூரணமும் நித்தியமுமாயுள்ளன என்று அறியப்படுகின்றது. பரப்பிரம சிவபிரான் ஆன்மாவினின்று வேறுறுகின்றமையின், அவர் ஆன்மாவைப்போற் சரீரசம்பந்த தோஷத்துட்படார். ஈண்டு உபக்கிரமாதிலிங்கங்களான் விருபாக்ஷமுடைய பிரமம் சர்வோத்கிருஷ்டமாய் உபாசிக்கற்பாலதெனல் யுக்தமே. எங்ஙனமெனின், உபக்கிரமத்திலே

அணோரணீயாந் |

(தைத். ஆரணி. க0. கஉ. உக; கட. உ. உ0; சுவே. ௩. உ0; கை. உ0)

"அணுவுக்கணு" எனத் தொடங்கி,

மஹதோ மஹீயாந் |

([illegible])

"மகிமைக்குணமுடைய ஈசர்" என்பதிறுதியாகப் போந்த சுருதியிலே [illegible]சேர்க்கையின் இதயகுகைக்கண்ணே வசித்தலானும், தமது பிரசாதத்[illegible] சோகம் நீங்கப்பெற்ற புருஷனாற் றரிசிக்கப்படலானும், [illegible] ஈசர் என உரைக்கப்பட்டனர். பின்னர்,

[illegible]

ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் |

[illegible]

(தைத். ஆரணி. க0. கஉ. உக)

[illegible]

[illegible] அணிவிப்பது கூறப்பிற்றியாகின்றன" என்றற்றொடக்கத்த சுருதியர்த்தப்படி [illegible] பிரானுதியோர் [illegible] மத்துக்கு உபாதானகாரணராக நிருபிக்கப்பட்டனர். பின்னரும்,

[illegible] [illegible] [illegible]
[illegible] ஹிரண்யகர்ப்பம் [illegible] ஜாயமாநம் ।

(தைத். ஆரணி. ௧௦. [illegible])

"தேவர்கட்கு முன்னே முதற்கண் இருந்தவரும் விசுவாதிகருமாகிய உருத்திரமகர்ஷியானவர் இரண்ணியகருப்பரைப் பிறக்கக் கண்டனர்" என்று கூறியவாறு விசுவாதிக்கியத்தினாலும், சர்வஞ்ஞதையினாலும், சமஸ்த காரியங்கட்கும் பிரதமராகிய இரண்ணியகருப்பரைப் பிறப்பித்தமையாலும் (அவர்) நிமித்தகாரணராக உரைக்கப்பட்டனர்.

பரேணநாகம் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"பரேணநாகம்" என்ற சுருதியினால் பரமாகாய குகையின்கண்ணே இருப்பவரெனக் கூறப்பட்ட வஸ்துவானவர் பயனை அபேக்ஷியாது கர்மங்களை அனுஷ்டிப்பவராய், வேதாந்த தாற்பரியமுணர்ந்தோராய், இந்திரியங்களை அடக்கினோராயுள்ள யதிகளுக்குப் பராமிர்தப்பொருளாய் அடையற்பாலரென வர்ணிக்கப்பட்டார். அவரை அடையும் உபாயம் என்னையெனின்,

தஹ்ரம் விபாபம் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"தகரம் விபாப்மம்" என்னும் சுருதியினால் தகரோபாசனை செய்யவேண்டும் என உரைக்கப்பட்டது. ஆண்டு,

தஸ்மிந்யதந்தஸ்தது பாஸிதவ்யம் ।

(தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"தகரபுண்டரீகத்திலே எந்த வஸ்து உள்ளதோ அது உபாசிக்கற்பாற்று" எனச் சாமானியமாக உரைக்கப்பட்டது. அது எப்பொருளாமென ஆக்ஷேபிக்குங்கால்,

யஃஸ்வரஸ்ஸமஹேஶ்வரஃ (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"எவர் மேலானவரோ அவர் மகேசுவரர்" எனப் பெயரிய அப்பொருள் வர்ணிக்கப்பட்டது. உபாசிக்கப்படும் அப்பொருளின் ரூபம் என்னை என ஆக்ஷேபிக்கின் "இருதம் சத்தியம்" என்றற்றொடக்கத்த சுருதியினால் விரூபாக்ஷத்துவ முதலிய இலக்ஷணரூபமுடையதெனத் தொகுத்துரைக்கப்பட்டது. ஈண்டு அவாந்தர வாக்கியத்தினாற் சித்திக்கப்பெற்ற நாராயணரானவர் மேலே போந்த அதிகரணியாயத்தினால் உபாசகராக முற்றினர். ஈண்டு எல்லோர்க்கும் [illegible] [illegible] [illegible] களுள்ளே [illegible], அவர் ஈண்டு [illegible] கூறப்பட்டனர். அந்த உபாசியரும் [illegible] [illegible] [illegible] [illegible]

அனன்னியபாவனை செய்தமையான், அப்பரமேசுவரர்க்குரிய குணங்களை உலகுக்கு உபாதானரும், சிவபெருமானால் வியாபிக்கப்பட்டவருமாகிய அந் நாராயணர்க்கு ஏற்றிக் கூறுதல் சால்பே. (அ)

(௯.) அத்திராதிகரணம்.

அத்தா சராசரக்ரஹணாத் (௧. ௨. ௯)

(௪௧) †அவர் நுங்குபவர், சராசரத்தையுற்றுக் கூறப்படலான்.

யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந꞉ ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ꞉ (கட. ௨. ௨௫)

"எவர்க்குப் பிராமணரும் க்ஷத்திரியரும் ஓதனமாக, மிருத்யு உபஸேசனமாயிற்றோ, அவர் எங்குள்ளாரெனப் பின் யார் அறிவார்" என்னும் சுருதியே விஷயம்.

---

*ப்ரஹ்மேத்யாஹுஸ்தே பரம் தத்த்வம் ஜ்யோதி꞉ பரம் ச பரமேச்வர நாராயணம்। கருடாவேசநாத் [illegible] யதா மாந்த்ரிகோ யதா [illegible]॥

"மாந்திரிகன் (மந்திரரூபமாகிய ஆதிதெய்விக) கருடனை (நாடோறும்) பாவித்து வந்த பயிற்சிவிசேடத்தால் (அம்மந்திரரூபமே தானாக அனன்னியபாவனை செய்து தன் அறிவு அதன் வசமாம்படி உறைத்து நின்று அம்மந்திரக்கண் கொண்டு பார்த்து விஷ வேகத்தை மாற்றுதலாற்) கருடன் (எனப்படுதல்) போல, "பரமேசுவரரே! நாராயணரானவர் உம்மோடு அனன்னியபாவனை செய்தமையினாற் "பரப்பிரமம்" "தத்துவம்" "பரஞ்சோதி" என (உமது திருநாமங்களாற்) கூறப்படுகின்றனர்" என்று சுருதிசூக்திமாலையுடையார் கூறினர்.

†முதலாம் பாதத்து இதராநுபபத்தி அதிகரணம் எனப்படும் இரண்ணியகர்ப்பாதிகரணத்தில் (௧௭—௨௦) சிவபிரானைச் சேஷி என்றும், பிரமாவைச் சேஷர் என்றும் நிருபணஞ் செய்தல் வாயிலாகப் பிரமாவுக்கு மேலானவர் பரப்பிரம சிவபெருமான் என்றும், இந்த இரண்டாம் பாதத்து (அநுபபத்தியதிகரணம்) சாரீராதிகரணம் எனப்படும் நாராயணாதிகரணத்தில் (௩—அ) சிவபிரானை உபாசியர் என்றும் நாராயணரை உபாசகர் என்றும் நிருபணஞ் செய்தல் வாயிலாக நாராயணர்க்கு மேலானவர் சிவபெருமான் என்றும், இந்த அத்திராதிகரணமாகிய சங்கார காலருத்திராதிகரணத்தில் (௯, ௧௦) அயிலப்படும் "பிரமக்ஷத்திரிய காலரைக் கூறினமை பற்றி உபலக்ஷணையினால் அசத்தமிச்சிர சத்தப் பிரபஞ்சத்துள்ள சராசரப்பொருளனைத்தும் கொள்ளப்படும் என்றும், இச்சராசரப்பொருள் அனைத்தையும் ஒருங்கு சங்காரஞ் செய்யும் சாந்தியாதீதகலாசக்கரத்து மஹாருத்திரர் செய்யும் மஹாசங்காரவன்மை ஏனைத் [illegible] அத்தப் பிரகிருதிப் பாலனவாம் சராசரப்பொருள்களைச் சங்கரிக்கும் காலருத்திரர்க்கில்லையாமாதலின், இக்காலருத்திரர்க்கும் மேலானவர் மகாசங்கார மூர்த்தியாகிய பரப்பிரம சிவபெருமானும் என்றும் நிருபணஞ் செய்யப்படும். [illegible] பிரமவிஷ்ணுருத்திரர் என்னும் மூவர்க்கும் மேலானவர் [illegible] ததியினின்று பிரிவுறாத சிவபெருமானேயாமன்றி, ஏனைய [illegible] கூறும் [illegible] வீர்யமாயாசத்தி விசிட்ட நிர்க்குண அன்மப்பிரமமுமன்று, [illegible] கூறும் [illegible] சாத்தியுடைய நாராயணருமன்று என்பது [illegible].

ாசின் கிருத்திய்வ்ம் ஸம்ஹாரமாகச் சேர்ந்து பிரமவிஷ்ணுக்களி ளிருந் குறிக்கப்பட்ட சமஸ்த சேதனுசேதனப் பிரபஞ்சத்தை சங்கரிக்கு (ராதக் கேட்கப்படுபவர் சிவபெருமானு? மற்றொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பரமகாருணிகரும் சர்வாநுக்கிரகருமாயுள்ளார் அனைத்தையும் கவளீகரித்தாராகக் கூறுதல் அநுசிதம். இம்சை என்பது பிறருடைய உயிரைப் போக்குதல். இம்சையைப் பிரவிருத்தி செய்தற்குக் குரோதமே மூலாங்குரம். குரோதமாகிய அமங்கலகுணத்துக்கு மோகமே மூலகந்தம். அந்தச் சர்வசம்ஹார காரணத்துக்குத் தாமசமே காரணம். ஆகலின், அனைத்தையும் சங்கரிப்பவர் தாமசத்தினரே. (அஞ்ஞான இருளினில்) மூண்ட ஞானமுதலியவற்றின் பிரகாசமின்மையே தாமசத்துவம். அனைத்தையும் சங்கரிப்பது பிரமமெனக் கூறின், அது நித்திய சுத்தமும், நிருபாதிக மங்கல வடிவும், சம்சாரகளங்கமிலாததுமாகிய பிரமத்துக்கு அஞ்ஞானம், தமசு, மோகம், குரோதமுதலிய அமங்கலகுணத்தை ஏற்றித் தொடக்குறச் செய்தலாய் முடியும். (அஃதன்றிச்) சுவரூபலக்ஷணமாக நிர்ணயிக்கப்பட்ட முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை முதலியன பயனற்றனவாயின்றே முடியும். ஆகலின், இவ்வியல்பினதாகிய குணமுண்டாக சங்காரஞ் செய்யும் வஸ்து பிரமத்தை ஒழிந்த பிறிதோர் வஸ்துவாமெனின்,

(சித்தாந்தம்) அன்று, பிரமந்தான் அனைத்தையும் சங்கரிப்பதாகக் கூறப்படுகின்றது; எங்ஙனம்? சராசரத்தையுற்றுக் கூறப்படலான, சமஸ்த சராசரப் பிரபஞ்சத்தைப் பிரமம் புசிப்பது அயுக்தம் எனின், அதுவே பிரமத்தின் இலக்ஷணம்; பரிச்சின்ன சத்தியுடைய ஆன்மாவுக்குச் சராசரத்தைச் சங்கரித்தற்கு வன்மை இன்மையின்.

[illegible]

(அதர்வசிரசு)

" ஆதலின், சங்காரகர்த்தாவுக்கு, * மகாகபளீகாரஞ் செய்பவராகத் தூமஸ்தாரம் " என அதர்வசிரசிலே சிவபெருமானுக்குச் சமஸ்த சங்காரஞ் செய்தல் கூறப்படுகின்றதன்றி, யாண்டும் ஆன்மாவுக்குக் கூறப்படவில்லை.

---

* [illegible]

[illegible] ஜாதவேதஸ |

([illegible])   (இரு. வே. அ. [illegible], கக)

"எவர் இவ்வுலகம் அனைத்தையும் ஓமித்தனர்" என இருக்குவேதத்திற் பிரமமாந்து தனது பிரகாசமாகிய தீயிற் சமஸ்த புவனங்களையும் அவிசாய் ஓமித்தமை அறியப்படுகின்றது. ஹவிர்ப்பாகமாகக் கொள்ளப்படும் ஆன்மாவுக்கு இவ்வன்மை இல்லை. தனக்கு வேறாகிய *சமஸ்த சராசரம் எனப்படும் சேதனசேதனப் பிரபஞ்சத்தைத் தம்மிடத்தொடுக்கி எப்போது உள்ளாரயினரோ சிவபெருமான், அப்போது சந்திர சூரியராம் பிரகாசமின்மையால் இராப்பகலாதியாய காலவிபாகமெல்லாம் இலவாய், நாமரூபபேதமின்மையின் ஸ்தூல சூக்கும மனுஷ்ய தேவாதி ரூபவியவகாரம் இலதாய், இவையெல்லாம் தமசுமாத்திரமாய் உளவாக, அவ்வொருவரே தடையிறந்த பிரகாசராய்ச் சமஸ்த சாட்சியாய் அப்போதும் பரிசேஷிக்கின்றனர். அன்றியுமே,

[illegible] ஸம்ஹாரம் [illegible]|

[illegible] ஸகாரகம்|

[illegible]   (சங். த. உக: உ—[illegible])

"மகாப்பிரளயமாகிய உருத்திரர் எனப்பெயரிய காலாக்கினிருத்திரபகவானும் பைரவரும் சிவபிரானார் ஆஞ்ஞையினாலே பிரபஞ்சம் அனைத்தையும் சங்கரிக்கின்றார்; இது அவாந்தரசங்காரம் எனப்படும். சமஸ்த அண்டங்கள் சமஸ்த உலகங்களோடு சமஸ்த சீவர்களையும் (சங்கரிக்குங்கால்) சிலரைப் பார்வையினாலும், சிலரை நகைப்பினாலும், சிலரைக் கோபத்தினாலும், சிலரை அட்டகாசத்தினாலும், சிலரை நடனத்தினாலும், சிலரை நேத்திராக்கினியினாலும், சிலரை ஹுங்காரத்தினாலும், சிலரைக் கையினாலும், சிலரை உதையினாலும் லீலாமாத்திரத்தினால் அநேக உருத்திரர்களோடு கூடி நின்று சங்கரிக்கின்றனராதலின், மஹாதேவராகிய சிவபிரான் (மகாசப்தீகாரர்) மகாக்கிராசர் என்று (அதர்வசிரசிற்) கூறப்படுகின்றார் என்றும், இந்தச் சங்காரம் மகாப்பிரளயம் எனப்படும்" என்றும் சங்கரசங்கிதையிற் கூறப்படுகின்றமை காண்க.

[illegible] நஷ்டே [illegible] |

[illegible] ஸர்வ [illegible] |

[illegible] |

ததா ஜகதிதம் ஸர்வம் [illegible] |

[illegible] |

[illegible] |

(சங். த. ச: கஎ—தக)

"சச்சிதானந்தரூபியும், சம்புவும், விசுவாத்துமாவுமாகிய சிவபெருமான் தேவி முன் [illegible] தம் சத்தியைத் தம்முள்ளே அடக்கிக் கொண்டு சோதிருபராய் நின்றனர்; அப்போது [illegible] உலகமெல்லாம் [illegible] முழுச் செயலுமற்றுப் போயின; இரவில்லை, பகலில்லை, சூரியன் இல்லை, சந்திரன் இல்லை, [illegible] கேவலம் [illegible] ஜடவடிவினதாகிய இருண்மயமாயுற்றது" என்றது சங்கரசங்கிதை [illegible]

[illegible]

(சுவே. ச. கஅ)

†"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமன்றி சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ அப்போது சிவன் ஒருவரே இருந்தார்" எனச் சுருதி கூறிற்று. சத்தும் அசத்தும் இலவாய் என்றமையான், சத்தும் அசத்துமாகிய பசு பாசங்களுடைய சுவரூபசத்து நிஷேதிக்கப்படவில்லை; பின் நாமரூபவிபாகத்துக்கு அருகமாகிய ஸ்தூலரூபமே (நிஷேதிக்கப்பட்டது).

(ஆக்ஷேபம்) நித்தியப் பிரகாசமாகிய சிவப்பிரமம் உளதாகும்கால், தமோமயமாய் உலகம் எங்ஙனம் இருப்பதாம் எனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று; சுவயம் பிரகாசரும், சர்வசாக்ஷியுமாய சிவபிரானுர்க்குக் குறைவென்! நாமரூபமில்லாமையான் அறியக்கூடாதனவாகிய விஷயங்களிற் செல்லக் கரணசரீரசக்தியில்லாத ஆன்மாக்களுக்கு அறிவு மலத்திஞல் மூடுண்டிருக்குங்கால், பிரபஞ்சத்தை அறிதல் கூடாது; சுவப்பிரகாசமாயுள்ள சிவனுர்க்கும் முன் போல உலகத்தை அறியுமாறில்லை. ஆகலின், சமஸ்த காரிய விசேஷஞானம் யாதுமின்றி மகாசுழுப்திமயமாயுள்ள மகாவஸ்தையே தமசு (இருள்) எனப்படுகின்றது. அங்ஙனமே,

[illegible]

(மனுஸ்மிருதி. க. ௫)

"யாதும் இலக்ஷணமின்றி அறியப்படாததாய் இது தமசாயிருந்தது" என ஸ்மிருதி கூறுகின்றது. நாமரூப விபாகத்துக்கு அருகமல்லாத சூக்கும சித்சித் பிரபஞ்ச சக்தி விசிட்டமுடைமையாற் சிவபெருமான் கேவலர் எனக் கூறப்படுகின்றனர். அவர் பின்னர்ச் சிருஷ்டி காலத்திலே தமது சங்கற்ப மாத்திரையானே சமவாயிகாரண அபேக்ஷையின்றி, தம்மிடத்திருந்த பிரதமசக்தி பரிஸ்புரித்தல் வாயிலாக, முன்னிருந்த அந்தந்த நாம விசிட்டமுடையனவாகவே சமஸ்த சேதனசேதனப் பொருள்களையெல்லாம் சிருஷ்டிக்கின்றனர், பிரகாசிப்பிக்கின்றனர்.

[illegible]

[illegible]

"உள்ளே அமைந்த பொருள் அனைத்தையும் சிதான்மாவாகிய கடவுளே யோகிபோல இச்சாவசத்திஞல் உபாதானமின்றிப் புறத்தே பிரகாசிப்பிக்கின்றனர்" என்பது அபியுக்தருக்தி.

---

† [illegible] "இருள்..." "பெரு..." [illegible]

(ஆக்ஷேபம்) [illegible]

மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து மஹேச்வரம் (ச்வே. ச. ௧௦)

தஸ்மாத் விராடஜாயத (இரு. வே. ௧௦. ௯௦. [illegible])

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக," "அவரினின்று விராட்டுப் பிறந்தனர்" என்றற்றொடக்கத்த சுருதியினால், மாயையும் புருஷனும் உபாதானமாகக் கேட்கப்படுகின்றது. உபாதானம் இரண்டில்லையென்று கூறுவது எங்ஙனம் அடுக்கும்? எனின்,

(உத்தரம்) உண்மை; குலாலன் கடத்தை உண்டாக்குங்கால், மட்கட்டி குலாலன் சரீரத்துக்கு வேறாய்க் கடத்துக்கு உபாதானமாய்க் காணப்படுமாறு போல், மாயை முதலிய உபாதானம் சிவபெருமானுக்கு வேறாயிருப்பதில்லை; மாயாதி ரூபத்தைக்கொண்டு சிவபெருமான் உலகத்தைப் படைத்தலான், அதுபற்றி விரோதமின்று. தம்மினின்று வேறுபடாத [illegible] [illegible] புருஷராகிய சிவபெருமானே உலகத்துக்கு உபாதானமாகவும் கூறப்படுகின்றனர்.

த்யாயீதேசாநம் ப்ரத்யாயிதவ்யம் ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே | ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹ பூதை: ந காரணம் காரணாநாம் த்யாதா த்யாதா காரணம் து த்யேய: ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வேச்வர: சம்பு: ஆகாசமத்யே || (அதர்வசிகை)

"மிகவும் தியானிக்கற்பாலராகிய ஈசானரைத் தியானிக்க; அந்தப் பிரம விஷ்ணு உருத்திர இந்திரர்களாகிய இவரெல்லாம் உற்பத்தியாகின்றனர்; எல்லா இந்திரியங்களும் பூதங்களுடனே கூட (உற்பத்தியாகின்றன); காரணங்களும் காரணங்களைப் படைத்தோரும் கருதினோருமாகியவர் (உற்பவித்தன)வின்றார், காரணரும் சர்வைசுவரிய சம்பன்னரும், சர்வேசுவரரும், சம்புவும் [illegible] ஆகாயமத்தியில் தியானிக்கற்பாலர்" என அதர்வசிகையிலே கேட்கப்படுகின்றது. ஆகலின், பூதங்கள் அனைத்துக்கும் [illegible] சங்கார [illegible] [illegible] [illegible] அனைத்துக்கும் உற்பத்தி [illegible] இவையெல்லாம் [illegible] சங்கார [illegible] அதுகாரணம் அனந்தசத்தியுடைய சிவபிரானே அவையெல்லாம் [illegible] [illegible] [illegible] சங்காரகர்த்தா சிவபிரானே. சங்காரம் [illegible] மாயிருத்தலான் அதற்கு மூலமாயுள்ள குரோதமுதலிய [illegible] [illegible] பந்தம் பிரமத்துக்கு உளதாமோ எனின் [illegible] [illegible] வினாந்த பினைக்கு, குரோதமுதலியவற்றுக்கு மூலமாயுள்ள தமோகுணம் பிரகிருதி [illegible] [illegible] [illegible] தருமமாதலின்.

[illegible]

¹ திருச்சிற்றம்பலத்தின் மேற் [illegible]

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் |
(கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும்" என்று தொடங்கி,

ஸர்வஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் |
(கைவ)

"தமசுக்கு மேலே சமஸ்த சாக்ஷியாயுள்ளாரை" என்னும் கைவல்லிய சுருதியே சிவபெருமான் தமசுக்கு மேலாயினர் என்பதற்குத் திவ்விய பிரமாணம்.

ஜ்ஞாநம் வைராக்யமைஶ்வர்யம் தப: ஸத்யம் க்ஷமா த்ருதி: |
ஸ்ரஷ்ட்ருத்வமாத்மஸம்போதோ ஹ்யதிஷ்டாத்ருத்வமேவ ச |
அவ்யயாநி தஶைதாநி நித்யம் திஷ்டந்தி ஶங்கரே ||

"ஞானம், விராகம், ஐசுவரியம், தபசு, சத்தியம், க்ஷமை, தைரியம், சிருஷ்டிவன்மை, ஆன்மஞானம், அதிபதித்துவம் என்னும் பத்துக் குணங்களும் சிவபெருமானிடத்து அழியாது நிலையுறுவன" எனவும்,

ஸமஸ்த விஷயாச்சைவ ஶுத்தபுத்திவிஜ்ரும்பண: |
ஸ்வஶக்த்யம்ருதாஸ்வாத ப்ரமோதரஸிகோ யுவா |
அநந்தாநந்த ஸந்தோஷ மகரந்த மதுவ்ரத: |
ஔதார்ய வீர்ய காம்பீர்ய மாதுர்ய மகராலய: |
அகண்ட ஜகதண்டாநாம் பிண்டீகரணபண்டித: ||
(வாயு. பூ. ௨: ௫௪—௫௮)

"சமஸ்த விஷய ஞானங்களினின்றும் தவறாத சுத்த புத்தி விசிரும்பணரும், தமது சத்தியாகிய அமிர்தத்தை உருசித்தலினால் எய்தும் மகிழ்ச்சியில் விருப்பமுடைய இளைஞரும், அனந்த ஆனந்த சந்தோகமாகிய மகரந்தத்தைப் பருகும் மதுகரரும், உதாரகுணம், வீரியம், காம்பீரியம், மாதுரியும் என்பவற்றுக்கு இரத்திநாகரராயும் அகண்ட ஜகதண்டங்களைப் பிண்டிகரித்தற்குப் பண்டிதராயும் உளர்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறும் பவுராணிகர் வாக்கும் சிவபெருமானிடத்திலே மோகமுதலிய அவித்தையும் ஒழிக்கும் ஞானமுதலிய குணங்கள் நித்திய சம்பந்தமாய் உள்ளன என்று கூறுகின்றது. முடிவிறந்த மகிமையுடைய சிவபெருமான் சிருஷ்டிக்க விருப்பமுடையராய்

ஸோऽகாமயத பஹுஸ்யாம் (தைத். உ. ௬)

"அவர் அநேகமாய் ஆவேனாக என்று விரும்பினர்" எனக் கூறப்பட்டவாறு, அநேக பிரபஞ்சமாதற்குத் தமது பராசத்தியை ஆசிரயிக்கின்றனர்.

ஸஈக்ஷத லோகாந்நுஸ்ருஜா (பிரு. ௧. ௨. ௯)

"அவர் ஞானசத்தியை ஆலோசித்தனர்" என்னுஞ் சுருதிப் பிரகாரம் தமஸ்வரூபமாகிய ஞானசத்தியினுற் சமஸ்த ஆன்மாக்களுக்கும் கர்மானுகுணமாக அந்தந்தச் சரீரங்களுக்கியைந்த சாமக்கிரியைகளை ஆலோசிக்கின்றனர். ஆலோசித்து, சங்கற்பித்த சகலத்தையும் இயற்றவல்ல கிரியாசத்தியினாலே

இத3ம் ஸர்வமஸ்ருஜத (தைத். ௨. ௬)

"இவ் அனைத்தையும் அவர் சிருட்டித்தனர்" என்னும் சுருதிபற்றி, இச்சாசத்தியாம் பித்தியிலே சமஸ்த ஜகதாகிய சித்திரத்தைத் தோற்றுவிக்கின்றனர்.

தத் ஸ்ருஷ்ட்வா ததே3வாநுப்ராவிஶத் (தைத். ௨. ௬)

"அதனைச் சிருட்டித்து, அதனுட் பிரவேசித்தனர்" என்னும் சுருதிப்பிரகாரம், சகல காரிய சமூகங்களுட் பிரவேசித்து, இந்த மூன்று சத்தி சம்பந்தத்தினுல், முக்குணத்தினாலே பின்னமுற்ற மூர்த்தித் திரயமுதலிய பிரபஞ்சரூபமாகின்றனர். ஆகலின், ஈண்டு சர்வசத்தியும் சர்வஞ்ஞருமாயுள்ள சிவபிரானுர் மகிமையை யார் அறிவார்!! ஆகலின், சர்வசங்கார கர்த்தா சிவபெருமானே. (௯)

ப்ரகரணாச்ச (ப். உ. ௧௦)

(௪௨) பிரகரணத்தினாலும்.

மஹாந்தம் விபு4மாத்மாநம் மத்வா தீ4ரோ ந ஶோசதி (கட. ௨. ௨௨)
நாயமாத்மா ப்ரவசநேந லப்4ய: (கட. ௨. ௨௩)

*"(பரம) ஆன்மாவை மகத்தாகவும் வியாபகமாகவும் அறிந்து தீரன் துன்புறுவானல்லன்; அந்தப் (பரம) ஆன்மா வேதத்தினுல் எய்தான்" என்னும் சுருதி (மேலைச் சூத்திரத்து வாதிக்கப்பட்ட சுருதி காணப்படும் கடவல்லியின் ஒரே பாகத்திற் காணப்பட்டுச்) சிவபெருமானுக்கே சேர்ந்ததெனப் பிரகரணமும் உணர்த்துகின்றது. ஆகலின், பரப்பிரம சிவபெருமானே சங்காரகர்த்தா, பிறர் அன்றெனச் சித்தித்தது. (௧௦)

(௯) குகாதிகரணம்.

மேலை அதிகரணத்திலே சர்வசங்கார இலக்கணத்தையுடையராகச் சித்தித்த சிவபெருமான்

---

* இந்த ஆன்மா உபக்கிரமணிகை ௧௦௪-ஆம் இலக்கத்துக் காணப்படும் [illegible] குகையிலிருத்தலுமுடைய பரமான்மாவன்றி ஏனைய [illegible] குணப்பிரம ஆன்மாவன்று.

(முண். ௩. ௧. ௧; சுவே. ௪. ௬; இருக். வே. ௨. ௩. ௧௭)

"பிரியாத நண்பினையுடைய இரு பக்ஷிகள் ஒரே மரத்தையுற்றிருக்கின்றன; அவற்றில் ஒன்று இனிமையாகிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரசித்தராய், தமது விபூதியாயுள்ள ஆன்மாக்களோடு எப்போதும் இறைவர் இருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துதற்கு மற்றோர் அதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

(௧. ௨. ௧௧)

(௬௩) குகைக்கண்ணே பிரவேசித்தன இரு ஆன்மாக்களே; அங்ஙனம் காணப்படலான்.

(கட. ௩. ௧)

"புண்ணிய ஸ்தானமாகிய மேலாய (பிரம்மஞானி சரீர) குகையிலே பிரவேசித்தனவாய், கன்ம பலத்தைத் துய்ப்பனவாயுள்ள இரு வஸ்துக்கள் சாயையும் ஒளியும் போல் வேறாய் உள்ளன என்று கிரகஸ்தர்களாயும் திருணாசிகேதர்களாயுமுள்ள பிரம்ம ஞானிகள் கூறுகின்றனர்" என்னுஞ் சுருதியே ஆராயப்படும் விஷயம்.

என்னிலாருமெனக்கினியாரிலை
யென்னிலும்மினியானொருவனுள
னென்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே.
(திருவின்னம்பர், நாவ், க)

கோலங் கொண்ட வாறுண் ணாதே
...
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
வென்னுட் கரந்தென் பின்வந் தருளி
யென்னையுந் தன்னையு மறிவின் றியற்று (ப)
மென்னறி யானெனு மகன்றை புங்கண்
டியாவரி யாவையு மியாங்களுஞ் சென்று
...
மிக்க போகம் விதியால் விளைத்திங்
கெற்பணி யாளா வென்னைப் பிரியாதே
...
(இருபாவிருபஃது ...)

...ளுமன்றி புண்ணியஸ்தானமாகிய உயர்ந்த பிராம்மணருடைய சரீரத்தின் இருதய குகையிலே பிரவேசித்தனவாய், கன்மபலன்களைத் துய்ப்பனவாய், சாயையும் ஒளியும் போல வேறுபாடுடையனவாயுள்ள எவையோ இரு வஸ்துக்கள் கூறப்படுகின்றன. அந்த இரண்டும் புத்தியும் ஆன்மாவுமா? இன்றேல் ஆன்மாவும் சிவபெருமானுமா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) இந்த இரண்டும் புத்தியும் ஆன்மாவுமாம்; எங்ஙனம்?

[illegible] (கட. ௩. ௧)

"கர்மபலன்களை இரண்டும் துய்ப்பன" எனப் பெறப்படுகின்றமையின், சிவபெருமான் போக்தா அல்லர்;

[illegible] (சுவே. ௪. ௬; முண். ௩. ௧. ௧)

"...பார்த்துக்கொண்டிருக்கின்றது" எனச் சுருதி காணப்படலான். புத்திக்கும் ஆன்மாவுக்கும் புசிப்புளதாதல் பிரசித்தமே. மேலும், அறிவுருபமாயுள்ள ஆன்மாவுக்கும் சிவபெருமானுக்கும் சாயையும் ஒளியும் போல வேறுபாடில்லை. புத்தி அசேதனமாகலின் புத்திக்கும் ஆன்மாவுக்கும் பேதமுண்டு. இங்ஙனம் கூறப்பட்டவை புத்தியும் ஆன்மாவுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். குகையை அடைந்தவர் ஆன்மாவும் சிவபெருமானுமே;

[illegible] (கட. ௨. ௧௨)

"காண்டற்கரியரும், மறைவின்றும், கூடப் பிரவேசித்தவரும், குகைக்குள் மறைந்தவரும், குகைக்கணமர்ந்தவரும், பழையரும்" என்னுஞ் சுருதியினால் அவ்விருவரும் குகையிற் பிரவேசித்தமை காணப்படலான். சிவபெருமானுக்குப் புசிப்பில்லை என்று கூறப்பட்டது யுக்தமன்று.

[illegible] (தைத். ௧. ௬. ௨)

"பிராணசத்தியிலே அவர்க்கு இருப்பு; மனசில் (ஞானசத்தியில்) அவர் ஆனந்தம்" என ஆன்மவிருப்பமுடைய பிரமத்துக்கும் ஞானமாத்திரவிஷயமாகிய சொரூபானந்தபோகம் உளதாகக் காணப்படலான். அங்ஙனமே,

[illegible]

[illegible]

[illegible] (...)

"தமது சத்தியாகிய அமிர்தத்தை இரசித்தலினால் உண்டாகிய மகிழ்ச்சியில் ... அந்த பிரமானந்த ... ஆன்மா

வுக்குத் தன் கருமமலப் புசிப்புண்டாதல் பிரசித்தம். இவ்வணம் அவ்விருவரும் போக்தாக்கள் போலச் சாதாரணமாகக் கூறப்படினும் பேதம் கொள்ளப்படும்; போக்தாக்கள் விஷயத்திற் பேதம் உண்மையின். "அரசனும் வேலைக்காரனும் அன்னம் அயில்கின்றனர்" என்று கூறுமிடத்து, அவர்கள் தத்தம் நிலைக்கிசைந்த அன்னம் அயில்கின்றனர் என்று கோடல் போலாம். அவர்களுக்குப் பேதமில்லை என்றமை அங்கீகரிக்கப்படாது.

நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம்।

(கட. ரு. கங; சுவே. சு. கங)

"நித்திய பதார்த்தங்களுள்ளே நித்தியரும், சேதனருள்ளே சேதனரும்" என்னும் சுருதி வாயிலாக, நித்தியத்துவ சேதனத்துவ முதலியன பற்றி ஆன்மாவுக்கும் சிவபெருமானுக்கும் சாமியம் உளதாயினும், அநாதிமல சம்பந்தத்தின் உண்மை இன்மைகளால் (இருவர்க்கும்) வேற்றுமை உண்டாகின்றது.

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶாநீஶௌ (சுவே. க. கூ)

"பிறவாதவராகிய அறிஞனும் அறிவிலனுமாகிய இருவரும் (முறையே) ஈசரும் ஈசனல்லாதவனும்" என்றற்றொடக்கத்த சுருதியினால் ஞானம் அஞ்ஞானம், சுவாதந்திரியம் அசுவாதந்திரியம் என்பனவாதி குணங்களாலும் பேதமுளதாதல் பெறப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) இவ்விருவர்க்கும் சரீரசம்பந்தம் ஒன்றுபவிடத்தும், ஒருவற்கு அஞ்ஞானமுதலியவற்றாற் றுன்பமும், மற்றவர்க்கு அஃதின்மையும் எங்ஙனமெனின்,

(உத்தரம்) அது பொருந்தாது; ஒரே சரீரத்தைப் பொருந்தியிருத்தல் சுகத்துக்கேனும் துக்கத்துக்கேனும் காரணமின்று. பின் (சிவபெருமானுடைய) சுவாதந்திரியமும், (ஆன்மாவுடைய) அசுவாதந்திரியமுமே (முறையே) சுகத்துக்கும் துக்கத்துக்கும் காரணம்.

ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ(அ)நீஶயா ஶோசதி முஹ்யமாந:। ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக: (முண். கூ. க. உ)

"புருஷன் ஒரே (சரீர) மரத்தில் ஈசனல்லாமையின், மோகமுற்று அமிழ்ந்தித் துக்கிக்கின்றனன்; ஆயின், அவன் தனக்கு வேறாகிய மகிழ்வுடைய சிவபிரானைக் கண்டு அப்போது அவருடைய நிரதிசயானந்த மகிமைக் குணத்தை அடைந்து துன்பம் நீங்குகின்றனன்" என்னும் இச்சுருதியின் சம்பிரதாய அர்த்தம் வருமாறு:—

இந்த ஆன்மா அநாதியாகிய கர்மத்தினாலும் [illegible] அநாதியும் அந்தர்தக் கர்ம பல போகத்துக்கு [illegible] அநேக

சரீரத்திற் பிரவேசித்து, தமக்குச் சரிய துன்பத்தை அனுபவித்து ஈசனல்லாமையாற் சுவாதீனமற்றிருத்தல்பற்றி அத்துக்கத்தை நீக்குதற்குச் சாமர்த்தியமில்லாமையே மோகமுற்றுச் சோகிக்கின்றான்; மகாமோகத்தினால் எப்பிய துக்கசாகரத்தமிழ்ந்திக் கிடக்கின்றான்; தன்னுள்ளேயிருந்து செலுத்துபவரும், மகிழ்ச்சியுடையரும், சர்வானுக்கிரகரும், ஈசரும், உமாசகாயருமாயுள்ளாரை எப்போது அவர் அருளினால் அபரோக்ஷமாய் அறிகின்றானோ, அப்போதே சோகநீங்கி அவரது நிரதிசய (ஆனந்த) மகிமைக் குணத்தை அடைகின்றான்.

ஆகலின், சுவாதந்திரியரும் அநாதிமுத்தருமாயுள்ள சிவபெருமானுக்குச் சரீரசம்பந்தமுளதாயினும், ஆன்மாவுக்குப் போலத் தோஷம் அவரைப் பற்றாது. ஆகலின், குகையை அடைந்தவர்கள் ஆன்மாவும் சிவபெருமானுமாம். (கக)

சூத்திரகாரர் பின்னரும் பொருத்தமாமாறு உரைப்பாராயினர்.

விஶேஷணாச்ச (க. உ. கஉ)

(சூ-ம்) விசேஷகுணமுண்மையானும்.

இப்பிரகரணத்திலே ஆன்மாவும் சிவபெருமானும் விசேஷித்து உரைக்கப்படுகின்றனர்.

நஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் (கட. உ. கஅ)

"அறிஞன் பிறப்பதும் இல்லை இறப்பதும் இல்லை" என்றற்றொடக்கத்தவற்றால் ஆன்மா கூறப்பட்டான்.

அணோரணீயான் மஹதோ மஹீயான் (கட. உ. உ0)

"அணுவுக்கணு, மகத்துக்கு மகத்து" என்னுஞ் சுருதியினாற் சிவபெருமான் கூறப்பட்டனர். இந்த விசேஷணம் ஆன்மபுத்தி விஷயத்தில் எங்ஙனம் எய்தும்? ஆகலின் ஆன்மாவும் சிவபெருமானுமே குகையை அடைந்து, முறையே பிரேரியனும் பிரேரகரும், சரீரமும் சரீரியுமாய் அமர்ந்தனர் என நிர்ணயிக்கற்பாற்று. (கஉ)

(ங) அந்தராதிகரணம்.

இருதயகுகைக்குள்ளே உபாசிக்கப்படுமாறு அமர்ந்தருளிய சிவபெருமானுக்கு ஏனைய மற்றோர் உபாசனாஸ்தானம் கூறப்படுகின்றது.

[illegible] (க. உ. கங)

(சாஙி) (கண்) உள்ளே (இருப்பவர் சிவபெருமான்), (அவர்க்குக் குணங்கள்) பொருந்துமாதலின்.

ய ஏஷொ(அ)க்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோவாசைததம்ருதமபயமேதத்ப்ரஹ்ம (சாந். ௪. கரு. க)

"இவர் கண்ணுள்ளே புருஷராகக் காணப்படுகின்றனர்; இவர் (பரம) ஆன்மா, இவர் அழியாதவர், பயமில்லாதவர், இவர் பிரமம்" என்னும் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாம் விஷயம்.

கண்ணுள்ளே அமிர்தத்துவாதி இலக்ஷணத்தோடு கூறப்பட்ட புருஷன் சிவபெருமானா? மற்றொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுக்கு அன்னியன் என்று கூறுவம்.

ஸூக்ஷ்மம் விபாப்மம்। பத்மகோஶப்ரதீகாஶம்।

(தைத். ஆரணி. க௦. கஉ-௩-அ)

"சூக்குமமாயும், பாவமில்லாததாயும்," "பதுமகோசத்தைப்போன்றதாயும்" என்றற்றொடக்கத்த மகோபநிடதச் சுருதிகளிலே, சிவபெருமான் இதயகமலத்தில் இருப்பவராகக் கூறப்படுகின்றனர். ஆண்டு மனசின் சம்பந்தத்தினால் ரூபங்களைக் கிரகிக்கும் கண்ணிந்திரியத்தில் மனச் சம்பந்தத்தினாற் பிரவேசித்திருக்கின்றனன்; அவனே கண்ணிற் புருஷன். இன்றேல், சாயாபுருஷனும் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கின்றேம். கண்ணிற் புருஷன் சிவபெருமான்; நிருபாதிகமாகிய அமிர்தத்துவம் அபயத்துவமுதலிய குணங்கள் இவர்க்கே பொருத்தமாதலின். (கரு)

(ஆக்ஷேபம்) கண்ணுள்ளே இருப்பவராகச் சிவபெருமான் யாண்டும் கேட்கப்படவில்லையே எனின்,

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸ்தாநாதி வ்யபதேஶாச்ச (க. உ. கசு)

(சாசு). (அவர்க்கு) இடமுதலியன உரைக்கப்படலான்.

யஶ்சக்ஷுஷி திஷ்ட²ந் சக்ஷுஷோ(அ)ந்தரோ யம் சக்ஷுர் ந வேத³ யஸ்ய சக்ஷு: ஶரீரம் யஶ்சக்ஷுரந்தரோ யமயதி ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: (பிரு. ரு. எ. கஅ)

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
வுருவேயென் னுறவேயென் னூனே யூனி னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவா
யருவாய வல்வினைநோ யடையா வண்ண மாவடுதண் டுறையுறையு மமரரேறே.

(திருவாவடுதுறை, நாவு, ௪)

"எவர் கண்ணினும், கண்ணினுள்ளும் இருக்கின்றனர்; அவரைக் கண் கண்டிலது, அவர்க்குக் கண் சரீரம், அவர் உள்ளே இருந்து கண்ணை ஆளு கின்றனர், அவர் உன் ஆன்மா, அந்தரியாமி, (அமிர்தர்) சிவன்" என்னும் சுருதியினுற் கண்ணுள்ளே இருப்பவராகவும் ஆளுபவராகவும் சிவபெருமான் கூறப்படுகின்றனர். ஆகலின், இவர் சிவபெருமானே. (கச)

பின்னர்ச் சாயாபுருஷனைச் சொல்வது பொருந்ாதெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸுகவிஶிஷ்டாபிதாநாதேவ ச (க. உ. கரு)

(சஎ) அவர் ஆனந்த குண விசிஷ்டமுடையராகவே கூறப்படலானும்.

கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம (சாந். ச. கo. ரு)

"ஆனந்தம் பிரமம்; ஆகாயம் பிரமம்" என்னும் வாக்கியத்திலே பிரமம் ஆனந்தமுடையதாக மேலே கூறப்படுதலின், இந்தப் பிரமம் சிவபெருமானே. ஆனந்தம் சாயாபுருஷனிடத்து இல்லையன்றே. (கரு)

கண்ணினுள்ளான் ஆன்மா என்றுரைக்கப்பட்டமைபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அத ஏவ ச ஸ ப்ரஹ்ம (க. உ. கசு)

(சஅ) *(ஆனந்தகுண விசிஷ்டமுடையராகக் கூறப்படும்) அந்த நியாயத்தினுல், அவர் பிரமம்.

பிறவிக்கஞ்சிப் பிரமத்தை அறிய விரும்பிய உபகோசலற்கு

கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம (சாந். ச. கo. ரு)

"ஆனந்தம் பிரமம், ஆகாயம் பிரமம்" என்று தொடங்கி,

யதேவ கம் ததேவ கம் யதேவ கம் ததேவ கம் ।

(சாந். ச. கo. ரு)

"எது ஆனந்தமோ அது ஆகாயம்; எது ஆகாயமோ அது ஆனந்தம்" எனச் சுருதி உபதேசிக்கின்றமையின், (வழ) "கம்" என்று கூறப்பட்ட ஆகாயம் பரப்பிரமமே. ஆன்மாவுக்கு இவ்வியல்பினதாகிய பொருத்தம் உளதா? ஆன்மாவில் நிரதிசயானந்தம் இல்லை; ஆகலின், பரமானந்தமுடை

---

*மாநமழிந்தோமதிமறந்தோமங்கைநல்லீர்
வானந்தொழுந்தென்னன்வார்கழலேநினைந்தடியோ
மானந்தக்கூத்தனருள்பெறினுமவ்வணமே
யானந்தமாகிநின்றாடாமோதோணோக்கம்.
(திருத்தோணோக்கம், அ)

யுதாக முதற்கண்ணே கூறி, பின்னர்க் கண்ணினுள்ளே ஆதாரமாய் இருப்பதாகக் கூறப்பட்ட அந்தப் பிரமமே கண்ணினுள்ள புருஷராக உரைக்கப்பட்ட சிவபெருமான். (கசு)

பூருவபக்ஷத்தில் இன்னும் பொருத்தமில்லாமையுற்றுச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஶ்ருதோபநிஷத்கக³த்யபி⁴தா⁴நாச்ச (க. உ. கஎ)

(சுக) உபநிஷத்தை அறிந்தோர்க்குரிய மார்க்கம் கூறப்படலானும்.

தே(அ)ர்சிஷமேவாபி⁴ஸம்ப⁴வந்த்யர்சிஷோ(அ)ஹ: । (சாந். ச. கடு. ரு; ரு. ௧௦. ௧)

"அவர்கள் ஒளிக்குப் போய், ஒளியிலிருந்து பகலுக்குப் போய்" என்று தொடங்கி,

தத்புருஷோ(அ)மாநவ: ஸ ஏதாந்ப்³ரஹ்ம க³மயத்யேஷ தே³வ பதோ² ப்³ரஹ்மபத² ஏதேந ப்ரதிபத்³யமாநா இமம் மாநவமாவர்தம் நாவர்தந்தே (சாந். ச. கடு. ரு, சு)

"அவ்விடத்து அமானவ புருஷன் ஒருவன் உளன்; அவன் அவர்களைப் பிரமத்துக்கு நடாத்துகின்றனன்; இது பிரமத்துக்குப் போகும் தேவயானம்; இவ்வழிச் செல்வோர் இம்மனித வாழ்வுக்கு மீள்வாரல்லர், மீள்வாரல்லர்" என்பது இறுதியாக, பிரமசொரூபத்தை அறிந்தவர்களாற் படிக்கப்படும் ஒளிமார்க்கம் கண்ணுட் புருஷரை அறிந்தவன் விஷயத்தினும் கூறப்படலான், இவர் (கண்ணுட் புருஷர்) ஆன்மாவுமன்று, சாயாபுருஷனுமன்று, பின் சிவபெருமானே. (கஎ)

(கூ) அநவஸ்தித்யதிகரணம்.

அநவஸ்தி²தேரஸம்ப⁴வாச்ச நேதர: (க. உ. கஅ)

(௩௦) அநவஸ்தையினாலும் அசம்பவத்தினாலும் *பிறரன்று.

ஸம்ப⁴க்ஷோ ஜாத: புருஷம் ஸம்ப⁴க்ஷண ஸமாஹ்ருத: ।
ஸம்ஸ்வேத³ஜ உத்³பி⁴த்³ப்ராண: ஸ்ரீணாதி விஶ்வஹா ॥
(தைத். ஆரணி. ௧௦. எஉ. கூஉ)

*காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே.
(பொது, தனித்திருநேரிசை. ச)

"அங்குஷ்ட அளவினராகிய புருஷர் அங்குஷ்டத்தையும் ஆசிரயித்தனர்; ஈசரும், உலகம் அனைத்துக்கும் பிரபுவும், விசுவத்தைக் கவளீகரிப்பவரு மாகிய இவர் பிரீதியுறுகின்றனர்" என்றற்றொடக்கத்த மகோபநிடதத்திலே கூறப்படும் சுருதியே விஷயம்.

ஈண்டு அங்குஷ்ட அளவினராகக் கூறப்பட்டவர் சிவபெருமானா? பிற ரொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிராணாக்கினிகோத்திரப் பிரகரணத்தில் இவ்வாக்கி யம் காணப்படலானும், அங்குஷ்ட அளவினராக உரைக்கப்பட்ட புருஷர் சிற்றுருவினராகக் கூறப்படலானும், அந்தப் புருஷன் ஐந்து ஆகுதிகளைப் புசிக்கும் பிராணவாயு என்றே கோடற்பாற்று. பிராணன் புசிப்பவனாகான் என்று உறுத்திக் கூறல் கூடாது;

ஆபஃ ப்ருதிவீ சான்நம் போக்தாரௌ வாயுதேஜஸீ ।

"பிருதிவியும் அப்புவும் அன்னம்; உண்போர் அக்கினியும் வாயுவும்" என்றற்றொடக்கத்த வாக்கியங்களில் வாயுவும் புசிப்பவனும் என்னும் உண் மை பிரசித்தமாதலின்; எப்பிரகாரத்தானும் அவ்வாக்கியம் பிராணவாயு வைக் குறித்ததெனெ ஆக்ஷேபிக்கின்,

(சித்தாந்தம்) (அங்குஷ்டமாத்திரராகக் கூறப்பட்டவர்) சிவபெரு மானே; உலகம் அனைத்துக்கும் ஈசுவரராதல், உலகத்தைக் கவளீகரித்தல் முதலிய குணங்களை மற்றொன்றுக்கு (பிராணவாயுவுக்கு எப்பிரகாரமாயே னும்) பிரயோகிப்பின், அக்குணங்களுக்கு (அவ்வியல்பினவாய பிறபொருள் கட்கும் பிரயோகிக்க நேர்தலாகிய முடிவின்மை என்னும்) அநவஸ்தாதோ ஷமும், அசம்பவமும் நேருமாகலின். ஆகலின், அவ்வியற்கையர் சிவபெ ருமானே.

ப்ராணாநாம் க்ரந்திரஸி ருத்ரோமா விசாந்தகஃ ।

(தைத். ஆரணி. க௦. எ௬. கூ௰)

"நீவிரே பிராணனுக்கெல்லாம் கிரந்தி, (துக்கத்தை ஒழிக்கும்) உருத்திரர் நீவிரே; நீவிரே என்னுட் பிரவேசித்துள்ளீர்" என்னும் சுருதியில், (அவர்) பிராணனுக்கு ஆதாரமாயினரெனக் கேட்கப்படுதலின், பிராணாதாரமாயும் வழிபடற்பாலர் எனக் கூறப்படுகின்றனர். உபாசனையின் பொருட்டு அவரை அங்குஷ்ட அளவினராகக் கூறினமை விரோதமின்று. பிராணவாயு (பல விடங்களில்) போக்தாவாகக் கூறப்படினும், அதனை அனைத்தையும் கவளீ கரிக்கும் விசுவபோக்தா எனல் அசம்பாவிதம். ஆகலின், இந்தச் சிவபெ ருமான் பிராணாக்கினிகோத்திரத்தினால் வழிபடற்பாலராதலின், அவர் பிராணரூபராய்ப் பிரதிபாதிக்கப்படுகின்றார் என்றமை சித்தித்தது. (கஅ)

(எ) அந்தரியாமியதிகரணம்.

பரப்பிரமசிவனுர் சர்வஞ்ஞரும், சர்வசக்தியினரும், சர்வானுக்கிரகரும், சர்வவியாபகருமாமாயினும், அவர் சூரியமண்டலம், புருஷ இருதய புண்டரீகமுதலிய இடங்களில் உபாசனையின் பொருட்டு உளராதல் (இதுகாறும்) நிரூபிக்கப்பட்டது. (அவர்) யாண்டும் வியாபித்தலே உணர்த்துமாறெழுந்தது இவ்வதிகரணம்.

ஸூத்ரம்: அந்தர்யாம்யதிதைவாதிஷு தத்தர்மவ்யபதேசாத் ।

(க. உ. கக)

(ருக) *தேவர்களினும் (உலக) முதலியவைகளினும் அந்தரியாமியாய் இருப்பவர் (அவரே), அவர் குணங்கள் கூறப்படலான்.

யஃ ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீ ந வேத யஸ்ய ப்ருதிவீ சரீரம் யஃ ப்ருதிவீமந்தரோ யமயத்யேஷ த ஆத்மா அந்தர்யாம்ய்ம்ருதஃ (பிரு. ரு. எ. ங)

"பூமியினும் பூமிக்குள்ளும் இருக்கும் அவரைப் பூமி அறிந்திலது, பூமியைச் சரீரமாகவுடையராய், அதனை உள்ளே நின்று செலுத்துபவர் உன் ஆன்மாவும், அந்தரியாமியும், (அமிர்தரும்) சிவபெருமானுமாம்" என்னும் அந்தரியாமிப் பிராம்மணசுருதியே ஆராயற்பாலதாகிய விஷயம்.

பிருதிவிமுதல் அவ்வியக்த ஆன்மா வரையும் உள்ள எப்பொருள்களுக்கும் அந்தரியாமியாகக் கூறப்பட்டவர் சிவபெருமானு? ஆன்மாவா? விராட்புருஷனு? பிரதானமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தான் தேடிக்கொண்ட விசித்திரமாகிய பல்வகைப் பயன்களைத் துய்க்கும் பொருட்டு, ஆன்மா சகல பூதேந்திரியங்களுள்ளும் பிரவேசித்தானெனல் பொருந்துகின்றது; (இன்றேல்) சகல சேதனப் பொருள்களுக்கும் உபாதானமாயிருத்தலின் விராட்புருஷன் சகல பூதங்களுட் பிரவேசித்தானெனல் பொருத்தம்; இன்றேல், மகத்தத்துவ முதலாகப் பரிணமித்தலின் பிரதானமே சர்வவியாபகமாயதெனல் உசிதம்.

விஶ்வாயிகோ ராஷ்ட்ரஃ (சுவே. ங. ச; ச. கஉ)

---

*மாலாகிநான்முகனுய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
யேலாதனவெல்லாமேல்விப்பானுயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.
(பொது, நின்றதிருத்தாண்டகம், நாவு, ௬௦)

"விசவாதிகர் உருத்திரர்" என்னுஞ் சுருதி கூறியவாறு, உலகம் அனைத்தையும் கடந்து, சமஸ்த விகாரமெலாம் ஒழிந்துள்ள சிவபெருமான் விகாரரூபமாகிய பிரபஞ்சத்துட் பிரவேசித்தாரெனல் ஒவ்வாது. ஆகலின், சிவபெருமான் ஒழிந்து ஆன்மா, விராட்புருஷன், பிரதானம் என்னும் மூன்றனுள் ஒன்றே அந்தரியாமி எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிருதிவி முதலியவற்றுள் அந்தரியாமியாயுள்ளார் சிவபெருமானே; எல்லாவற்றுள்ளும் (அவர்) உண்மைக்குணம் (பிருகதாரணியத்திற்) கூறப்படுதலின்,

வொாzஹஙாாடிஹுாo வ்ாவிஶஜ (அதர்வசிரசு.க)

"அந்தரத்தின் அந்தரத்தைப் பிரவேசித்தனர்" என்று அதர்வசிரசினும் எப்பொருள்களுக்கும் ஆன்மாவாகச் சிவபெருமான் பிரவேசித்தனர் எனக் காணப்படுதலின்.

ஊஷகூ-தூாஹய்-ிாஶ்ரா்தஃ (பிரு. ரு. எ. ௩)

"அவர் உன் ஆன்மா, அந்தரியாமி, அமிர்தர்" என்னுஞ் சுருதியிற் சிவபெருமானே அநாதிமுத்தராகிய அமிர்தர் எனக் கூறப்படுகின்றனர்;

ஊதாநி ஊவா ஐ்ாதஸ்ய நாமயொநி|

"இவை அமிர்தத்தின் பெயர்கள்" என்று சிவபெருமானைக் குறித்து ஜாபாலோபநிடதத்திற் கேட்கப்படலான்.

விஸ்ாயிகொ ரு-ஜ்ஃ (சுவே. ௩. ச; ச. கஉ)

"விசுவாதிகர் உருத்திரர்" என்னுஞ் சுருதி சிவபெருமானை விசுவாதிகர் என்று கூறியவாறு போல,

ஊவெ-ிா ஒவெ ரு-ஜ்ஃ (தைத். ஆரணி. க௦. உச. சஉ)

"எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளும் அவரை விசுவரூபர் என்று கூறுகின்றன. விகாரமுடைய எப்பொருள்களுட் (கலந்து) பிரவேசிப்பினும், அவர்க்கு அவ்விகாரத்தின் லேசமும் பற்றாது என உணர்த்துதற்கே (இந்த அதிகரண ஆரம்பத்திற் கூறப்பட்ட வாக்கியத்தைத் தொடர்ந்து, பிருகதாரணியத்துள்ள) ஒவ்வொரு மந்திரத்தும் அமிர்தசப்தம் பரியாயமாகப் பிரயோகிக்கப்பட்டது.

யொ ஒவெ ரு-ஜ்ஸ ஊறவா நூ-ஹ-ிவஃ ஷய-ிஹ்ா ஊரூஹா த ஒவெ ஒவெ நமொ நஃ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரோ, அவர் பகவான், அவர் பிரமா, அவர் பூஃ, புவஃ, சுவஃ, அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவற்றாற் பிரமா, விஷ்ணு, உருத்திரர், உமை, இலக்குமி, சரசுவதி, கணேசர், இந்திரர்,

இந்திராதி லோகபாலர், பூமி முதலிய சப்தலோகங்கள், பிருதிவியாதி பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், கிரகம், நக்ஷத்திரம், காலமுதலிய ரூபமுடையாராய்ச் சிவபெருமான் தனித்தனி அப்பியாசலிங்கத்தினால் அதர்வசிரசினும் நிரூபிக்கப்படுகின்றனர். சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சத்தை வியாபித்து நின்றமையின், அபுருஷார்த்த சம்பந்தம் எய்துமோ என்னும் ஆசங்கை அறுத்தற்கு, ஐசுவரிய முதலிய மங்கல குணம் அவர்க்கு உளதாதலை உணர்த்துமாறு பகவத் சப்தம் பரியாயமாக ஒவ்வோரிடத்தும் அதர்வசிரசிற் பிரயோகிக்கப்பட்டது. ஆகலின், சர்வாதிகரும் சர்வான்மாவாயுமுள்ளார் சிவபெருமான் எனல் யுக்தம். (௧௯)

பிரதான முதலியவற்றை அந்தரியாமியாகக் கூறல் உசிதமா என்னும் ஆக்ஷேபத்தைச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

ந ச ஸ்மார்த்தமதத்தர்மாபிலாபாச்சாரீரஶ்ச (க. உ. ௨௦)

(௫௨) ஸ்மிருதி கூறும் அதுவும் அன்று; அதன் குணங்கள் யாதுங் கூறப்படாமையின்; சரீரியும் அன்று.

(சாங்கிய) ஸ்மிருதியிற் கூறப்பட்ட பிரதானத்தைச் சுருதி சொல்லிய அந்தரியாமி எனல் கூடாது, விகாரமுறும் ஜடத்தன்மை முதலிய குணங்கள் அவர்க்குக் கூறப்படாமையின்; சாரீரனாகிய விராட்புருஷனுமன்று, அவனுக்கு அனைத்தையுஞ் செலுத்துமியல்பு முதலியன கூடாமையின். (௨௦)

சூத்திரகாரர் ஆன்மாவுமாகான் என்கின்றனர்.

உபயேऽபி ஹி பேதேனைநமதீயதே (க. உ. உக)

(௫௩) இரண்டும் உறுதியாய் அவரைப் *பேதமென்றே கூறுகின்றன.

யோ விஜ்ஞானே திஷ்டந் (கண்ணுவசாகை—பிரு. ரு. எ. ௨௨)
ய ஆத்மனி திஷ்டந் (மத்தியந்தினசாகை)

"எவர் விஞ்ஞானத்தில் (ஆன்மாவில்) இருக்கின்றனரோ;" "எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ" என்றற்றொடக்கத்தனவாக முறையே கூறும் கண்ணுவசாகை மத்தியந்தினசாகையுமாம் இரண்டினும் ஆன்மாவினின்று

*கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க்காலத்தைக்கழித்துப்போக்கித்
தெள்ளியேனாகிநின்றுதேடினேனாடிக்கண்டேன்
உள்குவாருள்கிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று
வெள்கினேன்வெள்கிநானும்விலாவிறச்சிரித்திட்டேனே.
(பொது, தனித்திருநேரிசை, நாவு, ரு)
இரப்பெரமையாள்வரென்னுமீங்காரிடைமருதுமேவியடங்கொண்டாரே.
(திருவிடைமருதூர், நாவு, ௫)

அந்தரியாமியானவர் வேறெனக் கூறப்படுகின்றனர். ஆகலின் சிவபெருமானே அனைத்துக்கும் அந்தரியாமி; பிரதானமாவது, விராட்புருஷனாவது, ஆன்மாவாவது அன்று என்பது சித்தமாயிற்று. (உக)

(அ) அதிருசியத்துவாதிகரணம்.

கண்டுப் பிரத்தியக்ஷமாகிய பிருதிவியாதி ரூபமாகப் பிரதிபாதிக்கப்பட்ட சிவபெருமான் அவற்றைப் போலக் காண்டலுறுர் என உணர்த்துதற்கு எழுந்தது இவ்வதிகரணம்.

𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌕𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌤𑍇𑌃 (க. உ. உஉ)

(ருச) *கண்கூடாகாமை முதலிய குணங்களுடையர் (சிவபெருமான், அவர்) குணங்கள் கூறப்பட்டமையின்.

𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇। 𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌦𑌵𑍍𑌯𑌯𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃 (முண். க. க. சு)

"அந்த அக்ஷரம் எதனல் உரைக்கப்படுகின்றதோ, அது பரைஞானம்; எது காணப்படாததாய், பற்றப்படாததாய், கோத்திரமிலாததாய், வர்ணமிலாததாய், கண் காது இலாததாய், கைகால் இலாததாய், நித்தியமாய், வியாபகமாய், யாண்டும் பிரவேசித்ததாய், அதிசூக்குமமாய், அழியாததாய், சமஸ்தப்பிராணிகளுக்கும் காரணமாய் உள்ள அதனை (அக்ஷரத்தைப்)

---

*கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னேக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே.
(திருவாசகம், சிவபுராணம்)

அடிசார்ந்தவர்க்கு முடியாவின்ப
நிறையக்கொடுப்பினுங் குறையாச்செல்வ
மூலமுகடுவு முடிவுமிகந்து
காலமூன்றையுங் கடந்தகடவு
ளுளக்கணுக்கல்லா தூன்கணுக்கொளிந்துத்
துளக்கறநிமிர்ந்த சோதித்தனிச்சுட
ரெறுப்புத்துளையி னிருசெவிக்கேட்டா
தறுப்பினின்றெழுதரு முள்ளத்தோசை
வைத்தாவின் வழிமறுத்தகத்தே
தித்தித்தூறுந் தெய்வத்தேற
றுண்டத்துளையிற் பண்டைவழியன்றி
யறிவினுணுகரியாசாற்ற
மேனையதன்மையு மெய்தா தெவற்றையுந்
தானேயாகி நின்றதற்பர.
(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, [illegible])

பெரியோர் காண்கின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதியே இவ்வதிகரண விஷயம்.

ஈண்டு அக்ஷரம் என்றது பிரதானமா? ஆன்மாவா? சிவபெருமானு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஈண்டு அக்ஷரம் பிரதானம்; மகத்து முதலியவாய்ப் பரிணமிக்கும் பிரதானம் எப்பொருட்கும் காரணமாதலின்; இன்றேல் (அக்ஷரம்) ஆன்மா.

க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர (சுவே. க. கo)

"க்ஷரம் பிரதானம், அக்ஷரம் அமிர்தம்" என்னுஞ் சுருதிகொண்டு ஆன்மாவை அக்ஷரம் எனக் கூறுவது உசிதம், ஆன்மா தன் கர்மவசத்தினுல் மகாபூதங்களுக்குக் காரணமாதலும் உண்மையான். ஆகலின், இந்தப் பிரதானம் ஆன்மா இரண்டனுள் ஒன்றை அக்ஷரம் குறிப்பதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே அக்ஷரம்;

யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்யஸ்ய ஜ்ஞாநமயந்தப: (முண். க. க. கூ)

"எவர் சர்வஞ்ஞரோ, அனைத்தையும் அறிபவரோ, எவர்க்குத் தபசு ஞானமயமோ" என்றற்றொடக்கத்த சுருதியில், அவர் குணங்கள் கூறப்படலான்; சிவபெருமானொழிந்து பிறிதொன்றுக்கும் முற்றுணர்வு முதலிய குணங்கள் எய்தா. எப்பொருள்களுக்கும் காரணமாதல், பிரதானத்துக்கேனும் ஆன்மாவுக்கேனும் நேருமெனல் யுக்தமன்று. அசேதனமாகிய பிரதானத்துக்கும், அசர்வஞ்ஞனுகிய ஆன்மாவுக்கும் அந்தச் சாமர்த்தியம் எய்தாமையான். (உஉ)

ஈண்டுப் பின்னரும் ஆன்மாவையும் பிரதானத்தையும் அக்ஷரமெனல் பொருந்தாதெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

விசேஷணபேதவ்யபதேசாப்யாம் ச நேதரௌ (க. உ. உங)

(௩௩) விசேஷணமும் பேதமும் கூறப்படலான், இந்த இரண்டும் அன்று.

கஸ்மிந் நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி
(முண். க. க. ங)

"பகவானே, எது அறியப்படின், ஈதெல்லாம் அறியப்பட்டதாகின்றவோ" என்னுஞ் சுருதியினுல் ஒன்றை (சிவஞானத்தை) அறிதலின் எல்லாம் அறியப்படுகின்றனவாகும் என உணரப்படுகின்றது. இஃதன்றி இவ்வியல்பினவாய வேறு விசேஷணங்களும் உண்டு; அக்குணங்கள் கூறப்படலானும், அக்ஷரம் பிரதானமாகாது.

அக்ஷராத்பரத: பர: (முண். ௨. ௧. ௨)

"அக்ஷரத்தினும், (பரமாயசிவான்மாவினும்) பரன்" என்னுஞ் சுருதி ஆன்மாவினின்று (அக்ஷரம்) வேறு எனக் கூறுதலின், (அக்ஷரம்) ஆன்மாவும் அன்று. (௨௩)

ரூபோபந்யாஸாச்ச (௧. ௨. ௨௪)

(௫௬) (அவரது) வடிவத்தின் உபந்நியாசம் உண்மையானும்.

அக்நிர்மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ திஸ: ஸ்ரோத்ரே வாக்விவ்ருதாஸ்ச வேதா:। வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விஸ்வமஸ்ய பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா॥

(முண். ௨. ௧. ௪)

"அக்கினி அவர் தலை, சூரியனுஞ் சந்திரனும் அவர் கண்கள், திக்குகள் அவர் காதுகள், புலப்படுத்தப்பட்ட வேதம் அவர் வாக்கு, பிராணன் அவர் சுவாசம், பிரபஞ்சம் அவர் இருதயம், பூமி அவர் அடிகளினின்று பிறந்தது, பிராணிகள் அனைத்துக்கும் அவரே அந்தரியாமி" என்னுஞ் சுருதியினால், அக்ஷரம் மூவுலகவடிவமாதல் கூறப்படுகின்றது. ஆகலின் அனைத்துக்கும் ஆன்மாவாகிய சிவபெருமானே அக்ஷரமொழியினாற் கருதப்பட்டவர். (௨௪)

(௬) வைசுவாநராதிகரணம்.

மேலே உரைத்த அதிகரணமொன்றிற் பிராணாதாரராக உபாசிக்கற்பாலர் என்று கூறப்பட்ட சிவபெருமான் பின்னர் ஜாடராக்கினி ரூபமாக உபாசிக்கற்பாலரெனக் கூறுகின்றது இவ்வதிகரணம்.

வைஸ்வாநர: ஸாதாரணஸப்தவிஸேஷாத் (௧. ௨. ௨௫)

(௫௭) *வைசுவாநர †ஒளி (சிவபெருமான்), சாதாரண சப்தத்தினின்று பேதம் உண்மையின்.

யஸ்த்வேதமேவம் ப்ராதேஸமாத்ரமபிவிமாநமாத்மாநம் வைஸ்வாநரமுபாஸ்தே ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தி (சாந். ௫. ௧௮. ௧)

---

*காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்கடிக்கமலத்திருந்தயனுங்காணவொண்ணாச் சீரொளியதமிழ்ப்பிழம்பாய்நின்றதொல்லைத்திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்கு மேரொளியையிருநிலனும்விசும்புமின்னுமேழுலகுங்கடந்தண்டத்தப்பால்நின்ற பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (கோயில், பெரியதிருத்தாண்டகம், நாவு, ௫௦)

†அக்கினி.

"இடவரைப்புட்பட்ட வைசுவாநரரை ஆன்மாவாக எவன் உபாசிக்கின்ருனே, அவன் சர்வலோகங்களினும், சர்வபூதங்களினும், சர்வான்மாக்களினும் போகம் (அன்னம்) துய்க்கின்ருன்" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே இவ்வதிகரணவிஷயம்.

உபாசிக்கற்பாலராகக் கூறப்பட்ட வைசுவாநரர் சிவபெருமானு? பிறரொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வைசுவாநரமொழியினல் ஜாடராக்கினியே கூறப்படுகின்றது;

அயமக்நிர்வைச்வாநரோ யோऽயமந்த꞉ புருஷே யேநேத³மந்நம் பச்யதே யதி³த³மத்³யதே தஸ்யைஷ கோ⁴ஷோ ப⁴வதி யமேதத்கர்ணாவபிதா⁴ய ச்²ருணோதி ஸ யதோ³த்க்ரமிஷ்யந்ப⁴வதி நைநம் கோ⁴ஷம் ச்²ருணோதி।

(பிரு. எ. கூ. க)

"உண்ணப்பட்ட அன்னத்தை ஜீர்ணமாக்கற்பாலதாய (மனிதனுள்ளேயுள்ள) இந்த அக்கினி வைசுவாநரன், ஒருவன் தன் காதுகளைப் பொத்துங்கால், அவன் கேட்பது அதன் ஒலியே; அவன் இவ்வாழ்வைவிட்டு நீங்குங்கால், அவன் அவ்வொலியைக் கேட்பானல்லன்" என்னுஞ் சுருதியில் ஜாடராக்கினிபற்றிப் பிரயோகங் காணப்படலான்.

இன்றேல் (அவ்வைசுவாநரர்) பிருதிவியாதி பஞ்சபூதங்களுள் மூன்ருவதாகிய அக்கினியாகலாம்;

ஏஷ வா அக்நிர்வைச்வாநர꞉ (தைத். சங். ௩. ௩. அ. ச)

"இந்த அக்கினியே வைசுவாநரன்" என்றற்ருெடக்கத்த சுருதிகளில் வைசுவாநரசப்தம் பிரசித்தமாயிருத்தலின்.

இன்றேல், வைசுவாநரன் அக்கினி தேவதையாயிருக்கலாம்;

வைச்வாநரம் த்³வாத³சகபாலம் நிர்வபேத் புத்ரே ஜாதே।

(தைத். சங். உ. உ. ரு. ௩)

"புதல்வன் பிறந்தபோது பன்னிரு கபாலங்களில் வைசுவாநரர்க்குப் பலிகள் கொடுக்கப்படும்" என்றற்ருெடக்கத்த சுருதிகளில், (அவ்வக்கினி) இஷ்ட தேவதையாய்ப் பலம் கொடுத்தல் கூறப்படுதலின். சிவபெருமான் அன்று; பிறதேசமாத்திரம் என எல்லை வரையறுப்புக் குறிக்கப்படுதலினென்னின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே வைசுவாநரர்; என்னை? வைசுவாநரசப்தம் சாதாரணமாக வழங்கப்படினும், இவ்வதிகரணத்திலே

கோ ந ஆத்மா கிம் ப்³ரஹ்ம (சாந். ரு. கக. க)

ஆத்மாநமேவேமம் வைச்வாநரம் ஸம்ப்ரத்யத்யேஷி தமேவ நோ ப்ரூஹி (சாந். ௫. கக. ௬)

"நமது ஆன்மா யாவர்? பிரமம் என்னை? வைசுவாநர ஆன்மாவை நீவிர் இப்பொழுது அறிகின்றீர்; அதனை நமக்குக் கூறும்?" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சிவபெருமான் அசாதாரண பிரமசப்தாதிகளினால் (இந்தச் சாந்தோக்கியோபநிடதப் பிரகரணத்தில்) விசேஷிக்கப்படுதலின். அந்த விசேஷணம் ஜாடராக்கினி முதலியவைகளுக்குச் செல்லுமாறின்று. ஆகலின், சிவபெருமானே வைசுவாநரர். (உ௫)

சிவபெருமான் பாலதாக மற்றோர் பிரமாணஞ் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸ்மர்யமாணமநுமாநம் ஸ்யாதிதி (க. உ. உ௬)

(௫௮) (ஈண்டுக்) கூறப்படுவது அனுமானக் குறியாய் ஆகுக என்பது.

அக்நிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ।

(முண். உ. க. ௪)

"அக்கினி அவர் தலை, சூரியனுஞ் சந்திரனும் அவர் கண்கள்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே ஆகாயலோகமுதற் பிருதிவியீறாகிய வடிவம் சிவபெருமானுக்குக் கூறப்பட்டது.

தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ வைச்வாநரஸ்ய மூர்தைவ ஸுதேஜாச்சக்ஷுர்விச்வரூப: ப்ராண: ப்ருதக்வர்த்மாத்மா ஸந்தேஹோ பஹுலோ பஸ்திரேவ ரயி: ப்ருதிவ்யேவ பாதௌ।

(சாந். ௫. க௮. உ)

"அந்த வைசுவாநர ஆன்மாவுக்குத் தலையே சுதேஜஸ் (நல்லொளி), கண் விசுவரூபம், பிராணன் பிருதக் வர்த்தமானம் (வேறாய வழி), தேகம் பகுளம் (நிறைவு), ஜலாசயமே செல்வம், அடிகளே பூமி" என்னுஞ் சுருதிகளிற் கூறப்பட்ட வடிவம் சிவபெருமானதென (அனுமானித்தற்கு) இலிங்கமாகின்றது. (உ௬)

சப்தாதிப்யோऽந்த: ப்ரதிஷ்டாநாச்ச நேதி சேந்ந ததா த்ருஷ்ட்யுபதேசாதஸம்பவாத் புருஷமபி சைநமதீயதே (க. உ. உ௭)

(௫க) சப்தமுதலியவைகளானும், உள்ளே பிரதிஷ்டை பண்ணப்படலானும், வைசுவாநரர் ஜாடராக்கினியொழிந்து மற்றொன்றன்றெனின், அன்று; அங்ஙனந் தியானத்தின்

பொருட்டு உபதேசிக்கப்படலானும் ஒவ்வாமையானும்; இவரை (வைசுவாநரரை) புருஷரென்றும் படிக்கின்றனர்.

(ஆக்ஷேபம்) இந்த வைசுவாநராக்கினி,

ஹ்ருதயம் காஹபத்யோ மநோந்வாஹார்யபசந ஆஸ்யமாஹவநீய: (சாந். (டு. கஅ. உ)

தத்3 யத்3 ப4க்தம் ப்ரத2மமாக3ச்சே2த் தத்3தோ4மீயம் ஸ யாம் ப்ரத2மாமாஹுதிம் ஜுஹுயாத் (சாந். (டு. ககூ. க)

"இருதயம் கார்கபத்தியாக்கினி, மனம் அந்வாகாரியாக்கினி, வாய் ஆகவநீயாக்கினி, ஆகலின் மனிதன் எதனை முதற்கண் புசித்தானே அது ஹோமஸ்தானத்தின் பாற்று, அவன் முதல் ஆகுதியை ஓமிக்க" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கூறப்பட்டு, அக்கினி சப்தத்தினால் மூன்றாகக் கற்பித்த அக்கினிகளாய், பிராணன்களுக்குக் கொடுக்கும் ஆகுதிகளுக்கு ஆதாரமாயிருத்தலானும்,

ஸ யோ ஹைதமேவமக்3நிம் வைஶ்வாநரம் புருஷவித4ம் புருஷேந்த: ப்ரதிஷ்டி2தம் வேத3 (சத. பி. கo. சு. க. கக)

"புருஷரூபமாயும், புருஷனுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டதாயும் இங்ஙனம் இந்த வைசுவாநராக்கினியை எவன் அறிகின்றானோ" என்னுஞ் சுருதியிற் புருஷனுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்ட குறியினாலும், (அந்த வைசுவாநராக்கினி) ஜாடராக்கினியன்றிச் சிவபெருமான் அன்றெனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று; ஜாடராக்கினிரூபராகச் சிவபெருமான் உபாசிக்கற்பாலர் என உபதேசிக்கப்படலானும், கேவலம் ஜாடராக்கினி மூவுலக சரீராதியாயிருத்தல் கூடாமையானுமாம். மேலும்,

ஸ ஏஷோக்3நிர்வைஶ்வாநரோ யத் புருஷ:।

(சத. பி. கo. சு. க. கக)

"புருஷனுக அறியப்பட்டவன் இந்த வைசுவாநராக்கினி" என்னுஞ் சுருதியில் வாஜசநேயினர் வைசுவாநரரைப் புருஷர் எனவும் கூறுகின்றனர். உபாதியில்லாத புருஷசப்தத்தினாற் கூறப்படுகின்றவர் சிவபெருமானே; அந்தப் புருஷனால் இஃதெல்லாம் நிறைந்தது என்று கேட்கப்படலான். ஆகலின் சிவபெருமானே (அந்தப் புருஷர் என்று) கோடல் யுக்தம். (உஎ)

அத ஏவ ந தே3வதா பூ4தம் ச (க. உ. உ௮)

(சுo) ஆதலினாலே தேவதையுமன்று, பூதமுமன்று.

இந்த வைசுவாநரர் திரிலோகத்தைச் சரீரமாகவும், புருஷசப்தத்தினால் அறியப்படுபவராகவும் இருத்தலினால், (அவர்) தேவதாக்கினியாயா

வது, (பிருதிவியாதி ஐஞ்சபூதங்களுள்) மூன்றும் பூத அக்கினியாயாவது கொள்ளப்படுவாரல்லர். (உஅ)

ஈண்டுச் சிவபெருமான் ஜாடராக்கினிரூபமாய் உபாசிக்கற்பாலரரக அக்கினிசப்தத்திறுற் குறிக்கப்பட்டனரென நிரூபித்து, சூத்திரகாரர் மற்றைய ஆசாரியர்கள் அவ்வக்கினியை எங்ஙனம் பலதிறப்பட யோஜித்தனர் எனக் காட்டுவாராயினர்.

ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி: (க. உ. உகூ)

(சூக) நேரே (பதப்பிரயோகஞ் செய்யினும்) விரோதமின்றென்பர் ஜைமினி.

அவர் ஆவசியகம் அக்கினிரூபராக உபாசிக்கற்பாலர் என்னும் நியாயத்தினுன் மாத்திரமன்றி, முற்பட (அன்பர்களை) நடாத்துதலாற் சிவபெருமானே அக்கினிசப்தத்துக்கு நேரே பொருளாயினர் என்னும் நியாயத்தாலும் விரோதமின்றென்பர் சைமினி. (உகூ)

அபிவ்யக்தேரித்யாச்மரத்ய: (க. உ. கூ0)

(சூஉ) அபிவியக்தியின் பொருட்டென்பர் ஆசுமரத்தியர்.

யஸ்த்வேதமேவம் ப்ராதேசமாத்ரம் (சாந். ரு. கஅ. க)

"இடவரையுட்பட்டவர்" என்றற்றொடக்கத்த சுருதிப்பிரகாரம், எல்லையுட் படாதவரை ஆகாயமுதற் பிருதிவி ஈறுயுள்ள பிரதேசங்களில் அடங்கினவராக எல்லைப்படுத்தினமை, உபாசகர்களுக்குப் பிரசன்னமாக்கும்பொருட்டென்பர் ஆசுமரத்தியமுனிவர். (கூ0)

அநுஸ்ம்ருதேர் பாதரி: (க. உ. கூக)

(சூகூ) ஞாபகத்தின்பொருட்டு என்பர் பாதரி.

ஆகாயமுதற் பிருதிவி அந்தமாயுள்ளவைகளிற் சிரசும், பாதமும், மற்றை அவயவங்களும் கற்பித்தமை மறவாதிருக்கும் பொருட்டே, (அஃதாவது) பிரமத்தை அடையும்பொருட்டென்பர் பாதரிமுனிவர். (கூக)

ஸம்பத்தேரிதி ஜைமிநிஸ்ததா ஹி தர்சயதி (க. உ. கூஉ)

(சூச) உயர்வின்பொருட்டென்பர் ஜைமினி, அங்ஙனமே சுருதி கூறுகின்றது.

உர ஏவ வேதிர்லோமாநி பர்ஹிர்ஹ்ருதயம் கார்ஹபத்யோ மநோऽந்வாஹார்யபசந ஆஸ்யமாஹவநீய: (சாந். ரு. கஅ. உ)

"நெஞ்சே வேதிகை, உரோமங்களே தர்ப்பை, இருதயம் கார்கபத்தியாக்கினி, மனசு அந்வாகாரியாக்கினி, வாய் ஆகவநீயாக்கினி" என்னுஞ்

சுருதியில் உபாசகனுடைய உர முதலியவைகளை [illegible]க முதலியனவாகக் கற்பித்தமை ஞானங்கமாயுள்ள பிராணாகுதியை அக்கினிகோத்திரமென வுயர்த்திச் சிந்தையிற் கொள்ளுமாறென்பர் ஜைமினி.

ய ஷவஂவிதாநஂஹொதீ ஜுஹொதி|

(தைத். சங். க. சு. கூ. கு)

"வித்துவான் அக்கினிகோத்திரத்தை ஓமிக்கின்றனன்" எனச் சுருதி விளக்குகின்றது. (நஉ)

ஶுதிஂ வெதநவஸிதி (க. உ. நந)

(சூ௫) இவரை அதற்குள்ளே உளராகவும் கூறுகின்றனர்.

ஶிவொ மா விஶாப்ரதாஹாய (தைத். ஆரணி. கo. சுகூ. கூo)

"(ஓ பலியே), எரிவுறாதிருக்குமாறு சிவபெருமானாக என்னுள்ளே பிரவேசி" எனவும்,

ப்ரஹாஂ ப்ரீணாதி விஶ்வஹாக்|

(தைத். ஆரணி. கo. எக. கூஉ)

"விசுவபோக்தாவாயுள்ள பிரபு பிரீதியுறுகின்றனர்" எனவும் போந்த சுருதிகளிற் சிவபெருமான் பிராணாகுதிசெய்யுங்காலத்திற் *போக்தாவாக உபாசகர் உள்ளத்தில் உளர் எனத் தைத்திரீயகர் கூறுகின்றனர். ஆகலின், ஆசாரியர் அனைவர் கோட்பாட்டினாலும், எவ்வித நியாயத்தினாலும் ஜாடராக்கினிரூபராகச் சிவபெருமானே பிராணாக்கினிகோத்திரத்தினால் ஆராதிக்கற்பாலர் எனல் சமீசீனம். (நந)

---

*ஶிவொ ஶாதா ஶிவொ ஹொக்தா|

அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ
ரண்டமாஞ்சிறுமைகொண்டடியே
னுண்டவூணுனக்காம்வகையெனதுள்ள
முள்கலந்தெழுபரஞ்சோதி.

(திருவிசைப்பா, கங்கைகொண்டசோளேச்சரம், ௬)

என்று வேதத்துக்கிசைந்து சிவாகமமூர் திருவிசைப்பாவுங் கூறிய.

முதலாம் அத்தியாயத்து மூன்றும் பாதம்.

———o———

(க) த்யுப்வாத்யதிகரணம்.

———

இந்தப் பாதத்திலே வெளிப்படையானவும் வெளிப்படையிலாதனவு மாகிய பிரமலிங்கங்களையுடைய வேதாந்த வாக்கியங்களின் விசாரஞ் செய்யப்படுகின்றது. இதற்கிடையில் (இந்நூல் படித்தற்குரிய) அதிகாரி எவரென்றும் நிரூபணஞ் செய்யப்படுகின்றது.

த்³யுப்⁴வாத்³யாயதநம் ஸ்வஶப்³தா³த் (க. ௩. க)

(சுசு) * ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு உறைவிடம் (சிவபெருமான்), சுவ (என்னும் ஆன்ம) சப்தவுண்மையான்.

யஸ்மிந் த்³யௌ: ப்ருதி²வீ சாந்தரிக்ஷமோதம் மந: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்வை:। தமேவைகம் ஜாநத² ஆத்மாநமந்யா வாசோ விமுஞ்சத² அம்ருதஸ்யைஷ ஸேது: (முண். உ. ௨. ரு)

"எவரிலே ஆகாயமும், பூமியும், அந்தரிக்ஷமும் குறுக்கும் மறுக்குமாயின வோ, பிராணன்கள் அனைத்திேனாடு மனசும் (உளவோ), அந்த ஏகராகிய (பரம) ஆன்மாவையே அறிக, பிற வார்த்தைகளை விடுக, அவர் அமிர்தத்துக்குச் சேது" என்னும் சுருதியே ஈண்டு ஆராயற்பாலதாகிய விஷயம்.

இந்தச் சுருதியில் ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு உறைவிடமாகக் கூறப்பட்டவர் சிவபெருமானா? மற்றொன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானுக்கு அன்னியமாயுள்ள வாயுவே பூமி ஆகாயத்துக்கு ஆதாரம் எனப் பெறப்படுகின்றது.

வாயுநா வை கௌ³தம ஸூத்ரேணாயம் ச லோக: பரஶ்ச லோக: ஸர்வாணி ச பூ⁴தாநி ஸந்த்³ருப்³தா⁴நி ப⁴வந்தி।

(பிரு. ரு. எ. உ)

"கௌதமனே! நூலினாற் போல வாயுவினாலே இவ்வுலகமும், பிறவுலகமும், மற்றெந்தச் சென்மக்களும் கோக்கப்பட்டுள்ளன" என்னுஞ் சுருதியில்

* நீள்வானமுகடதனைத் தாங்கிநின்றமலையானை (திருநாகேச்சரம், நாவு, ௬)

† பொறையவன்காண் பூமியேழ் தாங்கியோங்கு புண்ணியன்காண் (திருவேகம்பம், நாவு, ௩)

என்னுந் திராவிட சுருதிகளால் ஆகாயம் பூமிகளுக்குச் சிவபிரானே ஆதாரமென அறியப்படுகின்றன.

[illegible]ாயுவே அனைத்துக்கும் ஆதாரமெனப் பிரசித்தம[illegible]த்தலினால் எனின்,

(உத்தரம்) கூறுதும்: சிவபெருமானே ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு ஆதாரம்;

[illegible] வைகம் ஜாநத ஆத்மாநம் (முண். உ. உ. ரு)

"அவ்வொருவராகிய (பரம) ஆன்மாவையே அறிக" என்னுஞ் சுருதியிற் (பரம) ஆன்மா என்னும் சப்தம் உளதாதலின். (க)

(ஆக்ஷேபம்) ஆன்மசப்தத்தைச் சூத்திரான்மாவாகிய வாயுவுக்கும் பிரயோகித்தலான் எய்தும் இழுக்கென்னை என,

(உத்தரம்) சூத்திரகாரர் இங்ஙனம் இறுப்பாராயினர்.

முக்தோபஸ்ருப்யவ்யபதேசாத் (க. ங. உ)

(சூஎ) * முத்தரால் எய்தப் பெறுகின்றார் எனக் கூறப்படலானும்.

யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம் ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி (முண். ங. க. ங)

"எப்போது பார்ப்பவன் பொன்னிறத்தினரும், கர்த்தாவும், ஈசரும், புருஷரும், பிரமாவுக்குக் காரணருமாயினாரைப் பார்க்கின்றானோ, அப்போது அவன் வித்துவானாய், புண்ணியபாவத்தை ஒழிந்து நிரஞ்சனனாய்ப் பரமசாமியத்தை அடைகின்றான்" எனவும்,

யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே(அ)ஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய ததா வித்வாந் நாமரூபாத்விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் (முண். ங. உ. அ)

"இங்ஙனம் ஓடுவனவாகிய †நதிகள் சமுத்திரத்திற் பாய்ந்து பெயரும் வடி

---

*சொற்பாவும்பொருடெரிந்து தூய்மைநோக்கித் தூங்காதார்மனத்திருளை வாங்காதானை
(திருக்கீழ்வேளூர், நாவு, உ)

†[illegible] மறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொண்டர்மனத்தகத்தேயனவரதமன்னி நின்றதிறலானை.
(திருமுதுகுன்றம், நாவு, அ)

என எதிர்மறைமுகத்தானும் உடன்பாட்டானும சிவபிரான் முத்தர்களாகிய அடியாரால் அடையப்படுமாறு திராவிட சுருதிகளால் விளக்கப்பட்டது.

"நதீநாம் ஸாகரம் ப்ராப்ய நாமரூபம் நிவர்த்ததே |
தேஷாம் ந விஜாநந்தி பரஸ்பரவிசேஷணம் |
ஜீவாநாம் ஜாயதே தத்வத் ப்ராப்ய சிவம் விசேஷணம் |"

வும் ஒழிந்து முறை[redacted]றனவோ, அங்ஙனம் வித்துவானும் பெயர்வடிவி னின்று விடுற்றுப் பரத்துக்குப் பரமாயிருக்கும் திவ்ய புருஷரை அடை கின்றான்" எனவும் போந்த சுருதிகளான், புண்ணிய பாவங்களினால் எய் தும் நாமரூபங்களினின்று விடுறுகின்றவர்களாகிய முத்தர்களால் அடை யற்பாலராகக் கூறப்படலானும், (இவர்) சிவபெருமானே.

இது எங்ஙனம் வாயுவுக்குப் பொருந்தும்? சிவான்மகமாகவேயிருத்த லின் வாயு சூத்திரான்மா; சிவபெருமானுடைய அட்டமூர்த்தங்களுள்ளே ஒன்றாதலின். ஆகலின், வாயு அன்றென்று நிர்ணயிக்கப்பட்டது. (உ)

நாநுமாநமதச்சப்தாத் ப்ராணப்ருச்ச (க. ௩. ௩)

(சூ-அ) அனுமானம் அன்று; அதைச் சுட்டும் சப்தம் இன்மையான்; ஆன்மாவும் (அன்று).

அனுமானத்தினாற் பெறப்படும் ஆகாயம் பூமிகளுக்கு ஆதாரம் அது; அனைத்துக்கும் உபாதானகாரணமாயிருத்தலினான் எனின், அது பொருந் தாது; பிரதானத்தைச் சுட்டும் சப்தம் இன்மையான். (பரம)ஆன்மசப்தம் உண்மையான், பிராணனைத் தாங்கும் ஆன்மா எனலும் பொருந்தாது. (௩)

பேதவ்யபதேசாச்ச (க. ௩. ௪)

(சூ-கூ) பேதம் கூறப்படலான்.

ஈண்டுச் சிவபெருமான் ஆன்மாவினின்று வேறெனக் கூறப்படுகின்றது;

ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோऽநீசயா சோசதி முஹ்யமாந: ஜுஷ்டம் யதா பச்யத்யந்யமீசமஸ்ய மஹிமாநமிதி வீத சோக: (முண். ௩. க. உ; சுவே. ௪. ௭)

"அவன் (ஆன்மா) மரமொன்றில் (சரீரத்தில்) இறைவற்றன்மையின்மை யான் மயங்கி, அமிழ்ந்தி, சோகித்துக்கொண்டிருக்கின்றான்; (ஆயின்) எப்

யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரேऽஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய।
க்ஷீரோதகாயஸ்ஸலிலம் ததைவ தேஹாதயோऽபி।
ஸர்வே ப்ரலீயந்தே ப்ரஸமுத்ரேऽஸ்தம் ப்ராப்நுவந்தி॥

சமுத்திரத்தை அடைய நதிகளுக்கு நாமரூபம் நீங்குகின்றது; (நதிக்கும் சமுத்தி ரத்துக்கும்) ஒன்றுக்கொன்றுள்ள விசேஷத்தை (எவர்களும்) அறிகின்றிலர்; ஆனால் (இரு) ஜலத்துக்கும் வேறாக விசேஷம் தோன்றவில்லை; அயசலத்தைக்கொண்டு செல்லும் நதியானது சமுத்திர ஜலத்தை அடைந்து உப்பு நீரியல்பைச் சமுத்திரத் தின் பிரபாவத்தினாலன்றோ அடைகின்றது. இங்ஙனம் தேகத்திலே வேறுபுள்ள ஆன்மாவானது சிவத்தை அடைகின்றது" என்று சிவாகமப் பிரகரணங் கூறுத லான், நதியானது தனது நாமரூபத்தையொழிந்தாலும் சமுத்திரவத்தின்மையை யடையுமாறுபோல, ஆன்மாவானது தனது நாமரூபத்தையொழிந்தாலும் வேறு படாது நின்று சிவனுர் ஆனந்தத்தை அடைகின்றதென முண்டகோபநிடதச் சுருதிப்பொருள் வலியுறுத்தப்படுகின்றது.

போது இவன் மகிழ்வுடையனாய், (தனக்கு) வேறாகிய சிவபிரானை மகிமையினோடு காண்கின்றானோ, (அப்போது) அவர் *புகழை (சர்வஞ்ஞதாதி குணங்களைச்) சோகம் நீங்க அடைவானாயினான்" என்று கூறுதலின். ஆகலின் சிவபெருமான் தாமாகவே ஆகாயம் பூமி முதலியவற்றுக்கு ஆதாரரா கின்றனர். (௪)

ப்ரகரணாத் (க. ௩. ௫)

(௭௦) பிரகரணத்தினால்.

அத² பரா யயா தத³க்ஷரமதி⁴க³ம்யதே (முண். க. க. ௫)

"அந்த அக்ஷரம் எந்தப் †பரைஞானத்தினால் அறியப்படுகின்றதோ" என்னும் இந்தச் சுருதிப் பிரகரணம் பரவஸ்துவை அன்றோ கூறிற்று. அதனாலும் (ஈண்டு) சிவபெருமான் (என்றே கோடற்பாற்று). (௫)

ஸ்தி²த்யத³நாப்⁴யாம் ச (க. ௩. ௬)

(௭௧) இருத்தலானும் உண்ணலானும்.

த்³வா ஸுபர்ணா ஸயுஜா ஸகா²யா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்³வத்த்யநஶ்நந்நந்யோ அபி⁴சாகஶீதி।
(முண். ௩. க. க)

"பிரியா நட்புடைய அழகுடைப் பட்சிகள் இரண்டு ஒரே மரத்தில் இசைந்துள்ளன; அவற்றுள் ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்னும் சுருதியானது ஆன்மா கன்மபலத்தைத் துய்ப்பதாகக் கூறி, (மற்றவர்) துய்க்காது பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார் என்று கூறலானும், ஆன்மாவுக்கு வேறாயுள்ள சிவபெருமானே ஆகாயம் பூமிக்கு ஆதாரர் என நிர்ணயிக்கப்பட்டது. (௬)

(௨) பூமாதிகரணம்.

முத்தான்மாக்களால் அடையற்பாலராக ஈண்டுப் பிரதிபாதிக்கப்பட்ட சிவபெருமானை அடைதலான் எய்தும் பிரயோசனமாகிய நிரதிசயானந்தத்தைச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

பூ⁴மா ஸம்ப்ரஸாதா³த³த்⁴யுபதே³ஶாத் (க. ௩. ௭)

---

*இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.
(திருக்குறள். ௫)

†பராஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்.
—([illegible] சித்தியார். [illegible])

(எஉ) (முடிவிலா இன்பமாகிய) * பூமா (சிவபெருமான்); சம்பிரசாதத்துக்கு முன்னர்க் கூறப்படலான்.

ஸம்ப்ரஸாதாதத்யுபதேசாத் (சாங். எ. உங. க)

சாந்தோக்கியத்தில் "பூமாவே இன்பம்" என்று கூறப்பட்டபின்னர்

யத்ர நாந்யத்பச்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா (சாங். எ. உச. க)

†"ஆங்கு மற்றொன்றும் காண்கிலனாய், மற்றொன்றும் கேட்கிலனாய், மற்றொன்றும் அறிகிலனாயாகின்றானோ, அது பூமா எனப்படும்" என்னும் பூமாவைப்பற்றிய சுருதியே விஷயம்.

பூமா என்னும் மொழியினாற் கூறப்பட்டவர் சிவபெருமானா? மற்றொன்றா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) பூமா என்றது சிவபெருமானுக்கு அன்னியமாகிய பிராணனே. (இச் சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட) விஷயத்துக்கு முற்பட்டுக் கூறப்பட்ட நாமமுதலியவற்றைக் குறித்து,

அஸ்தி பகவோ நாம்நோ பூய இதி (சாங். எ. க. ரு)

"நாமத்தினுஞ் சிறந்ததாகப் பிறிதொன்றுளதோ?" என்று நாரதர் கேட்ப, சனற்குமாரர்

---

* அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந் தில்லைகண்டேனே
(கண்டபத்து. அ)

ஆனந்தக்கூத்தனருள்பெறினாமவ்வணமே
யானந்தமாகின்றாடாமோதோணோக்கம்.
(திருத்தோணோக்கம். அ)

† நச்ருணோதி நஜிக்ரதி நரஸயதி நபச்யதி (புறத்துள்ளதொன்றும்), "கேட்கின்றிலன், மணக்கின்றிலன், இரசிக்கின்றிலன், காண்கின்றிலன்" என்றது வாதுளாகமம்.

எனைநானென்பதறியேன்பகலிரவாவதுமறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனாக்கிச்
சினமால்விடையுடையான்மன்னுதிருப்பெருந்துறையுறையும்
பனவனெனைச்செய்தபடிறறியேன்பரஞ்சுடரே.
(உயிருண்ணிப்பத்து, ங)

நோற்றேனென்னமென்கோகுரைகடல்வாயமுதென்கோ
வாழ்றேனென்குகனோயருமருந்தேயுன்றாசே
சேற்றார்வயல்புடைசூழ்தருதிருப்பெருந்துறையுறைபு
நீற்றார்தருதிருமேனிநின்மலனேயுனையானே.
(உயிருண்ணிப்பத்து, அ)

வாக் வாவ நாம்நோ பூயஸீ (சாந். எ. ௩. க)

"நாமத்தினுஞ் சிறந்தது வாக்கு" என்றற்றொடக்கத்தனவாக வாக்கு முதலியவைகளை நிர்த்தேசஞ் செய்ய, (பின்)பிராணனுக்குமேலே சுருதியானது கடாவிடைகளின்றிப் பூமாவையுற்றுக் கூறப்போந்தது, ஈண்டுச் சிவசம்பந்தமாகிய விஷயம் யாதும் இன்று; ஆகலின், பூமாவே பிராணன் எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். ஈண்டுச் சிவபெருமானே பூமாசப்தத்தினாற் குறிக்கப்பட்டவர்; சம்பிரசாதத்துக்கு முன் வருதலான். சம்பிரசாதம் என்றது ஆன்மா;

அத ய ஏஷ ஸம்ப்ரஸாத: (சாந். அ. ௩. ச)

"இவன் சம்பிரசாதன்" என்னுஞ் சுருதியுண்மையான். ஈண்டு அவன் பிராணசப்தத்தினாலும் கூறப்படுகின்றான்.

ஏஷ து வா அதிவததி ய: ஸத்யேநாதிவததி (சாந். எ. கசு. க)

"பரவஸ்துவைச் சத்தியம் என்று சொல்பவன் உண்மையாய் மேலாயதொன்றைக் கூறுபவனே" என்றற்றொடக்கத்த சுருதியினால், அவனுக்கு முன்னர்ப் பூமாவானது ஆன்மாவின் வேறென்று கூறப்படுகின்றது. ஈண்டு முன்னர்

ஸ வா ஏஷ ஏவம் பஶ்யந்நேவம் மந்வாந ஏவம் விஜாநந்நதிவாதீ பவதி (சாந். எ. கரு. ச)

"இங்ஙனம் பார்ப்பவனும், இங்ஙனம் அறிகின்றவனும், இங்ஙனம் உணர்கின்றவனுமாகிய இவன் மேலாயதொன்றைக் கூறுகின்றான்" என்னுஞ் சுருதியானது பிராணனைச் சொல்பவன் மேலானதைச் சொல்பவன் என்று கூறி, அதன்பின்னர்

ஏஷ து (சாந். எ. கசு. க)

என்பதிற் போந்த (ஆயின் எனப்படும்) து (து) என்னும் எதிர்மறைமொழிகொண்டு மேலே உரைத்த பிராணாதிவாதியினும் சத்தியாதிவாதிக்கு மேன்மை காட்டப்பட்டமையின், பூருவ அதிவாதியின் விஷயமாகிய சத்தியத்தினாற் கூறப்படுகின்றவருக்கு ஆதிக்கியம் முற்றுப்பெறுகின்றது. அவரே முன்னர் முடிவிலாவின்பகுணவிசிட்டமுடையராக (பூமாவாக) வர்ணிக்கப்படுகின்றார். "ஆகலின், பின்னர்ப் (பரம) ஆன்மாவின் ஆதேசம்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறும் சுருதியிற் போதரும் (பரம) ஆன்மசப்தத்தினாலே அவர் வர்ணிக்கப்படுகின்றார். அதுபற்றிப் பிராணசப்தத்தினாற் குறிக்கப்பட்ட ஆன்மாவினுஞ் சிறந்த (பரம) ஆன்மாவாகிய பூமாவாயுள்ளவர் சிவபெருமானே. (எ)

பூமேஸ்வமஹிமா (க. ந. அ)

(எந) குணங்கள் பொருத்தமுறலானும்.

ஸ பகவ: கஸ்மிந் ப்ரதிஷ்டித இதி ஸ்வேமஹிம்நி।
(சாந். எ. உச. க)

ஆத்மைவேதம் ஸர்வம் (சாந். எ. உரு. உ)

ஆத்மத: ப்ராண ஆத்மத ஆசா (சாந். எ. உசு. க)

"பகவானே, அவர் எங்கே நிலையுற்றிருக்கின்றார் எனின், தம்மகிமையிலே; இவையெல்லாம் (பரம)ஆன்மா; (பரம)ஆன்மாவினின்று பிராணன், (பரம) ஆன்மாவினின்று ஆசை" என்றற்றொடக்கத்த சுருதிகளான், அவர் மகிமையிலே (புகழிலே) நிலையுறுகின்றார், அவர் அனைத்துக்கும் ஆன்மா, அவர் அனைத்துக்குங் காரணர் என்றற்றொடக்கத்தனவாகக் குணங்கள் உபதேசிக்கப்படுகின்றன. சிவபெருமானுக்கே அக்குணங்கள் பொருத்தமுறுவனன்றி, பிராணசப்தத்தினாற் கூறப்படும் ஆன்மாவுக்கன்று. ஆகலின், சிவபெருமானே பூமாவன்றிப் பிறரன்றென்பது சித்தித்தது.

(ஆக்ஷேபம்) மேல் அதிகரணத்தில்,

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி (முண். ந., க. ந.)

"அவன் நிரஞ்சனனாய்ப் பரமசாமியத்தை அடைகின்றான்" என முக்தான்மாக்கள் பிரமசாதிருசியம் அடைபவராகக் கூறப்பட்டது. ஆகலின், பிரமத்தினது சாமியத்தை அடைந்த முக்தான்மாக்கள் சிவபெருமானுக்கே வேறாயுளர் என்பது சித்தித்தது.

யத்ர நாந்யத்பஶ்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா (சாந். எ. உச. க)

"எங்கே மற்றொன்றும் காண்கிலனோ, மற்றொன்றும் கேட்கிலனோ, மற்றொன்றும் அறிகிலனோ, அது பூமா" என்னுஞ் சுருதியில் உள்ள பூமாவென்னும் மொழியினாற் குறிக்கப்பட்ட பிரமம் காணப்படுமாயின், அந்தப் பிரமத்துக்கு மாறுகிய பிரபஞ்சம் விஷயமாகாதே; இதற்குப் பொருத்தம் என்னை எனின்,

(உத்தரம்) பூமா பிரத்தியக்ஷமாகுங்கால் "மற்றொன்றும் காண்கிலன்" என்றற்றொடக்கத்தனவற்றின் அபிப்பிராயம் இது:—நிரதிசய சுபாவமுள்ளவரும் சாக்ஷாத்கரிக்கப்பட்டவருமாகிய எவரிலே அமிழ்ந்திய புருஷன் மற்றோர் இன்பத்தை விரும்பி ரூபாதி விஷயங்களைக் காண்டலாதிகளிற் பிரவர்த்திக்கின்றிலனோ, அவர் பூமா; அவர் பிரமம்; புல்லனைய விஷயங்களெல்லாம் பிரமானந்தத்தின் நன்னிய பரமாணுக்களே.

ஸதெவெஷ்வா நம ஏதஸ்யாக்ஷரஸ்ய ஹ்ஸ்தாநி ஸர்வாணி தேவஞி
(பிரு. ௬. ௩. ௩௨)

"மற்றெல்லாச் சொந்துக்களும் இந்தப் பிரமானந்தத்தின் சிறுபாகத்தில் உயிர்க்கின்றன" என்று சுருதி கூறுகின்றது. ஆகலின், பிரமத்தையுற்றுத் துவிதநிஷேதம் இல்லை. பிரபஞ்சம் சத்தியமாயிருப்பின், முக்தான்மாக்கள் புருஷார்த்தமல்லாத அந்தப்பிரபஞ்சத்தோற்றத்தை எங்ஙனந் தவிர்க்க வல்லார்? என்று விசாரிக்கற்பாலதன்று; ஏதனுலெனின், முக்தான்மாக்களுக்குப் பிராகிருத பிரபஞ்சம் காட்சிவிஷயமாகாது; பின் நிரதிசயானந்த சொரூபமாகிய பிரமமே பிரபஞ்சாகாரமாகக் காட்சிப்புலனுகின்றது. இதுபற்றியே,

ஸ தத்ரொ லவதி | ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம | ஸத்யாத்ம ப்ராணாராமம் | மந ஆநந்தம் (தைத். க. ௬. ௨)

"பின்னர் அவன் அதுவாகின்றுன், ஆகாயத்தைச் சரீரமாகவுடைய பிரமம்; (அவர் இயல்பு) சத்தியான்ம பிராணுராமம்; மனசில் (ஞானசத்தியில்) ஆனந்தம்" என்று சுருதி கூறுகின்றது,

ஆப்நொதி ஸ்வாராஜ்யம் ஆப்நொதி மநஸஸ்பதிம் |
(தைத். க. ௬. ௨) ,,

என்று "சுவராச்சியத்தை அடைகின்றுன், மனசுக்கு மேலாயதை அடைகின்றுன்" என்றற்றொடக்கத்தனவாக முக்தான்மா பிரஸ்தாபிக்கப்படுகின்றுன்; "வாக்குக்குப் பதி" என்றற்றொடக்கத்த சுருதியினுல், அவன் சுவாதீனமல்லாதனவாய், அப்பிராகிருதத்தனவாய், விசுத்தமுடையனவாயுள்ள வாக்கிந்திரியமுதலியவைகளையுடையனுகக் கூறப்படுகின்றது. பின்னர் அவ்வியல்பினவாய அவஸ்தையை அடைந்த பின்னர் அவனுக்குப் புலப்படும் பிராகிருதபிரபஞ்சக் கூட்டமானது ஆகாய சரீரமாய் (எனவே), சிதம்பரப்பிரகாச சரீரத்தையுடைய பிரமமாகவேயாகின்றதென்பது தாற்பரிய இரகசியார்த்தம். ஆகலின், முக்தான்மாக்கள் பிரமத்தின் சாமியத்தை அடைதலாவது அந்தப் பிரமத்தோடு பிரபஞ்சத்தையும் சமரசமாக (சமானந்தமாகக்) காண்டலாம் எனக் (கோடலே) முழுமையும் யுக்தம். (அ)

(௩) அக்ஷராதிகரணம்.

அக்ஷரமம்பராந்த த்ருதே: (க. ௩. ௯)

௯. (எசு) அக்ஷரம் (சிவபெருமான்), ஆகாயம் இறுதியாயுள்ள அனைத்தையும் தாங்குதலின்.

ஸ ஹோவாச ஏதத்வை தத³க்ஷரம் கா³ர்கி³ ப்³ராஹ்மணா அபி⁴வத³ந்த்யஸ்தூ²லமநண்வஹ்ரஸ்வமதீ³ர்க⁴மலோஹிதமஸ்நேஹமச்சா²யம் (பிரு. இ. அ. அ)

"கார்க்கியே, பிராமணர் இதனை அக்ஷரம் என்று கூறுகின்றார்; இது*ஸ்தூல மன்று, அணுவன்று, குறுக்கமன்று, நெடுமையன்று, சிவப்பன்று, ஸ்நேக மன்று, நிழல் அன்று" என்றற்றொடக்கத்த பிருகதாரணிய சுருதியே இவ் வதிகரண விஷயம்.

ஈண்டு அக்ஷரம் என்றது பிரணவமா? ஆன்மாவா? சிவபெருமானா? என் மூன்று பிரகாரமாக உண்டாகின்றது சந்தேகம்.

பிரணவம் ஆன்மா என்னும் இரண்டில் ஒன்றே அக்ஷரம். ஏதனா லெனின், அக்ஷரசப்தத்துக்கு வர்ணசப்தம் பரியாயமாதலின், பிரணவம் என்று கூறுவது உசிதம்.

கூடஸ்தோ²க்ஷர உச்யதே |

"புருஷன் அக்ஷரம் எனப்படுகின்றான்" என்னும் வாக்கியத்தினாற் புருஷ னும் (ஆன்மாவும்) அக்ஷரசப்தத்தினாற் குறிக்கப்படுகின்றான். ஆகலின், அவ் விரண்டுமே அக்ஷரசப்தத்தினாற் குறிக்கப்பட்டன எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். அக்ஷரசப்தப்பொருள் பரப்பிரமமே. ஏத னால் எனின், †ஆகாயமிறுதியாயுள்ள அனைத்தையுந் தாங்குதலான். (யாஞ் ஞவற்கியர்),

யதூ³ர்த்⁴வம் கா³ர்கி³ தி³வோ யத³வாக் ப்ருதி²வ்யா யத³ந்தரா த்³யாவாப்ருதி²வீ இமே யத்³பூ⁴தம் ச ப⁴வச்ச ப⁴விஷ்யச்சேத்யாசக்ஷத ஆகாஶே தத³ோதம் ச ப்ரோதம் ச (பிரு. ரு. அ. எ)

‡"கார்க்கியே, வானத்துக்கு மேலும் பூமிக்குக்கீழுமாக, வானம், பூமி இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்றவற்றை அடக்கிக் குறுக்கும் மறுக்குமாய் அமைந்தெதுவோ அது ஆகாயத்தில் (அமர்ந்தது)" என்று அனைத்துக் (கும்) ஆதாரமாகக் கூறிய ஆகாயம் (பின்) எதிலே குறுக்கும் மறுக்குமாய் உள்ளதென்று கார்க்கி (அவரை) வினவ, (யாஞ்ஞவற்கியர்)

---

*மண்ணல்லை விண்ணல்லை வலையமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை
யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானும்பெரியாய் நீயே
புண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை புணர்வரிய வொற்றியூருடையகோவே.
(திருவொற்றியூர். நாவு. ௬)

ஸ்தூலமன்று அணுவன்று என்றற்றொடக்கத்த விஷயம் உபக்கிரமணிகை (௧௪௩-ஆம் இலக்கந் தொடுத்து ௧௪௪-ஆம்) இலக்கம் வரையும் விளக்கப்பட்டுள்ளது.

† திருச்சிற்றம்பலம்.

‡ உபக்கிரமணிகை உ௰௭-ஆம் இலக்கம் பார்க்க.

ஏதத்வை தத³க்ஷரம் கா³ர்கி³ ப்³ராஹ்மணா அபி⁴வத³ந்தி।
(பிரு. ௫. அ. அ)

"கார்க்கியே, இதனையே பிராமணர்கள் அக்ஷரம் என்று கூறுகின்றனர்" என்று தொடங்கி,

ஏதஸ்மிந்நு க²ல்வக்ஷரே கா³ர்க்³யாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்ச।
(பிரு. ரு. அ. கக)

"இந்த அக்ஷரத்திலன்றோ, கார்க்கியே! ஆகாயம் குறுக்கும் மறுக்குமாய் உள்ளது" என்பது இறுதியாகக் கூறிய வசனத்தினால், ஆகாயமிறுதியாயுள்ள பிரபஞ்சத்தைத் தாங்குவது நிர்ணயிக்கப்பட்ட அக்ஷரம் எனப் பெறப்படுகின்றது. இது எங்ஙனம் சிவபெருமானை ஒழிந்து மற்றொன்றுக்குச் செல்லும்? ஆகலின், சிவபெருமானே அக்ஷரசப்தத்தினாற் கூறப்பட்டவர். (கூ)

ஸா ச ப்ரஶாஸநாத் (க. ௩. க௦)

(எரு) அதுவும் *ஆஞ்ஞையினால்.

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கா³ர்கி³ ஸூர்யாசந்த்³ரமஸௌ வித்⁴ருதௌ திஷ்ட²த꞉ (பிரு. ரு. அ. கூ)

"கார்க்கியே, இந்த அக்ஷரத்தினுடைய ஆஞ்ஞையினாலே சூரியனும் சந்திரனும் தாங்கப்படுகின்றன" என்றற்றொடக்கத்த சுருதியினால், அந்தத் தாங்குதல் (திருதி) உற்கிருஷ்ட ஆஞ்ஞையின்பாலதாக அறியப்படுகின்றது. அந்த உலகத்தை ஆஞ்ஞை செய்தலும் ஆன்மாவுக்கு எய்தமாட்டாது;

ஏக ஏவ ருத்³ரோ ந த்³விதீயாய தஸ்து²꞉ (சுவே. ௩. உ)

"ஒருவரே உருத்திரர், அவர்கள் இரண்டாவதற்காக இருந்திலர்" என உலகத்தின் மேலதாம் ஆஞ்ஞை சிவபெருமானுக்காய், இரண்டாவதாக ஒருவர்க்கு (அது) இன்றெனக் கேட்கப்படலான். ஆகலின், சிவபெருமானே அக்ஷரமொழியினாற் குறிக்கப்பட்டவர். (க௦)

அந்யபா⁴வவ்யாவ்ருத்தேஶ்ச (க. ௩. கக)

(எக) அன்னியபாவம் நீங்குதலானும்.

அன்னியபாவம் என்பது மற்றொன்றுக்கு உளதாதல்.

தத்³வா ஏதத³க்ஷரம் கா³ர்க்³யத்³ருஷ்டம் த்³ரஷ்ட்ரு ஶ்ருதம் ஶ்ரோத்ரு அமதம் மந்த்ரு அவிஜ்ஞாதம் விஜ்ஞாத்ரு (பிரு. ரு. அ. கக)

"கார்க்கியே, இந்த அக்ஷரம் *காணப்படாததாய்க் காண்கின்றது, கேட்கப்படாததாய்க் கேட்கின்றது, கருதப்படாததாய்க் கருதுகின்றது, அறியப்படாததாய் அறிகின்றது" என்னுஞ் சுருதிவாக்கிய சேஷமானது அக்ஷரம் சிவபெருமானை ஒழிந்து மற்றொன்றுக்கு உளதாதலைத் தவிர்க்கின்றது; பிரணவத்துக்கேனும், ஆன்மாவுக்கேனும் காணப்படாமையாம் தன்மையோடு காண்டலாதியாம் இயற்கைகளும் (ஒரேகாலத்தில்) எய்தாமையான். ஆகலின், சிவபெருமானே அக்ஷரம் என்று நிர்ணயிக்கப்பட்டது. (கக)

(ச) ஈக்ஷதிகர்மாதிகரணம்.

பிரத்தியக்ஷாதி பிரமாணாதீதராயினும் சிவபெருமான் பரமகாருண்ணிய வசத்தினால் உபாசகர்களுக்குப் பிரத்தியக்ஷமாதலை உணர்த்துமாறெழுந்தது இவ்வதிகரணம்.

ஈக்ஷதி கர்மவ்யபதேசாத் ஸ: (க. ங. கஉ)

(எஎ) அவர் காட்சிப்பொருளாகின்றார், (அவர் குணங்கள்) கூறப்படலான்,

ய: புநரேதம் த்ரிமாத்ரேணோமித்யேதேநைவாக்ஷரேண பரம் புருஷமபித்யாயீத ஸ தேஜஸி ஸூர்யே ஸம்பந்ந: யதா பாதோதரஸ்த்வசா விநிர்முச்யத ஏவம் ஹவை ஸ பாப்மநா விநிர்முக்த: ஸ ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாஜ்ஜீவகநாத்பராத்பரம் புரிஶயம் புருஷமீக்ஷதே।

(பிர. ரு. ரு)

"எவன் மூன்று மாத்திரையையுடைய இந்த ஓம் என்னும் அக்ஷரவாயிலாகவே பரமபுருஷரைத் தியானிக்கிறானோ, அவன் ஒளியையும் சூரியனையும் அடைந்தவனாகின்றான்; சர்ப்பம் தன் தோலிலிருந்து விடுபட்டாற்போல, அவன் பாவத்தினின்று வீடுறுகின்றான்; அவன் சாம (கானங்களினாலே) பிரமலோகத்துக்கு வழிகாட்டப்படுகின்றான்; இந்தச் சீவகனத்தினின்று பரத்துக்குப் பரமாயினாராய் (தேகமாம்) புரியிற் கிடக்கும் புருஷரைக் காண்கின்றான்" என்னும் பிரசிநோபநிடத சுருதியே அதிகரண விஷயம்.

ஈண்டுக் காட்சிப் பொருள் விஷயமாய்க் கேட்கப்பட்டவர் சிவபெருமானா? பிறரொருவரா? என்பது சந்தேகம்.

---

* தத்ஸ்வரூபமாதீஶ: பரமாத்மா ஶிவ: ஸ்வயம்।
நாந்யோஸ்தி ஸர்வதோ த்ரஷ்டா ஶ்ரோதா பராத்பர:॥

ஆகலின், அந்தப்பகவானாகிய ஈசர் பரமான்மாவாகிய சிவபெருமானே; பார்ப்பவரும், கேட்பவரும், பராற்பரரும் சிவபெருமானொழிந்து பிறர் யாருமில்லை என்பது சங்கரசங்கிதை.

(பூருவபக்ஷம்) அவர் சிவபெருமானல்லர்;

ஸ ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம் (பிர. ஞ. ரு)

"அவன் சாம(கான)ங்களினாற் பிரமலோகத்துக்கு வழிகாட்டப்படுகின்றான்" என அவர் உலகத்தை அடைதல் கேட்கப்படலானும், பர சப்தம் சிலான்மாக்களுள்ளே மேலானவர்க்குச் சேறலானுமாம்; இன்றேல், நாராயணர் (ஆகலாம்), அவர் புருஷர் என்னும் மொழியினாற் கூறப்படலானும், அவருக்கே பிரணவசப்தம் செல்வது பிரசித்தமாதலினாலும்,

தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:

(இரு. வே. க. உஉ. உ0)

"அந்த விஷ்ணுவின் பரமபதத்தைச் சூரிகள் எப்போதும் பார்க்கின்றனர்" என்னும் சுருதியில், அந்தப் பரமபதமே வித்துவான்களால் அநுபவவிஷயமாகக் கேட்கப்படலானும்,

ருக்பிரேதம் யஜுர்பிரந்தரிக்ஷம் ஸாமபிர்யத்தத்கவயோ வேதயந்தே (பிர. ரு. எ)

"இருக்குக்களினாலே இந்த உலகத்தையும், யசுரினாலே ஆகாயத்தையும், சாமங்களினாலே கவிகள் அறியும் அதனையும் (அடைகின்றான்)" என்னும் (ஐந்தாவது பிரசினோபநிடத இறுதியில்), அது (பரமபதம்) குறிக்கப்படலானுமாமாதலின் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈண்டு காட்சிப்பொருளாயுள்ளார் சிவபெருமான்; (ஐந்தாவது பிரசினோபநிஷதவிறுதியில்)

தமோங்காரேணைவாயதநேநாந்வேதி வித்வாந்யத்தச்சாந்த மஜரமம்ருத மபயம் பரம் (பிர. ரு. எ)

"அவன் ஓங்காரவாயிலாக இதனை (பிரமலோகத்தை) அடைகின்றான், வித்துவான் சாந்தரும், ஐரை இல்லாதவரும், அழியாதவரும், பயமில்லாதவரும், பரமுமாகிய அவரை (சிவபெருமானை) அடைகின்றான்" என அவரது அசாதாரணமாகிய சாந்தத்துவ முதலிய குணங்கள் கூறப்படலான். சிவபெருமானுடைய (சிருஷ்ட) காரியராகிய இரண்ணியகருப்பர்க்குச் சாந்தத்துவாதி குணங்கள் இல்லையன்றோ. பிரமலோகம் என்றது அடையற்பாலதாயுள்ள பரப்பிரம சிவனாருடைய உலகமாம் என்க. சீவகனம் என்றது சீவசமஷ்டி ரூபராயுள்ள இரணியகருப்பர் (மேற்று); இவருக்கு மேலாகிய சிவபெருமானே தியேயப்பொருளாகக் கேட்கப்படுகின்றனர். ஆகலின், இரண்ணியகர்ப்பரைச் சொல்வது யுத்தமன்று.

நாரயணரைப் பரம் என்றது ஆரியற்பாற்று

ஹ்ரேத ஸேயம வாஹ (பிர. இ. எ).

"அமிர்தரும், பயமிலாதவரும், பரமுமாயவர்" என்னுஞ் சுருதியிற் கண்டவாறு நித்தியமுக்தத்துவமும், அபயகாரணமும், விசுவாதிகத்தினற் பரத்துவமும் எங்ஙனம் அவருக்கு (நாராயணர்க்குச்) செல்லும்?

விஸ்வாபொஹி (சுவே. க. கூ)

இவர் "விசுவரூபரன்றோ" (என்னுஞ் சுருதியுண்மையான்), *சீவகனமாகிய இரண்ணியகர்ப்பரினும் (பிரமாவினும்) பரராய் உற்கிருஷ்டராயுள்ள நாராயணரினும் பரம உற்கிருஷ்டமாய்ப் புரியின்கண்ணே (சரீரத்தின்கண்ணே) அந்தரியாமியாய்ச் சயனித்தலிற் புருஷரும் பரப்பிரமமுமாயுள்ளாரை உபாசகர் சாக்ஷாத்காரஞ் செய்வதாக வர்ணிக்கப்பட்டமை எங்ஙனம் நாராயணர்க்குப் பொருந்தும்?

நாராயணவாம ஸ்ரஹ (தைத். ஆரணி. கம. கநு. உக)
ஐதம ஸத்யம வாம ஸ்ரஹ வாஷம க்ஷணவிமஹஷ்
ஊஷ்ரேவம விரூவாக்ஷ (தைத். ஆரணி. கம. உநு. சக)

"நாராயணர்க்கு மேலாய பிரமம்" (எனவும்); இருதமும், சத்தியமும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவரேதரும், விரூபாக்ஷரும் எனச் சுருதியிற் கூறப்படுகின்றதன்றோ. ஆகலின், (சிவபெருமான்) புரியாய தகரபுண்டரீகத்திருத்தலாற் புருஷர் எனப்பட்டனர்;

தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய யஃ வாஸ்ஸமஹேஸ்வாஃ
(தைத். ஆரணி. கம. கஉ. உஅ)

"(அகாரமாகிய) பகுதியில் ஒடுங்கப்பெறும் (அந்தப் பிரணவத்துக்கு) சுவரத்துக்கு எவர் மேலானவரோ, அவர் சிவபெருமான்" என்றற்றொடக்கத்த சுருதியினல் அவர் பிரணவம் எனவும்,

நாராயணவாம ஸ்ரஹ (தைத். ஆரணி. கம. கநு. உக)

"நாராயணரினும் பரமாகிய பிரமம்" என்னுஞ் சுருதியினல் விசுவரூபராகிய நாராயணரினும் அதிகர் (மேலோர்) எனவும், வாக்கினும் மனசினும் நின்று பேதமுறுமையின் முறையே இருதம் சத்தியம் எனவும், முக்கண்களுண்மையான் விரூபாக்ஷர் எனவும், †பிரணவத்தின் வர்ணவியத்தியயத்தி

*வெள்ளையேறேறும்விகிர்தாபோற்றிமேலோர்க்குமேலோர்க்குமேலாய்போற்றி. (திருவாரூர், நாவு, அ)
விண்மேலுமேலுமிர்ந்தாய்போற்றி மேலார்கள் மேலார்கள் மேலாய் போற்றி. (ஸ்ரீகைலாயத்திருமலை. நாவு, எ)

†இலிங்கபுராணத்திலே சிவபெருமானல் உமையம்மையார்க்கு அருளிச்செய்யப்பட்டவிடத்து,

ஞல் எய்திய உமையாம் பராசத்தியோடியைந்திருத்தலாற் கிருஷ்ணபிங்களர் எனவும், எல்லாவற்றையும் கடந்தமையிற் பரமாகிய பிரமம் எனவும் கூறப்படுகின்றது.

பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே (பிர. ௫. ௫)

"பரத்துக்குப் பரமாய் (*தகரபுண்டரீக*) புரிக்கணுள்ள புருஷரைக் காண்கின்றுன்" என்னும் சுருதியினுல் அவர் காட்சிப்பொருளாம் என்று கூறல் யுக்தம்.

தத்விஷ்ணோ: பரமம் பதம் (இரு. வே. க. உஉ. உ௦)

"அந்த விஷ்ணுவின் பரமபதம்" என்று கூறப்பட்டவிடத்து, பிரபஞ்சாகாரத்துக்கு வேருய் எது நிரதிசயாநந்த இயற்கையாயுள்ள விஷ்ணுவின் பரமபதம் எனப்படுகின்றதோ, அதை (வியாபகசீலராகிய) சிவபிரான் எனப் பெயரிய பரப்பிரமத்தின் †பரமாகாய பரமபதம் என்று கோடலின் யாதும் விரோதமில்லை. விஷ்ணுவும் சிவனும் முறையே உலகத்துக்கு உபாதானமும் நிமித்தமுமாயிருத்தல்பற்றி அவஸ்தாபேதமன்றி, சொரூபபேதம் இன்றும். சகல சம்சாரங்களையும் நிவிர்த்தி செய்தல் வாயிலாகப் பிரமத்தை அடையுமாறு (அப்பிரமத்தின்) வாசகமாகிய பிரணவத்தைப் பற்றிய உபாசகர்களுக்கு, விஷ்ணு பிரமாதி பிரபஞ்சத்தைக் கடந்தாரேனும் அவ்வுபாசகரை அநுக்கிரகிக்குமாறு (தகரபுண்டரீகமாகிய) புரியின்கண்ணே சயனித்தலாற் புருஷராய், பரமசத்திரூப உமா சகிதராய் விரூபாக்ஷராயுள்ள பரப்பிரம சிவனுர் சாக்ஷாத்காரமாகின்றுர் என நிரூபணஞ் செய்யப்பட்டது. (கஉ)

த்வதீய: ப்ரணவ: கஸ்சிந் மதீய: ப்ரணவஸ்ததா|
அகாரோகாரமகாரா மதீயே ப்ரணவே ஸ்திதா:|
உகாரம் ச மகாரம் ச அகாரம் ச க்ரமேண தே|
த்வதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுதமுத்தமம்||

(இலிங். பூர். அ௲: சச—சகு)

"ஒரு பிரணவம் உனக்கு (உமைக்கு) உரியது; அவ்வாறு (மற்றென்று) எமக்கு (சிவபிரானுக்கு) உரியது; எமது பிரணவத்தில் அகாரம் உகாரம் மகாரம் உள்ளன; (வர்ணவியத்தியயத்தினுல்) உகாரம் மகாரம் அகாரம் என்பன கிரமமாக உனது பிரணவமாய் மும்மாத்திரைப் புலுதமாம் என்றறி" என்று கூறப்பட்டிருக்கின்றது.

அ+உ+ம் என நிற்கற்பாலது வர்ணவியத்தியயமாகிய எழுத்துமாறலான் உ+ம்+அ என நின்று, உமா என வியாகரணவிதியினுல் எய்திற்று.

†சுன்றம ரன்பா லான்பால் சுவர்தருங் காலமேனும்
வென்றிகொ ளம்பு வீழும் வேலையா யினுமி மைப்பிற்
சென்றுறு மமைய மேனுந் திருவடி தெளிய நோக்கி
நின்றவர் காண நின்றுர் நீள்பவ நீங்கிஞரே.

(கோயிற்புராணம், இரணியவன்மச்சருக்கம், எ௩)

(௫) தகராதிகரணம்,

அவர் தகரபுண்டரீகத்தில் உளராதலையும், அவரை உபாசித்தலையும் பிரகடனஞ் செய்தற்கெழுந்தது இவ்வதிகரணம்.

𑌦𑌹𑌰 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 (௧. ௩. ௧௩)

(௭௮) தகரம் (சிவபெருமான்), அடுத்துக் கூறப்படுங் குணங்களுண்மையின்.

𑌅𑌥 𑌯𑌦𑌿𑌦𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌦𑌹𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌵𑍇𑌶𑍍𑌮 𑌦𑌹𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌕𑌾𑌶𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌾𑌵 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 (சாங். ௮. ௧. ௧)

"இந்தப்பிரமபுரத்திலே *தகரபுண்டரீக வீடுள்ளது, அதிலே தகராகாயம் உள்ளது; இந்தத் தகராகாயத்துள்ளே உள்ளது நாடற்பாற்று, †அறியற்பாற்று" என்றற்றொடக்கத்த சாந்தோக்கிய சுருதியே விஷயம்.

ஈண்டுத் தகர சப்தத்தினாற் கூறப்பட்டது பூதாகாசமா? ஆன்மாவா? சிவபெருமானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆகாயம் என்னும் மொழி ரூடியினால் (ஜடா)காசத்துக்குண்மையின், தகராகாசம் என்றது பூதாகாசம்; இன்றேல், தகரம் என்றது ஆன்மா; அது (தகரம்) சிற்றளவினதாதலாலும், அணுவாயிருக்குஞ் ஆன்மாவுக்கு அது பொருத்தமுறுதலாலுமாம்; அது வியாபியாயுள்ள சிவபெருமானுக்குச் செல்லாதெனின்,

(சித்தாந்தம்) சொல்லுதும். சிவபெருமானே தகராகாசம்;

𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌃 (சாங். ௮. ௧. ௫)

"இந்தப் (பரம) ‡ஆன்மா பாவமில்லாதவர், ஜரையில்லாதவர், மரணமில்லா

---

*மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.
(திருக்குறள் ௩)

†பனைக்கையும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனக்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ
(கோயில், நாவு. ௧)

‡எட்டுக்கோலாமவரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர்சூடுமினமலர்
(பொது, நாவு, ௮)

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.
(திருக்குறள், ௯)

தவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாகமில்லாதவர், சத்தியகாமர், சத்தியசங்கற்பர்'' என அடுத்து வந்த அபகதபாப்மத்துவாதி குணங்கள் (சாந்தோக்கிய) சுருதிவாக்கிய சேடத்தின்ற சித்தித்தலின். இக்குணங்கள் சம்சாரியாம் ஆன்மாவுக்கு எங்ஙனம் எய்தும்? ஆகலின் சிவபெருமானே அபகதபாப்மத்துவாதி குணங்களையுடைய தகராகாசம். (கரு)

ஞதிஶஷாஹ்௱ாா தயாஹி ஹ்ஷுஂ லிஂஙஞ (க. ந. கச)

(எகூ) கதியும் (போதலும்), சப்தமும் (உண்மையாலும்); அங்ஙனங் காணப்படுகின்றதே; இலிங்கமும் (உள்ளது).

ஹிரண்யநிதிஂ நிஹிதமக்ஷேத்ரஜ்ஞா உபர்யுபரி ஸஞ்சரந்தோ ந விந்தேயுரேவமேவேமாஃ ஸர்வாஃ ப்ரஜா அஹரஹர்கச்சந்த்ய ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்த்யந்ருதேன ஹி ப்ரத்யூடாஃ ।

(சாந். அ. ௩. உ)

"க்ஷேத்திரத்தை (தேசத்தை) அறியாத சனங்கள் (பூமிக்குள்) மறைப் புண்டு கிடந்த பொற்பண்டாரத்துக்கு மேலே தினந்தோறுஞ் சஞ்சரித் தும் அதனைக் காணாதவாறு போல, பிரஜைகளெல்லாந் தினந்தோறும் இந்தப் பிரமலோகத்தை அடைந்தும் அஞ்ஞானத்தினால் மேற்கொள்ளப் பட்டாராகி அதனை அறிந்திலரன்றோ'' என்னுஞ் சுருதிவாக்கியசேஷத்திற் பிரஜைகள் தினந்தோறும் இந்தத் தகராகாசத்திற் செல்லுங் கதி கேட்கப் படுகின்றது; அது பிரமலோகம் எனவுங் கேட்கப்படுகின்றது; கதி பிரம லோகசப்தம் (இரண்டினாலும்) தகராகாசம் சிவபெருமான் (என உணரற் பாற்று)

ஏவமேவ கலு ஸோம்யேமாஃ ஸர்வாஃ ப்ரஜாஃ ஸதி ஸம்பத்ய ந விதுஃ ஸதி ஸம்பத்யாமஹே (சாந். சு. கூ. உ)

"சௌமிய! இந்தப் பிரஜைகளெல்லாஞ் *சத்தில் அமிழ்ந்தியும், சத்தில் அமிழ்ந்துகின்றேம் என அறிகின்றில'' என மற்றோர் சுருதியினும் (பிர ஜைகள்) சிவபெருமானிடத்திலே இவ்வியல்பினதாகிய கதி செய்கின்றன என்று காணப்பட்டது.

ஏஷ ப்ரஹ்மலோகஃ ஸம்ராடிதி ஹோவாச ।

(பிரு. சு. ந. நஉ, நந; சு. ச. உந)

"அரசனே! இது பிரமலோகம் எனக் கூறினார்'' என்னுஞ் இந்தச் சுருதி யிற் பிரமலோகசப்தமுந் தகராகாச விஷயத்திற் காணப்பட்டது.

---

*வேதாந்த சூத்திரத்து க. ௩. ௧௦ ஆஞ் சூத்திரபாடியம் பார்க்க.

மேலும், (பிரஜைகளுண்டிய) கதியும், (பிரமலோகம் என்னும்) சப்தமும் மற்றோரிடத்திலே காணப்படுகின்றன என்பது வேண்டாம். பிரஜைகளெல்லாந் தினந்தோறும் (பிரமத்தைப் போய் அடைதலாகக்) கேட்கப்படும் கதியும், பிரமலோகசப்தமும் தகராகாசஞ் சிவபெருமான் என்பதற்குப் போதியசான்றாய் முற்றிய. (கச)

யுதெஶ்ச ஜஹிம்நோ ஸ்யாஸ்மிந்நுபலப்தெ: (க. ரு. கரு)

(அ௦) இதிலே (தகராகாசத்திலே பிரபஞ்சத்தைத்) தாங்குதலாகிய அவர் *புகழுங் காணப்படலான்.

அத ய ஆத்மா ஸ ஸேதுர்விஶ்ருதிரேஷாம் லோகாநாமஸம்பேதாய

(சாந். அ. ச. க)

"பின்னர் இந்த உலகங்கள் கலங்காவண்ணம் அந்தப் (பரம) ஆன்மா சேதுவும் ஆதாரமுமாம்" என்னுஞ் சுருதியில் உலகத்தைத் தாங்குதலாகிய சிவபெருமானுடைய புகழ் இந்தத் தகராகாசத்துக்கு உளதாகக் காணப்படுகின்றது.

ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பேதாய।

(பிரு. ௬. ச. உஉ)

"இவர் சர்வேசுவரர், இவர் பூதாதிபதி (பசுபதி), இவர் பூதபாலர் (ஆன்மரக்ஷகர்), இவர் சேது, உலகமனைத்துங் கலங்காவண்ணந் தாங்குபவர்" என்னுஞ் சுருதியினால் உலகத்தைத் தாங்குதலாகிய சிவபெருமானுடைய புகழும் பெறப்படுகின்றது. ஆகலானும், தகராகாசஞ் சிவபெருமான். (கரு)

ப்ரஸித்தெஶ்ச (க. ரு. க௬)

(அக) (அங்கே அவர் வழிபடற்பாலரெனப்) பிரசித்தமாதலினாலும்.

தஹ்ரம் விபாப்மம் பரவேஶ்மபூதம் யத்புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் தத்ராபி தஹ்ரம் ககநம் விஶோகஸ்தஸ்மிந்யதந்தஸ்ததுபாஸிதவ்யம் (தைத். ஆரணி. க௦. கஉ. உஅ)

"பாவமிலாததும், பெரியோர் இல்லமாயதும், சரீரமத்தியில் இருப்பதுமாகிய *தகரபுண்டரீகம் உள்ளது; அதனுள்ளே சோகமில்லாத தகராகா

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.
(திருக்குறள். ௫)

*உபக்கிரமணிகை ௫0-ஆம் பக்கத்தில் தகராகாசத்தின் பொருள் விளக்கப்பட்டமை காண்க. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிய "சற்றுங்கேரியோம்பி"

தவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாகமில்லாதவர், சத்தியகாமர், சத்தியசங்கற்பர்" என அடுத்து வந்த அபகதபாப்மத்துவாதி குணங்கள் (சாந்தோக்கிய) சுருதிவாக்கிய சேடத்தினுற் சித்தித்தலின். இக்குணங்கள் சம்சாரியாம் ஆன்மாவுக்கு எங்ஙனம் எய்தும்? ஆகலின் சிவபெருமானே அபகதபாப்மத்துவாதி குணங்களையுடைய தகராகாசம். (கங)

𑌗𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚 (க. ங. கச)

(எகூ) கதியும் (போதலும்), சப்தமும் (உண்மையானும்); அங்ஙனங் காணப்படுகின்றதே; இலிங்கமும் (உள்ளது).

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌰𑍇𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃 ।

(சாந். அ. ங. உ)

"க்ஷேத்திரத்தை (தெசத்தை) அறியாத சனங்கள் (பூமிக்குள்) மறைப் புண்டு கிடந்த பொற்பண்டாரத்துக்கு மேலே தினந்தோறுஞ் சஞ்சரித்தும் அதனைக் காணுதவாறு போல, பிரஜைகளெல்லாந் தினந்தோறும் இந்தப் பிரமலோகத்தை அடைந்தும் அஞ்ஞானத்தினுல் மேற்கொள்ளப் பட்டாராகி அதனை அறிந்திலரன்றோ" என்னுஞ் சுருதிவாக்கியசேஷத்திற் பிரஜைகள் தினந்தோறும் இந்தத் தகராகாசத்திற் செல்லுங் கதி கேட்கப் படுகின்றது; அது பிரமலோகம் எனவுங் கேட்கப்படுகின்றது; கதி பிரம லோகசப்தம் (இரண்டினுலும்) தகராகாசம் சிவபெருமான் (என உணரற் பாற்று)

𑌏𑌵𑌮𑍇𑌵 𑌖𑌲𑍁 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌮𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌸𑌤𑌿 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌸𑍍𑌸𑌤𑌿𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 (சாந். சு. கூ. உ)

"சௌமிய! இந்தப் பிரஜைகளெல்லாஞ் *சத்தில் அமிழ்ந்தியும், சத்தில் அமிழ்ந்துகின்றேம் என அறிகின்றில" என மற்ரோர் சுருதியினும் (பிர ஜைகள்) சிவபெருமானிடத்திலே இவ்வியல்பினதாகிய கதி செய்கின்றன என்று காணப்பட்டது.

𑌏𑌷 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌸𑍍𑌸𑌮𑍍𑌰𑌾𑌡𑌿𑌤𑌿 𑌹𑍋𑌵𑌾𑌚 ।

(பிரு. சு. ங. ஙஉ, ஙங; சு. ச. உங)

"அரசனே! இது பிரமலோகம் எனக் கூறினர்" என்னுஞ் இந்தச் சுருதி யிற் பிரமலோகசப்தமுந் தகராகாச விஷயத்திற் காணப்பட்டது.

---

* வேதாந்த சூத்திரத்து க. ச. கo ஆஞ் சூத்திரபாடியம் பார்க்க.

மேலும், (பிரஜைகளுடைய) கதியும், (பிரமலோகம் என்னும்) சப்தமும் மற்றோரிடத்திலே காணப்படுகின்றன என்பது வேண்டாம். பிரஜைகளெல்லாந் தினந்தோறும் (பிரமத்தைப் போய் அடைதலாகக்) கேட்கப்படும் கதியும், பிரமலோகசப்தமும் தகராகாசஞ் சிவபெருமான் என்பதற்குப் போதியசான்றாய் முற்றிய. (கச)

யுூ஦ேகு ெஹிசெூ உஸுாஸிஷ஦ூசயஷெுஃ (க. ௩. கரு)

(அ௦) இதிலே (தகராகாசத்திலே பிரபஞ்சத்தைத்) தாங்குதலாகிய அவர் *புகழுங் காணப்படலான்.

அய ய ஆுதூ ஸ ஸெதுவிய்ரு திரெஷாம லொகாநாஸஸாெஹ஦ாய

(சாந். அ. ச. க)

"பின்னர் இந்த உலகங்கள் கலங்காவண்ணம் அந்தப் (பரம) ஆன்மா சேதுவும் ஆதாரமுமாம்" என்னுஞ் சுருதியில் உலகத்தைத் தாங்குதலாகிய சிவபெருமானுடைய புகழ் இந்தத் தகராகாசத்துக்கு உளதாகக் காணப்படுகின்றது.

ஏஷ ஸவெூரூர ஏஷ ஹூதாயிவதி ரெஷ ஹூதவாலு ஏஷ ஸெதுவிய்ரண ஏஷாம லொகாநாஸஸாெஹ஦ாய|

(பிரு. சு. ச. உ௨)

"இவர் சர்வேசுவரர், இவர் பூதாதிபதி (பசுபதி), இவர் பூதபாலர் (ஆன்மரக்ஷகர்), இவர் சேது, உலகமனைத்துங் கலங்காவண்ணந் தாங்குபவர்" என்னுஞ் சுருதியினால் உலகத்தைத் தாங்குதலாகிய சிவபெருமானுடைய புகழும் பெறப்படுகின்றது. ஆகலானும், தகராகாசஞ் சிவபெருமான். (கரு)

பூஸிஜெஶு (க. ௩. கசு)

(அக) (அங்கே அவர் வழிபடற்பாலரெனப்) பிரசித்தமாதலினாலும்.

஦ஹூரம விவாவூ வரவெூஹூதம யக் வூணரீகம வூர உஹுஸஂஷூம தகுாவி ஦ஹாம ஶமநம விஶொகஸூஸிநுஷஸூ வாஸிதவூு (தைத். ஆரணி. க௦. கஉ. உ௩)

"பாவமிலாததும், பெரியோர் இல்லமாயதும், சரீரமத்தியில் இருப்பதுமாகிய †தகரபுண்டரீகம் உள்ளது; அதனுள்ளே சோகமில்லாத தகராகா

*இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.
(திருக்குறள். ரு)

†உபக்கிரமணிகை ரு௦-ஆம் பக்கத்தில் தகராகாசத்தின் பொருள் விளக்கப்பட்டமை காண்க. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிய "கற்றாங்கெரியோம்பி"

சம் உள்ளது; அதற்குள்ளே உள்ளது உபாசிக்கற்பாற்று" எனமகோப நிடதத்திலும்,

ஹ்ருத்புண்டரீகம் விரஜம் (கைவ)

"இதயபுண்டரீகம் அழுக்கற்றது" என்று தொடங்கி,

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம் த்யாத்வா (கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிநேத்திரரும், நீலகண்டரும், பிரசாந்தருமானவரைத் தியானித்து" என்றற்றொடக்கத்தனவாகக் கைவல்லியோபநிடதத்திலுந் தகரபுண்டரீகமத்தியில் உளராக உமாசகாயராகிய சிவபெருமான் உபாசிக்கற்பாலர் என்றது பிரசித்தம். ஆகலானுந் தகராகாசஞ் சிவபெருமான்.

(பூருவபக்ஷம்)

ஸ ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாசஸ்தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: (பிரு. சு. ச. உஉ)

"இந்த இருதய ஆகாயத்திலே அனைத்தையும் வசீகரிப்பவராகிய சர்வேசுவரர் இருக்கின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிவாக்கியங்களிலே தகர புண்டரீகத்துத் தகராகாயத்துள்ளிருப்பவராகச் சிவபெருமான் உபாசிக்கற்பாலர் என மற்றோர் உபநிடதத்திற் பிரசித்தமாயிருக்கின்றது. (அவர்) தகராகாசமாக உபாசிக்கற்பாலர் என (பிறிதோரிடத்திற் கூறப்பட்டமை) இங்கே விரோதமுறுமோ எனின்,

(உத்தரம்) அவ்விடத்துத் தகராகாயத்து மத்தியிலுள்ள சிவபெருமான் என்று உபாசிக்கற்பாலரல்லர்; பின் தகராகாயத்துக்கு அபகதபாப்மத்துவாதி (பாவமிலாமைமுதலிய) சிவகுணங்கள் சம்பந்தமுளவாகக் கூறப்படலான், சிவபெருமானுக்குத் தகராகாசத்தைச் சிதம்பரரூபமாகப் (பராசத்தியாகக்) கொண்டு அவர் உபாசிக்கற்பாலர் என்று கோடலான் எய்தும் விரோதம் இன்று. (கசு)

இதரபராமர்சாத் ஸ இதி சேந்நாஸம்பவாத் (க. ௩., கஎ)

"ஆடினாய்நறுநெய்" என்னுந் திருப்பதிகங்களும், திருநாவுக்கரசுநாயனாருளிய "அன்னம்பாலிக்கும்" "பனைக்கைமும்மத" "செஞ்சடைக்கற்றை" "பத்தனாய்ப் பாட" "பாளையுடைக்கமுகு" "கருநட்டகண்டனை" "அரியானையந்தணர்" "மங்குல்மதி" என்னுந் திருப்பதிகங்களும், சுந்தரமூர்த்திநாயனாருளிய "மடித்தாமடிமை" என்னுந் திருப்பதிகமும், மாணிக்கவாசகசுவாமிகளருளிய "இந்திரியவயமயங்கி" என்றற்றொடக்கத்தனவும், திருமாளிகைத்தேவருளிய "ஒளிவளர்விளக்கே" என்றற்றொடக்கத்தனவும், திருமூலநாயனாருளிய "தானந்தமில்லா," "அண்டங்களேழினும்" "தெற்குவடக்கு" "அண்டங்களோரேழு" "குருவருவன்றி" என்றற்றொடக்கத்தனவும் அத்தகராகாய திருச்சிற்றம்பலவுண்மையுணர்த்துவனவாம்.

(௮௨) மற்றொன்றைச் சுட்டுதலான், அது (எண்டுக் கொள்ளப்பட்டது) என்பது அன்று; அசம்பவமாதலின்.

(ஆக்ஷேபம்)

𑌅𑌥 𑌯 𑌏𑌷 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌪𑌰𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤 𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿𑌹𑍋𑌵𑌾𑌚 (சாந். அ. ௩. ௪)

"பின்னர் இவன் சம்பிரசாதன்; இந்தச் சரீரத்தை விட்டெழுந்து, பரஞ்சோதியை அடைந்து தனது ரூபத்தோடு தோற்றுகின்றனன்; அவன் ஆன்மா என்று அவர் கூறினர்" என்னுஞ் (சுருதியிற் கண்டவாறு), (ஆகாயம்) மற்றொன்றாகிய ஆன்மாவையே சுட்டுகின்றது. ஆகலின் பிரகிருதத்து ஆகாயமானது ஆன்மாவன்றி மற்றொருவரன்றாமெனின்,

(உத்தரம்) ஆன்மா அன்று; மேலே உரைத்த அபகதபாப்மத்துவாதி குணங்கள் அவனுக்கெய்தாமையான். ஆகலின், (ஆகாசத்தினாற் குறிக்கப்படுஞ்) சிவபெருமானிலே அக்குணங்கள் ஆசிரயித்துள்ளன என்பது யுக்தம். (௧௭)

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌚𑍍𑌚𑍇𑌦𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌤𑍁 (௧. ௩. ௧௯)

(௮௫) உத்தர (வாக்கிய) த்தினால் (ஆன்மா எனின்) அவன் ஆவிர்ப்பூதசொரூபமாகவே (உள்ளான்).

(ஆக்ஷேபம்)

𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌸𑍋𑌽𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌸 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌯 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 (சாங். அ. ௭. ௧)

பின்னர் "எவர் பாவமில்லாதவரும், ஜரையில்லாதவரும், மரணமில்லாதவரும், சோகமில்லாதவரும், பசியில்லாதவரும், தாகமில்லாதவரும், சத்தியகாமரும், சத்தியசங்கற்பருமாயினரோ, அந்தப் (பரம) ஆன்மாவானவர் நாடற்பாலர், அறியற்பாலர்; (பரம) ஆன்மாவை நாடி அவரை அறிகின்றவன் சமஸ்தவுலகங்களையும், சகல காமியார்த்தங்களையும் அடைகின்றான்" எனப் பிரஜாபதி கூறிய வாக்கியத்திலே ஆன்மாவுக்கு அபகதபாப்மத்துவாதி குணங்கள் உளவாகக் கேட்கப்படுகின்றது.

([illegible]) 𑌯 𑌏𑌷𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌣𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤 𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌹𑍋𑌵𑌾𑌚 (சாந். அ. [illegible])

ய ஏஷோ ஃக்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோவாச।
(சாந். அ. ௮. ௭)

"கண்ணுள்ளே தோன்றும் இந்தப் புருஷன் காணப்படுகின்றான், இவன் ஆன்மா என்று கூறினர்; சொப்பனத்திலே மகிழ்ந்தேறும் செல்கின்றவன் ஆன்மா என்று கூறினர்'' எனவும்,

தத்3யத்ரைதத்ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸந்ந: ஸ்வப்நம் ந விஜாநாத்யேஷ ஆத்மேதி ஹோவாச (சாந். அ. கக. க)

"ஒருவன் ஆறி அமர்ந்து நித்திரை செய்து கனவு காணுதொழியின், அவன் ஆன்மா என்று கூறினர்'' எனவும் போந்த சுருதிகளில் ஆன்மாவுக்கு இலக்கணமாகக் கூறிய அவஸ்தாத்திரயங்கள் கேட்கப்படுகின்றன. ஆகலின் ஆன்மாவே ஈண்டுக் குறிக்கப்பட்டான் எனின்,

(உத்தரம்) இங்ஙனங் கூறுவது சாரமன்று. தனது அநாதியாகிய கர்ம களங்க சம்பந்தத்தினால் இயைந்த சரீரத்தில் மறைப்புண்ட பாவமிலாமை முதலிய குணங்களையுடைய ஆன்மா பரஞ்சோதியோடிசைந்த பின்னர் (அதனால்) தனது சொரூபம் வெளிப்பட்டவனாயும், தனது பாவமிலாமை முதலிய குணங்கள் வெளிப்பட்டவனாயும் இங்கே பிரதியாதிக்கப்படுகின்றான்; (இவன்) சம்சாரியாகிய ஆன்மா அன்று. தகராகாசமோ எனின், அது இயல்பாகவே மறைக்கப்படாத அந்தந்தக் கல்யாணகுணங்களையுடைய வஸ்துவைக்குறிக்கின்றது; இங்ஙனம் ஈண்டுக்குறிக்கப்பட்ட தகராகாசம் கட்டுண்டதும் அன்று, வீடுற்றதும் அன்று. (க௮)

அந்யார்த்த2ஶ்ச பராமர்ஶ: (க. ௩. கக)

(௲௯) பராமரிசமானது அன்னியார்த்தத்தையுமுடையது

ஏஷ ஸம்ப்ரஸாதோ3ஸ்மாச்ச2ரீராத்ஸமுத்தா2ய பரம் ஜ்யோதிருபஸம்பத்3ய ஸ்வேந ரூபேணாபி4நிஷ்பத்3யதே (சாந். அ. ௩. ௪)

"இந்தச் சரீரத்தினின்றெழுந்து பரஞ்சோதி சொரூபத்தை அடைந்து தனது இயற்கைச் சொரூபம் அடைகின்றது'' என்னுஞ் சுருதிவாக்கியத்தினால், ஆன்மா தகராகாச சப்தத்தினாற் குறிக்கப்பட்ட பரவஸ்துவோடியைந்து, தனது இயற்கைச் சொரூபம்ஆவிர்ப்பாவமாதல் கூறப்படுகின்றது. அங்கே ஆன்மாவையுற்றுக் கூறப்பட்ட பராமரிசம் (சுட்டுகை) அவ்வியல்பினதாய அவனது மான்மியத்தைக் கூறற்காம், ஆகலின் விரோதமில்லை. (கக)

அல்பஶ்ருதேரிதி சேத்தது3க்தம் (க. ௩. உ௦)

(அறு) சுருதியானது சிறுமையைப் பேசினமையின் (ஆன்மாவே குறிக்கப்பட்டது எனின்) அது கூறியாயிற்று.

(பூருவபக்ஷம்) அற்பஸ்தானத்தைப் பற்றினமையின், தகராகாசம் அற்பசொரூபத்தையுடையதாகி, அதனாற் பரம்பொருள் ஈண்டுக் குறிக்கப்பட்டதில்லையாமெனா ஆசங்கிப்பின்,

(உத்தரம்) அது *க. உ. எ. என்னுஞ் சூத்திரத்தில் இறுத்தாயிற்று.

! அநுக்ருதேஸ்தஸ்ய ச (க. ங. உக)

(அசு) அவனுக்குச் †சாமியமுண்மையானும்.

நைதம் ஸேதும் அஹோராத்ரே தரத: ந ஜரா ந ம்ருத்யுர் ந சோகோ ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம் ஸர்வே பாப்மானோ(அ)தோ நிவர்த்தந்தே அபஹதபாப்மா ஹ்யேஷ ப்ரஹ்மலோக: தஸ்மாத் வா ஏதம் ஸேதும் தீர்த்வா அந்த: ஸந்நநந்தோ பவதி வித்த: ஸந்நவித்தோ பவதி உபதாபீ ஸந்நநுபதாபீ பவதி தஸ்மாத் வா ஏதம் ஸேதும் தீர்த்வா(அ)பி நக்தமஹரேவாபிநிஷ்பத்யதே ஸக்ருத்விபாதோ ஹ்யேவைஷ ப்ரஹ்மலோக: (சாந். அ. ச. க, உ)

"அந்தச் சேதுவைப் பகல் இரவேனும், ஜரையேனும், மரணமேனும், சோகமேனும், நன்மையேனும், தீமையேனும் கடப்பதில்லை; பாவிகளெல்லாம் அங்கிருந்து மீண்டுவிடுவர்; இந்தப் பிரமலோகம் பாவத்தினின்று நீங்கியதன்றோ; அதனாற் குருடாயுள்ளோன் இந்தச் சேதுவைக் கடந்து குருடு நீங்கப்பெறுவன்; காயமுற்றோன் காயம் நீங்கப்பெறுவன்; ‡தன்

---

* அரைமாத்திரையிலடங்கும்மடியகலமளக்கிற்பாரில்லாவடி.
(திருவிசை. நாவு. எ)

† "மெய்ப்பரம்பொருள் சேர்வார் தாமேதானகச்செயுமவனுறையுமிடம்"
(திருத்தாளச்சதி, ஞான, எ)

"ஆனந்தவார்கழலேயோப்பாகவோப்புவித்த
வுன்னத்தாருள்ளிருக்குமப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய்"
(திருவம்மானை. கஅ)

கோளில்பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்றாளை வணங்காத் தலை,
(திருக்குள். க0)

‡ கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே.
கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினன்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே.
(ஞான. கோயில் அ, க)

யுற்றேன் துன்பம் நீங்கப்பெறுவன்; ஆகலின், இந்தச் சேதுவைக் கடந்த போது இராவரனது பகலாகின்றது; பிரமலோகம் (யாவர்க்கும்) ஒரே முறையிற் பிரகாசிப்பது" என்று சாந்தோக்கிய வாக்கியசேஷம் கூறுகின்றமையின், ஆன்மா தகராகாய சப்தத்தினுற் குறிக்கப்பட்ட பரஞ்சோதிக்கு ஒப்பாயிருப்பதாகப் பெறப்படுகின்றது.

ஈண்டுத் தகராகாசத்தை அடைந்தவனுக்குப் பாவரூபமாகிய ஜரை நீங்குதற்கும் குருடு நீங்குதற்கும் அபகதபாப்மத்துவமும் இடையீடில்லாது உதிக்கும் பிரகாசமும் காரணமாகக் கூறப்பட்டன.

ஆகலின், தகராகாசத்தை அடைந்தவனுக்கு எய்துவதாகக் கூறப்பட்ட பலப்பேருகிய சாமியமே அந்த அனுகிருதி என்பது

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி (முண்ட. ௩. ௧. ௩)

"நிரஞ்சனனுப் பரமசாமியத்தை அடைகின்றான்" என்னுஞ் சுருதியினால்) அறியப்படுகின்றது. அதுவும் (அனுகிருயும்) தகராகாசத்து ஆன்மாவேதமாயிருக்குமிடத்துத்தான் பொருத்தம். ஆகலின், (ஈண்டுக் கூறப்பட்ட தகராகாசம்) ஆன்மா அன்றென்பது தாற்பரியம். (உ௧)

பின்னருஞ் சூத்திரகாரர் மற்றோர் பிரமாணங் கூறுகின்றனர்.

அபி ச ஸ்மர்யதே (௧. ௩. உஉ)

(அள) மேலும் ஸ்மிருதியினும் (அங்ஙனம்) கூறப்படுகின்றது.

அதவா பரமாநந்தம் பரமாநந்த விக்ரஹம்।
[illegible] க்ருஷ்ணபிங்களம்
ப்ரஹ்ம ப்ரஹ்மபுரே [illegible]
அப்யாஸாத் ஸம்ப்ரபஶ்யந்தி ஸந்தோ ஜ்ஞாநதயா கார்கி।
(யோகயாஞ்ஞவல்கியத்துத் தியானத்தியாயம்)

"இன்றேற் பரமானந்தவிக்கிரகரும், புருஷரும், கிருஷ்ணபிங்களருமாகிய பரப்பிரம சிவபிரானைக் குருவுபதேசத்தினால் அப்பியாசித்து, கார்க்கியே! பெரியோர் பிரமபுரத்துத் தகரபுண்டரீகாம்பரமத்தியிலே காண்கின்றனர்; நீயும் அங்ஙனமே செய்" என்று (யோகயாஞ்ஞவற்கிய) ஸ்மிருதியினும் கூறப்படலான், பிரமம் தகரபுண்டரீகத்துள்ளிருப்பதாயும், அது வழிபடற்பாலதாயும் கூறப்பட்டது. ஆகலின், பரஞ்சோதிசொரூபமுடையதும், முத்தர்களால் அடையற்பாலதும், உமை என்னும் பராசத்தியோடிசைந்ததுமாகிய பரப்பிரமம் தகரபுண்டரீக ஆகாயமத்தியிலிருப்பதும் அபகதபாப்மத்துவாதி குணங்களை இயல்பாகவுடையதும், உபாசிக்கற்பாலதுமாமெனச் சித்தித்தது. (உஉ)

(௯) பிரமிதாதிகரணம்.

பின்னர்ச் சிவபெருமான் மற்றோர் வடிவமாக உபாசிக்கப்படுதல் கூறப்படுகின்றது.

ஶப்தாதேவ ப்ரமித꞉ (௧.௩.௨௩)

(அது) சுருதிபற்றியே (அவர்) *அளக்கப்பட்டனர்.

அங்கு³ஷ்ட²மாத்ர꞉ புருஷோ மத்⁴ய ஆத்மனி திஷ்ட²தி।
ஈஶானோ பூ⁴தப⁴வ்யஸ்ய ந ததோ விஜுகு³ப்ஸதே॥

(கட. ௪. ௧௨)

"அங்குஷ்டப் பிரமாணத்தினராகிய புருஷர் இதயமத்தியில் நிற்பாராயினர்; இவர் இறந்தகால எதிர்காலத்துக்கும் ஈசானராதலின், (எவர்க்கும்) அஞ்சுவாரல்லர்" என்றற்றொடக்கத்த சுருதியே விஷயம்.

ஈண்டு அங்குஷ்ட அளவினராகக் கேட்கப்படும் புருஷர் சிவபெருமானா? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா என்னல் யுக்தம்;

ஸ விஶ்வரூபஸ்த்ரிகு³ணஸ்த்ரிவர்த்மா ப்ராணாதி⁴பஸ்ஸஞ்சரதி ஸ்வகர்மபி⁴꞉। அங்கு³ஷ்ட²மாத்ரோ ரவிதுல்யரூபஸ்ஸங்கல்பாஹங்காரஸமன்விதோ ய꞉ (சுவே. ரு: ௭, ௮)

"அவன் விசுவரூபியும், முக்குணமுடையனும், மும்மார்க்கமுடையனும், பிராணாதிபனும், தனது கன்மவசத்தாற் (பிறவிதோறும்) சரிப்பவனும் ஆகின்றான்; அவன் அங்குஷ்ட அளவினனும், இரவிதுல்லியரூபனும், சங்கற்பாகங்காரங்களோடு இசைந்தவனுமாம்" என்னுஞ் சுருதியினால் அவன் அங்குஷ்ட அளவினனாதல் சித்தித்தலினாலும்,

மத்⁴ய ஆத்மனி திஷ்ட²தி (கட. ௪. ௧௨)

"ஆன்மாவின் மத்தியில் நிற்கின்றான்" என்றது அந்தப் புருஷன் சரீரத்தினுள்ளே இருப்பவன் எனப் பொருள் அறியப்படலானுமாம்; வியாபகராகிய சிவபெருமான் அன்றெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அங்குஷ்ட அளவினர் சிவபெருமான் எனல் யுக்தம்;

(*) ஈசனுமாகும்புருடனங்குட்டப்பிரமிதித்தன்னை விரும்பாம
லறவனையுந்திசனைத்தசுருதியாற்பரமென் றுரிச்சயித்தோன்
னெறியும்வேறுதீயமங்குளியிற்றேரிக்குஞ்சுத்தாஞ்செய்தவன்றருத்து
மிறைவனின்பெருமைகண்டதேயாகுமென்பராலாயவல்லவரே.
(௨௨) (சிவதத்துவவிவேகம், ௬.௮)

(கட. ச. கஉ)

"இறந்தகால எதிர்காலத்துக்கு ஈசானர்" என்றற்றொடக்கத்த சுருதி சிவபெருமானுக்குரிய லிங்கசப்தமுடைமையின்;

(அதர்வசிகை)

"சர்வைசுவரிய சம்பன்னரும், சர்வேசுவரரும், ஆகாயமத்தியிலுள்ள சம்புவும்" என அதர்வசிகையினும் அவர்க்கே சர்வேசுவரத்துவம் கேட்கப்படலான். (௨௩)

சிவபெருமானைப் பரிச்சின்னராகப் பன்முறையுங் கூறுதல் எங்ஙனம் இயைபுடைத்தெனச் சூத்திரகாரர் கூறுகின்றார்.

(௧. ௩. ௨௪)

(அகு) ஆயின் இதயத்தை அபேக்ஷித்து மனுஷ்யாதிகாரமுண்மையின்.

சிவபெருமான் அபரிச்சின்னராயினும், (அவரை) அங்குஷ்ட அளவினராகக் கூறினமை உபாசகனுடைய இதயத்தை அபேக்ஷித்து மனுஷ்யாதிகாரம்பற்றி உபாசனா சாஸ்திர விதிகள் உண்மையின். மனிதர் இதயம் எத்துணைப் பிரமாணமுடையதோ, அத்துணைப் பரிச்சின்னமாகிய ரூபத்தையே பரமகாருணிகராகிய சிவபெருமானும் அவர் உபாசனாசித்தியின் பொருட்டுக் கொள்வாராயினர். ஆகலின், சோதிமயராகிய சிவபெருமான் லிங்கரூபமாக உபாசகர் இதயமத்தியில் நிற்கின்றனர் என்பது நிர்ணயம். (௨௪)

(எ) தேவாதிகரணம்.

மேலை அதிகரணத்தில் மனிதர்களுக்குமாத்திரமே சிவபெருமானை உபாசித்தற்கு அதிகாரம் உளதெனச் சூசிப்பிக்கப்பட்டது.

(அதர்வசிரசு)

"பின்னாத தேவர்கள் உருத்திரரைக் காணவலராய அவரைத் தியானிப்பாராயினர்" எனத் தேவர்களும் சிவபெருமானை உபாசித்தாராக அதர்வசிரசிற் கேட்கப்படுகின்றதெனை ஆசங்கிப்பின், அதற்கு உத்தரமாக இவ்வதிகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

(௧. ௩. ௨௫)

(௨௫) பாதராயணர் (சொன்னபடி), அவர்களுக்கு (மனிதர்க்கு) மேலுள்ளார்க்கும், (அது) உண்மையின்.

தே தேவா ருத்ரம் த்யாயந்தி (அதர்வசிரசு)

"அந்தத் தேவர்கள் உருத்திரரைத் தியானிக்கின்றார்கள்" என்னும் அதர்வசிரச்சுருதியே விஷயம்.

சிவபெருமானை உபாசிக்கத் தேவர்களுக்கு அதிகாரம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது கூடாது. அவாவுடையனும், வன்மையுடையனும், வித்துவானும், சாஸ்திரத்தினால் நிஷேதிக்கப்படாதவனுமன்றோ வைதிக கருமத்துக்கு அதிகாரியாவன். தேவர்களுக்கு வன்மை இன்று, சரீரம் இன்மையான். சரீரமுடையரன்றோ ஒருவரைத் துதி தியான முதலிய செய்யச் சமர்த்தராகின்றனர்.

இந்த்ரோ வ்ருத்ராய வஜ்ரமுதயச்சத் (யசு. வே. சு. ௫. க. க)

"இந்திரன் விருத்திராசுரனுக்கு (விரோதமுற) வச்சிராயுதத்தை ஓங்கினன்" என்றற்றொடக்கத்த பிரமாணமுண்மையின், அவர்கட்குச் சரீரமுளதாகின்றதே எனின், அன்று; விதியொன்றை விளக்கும்பொருட்டு உபயோகமாயிருக்கும் வாக்கியங்கள் அந்த விதியொழிந்த மற்றொன்றைச் சுட்டுமாறின்றாமாதலின்,

அவர் சரீரமுடையராயவிடத்தும் சிவபெருமானது பதத்தை நோக்கி அவர்களுக்குஞ் சிவபெருமானுக்கும் பதம் ஒன்றுமாதலின்.

தேவா ஹவை ஸ்வர்க்கம் லோகமாயம்ஸ்தே தேவா ருத்ரமப்ருச்சன் கோ பவாநிதி (அதர்வசிரசு)

"தேவர்கள் சுவர்க்கலோகத்தை அடைந்தனர்; அத்தேவர்கள் நீவிர் யார்? என உருத்திரரைக் கேட்டனர்" என்னுஞ் சுருதியினால், சுவர்க்கமாகிய உலகமே உருத்திரராகிய பரப்பிரமத்தின் பதமாக அறியப்படுகின்றது. அதுவே தேவர்களுடைய பதம்.

ஆப்நோதி ஸ்வாராஜ்யம் (தைத். க. சு)

"சுவர்க்கராச்சியத்தை அடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளினால் முத்தனும் சுவர்க்கராச்சியத்தை அடைவதாக அறியப்படுகின்றது. அன்னணம் அவர்கட்கு (தேவர்கட்கு) ஞானமும் இன்று. உபநயனசம்ஸ்காரபூருவமாக எய்தும் வேதாத்தியயனமில்லாவிடத்து, அவர்கட்கு வேதாந்த விசாரமின்மையின், பிரமஞானம் எய்தாது. அதுபற்றி, அவர்கள் சாஸ்திரத்தினால் உபாசனைக்கு விலக்காவர் என்பது. ஆதலின், தேவர்கள் பிரமோபாசனைக்கு அதிகாரிகளல்லராம் எனின்.

(சித்தாந்தம்) பிரமோபாசனைக்குத் *தேவர்கட்கும் அதிகாரம் உளது; யாதினாலெனின், அவர்களுக்கு ஆசையுண்மையின். சிவபெருமானுடைய பதமும் தேவருடைய பதமும் ஒன்றன்று. சுவர்க்கசப்தம் சாமானிய மாக இன்பத்தை உணர்த்துமேனும், பிரகரணத்தினால் அது விசேட இன் பத்தைக் குறிக்கின்றது; எங்ஙனமெனின், ஈசுரசப்தம் (சாமானியமாக) எசமானனை உணர்த்துமேனும் பிரகரணவசத்தினால்,

உவெயாதீஸ்வரமெனுவ யொமுக்ஷோஸமுலிஸயெ|

"யோகக்ஷேமசித்தியின்பொருட்டு ஈசுவரனை ஒருவன் அடையறபாலன" என்றற்றொடக்கத்த வாக்கியங்களில், ஈசுவரசப்தம் தேசத்துக்கு அதிபதி யாயிருக்கின்ற அரசனையே குறிக்கின்றது; அம்மொழி பின்னர்ப் பிரமத் தையுற்றுப் பேசும் பிரகரணத்தில் நிரதிசய ஐசுவரியத்தையுடைய பிரமத் துக்கே பெயராகச் செல்கின்றது. அங்ஙனம், இன்பத்தை உணர்த்தும் சுவர் க்கசப்தமும் பிரகரணத்தினாலும், பிற பிரமாண உபபத்தியினாலும் அழியும் மாலையதாதல் சாதிசயமாதல் முதலிய குற்றங்களினால் மாசு ஏறிய அற்ப இன்பத்தையுடைய தேவருலகத்தைக் குறிக்கின்றது; அது பின்னர் நிரதி சய இன்பசொரூபமுடையதாகி மீண்டு பிறப்பின்கட் செலுத்தாத இலக்க ணமுடைய பரப்பிரம சிவனாருடைய பதத்தை குறிக்கின்றது. ஆகலின், தனக்கு மேலான தொன்மையுடைத்தாதல் முதலிய குற்றமுடைய சுகபதத் தில் வசிப்பவர்கள் நிரதிசய இன்பமுடைய பிரமபதத்தில் ஆசையுறுவது இயற்கையே. அர்த்தவாதப் பிராமண்ணியத்தினால் அவர்களுக்கு வடி வுடைமைபற்றி (கன்மாதிகார) சாமர்த்தியமும் உண்டு எதனாலெனின்,

தயா ஞூஷிவெதூா யசிவஃ (தைத். பிராம்மணம். உ. க. ௫. ௬௫);
ஸஹுஸ்ஶிஷாவுஷஷஜழ (யசுர். வே. எ. ச. கஅ. க)

---

*அயனொடுமாலிந்திரன்சந்திராதித்தமரரெலாஞ்
சயசயவென் றுமுப்போதுபணிவனதண்கடல்சூழ்
வியனிலமுற் றுக்கும்விண் ணுக்குநாகர்வியனகர்க்கு
மியபரமாவனவின்னம்பரான் றனிணையடியே.
(திருவின்னம்பர், காவு, க)

அரியயனிந் திரன்சந் திராதித்தமரரெல்லா
மூரியவின்கொற் றக்கடைத்தலையாருணங்காக்கிடந்தார்
புரிதருபுன் சடைப்போக முனிவர்புலம்புகின்று
மெரிதருசெஞ்சடையேகம்பவென்னோ திருக்குறிப்பே.
(திருக்கச்சியேகம்பம், காவு, எ)

பரப்புந்தவன்காலனை முன்புணைத்தோளியோர்புறகுடிதந
வேயந்தவனெண்ணின றந்தவிமையோர்கடொழுதிறைத்த
வாயிந்தவன்.
(திருவக்கரை, ஞான, உ)

"ஆதித்தியன் யூபம்; அக்கினியானவர் பனிக்கு ஔஷதம்", என்றற்றொடக்கத்தவற்றாற் குணவாத அநுவாதங்கள் தமக்குரிய அர்த்தத்திலே தாற்பரியமில்லையேனும்,

உபெ⁴ா வ்ருத்ராய வஜ்ரமுத³யச்ச²த் (யசுர். வே. ஸ. ரு. க. க)

"இந்திரன் விருத்திரனைக் (கொல்ல) வச்சிரத்தை உயர்த்தினன்" என்றற்றொடக்கத்த அர்த்தவாதங்கள் வேறு பிரமாணங்களினால் விரோதமுறாது, பிரமாணமாகத் தம்பொருளிலே தாற்பரியமுளவாகக் காணப்படலான், (தேவர்களுக்குள்ள) மிகுந்த சக்தியினால் வேதார்த்தங்கள் தாமே அவர்க்குப் புலப்படுதலாலாவது, முன்னர்ப்படித்த வேதங்களை மறவாதிருத்தலினாலாவது அவர்களுக்கு ஞானம் உளதாகின்றது. சாத்திரம் பொதுவுற உபாசனையை விதித்தமையான், (உபாசனைக்கு) அதிகாரராதலை நீக்குதல் கூடாமையின், தேவர்களை நீக்குதல் கூடாதாயிற்று. ஆகலின், பிரமவித்தைக்கு அதிகாரிகள் தேவர்கள். (௨௬)

தேவர்களுக்குச் சரீரமுதலிய உளவாமிடத்து விரோதமுளதாம் எனச் சூத்திரகாரர் ஆக்ஷேபித்துப் பரிகரிப்பாராயினர்.

விரோத⁴꞉ கர்மணீதி சேந்நாநேகப்ரதிபத்தேர்த³ர்ஶநாத்॥
(க. ௩. ௨௭)

(கூக) (யஞ்ஞ) கர்மத்தில் விரோதமுளதோ எனின், இன்று; அநேக (சரீரத்தைப்பற்றிய) கொள்கை உண்மையின்.

(ஆக்ஷேபம்) நாநா தேசங்களினும் இயற்றப்படும் (பற்பல) யஞ்ஞங்களில் அங்கங்கே வரிக்கப்படுந் தேவர்கள் (சேறற்குச்) சரீரமெடுக்குங்கால் யாண்டும் ஓரே காலத்தில் சாந்நித்தியராகக் கூறப்படுகின்றனர்; அது பொருந்தாது; இங்ஙனம் யஞ்ஞவிஷயத்தில் விரோதமுறுகின்றதே எனின்,

(உத்தரம்) அங்ஙனம் இன்று; *சௌபரி முதலாயினோர் ஓரே காலத்தில் அநேக சரீரங்களை எடுத்தாராகக் காணப்படுகின்றது. ஆதலிற் சிறிதும் விரோதமின்று. (௨௭)

---

*சௌபரிமுனிவர் ஒருவர் மாந்தாதா என்னும் ஓர் அரசருடைய புதல்வியர் ஐம்பதின்மரை விவாகஞ் செய்து அவ்வைம்பதின்மர்க்கும் தமது ஆச்சிரமத்திலே தனித்தனி மாளிகை முதலாயின அமைப்பித்து அவ்வைம்பதின்மர் மாளிகையிலும் ஒருவரை ஒருவர் அறியாவண்ணம் அவ்வவரிடத்துத் தனித்தனி வடிவங்கொண்டு ஓர்காலமும் அவ்வவரைப் பிரியாது நெடுங்காலம் போகந்துய்த்து புத்திர பௌத்திரரோடு வாழ்ந்திருந்தார் என்று விஷ்ணுபுராணம் நான்காம் அம்சத்து இரண்டாம் அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

யஞ்ஞகர்மத்தில் விரோதம் வேண்டாம்; வேதசப்த விஷயத்தில் விரோதம் எழுகின்றதே எனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஶப்³த³ இதி சேந்நாத: ப்ரப⁴வாத் ப்ரத்யக்ஷாநுமாநாப்⁴யாம் |

(௧. ௩. ௨௮)

(௯௨) வேதத்தைப்பற்றி (விரோதமுளதே) எனின், இன்று; பிரத்தியக்ஷாநுமானங்களினால் அங்கிருந்து உற்பத்தியுறுதலின்.

(ஆக்ஷேபம்) யஞ்ஞவிஷயத்தில் விரோதமின்றேனும், வேதசப்த விஷயத்தில் விரோதமுளதாகின்றது. எங்ஙனமெனின், தேகம் அவயவத்தோடியைந்திருத்தலின், தேவர்களுக்கும் அநித்தியம் சகசமே; ஆகலின், இந்திரன் முதலிய தேவர்களுக்கும் உற்பத்தி உளதாதலிற்றடையில்லை. அங்ஙனமாயின், அவர்கள் பிறப்புக்கு முன்னும் இறப்புக்குப் பின்னும் வைதிக இந்திராதி சப்தங்கள் பொருட் சூந்யமாயேனும், அநித்தியமாயேனும் இருக்கலாம். அவ்வேதசப்தங்கள் அநித்தியமாயின், (அவை) பௌருஷேயமாய், விதிநிஷேதவாக்கியங்கள் அப்பிராமாண்ணியமாய்ப்போம். அதனால், அவ்வேதங்களிற் கூறிய கன்மங்களுஞ் சித்தியாகா. அநேக அநர்த்தங்கள் விளைய நேரும். ஆகலின், வைதிகசப்த விரோதத்தைப் பரிகரிக்குமாறு தேவர்கள் சரீரமுடையராதலை அங்கிகரிக்கலாகாதாம் எனின்,

(உத்தரம்) ஆகாது; அங்கிருந்து, அஃதாவது, இந்திரன் முதலிய வைதிக சப்தங்களிலிருந்து இந்திரன் முதலிய அர்த்தங்கள் சிருட்டிக்கப்பட்டன. இந்திராதி சப்தங்கள் வியக்தியைப் (பொருளைக்) குறிக்குமாயின், அப்போதன்றோ இந்திராதி சப்தங்களாற் சுட்டப்பட்ட பொருள் அழியுங்கால், அந்த வேதவாக்கியப் பொருள்களுக்குப் பொருளின்மையும் அநித்தியமும் நேரும். கவாதி சப்தம் போல இந்திராதி சப்தங்களுக்கும் ஆகிருதி (வடிவு) வாசகமாத்திரம் கூறப்படுகின்றது. எங்ஙனங் குலாலன் கடமுதலிய சப்தங்கொண்டு மனசில் உதித்தவாறு அவ்வாகாரத்தை நினைந்து கடாதிகளைச் சிருஷ்டிக்கின்றானோ, அங்ஙனமே முந்திய இந்திரன் ஒருவன் இலனாகுங்கால், பிரமா வைதிக இந்திராதி சப்தத்தினால் மற்றோர் இந்திரன் முதலியோர் ஆகிருதியை நினைந்து அந்த ஆகாரமாய் மற்ற இந்திரன் முதலாயினோரைப் படைக்கின்றனர். ஆகலின், இந்திரன்முதலிய வியக்திகள் நாசமுறினும், அந்தந்த ஆகிருதி ஒழிவனவன்றாய், அதனால் வைதிக சப்தங்கள் நித்தியமாயுறுதலின் விரோதமின்று. இதற்குப் பிரமாணம் என்னை எனின்,

𑌵𑍇𑌦𑍇𑌨 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑍋𑌤𑍍 𑌸𑌤𑌾𑌸𑌤𑍀 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃

(தைத். பிரா. உ. கூ. உ. எ)

𑌸 𑌭𑍂𑌰𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌤𑍍𑌸 𑌭𑍂𑌮𑌿𑌮𑌸𑍃𑌜𑌤 (தைத். பிரா. உ. உ. ச. உஉ)

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌸 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌚 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍃𑌥𑌕𑍍 ।
𑌵𑍇𑌦𑌶𑌬𑍍𑌦𑍇𑌭𑍍𑌯 𑌏𑌵𑌾𑌦𑍌 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌶𑍍𑌚 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍇 ॥

(மனு. க. உக)

"பிரஜாபதியானவர் சத்தும் அசத்துமாகிய ரூபங்களை வேதங்களினால் இயற்றினர்" என்றும், "அவர் பூர் என்று கூறிப் பூமியைப் படைத்தனர்" என்றும், "எல்லோர் பெயரையுங் கன்மங்களையுந் தனித்தனி வேதசப்தங்களினின்று முதன்முதற் படைத்தனர்" என்றும் முறையே கூறும் சுருதி ஸ்மிருதிகளே பிரமாணங்கள். (உஏ)

𑌅𑌤 𑌏𑌵 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 (க. ங. உகூ)

(கூங) ஆதலினாலும் நித்தியத்துவம்.

ஆகலின்,

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌕𑍃𑌤𑍋 𑌵𑍃𑌣𑍀𑌤𑍇 (ஆபஸ்தம்ப பிறவரசூத்திரம். க. எ)

"மந்திரம் இயற்றினோரை அவன் வரிக்க"

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 (தைத். சங். ரு. உ. ரு. ரு, ச)

"இது விசுவாமித்திரசூக்தம்" என்னும் வாக்கியங்களான் விசுவாமித்திரர் முதலாயினோர் மந்திரகர்த்தாக்களாயினும், விசுவாமித்திரர்முதலிய மொழிகள் ஆகிருதிநிமித்தமாயிருத்தலின், மந்திரமும் பிராம்மணமுமாயிருக்கும் வேதமானது நித்தியம் என்பது தேற்றம். எதனாலெனின், பிரமா வைதிக சப்தங்கொண்டு (படைக்கற்பாலனவாகிய) பொருள்களை நினைந்து, பின் அவற்றைப் படைப்பாராயினர்; (அவர் உபாத்தியாயர் ஒருவரிடத்துக்) கல்லாது, மந்திரங்களைப் பார்க்குஞ் சத்தியோடிசைந்தமையின். அங்ஙனமே நைமித்திகப்பிரளயமுடிவில் முந்திய யுகத்துள்ள விசுவாமித்திரர் முதலாயினோருடைய விசேஷவடிவங்களை அந்தந்த வைதிக சப்தங்கொண்டு நினைந்து அதே வடிவத்தையுடைய பிறரையும் (விசுவாமித்திராதியோரையும்) அவ்வச்சத்தி விசேஷங்களையுடையராகப் படைக்கின்றனர். விசுவாமித்திரர் முதலியோருங் கல்லாது தாந்தாமே வேதமந்திரங்களைப் படிக்கின்றனர். ஆகலின், அவர்கள் மந்திரகர்த்தாக்களாதலும் வேதம் நித்தியமாதலும் ஆகும். (உஅ)

(ஆக்ஷேபம்) நைமித்திகப்பிரளயத்தில் இங்ஙனம் ஆகலாம்; பிரமதேவரும் வேதசப்தமும் ஒழியும் பிராகிருதப் பிரளயத்திலே வேதம் நித்தியமாதல் எங்ஙனமெனின்;

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸமாந நாமரூபத்வாச்சாவ்ருத்தாவப்யவிரோதோ தர்ஶநாத் ஸ்ம்ருதேச்ச (க. ங. உக)

(கூச) ஒரே பெயரும் வடிவும் உண்மையின் உலக ஆவிருத்தியினும் விரோதமின்று; வேதத்தினும் ஸ்மிருதியினுங் காணப்படலான்.

படைக்கற்பாலனவாய பொருள்களுக்கு அதே வடிவும் உண்மையின், பிரகிருதிப்பிரளயமுடிவில் மீள உளதாகும் உலகத்தில் யாதும் விரோதம் இல்லை. அங்ஙனமே சர்வஞ்ஞரும், சர்வசத்தியினரும், விசுவாதிகரும், ஆதிகர்த்தாவுமாகிய சிவபெருமான் முந்திய உலகத்தின் நிலையை உணர்ந்து அதே வடிவமாக உலகத்தைப் படைக்கின்றனர். வேதமனைத்தையும் முற்றொடர்ச்சிப்படி நினைந்து புத்திரத்தன்மையுற்ற பிரமாவுக்கு அவற்றை அருளுகின்றனர். இது எங்ஙனம் பெறப்பட்டதாலோ எனின், சுருதி ஸ்மிருதிகளான் என்க.

ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்।
திவஞ்ச ப்ருதிவீஞ்சாந்தரிக்ஷமதோ ஸுவ:।

(தைத். ஆரணி. க0. க. கச)

யோ ப்ரஹ்மாணம் விதயாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை (சுவே. கூ. கஅ)

"தாதா (வாகிய சிவபெருமான்) முன் போலச் சூரியசந்திரரையும், ஆகாயம் பூமியையும், அந்தரிக்ஷ சுவர்க்கத்தையும் சிருட்டித்தனர்; பிரமாவை முதற்கட்படைத்து அவர்க்கு *வேதத்தையும் அருளினர்" என்று சுருதியினும்,

ஏவ ஸர்வ ஸர்வஜ்ஞாதௌ தாஸ்ய வீர்யேணோபாஸ்ருஜத்।
தக்ஷிணேஹவஶேஷம் ஸஹஸ்ராம்ஶும் ஸதேவ்ருஜு।
தஸ்மிம் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா ஸர்வலோக பிதாமஹ:।

* வேதத்தையும் என்ற உம்மையினாற் புராணங்களுஞ் சொன்னப்படும். இவ்வுண்மையை

ததாபி ஸ மஹாதேவோ விதாத்ருக உவாசயோ:।
ஸர்வாவயத்வம் வேதாந் புராணாநி ச ப்ரவக்த:॥

(சங். ந. கூ; கச)

"அங்ஙனமாயினும் முதற்கண் எங்களுக்கு (பிரமவிஷ்ணுக்களுக்கு) வேதங்களையும் புராணங்களையும் கற்பித்த அந்த மகாதேவர் எங்கள் இருவருள்ளும் ஒருவர் போற் பிரகாசிக்கின்றார்" என்னும் சங்கரசங்கிதையினால் உணர்க.

ஸோ(அ)பஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத்। ததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம்॥ தஸ்மிஞ்ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா ஸர்வலோகபிதாமஹ:॥

ஸர்வேஷாம் து ஸ நாமானி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக்। வேதஶப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாஶ்ச நிர்மமே॥

(மநு, ௧: அ, ௯)

"அவர் முதற்கண்ணே ஜலத்தை உண்டாக்கி அதில் வீரியத்தை விட்டனர்; அது ஆயிரங் கிரணத்தையுடைய சூரியன்போற் பிரகாசமுடைத்தாய், ஓர் சுவர்ண அண்டமாயிற்று; அதிற் சர்வலோகபிதாமகராகிய பிரமா தாமாகவே பிறந்தனர்; இப் பிரமாவை முதற்கண்ணே படைத்து அவர்க்கு வேதங்களை அருளுகின்றனர்" என ஸ்மிருதியினுங் கூறப்படுகின்றது. ஆகலின், உலகமுழுமையும் பிரகிருதிப் பிரளயத்துக்குப் பின்னர்ப் புதிதாய் உளதாயவிடத்தும் வேதம் நித்தியமே. (௨௯)

சூத்திரகாரர் மதாந்தரங் கூறுகின்றனர்.

மத்வாதிஷ்வஸம்பவாதநதிகாரம் ஜைமினி: (௧. ௩. ௩௦)

(௩௦) மது (வித்தை) முதலியவற்றிற் கூடாமையின், அவர் அநதிகாரமுடையர் (என்பர்) ஜைமினி.

மதுவித்தை முதலிய உபாசனைகளில் வசுக்களும் மற்றைத் தேவர்களுமே உபாசிக்கற்பாலரும் அடையற்பாலருமாயிருத்தலின், ஒரே வஸ்துவானது கர்த்தாவாகவும் கன்மமாகவும் இருத்தல்பற்றி வசுவாதிகள் உபாசிக்கற்பாலராகார். மேலும், வசுவாதியர் தாமேயாயிருத்தலினால், வசுவாதித்துவம் மேலே அடையப்பட்டதாயிருக்க, (அது) அடையற்பாலதாய பொருளாதல் கூடாது. ஆகலின், வசுக்களும் மற்றைத் தேவர்களும் மதுவித்தை முதலியவற்றிற்கு அதிகாரமுடையரன்றென ஜைமினி கொள்கின்றனர். (௩௦)

ஜ்யோதிஷி பாவாச்ச (௧. ௩. ௩௧)

(௩௧) *சோதியில் (அவர்கள் அதிகாரம்) உண்மையானும்.

பரப்பிரமசோதியானது சாதாரணமாய் (மனிதர்களோடு கூடத்) தேவர்களால் உபாசிக்கற்பாலதென்றாயினும்,

"தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர்ஹோபாஸதே(அ)ம்ருதம்" (பிரு. ௬. ௪. ௧௬)

"சோதிகளுள்ளே சோதியாம் அவரைத் தேவர்கள் உயிராயும் அமிர்தாயும்

* சோர்ந்தெரியாப்பொருள்சோதிக்கப்பானின்றசோதிதான்
மற்றறியாவடியார்கட்கெஞ்ஞான்றுமைதுண்மன்னுமே.
(திருவீழிமிழலை, ஞான, ௧௦)

ஓதியாகுமதிவானிலேயொளிபுலனெலாஞ்
சோதியாய்நிறைந்தானைச்சுடர்ச்சோதியுட்சோதியான்.
(திருவையாறு, ஞான, ௯)

உபாசிக்கின்றனர்" என்னுஞ் சுருதியினுல் தேவர்களுக்கும் மனிதர்களைப் போலப் பரப்பிரமசோதியை அடைய அதிகாரமிருப்பதாகக் கூறப்படவின், மற்றோர் மதுவித்தியாதி உபாசனையில் அதிகாரமில்லை என்பது நியாயசித்தமாயிற்று. (௩௧)

சூத்திரகாரர் தமது கருத்தைக் கூறுகின்றனர்.

பாவம் து பாதராயணோऽஸ்தி ஹி (௧. ௩. ௩௨)

(௩௨) ஆயின், பாதராயணர் (அவர்கட்கு அதிகாரம்) உளது (என்கின்றனர்); (கூடுமா)கலின்.

வசுக்களுக்கும் மற்றைத் தேவர்களுக்கும் மதுவித்தை முதலியவைகளில் அதிகாரம் உளதென வாதராயணர் கொள்கின்றனர். அவர்கள் வசுக்களாயிருப்பினும், அவர்கள் வசுக்கள் வடிவமாகவே பிரமத்தை உபாசித்து, மற்றோர் கற்பத்தில் வசுத்துவ முதலியவற்றை அடைதல் கூடும். ஏண்டுப்பிரமமானது காரியம் காரணம் என்னும் இருதிறத்ததாக உபாசிக்கற்பாற்று.

அஸௌ வா ஆதித்யோ தேவமது (சாந். ௩. ௧. ௧)

"இந்த ஆதித்தியனே தேவர்களுக்கு மது" என்று ஆரம்பித்த சுருதியானது ஆதித்தியர் வசுக்கள் முதலாயினேருடைய நாமரூபகிருத்தியத்தோடியைந்த காரியரூபமாகிய பிரமம் உபாசிக்கற்பாலதென உபதேசிக்கின்றது.

அத தத ஊர்த்வ உதேத்ய நைவோதேதா நாஸ்தமேதா|

(சாந். ௩. ௧௧. ௧)

"அங்கிருந்து அவன் மேலே எழுந்தபோது அவன் *உதயாஸ்தமனம்

---

*விதாதித்யோ ஹ்ருதாகாரோ வ்யாபித்வாத் நிரஞ்ஜநஃ|
நாஸ்தமேதி நசோதேதி க்வாபி ஸம்வித் ஸ்வபாவதஃ|
உதேதி வி நா ஸம்வித் ஜடமேவேதி வித்யதாம்|
........வதோ தஸ்ய வா ஸம்வித் ஸந்நிவிஷ்டதே||

(ஞானசித்தி)

அகலமாமாகாயத்தினமர்ந்ததோர்ஞானதீத்தன்
விகலமாயுதியானத்தமேவிடான்சந்திதன்னை
விகலறவியற்றுமாறதெங்ஙனமென்றென்றெண்ணி
மூவில்சொரிந்தமின்றிமுடித்துநீசந்தியெல்லாம்.

(சுவாமிநாததேசிகர் தசகாரியம்)

சரிவுள்ளமாம்விதம்பிடைக்காசுறவினக்கும்
பாரிலர்ச்சடர்க்குதயமிதின்மையாற்பகலு
மிரவுநேர்படக்கண்டிவ்வியன்றுசெய்வித்த
விரதமாதிகோள்பிழுக்கமைதவின்மையாற்பவரால்.

(திருவிளையாடற்புராணம், வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம், ௩௪)

அமையதில்லை'' என்றற்றொடக்கத்த சுருதியினுல் நாமரூபகிருத்தியம் ஒழிந்தொழிக்கும் ஞாயிற்றுக்கு அந்தரியாமியாம் காரண ரூபமாகவும் பிரமம் உபாசிக்கற்பாலதென உபதேசிக்கப்படுகின்றது. (காரியம் காரணம் என்னும்) இருபிரகாரமாகப் பிரமத்தை உபாசித்தமையிலே, அதன் பலம் (முறையே) கற்பாந்தத்தில் வசுவாதியாதலும், பிரமத்தை அடைதலுமாம்.

ஸ ய ஏதமேவமம்ருதம் வேத வஸூநாமேவைகோ பூத்வா
அக்நிநைவ முகேநைததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யதி |

(சாந். ௩. ௬. ௩)

"(ஆண்டு) இந்த அமிர்தத்தை இங்ஙனம் அறிபவன் வசுக்களுள் ஒருவனுகி, அக்கினிவாயிலாக அமிர்தத்தைப் பார்த்து மகிழ்வடைகின்றனன்'' என்றற்றொடக்கத்த சுருதிவாக்கியம் வசுமுதலாயினோர் ரூபத்தை அடைதலாம் பயனைக் கூறுகின்றது.

ந ஹ வா அஸ்மா உதேதி ந நிம்லோசதி ஸக்ருத்திவா ஹாஸ்மை
பவதி ய ஏதாமேவம் ப்ரஹ்மோபநிஷதம் வேத |

(சாந். ௩. ௧௧. ௩)

*"பிரமஞானத்தை அறிபவனுக்குச் சூரியன் உதிப்பதும் இல்லை, அஸ்தமிப்பதும் இல்லை, எதனுலெனின் ஒரேமுறையில் யாவுந் தினமாகின்றது'' என்னுஞ் சுருதியானது பிரமத்தை அடைதலாம் பயனை உபதேசிக்கின்றது. ஆகலின், தேவர்களுக்கு மதுவித்தை முதலியவைகளினும் அதிகாரம் உளதாகின்றது. எப்பிரகாரத்தானுந் தேவர்கள் பிரமோபாசனைக்கு அதிகாரிகள் என்பது. (௩௨)

(அ) அபசூத்திராதிகரணம்.

(க. ௩. உ௪) என்னுஞ் சூத்திரத்தினுல் மனிதர்க்குப் பொதுவுற அதிகாரம் நேர்வதாக, அதில் விசேஷம் கூறுகின்றனர்.

ஶுகஸ்ய ததநாதரஶ்ரவணாத் ததாத்ரவணாத் ஸூச்யதே ஹி |

(க. ௩. ௩௩)

---

* நக்தம் ச பூஜயேத் தேவம் ராத்ரௌ நைவ ச நைவ ச |
(ஸகலம் ச பூஜயேத் தேவம் திவாராத்ரௌ ச ஸர்வதா)

"சிவபெருமானைப் பகலிற் பூசை செய்யற்க; இரவினும் அங்ஙனஞ் செய்யற்க; பகல் இரவொழித்துச் சிவபெருமானை எக்காலமும் பூசிக்க'' என்னுஞ் சிவாகமச் சுலோகப் பொருள் சகலாவஸ்தை கேவலாவஸ்தை என்னும் பகலிரவொழிந்த சுத்தாவஸ்தையிலே நின்று சிவபிரானை எக்காலமும் வழிபடற்பாலர் என்பதாம். இதுபற்றியே "இராப்பகலற்றவிடத்தே யிருக்கையெளிதல்லவே'' என்றார் மேலோரும்.

(கூஅ) தன்னைப்பற்றிய இகழ்மொழியைக் கேட்டமை யானும் அதுபற்றி (ஆசாரியரிடத்துக்கு) ஓடினமையானும் அவன்து துக்கம் சூசிப்பிக்கப்பட்டமையின்.

ஆஜஹாரேமா ஶூத்³ர அநேநைவ முகே²நாலாபயிஷ்யதா²

(சாங். ச. உ. ரு)

"சூத்திர! நீ இவற்றைக் கொணர்ந்தனை; அந்த வாயினாலேமாத்திரம் நீ என்னைப் பேசப் பண்ணினை" என்னுஞ் சாங்தோக்கிய சுருதியே விஷயம்.

ஈண்டு ஆசாரியர் சிடனைச் சூத்திரன் என்று விளிக்கின்றனர். ஆக லின், சூத்திரர் பிரமவித்தைக்கு அருகரா? அல்லரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவர்களுக்கும் அதிகாரம் உளது; ஆசையுண்மை யின். மூவருணத்தார்க்கே என்னும் நியமம் இன்று; மூவருணத்தரல்லராய் தேவர்கட்கும் அது உளதாகக் காண்டலின். தேவர்களுக்கு அது உபநய னம் வேதாத்தியயனமில்லாவிடத்தும், இயல்பாகவே வேதார்த்தம் விளங் குதலின் ஞானம் உளதாகின்றது. சூத்திரர்க்கு இது எங்ஙனங் கூடுமென ஆசங்கித்தல் ஆகாது, இவர்களுக்கும் புராணசிரவணமுதலியவற்றால் ஞானம் உளதாதலினாலும், நிஷாதஸ்தபதிநியாயத்தினால் மகாவாக்கியசிரவணத்துக் கும் அதிகாரவுண்மையினாலுமாம்; ஆகலின், இவர்கள் பிரமவித்தைக்கு அருகர் எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். சூத்திரர் பிரமவித்தைக்கு அதிகாரரல்லர்; அவர்களுக்கு அத்தியயனமில்லாவிடத்து அவ்வத்தியயனவுபாயத்தினால் எய் தும் உபாசிய மூர்த்தியினதும், அம் மூர்த்தி குண முதலியவற்றினுடை யவும் ஞானம் நிகழமாட்டாமையின். இதிகாசபுராணங்கள் வேதங்களை உபப்பிருங்கணஞ் செய்வதுபற்றி சாதனமாகின்றனவேயன்றித் தாமே சுவ தந்திரமாய் இருப்பனவன்று. சூத்திரர் இதிகாசபுராணங்களைக் கேட்க ஆஞ் ஞாபித்தல் அவர்கள் பாவத்தை க்ஷயஞ் செய்யும் பிரயோஜனநோக்கியே யாம். *விதுரரும் †தர்மவியாதாதியரும் ஜந்மாந்தரத்தில் ஆர்ச்சித்த ஞானம் அழியாதிருந்தமையின், (அவர்கள்) பிரமநிஷ்டராயினர். பிரமஞானம் உப தேசிக்குமிடத்து ஆசாரியர் சிடனை எங்ஙனஞ் சூத்திரர் என விளிக்கப்போந்த னர் என வினவின், சூத்திரவருணத்தைச் சார்ந்தவர் எனக்கொண்டு அவ ரைச் சூத்திரர் என்று விளித்திலர்; பின் பிரமஞானம் அடையவில்லை என்று

---

* விதுரர் அறிவிற் சிறந்தவர் என்றுணர்த்துமாறு மகாபாரதம் ஸ்திரீபர்வத்து கஙு-ஆம் அத்தியாயத்து சக-ஆம் சுலோகத்தில் அவரை புத்திமதி என்று கூறுகின் றது. இவர் மஹாப்பிராஞ்ஞர் என்பதை மகாபாரதத்தில் அங்கங்கே கண்டுகொள்க.

† தர்மவியாதர் என்னும் ஓர் வேடர் மகாப்பிராஞ்ஞர் என்று வனபர்வத்து உ0௬- ஆம் அத்தியாயத்து ௯கூ-ஆம் சுலோகங் கூறுகின்றது. இவர் சரித்திரம் அப்பர் வத்து உ0௬-ஆம் அத்தியாயமுதற் பத்து அத்தியாயங்களான் அறியப்படுகின்றது.

அவனுக்கு (ஜாநசுருதி என்பானுக்கு) துக்கம் பிறந்ததாகக் காணப்படுமன். அவனுக்குத் துக்கம் பிறந்தமைக்குக் காரணம் பிரமவித்தையைப் பெறுமையினாலே தன்னையுற்று அன்னம் கூறிய இகழ்மொழியைக் கேட்டமையானும், அது காரணமாக அவன் ஆசாரியரிடத்துக்கு ஓடினமையானுமாம். சூத்திரத்தில் ஹி என்றது ஏதுப்பொருளின் மேற்று. எதனால் சூத்திர! என விளித்தமை அச்சாதிபற்றியன்றன்றோ, அதனாற் சூத்திரற்குப் பிரமோபாசனை இல்லை என்றாயிற்று. (௩௩)

முன்னர்ப் போதரும் நியாயத்தினாலும் சீடனைச் சூத்திர! எனக் கூறினமை சூத்திரவருணத்தை நோக்கியன்றென்று கூறுகின்றனர்

க்ஷத்ரியத்வாவகதேஶ்ச (க. ௩. ௩௪)

(௩௪) அவன் க்ஷத்திரியன் என அறியப்படுதலானும்.

சீடனாகிய ஜாநசுருதி க்ஷத்திரியனாக அறியப்படலானும், அவன் சாதி சம்பந்தமாகச் சூத்திர! என்று விளிக்கப்பட்டானல்லன்.

ஜாநஶ்ருதிர்ஹ பௌத்ராயண꞉ ஶ்ரத்தாதேயோ பஹுதாயீ பஹுபாக்ய ஆஸ ஸ ஹ ஸர்வத ஆவஸதாந்மாபயாஞ்சக்ரே ஸர்வத ஏவ மேऽந்நமத்ஸ்யந்தீதி (சாந். ச. க. க)

"(பிராமணர்களுக்கு) அன்பினோடு கொடுப்பவனும், (சனங்களுக்கு) அதிக திரவியங் கொடுப்பவனும், தினந்தோறுந் தனது கிரகத்தில்) யாகம் அதிகம் நடைபெறச் செய்வோனுமாகிய ஜாநசுருதி பௌத்திராயணன் என்பான் ஒருவன் இருந்தனன்; அவன் தனது அன்னத்தை ஜனங்களெல்லாம் ஒவ்வோரிடத்தும் உண்ணவேண்டும் என விரும்பி, யாண்டும் இடங்கள் அமைத்தனன்" என்னுஞ் சாந்தோக்கியசுருதியினால் ஜாநசுருதி என்பான் தனிபதி எனவும், பாகஞ் செய்த அன்னத்தை மிகுதியாகக் கொடுப்பவனும் எனவும் உபாக்கியான உபக்கிரமத்திற் கூறப்படுகின்றான்.

ஸ ஹ ஸஞ்ஜிஹான ஏவ க்ஷத்தாரமுவாச (சாந். ச. க. ரு)

"உதயகாலத்தில் எழுந்தவுடன் தனது சாரதிக்குக் கூறினன்" என்னுஞ் சுருதியினால் அவன் தனது சாரதிக்குச் சொல்லி அனுப்பினனாக (உபாக்கியான) மத்தியிற் கூறப்படுகின்றனன்.

இமே ஜாயா அயம் க்ராமோ யஸ்மிந்நாஸ்ஸே (சாந். ச. ௨. ச)

"இந்த மனைவி; நீர் வசிக்கும் இந்தக் கிராமம்" எனவும்,

தேஹ தேஹ மஹாவ்ருஷா நாம ரைக்வபர்ணா யத்ராஸ்மா உவாச (சாந். ச. ௨. ரு)

"(தனக்குக் கீழ்) இரைக்குவர் இருந்த மகாவிருஷருடைய தேசத்தின் இரைக்குவபர்ணக் (கிராமங்கள்) இவைகள்" என்னுஞ் சுருதியினல், அந்தக் கிராமங்கள் (இரைக்குவர்க்கு அவன்) கொடுத்தாளுக (உபாக்கியானை) முடிவிற் கூறப்படுகின்றனன். இவ்வியல்பினவாய இலிங்கங்களினல் ஜானசுருதி க்ஷத்திரியனுக அறியப்படுகின்றுன். (௩௪)

உத்தரத்ர சைத்ரரதேந லிங்காத் (க. ௩. ௩௫)

(௩௦௦) பின்னர் அடுத்துச் சைத்திரரதரோடு இலிங்க முண்மையின்.

இந்தச் சம்வர்க்கவித்தைக்கு அடுத்து,

அத ஹ சௌநகஞ் ச காபேயமபிப்ரதாரிணஞ் ச காக்ஷஸேநிம் பரிவிஷ்யமாணௌ ப்ரஹ்மசாரீ பிபிக்ஷே (சாங். ச. ௩. ௫)

"சௌனக காபேயரும், அபிப்பிரதாரிகாக்ஷசேநியும் போசனஞ் செய்யும் போது, பிரமசாரி ஒருவன் அவர்களை யாசித்தான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, பிராமணர் க்ஷத்திரியர்களின் தொடர்பு சம்வர்க்கவித்தையிற் காணப்படுகின்றது. ஈண்டு அபிப்பிரதாரி என்பார் சித்திரரத வம்சத்திற் றேன்றிய க்ஷத்திரியராகத் தோற்றுகின்றனர்; காபேயர் என்னும் யஞ்ஞகுருவோடு சேர்ந்திருத்தலின்.

ஏதேந வை சைத்ரரதம் காபேயா அயாஜயந் தமேகாகிநமந்நாத்யஸ்யாத்யக்ஷமகுர்வந் (தாண்டியப்பிராம்மணம். உ௦. ௧௨. ௫)

"இதனற் காபேயர் யஞ்ஞஞ் செய்யுமாறு சைத்திரரதரை ஏவினர்; அவர் ஒருவரையே அன்னத்துக்கு அத்தியக்ஷராக ஆக்கினர்" என்னும் வாக்கியத்தினல், காபேய யஞ்ஞகுருவோடு சைத்திரரதர் சேர்ந்திருந்தனராகச் சுருதி கூறுகின்றது. இதனல் அபிப்பிரதாரி பெயர்வேற்றுமைபற்றிச் சைத்திரரதரல்லரெனினும் அந்த (க்ஷத்திரிய) வம்சத்துக்கு உரியர் என்பது பெறப்படுகின்றது. ஒத்தவம்சத்துள்ளவர்களே மற்றோர் ஒத்த வம்சத்தார்க்கு விசேடமாக யாகஞ் செய்விப்பவராகின்றனர். சைத்திர வம்சத்தராதலின் அவர் க்ஷத்திரியராதல் வேண்டும் என்பது

தஸ்மாச்சைத்ரரதிநாமைக: க்ஷத்ரபதிர்ஜாயதே

(தாண்டியப்பிரா்ம்மணம்)

"அவரிடத்திருந்து க்ஷத்திரியப்பிரபுவாகிய சைத்திரரதர் என்னும் ஒருவர் பிறக்கின்றுர்" என்னும் வாக்கியசேஷத்தினும் சித்திக்கின்றது. இவ்வனமே அடுத்துக் காபேயவம்சத்துப் பிராமணரோடு சம்பந்தமுற்றவராகக் கூறப்பட்ட அபிப்பிரதாரி என்பவர் க்ஷத்திரியர் என நிச்சயிக்கப்படுகின்றனர். இவ்வனம் பிராமணரைக்குவரோடு சம்பந்தமுற்ற ஜானசுருதிஎன்பவ

வரும் க்ஷத்திரியர் என அறியப்படுகின்றனர். ஆகலின், க்ஷத்திரியரே சூத்திரென விளிக்கப்பட்டனர் என்பது. (ஙரு)

நிஷாதஸ்தபதி நியாயத்தினாற் சூத்திரற்கு மகாவாக்கிய சிரவணமாத்திரத்தில் அதிகாரம் உளதாகக் கூறப்பட்டமைபற்றி, சூத்திரகாரர் கூறுகின்றார்.

ஸம்ஸ்காரபராமர்ஶாத்தத³பா⁴வாபி⁴லாபாச்ச (க. ங. ஙசு)

(கOக) சம்ஸ்காரபராமரிசவுண்மையானும், அதின் இன்மை கூறப்படலானும்.

உப த்வா நேஷ்யே தம் ஹோபநிந்யே (சாந். ச. ச. ரு)

"நான் உனக்கு உபநயனஞ் செய்வேன் (என்று கூறி), அவர் அவனுக்கு உபநயனஞ் செய்தார்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் பிரமவித்தையின் தொடக்கத்தில் உபநயனசம்ஸ்காரங் கூறப்படலான்,

ந ஶூத்³ரே பாதகம் கிஞ்சிந்ந ச ஸம்ஸ்காரமர்ஹதி ||

(மனு. கO. கஉசு)

ஶூத்³ரஶ்சதுர்தோ² வர்ண ஏகஜாதி꞉ (கௌதம. கO. ருO)

"சூத்திரனிடத்திற் பாதகம் இல்லை, அவன் உபநயனத்துக்கு அருகன் அல்லன்; நான்காம் வருணத்தானாகிய சூத்திரன் ஒரே பிறப்புடையன்" எனவுங் கூறி, ஸ்மிருதிகளினாற் சூத்திரற்கு உபநயனசம்ஸ்காரம் இல்லை எனக் கேட்கப்படலான், அவற்குப் பிரமவித்தையில் அதிகாரம் இல்லை.

நிஷாத³ஸ்த²பதிம் யாஜயேத்|

(பூருவமீமாஞ்சை. சு. க. ருக-ஆம் சூத்திரபாஷியத்தில்)

"நிஷாதஸ்தபதியை யஞ்ஞஞ் செய்யப்பண்ணு" என்னும் விதியில் விரோதம் இல்லை. உபநயனம் இல்லாவிடத்துஞ் சூத்திரற்குச் சிரவணஞ் செய்யயாண்டும் விதி இல்லை. (ஙசு)

தத³பா⁴வநிர்தா⁴ரணே ச ப்ரவ்ருத்தே꞉ (க. ங. ஙஎ)

(கOஉ) அதன் (சூத்திரத்துவ) அபாவத்தை நிச்சயஞ் செய்வதில் (ஆசாரியர்க்குப்) பிரவிருத்தியுண்மையானும்.

நைதத³ப்³ராஹ்மணோ விவக்துமர்ஹதி ஸமித⁴ம் ஸோம்யாஹரோப த்வா நேஷ்யே ந ஸத்யாத³கா³꞉ (சாந். ச. ச. ரு)

"அப்பிராமணன் இங்ஙனங் கூறற்கு அருகனல்லன்; சௌமிய! சமித்தைக் கொணர்ந்துவா; நான் உனக்கு உபநயனஞ் செய்கின்றேன், நீ சத்தியத்தினின்று வழுவினாயில்லை" என்னுஞ் சத்திய வசனத்தினால் ஜாபாலர் சூத்

திரரல்லர் என நிச்சயித்தபின்னரே (ஆசாரியர்) அவருக்கு உபநயன சம்ஸ்காரஞ் செய்தற்கும், பிரமவித்தை உபதேசித்தற்கும் போந்தமையின், சூத்திரற்கு அதிகாரம் இல்லை. (௩௭)

(ஆக்ஷேபம்) உபநயனசம்ஸ்காரமில்லாவிடத்து வேதோச்சாரணங் கூடாதென நிஷேதித்தல் ஒரோவிடத்திலா? (இன்றேல்) யாண்டுமோ?

(பூருவபக்ஷம்) யாண்டும் இன்று;

நஹ்யஸ்மிந்வித்யதே கர்ம கிஞ்சிதாமௌஞ்ஜிபந்தநாத்।

(கௌதம தருமசூத்திரம். உ. ௫)

"பிதிர்கன்மஞ் செய்யுமிடத்தன்றி வேதத்தை அவன் உச்சரிக்கக்கூடாது" என்னும் வாக்கியத்தினால், உபநயனசம்ஸ்காரமில்லாவிடத்தும் (விப்பிர) பாலனானவன் பிதிர்கன்மஞ் செய்யுமிடத்து வேதத்தைப் படிக்கலாம் என விதியுண்மையின். இதனால் வேதம் படிக்கக்கூடாதெனல் ஒரோவிடத்திலாம். ஆகலின், உபநயனமில்லாச் சூத்திரன் பாகயஞ்ஞஞ் செய்யும்போது வேதம் படிக்கக்கூடாதென்று நிஷேதிக்கப்படுகின்றனனன்றி, பிரமவித்தை படிக்கும்பொழுதன்றென ஆசங்கிப்ப,

(சமாதானம்) சூத்திரகாரர் சொல்வாராயினர்.

ஶ்ரவணாத்யயநார்த்தப்ரதிஷேதாத் (க. ௩. ௩௮)

(௩௦௩) வேதத்தைச் சிரவணஞ் செய்தல், அத்தியயனஞ் செய்தல், (அதன்) பொருள் அறிதல் நிஷேதிக்கப்படலான்.

தஸ்மாச்சூத்ரஸமீபே நாத்யேதவ்யம்।

"ஆகலின் சூத்திரற்குச் சமீபத்தில் அத்தியயனஞ் செய்யவொண்ணாது" என்னும் வாக்கியத்தினாற் சூத்திரற்கு வேதாத்தியயனசிரவணமுதலியன நிஷேதிக்கப்படுகின்றன. வேதத்தைக் கேளாதவனுக்கு வேதாத்தியயன முதலியன எங்கிருந்துளவாம்!

ஸ்ம்ருதேஶ்ச (க. ௩. ௩௯)

(௩௦௪) ஸ்மிருதியுண்மையானும்.

அத ஹாஸ்ய வேதமுபஶ்ருண்வதஸ்த்ரபுஜதுப்யாம் ஶ்ரோத்ரப்ரதிபூரண முதாஹரணே ஜிஹ்வாச்சேதோ தாரணே ஶரீரபேதஃ।

(கௌதம, ௧௨. ௪. ௬)

"பின்னர் வேதத்தைக் கேட்குங்கால், காதுகளை உருக்கிய ஈயத்தினாலும் மெழுகினாலும் நிறைக்க; வேதங்களை உச்சரிக்குங்கால் நாவை இரண்டாகச் சேதித்தல்வேண்டும்; மனசிற்றரித்து வைத்திருந்தால், சரீரந்

பேதிக்கப்படல் வேண்டும்” என்னும் ஸ்மிருதியானது வேதத்தைச் சிரவணஞ் செய்யுஞ் சூத்திரற்குத் தண்டம் விதிக்கின்றது. சுருதி ஸ்மிருதிகளினும் சூத்திர சமீபத்தில் அத்தியயனமுதலியன செய்வது நிஷேதிக்கப்படுகின்றமையின் அவற்கு வேதார்த்தவிசாரம் எங்கிருந்தாகும்! ஆகலின், எப்பிரகாரத்தினும் பிராமணனுக்கு எட்டாம் வயசிற் செய்யப்படும் உபநயன சம்ஸ்காரமின்றி வேதாத்தியயனம் எவ்விடத்தும் எவனுக்கும் எய்தாதென்பது சித்தமாயிற்று. ஆகலின், சூத்திரர் பிரமவித்தைக்கு *அருகரல்லர். (௩௮)

---

*ஸம்ஸ்க்ருதை: ப்ராக்ருதைர்வாக்யைர்ய: ஶிஷ்யமநுரூபத:। தேஶபாஷாத்யுபாயைஶ்ச போதயேத் ஸ குரு: ஸ்ம்ருத:॥

(வடமொழிச் சுருதியல்லாத) சமஸ்கிருத வாக்கியங்களாலும், பிராகிருத வாக்கியங்களாலும், (அவ்வத்)தேசபாஷை முதலிய வாயிலாகவும் எவர் இயைபாகச் சீடனுக்குப் போதிக்கின்றாரோ, அவர் குரு எனப்படுவர்” என்று சிவதருமோத்தரத்தினும்,

ஶூத்ராணாம் விரக்தாநாம் யதா ஸ்த்ரீணாம் ததைவ ச।
ஸித்தாந்தஶ்ரவணம் ப்ரோக்தம் புராணஶ்ரவணம் ததா॥
ஸர்வேஷாம் ஶிவஸம்ஸ்காரம் ஜ்ஞாநாப்யாஸோ விதீயதே।

“விரக்தர்களாகிய சூத்திரர்களுக்கும் (விப்பிர) ஸ்திரீகளுக்கும் உபகாரமாம் பொருட்டு அறிஞராற் சித்தாந்த சிரவணம் புராணசிரவணம் கூறப்பட்டுள்ளன; எல்லோர்க்கும் ஞானப்பியாசம் விதிக்கப்படுகின்றது” என்று சூதசங்கிதையிற் கூறப்பட்டதாக ஞானாவரணவிளக்கத்தினும் உரைக்கப்பட்டிருத்தலானும், ஞானப்பியாசத்தின் பொருட்டுச் சிவாகமங்கள் (சமய விசேஷ நிருவாண தீக்ஷைபெற்ற) நான்கு வருணத்தார்க்கும்” பயன்படுமாறுள்ளன என்று உ. உ. ௩அ-ஆம் சூத்திர பாடியத்தினுற்பெறப்படலானும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவ சமயஸ்தாபனாசாரியர்கள் முதலாயினோர் வேதப்பொருள்களையெல்லாம் தமிழிலே தேவார திருவாசகமுதலிய அருட்பாக்களாகப் பிராமணர் முதலிய நான்குவருணத்தார்க்கும் உபயோகமாமாறு அருளிச்செய்தமையானும்,

ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம்। தர்மாந்ந ப்ரமதிதவ்யம்। குஶலாந்ந ப்ரமதிதவ்யம்। பூத்யை ந ப்ரமதிதவ்யம்। ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் (தைத். க. கக. க)

என்று தைத்திரீயம் கூற,

ஸத்யாதீம்ஶ்ச குஶலாதீந் ஸம்ப்ரோச்ய நாதிகம்।
ஶ்ரவணாத்யாயாநாதிகம் ஸ்வாத்யாயாத்யயநாதிகம்।

என்று சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் கக-ஆம் அத்தியாயத்து ௩௦-ஆம் சுலோகமும், வேதாசுவதரத்து ஆறு அத்தியாயங்களினும் உள்ள மந்திரங்கள் பெரும்பாலனவற்றை வாயுசங்கிதை பூருவபாகத்து நான்காம் அத்தியாயமும் வேதசுருதிவாக்கியங்களையெடுத்து உதகரித்தவிடத்தும், அவை புராணமாதல்பற்றிப் பாஷ்யகாரர் க. ௩. ௩௮-ஆம் சூத்திரபாடியத்தில் இதிகாசபுராணங்களைச் சூத்திரர் கேட்குமாறு அநுஞ்ஞாபித்தமை அவர்கள் பாவத்தை க்ஷயஞ்செய்யும்பயன் பொருட்டாம் என்று கூறுகின்றமையானும், சூத்திரர் சிவோபாசனைக்கு உரியரென்றும் என்று பெறப்படுதலானும், பிரமவித்தைக்குச் சூத்திரர் அதிகாரிகளல்லர் என்று (இவ்வதிகரணத்தில்) கூறினமை சூத்திரர் உபநயன சம்ஸ்காரமில்லாமையான் வேத

(௬) கம்பநாதிகரணம்.

இங்ஙனம் கூறிய பிரமவித்தைக்குரிய அதிகாரி யாவன் என்றிருந்து, பிரகிருத (ஆறும் அதிகரண) விஷயத்தை அநுசரித்துக் கூறுவாராயினர்.

கம்பநாத் (க. ௩. ௪0)

(௧0௫) *நடுக்கமுறலான்.

யதிதம் கிஞ்ச ஜகத்ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம்। மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி (கட. ௬. ௨)

"(பிரமத்தினின்று) பிறந்த இவ்வுலகமெல்லாம் பிராணனில் நடுங்குகின்றது, உயர்த்திய இடியாமெனப் பெரும்பயம் அடைகின்றது; இதனை அறிகின்றவர் அமிர்தர் (சிவன்) ஆகின்றனர்" எனக் கடவல்லியில் அங்குஷ்டப் பிரமாணபுருஷர் கூறப்படும் பிரகரணத்திற் காணப்படும் சுருதியே விஷயம்.

ஆண்டு நடுக்கமுறுதற்குக் காரணம் சிவபெருமானா? பிறிதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஈண்டுப் பிராணன் என்னும் மொழியினாற் குறிப்பிக்கப்பட்ட பயத்தினாற் சமஸ்தலோகபயமும் கூறப்படுகின்றது. சகல உலகத்துக்கும் அபயப்பிரதானஞ் செய்வதால் மதுர சுவபாவமுடையரும், பரமகாருணிகருமாகிய சிவபெருமானை உலகநடுக்கத்துக்குக் காரணமாகக் கூறல் அயுக்தம். ஆகலின், (ஈண்டு) இடிசப்தம் நேர்தலின், பயத்துக்குக் காரணம் இடியேயாம்; இன்றேற் பிராணவாயு நடுக்கத்துக்குக் காரணம்; பிராணன் என்னுஞ் சப்தம் நேர்தலான். தேகம் சரித்தற்குப் பிராணவாயு காரணமாதலின், பிராணனைக்கொண்டே சரீரவடிவினதாகிய இவ்வுலகம் அனைத்துஞ் சலிக்கின்றது;

யதிதம் கிஞ்ச ஜகத்ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம்।
(கட. ௬. ௨)

"(பிரமத்தினின்று) தோன்றியபோதே, இவ்வுலகத்துள்ள எதுவும் பிராண

வேதத்தை அத்தியயனஞ்செய்து பொருளறிந்து பிரமவித்தையிற்றலைப்படல் கூடாமைபற்றியாமாதலினாலும், இச்சைவபாடியம் பிராமணர்முதலிய அனைவர்க்கும் உபயோகமாம்பொருட்டுப் பாஷாந்தரமாகிய தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டதாமென் றுணர்க.

*ஆட்டுவித்தாலாரொருவராடாதாரேயடக்குவித்தாலாரொருவரடங்காதாரே
யோட்டுவித்தாலாரொருவரோடாதாரேயுருகுவித்தாலாரொருவருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரேபணிவித்தாலாரொருவர்பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரேகாண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே
(பொது; ௯௫; ௩)

னில் பயப்படுகின்றது" என்னுஞ் சுருதிப்பொருள் பொருத்தமுறுதலின்; மின்னலும், மேகமும், மழையும் போலப் பெரும் பயத்துக்குக் காரணமாகிய இடியும் வாயுவின்றொழிற்பாட்டினால் உண்டாகின்றதென

மஹத்³ப⁴யம் வஜ்ரமுத்³யதம் (கட. சு. உ)

"உயர்த்தப்பட்ட இடியே பெரும் பயத்துக்குக் காரணம்" என்னுஞ் சுருதி யின்பொருட் பொருத்தமுறுதலின்.

வாயுரேவ வ்யஷ்டி: வாயு: ஸமஷ்டிரப ஜயதி புனர்ம்ருத்யும் ய ஏவம் வேத³ (பிரு. இ. கூ. உ)

"வாயுவே வியஷ்டி, வாயுவே சமஷ்டி, இதனை அறிபவன் மிருத்தியுவை ஜயிப்பன்" என்னுஞ் சுருதியுண்மையின், வாயுவை அறிதலான் அமிர்தத்துவம் அடைதலும் பொருத்தமுறுகின்றதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே நடுக்கத்துக்கு ஏதுவாகின்றனர். சிவபெருமான் ஆளுபவராதலின், அவர் உலகம் அனைத்தும் நடுக்கமுறுதற்குக் காரணமாகின்றனர். அவர் ஆளும் பயத்தினால் நாமெல்லாம் நிஷித்தகன்மங்களில் விமுகராய், விகிதகன்மங்களிற் பிரவர்த்திக்கின்றோம். இவரது சாசனபயத்தினால் வாயுமுதலியவும் தத்தம் அதிகாரங்களிற் பிரவர்த்திக்கின்றன. இவ்வுண்மையை,

பீ⁴ஷாஸ்மாத்³வாத: பவதே (தைத். உ. அ. க)

"இவர்க்குப் பயந்தே வாயு வீசுகின்றது" என்னுஞ் சுருதி கூறுகின்றது. சிவபெருமான் கல்யாணமூர்த்தியாயினும் ஆளும் இயற்கையினால் அஞ்சத்தக்கவராகின்றனர்.

தஸ்மாத்³ராஜ்ஞோ முக²ம் பீ⁴ஷ்மம் ப⁴வதி ।
(தைத். பிரா. கூ. அ. உகூ. அக)

"ஆகலின் அரசருடைய முகமானது அஞ்சத்தக்க இயல்பினது" எனச் சுருதி கூறுகின்றது.

ஆகலின், சுவாமியாதலின் சமஸ்த உலகபயத்துக்கும் காரணர் சிவபெருமானே. (௪0)

(௧0) ஜ்யோதிரதிகரணம்.

தகராதியில் உபாசிக்கற்பாலராகக் கூறப்பட்ட சிவபெருமான் (முத்தர்களால்) எய்தற்பாலர் என்றுரைப்பதற்கு மற்றோர் அதிகரணம் ஆரம்பிப்பதாயிற்று.

ஜ்யோதிருபஸம்பத்தே:, (க. கூ. ௪க)

(௧௦) *சோதி சிவபெருமான்; (அங்ஙனங்) காணப் படுதலின்.

ஏஷ ஸம்ப்ரஸாதோ ஽ஸ்மாச்சரீராத்ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி ருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே ஸ உத்தம: பூருஷ: (சாங். அ. ௩. ௪)

"(இந்த ஆன்மா எனப்படும்) சம்பிரசாதன் இச்சரீரத்தினின்றெழுந்து, பரஞ்சோதிரூபத்தை அடைந்து தன் சொரூபத்தோடு ஆவிர்ப்பாவமாகின்றனன், அவன் உத்தமபுருஷன்" எனச் சாந்தோக்கியத்துள்ள பிரஜாபதி வித்தையிற் போந்த சுருதியே விஷயம்.

ஈண்டு முத்தரால் அடையற்பாலதாகக் கேட்கப்படும் பரஞ்சோதி சிவபெருமானா? மூர்த்தியான்மாவாகிய நாராயணரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உத்தமபுருஷர் என்றது முத்தர்களால் அடையற்பாலதாம் பரஞ்சோதி புருஷோத்தமர் என அறியப்படலானும், புருஷோத்தமசப்தம் ரூடத்தினால் நாராயணரென அறியப்படலானும், அவரே உத்தமபுருஷசப்தத்தினாற் சமானாதிகரண பரஞ்சோதியராம் எனின்,

(சித்தாந்தம்) முத்தர்களால் அடையப்படும் பரஞ்சோதி ஈண்டுச் சிவபெருமான் எனப் பெயர்கொண்ட பரப்பிரமம்; இவரை அடைந்தவர்க்குப் புநராவர்த்தியில்லையாகக் காணப்படலான், பரப்பிரமத்துக்கு வேறாக ஒருவரை அடைபவர்க்கு ஆவிருத்தியில்லை என்பது எங்ஙனம் உசிதமாகும்? புருஷோத்தமசப்தம் நாராயணர்க்கு ரூடியினாற் செல்வதேனும், அது புருஷர்களுக்கெல்லாம் (ஆன்மாக்களுக்கெல்லாம்) அதிகமாதலின் (மேலாதலின்)பிரமத்துக்கே செல்லும்; பிரமமேத சங்கற்பத்தில்

வேஷ்டிதம் பூருஷோத்தம:|

"புருஷோத்தமரை அடைய" என்பதிற் புருஷோத்தமசப்தம் அடையற்பாலதாகிய பரப்பிரமத்துக்குப் பரியாயமாகப் பிரயோகிக்கப்படுதலின். ஆகலின், பரப்பிரமமே பரஞ்சோதி. (௪௧)

(௧௧) அர்த்தாந்தரத்துவாதிவியபதேசாதிகரணம்.

ஆகாஶோ ஽ர்தாந்தரத்வாதிவ்யபதேஶாத் (௧. ௩. ௪௨)

---

*பண்டாலின் மூலானைப்பரஞ்சோதியை
விண்டார்கடம்புரமூன் றடையனேயைக்
கண்டானைக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டானைக்கூடுமிவ ளென்குளிரவே.
(திருக்கோழம்பம், ஞான, ௧)

(௪௦எ) *ஆகாயம் (சிவபெருமான்), (அவர்) பிறவஸ்து முதலியவற்றுக்கு வேருகக் கூறப்படலான்.

ஆகாஶோ ஹ வை நாம நாமரூபயோர்நிர்வஹிதா, தே யதந்தரா தத்ப்ரஹ்ம ததம்ருதம் ஸ ஆத்மா (சாங். அ. கச. க)

"ஆகாயம் எனப்பட்டவர் நாமரூபம் படைப்பவர், இவையனைத்தும் அடங்கியிருக்கப்பெறுவது பிரமம், அது அமிர்தம் (சிவம்), அது (பரம) ஆன்மா" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியே ஈண்டு ஆராயக்கிடந்த விஷயம்.

நாமரூபத்தைப் படைப்பதாகக் கேட்கப்பட்ட ஆகாசம் சிவபெருமானே? (பூத) ஆகாயமா? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சர்வபூதங்களுக்கும் வான் இடங்கொடுத்தலின் நாமரூபத்தைப் படைத்தல் வானத்துக்கு நேர்தலின், பூதாகாயமே ஈண்டு ஆகாசம். இன்றேல் ஆன்மா;

அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி।
(சாங். சு. ௩. உ)

"நான் இந்தச் சீவான்மாவோடு கூடப் பிரவேசித்து நாமரூபத்தை வெளிப்படச் செய்வேன்" என்னுஞ் சுருதியினால் அச்சீவான்மாவுக்கு நாமரூபம் வெளிப்படற்குரிய சம்பந்தம் காணப்படலான் என்று இங்ஙனம் கூறின்,

(சித்தாந்தம்) கூறுதும். சிவபெருமானே ஈண்டு ஆகாயசப்தத்தினால் நாமரூபத்துக்குக் கர்த்தாவாகக் கேட்கப்படுகின்றனர்; அமிர்தத்துவ முதலிய* அவர் குணங்கள் கூறப்படலான். ஆகாசத்துக்கேனும் ஆன்மாவுக்கேனும் அமிர்தத்துவாதி குணம் எய்தாது. ஆகலின், சிவபெருமானே ஆகாயசப்தப்பொருள். (சஉ)

(ஆக்ஷேபம்) தத்த்வமஸி (சாங். சு. அ. எ)

"அது நீயாகின்றனை" என்னும் வாக்கியத்தில் ஐக்கியம் கூறப்படுதலின், சிவபெருமான் பிரத்தியக்கான்மாவினின்று வேறல்லர் என ஆக்ஷேபிப்பின்

(சமாதானம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸுஷுப்த்யுத்க்ராந்த்யோர்பேதேந (க. ௩. சரு)

(௪௦அ) சுழுப்தியினும் உற்கிராந்தியினும் (அவர்) வேறெனக் (கூறப்படலான்).

ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம் (பிரு. சு. ௩. உக)

ப்ராஜ்ஞேநாத்மநாऽந்வாரூட உத்ஸர்ஜந்யாதி (பிரு. ௬. ௩. ௩௫)

"பிராஞ்ஞனுகிய (பரம) ஆன்மாவினுலே தழுவப்பட்டு ஆன்மா அகத்தும் புறத்துமுள்ள யாதும் அறியாது" எனவும், "பிராஞ்ஞனுகிய (பரம) ஆன்மாவினுல் இவரப்பெற்று ஆன்மா (தேகத்தை) விட்டுப் போகின்றது" எனவும் முறையே சுழுத்தியினும் உற்கிராந்தியினும் ஆன்மா பாகியாந்தர விஷய ஞானசூன்னியமாய் இருக்குங் காலத்திலேயே சிவபெருமான் அறிவு ரூபிரையாய் ஆன்மாவுக்கு வேருயிருக்கின்றனர் எனக் கூறப்படலான், சிவபெருமான் அவ்வான்மாவுக்கு வேருயுள்ளார். ஈண்டு அவர் ஆகாயசப்த வாச்சியர். (௪௩)

பத்யாதி ஶப்தேப்ய: (க. க. ௪௪)

(௧௦௧) பதிமுதலிய பதங்களுண்மையின்.

ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: ஸர்வஸ்யாதிபதி: ஸ ந ஸாது நா கர்மணா பூயாந்நோ ஏவாஸாது நா கநீயாநேஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால:।

(பிரு. ௬. ௪. ௨௨)

"அவர் எவற்றையும் வசீகரிப்பவர், அனைத்துக்கும் ஈசானர், அனைத்துக்கும் அதிபதி, அவர் நற்கன்மங்களால் உயர்வதும் இல்லை, தீக்கன்மங்களாலே தாழ்வதுமில்லை, இவர் சர்வேசுவரர், இவர் பூதாதிபர், இவர் பூதபாலர்" என்னும் சுருதியில் ஆன்மாவைத் தழுவியிருக்கும் பிராஞ்ஞருக்குக் கூறப்படும் பதிமுதலிய சப்தங்களினுல் இந்தச் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேருயுளர் என்பது பெறப்படுகின்றது.

பஶூநாம் பதயே வ்ருக்ஷாணாம் பதயே (யசுர். ௪. ரு. ௨)

"பசுக்களுக்குப் பதி, விருக்ஷங்களுக்குப் பதி" என்றற்ருெடக்கத்தவற்ருற் சிவபெருமான் உலகங்களுக்கு அதிபதியாயுள்ளார் என்பது யாண்டும் பிரசித்தம். ஆன்மா உலகத்துக்குப் பதியாக யாண்டும் கேட்கப்படவில்லை. ஆகலின், ஆன்மாவுக்கு அன்னியராயுள்ள இந்தச் சிவபெருமானே ஆகாய சப்த வாச்சியர். (௪௪)

முதலாம் அத்தியாயத்து
நான்காம் பாதம்.
(௧) ஆநுமாநிகாதிகரணம்.

மூந்திய பாதத்திலே ஸ்பஷ்டாபஷ்டபிரமலிங்க வாக்யங்கள் ஆராயப்பட்டன. இந்நான்காம் பாதத்திற் சில அஸ்பஷ்டலிங்க வாக்கியங்கள் விசாரிக்கப்படுவனவாயின.

ஆநுமாநிகமப்யேகேஷாமிதி சேந்ந ஶரீரரூபகவிந்யஸ்த க்ருஹீதேர்தர்ஶயதி ச (க. அ. க)

(கக0) சிலர்க்கு அநுமானமே கருத்தாகக் கொள்ளப்பட்டது எனக் கொளின், அன்று; சரீராகிருதியில் அடங்கியதற்கு அநுமானமுண்மையின். அங்ஙனம் சுருதியும் கூறுகின்றது.

இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்யஶ்ச பரம் மந:।
மநஸஸ்து பரா புத்திர்புத்தேராத்மா மஹாந் பர:
மஹத: பரமவ்யக்தமவ்யக்தாத்புருஷ: பர:।
புருஷாந்ந பரம் கிஞ்சித்ஸா காஷ்டா ஸா பரா கதி:॥

(கட. ௩. ௧0, ௧௧)

"இந்திரியங்களுக்கு மேல் (விஷயப்) பொருள்கள்; பொருள்களுக்கு மேல் மனசு; மனசுக்கு மேல் புத்தி; புத்திக்கு மேல் ஆன்மாவாகிய மகான் (மகத்து); மகத்துக்கு மேல் அவ்வியக்தம்; அவ்வியக்தத்துக்கு மேற் புருஷன்; புருஷனுக்கு மேல் யாதும் இல்லை: அது எல்லை; அது பரமாகிய கதி" எனக் கடசாகையிற் கூறப்பட்ட சுருதியே விஷயம்.

ஈண்டு மகத்துக்கு மேலே உளதாகக் கூறப்பட்ட அவ்வியக்தம் கபில முனிவர் கூறும் பிரதானமா? இன்றேற் சரீரமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது பிரதானம்; எங்ஙனம்? மகத்து, அவ்வியக்தம், புருஷன் என்பன சாங்கியதந்திரத்திலேதான் பிரசித்தமாகலின். இவைகள் ஈண்டுச் சுருதியிற் குறிக்கப்படுதலின், சரீரத்தையுற்றுக் கூறச் சிறிதும் அவகாசமின்று. ஆகலின், ஈண்டு உரைக்கப்பட்டது சாங்கிய பிரதானமே, சரீரமன்று எனின்,

(சித்தாந்தம்) சரீரம் என்வியக்தம் மேலே,

ஆத்மாநம் ரதிநம் வித்தி ஶரீரம் ரதமேவ து।
புத்திம் து ஸாரதிம் வித்தி மந: ப்ரக்ரஹமேவ ச ।

இந்த்ரியாணி ஹயாநாஹுர்விஷயாꣳஸ்தேஷு கோசராந்॥

(கட. ௩. ௩, ௪)

"ஆன்மாவை இரதத்துளனாகவும், சரீரத்தை இரதமாகவும், புத்தியைச் சாரதியாகவும், மனசைக் கடிவாளமாகவும் அறிதி; இந்திரியங்களைக் குதிரைகளாகவும், விஷயப்பொருள்களை அவை செல்லும் மார்க்கமாகவும் கூறுப" என (இந்திரியங்களை) வசீகரிக்கும் பொருட்டுச் சரீரத்தை இரதமாகவும் ஆன்மாவை இரதத்துளனாகவும் உருவகஞ் செய்யப்பட்ட உபாசனை உபாயங்களுள்ளே, (கவனிக்கப்படாது) எஞ்சியதாய் உருவகஞ் செய்யப்பட்ட சரீரமே அவ்வியக்தசப்தத்திற் கொள்ளக்கிடக்கின்றமையின். "இந்திரியங்களுக்கு மேலே உள்ளன விஷயார்த்தங்கள்" என்று தொடங்கி, "அது எல்லை; அது பரமாகிய கதி" என்பதிறுதியாக வசீகாரம் பண்ணும் பொருட்டன்றோ ஒன்றன்மேல் ஒன்றாக மேல் என்று சொல்லிப் போந்தன.

யச்சேத்வாங்மநஸீ ப்ராஜ்ஞஸ்தத்யச்சேஜ்ஜ்ஞாந ஆத்மநி।
ஜ்ஞாநமாத்மநி மஹதி நியச்சேத்தத்யச்சேச்சாந்த ஆத்மநி॥

(கட. ௩. ௧௩)

"அறிஞன் வாக்கையும் மனசையும் அடக்கல்வேண்டும்; அவற்றை அறிவாம் ஆன்மாவிலே ஒடுக்கவேண்டும்; அறிவாகிய ஆன்மாவை மகத்தாகிய ஆன்மாவிலே ஒடுக்கவேண்டும்; அவன் அந்த மகத்தைச் சாந்தமாகிய ஆன்மாவில் ஒடுக்கவேண்டும்" என்றற்றொடக்கத்தவற்றாற் சுருதியே பின்னரும் உணர்த்துகின்றது. ஆகலின், அவ்வியக்தம் என்றது ஈண்டுச் சரீரத்தைக் குறிக்கின்றது. (௧)

(ஆக்ஷேபம்) அவ்வியக்தத்தைப் பிரதானம் எனலே பிரசித்தம். இஃதெங்ஙனம் சரீரமாம்? என்று ஆசங்கிப்ப, சூத்திரகாரர் உத்தரம் இறுப்பாராயினர்.

ஸூக்ஷ்மம் து ததர்ஹத்வாத் (௧. ௪. ௨)

(௧௧௧) சூக்குமமாயுள்ளதே சரீரம்; அதற்குத் தகுதி உண்மையின்.

சூக்குமம் என்பது அவ்வியக்தம். அவ்வியக்தமே சரீராவஸ்தை கொண்டு காரியத்துக்குத் தகுதியாதல்பற்றி அது அவ்வியக்தத்திற் குறிக்கப்படுவதெனல் யுக்தம். (௨)

சூத்திரகாரர் மற்றோர் யுக்தி கூறுகின்றனர்.

தததீநத்வாதர்த்தவத் (௧. ௪. ௩)

(௧௧௨) அவர்க்கு ஆதீனமாகலின் (ஒவ்வொன்றும்) பயனுடைத்து.

ஆன்மா சரீரமுதலியன சிவபெருமான் வயத்தனவாகி உபாசனையை முற்றுவித்தலின் பொருட்டுப் பயனுடையனவாயின. சிவபெருமான் அந்தரியாமியாய் ஆன்மாவோடனைத்தையும் பிரேரித்து, உபாசனைக்குத் துணையாகி, வசீகரிக்கற்பாலனவாகிய பொருள்கட்கெல்லாம் முடிந்த எல்லையாகி (இறுதியாய்ப்) பெறற்பாலராகலின், "அவர் பரமாகிய கதி" எனப்படுகின்றனர். ஆகலின், அவ்வியக்தம் என்பது ஈண்டுச் சரீரமே. (௩)

ஜ்ஞேயத்வாவசநாச்ச (க. ச. ச)

(ககந) அறியற்பாலதாகக் கூறுமையானும்.

ஈண்டுச் சாங்கியர் பிரதானமே அவ்வியக்தமாயின், அது ஓர் ஞேயப் பொருளாகக் கூறப்பட்டிருக்கும். அங்ஙனம் ஒன்றும் (கூறப்பட) வில்லை. ஆகலின், அது கபிலர் அவ்வியக்தம் அன்று. (ச)

பிரதானம் ஓர் ஞேயப்பொருளாகக் கூறப்பட்டதென்னும் ஆசங்கையைச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

வததீதி சேந்ந ப்ராஜ்ஞோ ஹி ப்ரகரணாத் (க. ச. ரு)

(ககச) (அப்படிப்பட்டதொன்றைச் சுருதி) கூறுகின்றதெனின், அன்று; எதனாலெனின், (அது) அறிஞனன்றோ; பிரகரணத்தினால்.

(ஆக்ஷேபம்)

அசப்தமஸ்பர்சமரூபமவ்யயம் ததாऽரஸம் நித்யமகந்தவச்ச யத் ।
அநாத்யநந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே (கட. ரு. கரு)

"சப்தமிலதாயும், பரிசமிலதாயும், ரூபமிலதாயும், அவ்வியமாயும், இரசமிலதாயும், நித்தியமாயும், மணமிலதாயும், அநாதியனந்தமாயும், மகத்துக்கு மேலாயும், வேறுபடாததாயும் இருப்பதொன்றை அறிந்து மரணவாயினின்று விடுறுகின்றனன்" என அடுத்துவந்த சுருதியினாற் பிரதானம் அறியற்பாலதொன்றாகக் கூறப்பட்டதெனின்,

(உத்தரம்) அது யுக்தம் அன்று;

யச்சேத்வாங்மநஸீ ப்ராஜ்ஞ: (கட. ரு. கரு)

"அறிஞன் வாக்கையும் மனசையும் அடக்கல்வேண்டும்" என அறிஞனைப் பற்றியே பிரகிருதவிஷயமிருத்தலையின். ஆகலின் அவ்வியக்தம் சரீரமே. (ரு)

பிரதானத்தின் பிரசங்கமே இல்லை என்று கூறுகின்றனர்.

த்ரயாணாமேவ சைவமுபந்யாஸ: ப்ரச்நச்ச (க. ச. சா)

(௧௮) மூன்றற்குமே இங்ஙனம் உபந்நியாசமும் பிரசினமும்.

இப்பிரகரணத்தில் உபாசியம், உபாசனம், உபாசகன் என்னும் மூன்றும் அறியற்பாலன என உபந்நியாசமும் பிரசினமும் போந்தன; பிரதானத்திற்கன்று. எங்ஙனமெனின்,

தம் துர்தர்ஶம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்| அத்யாத்மயோகாதிகமேந தேவம் மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி|| (கட. ௨. ௧௨)

"அறிஞனவன் அத்தியான்மயோகவாயிலாகக் காண்டற்கரியரும், மறைவினரும், கூடப்பிரவேசித்தவரும், குகைக்குள் மறைந்தவரும், குகைக்கணமர்ந்தவரும், பழையருமாகிய (மகா) தேவரை அறிந்து இன்ப துன்பத்தினின்று வீடுறுகின்றனன்" என்றற்றொடக்கத்தனவே இந்த அதிகரணத்திலுள்ள உபந்நியாசம்.

யேயம் ப்ரேதே விசிகித்ஸா மநுஷ்யே அஸ்தீத்யேகே நாயமஸ்தீதி சைகே| ஏதத்வித்யாமநுஶிஷ்டஸ்த்வயாஹம் வராணாமேஷ வரஸ்த்ருதீய: (கட. ௧. ௨௦)

"மனிதன் இறந்தபோது அவன் இருக்கின்றனன் எனச் சிலரும், அவன் இலன் என்று வேறு சிலரும் கூறுதலின், சந்தேகம் உண்டாகின்றது; இதனை நீவிர் உணர்த்த, யான் அறிய விரும்புகின்றேன்; நான் கேட்கும் வரங்களுள்ளே இது மூன்றாவது வரம்" என்றும்,

அந்யத்ர தர்மாதந்யத்ராதர்மாத் அஸ்மாத் க்ருதாக்ருதாத்|
அந்யத்ர பூதாச்ச பவ்யாச்ச யத்தத்பஶ்யஸி தத்வத||

(கட. ௨. ௧௪)

"தர்மத்துக்கு வேறுபட்டதும், அதர்மத்துக்கு வேறுபட்டதும், காரண காரியமிலாததும், இறப்பெதிர்விலாததுமாயுள்ள எதை நீர் பார்க்கின்றீரோ, அதை எனக்குச் சொல்க" என்னுஞ் சுருதிகளிற் பிரசினம் அடங்கிற்று. ஆகலின் பிரகரணசம்பந்தமின்மையானும் சரீரமே அவ்வியக்தம், பிரதானம் அன்று.

(௬)

இன்னும் மற்றோர் இலிங்கமும் உளதென்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸூத்ரம் (௧. ௪. ௭)

(௧௯) மகத்துப் போலவும்.

புத்தேராத்மா மஹாந்பர: (கட. ௩. ௧௦)

“புத்திக்குமேல் ஆன்மாவாகிய மகத்து” என்னுஞ் சுருதியின் மகத்து என்றது சாங்கியர்க்குச் செல்லாதவாறு போல, அவ்வியக்தமும் பிரதானம் அன்றென நிர்ணயிக்கப்பட்டது. (எ)

(உ) சமசவதத்திகரணம்

(ஆக்ஷேபம்) இந்தப் பிரகரணசம்பந்தமாகப் பிரதானத்தையுற்றுப் பேசுதற்கு அவகாசமின்றேல் ஆகுக; பிறிதோரிடத்திற் பிரதானமே காரணமாகக் கேட்கப்படுகின்றதென்பதை ஆக்ஷேபித்து இந்த அதிகரணம் ஆரம்பிக்கற்பாலதாயிற்று.

சமஸவத³விஶேஷாத் (க. ச. அ)

(ககஎ) சமச(பாத்திர)ம் போல; பகுத்துக் கூறும் குறியின்மையின்.

அஜாமேகாம் லோஹிதஶுக்லக்ருஷ்ணாம் ப³ஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமானாம் ஸரூபா:। அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽனுஶேதே ஜஹாத்யேனாம் பு⁴க்தபோ⁴கா³மஜோऽன்ய: (சுவே. ச. ரு)

“செந்நிறமுடையதாய், வெண்ணிறமுடையதாய், கருநிறமுடையதாய், ஏகரூபமாய் அநேக பிரஜைகளைப் பிறப்பிப்பதாயுள்ள பிறவாப் (பெண்) வஸ்து ஒன்றுளது; அதனை விரும்பி அதனோடு கிடக்கும் பிறவாத மற்றோர் (ஆண்) வஸ்து ஒன்றுள்ளது; இன்பம் அனைத்தையும் அனுபவித்து அதனை விடுத்துள்ள மற்றோர் பிறவாத வஸ்து ஒன்றுள்ளது” என்னும் சுவேதாசுவதரசுருதியே விஷயம்.

ஈண்டுச் சமஸ்தப் பிரபஞ்சகாரணமாகிப் பிறப்பிலதாதலின் அஜா என்று கூறப்படுவது சாங்கியர் பிரகிருதியா? இன்றேற் பராசத்தியா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாங்கியர் கூறும் பிரகிருதி எனலே யுக்தம்; அஜா என்பது பிறப்பிலாததொன்றை உணர்த்தலானும், சமஸ்தப் பிரஜைகளுக்கும் காரணமாயிருத்தலானும், செம்மை, வெண்மை, கருமை என்னும் முக்குணங்கள் அறியப்படலானும். இவ்வியற்கை மற்றொன்றற்குக் கோடல் யுக்தம் அன்றாம் என ஆக்ஷேபிக்க,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. (சாங்கிய) தந்திரத்திற் கூறப்பட்ட பிரகிருதியைக் காரணமாகக் கூறல் கூடாது, பிறப்பிலாமைமாத்திரத்தால் அதனைப் பிரகிருதி எனக் கோடல் யுக்தமன்று;

[illegible] (பிரு. ச. [illegible])

"கீழ்ப்புறத்துவாரமுள்ள சமசபாத்திரம் என்ற விடத்து விசேஷ (ஹேது) விலதாய்

இதம் தச்சிர: (பிரு. ச. உ. ௩)

"இது அதன் தலை" என்றவிடத்து எங்ஙனம் பேதம் கூறப்படுகின்றதோ, அங்ஙனமே ஓர் காரண மொழியால் ஓர் விசேஷ ஞானம் உதிக்கவேண்டுமாயின், அதற்கு மற்றோர் விசேஷணம் வேண்டப்படுகின்றது. ஆகலின், அது சாங்கியத்துப் பிரகிருதி அன்று. (அ)

சாங்கியர் பிரகிருதிக்கு வேறாய பிரகிருதி எவ்வியல்பிற்றென்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஜ்யோதிருபக்ரமாத்து ததா ஹ்யதீயத ஏகே (க. ச. ௯)

(ககு) அங்ஙனமே சிலர் ஜ்யோதி என்று தொடங்கிப் படிக்கின்றனர்.

ஜ்யோதி என்றது சிவபெருமான். இந்த அஜாப் பிரகிருதி சிவபெருமானைக் காரணமாகக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. அங்ஙனம் தைத்திரீயர் சிலர் சிவபெருமானைக் காரணமாகக் கொண்டதுதான் பிரகிருதி என அதன் சொரூபத்தைப் படிக்கின்றனர்.

அணோரணீயான் மஹதோ மஹீயான் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. உ௯)

"அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய்" என்று சிவபெருமானிலே உபக்கிரமித்து,

ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. உ௯)

"பிராணன்கள் எழும் இவரிலே நின்று பிறக்கின்றன" என்றற்றொடக்கத்தவற்றாற் பிரபஞ்சம் சிவபெருமானினின்று உற்பத்தியாய அவ்வியல்பினையுடையதென்று கூறுமிடத்து, அஜா (பிறவாத) வஸ்து ஒன்றுளது என்று படிக்கின்றனர். அவரை உணர்த்துமாறுபற்றி, இந்த அஜாப் பிரகிருதி சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதென எவ்வாற்றானு நிச்சயிக்கப்படுகின்றது. ஆகலின், சாங்கியத்திற் சித்தித்த பிரகிருதி எனல் யுக்தம் அன்று. (௯)

(ஆக்ஷேபம்) இந்தப்பிரகிருதி சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதுபற்றி, அது அவருக்குக் காரியமாய்க் கூறப்படுகின்றது. (சிவபெருமானைக் காரணமாகக் கொண்ட) அவ்வியல்பினதாகிய இதனைப் (பிரகிருதியை) அஜா என எங்ஙனம் கூறலாம்? என ஆசங்கித்து,

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கல்பனோபதேசாச்ச மத்வாதிவதவிரோத: (க. ச. ௧௦)

(௧௧௯). கற்பனை உபதேசிக்கப்படலானும் விரோதமின்று, மது முதலியவற்றிற் போல.

கற்பனை என்றது சிருட்டி.

ஸஂவத்ஸரோ யஜ்ஞாஃ க்ரதவோ வ்ரதாநி ஸத்யம் ஸர்வம் யச்ச வேதா வதந்தி। அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்தஃ। மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேஶ்வரம்॥
(சுவே. ௪. ௯)

"சந்தசுகளும், யஞ்ஞங்களும், கிரதுக்களும், விரதங்களும், இறப்பும், எதிர்வும், வேதஞ் சொல்லிய யாவுமாகிய இஃதனைத்தையும் எதன்பானின்று பிறப்பித்தனரோ, அதில் மற்றொருவன் மாயையாற் கட்டுண்டான்; பிரகிருதியை மாயை என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக" என்னும் வாக்கியத்திற் சிருட்டி கூறப்பட்டமையின், பிரகிருதியை அஜா என்றும், சிவபெருமானால் ஆக்கப்பட்ட காரியம் என்றும் கூறலிற் போதரும் விரோதம் யாதுமில்லை. இச்சுருதியின் பொருள் வருமாறு:—

பிரளயகாலத்திலே நாமரூபமொழிந்து நிற்கும் அசித்தாகிய மாயையும் மகேசுவரரிடத்துச் சரீரமாகிச் சூக்குமரூபமாயிருக்கின்றமையின் அஜா எனப்படும்; சிருட்டிகாலத்திலே நாமரூபத்தோடிசைந்திருத்தலாற் சிவபெருமானால் ஆகிய காரியமுமாம். எங்ஙனமெனின், படைப்புக்காலத்திலே வசு முதலிய தேவர்கள் யார்க்கும் ஆதித்தியன் போக்கிய பண்டாரசாலையாயிருந்தமையின், அவன் மதுவாயும் காரியமாயுமுளான்;

அஸௌ வா ஆதித்யோ தேவமது (சாந். ௩. ௧. ௧)

"சூரியன் தேவர்கட்கு மதுவாயினன்" என்று சுருதி கூறுகின்றமையின்.

அத ததூர்த்வ உதேத்ய நைவோதேதா நாஸ்தமேதைகல ஏவ மத்யே ஸ்தாதா।
(சாந். ௩. ௧௧. ௧)

"அங்கிருந்து அவன் மேலே எழுந்தபோது அவன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை, அவன் ஒருவனே மத்தியில் நிற்கின்றனன்" என்றும் சுருதி கூறலின், பிரளயகாலத்திலே அவ்வாதித்தியன் மதுமொழிபோன்ற மற்றமொழிகளாற் கூறுணாத அத்தியந்த சூக்குமரூபமாயிருத்தலிற் காரியமாகான். இங்ஙனம் மதுவித்தையிற் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிரகிருதியை அஜா என்றும், (அது) சிவபெருமானைக் காரணமாய்க் கொண்டதென்றும் கூறலின் எய்தும் விரோதம் யாதும் இல்லை. ஆகலின், அஜா என்றது தாந்திரிக சாங்கியர் கூறும் பிரகிருதி அன்று. (௧௦)

(௫) சங்கியோபசங்கிரகாதிகரணம்.

(ஆக்ஷேபம்) பிறிதோரிடத்துச் சாங்கியர் தந்திரசித்தமாயுள்ள இருபத்தைந்து தொகையினவாம் தத்துவங்கள் சுருதியிற் கூறப்படுகின்றன என்றதை ஆசங்கித்து, அதனைப்பரிகரிக்குமாறு மற்றோர் அதிகரணம் எழுந்தது.

न संख्योपसंग्रहादपि नानाभावादतिरेकाच्च।

(க. ௪. கக)

(கஉ0) சங்கியை சங்கிரகிக்கப்பட்டமையானும் அன்று, தத்துவங்கள் நானாவகையாயுண்மையானும், அதிகம் உண்மையானுமாம்.

यस्मिन् पञ्च पञ्चजना आकाशश्च प्रतिष्ठितः।
तमेव मन्य आत्मानं विद्वान् ब्रह्मामृतोऽमृतम्॥

(பிரு. சு. ௪. கஎ)

"ஆகாயமும் ஐவைந்து சனங்களும் எவரிலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனவோ, அவரைப் (பரம) ஆன்மா என நினைக்கின்றேன்; அமிர்தமாயுள்ள பிரமத்தை அறிந்து நான் அமிர்தனுகின்றேன்" என்னும் சுருதியே விஷயம்.

இச்சுருதியிற் கண்ட ஐவைந்து சனம் என்னும் பதார்த்தஞ் சாங்கிய சித்தமாயுள்ள தத்துவங்களா? இன்றேற் சுருதி சித்தமாயுள்ள தத்துவங்களா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாங்கிய சாஸ்திரத்திலே இருபத்தைந்து சங்கியை பிரசித்தமாதலினாலும், அத்தொகை ஈண்டுத் தோற்றுதலானும் ஐவைந்து சனம் என்றது எப்பிரகாரத்தானும் அவைகளையே குறிக்கத்தக்கன என ஆக்ஷேபிப்பின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈண்டுப் பஞ்சபஞ்ச என்றற்றொடக்கத்த மந்திரத்திலே, இருபத்தைந்து என்னும் தொகை "பஞ்ச பஞ்ச" எனச்சுருக்க முறைக் கூறப்படினும், அவை தந்திரசித்தமாயுள்ள தத்துவங்களன்று. "யஸ்மின்" (பிரு. சு. ௪. கஎ) (எவரிலே) என்றற்றொடக்கத்த மந்திரபாகத்தினற் குறிக்கப்பட்ட சிவபெருமானிலே அவைகள் (தத்துவங்கள்) ஆதாரமுற்றனவாக அறியப்படுகின்றது; (அவைகள் என்றது உபநிடதத்துக் கூறப்பட்ட தத்துவங்கள்); இவற்றினின்று வேறுற்றமையானும், ஆகாயத்தைத் தனித்துக் கூறினமையின் தத்துவம் அதிகப்படுதல்பற்றியுமாம். தத்துவ அதிரேகம் என்றது தத்துவங்களின் அதிகத்தொகை. ஆகலின்,

ஈண்டு இருபத்தைந்து தத்துவத்தொகை குறிக்கப்பட்டதன்று. மேலும், இருபத்தைந்து என்னுந் தொகையுங் கூறுதல் யுக்தமன்று.

திக்ஸம்வெ்யு ஸம்ஜ்ஞாயாம் (பா. வி. உ. க. ருo)

"திக்சங்கியையாயுள்ள சம்ஞையில்" என்னுஞ் சூத்திரவிதிப்படி, இது சம்ஞாவிஷயமாயுள்ள சமாசம். ஆகலின், ஐந்து சனம் என்றது ஐவைந்து சனங்களைச் சுட்டியது; "சப்த சப்த" ருஷிகள் என்றாற் போல.

ஆகலின் சாங்கியதத்துவப் பிரசக்தி இல்லை. (கக)

பின் அவை எவை எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ப்ராணாதயோ வாக்யஶேஷாத் (க. ச. கஉ)

(கஉக) பிராணாதிகள் வாக்கியசேஷத்தினால்.

ப்ராணஸ்ய ப்ராண உத சக்ஷுஷஶ்சக்ஷு ருத ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரமந்நஸ்யாந்நம் மநஸோ யே மநோ விது: (பிரு. சு. ச. கஅ)

"பிராணனிற் பிராணனையும், கண்ணிற் கண்ணையும், காதிற் காதையும், அன்னத்தில் அன்னத்தையும், மனத்தில் மனத்தையும் எவர்கள் அறிகின்றனரோ" என்னும் வாக்கியசேஷத்தினாற் பஞ்சசனம் எனப்பட்டவை பிராணாதி ஐந்து இந்திரியங்களாம் என அறியப்படுகின்றது. இதனாலுஞ் சாங்கியதத்துவங்கள் ஈண்டுக் கூறப்படவில்லை. (கஉ)

பின்னரும் நியாயம் கூறப்படுகின்றது.

ஜ்யோதிஷைகேஷாமஸத்யந்நே (க. ச. கங)

(கஉஉ) சிலர் கூறுமாறு சோதியினால், அன்னமில்லாவிடத்து.

சிலர் என்றது காண்ணுவர் மேற்று.

அந்நஸ்யாந்நம் (பிரு. சு. ச. கஅ)

"அன்னத்தின் அன்னம்" என்னும் சப்தம் இல்லாவிடத்து,

தத்தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி: (பிரு. சு. ச. கசு)

"சோதிக்குட் சோதியாயினானைத் தேவர்கள் வழிபடுகின்றார்" என்னும் சுருதியுபக்கிரமத்தின் முதலாவது சோதிசப்தத்தினாற் பஞ்சசனம் என்னும் இந்திரியங்கள் அறியப்படுகின்றன. சோதிக்குட் சோதி என்றும், பிரகாசத்துட் பிரகாசம் என்றும் பிரமத்தைக் கூறிய பின்னர், ஐவைந்து சனம் என்று கூறப்படுதலின், இவை பிரகாசிக்கும் ஐந்து இந்திரியங்கள் என்று அறியப்படுகின்றது. (கங)

காரணத்வேந ச ஆகாஶாதிஷு யதாவ்யபதிஷ்டோக்தேঃ।
(க. ச. கச)

(௧௨௩) ஆகாசமுதலியவற்றுக்குக் காரணமாயிருத்தலானும், குறிக்கப்பட்டபடி கூறப்படலானும்.

அஸத்வா இதமக்ர ஆஸீத் (தைத். உ. எ. க)
தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத்। (பிரு. ௩. ச. எ)

"அசத்துத்தானே முதற்கண் இருந்தது; இது மெய்யாய் அவ்வியாகிருதமாயிருந்தது" என்றற்றொடக்கத்த வேதாந்தவாக்கியங்கள் அனைத்தினும் பேதம் புலப்படாமையின்,

ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் (ஐத. க. க)

"(பரம) ஆன்மா ஒன்றுமாத்திரமே முதற்கண் இருந்தது" என்னும் விசேஷவாக்கியத்தினுற் குறிக்கப்பட்டதே கூறப்படலாற் சாங்கியர்களுடைய அவ்வியாகிருதம் கொள்ளப்படமாட்டாது. அங்ஙனமே விசேடித்த வாக்கியங்களிற் காணப்பட்ட இந்திரியங்களே கூறப்பட்டமைபற்றிச் சாங்கியர் தத்துவங் கூறப்பட்டதன்று. (கச)

ஈண்டுச் சாங்கியதத்துவம் எங்ஙனம் பொருந்தாதெனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸமாகர்ஷாத் (க. ச. கரு)

(௧௨௪) தொடர்ச்சியுண்மையான்.

ஸோऽகாமயத பஹு ஸ்யாம் (தைத். உ. ௬)

(எங்ஙனம்) "நான் அநேகமாக ஆவேன் என அவர் விரும்பினர்" என்றவிடத்து, அவர் என்பது தொடர்ச்சிபற்றி முற் கூறப்பட்ட சர்வஞ்ஞரைக் குறிக்கின்றதோ,

அஸத்வா இதமக்ர ஆஸீத் (தைத். உ. எ. க)

எங்ஙனம் "அசத்துத்தானே முதற்கண் இருந்தது" என்றவிடத்து, தொடர்ச்சிபற்றி அசத் என்றது முற் கூறப்பட்ட அவ்வியாகிருதத்தைக் குறிக்கின்றதோ,

ஸ ஏஷ இஹ ப்ரவிஷ்ட ஆநகாக்ரேப்யঃ (பிரு. ௩. ச. எ)

எங்ஙனம் "அவர் நகத்து நுனிவரையும் ஈண்டுப் பிரவேசித்தார்" என்றவிடத்து, தொடர்ச்சிபற்றி அவர் என்றது அவரையே குறிக்கின்றதோ, அங்ஙனமே ஈண்டுந் தொடர்ச்சிபற்றிப் பஞ்சஜனம் என்றது இந்திரியத்தைக் குறித்ததாமெனக் கோடலில் விரோதமில்லை. சாங்கியதத்துவ ஆசங்கைப் பிரசங்கம் நீங்கிற்று. (கரு)

பின்னர்ச் சூத்திரகாரர் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேறுவரெனக் கூறுவாராயினர்.

(௪) ஜகத்வாசித்துவாதிகரணம்.

ஜகத்வாசித்வாத் (க. ௪. கசு)

(கஉரு) (அது) ஜகத்தைச் சுட்டுதலின்.

ப்ரஹ்ம தே ப்ரவாணி (கௌஷீ. ௪. க)

"பிரமத்தை உனக்குப் போதிப்பேன்" என்று தொடங்கி,

யோ வை பாலாக ஏதேஷாம் புருஷாணாம் கர்த்தா யஸ்ய வை தத் கர்ம ஸ வை வேதிதவ்ய: (கௌஷீ. ௪. கஅ).

"பாலாகி, இந்தப் புருஷர் எல்லார்க்குங் கர்த்தாவாயினரோ, இது எவரது கர்மமாயிற்றோ, அவர் அறியற்பாலர்" என்றற்றொடக்கத்த கௌஷீதகிப் பிராம்மணோபநிடத சுருதியே விஷயம்.

ஈண்டு அறியற்பாலராகக் கூறப்பட்டவர் சிவபெருமானா? ஆன்மாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ய ஏவைஷ ஆதித்யே புருஷஸ்தமேவாஹ முபாஸே| ய ஏவைஷ சந்த்ரமஸி புருஷ:| ய ஏவைஷ வித்யுதி|

(கௌஷீ. ௪. உ, ௩, ௪)

"எந்தப்புருஷர் ஆதித்தியனில் இருக்கின்றாரோ, அவரையே வழிபடாநின்றேன்; எவர் சந்திரனிலோ, எவர் மின்னலிலோ" என்பவற்றில் முன் வாக்கியத் தொடர்ச்சியினாற் பிரகிருத ஆதித்தியன் முதலிய அனைத்துக்குங் கர்த்தாவாயிருத்தல் ஆன்மாவுக்கு உளதாதலினாலும், கர்மசப்தம் அபூர்வத்தைக் குறிக்குமாதலானும், கர்மசம்பந்தம் அனைத்தையும் விடுத்து நின்ற சிவபெருமானுக்காகாமையின், அந்த அபூர்வம் ஆன்மாவுக்குப் பொருந்துமாமெனின்,

(சித்தாந்தம்) கர்மம் என்னும் சப்தமும் இது என்னும் மொழியும் சமானாதிகரணத்திருத்தல்பற்றியும், செய்யப்படுகிறதென்னுந் தொழில்பற்றியும் உலகம் குறிக்கப்படுகின்றமையின், உலகத்தைக் காரியமாய்க்கொண்ட சிவபெருமானே ஈண்டுப் பிரதிபாதிக்கப்பட்டனர். (கசு)

சூத்திரகாரர் பின்னர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

ஜீவமுக்யப்ராணலிங்காந்நேதி சேத்தத்வ்யாக்யாதம் (க. ௪. கஎ)

(கஉ.கூ) ஆன்மா முக்கியப் பிராணன் என்பவற்றின் லிங்கங்கள் உண்மையாலெனின், அன்று; அது வியாக்கியானஞ் செய்யப்பட்டது.

தத்யதா ஶ்ரேஷ்டீ ஸ்வை:புங்க்தே யதா வா ஸ்வா: ஶ்ரேஷ்டிநம் புஞ்ஜந்த்யேவமேவைஷ ப்ராஜ்ஞ ஆத்மா ஏதைராத்மபி: புங்க்தே ஏவமேவைத ஆத்மாந ஏதம் ஆத்மாநம் புஞ்ஜந்தி।

(கௌஷீ. ச. உ0)

"எங்ஙனந் தனிகன் இனத்தாரோடு உண்கின்றனோ, இனத்தார் தனிகன் உதவிகொண்டு உண்கின்றாரோ, அங்ஙனமே பிராஞ்ஞனாகிய ஆன்மா மற்ற ஆன்மாக்களோடு உண்கின்றனன், மற்ற ஆன்மாக்கள் இவ்வான்மாவைத் தொடர்ந்துள்ளன" எனவும்,

யதா ஸுப்த: ஸ்வப்நம் ந கஞ்சந பஶ்யத்யதாஸ்மிந் ப்ராண ஏவைகதா பவதி (கௌஷீ. ச. உ0)

"எப்போது உறங்கினவன் ஒன்றையுங் காண்கின்றிலனோ, அப்போது பிராணனில் ஒடுங்கி ஒன்றாகின்றான்" எனவும் ஆன்மாவுக்கும் முக்கிய பிராணனுக்கும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றமையான், குறிக்கப்பட்டவர் சிவபெருமானல்லர் எனல் கூடாது; பிரதர்த்தனவித்தையில் (க. க. ஙஉ) நன்கு விளக்கப்பட்டமையான். ஈண்டும் முன் பின் உள்ள வாக்கியங்களைப் பரியாலோசிக்குங்கால் அவையெல்லாம் பிரமத்தின்பாற்பட்டனவேயாத; மற்றை இலிங்கங்களும் அங்ஙனமே அவற்றிற்கேற்ப விளக்கற்பாலனவாம். எங்ஙனமெனின்,

ப்ரஹ்ம தே ப்ரவாணி (கௌஷீ. ச. க)

உபக்கிரமத்திலே "பிரமத்தை உனக்குச் சொல்வேன்" எனத் தொடுக்கப்பட்டது; மத்தியிலே,

யஸ்ய வை தத்கர்ம (கௌஷீ. ச. கக)

"அவர் செய்கை ஈது" என்னும் வாக்கியத்தினாற் பிரபஞ்சம் அனைத்துக்கும் அவர் கர்த்தாவாதல் உரைக்கப்பட்டது. பின்னரும் உபசங்காரத்திலே,

ஸர்வாந் பாப்மநோ பஹத்ய ஸர்வேஷாஞ்ச பூதாநாம் ஶ்ரைஷ்ட்யம் ஸ்வாராஜ்யம் ஆதிபத்யம் பர்யேதி ய ஏவம் வேத।

(கௌஷீ. ச. உ0)

"இங்ஙனம் அறிபவன் பாவம் அனைத்தையும் போக்கி, சர்வபூதங்களுக்கும் தலைமையாகி, சுவர்க்கராச்சியத்தையும், ஆதிபத்தியத்தையும் அடைகின்றான்" என்னும் சுருதியினாற் சமஸ்த பாவமும் நிவிர்த்தியாதல் வாயி

ஸ்ரக்ஈசுவர்க்கராச்சியமாகிய பயன் ஏகாந்தப் பிரமோபாசனையினாலே மாத்திரம் எய்துவதாமென்று கூறப்பட்டது. இங்ஙனம் இந்தப் பிரகரணம் பிரமபரமாம் என நிச்சயிக்குமிடத்து, ஆன்மாவுக்கும் முக்கியப் பிராணனுக்கும் உரிய லிங்கங்கள் அவர் பரத்தனவாகச் செலுத்தற்பாலன. (கஎ)

மற்றோர் பக்ஷம் கூறப்படுகின்றது.

அந்யார்த²ந்து ஜைமினி: ப்ரச்நவ்யாக்²யாநாப்⁴யாமபி சைவமேகே (க. ௪. கஅ)

(கஉஎ) சைமினி கொள்ளுமாறு போல வினாவிடையில் மற்றொருவர் பொருட்டு உள்ளது; மேலுஞ் சிலர் அங்ஙனமே கூறுவர்.

தௌ ஹ ஸுப்தம் புருஷமாஜக்³மது: தமஜாதசத்ருர்நாமபி⁴ராமந்த்ரயாஞ்சக்ரே ப்³ருஹந்பாண்ட³ரவாஸ: ஸோமராஜந்நிதி ஸ ஹ தூஷ்ணீமேவ சிச்யே தத உ ஹைநம் யஷ்ட்யா விசிக்ஷேப ஸ தத ஏவ ஸமுத்தஸ்தௌ (கௌஷீ. ௪. கஅ)

"அவ்விருவருங் கூடி நித்திரையாயிருந்தவனிடம் வந்தார்கள்; அஜாதசத்துரு என்பவன் வெண்டுகில் புனைந்த சோமராசப் பெரியோனே, என்று விளிப்ப, அவன் யாதும் பேசாது நித்திரைசெய்தான்; அவன் பின்னர்த் தண்டினாலே அவனைத் தட்டும்போது உடனே எழுந்தான்" என்னும் வாக்கியத்திலே, விளித்தபோது கேளாமையானும் பின் தடிகொண்டு தட்டியபோது எழுந்தமையானும், பிராணாதிகளுக்கு வேறாக ஆன்மா உளதென்றமை இதற்கு வேறாய்ச் சிவபெருமான் உளர் என்பதை உணர்த்தும் பொருட்டாம்.

க்வைஷ ஏதத்³பா³லாகே புருஷோ(அ)சயிஷ்ட க்வ வா ஏதத³பூ⁴த் குத ஏததா³கா³த் (கௌஷீ. ௪. கஅ)

"பாலாகி, இந்தப் புருஷன் எங்கே துயின்றான்? எங்கிருந்தான்? பின் எங்கிருந்து வந்தான்? என்னும் வினாவினும்,

ஸதா ஸோம்ய ததா³ ஸம்பந்நோ ப⁴வதி (சாந். ௬. அ. க)

"புதல்வனே, அப்போது சத்தோடு கூடச் சம்பன்னனாகின்றான்" என்னும் வாக்கியத்தோடோர் பொருள் இயைந்த

யதா³ ஸுப்த: ஸ்வப்நம் ந கஞ்சந பச்யத்யதா²ஸ்மிந் ப்ராண ஏவைகதா⁴ ப⁴வதி (கௌஷீ. ௪. ௨௦)

"உறங்குங்கால், அவன் கனவொன்றுங் காணுதிருக்குமிடத்துப் பிராண ஞேடு ஐக்கியமாகின்ருன்" என்னும் விடையினும் அப்பொருள் நன்கு புலப்படுகின்றது.

பாலாகிக்கும் அஜாதசத்துருவுக்கும் நிகழ்ந்த சம்வாதப்பொருளே, வாசசநேயர் சிலர்

யத்ரைஷ ஏதத்ஸுப்தோऽபூத் ய ஏஷ விஜ்ஞாநமய: புருஷ: க்வைஷ ததாऽபூத் குத ஏததாகாத் (பிரு. ச. க. கசு)

"இம்மனுஷன் எங்கு உறங்கினன்? விஞ்ஞானமய புருஷன் எங்கிருந்தான்? அவன் எங்கிருந்து மீண்டு வந்தான்?" என்னும் வினவாகவும்,

யத்ரைஷ ஏதத்ஸுப்தோऽபூத் ய ஏஷ விஜ்ஞாநமய: புருஷ: (பிரு. ச. க. கஎ)

ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிஞ்சேதே (பிரு. சு. ச. உஉ)

"இம்மனுஷன் இங்ஙனம் நித்திரை செய்தபோது இந்த விஞ்ஞானமய புருஷனைவன் இருதயத்துள்ள ஆகாசத்திலே நித்திரை செய்கின்ருன்" என்னும் விடையாகவும் படிக்கின்றனர். ஆகலின், உலகம் அனைத்துக்கும் கர்த்தா சிவபெருமானேயாம். (கஅ)

(சு) வாக்கியாந்வயாதிகரணம்.

மைத்திரேயப்பிராம்மணமெங்கும் ஆன்மாவும் சிவபெருமானும் ஒன்ருகக் கூறப்பட்டவிடத்தும், அவர்கள் இருவரும் ஓரிடத்தில் வசித்தல் எங்ஙனம் பொருந்தும் என்பதைக் காட்டும்பொருட்டு இவ்வதிகரணம் எழுந்தது.

வாக்யாந்வயாத் (க. ச. கக)

(கஉஅ) வாக்கியாந்வயத்தான்.

ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி (பிரு. சு. ு. சு)

"மெய்யாய் நாயகனுடைய அனுபவத்தின் பொருட்டு நாயகன் விரும்பற் பாலனுகின்ருனில்லை; ஆன்மாவின் அனுபவத்தின் பொருட்டே நாயகன் விரும்பற்பாலனுகின்ருன்" என்று தொடங்கி,

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: (பிரு. சு. ு. சு)

*"(பரம) ஆன்மாவானது மெய்யாய்க் காணற்பாற்று, கேட்கற்பாற்று, சிந்திக்கற்பாற்று, தெளியற்பாற்று" என்னும் விஷயம் பிருகதாரணியத்திற் கேட்கப்படுகின்றது. ஈண்டு,

(பூருவபக்ஷம்)

ஆத்மநஸ்து காமாய (பிரு. சு. ரு. சு)

"ஆன்மாவின் அனுபவத்தின் பொருட்டு" என்றற்றொடக்கத்த வாக்கியங்களால் அநுபவத்தை விரும்புகின்றமைபற்றிச் சம்சாரியாதலின், இவன் ஆன்மாவாம் எனில்,

(சித்தாந்தம்) ஈண்டுக் கூறப்பட்டவர் சிவபெருமான். எதனாலெனின்,

அம்ருதத்வஸ்ய து நாஸாஸ்தி வித்தேந (பிரு. சு. ரு. ௩)

ஆத்மநி கல்வரே த்ருஷ்டே ஶ்ருதே மதே விஜ்ஞாத இதம் ஸர்வம் விதிதம் (பிரு. சு. ரு. சு)

இதம் ஸர்வம் யதயமாத்மா (பிரு. சு. ரு. எ)

"செல்வத்தினாலே சிவத்துவமடைதற்கு நம்பிக்கையில்லை; (பரம) ஆன்மாவைக் கண்டு கேட்டுச் சிந்தித்துத் தெளியும் போது, இஃதெல்லாம் அறியப்படும்; (பரம) ஆன்மாவே இஃதெல்லாம்" என்று தொடங்கி,

யேநேதம் ஸர்வம் விஜாநாதி தம் கேந விஜாநீயாத்।

(பிரு. ச. ச. கசு)

"எவரால் ஈதெல்லாம் அறிகின்றானோ, அவரை எதனால் அறியலாம்?" என்பதிறுதியாய்ப்போந்த வாக்கியமனைத்தும் சிவபெருமானிலே அன்னுவயிக்கின்றமையின், போகப்பிரீதியுடைய ஆன்மா அநுவாதத்தினாற் சிவபெருமானைப் பிரதிபாதித்தலினால் விரோதமில்லை. (கூகூ)

இந்த இடமெல்லாம் ஆன்மாவைக்குறிக்குஞ் சொல்லினாற் சிவபெருமான் கூறப்படுதல் யாங்ஙனமென மதாந்தரத்தினாற் சூத்திரகாரர் வெளிப்படுத்துவாராயினர்.

ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங்கமாஶ்மரத்ய꞉ (க. ச. ௨௦)

(க௨௬) பிரதிஞ்ஞை சித்திப்பதற்காக லிங்கம்; ஆசுமரத்தியர் உரைக்குமாறு போல.

ஆத்மநி கல்வரே த்ருஷ்டே (பிரு. சு. ரு. சு)

*கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே.
(திருவிடைமருதூர், நாவு. கo)

"ஆன்மா காணப்பட்டவிடத்து" என்று தொடங்கிய சுருதியினால், ஒன்றை அறியுமிடத்து யாவும் அறியப்படும் என்னும் பிரதிஞ்ஞை சித்திப்பதில் ஆன்மா அவனுடைய *காரியமாகலின், இதினின்று வேறுபடாமையை உணர்த்துதற்கு ஆன்ம சப்தத்தினாற் சிவபெருமான் கூறப்படுகின்றனர் என்பது ஆசுமரத்தியர் கொள்கை. (உ௦)

உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாதித்யௌடுலோமி: (க. சா. உக)

(கூ௦) ஔடுலோமி உரைக்குமாறு, உற்கிரமணஞ் செய்பவனும் அவ்வாறாகலின்.

தேகத்தை விட்டு நீங்கும் முத்தனுக்குச் சிவபெருமானுடைய ரூபமுண்மையின், சிவபெருமான் ஆன்மசப்தத்தினாற் (சுருதியிற்) கூறப்படுகின்றனர் என ஔடுலோமி கொள்கின்றனர். (உக)

அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந: (க. சா. உஉ)

(கூக) அவர் வசிக்கின்றமையான் எனக் காசகிருத்சினர் கூறுகின்றனர்.

ஶ்ருதிரபி ஶ்ருதி:।

"எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ" என்னுஞ் சுருதிப் பொருளுற, ஆன்மாவிலே ஆன்மாவாகச் சிவபெருமான் இருத்தலினால், ஆன்மாவைக் குறிக்கும் மொழிகொண்டு அவர் கூறப்படுகின்றனர் எனக் காசகிருத்சினர் கொள்கின்றார்.

மற்றிருவர் மதத்தையும் உபந்நியசித்து, அவற்றுக்கு மாறாக இது கூறப்படுதலானும் அதற்குமேல் மற்றொன்றைக் கூறாமையானும், இதுதான் சூத்திரகாரர் மதம் என நிச்சயிக்கப்படுகின்றது.

மேலும், அநேக சுருதிகளுக்கு இணக்கமுறுகின்றது; எங்ஙனமெனின் அதர்வசிரசிலே சேதனாசேதனப் பிரபஞ்சம் அனைத்தையும் பிரவேசித்து நின்றமைபற்றிச் சிவபெருமான் எல்லா நாமங்களினாலும் உரைக்கப்படலான்.

தேவா ஹவை ஸ்வர்க்கம் லோகமாயம்ஸ்தே தேவா ருத்ரமப்ருச்சன் கோ பவாநிதி। ஸோऽப்ரவீதஹமேக: ப்ரதமமாஸம் வர்த்தாமி ச பவிஷ்யாமி ச நாந்ய: கஶ்சிந்மத்தோ வ்யதிரிக்த இதி ஸோऽந்தராதந்தரம் ப்ராவிஶத் திஶஶ்சாந்தரம் ப்ராவிஶத் ஸோऽஹம் நித்யாநித்யோ வ்யக்தாவ்யக்தோ ப்ரஹ்மாப்ரஹ்மாஹம் ப்ராஞ்ச: ப்ரத்யஞ்சோஹம் தக்ஷி

* காரியம் என்னுமுண்மை கசஉ-ஆம் பக்கத்து உ-ஆம் வரிமுதலியவற்றினும், ௩உ௫-ஆம் பக்கத்து கஉ-ஆம் வரிமுதலியவற்றினும் காண்க.

ணாஞ்ச உதஞ்சோஹம் அதஶ்சோர்த்வஞ்ச திஶஶ்ச விதிஶஶ்சாஹம் புமாநபுமாந் ஸ்த்ரியஶ்சாஹம் ஸாவித்ர்யஹம் காயத்ர்யஹம் த்ரிஷ்டுப்ஜகத்யநுஷ்டுப்சாஹம் சந்தோஹம் கார்ஹபத்யோஹம் தக்ஷிணாக்நிராஹவநீயோஹம் ஸத்யோஹம் கௌரஹம் கௌர்யஹம் ஜ்யேஷ்டோஹம் ஶ்ரேஷ்டோஹம் வரிஷ்டோஹமாபோஹம் தேஜோஹம்ருக்யஜுஸ்ஸாமாதர்வாங்கிரஸோஹம் அக்ஷரோஹம் க்ஷரோஹம் குஹ்யோஹம் கோப்யோஹம் அரண்யோஹம் புஷ்கரோஹம் பவித்ரோஹம் உக்ரோ மத்யோ பஹிஃ புரஸ்தாஜ்ஜ்யோதிரித்யஹமேக꞉ ஸர்வே ச மாமேவ மாம் யோ வேத ஸ ஸர்வாந்வேத (அதர்வசிரசு)

"தேவர்கள் சுவர்க்கலோகத்தை (சிவலோகத்தை) அடைந்து, உருத்திரரை நோக்கி நீவிர் யார்? என வினவினர்; (அதற்கு) நான்மாத்திரம் முதற்கண் இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன், எனக்கு வேறாக எதுவுமில்லை; அந்தரத்தையும் (உள்ளேயும்) அந்தராந்தரத்தையும் (உள்ளினுள்ளேயும்) பிரவேசித்தார், திக்குகளையும் திக்கினிடைகளையும் பிரவேசித்தார்; (அவ்வியல் பினராய) அவர் நான், நான் நித்தியனும் அநித்தியனுமாகி இருக்கின்றேன், (என்று தொடங்கி) நான் பிரமா, நான் பிரமம், நான் கிழக்கு மேற்குமாயினேன், நான் தெற்காயினேன், வடக்காயினேன், நான் மேலுளேன், கீழுளேன், நான் பெருந்திசை நான்குஞ் சிறுதிசை நான்குமாகின்றேன்; நான் ஆண், நான் பெண், நான் காயத்திரி, நான் சாவித்திரி, நான் திருஷ்டுப்பு ஜகதியும் அனுஷ்டுப்புமாகின்றேன், சந்தசு நான், கார்கபத்தியம் நான், தக்ஷிணாக்கினி நான், ஆகவனீயம் நான், சத்தியம் நான், பசு நான், கௌரி நான், ஜ்யேஷ்டன் நான், சிரேஷ்டன் நான், வரிஷ்டன் நான், சலம் நான், தேயு நான், இருக்கு யசுர் சாமம் அதர்வம் ஆங்கிரசு நான், க்ஷரம் நான், அக்ஷரம் நான், குகியம் நான், கோப்பியம் நான், வனம் நான், புஷ்கரம் நான், பவித்திரம் நான், ஆதிமத்தியம் நான், புறம் நான், முன் நான், சோதி நான், என்னை *எல்லாமாக அறிபவன் எல்லாம் அறிகின்றான் என்றார்" என்பதிறுதியாக முதலாவது கண்டத்தினும், அவர் யாண்டும் பிரவேசித்தனர் என்பது நோக்கி,

---

*மாலாகிநான்முகனுய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
யேலாதனவெலாமேல்விப்பானுயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகிவயிரமுமாமாணிக்கந்தானேயாகிக்
கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலையாகிக்கலைஞானந்தானேயாகிப்
பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி
யெண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

யோ வை ருத்ரஸ்ஸ பகவாந் யஶ்ச ப்ரஹ்மா தஸ்மை வை நமோ நம: (அதர்வசிரசு)

"உருத்திரர் எனப்படும் பகவானுக்கு, பிரமா எனப்படும் அவருக்கு நான் நமஸ்காரஞ் செய்கின்றேன்" என்று தொடங்கி, பிரமா, விஷ்ணு, மகேசுவரன், உமை, விநாயகர் முதலிய சமஸ்தப் பிரபஞ்ச சப்தப்பொருளுமாயிருத்தல் இரண்டாவது கண்டத்தினும் பிரதிபாதிக்கப்பட்டுப்போந்தது. அன்னணஞ் சமஸ்த சுருதிகளை இணக்கி ஆராயுங்கால், சேதனுசேதனப் பிரபஞ்சத்தையும் அந்தரியாமியாய்ப் பிரவேசித்து, அனைத்தையும் சரீரமாகவும், எல்லாப் பெயருமுடையராகவும் இருந்தனர் சிவபெருமான் என்றறியப்படுதலின், காசகிருத்சினமதந்தான் சுருதிசூத்திர மகாபியுக்த சம்மதமாம் எனக்கோடல் உசிதமாயிற்று. (உஉ)

(சு) பிரகிருத்தியதிகரணம்.

முதலாம் அத்தியாயத்து முதற்பாதத்து இரண்டாம் அதிகரணத்திலே "எவரினின்று இப்பூதங்களெல்லாந் தோற்றியவோ" என ஐந்தாம் வேற்றுமை கேட்கப்படுதலின், (ஆண்டுச்) சிவபெருமானுடைய பிரபஞ்சோபாதானம் சாமான்னியமாக நிரூபிக்கப்பட்டது. இவ்வதிகரணம் அதனை முற்றுந் தாபித்தற்கெழுந்தது.

ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத் (க. ச. உங)

(கஙஉ) அவர் பகுதியுமாம்; பிரதிஞ்ஞை திருட்டாந்தங்களுக்கியைதலான்.

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: (தைத். உ. க)

"(பரம) ஆன்மாவாகிய அவரினின்று ஆகாயம் பிறந்தது"

த்யாவா பூமீ ஜநயந்தேவ ஏக: (தைத். ஆரணி. க௦. க. ங)

"பூமியையும் ஆகாயத்தையும் படைத்து ஒருவராகிய தேவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளே ஈண்டு ஆராயற்பாலனவாகிய விஷயம்.

இவைகளிலே பிரசித்தமாயுள்ள உபயகாரணத்துவம் உரைப்பது யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

அங்கமாயாதியாய்வேதமாகியருமறையோடைம்பூதந்தானேயாகிப்
பங்கமாய்ப்பலசொல்லுந்தானேயாகிப்பான்மதியோடாதியாய்ப்பான்மையாகிக்
கங்கையாய்க்காவிரியாய்க்கன்னியாகிக்கடலாகிமலையாகிக்கழியுமாகி
யெங்குமாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

என்றற்றொடக்கத்தனின்ற திருத்தாண்டகமுதலியவற்றானும் அதர்வசிரசுப்பொருள் தொனிக்கின்றது.

நிமித்தகாரணராகிய குலாலாதியோர் உபாதான மிருத்பிண்டாதிகளாக ஆகாமையினலும், உபாதானமாகிய மிருத்பிண்டாதிகள் நிமித்தகாரணராகிய குலாலாதியராக ஆகாமையினலுமே சந்தேகமுண்டாயிற்று. பிரபஞ்சகாரியத்தையுற்ற அவர் நிமித்தகாரணமும், உபாதானகாரணமுமாம் இரண்டுமாதல் யாங்ஙனம்?

(பூருவபக்ஷம்) அவர் உலகசிருட்டிக்கு நிமித்தகாரணர்தான்; உபாதானகாரணரல்லர்; எதனல்? கூடாமையின். கடத்தை நிருமாணஞ்செய்யும் குலாலன் தானே மட்பிண்டமுமாகிக் கடத்தைச் செய்வானல்லன்; படம் நெய்யும் குவிந்தனும் அங்ஙனஞ்செய்வானல்லன். அல்லது மட்பிண்டம் குலாலனகிக் கடத்தை வனைய முயலினும் அது கூடாதாமே. நிமித்தகாரணமாகிய பிரமத்துக்கு உபாதானத்துவம் எய்தாது. நிமித்தத்துக்கு உபாதான கற்பனை நிஷ்பிரயோசனம்; அவ்வியல்பிற்றாகிய கற்பனையின்றியும் காரியம் தோற்றுவதால். குலாலன் மிருத் பிண்டத்தினின்று வேறாயினும், கடம் ஆக்கப்பட்டதாகக் காணப்படுகின்றமைபற்றிக் (குலாலன் கடமாதலும், கடம் குலாலனுதலுமாகிய) அந்தக் கற்பனையின்றியே காரியம் காணப்படலான். நிமித்தத்துக்கு உபாதானத்தை ஏற்படுத்துவது பயனற்றது. ஆகலின் பிரமம் நிமித்தகாரணமே; உபாதானமுமன்று எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. உலகத்துக்கு நிமித்தமும் உபாதானமும் பிரமமே;

உத தமாதேஶமப்ராக்ஷ்ய யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவத்யமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் (சாந். சு. க. க)

"நீயும் அகந்தை கொண்டனை; எதனற் கேட்கப்படாதது கேட்கப்படுகின்றதோ, நினைக்கப்படாதது நினைக்கப்படுகின்றதோ, அறியப்படாதது அறியப்படுகின்றதோ, அந்த ஆஞ்ஞையை நீ எஞ்ஞான்றாயினுங் கேட்டனையா?" என்று சுருதி கூறுமாறு, நிமித்தகாரணராகிய ஆஞ்ஞையுடையார் அறியப்படுமிடத்துச் சேதநசேதனப்பிரபஞ்சமனைத்தும் அறியப்பட்டதாகும் என்றவாறு, ஆஞ்ஞையுடையார் அறியப்பட்டபோது யாவும் அறியப்படுமென்னும் பிரதிஞ்ஞையினலும்,

யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத் (சாந். சு. க. க)

"ஒரு மட்பிண்டம் அறியப்பட்டால் மண்மயமாக அனைத்தும் அறியப்பட்டதாகும்" என்னுஞ் சுருதியினல் அதனை விளக்கும் மட்பிண்ட திருஷ்டாந்தத்தின் ஒற்றுமையினலுமாம். பிரமம் நிமித்தமாய் மாத்திரமிருத்தலின் அதனை அறிதல்பற்றிச் சமஸ்தப் பிரபஞ்சஞானமும் எய்தமாட்டாது. எங்

னமெனின், உபாதானமாகிய மட்பிண்ட ஞானத்தை அறிவதாலன்றிக் குலாலனை அறிதலாற் காரியமாகிய குடம் அறியப்படமாட்டாது. ஆகலின், நிமித்தகாரணமாகிய பிரமம் உபாதானகாரணமாயுமிருக்குமிடத்து இது பொருந்தும் எனக் கொள்ள, பிரமமே உபாதானமாம். (உ௩)

(சாந். ௬. க. ௩) சுருதியிற் கண்ட இந்த ஆதேச சப்தத்தினால் ஆஞ்ஞை செய்யும் பிரமம் கூறப்பட்டது. உபாதானம் என்றது அவரினின்று வேறின்றெனக் காட்டச் சூத்திரகாரர் மற்றோர் நியாயங் கூறுகின்றார்.

அபித்⁴யோபதே³ஶாச்ச (க. ச. உ௪)

(க௩௩) (அவர்) சங்கற்பங் கூறப்படலாலும்.

ததை³க்ஷத ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய (சாந். ௬. உ. ௩)

"நான் அநேகமாவேனாக என்று அவர் சங்கற்பித்தார்" என்னுஞ் சுருதியில் நிமித்தகாரணமாகிச் சங்கற்பித்த முற்றறிவுடைய பிரமத்தினது விசித்திர ஜகதாகாரத்தினால் அநேகமாயாதலாகிய சங்கற்பம் உபதேசிக்கப்படுகின்றது. ஆகலின், உபாதானம் நிமித்தகாரணத்துக்கு வேறின்று. (உ௪)

(ஆக்ஷேபம்)

விஶ்வாதி⁴கோ ருத்³ரோ மஹர்ஷி: ஹிரண்யக³ர்ப⁴ம் பஶ்யத ஜாயமாநம் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. உ௮)

"விசுவாதிகரும் மகாவிருடியுமாகிய ருத்திரர் இரண்ணியகருப்பர் பிறக்கக் கண்டனர்" என்னுஞ் சுருதியினால் விசுவாதிகராகிய சிவபெருமான் நிமித்தகாரணராகித் தமக்கு வேறாயுள்ள பிரகிருதியில் (உபாதானத்தில்) தமது சங்கற்பத்தினால் உண்டாக்குஞ் சமஸ்த தேவர்கட்குந் தலைவராகிய இரண்ணியகருப்பரைச் சிருட்டிக்க அனுக்கிரகத்தோடு பார்க்கின்றனர் என்று அறியப்படுகின்றது. அவர் பிரகிருதியாய் உலகாகாரமாவது எங்ஙனம்?

மாயாம் து ப்ரக்ருதிம் வித்³யாத் (சுவே. ச. ௧௦)

"மாயையைப் பிரகிருதி என்று அறியவேண்டும்" என்றுரைக்குஞ் சுருதியில், மாயை என்பது பிரகிருதியாம்.

தஸ்மாத்³விராட³ஜாயத விராஜோ அதி⁴ பூருஷ:।
(இரு. வே. ௧௦. ௯௦. ௫)

"அவரினின்று விராட்புருடன் பிறந்தான்; விராட்டுக்குமேலே புருஷன்" என்னுஞ் சுருதிகளாற் புருஷன் பிரகிருதி என்று அறியப்படுகின்றது. அவ்விரண்டுமே பிரகிருதியாய் உலகாகாரமாயிற்றென்று கூறுதல் உசிதமன்று கூற,

(உத்தரம்) சூத்திரகாரர் இஃதப்பாராயினர்.

ஸாக்ஷாசோஹயாம்நாநாத் (க. ச. உரு)

(௩௩ச) அவர் நேரே இரண்டாகவுங் கூறப்படலான்.

வேதாந்த பாகங்களிலே சிவபெருமான் உபாதானகாரணராகிப் பிரபஞ்சாகாரமாயும், நிமித்தகாரணராகிப் பிரபஞ்சோற்பத்தி செய்பவராயும் பிரத்தியக்ஷமாகக் கேட்கப்படுகின்றனர். எங்ஙனமெனின்? "விசுவாதிகர் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளான். எங்ஙனம் விசுவாதிகத்துவங் கேட்கப்படுகின்றதோ, அங்ஙனமே

ஸவெ-ஹ்ய வெ ருஷ: (தைத். ஆரணி. கo. உச. சஉ)

"எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்தவற்றால் உபாதானகாரணமாதல் பற்றி விசுவரூபியாதலுங் கேட்கப்படுகின்றது. சதருத்திரீயத்தில்,

நமோ ஹிரண்யபாஹவெ|

"இரண்ணிய பாகுவுடையார்க்கு நமஸ்காரம்" என்று தொடங்கி,

கூவாஞா நாo வதயெ|

"கள்ளர் தலைவர்க்கு நமஸ்காரம்" என்பதிறுதியாக அவரது விசுவாதிகத்துவங் கூறப்படுகின்றது.

நமஃ வண்யாய ச வணகக்ஷ்யாய ச|

"இலையினின்று தோன்றியவர்க்கும், இலைச் சமூகத்திற்றோன்றியவர்கும் நமஸ்காரம்" என்பதிறுதியாகச் சிவபெருமான் உலகாகாரமாயிருத்தல் கேட்கப்படுகின்றது. பிறிதோரிடத்தில்,

ஸ்ரஹஸவநo ஸ்ரஹஸவாக்ஷ ஷூஸீஃஸ்ரஹாஜ்யாதிஷ்டித்வநாமியர யநீ (தைத். பிரம். உ. அ. கூ. எகு, எஎ)

"பிரமம் வனமாயிற்று; பிரமம் அந்த விருக்ஷமாயிற்று; தத்தம் இடங்களிலே நிறுவி உலகத்தைப் பிரமம் பரிபாலிக்கின்றது" என அவர்க்கு ஈரியல்பு சாற்றப்படுகின்றது. அதர்வசிரசின் முதலாம் இரண்டாம் பாகங்களினும் சிவபெருமான் உலகாகாரமாதலும், அதன்மேல் உலக ஈசுரத்துவமாதலுங் கூறப்படுகின்றன. ஆகலின், "பிரத்தியக்ஷமாய் இரண்டாகக் கூறப்படலான்" ஜகத்தும் ஜகதீசுரனும் பிரகிருதி நிமித்தமாகிய பரப்பிரம சிவபெருமானும். (உ௫)

மேலும் மற்றோர் பிரமாணம் உண்டென்று சூத்திரகாரர் கூறுகின்றார்.

ஆத்மக்ருதெ: (க. ச. உகு)

(௩௩௫) தம்மிலிருந்து சிருட்டித்தலான்.

தஜாத்மாநo ஸ்வயமகுருத (தைத். உ. எ)

"அப்போது அவர் தாமே தாமாகச் செய்தனர்" என்னுஞ் சுருதியினற் சிவபெருமான் தாமே உலகாகாரமாதலோடு கர்த்தாவாதலும் பெறப்படுகின்றது. ஆகலின், அவர்தாம் உபாதானமும் நிமித்தமுமாம். (உசு)

(ஆக்ஷேபம்) சமஸ்த தோஷகளங்கலேசமுமிலராய், அளவுகடந்த மங்கலகுணரத்தினகரராய், தடைகடந்த நித்திய வைபவமுடையராய், பிரயஞ்சாதீதராய் நின்ற சிவபெருமான் அஞ்ஞான விகாராஸ்பதமாகிய இழிந்த பிரபஞ்சரூபப் பிருகிருதியாதல் யாங்ஙனம்? என ஆக்ஷேபிக்க,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

பரிணாமாத் (க. ச. உஎ)

(கஙு) பரிணமத்தினல்.

நித்தியசுத்தானந்தரும் நிரதிசயமங்கல சுவாபாவிகருமாமாயினும், நிமித்தகாரணராகிய சிவபெருமான் உபாதான காரணமாகி உலகாகாரமாதலும் யுக்தமே; (சிவபெருமான்) சேதனசேதனகாரியமாய்ப் பரிணமமுறுதலான்.

(ஆக்ஷேபம்) அந்தோ! காரணவிகாரரூபமாய்த்திரிதலன்றே பரிணமம்; முன் ரூபத்தை விடுத்துப் பின்னோர் ரூபமாய் மாறுதலே பரிணமமாகும். சிவபெருமான் அநர்த்தத்தன்மையிலிருந்து எவ்வாறு தொடக்குறுவாரல்லர்?

(உத்தரம்) சத்தியம்; நீ வினவியது. எங்ஙனம் நிமித்தகாரணம் உபாதானமாயவிடத்தும் விகாரமுதலிய பரிசமில்லையோ, அங்ஙனம் பரிணமமும் எய்துகின்றது. அபூர்வமாகிய பரிணமம் எது? அதனைக் கேட்டற்குக் குதூகலமுடையேம். அதனை விளக்க வேண்டிற்றும் எனின்,

(உத்தரம்) கேட்குதி; விளக்குவாம்.

யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர்ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவலஃ। ததக்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ (சுவே. ச. கஅ)

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்; அவர் அக்ஷரமாயும், சவிதாவுடைய வணங்கற்பாலதாம் முக்கியப் பொருளாயும் இருந்தார், அவரினின்று புராணியாகிய பிரஞ்ஞை (பராசத்தி) வெளிப்பட்டது" என்பது சுருதி.

சந்திர சூரியர் ஒளியெல்லாம் ஒழிந்து, பகல் இது இரவிது எனப் பகுத்தலில்லாத சூனியமாய், நாமரூப விசேஷமின்றி ஸ்தூலசூக்கும

சேதனுசேதனமாகிய சத்து அசத்தின் வியக்தி நிலையற்று, ஈடுதலெல்லாம் இருண்மயமாய் இருந்த அந்தக்காலத்திலே, அந்தச் சிவபிரானுர் அத்துவிதீயராய், கேவலராய், சுவப்பிரகாசராய், தம்மினின்று பகுக்கப்படாவியல்படைந்த சேதனுசேதனச் சத்தியோடுளராயினர். அவரே அக்ஷரமாயும், க்ஷரரகிதமாயும், நாசரகிதமாயுமுள்ள பரவஸ்துவாயிருந்தனர்; அந்தச் சவிதாவாகிய சூரியனுக்கு முதற்கண்ணே ஒளியைக் கொடுத்தமையின் வரேண்ணியராயும், அவனுக்கு மத்தியிலினுள்ள ஒளியாயுமிருந்தார். அப்பெற்றியராகிய தம்மினின்று வேறுபடாச் சேதனுசேதனப் பிரபஞ்சம் முழுமையும் மறைந்து கிடத்தல்பற்றி அத்துவிதீயமாய் அக்காலத்திருளையெல்லாம் ஓட்டும் பெருந் தோற்றமாகிய உருவத்தையுடைய நித்தியசித்த புராணியாம் பரமப்பிரஞ்ஞையாகிய ஞானசத்தியார் தோற்றினர். பின்னர்,

ஸோகாமயத பஹுஸ்யாம் (தைத். உ. சு)

"நான் அனேகமாய் ஆவேனுக என அவர் விரும்பினர்" என்றவாறு, பின்னர் நாமரூபாதி பகுப்பில்லாத சூக்குமசேதனுசேதன வஸ்து சரீரியாயும் காரணராயும் நின்ற சிவபெருமான் நாமரூபப் பகுப்புளதாகும் (ஸ்தூல) சேதனுசேதனப் பிரபஞ்சமாக ஆவேன் என்று சங்கற்பித்தனர். ஆகலின்,

இதம் ஸர்வமஸ்ருஜத யதிதம்கிஞ்ச (தைத். உ. சு)

"எதெது இருந்ததோ அதனையெல்லாம் அவர் சிருட்டித்தனர்" என்னுஞ் சுருதிப்பிரகாரம் அவர் தமது சரீரமாகவேயிருந்த சூக்கும சேதனுசேதன வஸ்துவைத் தம்மினின்று வேறு பிரித்து, பின்னர்

தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் (தைத். உ. சு)

"அதனைச் சிருட்டித்து அதனுள்ளே பிரவேசித்து" என்னுஞ் சுருதிப்பிரகாரம் தம்மினின்று பிரிக்கப்பட்ட சேதனுசேதனத்துள்ளே (பரம) ஆன்மரூபமாகத் தாம் பிரவேசித்து, பின் அவர்

ஸச்ச த்யச்சாபவத்* (தைத். உ. சு)

"சத்தும் (பசுவும்), தியத்தும் (பாசமும்) ஆயினர்" என்றற்றொடக்கத்து

*பரிணமம் என்னும் மொழி உபநிடதங்களில் இல்லை. அங்ஙனமாயினுஞ் சூத்திரகாரரால் க. சூ. உஎ. ல் அப்பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. இப்பரிணமத்துக்காகப் பாடியகாரரால் உதகரிக்கப்பட்ட (தைத். உ. சு) சுருதியிற் கண்ட அபவத் என்பதற்கு "ஆயினர்" "ஆனர்" என்பது பொருள். "ஊனுயிரானுயுடலானுயுலகானுய்" எனவும், "இருநிலனுய்த் தீயாகி" எனவும் போந்த திருவாக்குகளிற் காணப்படும் "ஆனுய்" "ஆகி" என்றவைகளுக்கு எந்தப்பொருள் வைதிகசித்தாந்திகள் கொள்கின்றனர்களோ, அந்தப் பொருள்தான் பரிணமத்துக்கும் பொருளாகக் கோடற்பாற்று. இப்பரிணமத்தினுற் சிவபெருமானுக்கெய்தும் களங்கலேசமுமில்லையாம் என்று உணர்த்தற்கு அபூர்வபரிணமம் என்று பாடியகாரர் வுரைந்தருளினர்.

சுருதிப்பிரகாரம் நானுவகைத்தாய சேதனுசேதனப் பிரபஞ்சரூபமாக மிகுதியும் (ஆயினர்) பரிணமித்தார்.

இங்ஙனம் மனிதனுக்குப் பாலத்துவமும் யெளவனமும் உளவாமாறு போல, உலகமே வடிவாயுள்ள பிரமத்துக்குக் காரணமும் காரியமும் உளவாயின.

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநந்து மஹேச்வரம்।
தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்॥

(சுவே. ச. ௰)

“மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; அவரது அவயவமாகிய அதனாலே இவ்வுலகமனைத்தும் வியாபிக்கப் பட்டது” என்று சுருதி கூறுகின்றது. அற்றாகலின், அனைத்துக்கும் மாயை தான் பிரகிருதி என்றும், அதனையுடையவர் மகேசுவரர் என்றும், அவரது அவயவமாயும் அம்சமாயுமுள்ள சிற்சத்தியே போக்தாவாயிருக்குந் தசையிலே புருஷன் எனப் பெயர் கொண்டு சகல உலகத்தை வியாபித்துக்கொண்டிருக்கிறதெனப் பெறப்படுகின்றது. எங்ஙனம் சரீரமாத்திரத்திலிருந்தேனும் ஆன்மாமாத்திரத்திலிருந்தேனும் உரோமம் நகமுதலியன உண்டாகாவோ, அங்ஙனம் கேவலம் மாயையிலிருந்தேனும் கேவலம் மகேசுரரிலிருந்தேனும் உலகம் உண்டாகாது. பின் சரீரமுடைய (புருஷனி) னின்று கேசம் நகமுதலியன தோற்றுமாறு போல, மாயையுடையாராகிய சிவபெருமானினின்று சேதனு சேதனத்துக்கு உபாதானகாரணமாகிய புருஷன் வெளிப்படுகின்றான். அவ்வுருவடைந்த ஈசனிலிருந்தே அவ்வியக்த சதுர்முகப் பிரமாமுதலாயினோர்க்குற்பத்தியாயிற்று.

புருஷோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

“புருஷர்தான் உருத்திரர்” என்னுஞ் சுருதி ஈசுவரர்க்குப் புருஷரூபத்துவத்தைக் கூறுகின்றது. ஆகலின், அந்தந்த அவஸ்தாவிசேஷத்தினாற் சேதனுசேதன விசிட்ட சிவபெருமான் காரணமும் காரியமுமாம் என்று கூறுதல் மிக உசிதம். (௨௭)

யோநிஶ்ச ஹி கீயதே (க. ச. உஅ)

(௧௩௮) அவர் பிரகிருதியுமாம் என்று பாடப்படுகின்றனர்.

சிவபெருமான் சகல பூதங்களுக்கும் யோநி என்று கூறப்படுகின்றார்.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம்
ப்ரசாந்தம் ஸர்வபூதயோநிம் (கைவ)

“உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தரும், எல்லாப் பூதங்களுக்கும் (யோநியும்) பிரகிருதியும்,

சமஸ்த சாட்சியுமாயுள்ளார் என்றறிந்து முனியானவன் தமசுக்கு மேலே போகின்றான்" என்னுஞ் சுருதியினாற் சமஸ்தசாட்சியும், சர்வஞ்ஞரும், இருளுக்குமேற் போந்தவரும், பிரபஞ்சத்தைக் கடந்தவரும், சமஸ்த பூதங்களுக்கு யோனியும் (பிரகிருதியு) மாயுள்ளார் பராசத்தி உமையோடிசைந்த சிவபெருமானேயாம். ஆகலின், பரப்பிரமமே *உபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாம். (உஅ)

(எ) சர்வவியாக்கியா நாதிகரணம்.

ஏதேந ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா: (க. ச. உக)

(கஅ) இதனால் எல்லாம் வியாக்கியானஞ் செய்யப்பட்டன; வியாக்கியானஞ் செய்யப்பட்டன.

(முதலாம் அத்தியாயத்து முதலாம் பாதத்து) இரண்டாஞ் சூத்திர முதல் இதுவரையும் வியாக்கியானஞ் செய்யப்பட்ட வேதாந்தவாக்கியங்களின் வியாக்கியானத்தினாலே, பிரமலிங்கங்களைக் கூறும் வேதாந்தரூபங்களாகிய கன்மகாண்டத்திடைக்கட் போந்த புருஷசூக்தம் சதருத்திரீய முதலிய மந்திரப்பிராம்மண பாகங்களும், ஸ்மிருதி இதிகாசபுராண ஆகம அபியுக்தசூக்திவிசேஷங்களுமாகிய எல்லாம் வியாக்கியானஞ் செய்யப்பட்டனவாம் என்பதே விஷயம்.

"வியாக்கியாதா:" எனச் (சூத்திரத்தில்) இருதரங் கூறியது அத்தியாயம் முடிந்தது என்ற கருத்தினாலாம்.

ஈண்டுக் கன்மகாண்டத்திற் போதரும் சதருத்திரீயம் புருஷசூக்தம் என்பனவும், ஸ்மிருதி இதிகாசபுராணங்களும் தாற்பரியலிங்க சமந்வயத்தினாற் பிரமத்தைத்தான் உணர்த்துகின்றனவா? இன்றா? என்பது சந்தேகம்; பிரகரணபேத முதலியவே சந்தேகத்துக் காரணம்.

(பூருவபக்ஷம்) கன்மகாண்டத்திலே தோற்றும் புருஷசூக்த முதலியன் கன்மத்தை அனுஷ்டிப்போனாகிய ஆன்மபரத்தனவாம் எனக் கூறுவது நலமாம்; அவை நித்தியமுக்த பிரம விஷயபரத்தன அன்று; பயனின்மையான். ஸ்மிருதி புராண முதலியவும் ஒரே ஆன்மாவைக் கூறிற்றில; ஏதனாலெனின்? அவற்றுட் சில பிரமாவையும், சில விஷ்ணுவையும், சில உருத்திரனையும், சில இந்திரனையும், சில சத்தியையும், சில அக்கினியையும்,

---

* உபநிடத உபக்கிரமணிகை உ0-ஆம் இலக்கத்திற் கண்டவாறு உபநிடதங்களும் இவற்றை ஆதாரமாய்க்கொண்டு எழுந்த பிரமசூத்திரமும் தியானயோகபரியந்தமே கூறி முற்றி நிற்பனவேயாக, இந்தத் தியானயோகத் துரியத்திலே பதித்திராசத்தியாகிய சுத்தமாயைக்கும் பராசத்திக்கும் இடம் ஒன்றாயிருந்தமையான், யோகஸ்தானத்து உபநிடதங்கள் அந்நிலைக்குத் தக அவ்வை கூறியவொக்குமாமென்னும், அதுபற்றி சேருவிழுக்குயாதுமின்றாம் என்றும் கடைப்பிடிக்க.

சில சூரியனையும், சில வாயுவையும், சில பிறவற்றையும் பரப்பிரமமாகக் கூறும். ஆகலின், இது (நிலையின்மை என்னும்) அநவஸ்தாதோஷம். அது பற்றி, இவைகள் பிரமத்தைக் கூறியவாகக் கொள்ளப்படமாட்டா என ஆக்ஷேபிக்க,

(சித்தாந்தம்) கூறுகின்றேம். புருஷசூக்தமுதலியவும் பிரமத்தையே போதிப்பனவாம்; பிரமலிங்கங்கள் உண்மையான்.

தஸ்மாத் விராடஜாயத (புருஷசூக்தம்)
ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே (புருஷசூக்தம்)
தமேவம் வித்வா னம்ருத இஹ பவதி (தைத். ஆரணி. ௩. ௧௩. ௪௦)

"அவரினின்று விராட்டுப் பிறந்தான்; தமசுக்கு மேலுள்ள ஆதித்தியவர்ணர்; அவரையே அறிந்து ஈண்டு அமிர்தனாகின்றான்" என்னுஞ் சுருதிகளான், அவர் அனைத்துக்கும் காரணராதலும், இருளுக்கு மேலாதலும் சிவத்துவத்துக்குக் காரணமாதலுமாகிய பிரமலிங்கங்களையுடைய சம்பந்தம் காணப்படுகின்றது. ஆகலின், ஈண்டுக் கூறப்பட்ட சிவபெருமானே புருஷசப்தத்தினாற் கூறப்படுகின்றார்; சதருத்திரீயத்தினும் சிவபெருமான் உலகத்துக்குப் பதியாதலும், அவர் உலகுக்கு ஆன்மாவாதலும், நீலகண்ட முதலிய இலக்ஷணமுடையராதலும் நேரே கேட்கப்படுகின்றன. ஆகலின், சிவபெருமானே அப்பிரகரணத்திற் கூறப்பட்டனர் என்பது யுக்தம்.

(ஆக்ஷேபம்) மங்கலகுணங்களுக்கு நிதியாயுள்ள சிவபெருமான் சதருத்திரீயத்திற் பிரதிபாதிக்கப்படுதல் அயுக்தம்.

நமஸ்தே ருத்ர மந்யவே (யசுர். வே. ௪. ரு. ௧)

"உருத்திரரே உமது கோபத்துக்கு நமஸ்காரம்" என்றமையாற் றாழ்ந்த குணமாகிய மந்யு (கோப) சப்தம் முதற்கண்ணே எய்திற்றே எனின்,

(உத்தரம்) அங்ஙனம் விசாரிக்கற்பாலதன்று; மந்யு என்னும் மொழி ஞானத்தின் மேற்று. இன்றேற் குரோத சப்தத்தின் பரியாயம் எனினும் இழுக்காது; துஷ்டநிக்கிரகத்தின்பொருட்டுச் சுவேச்சையினாற் கொள்ளப்பட்ட பிரகிருதிகுணமாயிருத்தல்பற்றி அதற்குச் சிவபெருமானிடத்திற் சம்பந்தமில்லை. புராணாதிகளின் தாற்பரியலிங்கங்களெல்லாம் பிரம விஷ்ணுவாதி நாமங்களின் பொருளாயுள்ளாரும், சர்வான்மகரும், சர்வஞ்ஞரும், சர்வசத்தியுடையாரும், சர்வாதிபரும், அசாமானியவைபவரும், பிரமசப்தப்பொருள் ஒய்தற்கு இடமாயினாரும், சமஸ்த வேதாந்த வாக்கியங்களையும் இயைத்துச் சமந்வயஞ் செய்தல் வாயிலாக எய்தும் முடிந்த பொருளாயும், உமாசகாயராயும், பரமேசுவரருமாகிய சிவபிரானையுற்று அறிவிப்பனவாம் என்று உரைப்பது யுக்தமே. இவை கன்மகாண்டத்தில் நிகழ்கின்

றனவே என ஆக்ஷேபிக்கின், அன்று; லிங்கத்தைக்கொண்டு பிரகரணத்தை அறியவேண்டுமென்பது நியாயம். இந்த நியாயங்கொண்டு வேதாதி பிரமாணவசனங்களிற் சேதனமேனும் அசேதனமேனும் உலகுக்குக் காரணமாகக் கூறப்படுமிடமெல்லாம் அது அவ்வவ் வான்மாவாய் நிற்கும் *சிவபெருமான்மேற்றெனப் பொருள் கொள்க. எங்கெங்கே புருஷார்த்தமில்லாத விகாரம் அறியாமை முதலிய குணம் நிகழ்கின்றனவோ, அங்கங்கே பரப்பிரமசிவனுருடைய சிதசித்வஸ்து சரீரமென்றறியற்பாற்று, காணற்பாற்று என நன்கு நிரூபிக்கப்பட வேண்டுமெனல் முழுமையும் உசிதம். (௨௧)

---

*யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார்தாம்வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனைப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யு
மாதலானிவையிலாதானறிந்தருள்செய்வனன்றே.
(சித்தியார். ௨. ௨௫)

இரண்டாம் அத்தியாயத்து

முதலாம் பாதம்.

(௧) ஸ்மிருத்யதிகரணம்.

ஸ்ம்ருத்யநவகாஶ தோ³ஷப்ரஸங்க³ இதி சேந்நாந்யஸ்ம்ருத்யநவகாஶ தோ³ஷப்ரஸங்கா³த். (௨. ௧. ௧)

(௧௩௫) ஸ்மிருதிக்கு இடங்கொடாத் தோஷம் நேருமெனின் அன்று; அன்னிய ஸ்மிருதிகளுக்கு இடங்கொடாத் தோஷம் நேர்தலின்.

முந்திய அத்தியாயத்திலே சச்சிதானந்தரூபரும், சர்வஞ்ஞத்துவ சர்வசத்தித்துவாதி சுவரூபலக்ஷணமுடையரும், சகல ஜகத்தைப் பிறப்பிப்பவரும், அனைத்துக்கும் வேறானவரும், அனைத்துக்கும் ஆன்மாவானவரும், விரூபாக்ஷத்துவ கிருஷ்ணபிங்களத்துவ நீலகண்டத்துவ முதலிய விசிஷ்ட லீலாமங்கள சுவரூப சுவபாவமுடையரும், பவர் சிவன் சர்வர் மகாதேவர் பரமேசுவரர் முதலிய முக்கிய நாமங்களின் பொருளானவரும், பரம காருணிகரும், பரப்பிரமமுமாகிய சிவபெருமானிடத்திலே சமஸ்த வேதாந்தவாக்கியங்களும், அவற்றின் அனுகுணமாகிய ஸ்மிருதிகளும் தாற்பரியத்திற் சமந்வயமாதல் கூறப்பட்டது. இந்தச் சமந்வயம் வேதாந்த விருத்தமாகிய ஸ்மிருதி தர்க்காதிகளினால் விரோதமுறுதலின், அது இந்த அத்தியாயத்திற் பரிகரிக்கப்படுகின்றது.

முதற்கண்ணே சாங்கியஸ்மிருதி விரோதம் பரிகரிக்கப்படுகின்றது. முந்திய அத்தியாயத்திலே யாண்டும் கூறப்பட்டவற்றைச் சமந்வயஞ் செய்தலே இந்த அத்தியாய விஷயம்.

இங்ஙனங் கூறப்பட்ட வைதிகசமந்வயம் சாங்கிய ஸ்மிருதிப்பிரகாரம் ஸ்தாபிக்கப்படல் வேண்டுமா? அன்றா? எனச் சந்தேகம் எழுகின்றது.

எங்ஙனம்? உலகத்துக்குக் காரணம் பிரமம் என்று வேதங் கூற, கபில ஸ்மிருதியானது உலகத்துக்குக் காரணம் பிரதானம் என்று கூறுகின்றது. கபிலரோ மகாதபசுடையராதலின், அவர் வசனமும் பிரமாணமே. சிரேஷ்டமாகிய வேதமோ அனைத்துக்கும் முக்கியப்பிரமாணம்; இது அப்பிரமாணாந்தரத்தையும் பொறுக்காது. இவ்விரண்டனுள்ளே எது எதனால் வாதிக்கப்படும் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாங்கியஸ்மிருதி ஒரே விஷயம் கூறுவதாய் (மற்றொன்றற்கு) அவகாசமுடையதன்றாய்ப் பிரபலமுடையதாக, வேதத்துக்குத் தரு

மத்தில் அவகாசமுடைய தாற்றித் துர்ப்பலமுடைமையின், அவ்வேதமா னது (அவகாசமற்றி) ஸ்மிருதிக்கிணங்கச் *சங்கோசஞ் செய்யப்படல் யுக்தமாம் எனின்,

(சித்தாந்தம்) நாம் அங்ஙனம் இல்லை என்பேம்; எதனால்? வேத் விரோதமில்லாத மனுஸ்மிருதிகளுக்கும் அவகாசதோஷம் நேருமாகலின்.

ஹிரண்யகர்ப⁴ம் பஶ்யத ஜாயமாநம் (தைத். ஆரணி. ௧௦. க௨. உ௮)

"இரண்ணியகருப்பர் பிறக்கக் கண்டனர்" என்று பிரத்தியக்ஷமாகப் பிர மத்தையே காரணமாகக் கூறும் சுருதிக்கிணங்க,

அப ஏவ ஸஸர்ஜாதௌ³ தாஸு வீர்யமவாஸ்ருஜத் (மனு. க. அ)

"ஜலங்களைத்தான் ஆதியிலே சிருஷ்டித்து, வீரியத்தை அதில் எறிந்தார்" என்றறிவுறுடக்கத்தனவாக (மனு) ஸ்மிருதி கூறலின், இந்த ஸ்மிருதி அநு மேயசுருதிமூலமாகிய சாங்கிய ஸ்மிருதியினும் சிரேஷ்டமுடையதாகப் பிர மாணிகர் கொள்வர். (க)

இதரேஷாம் சாநுபலப்³தே⁴: (உ. க. உ)

(க௬௦) பிறர்து ஸ்மிருதிகளில் அது காணப்படாமையின்.

சர்வஞ்ஞர்களாகிய மனுமுதலியோருடைய ஸ்மிருதிகளிலே கபிலர் கொண்ட பிரதானகாரணவாதம் அங்கிகரிக்கப்படாமையின், பிரதானத் தைக் (காரண) மாகக் கூறும் ஸ்மிருதியானது வேதத்தை முதலாகக் கொண்டதன்றெனக் கூறுவது யுக்தம். ஆகலின், சாங்கியஸ்மிருதிப்பிர காரம் வேதம் கூறிய முடிபைத் திரிவுபடுத்தல் கூடாது. (உ)

(உ) யோகப்பிரத்தியுக்தியதிகரணம்.

ஏதேந யோக³: ப்ரத்யுக்த: (உ. க. ங)

(க௬க) அதுகொண்டு யோகம் உத்தரமிறுக்கப்பட்டது.

யோகாங்கத்தைப் பிரதிபாதிக்கும் இரண்ணியகருப்பரது ஸ்மிருதி யும் பிரதானத்தையே காரணம் என உரைக்கின்றது. பிரதானத்தைக் காரணமாய்க் கூறும் சாங்கிய ஸ்மிருதி விரோதமுறுங்கால், இதற்கிசைய வேதம் திரிவுபடுத்தப்படல் வேண்டாம் எனின், ஆகுக.

அங்ஙனம் ஈண்டு இரண்ணியகருப்பஸ்மிருதிப் பிரகாரம் சுருதி திரிவு படுத்தப்படல் வேண்டுமா? அன்றா? என்பது சந்தேகம்.

---

* திரித்தல்.

(பூருவபக்ஷம்) கூறுதும். எங்ஙனமெனின்? சுவேதாசுவதரோபநிட த்திற் பிரமசாக்ஷாத்காரத்துக்குக் காரணமாக யோகவித்தை விரிவாக எங்ஙனங் கூறப்பட்டிருக்கின்றதோ, அங்ஙனமே சாங்கியஸ்மிருதியானது அநுமேயசுருதி மூலமாயிருப்பினும், பிரத்தியக்ஷசுருதியை மூலமாகக் கொண்டதும், பிரதானத்தைக் காரணமாய்க் கூறுவதுமாகிய இரண்ணிய கருப்ப ஸ்மிருதிப்பிரகாரம் பிரமத்தைக் காரணமாகக்கொண்ட சுருதிபாகம் மாற்றப்படவேண்டியது யுக்தமே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். யோகஸ்மிருதிக்கியைய சுருதியை மாற்றுதல் கூடாது.

॥ யொமஶ்சித்தவ்ருத்தி நிரோயஃ (பாதஞ்சலயோகம். க. உ)

"யோகமாவது சித்தநிவிர்த்தி நிரோதம்" என்று தொடங்கி, வைதிகாஷ்டாங்கயோகத்தைப் பிரதிபாதித்தன் மாத்திரத்திற்றான் அதற்குத் தாற்பரியமாமன்றி, பிரதானத்தைக் காரணமாகக் கூறும் அவைதிகத்திலன்று. இதிலே (பிரதானத்திலே) தாற்பரியமுளதாயின், சாங்கியஸ்மிருதி போல இதனையும் திரஸ்கரித்தலே நியாயம். ஆகலின், பிரதானத்தைக் காரணமாய்க் கொள்ளும் இரண்ணியகருப்பஸ்மிருதிக்கியையப் பிரமத்தைக் காரணமாகக் கூறுஞ் சுருதி மாற்றப்படமாட்டாதென்பது யுக்தமே. (ரு)

(ரு) நவிலக்ஷணத்துவாதிகரணம்.

பின்னரும் சாங்கியதர்க்கப்பிரகாரஞ் சுருதி திரிவுபடுத்தப்படமாட்டாதென்பதுபற்றி ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிப்பாராயினர்.

ந விலக்ஷணத்வாஃஸ்ய ததாத்வஞ்ச ஶப்தாத் (உ. க. ச)

(கசஉ) (பிரமம் பிரபஞ்சத்துக்குக் காரணம்) அன்று; அதற்கு விலக்ஷணமாய் இருத்தலின்; அது அப்படியிருத்தலும் (பிரமத்துக்கு வேறாயிருத்தலும்) வேதத்தினால் அறியப்படுகின்றது.

சாங்கியஸ்மிருதிப்பிரகாரம் சுருதி எங்ஙனந் திரிவுபடுத்தப்படாதிருக்கின்றதோ, அங்ஙனஞ் சாங்கிய தர்க்கப்பிரகாரம் அது (வேதம்) திரிவுபடுத்தற்பாற்று? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எப்பிரகாரத்தினும் பிரமகாரணவாதம் தர்க்கப் பிரகாரந் திரிவுபடுத்தப்படுவதாகும்; எங்ஙனமெனின்? பிரமமானது இந்தப் பிரபஞ்சத்தினின்று முற்றும் வேறானமையின், அது பிரமத்தின் காரியமாகாது; எங்ஙனம்? வேறுபாடெய்தியதேல், அது சுருதியினாலேயாம்.

விஜ்ஞானஞ்சாவிஜ்ஞானஞ்ச (தைத். உ. சு)

"விஞ்ஞானமும் அவிஞ்ஞானமும்" என்றற்றொடக்கத்த சுருதியானது பிரபஞ்சம் விகாராஸ்பதமாய் அவிஞ்ஞான முதலிய புருஷார்த்தரூபமில்லாததாயுள்ளதெனக் கூறுகின்றது. ஆகலின், சத்தியஞானானந்தரூபமுடைய பிரமத்தினின்று இது வேறாயிருக்கின்றது; அவ்விரண்டும் கோவும் மகிஷமும் போலிருப்ப, அவை காரணமும் காரியமுமாக எங்ஙனம் கூறப்படும்? (௪)

அபிமாநி வ்யபதேஶஸ்து விஶேஷாநுகதிப்யாம் (௨. ௧. ௫)

(௧௪௩) ஆனால் விசேஷத்தினாலும் சேர்க்கையினாலும், அது அபிமானியையுற்றுக் கூறுகின்றது.

(பூருவபக்ஷத்துக்கு விரோதமாய ஆக்ஷேபம்) பிரபஞ்சமானது அசேதனமாதல்பற்றி அது சேதனப் பிரமத்தினின்று வேறுமாயின்,

தத் ப்ருதிவ்யப்ரவீத் (தைத். சங். ரு. ரு. ௨)

"அவருக்குப் பிருதிவி சொல்லிற்று,"

ஆபோ வா அகாமயந்த (தைத். பிராம. ௩. ௧. ௫. ௪௫)

"ஜலங்கள் மெய்யாய் விரும்பிய,"

ஶ்ருணோத க்ராவாணோ விதுஷ: (தைத். சங். ௧. ௩. ௧௩)

"புத்தியுள்ள கற்களே! கேளுங்கள்" என்றற்றொடக்கத்தனவாகப் போந்த வாக்கியங்களிலே (ஜடப்பொருள்கள்) சேதனமாகக் கூறப்படுதல் எங்ஙனம்? ஆகலின், இவ்வுலகமனைத்துஞ் சேதனம். அதுகொண்டு பிரமமும் பிரபஞ்சமும் சேதனாசேதனரூபத்தில் வேறுபாடின்றாம் எனச் சங்கித்தல் கூடாதாம் எனின்,

(பூருவபக்ஷியின் உத்தரம்) அங்ஙனங் கூறல் யுக்தமன்று. யாண்டுஞ் சேதனகாரியம் கூறப்படுவது அதின் அபிமானிதேவதா விஷயம் என்றேயறியப்படுகின்றது;

ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா: (சாந். ௬. ௩. ௨)

"ஆ! நான் மூன்று தேவதைகளையும்" என்றதிலே தேவதாசப்தவிசேஷமுண்மையானும்,

அக்நிர்வாக்பூத்வா முகம் ப்ராவிஶத் (ஐத. ௨. ௪)

"அக்கினியானது வாக்காகி முகத்திற் பிரவேசித்தது" என்றற்றொடக்கத்தவற்றான், அசேதனப் பொருளோடு அபிமானிதேவதையும் உடன்சேர்ந்திருத்தலானுமாம்; ஆகலின், அசேதனத்துவமுதலியவற்றினாலே உலகும் பிரமத்துக்கு விலக்ஷணம். இங்ஙனம் உலகத்தைக் காரியமாகவும் பிரமத்தைக் காரணமாகவும் ஆக்கும் யுக்தி ஒழிக்கற்பாற்றே. (௫)

ஓூஶ்யதெ தூ (உ. க. கூ)

(கசச) ஆனல் அது காணப்படுகின்றது.

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிரமமும் பிரபஞ்சமும் விலக்ஷண மாயினும் அவற்றுக்குக் காரியகாரணவியல்பு எய்துகின்றது. அசேதன மாகிய கோமயத்தினின்று சேதனமாகிய விருச்சிகம் பிறக்கக் காண்டலா னும், சேதனனாகிய புருஷனிலிருந்து அசேதனமாகிய உரோம முதலியன வளரக் காண்டலானுமாம். ஆகலின், சுருதிசமந்வயமானது சுஷ்கதர்க்கத் தினாற் பாதிக்கப்படமாட்டாதென்பது துணிபு. (௬)

பின்னரும் ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றார்.

அஸதிதி செனு ப்ரதிஷெயமாத்ரத்வாத (உ. க. எ)

(கசரு) (காரியம்) அசத்து எனின் அன்று; மறுத்தல் மாத்திரமுண்மையின்.

(ஆக்ஷேபம்) இங்ஙனம் காரியகாரணம் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறாதலின், காரணத்திற் காரியம் இல்லையே; அங்ஙனம் சுருதியும்

அஸதூா இதமகூ ஆஸீத (தைத். உ. எ)

"அசத்துத்தானே முதற்கண் இருந்தது" என்று கூறுகின்றதெனின்,

(உத்தரம்) அங்ஙனங் கூறுவது அடாது; காரணமும் காரியமும் ஒரே இலக்ஷணமுடையவாகவே இருக்கவேண்டுமென்பதை மறுத்து அச் சுருதி கூறினமையின்; அதுகொண்டு காரியமும் காரணமுமாகிய பிர பஞ்சமும் பிரமமும் ஒரே வஸ்து என்பதினின்றிழுக்காதே. (எ)

(ச) அபீதியதிகரணம்.

அபீதௌ தத்வத்ப்ரஸங்காத ஸமஞ்ஜஸம (உ. க. அ)

(கசசு) பிரளயத்தில் அங்ஙனமிருத்தல் (பிரமம் ஜகத் தைப் போலிருத்தல்) நேர்தலின், பொருத்தம் அன்று.

சற்காரியவாதத்தினாலே காரிய காரணமாகிய உலகமும் பிரமமும் ஒரே வஸ்துவாமாயின், வேதசமந்வயம் தர்க்கவாயிலாக ஒழிக்கப்படுவதா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது தவிர்க்கப்படல் வேண்டும்; என்னை? உலக மும் பிரமமும் ஒரே வஸ்து என்று கூறப்படுதலான். அங்ஙனமாயின், பிரபஞ்சத்தைப்போல, பிரமமும் விகார அஞ்ஞானமுதலிய இழிவுகளுக் கிரையாததாய் முற்றுகின்றது. ஆகலின், வேதாந்த வாக்கியங்களெல்லாம்

பொருந்தாதாகின்றன. அதுபற்றி இந்த வேதாந்த வாக்கியப்பொருள் நியாயநெறியினால் வாதிக்கப்படுவதாம். (அ)

ந து த்ருஷ்டாந்தபாவாத் (௨. ௧. ௯)

(௯சூ) ஆனால் அன்று; (சமான) திருஷ்டாந்தமுண்மையான்.

"அன்று" (ந) என்றது பூருவபக்ஷம் ஒழிக்கப்படல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

யஸ்யாத்மா ஶரீரம் (மத்தியந்தினசாகை)
யஸ்யாவ்யக்தம் ஶரீரம் |

"எவர்க்கு ஆன்மாச் சரீரம்; எவர்க்கு அவ்வியக்தம் சரீரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளானும்,

விஶ்வம் தேவதேவஸ்ய விஶ்வேஶஸ்ய சராசரம் |
யதசேஷம் ந ஜாநந்தி பஶவ: பாஶகௌரவாத் ||

(வாயு. உத். சூ: க)

"சரமும் அசரமுமாகிய இந்த உலகம் தேவாதிதேவரது சரீரம்; பாசமிகுதியினாற் பசுக்கள் இப்பொருளை அறியா" என்றற்றொடக்கத்த புராணவாக்கியத்தினாலும், சித்தும் அசித்துமாகிய சேதனத்தையும் அசேதனத்தையும் சரீரமாகவுடைய பரப்பிரமசிவனார் காரியமாயும் காரணமாயும் நிலையுறினும், குணதோஷங்களைப் பகுக்குமிடத்துத் திருஷ்டாந்தமுண்மையின் வேதாந்த வாக்கியமனைத்துஞ் சாமரசியமாகப் பொருத்தமுறுவனவாயின. எங்ஙனமெனின்? சரீரத்தோடு கூடிய மனிதர் முதலாயினோரது ஆன்மாவுக்குப் பாலிய, யௌவன, விருத்தாவஸ்தைகள் நிகழினும், பாலத்துவ முதலியன சரீரத்துக்குமாத்திரமே; இன்பமுதலியன ஆன்மாவுக்கே; அங்ஙனம் ஈண்டும் சரீரமாகிய சேதனசேதனப் பொருள்களிலே நிகழும் அஞ்ஞானம் விகார முதலிய தீமைகள் சரீரமாய் அமைந்த சேதனசேதனங்களுக்கே உரியவாம். அவயவமின்மை, அவிகாரித்துவம், சர்வஞ்ஞத்துவம், சத்தியசங்கற்பத்துவம் என்னுங் குணங்கள் ஆன்மாவாயுள்ள சிவபெருமானுக்கேயாம். இங்ஙனம் திருஷ்டாந்தவுண்மையாற் பிரமத்தையுற்றுக் கூறிய சுருதியிற் பொருத்தமின்மை இன்றே." (௯)

ஸ்வபக்ஷதோஷாச்ச (௨. ௧. ௧௦)

(௧௦சூ) தனது பக்ஷத்தின் தோஷத்தினாலும்.

தர்க்கத்தை மாத்திரம் அவலம்பிப்பின் தன்பக்கத்திற் பிரதானவாதிமிருதிலே நிர்விகாரபுருஷச் சந்நிதிப்பாற்படுத்தப் பிரகிருதி பிரவர்த்திக்கும்

கால், அன்னியோன்னிய தரும அத்தியாசம் கூறவியலாது; ஒன்றில் மற்றொன்றின் தர்மத்தை நினைப்பதாகிய அத்தியாசம் நிர்விகாரபுருஷனுக்கு எய்தாது. அசேதனமாகிய பிரகிருதிக்கும் நினைத்தலாகிய அத்தியாசம் எய்தாதே. ஆகலின், பிரதானகாரணவாதமே தர்க்கத்தினற் றவிர்க்கப் படுவதாம். (க௦)

𑌤𑌰𑍍𑌕𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 (உ. க. கக)

(௩௪௬) தர்க்கம் ஸ்தாபிக்கப்படாமையின்.

தர்க்கம் ஸ்தாபிக்கப்படாமையானும், பிரதானகாரணவாதம் அதனைப் பிரமாணமாகக் கொண்டமையானும், ஆண்டுப் பிரதிதர்க்கம் நேர்தலானும் பிரதானவாதம் வாதிக்கப்படுவதன்றிப் பிரமகாரணவாதம் வாதிக்கப்படுவதன்று. (கக)

𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌮𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌦𑍇𑌵𑌮𑌪𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃।

(உ. க. கஉ)

(௩௫௦) வேறு பிரகாரமாய் அனுமானிக்கலாம் எனின், மின்னரும் மீட்சியின்மை நேர்கின்றது.

பிரதிதர்க்கத்தினற் றவிர்க்கப்படுவது நேராவண்ணம் வேறு பிரகாரமாய்ப் பிரதானத்தை அனுமானிக்கலாம் என்னும் வாதமும் யுக்தமன்று; ஆண்டுப் பிரதிதர்க்கத்தின் கலகம் நேர்தல்பற்றி, நிலையின்மை என்னும் குற்றத்தினின்று நீங்காமையே நேர்கின்றது. அதுபற்றிச் சுஷ்கதர்க்கத்தை மூலமாய்க்கொண்ட பிரதானகாரணவாதம் ஒழிக்கப்படுமேயன்றிப் பிரபல சுருதிப்பிரமாணத்தினற் சித்தித்த பிரமகாரணவாதம் ஒழிக்கப்படுவதன்றென்பது யுக்தம். (கஉ)

(ரு) சிஷ்டாபரிக்கிரகாதிகரணம்.

𑌏𑌤𑍇𑌨 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾 𑌅𑌪𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 (உ. க. கங)

(௩௫௧) இதனல் (சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்படாத) ஏனை மதக்கோட்பாடுகளும் (தவிர்க்கப்பட்டன என்று) விளக்கப்பட்டன.

தர்க்கத்தை மூலமாய்க்கொண்ட சாங்கிய தரிசனம் நிலையின்மை முதலிய பற்றி எங்ஙனம் ஒழிக்கப்பட்டதோ, அங்ஙனம் அதேகாரணத்தினற் கணாதர், அக்ஷபாதர் முதலாயினேர் பரபக்ஷங்களும் ஒழிக்கற்பாலனவென்க் கோடற்பாற்று. அஃதாவது கணாதர் முதலியோர் மதத்திற் சித்தித்த பரமாணுகாரணவாதமும் நிராகரிக்கப்பட்டதென்பது [illegible]

(சு) போக்திராபத்தியதிகரணம்.

ஹொக்த்ராவஒெத்ராவிஹாமெஸ்ராெொகவத (உ. க. கச)

(கருஉ) அவர் போக்தா ஆகவேண்டுதலின் வேற்றுமை இல்லையாலோ எனின், உலகத்திலே போல (வேற்றுமை) ஆகுக.

முன்னரே சிதசித்பிரபஞ்ச விசிஷ்டான்மாவாகிய சிவபெருமான் தாமே அத்துவிதீயராய்க் காரணமும் காரியமும் ஆவர் என்று விசிஷ்ட சிவாத்துவைதங் கூறப்பட்டது. அந்த வேத சமந்வயசித்தமாகிய யுக்தி தவிர்க்கப்படுவதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிதசித்பிரபஞ்சத்தைச் சிவபெருமான் சரீரமாகவுடையர் என்று அங்கீகரிப்பின், அப்போது சரீரமுடையர் என்பது இவர்க்குச் சித்தித்தது. அங்ஙனமே, ஆன்மாப்போல அவர் சரீரமுடைமையாற் சரீர சம்பந்தமாகிய சுகதுக்கமுடையராவர்; ஆகலின், சம்சாரியாகிய ஆன்மாவுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடின்று. இவன் ஆன்மா இவர் சிவன் என்று பிரித்துக் கூற இயலாது. சிவபெருமான் ஜகத்விசிஷ்டராயிருக்கின்றனர் என்னும் வாதத்திலே அவர் தோஷமின்மையும் நிர்விகாரத்வமும் உடையர் என்று கூறுவது அடாதென்று பூருவபக்ஷி கொள்கின்றான் என,

(சித்தாந்தம்) ஆண்டு விரோதமில்லை. உலகத்திலே சரீரமுடையனாயினும் அரசனானவன் பிறன் ஒருவனுக்கு வசப்படாதவனாய், தனது ஆணைக்கு அடங்காமை காரணமாக நேரும் அநிஷ்டத்துக்கு ஆளாகாமை பற்றி அவனது போக்திருத்துவம் பிறரது போன்றிராமை போல, சிவபெருமான் நிஷ்களங்க சமஸ்த மங்கலகரராயிருத்தலின் அவர் ஆன்மாவினின்று வேறுபடுவர். பராதீனராயிருந்தாலன்றிச் சரீரவுண்மைபற்றித் தோஷத்துக்காளாகார்.

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசாநீசௌ (சுவே. க. கூ)

"அறிஞனும் அறிவிலனுமாம் இருவரும் பிறவாத ஈசனும் அநீசனும்" என, சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்கும் சுவாதந்திரியமும் அசுவாதந்திரியமும் உள என்பது தாமே சித்தித்ததே. ஆகலின், சுவதந்திரராகிய சிவபெருமானும் அசுவாதந்திரனாகிய ஆன்மாவும் சமமாகச் சரீரமுடையரேனும் பேதமல்லவென்றில்லை. ஆகலின், விசிஷ்டாத்துவைதத்துக்கு ஹானி இல்லை. (கச)

(எ) ஆரம்பணாதிகரணம்.

சுவாதந்திரியம் அசுவாதந்திரிய முதலிய விருத்த குணங்கள் இருத்தல்பற்றி ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் வேறுபாடிருப்பினும், தனி

காரணராகிய அவ்விருவர்க்கும் அநந்நியத்துவமும் வேறுபாடின்மையும் சித்திக்கின்றனவேயென்று (சூத்திரகாரர்) கூறுகின்றார்.

தத³நந்யத்வமாரம்ப⁴ணஶப்³தா³தி³ப்⁴ய: (௨. ௧. ௧௫)

(௧௫௩) அவ்விருவரும் அனன்னியர், ஆரம்பணமுதலிய சப்தத்தினால்.

ஈண்டுச் சுருதிகள் ஒரேபிரகாரமாகக் கூறும் காரிய காரணமாகிய பிரபஞ்சமும் பிரமமும் வேறில்லை எனக் கோடல் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

சேதனத்துவ அசேதனத்துவரூப விருத்தகுணமுடைமைபற்றி ஒன்றுக்கொன்று விலக்ஷணமாதலினாற்றான் இச்சந்தேகம் உளதாயிற்று.

(பூருவபக்ஷம்) அவ்விரண்டும் அநந்நியமாதல் எங்ஙனம் கூறற்பாற்று? சிவபெருமான் சர்வஞ்ஞதாதி குணமுடைமையானும் ஆன்மா அஞ்ஞானமுடைய போக்தாவாயிருத்தலானும், அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் வேற்றுமையுடையர் என மேலைஅதிகரணத்திற் காட்டப்பட்டது. சித்தும் அசித்துமாகிய வஸ்துக்கள் இரண்டுக்கும் மிகுதியும் வேறுபாடிருத்தலின், அவ்விரண்டும் அனன்னியத்துவம் என்னும் கதைதூரத்தில் ஒழிக்கற்பாற்றே. காரியகாரணமாயிருத்தல் வேற்றுமையின்மைக்குச் சாதகமாகாது; கோமயம் விருச்சிக முதலிய காரணகாரியமாயிருப்பினும் வேறாகக் காணப்படலான். கடம் மட்பிண்டமுதலியவைகளினும் அர்த்தம் கிரியை முதலிய வியவகாரங்களில் வேற்றுமைபற்றி அபேதமில்லை. இன்றேல், காரியமும் காரணமும் அத்தியந்த அபேதமாகுமிடத்துப் பிரபஞ்சமும் பிரமமும் ஒன்றாதலின், யாண்டும் கர்த்தா கர்மம் கிரியை முதலிய வியவகாரம் இல்லையாகும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். காரியமாகிய பிரபஞ்சம் காரணமாகிய பிரமத்தினின்று வேறின்றே; அது எங்ஙனம் அறியப்படுகின்றது? எனின்,

வாசாரம்ப⁴ணம் விகாரோ நாமதே⁴யம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் ॥
(சாந். ௬. ௧. ௪)

"வாசாரம்பணமானது விகார நாமதேயம்; மிருத்திகை என்பதுதான் உண்மை"

(ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீதே³கமேவாத்³விதீயம் (சாந். ௬. ௨. ௧)

"சத்துத்தானே, புதல்வனே, முதற்கண் இருந்தது, இது ஏகமாயே இரண்டாவதற்றதாய் இருந்தது"

ததை³க்ஷத ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய (சாந். ௬. ௨. ௩)

"அது நான் அநேகமாய் ஆவேன் என்று சங்கற்பித்தது"

ஐதடாத்மிதம் ஸவ்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்வமஸி।
(சாந். சு. அ. எ)

"இவையெல்லாம் அவரையே ஆன்மாவாகக் கொண்டன; அது சத்தியம்; அது (பரம) ஆன்மா; சுவேதகேதுவே, அது நீயாகின்றனை"

விஶ்வம் பூதம் புவநம் சித்ரம்பஹுதா ஜாதம் ஜாயமாநஞ்ச யத்ஸர்வோஹ்யேஷ ருத்ர: (தைத். ஆரணி. க௦. உச. சஉ)

"அநேகமாக ஆனவும் ஆகப்போகின்றனவுமாகிய எல்லா உலகமும், விசித்திர புவனமுமாம் இவை யெல்லாம் உருத்திரர்" என்னுஞ் சுருதிகளினாற் பெறப்படுகின்றது. (கஙு)

காரியம் காரணமாயிருத்தல் வேறுபாடின்மைக்குச் சாதகமாகா தெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

பாவே சோபலப்தே: (உ. க. கசு)

(கஙுச) (காரியம்) இருக்குமிடத்தும் (காரணம்) புலப்படுதலான்.

கடமுதலிய காரியமாக இருக்குமிடத்தும், அதே மட்பொருள் கடமென்றறியப்படுகின்றது. ஆகலின், காரணத்தினின்றும் காரியம் அநன்னியமே.

வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்।
(சாந். சு. க. க)

"வாசாரம்பணம் விகாரமும் நாமதேயமுமாம்; மிருத்திகையென்பதுதான் சத்தியம்" என்னுஞ் சுருதியினாலுங் கூறப்படுகின்றது. அஃதாவது, விகாரமும் நாமதேயமும் ஒருபொருளையுற்றுப் பேசவும், அதன் கிரியாரூபவியவகாரஞ் செய்யவும் வாய்ந்தனவாகின்றன. மண் திரவியமே; கடமுதலிய ரூபமாகிக் கடமுதலிய பெயரைப் பெறும்போது, அது ஓர் காரியத்துக்கு உதவவும், அவ்வுருவத்தையுற்றுப் பேசவும் உதவுகின்றது. வாஸ்தவத்திற் கடமுதலியன மண் என்பதே பிராமாணிக சத்தியம்; மண் ஒழிந்து கடம் காணப்படாமையின். இன்றேல் வாசாரம்பணம் விகாரம்; விகாரமாகிய கடம் வாசாரம்பணம். இது கடமென்பது வாசாரம்பவிஷயமாத்திரமாயுள்ளது. மண் திரவியந்தான்; வியவகாரசித்தியின் பொருட்டுப் பிறக்கும் மற்றோர் அவஸ்தை. ஆனால் மண்ணைத்தவிர வேறு பொருளில்லை. (கடத்திலே) மண் என்று கூறப்படும் நாமதேயமே சத்தியம். கடமுதலியவற்றை மண்ணெனக்கொண்டுதான், ஆண்டும் அனைத்தும் மட்குடமுதலிய பெயரை

யுடைத்தாதல் சத்தியம். (மண்) உண்மையான பொருளாயிருத்தலிற் சத்தியம்; ஆயின் வேறொரு பொருளெனக்கொண்டன்று, ஏனெனிற் கூடம் மண் எனவே கூறத்தகும். அதுபற்றிக் காரியம் காரணத்தினின்று வேற்றுமையிலது. மண்ணும் கடமும் ஒரேபொருளாயினும் தாரியாதி வியவகாரபேதம் அவஸ்தாபேதத்தினால் நேர்கின்றதே. ஆகலின், மண்ணும் கடமும் போலப் *பிரமமும் பிரபஞ்சமும் வியாபகவியாப்பியபாவத்தினால் அநன்னியம் என்க.

ஸத்த்யாதி ச வ்யாப்தம் ஶிவதத்த்வஸமுத்பவம்।
தேநைகேந து தத்வ்யாப்தம் ம்ருதா கும்பாதிகம் யதா॥

(வாயு. பூ. உ௫. கஅ)

"சத்திமுதற் பிருதிவியந்தம் சிவதத்துவத்தினின்றும் உற்பத்தியாயிற்று; கும்பமுதலியன மண்ணினால் வியாபிக்கப்பட்டாற் போல, அவர் ஒருவரால் (சிவபெருமானால்) அது வியாபிக்கப்பட்டது" எனப் புராணமும் கூறுகின்றது.

(ஆக்ஷேபம்) இந்தக் கடம் மண் என்றவிடத்து, மண்ணின்வியாத்தி கடத்திலே புலப்படுமாறு போல, இந்தப் பிரபஞ்சம் பிரமமென்றவிடத்துப் பிரமத்தின் வியாத்திகாணப்படவில்லையே எனின்,

(உத்தரம்) "இருக்கும் கடம்; இருக்கும் படம்" என யாண்டும் சத்ரூபமாகிய பிரமத்தின் வியாபகங்காணப்படுகின்றது. உலகமானது சத்சித்ரூபமான சிவபெருமானால் வியாபிக்கப்படாதவிடத்து, இருத்தல் அறிதல்கள் அற்று, இருக்கிறதென்பதும் தோற்றுகிறதென்பதும் எங்ஙனம் காணப்படும்? வஸ்துவின்மையே நேரும்; ஆகலின் மட்கடமுதலியபோலக் காரணமாகிய சிவபிரானாற் காரியமாகிய பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டு அவரோடு வேறிலதாயிருக்கின்றதெனச் சித்தித்தது. (கசு)

ஸத்த்வாச்சாவரஸ்ய (உ. க. கஎ)

(கருரு) பின்னுள்ளது (முன்) உளதாதலினாலும்.

காரியம் காரணத்தில் உளதாதலின், காரியம் காரணத்தினின்று அநன்னியம். கட சராவமுதலியன முன்னரோதானே மண்ணிருந்தமையின், கடமுதலியன மண் என அறியப்படுகின்றதன்றோ. (கஎ)

அஸத்வ்யபதேஶாந்நேதி சேந்ந தர்மாந்தரேண வாக்யஶேஷாத் (உ. க. கஅ)

(கருசு) அசத்தெனக் கூறப்படலாலெனின், அன்று; வாக்கிய சேடத்தினாலும், யுக்தியினாலும், வேறு வாக்கியங்க

*பராபரவிபாகோ நஸ்தி ஸத்யம் விஶாலாக்ஷி

(சர்வஞ்ஞானோத்தரம்)

னிறைலுங் காட்டப்பட்டவாறு, அது மற்றோர் தருமத்தோடுற் றமையாலாம்.

(ஆக்ஷேபம்)

இத³ம் வா அக்³ரே நைவ கிஞ்சநாஸீத்।

(தைத். பிரா. உ. உ. கூ. ௰)

"ஈதொன்றும் முதற்கண்ணே இருந்திலது" என்னுஞ் சுருதி காரியம் காரணத்தில் முதற்கண் இருந்திலது என்று கூறலின், காரியம் காரணத்தில் இன்றுமெனின்,

(உத்தரம்) அன்று; பிரபஞ்சமானது ஸ்தூலத்துக்கு மாறுகிய சூக்கும ரூப தருமத்தோடிசைந்தமையினால், "அசத்" என்று கூறப்பட்டதன்றி, இல்லை என்றமையான் அன்று. எதனால்?

தத³ஸதே³வ ஸந்மநோऽகுருத ஸ்யாமிதி (தைத். பிரா. உ. உ. கூ. ௰)

"அசத்தாயிருந்தபோதே நான் ஆகுக என்று சங்கற்பித்தது" என்னும் வாக்கியசேஷத்தினால், சங்கற்பமும் சத்பொருளுக்கேதான் ஆகும். அங்ஙனமே அவஸ்தாரூபமாக இருந்தமைபற்றி அசத்தெனப்பட்டதென்று கொள்ளும் யுக்தியும் பெறப்படுகின்றது. ஒன்றுக்கொன்று மாறுபடும் இயல்புடைய பிண்டத்துவ, கடத்துவ, கபாலத்துவரூபமாயிருக்கும் தர்மங்களுடன் முன்னர்க் கடம் இருந்திலது, இப்போதுள்ளது, பிற்போதிராது என்றவிடத்து, எக்காலத்துமுள்ள மண் திரவியத்தை அசத்து முதலியவாகக் கூறுமிடத்து, அதற்கு வேறாக மற்றோர் அபாவம் இல்லை என்பதாம்; அஃதாவது, அசத்தென்னும் நாமம் பற்றிய மற்றோர் அவஸ்தை (தருமம்) கற்பிக்கற்பாற்றென்பது; இதுபற்றியே,

தத்³தே⁴த³ம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் தந்நாமரூபாப்⁴யாமேவ வ்யாக்ரியத (பிரு. க. ச. எ)

"இது அப்போது பிரிவற்றிருந்தது; பின்னர் நாமரூபமாக விரிவுறப்படுகின்றது" என்றற்றொடக்கத்தனவாக அபிப்பிராயம்பற்றிய பிற சுருதிகளும் உள்ளன. முன்னர்த் தமக்கு அபின்னமாய நாமரூபவிபாகத்துக்கு அநர்ஹமாகிய சூக்கும சிதசித்ரூப பராசத்தியை அடக்கிய சிவபிரானார் தனியே இருந்தனர். பின்னர் முந்திய நிலைமைக்கு மாறாக ஸ்தூலமாகிய நாமரூபவிபாகத்துக்கு அர்ஹமாய்ச் சிதசித்ரூபமாகிய அப்பெற்றியதாய சத்தியைப் புறத்தே விரிக்கின்றனர். அப்பொழுது சத்தியையுடைய சிவபிரானாரது சங்கோச அவஸ்தை பிரளயம்; விகாச அவஸ்தை சிருட்டி. இது பற்றியே,

[illegible]

யொதீவ நிரூவாதா நடேவ-ஜாதஂ வ்ருகாஶயெஷ॥

"உபாதானமொன்றுமின்றி யோகி போலச் சிதான்மாவாகிய தேவர் இச்சாவசத்தினாலே தமது அகத்துள்ளதைப் புறத்து வெளிப்படுத்துகின்றனர்" என்று கூறும் ஆப்தவசனமும் உளது. அஃதாவது, தமக்கு வேறாக ஓர் உபாதானம் வேண்டாது தாமே உபாதானமாகின்றனர் என்பதாம். ஆகலின், பரமகாரணராகிய பரப்பிரமசிவபிரானினின்று வேறாகாத உலகம் காரியமே. (கஅ)

மற்றோர் நிதர்சனங் கூறப்படுகின்றது.

வடவத்து (உ. க. கக)

(கநஎ) *படம் போலவும்.

சுருக்கும் போது சூக்குமரூபமாயிருந்த படமானது விரிக்கும் போது அவ்வாறு மகாபடமாய்க் குடிசைரூபமாகிய காரியமாய் ஆகின்றவாறு போல, பிரமம் சங்குசிதாவஸ்தையிற் காரணமாய், பிரசாரிதாவஸ்தையிற் காரியமுமாகின்றது. (கக)

யயா ச வ்ராணாதிஃ (உ. க. உ0)

(கநஅ) பிராணாதி போலவும்.

வாயு ஒன்றே கிரியாபேதத்தினாற் பிராணன் முதலிய பல பேதம் அடைதல் போல, பிரமம் ஒன்றே சத்தி வியாபாரபேதத்தினாற் †சதாசிவ முதலிய ரூபபேதத்தையும் அடைகின்றது. ஆகலின், காரணமாகிய பிரமத்தினின்றும் அநன்னியமாயுள்ளது காரியமாகிய உலகம் எனல் யுக்தம். (உ0)

மேலே கூறப்பட்ட அர்த்தத்தைச் சூத்திரகாரர் ஆக்ஷேபித்துச் சமாதானங் கூறுகின்றனர்.

இதரவ்யபதேஶாத்தாகரணாதி தோஷ வ்ரஸக்திஃ (உ. க. உக)

(கநக) மற்றொன்றோடு இருப்பதாகக் கூறப்படலான், இதத்தைச் செய்யாமை முதலிய தோஷம் எய்துகின்றது.

(ஆக்ஷேபம்)

தத்வமஸி (சாந். சு. அ. எ)

"அது நீயாகின்றனை"

---

* இப்பிரமசூத்திர நீலகண்டபாஷ்யத்திருந்தே 'படம்' குடிலாம் உவமையை எடுத்து ஸ்ரீஅருணந்திசிவாசாரியர் சித்தியார் க. உச-ல் "புகழ்ந்திடும் விருத்தியாகும் படங் குடிலானாற் போல" என்றார்.

† இந்தச் சதாசிவர் சாதாக்கிய தத்துவத்தினராமன்றி, சிவதத்துவத்தின் பாற்பட்ட பரப்பிரமதிஷ்டான மஹாசதாசிவராவாரென்க.

ஐயமாத்மா ப்ரஹ்ம (பிரு. ச. ரு. கக)

"இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்தவற்றிற் காரியமாகிய ஆன்மா காரணமாகிய பிரமமென்று கூறப்படலான், அவ்விரண்டும் வேறில்லை எனக் கூறப்பட்டது. இங்ஙனமாகுங்கால், சர்வஞ்ஞரும் வியாபகருமாகிய சிவபெருமான் உலகத்தைப் படையாமை அவர்க்கு நன்மையாகவும், அதனைப் படைத்தல் அவர்க்குத் தீங்காகவுமன்றோ நேர்கின்றது. ஆகலின், சர்வஞ்ஞரும் சத்தியசங்கற்பருமாகிய சிவபெருமான் தம்மினின்று வேறுபடாத ஆன்மாவினது தாபத்தைத் தம்முடையதென்று அறிந்தும் சம்சாரநிமித்தமாயுந் தீதாயுமுள்ள சிருட்டியை எங்ஙனம் முயன்று இதமாகிய சிருட்டியாமையை விடுத்தனர்? அதுகொண்டு ஆன்மா அநன்னியமாயிருக்கும்போது, தமக்கு இதமாயுள்ளதைச் செய்யாமையானும் அகிதமாயதைச் செய்வதானும், அறிவு சூன்னியராதன் முதலிய தோஷஞ் சிவபெருமானுக்கு எய்துகின்றன; அதுபற்றி, காரியகாரணராம் ஆன்மாவுஞ் சிவபெருமானும் அநன்னியமாதல் அயுக்தமே எனின், (உக)

(உத்தரம்) யுக்தம் எனக் கூறப்படுகின்றது.

அயிகஂது ஹேதநிர்தேஶாத் (உ. க. உஉ)

(கஅ௦) ஆயின் (காரணம்) சிரேட்டம்; பேதங் கூறப்படலான்.

காரியமும் காரணமும் அநன்னியமாயினும்,

விஶ்வாயிகோ ருத்ரோ மஹர்ஷி꞉ (தைத். ஆரணி. க௦. கஉ. உஅ)

"உலகங்களுக்கெல்லாஞ் சிரேட்டர் மகர்ஷியாகிய உருத்திரர்" என்று சுருதி கூறுதலான், ஈண்டுக் காரியமாகிய சிதசித்பிரபஞ்சத்தினின்று காரணஞ் சிரேட்டமென்று அறியப்படுகின்றது. அங்ஙனம் பின்னர்ப் போதருஞ் சுருதிகளினாலே, பேதநிர்த்தேசம் என்று சூத்திரம் கூறினமையின், ஆன்மாவும் சிவபெருமானும் வேறென்று காட்டப்படுகின்றனர்.

வித்யாவித்யே ஈஶதே யஸ்து ஸோऽந்ய꞉ (சுவே. ரு. க)

(க) "வித்தையையும் (ஆன்மாவையும்) அவித்தையையும் (அசேதனத்தையும்) ஆளும் ஈசுரர் வேறு"

க்ஷராத்மானாவீஶதே தேவ ஏக꞉ (சுவே. க. க௦)

(உ) "(பிரதானமாகிய) க்ஷரத்தையும் ஆன்மாவையும் தேவர் ஒருவர் ஆளுகின்றனர்"

ப்ருதகாத்மானம் ப்ரேரிதாரஂ ச மத்வா (சுவே. க. சு)

(ங) "ஆன்மாவையுஞ் செலுத்துபவரையும் வேறு என நினைத்து,

| ஊாவஸ்வுணா ஸயுஜா ஸவாயா (சுவே. ௪. ௬)

(௪) "பிரியா நண்பினோடு இரு அழகிய பக்ஷிகள் (ஆன்மா பரமான் மாக்கள்)"

ஜெ ஸ்ரூஜணீ வெஷிகவெ ஊாஜூாஊாஜ (மைத். ௬. உஉ)

(ரு) "பரமும் (பரமான்மாவும்) அபரமும் (ஆன்மாவுமாகிய) இரு பிரமங்களும் அறியற்பாலன"

ஜூா zஜெூள ஊாவஜாவீஶாநீமெஶள (சுவே. க. ௯)

(௬) "பிறவாதவராகிய அறிஞனும் அஞ்ஞனுமாம் இருவரும் (முறையே) ஈசரும் (சிவபிரானும்) அநீசனுமாம் (ஆன்மாவுமாம்)"

நிெகூா நிகூாநா நெஞகநவெூநாநாஂ (கட. ரு. ௧௩)

(எ) "அவர் நித்தியப்பொருள்களுள்ளே நித்தியரும், சேதனப்பொருள்களுள்ளே சேதனரும்"

அஜஃ ஊவிஷூாஸா ஜநாநாஂ (தைத். ஆரணி. ௩. ௧௧. உ௧)*

(அ) "அவர் (பரமான்மா) ஜனங்களுள்ளே (ஆன்மாக்களுள்ளே) பிரவேசித்து, அவைகளை ஆளுபவராயினர்"

ஶாயாஜூ ஊகூஜிஂ விஜூநாயிநஜூ ஜெஹஶூாஂ।

(சுவே. ௪. ௧௦)

அஸாநாயீ ஸாஜெத விஶ்வமேதத்தஸ்மிஂஶ்சான்யோ மாயயா ஸந்நிருத்தஃ।

(சுவே. ௪. ௯)

(௯) "மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசர் என்றும் அறிக;" "இதினின்று மாயியானவர் இந்த விசுவத்தைச் சிருட்டிக்கின்றனர்; அதிலே மற்றது (ஆன்மா) மாயையாற் கட்டுண்டது"

ஜுஷ்டஂ யதா பஶ்யத்யந்யமீஶஂ (சுவே. ௪. எ)

(௧௦) "அன்னியமாகிய இன்பமுடைய ஈசரை ஆன்மா காணுங்கால்"

ஊயாந கெஷத்ரஜ்ஞபதிர்குணேஶஃ (சுவே. ௬. ௧௬).

(௧௧) "பிரதானம் ஆன்மா என்னும் இரண்டிக்கும் பதியாகிய குணங்களையுடைய ஈசர்"

யெஷாமீஶெ பஶுபதிஃ பஶூநாஂ (தைத். சங். ௩. ௧. ௪. ௩)

(௧உ) *"இந்தப் பசுக்களைப் பசுக்களுக்கு (ஆன்மாக்களுக்கு) பதியாயினர் ஆளுகின்றார்" என்றற்றொடக்கத்த அனந்த சுருதிகளாற் சிவபெரு

*இங்ஙனம் உதகரிக்கப்பட்ட பன்னிரு சுருதிகளும் இவைபோன்ற ஏனைய அளவிலாச் சுருதிகளும் ஆன்மாவும் (பசுவும்) பரமான்மாவும் (பதியும்) வேறென்

மான் என்று மற்றோர் நாமம் பூண்ட பிரமமே விசேஷத்திற்கு (பசுபாசங்களுக்கு) அதிகம் (சிரேட்டம்).

(ஆக்ஷேபம்) "ததநன்னியத்துவம்" என்னும் (௨. ௧. ௧௪-ஆம்) சூத்திரங்கொண்டு அபேதம் பிரதிபாதிக்கப்பட்டவாறும், "அதிகந்து" என்னும் (௨. ௧. ௨௨-ஆம்) சூத்திரத்தினாலே பேதம் பிரதிபாதிக்கப்பட்டவாறும், (சேதன அசேதனப்) பிரபஞ்சம் பிரமம் என்பவற்றுக்குப் பேதாபேதம் சாதிக்கப்படுகின்றதாலோ எனின்,

(உத்தரம்) அங்ஙனஞ் சாதிக்காது விசிட்டாத்துவிதத்தைச் சாதிப்பேம்.

கடமும் படமும் போலப் பிரமமும் பிரபஞ்சமும் அத்தியந்த *பேதம் என்றும் கூறேம்; அது அநன்னியம் என்னும் பரசுருதிக்கு விரோதமுறுதலின்.

நாம் இப்பி வெள்ளி என்பவற்றிற் போல, ஒன்றை மித்தை என்று கூறும் அத்தியந்த அபேதவாதிகள் அன்று; பிரபஞ்சத்துக்கும் பிரமத்தின் சுவாபாவிககுணத்துக்கும் பேதங் கூறுஞ் சுருதிகளுக்கு விரோதமுறுதலான்.

றும் நித்தியவஸ்துக்கள் என்றும் இதிகாசபுராண சிவாகமங்களுக்கு மாறுபடாவண்ணம் உதகரிக்கப்பட்டவிடத்தும், இவற்றை ஆதாரமாய்க்கொண்டு கிளர்ந்த ௧. ௨. ௩௨-ஆம், ௧, ௪. ௧௧-ஆம், ௧. ௨. ௨௧-ஆம், ௧. ௩. ௨, ௪, ௬-ஆம்; ௨. ௧. ௨௨-ஆம் பிரமசூத்திரங்களும் பிறவும் உபயான்மவாதபரத்தனவாகி ஏகான்மவாதியார் ஏகான்மவாதத்துக்கிணக்கமுறாமையின், (உபக்கிரமணிகை ௨௭-ஆம் இலக்கத்திற்கண்ட) முக்கியோபநிடதங்களில் இல்லாதனவாய், (வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்படவினாவிடையின் ௧௧௬-ஆம் இலக்க வினாக்களிற் கண்ட) சர்வசாரமுதலிய மாயாவாதோபநிடதங்களிற் காணப்படுவனவாய்க்கிடந்த கடாகாய மகாகாயத் திருஷ்டாந்தத்தையுந் தொணர்ந்து புகட்டிக் காட்டிஆட்டி, ஆன்மாவைப் பொய் என்று கெடுத்தல் வாயிலாக, உபயான்மவாதசூத்திரங்களுக்கும் சுருதிகளுக்கும் பொருட்டிரிவுபடுத்திவிட்டமை இவர்க்கு நியாயமாகுமா? நீதியாகுமா? அன்பர்காள்! இவற்றை யோசித்து, ஏகான்மவாதியாரோ? நீலகண்டசிவாசாரியரோ? சூத்திரங்களுக்கு உண்மைப்பொருள் பொதிந்து வைத்தார் என்பதை உணர்ந்து கூறுதிர்? உபயான்மவாதச் சுருதிகளுக்கு மாறுபடாது பதி பாச பசுக்களை உணர்த்திப் போதிக்கும் சிவஞானபோதத்துக்கு வித்தியாரணியர் பாடியம் ஒன்று எழுதிவைத்துள்ளார் என்று ஏகான்மவாதிகள் சிலர் புகன்று அது இருக்குமிடம் எங்கேயாம் என்று ஆராய்வாராயினர், தாயுமானவர் "வேதமுடனாகமம்" என்ற செய்யுளிற் கூறியாங்கு, உபயவாதிகளாகிய எங்கள் உபயான்மவாதச் சிவஞானபோதத்துக்கு அவ்வித்தியாரணியர் எழுதி வைத்தார் எனக்கொள்ளப்படும் பாஷ்யமும் அவர் ஆசாரியராகிய ஏகான்மவாதியார் இச்சூத்திரங்களுக்கும் இச்சூத்திரங்களுக்குமூலமாய் நின்ற சுருதிகளுக்கும் கடாகாச மகாகாசவிருஷ்டாந்த கொண்டு பொருள்செய்கின்றேமென்று செய்து அவை கெடுக்கப் பட்டாற்போலக் கெடுக்கப்பட்டதொன்றாமென்று யாரும் உணர்ந்துகொள்வாராக.

* ஈண்டு நீலகண்டசிவாசாரியரால் மறுக்கப்பட்ட துவிதம் (பேதம்), ஏகான்மவாதம் (அபேதம்), துவிதாத்துவிதம் (பேதாபேதம்), என்னும் மத்துவம், மாயாவாதம், வைஷ்ணவமுமாகிய மும்மதத்தையும் ஸ்ரீஉமாபதியார் சிவப்பிரகாசத்துங் "புறச்சமயத்தவர்க்கிருளாய்" என்னுந் திருச்செய்யுளிற் "பொற்பணிபோலபேதப் பிறப்பிலதாமிருள் வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள் போற் பேதாபேதமுமின்றி" என்றருளினர்.

பேதாபேதவாதிகளும் அன்று; வஸ்துவிரோதவுண்மையான்.

ஆயின் நாம் சரீரசரீரி போன்றும் குணகுணி போன்றுங் கூறும் விசிட்டாத்துவிதிகளே. பிரபஞ்சத்துக்கும் பிரமத்துக்கும் அநன்னியத்துவமாவது மண்ணும் கடமும் போலவும், குணமும் குணியும் போலவும் (முறையே) காரண காரியத்தினும், விசேஷண விசேடியத்தினும் வேறுபடாதிருத்தலேயாம். மண்ணைவிட்டுக் கடம் காணப்படாதவாறு போன்றும், நீலநிறத்தை விட்டு நீலோற்பலமில்லாதவாறு போன்றும் பிரமத்தை விட்டுப் பிரபஞ்ச சத்தி இல்லை; சத்திக்கு வேறாகப் பிரமம் ஓர்போதும் இல்லை; உஷ்ணத்தைவிட்டு அக்கினி இல்லாமை போல. எதை விட்டு எதைக் காண்டதில்லையோ, அது அதனோடு விசிட்டந்தான். அது (குணம்) அதாவதும் (குணியாவதும்) இயற்கையே; (சூடு தீயாவதும் இயற்கைதான்). ஆகலின், எப்பிரகாரத்தானும் பிரமம் பிரபஞ்சத்தினின்று வேறுருது. அதுபற்றி அநன்னியம் என்று கூறப்படுகின்றது. அவ்விரண்டுக்கும் வேற்றுமை இயற்கை. ஆகலின், பிரபஞ்சத்தினும் பரப்பிரமம் (அதிகம்) சிரேட்டமே. காரணமாயும் காரியமாயுமிருத்தல் (உ. க. கூ) ல் நிரூபிக்கப்பட்டது. ஆகலின், பேதாபேத சுருதிகளுக்கு இந்நெறி விரோதமற்றதே. (உஉ)

அஶ்மாதிவச்ச தத³நுபபத்தி꞉ (உ. க. உ௩)

(கசுக) கல் முதலியவற்றிற் போல, அது பொருந்தாது.

(ஆக்ஷேபம்) எப்பிரகாரத்தானும் அபேதசுருதிகளால் ஆன்மாவும் சிவபெருமானும் அபேதர் எனின்,

(உத்தரம்) அங்ஙனம் இன்று; பொருந்தாமையின். அசேதனமாகிய கல்லு, கட்டை, மண், புல் முதலிய போல ஆன்மாவுக்கும் அறியாமையுண்மையின் முற்றறிவு முதலிய குணங்களையுடைய சிவபெருமானினின்று அவன் அத்தியந்த விஜாதீயமாம் எனக் கேட்கப்படலான், அவ்விருவரும் ஒருவராமெனல் பொருந்தாது. ஆகலின், ஆன்மாவிலிருந்து சிவபெருமான் மற்றோர் பொருளே. இங்ஙனம் ஆன்மா சேதனனாயினும், சிவபெருமான் சிரேட்டகுணமுடையராம் பேதத்தினல், ஆன்மா சிவபெருமானோடு ஒப்பாகான். முற்றும் வேறாகிய அசேதனப்பொருள் சிவபெருமானுக்கு ஒப்பாகாதென்று கூறவும் வேண்டுமா!! எவ்வாற்றானுஞ் சுருதி ஸ்மிருதி நியாயங்களினற் காரியமாதல்பற்றித் தம்மினின்று வேறாகாத சேதன சேதனப் பிரபஞ்சம் அனைத்துக்கும் சர்வஞ்ஞரும் சர்வசக்தியினருமாகிய சிவபெருமான் சிரே[illegible]ரே (விசுவாதிகரே) (உ௩)

(அ) உபசங்காரதர்சநாதிகரணம்.

உபஸம்ஹாரத³ர்ஶநாந்நேதி சேந்ந க்ஷீரவத்³தி⁴ (உ. க. உச)

(கசூஉ) (உபகரணக்) கூட்டம்காணப்படலான் எனின், அன்று; மெய்யாய்ப் பாலிலே போல.

ஸூத்ரம் (சாங். சூ. உ. க)

"ஏகந்தானே அத்துவிதீயம்"

ஶ்லோகம் (தைத். ஆரணி. கo. க. ங)

"விண்ணையும் மண்ணையுஞ் சிருட்டித்து ஏகராகிய தேவர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சிவபெருமான் ஒருவரே உலகத்துக்குக் காரணராமெனை அறியப்படுகின்றார் (என்பது விஷயம்)

இந்த ஒருவரே உலகத்துக்குக் காரணராயிருத்தல் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) யுக்தம் அன்றென்பேம்; அது பொருந்தாமையின், ஆகாய வாயு அக்கினி சலவடிவுடைய காரியம் பல்வகைத்து. இது விசித்திரகாரணமின்றி எங்ஙனம் உண்டாம்? இரத முதலிய காரியங்களை அநேகர் கூடிச் செய்தல் காணப்படுகின்றது. ஆகலின், ஒரே காரணமாயிருத்தல் எய்தாதாம் எனின்,

(சித்தாந்தம்) இது யுக்தம் அன்று. எங்ஙனம் க்ஷீரம் ஒன்று தயிராகின்றதோ, அங்ஙனம் காரணமொன்று காரியரூபமாகப் பரிணமிக்க நேரும். ஆகலின், உலகமானது பிரமமாகிய ஒரே காரணத்தின் காரியமாம். காரியம் விசித்திரமாதலின், காரணமும் விசித்திரமாதல் வேண்டும் எனல் பொருந்தாது. உரோமம் நகமுதலிய பல்வகைக் காரியம் ஒரே சேதனப் பொருளிலிருந்து தோன்றக் காண்டலின். இதுபற்றி விசித்திரமாகிய உலகத்தை உண்டாக்குதற்குச் சிவபெருமான் மற்றோர் காரணத்தை அபேக்ஷிப்பதில்லை. (உச)

சத்தியுடையார்க்கு யாவும் ஆகும் என்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸூத்ரம் (உ. க. உரு)

(கசூங) உலகத்திலே தேவாதிகள் போன்றும்.

சாஸ்திரங்களிலே சத்தியுடையராகக் கூறப்படும் தேவாதிகளுக்கு எங்ஙனம் தாந்தாம் வேண்டிய வடிவங்கள் கொள்ளுதற்கு வன்மையிருக்கின்றதோ, அங்ஙனஞ் சாஸ்திரங்களிற் கூறப்பட்டவாறு சத்தியுடைய சிவபெருமானுக்கும் எல்லாம் ஆகும்,

ஶ்லோகம்

(அதர்வசிரசு)

“அவர் இவ்வுலகம் அனைத்தையும் பிறப்பிக்கவும் ஆளவும் வல்ல பரமசத்திகளையுடையாராகின்றனரோ” என்னுஞ் சுருதியினுற் சிவபெருமான் அநந்த சத்தியுடையர் எனக் கேட்கப்படுகின்றது. அவர்க்கு ஏது அசாத்தியம்!! (உரு)

(கூ) கிருத்சிநபிரசக்தியதிகரணம்.

க்ருத்ஸ்நப்ரஸக்திர்நிரவயவத்வஶப்தகோபோ வா (உ. க. உசு)

(கஅச) முழுமையும் (காரியமாதற்கு) இசைகின்றது; இன்றேல் நிரவயவசுருதிக்கு மாறுபடுகின்றது.

ஈண்டுப் பிரமம் ஜகதாகாரமாகப் பரிணமிக்கும் என முன் உரைத்தனை பொருந்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) எங்ஙனம் பொருந்தும்? ஒன்றுதானே ஜகதாகாரமாகப் பரிணமிக்கும் எனக் கூறப்பட்டது. பால் தயிரானது போல அவர் உலகமாய்ப் பரிணமிப்பாரேல், பிரமமானது முழுமையுங் காரியமாய் ஆகி அது சேஷிக்கமாட்டாது. இன்றேல், அவர் ஓர் அம்சத்தினுற் பரிணமித்தாரெனின், பிரமம் நிரவயவம் என்னுஞ் சுருதியோடு விரோதமுறும். ஆகலின், பிரமம் பரிணாமமாதல் யுக்தம் அன்றாம் எனின், (உசு)

(சித்தாந்தம்) கூறுதும்.

ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத் (உ. க. உஎ)

(கஅரு) ஆயின் சுருதியும் (அங்ஙனமே), சுருதி மூலமாயிருத்தலின்.

பிரமம் உலகமாகப் பரிணமித்தல் யுக்தமே; சுருதி அங்ஙனம் கூறுதலின். இவ்விஷயத்திற் சுருதியே பிரமாணம், வேறு பிரமாணம் இல்லை; சுருதி மூலமாயிருத்தலினுலேதான், பிற பிரமாணங்களனைத்தினுலும் அறியப்படும் வஸ்துக்களுக்கெல்லாம் அவர் விஜாதீயமாய் அபூருவமாகிய சத்தியோடு கூடினமையின் விரோதம் இன்று. ஆகலின், பரிபூரணராகிய அவருக்கே காரியத்துவமும் காரணத்துவமும் எய்துகின்றன. தார்க்கிகர்க்கு அத்தியந்தம் பேதமுடைய கண்ட மூண்டமாய அளவில்லாத வஸ்துக்கள் ஒவ்வொன்றினும் சாதியானது ஒன்றாய் இருக்கின்றது. ஈண்டு வேறுவஸ்து திருஷ்டாந்தங்கொண்டு ஆசங்கை செய்ய இடம்பெறாது. ஆகலின், பிரம சொரூபத்தை நிரூபித்தலிற் சுருதியே மூலமாயிருத்தலின் யாதும் விரோதம் இல்லை. (உஎ)

ஆத்மநி சைவம் விசித்ராஶ்ச ஹி (உ. க. உஅ)

(கக௬) அங்ஙனமே ஆன்மாவினும் அவை பல பிர காரமன்றோ.

ஆன்மா விஜாதீயமாயிருத்தலினால் அசித்தருமங்களுக்கு விரோதமாகிய சித்தருமங்களோடியைந்திருக்கின்றது. தீ நீர் முதலிய அசேதனப் பொருள்கள் ஒவ்வொன்றும் அன்னியோன்னியமாகிய வெவ்வேறு சத்திகளையுடையனவாய் விசித்திரமாய் இருக்கின்றனவே. ஆகலின் சுருதிப்பிரமாணத்தினால் எய்திய பிரமமும் விசித்திரமாகிய அனந்த சத்தியையுடைத்தாதலின், முழுமையும் விரோதமின்று. (உஅ)

ஸ்வபக்ஷதோஷாச்ச (உ. க. உக)

(கக௭) சுவபக்ஷத்திலே தோஷம் உண்மையினாலும்.

(காரண முழுமையும்) காரியமாதன் முதலிய தோஷம் நிரவயவமும் ஜட சஜாதீயமாயுமுள்ள பிரதானமுதலியவற்றிலன்றிச் சாஸ்திரத்தைப் பிரமாணமாகவுடைய பிரமத்திற் செல்லாது. (உக)

சர்வசத்தியுடைமையின் பிரமத்துக்கு எதுவும் பொருந்தும் எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸர்வோபேதா ச தத்தர்சநாத் (உ. க. ௩௦)

(கக௮) (அவரது சத்தி) அனைத்தையுங் கூடிற்று, சுருதியிற் காண்டலானும்.

பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபல க்ரியா ச் மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநந்து மஹேஶ்வரம் தஸ்ய அவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் (சுவே. ௬. அ; ச. ௪௦)

"அவரது பராசத்தி சுவாபாவிகமாய் ஞானசத்தியும், பலசத்தியும், கிரியாசத்தியும் எனப் பலதிறப்படும்; மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; அவர் அவயவத்தினால் இவ்வுலகம். அனைத்தும் வியாபிக்கப்பட்டது" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சத்தியனைத்தும் பிரமத்தை ஆசிரயித்தனவாக அறியப்படுகின்றது. அது பற்றிச் சர்வசத்தியுடைய அவர்க்கு எதுதான் ஆகாது!! (௩௦)

விகரணத்வாந்நேதி சேத்தது (உ. க. ௩க)

(கக௯) கரணம் இன்மையால் (அவர் காரணமாதல்) இல்லையேல், அது இறுக்கப்பட்டதாயிற்று. (௩க)

(ஆக்ஷேபம்)

ந தஸ்ய கார்யம் கரணஞ்ச வித்யதே (சுவே. ௬. அ)

"அவருக்குச் சரீரமும் இல்லை; கரணமும் இல்லை" எனப் பிரமத்துக்குக் கரணமின்மை கூறப்படுகின்றது. ஆகலின், அவர் காரணமாகாரோ எனின்,

(உத்தரம்) அன்று. அதற்குச் "சுருதி மூலமாயிருத்தலான்" என (உ. க. உஎ) ல் முன்னரே உத்தரம் இறுத்தாயிற்றே.

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேஶ்வரம்।

(சுவே. ச. ௧௦)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக" எனவும்,

தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்।

(சுவே. ச. ௧௦)

"அவருடைய அவயவத்தினால் (சத்தியினால்) இவ்வுலகம் அனைத்தும் வியாபிக்கப்பட்டது" எனவும் சிரேட்ட வேதப் பிரமாணமுண்மையானும்,

விஶ்வோத்தரோத்தர விசித்ர மநோரதஸ்ய யஸ்யைகதேஶ ஸகலாஸ்ஸகலாஶ்ச ஸர்வே। அத்வாநமத்வபதிமத்வவிதோ வதந்தி தஸ்மை நமஸ்ஸகலலோகவிலக்ஷணாய (வாயு. பூ. எ: ௨௩)

"பிரபஞ்சத்துக்கு மேன்மேலாகக் கிளருகின்ற விசித்திர மநோரதமுடைய எவர் சத்தியின் ஓர் பாகத்தில் யாவும் முற்றுப்பெறுகின்றனவோ, எவரை (ஆறு) அத்துவாவாகவும் அத்துவபதியாகவும் அத்துவாவை அறிந்தவர்கள் கூறுகின்றார்களோ, உலகமனைத்துக்கும் வேறாயிருக்கும் அவ்வியல்பினர்க்கு நமஸ்காரம்" என அவ்விஷயம்பற்றி உளதாம் புராணவசனத்தினாலும் விசித்திரமாகிய அனந்தசத்தியையுடைய பல்வகை மாயையாம் பரமசத்தியோடியைந்தவராய்ச் சிவபெருமான் தமது சத்திபாகத்தினால் உலகாகாரமாகியும், தாமே பிரபஞ்சத்துக்கு அதீதராயுமுள்ளார். இங்ஙனம் சமஸ்த தோஷகளங்கமில்லாத சுருதிப்பிரமாணத்தினாற் சித்தயாயினவரும் சர்வ சத்திசம்பத்விலாசருமாகிய பரமேசுவர பரப்பிரம சிவனார்க்கு ஒன்று கூடும் கூடாதென்று விசாரித்தற்குச் சிறிதும் இடமின்றே. (௩௧)

(௧௦) லீலாகைவல்லியாதிகரணம்.

சூத்திரகாரர் வேறுபிரகாரமாக ஆக்ஷேபித்துப் பின்னரும் உத்தரம் இறுக்கின்றார்.

ந ப்ரயோஜநவத்வாத் (உ. க. ௩௨)

(௩௭௦) இல்லை; (ஒவ்வொரு செயலும்) பயனுடைமையின்.

சாஸ்திரங் கூறுமாறு சர்வசத்தியுடைய சிவபிரானார்க்குச் சமஸ்த காரியங்களினும் காரணமாயிருக்கும் சாமர்த்தியம் உளதென் நிர்ணயிக்கப்

யட்டது. அங்ஙனமாயினும், எந்தப் பிரவிருத்தியும் பயனுடைமையின், சகல காமமும் அடையப்பெற்ற சிவபெருமானுக்கு உலகசிருட்டி முதலிய வியாபாரங்களிற் பிரவிருத்தி பொருந்துமா? பொருந்தாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எங்ஙனம் பொருந்தும்?

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ௩. சு. ௬)

விபு விஜ்ஞாநந்த ரூபமத்புதம் உமாஸஹாயம் (கைவ)

"ஆனந்தம் பிரமம்; வியாபகரும், சிதானந்தரும், அரூபரும், அற்புதரும், உமாசகாயரும்" என்றற்றொடக்கத்த சுருதிகளால் நிரதிசயானந்த சொரூபரும், நித்தியதிருப்தருமாவார் சிவபெருமான் என்றே கேட்கப்படுகின்றது. இவர் பின் சிருட்டியாதி வியாபாரங்களில் எங்ஙனம் அபேக்ஷையின்றிப் பிரவிருத்திப்பார்? அவரது பிரவிருத்தி பிரயோசனத்தை நோக்கிருக்குமேல், (அவரது) நித்தியதிருப்திக்கு ஹாநியாகும்; இன்றேல் அறிவில்லாச் செந்துப் போல உசிதமல்லாத காரியத்தைச் செய்தோராவர் என்று கூறின், (௩௨)

(சித்தாந்தம்) கூறுதும்.

லோகவத்து லீலாகைவல்யம் (உ. க. ௩௩)

(௩௭௧) ஆயினும், உலகத்திற் போல *லீலைமாத்திரம்.

நித்தியதிருப்தியுடைய சிவபெருமானுக்குப் பிரயோசனமின்மையின் அப்பிரயோசனமாகிய உலகசிருட்டியாதி பிரவிருத்தி பொருத்தமுறுதெனின், அங்ஙனமன்று; பொருந்துமே. கேவலம் லீலாமாத்திரத்தினாற் சிவபெருமானுக்கு நிஷ்பிரயோசனமாகிய பிரவிருத்தியும் நேரும். உலகத்திலே பிரயோசனமின்றேனும் கேவலம் லீலையினாலே பந்தடித்தல் முதலியவைகளிற் பிரவிருத்தி உளதாமாறு போல, சிவபெருமானும் சமஸ்த காமமுற்றவரேனும் லீலையினாற் சிருட்டியாதி பிரவிருத்தி செய்தல்பற்றி விரோதமில்லை. (௩௩)

(கக) வைஷம்மியநைர்க்கிருண்ணியாதிகரணம்.

வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்சயதி (உ. க. ௩௪)

---

* கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
(திருவெம்பாவை. ௧௨)

(கஎஉ) *விஷமமும் இல்லை; இரக்கமின்மையும் இல்லை; (கன்ம) சாபேக்ஷமுண்மையின். மெய்யாய் அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது.

பிரயோசனமின்றேனும் லீலையினாற் சிவபெருமானுக்கு உலகசிருட்டியாதிகளிற் பிரவிருத்தி உளதாதல் நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுப் பின்னரும் இது கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பரிபூரணராயிருத்தலில் லீலையினாலும் சிவபெருமானுக்குச் சிருட்டி பொருந்தாது; இராகத் துவேஷமுதலிய அற்று எல்லோர்க்குஞ் சமமாகி மத்தியஸ்தராயிருப்பவர் அச்சிவபெருமானே. இவர் சிலர்க்கு இன்பமயமாகிய தேவாதி சரீரத்தையும், சிலர்க்குத் துக்கமயமாகிய மனுஷ்யாதி சரீரத்தையும் படைத்தலான், அவர் வைஷம்மியமுடையரென்பதைத் தவிர்த்தல் கூடாது. பின்னருஞ் சிருட்டியானது சங்காரத்துக்கு முன் இருந்தமையின், அனைத்தையும் ஒரே முறையிற் சங்கரிக்கும் சிவபெருமானுக்கு இரக்கமின்மையும் எய்துகின்றது. ஆகலின், புருஷார்த்தமின்மையைக் கொணரும் உலகத்தைச் சிருட்டித்தலிற் சிவபெருமானுக்கு யாது பயனும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். எப்பிரகாரத்தினாலும் உலகசிருட்டி செய்யுஞ் சிவபெருமானுக்கு வைஷம்மியமும் (பாரபக்ஷமும்), இரக்கமின்மையும் எய்தா; சிருட்டிபேதத்துக்குக் கன்மசாபேக்ஷமுண்மையின்.

ஈணீய வாணா ஈணீயாம யொநிமாவஷ்ூெ | கவூயவாணாஃ கவூயாழ (சாந். நி. கo. எ)

"நன்மை செய்தவர் நற் செனனத்தையும், தீமை செய்தவர் தீச் செனனத்தையும் அடைகின்றார்" என்று சுருதியும் கூறுகின்றது. (௩௪)

ந கஊாவிஹா ஗ாஜிதி வெஹா நாஜிகூாஷவெவஷ்ூெத வாவூவஷூெத ச (உ. க. ௩௫)

(கஎ௩) கன்மம் பகுப்பின்மையால் இல்லை எனின், அன்று; அநாதிக்கண்ணதாதலின் அது முற்றும் பொருந்தும்; அனுபவத்தினும் அறியப்படுகின்றது.

---

*வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.
(திருக்குறள், ௪)
துன்பமொடின்பமதெல்லாங்கடந்தவர்
(திருக்கற்குடி; ஞான, ௪)

(ஆக்ஷேபம்) சிருட்டிக்கு முன்னர்க் கன்மம் இல்லை; க்ஷேத்திரஞ்ஞர் (ஆன்மாக்கள்) இல்லாமையின்,

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். சு. உ. க)

"சௌமிய, சத்துத்தான் முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியில் ஏவ (தான்) என்பது பிறிதொன்றை மறுக்கின்றமைபற்றி, ஆன்மாக்கள் இல்லை எனின்,

(உத்தரம்) அன்று.

ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசாநீசௌ (சுவே. க. கூ)

"பிறவாத இருவர் அறிஞரும் அஞ்ஞருமாய ஈசரும் அநீசனும்" என்று சுருதி கூறும் பிரகாரம் ஆன்மாக்கள் அநாதிக்கண்ணராக, கன்மமும் அநாதிக்கண்ணதாகப் பெறப்படுகின்றது. ஆகலின், சம்சாரம் கன்மப்பிரவாகத்திருந்து விளைந்ததாகின்றது. சிவபெருமானே முற்றறிவினராதலின் ஆன்மாக்களுடைய விசித்திர கன்மத்தையும் அறிந்து, தமது சத்தியினால் அவர் அவர்களுக்கு வாய்ந்த குணமாகவே போக சரீரமாகிய தேவாதி சரீரத்தைச் சிருட்டிக்கின்றனர். இங்ஙனம் சிருட்டிபேதத்துக்குக் கன்மமே மூலம். சங்காரமும் சம்சாரத்தில் உழன்று இளைத்த ஆன்மாக்களுக்குச் சுழுப்தி போல விசிராந்திக்குக் காரணமாயிருத்தலின், சிவபெருமானுக்கு வன்கண்மை இல்லை.

(ஆக்ஷேபம்) ஆன்மாக்களுடைய இன்ப துன்ப முதலியவற்றுக்குக் கன்மமே பிரயோசகமாயின், அப்பிரயோசகராகிய சிவபெருமானால் யாது பயன்? எனின்,

(உத்தரம்) அன்று; கன்மமும் அவர் ஆதீனமாதலின், அவர் சுவாதந்திரியத்துக்கு ஹாநி இல்லை. பின்னரும் கட்டகுடிப்பிரபாதநியாயத்தினாற் கன்மத்துக்குச் சுவாதந்திரியமில்லாவிடின் சிவபெருமானுக்கு வைஷம்மியமுதலிய தோஷம் எய்துகின்றதெனின், அங்ஙனம் கூறலாகாது; மாயையிலே உள்ள அளவிறந்தகன்ம சத்திகளைச் சிவபெருமான் வகுக்கின்றனர். கன்மமே தனது சத்திவசத்தினாற் பல்வகைச் சிருட்டிக்குக் காரணமாதலின், அதனை ஆன்மாக்களுக்கு வகுப்பவராகிய அவர் பாரபக்ஷமுறார்.

(ஆக்ஷேபம்) சடமாகிய கன்மமானது சேதனப்பொருளினால் அதிட்டிக்கப்படாமல் ஆன்மாக்களுடைய சரீரத்தை ஆக்க இயலாமையாற் சேதனராகிய சிவபெருமானே பிரயோஜகர் (உளுற்றுபவர்) என்று கூறற்பாற்று. சிவபெருமான் பரமகாருணிகராயிருந்தும் சிருட்டிக்கு முன்னர்ப் பேர்கசாதனம் ஒடுக்கப்பட்டிருந்தமையாற் சம்சாரகிலேசம் நீங்கிச் சுகிகளாயிருந்த ஆன்மாக்களை மீட்டும் சம்சாரத்துக்குக் காரணமாகிய சரீரத்தோடு எற்றுக்கு இசைக்கின்றாரெனின்,

(உத்தரம்) கூறுதும். சர்வாநுக்கிரகராகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கன்மபரிபாகமின்றி ஞானோதயமாகாமையானும், ஞானமில்லாது நிரதிசயானந்த மோக்ஷமின்மையானும், கன்மபரிபாகமும் போகமின்றி எய்தாமையானும், அந்தக் கன்மபலபோகத்தின் பொருட்டுப் பின்னரும் அவைகட்குச் சரீராதிகளைக் கற்பிக்கின்றனர். இந்தப் பிரகாரம் அவரவர் கன்மமானது போகத்தினுற் படிப்படியே பக்குவமடைந்த காலத்திலே சுத்தாந்தக் கரணமுடைய ஆன்மாக்களுக்குத் தம் விஷயமாகிய ஞானத்தை உண்டாக்கி, நிரதிசயானந்தரூபமாகிய * மோக்ஷலக்ஷ்மியைப் பிரகாசிப்பிக்கின்றனர். இங்ஙனம் சர்வசத்திமானும் பரமகாருணிகருமாகிய சிவபெருமான் எதனுல் ஒரே முறையிலே சமஸ்த ஆன்மாக்களுடைய கன்மத்தையும் பாகப்படுத்தி அனைவர்க்கும் சமமாகவே மோக்ஷாநந்தத்தைப் பிரகாசிப்பிக்கவில்லை? எனின்,

(உத்தரம்) சத்தியம். சிவபெருமானுல் யாவர்க்குஞ் சமமாகஅநுக்கிரகஞ் செய்யப்படினும், எவர் பக்குவமலமுடையரோ, அவர் விடுதலின்றுர்; அபக்குவமலமுடையராயினுர் காலக்கிரமத்திலேதான் முத்தியடைவர். சூரியகிரணசமூகம் சமமாய் நிரந்தரமாயிருப்பினும் † பக்குவமுள்ள தாமரைகளே அலர்கின்றன; அபக்குவமலர்கள் அன்று. சிவபெருமான் பூரணரேயாயினும் பிறர் நயத்தின்பொருட்டே யாவுஞ் செய்கின்றனர். அவர் சர்வாநுக்கிரகர் என்பதைப் பிரதிபாதித்தல்வாயிலாக (மேலே கூறிய) அர்த்தம் அனைத்தையும் புராணசுலோகங்கள் தெளிவாகப் பின்வருமாறு விளக்குகின்றன.

ஸூர்யேண ஹி யதா ஸிந்தம் தமோஹந்த்ருத்வம் ஜகத:|
ஶிவேநாபி விநா தஸ்மாத் ஸம்ஹர்த்ருத்வம் ஜகத:|
வைஷ்ண்யம் விநா நிராநநா: க்ருபயா ஸர்வதோ யதா|
ஶிவம் விநா நிராநநம் க்ருபயா ஹி ஜகத்ரயம்|
வ்யாதீநாம் பேஷஜம் யத்வத் ப்ரதிபக்ஷ: ஸ்வபாவத:|
ஸம்ஸாரதோஷாணாம் ப்ரதிபக்ஷ: ஸ்வபாவத:|
யதா நாதிப்ரவ்ருத்தேஸ்ய ஸம்ஸாரபரிணாமத:|

---

* இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பிண்டைச் சிந்தறி வொழிந்து ஞானம்
பெருகிரா பரன்றன் பாதம் பெறுவதுஞ் சுத்த மாமே.
(சித்தியார். அ. ௩௦)

† பகலவர்த்துங் தாமரைபோ
லேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்
(சிவஞானபோதம். ௧௧. ௯)

தயா நாதி ப்ரவ்ருத்தாச்ச சிவஸ்ஸம்ஸாரமோசக:॥
(வாயு. உத். ௧௨: ௧௫, ௧௯, ௧௪, ௧௩)

"ஆதித்தியன் இல்லையேல் இவ்வுலகம் அனைத்தும் இருளாய்ப்போமாறு போல, சிவபிரானுர் இல்லையேல் இவ்வுலகம் முழுமையும் இருளாய்விடும்; வைத்தியர் இல்லையேல் இன்பமில்லாது உரோகிகள் வருந்துமாறு போல, சிவபெருமான் இல்லையேல் உலகம் இன்பமிலதாகித் துன்புறும். இயற்கையால் மருந்து வியாதிக்கு மாற்றுவதுபோல, *சம்சாரதோஷத்துக்குச் சிவபெருமான் சுவபாவமாக மாற்றுகின்றுர். இந்தக் கோரமாகிய சம்சார மண்டலம் அநாதிக்கண்ணது போல, சம்சாரமோசகராகிய சிவபெருமானும் அநாதியே உள்ளார்" ஆகலின், சர்வாநுக்கிரகப் பிரவிருத்தியுடைய சிவபெருமானுக்கு உலகசிருட்டியாதி வியாபாரம் நிகழ்கின்றதே. (௩௫)

(௧௨) சர்வதர்மோபபத்தியதிகரணம்.

ஸர்வதர்மோபபத்தேஶ்ச (௨. ௧. ௩௬)*

(௧௭௬) சர்வகுணங்களும் இயைதலானும்.

அதிகஞ் சொல்லி என்! பிரதானத்துக்கும், பரமாணுவுக்கும், கன்மத்துக்கும், காலமுதலியவைகளுக்கும் இயையாதனவாகிய எல்லாக்குணங்களும் சிவபெருமானுக்கே இயைவன. ஆகலின், அனைத்துக்கும் மேலாய சிவபெருமானே உலகசிருட்டி முதலியவற்றுக்குக் காரணமாயினுரென்பது சாமஞ்சசம். (௩௬)

---

*அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யி
னிருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்க டீர்க்கு மருந்திவை வயித்திய நாதன்.
(சிவஞானசித்தியார், ௨. ௩௩)

இரண்டாம் அத்தியாயத்து

இரண்டாம் பாதம்.

———○———

(இப்பாதம் சாங்கியமுதற் பாஞ்சராத்திரமிறுதியாகிய பரபக்ஷநிராகரணத்தின்மேற்று)

(௧) இரசநாநுபபத்தியதிகரணம்.

———

(சாங்கியமதநிராகரணம்)

ரசநாநுபபத்தேஶ்ச நாநுமாநம் ப்ரவ்ருத்தேஶ்ச (௨. ௨. ௧)

(களரு) அநுமானம் (பிரதானம், காரணம்) ஆகாது, சிருட்டி பொருந்தாமையானும், (அறிவுடைத்தலைவனெதிரே) பிரவிருத்தித்தலினாலும்.

முந்திய பாதத்திற் சாங்கியமுதலிய தர்க்கங்கொண்டு ஆக்ஷேபிக்கப்பட்டவைகளுக்குச் சமாதானங் கூறி, (சிவாத்துவித) சுவபக்ஷசாதனஞ் செய்யப்பட்டது. பின்னர் ஈண்டுத் தர்க்கவாயிலாகச் சாங்கியமுதலிய பரபக்ஷந் தூஷிக்கப்படுகின்றது.

முதற்கண்ணே சாங்கியருடைய பிரதானகாரணவாதம் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

சந்தேகத்துக்குக் காரணம் யாண்டும் பிரசித்தமேயென யூகிக்கற்பாற்று.

(பூருவபக்ஷம்) பிரதானத்தைக் காரணமாய்க் கூறுவதே யுக்தமெனப் புலப்படுகின்றது. பிரதானமானது இராசச சாத்துவிக தாமசரூபமாயுள்ளது. இதுவே உலககாரணமாதற்கு இயைகின்றது; யாண்டும் அதன் காரியமாகிய இன்ப துன்ப மோகம் என்பவை காணப்படலான். பெறப்பட்டவிடத்து வஸ்திரமுதலியவைகள் சரீரங்களைப் போர்த்தல் முதலியவைகளுக்கு உபயோகப்படுதல் வாயிலாக இன்பம் விளைவிப்பனவாயும், பிறரால் அவை அபகரிக்கப்பட்டவிடத்துத் துன்பத்தை விளைவிப்பனவாகவுமாகின்றன; எதற்கும் உபயோகமில்லை என உபேக்ஷிக்கப்பட்டவிடத்து அவை மோகத்துக்கு ஏதுவாகின்றன:— இங்ஙனம் இன்பமுதலியவற்றின் தொடர்ச்சியுண்மையின் முக்குணங்களாய பிரதானமே உலககாரணமாகுமெனின்,

(மறுப்பு) கூறப்படுகின்றது. பிரதானம் உலககாரணமன்று; அசேதனமாகலின். எங்ஙனமெனின்? அறிவுடையானொருவன் இயக்காது அசே

தனமாகிய கட்டைமுதலியன இரதம்பிராசாதமுதலியவற்றை ஆக்கமாட்டா; அவை அறிவுடை ஒருவனாற் பிரவிருத்தியும் எய்துகின்றன. ஆகலின், சேதனத்தினால் அதிட்டிக்கப்படாத பிரதானம் ஜகத்காரணமாதற்கு அருகமாகாது. இன்பமுதலியவற்றின் தொடர்ச்சியினாலாவதென்பதும் பொருந்தாது; சுகமுதலியன (சரீரத்து) உள்விஷயமாக, படமுதலியன புறவிஷயமாதலின். ஆகலின், பிரதானத்தைக் காரணமாகக் கூறல் பொருத்தமின்று. (க)

பின்னரும் ஆசங்கித்துச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றனர்.

வயொம்பு்வசெவ்த்தாவி (உ. உ. உ)

(களசு) (அது) பாலும் நீரும்போலக் காரணமாமெனின், ஆண்டும் (இன்று).

(ஆக்ஷேபம்) ஓர் அறிவுடை அதிட்டானமில்லாது பாலும் நீரும் (முறையே) தயிர்முதலியவாகவும் ஆலங்கட்டிமுதலியவாகவும் ஆதல்போல, பிரதானமும் பிரபஞ்சமாகுமே எனின்,

(உத்தரம்) அன்று; ஆண்டுங் கூறப்பட்டதே காரணம்; பாலும் நீரும் அசேதனப் பொருளாகக் கொள்ளப்பட, அவை அனுமானத் தொகுப்பின் பாலனவாதலின். (உ)

மேலும்,

வ்யதிரெகாநவஸ்திதெஶ்ச நபெக்ஷத்வாத் (உ. உ. ௩)

(களஎ) அபேக்ஷையின்மையின் வேறான நிலைமை எய்தமாட்டாமையானும்.

அசேதனப்பொருளானது ஓர் அறிவுடைப் பொருளின் அபேக்ஷையின்றிப் பிரவிருத்தி செய்யுமாயின், எக்காலமுஞ் சிருட்டியுளதாய் அதற்கு மாறாகிய பிரளயம் இலதாகும். ஆகலின், அசேதனப்பொருள் ஜகத்காரணமன்று. (௩)

அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத் (உ. உ. ௪)

(களஅ) (பசுவினால் உண்ணப்படும்) புல் முதலிய போலவும் இன்று; பிறிதோரிடத்தின்மையின்.

பாலாதற்பாலதாகிய பசுவுண்ட புன்முதலிய போல, அசேதனமாயினும் பிரதானமானது காரணமாம் எனக் கூறல் யுக்தம் அன்று; எருது முதலியவற்றால் உண்ணப்படினும், மற்றொன்றால் உண்ணப்பட்டவிடத்தும் புன்முதலிய பாலாக மாறுதல் காணப்படாமையின், அவையும் ஓர் அறிவுடைப் பொருளினால் அதிட்டிக்கப்பட்டனவே. (௪)

புருஷாஶ்மவதிதி சேத்ததாபி (உ. உ. ௫)

(க௭௯) மனிதனும் காந்தமும் போலாமெனின் (அன்று)

(ஆக்ஷேபம்) குருடனை முடவன் செலுத்துமாறு போன்றும், அயத்தைக் காந்தமணி செலுத்துமாறு போன்றும், அசேதனமாயிருப்பினும், பிரதானமானது புருஷசந்நிதானத்தினாற் பிரவர்த்திக்கின்றது. ஆகலின், அறிவுடைப்பொருள் வேண்டியதின்றாம் எனின்,

(உத்தரம்) அங்ஙனமாயினும், பிரதானத்துக்குப் பிரவிருத்தி இல்லை; புருஷன் அவிகாரனாயிருத்தலின். முடவனும் காந்தமணியும் முறையே மார்க்கோபதேசஞ் செய்தலானும் இரும்பின் சமீபத்துறைதலானும் விகாரம் எய்த நேர்ந்தன. ஆகலின், அவிகாரமில்லாத புருஷசந்நிதியானது பிரதானத்தைப் பிரவிருத்தி செய்தற்குக் காரணமாகாது. (௫)

அங்கித்வாநுபபத்தேஶ்ச (உ. உ. ௬)

(க௮0) (அங்க) அங்கித்துவம் பொருத்தமின்மையானும்.

குணங்களின் உற்கர்ஷ அபகர்ஷபாவம் அங்காங்கிபாவம் என்றும், இக்குணங்களிலிருந்து உலகம் உண்டாகின்றதென்றுஞ் சாங்கியர் கூறுகின்றனர். சங்காரகாலத்திற் சாமியாவஸ்தை அடைந்திருக்கும் குணங்கள் வைஷம்மியம் ஒன்றும் அடையாமையின், அவற்றாலாகும் அங்காங்கிபாவம் பொருந்துமாறின்று. ஆகலின், பிரதானகாரணவாதப் பிரகாரம் உலக சிருட்டி சொல்லுதல் பொருத்தமின்று. (௬)

அந்யதாநுமிதௌ ச ஜ்ஞஶக்திவியோகாத் (உ. உ. ௭)

(க௮க) வேறு பிரகாரமாக அனுமானிக்கும்போதும், அறிவின் சத்தியில்லாமையின்.

கூறப்பட்ட பிரகாரம் ஒழிந்து, வேறுபிரகாரமாகப் பிரதானஞ் செய்வதாக அனுமித்தாலும், அறியுஞ் சத்தியின்மையிற் சிருட்டி செய்யும் என்பது ஆக்ஷேபத்துக்கிடமே. (௭)

அப்யுபகமேऽப்யர்த்தாபாவாத் (உ. உ. அ)

(க௮உ) அங்கீகரித்துக்கொண்டவிடத்தும், பயனின்மையின்.

பிரதானத்தைக் காரணமாக அங்கீகரித்தலிற் பிரயோசனமுளதாயின், ஒருவாறு அங்கீகரிப்பேம். அங்கீகரித்தலில் யாதும் பயனில்லை; புருஷனும் நிர்விகாரியாயிருத்தலிற் பிரதானத்தைக் கண்டன் முதலிய விகாரம் அவனுக்கெய்தாதாகலின், அதுபற்றிப் பிரவிருத்திக்குரிய குண

கள் அவனுக்கேற்றுதலான் எய்தும் போகமும் அதனைப் பகுத்தறிதலினல் எய்தும் கைவல்யமும் அவனுக்கெய்தாவாம். ஆகலின், பிரயோசனமின் மையின் பிரதானத்தை அங்கிகரிக்கவேண்டியதின்று. (அ)

விப்ரதிஷெயாச்சாஸமஂஜஸஂ (உ. உ. கூ)

(௬௬௩) விரோதமுண்மையின், அது யுக்தம் அன்று.

அறிபவனும், போக்தாவும், நிர்விகாரியுமாம் எனப் புருஷன் அநேக ஆயிரவிருத்த தருமங்களையுடையனுகக் காணப்படுகின்றான். ஆகலின், காபிலமதம் யுக்தம் அன்று. (கூ)

(உ) மகத்தீர்க்காதிகரணம்.

(கணுதமதநிராகரணம்)

இப்பிரகாரம் பிரதானகாரணவாதம் நிஷ்பிரமாணம் என நிரூபிக்கப் பட்டது. இதன்மேற் பரமாணுக்கள் (உலக) காரணமாம் எனக்கொள்ளும் மதத்தை நிரசனஞ் செய்யும் பொருட்டெழுந்தது இந்த இரண்டாம் அதிக ரணம்.

மஹதீர்வவ்வா ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம் (உ. உ. கo)

(௬௬௪) இருஸ்வ பரிமண்டலங்களிலிருந்து மகத்தீர்க்கம் உண்டாவது போல.

ஈண்டு வைசேடிகமத சித்தமாகிய பரமாணுகாரணவாதம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானை உலக அதிஷ்டாதாவாகப் பிரதான மதம் அங்கீகரியாமையின், பிரதானத்தை உலககாரணமாகக் கோடல் விருத்தமென்று தவிர்க்கப்பட்டவிடத்தும், பரமாணுகாரணவாதம் யுக்தம். அங்ஙனமாயின் உலகம் ஒடுங்கிப்போக, சிவபெருமான் சிருட்டிக்க விரும்பும்போது, பிராணிகளுடைய கன்மவசத்தினல் நிச்சலமாகிய பரமாணுக்களிலே முதற்றொழில் நிகழ்கின்றது. இத்தொழினிகழ்ச்சியின் ஓர் பரமாணு மற்றோர் பரமாணுவோடியைகின்றது. இதின் சேர்க்கையிலிருந்து துவியணுகம் ஒன்று எய்துகின்றது. மூன்று துவியணுகஞ் சேர்ந்து திரியணுவையாக்குகின்றது. இந்தக் கிரமமாக உலகம் முழுமையும் சிருட்டிக் கப்பட்டது. ஆகலின், பரமாணுவைக் காரணமாகக் கோடல் விரோதம் அன்றும் எனின்,

(சித்தாந்தம்) வருமாறு. கணுதமதப்பிரகாரம் இருஸ்வத்திரியணு பரிமண்டலத்திலிருந்தும் மகத்வதீர்க்கத்துவம் பொருந்திய திரிய

ணுகமும் அணுத்தவ இருஸ்வத்துவம் பொருந்திய துவியணுகமும் முறையே தோற்றுகின்றன. இஃதெங்ஙனம் பொருந்தும்? அஃதாமாறு:— பரமாணுக்கள் பாரிமாண்டல்லிய பரிமாணமுடையனவேயன்றி அணுப்பரிமாணமுடையனவன்று. அணுப்பரிமாணமற்ற இரு பரமாணுக்களிலிருந்து அணுப்பரிமாணமாயுள்ள துவியணுகம் உண்டாகின்றது என்றும் அறியப் படுகின்றது. அங்ஙனமே இருஸ்வ பரிமாணமுடையதாய்த் தீர்க்கப் பரிமாணமற்றதாயு துவியணுகம் மூன்று கூடி, தீர்க்க பரிமாணமுடையதும் அணுப்பரிமாணமற்றதுமாகிய திரியணுகத்தை உண்டாக்குகிறதென்றும் அறியப்படுகின்றது. இவையெல்லாந் தவறே; அவர்கள் அங்கீகரிக்கும் காரணத்தின் குணம் காரியத்திலே தோற்றவேண்டும் என்னும் பிரக்கிரியை (தொடர்ச்சி) விரோதமுறுதலின். அவயவங்கள் தம் ஆறு பக்கங்களுடன் இயைந்து பெரிய அவயவியை உண்டாக்குகின்றன. பரமாணுக்களுக்குப் பக்கமின்மையின் அவையெல்லாம் ஓர் பெரும் பொருளை ஆக்க இயையா. ஆகலின், பரமாணுகாரணவாதம் யுக்தம் அன்று. (௧௦)

சூத்திரகாரர் மற்றோர் பொருத்தமின்மை காட்டுகின்றனர்.

உபயதாபி ந கர்மாதஸ்ததபாவ: (௨. ௨. ௧௧)

(௧அரு) ஈரிடத்தும் கருமமில்லை; ஆகலின் அஃதின்று.

அணுக்களிடத்து முதற்கண் கன்மமின்மையின், அக்கன்மத்தால் இயைதலும் இசைவும் இல்லையே. ஆன்மாக்களுடைய அதிஷ்டகன்மம் பக்குவப்படவேண்டாதாயின், அணுக்களிடத்திற் சேர்ந்த கன்மம் முன்னரே உற்பத்தியாகலாமே. அது (பக்குவம்) வேண்டுவதாயின், அதனுற் சில வேளைகளிலே தோற்றற்பாலனவாகிய அணுக்களிடத்திற் கன்மம் நிகழாது. விபாகம் என்பது கன்மத்தின் ஓர் தர்மமன்று. ஆனுல் எந்தக் கன்மமானது எக்காலத்தில் விதிப்படி எவ்விதபலனைக் கொடுக்கவேண்டுமோ, அந்தக் கன்மத்துக்கு அக்காலம் வாய்ப்பதே விபாகம்; காலவிசேஷம் நியமிக்கப்படாத கன்மங்களுக்குப் பிரபலமாகிய மற்றோர் கன்மம் இடையூறுகாததும் விபாகம். அதிட்டங்கள் என்பன அவ்வக்கன்மத்துக்குத் தகுதியாய பயனைக் கொடுக்கும் இயற்கையுள்ளவைகள். ஆகலின், வெவ்வேறு காலத்தின் பயனைக் கொடுக்கக்கூடியவாய் அனந்த ஆன்மாக்கள் அநுட்டித்த கன்மங்களுக்கு ஒரே காலத்தில் ஒரேவிதமான விபாகம் பொருந்தாது. ஆகையாற் பரமாணுகாரணவாதம் யுக்தமன்றே. (௧௧)

இன்னும் பொருந்தாமையைச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸமவாயாப்யுபகமாச்ச ஸாம்யாதநவஸ்திதே: (௨. ௨. ௧௨)

(௧அ௬) சமவாயம் என்பது அங்கீகரிக்கப்படலாலும்

(சமவாயத்திற்கும் ஒருசம்பந்தம் வேண்டுமென்னும்) சாமியத்தினால் அநவஸ்தை நேர்கின்றமையானும்.

சமவாயம் என்னும் சம்பந்தமானது அங்கீகரிக்கப்படுகின்றது. ஆயின், இது பொருத்தமின்று. அஃதெங்ஙனம்? சாதிகுணமுதலியவற்றுக்குப் போலப் (பதார்த்தங்களுக்குச்) சமவாயசம்பந்தம் உள்ளதாக, மேன்மேல் முடிவின்றி வேறாகிய ஓர் சம்பந்தம் கோடல்வேண்டுமாதலின், அந்தக் கணாதமதம் யுக்தமன்று. (கஉ)

நித்யமேவ ச (உ. உ. கங)

(கஅஎ) (அங்கங்களும்) நித்தியமே; (சமவாயம்) உளதாகலின்.

சமவாயம் நித்தியமாம் என அங்கீகரிக்கப்படுதலின், சம்பந்தப்படு பொருள் நித்தியமிலாதிருப்பச் சமவாயம் நித்தியமாதல் கூடாது; இதனால் அவயவ அவயவிகளும் நித்தியமாக நேரும்; ஆகலின் இது யுக்தமன்று. (கங)

ரூபாதிமத்வாச்ச விபர்யயோ தர்சநாத் (உ. உ. கச)

(கஅஅ) ரூபமுதலியன உண்மையானும், (அனுபவத்தில் அவற்றின்) வேறுபாடு காணப்படலான்.

பரமாணுக்கள் ரூபமுதலியவுடைய என்பது அங்கீகரிக்கப்படுகின்றது. அதனால் (நாம் காணும் கடாதிகள் போல) அவை நித்தியமாகா; எதனால்? (ரூபமுதலியவற்றையுடைய) கடாதிகளிற் காணப்படலான். அது அசாமஞ்சசம். (கச)

உபயதா ச தோஷாத் (உ. உ. கரு)

(கஅகூ) இருதிறத்தானும் தோஷமுண்மையின்.

அநித்தியத்துவ தோஷத்தை நீக்குமாறு பரமாணுக்களுக்கு ரூபமுதலியன இல்லை என்று கொள்ளின், (காரியமானது) காரணகுணத்தை முன் உடைத்தாதல் வேண்டுமென்னுங் கொள்கை பொருந்தாது. காரியமானது காரணகுணத்தை முன்னுடைத்தாதலென்னுங் கொள்கை சித்திப்பதற்கு மீண்டும் ரூபமுதலியவற்றை அங்கீகரிப்பின், அநித்தியத்துவ முதலிய அனர்த்தம் விளைகின்றது. ஆகலின், இருதிறத்தானும் குற்றம் நேர்தலின் கணாதமதம் அசாமஞ்சசம். (கரு)

அபரிக்ரஹாச்சாத்யந்தமநபேக்ஷா (உ. உ. கசு)

(ககூ0) அங்கீகரிக்கப்படாமையானும் அது முற்றும் வேண்டும்.

சாங்கியபக்ஷம் சுருதிக்கும் நியாயத்துக்கும் விரோதமுறினும், (தோற்றத்துக்கு முன்னும் காரணத்திற் காரியம் உளது என்னும்) சற்காரியவாத முதலிய சில அம்சத்திற் சாங்கியம் வைதிகரால் அங்கீகரிக்கப்படுகின்றது. கணாதமதம் எந்த அம்சம் பற்றியும் அங்கீகரிக்கப்படாமையான், முமுட்சுக்களால் இது முற்றும் பராமுகஞ் செய்யற்பாற்று. (கசு)

(ரு) சமுதாயாதிகரணம்.

(பௌத்தரிற் சமுதாயகாரணவாத நிராகரணம்)

ஸமுதாய உபயஹேதுகேऽபி ததப்ராப்தி: (உ. உ. கஎ)

(ககூக) இரு காரணத்துக்குரிய தொகுதியினும், அது (தொகுதி) நிகழ்கின்றது.

ஏகதேசவைதிகர் மதம் நிராகரிக்கப்பட்டது. இப்போது வேதபாகியருடைய மதம் கண்டிக்கப்படுகின்றது.

முதற்கண் பௌத்தமதசித்தாந்தங்களிலே கூறப்படும் சமுதாயகாரணவாதம் யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம். பின் வருமாறு இங்ஙனம் கூறுகின்றனர்; புறமும் அகமும் எனச் சமுதாயம் இருதிறப்படும். புறச்சமுதாயம் பிருதிவி முதலியவாம். அகச்சமுதாயம் சித்தசைதன்னியம். சமஸ்தப்பிரபஞ்சமும் இரு சமுதாயத்துள் அடங்கும். எங்ஙனமெனின், புறச்சமுதாயத்துக்குப் பரமாணுக்கள் காரணம். அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு என நால் வகைப்படும். இவைகளிலிருந்து ஒரேமுறையிற்றோற்றி இசைந்தே புறச்சமுதாயம் உண்டாகின்றது. அகச்சமுதாயத்துக்கு ஐந்து ஸ்கந்தம் காரணம். அவை ரூபம், வேதனை, விஞ்ஞானம், சம்ஞானம், சம்ஸ்காரம் என்பவைகளே. மனசினால் அறியற்பாலனவாய சத்தப்பரிச ரூபமுதலியவைகளே ரூபஸ்கந்தம். அதின் வெளிப்படுகை விஞ்ஞானஸ்கந்தம். இதினாலுண்டாகிய துக்கம் வேதநாஸ்கந்தம். தேவதத்தன்முதலிய பெயர்கள் சம்ஞாஸ்கந்தம். இவற்றுள் வாசனை சம்ஸ்காரகந்தம். இவைகள் ஒன்றாக இசைந்து நிற்க அகச்சமுதாயம் உண்டாகின்றது. இங்ஙனம் இரு சமுதாயகாரணவாதம் விரோதமுறாதாம் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கப்படுகின்றது. இரு சமுதாயகாரணவாதமும் பொருத்தம் இன்று. அவர்கள் (புத்தர்கள்) க்ஷணிகவாதிகள்; காரணம் க்ஷணிகமாதல்பற்றி அப்பொழுதே நட்டமுற அது காரியத்தை ஆக்கமாட்டாமையான், அவைகளுக்கு (க்ஷணிகங்களுக்கு) சமுதாயம் எங்ஙனமாம்?

இதரேதரப்ரத்யயத்வாதிதி சேந்நோத்பத்திமாத்ரநிமித்தத்வாத் (உ. உ. கக)

(ககஉ) (அவித்தையும் இராகாதிகளும்) ஒன்றுக் கொன்று காரணமாதலின் அது கூடுமாமெனின், அன்று; (அவித்தை) சமுதாயத்தை ஆக்கமாட்டாமையின்.

(புத்தன்) நிலையில்லாததை நிலையெனக்கொள்ளும் அவித்தையும் இராகாதிகளும் ஒன்றுக்கொன்று காரணமாயிருத்தலின், இந்தச் சமுதாயம் கூடுமாம் எனின்,

(சித்தாந்தம்) அன்று; அவித்தை சமுதாயத்தை ஆக்காமையின். அவித்தை காரணமாக இப்பியானது வெள்ளியாகத் திரித்துணரப்படுங்கால், அவ்விப்பி முதலியன வாஸ்தவத்தில் வெள்ளிமுதலியவற்றின் காரியத்தை ஆக்கா; அறிவுடையானுக்கு அப்பொழுதே அத்திரிவுணர்ச்சி தீர்தலின். அவித்தை காரணமாக இராகாதிகளும் எய்தமாட்டா. ஆகலிற் சமுதாய காரணவாதம் அயுக்தம். (கஅ)

(சூத்திரகாரர்) மற்றோர் யுக்தி கூறுகின்றனர்.

உத்தரோத்பாதே ச பூர்வநிரோதாத் (உ. உ. ககூ)

(ககூ) முந்தியது நட்டமாகுங்கால், பிந்தியது உற்பத்தியாதலின்.

பிற் கடம் உற்பத்தியாகுங்கால், முற்கடம் நஷ்டமாகின்றது. அபாவமே காரணமாக யாண்டும் உளதாதலின், எக்காலமும் எங்கும் உற்பத்தியாகலாம். (ககூ)

அஸதி ப்ரதிஜ்ஞோபரோதோ யௌகபத்யமந்யதா।

(உ. உ. உ0)

(ககச) சத்து இல்லையானாற் பிரதிஞ்ஞாவிரோதம்; இன்றேல் ஒரேமுறையில் நிகழ்வது.

காரணமில்லாமலே காரியம் உற்பத்தியாவதேல், (இந்திரியம் பிரகாச முதலாயினவே) ஞானத்துக்குக் காரணம் என்னும் கோட்பாடு விரோதமாகும். *(காரியமாகும் வரையிற் பூருவகட அபாவகாரணம்) உளதென்று கொள்ளின், இரு குடங்கள் ஒரே முறையில் இருப்பக் காணலாம்; (காரியமாகும் வரையிற் காரணம்) இல்லையேல், (பொருளுக்கும் இந்திரியத்துக்கும்) இசைவாகிய அறிவுக்கும் ஏககாலநிகழ்ச்சி எய்தும். (உ0)

* இந்திரியத்துக்கும் பொருளுக்கும் சம்பந்தமாய்ப் பின்னர்த் தோற்றப்பாலதாகிய அறிவு ஏககாலத்துளதாம் என்னும் தோஷம் நிகழும் என்பது தாற்பரியம்.

𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌨𑌿𑌰𑍋𑌧𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌤𑍍।
(உ. உ. உக)

(ககூரு) (ஸ்தூல) நாசமும், (சூக்கும) நாசமும் எய்தா; (சந்தானதிரவியம்) உண்மையான்.

நிரோதம் என்பது மீதமின்றி ஒழிவது. அந்தவிநாசம் ஸ்தூலவிநாசமாகவாவது சூக்குமவிநாசமாகவாவது இராது; கபாலாதி ரூபத்தையடைந்தவிடத்தும் கடம் நாசமுற்றதெனச் சொல்வதினாலும்; சத்தாகிய திரவியம் அழியாமையினாலுமாம். அதுகொண்டு க்ஷணிகத்துவ வாதஞ் சித்தியாது. (உக)

𑌉𑌭𑌯𑌥𑌾 𑌚 𑌦𑍋𑌷𑌾𑌤𑍍 (உ. உ. உஉ)

(ககூசு) இருதிறத்தும் தோஷமுண்மையான்.

தோற்றப்பட்டது இன்மையாவதும், இன்மையிலிருந்து உற்பத்தியாவதும் பொருந்தா; இன்மையிலிருந்து உற்பத்தியாதல் கூடாமையானும், இன்மையாகுங் காரியமே உற்பத்தியாகுமென்னும் தோஷமுண்மையானுமாம். ஆகலின், இந்தக் கோட்பாடு ஒவ்வாது. (உஉ)

𑌆𑌕𑌾𑌶𑍇 𑌚𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 (உ. உ. உங)

(ககூஎ) ஆகாயத்தினும் வேறுபாடின்மையான்.

ஆகாயத்தையும் சூனியம் என்று கோடற்பாற்றன்று; பருந்து முதலிய பட்சிகள் பறத்தற்கியன்ற பூதமாக அதனுண்மை தவிர்க்கப்படாது அனுபவஞ் சித்தித்தலான். (உங)

𑌅𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌶𑍍𑌚 (உ. உ. உச)

(ககூஅ) நினைப்பூட்டுகையானும்.

நினைப்பூட்டுதல்பற்றியும் க்ஷணிகவாதம் நிலைக்காது. "அதுவே இது" என்னுமிடத்துச் சாமாநாதிகரணியத்தினால், சென்றகாலத்துக்கும் நிகழ்காலத்துக்குமுரிய வஸ்து ஒன்றென்று அறியப்படுகின்றது. முன் அநுபவத்தினால் உண்டாகிய சம்ஸ்காரமுடைய புருஷனது இந்திரியசம்யோகமே அதற்குக் கருவியாகின்றது. ஆகலின், க்ஷணிகத்துவமுதலாகிய பொருந்தாத அர்த்தத்தைச் சொல்வதிற் சமுதாயகாரணவாதமானது முற்றும் தவறும். (உச)

(ச) திருஷ்டத்துவாதிகரணம்.

(பௌத்தரில் ஞானநுமேயத்துவவாதநிராகரணம்)

பாஹ்யார்த்த ஆஸ்திகவாதிகளுள்ளே, பக கடமுதலாயின பிரத்திய

க்ஷத்தினால் அறியப்படுவனவாம் என்னும் பௌத்தர் கோட்பாடு நிரசிக்கப் பட்டது. (பாகியார்த்தங்களின் ஆஸ்திகம்) அறிவினால் அனுமானிக்கப்படும் என்னும் வாதிகள் நிரசிக்கப்படுகின்றனர்.

நாஸதோ(அ)த்ருஷ்டத்வாத் (௨. ௨. ௨௫)

(௧௯௯) அசத்திலிருந்து (தர்மம்) இல்லை; காணப்படாமையான்.

(பாகியார்த்தங்களின் இருப்பு) அறிவினால் அனுமானிக்கப்படல்வேண்டும் என்னும் ஓர் சார் பௌத்தர்களின் கொள்கை யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஒருபொருள் தான் நாசமுறுங்கால் தன் உருவை அறிவிற் புகட்டி அழிகின்றது. அறிபவன் அப்பொருளை அறிவின் வைசித்திரியத்தைக் கொண்டு அநுமானிக்கின்றான். ஞானவைசித்திரியத்தினால் அர்த்தவைசித்திரியம் அனுமானிக்கப்படுகின்றதெனின்,

(சித்தாந்தம்) இது இசையாது; அர்த்தம் க்ஷணிகமாதலினாலும், இல்லாதொழிந்துபோய தர்மியின் தருமம் மற்றொன்றுக்குச் செல்லக் காணப் படாமையானுமாம். (௨௫)

உதாஸீநாநாமபி சைவம் ஸித்தி: (௨. ௨. ௨௬)

(௨௦௦) இங்ஙனமாயின் உதாசீனருக்கும் சித்தி எய்தும்.

க்ஷணிகத்துவத்தை அங்கீகரிப்பின் ஒருவன் ஒன்று செய்ய மற்றவன் பலத்தை அடைபவனாவன். ஆகலின், பிரயத்தனம் எதுவும் செய்யாதவர்க்கும் சர்வார்த்தசித்தியும் எய்துவதாம். இங்ஙனம் இவர் கோட்பாட்டை விளக்குதல் கஷ்டம். (௨௬)

(௫) உபலப்தியதிகரணம்.

(பௌத்தர்விஞ்ஞானமாத்திரவாதநிராகரணம்)

நாபாவ உபலப்தே: (௨. ௨. ௨௭)

(௨௦௧) (பாகியப்பொருள்) அபாவமாகாது, அறியப் படலான்.

ஈண்டுப் பௌத்தருடைய கேவல விஞ்ஞானவாதம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம், வடிவத்தோடு கூடிய விஞ்ஞானமே அகத்தத்துவம்; புறப்பொருள்கள் தத்துவமன்று; சொப்பனத்திலே புறப்

பொருள் வேண்டாது கேவலம் புத்தியினாலே வியவகாரம் நிகழ்க்காணப் படலான். இங்ஙனம் சாக்கிரவியவகாரத்துக்கும் வியவஸ்தை பொருத்த மாகும். ஆகலின், விஞ்ஞானமாத்திரம் தத்துவமாம் எனின்,

(சித்தாந்தம்) கடத்தை அறிகின்றேன் என்னுமிடத்து அறிபவனுக் குச் செயப்படுபொருளாய பொருள் தோன்றுதலால், அதை இல்லை என்று மறுத்தல் கூடாது. விசேஷ பொருளை வியவரிக்குமாறு புருஷனுக்குத் தக்கவாறு தோற்றுவிப்பதே ஞானத்தின் ஆகாரம். (௨௭)

சொப்பனதிருஷ்டாந்தவாயிலாகச் சாக்கிரவியவகாரமும் சூனியமாம் என்றதற்குச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வைதர்ம்யாச்ச ந ஸ்வப்நாதிவத் (௨. ௨. ௨௮)

(௨0௨) பேதமுண்மையினாலும் சொப்பனாதிபோலன்று.

இந்திரியதோஷத்தின் வாதை இல்லை என்னும் வேறுபாட்டாற் சாக் கிராவஸ்தை சொப்பனம்போல் மித்தையாகாது. ஆகலின், விஞ்ஞானமாத் திரம் தத்துவமன்று. (௨௮)

ந பாவோऽநுபலப்தே: (௨. ௨. ௨௯)

(௨0௩) அறிவில்லாவிடத்துப் பொருளில்லை.

பொருள் சூனியமாமிடத்து ஞானம் எய்தாது; அந்த ஞானம் யாண் டும் அனுபவத்திற் காணப்படாமையான். சொப்பன ஞானத்துக்கும் பொருள் இருக்கின்றது. ஆகலின், விஞ்ஞானமாத்திரவாதம் பொருந் தாது. (௨௯)

(௬) சர்வதாநுபபத்தியதிகரணம்.

(சர்வசூன்னியவாதநிராகரணம்)

ஸர்வதாऽநுபபத்தேச்ச (௨. ௨. ௩0)

(௨0௪) எப்பிரகாரத்தினாலும் அது பொருத்தமின்மை யானும்.

ஈண்டுச் சர்வசூன்னியவாதம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது யுக்தம். எங்ஙனமெனின், உலகமுழுமையும் சத்தன்று, பாதிக்கப்படலான். அசத்துமன்று, அறியக்கிடத்தலின். இரண்டும் அன்று, விரோதமுறுதலான். இரண்டும் அன்றெனலும் கூடாது, அசம்பவமாதலின். ஆனால் இந்த நான்கினும் அடங்காத எல்லாம் சூன்னி யமே. பிரத்தியக்ஷக்காட்சியோ எனின், அது மாயை மூலமாய்ப் போந் தது. ஆகலின், சூன்னியவாதந்தான் நன்றாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. எல்லாம் சூன்னியம் என்பது கூடாது. ஏதனால்? பிரபஞ்சத்தைச் சத்து என்றாவது, அசத்தென்றாவது, மற்றொன்றென்றாவது கூறுமிடமெல்லாம் சூன்னியத்துவம் எய்தாது; சத்து அசத்து என்னும் மொழிகளும் அவற்றின் கருத்துக்களும் வஸ்துவைப்பற்றி ஒன்றுக்கொன்று வேறுபாடாகிய உளது இலதென்னும் அவஸ்தாவிசேஷங்களைப் பற்றியவாமாதலின். பிரத்தியக்ஷக்காட்சி அவித்தையினலாம் எனின், அது பரிகாசத்துக்கிடனும். எல்லாஞ் சூன்னியமாயின் அவித்தைக்கு ஆசிரயமாயுள்ளது யாது? எதற்கு இத்தோற்றம் நேர்ந்தது? ஆகலின், சர்வசூன்னியவாதம் முழுமையும் விரோதமே. (௩௦)

பௌத்தமதம் தீர்ந்தது. சைனமதம் கண்டிக்கப்படுகின்றது.

(எ) ஏகஸ்மிந்நசம்பவாதிகரணம்.

நைகஸ்மிந்நஸம்பவாத் (௨. ௨. ௩௩)

(௨௦௩) பொருந்தாமைபற்றி ஒன்றிற் (பல) இல்லை.

(சைனமதவாதநிராகரணம்)

சப்தபங்கிந்யாயத்தினுற் சைனர்கள் ஒரே பொருளினும் பலதிறத்த வஸ்துதைகளை விளக்குகின்றனர். இவர்கள் மதம் யுக்தமா? அன்று? என்பது விசாரம்.

அவர்கள் மதம் வருமாறு:— ஆன்மா அநான்மா எனப் பதார்த்தங்கள் இரண்டு உள. ஆன்மா சேதனன்; சரீரபரிமாணமுடையன்; அவயவமுடையன். அநான்மா அறுவிதம். (அவற்றுள்) ஒன்று வனம் மலை முதலிய; எஞ்சிய ஐந்தும் ஆசிரவம், சம்வரம், நிர்ஜரம், பந்தம், மோக்ஷம் என்பன. ஆசிரவம் என்பது இந்திரியத்தொகுதி. இவை வாயிலாக ஆன்மா புறவிஷயங்களிற் பற்றுகின்றது. சம்வரம் என்றது அவிவேகம். இதனுல் விவேகம் மறைக்கப்படுகின்றது. நிர்ஜரம் என்பது தவம்; அது மயிர் பறித்தல், சுடுகல்லேறல் முதலியவாம்; காமக்குரோத முதலியவெல்லாம் இதனுல் ஒழிந்துபோகின்றன. பந்தம் என்பது எண்வகைக் கருமங்களினுல் எய்தும் ஜன்மபரம்பரை; (அவையாவன):— இம்சைசெய்யும் நால்வகைப் பாவச்செயல்களும், இம்சை செய்யா நால்வகைப் புண்ணியங்களுமாம். மோக்ஷம் என்பது இக்கருமங்களினின்று வீடுறும் ஆன்மா இடைவிடாது மேற்கதி அடைதலாம். இந்தச் சப்த பதார்த்தங்கள் சப்தபங்கிநியாயத்தினுல் ஸ்தாபிக்கற்பாலன. அவை இவை:— உண்டாம் உண்டு; உண்டாம் இல்லை; உண்டாம் உண்டுமாம் இல்லையுமாம்; உண்டாம் சொல்லொணுததாம்; உண்டாம் உண்டுமாம் சொல்லொணுததுமாம்; உண்டாம்

இல்லையுமாம் சொல்லொணாததுமாம்; உண்டாம் உண்டுமாம் இல்லையுமாம் சொல்லொணாததுமாம் என்பன சப்தபங்கிநியாயம். உண்டாம் என்பது சிறிது என்பதின் மேற்று.

ஆகலின் சப்தபங்கிநியாயத்தினுற் சப்த பதார்த்தம் சித்திக்கின்றதெனல் அயுக்தம். எதனுல்? உளதாதலும் இலதாதலும் நித்தியமாதலும் அநித்தியமாதலும் பேதமாதலும் அபேதமாதலும் ஒரே பொருளில் இருத்தல் கூடாமையின். ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றிய மட்பிண்டம் கடம் கபாலம் என்பனவைகள் உளவாதலும் இலவாதலுமாம் ஒன்றுக்கொன்று மாருகிய அவஸ்தைகள் ஒரே பதார்த்தத்தில் ஒரே காலத்தில் ஒருங்கிரா. ஆகலின், சைனமதம் விருத்தம். (௩௧)

ஏவஞ்சாத்மாகார்த்ஸ்ந்யம் (௨. ௨. ௩௨)

(௨௦௬) இங்ஙனமும் ஆன்மாவுக்குப் பூரணமின்மை.

இங்ஙனம் ஆன்மாவுக்குப் பூரணமின்மை பொருந்தாது. ஆன்மா சரீர பரிமாணமுடையதேற் பெருஞ் சரீரத்திருந்து சிறு சரீரத்துக்குப் பிரவேசிக்குங்காற் குறைவு நேரிடுமே. ஆகலின், ஆன்மாவைச் சரீர பரிமாணமுடையதெனல் அயுக்தமே. (௩௨)

ந ச பர்யாயாதப்யவிரோதோ விகாராதிப்ய: (௨. ௨. ௩௩)

(௨௦௭) (மாறி மாறி) வேறுபடுதல்பற்றியும் அவிரோதமில்லை, விகாரமுதலியவுண்மையான்.

ஆன்மா அவ்வவ் வடிவத்துக்கியைந்த உருப்பெறுமெனினும், முன் உரைத்த பொருத்தமின்மை தீராது; ஆன்மா கடாதிபோல விகாரமடைகின்றதென்னும் தோஷமுறலான். (௩௩)

அந்த்யாவஸ்திதேஶ்சோபயநித்யத்வாதவிஶேஷ: (௨. ௨. ௩௪)

(௨௦௮) இறுதி நிலை காரணமாக இரண்டும் நித்தியமாதலிற் பேதம் இன்று.

இறுதி முத்திதசையிலே பரிமாணம் ஏகரூபமாயிருத்தலின், இயற்கையாய் ஆன்மாவும் அதன் பரிமாணமுமாகிய இரண்டும் நித்தியமாயிருப்ப, முந்திய தசையிலும் பேதமிலதாகும். பல்வகைப் பரிமாணமுடையதென்பதிற் குறைவே நேரும். ஆகலின், ஒன்றில் உளது இலதென்னும் வாதத்தினுலும், ஆன்மா தேகபரிமாணமுடையதென்னும் வாதத்தினுலும் சைனமதமும் தவறும். (௩௪)

(௭) பாசுபதாதிகரணம்.

(பூருவாசாரியர் கொள்கைப் பிரகாரம்

அவைதிக நகுலீச பாசுபதமத நிராகரணம்)

பத்யுரஸாமஞ்ஜஸ்யாத் (௨. ௨. ௩௫)

(௨௦௧) பதி (நிமித்தகாரணமாதல் இன்று), பொருத்தமின்மையின்.

(மாயாதத்துவத்து வைகும் ஓர்) ருத்திரர் அருளிய (அவைதிக பாசுபத) ஆகமநிஷ்டராய் அதன் மதப்பொருள் அறியாதவராயுள்ள ஏகதேச தாந்திரிகர் *(அவைதிகபாசுபதர்) பதியாகிய சிவபெருமான் சுருதிமுடிவின்

---

* (பூருவாசாரியர் கொள்கைப்பிரகாரம்) ஸ்ரீநீலகண்டசிவாசாரியராலும், சங்கராசாரியராலும், இராமாநுஜாசாரியராலும், மத்துவாசாரியராலும், இந்தப் "பாசுபதாதியதிகரண"த்தினும், நீலகண்டசிவாசாரியராலும் சங்கராசாரியராலும் "பாஞ்சராத்திராதிகரண"த்தினும் நிராகரணஞ் செய்யப்பட்ட மதங்கள் முறையே அவைதிகபாசுபதமும் பாஞ்சராத்திரமுமாம்.

புரா தா³ருவநே புண்யே முநயோ ப்³ரஹ்மவாதி³ந꞉।
ஸம்வத்ஸராயுதாந்யாய தபஸ்தேபு꞉ ஸஹஸ்ரஶ꞉।
தத꞉ கதா³சித³ப⁴வத் காலயோகே³ந து³ஸ்தர꞉।
அநாவ்ருஷ்டிரதீவோக்³ரா ஸர்வப்ராணிவிநாஶிநீ।
ஸமேத்ய ஸர்வே முநயோ கௌ³தமம் தபஸாம் நிதி⁴ம்।
அயாசந்த க்ஷுதா⁴விஷ்டா ஆஹாரம் ப்ராணதா⁴ரணம்।
ஸ தேப்⁴ய꞉ ப்ரத³தா³வந்நம் ஶ்ரேஷ்ட²ம் ப³ஹுவித⁴ம் முதா³।

"முன்னோர்கால் கிரகஸ்தாச்சிரமிகளாகிய முனிவர் ஆயிரக்கணக்கானோர் திவ்யமாகிய தாருவனத்திலே சிவாராதனையின் பொருட்டுத் தபஞ்செய்துவந்தார்; காலபேதத்தினால் ஓர் காற் பெரிதாயதும், கடத்தற்கரியதும், அதிக உக்கிரமுடையதும், உயிர்களை வதைக்கற்பாலதுமாய ஓர் துர்ப்பிக்ஷம் உண்டாயிற்று; அப்போது தபசுக்கு நிதியாயுள்ள கௌதமரை அம்முனிவரெல்லாம் அடைந்து பசியினால் வருந்திப் பிராணாதாரமாகிய ஆகாரம் வேண்டுமென அவரை யாசித்தார்கள். அம்முனிவர் அவர்கட்கு மிகுதியாகப் பாகஞ்செய்யப்பெற்ற அன்னமளித்தார்;" பின்னர் அவர்கள் அச்சம் யாதுமின்றி அவரது ஆச்சிரமத்தில் இருந்து பன்னிரு வருஷம் உண்டு வருவாராக, துர்ப்பிக்ஷம் நீங்கிற்று; மழைபெய்து நாடு செழித்தமையால் அவர்கள் அவ்வாச்சிரமம் விடுத்துத் தம்முறைவிடம் போதற்கு முயன்று முனிவரிடம் வந்து அநுமதிகேட்க, அவர் பின்னும் சிலகாலம் தமது ஆச்சிரமத்திருந்து சுகமே உண்டு வாழுமாறு கூறி, அவர்களைப் போகவொண்ணம் தடுத்தார்; அப்போது அம்முனிவர்கள் மாயாரூபமாகிய கரிய பசுவொன்றை (மந்திரத்தினால்) ஆக்கி, கௌதமர் சமீபத்தில் நிற்குமாறு செய்ய, அம்முனிவர் அப்பசுவைக் கோட்டத்திற் கொணர்ந்து கட்டித் தொட்டமாத்திரத்தில் அது வீழ்ந்திறந்தது; இவ்விஷயத்தை முனிவர் அறியாது கோஹத்தி நிகழ்ந்துபோயிற்றே என்று சோகித்தார்;

கோ³ரவத்⁴யம் த்³விஜஶ்ரேஷ்ட² யாவத்தவ ஶரீரகா³।
தாவத்த்வத³ந்நம் நோ ப⁴க்ஷ்யம் க³ச்சா²மோ வயமேவ ஹி।

"(அம்முனிவர்கள் கௌதமரை நோக்கி) விப்பிரசிரேஷ்டரே! இது பசுக்கொலை; நமது சரீரம் நீங்கும் வரையும் நமது அன்னம் புசிக்கற்பாலதன்று; நாங்கள் (இவ்விடம்விட்டுப்) போகின்றோம்" என்று கூறிப் போய்த் தமது தாருவனத்தை அடைக்

படி உபயகாரணமுடையராயவிடத்தும், கேவலம் நிமித்தகாரணவாதம் கூறு கின்றார்கள். இது யுக்தமா? அன்று? என்பது சந்தேகம்.

தார்கள்; இவர்கள் மாயத்தினால் நேர்ந்த கோவதையைக் கௌதமமுனிவர் அறிந்து அவர்களைச் சபித்தார்;

ஹவிஷ்யந்தி த்ரயீபாஹ்யா மஹாபாதகிநஸ்ததா ।
ஸஹாபஹ்வேத்தயா ஸாபாஜ்ஜாயமாநா: புந: புந: ।
ஸமேத்ய ஸர்வேப்யஸ்தௌஷம் ஸங்கரம் விஷ்ணுமவ்யயம் ।

"மகாபாதகிகளை நிகர்த்து வேதபாகியர்களாய் ஆவார்கள் என, அவர்கள் அநேகமாய்ச் சாபத்தினால் மீட்டும் மீட்டும் பிறந்து, (மாயாதத்துவ) உருத்திரரையும் அவ்வியயராகிய நாராயணரையும் அடைந்து ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; அப்போது உருத்திரர் (அவைதிக) பாசுபத முதலியவற்றையும், நாராயணர் பாஞ்சராத்திர முதலியவற்றையும் அச்சாபமுற்ற முனிவர் ரக்ஷணார்த்தமாக உண்டாக்கினார்கள் என்று உபநிடத உபக்கிரமணிகை ௨௯-ஆம் இலக்கத்தினாற் பெறப்படுகின்றது. சாபமுற்ற முனிவர் இரக்ஷணார்த்தமாக அவைதிக பாசுபதமுதலிய இயற்றப்பட்ட இவ்வுண்மை கூர்மபுராண பூருவபாகத்து ௧௬-ஆம் அத்தியாயத்தினும், சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டத்து ௩௨-ஆம் அத்தியாயத்தினும் காணப்படுகின்றது. ஆகலின், இவ்விரு அதிகரணங்களும் அவைதிகபாசுபத பாஞ்சராத்திரமத நிராகரணங்களின் மேலனவாம்.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியரால் ௨. ௨. ௩௮-ஆஞ் சூத்திரபாஷ்யத்தில் அவைதிக பாசுபதத்தை நிராகரணஞ்செய்து, பின் அவர் சித்தாந்தமாக ஸ்தாபித்த பாசுபதம் வைதிகபாசுபதமாம் என்பதும், அவைதிக (அசிரௌத) பாசுபதம் வைதிக (சிரௌத) பாசுபதம் எனப் பாசுபதம் இருதிறப்படும் என்பதும், உபநிடத உபக்கிரமணிகை ௩௦-ஆம் இலக்கத்தினால் அறிக. இந்த அவைதிக பாசுபதம் அகப்புறச் சமயத்துள் ஒன்றாக வைத்து ஸ்ரீசிவஞானசுவாமிகளால் திராவிட மகாபாடியத்திற் கணிக்கப்பட்டிருக்கின்றது. அங்குரத்துக்காதாரம் வித்து, வித்துக்காதாரம் குளிர்ச்சி, குளிர்ச்சிக்காதாரம் நிலமாமாறு போல, பிரபஞ்சத்துக்காதாரம் மாயை, மாயைக்காதாரம் சிவசத்தி, சிவசத்திக்காதாரம் சிவபிரான்; நிலம் குளிர்ந்தவிடத்து அதன்கட்கிடந்தவித்து முளையைத்தோற்றுவிக்குமாறுபோல, சிவசத்தி சங்கற்பித்த போது மாயையினின்று பிரபஞ்சம் தோன்றும் என்று சிவஞானபோதம் கூறுமாற்றாற் பிரபஞ்சம் மாயையுள் அடங்கியதென்றும், மாயை சத்திக்குள் அடங்கியதென்றும், சத்தி சிவனார்க்குள் அடங்கியதென்றும் சிவதருமோத்தராதி ஆகமங்களினாற் பெறப்படுகின்றது. பிரபஞ்சமுதலியன ஒன்றனுள் ஒன்று வியாபகவியாப்பியத்தினால் நீங்காதிருந்தனவாக, ஞானபாதமுற்றுச் சிவபிரானும் மாயையும் சத்தியும் நிமித்தோபாதான துணைக்காரணமாகச் சிறப்புறக் கூறப்பட, உபநிடதங்களும் பிரமசூத்திரமும் ௧. ௪. ௨௩-ஆம் சூத்திரபாஷ்யக் குறிப்பிற் கூறியாங்கு, தியானயோகமுற்றுச் சிவபெருமான் நிமித்தோபாதான காரணராகப் பொதுவுறக் கூறப்படுதலாற் போதரும் பேதம் யாதுமின்றாம். தியானயோகத்துச் சிவதத்துவத்தின் பாற்பட்ட வைதிக பாசுபதமானது ஸ்தூலமூலப்பிரகிருதிப் பாற்பட்ட அவைதிக பாசுபதாகமம், இரணியகர்ப்பாகம முதலியவற்றைக் கண்டிக்க வன்மையுடையனவாமன்றி ஞானபாதத்ததாய், வேதசாரத்ததாய், ஷட்த்ரிம்சத் தத்துவாதீதமாய் நிற்கும் காமிகாதி வைதிக சித்தாந்த சிவாகமத்தைக் கண்டிக்க வன்மையுடையதுமன்று; கண்டித்ததுமன்று. இதுகொண்டே நீலகண்டசிவாசாரியர் "வேதசிவாகமங்கட்குப் பேதம் கண்டிலம்" என்றற்றொடக்கத்தனவாக அருளிச்செய்ய,

பத்யுரஸாமஞ்ஜஸ்யாதித்யத்ர நிரீஸ்வராவைதிகபாசுபத
நிராகரணபரம் நது காமிகாதி ஸித்தாந்தசைவாகமஸ்ய வேதாவி
ரோதஸ்ய ।

"பாசுபத்தியதிகரணத்தில் நிருடபாசுபதமே நிராகரணஞ் செய்யப்பட்டதன்றி,

(பூருவபக்ஷம்) உபாதானமல்லாத குலாலன் தண்டாதிகளைச் செலுத்துதலாற் கர்த்தாவாகின்றான். ஆகலின், தடஸ்தராகிய *ஈசுரர் நிமித்தமாத்திரரே. மாயை உபாதானம். சத்திகள் கரணம். இன்றேல் மண் முதலிய போல ஈசுரர் உபாதானமாயின், அவர் விகாரமுதலியனவுறுவர். ஆகலின் ஈசுரர் நிமித்தமாத்திரரெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பதியாகிய ஈசுரரைக் கேவலம் நிமித்தகாரணமாகக் கூறுவது யுக்தம் அன்று; சுருதி நியாயத்துக்கு விரோதமாய்ப் பொருந்தாமையின். (௩௫)

எங்ஙனம் விரோதம் என்று சூத்திரகாரர் காட்டுகின்றனர்.

அதிஷ்டாநாநுபபத்தேஶ்ச (உ. உ. ௩௬)

(உ௧௦) அதிட்டானம் பொருத்தமின்மையினாலும்.

சரீரமிலராகிய ஈசுரர் உபாதானமாகிய மாயையை அதிஷ்டிக்கின்றனர் எனல் கூடாது. உலகத்திலே சரீரமுடைய குலாலன் முதலாயினோர் மட்பிண்டமுதலிய உபாதானகாரணத்தை அதிட்டிக்கக் காண்கின்றோம். ஆகலின், குலாலாதி திருட்டாந்தம் பொருந்தாது. மாயையை ஈசுரர் அதிட்டித்திலர் எனக்கொள்ளின், அவர் பிரயோசனமிலராக, சாங்கியர் கூறும் மதமே யுக்தமாகும். ஆகலின், ஈசுரர் நிமித்தகாரணமாதல் கூடாதெனப் பின்னரும் ஆக்ஷேபித்துக் கூறுவாராயினர். (௩௬)

கரணவச்சேந்ந போகாதிப்ய: (உ. உ. ௩௭)

(உ௧௧) இந்திரியம் போலெனின், அன்று; போகாதிகளெய்துமாதலின்.

அதிஷ்டானத்துக்கும் சரீரம் வேண்டாம்; எங்ஙனம் சரீரமில்லாத இந்திரியம் சரீரத்தை அதிஷ்டிக்கின்றதோ, அங்ஙனமே ஈசுரர் பிரதானத்தை அதிஷ்டிக்கின்றனர் எனின்,

---

வேதவிருத்தமில்லாத காமிகாதி சித்தாந்த சைவாகமம் அன்று" என்று பவுஷ்கராகமவிருத்தியில் ஸ்ரீஉமாபதிசிவாசாரிய சுவாமிகள் வரைந்தருளினர். தூலப்பிரகிருதிப் பாற்பட்ட நிமித்தகாரணம் கூறும் அவைதிக பாசுபதாகமம், இரண்ணியகர்ப்பாகமம் முதலியன கண்டிக்கப்படுவனவேயாக, ஞானபாதத்து ஷட்திரிம்சத்தத்துவாதீத வைதிக சைவசித்தாந்த சைவாகமம் கண்டிக்கப்படாது போதல், கன்மகாண்டம்பற்றி ஒருவன் "பெண்களைக் காமுறற்க" என்று கண்டிக்கப்படுவானாக, ஞானகாண்டம்பற்றி (பதினாறாயிரம் கோப) ஸ்திரீகளைக் காமுற்ற கிருஷ்ணபகவான் கண்டிக்கப் படாதுபோதல்போலாம்.

* இந்த ஈசுர சப்தம் சங்கராசாரியர் நீலகண்டசிவாசாரியர்களுக்கு முற்பட்டிருந்த பூருவாசாரியர் கொள்கைப் பிரகாரம் நிருடபாசுபதத்து ருத்திரர் மேற்றேனும், சைவபாடியகாரர் கொள்கைப்பிரகாரம் இரண்ணியகர்ப்பர் மேற்றேனும் செல்லும்.

(சித்தாந்தம்) அன்று; அவர் பிரதானத்துக்குரிய இன்பதுன்பமெல்லாவற்றுக்கும் இயைபுறாராதலின். சரீரமில்லாத ஆன்மா சரீரத்தை அதிஷ்டிக்குங்கால் சரீரத்துக்குரிய இன்பதுன்பங்களுக்கெல்லாம் அது ஆளாமாறுபோல, பிரதானத்தை அதிஷ்டிக்குங்காற் பிரதானத்துக்குரிய இன்பதுன்பத்துக்கு அவர் ஆளாவார். ஆகலின், ஈசுரர் நிமித்தமாத்திரரல்லர். (௩௭)

அந்தவத்த்வமஸர்வஜ்ஞதா வா (௨. ௨. ௩௮)

(௨௧௨) முடிவுண்மையும் முற்றறிவின்மையும்.

(சூத்திரத்தில்) வா என்பது உம்மைப்பொருட்டு.

(ஆக்ஷேபம்) குலாலன் மட்பிண்டத்தை அதிட்டிப்பதுபோல, ஈசுரர் சரீரமுடையராய் வேறு நின்று உபாதானத்தை அதிட்டிக்கின்றனர் எனின்,

(உத்தரம்) அன்று; அங்ஙனமாயின் ஈசுரர் ஓர் சம்சாரியைப்போல, முடிவுடைமையும் முற்றறிவின்மையும் உடையராவாராய், இன்பதுன்பமாம் போகத்துக்கு ஆளாகின்றமையின், ஈசுரர் பிரதானத்தைச் செலுத்துபவராகார்.

(ஆக்ஷேபம்) பிரதானத்தை அதிஷ்டித்தாலும்,

அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி (முண். ௩. ௧. ௧)

"உண்ணாது மற்றொன்று சாட்சிமாத்திரமாய் இருக்கின்றது" என்னுஞ் சுருதியுண்மையான், ஈசுரர் அந்த இன்பதுன்பமாம் போகத்துக்கு ஆளாகார் எனின்,

(உத்தரம்) அங்ஙனமாயின், தர்க்கபலத்தை விடுத்துச் சுருதிபலமே பற்றத்தக்கதாகும்.

ததாத்மாநம் ஸ்வயமகுருத (தைத். ௨. ௭. ௧)

"அப்போது அவர் தாமே தாமாகச் செய்தனர்"

பஹு ஸ்யாம் ப்ரஜாயேய (சாங். ௬. ௨. ௩)

"நான் அநேகமாயாவேனாக"

ஸர்வோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௨௪. ௪௨)

"மெய்யாய் எல்லாம் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே

[illegible] கேவலம் நிமித்தகாரணம் ஈசுரர்க்குக் கூறிய நிரூடபாசுபதமாகிய அவைதிக நகுலீச பாசுபதாகமத்தை நிராகரணஞ்செய்யுமாறு, சூத்திரங்கடோறும் உத்தரமிறுக்கத் தொடங்கியது வைதிகபாசுபதமேயாம்.

உபாதானமும் சிவபெருமான் என அங்கீகரிக்கற்பாற்று. சிவபெருமான் உலகத்துக்கு உபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாய் இருப்பினும்,

நிஷ்கலம் நிஷ்க்ரியம் (சுவே. ௬. ௧௯)

"நிஷ்களமும் நிஷ்கிரியமுமாய் அவர் உளர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே அவர் நிர்விகாரமுடையராவர்.

ஶக்தி꞉ ப்ராக்ஸம்ப⁴வா ஶாந்த்யதீதா மஹேஶ்வரீ |
ததோ மாயா ததோऽவ்யக்தம் ஶிவாச்ச²க்தியுதாத் ப்ரபோ⁴꞉ |
ஶாந்த்யதீதபத³ம் ஜஜ்ஞே ததஶ்ஶாந்திபத³ம் க்ரமாத் ||

"சாந்தியாதீதசத்தியே முதற்கண் இருந்தது; அதிலிருந்து மாயை பிறந்தது; அதிலிருந்து அவ்வியக்தம் பிறந்தது; சத்தியோடு கூடிய பிரபுவாகிய சிவபெருமானிடத்திலிருந்து சாந்தியதீதபதம் பிறந்தது; அதிலிருந்து சாந்திபதம் பிறந்தது" என்றற்றொடக்கத்த வாயுசங்கிதா சுலோகங்களான் மாயாதிபிரபஞ்சத்திலே சத்திமானாகிய சிவபெருமான் உபாதானத்துவத்தை அடைகின்றனர் என அறியப்படுகின்றது. பின்னரும் அவ்வாயுசங்கிதையிலே,

ஶக்த்யாதி³ ச ப்ருதி²வ்யந்தம் ஶிவதத்த்வஸமுத்³ப⁴வம் |
தேநைகேந து தத்³வ்யாப்தம் ம்ருதா³ கும்பா⁴தி³கம் யதா² |
(வாயு. பூர். ௨௫: ௧௮)

"சத்திதத்துவந் தொடுத்துப் பிருதிவியந்தமாயுள்ள எல்லாஞ் சிவதத்துவத்திலிருந்து பிறக்கின்றன; குட முதலிய மண்ணினால் வியாபிக்கப்பட்டாற்போல, அவ்வொருவராலே எல்லாம் வியாபிக்கப்பட்டன" என்னும் மட்கட நியாயத்தினாற் சிவபெருமானே உபாதானமாகிப் பிரபஞ்சத்தை வியாபிக்கின்றனர் என்று பெறப்படுகின்றது.

சிதா³த்மைவ ஹி தே³வோऽந்த꞉ஸ்தி²தமிச்சா²வஶாத்³ப³ஹி꞉ |
யோகீ³வ நிருபாதா³நமர்த²ஜாதம் ப்ரகாஶயேத் ||

"சித்தான்மாவாகிய தேவர் தமக்குள்ளிருந்து இச்சாவசத்தினால் யோகிபோல உபாதானமின்றிப் பொருட்டொகுதியைப் புறத்தே பிரகாசிப்பிக்கின்றனர்" என்றற்றொடக்கத்த ஆகமப்பிரமாணத்தினாலும், சிவபெருமானுக்கு உபயகாரணத்துவம் கூறல் குற்றமாகாது.

சிவாகமத்தின் ஏகதேசத்திலே சிவனாராகிய பரப்பிரமம் கேவல நிமித்தகாரணராகக் கூறப்பட்டிருக்கின்றது. அதனைப் பரிகரிக்கும்பொருட்டே இந்த அதிகரணம் போந்ததென்று பூருவாசாரியர் (இங்ஙனம் மேலே கூறியாங்கு) வியாக்கியானஞ் செய்தார்.

யாமோ வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம். வேதமும் சிவாகமம் எனப்படும் வியவகாரம் யுக்தம்; சிவனே அவற்றிற்குக் கர்த்தாவாதலின். அதுபற்றி மூவருணத்தார்க்குரியதும் எல்லா வருணத்தார்க்குமுரியதுமெனச் சிவாகமம் இருதிறப்படும்; வேதம் மூவருணத்தார்க்குரியது; மற்றது (சிவாகமம்) எல்லா வருணத்தார்க்குமுரியது; அவற்றுக்குச் சிவபெருமானே கர்த்தாவாதலின்.

ஈசாந꞉ ஸர்வவித்யாநாம் (தைத். ஆரணி. ௨௧. ௩௯)

"சர்வவித்தைகளுக்கும் ஈசானர்" என்றும்,

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதம் |

(பிரு. ௪. ௫. ௧௧; ௪. ௪. ௧௦)

"(வேதம்) பரம்பொருளினாற் சுவாசிக்கப்பட்டது" என்றும் போந்த சுருதிகளானும்,

அஷ்டாதசாநாம் வித்யாநாம் ஏதாஸாம் பிந்நவர்த்மநாம் |
ஆதிகர்த்தா கவி꞉ ஸாக்ஷாத் சூலபாணிரிதி ச்ருதி꞉ |

(வாயு. பூர். ௧: ௨௪)

"பல மார்க்கமுடைய இந்தப் பதினெண் வித்தைகளுக்கும் நேரே முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என்னும் ஸ்மிருதியினாலும், அவர் வேதத்துக்குக் கர்த்தாவாதல் பெறப்பட்டது. பிறவிடத்தும் சிவபெருமான் இங்ஙனமே கூறப்படுகின்றனர். ஆகலின், கர்த்தா ஒருவராதல்பற்றி வேதமும் ஆகமமும் ஒரே பொருளைப் பிரதிபாதித்தலின் இரண்டும் பிரமாணமே.

இதனை வேறு பிரகாரமாக ஆராயின் *பிரமம், பிரணவம், பஞ்சாக்ஷரம்,

*(௧) பிரமம்:—என்னும் பெயர் உபநிடதவுபக்கிரமணிகை ௧௦௧-ஆம் இலக்கத்திற் கண்டபடி, ஐதரேய முதலிய உபநிடதங்களிற் காணப்படுமாறுபோல,

உபக்கிரமணிகை ௩௩-ஆம், ௩௭-ஆம் இலக்கங்களிற் கண்டவாறு பராக்கியை அஜிதம் காமிகம் காரணம் வாதுள முதலிய ஆகமங்களிற் காணப்படலானும்,

(௨) (பஞ்சப்)பிரமம்:—சத்தியோஜாத வாமதேவ அகோர தற்புருஷ ஈசானமென்னும் பஞ்சப்பிரம மந்திரங்கள் தைத்திரீய ஆரணியகத்து ௧௦. ௭. ௩௫, ௩௩, ௩௭, ௩௮, ௩௩-ஆம் மந்திரங்களிற் காணப்படுமாறுபோல,

ஈசாநம் புருஷஞ்சைவ அகோரம் வாமதேவகம் |

ஸத்யோஜாதஞ்ச பஞ்சைதே ப்ரஹ்மாணி பரிகீர்த்திதா꞉ |

என்று வாதுளாகமத்துப் பிரமபேதத்தினும்,

ஸத்யவாமாகோராக்ய தத்புருஷேசாநஸம்ஜ்ஞா꞉

என்று காரண முதலிய மற்றை ஆகமங்களினுங் காணப்படலானும்,

(௩) பிரணவம் ஓம்:—என்பது சாந். ௧. ௧. ௧. லும், சுவே. ... லும், பிருகதாரணியத்து முதற்கண்ணும் மற்றைய உபநிடதங்களினும் காணப்படுமாறுபோல,

பிராசாதாதி மந்திரம், பசுபதிபாசாதி வஸ்துவியவகாரம், பஸ்மோத்தூளன திரியுண்டரதாரணம், லிங்கார்ச்சனம், ருத்திராக்ஷதாரண முதலிய மற்றைப் பரதருமங்களும் மற்றெல்லாவியவகாரங்களும் இரண்டினும் சமமாகக்

ஓமித்யேகாக்ஷரே ப்ரஹ்மஸ்திதஸ்ஸர்வகதஶ்ஶிவ:।

என்று சிவதருமோத்தராகமத்தினும்,

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வஸந்தி ஸர்வயோநிஷு।

ப்ரணவம் ஸர்வவர்ணாநாம் ஜீவபீஜமுதாஹ்ருதம்॥

என்று வாதுளாதியாகமங்களினும் காணப்படலாலும்,

(௪) பஞ்சாக்ஷரம்:—

நமஶ்ஶிவாய ச।

என்று யசுர்வேதத்து. ச. ௫. அ. க. ளும்,

ஶிவாய நம:।

என்று தைத்திரீய ஆரணியகத்து ௧௦. ௧௬. ௩௪. ளும் ஸ்தூல சூக்கும பஞ்சாக்கரங்கள் காணப்படுமாறு போல,

பஞ்சாக்ஷரஸ்ய ஷட்ஸூக்ஷ்மப்ரபேதா: ப்ரகீர்த்திதா:।

ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ததா ஸூக்ஷ்மமதிஸூக்ஷ்மம் ததைவ ச।

என்று பஞ்சாக்ஷர பேதங்கள் சித்தாந்தபோத முதலிய ஆகமங்களிற் காணப்படலாலும்,

(௫) பிராசாதம்:—

ஹ்ரஸ்வதீர்க்கப்லுத ஜ்ஞேயம்।

இருஸ்வ தீர்க்க புலுதப் (பிராசாதம்) அதர்வசிகை முதலியவற்றிற் காணப்படுமாறு போல,

பிராசாத பேதங்கள் முழுமையும் வாதுள சுத்தாக்கியை முதலிய ஆகமங்களிற் காணப்படலாலும்,

(௬) பதி:—முண். ௧. ௨. ௯. ளும், சுவே. ௬. எ, ௯. ளும், பிறவிடங்களினும், பதியின் பரியாய மொழிகளாகிய ஈசுவரர்: பிரு. ௬. ௪. ௨௨. ளும், சுவே. ௬. எ. ளும் ஈசானர்: கட. ச. ௫, ௧௨. ளும், சிவ: மாண்டூ. எ, ௧௨. ளும், சந்து: சாந். ௬. உ. ௧. ளும், ஞன்: சுவே. ௧. ௯. ளும்,

பசு என்பது அதர்வசிரசினும், இதன் பரியாயமாகிய அஞ்ஞன்: சுவே. ௧. ௯. ளும், ஆன்மா: சுவே. ௧. ௬. ளும், ஜீவான்மா: சாந். ௬. ௩. உ. ளும், சத்தியம்: பிரு. ச. ௧. ௨௦. ளும், சம்பிரசாதன்: சாந். அ. ௩. ச. ளும்,

பசுபதி: தைத். ஆரணி. ௧௦. ௨௨. ௪௦. ளும், பாசம்: சுவே. ௬. ௧௩; ௧. அ. ளுமாகப் பதி பசு பாச வியவகாரம் உபநிடதங்களிற் காணப்படுமாறு போல,

நாஸ்தி தஸ்மின்யதோ வேத்தி நவிதஸ்தஸ்ய தஸ்ய ஹி ய:।

பசவ: ஶிவயோகேனத்தா யஸ்ய ஶ்ருதா ததயோ: பஶ்யக:।

என்று ரௌரவாகமத்தினும்,

ஶ்ரீமதாயோஜ்ஞதத்ஸ்தோத்ரம் ஸோஹம்ஜ்யம் ஜகத்பதி:।

ஸம்ஹத்ருணேஶ ஸம்ஹ்ருதஹ்யபாஶ விஸ்தாரா: பதீ:॥

என்று சிவாகமப்பிரகரணங்களினும் காணப்படலாலும்,

காணப்படலான், வேதம் சிவாகமம் என்னும் இரண்டும் பிரமாணங்களே; †கர்த்தா ஒருவரேயாதலானும் இரண்டும் ஒரே பொருளைத் தருதலானும், அவ்விரண்டும் விரோதமுறாவாகலின்.

இவ்வதிகரணம் ஈசுரரைக் கேவலம் நிமித்த காரணமுதலியவாகக் கூறும் இரண்ணியகருப்பரது யோகஸ்மிருதி விஷயமென்று கூறுகின்றேம். ஆகலின்,

---

(எ) (உத்தூளன திரிபுண்டர) பஸ்மம்:—ஈசா. கஎ. னும், இதன் பரியாயமாகிய பூதி. தைத். க. கக. க. னும், சிரோவிரதம். முண். ௩. உ. க0. னும், அத்தியாசிரமம். சுவே. ௬. உக. னும், கைவல்லியத்தினும், விரதம் சாம்பவம் காலாக்கினிருத்திரத்தினும், பாசுபதவிரதம் அதர்வசிரசினும், விபூதி பசிதம் பஸ்மம் க்ஷாரம் இரக்ஷை என்னும் விபூதியின் நாமங்களும், கற்பம் அநுகற்பம் உபகற்பம் அகற்பம் என்னும் விபூதிபேதங்களும் பிருகச்சாபாலத்தினும், இவற்றைத் தரிக்குந் தானங்களும் மந்திரங்களும் காலாக்கினிருத்திர பஸ்மசாபால பிருகச்சாபால உபநிடதங்களினும் காணப்படுமாறுபோல, சுவாயம்புவம், சிந்தியவிசுவம், மதங்கம், காரணம், துவிசதிகாலோத்தரம், சுப்பிரபேதம், சர்வஞ்ஞானோத்தர முதலிய ஆகமங்களினும் காணப்படுகின்றமையானும்,

(அ) உருத்திராக்ஷம்:—உருத்திராக்ஷசாபாலோபநிடதத்திற் காணப்படுமாறுபோல, வாதுளம் காலோத்தரமுதலிய ஆகமங்களிற் காணப்படலானும்,

(௯) லிங்கார்ச்சனை:—

தவ ஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தே ஜநிம சாரு சித்ரம்|

"தேவர்கள் (பொருளும் அருளுமாம்) செல்வத்தை அடையுமாறு, (சிவபிரானாரது) விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகாதி பூசைசெய்தார்" என்று இரு. வே. ௫. ௩. ௩. னும், (இம்மந்திரத்திற்கண்ட) ஜநிம என்னும் மொழி லிங்கத்தை உணர்த்துமென விளக்கி

ஶௌத்ரம் லிங்கம் மஹாவிஷ்ணு: ஸ்வக்த்யா ஸம்பூஜ்ய ஶிலாமயம்|
சாருசித்ரம் [illegible] வைஷ்ணவம் பதம்|

"மகாவிஷ்ணுவானவர் தூய்தாயும் சிலாமயமாயும் விசித்திரமாயுமுள்ள மகாலிங்கத்தைப் பக்தியினால் அர்ச்சித்துப் பரமபதத்தை அடைந்தார்" என்று போந்த உபப்பிருங்கணத்தினும்,

ஶிவலிங்கம் த்ரிஸந்த்யாஸு அஹரஹரப்யர்ச்சயேத்|

"சிவலிங்கத்தைத் திரிசந்தியினும் தினந்தோறும் அர்ச்சிக்க" என்று பஸ்மஜாபாலத்தினும்,

ஶிவலிங்காய நம:|

என்று தைத். ஆரணி. க0. கரு. ௩௪. னும் காணப்படுமாறுபோல,

அம்சுமான், காலோத்தரம், ரௌரவம், காரணம், காமிக முதலிய ஆகமங்களில் லிங்கலக்ஷணம் லிங்காராதன முதலியன விரித்துக் கூறப்படலானுமே வேதமும் சிவாகமமும் பொருளினாற் சாமியமுறுவன என்று நீலகண்டசிவாசாரியர் வரைந்தருளினர்.

†பிருகஸ்பதி பகவான் (பிருகஸ்பதி) ஸ்மிருதிக்கும் லோகாயதத்துக்கும் தாம் ஒருவரே கர்த்தாவாமாயினும், ஆஸ்திகங் கூறும் அவர் ஸ்மிருதியும் நாஸ்திகம் கூறும் அவர்லோகாயதமும் வேறாயினாற் போல, சிவபெருமான் வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் கர்த்தாவாயிருப்பினும், இவ்விரு சாஸ்திரங்களும் கருத்தினால் வேறுபடாவென்பாராய்ப் பாஷ்யகாரர் "ஒரே பொருளைப் பிரதிபாதிப்பன" வாமென்றருளினர்.

இவ்வதிகரணம் ‡ இரண்ணியகருப்ப ஆகமத்தை நிரசிக்கும் பொருட்டுப் போந்ததாமெனல் யுக்தம். (௩௮)

(௯) பாஞ்சராத்திராதிகரணம்.

(பாஞ்சராத்திரமதநிராகரணம்)

உத்பத்த்யஸம்பவாத் (உ. உ. ௩௯)

(உ௩௯) உற்பத்தி அசம்பவமாதலின்.

பாஞ்சராத்திரமதம் வாசுதேவராற் கூறப்பட்டது. அங்கே ஆன்மாவுக்கு உற்பத்திமுதலியன கூறப்பட்டிருக்கின்றன. அது கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது கூடும். எதனால்? பகவானாகிய வாசுதேவராற் கூறப்பட்டது பிரமாணமாதலின். அவ்விஷயம் வருமாறு:—பகவானாய்ப் பரமான்மாவாயுள்ள வாசுதேவர் ஒருவரே. இவரிலிருந்து சங்கர்ஷணர் என்னும் பெயருடைய ஆன்மா பிறக்கின்றது; ஆன்மாவிலிருந்து பிரத்தியும்நர் என்னும் மனசு உதிக்கின்றது; மனசிலிருந்து அநிருத்தர் என்னும் அகங்காரம் உண்டாகின்றது. இந்த நான்கு வியூகமே சர்வான்மாக்களாம். ஆகலின், இரண்ணியகருப்பாதியோர்க்கு வாசுதேவர் பரமாதலின் அவர் கூறியதே பிரமாணம். அதிற் கூறப்பட்டது பொருத்தமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா உற்பத்தியாயிற்று என்று கூறும் இந்தச் சாத்திரம் அப்பிராமாண்ணியம். எதனால்? செய்யப்பட்டது நாசமுறுதலும், செய்யப்படாத மற்றொன்று தோன்றுதலும் பெறப்படலான், ஆன்மோற்பத்தி கூடாது. ஒருவன் புண்ணியபாவஞ் செய்து பிரளயகாலத்தில் ஒழிந்து போவானாயின், சிருட்டிகாலத்திலே மற்றோர் ஆன்மா தோற்

---

‡ இந்தப் பாசுபதாதிகரணத்திற் பூருவாசாரியர் கொள்கைப்பிரகாரம் நிராகரிக்கப்பட்டது அவைதிக பாசுபதமாம் என்றும், தமது கருத்துப்பிரகாரம் நிராகரிக்கப்பட்டது இரண்ணியகர்ப்பாகமம் என்றும் சைவபாடியகாரர் கூறுகின்றனர்.

☞ வாயுசங்கிதை பூருவபாகத்து உ௮-ஆம் அத்தியாயத்து ௧௧, ௧உ, ௧௩-ஆஞ் சுலோகங்களாய், சிவார்க்கமணிதீபிகையிலே காணப்படும் இந்த அதிகரணத்து உ. உ. ௩௮-ஆஞ் சூத்திரதீபிகையிலெடுத்தாளப்பட்டனவாய், உபநிடதவுபக்கிரமணிகை உ௧-ஆம் இலக்கத்தில் எடுத்துதகரிக்கப்பட்டனவாயுள்ள "சைவாகமோபி" என்றற்றொடக்கத்த சுலோகங்களுக்கு உண்மைப்பொருள் செய்ய, உபக்கிரமணிகை உஎ-ஆம் இலக்கத்துச் சனற்குமாரசங்கிதா சுலோகங்கள் அத்தீபிகையுடையார் பார்வைக்கெட்டாமையாற் காமிகாதி ஆகமங்களை அவைதிகம் என்று வழுவுற உ௧-ஆம் இலக்கத்திற் கண்டவாறு பொருள் செய்யத் துணிந்தமை தவறென்றுணருமாறு உபநிடதவுபக்கிரமணிகை உ௬-ஆம் இலக்கத்தின் கீழ் அவ்வாயுசங்கிதா சுலோகங்கட்கு உண்மைப்பொருள் உரைக்கப்பட்டமை கண்டு தெளிந்து, காமிகாதி ஆகமங்கள் வைதிகாகமங்களாம் என்றும், அவை அவைதிகாகமங்கள் அன்றென்றும் உண்மை கடைப்பிடிக்க.

றும். ஆகலின், ஆன்மோற்பத்தி கூறும் சாஸ்திரம் அப்பிரமாண்ணி யம். (௩௯)

சூத்திரகாரர் மற்றோர் பொருத்தமின்மை கூறுகின்றனர்.

ந ச கர்த்து꞉ கரணம் (௨. ௨. ௪0)

(௨௧௪) கர்த்தாவிலிருந்து கரணமும் (பிறக்க) இல்லை.

சங்கர்ஷணர் எனப் பெயரிய ஆன்மாவினின்று பிரத்தியும்நர் எனப்பெயரிய மனசு பிறந்தது. கர்த்தாவாகிய ஆன்மாவினின்று (அந்தக்) கரணோற்பத்தி தோற்றாது; பிரகிருதிகாரியமாய்த் தோற்றுவதைச் சேதனத்திலிருந்து தோற்றுவதெனல் பொருந்தாமையின். (௪0)

(பாஞ்சராத்திரி செய்யும் ஆசங்கை)

விஜ்ஞாநாதி பாவே வா தத³ப்ரதிஷேத⁴꞉ (௨. ௨. ௪௧)

(௨௧௫) அல்லது ஆன்மா முதலியவற்றை அதிட்டித்தல்பற்றிப் பிரதிஷேதமில்லை.

விஞ்ஞானம் என்றது ஆன்மா. ஈண்டு ஆன்மா முதலியவற்றுக்கு உற்பத்தி கூறப்படவில்லை; பின்னையோ சங்கர்ஷணர் முதலாயினோர்க்கு ஆன்மாவாதிபாவம் கூறப்பட்டது. ஆன்மாவாதி பாவமென்பது ஆன்மா முதலியவைகளுக்குள்ளிருந்து ஆளுவதாம். ஆகலின், அந்தப் பாஞ்சராத்திரப் பிரமாணம் மறுக்கப்படமாட்டாதாமெனின், (௪௧)

(உத்தரம்) சூத்திரகாரர் இறுப்பாராயினர்.

விப்ரதிஷேதா⁴ச்ச (௨. ௨. ௪௨)

(௨௧௬) (இது) தவிர்க்கப்படலானும்.

இங்ஙனம் ஆன்மோற்பத்திக்குச் சமாதானம் கூறப்படினும், பாஞ்சராத்திரமதக் கோட்பாடு அங்கிகரிக்கப்படுவதன்று; சுருதிக்கு விரோதமாக (உலககாரணரல்லாத) ஈசுரரை (வாசுதேவரை,* உலக) காரணராகவும் முத்திக்குக் காரணராகவும் கூறலும், (சரீரத்திலே வேதவிருத்தமாகிய) தப்த முத்திராதிகளைத் தரித்தல் பரதருமம் எனக் கூறலும் பிரதிஷேதிக்கப்படலான் (தவிர்க்கப்படலான்). ஆகலின், பாஞ்சராத்திரமதம் அசமஞ்சசம்.

வாஸுதே³வே ச ஶைவே ச ததா² காபாலிகே ததா² ।
ப்³ரஹ்மயா தீ³க்ஷிதா யே(அ)பி ஸர்வதா ப்³ராஹ்மணாத⁴மா꞉ ॥

(*சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் ௩௨. ௩௯)

---

* ௨. ௨. ௩௫-ஆஞ் சூத்திரபாடியக் குறிப்பிற் கண்டவாறு கௌதமமுனிவரிடத்துப் பன்னிருவருடம் அன்னமயின்று

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

"பாஞ்சராத்திரத்திலும் பௌத்தத்திலும் காளாமுகத்திலும் சிரத்தையோடு தீக்ஷிக்கப்பட்ட நீங்கள் பிராமண அதமர்களாவீர்கள்" என்றற்றொடக்கத்தவற்றிலும் விசேஷமாக நிஷேதிக்கப்படுதல் காணப்படுகின்றது. ஆகலின், பாஞ்சராத்திரமதம் மறுக்கப்படுவதொன்றாயிற்று. (சஉ)

என உத்தரவேதங் கூறியாங்கு, உடனே உண்ட நன்றி கொன்றமுனிவரெல்லாம் வேதபாகியராய்ப் போமாறு அக்கௌதம முனிவராற் சபிக்கப்பட்டவிடத்திற் (சூத சங்கிதையிலே) காணப்படும் இச்சுலோகம் சைவபாஷ்யகாரரால் ஈண்டு சூத்திரப் பொருட்கியைய எடுத்து உதகரிக்கப்பட்டது.

இரண்டாம் அத்தியாயத்து

மூன்றாம் பாதம்.

(க) வியதநிகரணம்.

(வேத) விருத்தமாகிய சமஸ்த சமய நியாயங்களும் கண்டிக்கப்பட்டன.

எஞ்சிய அத்தியாயத்தினாலே அவாந்தர விரோதங்களுக்குப் பரிகாரம் கூறப்படுகின்றது.

ந வியதஶ்ருதே: (உ. ஙு. க)

(உகஎ) ஆகாயம் (உற்பத்தி) யாகவில்லை, சுருதிப் (பிரமாணம்) இன்மையான்.

அவயவமிலாமைபற்றிக் காரியமாகாதென்னும் மயக்கத்தினால் ஆகாயத்துக்கு உற்பத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆகாயம் உற்பத்தியாகவில்லை என்பது பெறப்பட்டது; ஏதனால்? சுருதியிற் கூறப்படாமையான். எங்ஙனமெனின்? சாந்தோக்கியத்திலே,

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். சு. உ. க)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்று தொடங்கி,

தத்தேஜோऽஸ்ருஜத (சாந். சு. உ. ஙு)

"அது தேயுவை உண்டாக்கிற்று" எனத் தேயு முதலாகிய பூதங்களின் சிருஷ்டி கூறப்படுகின்றது. அங்கே ஆகாயோற்பத்தி கேட்கப்படவில்லை.

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: (தைத். உ. க)

"ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று தைத்திரீயத்திற் கூறப்பட்டது கவுணமாதற் கருகமாகின்றது; ஆகாயத்தோற்றத்துக்குச் சமவாயகாரணமுதலியநிரூபித்தல் கூடாமையான். (க)

ஆகலின் ஆன்மாவைப்போல ஆகாயமும் பிறக்கவில்லை எனின்;

(உத்தரம்) கூறுதும்.

அஸ்தி து (உ. ஙு. உ)

(உகஅ) ஆயின் உண்டு.

ஆகாயத்துக்கு உற்பத்தி உண்டுதான்;

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶ ஸம்பூத: (தைத். உ. க)
"இந்த ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று சுருதி கூறலின்.

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் (கட. உ. கஅ)
"அறிஞன் பிறப்பதில்லை, இறப்பதில்லை" என்று மறுக்கப்படலான், ஆன்மாவுக்கோ உற்பத்தி இல்லை. ஆகாய உற்பத்தியை மறுக்குஞ் சுருதி இல்லை. ஆகலின், ஆகாயம் உற்பவிக்கின்றதே. (உ)

(பூருவபக்ஷம்) இந்த உற்பத்தி கவுணமாமோ? எனின்,
சூத்திரகாரர் கூறுவாராயினர்.

கௌண்யஸம்பவாச்ச்ருதேச்ச (உ. ௩. ௩)

(உகக) (அது) கவுணம், அசம்பவத்தினாலும் சுருதியினாலும்.

தத்தேஜோऽஸ்ருஜத (சாந். ஈ. உ. ௩)
"அது தேயுவைப் படைத்தது" எனத் தேயுவுக்கு முன்னர்ச் சிருஷ்டி வசனமுண்மையான்,

ஆகாஶஸம்பூத: (தைத். உ. க)
"ஆகாயம் பிறந்தது (சம்பூத:) என்னுஞ் சுருதி கவுணம்; அவயவமில்லாத ஆகாயம் பிறத்தல் கூடாமையானும்,

வாயுஶ்சாந்தரிக்ஷம் சைததம்ருதம் (பிரு. ௪. ௩. ௩)
"வாயுவும் ஆகாயமும் அழியாதன" என்னுஞ் சுருதி ஆகாயத்துக்கு நித்தியத்துவம் உரைத்தலானுமாம். (௩)

ஸ்யாச்சைகஸ்ய ப்ரஹ்மஶப்தவத் (உ. ௩. ௪)

(உஉ0) பிரமசப்தம் போல ஓர் மொழி இருவழியினும் வழங்கல் கூடுமாகலின்.

(சுருதியின்) ஒரே பிரகரணத்து இரு வேறு வாக்கியங்களில் ஒரே மொழி ஆவிருத்தியாய் நேருங்கால்,

தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமந்நம் ச ஜாயதே (முண். க. க. ௯)
"அங்கிருந்து இந்தப் பிரமம் (பிரகிருதி) நாமமும், ரூபமும், அன்னமுமாகப் பிறக்கின்றது" என்னுஞ் சுருதியிலே பிரமம் என்பது பிரகிருதியைப் பற்றிப் பேசும் போது கவுணமாயும்,

தபஸா சீயதே ப்ரஹ்ம (முண். க. க. அ)
"தியானத்தினற் பிரமம் ஓங்குகின்றது" என்னும் வாக்கியத்தில் ஆவிருத்தி

பற்றி முக்கியமாயும் வழங்கியவாறு போல, ஈண்டும் பிறந்தது (சம்பூதஃ) என்னும் ஓர் மொழி ஆகாய விஷயத்திற் கவுணமாயும், பிறவிடத்தில் முக்கியமாயும் வழங்கல் கூடும். ஆகலின், ஆகாயம் பிறந்ததெனல் பொருந்தாது என, (௪)

பின்னர்ச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றார்.

ப்ரதிஜ்ஞாஹாநி ரவ்யதிரேகாத் (உ. ௩. ௫)

(௨௨௧) வேறுபடாமையான் பிரதிஞ்ஞைக்கு ஹானியுறாமை.

ஆகாய முதலியன பிரமத்தினின்று பிறந்து, அப்பிரமத்திலிருந்து வேறுபடாதிருக்கும்போது மாத்திரந்தான்,

யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி (சாந். ௬. ௧. ௧)

(கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி)

(முண். ௧. ௧. ௩)

"கேட்கப்படாதது கேட்கப்படுகின்றது" "(ஒன்றை) அறிந்தால் யாவும் அறியப்பட்டதாகும்" என்னும் பிரதிஞ்ஞை ஹானியுறாது. ஆகலின், பிறந்தது என்னும் சப்தம் கவுணமன்று; பிரதிஞ்ஞைக்கு ஹாநி முதலியவற்றை விளைவிக்குமாகலின். எங்ஙனம் பிரதிஞ்ஞைக்கு ஹாநி வராதிருக்குமோ அங்ஙனம் இணக்கற்பாற்று. (௫)

ஶப்தேப்ய: (உ. ௩. ௬)

(௨௨௨) சுருதிகளுண்மையான்.

தத்தேஜோऽஸ்ருஜத (சாந். ௬. ௨. ௩)

"அது தேயுவைச் சிருட்டித்தது" என்னுமிடத்து, ஆகாயம் கூறப்படாமை பற்றித் தேயுவுக்கு எய்தும் முதன்மை

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: (தைத். ௨. ௧. ௧)

"ஆகாயம் (பரம) ஆன்மாவினின்று பிறந்தது" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் கூறப்பட்ட ஆகாயோற்பத்தியைத் தடுக்காது. (௬)

யாவத்விகாரந்து விபாகோ லோகவத் (உ. ௩. ௭)

(௨௨௩) எப்படியும் உலகப்பேச்சிற் போல, விபாகம் சிருஷ்டி முழுமைக்குமாம்.

ஐததாத்ம்யமிதம் ஸர்வம் (சாந். ௬. ௮. ௪)

"ஈதெல்லாம் (பரம) ஆன்மாவாயது" என்பதினால் ஆகாய முதலிய சிருட்டிக்கப்பட்டனவாகப் பெறப்படும். தேயு முதலாகக் கூறப்பட்ட விபாகவசனம்

சிருஷ்டிமுழுமைக்குமாம் எனப் புலப்படுகின்றது. உலகத்திலே ஒருவன் தனக்குப் பத்துப் புதல்வர் உண்டென்று கூறி, பின்னர் அப்புதல்வர் சிலருடைய பிறப்பைப்பற்றிப் பேசுதல் போல ஈண்டுமோம். ஆகலின், ஆகாயத்துக்கு உற்பத்தி கோடல் யுக்தமே. (எ)

(உ) மாதரிச்சுவாதிகரணம்.

𑌏𑌤𑍇𑌨 𑌮𑌾𑌤𑌰𑌿𑌶𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 (உ. ங. அ)

(உஉச) இதனால் வாயு வியாக்கியானஞ் செய்யப்பட்டது.

(உ. ங. கo-ஆஞ் சூத்திரத்தில்) சூத்திரகாரர் தேயுவைப்பற்றிக் கூறப் போகின்றனர். அது பற்றி வாயு வேறாக எடுத்தாளற்பாற்று.

ஆகாயத்துக்குப் போல வாயுவுக்கும் உற்பத்தி கூறப்பட்டதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வாயுவுக்கு உற்பத்தி இல்லை; சாந்தோக்கியத்திலே தேயுவை முதன்மை கூறல் வாயிலாக வாயுவுக்குச் சிருட்டி கூறப்படாமையாலும், பிருகதாரணியத்தில்

𑌸𑍈𑌷𑌾𑌽𑌨𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑌾 𑌯𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 (பிரு. ங. ரு. உஉ)

"வாயு ஓர்போதும் ஒழியாதது" என அதன் உற்பத்தி மறுக்கப்படலாலுமாம். எப்பிரகாரத்தினாலும் வாயுவுக்கு உற்பத்தி இல்லையாலோ எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சாந்தோக்கியத்திலே வாயு உற்பத்தி கேட்கப்படாதொழியினும், குணோபசங்காரநியாயத்தினால்

𑌆𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 (தைத். உ. க. க)

"ஆகாயத்தினின்று வாயு (பிறந்தது)" என்று தைத்திரீயோபநிடதத்திற் கூறப்பட்ட வாயு உற்பத்தி சாந்தோக்கியத்தினுங் கூறப்பட்டதாகக் கொள்ளப்படும்.

𑌸𑍈𑌷𑌾𑌽𑌨𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑌾𑌯𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 (பிரு. ங. ரு. உஉ)

"இந்த வாயுவானது ஓர்காலும் ஒழியாதது" என்னும் சுருதியானது உபாசனாப்பிரகரணம்பற்றி அர்த்தவாதமாம். ஆகலின், வாயுவும் பிறக்கின்றதே. (அ)

(ங) அசம்பவாதிகரணம்.

𑌅𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌤𑍁 𑌸𑌤𑍋𑌽𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 (உ. ங. கூ)

(உஉரு) கூடாமையான் சத்துக்கு (உற்பத்தி) பொருந்தாது.

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் (சாந். ௬. ௨. ௧)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது" என்னுஞ் சுருதியினால் சத்தாகிய பிரமத்தினின்று ஆகாய முதலியன பிறந்தவென்று நிரூபிக்கப்பட்டது.

ஆகலின், ஈண்டுச் சர்வகாரணமாய சத்தாகிய பிரமத்துக்கும் ஓர் காரணத்தினின்று உற்பத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) காரணமாகிய ஆகாயத்துக்கு உற்பத்தி உளதாயினாற்போல, பிரமத்துக்கு உற்பத்தி உண்டு; "முதற்கண் இருந்தது" என்று கூறப்படுதலின். சிருஷ்டிப் பொருளுக்கெல்லாம் முதற்கண்ணே உற்பத்தி உளதாயிற்று. அதற்குக் காரணம் என்னை என்று வினவின், அசத்தேயாம்;

அஸத்வா இதமக்ர ஆஸீத் ததோ வை ஸதஜாயத।

(தைத். ௨. ௭. ௧)

"அசத்தாம் இது முதற்கண் இருந்தது, இதினின்று சத்தே பிறந்தது;" எனச் சுருதி கூறலான். ஆகலின், சத்ரூபமாகிய பிரமத்துக்கும் உற்பத்தி உண்டு எனின்,

(சித்தாந்தம்) பிரமம் பிறப்பதில்லை. ஏதனால்?

ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்।

(சாந். ௬. ௨. ௧)

"சௌமிய! சத்தாம் இதுவே முதற்கண் இருந்தது, ஏகமே அத்துவிதீயம்" எனவும்,

யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர் ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல:।

(ச்வே. ௪. ௧௮)

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றி சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்" எனவும், சிவனாகிய பிரமம் ஒன்றே இருந்ததெனை வற்புறுத்தல் வாயிலாக நிர்தேசிக்கப்படலான், அதற்கு உற்பத்தியில்லை. மற்றெல்லாவற்றுக்கும் உற்பத்தி உண்டு, ஒவ்வாமையான்.

(ஆக்ஷேபம்) எங்ஙனம் பிரமம் அனைத்துக்கும் காரணமாகக் கூறப்படுகின்றதோ, அங்ஙனம் சுருதியிற் பிரமத்துக்கும் மற்றொன்று காரணமாகக் கூறப்படுகின்றது;

அஸத்வா இதமக்ர ஆஸீத் (தைத். ௨. ௭. ௧)

"அசத்தாம் இது முதற்கண் இருந்தது"

தசொ வெ ஸஜாயத (தைத். உ. எ. க).

"அதினின்று சத்துப் பிறந்தது" என்று கூறப்படுதலின், அசத்தே சத்துக்குக் காரணமாயிற்றெனின்,

(உத்தரம்) இங்ஙனம் கூறல் அடாது;

கயமஸதஸஜாயெத (சாந். சு. உ. உ.)

"அசத்தினின்று சத்து எங்ஙனம் பிறக்கும்?" என்று சுருதி நிஷேதித்தலான்; சத்தினின்றே சத்துப் பிறந்ததெனல் ஆன்மாசிரயம் என்னும் குற்றம் பற்றுதலான். ஆகலின், சத்தாகிய பிரமத்துக்குப் பிறப்பில்லை; "ஒன்று அறியப்படுங்கால் எல்லாம் அறியப்படும்" என்னும் பிரதிஞ்ஞை பொருந்தாமையின், மற்றெல்லாவற்றிற்கும் உற்பத்தி உண்டு. (௯)

(௪) தேஜோதிகரணம்.

தெஜொ தஸயாஹாஹ (உ. ௩. ௧௦.)

(உஉசு) அதினின்று தேயு பிறக்கின்றது; அங்ஙனமே அது சொல்கின்றது.

ஈண்டு வாயுமுதலிய காரியம் நேரே பிரமத்தினின்று பிறக்கின்றதா? இன்றேல் அததற்கு நேரே முற்பட்டுள்ள காரணங்களினின்று பிறக்கின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவற்றில் ஒவ்வொன்றும் அததற்கு முற்பட்டதொன்றினின்று பிறக்கின்றது.

ஆகாஶாத்வாயு: (தைத். உ. க. க)

"ஆகாயத்திருந்து வாயு பிறக்கின்றது" என்னும் சுருதியினால் வாயு ஆகாயத்திருந்தே பிறக்கின்றது; நேரே பிரமத்திலிருந்து பிறக்கவில்லை. அவ்வாறே தேயுவும் வாயுவினின்றே தோன்றுகின்றது. ஆதலினாலே சுருதியும்,

வாயொரக்நி: (தைத். உ. க. க)

"வாயுவினின்று தேயு பிறந்தது" என்று கூறுகின்றது. (௧௦)

ஆப: (உ. ௩. ௧௧)

(உஉஎ) அப்புக்கள்.

அக்நேராப: (தைத். உ. க. க)

"தேயுவினின்று அப்புக்கள்" என்னும் சுருதி அப்புக்களும் தேயுவினின்றே பிறக்கின்றன என்று கூறுகின்றது. (௧௧)

வ்யாயிவீ (௨. ௩. ௧௨)

(௨௨௮) பிருதிவி.

கஹ்ரூ்ஃ வ்யாயிவீ (தைத். ௨. ௧. ௧)

"அப்புக்களினின்று பிருதிவி பிறக்கின்றது" என்னும் சுருதி அப்புவினின்றே பூமி பிறக்கின்றதெனக் கூறுகின்றது. ஆகலின், பூதங்கள் நேரே பிரமத்தினின்று பிறக்கவில்லை. (௧௨)

கயிகாரரூவெஶஹ்ாக (௨. ௩. ௧௩)

(௨௨௯) அதிகாரத்தினாலும், நிறத்தினாலும், சுருதிகளினாலும்.

தா கஷவேஷ்ஜக (சாந். ௬. ௨. ௪)

"அவைகள் அன்னத்தைச் சிருட்டித்தன" என்னுஞ் சாந்தோக்கிய சுருதியிற் கண்ட அன்னம் என்னும் மொழி பிருதிவியையே குறிக்கின்றது; சர்வபூதசிருட்டி அதிகரணத்தில் உண்மையானும்,

யத்ரூஷ ஜஷஷஷ் (சாந். ௬. ௪. ௧)

"கருநிறம் அன்னத்துக்குரியது" என்னுஞ் சுருதியினால் அன்னத்தின் நிறமும் விதிக்கப்படுகின்றமையானும்,

கஹ்ரூ்ஃ வ்யாயிவீ (தைத். ௨. ௧. ௧)

"அப்புவினின்று பிருதிவி" என்னும் சுருதியும் வெளிப்படையாயுள்ளது. ஆகலின், அப்புவினின்று ஆதியிற் பிறக்கின்றது பிருதிவியேயாம். (௧௩)

இதனாற் பிரமம் நேரே அனைத்துக்கும் காரணமாகாது பரம்பரகாரணம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

தஷிஜ்ா நாஷெய்தா தஜ்ஂஶாகஃ (௨. ௩. ௧௪)

(௨௩௦) சங்கற்பம் என்னும் அவ்விலிங்கத்தினால் அவர் காரணரே.

நேரே பிரமத்தினின்றே பூதங்களெல்லாம் உற்பத்தியாயின.

தஷாஷா வஷதஷாஷாதந ஆகாஶஸஂஹூதஃ (தைத். ௨. ௧. ௧)

"அவ்வாறே இவ்வான்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்று தொடங்கி வாயுமுதற் பிருதிவி ஈறாக ஒவ்வொன்றும் அதததற்கு முற்பட்டதொன்றினின்று உதித்ததாகக் கூறப்படவில்லை. ஆயின் முன்முற் காரணமாகிய

ஆகாயாதி விசிட்ட பிரமத்திலிருந்து பிற்பின்னாகிய வாயு முதலிய உற்பத்தியாயின என்று கூறப்படுகின்றது. ஆதலினாற் பரமான்மாவாகிய சிவனாரே சர்வபூதங்களையும் உற்பத்தி செய்வர்;

தடைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய (சாந். சு. உ. ௩)

"யான் அநேகமாவேனாக எனச் சங்கற்பித்தது" என்றதிற் போல,

தத்தேஜ ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய (சாந். சு. உ. ௩)

"யான் அநேகமாவேனாக எனத் தேயு சங்கற்பித்தது" எனவும்,

தா ஆப ஐக்ஷந்த பஹ்வ்ய ஸ்யாம ப்ரஜாயேமஹி।

(சாந். சு. உ. ௪)

"அந்த அப்புக்கள் அநேகமாவேமாக எனச் சங்கற்பித்தன" எனவும் போந்தவற்றாற் சங்கற்பமாகிய அவரது லிங்கம் இருக்கின்றமையான்.

ஸதாஶிவஶ்ஶப்தமூர்த்தி: ஸ்பர்ஶமூர்த்திர்மஹேஶ்வர:।
ருத்ரோ ரூபமூர்த்திஸ்து ரஸமூர்த்திர்ஜனார்தன:।
கந்தமூர்த்திர்ப்ரஹ்மா ச இத்யேதே பஞ்சமூர்த்தய:।

"சப்தமூர்த்தியாகிய சதாசிவர், ஸ்பரிசமூர்த்தியாகிய மகேசுவரர், ரூபமூர்த்தியாகிய உருத்திரர், ரசமூர்த்தியாகிய நாராயணர், கந்தமூர்த்தியாகிய நான்முகனாயினோர் பஞ்சமூர்த்திகள்" என்னும் வாக்கியத்தினாற் சப்தாதிகளுக்கு ஆன்மாவாயிருக்கும் சதாசிவாதிரூப பிரமத்தினின்றே வாயு முதலியவற்றுக்கு உற்பத்தியாம். பஞ்சபூதங்களில் வசிக்கும் ஆன்மாக்களாய் ஐந்து பிரமங்களாய்க் குறிக்கப்படும் இந்தச் சதாசிவர் முதலாயினோர் (மகாசதாசிவ) பரப்பிரமத்தின் சரீரமாகின்றனர். பஞ்சப்பிரம சரீரத்தையுடைய பரப்பிரமத்திருந்தே பிரபஞ்சசிருட்டி முதலாயின பிரவர்த்தித்தன. பஞ்சபூதங்களாகின்ற இந்தச் சதாசிவர் முதலாயினோர் பரப்பிரமத்தினின்று பிறக்கின்றனர்.

(ஆக்ஷேபம்)

ஆகாஶஸ்ஸம்பூத: (தைத். உ. க. க)

"ஆகாயம் பிறந்தது" என்றற்றொடக்கத்தவற்றாற் பூதோற்பத்திமாத்திரம் கூறப்பட்டதன்றிச் சதாசிவர் முதலாயினோர்க்குச் சிருட்டி நேரே கூறப்படவில்லையே எனின்,

(உத்தரம்) அதுவும் கூறப்படுகின்றதே. அது பிற சுருதிகளால் அறியற்பாற்று. எங்ஙனமெனின்,

ஆத்யேஷா ஆத்யாயி தஸ்யம் ஸர்வமிதம் ப்ரஜாஸ்ருஷ்டிர்...
...ஸர்வாஸ்ச்சந்தாம்ஸி ஸர்வாணி வேதாம்ஸி ஸஹஸ்ர...

ஜெநந்⁴ காரணங்² காரணாநாம் தா⁴தா த்⁴யாதா காரணாநாம் ஸர்வைஶ்வர்ய ஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஸம்பு⁴ராகாஶமத்⁴யே |

(அதர்வசிகை)

"மிகவும் தியானிக்கற்பாலராகிய ஈசானரைத் தியானிக்க; பிரம்ம விஷ்ணு உருத்திர இந்திரரும் மற்றை எல்லா இந்திரியங்களும் பூதங்களோடு உற்பத்தியாகின்றன; காரணங்களுக்கெல்லாம் தாதாவும், கருதினோரும், பரம காரணருமாயினர் (உற்பவித்தல் இல்லை); சர்வைசுவரிய சம்பன்னரும் சர்வேசுவரரும், சம்புவுமாகியவரே ஆகாயமத்தியிற் றியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகையிற் கூறப்பட்டவாறு, பூதங்களோடு கூடப் பிரமாதியர்க்கும் இந்திரியங்களுக்கும் உற்பத்தி கேட்கப்படுகின்றது. காரணங்களுக்கெல்லாம் காரணராயுள்ளாராக ஆகாயமத்தியிற் சம்புவானவர் தியானிக்கற்பாலர் எனக் கூறப்படுகின்றது. ஆகலின், அவ்வக்காரணரூபம் கொள்ளும் பிரமத்தினின்று நேரே அவ்வக் காரியோற்பத்தியும் உண்டாகின்றதென நிர்ணயிக்கப்பட்டது. (௧௪)

(௫) பாரம்பரியாதிகரணம்.

விபர்யயேண து க்ரமோऽத உபபத்³யதே (௨. ௩. ௧௫)

(௨௩௧) ஆனால் அங்கிருந்து (தோற்றும்) வேறு பிரகாரமாகிய (சிருட்டிக்) கிரமமும் பொருத்தமாகின்றது.

ஈண்டு மேலே அதிகரணத்திலே நிரூபிக்கப்பட்ட சிருட்டிக்கிரமம் யுக்தமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) யுக்தம் அன்றென்பது.

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்³ரியாணி ச க²ம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதி²வீ விஶ்வஸ்ய தா⁴ரிணீ (முண். ௨. ௧. ௩)

"பிராணன், மனசு, இந்திரியங்கள், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, அனைத்தையுந் தாங்கும் பிருதிவியாம் எல்லாம் இதிலிருந்து உற்பத்தியாகின்றன" என்னும் முண்டகோபநிடதசுருதியினாற் பிராணன் முதலாயின ஆகாய பூதமியவற்றுக்கு முன்னர்த் தோன்றியவாகக் கூறப்படுகின்றது.

ஸர்வமித³ம் ப்³ரஹ்ம விஷ்ணு ருத்³ரேந்த்³ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்³ரியாணி ஸஹ பூ⁴தை: (அதர்வசிகை)

"பூதங்களோடு கூட பிரம, விஷ்ணு, உருத்திரேந்திரர்களும், சமஸ்த இந்திரியங்களும் பிறந்தன" என்று அதர்வசிகையிலே பிரமாதி பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் உற்பத்தி ஒருங்கு கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், ஆகாயாதிகளுக்கு மேலே கூறிய சிருட்டிக் கிரமம் யுக்தம் அன்றாம் எனின்,

(சித்தாந்தம்) மேலே கூறிய சிருட்டிக் கிரமம் யுக்தம்.

அந்நமயம் ஹி ஸோம்ய மந ஆபோமய: ப்ராணஸ்தேஜோமயீ வாக்|

(சாந். சு. ரு. ச)

"பிருதிவிமயம் மனம், அப்புமயம் பிராணன், தேயுமயம் வாக்கு" என்னுஞ் சுருதியினால், பிராணன் முதலாயின பௌதிகமாகக் கேட்கப்படலானும், அவைகள் பூதங்களுள்ளே அந்தர்ப்பாவமாதலினாலும், அதுகொண்டு அவைகளுக்கு வேறாகச் சிருட்டிக்கிரமம் கூறுதல் அநாவசியகம். பிரமாமுதலாயினோர்க்கும் பூதங்களோடு கூட உற்பத்தி கூறப்படுகின்றது; அவர்கள் அவைகளின் ரூபமுடையராய், அவைகளுள் அந்தர்ப்பாவமுடையராதலின். மேலே கூறிய சிருட்டிக் கிரமத்தில் விரோதம் யாதும் இல்லை. (கரு)

அந்தரா விஜ்ஞாநமநஸீ க்ரமேண தல்லிங்காதிதி சேந்நாவிசேஷாத்|

(உ. ௩. ௧௧)

(உ௩உ) அவ்விலிங்கமுண்மையாற் கிரமமாக இந்திரியமும் மனசும் அவற்றுக்கிடையே (போதருகின்றனவே) எனின், இன்று; பேதமின்மையின்.

(ஆக்ஷேபம்) ஆகாயம், வாயு, தேயு என்றற்றொடக்கத்த முண்டக சுருதியிற் பிராணனுக்கும் பூதங்களுக்குமிடையே இந்திரியக்கூட்டமும் மனசும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிறந்தன என்று கூறப்படுகின்றது; பிற சுருதிகளிற் சித்தித்த கிரமத்தை அறிவிக்கும் ரூபத்தையுடைய இலிங்க முண்மையான். ஆகலின், இந்த (முண்டக) சுருதியும் பாரம்பரியமாகிய சிருட்டிக் கிரமத்தையே உணர்த்துகின்றதெனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று;

ஏதஸ்மாஜ்ஜாயதே (முண். உ. க. ௩)

"இதிலிருந்து பிறக்கின்றது" என்பது பிராணன்முதற் பிருதிவியந்தமாக அனைத்தினும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அந்வயஞ் செய்யப்படல் வேண்டுமாதலின். ஆகலின், அனைத்துக்கும் சிவபெருமானே காரணர்.

சக்த்யாதி ச ப்ருதிவ்யந்தம் சிவதத்த்வஸமுத்பவம் |
தேநைகேந து தத்வ்யாப்தம் ம்ருதா கும்பாதிகம் யதா|

(வாயு. உத். உ௫: ௧௮)

"சத்திமுதற் பிருதிவியந்தமாயுள்ள தத்துவமெல்லாம் சிவதத்துவத்தினின்று பிறந்தன; கும்பமுதலிய மண்ணினால் வியாபிக்கப்பட்டாற்போல, அச்சிவதத்துவமொன்றினாலே அவை அனைத்தும் வியாபிக்கப்பட்டன" என அங்ஙனம் புராணவாக்கியமும் போந்தது; கிரமமிருந்தாலும் அனைத்

றும் சிவதத்துவத்தினின்றே உற்பத்தியாகின்றனவென (அது) கூறுகின்றது. ஆகலின், சர்வகாரணம் பிரமம் என்பது சமீசீனம். (௧௬)

(௬) சராசரவியபாசிரயாதிகரணம்.

சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத்தத்வ்யபதேஶோ பாக்தஸ்தத்பாவ பாவித்வாத் (உ. ௩. ௧௭)

(உ௩௩) சரம் அசரமாம் பொருள்களைக் குறிக்குஞ் சொற்களைக் கொண்டு பிரமத்தைக் குறித்தல் கவுணமன்று; அப்பிரமம் அப்பொருள்களாயாகும் என்னும் எண்ணம் தழுவப்படலான்.

முன்னர்ப் பிரமமானது ஆகாயமுதலிய சப்தங்கொண்டு பிரதிபாதிக்கப்பட்டது. அது இங்கே விசாரிக்கப்படுகின்றது.

சேதனுசேதனமாகிய சராசரவஸ்துக்களைக் குறிக்கும் பதங்கள் பிரமத்திலே முக்கியப்பொருளிற் போந்தனவா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது முக்கியப்பொருளிற் போந்ததன்றென்பேம்; ஒரு வஸ்துவைக் குறிக்கும் பதம் மற்றொன்றை முக்கியமாகக் குறிக்கமாட்டாமையின்.

ஆதித்யோ யூப: (தைத். பிரா. உ. ௧. ரு. ௩ரு)
யஜமாந: ப்ரஸ்தர: (தைத். பிரா. ௩. ௩. ௬. ௬௨)

"ஆதித்தியன் (யஞ்ஞ) ஸ்தம்பம், யஜமானன் சிலை" என்னும் வாக்கியங்களில் யஞ்ஞ ஸ்தம்ப முதலியவைகள் சூரியன் முதலியவாகக் கூறப்பட்டமை துல்லியரூபமுதலிய குணசம்பந்தத்தினுலன்றி முக்கியத்தினுலன்று. கண்டு,

தத்தேஜ ஐக்ஷத (சாந். ௬. உ. ௩)

"அந்தத் தேயு சங்கற்பித்தது" என்றற்றொடக்கத்தவற்றிலே தேயு முதலிய அசேதனப் பொருள்களுக்குச் சேதனப்பொருள்களுக்குரிய குணமாகிய சங்கற்பம் கூடாமையின், அந்தத் தேயு முதலிய சப்தங்களினல் அத்தேயு முதலியவற்றை ஆசிரயித்திருக்கும் சேதனமாகிய பிரமம் இலட்சியப்பொருளாகின்றது; மஞ்சம் கூப்பிடுகின்றது என்றதிற்போல. ஆகலின், ஆகாயாதி சப்தங்கொண்டு பிரமத்தைக் குறிப்பது கவுணமெனின்,

(உத்தரம்) கூறுதும். சராசரப்பொருட் சம்பந்தமாய சொற்களாற் பிரமத்தைச் சுட்டுதல் கவுணமன்று; பின் முக்கியமே;

ஸேயம் தேவதைக்ஷத ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி।
(சாந். ௬. ௩. ௨)

"அந்தோ! நான் இந்த மூன்று தேவதைகளாக இந்தச்சீவான்மாவோடு பிரவேசித்து நாமரூபங்களை வேறு செய்வேமாக என்று அந்த (மகா)தேவர் சங்கற்பித்தனர்" என்னுஞ் சுருதியிலே கண்டவாறு, சர்வவஸ்துக்களோடும் நாமரூபவிபாகத்தின் பொருட்டு அவ்வவர் ஆன்மாவாகப் பிரமம் பிரவேசித்துளதாம் என்னும் கருத்துக் கொள்ளப்படலான். யூப ஸ்தம்ப முதலியவும் ஆதித்தியன் முதலிய சப்தத்தினுற் கூறப்படல் முக்கியமன்று. மஞ்ச முதலிய விஷயத்திலோ எனின், இவற்றிலே புருஷர் இருக்கும் சம்பந்தமாத்திரம்பற்றி அவர்களை மஞ்சம் எனக் கூறல் முக்கியமாகாது. இங்கே பிரபஞ்சத்துள் ஆன்மாவாய்ப் பிரவேசித்தமையின் அந்தப் பிரமத்தை அந்தச் சப்தத்தினுற் கூறுதல் முக்கியமே; பிராமணர் முதலாயினேருடைய சரீரத்திற் பிரவேசித்த ஆன்மாவானது பிரம முதலிய மொழியினுற் கூறப்படுதல் முக்கியமாதல் போலாம். அல்லாவிடின்,

அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநயீத।
(கௌதம தருமசூத்திரம். அ. ௨௩)

"எட்டு வயசுப் பிராமணனை உபநயனஞ் செய்விக்க" என்னும் உபநயன சம்ஸ்கார முதலாயின சரீரத்துக்குமாத்திரம் இயையும் என்றும், அந்த உபநயனத்தினுல் ஆன்மா யாதும் சம்ஸ்காரம் அடையவில்லை என்றும் பெறப்படும். அதுகொண்டு,

யஸ்யைதே அஷ்டாசத்வாரிம்ஶத்ஸம்ஸ்கார அஷ்டாவாத்மகுணா: ஸ ப்ராஹ்மணஸ்ஸாயுஜ்யம் (கௌதம தருமசூத்திரம். அ. ௨௩)

"எவன் *நாற்பது சம்ஸ்காரமுமடைந்து எண்குணங்களையுமுடையனுகின்றுனே, அவன் பிரமத்தோடு சாயுச்சியமடைகின்றுன்" என்றுரைக்கும் சூத்திரப்பிரகாரம் சம்ஸ்காரவாயிலாக ஆன்மாவுக்கு எய்திய பல சுருதியும் பிரயோசனமில்லையாய் முடியும்; அஃதன்றி,

ப்ராஹ்மணோ யஜேத।

"பிராமணன் யஞ்ஞஞ் செய்வானுக" என்னும் விதிகளும் வியர்த்தமாய் முடியும். ஆகலான் சகல சராசர வஸ்து சரீரங்களைப் பிரவேசித்த பிரமம் அவ்வம் மொழிகளால் உரைக்கப்படுதல் முக்கியமே. (௧௭)

---

* இவ்வ சைவபாடியத்து ௪௪௯-ஆம் பக்கத்துக் குறிப்பிலே உள்ளன.

(எ) ஆத்துமாசுருத்தியதிகரணம்.

நாத்மா ச்ருதேர்நித்யத்வாச்ச தாப்ய: (௨. ௩. ௧௭)

(௨.௩.௪) சுருதிப்பிரகாரம் ஆன்மா பிறக்கவில்லை; அச்சுருதிகளாற் கூறப்பட்டவாறு நித்தியமாயுமிருத்தலின்.

மேலே ஆகாய முதலியன பிரமத்திலிருந்து நேரே உதித்தன என்று கூறப்பட்டது. அந்த நியாயத்தினால் ஆன்மாவும் பிரமத்திலிருந்து பிறக்கின்றதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா பிரமத்தினின்று பிறக்கின்றதென்பது.

யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர்ந ஸந்நசாஸச்சிவ ஏவ கேவல:।
(சுவே. ௪. ௧௮)

"எப்போது இருள் உளதாய், பகலுமின்றி இரவுமின்றி, சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்"

ஏகமேவாத்விதீயம் (சாந். ௬. ௨. ௧)

"ஏகமேவாத்துவிதியம்" என்னுஞ் சுருதிகளாற் சிருட்டிக்கு முன்னே பிரமம் ஒன்றே இருந்தது என்றும், சத்தும் அசத்தும் இல்லை என்றும் வற்புறுத்தப்படுகின்றது. ஆகலின் சிருட்டிகாலத்திலே பிரமத்தினின்று ஆன்மாக்கள் உற்பத்தியே ஆகின்றனர்.

யதாக்னே: க்ஷுத்ரா விஸ்புலிங்கா வ்யுச்சரந்தி ஏவமேவாஸ்மா தாத்மந: ஸர்வே ப்ராணா: ஸர்வே லோகா: ஸர்வே தேவா: ஸர்வாணி பூதாநி ஸர்வ ஏத ஆத்மாநோ வ்யுச்சரந்தி (பிரு. ௪. ௧. ௨௦)

"தீயிலிருந்து பொறிகள் பிறப்பது போல, பரமான்மாவிலிருந்து எல்லாப் பிராணன்களும், எல்லா உலகமும், எல்லாத் தேவரும், எல்லாப் பூதங்களும், எல்லா ஆன்மாக்களும் கூட்டமாய்ப் பிறக்கின்றன" என்று சுருதி கூறும் பிரகாரம் தீப்பொறித் திருட்டாந்தம் ஆன்மோற்பத்திக்கு இயைய இருக்கின்றது. ஆகலின் தீயிலிருந்து பொறிகள் பிறப்பது போல, ஆன்மாக்களும் பிரமத்தினின்று பிறக்கின்றன எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா பிறப்பதில்லை;

ந ஜாயதே ம்ரியதே வா விபஸ்சித் (கட. ௨. ௧௮)

"அறிஞன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை" எனவும்,

நித்யோ நித்யாநாம் சேதநஸ்சேதநாநாம் (கட. ௫. ௧௩)

"நித்தியப் பொருள்களுள்ளே நித்தியரும், சேதனப் பொருள்களுள்ளே சேதனரும்" எனவும்

ஜாzஜெள உாவஜா வீஶாநீஶெள (சுவே. க. கூ)

"பிறவாத இருவரும் அறிஞனும் அறிவிலனுமாய ஈசனும் அநீசனும்" எனவும் போந்த சுருதிகளானும் ஆன்மா நித்தியன் எனப் பெறப்படுகின்றமையின். சிருட்டிக்கு முன்னே பிரமமாத்திரம் இருந்ததென்று வற்புறுத்தினமை ஆன்மாக்களும் பாசங்களும் அந்தப் பிரமாகிருதியாகி நாமரூப வியவகாரம் ஒழிந்து நின்றமையாலாம்; ஆன்மாவின் சொரூபம் அசத்தாயிருந்தமையாலன்று. பொறியைப்பற்றிய சுருதியும் இவற்றின் நாமரூபத் தோற்றத்தைக் குறித்ததன்றிப் பிறப்பைக் குறித்ததன்று. இன்றேல், ஒருவர் தாஞ் செய்த கன்மத்துக்குப் பலனடையாதுபோதன் முதலிய தோஷப் பிரசங்கம் எய்துமாதலின், பிரமத்தினின்று ஆன்மா பிறக்கவில்லை. (௧அ)

(அ) ஞாதிகரணம்.

ஜொzத வவ (உ. ௩. ௧௯)

(உ௩௫) ஆகலின் (அவன்) அறிஞனே.

மேலே ஆன்மா நித்தியன் என்று சித்தமாயிற்று. பின்னர் இவனுக்கு இயற்கையறிவு உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா இயற்கையாகவே ஞானமற்றவன்.

ஜா zஜெள ஶெள (சுவே. க. கூ)

"அறிஞனும் அறிவிலனுமாகிய இருவர்" என்னும் சுருதியினால், ஆன்மா அறிவிலன் எனப் பெறப்படுகின்றான். ஆகலின், சைதன்னியமாத்திரரூபமாகிய இவன் அறிவிலனே. ஆயின் மாயாசத்தியினாற் சரீரேந்திரியாதிகளையடைந்து, இது கடம், இது படம், நான் மனிதன், நான் தேவன் எனப் பலதிறப்பட்ட அகங்காரத்திற் கட்டுண்டு போக்குவரவுடையனாயிருத்தலின், சம்சாரதசையில் இவன் அறிவிலனேயாகின்றான். இவனுக்கு இயற்கையாய்ச் சிறிதும் அறிவில்லை. இன்றேல் அவனுக்கு எங்ஙனம் முத்தி உண்டாம்? எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்; ஆன்மா அறிஞனே.

கூ யொ வெஜெ0 ஜி஘்ராணீதி ஸ ஆத்மா (சாந். அ. ௧௨. ச)

"எவன் இதை நான் மணக்கின்றேன் என்றறிகின்றானோ, அவன் ஆன்மா"

ஃநமெஸதா நாஸோ நாஸ்தி... (சாந். அ. ௧௨. ரு)

ய வாமெத ஐஹமொகெ (சாந். அ. கஉ. ரு)

உடெநாஜஸூ டெஹவஞக்ஷுஃ (சாந். அ. கஉ. ரு)

"அவன் பிரமலோகத்திலேயுள்ள இந்த இன்பங்களை ஞானத்திறற் கண்டு களிக்கின்றான்; மனசே (ஞானமே) அவனுக்குத் திவ்யகண்" என்றற்றொடக் கத்த சுருதிகளாற் குணமாகிய ஞானமே அவனுக்கு மனசு. ஆகலின், ஆன்மா சுவயமாக ஞாதாவே. மாயாசத்தியின் சம்பந்தத்தினுற் சம்சார தசையில் அவனுக்கு அறிவுளதென்று முற் கூறியது சத்தியம். மாயா சத்தியினுல் மறைப்புண்ட இயற்கை ஞானவிலாசமுடையனைப் பிராகிருத மனசோடு சம்பந்தமுற்றுச் சுகதுக்கங்களைப் போக்தாவாக நின்றநுப வித்துச் சரீரம் அகங்காரம் என்பவற்றில் முற்றிய ஞானமுடையனைச் சஞ் சரிப்பவன் ஜீவான்மா. இவன் பின் எப்போது பிரமஞான உபாசனைப்பி யாசத்தினுல் மும்மலசம்பந்தத்தையும் அகற்றுகின்றானோ, அப்போது பிரம சாதிருசியனாய், அபிவியக்தமாகிய தனது நிரதிசயஞானதருமமுடையனாய் முக்தான்மா எனப்படுகின்றான்.

ஹாணாராமம் உந ஆநநூ (தைத். க. சு. உ)

"பிராணாராமம், மந ஆனந்தம்" என்னுஞ் சுருதியினுற் பிரமத்துக்கு நிரதி சயான்மானந்த விஷயமாயுள்ள மனசு இயற்கைக் கரணம் என்றறியப்படு கின்றது. அதுபற்றிப் பிரமசாம்மிய குணமுடைமையால், சம்சாரம் நீங்கிய ஆன்மாவுக்குச் சொரூபானந்தத்தை அநுபவித்தற்குச் சாதனமாயும் பாகி யாந்தக் கரணத்தை அபேக்ஷியாததாயுமுள்ள மனசு (ஞானம்) உண்டென்று பெறப்படுகின்றது.

ஜ்ஞாஜ்ஞா (சுவே. க. கூ)

"அறிஞனும் அறிவிலனும்" என்ற சுருதியில் ஆன்மாவுடைய அறிவின்மை சிற்றறிவின் மேற்று. அசஞ்சாரியாகிய சிவபெருமானுடைய அறிவு முற் றறிவின் மேற்று. ஆகலின், ஆன்மா சம்சாரத்திற் சிற்றறிவையும், முக்தி யில் முற்றறிவையும் உடையன் என்பது. ஆகலின் ஆன்மா ஞாதாவே. (ககூ)

(கூ) உற்கிராந்தியதிகரணம்.

உத்க்ராந்திமத்யாமதீநாஂ (உ. ௩. ௨0)

(உருகூ) புறப்படுதல், போதல், மீடல்களான் (ஆன்மா அணுவினன்.)

மேலே அறிஞனாகச் சித்தித்த ஆன்மாவுக்குப் புறத்துச் சேறன் முத லிய கேட்கப்படலான், அவன் அணுத்துவமுடையன். இது யுக்தமா? அன்றா? என்புழி சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவனுக்கு அணுத்தன்மை ஒவ்வாது.

ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா (பிரு. ரு. ச. உஉ)

"இந்த ஆன்மா பெரியதும் பிறவாததும்" என்னுஞ் சுருதி ஆன்மாவை வியாபகன் என்று கூறுதலானும்,

அஹம் விஶ்வம் புவநமப்யபவாம் (தைத். ரு. க0. ரு)

"நான் பிரபஞ்சம் அனைத்தையுங் கடந்துள்ளேன்" என்னுஞ் சுருதி அவன் வியாபகத்தினாற் சமஸ்த புவனத்தையுங் கடந்துள்ளான் என்று கூறுதலானும், எப்பிரகாரத்தானும் இந்த ஆன்மா வியாபகன் என்று பெறப் பட்டதாம் எனின்,

(சித்தாந்தம்) இந்த ஆன்மா அணுவினனே; உற்கிராந்தி கதி, ஆகதிகள் கேட்கப்படலான்.

தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி।
(பிரு. ரு. ச. உ)

"அந்த மினு மினுப்போடு ஆன்மா புறப்படுகின்றது" என்னுஞ் சுருதியில் உற்கிராந்தியும்,

யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி।
(கௌஷீ. க. உ)

"இவ்வுலகத்தைவிட்டுப் போகின்றவர் சந்திரனை அடைகின்றனர்" என்னுஞ் சுருதியினால் அவனது போதலும்,

தஸ்மால்லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே।
(பிரு. ரு. ச. ரு)

"அந்த உலகத்திலிருந்து கன்மத்தின்பொருட்டு இவ்வுலகத்துக்குப் பின்னர் மீண்டு" என்னுஞ் சுருதியினால் அவனது மீளுதலும் கூறப்படுகின்றன. ஆன்மா வியாபியாயிருப்பின் அவன் வெளியேறலும் போதலும் மீளுதலும் பொருந்துமாறில்லை. (உ0)

ஆன்மா வியாபியாயிருப்பினும் சரீரத்தை விடுவதே உற்கிராந்தியாகலாம். அங்ஙனமாயினும் போதலும் மீளுதலும் இங்ஙனம் ஆகா என்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸ்வாத்மநா சோத்தரயோ꞉ (உ. ரு. உக)

(உ. ரு. உக) பின்னுள்ள இரண்டும் தன்னால் (முடிக்கப்படுவதலினாலும்)

பின் உரைக்கப்பட்ட போதல் மீளுதல் இரண்டும் அன்றைச் செய்து முடிக்கற்பாலனல்லாதலின், இந்த ஆன்மா அணு.

ஸ மஹாநஜ ஆத்மா (பிரு. ௬. ௪. ௨௨)

"ஆன்மா பிறவாதவன் பெரியவன்" என்னுஞ் சுருதி ஈசுரப் பிரகரணத்தில் வருதலான் அது ஆன்மாக்களைக் குறிக்காதென்று கூறுவர். உலகபுவனங்களைத் தான் வியாபித்தலினால் அவன் கடந்துள்ளான் என்றமை மலமறைப்பு நீங்கியகாலத்து வெளிப்பட்ட சத்தி ஒளியானது வியாபித்தது என்னும் சீவன்முத்தனது விஷயமாம். ஆகலின், ஆன்மா அணுவே. (௨௧)

ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

நாணுரதச்ருதேரிதி சேந்நேதராதிகாராத்॥

(௨. ௩. ௨௨)

(௨௩-அ) சுருதி வேறுபடக் கூறுதலான், அவன் அணுவினன் அல்லன் எனின், அன்று; அது வேறு அதிகரணத்ததாதலின்.

(ஆக்ஷேபம்)

ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா (பிரு. ௬. ௪. ௨௨)

"ஆன்மாவோ மகானும் அஜனும்" என்னுஞ் சுருதி ஆன்மா அணுவினனல்லன் என்று கூறுகின்றதெனின்,

(உத்தரம்) அன்று;

யஸ்யாநுவித்த: ப்ரதிபுத்த ஆத்மா (பிரு. ௬. ௪. ௧௩)

"ஆன்மாவை அறிந்து தியானிப்பவன்" என்று தொடங்கிச் சிவபெருமானையுற்றுப் பேசும் அதிகரணத்தில் அச்சுருதி காணப்படலான். (௨௨)

ஸ்வசப்தோந்மாநாப்யாம்ச (௨. ௩. ௨௩)

(௨௩) சுவசப்தத்தினாலும் உன்மானத்தினாலும்.

ஏஷோ(அ)ணுராத்மா சேதஸா வேதிதவ்யோ யஸ்மிந்ப்ராண: பஞ்சதா ஸம்விவேச (முண். ௩. ௧. ௯)

"எவனிடத்தில் ஐந்து பிரகாரமாய்ப் பிராணன் பிரவேசித்ததோ, அவ்வணுவாகிய ஆன்மா மனதினால் அறியும்பாலன்" என்னுஞ் சுருதியில் அணு என்னும் பதம் கூறப்படலானும்,

ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோ(அ)பி த்ருஷ்ட: (சுவே. ௫. ௮.)

"[illegible]" [illegible] சுருதியில் உன்மானம் கூறப்படலானும், ஆன்மா அணு[illegible]

க்ஷேபாகிய வஸ்துவை உதகரித்து அதன் அளவை எடுத்துக் காட்டுவதே உன்மானம். (௨௩)

ஆன்மா சிறிதாயிருந்தாற் சரீரமுழுதும் வியாபிக்கும் அனுபவவுணர்ச்சி எங்ஙனமாம் எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அவிரோதஸ்சந்தநவத் (௨. ௩. ௨௪)

(௨௪0) சந்தனம் போல விரோதமின்று.

சந்தனவிந்து ஓரிடத்திருப்பினும் தேகம் முழுதும் வியாபித்துச் சுகம் பிறப்பிக்கின்றது; அது போல, விரோதம் இன்று. (௨௪)

பின்னருஞ் சூத்திரகாரர் ஆசங்கித்து உத்தரம் இறுக்கின்றனர்.

அவஸ்திதி வைசேஷ்யாதிதி சேந்நாப்யுபகமாத்ஹ்ருதி ஹி (௨. ௩. ௨௫)

(௨௪௧) குறிப்பிட்ட ஓரிடமிருப்பதினாற் பொருந்தாதெனின், அங்ஙனமன்று; இதயத்திலேதான் ஆன்மாவுக்கிடம் ஒப்புக்கொள்ளப்படலான்.

(ஆக்ஷேபம்) குறிப்பிட்ட ஓரிடத்திருப்பதினாற் சந்தனம் போல எனல் பொருந்தாதெனின்,

(உத்தரம்)

ஹ்ருதி ஹ்யேஷ ஆத்மா (பிர. ௩. ௬)

"இதயத்திலே இந்த ஆன்மா உளது"

யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:। (பிரு. ௬. ௩. ௭)

"இவன் விஞ்ஞானமயனாய்ப் பிராணன்களுள்ளே இருதயத்து அந்தர் சோதியாயுள்ள புருஷன்" என்று சுருதி கூறுமாறு ஆன்மாவுக்கு ஓர் ஸ்தானம் அங்கீகரிக்கப்படுதலின், அது பொருந்ாதென்பர் சிலர். (௨௫)

சூத்திரகாரர் தம்மதத்தைக் கூறுகின்றனர்.

குணாத்வா லோகவத் (௨. ௩. ௨௬)

(௨௪௨) அல்லது ஒளியைப் போற் குணத்தினால்.

ஆன்மா சுவகுணமாகிய ஞானத்தினால் தேகம் எங்கும் வியாபித்து அநுபவிக்கின்றது; இரத்தினமானது தன் ஒளியினால் தனக்குச் சமீபித்துள்ளதையும் வியாபித்து விளக்குமாறு போலாம். ஆகலின் விரோதம் இன்று. (௨௬)

ஞானத்துக்கும் ஆன்மாவுக்கும் பேதமில்லையெனச் சூத்திரகாரர் கூறு வாராயினர்.

வ்யதிரெகொ ஹ்மயவத்யாஹி ஷ்மயதி (உ. ங. உஎ)

(உசங) கந்தத்திலே போலப் பேதமுளது; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றதன்றே.

பிருதிவி கந்தமுடையது என்பது போல, நான் அறிகின்றேன் என்றவிடத்து, ஞானம் ஆன்மாவுக்குக் குணமாகக் கொள்ளப்படுகின்றது. அங்ஙனம் ஞானத்துக்கும் ஆன்மாவுக்கும் பேதம் உண்டு.

ஜாநாதெ்வாயம் வுருஷ:|

"இந்த மனிதன் அறிகின்றனன்" என்னுஞ் சுருதியும் பேதத்தைக் காட்டுகின்றது. (உஎ)

வ்ருமஹவெஶாக (உ. ங. உஅ)

(உசச) வேறாகக் கூறப்படலான்.

நஹிவிஜ்ஞாதுர் விஜ்ஞாதெ விவரிலொவொ விஷ்யதெ|

(பிரு. சு. ங. ங0)

"அறிஞனுக்கு அறிவு உலோபமில்லை" என்னுஞ் சுருதியினால் ஆன்மாவுக்கு வேறாக ஞானம் உபதேசிக்கப்படுகின்றது. இங்ஙனம் நித்திய ஞானகுணமுடையன் ஆன்மா என்பது சித்தம். (உஅ)

ஆன்மாவுக்கு ஞானம் குணமாக உளதாமிடத்து, அவன் ஞானமாகவே கூறப்படுதல் எங்ஙனமெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

தத்குணஸாரக்வாத்து தத்வ்யவெஶ: ப்ராஜ்ஞவக (உ. ங. உகூ)

(உசரு) இது அவனது விசேஷகுணமாயிருத்தலின் பிராஞ்ஞன் போல அந்தப் பெயர் (கொடுக்கப்பட்டது).

ஞானகுணசாரமாயிருத்தலான் ஆன்மாவை ஞானமென்று குறிப்பதன்றி, ஞானமாத்திரமாகவே யிருப்பதினாலன்று. அஃதெங்ஙனமெனின், ஞானமுடையதேனும் பிராஞ்ஞனைப் (பிரமத்தைச்) "சத்தியம் ஞானம்" என்று கூறுதல் போலாம். ஆகலின், ஆன்மாவை ஞானமென்று கூறுவதாற் குற்றமில்லை. (உகூ)

பின்னரும் பொருத்தமாதல் கூறுகின்றனர்.

யாவதாத்மாவிக்வாத்து நதொஷஸ்தத்ஶநாக (உ. ங. ங0)

(உசகு) அது எஞ்ஞான்றும் ஆன்மாவோடு கூட உடை

னிருத்தலின், அங்ஙனம் காணப்படலானும்; அதில் யாதும் தோஷம் இன்று.

ஞானம் ஆன்மாவோடு கூட உடனிருத்தலின், அதனை ஞானமென்று கூறுவதினுற்றோஷமில்லை. பசு முதலியன பசுத்துவ முதலிய சொரூப சம்பந்தமாகிய குணத்தையுடைமையின், பசுமுதலாய பெயர் இடப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆகலின், ஆன்மாவுக்குச் சொரூபத்தோடியைந்த ஞானகுண முண்மையின் ஞானம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. (௩௦)

சுழுப்தி முதலிய அவஸ்தைகளில் இல்லாத ஞானம் ஆன்மாவோடு உடனிருப்பதாக எங்ஙனம் கூறலாம் எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌤𑍋𑌽𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 (உ. ௩. ௩௧)

(௨௪௭) பும்ஸ்துவ முதலியபோல் அதன் சத்து வெளிப்படலான்.

சுழுப்திமுதலியவைகளிலே சத்தாகிய ஞானம் வெளிப்படாதுளதாயினும், அது சாக்கிர முதலியவற்றில் வெளிப்படுதலுண்மையின், ஞானம் ஆன்மசொரூபத்தோடிசைந்துளதே. மனிதனுக்கு முக்கியமாகிய ஏழாவது தாது பால்ய தசையிற் சத்தாயுளதேனும், யௌவனத்தில் வெளிப்படுகின்றது. ஆகலின், ஞானம் ஆன்மசொரூபமாயிருத்தலாற் போதரும் தோஷம் யாதும் இன்று. (௩௧)

ஆன்மா ஞாதாவாயும் அணுவாயுமிருப்பதாகப் பிரதிபாதிப்பதின் பயனைச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑌰𑌨𑌿𑌯𑌮𑍋 𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌥𑌾।
(உ. ௩. ௩௨)

(௨௪௮) இன்றேல் எப்போதும் அறிதலேனும், அறியாதிருத்தலேனும், அவற்றில் ஒன்று நீங்கலாக மற்றொன்றேனும் இருக்கும்.

அஃதின்றேல் ஆன்மா அறிவாயும் வியாபகமாயும் இருக்கின்றானெனக் கொள்ளின், சங்கோசமின்மையால் நித்தியத்துவம் போல எப்போதும் அறிவுத்தோற்றம் (உபலப்தி) இருத்தல்வேண்டும். அறிவுத்தோற்றமில்லையேல் அந்தக் காரணத்தினாலே இதுவும் எப்போதும் இருத்தல்வேண்டும். ஞானம் இடையில் வந்ததென்றும் ஆன்மா சர்வவியாபகனென்றும் கொண்டால், அதிலும் அந்தத் தோஷம் எய்தும்; சர்வான்மாக்களும் சர்வவியாபகமாயிருத்தலின் ஞானத்துக்குக் காரணமாகிய மனத்தின் சம்யோக

முதலியன எங்கும் எப்போதும் சாதாரணமாயிருத்தலின். அதிர்ஷ்ட ஹேதுக்களுக்கும் அவ்வாறேயிருத்தலின், அதனாலும் நியமம் இல்லை. அறிவுத்தோற்றத்துக்கும் தோற்றாமைக்கும் விரோதம் இருத்தலின், உபலப்திக்கேனும் அநுபலப்திக்கேனும் காரணங்களிருக்கும். அங்ஙனமாயின் இரண்டில் ஒன்றே உளதாகும். ஆகலின், முற் கூறியதே சமீசீனம். (௩௨)

(௧௦) கர்த்திருதிகரணம்.

கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் (உ. ௩. ௩௩)

(உசக) (ஆன்மா) கர்த்தா; சாஸ்திரத்துக்கு அர்த்தமுண்மையான்.

ஆன்மாவுக்கு ஞாதிருத்துவமும் அணுத்துவமும் நிரூபிக்கப்பட்டன. அவனுக்குக் கர்த்திருத்துவம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) கூடஸ்தனாகிய ஆன்மாவுக்குக் கர்த்திருத்துவம் எய்தாது. புத்தியேனும் பிரகிருதியேனும் கர்த்தாவாதல் உசிதம். அத்தியாசத்தினாலே (ஆன்மா) தன்மாட்டு ஆரோபித்துக் கர்த்தாவாகவே தோன்றுகின்றான். ஆதலிற் கர்த்திருத்துவம் ஆன்மாவுக்குப் பொருந்தாதெனின்,

(சித்தாந்தம்) ஆன்மாவே கர்த்தா, சாஸ்திரத்துக்கு அர்த்தமுண்மையின். இன்றேல் இது செய்க, இது செய்யற்க என்று விதிக்கும் சாஸ்திரம் வியர்த்தமாகும். (௩௩)

உபாதாநாத்விஹாரோபதேஶாத் (உ. ௩. ௩௪)

(உ௫௦) அவனுக்கு எடுத்தலும் அலைதலும் கூறப்படலாலும்.

ஏவமேவைஷ ஏதாந் ப்ராணாந் க்ருஹீத்வா ஸ்வே ஶரீரே யதாகாமம் பரிவர்த்ததே (பிரு. ச. க. கஅ)

“இங்ஙனம் இவன் இந்தப் பிராணன்களை எடுத்துக்கொண்டு சுவசரீரத்தில் இஷ்டம்போல் அலைகின்றான்” எனச் சுருதியானது ஆன்மா எடுத்தலும் அலைதலும் செய்வதாகக் கூறுதலான், இவன் கர்த்தாவே. (௩௪)

புத்தியும் பிரகிருதியுமே கர்த்தாவாகுமென்றவிடத்துப் புத்தி கர்த்தாவாதலைத் தூஷிக்கின்றார்.

வ்யபதேஶாச்ச க்ரியாயாம் ந சேந்நிர்தேஶவிபர்யய:| (உ. ௩. ௩௫)

(௨௫க) கிரியையைப்பற்றிக் கூறப்படுதலான்; இன்றேல் வேறுவிதமாய்க் கூறப்பட்டிருக்கும்.

விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே (தைத். உ. ரு. க)

“விஞ்ஞானம் யாகத்தைச் செய்கின்றது” என்றற்றொடக்கத்தவற்றினால் ஆன்மாவே யாகாதியிற் கர்த்தாவாகக் கூறப்படுகின்றனுதலின், ஆன்மாவே கர்த்தா.

(ஆக்ஷேபம்) விஞ்ஞானம் (ஆன்மா) என்றது புத்தியையேயன்றி ஆன்மாவைக் குறித்ததன்று எனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று. அவ்வாறாயின் விஞ்ஞானத்தினால் என வேறுபிரகாரமாய்க் குறிக்கப்பட்டிருக்கும்;

ததேஷாம் ப்ராணாநாம் விஜ்ஞாநேந விஜ்ஞாநமாதாய

(பிரு. ச. க. கஎ)

“இந்தப் பிராணன்களுடைய விஞ்ஞானத்தை விஞ்ஞானத்தினால் எடுத்து” என மற்றோர் சுருதியில் இந்த விஞ்ஞானசப்தம் புத்தியைக் குறிக்குமிடத்து (மூன்றும் வேற்றுமை) கருவிப்பொருளிற் குறிக்கப்பட்டதாய்க் காணப்படலான். ஆகலின், புத்தி கருவிப்பொருளாயிருத்தலாற் கர்த்தாவன்று. (௩௫)

பிரகிருதி கர்த்தா என்பதைச் சூத்திரகாரர் தூஷிக்கின்றார்.

உபலப்திவதநியம꞉ (உ. ௩. ௩௬)

(௨௫௨) அறிவுத்தோற்றம் போல நியமமின்று.

மேலே வாதிக்கப்பட்ட உபலப்தியிற் போல, பிரகிருதியைக் கர்த்தாவாகக் கொள்ளின், அது சர்வசாதாரணமாதலால் முற் கூறிய அறிவுத்தோற்றத்தின் அநியமம் போற் பயனிலும் அநியமம் நேரும். (௩௬)

ஶக்திவிபர்யயாச்ச (உ. ௩. ௩எ)

(௨௫௩) (போக்திருத்துவ) சத்தி வேறுபடலான்.

பிரகிருதி கர்த்தாவாயின், கர்த்தாவே போக்தாவாகவேண்டுதலின் அந்தப் பிரகிருதியே போக்தாவாகுக; பின் ஆன்மாவின் போக்திருத்துவ சத்தி வேறுபாடுபெற்றி ஹானி அடையும். (௩எ)

ஸமாத்யபாவாச்ச (உ. ௩. ௩அ)

(௨௫௪) தியானவின்மை நேருமாதலானும்.

மூன்னும் பிரகிருதி கர்த்தாவாயின், நான் பிரகிருதிக்கு வேறாயிருக்கின்றேன் என்னும் தியானத்துக்கு அபாவம் நேருமாதலினாலும், ஆன்மாவே கர்த்தா. (௩அ)

யயா ச தக்ஷோஹயா (உ. ௩. ௩௯)

(உ௫௫) தச்சன் போல அவன் இருவகையாயும்.

ஆன்மா கர்த்தாவாயின், தச்சன் சுவகாரியத்தில் எவ்வாறோ அவ்வாறே, விரும்பும்போது செய்தும் விரும்பாதபோது செய்யாதொழிந்தும் போதலாகிய வியவஸ்தை நேரும்.

(ஆக்ஷேபம்) விருப்பமும் புத்திக்குரியதாதலான் அவ்வியவஸ்தை வராதெனின்,

(சமாதானம்) அன்று; இச்சை சேதனத்தின் தருமம். அதுபற்றி ஆன்மாவுக்கே கர்த்திருத்துவமன்றிப் புத்திக்கேனும் பிரகிருதிக்கேனும் இல்லை என்பது நிர்ணயம். (௩௯)

(கக) பராயத்தாதிகரணம்.

பராத்து தச்ருதெ: (உ. ௩. சுO)

(உ௫௬) ஆயின் பரத்திலிருந்தே; அதனைச் சுருதி கூறுதலான்.

அறிதலும் செய்தலும் ஆன்மாவுக்கே பிரதிபாதிக்கப்பட்டன. அந்தக் கர்த்திருத்துவம் தன்னிடத்துளதா? சிவபெருமானிடத்துளதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது ஆன்மாவிலே எய்துகின்றது. இன்றேல் நன்மை தீமைகளில் ஆன்மாவைச் செலுத்திச் சிவபெருமான் பாரபக்ஷமுடையார் என்னும் தோஷத்துக்காளாவர். அதுவன்றி ஆன்மாவுடைய பிரவிருத்தி சிவபெருமான் வசத்ததாயின் ஆன்மா யாதும் செய்யாமையின், விதிநிஷேதங்கள் வியர்த்தமாகும். ஆகலின், ஆன்மாவுடைய பிரவிருத்தி ஆன்மாவைப் பற்றியதேயாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

ய ஆத்மாநமந்தரோ யமயதி (மத்தியந்தினசாகை)

"உள்ளிருந்து ஆன்மாவைச் செலுத்துகின்றனர்" என்னுஞ் சுருதியுண்மையால் ஆன்மாவுடைய கர்த்திருத்துவம் சிவபெருமான் வசத்ததன்றித் தன்னைப் பற்றியதன்று. (சுO)

ஆன்மாவைச் சிவபெருமான் பிரவிருத்திப்பதால் அவர் பாரபக்ஷமுடையராவார் என்றமைக்கும் விதிநிஷேதங்கள் வியர்த்தமாகும் என்றமைக்குமாகச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

க்ருதப்ரயத்நாபெக்ஷஸ்து விஹிதப்ரதிஷிஷாவெயர்ய்யாதிப்ய:|
(உ. ந. சக)

(உருஎ) விதிநிஷேதங்களுக்கு வியர்த்தம் வாராதிருக்க (ஆன்மாச் செய்யும்) பிரயத்தனத்தை (ஈசுவரர்) அபேக்ஷிக்கின்றனர்.

ஆன்மா தன் கர்மபாகவசமாய்ச் சுவேச்சையினலே பிரவிருத்தி நிவிர்த்திக்கு ஏதுவாகிய முயற்சி செய்கின்றுன். பிரவிருத்தி நிவிர்த்திகளின் ஏதுவாகிய ஆன்மாவின் பிரயத்தனத்தை நோக்கி அவனுக்கு அனுமதி கொடுப்பது காரணமாகப் பரம்பொருளானது அவனைச் செலுத்தி நிக்கிரகானுக்கிரகங்களைச் செய்வதால், விதி நிஷேதத்தின் வியர்த்தமின்மை புலப்படுகின்றது. பாலனொருவன் மிக்க பலமுடையவனது சகாயத்தினல் ஓர் பெரிய உத்தரத்தைத் தூக்க இயன்றவனேயாயினும், தான் பிரயத்தினஞ் செய்தவரையில் விதி நிஷேதங்களுக்கு யோக்கியனுகின்றுன். இங்ஙனம் ஆன்மா சிவபெருமானுடைய சகாயங்கொண்டு பிரவிருத்தித்தாலும் தானே விதி நிஷேதங்களுக்கு யோக்கியனுகின்றுன். ஆகலின் ஆன்மா தான் செய்த பிரயத்தனத்தையுற்று அபேக்ஷையுடைமையாற் கன்மங்களிலே ஆன்மாவைச் செலுத்துபவராகிய சிவபெருமான் பாரபக்ஷமுடையராகார். ஆன்மாவுக்கும் சுவாதீனப் பிரவிருத்தியுண்மையான் விதிநிஷேத முதலிய வியர்த்தமாகப் போகா என்பது சித்தம். (சக)

(கஉ) அம்சாதிகரணம்.

அம்மொ நாநா வ்யபதெசாத அந்யதாசாபி தாஸகிதவாதித்வமயீய வகெ|
(உ. ந. சஉ)

(உருஅ) ஆன்மா (பிரமத்தின்) அம்சம், வேருய்க் கூறப்படலான்; சில சாகையினர் வேறு பிரகாரமாயும் வலைஞர் துஷ்டர் முதலாயினேர் தன்மையை அத்தியயனஞ் செய்கின்றனர்.

ஆன்மா நித்தியன், அறிஞன், அணு, கர்த்தா, சிவனுர் சகாயத்தை அபேக்ஷிக்கும் பிரவிருத்தியுடையன் என்று மேலே நிரூபிக்கப்பட்டது.

ஈண்டு ஆன்மா சிவபெருமானு? இன்றேல் அவர் அம்சமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா சிவபெருமானே; ஒரு ஆகாயம் கடமுதலியவற்றின் உபாதியினல் நாநாப்பிரகாரமாய்ப் பரிச்சின்னமாய்க் காணப்

பட்டாற் போல, சிவபெருமானே அநேக உபாதிவசத்தினுற் சீவபாவம் அடைந்தாராகக் காணப்படுகின்றது. அங்ஙனம்,

அயமாத்மா ப்ரஹ்ம (பிரு. ௪. ரு. கக)

"இந்த ஆன்மா பிரமம்" என்று சுருதியும் கூறுகின்றது. ஆகலின், பிரமமே அஞ்ஞானத்தினுற் சீவபாவத்தை அடைந்ததெனப் பெறப்படுகின்றதே எனின்,

(சித்தாந்தம்) சீவான்மா (பரப்பிரம) சிவபெருமானுடைய அம்சமாகிய மூர்த்தியின் ஏகதேசந்தான்.

அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி।
(சாந். சூ. ௩. உ)

"இந்தச் சீவான்மாவின் உருவமாய்ப் பிரவேசித்து நான் நாமரூபத்தை வகுப்பேன்"

ய ஆத்மநி திஷ்டந் (மத்தியந்தினசாகை)

"எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ"

ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா (சுவே. க. சு)

"ஆன்மாவையும் செலுத்துபவரையும் வேருக அறிந்து"

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேஶ்வரம்।
(சுவே. ௪. க0)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக"

தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் (சுவே. ௪. க0)

"இவ்வுலக முழுதும் அவர் அவயவத்தினுல் வியாபிக்கப்பட்டது" என்றற்றொடக்கத்த சுருதிகளில் அவ்விரண்டுக்கும் பேதம் கூறப்படுகின்றது.

அயமாத்மா ப்ரஹ்ம (பிரு. ௪. ரு. கக)

"இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதியிற் பிரமமே ஜீவான்மா எனின்,

(உத்தரம்) கூறுவாராயினர்.

தத்த்வமஸி (சாந். சூ. அ. எ)

"அது நீயாகின்றனை"

அயமாத்மா ப்ரஹ்ம (பிரு. ௪. ரு. கக)

"இந்த ஆன்மா பிரமம்" என்னுஞ் சுருதிகள் வியாபக வியாப்பியபாவமாயிருத்தலின், அவ்விரண்டுக்கும் அநன்னியத்துவம் கூறின. பின்னும்,

ப்ரஹ்மதாஸா ப்ரஹ்மதாஸா ப்ரஹ்மேமே கிதவா: (அதர்வணம்)

"வலைஞர் பிரமம், தாசர்கள் பிரமம், துஷ்டர் பிரமம்" என்றற்றொடக்கத் தவற்றுப் பிரமத்தினின்று (அநன்னியத்துவத்தை) வேறுறுமையை அத்தியயனஞ் செய்கின்றனர். தீயினால் வியாபிக்கப்பட்ட காட்ட முதலியவற்றைத் தீயென்று கூறுவது போல, பிரமத்தின் அம்சமாயினும் ஆன்மா அதனால் (பிரமத்தினால்) வியாபிக்கப்பட்டமையான் அப்பிரம சப்தத்தினாற் கூறப்படுவது யுக்தமாம். அங்ஙனமாயினும் அக்கினி காட்டம் இரண்டுக்கும் பேதமுண்டே. ஆகலின் ஆன்மா பிரமத்தின் அம்சமாய் அந்தச் சொரூபமுடையனாகப் பிரதிபாதிக்கப்படுகின்றான். பிரமந்தானே அஞ்ஞானத்தினாற் சீவான்மாவாகின்றதெனக் கொளின், அது அநேக சுருதிகளுக்கு விரோதமாதன் முதலிய தோஷங்களுக்குட்படுதலை நீக்கக்கூடாமையாயிருக்கின்றது. (௪உ)

மந்த்ரவர்ணாச்ச (உ. ௩. ௪௩.)

(உ௫௯) மந்திரமுண்மையானும்.

பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி (தைத். ஆரணி. ௩. ௧உ. ௩௪)

"அவருடைய பாதம் எல்லா உயிர்களுமாம்" என்னும் இம்மந்திரத்தினாலும் ஆன்மா பிரமத்தின் அம்சமே.

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேஶ்வரம் தஸ்யாவயவ பூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் (சுவே. ௪. ௧0)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; இந்த உலகமெல்லாம் அவரது அவயவத்தினால் வியாபிக்கப்பட்டது" என்னுஞ் சுருதியானது மாயையைக் காரணம் என்றும், அந்த விசிட்டமுடையார் சிவபெருமான் என்றும், உலகமுழுமையும் அவரது அவயவம் என்றும் புலப்படுத்துகின்றது. ஆகலின், மாயையுடைய சிவபெருமானது அவயவ லேசமே (ஆன்மா). (௪௩)

அபி ஸ்மர்யதே (உ. ௩. ௪௪)

(உ௬0) மேலும் ஸ்மிருதியிற் கூறப்படுகின்றது.

க்ஷ்மாத்யா தஸ்யாஷ்டமூர்த்தே: ஶிவஸ்ய பராத்மந:।
வ்யாபிகேதரமூர்த்தீநாம் விஶ்வம் தஸ்யாம்ஶகல்பிதம்॥

"(பிருதிவி முதலிய ஏழு) இதர மூர்த்திகளையும் வியாபித்த ஆன்மாவானது சிவபிரானுரது எட்டாவது மூர்த்தியாகும்; ஆகலின் உலகம் சிவபிரானே" என்று ஸ்மிருதியிற் காணப்படும் இந்த வாக்கியத்தினாலும் ஆன்மா சிவனுரது ஏகதேசமூர்த்தியுமாம். (௪௪)

ப்ரகாஶாதிவந்நைவம் பர: (உ. ௩. ௪௫)

(௨௬௧) ஒளி முதலிய போல, பிரமம் இங்ஙனமன்று.

ஆன்மா பிரமத்தின் அம்சமாயினும், சிவபெருமான் அதன் ரூபத்தையேனும் அதன் சுபாவத்தையேனுமுடையரல்லர். அவர் சர்வஞ்ஞத்துவாதி குணமுடையரே. எங்ஙனம்? ஒளி முதலிய போல. எவ்வாறு ஒளியுடைய மணிமுதலியவற்றுக்கு ஒளியானது விசேஷகுணமாயும் அம்சமாயுமிருக்கின்றதோ, அவ்வாறே ஆன்மாவைச் சரீரமாகக்கொண்டமையான் ஆன்மவிசிட்டமாகிய பிரமத்துக்கு அம்சமாயுள்ளது ஆன்மா. ஆதி சப்தத்தினால் விசேஷணத்துவத்தின் முக்கியவியற்கையாகிய சாதி குண முதலியன கிரகிக்கப்படுகின்றன. விசேஷணங்கள் விசேடியத்தின் ஏகதேசமாயிருத்தல் பற்றி அம்சமாயிருப்பினும்,

ய ஆத்மநி திஷ்டந் (மத்தியந்தினசாகை)

"எவர் ஆன்மாவில் இருக்கின்றாரோ" என்றற்றொடக்கத்த சுருதி கூறியவாறு, சொரூப பேதத்திற்கு விரோதம் எய்தாது. (௪௫)

ஸ்மரந்தி ச (உ. ௩. ௪௬)

(௨௬௨) (அங்ஙனம்) ஸ்மிருதிகளும் கூறுகின்றன.

விஶ்வம் தேவதேவஸ்ய விஶ்வேஶஸ்ய சராசரம்| ஶரீரம் ந ஜாநந்தி பஶவ: பாஶமோஹிதா: (வாயு. உத். ௬: ௧)

"இந்தச் சரம் அசரமாகிய உலகமெல்லாம் தேவாதி தேவருடைய சரீரம்; இவ்வுண்மையைப் பசுக்கள் பாசமிகுதியினால் அறியமாட்டா" என்னும் ஸ்மிருதியினால் ஆன்மா பிரமத்தின் அம்சமே. பிரமம் அதை அம்சமாயுடைமையின் சொரூபபேதமும் சித்திக்கின்றது. (௪௬)

அநுஜ்ஞாபரிஹாரௌ தேஹஸம்பந்தாஜ்ஜ்யோதிராதிவத்|

(உ. ௩. ௪௭)

(௨௬௩) சோதி முதலியவற்றிற் போலச் சரீரசம்பந்தமுடைமைபற்றியே விதியும் விலக்கும் (போந்தன).

சமஸ்த ஆன்மாக்களும் பிரமாம்சமாயிருப்பினும் வேதாதிகளிலே சிலர் வேதங்களைப் படிக்கலாம் என்றும், சிலர் படிக்கப்படாதென்றும் கூறப்பட்டதே எனின்,

(உத்தரம்) வைதிகருடைய கிரகத்திலும் மயானத்திலும் சம்பந்தமுடைமைபற்றி அக்கினி முதலியவற்றுக்குப் பேதங் கூறப்பட்டாற் போல, பிராமணர் முதலாயினோருடைய சரீரசம்பந்தம்பற்றி (அப்பேதம்) யோக்கியதென்று கோடலே பொருத்தம்; அதுபற்றி விரோதம் இல்லை. (௪௭)

ஸஂபநெ்ராவ்யதிரெகஃ (உ. ந. சஅ)

(உகூச) (ஆன்மாக்களுக்குச்) சம்பந்தமின்மையின் வித்தியாசமில்லை.

(சூத்திரத்தில்) அசந்ததி என்றது அவ்வியாப்தி. சரீரந்தோறும் வெவ்வேறாயிருத்தலின் ஆங்காங்கே அணுத்துவமாய் வரையறுக்கப்பட்டிருத்தலாலும், வியாப்தியின்மையாலும், நான் பருத்தவன், நான் மெலிந்தவன், நான் சுகி, நான் துக்கி, நான் பிராம்மணன், நான் க்ஷத்திரியன் என்னும் தேகாபிமானமுடையார்க்கு ஞானம் இன்ப முதலியவெல்லாம் ஓர்விதமாயிருக்கின்றன. இதனாற் பெறப்பட்டது யாதோவெனின், தேகாபிமானிகளுக்கு வியாப்தியின்மை சமானமாதலின் வரையறுக்கப்பட்ட சாம்சாரிக ஞானசுக முதலியன ஒரே பிரகாரமாய்க் கலவாமலிருப்ப, பரப்பிரமஞான விசேஷத்தினால் தேகாபிமானம் நீங்கினவர்களாய், தங்கள் மகாவியாபகத்தினாற் பராஹம்பாவனையுடையவர்களாய முக்தான்மாக்களின் சுவாபாவிகமாகிய ஞானசுகாதிகள் நிரதிசயமாயும் நித்தியமாயும் இருத்தலின் சாம்சாரிக ஞானமுதலியவற்றினின்று இவை வேறுபடுமென்பது சித்தித்தது. (சஅ)

அஞ்ஞானத்தினாலும் உபாதியினாலும் *பிரமமே கட்டுண்டது என மேலே கூறப்பட்டதில் அவ்வியவஸ்தை நேருமென்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஆஹாஸ ஏவ வ (உ. ந. சகூ)

(உகூரு) போலிநியாயமுமே.

சத்தியமாயாவது மித்தையாயாவது உபாதியினாற் கட்டுண்ட பிரமமே சீவான்மாவாக எய்திற்று என்னும் இருபக்ஷத்தினும் ஏற்படும் நியாயங்கள் போலிகளே. (சகூ)

அங்ஙனமே,

---

* சாங்கியமத நிராகரணமுதற் பாஞ்சராத்திரமத நிராகரணமிறுதியாகப் பிரதிபாதிக்கப்பட்ட இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்தில் மாயாவாதத்தையும் ஒருங்குகணித்து நிராகரணஞ் செய்யாது ஈண்டு அதனை வேறாக வைத்து மறுக்கப்போந்தமை மலைவாம் பிற எனின், ஆகாது ; நித்தியமாயும் அழியாததாயுமுள்ள ஆன்மாவைப் பிரமமென்றேனும் மித்தையென்றேனும் மாயாவாதிகள் தங்கள் பிரமசூத்திரபாஷ்யங்களினும் பிரமசூத்திரத்துக்கு ஆதாரமாகிய ஈசகேநாதி முக்கிய உபநிடதபாஷ்யங்களினும் வழுவுறக் கூறுகின்றமையின், ஆன்மலக்கணம் விரித்துக் கூறப்போந்த இரண்டாம் அத்தியாயத்து மூன்றாம் பாதத்துப் பத்தொன்பதாஞ் சூத்திரமுதல் ஐம்பத்திரண்டாஞ் சூத்திரமிறுதியாகப் போந்த சூத்திரங்களிலே அவர் கொள்கையை நிராகரித்தலே நெறியாமெனக்கொண்டு சூத்திரகாரராலும் சைவபாடியகாரராலும் அது வேறாக வைத்து நிராகரணஞ் செய்யப்பட்டமையின் சோர்ந்திழுக்கு யாதுமின்றாமாதலின். இந்த அம்சாதிகரண (உ. ந. சஉ-ஆஞ) சூத்திரபாஷ்யத்தினும் மாயாவாதம் கண்டிக்கப்பட்டமை காண்க

ஸஂஜ்ஞாநியமாத் (உ. ங. ரு௦)

(உகசு) அதிர்ட்டத்தினால் நியமமில்லாமையான்.

ஆன்மாக்கள் சத்தியமித்தியோபாதிகளினாலே தோற்றுமாயின், பிர மத்துக்கே அஞ்ஞானமும் உபாதியுமாம். ஆகலின் அவர்களாற் செய்யப்படும் கன்மபயன்களினாலும் நியமமில்லை. (ரு௦)

மேலும்,

ஸஂகல்பாதிஷ்வபி சைவம் (உ. ங. ருக)

(உகஎ) சங்கற்பமுதலியவற்றினும் இங்ஙனமே.

அதிர்ஷ்டங்களுக்குக் காரணமாகிய சங்கற்பமுதலியவற்றினும் இங் ஙனமே நியமமில்லையாம். (ருக)

ப்ரதேஶாதிதி சேந்நாந்தர்பாவாத் (உ. ங. ருஉ)

(உகஅ) இடத்தினாலோ எனின் அன்றாம்; ஒடுங்குத லான்.

(ஆக்ஷேபம்) உபாதிசம்பந்தம்பற்றிப் பிரமத்துக்கு இடபேதம் வருதலால் வியவஸ்தை உண்டாமே யெனின்,

(உத்தரம்) அன்று; உபாதிநீங்கியபோது எல்லாவிடங்களும் பிரமத் தில் ஒடுக்குகின்றமையான். ஆகலின், சத்தியமித்தியமாயுள்ள உபாதியினால் வரையறுப்புண்ட பிரமமானது சீவான்மாவாம் என்னும் இருபக்ஷத்தினும் நியமம் இல்லை. அதுகொண்டு பிரமத்தின் அம்சமாயுள்ள சீவான்மாவானது அதற்கு (பிரமத்துக்கு) விசேஷணமாயிருத்தலேயே முக்கியசுபாவமா யுடையதென்று கோடல் யுக்தமே. (ருஉ)

இரண்டாம் அத்தியாயத்து

நான்காம்பாதம்.

---

(௧) பிராணோற்பத்தியதிகரணம்.

ததா ப்ராணா꞉ (௨. ௪. ௧)

(௨௬௬) அவ்வாறு பிராணன்கள்.

மேலே பூதங்கள் பிரமத்தினின்று உற்பத்தியாகின்றன என்றும், ஆன்மா நித்தியம் என்றும் நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுப் பூதங்கள் போல, இந்திரியங்களும் பிரமத்தினின்று உற்பத்தியுடையனவா? என்றும், அவை ஆன்மாக்களைப் போல நித்தியமா? என்றும் விசாரிக்கப்படுகின்றது. நித்தியமாதலில் ஆன்மா எவ்வாறு பிறப்பதில்லையோ, அவ்வாறே இந்திரியங்களும் பிறப்பதில்லை; ஆன்மாவைப் போல இவைகளும் நித்தியமாம் என்று சுருதியிலுண்மையான். அங்ஙனம்,

அஸத்³வா இத³மக்³ர ஆஸீத் தத³ஹு꞉ கிம் தத³ஸதா³ஸீதி³த்யுஷயோ வாவ தே(அ)க்³ரே(அ)ஸதா³ஸீத் தத³ஹு꞉ கே தே ருஷய இதி ப்ராணா வா ருஷய꞉।

(சதபதப்பிராம்மணம். ௬. ௧.௧)

"அசத்தே முதற்கண் இருந்தது; அசத்து என்றது எது என்று கேட்க, அது இருடிகள் என்றார்கள்; இருடிகள் யார் என்று கேட்க, அவை பிராணன்கள் என்றார்கள்" என்னும் சுருதியினாலே பிரளய காலத்திற் பிராணன்களின் இருப்புக் கூறப்படுகின்றது. ஆகலின் பிராணன்கள் பிரமத்தினின்று உற்பத்தியாகவில்லை எனின், (௧)

(சித்தாந்தம்) கூறுதும்.

கௌ³ண்யஸம்ப⁴வாத் தத்ப்ராக் ச்ச்²ருதேஶ்ச (௨. ௪. ௨)

(௨௭௦) அது கவுணம்; அசம்பவமாதலானும், அது முதற்கண் இருந்ததெனச் சுருதி கூறுதலானும்.

பிராணன்கள் சிருஷ்டிக்குமுன்னே இருந்திலவாக,

ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத் (சாந். ௬. ௨. ௧)

"சத்துத்தானே முதற்கண் இருந்தது" எனச் சிவபெருமானையுற்றே சுருதியுளதாகலின், இருடி என்னும் மொழியும் பிராணன் என்னும் மொழியும் சிவபெருமான் மேலனவே. அவர் அநேகரல்லாமையாற் பன்மையிற் கூறி

யது கவுணம். ஆகலின் சிருட்டிக்கு முன்னர்ப் பிரமமிருந்ததன்றி, இந்திரியங்கள் இருந்தன அன்று. (௨)

சூத்திரகாரர் மற்றோர் யுக்தி கூறுகின்றனர்.

தத்பூர்வகத்வாத்வாச: (௨. ௪. ௩)

(௨௭௧) அதற்கு முன்னே வாக்கிருந்தமையான்.

சிவபெருமானுடைய சிருட்டிக்குப் பின்னே எல்லாம் நாமரூபமடைந்தன; சிருட்டிக்குமுன்னிருந்த பிராணசப்தம் இந்திரியங்களைக் குறிக்காது. ஆகலின், பிரமந்தான் முன்னிருந்தது. (௩)

(௨) சப்தகத்யதிகரணம்.

ஸப்தகதே விசேஷிதத்வாச்ச (௨. ௪. ௪)

(௨௭௨) ஏழே நடைபெற்று விசேடிக்கப்படலானும்.

பிரமத்தின் காரியமாகச் சித்தித்த புலன்கள் எத்தனை? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஏழு. எதனால்?

யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ புத்திஶ்ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம் (கட. ௬. ௧௦)

"ஐம்புலன்களும், மனசோடியைந்து புத்தியும் சலியாதிருக்குங்கால் அது உயர்ந்த கதி என்று கூறப்படும்" என்னுஞ் சுருதியில் ஏழென்று அறியப் படலானும்,

ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி (முண். ௨. ௧. ௮)

"ஏழு பிராணன்கள் உண்டாகின்றன" என்னுஞ் சுருதியில் ஏழு என்பது விசேடித்துக் கூறப்பட்டமையானுமாம் எனின், (௪)

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஹஸ்தாதயஸ்து ஸ்திதே(அ)தோ நைவம் (௨. ௪. ௫)

(௨௭௩) (ஆன்மா) சரீரத்திருக்கும்போது கை முதலாயின உண்டு; ஆகலின், அஃதங்ஙனமன்று.

இந்திரியங்கள் ஏழுமாத்திரமன்று; ஆன்மா தேகத்துள் இருக்கும் வரையும் கைமுதலாயினவும் உபகரணங்களாயிருத்தலிற் பேதமில்லாமை பற்றி, அவைகளும் இந்திரியங்கள்.

தசேமே புருஷே ப்ராணா ஆத்மைகாதச: (பிரு. ௫. ௯. ௪)

"புருஷனிடத்திலே இந்தப் பத்தும் பிராணன்கள் (இந்திரியங்கள்); மனசு (ஆன்மா) பதினொன்ருவது" என்று சுருதியும்,

இந்த்ரியாணி தஶைகஞ்ச (பகவற்கீதை. கங. ரு)

"இந்திரியங்கள் பத்தும் ஒன்றுமாம்" என்று ஸ்மிருதியுங் கூறுகின்றமையின், இந்திரியங்கள் பதினொன்றும். புத்திமுதலியனவும் வேறு இந்திரியங்கள் அன்று; பின் அவை மனோவிருத்தி பேதங்களே. ஏழு என்று எண்ணிக் கூறினமையும் விசேடித்துக் கூறினமையும் பிரதானமாதல் பற்றியே. ஆகலின், இந்திரியங்கள் ஏழு அன்று; பதினொன்றேயாம். (ரு)

(சு) பிராணாணுத்துவாதிகரணம்.

அணவஶ்ச (உ. ச. சு)

(உஎச) (அவைகள்) அணுக்களுமாம்.

அவ்விந்திரியங்கள் வியாபகமுடையனவா? இன்றேல் அணுத்துவமுடையனவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை வியாபகமுடையன; கண் முதலிய இந்திரியம் தூரத்துள்ள பொருள்களைக் கிரகணம்பண்ணுஞ் சாமர்த்தியமுண்மையால் எனின்,

(உத்தரம்) அவை அணுக்கள் எனப்படும்;

ப்ராணமுத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி।

(பிரு. சு. ச. உ)

"பிராணன் புறப்படுங்கால் எல்லாப் பிராணன்களும் கூடப் புறப்படுகின்றன" எனச் சுருதி கூறுகின்றமையான், அவைகள் வியாபகமுடையன அன்று. வியாபகமுடையவாயின் அவை புறப்பட நேராது. கண்முதலியவற்றுக்கு வியாபகத்திலைன்றி ஒளிரூபத்தினாலே தூரத்துள்ள பொருள்களைக் கவருந் திறமையும், சீக்கிரகதியினால் அணுத்துவமும் சித்திக்கின்றன். ஆகலின், இந்திரியங்கள் அணுக்களே. (சு)

(எ) சிரைஷ்டியாதிகரணம்.

ஶ்ரேஷ்டஶ்ச (உ. ச. எ)

(உஎரு) சிரேட்டமும்.

ப்ராணமுத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி।

(பிரு. சு. ச. உ)

"பிராணன் போகும்போது எல்லாப் பிராணன்களும் கூடப் புறப்படுகின்றன" என்னுஞ் சுருதியினாற் பிராணன்கள் அனைத்தினும் விசேஷமாகக் கேட்கப்படுகின்ற பஞ்சவிருத்தியையுடைய பிராணவாயு பிரமத்திலிருந்து உற்பத்தியாகின்றதா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிராணவாயு பிறப்பதில்லை.

ஆநீத³வாதம் (தைத். பிராம். உ. அ. கூ. எச)

"அது காற்றின்றிச் சுவாசிக்கும்" என்னும் சூக்தத்திலே சிருட்டிக்கு முன்னும் பிராணனுடைய இயக்கம் கேட்கப்படுகின்றமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராணவாயுவும் பிறக்கின்றது. ஆநீத் (சுவாசித்தது) என்னும் மொழி பிராணவாயு வியாபாரத்தைக் கூறப்போந்ததன்று; அவாதம் (காற்றில்லை) என்னும் மொழி பிராணவியாபாரத்தை நிஷேதித்தலான். பின் பிரமத்தினிருப்பையே கூறுகின்றது. ஆகலின், பிராணன் அநாதிக்கண்ணதன்று.

(ஆக்ஷேபம்) பிராணவாயு உற்பத்தியுடையதாயிருப்பினும்

ப்ராணாத்³யா வாயவ꞉ பஞ்ச (சாங்கியகாரிகை. உகூ)

"பிராணன் முதலிய ஐந்து வாயுக்கள்" என்று வேறு தந்திரத்திற் கூறியவாறு, அது ஐம்பொறிகளின் விருத்திக்கு வேறுபாடற்றதாயாவது

ய꞉ ப்ராண꞉ ஸ வாயு꞉ (பிரு. நு. க. நு)

"எது பிராணனோ அது வாயு" எனச் சுருதி கூறியவாறு, பூதவாயுவுக்கு வேறுபாடற்றதாயாவது அன்று எனின், (எ)

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ந வாயு க்ரியே ப்ருத²கு³பதே³ஶாத் (உ. ச. அ)

(உஎகூ) அது வாயுவும் அன்று; (இந்திரிய) விருத்தியுமன்று, வேறாகக் கூறப்படலான்.

பஞ்சவிருத்தியுள்ள இந்தப் பிராணன் வாயுவுமன்று, இந்திரியவிருத்தியுமன்று;

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மன꞉ ஸர்வேந்த்³ரியாணி ச க²ம் வாயு꞉ ஜ்யோதிராப꞉ ப்ருதி²வீ விஶ்வஸ்ய தா⁴ரிணீ (முண். உ. க. ங)

"பிராணன், மனம், சர்வேந்திரியம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு அனைத்தையுந் தாங்கும் பிருதிவி" என்னுஞ் சுருதியில் அது வேறாகக் கூறப்படலான். ஆகலின், வாயுவுக்கும் இந்திரியவிருத்திக்கும் வேறாயது பிராணனே. (அ)

வாயுவினின்று வேருயினும் அது மற்றோர் பூதமன்றென்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அக்ஷு:ஆதிவத் து தத்ஸஹ ஶிஷ்டயாதிப்ய: (உ. ச. கூ)

(உஎஎ) கண் முதலியன போல அது அவற்ருேடு கூறப்படன்முதலிய காரணங்களால்.

வாயுவினின்று வேருயினும் அக்கினி முதலிய போல அது வேருேர் பூதமன்று; வாயுவே. அது சிவபெருமானைத் தனக்கு ஆதாரமாய்க்கொண்டு தேகத்தைத் தாங்கும் யோக்கியதையுடையதாகின்றது;

ஸ த்ரிதா ஸந்தியதோ விஸ்ருத்தோ ஸஹேகோதேவோ ஸஹூபயா

திவிஷ்ட: (தைத். ஆரணி. ௬. ௧௪. ௪௨)

"தாங்குபவனுகிய வாயு தாங்கப்படுபவனுமாயிருந்து தாங்குகின்ருன்; ஒரே தேவர் பலரூபமாயிருக்கின்ருர்"

கூஶரீரேஷு ஸம் நிவிஷ்ட: (தைத். ஆரணி. ௬. ௧௪. ௪௪)

"அநேக சரீரங்களிற் பிரவேசித்து ஒன்ருயிருக்கின்றனே"

ப்ராணாநாம் க்ரந்திரஸி ருத்ரோ மா விஶாந்தக:

(தைத். ஆரணி. ௧௦. எச. கூ)

"உருத்திரரே! நீவிர் பிராணன்களுக்கு ஓர் கிரந்தியாயிருக்கின்றீர், அழிக்கிறவராகப் பிரவேசியாதிரும்" என்றற்றொடக்கத்த சுருதிகளுண்மையான். மேலும், இது கண் முதலிய போல, ஆன்மாவுக்கு உபகரணமாயிற்று; பிராணசம்வாத முதலியவற்றிலே கண் முதலியவற்ருேடு கூடக் கூறப்படுதலானும், அக்கண் முதலியபோல ஆன்மாவுக்கு உபகாரமாகி, அவ்விந்திரியங்களுள்ளே முக்கியமாயிருத்தன் முதலியவற்ருனுமாம். (கூ)

அகரணத்வாத் ச ந தோஷஸ் ததா ஹி தர்ஶயதி (உ. ச. ௧௦)

(உஎஅ) கரணமில்லாமையானும் தோஷமில்லை; அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது.

(சூத்திரத்தில்) அகரணம் என்பது கிரியையின்மையின் மேற்று. பிராணன் ஆன்மாவுக்கு உபகாரமாகிய எத்தொழிலையும் செய்யாமைபற்றித் தோஷமில்லை. தேகேந்திரியங்கள் சிதிலமாகாமைக்குக் காரணம் வாயு என்று சுருதியே கூறுகின்றது; பிராணசம்வாதத்திலே,

யஸ்மிந்நுத்க்ராந்த இதம் ஶரீரம் பாபிஷ்டதரமிவ த்ருஶ்யதே ஸ வ:

ஶ்ரேஷ்ட: (சாந். ஓ. க. எ)

"எந்தப் பிராணன் உற்கிரமணஞ் செ[illegible]கால் இந்தச் சரீரமானது அதிபாவமுடைத்தாகத் தோற்றுகின்றதோ, அந்தப் பிராணன் உங்களுள்ளே சிரேட்டம்" என்று பிரஜாபதி கூறிய பின்னர், வாக்கு முதலியன ஒவ்வொன்றும் உற்கிரமணஞ் செய்தவிடத்தும் தேகத்துக்கும் இந்திரியங்களுக்கும் சிதிலமில்லாமையைக் காட்டி, பிராணன் உற்கிரமணமாகும்போதே அச்சரீரத்துக்கும் இந்திரியத்துக்கும் சிதிலம் கூறப்படலான். (௧0)

பஞ்சவ்ருத்தி ர்மநோவத் வ்யபதிச்யதே (உ. ச. கக)

(உஎக) அது மனம் போலப் பஞ்சவிருத்தியையுடையதாகக் கூறப்படுகின்றது.

தொழில்வேறுபாடுபற்றி மனமொன்றே காமமுதலியவற்றாற் கூறபடுவது போல, பிராணன் ஒன்றே ஐவகைத் தொழில் வேறுபாடுபற்றிப் பிராணாதி பெயரைப் பெறுகின்றது. ஆகலின், பிராணன் ஒன்றுதானே வாயுவுக்கும் இந்திரியவிருத்திக்கும் வேறாகி ஆன்மோபகாரமாயுள்ளதெனச் சித்தித்தது. (கக)

(௫) பிராணாணுத்துவாதிகரணம்.

அணுச்ச (உ. ச. கஉ)

(உஅ0) அணுவு (மாகலின்).

பஞ்ச விருத்தியையுடைய இந்தப் பிராணன் இந்திரியங்கள் போல அணுவா? வியாபகமுடையதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது அணுவன்று.

ஸம: ப்லுஷிணா ஸமோ மசகேந ஸமோ நாகேந ஸம ஏபிஸ் த்ரிபிர்லோகை: ஸமோऽநேந ஸர்வேண (பிரு. ௫. ௫. உஉ)

ப்ராணே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் (பிர. உ. ௬)

ஸர்வம் ஹீதம் ப்ராணேநாவ்ருதம்।

"அது புழுவுக்குச் சமம், கொசுவுக்குச் சமம், யானைக்குச் சமம், மூவுலகத்துக்கும் சமம், அது அண்டமனைத்துக்கும் சமம், பிராணனில் அனைத்தும் இருத்தப்பட்டன; ஈதெல்லாம் பிராணனால் ஆவரிக்கப்பட்டன" என்னுஞ் சுருதியினாற் பிராணன் சர்வாதாரமாய்ச் சர்வவியாபகமாயிருக்கின்றதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராணவாயு அணுவே;

ப்ராணா நுத்க்ராமந்தம் (பிரு. ௬. ச. உ)

"பிராணன் புறப்படுகின்றது" [illegible] அதின் கதி கேட்கப்படலான். ஆதி தெய்விக இரணியகருப்பனுடைய சமட்டிரூபப் பிராணன் வியாபகமாயினும் வியஷ்டிரூபப் பிராணன் அங்ஙனமின்று; இது விரோதமில்லை. ஆகலின், பஞ்சவிருத்தியையுடைய பிராணன் அணுவாம். (கஉ)

(கா) ஜ்யோதிராத்யதிஷ்டாநாதிகரணம்.

ஜ்யோதிராத்யதிஷ்டாநம் து தத³ந்நாத் ப்ராணவதாஶப்³தாத்॥ (உ. ச. கங)

(உ௲ங) ஆன்மாவோடு சோதி முதலியவற்றுக்குக் (கண் முதலியவற்றில்) அதிட்டானம் உண்டு, (சிவபெருமான்) சங்கற்பத்தினுல்; அங்ஙனமே சுருதி கூறுகின்றமையான்.

சண்டு,

ஆதி³த்யஶ்சக்ஷுர்பூ⁴த்வா அக்ஷிணீ ப்ராவிஶத் (ஐத. உ. ச)

"ஆதித்தியன் கண்ணுகிக் கண்களைப் பிரவேசித்தான்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் கண்முதலியவற்றுக்கு ஆதித்தியன் முதலியன அதிஷ்டானம் எனக் கேட்கப்படுகின்றது.

ஸ ஏவைஷ ஏதாந் ப்ராணாந் க்³ருஹீத்வா ஸ்வே ஶரீரே யதா² காமம் பரிவர்த்ததே (பிரு. ச. க. கஅ)

"இவ்வாறே இந்த ஆன்மா இந்தப் பிராணன்களைக் கிரகித்துக்கொண்டு தன் சரீரத்திலே இஷ்டமாக அலைந்து திரிகின்றது" என்னுஞ் சுருதியினுல் ஆன்மாவும் ரூபமுதலியவற்றைக் கிரகிக்கும்பொருட்டு அவைகளை அதிஷ்டிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆன்மாவோடு கூட ஆதித்தியன் முதலியன இந்திரியங்களை அதிஷ்டிப்பது சிவபெருமான் வசத்ததாயோ? சுவதந்திரமாகவோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஆதி³த்யஶ்சக்ஷுர்பூ⁴த்வா அக்ஷிணீ ப்ராவிஶத் (ஐத. உ. ச)

"ஆதித்தியன் கண்ணுகிக் கண்களைப் பிரவேசித்தான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சுவாதந்திரியம் கேட்கப்படுதலின், ஆதித்தியாதி அதிஷ்டானம் பரமேசுவரர் வயத்ததன்றெனின்,

(சித்தாந்தம்) இந்திரியமுதலியவற்றிற்கு ஆதித்தியன் முதலியவற்றின் அதிஷ்டானம் சிவபெருமான் வயத்தது, எதனுல்?

ய ஸூர்யே திஷ்டந்யோ யமயதி (பிரு. ரு. எ. ௯)
ய ஆத்மநி திஷ்டந்யோ யமயதி (மத்தியந்தினசாகை)

"உள்ளேயிருந்து ஆதித்தியனை இயக்குகின்றனர்", "உள்ளேயிருந்து ஆன்மாவை இயக்குகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சிவபெருமான் சங்கற்பபூருவமாக எல்லாம் பிரவிருத்திக்கின்றன என்று கேட்கப்படலான். ஆகலின், இந்திரியங்களுக்கு மேலாகிய சூரியாதிகளுடையவும் ஆன்மாவுடையவும் அதிஷ்டானம் சிவபெருமான் வயத்ததே. (௧௩)

தஸ்ய ச நித்யத்வாத் (௨. ௪. ௧௪)

(௨-அ௨) அதுவும் நித்தியமாயிருத்தலின்.

அனைத்தையும் சிவபெருமான் இயக்குதல் நித்தியமே. இதனாலும் அவைகளின் அதிஷ்டானம் சிவபெருமான் சங்கற்ப வயத்ததே. (௧௪)

(எ) இந்திரியாதிகரணம்.

த இந்த்ரியாணி தத்வ்யபதேஶாதந்யத்ர ஶ்ரேஷ்டாத் (௨. ௪. ௧௫)

(௨-அ௩) சிரேஷ்டமாயதொன்றைத் தவிர்த்து மற்றவைகள் இந்திரியங்களே; அங்ஙனம் கூறப்படலான்.

ஈண்டு மேலே கூறப்பட்ட வாக்காதி இந்திரியங்கள் பிராணவிருத்திகளினின்று பின்னமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை முக்கியபிராணவிருத்திகளேயாம்.

த ஏதஸ்யைவ ஸர்வே ரூபமபவந் (பிரு. ௩. ரு. ௨௧)

"அவையெல்லாம் இதனுடைய ரூபமாயின" என்னும் சுருதியால் அனைத்தும் பிராணசொரூபம் என்று கூறப்படுகின்றமையானும், வாக்காதிகள் வாளாவிருத்தலாகிய மரணகாலத்து உயிர் போயது எனச் சாமானியமாக வியவகரிக்கப்படுதலினாலும், அதுகொண்டு இந்திரியங்கள் பிராணனுக்கு வேறன்றுமெனின்,

(சித்தாந்தம்) சொல்லுதும். முக்கியபிராணனினும் வேறுயுள்ளனவே இந்திரியங்கள். சிரேஷ்டப் பிராணனினும் வேறுயுள்ளன எந்தப் பிராணன்களோ அவை இந்திரியங்களாம்;

இந்த்ரியாணி தஶைகம் ச (பகவற்கீதை. ௧௩. ரு)

"இந்திரியங்கள் பத்தும் ஒன்றும்" என்றற்றொடக்கத்தவற்றிற் கண்முதலாயினவே இந்திரியங்கள் எனக் கூறப்படலான். (௧௫)

பேதச்ருதே வைலக்ஷண்யாச்ச (உ. ச. கசு).

(உஅச) பேதசுருதியுண்மையாலும் விலக்ஷணமுண்மையாலும்.

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மன: ஸர்வேந்த்ரியாணி ச|

(முண். உ. க. ந)

இதினின்று பிறக்கின்றன பிராணன், மனசு, எல்லா இந்திரியங்களும்'' என்னுஞ் சுருதி பிராணோற்பத்தியையும் இந்திரியோற்பத்தியையும் தனித் தனி வேறாகக் கூறுகின்றது. இந்திரியமுதலிய ஓய்ந்திருந்தவிடத்தும், பிராண விருத்தி ஓயாதுளதாகிய விலக்ஷணமும் காணப்படுகின்றது. அதனாலும் பிராணவிருத்தியினின்று இந்திரியங்கள் வேறு. (கசு)

(அ) சம்ஞாமூர்த்திக்லுப்த்யதிகரணம்.

ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்திஸ்து த்ரிவ்ருத்குர்வத உபதேசாத்|

(உ. ச. கஎ)

(உஅரு) நாமரூபங்களின் சிருட்டியானது மூவிதமாகச் செய்யும் அவர்க்கே உரித்து; அங்ஙனம் உபதேசிக்கப்படலான்.

மேலே தத்தம் அதிதேவதைகளாகிய சதாசிவர் முதலாயினரோடு ஆகாசாதி பூதங்கள் சிவபெருமானிடத்தினின்று உதித்தன என்று கூறப் பட்டது. அவைகள் இங்ஙனம் பிறந்தபோது தேவர்களுடைய நாமரூப முதலியவற்றின் சிருட்டிமுதற்காரணமாகிய அவரிடத்திருந்து பிறந்ததா? இன்றேல் மற்றொன்றினின்று பிறந்ததா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

தத்தேஜ ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய (சாந். சு. உ. ந)

"அந்த ஒளி நான் அநேகமாகப் பிறப்பேன் என்று சங்கற்பித்தது''

தத³போ (அ)ஸ்ருஜத (சாந். சு. உ. ந)

"அது ஜலத்தைச் சிருட்டித்தது'' என்னும் சுருதிப் பிரகாரம் தேஜோபி மானியாகிய உருத்திரர் சலத்தைச் சிருட்டித்து, அதிலே (தமது) வீரியத்தை விடுகின்றனர். இதிலிருந்து சத்துவகுணத்தினராகிய விஷ்ணு உதிக்கின்றனர்.

ஆபோ நாரா நரோ ருத்ர:|

"அப்புக்கள் நாரம்;'' "நரர் உருத்திரர்'' எனச் சுருதி கூறுதலின், உருத் திரரினின்று உதித்த அப்புதத்துவத்தைப் பிறப்பிடமாகக்கொண்டமையான் விஷ்ணு நாராயணர் எனப்படுவர்.

தா ஆப ஐக்ஷந்த | தா அந்நமஸ்ருஜந்த (சாந். ௬. ௨. ௪)

"அந்த அப்புக்கள் சங்கற்பித்தன; அவை அன்னத்தை ஆக்கின" என்று சுருதி கூறுமாறு, அதற்கு அபிமானியாகிய நாராயணர் அன்னம் என்னும் பிருதிவியை உண்டாக்குகின்றனர். பிருதிவிதத்துவரூப அண்டத்திலிருந்து இரணியகருப்பர் எழுகின்றார். அவ்வாறே,

> அண்டம் ஹிரண்மயம் திவ்யம் ஸமுத்ரே ருத்ரஸ்ய வீர்யத: |
> ப்ரதமம் ஸம்பபூவ தத்ர ப்ரஹ்மவத் விஷ்ணுர் ஜாதோ ஜாதவேதா: ||

"உருத்திரர் வீரியத்தினின்று சுவர்ணமயமான அண்டமானது சமுத்திர மத்தியில் முதற்கண் உண்டாயிற்று; அதில் முதற்கண் விஷ்ணுவானவர் பிரமாவைப் போல ஞானத்தோடு பிறந்தனர்" எனவும்,

> அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத் |
> தத³ண்டமபவத்³தைமம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம் |
> தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா ஸர்வலோகபிதாமஹ: |
> ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: |
> அயநம் தஸ்ய தா யஸ்மாத் தேந நாராயண: ஸ்ம்ருத: |
> நாராயண: பரோ(அ)வ்யக்தாத³ண்டமவ்யக்தஸம்பவம் |
> அண்டஸ்யாந்தஸ்த்விமே லோகா: ஸப்தத்³வீபா ச மேதிநீ ||
>
> (மனுஸ்மிருதி. க. அ—கக)

"அவர் (ருத்திரர்) முதற்கண்ணே அப்புவைச் சிருட்டித்து அதிற்றமது வீரியத்தை உகுத்தார்; அந்த வீரியம் ஆயிரம் ஆதித்தியருக்கு ஒப்பாய சுவர்ண அண்டமாயிற்று. அந்த முட்டையிலே சர்வலோகபிதாமகராகிய பிரமர் தாமே பிறந்தார். அப்புக்கள் நர (உருத்திர) ரிடத்தினின்று உதித்தமையால், நாரம் எனப்படும். அது பிறப்பிடமாதலினால் அவர் நாராயணர் எனப்படுகின்றார். அவ்வியக்தத்துக்கு மேலானவர் நாராயணர்; அந்த அவ்வியக்தத்தினின்று அண்டத்தின் உற்பத்தி; இவ்வுலகங்களும் சப்ததீவுகளோடு கூடிய பூமியும் அண்டத்துக்குள்ளேயாம்" எனவும் மனுஸ்மிருதி கூறுகின்றது;

> பரமேஶஸ்ய தேவஸ்ய பூர்வமேவோத்திதா: ப்ரஜாயதே |
> தேந ஸ்ருஷ்டா புரைவாப்ஸு வீர்யம் பூர்வோத்ஸ்ருஷ்டமாபிரா |
> தத³ண்டமபவத்³வீர்யம் ஸஹஸ்ரகிரணப்ரபம் |
> விஷ்ணு: ஸ்ருஷ்டோ விதாதா ச ஸ்ருஷ்டா: ஸகலதேவமாநவா: |
> பூர்வம் நாராயணாவ்யக்தோ நியோகாத் ஸ்ருஷ்டவாந் தேவா: |

[illegible] नारायणं प्रति।
सूक्ष्मस्त्वेषां रसो ज्ञेयो रसो नारः प्रकीर्तितः।
नरजातत्वतो ब्रह्मा [illegible]।
नारसंस्थायनं प्रोक्तं ततो नारायणः स्मृतः।
ब्रह्मापि नराणां [illegible] समाविशत्॥

" உருத்திரர் எனப்படும் தேவருடைய ரூபத்தில் மூர்த்தி உளதாகின்றது ; பரமூர்த்தி அபிமானியாகிய அவரால் வீரியம் நீரிலே விடப்பட்டது ; அவ்வீரியம் ஆயிரஞ் சூரியரொளியை நிகர்த்த அண்டமாயிற்று ; நேரே என் சத்தியின் வைபவத்தினால் விஷ்ணு அதனுள்ளே பிரவேசித்தார் ; பின்னர் என் ஆஞ்ஞையினாலே அவர் நாராயணர் என்னும் பெயர் படைத்தார் ; இங்கே நாராயணரைப்பற்றிய சுலோகத்தை உதகரிக்கின்றார் ; அப்புக்கள் சூக்கும இரசங்களாம் ; இரசம் நாரம் எனப்படும் ; இதிலிருந்து பிரமா பிறந்தார் ; நரன் நேரே சிவன் எனப்பட்டார் ; நாரம் இவருக்கு இடமாகக் கூறப்பட்டமையின் நாராயணர் எனப்பட்டார் ; மனிதருட் சிரேட்டரே ! பிரமாவும் கந்த சரீரத்திற் பிரவேசித்தனர் " என்று புராணமுங் கூறுகின்றது. இவ்வாறே,

वेदेन नामरूपे व्याकरोत् सतासती प्रजापतिः।

(தைத். பிராம். உ. சு. உ. அ)

" வேதத்தினாலே பிரஜாபதியானவர் சத்தும் அசத்துமாகிய நாமரூபங்களைப் பிறப்பித்தார் " என்னும் சுருதிக்கிசைய அண்டத்துள்ளேயுள்ள இரண்ணிய கருப்பரேனும்,

अद्भ्यः संभूतः पृथिव्यै रसाच्च (தைத். ஆரணி. ௩. கந. ச0)

" அப்புவிலிருந்தும் பிருதிவியின் இரசத்திலிருந்தும் (அண்டம்) பிறந்தது " என்னும் சுருதிக்கியைய நாராயணரேனும் அண்டத்துள்ளே இருக்கும் தேவர் முதலாயினோருடைய நாமரூபங்களுக்குக் கர்த்தாவாதல் அருகமாகின்றது. பிரமாண்டத்துக்கப்புறத்துள்ள சிவபெருமான் (சிருட்டி கர்த்தா) ஆகார் எனின்,

(சித்தாந்தம்) மேலே கூறிய சிருட்டிக்கிரமம் யுக்தம் அன்று ; பின்னையோ,

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् तदैक्षत
बहु स्यां प्रजायेयेति तत्तेजोऽसृजत (சாங். சு. உ. க, உ)

" சௌமிய, சத்தாம் அது முதற்கண் இருந்தது ; ஒன்று தானே இரண்டாவதற்றதாய் இருந்தது ; அது நான் அனேகமாவேன் எனச் சங்கற்பித்தது ; அது ஒளியைச் சிருட்டித்தது " என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே சத்தென்

பது பஞ்சபூதகாரணமாகிய பிரமமே. இதனால் முதற்கட் சிருட்டிக்கப்பட்டது தேயு எனல் நிரசிக்கப்பட்டது.

தடைக்ஷத।
தத்தேஜ ஐக்ஷத (சாந். சு. உ. ௩)
தா ஆப ஐக்ஷந்த (சாந். சு. உ. ச)

"அது சங்கற்பித்தது; அவ்வொளி சங்கற்பித்தது; அவ்வப்பு சங்கற்பித்தது" என்னும் சுருதியினால் ஆகாயமுதற் பிருதிவியீறாகச் சதாசிவர்முதலிய பெயருடைய பிரமமானது முன் முன் உள்ளவற்றுக்குக் காரணமாய்ப் பின்பின்னுள்ளவற்றைப் பிறப்பிக்கின்றதெனப் பெறப்படுகின்றது.

ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணீதி। தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாம் கரவாணி (சாந். சு. ௩. க, உ)

"நான் இந்தச் சீவான்மாவோடு இம்மூன்று தேவதைகளைப் பிரவேசித்து நாமரூபத்தை வகுப்பேன்; அவைகளில் ஒவ்வொன்றையும் மும்மூன்றாக்குவேன்" என்னும் சுருதியினால் தேவதைகள் மும்மூன்றுக்கும் சிவபெருமான் தாமே வாயுமுதலிய ரூபமெடுத்துத் தேயு, அப்பு, பூமி என்னும் முப்பூதங்களையும் பிரமா விஷ்ணு உருத்திரரூப சீவான்மாக்கள் வாயிலாகப் பிரவேசித்து நாமரூபத்தைச் சிருட்டித்தனர் என்று புலப்படுகின்றது. ஆகலின், பூதங்களை முப்பகுப்பாக்கி நான்முகப் பிரமாமுதலாயினோராகி நாமரூபமனைத்தையுஞ் சிருட்டிக்கின்றனர் எனக் கூறுவது யுக்தம். பூதங்களைமுத்திறப்படுத்தல் கேவலம் நான்முகப்பிரமாவுக்கு இயையாது. தேயு அப்பு பிருதிவி என முத்திறப்பட்ட பூதங்களிலிருந்து அண்டம் பிறக்கின்றதன்றோ. இதன்பின்,

அண்டம் ஹிரண்மயம் மத்யே ஸமுத்ரம் ருத்ரஸ்ய வீர்யத:।
ப்ரஹ்மா ஸம்பபூவ தத்ர ப்ரஹ்மா விஷ்ணுர் ஜ்ஞாநதோ ஜாத வேதா:॥

"சமுத்திரமத்தியிற் சுவர்ண அண்டமானது உருத்திரர் வீரியத்தினின்று பிறந்தது; அங்கே விஷ்ணுவானவர் ஞானத்தோடு பிரமாவாகப்பிறந்தார்" என்னுஞ் சுருதியிற் கண்டவாறு நான்முகனார் சிருட்டி பின்னுளதாயிற்று.

(ஆக்ஷேபம்) நான்முகப்பிரமாவுக்குப் பூதங்களை முத்திறப்படுத்துவது கூடும்.

யதா நு கலு ஸோம்யேமாஸ்திஸ்ரோ தேவதா: புருஷம் ப்ராப்ய த்ரிவ்ருத்த்ரிவ்ருதேகைகா பவதி தந்மே விஜாநீஹி (சாந். சு. ச. எ)

"சௌமிய! இந்த மூன்று தேவதைகள் (பூதங்கள்) புருஷனை அடைந்து ஒவ்வொன்றும் எங்ஙனம் மும்மூன்றாயின என்னிடத்து அறிகுதி"

அன்னமஶிதம் த்ரேதா விதீயதே। தஸ்ய ய: ஸ்தவிஷ்டோ தாதுஸ்தத் புரீஷம் பவதி। யோ மத்யமஸ்தந்மாம்ஸம்। யோऽணிஷ்டஸ்தந்மன:।
(சாந். சு. ரு. க)

"உண்ட அன்னம் மூன்றாகப் பகுக்கப்படுகின்றது; தூலமாயது மலமாயும், நடுக்கண்ணது மாமிசமாயும், நட்பமாயது மனசாகவும் ஆகின்றது" என்றற்றொடக்கத்த சுருதியினால், அண்டசிருட்டிக்குப் பின்னர் நான்முகப் பிரமனாற் சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்களுள்ளே முத்திறப்படுத்தும் வகை கூறப்படுகின்றதே எனின், (கஎ)

(உத்தரம்) சூத்திரகாரர் பின்வருமாறு அதனை ஆசங்கித்து மறுக்கின்றனர்.

மாம்ஸாதி பௌமம் யதாஶப்தமிதரயோஶ்ச (உ. ச. கஅ)

(உஅசு) மாமிச முதலியன பிருதிவி சம்பந்தம்; சுருதியே மற்றிரண்டுக்குமாம்.

அன்னமஶிதம் த்ரேதா விதீயதே (சாந். சு. ரு. க)

"உண்ணப்பட்ட அன்னம் மூன்றாக விதிக்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்த வாக்கியத்தில் அண்டத்திற் புருஷரால் உண்ணப்படும் அன்னாதிகளின் பரிணாமமே கூறப்படுகின்றதன்றி, முத்திறப்படுத்துகை கூறப்படவில்லை. இன்றேல் மலத்திலும் நுண்ணியவாய மாமிசமும் மனசும் அப்புவினாலும் தேயுவினாலுமே தனித்தனி ஆக்கப்பட்டனவாகும். அங்ஙனமாகுங்கால்,

அன்னமஶிதம் த்ரேதா (சாந். சு. ரு. க)

"புசித்த அன்னம் மூவகைப்படுகின்றது" என்னும் பூமியின் முத்திறப்படுகையின் தொடக்கமும்,

அன்னமயம் ஹி ஸோம்ய மன: (சாந். சு. ரு. ச)

"சௌமிய! மனம் அன்னமயமன்றோ" என்றதிலே மனசுக்குச் சாற்றும் பூமி விகாரத்துவமும் விரோதமுறும். அவ்வாறே அப்பு தேயு என்னும் மற்றிரண்டின் முப்பகுப்பும் முரணும். ஆகலின், சூத்திரகாரர்

மாம்ஸாதி பௌமம் யதாஶப்தமிதரயோஶ்ச।

"மாமிசமுதலியன பிருதிவி சம்பந்தம்; மற்றிரண்டும் சுருதி கூறியவாறு அவ்வாறேயாம்" என்றார். மலம் போல மாமிசமும் மனசும் பிருதிவி சம்பந்தம். அங்ஙனம் மூத்திரம் போல இரத்தமும் பிராணனும் அப்பு சம்பந்தம். அங்ஙனம் என்புபோல மச்சையும் வாக்கும் தேயு சம்பந்தம்.

(ஆக்ஷேபம்) முன்னரே பூதங்கள் முத்திறப்படுத்தப்பட்டிருக்கு மேல் ஒவ்வொரு வஸ்துவும்மூவகைப் பூதங்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். (௧அ)

பிருதிவி, அப்பு, தேயு என்பன எங்ஙனமாம் எனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வைஶேஷ்யாத்து தத்வாதஸ்தத்வாதஃ (உ. ௪. ௧௧)

(உஅஎ) விசேஷமுண்மையால் அவை அவ்வாறு கூறப்பட்டன, கூறப்பட்டன.

அன்னாதி மிகுத்துண்மையாம் விசேஷத்தினால் அன்ன முதலியவற்றின் பேச்சு உளதாகின்றது. ஆகலின், முத்திறப்படுத்தும் சிவபெருமான் தான் முகப்பிரமாவாகிச் சமஸ்த நாமரூபங்களைச் சிருட்டித்தனர் என்பது யுக்தம். (௧௧)

மூன்றும் அத்தியாயத்து

முதலாம் பாதம்.

(க) ததந்தரப்ரதிபத்தியதிகரணம்.

தத³ந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரஶ்நநிரூப ணாப்⁴யாம் (ங. க. க)

(உ-அ) பிரசிநோத்தரங்களாற் (பெறப்படுமாறு) ஆன்மா மற்றோர் சரீரமெடுக்குங்காற் சூக்கும பூதங்களைத் தழுவி ஓடுகின்றது.

முதலாம் அத்தியாயத்தினுற் சித்தித்த உலகமுதற்காரணம் பிரமம் என (உபநிடதங்களால்) ஒரே கருத்தாகக் கூறப்பட்டமைக்கு விரோதமாக எழுந்த ஆக்ஷேபங்களுக்குப் பரிகாரம் கடந்த அத்தியாயத்திற் கூறப்பட்டது.

எங்ஙனமெனின், பிரதமபாதத்திற் சாங்கியாதி தர்க்கவிரோதம் பரிகரிக்கப்பட்டது.

இரண்டாம் பாதத்திலே பிரதானகாரணவாத முதலியவற்றுள்ளே தர்க்கவிரோதம் காட்டப்பட்டது.

மூன்றும் பாதத்திலே பூதசிருட்டியின் அவாந்தரவிரோதத்தைப் பரிகரித்துக்கொண்டு, ஆன்மா நித்தியத்துவாதி குணங்களையுடையதாக நிரூபிக்கப்பட்டது.

நான்காம் பாதத்திலே பிராணன் இந்திரியம் என்பவற்றின் சொரூபத்தையும், பிரமத்தைக்கொண்டே அவைகளுக்கு உற்பத்தி உளதாம் என்பதையுங் கூறி, மற்றெல்லாவற்றின் நாமரூபங்களின் பகுப்பு நிரூபிக்கப்பட்டது.

ஈண்டு மூன்றும் அத்தியாயத்து முதற் பாதத்திலே நித்தியத்துவ முதலாயவற்றோடு கூடிய ஆன்மா போக்குவரவு செய்தல் நிரூபிக்கப்படுகின்றது.

இரண்டாம் பாதத்தில் அதின் அவஸ்தாநிரூபணபூருவமாகச் சிவபெருமானது சொரூபலக்ஷணம் கூறப்படுகின்றது.

மூன்றும் பாதத்திலே (வேதத்திற் பலவிடங்களினும் கூறப்பட்ட) பல்வகைச் சிவ உபாசனையின் குணோபசங்காரம் கூறப்படுகின்றது.

நான்காம் பாதத்திலே ஆச்சிரமாதிகளின் தருமம் கூறப்படுகின்றது.

இப்போது முதலாம் அதிகரணத்திலே ஆன்மா மற்ருேர் உலகத்துக்குப் போக்குவரவு செய்யுங்கால், அது மற்ருேர் சரீரத்தை எடுத்தற்குச் சூக்கும பூதங்களுடன் கூடிப்போகின்றதா? இன்றேற் கூடாது போகின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா தேகத்தைவிட்டுப் புறப்படுங்காற் சூக்குமபூதங்களாய் எய்தப்போகும் சரீரபீஜங்களைக்கொண்டு போகாது, (அவற்றை) விடுத்தே போகின்றது; பூதங்கள் சுலபமாய் யாண்டும் பெறப்படுவன வாதலானும், ஆயாசம் விருதாவாய் முடிதலினுலுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா மற்ருேர் தேகம் எடுக்கும்பொருட்டுச் சூக்குமபூதங்களைக் கொண்டு செல்கின்றதென்பது பஞ்சாக்கினி வித்தையிற் போந்த வினுவிடைகளாற் பெறப்படுகின்றது.

வெத்த யதா பஞ்சம்யாமாஹுதாவாப꞉ புருஷவசஸோ பவந்தி।
(சாந். ரு. ௩. ௩)

"ஐந்தாவது ஆகுதியில் அப்புக்கள் புருஷன் என்று கூறப்படுதலை அறிவையோ" என்பது வினு.

இதி து பஞ்சம்யாமாஹுதாவாப꞉ புருஷவசஸோ பவந்தி।
(சாந். ரு. க. க)

"ஐந்தாவது ஆகுதியில் ஆகுதி செய்யப்பட்ட அப்புக்கள் புருஷன் என்னும் மொழியையுடையவாகின்றன" என்பது விடை.

இதன் பொருள் பின்வருமாறு சுருக்கிக் கூறப்படுகின்றது. பிராம்மணுதி சரீரத்துள்ள ஆன்மா ஆகுதி முதலிய பிற கருமங்களையும் புரிந்து அக்கருமபயன்களைத் துய்க்கும்பொருட்டு, இச்சரீரத்தை விடுத்துப் போகுங்கால், இச்சரீரத்துள்ள மற்றைப் பூதங்களோடியைந்த சூக்குமபூத அப்பினேடு கூடி அக்கினியாகக் குறிக்கப்பட்ட * தியு (சுவர்க்க) லோகத்தை அடைந்து, அந்த அமிர்தமயமாகிய தேகாகாரமாய்ப் பரிணமித்த அப்புக்களோடு சேரப்பெற்றுத் தேவர்களுக்கு உபயோகமாகி, அவர்களோடு தானே அங்கே விசேஷ போகங்களை அனுபவித்து, பிராம்மணுதி சரீரத்தைக் கொடுக்கும் எஞ்சிய கன்மத்தோடு அவ்வான்மா கன்மங்கள் செய்யும் பொருட்டு இவ்வுலகத்துக்கு வந்து அந்த அப்புக்களோடு கூடியே அக்கினியாகக் குறிக்கப்பட்ட மேகத்தை அடைகின்ருன்; பின்னர் மழைத்துளி

* இந்தப் பஞ்சாக்கினிவித்தை சிவஞானபோதத்து உ-ஆஞ் சூத்திரத்து ௩-ஆம் அதிகரணத்து முதலாம் வெண்பாவுரையிற் குறிக்கப்பட்டும், "துறக்கம் மேகமண்டலம் நிலம் தந்தை தாய் என்னும் இவ்வைந்திடம் அங்கியாகவும், அவ்வவ்விடங்களினெய்திய ஆன்மா ஆகுதியாகவும் வைத்துத் தியானித்தல்" என்று திராவிடமாபாடியத்தில் வரையப்பட்டுமிருக்கின்றது.

களோடு அக்கினியாகக் குறிக்கப்பட்ட பூமிக்கு வருகின்றான். அங்கிருந்து நென்முதலிய தானியங்களோடு உணவுவடிவாகி அக்கினியாகக் குறிக்கப்பட்ட புருஷசரீரத்தை அடைந்து, இந்திரியமயமாகிய அந்த அப்புக்களோடு கூடி மற்றோர் அக்கினியாகக் குறிக்கப்படும் பெண்ணை அடைகின்றான். புருஷசரீரம் என்று கூறற்கியன்ற சரீரமாகமாறிய அப்புக்களோடு சேர்ந்து, கன்மத்துக்கியையப் பிராம்மணாதி சரீரமாகப்பிறக்கின்றான். இஃதெல்லாம் பின்னர் நன்கு விளக்கப்படும். ஆகலின், ஆன்மா மற்றோர் சரீரத்தை எடுக்க வேண்டுமாயின் அது சூக்குமதேகத்தோடு கூடியே போகின்றது. (க)

த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத் (ங. க. உ)

(உஅகூ) ஆயின், முத்திறப்படுத்தும் இயற்கையும், மிகுதிப்பாடு உண்மையான்.

ஒவ்வொன்றும் முத்திறப்படுதலின், ஒவ்வொன்றும் முத்திறவியல்பினவாம். எஞ்சிய பூதங்களோடு சேர்ந்த அப்புக்களே மிகுதியாதல்பற்றி அங்ஙனம் குறிக்கப்பட்டன. ஐந்தாம் ஆகுதியில் அப்புக்கள் என்றவிடத்துக் கேவலம் அப்புசப்தம் கூறப்படுகின்றமையானும் விரோதம் இல்லை.(உ)

ப்ராணகதேச்ச (ங. க. ங)

(உகூ0) பிராணன் புறப்படுதலினாலும்.

ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி।
(பிரு. சு. ச. உ)

"பிராணன் புறப்படும்போது அதனோடு கூட எல்லாப் பிராணன்களும் புறப்படுகின்றன" என்பதினால் ஆன்மாவோடு இந்திரியங்கள் புறப்படுதலால் இந்திரியங்களுக்குப் பற்றுக்கோடாயுள்ள சரீரகமனமும் அறியப்படுகின்றது. (ங)

ஆகலின், ஆன்மா புறப்படும்போது சூக்குமபூதத்தோடு சேர்ந்துகொண்டே போகின்றதென்பதைச் சூத்திரகாரர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

அக்ந்யாதிஷு கதி ச்ருதேரிதி சேந்ந பாக்தத்வாத் (ங. க. ச)

(உகூக) அக்கினி முதலியவற்றை அடைகின்றவெனச் சுருதி கூறுகின்றதெனின், அன்று; அது கவுணமாதலின்.

(ஆக்ஷேபம்)

யத்ராஸ்ய புருஷஸ்ய ம்ருதஸ்யாக்நிம் வாகப்யேதி வாதம் ப்ராணச்சக்ஷுராதித்யம் (பிரு. ு. உ. கங)

"எங்கே இந்த இறந்த மனுஷனுடைய வாக்கு அக்கினியையும், பிராணன் வாயுவையும், கண் சூரியனையும் அடைகின்றனவோ" என்றற்றொடக்கத்த சுருதிகளில், இந்திரியங்கள் அக்கினிமுதலியவற்றை அடைதலாகக் கேட்கப்படுகின்றது. ஆகலின், ஆன்மாவோடு கூட இந்திரியங்கள் செல்லவில்லையே எனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று; வாக்காதி சப்தங்கள் வாக்காதி அபிமான தேவதைகளிற் கவுணமாயினமையானும்,

ஓஷதீர்லோமாநி வநஸ்பதீந்கேசா: (பிரு. ங. உ. கங)

"ரோமங்கள் செடிகளையும், கேசங்கள் மரங்களையும் அடைகின்றன" என்று (அங்ஙனஞ்) செல்லாத ரோம முதலியவற்றோடு கூடப்படிக்கப் படுகின்றமையானுமாம். (ச)

ப்ரதமே 'ஶ்ரவணாதிதி சேந்ந தா ஏவ ஹ்யுபபத்தே:। (ங. க. ரு)

(உகூஉ) முதற்கண் கூறப்படாமையான் எனின், அங்ஙனம் அன்று; பொருத்தமுறுதலான் அவைகளே.

(ஆக்ஷேபம்) முதற்கண்ணே சுவர்க்கலோகாக்கினியையுற்றுப் பேசுங்கால் அப்புக்கள் கேட்கப்படாமையின், அப்புக்கள் புறப்படவில்லை;

தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவா: ஶ்ரத்தாம் ஜுஹ்வதி (சாந். ரு. ச. உ)

"இந்த அக்கினியில் தேவர்கள் சிரத்தையை ஆகுதிசெய்கின்றனர்" எனச் சிரத்தையே கேட்கப்படலான் எனின்,

(உத்தரம்) அன்று. அப்புக்களே சிரத்தை என்னும் சப்தத்தினாற் கூறப்படுகின்றன. எங்ஙனம்? சிரத்தையை அப்புக்கள் என்று சொல்வதே பிற்றொடர்ச்சிக்கு இணக்கமுறுதலின்.

ஶ்ரத்தா வா ஆப: (தைத். பிராம். ங. உ. ச. உ)

"சிரத்தையே அப்புக்கள்" என்று சுருதி சொல்வதாற் சிரத்தை என்னும் பதம் அப்புக்களுக்குப் பிரயோகிக்கப்படுகின்றது. (ரு)

சூத்திரகாரர் பின்னரும் ஆக்ஷேபித்து உத்தரம் இறுக்கின்றனர்.

அஶ்ருதத்வாதிதி சேந்நேஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே: (ங. க. சு)

(உகூங) கூறப்படாமைபற்றி (அது) அன்றாம் எனின், அன்று; யஞ்ஞாதி செய்பவர் அறியப்படுதலின்.

(ஆக்ஷேபம்) ஐந்து விநவிடைகளில் அப்புக்கள்மாத்திரம் கூறப்படுகின்றன. அவற்றாற்றழுவப்பட்ட ஆன்மா குறிக்கப்படவில்லையே எனின்,

௧ (உத்தரம்) அவ்வண்ணம் அன்று;

அத ய இமே க்ராம இஷ்டாபூர்தே தத்தமித்யுபாஸதே தே தூமமபிஸம்பவந்தி தூமாத்ராத்ரிꣳ ராத்ரேரபரபக்ஷமபரபக்ஷாத்யாந்ஷட்தக்ஷிணைதி மாஸாꣳஸ்தாந்நைதே ஸம்வத்ஸரமபிப்ராப்நுவந்தி। மாஸேப்ய: பித்ருலோகம் பித்ருலோகாதாகாஶமாகாஶாச்சந்த்ரமஸமேஷ ஸோமோ ராஜா தத்தேவாநாமந்நம் தம் தேவா பக்ஷயந்தி। தஸ்மிந் யாவத்ஸம்பாதமுஷித்வாதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே யதேதமாகாஶமாகாஶாத்வாயும் வாயுர்பூத்வா தூமோ பவதி தூமோ பூத்வாப்ரம் பவதி। அப்ரம் பூத்வா மேகோ பவதி மேகோ பூத்வா ப்ரவர்ஷதி த இஹ வ்ரீஹியவா ஓஷதிவநஸ்பதயஸ்திலமாஷா இதி ஜாயந்தே஽தோ வை கலு துர்நிஷ்ப்ரபதரம் யோ யோ ஹ்யந்நமத்தி யோ ரேத: ஸிஞ்சதி தத்பூய ஏவ பவதி।

(சாந். ௫. ௧௦. ௩, ௪, ௫, ௬)

"யஞ்ஞமும் பிற தருமங்களும் செய்துகொண்டு கிராமத்திலே வசிக்கின்றவர்கள் தூமத்துக்குச் செல்வார்கள் ; தூமத்திலிருந்து இரவுக்கும், இரவிலிருந்து அபரபக்ஷத்துக்கும், அபரபக்ஷத்திலிருந்து தக்ஷிணாயனத்துக்குஞ் செல்வர் : ஆனால் அவர் வர்ஷத்தை அடைவதில்லை ; தக்ஷிணாயனத்திலிருந்து பிதிர்லோகத்துக்கும், பிதிர்லோகத்திலிருந்து ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து சந்திரனுக்கும் போகின்றனர்; அவன்தான் சோமராஜன்; அங்கே தேவர்களுக்கு அவர்கள் (சீவான்மாக்கள்) அன்னமாக, அவர்களைத் தேவர்கள் அயில்கின்றனர் ; தமது கருமமெல்லாம் முடியும் வரையும் அங்கே இருந்து வந்தவழியே ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து வாயுவுக்குமாக மீள்கின்றனர் ; பின் யஞ்ஞகாரன் வாயுவாகி, தூமமாகி, பனியாகி, முகிலாகி, மழையாகின்றான் ; பின்னர்த் தானியமாயும், ஒஷதிகளாயும், மரங்களாயும், எள்ளாயும், பயறாயுமாகின்றான் ; இங்கிருந்து நீங்குதல் மிகு கஷ்டமுள்ளாகும். எதனால் எனின், எவன் அவ்வன்னத்தையுண்டு வீரியத்தை உகுக்கின்றானோ அவன் போலாகின்றான் (அந்தச் சீவான்மா)" என்னும் பிற சுருதி வாக்கியங்களிலே யஞ்ஞாதி செய்தவர் சோமராஜா என்று கூறப்பட்ட, அமிர்தமயமாய விசேஷ தேகத்தோடு சுவர்க்கத்திலே நல்வினைப் பயனைத் துய்த்து, அந்நல்வினை ஒழியுங்கால் மீண்டுவந்து கர்ப்பத்திலே வசிப்பர் என்று அறியப்படுகின்றமையான்,

தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவா: ஶ்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி (சாந். ௫. ௪. ௨)

" அந்த அக்கினியிலே தேவர்கள் சிரத்தையை ஆகுதிசெய்கின்றனர்; அந்த ஆகுதியிலிருந்து சோமராஜன் உதிக்கின்றான் " என்னும் வாக்கியத்தில் அந்த யஞ்ஞஞ் செய்பவர்களே சோமராஜனுகக் குறிக்கப்படலான். ஆகலின், வினவிடைகளினும் அப்புக்களாற் றழுவப்பட்டு அதனையே சரீரமாகக் கொண்ட " ஆன்மாவே அப்பெனக் கூறப்படுகின்றான் " என்று பெறப்படுகின்றது. அது பற்றி விரோதமில்லை. (௬)

஭ாக்தம் வா நாத்மவித்வாத்ததா² ஹி த³ர்ஶயதி (௩. ௧. ௭)

(உ௪௭) ஆன்மாவை அறியாமையின், அது கவுணமே; அங்ஙனம் சுருதி கூறுகின்றது.

(ஆக்ஷேபம்)

ஏஷ ஸோமோ ராஜா தத்³தே³வாநாமந்நம் தம் தே³வா ப⁴க்ஷயந்தி।

(சாந். ௫. ௧௦. ௪)

" இவன் சோமராஜன்; அவன் தேவர்களுக்கு * அன்னம்; இவனைத் தேவர்கள் † உண்கின்றனர் " என்று சுருதி கூறியவாறு, அவன் சோமராஜனுடைய வியல்பை அடைந்தபோது அவன் தேவர்களால் உண்ணப்படுவதாகக் கூறப்படுகின்றமையான், அந்த அப்பு (என்னும் மொழி) சீவான்மாவைக் குறிக்காதெனின்,

(உத்தரம்) அவன் உண்ணப்படுகின்றான் என்று கூறினமை கவுணமே. அவன் பரமான்மாவை அறியாமையாலே தேவர்களுக்கு அநுபவிக்கும் கருவியாகின்றான் என்பதே அபிப்பிராயம். அவ்வாறே,

யதா² பஶுரேவம் ஸ தே³வாநாம் (பிரு. ௩. ௪. ௧௦)

" பசுவிருப்பது போல அவன் தேவர்களுக்காகின்றான் " என்னுஞ் சுருதியானது பரமான்மாவை அறியாதவர்கள் பசுப்போலத் தேவர்களுக்கு உபகரணமாக நிற்கின்றனர் என்று காட்டுகின்றது. பரமான்மவித்துக்கள் சிவபெருமானுக்கு உபகரணமாகவும், அநான்மவித்துக்கள் தேவர்களுக்கு உபகரணமாகவும் ஆகின்றனர் என்றும் அறியற்பாற்று. ஆகலின், எப்பிரகாரத்தினுலேனும் ஆன்மா மற்றோர் சரீரம் எடுக்குங்காற் சூக்குமசரீரத்தோடே செல்கின்றான் என்பது சித்தித்தது. (௭)

---

* அன்னம் என்றது உபகரணமாய்ப் பிரியமாயுள்ளதின் மேற்று.

† உண்கின்றனர் என்றது தேவர்களுக்கு அவர்கள் பிரீதியாகின்றார் என்பதின் மேற்று.

(௨) கிருதாத்தியயாதிகரணம்.

𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌯𑌯𑍇𑌽𑌨𑍁𑌶𑌯𑌵𑌾𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍇𑌤𑌮𑌨𑍇𑌵𑌂 𑌚 (௩. ௧. ௮)

(௨௩௫) கருமம் முடிந்தகாலையில் ஆன்மா கன்மசேஷத்தோடு மீளுகின்றது; அங்ஙனம் அது போனபடியானும் வந்தபடியானும் எனச் சுருதி ஸ்மிருதி கூறுவதினால்.

ஆன்மா பூத சூக்கும தேகமுடையனாகவே சுவர்க்கலோக முதலிய உலகங்களிலே போய்த் தேவசரீரமடைந்து சுயகன்மத்துக்குத் தகுதியாய பலங்களைத் துய்க்கின்றான் என மேலைச் சூத்திரத்தில் நிரூபிக்கப்பட்டது.

இப்போது ஆன்மா அங்ஙனம் துய்த்த பின்னர் இவ்வுலகத்துக்கு வருங்கால், அவன் கன்மசேஷத்தோடு வருகின்றானா? இன்றேற் கன்மமுழுமையுந் துய்த்தபின் வருகின்றானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இப்போது ஆன்மா அநுசயம் எனப்படும் கன்ம சேஷமின்றிச் சுவர்க்கத்தினின்று மீளுகின்றான் என்று கூறுவதே யுக்தம். [அநு=(ஆன்மாவோடு) கூட, சேதே=இருத்தல் எனப் பொருள்பட], அநுசயம் என்பது ஆன்மாவோடு கன்மசேஷம் சார்ந்துளதென்பதே பொருள். சுவர்க்கத்திருந்திறங்கினவனுக்குக் கன்மசேஷமில்லை; ஆண்டுக் கன்மபலந் துய்க்கப்பட்டமையின்.

𑌯𑌾𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑌾𑌤𑌮𑍁𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌥𑍈𑌤𑌮𑍇𑌵𑌾𑌧𑍍𑌵𑌾𑌨𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇
(சாந். ௫. ௧௦, ௫)

“கன்மம் துய்த்து முடிவுபெறும் வரையுமிருந்து, அவர்கள் (ஆன்மாக்கள்) வந்த வழியே திரும்புகின்றனர்” என்று சுருதியும் அவ்விஷயம்பற்றிக் கூறுகின்றது. ஈண்டுச் சம்பாதம் என்பது கன்மசமூகம். கன்மமுழுமையும் ஒழியும் வரையும் அவர்கள் சுவர்க்கத்திலிருக்கின்றனர். ஆகலின், கன்மமுழுமையும் துய்த்தபின்னர் ஆன்மா கன்மம் யாதுமின்றியே சுவர்க்கத்திலிருந்து இறங்குகின்றான் எனின்,

(சித்தாந்தம்) நல்வினை துய்த்து முடிந்து ஆன்மா மீண்டு இவ்வுலகத்துக்கு வருங்காற் சேஷகன்மத்தோடு தொடர்ந்து வருகின்றான். இது எங்ஙனம் கூறப்படுகின்றதெனின்? சுருதி ஸ்மிருதி வாயிலாய்.

𑌤𑌦𑍍𑌯 𑌇𑌹 𑌰𑌮𑌣𑍀𑌯𑌚𑌰𑌣𑌾 𑌅𑌭𑍍𑌯𑌾𑌶𑍋 𑌹 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌰𑌮𑌣𑍀𑌯𑌾𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌦𑍍𑌯𑍇𑌰𑌨𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌵𑍈𑌶𑍍𑌯𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌅𑌥 𑌯 𑌇𑌹 𑌕𑌪𑍂𑌯𑌚𑌰𑌣𑌾 𑌅𑌭𑍍𑌯𑌾𑌶𑍋 𑌹 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌕𑌪𑍂-

யாம யொநிமாபத்யெரந் ஸ்வயொநிம் வா க்ஷத்ரியயொநிம் வா வைஸ்ய யொநிம் வா (சாந். ௫. ௧௦. ௭)

"நல்லொழுக்கமுடையோர் பிராம்மண க்ஷத்திரிய வைசியர் முதலிய நற்பிறப்பை விரைவில் அடைகின்றார், தீயொழுக்கமுடையோர் நாய் பன்றி சண்டாளன் முதலிய தீயபிறப்பை விரைந்து அடைகின்றனர்" எனச் சுருதியிற் கூறப்படுகின்றது.

ஜாயதெ வர்ணாஸ்ரமோதிகர்ம।

"அவன் நற்கன்மத்தினாற் பிறக்கின்றான்" என ஸ்மிருதியினும் கூறப்படுகின்றது. இன்றேல் உடனே பிறந்த சிசுவுக்கும் தர்மா தர்மமில்லாமையான் சுகதுக்கானுபவம் இல்லையாய் விடும். ஆகலின், போனவழியேயேனும் வேறு வழியேயேனும் மீளுங்காற் சேஷகன்மத்தோடே ஆன்மாக்கள் வருகின்றார்கள். அஃதாவது அவர்கள் ஆகாயமார்க்கமாக இறங்குங்கால் ஏறின வழியே வாயுவாதிகளையடைந்தும், பிதிருலோக முதலியவற்றையடையாமலும், வேறு பிரகாரமாக மீளுகின்றார் என்பது பொருள். (அ)

பின்னருஞ் சூத்திரகாரர் ஆக்ஷேபித்து மற்றோர் பிரகாரம் மறுக்கின்றனர்.

சரணாதிதி செந்ந தபலக்ஷணார்தெதி கார்ஷ்ணாஜிநி:।

(௩. ௧. ௯)

(௨௬௯) சரணம் என்னும் மொழியினாலெனின் அன்று; அது உபலக்ஷணைப்பொருளென்று கார்ஷ்ணாஜினி சொல்கின்றனர்.

(நல்லொழுக்கமுடையர்) ரமணீயசரணா: (தீயொழுக்கமுடையர்) கபூயசரணா: என்பவற்றிற் கண்ட சரண என்னும் மொழியினால் அநுசயம் எனப்படும் கன்மசேஷம் சித்திக்கவில்லை; அது ஸ்மிருதியிற் கண்ட ஒழுக்கத்தையே குறித்ததாம் எனின்,

(உத்தரம்) அன்று; சுருதியிற் கண்ட சரண என்னும் மொழி அநுசயம் எனப்படும் கன்மசேஷத்துக்காகவே உபலக்ஷணைப்பொருளாயிருக்கின்றது; அந்தக் கன்மசேஷமே சுகாதிகளைச் சாதிக்கின்றமையின். (௯)

ஆநர்த்தக்யமிதி செந்ந ததபெக்ஷத்வாத் (௩. ௧. ௧௦)

(௨௭௦) (அந்த ஒழுக்கம்) வீணாம் எனின், அன்று; அதனை அபேக்ஷித்திருத்தலான்.

(ஆக்ஷேபம்) அங்ஙனமாயின், ஸ்மிருதியிற் கூறப்பட்ட ஒழுக்கம் உபயோகமின்றியும் வீணாகவும் போமே எனின்,

(உத்தரம்) அன்று;

ஸந்த்யாஹீநோ(அ)சுசிர் நித்யம் அநர்ஹ: ஸர்வகர்மஸு|
யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய பலமாப்நுயாத்|

"(காலை மாலைச்) சந்தியின்றி இருக்கும் எவனும் நித்தமும் அசுத்தன்; சகல கன்மத்துக்கும் யோக்கியனுகான்; அவன் எக்கிரியையைச் செய்யினும் அவன் அதன் பயனை அடையான்" என்று சுருதியிற் கூறப்பட்டாற்போல, நல்வினைகளனைத்தும் அதனை அபேக்ஷித்துண்மையான். இது கார்ஷ்ணாஜினி யின் கொள்கை. (௧௦)

ஸுக்ருத து்ஷ்க்ருதே ஏவேதி து பாதரி: (௩. ௧. ௧௧)

(௨௬௰) ஆயின் நல்வினை தீவினைகளே என்று கூறுவர் பாதரி.

(மேலே உதகரித்த சுருதியிற் கண்ட) சரணம் என்னும் மொழி (முறையே) நல்வினை தீவினைகளைக் குறித்ததென்பர் பாதரி; புண்ணிய கன்மத்தை ஆசரிக்கின்றான் எனப் பிரசித்தமாகலின். சூத்திரகாரர் கருத்தும் இதுவாம். சரணம் என்பது உபலக்ஷணையினாலன்றி நேரே நல்வினை தீவினைகளைக் குறித்ததெனப் பாதரி கூறுகின்றார். கன்மமானது ஸ்மிருதியிற் கூறப்பட்ட நல்லொழுக்கத்தை அபேக்ஷித்து நின்றது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதே.

ஆகலின், ஆன்மா சுவர்க்கத்திருந்து மீளும்போது தான் செய்த நல்வினை தீவினையாகிய கன்மசேஷத்தோடு தொடர்ந்துவருகின்றான் என்பது சித்தித்தது. (௧௧)

(௩) அநிஷ்டாதிகார்யாதிகரணம்.

அநிஷ்டாதிகாரிணாமபி ச ச்ருதம் (௩. ௧. ௧௨)

(௨.௬௬) நற்கன்மமுதலிய செய்யாதோர்க்கும் கூறப்பட்டது.

யஞ்ஞாதிகளாகிய பொதுத் தருமங்களைச் செய்பவர் சந்திரனை அடைதல்போல, மற்றையோரும் சந்திரனை அடைகின்றாரா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அங்ஙனமாயின் யஞ்ஞாதி பொதுத் தர்மங்களைச் செய்யாதவர்க்கும் சந்திரகமனம் உண்டே;

யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி (கௌஷீ. ௧. ௨)

"இவ்வுலகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போவார் எவருஞ் சந்திரனையே அடைகின்றனர்" என்னுஞ் சுருதியினால் எல்லோரும் பேதம் யாதுமின்றிச் சந்திரனை அடைகின்றனர் எனக் கேட்கப்படலான். பாவிகளுக்கு அங்கே இன்பம் கிடையாவிடினும் மீண்டுவந்து சரீரம் எடுக்கும்பொருட்டும், பஞ்சமாகுதியை அடையும்பொருட்டும் சுவர்க்கத்துக்குப் போதல் அபேக்ஷிக்கப்படுகின்றது. ஆகலின், யஞ்ஞமுதலிய பொதுத் தருமங்களைச் செய்யாதோர்க்கும் சந்திரகமனமுளதாம் எனின், (கஉ)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ஸம்யமநே த்வநுபூயேதரேஷா மாரோஹாவரோஹௌ தத்கதிதர்சநாத் (ங. க. கங)

(ஙoo) ஆயின் யமலோகத்திலே அனுபவித்துப் பிறரெல்லாம் போய் மீளுகின்றனர்; சுருதி அக்கதிகளைக் காட்டலான்.

யஞ்ஞாதி பொதுத் தர்மங்களைச் செய்யாதோர்க்குச் சந்திரகமனமில்லை. ஆயின்,

வைவஸ்வதம் ஸங்கமநம் ஜநாநாம் (இரு. வே. கo. கச. க);
(தைத். ஆரணி. சு. க. க)

"சனங்களுக்கெல்லாம் எல்லை யமன்" என்றவாறு, அவர்கள் யமலோகத்திலே கருமபலன்களைத் துய்த்துப் பின்னர்ப் (பூமிக்கு) மீளுகின்றனர். அவர்களுக்குப் போதலும் மீளுதலும் இங்ஙனமே. ஒருவன் சுவர்க்கம் போதல் போகத்தின்பொருட்டன்றோ; பஞ்சமாகுதி பெறும்பொருட்டன்று; பெண்ணின் ஆகுதியானது இல்லையாக, * துரோணர் முதலாயினோர் விஷயத்திற் றேஷமேறலான். ஆகலின், பாவிகளுக்கு யமலோகப்பிராப்தி என்பது யுக்தம். (கங)

ஸ்மரந்தி ச (ங. க. கச)

(ஙoக) ஸ்மிருதியும் கூறுகின்றன.

---

*ப்ருஹஸ்பதே ப்ருஹத்கீர்த்தே தேவர்ஷேர் வீர்ய ஸம்பவம்।
அம்சா த்ரோணம் ஸமுத்பந்நம் பாரத்வாஜ மயோநிஜம்॥
(பார. ஆதிபருவம், சுஎ; எ0)

"பரத்துவாஜகுமாரராகிய துரோணர் (ஐந்தாவது ஆகுதியாகிய) பெண்ணிடத்தினின்று பிறந்த புகழ்படைத்த பிருகஸ்பதியின் அம்சத்தினின்று உற்பவித்தனர்" என்று பாரதம் கூறுகின்றது.

ஸர்வே சைதே வஶம் யாந்தி யமஸ்ய பகவந்கில
(விஷ்ணுபுராணம். ௩. ௭. ௫)

"பகவானே, இவரெல்லாம் யமனுக்குக் கட்டுப்படுகின்றனர்" என்றற்றொடக்கத்த விஷயம், இந்தப் பொருள்பட, ஸ்மிருதியினும் கூறப்படுகின்றது. (௧௪)

அபி ச ஸப்த (௩. ௧. ௧௫)

(௩௦௨) மேலும் ஏழு (உண்டு)

சப்த இரௌரவாதி நரகங்களையும் பாவிகளுக்கு மகாநரகங்கள் என்று கூறுகின்றனர். (௧௫)

தத்ராபி ச தத்வ்யாபாராதவிரோதஃ (௩. ௧. ௧௬)

(௩௦௩) அங்கும் அவனது வியாபாரமுண்மையின் விரோதம் இல்லை.

சித்திரகுப்தர் முதலாயினோரால் அதிஷ்டிக்கப்பட்ட நரகங்களினும், அவரையெல்லாம் பிரேரிக்கும் யமன் அவர்களுக்கு அதிஷ்டாதாவாதலின், அவ்வியமன் வசப்பட்டவராயினர் என்பதனால் விரோதமுறாது. (௧௬)

வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத் (௩. ௧. ௧௭)

(௩௦௪) வித்தையும் கன்மமுமே பிரகிருதவிஷயமாதலின்.

(ஒருவன்) வித்தை எனப்படும் உபாசனுபலமாகிய பிரமத்தையேனும் கன்மபலமாகிய சந்திரனையேனும் அடைகின்றான். எங்ஙனம்?

தத்ய இத்தம் விதுர்யே சேமே(அ)ரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே தே(அ)ர்சிஷமபிஸம்பவந்தி। அத ய இமே க்ராம இஷ்டாபூர்தே தத்தமித்யுபாஸதே தே தூமமபிஸம்பவந்தி।
(சாந். ரு. ௧௦. ௧, ௩)

"இதனை அறிந்தவர்களும், வனத்திலே சிரத்தையுடையராகத் தவஞ் செய்வோரும், அர்ச்சிகதியை அடைகின்றனர்; ஆயின் கிராமத்திலே யஞ்ஞாதி தருமங்களைச் செய்பவர் தூமகதி அடைகின்றனர்" என்னுஞ் சுருதியிற் கண்டவாறு பிரமத்தையும் சந்திரனையும் அடைவிப்பன முறையே வித்தையும் கன்மமுமாம் என ஆரம்பிக்கப்பட்டமையின். ஆகலின், பாவிகளுக்கு அக்கதிப் பிரசங்கமின்று. (௧௭)

ந த்ருதீயே ததோபலப்தேஃ (௩. ௧. ௧௮)

(௩௦௫) மூன்றாவதாயினர் (சுவர்க்கத்துக்குப்) போவாரல்லர்; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றமையின்.

சரீரம் பஞ்சமாகுதி வாயிலாகப் பெறப்படவேண்டுதலான், பாவிகளுக்கும் அதுபற்றிச் சுவர்க்கலோகம் வாய்க்காது ;

அவெயொ: வமொ ந-க கதரெண வ நதாநீமாநி க்ஷுஜ்ஜா ண்யஸ்ருதாவதீநி ஹூதாநி ஹவந்தி ஜாயஸ்வ ம்ரியஸ்வேத்யே தத் த்ருதீயம் ஸ்தாநம் தேநாஸௌலோகோ ந ஸம்பூர்யதே|

(சாந். ரு. க0. அ)

"இந்த இரண்டு மார்க்கத்தில் எதிலாவது இறந்து பிறக்கும் அற்ப செந்துக்கள் இடைவிடாது மீளுவனவல்ல ; அவைகளுக்கு மூன்றாவதாகிய ஸ்தான மொன்றுளது ; ஆகலின், அந்த உலகம் நிறைவாதல் இல்லை" என அவர்கள் சுவர்க்கத்துக்குப் போதல் இல்லை என வெளிப்படையாகக் கூறுகின்றமையான். "மூன்றாவது தானம்" என்பது பாவிகள் மேற்று. ஆகலின், பாவிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர். (கஅ)

ஸ்மர்யதேபி ச லோகே (௩. க. கக)

(௩0கூ) உலகத்திற் கூறப்படலானும்.

இவ்வுலகத்திலே புண்ணியகன்மமுடைய * திரௌபதி முதலாயினோர்க்குச் சரீர ஆக்கத்தின்பொருட்டு ஐந்தாவது ஆகுதி அபேக்ஷிக்கப்படவில்லை எனக் கருதப்படுகின்றது. (கக)

தர்சநாச்ச (௩. க. உ0)

(௩0எ) (சுருதியிற்) காண்டலானும்.

தேஷாம் கல்வேஷாம் பூதாநாம் த்ரீண்யேவ பீஜாநி பவந்தி அண்டஜம் ஜீவஜமுத்பிஜ்ஜம் (சாந். சு. ௩. க)

"எல்லாச் செந்துக்களுள்ளும் அண்டஜம், சீவஜம், உற்பிச்சம் என மூன்று பீஜங்களே உள" எனச் சுருதியிற் காணப்படுகின்றது. ஈண்டுச் சுவேதஜ உற்பிச்சவிஷயத்தில் அது (பஞ்சமாகுதி) அபேக்ஷிக்கப்படாமை காணப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) "சீவஜம் உற்பிச்சம்" என்னுஞ் சுருதியிற் சுவேதஜத்தைப்பற்றிக் கூறப்படவில்லையே எனின், (உ0)

---

*கௌமாரீ சாபி பாஞ்சாலீ வேதிமத்யாத் ஸமுத்திதா|

(பார. ஆதிபருவம், கசுக : ௬௪)

(திருஷ்டத்துயும்நர் உதித்தபின்னர்) யஞ்ஞவேதியின் மத்தியிலிருந்து பாஞ்சாலி எனப்படும் புத்திரியும் எழுந்தாள்" என்று பாரதங் கூறுகின்றமையால், திருஷ்டத்துயும்நரும் துரோபதியும் ஐந்தாவது ஆகுதியாகிய பெண்ணிடத்திருந்து உற்பத்தியாயினாரல்லர் என்பது பெறப்படுகின்றது.

(உத்தரம்) சூத்திரகாரர் இறுக்கின்றனர்.

த்ருதீயஶப்தாவரோத⁴: ஸம்ஶோகஜஸ்ய (௩. க. உக)

(௩௦அ) சுவேதஜமானது மூன்றாவதாகிய (உற்பிச்சத்தில்) அடங்கிற்று.

சுவேதஜமும் மூன்றாவதாகிய உற்பிச்ச மொழியில் அடங்கிற்று. ஆகலின், பாவிகள் சுவர்க்கத்துக்குப் போவாரல்லர் என்பது நிர்ணயிக்கப்பட்டது. (உக)

(௪) தத்சுவாபாவ்யாபத்தியதிகரணம்.

தத்ஸ்வாபா⁴வ்யாபத்திருபபத்தே: (௩. க. உஉ)

(௩௦ஆ) அவன் ஒத்த இயல்பை அடைகின்றான்; அது பொருத்தமாதலின்.

சுவர்க்கத்திலே பல போகம் துய்த்தபின்னர்க் கன்மசேஷத்தோடு வருகின்றனன் என மேலே அதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது.

அதை²தமேவாத்⁴வானம் புனர்நிவர்தந்தே யதை²தமாகாஶமாகாஶாத்³வாயும் வாயுர்பூ⁴த்வா தூ⁴மோ ப⁴வதி தூ⁴மோ பூ⁴த்வாऽப்⁴ரம் ப⁴வதி। அப்⁴ரம் பூ⁴த்வா மேகோ⁴ ப⁴வதி மேகோ⁴ பூ⁴த்வா ப்ரவர்ஷதி (சாந். ரு. கo. ரு, ௬)

"பின் அவர்கள் வந்த வழியே ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து வாயுவுக்குமாக மீளுகின்றனர்; பின் (யஞ்ஞஞ் செய்வோன்) வாயுவாகிப் புகையாகின்றான்; புகையாகிப் பனியாகின்றான்; பனியாகி மேகமாகின்றான்; மேகமாய் வருஷிக்கின்றான்" என்னுஞ் சுருதியில், அவன் இறங்குங்கால் ஆகாய முதலியவாதல் கூறப்படுகின்றது.

ஆன்மா ஆகாயமாகின்றானா? இன்றேல் ஆகாயம் போலாகின்றானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆகி (பூ⁴த்வா) என்னும் மொழியினால், ஆன்மா ஆகாசாதியாகவே எய்துகின்றான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். இறங்குங்கால் ஆன்மா ஆகாசாதியாக வரவில்லை; ஆனால் ஆகாயாதி போல வருகின்றான்; அங்கே (அவனுக்கு) சுகதுக்கானுபவமின்மையின். இன்பதுன்பங்களை அடைதற்காகவே ஆன்மா அவ்வச் சரீரங்கள் எடுப்பது; ஒரு பொருளுக்கு மற்றோர் பொருட்டன்மை எய்தமாட்டாமையின். ஆகலின், இறங்குங்கால் (ஆன்மா) ஆகாயமுதலிய போல் வருகின்றான் என நிர்ணயிக்கப்பட்டது. (உஉ)

(ரு) நாதிசிராதிகரணம்.

நாதிசிரேண விசேஷாத் (ரு. க. உரு)

(ருகo) நெடுங்காலமன்று; விசேஷமுண்மையான்.

ஈண்டு இறங்குங்கால் ஆன்மா தாமசமுறுகின்றனு? இன்றேல் தாமசமுறவில்லையா? இன்றேல் நியமமில்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

த இஹ வ்ரீஹியவா ஓஷதிவநஸ்பதயஸ்திலமாஷா இதி ஜாயந்தே (சாந். ருூ. கo. சு)

"நெல்லு, யவை, ஒஷதி, வனம், திலம், உழுந்து என்பனவாயாகின்றன்" என்னுஞ் சுருதியானது (ஆன்மா) மழைபெய்தபின்னர்த் தானிய முதலிய இயல்பை அடைகின்றன் எனக் கூறுகின்றது. நெல்லு யவை முதலியவைகளாய் அடைதற்குமுன், (ஆன்மா) ஆகாய முதலியவற்றில் விளம்பமாயேனும், விளம்பமில்லாமலேனும் உளதாம்; இதற்கு நியமமில்லை எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். நென் முதலியவாகவாதற்குமுன் ஆன்மா ஆகாயமுதலியவற்றில் நெடுங்காலம் நிற்கிறதில்லை; எங்ஙனம்?

அதோ வை கலு துர்நிஷ்ப்ரபதரம் (சாந். ருூ. கo. சு)

"அதிலிருந்து தவிர்தல் மிக அரிது" என்னுஞ் சுருதியினுல், நென் முதலியவாயபின் அவ்வியல்பிலிருந்து நீங்குதல் அரிதாம் எனக் கேட்கப்படுகின்றது. ஆகலின், (ஆன்மாக்கள்) நென்முதலியவற்றிற்றுமதித்தலான், பிறவிடங்களிலே (அவை) விரைந்து செல்கின்றன எனப் பெறப்படுதலின், ஆகாசாதிகளில் ஆன்மா தாமசஞ் செய்வதில்லை. (உரு)

(சு) அந்யாதிஷ்டிதாதிகரணம்.

அந்யாதிஷ்டிதே பூர்வவதபிலாபாத் (ரு. க. உச)

(ருகக) மற்றொன்றால் (ஆன்மாவினுல்) அதிஷ்டிக்கப்பட்டவிடத்து முன்போற் கூறப்பட்டமையான்.

ஈண்டு, ஆன்மா தானியாதியோடு சம்பந்தமாத்திர முற்றுவருகின்றதா? இன்றேல், தானியமாய்ப் பிறக்கின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை நென்முதலியனவாதப் பிறக்கின்றன எனச் சுருதி கூறுகின்றமையின், ஆன்மா தானியமாய்ப் பிறக்கின்றதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். மற்றை ஆன்மாக்களால் அதிஷ்டிக்கப்பட்ட தானியமுதலியவற்றில் ஆன்மா சம்பந்தமாத்திரமுறுகின்றது; ஆகாய முதலியவாயிலாக இறங்கும்போது ஆங்கு ஆன்மாவுடைய பிறப்பின் காரணத்தைச் சுருதி கூறுமையின், "பிறக்கின்றன" என்னுஞ் சுருதியின் பொருள் கவுணத்தின் பாலதாம். ஆன்மா பிராம்மணுதியராய்ப் பிறக்குங்கால், நல்வினையுடையார் தீவினையுடையார் என்னும் மொழிகளால் அவ்வப் பிறப்புக்களின் காரணத்தைச் சுருதி கூறுகின்றது. ஆகலின் அவன் பிராம்மணுதியராய் மாத்திரம் பிறக்கின்றான் எனச் சுருதி கூறுவதாற் பிற விஷயங்களிலெல்லாம் சம்பந்தமாத்திரம் என்று கோடலே நிர்ணயம். (உச)

அஶுத்தமிதி சேந்ந ஶப்தாத் (ந. க. உரு)

(நகஉ) அசுத்தமெனின், அன்று; சுருதி கூறுவதால்.

இறங்கும் ஆன்மா தான் முன் இயற்றிய யாகாதிகளில் அக்கினிஷோமீயாதி ஹிம்சை கலந்துளதாகலின், அசுத்த கன்மபலத்தைத் துய்க்கும் பொருட்டுத் தானியாதிரூபமாய்ப் பிறத்தல்வேண்டும் எனின்,

(உத்தரம்) அன்று;

ஹிரண்யஶரீர ஊர்த்வ꞉ ஸ்வர்கம் லோகமேதி।
நவா உ ஏதந்ம்ரியஸே ந ரிஷ்யஸி (இரு. வே. க. ககஉ. உக)

"சுவர்ண சரீரமாய் அதுமேலே சுவர்க்கத்துக்குப் போகின்றது;" "வாஸ்தவமாய் நீ சாவாயல்லை, அழிவாயல்லை" என்னுஞ் சுருதியினுற் பசு ஹிம்சையானது அஹிம்சையாம். ஆகலின், இறங்கும் ஆன்மா தானியாதியாகப் பிறக்கவில்லை. (உரு)

சூத்திரகாரர் மற்றோர் பிரகாரம் விளக்குகின்றனர்.

ரேதஸ்ஸிக்யோகோ(அ)த꞉ (ந. க. உசு)

(நகந) பின்னர் இரேதஸ் விடுபவனோடு சம்பந்தம்.

யோ யோஹ்யந்நமத்தி யோ ரேத꞉ ஸிஞ்சதி தத்பூய ஏவ பவதி।
(சாந். ரு. க0. சு)

"எவனெவன் அன்னமயின்று இந்திரியத்தை விடுங்கால் அவன் (பெண்ணிடத்துப்) பின்னும் அவ்வாகிருதியாகவேயாகின்றான்" என்னுஞ் சுருதியில் இந்திரியத்தை விடுப்பவனோடு ஆன்மாவுக்குச் சம்பந்தமாத்திரமுறுதலாகக் கூறப்படுகின்றது. ஆகலின், முன்னரும் நென் முதலியவற்றினும் சம்பந்தமாத்திரமே (சுருதி கருதிற்று). (உசு)

யோநே꞉ ஶரீரம் (ந. க. உஎ)

(௬௧௪) யோனியிலிருந்து சரீரம்.

அவன் எப்போது யோனியை அடைகின்றானோ, அப்போது சரீர முண்டாகின்றது. ஆகலின், இதற்குமுன்னே சம்பந்த மாத்திரம் என்பது தாற்பரியம். (௨௭)

மூன்றும் அத்தியாயத்து
இரண்டாம் பாதம்.

---

(௧) சந்தியாதிகரணம்.

ஸம்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி (௩. ௨. ௧)

(௩௧௫) சொப்பனத்திலே சிருட்டி (சீவான்மாவினது); அங்ஙனஞ் (சுருதி) கூறுகின்றதன்றோ.

மேலே ஆன்மாவுடைய போதல் மீளுதல்கள் நிரூபிக்கப்பட்டன. ஈண்டு அதன் அவஸ்தை விசாரிக்கப்படுகின்றது. சொப்பனத்திலே,

ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தானோ பவந்த்யத ரதாந் ரதயோகாந்பத: ஸ்ருஜதே (பிரு. ௬. ௩. ௧௦)

"அங்கே இரதங்கள் இல்லை, குதிரைகள் இல்லை, பாதைகள் இல்லை, ஆயின் தானே இரதங்களையும், குதிரைகளையும், பாதைகளையும் சிருட்டிக்கின்றான்" என்பனமுதலியவற்றாற் சிருட்டி கூறப்படுகின்றது.

இந்தச் சிருட்டி ஆன்மசிருட்டியா? சிவசிருட்டியா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்ம சிருட்டி எனப் பெறப்படுகின்றது.

ஸ ஹி வேசாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே ஸ ஹி கர்த்தா। (பிரு. ௬. ௩. ௧௦)

"அவன் கேணி, வாவி, நதி என்பவற்றைச் சிருட்டிக்கின்றான்; அவனே கர்த்தா" எனச் சொப்பனம் காணும் ஆன்மாவையே கர்த்தாவாகச் சுருதி கூறுகின்றதன்றோ. (௧)

நிர்மாதாரம் சைகே புத்ராதயச்ச (௩. ௨. ௨)

(௩௧௬) புத்திரர் முதலாய (இச்சித்த பொருள்களையும்) சிருட்டிப்பவனாகவும் (சொல்வர்) சிலர்.

ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:। (கட. ரு. அ)

"நித்திரை செய்பவரில் விழிப்பாயிருக்கும் அந்தப் புருஷன் ஒன்றன்பின் ஒன்றாக இனிய காட்சியை உருவப்படுத்துகின்றான்" என்னுஞ் சுருதியினால், இச்சித்த பொருளைச் சொப்பனத்திற் சிருட்டிப்பவன் ஆன்மாவே என்று சில சாகையினர் உரைக்கின்றனர். ஈண்டுக் காமம் என்னும் மொழி புத்திரர் முதலாய விரும்பிய பொருள்களின் மேற்று;

ஸர்வாந் காமாம்ஶ்சந்தத꞉ ப்ரார்தயஸ்வ (கட. க. உ௩)

"நீ விரும்பிய பொருள்களை யெல்லாம் வேண்டியபிரகாரம் கேள்" என முன்னர்க் கூறி,

ஶதாயுஷ꞉ புத்ரபௌத்ராந் வ்ருணீஷ்வ (கட. க. உ௩)

"நூறு வருஷம் சீவிக்கும் புதல்வரையும் பௌத்திரரையும் கேள்" எனச் சுருதி விளக்கினமையின். இந்த நியாயத்தினாலும் சொப்பன சிருட்டி ஆன்மாவினதே எனின், (உ).

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேநாநபிவ்யக்தஸ்வரூபத்வாத்।

(௩. உ. ௩)

(௩கள) ஆனால் (அது) மாயாமாத்திரம்; (ஆன்மாவின்) சொரூபம் முற்றும் வெளிப்படாமையான்.

சொப்பனத்திலே சிருட்டிக்கப்பட்ட மாயாமாத்திரமாகிய இரதமுதலிய பொருட்சமூகம் சிவபெருமானாற் சிருட்டிக்கப்பட்டதன்றி ஆன்மாவினாற் சிருட்டிக்கப்பட்டதன்று. சொப்பனகாலமாத்திரத்தில் முடிவுறுவதாய் நிற்றலான், (இது) சொப்பனங் காண்போனால் அநுபவிக்கப்படுவது; ஆச்சரியமாயிருத்தல்பற்றி மாயாமாத்திரமாயிருக்கின்றதென்று கூறப்பட்டது. ஆன்மாவுக்குச் சத்திய சங்கற்பத்துவாதிகள் மறைக்கப்பட்டிருத்தல்பற்றி, அவ்வான்மாவுக்கு இரதமுதலியவற்றைச் சிருட்டிக்கும் சாமர்த்தியம் இல்லை. ஆகலின்,

புருஷோ நிர்மிமாண꞉ (கட. ரு. அ)

"(இச்சித்த பொருள்களைச்) சிருட்டிப்பவனாகக் கூறப்பட்ட புருஷன்" என்னுஞ் சுருதி விஷயம் ஆன்மாவைப் பற்றியதன்று.

ததேவ ஶுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே |
தஸ்மிம்ல்லோகா꞉ ஶ்ரிதா꞉ ஸர்வே தது நாத்யேதி கஶ்சந ||

(கட. ரு. அ)

"அதுவே சுக்கிரம், அது பிரமம், அதுதான் சிவம் என்று கூறப்படுகின்றது; அதிலே எவ்வுலகமும் அடங்கின; இதற்குமேல் எவனும் போவதில்லை" என்னும் வாக்கியசேஷத்தினால், (அது) சிவபெருமானைச் சுட்டியது; ஓரே பொருளைக் காட்டலான்.

ஸ ஹி கர்தா (பிரு. சு. ௩. கo)

"அவன் கர்த்தா" என்பதும் அச்சிவனார் விஷயமே. ஆகலின், சொப்பன சிருட்டி சிவபெருமானது. (௩)

சூத்திரகாரர் ஆன்மசொரூபம் வெளிப்படாமைக்குக் காரணம் கூறுவாராயினர்.

𑌪𑌰𑌾𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍌। (௩. ௨. ௪)

(௩௧௮) ஆயின் பரத்தினது சங்கற்பத்தினாலே மறைக்கப்பட்டது; ஆதலினாலன்றோ அவனுக்குப் பந்தமும் மோக்ஷமும் உளவாம்.

ஆன்மாவுக்குள்ள அநாதி அபசார பிரவாக காரணமாகப் (பரத்தினது) சிவனாரது சங்கற்பத்தினால் ஆன்மாவினது சத்திய சங்கற்பத்துவ முதலியன மறைக்கப்பட்டன. அந்த அபசாரத்தினாலேதான் அது வெளிப்பட்டிலது. ஆதலினாற்றான் சிவபெருமானுடைய சங்கற்பத்தினால் அவனுக்குப் பந்தமும் மோக்ஷமும் உளவாகின்றன. அங்ஙனமே,

𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌽𑌨𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇𑌽𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑍇𑌽𑌨𑌿𑌲𑌯𑌨𑍇𑌽𑌭𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇। 𑌅𑌥 𑌸𑍋𑌽𑌭𑌯𑌂 𑌗𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌦𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇। 𑌅𑌥 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 (தைத். ௨. ௭. ௧)

"எவன் காணப்படாததாயும், சரீரமிலதாயும், கூறொணாததாயும், நிலயமிலாததாயும் இருப்பதிலே பயமிலனாய்ப் பிரதிஷ்டையை அறிகின்றானோ, அவன் பயமொழிந்தவனாகின்றான்; பின் அவன் அதிற் சிறிது வேற்றுமை பண்ணுவானாயின் அவனுக்குப் பயமுண்டு" எனச் சுருதியும் கூறுகின்றது. (௪)

𑌦𑍇𑌹𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑍋𑌽𑌪𑌿 (௩. ௨. ௫)

(௩௧௯) இன்றேல் அது தேகசம்பந்தத்தினாலுமிருக்கலாம்.

தேவர் மனிதர் முதலாயினோர் தேகாகாரமாகிய ஜடச்செயற்கையினாலே சிருட்டிகாலத்தில் ஆன்மாவுடைய சொரூபம் மறைக்கப்பட்டிருப்பினும், பிரளயகாலத்திலே நாமரூபமாகப் பிரிக்கவியலாத சூக்குமாகாரமாகிய ஜடசம்பந்தத்தினால் அதன் சொரூபம் மறைக்கப்பட்டது. இங்ஙனம் சத்திய சங்கற்பத்துவாதிகள் மறைக்கப்பட்ட அதற்குச் சொப்பனத்திலே தாற்காலிக விசித்திரசிருட்டி சாமர்த்தியம் எய்தாது. (௫)

சூத்திரகாரர் பிறிதோர் நியாயம் கூறுகின்றனர்.

𑌸𑍂𑌚𑌕𑌶𑍍𑌚 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 (௩. ௨. ௬)

(௩௨௦) அது (முன்னர் அறிவிக்கும்) சூசகமாயே உள்

ளாது சுருதி கூறுகின்றமையான்; அதிற் றேர்ந்தவர்களுஞ் சொல்கின்றனர்.

யதா கர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்னேஷு பச்யதி।
ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத் தஸ்மிந் ஸ்வப்ந நிதர்சநே (சாந். ௫. ௨. ௯)
அத ஸ்வப்நா: புருஷம் க்ருஷ்ணம் க்ருஷ்ணதந்தம் பச்யதி ஸ ஏநம் ஹந்தி
(ஐதரேயஆரணியகம். ௩. ௨. ௪. ௧௭)

"எப்போது காமியகருமங்களிலே ஸ்திரியைச் சொப்பனங்களிலே காண்கின்றானோ, அவன் ஜாக்கிரத்திலே செல்வம் வருவதாக அறியற்பாலன்;" "பின் கரிய பற்களோடு ஓர் கரிய மனிதனைக் கண்டால் அவன் இவனைக் கொல்கின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளுண்மையின், சுபாசுபத்தைக் காட்டுவதன்றோ சொப்பனம். சொப்பனசாத்திரங்களை அறிந்தோர் சொப்பனங்கள் சுபாசுபங்களைச் சூசிப்பன என்று உரைக்கின்றனர். ஆகலின், சொப்பனப் பொருள்கள் ஆன்மசிருஷ்டமன்று; (அவை) ஆன்மசிருஷ்டமாயிருப்பின், தீமையைச் சூசிப்பிக்கும் அப்பொருள்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கமாட்டாவாதலின். ஆகலின், சொப்பனசிருட்டி சிவபெருமானது செய்கை எனல் யுக்தமே. (௬)

(௨) தத்பாவாதிகரணம்.

ததபாவோ நாடீஷு தச்ச்ருதேராத்மநி ச (௩. ௨. ௭)

(௩.௨.௭) சொப்பனமின்மை (சுழுப்தி) நாடிகளினும் பரமான்மாவினுமாம்; அது கூறப்படுதலான்.

சொப்பனமின்மையே சுழுப்தி.

யத்ரைதத் ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸந்ந: ஸ்வப்நம் ந விஜாநாதி ஆஸு ததா நாடீஷு ஸ்ருப்தோ பவதி।
(சாந். அ. ௬. ௩)

"ஒருவன் நித்திரை செய்து அமைந்தவனாய், முற்றும் ஒய்ந்தவனாய், சொப்பனம் காணாதிருக்கும்போது, அவன் அந்த நாடிகளுள்ளே உறங்குகின்றான்."

அத யதா ஸுஷுப்தோ பவதி யதா ந கஸ்யசந வேத ஹிதா நாம நாட்ய: த்வாஸப்ததி ஸஹஸ்ராணி ஹ்ருதயாத் புரீததமபிப்ரதிஷ்டந்தே தாபி: ப்ரத்யவஸ்ருப்ய புரீததி சேதே (பிரு. ௪. ௧. ௧௯.)

"அவன் ஆழிய நித்திரை செய்து ஒன்றும் அறியாதிருக்குங்கால், இதயத்திலிருந்து சரீரமெங்கும் பரந்திருக்கும் ஹிதை எனப்படும் எழுபத்தீராயிரம் நாடிகளுக்கூடாக அவன் சலித்துச் சரீரத்திலே உறங்குகின்றான்"

யத்ரைதத்புருஷஃ ஸ்வபிதி நாம ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி (சாங். சு. அ. க)

"ஒருவன் இங்கே நித்திரை செய்யும்போது, சௌமிய! அவன் சத்தோடு இயைந்திருக்கின்றனன்" என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே ஆன்மா நாடிகளினும் சரீரத்தினும் பிரமத்தினும் நித்திரை செய்கின்றான் என்று பெறப்படுகின்றது.

இவைகளில் ஒவ்வொன்றிலா? இன்றேல் இவைகள் அனைத்தினுமா? (ஆன்மா நித்திரை செய்கின்றனன்) என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா நித்திரை செய்தற்கு நாடிமுதலிய ஸ்தானங்களில் ஒன்று அருகமாயிருக்கின்றது; ஆகவேண்டிய நித்திரை ஒரேநோக்கமுடைமையான்.

வ்ரீஹிபி ர்யஜேத |

"நெற்கொண்டு யஞ்ஞஞ் செய்வானாக"

யவைர் யஜேத |

"அவன் யவைகொண்டு யஞ்ஞஞ் செய்வானாக" என்னும் வேதவிதியிற் செயற்பாலதாகிய புரோடாசப்பிரயோசனம் ஒன்றேயுண்மையின், எங்ஙனம் அவ்விரண்டில் ஒன்றே கொள்ளற்பாற்றோ, அங்ஙனம் நித்திரை என்னும் ஒரே பிரயோசனத்தைப்பற்றினமையின், ஓர்காற் சரீரத்தினும், ஓர் கால் நாடிகளினும், மற்றோர்காற் பிரமத்தினுமாக ஆன்மா நித்திரைசெய்கின்றான் எனப் பூருவபக்ஷஞ் செய்யின்,

(சித்தாந்தம்) ஆன்மா அவையனைத்தினும் ஒருங்கு நித்திரை செய்கின்றான்; எதனால்? அநேக பிரயோசனமுண்மையின். எங்ஙனமெனின், இதயத்திருக்கும் பிரமத்தைப் போய்ச் சீவான்மாச் சேர்தற்கு நாடி ஓர் வாயிலாம். ஆன்மா ஒரேகாலத்திற் சரீரத்தினும் பிரமத்தினும் துயிலும்; (சரீரமும் பிரமமும் முறையே) மேடையும் படுக்கையும் போல்வனவாமாதலின் விரோதமின்று; இங்ஙனம் ஆன்மா நாடிவாயிலாகப் போய்ச் சரீரத்துள்ள பிரமத்திலே துயில்கின்றான். வெவ்வேறிடமும் வெவ்வேறு பிரயோசனமுமுடைமையின், தொகுப்பே ஈண்டுக் கொள்ளப்பட்டது. (எ)

அதஃ ப்ரபோதோ(அ)ஸ்மாத் (ங. உ. அ)

(ஙஉஉ) ஆதலினால், அதிலிருந்து விழித்தல்.

ஸத ஆகம்ய ந விது꞉ ஸத ஆகச்சாமஹ இதி (சாந். ௬. ௧0. ௨)

"அவர்கள் சத்திலிருந்து மீண்டுஞ் சத்திலிருந்து மீண்டேம் என்று அறியார்" என்ற சுருதி ஆன்மா பிரமத்திலிருந்து விழிக்கின்றது எனக் கூறுகின்றது. ஆகலின், அவை அனைத்தின் தொகுப்பே கண்டுக் கொள்ளப்பட்டது. அவற்றில் ஒன்றைக்கொண்டால், அது எண்வித தோஷத்துக்குள்ளாகும். "எப்போது ஆன்மா நாடிகளிலே உறங்குகின்றானோ" என்னும் (சாந். அ. ௬. ௩-ஆம்) வாக்கியத்தை அங்கிகரிப்பின், அப்போது சரீரத்தையும் பிரமத்தையும் பற்றிய (பிரு. ௪. ௧. ௧௯ ; சாந். ௬. அ. ௧) வாக்கியங்களிற் கூறியாங்கு உறங்குகின்றான் 'என எய்திய பிரமாணத்தை விடுத்தலாகவும், எய்தாததும் அப்பிராமாண்ணியமுமாயுள்ளதை அங்கீகரிப்பதாகவும் முடியும்; பின்னர் "அவன் சரீரத்திலும் பிரமத்திலும் எப்போது உறங்கின்றானோ" என்னும் இரு வாக்கியங்களையும் அங்கீகரிப்பின், அப்போது சரீரப்பிரம வாக்கியங்களில் முன்னர் விடுக்கப்பட்டதைப் பிராமாண்ணியமாக அங்கீகரித்தலாகவும், முன்னர் அங்கீகரித்ததை அப்பிராமாண்ணியமாக விடுத்தலாகவும் முடியுமென எய்தியதை விடுத்தலும், எய்தாததைச் சுவீகரித்தலும், விடுத்ததைச் சுவீகரித்தலும், சுவீகரித்ததை விடுதலுமாக நான்கு தோஷங்கள் விளையாநின்றன. (இத்தோஷங்கள்) சரீரம் பிரமம் என்பவற்றைப்பற்றிய வாக்கியங்களை அங்கீகரித்தலால் நேர்கின்றன. அங்ஙனம் நாடிவாக்கியத்தைக் கொள்ளுங்காலும், நான்கு தோஷங்கள் உளவாகின்றன. இங்ஙனம் எட்டுத் தோஷங்கள் பிறப்பனவாயின. ஆகலின், தொகுப்பே பொருத்தமாகுங்கால், விகற்பம்பொருத்தமில்லை. (அ)

(௩) கர்மாநுஸ்மிருத்தியதிகரணம்.

ஸ ஏவ து கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய꞉ (௩. ௨. ௯)

(௩௨௩) ஆனால் கர்மம், ஞாபகம், சுருதி, விதி என்பன உண்மையான், அவன்றானே.

ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி (சாந். ௬. அ. ௧)

"சௌமிய! அவன் * சத்தோடு சம்பன்னனாகின்றான்" என்னுஞ் சுருதியே இப்பொழுது ஆராயப்போந்த விஷயம்.

மேலே ஆன்மாவுடைய சுழுப்தியவஸ்தை நிரூபிக்கப்பட்டது. கண்டுப் பிரமத்திலே சுழுப்தி செய்தவன்றானா? இன்றேல் மற்றொருவனா? விழிக்கின்றான் என்பது சந்தேகம்.

---

* இந்தச் சத்தின் பொருளைச் (௧. ௧. ௯-ஆம்) சூத்திரக்குறிப்பிற் காண்க.

(பூருவபக்ஷம்) பிரமத்தை அடைந்தவனுக்கு மீளுதல் உசிதமன்றாத லின், மற்றொருவனென்றே கொள்ளப்படும். நிரதிசயானந்த பிரமத்திற் சாமியமுற்ற ஆன்மாவுக்குப் பின்னர்த் துக்கமயமாகிய சம்சாரவிருத்தி பொருந்தாதன்றே. சத்தாகிய பிரமத்தை அடைந்தவன் எங்ஙனம் வெளி வருவான்? அவ்விரண்டுக்கும் பேதம் என்னை? எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சத்தோடு சம்பன்னனாயினும், நித்திரை செய்தவனே விழித்து எழுந்திருக்கின்றான்; ஞானமில்லாமையாற் செய்த கன்மபலத்தை அவன் துய்க்கற்பாலனாதலானும், மீட்டும் முன் அனுப வித்தவற்றை நினைக்கின்றானாதலினாலும்,

த இஹ வ்யாக்ரோ வா ஸிம்ஹோ வா வ்ருகோ வா வராஹோ வா கீடோ வா பதங்கோ வா தம்ஶோ வா மஶகோ வா யத்யத் பவந்தி ததா பவந்தி (சாந். சு. ௧௦. ௨)

"புலியாயேனும், சிங்கமாயேனும், ஓநாயாயேனும், வராகமாயேனும், புழுவாயேனும், விட்டிலாயேனும், கொசுகாயேனும், ஒலுங்காயேனும் இங்கே இந்தச் செந்துக்கள் எங்ஙனம் இருக்கின்றனவோ, அங்ஙனமே அவை மீட்டும் மீட்டும் ஆகின்றன" என ஆன்மா முன்னிருந்தவாறு மீட் டும் ஆகின்றான் என்னும் சுருதியுண்மையானும், மோக்ஷோபாயம் விதிக் கும் வாக்கியமெல்லாம் அப்பிரயோசனமாய் முடியுமாதலினாலுமாம்.

ஸத ஆகம்ய ந விது: (சாந். சு. ௧௦. ௨)

"அவர்கள் சத்தினின்று மீண்டும் (சத்தை) அறிந்திலர்" என்னுஞ் சுருதி பிரமானந்தத்தின் ஞானம் இல்லை என்று கூறுதலால், முத்திதசையிலே போல ஆன்மா பிரமத்தில் இலயமுற்றானல்லன். ஆகலின், முதற்கண் நித் திரைக்குப்போந்தவனே மீண்டும் விழிக்கின்றனன் என்று கோடல் யுக் தம். (௯)

(௪) முக்தாதிகரணம்.

முக்தே(அ)ர்த்தஸம்பத்தி: பரிஶேஷாத் (௩. ௨. ௧௦)

(௩.௨.௪) மூர்ச்சித்தபோது பரிசேடத்தினால், அது அரை (மரணம்) ஆகின்றது.

ஓர் புருஷன் மூர்ச்சித்தான் என்னும் வியவகாரமுண்மையான், மூர்ச்சை எனப்படும் ஓர் அவஸ்தை அனுபவிக்கப்படுகின்றது. இந்த அவ ஸ்தை சுழுப்திமுதலியவற்றினின்று வேறாயதா? அன்றா? என்பது சந்தே கம்.

(பூருவபக்ஷம்) ஜாக்கிரசொப்பன சுழுப்திக்கு வேறாக ஓர் அவஸ்தை உளதாம் என அறியப்படாமையான், மூர்ச்சை என்பது சாக்கிரமுதலிய வற்றுள் அடங்கியதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. மூர்ச்சையடைந்த புருஷனுடைய அவஸ்தை அரை மரணத்துக்குச் சமம்; பரிசேடத்திற் சுழுப்திமுதலிய வற்றினின்று வேறாயுள்ளது. பிரபஞ்சஞானமில்லாமையான் சாக்கிரசொப் பனங்களில் அடங்கியதில்லை. சுழுப்திகாலத்தில்முகம் பிரசன்னமாயிருத் தல் முதலிய இலக்ஷணத்தினாலும், மூர்ச்சையிலே அது விகாரமுறுதலாம் இலக்ஷணத்தினாலுமாகப் போந்த பேதத்தினாற் சுழுப்திக்கு வேறானது மூர்ச்சை. (௧0)

(ரு) உபயலிங்காதிகரணம்.

ந ஸ்தா நதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி

(௩. ௨. ௧௧)

(௩உரு) இடத்தைப்பற்றியும் பரத்துக்குத் தோஷப்பிர சங்கமில்லை; யாண்டும் உபயலிங்கமுண்மையான்.

மேலை அதிகரணங்களிலே துவம்பதார்த்த ஆன்மாவுடைய ஸ்வரூப தர்மமும், போதல் மீடல்களும், அவஸ்தா விசேஷங்களும் நிரூபணஞ் செய் யப்பட்டன. அதன் பின்னர்த் தத்பதார்த்தமாகிய சிவபெருமானுடைய சொரூபதர்மமுதலாயின நிரூபிக்கப்படுகின்றன.

ஸோந்தராதந்தரம் ப்ராவிசத் திசோந்தரம் ப்ராவிசத்।

(அதர்வசிரசு)

"அவர் உள்ளினுள்ளைப் பிரவேசித்தனர்; திக்கின் உள்ளைப் பிரவேசித்தனர்"

யః ப்ருதிவ்யாம் திஷ்டந் (பிரு. ரு. எ. ௩)

"எவர் பூமியினுள்ளார்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, சிவபெருமான் யாண்டும் வியாபித்துப் பிரவேசித்து நிற்கின்றமை கேட்கப்படுகின்றது.

எல்லா அவஸ்தைகளினும் சர்வாந்தரியாமியாயிருக்குங்கால் அவர் பல் வகைப் பரிசதோஷத்துக்கு ஆளாவாரா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தோஷத்துக்கு ஆளாவார். அங்ஙனமே,

அஸ்தூலமநண்வஹ்ரஸ்வம் (பிரு. ரு. அ. அ)

"ஸ்தூலமிலரும், அணுவிலரும், குறுக்கமிலருமாயுளர்"

நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் (சுவே. சு. ௧௯)

"நிஷ்களரும், நிஷ்கிரியரும், சாந்தரும், பாவமிலரும், நிரஞ்சனருமாயுளர்" என்றற்றொடக்கத்த சுருதிகளானும் சிவபெருமானுக்கு அவ்வியல்பினதாகிய ரூபமில்லை என்று கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட பரிசதோஷம் எய்தி விடுமா என்னும் பயத்தினாற்றான்,

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" என அவருக்கு அபரிச்சின்னமாகிய சத்தியஞானமாத்திரசொரூபங் கூறப்படுகின்றது. பிரகிருதி விகாரசம்பந்த முடையரே எனின், அவரும் ஆன்மாவைப் போலச் சமஸ்தவிகாரதோஷங்களுக்கும் ஆஸ்பதமாய் விடுவரெனின்,

(சித்தாந்தம்) அன்று. அவஸ்தைகள் அனைத்தினும் சர்வாந்தரியாமியாய் இருப்பினும் சிவபெருமானுக்கு எவ்வித தோஷமும் பற்றாது. எங்ஙனமெனின்,

ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோ அபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப: (சாந். அ. க. ரு)

"பாவமில்லாததும், ஜரையிலாததும், மரணமில்லாததும், துக்கமில்லாததும், பசியில்லாததும், தாகமில்லாததும், சத்தியகாமசத்தியசங்கற்பத்துவமுடையதுமாயது (பரம) ஆன்மா"

ஸமஸ்த கல்யாணகுணாத்மகோஸௌ ... ஶ்ரய: ।
ஸம்ஸ்தலோகஸ்ய நிதானதா பஶுபாஶவிலக்ஷண: ॥

"எல்லையில்லாத ரமணீய குணங்களுக்கு ஆசிரயராயும், சமஸ்தலோகத்தையும் படைப்பவராயும், பசுபாசங்களுக்கு விலக்ஷணமாயுமுள்ளார்" என்றற்றொடக்கத்த வாக்கியங்களிற் சமஸ்த தோஷகளங்கமில்லாமையும், நிரதிசய மங்களாகாரத்தன்மையுமாம் இரண்டு குண லிங்கங்களும் அவருக்குப் பிரசித்தமன்றோ. ஆகலின், அவர் பிருதிவியாதிகளில் அந்தரியாமியாயிருந்தவிடத்தும், தோஷமில்லை. (கக)

பேதாதிதி சேந்ந ப்ரத்யேகமதத்வசநாத் (கூ. உ. கஉ)

(கூஉகூ) பேதமுண்மையான் அவர் (தோஷமுடையரா) எனின், அன்று; ஒவ்வோரிடத்தும் மறுப்புண்மையான்.

(ஆக்ஷேபம்) ஆன்மா இயற்கையாகவே பாவமின்மை முதலிய குணங்களையுடையனெயினும், தேவாதி சரீர சம்பந்தமுறுதலாம் அவஸ்தாபேதத்தினாற் கூறப்பட்ட தோஷம் எங்ஙனம் அவனுக்கெய்துகின்றதோ, அங்ஙனமே சிவபெருமானுக்கும்

யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் (பிரு. ௩. ௭. ௩)

"அவருக்குச் சரீரம் பிருதிவி" எனச் சரீரசம்பந்த முறுதலாம் அவஸ்தா பேதத்தினால் அத்தோஷம் எய்தாதோ எனின்,

(உத்தரம்) அன்று; அவருக்கு ஒவ்வோரிடத்தும் தோஷமின்றென மறுக்கப்படலான்.

யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் (பிரு. ௩. ௭. ௩)

"அவருக்குப் பிருதிவி சரீரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே

ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: (பிரு. ௩. ௭. ௩)

"அவர் உன் அந்தரியாமியாகிய அமிர்தர் (சிவன்)" என அந்தரியாமிக்கே தோஷமின்மை கூறப்படுகின்றது. ஆன்மாவுக்கோ எனின், (௩. ௨. ௪) பரசங்கற்பத்தினால் அதன் சொரூபம் மறைக்கப்பட்டதெனக் கூறப்பட்டது. (௧௨)

அபிசைவமேகே (௩. ௨. ௧௩)

(௩௨௭) மேலும் அங்ஙனஞ் சிலர் கூறுகின்றனர்,

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி।
(முண். ௩. ௧. ௧)

"அழகிய இரு பறவைகள் நண்பாய் எப்போதும் பிரியாது ஒரே மரத்தில் இருக்கின்றன; அவற்றுள் ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று சுருதிகூறுமாறு, ஒரே சரீரத்தில் ஆன்மாவும் சிவபெருமானும் வசித்தாலும், ஒன்று தோஷத்துக்குச் சம்பந்தமுறுவதாயும், மற்றது தோஷசம்பந்தமுறாததாயும் இருத்தலே பேதமாம். ஆகலின், ஆன்மாவைப் போலச் சிவபெருமான் தோஷத்துக் காளாகார், (௧௩)

ஆன்மாவும் சிவபெருமானும் சரீரத்திருப்பினும், இருப்பிலே பேதமுளதாம் எனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

அரூபவதேவ ஹி தத்ப்ரதாநத்வாத் (௩. ௨. ௧௪)

(௩௨௮) அவர் அரூபம் போலவே உள்ளார்; அது (ரூபம்) அவரைப் பிரதானமாய்க் கொண்டமையான்.

பரப்பிரமமாகிய அந்தச் சிவபெருமான் தேவாதி சரீரங்களிலே சரீரியாயிருந்தாலும் ரூபமில்லாப் பொருள்போலவேயுளர்; எதனால்? அவர் முக்கியமாய் நாமரூபங்களைப் படைத்தலான். அங்ஙனமே சுருதியும்,

ஆகாஶோ வை நாம நாமரூபயோர்நிர்வஹிதா தேயதந்தரா தத்ப்ரஹ்ம (சாந். அ. ௧௪. ௧)

"ஆகாயம் எனப்படுபவர் நாமரூபங்களைப் படைப்பவராகின்றனர்; இந்த நாமரூபங்களுள்ளே உள்ளது அந்தப் பிரமம்" என்று கூறுகின்றது. நாமரூபமத்தியிலேயுள்ள அவர் அந்த ரூபகாரியங்களினற் றொடக்குண்ணுதுளார். அவர் அவற்றின் மத்தியிலே உள்ளார் என்றமையான், அவர் சுவாதந்திரியமாயுள்ளார் என்று கூறப்பட்டது. ஆன்மா கன்மபலந் துய்க்குமாறே சரீரத்தில் வசிக்கின்ருன். ஆகலின், அவ்விருவர்க்கும் பேதம். (௧௪)

ப்ரகாஶவச்சாவையர்த்யாத் (௩. ௨. ௧௫)

(௩௨௧) பிரகாசம் போன்றும் (அவர் திவ்யகுணங்களுடையர்), சுருதிகள் வியர்த்தமில்லாமையான்.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். ௨. ௧)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்ம" என்னும் வாக்கியம் வியர்த்தமில்லாமைபற்றி, சுவப்பிரகாசமுண்மையாற் பிரமம் ஞானரூபம் எனப்படுகின்றதன்றோ; அங்ஙனம்

நிஷ்களம் நிஷ்க்ரியம் ஶாந்தம் (சுவே. சு. ௧௯)

"நிஷ்களம், நிஷ்கிரியம், சாந்தம்" எனவும்,

அபஹதபாப்மா (சாந். அ. ௧. ௫)

"பாவமில்லாதவர்" எனவும்,

ஸத்யாத்ம ப்ராணாராமம் (தைத். ௧. சு. ௨)

"சத்தியான்ம பிராணாராமம்" எனவும்,

மந ஆநந்தம் (தைத். ௧. சு. ௨)

"மன ஆனந்தம்" எனவும்,

யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் (முண். ௧. ௧. ௯)

"சர்வஞ்ஞரும், யாவும் அறிபவரும்" எனவும்,

ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ: (சுவே. சு. ௧௬)

"பிரதானம் க்ஷேத்திரஞ்ஞன் என்னும் இரண்டுக்கும் பதியாகிய குணங்களையுடையர் ஈசர்" எனவும்,

பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே (சுவே. சு. ௮)

"அவர் நாநாப் பிரகாரமாயுள்ள பராசத்தியுடையர் என்று கூறப்படுகின்றனர்" எனவும்,

கய கஸாத³உச்யதே ஹோதேவோ யஸ்ஸர்வாந்பாவாந்பரித்யஜ்ய ஆத்மஜ்ஞாநயோகைச்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாது³ச்யதே மஹாதேவ:।

(அதர்வசிரசு)

"எதனால் அவர் மகாதேவர் எனப்படுகின்றனர்? சமஸ்த இயல்புகளெல்லாம் விடுத்துப் பரமான்மஞானயோகைசுவரியத்தினால் மகத்தாயிருத்தலின் அவர் மகாதேவர் எனப்படுவர்" எனவும் போந்த நூற்றுக்குமேலாய சுருதி வாக்கியங்கள் வியர்த்தமாகாமையின், கூறுஞ் கல்யாணகுணங்களுக்கு ஆஸ்பதமாயுள்ளது பிரமம் என இரு லிங்ககுணங்களே (எய்திய). (கரு)

ஆஹ ச தந்மாத்ரம் (சு. உ. கசு)

(ருருO) (சுருதியும்) அதனை மாத்திரம் கூறுகின்றது.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்ம" என்னுஞ் சுருதி பிரமத்துக்கு முடிவிறந்த ஞானமாத்திரத்தையே கூறுகின்றது. பிற குணங்களை அது மறுக்கின்றிலது; விசேஷமின்மையானும் விரோதமின்மையானுமாம். சுவர்ண கிரீடம் என்றளவிற் சுவர்ணரூபமாத்திரையே பேசியதன்றி, அதிலே பதிக்கப்பட்ட இரத்தினாதிகளை இல்லை என்று மறுக்கவில்லை; அங்ஙனமே ஈண்டும் சத்தியம் ஞானம் அனந்தம் என இயல்பாகவே மகாப்பிரகாசரூபத்தினாற் பரப்பிரமத்துக்குப் பரம ஞானாகாரமாத்திரையே கூறும் சுருதியானது, பிரமத்துக்குப் பின்னர்த் (தைத். உ. க) கூறும் (விபச்சித்தை) சர்வஞ்ஞதையை எங்ஙனம் மறுக்க வல்லதாம்? பற்பல வஸ்து சமூகங்களைப் பார்த்து அறியும் ஞானம் எவர்க்குளதோ, அவர் விபச்சித் எனப்படுவர். ஆகலின் விரோதமில்லை. (கசு)

த³ர்ஶயதி சாதோ² அபி ஸ்மர்யதே (சு. உ. கஎ)

(ருருக) சுருதியும் (அதனைக்) கூறுகின்றது; பின் மிருதியுமாம்.

யாண்டும் ஹேயகுணமில்லாமையும் கல்யாணகுணமுடைமையுமாக உபயலிங்கத்தையும் கூறுகின்றது மங்களசுருதி.

ஆகாஶஶரீரம் ப்³ரஹ்ம (தைத். க. சு. உ)

"ஆகாசசரீரம் பிரம்ம"

ஸத்யாத்ம ப்ராணாராமம் மந ஆநந்த³ம் (தைத். க. சு. உ)

"சத்தியான்ம பிராணாராமம், மன ஆனந்தம்"

ஶாந்திஸம்ருத்³த⁴ம் (தைத். க. சு. உ)

"சாந்தியினால் நிறைந்த சிவம்"

𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌮𑌮𑍃𑌤𑌮𑍍 (தைத். க. சு. உ)

"ப்ரர்சினயோக்கியனே, தியானி" எனச் (சுருதி கூறுகின்றது). யாண்டும் பிரகாசிப்பதால் ஆகாயம் பிரகாசமெனப்படும்; இந்த ரூபம் சிதம்பரம்; (அது) சத்தியான்ம சத்தாரூபமாயுள்ளது. ஆன்மாவிலே (தம்மிலே) ஆனந்தமன்றிப் பாஹ்யத்தில் அன்றும் என்பது பிராணாராமம். மனசிலே ஆனந்த மன்றிப் பாஹ்யகரணங்களிலன்றும் என்பது மனஆனந்தம். ஈண்டு மனம் என்றது ஞானம் எனப்படும் உட்கரணமென்று கூறப்படுகின்றது. பாஹ்ய கரணமில்லாமல் அபரோக்ஷமாகிய சகல பாஹ்யவஸ்து விலாசத்தினாலும், நித்திய நிஷ்களங்கத்தினாலும் சர்வஞ்ஞதையுடையது பிரமம் எனப்படுகின்றது; இதனால் அபரிமித சொரூபானந்தானுபவமே மன ஆனந்தம். இராகத்துவேஷ முதலிய இழிந்த குணங்கள் முற்றுமில்லாதது சாந்தி; அதினால் நிறைந்து சமஸ்ததோஷகளங்கமில்லாதிருத்தலாற் சாந்தி சமிர்த்தம் எனவும், அநாதிமுத்தராதலின் அமிர்தம் எனவும் படுவர். அவர் சத்தியஞானரூபமுடையர், அவர் சர்வஞ்ஞர்; ஆன்மாவின் நிரதிசய ஆனந்தசத்திவிலாசம் உடையர்; சமஸ்ததோஷமில்லாதவர்; இங்ஙனம் (சுருதி) யானது பரப்பிரமம் உபயலிங்கமுடையதெனக் கூறுகின்றது. அங்ஙனமே,

𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 (சுவே. ௬. ௧௯)

"நிஷ்களம் நிஷ்கிரியம் சாந்தம்"

𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌹𑌂 𑌪𑌾𑌪𑌨𑍁𑌦𑌂 𑌭𑌗𑍇𑌶𑌮𑍍 (சுவே. ௬. ௬)

"தருமத்தைத் தருபவரும், பாவத்தைத் துரப்பவரும், பகேசருமாயுள்ளார்"

𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 (சுவே. ௬. ௭)

"ஈசுவரருள்எல்லாம் பரமாகிய மகேசுவரர்" என்றற்றொடக்கத்த சுருதிகள் உபயலிங்கமுடையது பிரமம் என்று கூறுகின்றன.

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌲 𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃।
𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑌰𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃।
𑌅𑌥𑌵𑌾 𑌅𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌗𑍁𑌣𑍈𑌕𑌘𑌨 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌶𑌿𑌵 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑌿𑌭𑌿𑌃॥

(வாயு. பூ. ௨௮: ௨௮, ௨௯)

"விசேடித்து அநாதிமலத்தொடக்கில்லாது அத்தியந்த பரிசுத்தான்மாவாய்ச் சர்வவியாபகராயிருத்தலிற் சிவன் எனப்படுவர்; அனந்தகல்யாணகுணங்களால் நிறைந்த நிதியாகிய ஈசுரராதலின் சிவன் எனப்படுவர் என்று சிவ தத்துவத்தை அறிந்த சத்துக்களாற் கூறப்படுவர்" என ஸ்மிருதியும் சிவ சப்த வாச்சியமாகிய பிரமம் உபயலிங்கமுடையதெனக் கூறுகின்றது. பரம்

விசுத்தமங்கள குணவாசகமாகிய சிவசப்தத்தினாலே சமஸ்ததோஷகளங்கமில்லையாய், நிரதிசய புருஷார்த்த குணங்களாற் பரிபூரணமாயுள்ளது பிரமம் எனக் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிரமம் சிவசப்தத்தினாற் கூறப்படுதலின் (பிரமத்துக்கு) உபயலிங்கஞ் சித்திக்கின்றது. (கஎ)

அத ஏவ சோபமா ஸூர்யகாதிவத் (ங. உ. கஅ)

(ஙஙஉ) ஆதலினாலும் உவமை பரிதிமுதலிய போல்.

பிருதிவிமுதலியவற்றில் யாண்டும் உளரேனும், சிவபெருமான் தோஷரகிதரும் கல்யாணகுணங்களுக்கு நிதியாயுமுள்ளார். ஆதலினாற்றான் சாஸ்திரங்களில் ஜலத்திலே சூரியாதிகள் போல என உவமை கூறப்படுகின்றது.

ஆகாசமேகம் ஹி யதா கடாதிஷு ப்ருதக்பவேத் ததாத்மைகோ ஹ்யநேகஸ்த ஜலாதாரேஷ்விவாம்ஶுமாந்|

"எங்ஙனம் * ஆகாசம் ஒன்றுதானே கடாதிகளிலே வெவ்வேறாயிருக்கின்றதோ, அங்ஙனமே பரமான்மா ஒருவரே வெவ்வேறு ஜலாதாரங்களிற் பிரதிவிம்பிக்குஞ் சூரியன் போல, பலவற்றிற் றங்கி வெவ்வேறாயிருக்கின்றனர்" என வாஸ்தவத்தில் (வெவ்வேறிடங்களின் மாத்திரம்) இருக்கும் ஆகாயமும், (வெவ்வேறு பிரதிவிம்பங்களிலே வாஸ்தவமாகவில்லாத) சூரியனுமென இரு உபமானங்கள் எடுத்தாளப்பட்டன. இந்த அபிப்பிராயத்தினாலே, ஏகமாய ஆகாயம் குடமுதலிய வெவ்வேறிடங்களில் வெவ்வேறாய் வாஸ்தவத்தில் இருப்பது போல, ஏகராகிய சிவபெருமானும் பிருதிவி ஆன்மா முதலியவாம் ஒவ்வோரிடங்களில் வேறுவேறாக வாஸ்தவமாகவே உளர். சிவபெருமானும் அநேக வஸ்துக்களில் வாஸ்தவமாக உளராதல் பொருத்தமாகின்றது. இதுபற்றியே ஆகாயவுபமானம் (போந்தது). ஜலாதாரங்களில் வாஸ்தவமாய் உளதாகாத சூரியன் விகாராதி தோஷமடையாதவாறுபோல, சிவபெருமான் பிருதிவிமுதலியவைகளில் உளராயினும், அவற்றின் விகாராதி தோஷங்கள் அவர்க்கின்று. சர்வாந்தரியாமியாயுள்ள சிவபெருமான் தோஷமுறாமலும், சொரூபகுணம் குறைவுறாமலும் உளராயினர்; இதுபற்றிச் சூரியோபமானம். இங்ஙனமே ஆகாயாதி உவமையினாற் சர்வான்மாவாகிய சிவபெருமானுக்கு உபயலிங்கம் உண்டென்று சித்தித்தது. (கஅ)

ஈண்டுச் சூத்திரகாரர் ஆசங்கிக்கின்றனர்.

அம்புவதக்ரஹணாத்து ந ததாத்வம் (ங. உ. க௯)

---

* ஈண்டு ஆகாய ஆதித்திய உபமானங்களை எக்கருத்திலே சைவபாஷ்யகாரர் உபயோகிக்கின்றார் என்பதுணர்ந்து தெளிந்து மாயாவாதிகூற்றினால் மயங்கார் சைவர்.

(ஙஙங) ஆயின் நீரிற்போற் கொள்ளாமையின், அது அங்ஙனமின்று.

(ஆக்ஷேபம்) நீரிலே சூரியன் அபரமார்த்தமாகக் கொள்ளப்படுவது போலல்லாமற் பிருதிவியாதிகளிற் சிவபெருமான் பரமார்த்தமாகக் கொள்ளப்படுதலின், அவருக்கு எங்ஙனம் நிர்த்தோஷத்துவமாம் என்று ஆசங்கிப்பின், (கக)

(உத்தரம்) அதற்குப் பரிகாரம் கூறப்படுகின்றது.

வ்ருத்திஹ்ராஸபாக்த்வமந்தர்பாவாதுபயஸாமஞ்ஜஸ்யாதேவம் ॥ (ங. உ. உ0)

(ஙஙச) வளர்ச்சி குறுக்கல் இல்லை; உள்ளே உளதாகலின். இரண்டு உவமையும் சாமஞ்சசமாதலினாலும், அங்ஙனம் ஒத்த இடத்தில் (உவமைகள்) காணப்படலானும்.

மேலைச் சூத்திரத்துப் போந்த ந (இல்லை) என்னும் மொழி ஈண்டு அநுவர்த்திக்கின்றது. வாஸ்தவத்திற் பிருதிவியாதிகளிலே அந்தர்ப்பாவமாயிருப்பினும் சிவபெருமானுக்கு அவற்றுக்குள்ள வளர்ச்சி தேய்வுகள் இல்லை. மேலே உரைத்த இரு திருஷ்டாந்தக்கொள்கைகளின் பொருத்தத்தினாலேதான் இங்ஙனம் பெறப்படுகின்றது. (பிரதிவிம்பத்தில்) உண்மையில் இராத சூரியனும், எப்பொருள்களினும் உண்மையாயிருக்கும் ஆகாயமுமாம் இரண்டு உவமைகளாற் கொள்வது சிவபெருமான் எப்பொருள்களினும் உளரேனும் இல்லாதவர்போல அவற்றின் ஸ்ரேஷத்தினற்றொடக்குறாதிருப்பர் என ஞாபகப்படுத்தற்காம். அங்ஙனமே "சந்திரன் போன்ற முகம்" என்பதிலே போலச் சில விசேஷதருமசாமியத்தைக் காட்டும்பொருட்டே உவமைகள் உபயோகிக்கப்படுகின்றன. ஆதலாற் பிருதிவி முதலிய பொருள்களிலே பரமார்த்தமாக அவர் உளரேனும், அவர்க்கு உபயலிங்கம் உளதாம் என்பது சித்திக்கின்றது. இல்லையேல்,

அச்வ இவ ரோமாணி விதூய பாபம் (சாந். அ. கங. க)

"குதிரை உரோமங்களை உதறிவிடுதல் போலப் பாவங்களை உதறி" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் குறிக்கப்பட்ட சில தருமத்தின் ஒற்றுமை பற்றியே திருட்டாந்தம் காணப்படுகின்றது. ஆதலின், குறிக்கப்பட்ட தருமங்களின் ஒற்றுமையினற் பிரமம் உபயலிங்கமுடையதென்பது சித்திக்கின்றது. (உ0)

(சு) பிரகிருதைதாவத்துவாதிகரணம்,

உபயலிங்கமும் பொருந்தாதென்பதைச் சூத்திரகாரர் ஆசங்கித்துக்கூறுவாராயினர்.

ஶ்ரக்ருதைதாவக்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூயஃ।
(ரு. உ. உக)

(ருருநி) அவர் இயல்பு இவ்வளவென்பதைச் சுருதி மறுத்து, பின்னரும் கூறுகின்றது.

மேலே அதிகரணத்திற் பிரமம் இரண்டு இலிங்கமுடையதெனச் சாதிக்கப்பட்டது. அது மறுக்கப்பட்டதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச।
(பிரு. ச. ரு. க)

"மூர்த்தமும் அமூர்த்தமுமான இரண்டு ரூபமே பிரமத்துக்குள்ளது" எனப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய வடிவாகிய மூர்த்தாமூர்த்தப்பிரபஞ்ச ரூபத்தைப் பிரமத்தின் ரூபம் எனக் கூறிச் சுருதியானது பின்னரும்,

அதாத ஆதேஶோ நேதி நேதி (பிரு. ச. ரு. சு)

"ஆதேசம் இங்ஙனமன்று, இங்ஙனமன்று" எனக் கூறுகின்றது. ஈண்டு இதி (இங்ஙனம்) என்னும் மொழி மேலே கூறியதைக் குறித்தலான், பிரமத்துக்கு மேலே கூறிய மூர்த்தமும் அமூர்த்தமுமாம் பிரபஞ்சரூபத்துவம் நிஷேதிக்கப்படுகின்றதே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். "இங்ஙனமன்று" "இங்ஙனமன்று" என்றது பிரமம் பிரபஞ்சரூபம் என மேலே சித்தித்ததை நிஷேதித்ததன்று; முன் அறியப்படாததாய்ப் புதிதாய் விதித்ததொன்றை மறுப்பது பொருந்தாதாமாகலின். பின் அதன் பொருள்யாதோ எனின், இயல்பாக இத்துணை மாத்திரந்தான் பிரமம் (அதற்குமேல்) இல்லை என்னும் கூற்றை மறுத்தற்கே (நேதி நேதி—இல்லை இல்லை எனப்பட்டதென்று) கூறுவதே யுக்தம்; எதனால்?

நஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத்பரமஸ்த்யத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யமிதி ப்ராணா வை ஸத்யம் (பிரு. ச. ரு. சு)

"இங்ஙனமன்று என்று கூறப்பட்டவரினும் பரமானது ஒன்றுமில்லை; சத்தியத்தின் சத்தியம் என்னும் நாமதேயம் போந்தது; உயிர்கள்தான் சத்தியம்; இவைகளுள்ளே சத்தியம் அவரே" என முன்னர்க் கூறப்படாத குணசமூகங்களை மீட்டும் விதந்து சுருதி அடுத்துரைத்தலினால் (என்பது). ஈண்டு,

நஹ்யேதஸ்மாத் (பிரு. ச. ரு. சு)

என்னும் வாக்கியத்தில், இங்ஙனமன்று இங்ஙனமன்று என்றமையிற் குறிக்கப்பட்ட பிரமத்தினும் உயர்ந்ததொன்றில்லை எனக் கூறப்படுகின்றது.

ஸத்ய நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யமிதி (பிரு. ௪. ௩. ௬)

"பின்னர்ச் சத்தியத்தின் சத்தியம் என்றது (அவரது) நாமதேயம்" என்றும், ஆன்மாக்கள் தான் சத்தியம், அவர்களுள் இவர் சத்தியம் என அதின் (சுருதியின்) அர்த்தம் கூறப்படுகின்றது. (அஃதாவது) பிராணன்கள் எனப்படும் ஆன்மாக்கள் ஆகாயாதிபோல உற்பத்தியில்லாமையாற் சத்தியம் எனப்பட்டனர். அந்தச் சத்தியங்களுள்ளே (ஆன்மாக்களுள்ளே) இவர் சத்தியம்; சத்தியமாகிய ஆன்மாக்களின் ஞானம் போல் அவர் ஞானம் சங்கோச முதலியவின்மையின், "இங்ஙனமன்று, இங்ஙனமன்று" என்னும் வாக்கியமானது பிரகிருதமாகக் கூறப்பட்ட தருமம் இத்துணையதென்பதை நிஷேதிக்கப்போந்ததன்றி, பிரமத்துக்கு முன்னர்ச் சித்தித்த உபயலிங்கத்தையும் குறைக்கப்போந்ததன்றே;

(ஆக்ஷேபம்) "கடம் சத்தியம், படம் சத்தியம்" என்றற்றொடக்கத்தனவாக எப்பொருள்களினும் உள்ள இருப்புத்தான் பிரமம். "இங்ஙனமன்று" "இங்ஙனமன்று" என்று சுருதி நிஷேதித்தமை கடம் படமுதலியவற்றையாம் எனின், (௨௧)

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

தத³வ்யக்தமாஹ ஹி (௩. ௨. ௨௨)

(௩.௩.௬) அது அவ்வியக்தம் எனச் சுருதி கூறுகின்றதன்றோ.

பிரமரூபமானது பிரத்தியக்ஷமுதலியவற்றானும், பிற பிரமாணத்தினும் வெளிப்படாது.

ந ஸந்த்³ருஶே திஷ்ட²தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் ஹ்ருதா³ ...... க்லுப்த: (கட. ௬. ௯)

"அவர் ரூபம் கண்ணுள் நிற்கின்றிலது; *கண்ணினால் எவரும் அவரைப் பார்க்கின்றிலர்; அருளினால் (ஹ்ருதா³) அவர் வெளிப்படுகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதி கூறுகின்றது.

ஆகலின், பிரத்தியக்ஷாதியினால் வெளிப்பட்ட இருப்பானது பிரமமாகாது. (௨௨)

பிரமசொரூபத்தைக் கிரகிக்கும் ஏதுக் கூறுகின்றனர்.

அபி ஸம்ராத⁴நே ப்ரத்யக்ஷாநுமாநாப்⁴யாம் (௩. ௨. ௨௩)

---

*" உளக்கணுக் கல்லா தூன் கணுக்கோளித்து "
(பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை)

(௩௩௭) மேலுஞ் சுருதி ஸ்மிருதிப்பிரகாரம் *தியானத்தில் (வெளிப்படுகின்றனர்).

மேலும் தியானரூபமாம் ஞானத்தினால் நன்றாக ஆராதித்தலாற் பிரம சொரூபம் பற்றப்படுகின்றது. தங்களைப் பிரமம் என்று (உபசரிதமாகப்) பிரமபாவனை செய்பவர்களுக்குப் பிரமத்தின் சொரூபம் வெளிப்பட யோக்கியமாகின்றதெனச்சுருதி ஸ்மிருதிகளினால் அறியப்படுகின்றது.

𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨। 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍 (கட. ௨. ௨௩)

"இந்தப் (பரம) ஆன்மாவானவர் வேதாத்தியயனத்தினாலேனும், புத்தியினாலேனும், அநேக சிரவணத்தினாலேனும் எய்தார்; எவனை இவர் விரும்புகின்றாரோ, அவனால் அவர் அடையப்படுகின்றனர்; அவனுக்கு (பரம) ஆன்மாவானவர் தமது ரூபத்தைப் புலப்படுத்துகின்றனர்"

𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 (முண். ௩. ௧. ௮)

"தியானஞ் செய்பவன் நிஷ்களமாக அவரைப் பார்க்கின்றனன்" என்றற்றொடக்கத்தனவாகச் சுருதியும்

𑌨𑌾𑌸𑍌 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌷𑌯𑌃।

"இவர் பிரத்தியக்ஷவிஷயத்தினரல்லர்" என்றற்றொடக்கத்தனவாக ஸ்மிருதியும் போந்தன. (௨௩)

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌦𑌿𑌵𑌚𑍍𑌚𑌾𑌵𑍈𑌶𑍇𑌷𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍।
(௩. ௨. ௨௪)

(௩௩௮) பிரகாச முதலியவற்றிற் போற் பேதமில்லை; (தியானத்) தொழிலை இடையீடின்றி அப்பியசித்தலிற் பிரகாசமும் எய்தும்.

இடையீடில்லாத தியான ஆராதனையினாலே எவர்களுக்குப் பிரமம் பிரகாசிக்கின்றதோ, அவர்களுக்கு அந்தப் பிரமதரிசனவாயிலாக விஷயீகரித்தலிலே அந்தப் பிரமஞானனந்தம் ஜகதீசுவரத்துவம் என்பன பேதமின்றி எய்துகின்றன. அங்ஙனமே,

𑌅𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿 (பிரு. ௩. ௪. ௧௦)

---

* அருப்புப்போன் முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்லிட்டமாய்த்
திருப்புத்தூரானைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றினுமண்ணிக்குங்காண்மினே.

(அரிசிற்கரைப்புத்தூர். திருக்குறுந்தொகை. நா. ௫)

"*நான் மனுவாயிருந்தேன்; சூரியனாகவும் இருந்தேன்" (என்று இருஷி வாமதேவர் கண்டுணர்ந்தார்),

தம் ஸாஸாயு ஙம்ரு த ஸுவாஸ்வ (கௌஷீ. ங. உ)

"நீ என்னை ஆன்மாவாகவும் சிவமாகவும் உபாசி" (என்று கூறினவன் இந்திரன்)

(க) வாமதேவர், (உ) கிருஷ்ணர், (ங) அகஸ்தியர், (ச) விசுவாமித்திரர் என்போர் சிவோகம்பாவனையினாலோங்கிய சிவபக்தர்:—

(க) வாமதேவர்:—

இந்தப் பிருகதாரணியத்திலே மூன்றும் அத்தியாயத்து நான்காம் பிராம்மணத்துப் பத்தாம் மந்திரத்திலே (பிரு. ங. ச. க0), வாமதேவமுனிவர் "மனுவாயினேன் சூரியனாயினேன்" என்னும் பாவனை செய்தார் என்று கூறப் பட்டவிடத்து, "அஹம்பிரம்மாஸ்மி" என்னும் மகாவாக்கியபாவனையும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த வாமதேவமுனிவர் ஏகான்மவாதியா? வைணவரா? சைவரா?என உபப்பிருங்கணவாயிலாக ஆராயப்புகின்,

ஸாயு ஸாயு மஹாஹா முவாமெஹவ ஸுநீஙாஙு|
ஸுதீவ ஙிவெ ஸக்த ஙிவஜ்ஞாநவதாம் வரஃ (கைலா. அ: க)

"நன்று! நன்று!! மகாபாகரும், முனீசுவரருமாகிய வாமதேவரே! நீவிர் சிவஞானமுடையவருட் சிரேட்டராய், சிவபெருமானிடத்திலே மிகுந்த பத்தியுடையராய் உள்ளீர்" என்றற்றொடக்கத்தனவாக (முருகப்பிரான்) வாமதேவரை விளித்து அவருக்கு வைதிக பாசுபததீக்ஷை செய்து, சிவாத்துவிதம் உபதேசித்து, பிரணவத்தின் மந்திரார்த்தம், யந்திரார்த்தம், தேவதார்த்தம், பிரபஞ்சார்த்தம், சிவசூத்திரார்த்த முதலியவற்றை உபதேசித்தாராகக் கைலாச சங்கிதை எட்டாம் அத்தியாயந் தொடங்கிப் பதினொராம் அத்தியாயம் இறுதியாகக் கூறப்படலான், வாமதேவர் ஏகான்மவாதியருமன்று, வைணவருமன்று, பின் சிவபக்தரே; (க. க. ஙக-ஆம்) சூத்திரபாஷ்யத்தில் இந்திரனது பிரமபாவனை கூறப்பட்டுள்ளது.

(உ) கிருஷ்ணர்:—

உவமந்யுஸு க்ருஷ்ணாய தீக்ஷாமெதாஙுகாஙஹ|

"உபமன்னியு என்பார் இந்தப் பாசுபததீக்ஷையைக் கிருஷ்ணர்க்கு உபதேசித்தார்" என்று சனற்குமாரசங்கிதையைச் சார்ந்த காளிகாகண்டத்து முப்பதிரண்டாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

உமெதா ஹி தெவகீஸுநு ஸுவமந்யு ஙதீக்ஷயஃ|
ஐஙஙிவாமு ஸாஜ்ஞாஸு ஸ க்ருஷ்ண ஜெவாயி தந்வாஃ||
(சிதம்பரமான்மியம், உச: ஙச, ஙரு)

"உபமன்னியு என்பார் தேவகி புதல்வராகிய கிருஷ்ணர்க்குத் தீக்ஷை செய்தார்; அவராற் சிவாகமார்த்தங்களையும் அந்தக் கிருஷ்ணர் அறிந்துகொண்டார்" என்று சிதம்பரமான்மியத்து இருபத்துநான்காம் அத்தியாயத்திற் காணப்படலானும்,

ஐஷாநீம் ஸஸ ஸக்தா மு்ரா உவமெந்ரா ஸஹாநஃ|
ஙிவதீக்ஷாஸு நிவ்ருத்தா ஙிவாமுஸ விஙாஙஷாஃ||
(உபதேசகாண்டம், அ0: ஙங, ஙச)

என்றற்றொடக்கத்த சுருதிகளிற் பிரமோபாசகர்கள் அந்த ஐக்கிய பாவனையினால், அந்தப் பிரமத்தின் அசாதாரண குணங்களை அடைகின்றனர் எனக் காணப்படுகின்றது.

திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகமைஶ்வரம்|

(பகவற்கீதை. ௧௧. ௮)

"இப்பொழுது எனது பக்தசிரேட்டரும், மகாத்துமாவும், சிவாகமஞ்ஞருமாகிய உபமன்னியுவாயிலாக அவர்க்கு (கிருஷ்ணர்க்கு) சிவதீக்ஷை முற்றியது" எனச் சங்கரசங்கிதை உபதேசகாண்டத்து எண்பதாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

நமஶ்சகார தம் த்ருஷ்ட்வா தௌம்யாக்ரஜமஹாத்மஜ:|
பஹுமானேன சைவ க்ருஷ்ண: த்ரி: க்ருத்வா சைவ ப்ரதக்ஷிணம்|
தஸ்யாவலோகநாதேவ முநே: க்ருஷ்ணஸ்ய தீமத:|
நஷ்டமேவ மலம் ஸர்வம் காயஜம் கர்மஜந்ததா|
பஸ்மநாக்னிரிதி ஸ்நானம் க்ருத்வா உபமன்யுர் மஹாத்யுதி:|
தஸ்மிந்நிதி விப்ரேந்த்ரா யாமந்த்ராதிபி: க்ரமாத்|
திவ்யம் பாஶுபதம் ஜ்ஞானம் ப்ரததௌ ப்ரீதமாநஸ:||

(இலிங்கபுராணம். பூ. ௧௦௮: ௫—௮)

"முனிவர்களே! தௌமியர் தமையனாராகிய அந்த உபமன்னியுவைக் கிருஷ்ணர் நமஸ்கரித்து, வெகுமானத்தோடு மும்முறை வலஞ் செய்தார்; அந்த முனிவருடைய பார்வையினாலே புத்திமானாகிய கிருஷ்ணர் காயத்தினாலும் கர்மத்தினாலும் இயற்றிய பாவம் அனைத்தும் ஒழிந்தன; "அக்கினி" என்றற்றொடக்கத்த மந்திரங்கொண்டு முறைப்படி மகாப்பிரதாபமுடைய உபமன்னியுவானவர் பஸ்மோத்தூளனஞ் செய்து, பிரிய மனசோடு திவ்ய பாசுபததீக்ஷைசெய்தார்" என்று இலிங்கபுராண பூருவபாகத்து நூற்றெட்டாம் அத்தியாயத்தில் உரைக்கப்படலானும்,

பகவந் ஶ்ரோதுமிச்சாமி தேவ்யை தேவேந பாஷிதம்|
திவ்யம் பாஶுபதம் ஜ்ஞாநம் விபூதிம் சாஸ்ய க்ருத்ஸ்நஶ:||

(வாயு. பூ. ௨: ௬)

"(கிருஷ்ணர் உபமன்னியுவை நோக்கி) பகவானே! சிவபெருமானால் உமாதேவியார்க்குக் கூறப்பட்ட திவ்ய பாசுபதஞானமும் அவருடைய விபூதியுமாம் அனைத்தையும் கேட்கவிரும்புகின்றேன்" என்று வேண்ட, அதற்கு உபமன்னியு விடையாக இறுத்தமையும், அவர்க்குத் தீக்ஷை செய்தமையும் பிறவும் வாயுசங்கிதை உத்தர பாகத்தில் மிகவிரிவாய்க் கூறப்படலானும்,

ஏவமுக்த்வா ததௌ ஜ்ஞாநம் உபமன்யுர் மஹாமுநி:|
வ்ரதம் பாஶுபதம் யோகம் க்ருஷ்ணாயாக்லிஷ்டகர்மணே||

"இந்தப் பிரகாரம் மகாமுனிவராகிய உபமன்னியு (சிவபெருமானுடைய மகிமைகளைக்) கூறியருளி, கடினமில்லாது கர்மத்தை முற்றுவிக்கும் கிருஷ்ணர் பொருட்டுப் பாசுபதயோகதீக்ஷாஞானத்தைக் கொடுத்தனர்" என்று கூர்மபுராணம் இருபத்தைந்தாம் அத்தியாயத்தினும், தருமசங்கிதை இரண்டாம் அத்தியாயத்தினும் விளக்கப்படலானும்,

"நான் உனக்குத் திவ்வியநேத்திரத்தைக் கொடுக்கின்றேன்; என் ஐசுவரிய யோகத்தைப் பார்" என்றற்றொடக்கத்த வாக்கியங்களிலே, கிருஷ்ணர் முதலாயினோர்க்கு அந்த ஐக்கியபாவனையினால் அந்த ஜகதீசுரத்துவம் பிரகாசிக்கின்றதெனக் காணப்படுகின்றது. பிரம பாவனாப்பியாசத்தினாலேதான் விஸ்வாமித்திரர் அகஸ்தியர் முதலாயினோர் (முறையே) மற்றோர் சுவர்க்கத்தைச்

ततोऽष्टमे तु विप्रेण दीक्षितोऽहं यथाविधि।

(பா. அநுசாசனிபருவம், கச: ருஎச)

"அஷ்டமியிலே உபமன்னியுவினால் விதிப்பிரகாரம் தீக்ஷிக்கப்பட்டேன்" என்று வைசம்பாயனர் உதிஷ்டிரர் பீஷ்மர் என்போர்க்குக் கிருஷ்ணர் உரைத்ததாக மகாபாரதம் அநுசாசானிபருவத்துப் பதினான்காம் அத்தியாயத்திற் பேசப்படலானும்,

स एष रुद्रभक्तश्च केशवो रुद्रसम्भवः।
सर्वरूपं भवं ज्ञात्वा लिङ्गेऽर्चयति यः प्रभुम्॥

(பார. துரோணபருவம், உ0உ: கூச)

"சிவபெருமானினின்று உதித்தவரும், சிவபக்தருமாகிய அந்தக் கேசவர் உலகனைத்துக்கும் காரணம் சிவலிங்கமென்றறிந்து எப்பொழுதும் பிரபுவாகிய சிவபெருமானை அர்ச்சிக்கின்றனர்" என்றும்,

षष्टिं वर्षसहस्राणि तावन्त्येव शतानि च।
अशोषयत्तदात्मानं वायुभक्षोऽम्बुभोजनः।
स तेन तपसा तात ब्रह्म भूत्वा यदाऽभवत्।
तदा विश्वेश्वरं योनिं विश्वस्य जगतः पतिम्।
ददर्श दुर्दर्शं सर्वदेवेश्वरम्॥

(பா. துரோணபருவம், உ0உ: ருகூ, சக, சுஉ)

"அறுபத்தாறாயிரம் வருஷம் வாயு ஜலபக்ஷணஞ்செய்து, தம்மை ஒறுத்து, அந்தத் தபசினால் எப்போது பிரமமாயினரோ, அப்போது விசுவேசுவரரும் (விசுவ) காரணரும் விசுவமாகிய ஜகத்துக்குப் பதியாயினருமாகிய சர்வதேவேசுவர சிவபெருமானைத் தரிசித்தார்" என்றும் துரோணபருவத்து இருநூற்றிரண்டாம் அத்தியாயத்திற் கூறப்படலானும்,

அதனால் உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்படாததாய், இராமாநுஜரால் திருநாராயணபுரத்திலே இற்றைக்கு அஎ0 வருஷத்துக்கு முன்னே, (அஃதாவது) சக வருஷம் ஆயிரத்துக்குமேற் பன்னிரண்டு சென்ற பகுதானியவருஷத்திலே புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டதாயுள்ள திருமண்ணை நாராயணருக்கு ஓரிடத்தும் வைணவர் நாலாயிரப்பிரபந்தமானது ஏற்றிக் கூறாது,

भस्मधारणसम्पन्नो मद्भक्तो भविष्यति।

"விபூதிதாரண சம்பன்னனாயுள்ளான் எனது (சிவபிரானது) அடியானாவன்" என்று பிருகச்சாபாலோபநிடதம் (கு. கக) கூறியாங்கு, நாராயணரைச் சிவபக்தராகக் கொண்டு

[illegible]

சிருட்டித்தல், சமுத்திரத்தைக் கவளீகரித்தன் முதலிய செய்கைகளைச் செய்யச் சாமர்த்தியமுடையராகின்றனர். உலகத்திலே மாந்திரிகர் கருட மந்திராப்பியாசத்தினாலே கருடனுடைய அசாதாரணகுணத்தை அடைகின்றனர். ஆகலின், பிரமாஹம்பாவனை முற்றியபோது பிரமத்துக்குரிய அசாதாரண குண அம்சத்தின் விசேஷநிலை உபாசகர்க்கு எய்தும் என்பதில் யாதும் தடையில்லை.

"விளங்காநின்ற திரிபுண்டரத்தையுடையவரும், விபூதியினால் வெளுத்தவரும், மௌனமுடையரும், ஜடையுடையரும், மரவுரியுடையருமாகிய நாராயணர் இடையீடின்றி மனசிலே சந்திர சூடராகிய சிவபிரானைச் சிந்தித்துப் பஞ்சாக்ஷரஞ்செபித்தார்" என்று பாரதத்தைச் சார்ந்த அரிவம்சத்திற் கூறப்படுவது கண்டு,

> "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
> பெரியகோலத்தடங்கண்ணன்" ....

எனத் திருவாய்மொழியில் (ச. கூ. சு) விபூதியையும்,

> "உடையார்ந்தவாடையன்கண்டிகையனுடைநாணினன்
> புடையார் பொன்நூலினன் பொன் முடியன் மற்றும் பல்கலன்
> நடையாவுடைத்திரு நாரணன்"

எனத் திருவாய்மொழியில் (கூ. ச. எ) உருத்திராக்ஷத்தையும் அவர்க்கேற்றிக் கூறினமையானும், சிவபெருமானுக்கு ஒன்றைச் சமர்ப்பிக்கின் அது அவரையே சாரும் என்றும், சிவனடியார்க்கு ஒன்றைச் சமர்ப்பிப்பின் அது அச்சிவனடியார்க்கும் சிவோகம்பாவனையினால் அவ்வடியாரிடத்துத் தயிரில் நெய் போல விளங்கப்பெறும் சிவபெருமானுக்குமாக ஈரிடத்தும் எய்தப்பெறும் என்பாராய்,

> படமாடுங் கோயிற் பகவற்கொன் றீயி
> னடமாடுங் கோயி னம்பர்க்கங் காகா
> நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயிற்
> படமாடுங் கோயிற் பகவற்க தாமே

எனத் திருமூலர் திருமந்திரத்திற் கூறியாங்கு,

> நிஶாயாஂ நைத்யிகஂ நைவேத்யமேவ பகவதஃ|
> ததஃ ஶ்ரீகண்டநாத வாஸுதேவாய ஸம்ப்ரயச்சத|
> ஸஂஸ்க்ருத்ய த்ர்யம்பகாஹாரஂ நைஶஂ தஸ்மை ந்யவேதயத்|

"அர்ச்சுனர் எப்பொழுதும் இராத்திரியிலே முக்கண்ணராகிய சிவபெருமானுக்கு (நிவேதிக்கப்படும்) இராத்திரி பலியைக் கொணர்ந்து அன்புபொருந்திய மனசுடையராய்க் கந்தங்களாலும் மாலைகளாலும் கிருஷ்ணரை அலங்கரித்து, மகாதேவர்க்குரிய இராத்திரியுபகாரத்தைச் செய்தார்" என்று துரோணபருவத்து எழுபத்தொன்பதாம் அத்தியாயத்து நான்காம் ஐந்தாம் சுலோகங்களினும்,

> தமுபஹாரஂ ஸுக்ருதஂ நைஶஂ நைத்யிகமாத்மநঃ|
> ததர்ஶ த்ர்யம்பகஸ்யாக்ரே வாஸுதேவநிவேதிதம்||

"அர்ச்சுனர் தாம் இராப்போதிலே தம்மால் வாசுதேவர்க்கு நிவேதிக்கப்பட்டவற்றைச் சிவபிரான் பக்கத்திற் கிடப்பக் கண்டார்" என்று அத்துரோணபருவத்து எண்பத்தோராம் அத்தியாயத்து இரண்டாம் சுலோகத்தினும் காணப்படலாலும், இப்பொருளை அடக்கி

ஆகலின் கடமுதலியவற்றிற் கூடியிருப்பது சந்மாத்திரமாய்ப் பிரத்தியக்ஷமாயுள்ள பிரமம் எனல் விருத்தமே; அப்பிரமத்தைச் சாக்ஷாத்காரம் பண்ணுதற்கு ஏதுவாயுள்ள நிதித்தியாசன முதலியவைகள் வியர்த்தமாகுமாதலினாலும், அதனை அப்பிரத்தியக்ஷமாய்க்கொண்டாலும் அப்படிப்பட்ட

தீர்த்தனுலகளந்தசேவடிமேற்பூந்தாமஞ்
சேர்த்தியவையேசிவன்முடிமேற்றான்கண்டு
பார்த்தன்தெளிந்தொழிந்தபைந்துழாயான்பெருமை
பேர்த்துமொருவராற்பேசக்கிடந்ததே.

என்று திருவாய்மொழியில் (௨. அ. ௬) கூறப்படுகின்றமையானும், அந்த வுண்மை கொண்டே சிவஞானபோதமாபாடியகாரர் "கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன்றிருமுடிமேற் காணப்பட்டன" என்றற்றொடக்கத்தனவாகக் கூறுகின்றமையானும்,

கிருஷ்ணர் தம்மையுந் தலைவரையும் உணர்ந்தோராகலிற் சிவோகம்பாவனையிற்றலைப்பட்டுச் சிவனாது விசுவரூபத்தை அர்ச்சுனர்க்குத் திவ்ய நேத்திரங்கொடுத்துத் தரிசிப்பித்தார் என்று காணப்படலானும் கிருஷ்ணர் ஏகான்மவாதியுமன்று, வைணவருமன்று, பின் சிவபக்தரேயாம்.

(௬) அகஸ்தியர்:—

ஶிவபாவநயா த்வமேவ ஶிவஸ்ய ஸாம்யமவாப்தவான் ।
தேஷாம் ஸமேத்ய ஸர்வே விஷமாஸ்ஸமாஸ்ததா ॥

"(எஞ்ஞான்றும்) சிவபாவனை செய்தமையாற் சிவபெருமானுக்குச் சமானமாய அவ்வகஸ்திய முனிவர் பொதியமலை சென்றபோது மேடுபள்ளமாய நிலவுலகமானது சமமாயிற்று" என்று சிவரகசியகண்டத்திலே சம்பவகாண்டத்து இருபத்துமூன்றும் அத்தியாயத்து முப்பத்து மூன்றுஞ் சுலோகத்திற் காணப்படலானும்,

மைத்ராவருணஸ்தாவதுக்த்வா வசனம் ப்ரகுபிதோऽப்ரவீத் ।
ஸமுத்ரமபிபத்ஸர்வம் ஸர்வலோகஸ்ய பஶ்யத: ।
பீதம் ஸமுத்ரம் த்ருஷ்ட்வா தேவா: ஸேந்த்ரா: ஸுராஸ்ததா: ।
விஸ்மயம் பரமம் ஜக்மு: ஸ்துதிபிஶ்சாப்யபூஜயன் ।

"மித்திரவர்ணருடைய புதல்வராகிய அகஸ்தியர் இவ்வார்த்தையைக் கூறிக் கோபமுற்றுச் சர்வலோகமும் பார்க்குமாறு சமுத்திரபானஞ் செய்தார்; இந்திரன் முதலிய தேவரெல்லாம் சமுத்திரம் பானஞ் செய்யப்பட்டுப்போனமை கண்டு மிக்க ஆச்சரியங்கொண்டு அவரை ஸ்தோத்திரஞ் செய்தார்" என்று வனபருவத்து நூற்றைந்தாம் அத்தியாயத்து மூன்றும் நான்காம் சுலோகங்களிற் கூறப்படுகின்றமையானும், அகஸ்தியர் சமுத்திரத்தைப் பானஞ் செய்தற்கு வன்மை கொடுக்கவல்ல சிவோகம்பாவனையில் முதிர்ந்த சிவபக்தரேயாம்.

தோன்றிலே அந்தப் பிரமகுணங்கள் காணப்படாமையானுமாம். ஆகலின், சந்மாத்திரப் பிரத்தியக்ஷம் பிரமம் அன்றென்றும், "இங்ஙனம் அன்று இங்ஙனமன்று" என்றது பிற அனைத்தையுமே நிஷேதிக்கின்றதென்றுங் கூறுவது பொருத்தமே. (௨௪)

---

(௪) விசுவாமித்திரர்:—

அரிச்சந்திரன் தந்தையாகிய திரிசங்கு என்பான் தான் தேகத்தோடு சுவர்க்கம் புகவேண்டித் தன் குருவாகிய வசிட்டரைப் பிரார்த்தித்தான்; அதற்கு அவர் கூடாதென்று மறுக்க, அவன் அவர் குமாரரிடஞ் சென்றான். அவர்களும் அது கூடாதென்று மறுக்க, விசுவாமித்திரரிடஞ்சென்றான். தாம் க்ஷத்திரியரேயாமாயினும் சிவோஹம்பாவனைத் தபோபலத்தினாற் பிராம்மணராயோங்கிய விசுவாமித்திரர் சரீரத்தோடு திரிசங்குவைச் சுவர்க்கத்துக்குப் போமாறு செய்ய, இந்திரன் "குருசாபம் பெற்ற மூடா! நீ இங்கே வருதல் கூடாது தலைகீழாக வீழ்க" என்று கூறி நீக்க, திரிசங்கு விசுவாமித்திரரை விளித்து, "சுவாமீ, காத்தருள்வீர்" என்று வேண்ட அதனை விசுவாமித்திரர் கேட்டு,

ரோஷஸம்ரக்தநயநஸ் திஷ்ட திஷ்டேதி சாப்ரவீத்|
ருஷிமத்யே ஸ தேஜஸ்வீ ப்ரஜாபதிரிவாபர:|
ஸ்ருஜந் தக்ஷிணமார்கஸ்தாந் ஸப்தர்ஷீநபராந் புந:|

"கோபங்கொண்டு, திரிசங்கே! நில்! நில்!!" என்று விரைந்து கூறி இருஷிகளுள்ளே தேஜசுடையரும் துவிதீயபிரமாவை நிகர்த்தவருமாகிய அவ்விசுவாமித்திரர் தக்ஷிணமார்க்கத்திலுள்ள சப்தரிஷிகளையும் (உடனே) படைத்துத் திரிசங்குவை அங்கே நிறுத்தினார்" என்று இராமாயணத்துப் பாலகாண்டத்து அறுபதாம் சர்க்கத்திற் கூறப்படலானும்,

பிந்தந்தி சைலாந் பிபந்தி ஸிந்தும் வ்யத்யாஸயந்தி க்ஷிதிமந்தரிக்ஷம்|
த்ருணீக்ருதப்ரஹ்மபுரந்தராணாம் கிம் துஷ்கரம் சங்கரகிங்கராணாம்||

"(சிவபக்தர்கள்) மலைகளைப் பிளக்கின்றார்கள்; மகோததியைக் குடிக்கின்றார்கள்; பூமியந்தரிக்ஷத்தை வேறாக்குகின்றார்கள்; பிரமேந்திரர்களைத் திருணமாய்க் கொள்ளும் அச்சிவபக்தர்களுக்கு எது தான் அசாத்தியம்"! என்று உபப்பிருங்கணத்திற் கூறப்படலானும், சுவர்க்கலோக மொழிந்து மற்றோர் துறக்கம் படைக்கவல்ல சிவோகம்பாவனையினாலோங்கிய விசுவாமித்திரர் சிவபக்தரேயாம்.

உபலக்ஷணையினாலே, க. ௩. உ௨-ஆம் சூத்திரபாஷ்யங் கூறியதினாற், கார்க்கி யாஞ்ஞவற்கியர் முதலாயினோரும், சாந்தோக்கிய பிருகதாரணியாதிகளிற் காணப்படும் ஜாபாலர் ஆதர்வணர் சுவேதாசுவதரர் முதலாயினோரும் (வைதிகசுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவப்பட வினா விடை கசுரு-ஆம் இலக்கத்திற் கண்டவாறு) வைதிக பாசுபத சிவபக்தர்களேயாம்.

உபயவ்யபதேசாத்த்வஹிகுண்டலவத் (ரு. உ. உரு)

(ருருக) ஆகலின் அவர் அனந்த குணங்களோடியைந்தவர்; ஆதலினாலன்றோ அவர் இயற்கை (இலிங்கம்).

பிரமோபாசகர்க்கும் அவரது ஞானனந்தம் பரமைசுவரிய முதலியன பிரகாசிக்கின்றமையான்,

த்வே வா ப்ரஹ்மணோ ரூபே (பிரு. உ. ரு. க)

"பிரமத்துக்கு இரண்டு ரூபம்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் பிரமம் மேலேயுரைத்த அனந்தகல்யாணகுணங்களோடியைந்தது என்பது சித்தமாகும். ஆகலின், பிரமத்துக்கு இரண்டு இலிங்கம் உண்டு.

(ஆக்ஷேபம்) பிரமத்துக்கு இரண்டு ரூபங்கள் உள்ளன என்றற்றொடக்கத்தனவாகச் சுருதி கூறியதிற் பிரபஞ்சம் பிரமத்தின் ரூபம் என்றது ஒன்றை மற்றொன்றாகக் கோடலாம் அத்தியாச சம்பந்தத்தினால் என்று கூறத்தக்கது; வேறுபிரகாரத்தினல் அதனைக் கூறல் கூடாமையின். ஆகலின்,

அதாத ஆதேசோ நேதி நேதி (பிரு. உ. ரு. சு)

"ஆதேசம் இங்ஙனமன்று, இங்ஙனமன்று" என்னுஞ் சுருதி அத்தியாசத்தினால் உளதாகக் (கொள்ளப்பட்ட) பிரபஞ்சத்துண்மையை மறுத்தவாறாம் எனக் கொள்வதே யுக்தம் என ஆக்ஷேபிக்க, (உரு)

(உத்தரம்) அத்தியாச சம்பந்தம்பற்றித் தொடராது தமது அபிமதப் பிரகாரம் கூறற்குமுன் முதற்கண்ணே வேறு (ருச0, ருசக-ஆஞ் சூத்திரங்களால் இரு) பக்ஷங் கூறுகின்றனர்.

உபயவ்யபதேசாத்த்வஹிகுண்டலவத் (ரு. உ. உசு)

(ருச0) இரண்டையுங் கூறுதலான், (அவர்) சர்ப்பமும் அதன் சுருளும் போல.

ஸர்வோ வை ருத்ர: (தைத். ஆரணி. க0. உச. சஉ)

"எல்லாம் உருத்திரர்"

த்யாவா பூமீ ஜநயந்தேவ ஏக: (தைத். ஆரணி. க0. க. ரு)

"ஆகாயத்தையும் பூமியையும் படைத்துத் தேவராகிய ஒருவர்" என்னுஞ் சுருதிகள் ஒன்றாயும் பலவாயும் இருக்கும் (சிவபெருமான்) இயற்கையைக் கூறினமையின், சர்ப்பம் சுருளாயேனும் நேரியதாயேனும் இருத்தல்போல,

த்வேவாவ ப்ரஹ்மணோரூபே (பிரு. ச. ரு. க)

"பிரமத்துக்கு இரு ரூபமுண்டு" என்றற்றொடக்கத்தவற்றாற் சிவபெருமான் பிருதிவி முதலிய மற்றைய ரூபங்களாயிருக்கும் விசேஷங் கூறப்பட்டது. (உசு)

ப்ரகாஶாஶ்ரயவத்வா தேஜஸ்த்வாத் (௧. ௨. ௨௭)

(௧௪௧) அல்லது ஒளியுடைமையால் (அது) பிரகாசமும் அதின் ஆசிரயமும் போல்.

பிரகாசமும் அதின் ஆசிரயமும் சொரூபத்திற் பேதமுளவாயினும், அவை ஒளி என்னும் தன்மைபற்றி ஒன்றாகக் கொள்ளப்படும். இங்ஙனம் பிரமமும் உலகமுதலியவும் (பிரமத்தின்) ஒரே சாதிக்குள் அடங்கினமையினாலாவது அவருக்குப் பூமி முதலியவாதல் எய்துகின்றது. (௨௭)

பூர்வவத்வா (௧. ௨. ௨அ)

(௧௪௨) அல்லது முன் போல.

இரண்டு பக்ஷத்துக்கும் வேறென்பதைக் காட்டுவது வா (அல்லது) என்பது. மேலே சித்வஸ்துவானது பிரகாசமாகிய ஜாதிகுணசரீரம் போல விசேஷசுபாவமாய், விசிட்டமாகிய (சிவனாது) ஏகதேச (அம்சமாகக்) கூறப்பட்டது; இங்ஙனம் அசித்வஸ்துவுக்குமாம். மேலே உரைத்த சம்பந்தமுளதாய் ஒரே ரூபமாயிருக்குங்கால்,

ஸர்வோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௧0. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரர்" என்றவாறு சித்தையும் அசித்தையும் ஒரே வார்த்தையில் அடக்கிவிடலாம். மற்றிருபக்ஷத்திலும் பிரமம் தோஷமுடையதென்பதைத் தவிர்த்தல் கூடாது.

யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் (பிரு. ரு. ௭. ௩)
யஸ்யாத்மா ஶரீரம் (மத்தியந்தினசாகை)

"எவர்க்குப் பிருதிவி சரீரம்; எவர்க்கு ஆன்மா சரீரம்" என்றற்றொடக்கத்த சுருதிகளானும்,

வித்யேதி சேதநாம் ப்ராஹுரவித்யாமசேதநாம்।
வித்யாவித்யாத்மகம் ஸர்வம் விஶ்வம் விஶ்வகுரோர்வபு:।
ஶர்வஸ்யைவ ந ஸந்தேஹோ விஶ்வம் தஸ்ய வஶே யத:॥

(வாயு. உத். ௬: ௬, ௭)

"சேதனத்தை வித்தை யென்றும், அசேதனத்தை அவித்தை என்றும் கூறுப; வித்தையும் அவித்தையுமாகிய சமஸ்தப்பிரபஞ்சமும் சந்தேகமின்றி விபுவாகிய விசுவகுருவின் (சிவபெருமானுடைய) சரீரமே; எதனாலெனின், பிரபஞ்சம் அனைத்தும் அவர் வசப்பட்டமையின்" என்றற்றொடக்கத்த ஸ்மிருதிப்பிரமாணங்களானும், சேதனப்பொருளும் அசேதனப்பொருளும் அஷ்டமூர்த்தியாகிய பிரமத்தின் வடிவம் என்பதும் சித்தமாயிற்று. (௨அ)

வ்யதிஷேயாச்ச (௩. ௨. ௨௯)

(௩௪௩) மறுத்தலினாலும்.

பிரமம் சேதநா சேதனங்களாயிருப்பினும், அவற்றின் குணமுடைய தன்றென்று,

நாஸ்ய ஜரயைதஜ்ஜீர்யதி (சாந். அ. க. நி)

"இதின் ஜரையினால் அது அழியாது"

அஸ்தூலமநண்வஹ்ரஸ்வம் (பிரு. ரு. அ. அ)

"ஸ்தூலமன்று, அணுவன்று, குறுக்கமன்று" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே கூறப்படுகின்றது. இஃதன்றி, பிரமம் சேதநா சேதனத்தோடுற்றாலும், அது நிர்த்தோஷமாயும், சமஸ்தமங்கலகுணங்களுக்கு ஆஸ்பதமாயுமுள்ளது; அஃதாவது, பிரமமாகிய சிவபெருமான் சேதநாசேதனத்துக்குக் காரணமாயிருப்பினும், அவற்றோடு கூடியிருப்பினும், அவர் விகாரம் அஞ்ஞான முதலிய அபுருஷார்த்தமொன்றுமின்றி, சர்வஞ்ஞதை, நித்தியதிருப்தத்துவம், அநாதிபோதத்துவம், சுவதந்திரத்துவம், அலுப்தசத்தித்துவம், அனந்தசத்தித்துவ முதலிய பரம புருஷார்த்தகுணங்களையும் எப்போதும் உடையராயுள்ளார் என்பது சித்தித்தது. (௨௯)

(எ) பராதிகரணம்.

ஈண்டுச் சகல சேதநாசேதன வடிவாயுள்ள பரமசத்திவிலாச சமரச பரமான்மாவாயுள்ளார்க்குச் சர்வதோஷவாசனைகளங்கமின்மையானும், சர்வஞ்ஞதைமுதலிய சமஸ்த மங்கலகுணரத்தினாகரமுண்மையானும், விரூபாக்ஷமுண்மையானும், இந்தப் பரப்பிரமசிவனார்க்குப் பரமாக மற்றோர் வஸ்து இல்லை என்று இறுத்தற்கு முன்னர்ச் சூத்திரகாரர் ஆசங்கிக்கின்றனர்.

பரமதஸ்ஸேதூந்மாநஸம்பந்தபேதவ்யபதேசேப்ய: (௩. ௨. ௩௰)

(௩௪௪) சேது அளவு சம்பந்தம் பேதம் குறிக்கப்படுதலான், அவர்க்குமேல் ஒன்றுளது.

முதலாம் அத்தியாயத்து முதற்பாதத்து இரண்டாஞ் சூத்திரமுதல் மூன்றும் அத்தியாயத்து இரண்டாம் பாதத்து இருபத்தொன்பதாஞ் சூத்திரமிறுதியாக, பரமகாரணராகப் பிரதிபாதிக்கப்பட்ட சிவபெருமானுக்கு மேலாக ஓர் வஸ்து உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உளது என்பது.

அத ய ஆத்மா ஸ ஸேதுர்விதிருதி: (சாந். அ. ௪. க)

ஏதம் ஸேதும் தீர்த்வாऽந்த: ஸந்நநந்தோ பவதி (சாந். அ. ௪. ௨)

"இந்தப் (பரம) ஆன்மா தாங்குவதாகிய சேது;" "ஒருவன் குருடனுயிருந்தாலும் இந்தச் சேதுவைக் *கடந்து (தீர்ந்தா) குருடனுகான்"

அதாஷ்டாஸ்ய (சாந். ௩. ௧அ. ௨)

"நான்குபாதமுள்ளது பிரமம்"

அமோதயேஷு யேதா: (முண்ட. ௨. ௨. ௫)

"இது சிவபிரானர் சேது" என்றற்றொடக்கத்த சுருதிகளால் இந்தப் பரப்பிரமம் சேதுவாகவும், கடக்கப்படுவதொன்றாகவும், அளவுபடுத்தப்படுவதொன்றாகவும், அடைவிப்பதொன்றாகவும் கூறப்படுகின்றது. ஆகலின், இவரினும் மேலாக ஒர் வஸ்து உண்டென்று கூறப்படுகின்றது எனின், (௩௦)

(சித்தாந்தம்) இஃதன்றென்று கூறப்படுகின்றது.

ஸாமாந்யாத்து (௩. ௨. ௩௧)

(௩௪௫) ஆனால் அது சமானத்தன்மையுளதாகலின்.

து (ஆனால்) என்னும் பதம் பூருவபக்ஷத்தை மறுப்பதாக உணர்த்துகின்றது. ஆகலின், சர்வோத்தமராகிய சிவபெருமானிலும் மேலாயதொன்றுளதென்னும் வாதம் யுக்தமன்று;

விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"மகர்ஷியாகிய உருத்திரர் விசுவாதிகர்" என்றற்றொடக்கத்த சுருதிகளால், அவர்க்கு விசுவாதிகத்துவம் (எல்லாவற்றுக்கும் மேலாந்தன்மை) சித்திக்கின்றமையான்.

ஏஷ ய ஸேதுர் விதரணி ஏஷாம் லோகாநாமஸம்பேதாய (சாந். ௮. ௪. ௧)

"இவ்வுலகங்களுக்கு யாதும் கலக்கம் நேரிடாவண்ணம் தாங்கும் சேது இந்தப் (பரம) ஆன்மா" எனக் கூறப்படுதலான், அவர் உலகமெல்லாம் கலக்கமடையாது தடுத்துச் சேதுவுக்குச் சமானமாயிருத்தலின், ஈண்டுச் சேது எனவும் பட்டார்.

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம (சாந். ௩. ௧௪. ௧)

"எல்லாமன்றே பிரமம்" என்னுஞ் சுருதியிற் கூறப்பட்டவாறு, உலகத்திற்கு நிமித்தோபாதான இயல்பைப் பூண்டது பிரமமே என்றும்,

ஸதத: ப்ரத்யாஹி ஸம்ஹிதாஸி।

---

* இதற்கு அடைந்து எனப் பொருள் கோடல் வேண்டுமென்பது ௩௪௫-ஆம் சூத்திரத்து உதகரிக்கப்பட்ட கைவல்லிய சுருதிப் பொருள் கூறப்பட்டவிடத்துக் காண்க.

"இங்கிருந்து புறப்பட்டு அவரிடத்துக்கு நான் போவேன்" என்னுஞ் சுருதியினால், அதுவே அடையற்பாலதென்றுங் கொள்ளப்படுகின்றது. பிறிதோரிடத்தில்,

த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம் த்யாத்வா முனிர் கச்சதி பூதயோனிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் (கைவ)

"முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தரும், பூதயோனியும், சமஸ்தசாக்ஷியுமாயுள்ளாரை முனியாவான் தியானித்து இருளுக்கு மேலே போய் அடைகின்றான்" என்னுஞ் சுருதியினாலே தமசுக்கு மேலாய்ச் சகல காரணமும், சர்வஞ்ஞமும், முக்கண்ணுடைமை முதலிய இலக்கணமுமுள்ள பிரமந்தானே அடையற்பாலதென்று உரைக்கப்படுகின்றது. ஆகலின், ஈண்டு (சாந். அ. ௪. ௧) தரதி என்னும் மொழி பரத்தை அடைதலின் மேற்று; இன்றேல் விசுவாதிகரும் பரமகாரணருமாயுள்ளார்க்கு மேலாகப் பரவஸ்து உளதென்று கொள்ளின், அதற்கு மேலும் மற்றோர் வஸ்து உளது என்னும் பிரசங்கத்தினால் வேதாந்த வாக்கியங்களுக்கெல்லாம் அநவஸ்தா தோஷம் நேரிடும். ஆகலின், எல்லாவற்றிற்கும் அதீதராயுள்ளார் சிவபெருமான் என்பதினால் எல்லாவற்றிற்கும் உற்கிருஷ்டம் பிரமத்துக்கே எய்துகின்றது. (௩௧)

பிரமம் அளக்கற்பாற்று என்பதுபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

புத்த்யர்த்த: பாதவத் (௩. ௨. ௩௨)

(௩௩௯) தியானத்தின் பொருட்டே, பாதத்திற் போல.

நான்கு பாதத்தையுடைய பிரமமென அளவுபடுத்திக் கூறுவது வாக்கைப் பாதமாயுள்ளது, கண்ணைப் பாதமாயுள்ளது என்பது போலத் தியானத்தின் பொருட்டேயாம். (௩௨)

ஸ்தானவிசேஷாத் ப்ரகாசாதிவத் (௩. ௨. ௩௩)

(௩௪௦) விசேஷஸ்தானமுண்மையால் பிரகாசாதியிற் போல.

சிவபெருமான் அபரிமிதராகவே உளராயினும், பிரகாசமுதலியன பலகணி முதலிய ஸ்தான சம்பந்தத்தினால் வரையறுக்கப்பட்டுளவாகத் தோற்றல் போல, அவர் ஸ்தானவிசேஷத்தினால் வரையறுக்கப்பட்டவராகக் கோடல் யுக்தம். (௩௩)

அவர் அடையற்பாலராயினும் அவர்தான் (பக்தரை) அவ்வெல்லைக் குட்செலுத்துவோருமாம் எனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

உபபத்தேஶ்ச (௩. ௨. ௩௪)

(நசஅ) பொருத்தமாதலினாலும்.

யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: (கட. உ. உஉ)

"எவனை இவர் விரும்புகின்றாரோ, அவனால் அவர் அடையப்படுகின்றனர்" என்று சுருதி சொல்வதால், அடையற்பாலராய்நின்ற சிவபெருமானே (பக்தனை) அடைவிப்பவருமாம். ஆகலின், சிவபெருமானினும் மேலாயினார் எவரும் இல்லை என்பது சித்திக்கின்றது. (நச)

(அ) அந்நியபிரதிஷேதாதிகரணம்.

ததாந்யப்ரதிஷேதாத் (ந. உ. ந௫)

(நசக) அங்ஙனமே மற்றொன்றை மறுத்தலான்.

மேலை அதிகரணத்திலே விரூபாக்ஷராகிய பரப்பிரம சிவனார்க்கு மேலாக யாரும் இல்லை என்று நிரூபிக்கப்பட்டது. மீண்டும் இங்கே அவருக்கு ஒப்பாயினார் எவராயினும் உளரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சிவபெருமானினும் உத்கிருஷ்டவஸ்து இல்லையேனும் உலகத்துக்குக் காரணமாகிய அவ்வீசுவரத்துவ முதலியவற்றோடு துல்லியமாய (வஸ்து) உண்டே.

ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்।

(தைத். ஆர. ந. கஉ. நந)

"ஆயிரம் தலையுடையரும், ஆயிரம் கண்ணுடையரும், ஆயிரம் காலுடையருமாகிய புருஷர்" என்னும் சுருதியில் ஒரு புருஷர் உளராய் அவரே "ஆயிரந் தலையுடைய புருஷர்" என்றற்றொடக்கத்தவற்றால், அவர் அநேக முகமும் அடி முதலியவு முடையராகவும்,

பாதோ(அ)ஸ்ய விஶ்வா பூதாநி (தைத். ஆரணி. ந. கஉ. நச)

"அவருடைய பாதம் சமஸ்த உயிர்களுமாம்" என்னுஞ் சுருதியினால், அவர் உலகத்தோடியைந்துளராகவும்,

த்ரிபாதஸ்யாம்ருதம் திவி (தைத். ஆரணி. ந. கஉ. நச)

"ஆகாயத்தில் அவரது மூன்று பாதம் அமிர்தம்" என்னுஞ் சுருதியினால், அவர் பரமாகாயத்தில் உளராகவும்,

தஸ்மாத்விராடஜாயத। விராஜோ அதி பூருஷ:।

(தைத். ஆரணி. ந. கஉ. நச)

"அவரினின்று விராட்டுப் பிறந்தனர்; விராட்டுக்கு அடுத்தவர் புருஷர்" என்னுஞ் சுருதியினால், அவ்வியக்தத்துக்கும் இரணியகருப்பருக்கும் அவர் உபாதானராகவும்,

ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே (தைத். ஆரணி. ௩. ௧௨. ௩௯)

"ஆதித்தியவர்ணராகிய அவர் தமசுக்கு மேலுள்ளார்" என்னுஞ் சுருதியினால், அவர் தமசைக் கடந்துள்ளாராகவும்,

தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி (தைத். ஆரணி. ௩. ௧௨. ௩௯)

"அவரை இங்ஙனம் அறிபவன் சிவனாகின்றான்" என்னுஞ் சுருதியினால், அவர் மோக்ஷஹேதுவாயுள்ளாராகவும் பெறப்படுகின்றது. பின்னர்,

ஸஹஸ்ரசீர்ஷம் தேவம் (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௨௯)

"ஆயிரம் தலையுடைய தேவர்" என்று தொடங்கி,

பதிம் விச்வஸ்ய (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௨௯)

"அவர் விசுவத்துக்குப் பதி" என அவரது விசுவபதித்துவமும்,

நாராயணம் பரம் ப்ரஹ்ம (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௨௯)

"நாராயண பரம்பிரம்ம" என்பதில் நாராயணசப்தத்தின் பொருளானமையும்,

பரமாத்மா வ்யவஸ்திதः (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௩௦)

"(இதயத்திலே) பரமான்மா உளர்" என்பதினால் அவர் தஹரத்தில் உபாசிக்கற்பாலர் என்பதும் பெறப்படுகின்றன. ஆகலின், இந்த நாராயணர் சிவபெருமானுக்கு ஒப்பாகிய குணங்களையுடையர்; இவைகளே சிவபிரானார் குணங்களுமாம்.

ஸர்வாநநசிரோக்ரீவஸ்ஸர்வபூதகுஹாசயः।
ஸர்வவ்யாபீ ஸ பகவாந் தஸ்மாத்ஸர்வகதச்சிவः (சுவே. ௩. ௧௧)

"எங்கும் முகமுடையரும், சிரசுடையரும், கழுத்துடையரும், ஒவ்வோர் ஆன்மாவின் இரகசிய குகைக்கண்ணரும், சர்வவியாபியுமாயுள்ளார் அந்தப் பகவான்; ஆகலின், சிவபிரானே சர்வவியாபி" என்று மந்திரோபநிடதங் கூறுகின்றது.

விச்வதச்சக்ஷுருத விச்வதோமுகः।

"எங்கும் கண்களும், எங்கும் முகங்களும் உடையர்" என மகோபநிடதத்தினும், சிவசங்கற்போபநிடதத்தினுங் கூறப்படுகின்றது.

ஸர்வதச்சக்ஷுருத விச்வதோமுகः (அதர்வசிரசு)

"எங்கும் கண்கள் எங்கும் முகங்கள்" என அதர்வசிரசிலே சிவபெருமானுக்கு அநேக முகங்களும் பாதங்களும் உள்ளனவாகக் கூறப்படுகின்றது.

மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேச்வரம்|
தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்||

(சுவே. ச. ௧௰)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; இப்பிரபஞ்சம் அனைத்தும் அவரது அவயவமாயிருக்கும் அதினால் வியாபிக்கப்பட்டது" என்னுஞ் சுருதியினால், அவர் உலகத்தைத் தமது அம்சவிசிட்டமாகவுடையர் என்றும்,

ஹிரண்யகர்ப்பம் பச்யத ஜாயமாநம் (தைத். ஆரணி. ௧௰. ௧௨. ௨௮)

"இரண்ணியகருப்பர் பிறக்கக் காண்பவர்" என்பதில், இவர் இரண்ணிய கருப்பர்க்குக் காரணர் என்றும்,

ஸர்வஸாக்ஷிஸ்தமஸ: பரஸ்தாத் (கைவ)

"இருளுக்குமேற் சமஸ்த சாட்சியாயுள்ளார்" என்றற்றொடக்கத்தவற்றால், அவர் இருளுக்கு மேலாயினர் என்றும்,

தஹரம் விபாப்மம் (தைத். ஆரணி. ௧௰. ௧௨. ௨௮)

"பாவமில்லாத தகரத்துள்ளார்" என்றமையால், அவர் தகரோபாசியர் என்றும்,

ஜ்ஞாத்வா சிவம் சாந்திமத்யந்தமேதி (சுவே. ச. ௧௪)

"அவன் சிவத்தை அறிந்து அத்தியந்தசாந்தி அடைகின்றான்" என்றற்றொடக்கத்தவற்றால், அவர் மோக்ஷஹேதுவாயினர் என்றும்,

ஸர்வைச்வர்யேண ஸம்பந்ந: (அதர்வசிகை)

"சர்வைசுவரிய சம்பன்னர்" என்றமையால், அவர் உலகத்துக்கு ஈசர் என்றும் பெறப்படுகின்றது. இங்ஙனம் விசுவரூபத்துவமுதலிய குணங்கள் சமானமாய் நாராயணர்க்கும் சிவபெருமானுக்குமுளவாம். பூஜாவிதானஞ் செய்யும் ஸ்மிருதிமுதலியவைகளில்,

சிவம் வா விஷ்ணுமேவ வா|

"சிவனையேனும் விஷ்ணுவையேனும்" என்றமையாற் சிவன் விஷ்ணு இருவருள் எவரையேனும் சமானமாகப் பூசிக்கலாம் எனக் கேட்கப்படுகின்றது. உலகத்திலே அவ்விருவர்க்கும் சமமாகப் பூசைக்குரிய ஸ்தலமுதலியனவும், அவ்விருவரையும் பிரதிபாதிக்கும் புராணுகமங்களும் சமானமாயுள்ளன. ஆகலின், சிவபெருமானுக்கு ஒப்பாகிய புருஷர் நாராயணர் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். எங்ஙனம் சிவபெருமானுக்கு மேலாயினோர் எவருமில்லையோ, அங்ஙனமே அவருக்கு ஒப்பானவரும் இல்லை; மற்றொருவர் உலகத்துக்குக் காரணமாதலும், பதியாதலும் இல்லையாதலின்.

ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே।
ய இமாம்ல்லோகாநீசத ஈசநீபி: பரமசக்திபி: (அதர்வசிரசு)

"இவ்வுலகங்களைத் தமது பரமசக்திகளினால் ஆளுகின்ற உருத்திரர் ஒருவரே; அவர்கள் இரண்டாவதற்காக இருந்திலர்" எனவும்,

த்யாவா ப்ருதிவீ ஜநயந் தேவ ஏக: (தைத். ஆரணி. ௧0. ௧. ௩)

"விண்ணையும் மண்ணையும் படைத்துத் தேவர் ஒருவர்" எனவும்

ய ஏகோ ருத்ர உச்யதே (தைத். ஆரணி. ௧. ௧௨. ௫௧)

"எவர் ஏகரோ, (அவர்) உருத்திரர் எனப்படுவர்" எனவும்,

க்ஷராத்மாநா வீசதே தேவ ஏக: (சுவே. ௧. ௧0)

"க்ஷரத்தையும் (பாசத்தையும்), ஆன்மாவையும் ஆளுகின்ற அரராகிய தேவர் ஒருவர்" எனவும்,

யதா சர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா:।
ததா சிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி (சுவே. ௬. ௨0)

"எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோலாக உடுப்பார்களோ, அப்போது சிவத்தை அறியாது (மனிதருடைய) துக்கத்துக்கு ஈறும் எய்தும்" எனவும்,

சிவ ஏகோ த்யேய: சிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய (அதர்வசிகை)

"மற்றெல்லோரையும் விடுத்துச் சர்வைசுவரராகிய சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்" எனவும்,

யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர்ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல:।
(சுவே. ௪. ௧௮)

"எப்போது இருளிருந்ததோ, அப்போது இரவுமில்லை, பகலுமில்லை, சத்துமில்லை, அசத்துமில்லை, சிவன் ஒருவரே இருந்தார்" எனவும் போந்த சுருதிகளானும் பிறவற்றானும் உலக சிருட்டிவிஷயத்திற் சிவபிரானுக்கு வேறாகப் பிறர் ஒருவர் இல்லை என்று நிஷேதிக்கப்படுகின்றது. ஆகலின், சிவபெருமானுக்கு ஒப்பாயினர் யாரும் இல்லை. பரமசத்தியுடைமையின் சிவபெருமான் நிமித்தக்காரணரே. புருஷர் (நாராயணர்) உபாதானமே; உபாதானமாயிருத்தலின், இவர் இரண்ணியகருப்பருக்குக் காரணர்; சிவபிரான் நிமித்தகாரணராகக் கூறப்படுகின்றனர். ஆகலின், (நாராயணர் உபாதானகாரணமும், சிவபெருமான் நிமித்தகாரணமுமாக) இருவரும் ஜகத்காரணராக அறியப்படுகின்றனர்.

ததோ விராட் (தைத். ஆரணி. ௩. ௧௨. ௩௪)

"அவரினின்று விராட்டுப் பிறந்தனர்" என்றமையால், புருஷனுக்கு (நாராயணர்க்கு) உபாதானத்துவமும்,

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌮𑍍 (தைத். ஆரணி. க௦. கஉ. உஅ)

“ இரண்ணியகருப்பர் பிறக்கக் காண்பவர் ”

𑌦𑍍𑌯𑌾𑌵𑌾 𑌭𑍂𑌮𑍀 𑌜𑌨𑌯𑌨𑍍 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃 (தைத். ஆரணி. க௦. க. ௩)

“ விண்ணையும் மண்ணையும் படைத்துத் தேவர் ஒருவர் ” என்ற சுருதியால் சிவபெருமானுக்கு நிமித்தோபாதானமும் கூறப்படுகின்றன. சர்வஞ்ஞரும் சர்வசக்திமானுமாகிய பரப்பிரம சிவனர் எனப்படும் விசுவாதிகரினின்று முதற்கண்ணே பரப்பிரகிருதியாயுள்ள பராசத்தி உண்டாகின்றது. அந்தச் சத்தி

𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 (தைத். ஆரணி. ௩. கஉ. ௩௩)

“ அவர் ஆயிரந்தலையுடைய புருஷர் ” என்று சுருதியிற் கூறப்பட்டவாறு, பிரதமபோக்தாவாய் அந்தச் சத்தி வெளிப்படும் அவசரத்திற் புருஷன் என்று சொல்லப்படுகின்றது. அந்தப் புருஷர்க்கு ஆன்மாவாய் வியாபித்துநின்ற சிவத்திலிருந்தே சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சம் உண்டாகின்றது.

𑌸𑌰𑍍𑌵𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 (தைத். ஆரணி. க௦. உச. சஉ)

“ எல்லாம் உருத்திரரே ” எனச் சிவபெருமான் சர்வான்மாவாய் இருத்தலைக் கூறப்புகுந்து, உபாதானமாதலின் புருஷராகிய நாராயணர்க்கும் சர்வான்மகத்துவம் கூறுமேல், புருஷர்க்குச் சர்வான்மகத்துவம் எங்ஙனமாம்? என ஆக்ஷேபம் நிகழுங்கால்,

𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 (தைத். ஆரணி. க௦. உச. சஉ)

“ புருஷரே உருத்திரர் ”

𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿।
(தைத். ஆரணி. க௦. க. ௫)

“ நாம் புருஷரைத் தியானிப்பேம், ஆயிரம் கண்களையுடைய மகாதேவரைத் தியானிப்பேம் ” என்னும் சுருதிகளாற் புருஷரும் சிவபெருமானுடைய மகா விபூதியா மியற்கையினர் என்றும், விசுவரூபி என்றும் நிரூபிக்கப்பட்டது. சர்வஞ்ஞரும், சர்வசத்திமானும், நித்தியதிருப்தரும், சுவதந்திரரும், விசுவாதிகரும், நிமித்தபூதருமாகிய பரப்பிரம சிவபெருமானே சிருஷ்டிகாலத்திலே அநேகமாவேனாக எனச் சங்கற்பித்து, தம்மிலிருந்து இந்தப் புருஷரை (நாராயணரைச்) சிருட்டிக்கின்றனர்; (இதனற் பரப்பிரமமாகிய) தம்மினின்று பிரிந்து தமது அம்சமாயுள்ள (இந்தப் புருஷரால்) உலகம் அனைத்தும் உண்டாகின்றது.

𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 𑌤𑌦𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌸𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚𑌾𑌭𑌵𑌤𑍍 (தைத். ௨. ௬)

"அவர் அதனைச் சிருட்டித்து அதினுள்ளே பிரவேசித்துச் சத்தும் அசத்து மாயினர்" என்றற்றொடக்கத்த சுருதியானும்,

ஊயாஜ்ஜு வுகூரூதிம் விதூா_நாயி_நஜ்ஜு ஊெஹா:ாபு|
தவ்யாவயவஹஷெதக வ்யாவூம் ஸவ-ெிஜ0 ஜமக (சுவே. ச. ௧௦)

"மாயையைப் பிரகிருதியென்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறியற்பாற்று ; இப்பிரபஞ்சமெல்லாம் அவரது அவயவமாயிருக்கும் அதிளுல் வியாபிக்கப்பட்டது" என்றற்றொடக்கத்த சுருதிகளினுலும் (அவ்வுண்மை) பெறப்படுகின்றது. நிமித்தகாரணரின் சங்கற்பத்தினுல் உபாதானத்துவம் உண்டாகின்றது; அதனுல் உபாதானத்தினும் நிமித்தகாரணம் உயர்ந்தது நிமித்தகாரணத்திலிருந்து உபாதானம் பிரிக்கப்படாமையின், நிமித்தகாரணத்தின் குணங்கள் உபாதானத்துக்கு (நாராயணருக்குச்) சாற்றப்படுகின்றன. ஆகலின், சிவபெருமானுக்கு ஒப்பாயினரும் மேலாயினரும் இல்லையே. (௩௫)

முன்வரும் நியாயத்தினுலும் சிவபெருமானுக்கு ஒப்பாயதும் மிக்காயதுமாக ஒருவஸ்துவும் இல்லை என்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஙெநந ஸவ-ெமதகஊயாஊ ஶஜா்ஜிஹ்ஃ (௩. ௨. ௩௬)

(௩௬) அதனுல் அவருக்குச் சர்வவியாபகம்; ஆயாமசப்த முதலிய வுண்மையான்.

ஆயாமம் என்பது மகாவியாப்தி, சமஸ்தப் பிரபஞ்சத்தையும் வியாபித்தலைப் பிரதிபாதிக்கும் பரத்தனவாகிய

ஸவ-ாநந ஶிரொ ரீவஃ (சுவே. ௩. ௧௧)

"எங்கும் முகங்களும், தலைகளும், கழுத்துக்களும்" என்றற்றொடக்கத்த மந்திரோபநிடத வாக்கியங்களானும்,

விஶதஷூூாத விஶெதாஊவஃ (சுவே. ௩. ௩)

"எங்கும் கண்கள், எங்கும் முகங்கள்" என்னும் சுருதிகளானும்,

ஙெணாரணீயாநீ (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௬)

"அணுவுக்கணு" என்று தொடங்கி,

ஸவெ-ாஹெஷ ாஜ்ஃ (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் இந்த உருத்திரர்" என்பதிறுதியாய்ப் போந்த மகோபநிடத வாக்கியங்களினுலும்,

யொ வெ ாஜ்ஸஹவாநீ (அதர்வசிரசு)

"எவர் உருத்திரரோ அவர் பகவான்" என்று தொடங்கி,

யஸ்ரூ ஸவ-ு௰ (அதர்வசிரசு)

"அவர் எல்லாமாயிருக்கின்றனர்" என்பதிறுதியாய்ப் போந்த அதர்வசிரோபநிடத வாக்கியங்களினாலும், நிமித்தகாரணமாகிய பரப்பிரமத்துக்கு (அதன்) குணமும் அம்சமுமாகிய இந்த உபாதானபுருஷர்வாயிலாகச் சர்வ வியாபகத்துவம் எய்துகின்றது. ஆகலின், பிரபஞ்சமனைத்தும் சிவபெருமானுடைய விபூதிமயமாம். அவருக்கு ஒப்பாரும் அவருக்கு மிக்காரும் இல்லையே. (௩௪)

(௬) பலாதிகரணம்.

இங்ஙனம் சர்வேசுவரரும், சர்வான்மகருமாகிய அந்தச் சிவபெருமானே சகல கன்மங்களுக்கும் அந்தந்தத் தேவதா ரூபமாயிருந்து பலம் கொடுப்பவராகின்றனர் என நிரூபிக்குமாறு சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஶஃஉ உவவெ௲ (௩. ௨. ௩எ)

(௩௫) ஆதலிற் பயன், பொருத்தமுண்மையான்.

சர்வாநுஷ்டானஞ்செய்பவர்க்கும் அநுஷ்டானபலத்தைக் கொடுப்பது மேலே யாண்டும் சர்வேசுவரத்தன்மையினாற் பிரதிபாதிக்கப்பட்ட பரப்பிரமமா? இன்றேல் மற்றொருவரா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) செய்யப்பட்ட க்ஷணத்திலேதானே அழிந்துபோவதாயினும், கன்மமானது அபூர்வமறைப்பு வாயிலாகக் காலாந்தரத்திலே பலத்தைக் கொடுக்கும் சாமர்த்தியமுடையதே. இங்ஙனம் கன்மந்தானே (தன்) பயனைக் கொடுக்க வன்மையுடையதாகுங்கால், அதற்கு வேறாக அப்பிரசித்தராகிய சிவபெருமானைக் கற்பித்தல் மிகையாமாதலின், சிவபெருமான் பலத்தைக் கொடுப்பாரல்லர் எனின்,

(சித்தாந்தம்) சிவபெருமானை ஆராதித்தலினாற்றானே எல்லோர்க்கும் கன்மபலம் சித்திக்கின்றது; (அது) பொருத்தமாதலின்; சேவிக்கப்பட்ட அரசர் முதலாயினோரிடத்திற் (பெறுதல் போல), உபாசிக்கப்பட்ட சிவபெருமானிடத்திருந்தே உபாசகர்க்குப் பலம் சித்தியாதல் நியாயமாதலின். அசேதனமாகிய கன்மமேனும், அபூருவமேனும் தாரதம்மியமாகப் பிரதிநியதமாய்ப் பலத்தை அறிந்து கொடுத்தற்குச் சாமர்த்தியமுடையதன்று; அசேதனமாயிருக்கும் சேவையாகிய கன்மத்துக்கு அங்ஙனம் காணப்படாமையின். ஈண்டுச் சாஸ்திரப்பிரசித்தமாயுள்ள சிவபெருமானைக் கற்பித்தல் கற்பனாகவுரவமாகாது.

ஸாஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதே। ஏஷ உ ஏவா ஸாது கர்ம காரயதி தம் யமேப்யோ நிநீஷதே (கௌஷீ. ௩. அ)

"இவ்வுலகங்களிலிருந்து மேலே செலுத்தவேண்டியவனை நற்கன்மஞ் செய்யப்பண்ணுகின்றனர்; இவ்வுலகங்களிலிருந்து கீழே செலுத்தவேண்டியவனைத் தீக்கன்மஞ் செய்யப்பண்ணுகின்றனர்" எனச் சுருதியானது சிவபெருமானே தர்மாதர்மபலத்தைக் கொடுப்பவருஞ் செய்விப்பவருமாகின்றனர் என்று கூறுகின்றது. பின்னர்ச் சுருதியிற் கூறப்படாத அபூர்வத்தைக் கற்பித்தல் மிகையாம். ஆகலின், கன்மங்களினாலே ஆராதிக்கப்படுகின்ற சிவபெருமான் பலதாதாவாய் ஆகின்றனரன்றிக் கன்மம் அன்றென்பது நிர்ணயம். (௩எ)

ஶ்ருதத்வாச்ச (௩. ௨. ௩-அ)

(௩௱௨) கூறப்படலானும்.

சமஸ்த கன்மங்களுக்கும் அதிபதி சிவபெருமானும் எனக் கேட்கப்படுகின்றது; அக்கன்மங்கள் வாயிலாக ஆராதிக்கப்படலானும், அக்கன்மங்களுக்குப் பயனைக் கொடுத்தலானும்.

காதபதிம் மேதபதிம் ருத்ரம் ஜலாஷபேஷஜம்।

(இரு. வே. க. சக. ச)

"பாட்டுக்கு அதிபதியும், இன்பத்தைக் கொடுக்கும் ஔஷதங்களையுடைய யாகத்துக்கு அதிபதியுமானவர் உருத்திரர்"

ஆவோ ராஜாநமத்வரஸ்ய ருத்ரம் (இரு.வே. ச. ௩. க)

"யஞ்ஞத்துக்கு இராஜாவாக உருத்திரரை நாடுக" என்றற்றொடக்கத்த சுருதிகளினும்,

ஸோமேநாராதயேத்தேவம் ஸோமம் ஸோமவிபூஷணம்।

"சோமபூஷணரும் சோமருமாகிய தேவரைச் சோமத்தினாலே வழிபடுக" எனச் சுருதியை ஆதாரமாகக் கொண்ட ஸ்மிருதியினும்,

(நாந்யம் பஶ்யாமி பைஷஜ்யமந்தரா வ்ருஷபத்வஜம்)
நாராயணோ ஹரிர்யஜ்ஞ: ப்ரியதேவோ ஹுதாஶந:।
தஸ்மாத்ஸஜாமஹே ஸர்வே மஹாதேவம் ஸதாஶிவம்।
கர்மணோ தேவதேவஸ்ய ஸர்வே ஸ்வ த்விஜஸத்தமா:।
ஆராதயந்தி ஸததம் யஜ்ஞம் ருத்ரஸ்யாராயணம் ப்ரதி।

(வால்மீகிராமாயணம், உத்தரகாண்டம், ௯0 : ௧௨—௧௪)

"(இடபாரூடராகிய சிவபெருமானையன்றி ஔஷதமாக மற்றொருவரைக் காண்கிலேன்; பரமான்மாவாகிய சிவபெருமானுக்கு) அசுவமேதயாகத்தினும் பிரீதியான யஞ்ஞம் பிறிதொன்றிலது; (இராஜஸிஷயத்திற் பிறராற் செய்யவியலாத அந்த யஞ்ஞத்தைச் செய்வோம் என்று கர்த்தமர் கூற, முனிவரனைவரும்) சிவாராதனத்தைக் குறித்து (உரைக்கப்பட்ட யஞ்ஞத்தைப் பிரீதியோடங்கீகரித்தார்)" என இராமாயணத்தினும், சிவபெருமானுக்குச் சர்வயாகாதிபத்தியம் கூறப்படுகின்றது;

வாஜஶ்ச மே ப்ரஸவஶ்ச மே (யசுர். வே. ச. எ. க. க)
யாதா ச மே விஷ்ணுஶ்ச மே (யசுர். வே. ச. எ. சு. உ)

"எனக்கு அன்னம் (வருக), எனக்கு அனுமதி (வருக)" "எனக்குத் தாதா (வருக), எனக்கு விஷ்ணு (வருக)" என்றற்றொடக்கத்தனவாகச் சமகங்களிலே போந்தவாற்றால், அன்னமுதலிய வஸ்துக்களும், விஷ்ணு முதலிய தேவர்களும் கொடுக்கப்படும் பொருள்களாகக் கூறப்படுதலான், பாரிசேடப்பிரமாணத்தாற் சிவபிரான் சமஸ்த கன்மபலங்களையும் கொடுப்பவராகச் சித்திக்கின்றது. அதுபற்றிச் சிவபிரானே சமஸ்த யாகங்களினும் ஆராதிக்கற்பாலரும், சமஸ்த பயன்களையும் கொடுப்பவருமாகின்றனர் என்க. (ஙஅ)

சூத்திரகாரர் மற்றோர் பக்ஷம் கூறுகின்றனர்.

ய்மெ-்மெ ஜைமினி ரத வனவ (ங. உ. ஙசு)

(ஙரு) ஆதலினாலே ஜைமினி (அதனைத்) தருமம் என்கின்றனர்.

தருமந்தானே (நியாயத்துக்குப்) பொருத்தமாதலினாலும், சுருதியிற் கூறப்படுதலானும், (அத்தருமம்) பலத்தைக் கொடுப்பதாம் என ஜைமினி கொள்கின்றனர். பொருத்தமாவது உழுதல் முதலியன செய்தலானும் உடைத்துப் பண்படுத்தலானும், கன்மம் சாக்ஷாத்தாகவேனும் பரம்பரையாகவேனும் பலங்கொடுப்பது பிரத்தியக்ஷமாதலே. (பலத்தை விரும்புகிற) காமியானவன் அதனைச் செய்யவேண்டிய மார்க்கமாக ஓர் கன்மவிதிக்கு ஓர் வகை சொல்ல இயலாதாமாதலின், சுருதியிற் கூறப்பட்டதாக அபூர்வமாகிய கன்மந்தானே பலத்தைக் கொடுக்கின்றது. (ஙசு)

பூர்வந்து பாதராயணோ ஹேதுவ்யபதேஶாத்।

(ங. உ. சo)

(ஙஎ) ஆனால் வாதராயணர் காரணம் குறிப்பதினால் முற் கூறப்பட்டவரையே (கொள்கின்றனர்).

மேலேகூறப்பட்ட சிவபெருமானே கன்மபலதாதா வன்று பகவான் வாதராயணர் கொள்கின்றனர்;

வாயவ்யம் ஶ்வேதமாலபேத பூதிகாமோ வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா வாயுமேவ ஸ்வேந பாகதேயேநோபதாவதி ஸ ஏவைநம் பூதிம் கமயதி।
(யசுர். வே. உ. க. க. க)

"செல்வத்தை நாடுகின்றவன் வாயுவின்பொருட்டு ஓர் வெண் மிருகத்தைப் பலிகொடுக்க, இவன் செல்வத்துக்கே பலிசெலுத்துவோனைச் செலுத்துகின்றான்" என்னும் சுருதியினால் வாயுமுதலிய சிவபெருமானால் வியாபிக்கப்பட்டுக் கன்மவிதிகளிலேதான் பலத்துக்கு ஹேதுவாகக் கூறப்படுதலின், அவர் இலராய்விடினன்றோ க்ஷணத்திலே நசிக்கும் கன்மத்தை, பலசாதனத்தை முடிப்பதற்கு அபூருவமாகக் கற்பிக்கவேண்டும். (பின்னையோ எனின்) வாக்கியசேஷத்தினாற் கூறப்பட்ட விதியை அபேக்ஷிக்கும் பலசாதனத்துவப்பிரகாரம் உள்ளபோது அவரே காரணராகச் சுவீகரிக்கற்பாலர்;

ப்ரதிதிஷ்டந்தி ஹவா ய ஏதா ராத்ரீருபயந்தி।
(தாண்டியப் பிராம்மணம்)

"இந்தக் கிரியைகளைச் செய்பவர் நன்றாகப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றனர்" என்றற்றொடக்கத்தவற்றிலே வாக்கியசேஷத்தினதாய் விதியை அபேக்ஷித்ததாயுள்ள (கன்ம) பலமானது சுவீகரிக்கப்பட்டாற்போலாம். அதர்வசிரசிலே,

யோ வை ருத்ர: ஸ பகவாந் ।

"எவர் உருத்திரரோ அவர் பகவான்" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்பட்டமையின், வாயுமுதலிய சமஸ்ததேவதாரூபத்துவம் சிவபெருமானுக்கு எய்துகின்றது. அந்த உபநிடதத்திலே சிவபெருமானாலே,

யோ மாம் வேத ஸ ஸர்வாந்தேவாந்வேத।

"என்னை அறிபவன் எல்லாத் தேவரையும் அறிகின்றான்" என்னுஞ் சுருதியினால் அவரை அறிதலான் அவரால் வியாபிக்கப்பட்ட சகல தேவர்களும் அறியப்பட்டனரெனக் கூறப்பட்டது. ஆகலின், சகல தேவதாரூபராய்ச் சகலகன்மத்தினால் ஆராதிக்கற்பாலரும், சர்வகன்மபலதாதாவுமாயுள்ளார் பரமேசுவரரும், பரப்பிரமசிவனாரும், சாக்ஷாத் உமாபதியாயுள்ளாருமாம் என்பது சித்தித்தது. (௬௦)

மூன்றும் அத்தியாயத்து

மூன்றும் பாதம்.

---

(௧) சர்வவேதாந்தப்ரத்தியயாதிகரணம்.

நித்தியத்துவாதி குணமுடைய துவம் பதார்த்த உபாசகனுகிய ஆன்மாவும், சர்வஞ்ஞத்துவாதிகுணமுடைய தத்பதார்த்தராகும் உபாசியராகிய பதியும் மேலே நிரூபிக்கப்பட்டனர். ஈண்டு எங்ஙனம் உபாசிப்பது என ஆக்ஷேபம் நிகழ,

(உத்தரம்) போதருமாறு.

ஸவ-ெவெடாகு வுக்ஷயம் செொடநாஓ விமெஷாசு (௩. ௩. ௧)

(௩௫௫) வேதாந்தம் அனைத்தினும் அறியப்பட்டது (ஒன்றே); விதிமுதலியவற்றில் யாதும் பேதமின்மையான்.

வேதாந்தம் (உபநிடதம்) அனைத்தினும் தகராதி உபாசனை கூறப்படுகின்றது.

உபாசனை ஒன்று? சாகாபேதங்களினுற் பின்னமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாகாபேதம்பற்றிப் பிரகரணம் பேதித்தலின், ஒவ்வோர் சாகையினும் உபாசனை பேதமுறுகின்றது. அங்ஙனமே சாந்தோக்கியத்தினும், தைத்திரீயத்தினும் தகரோபாசனை கூறப்படுகின்றது. ஒன்றிலே,

ஏஷ ஆத்மாவஹத பாப்மா விஜமோ விம்ருத்யு: (சாந். அ. க. ஞ)

"இந்த ஆன்மா பாவமில்லதும், ஜரையில்லதும், மரணமில்லதும்" எனத் தொடங்கிப் போந்த சுருதியில், பாவமிலாமை முதலிய குணங்கள் கூறப்பட்டன. மற்றொன்றிலே,

ஊதம் ஸத்யம் (தைத். ஆரணி. ௧௦. ௨௩. ௪௧)

"இருதம் சத்தியம்" என்று தொடங்கி, கிருஷ்ணபிங்களத்துவகுணங்கள் கூறப்பட்டன. ஈண்டுக் குணங்களிலே பேதமுண்மையான் உபாசனை பேதமுறுகின்றது. சாந்தோக்கியத்திலே பஞ்சாக்கினி வித்தைக்கு "கௌதுமம்" என்று பெயர்; பிருகதாரணியத்திலே "வாஜசநேயகம்" என்று பெயர்; இங்கே நாமபேதத்தினுல் உபாசனை பேதிக்கின்றது.

தெஷாமெவெதாம் ஹ்ரஹ்மவித்யாம் வடெத ஶிரொவ்ரதம் வியி வடுெைஷ்ஸ்த சீணம் (முண். ௩. ௨. ௧௦)

“சிரோவிரதம் விதிப்படி எவர்களாற் செய்யப்பட்டிருக்கின்றதோ, அவர்களுக்கே இந்தப் பிரமவித்தையைச் சொல்க” என முண்டகோபநிடதத்திலே **சிரோவிரதம்** என்னும் தருமம் கேட்கப்படுகின்றது. சிரோவிரதம் என்பது ஓர் **விரதவிசேஷம்**. அது பிறர்க்கின்றி அதர்வணசாகையினர்க்கு **விதிக்கப்பட்டது.** (இந்தக்) கிரியாபேதத்தினால் உபாசனை வேறுபடுகின்றது. **ஆகலின்,** சாகாதி பேதங்களினாலே உபாசனைகளுக்குப் பேதமுளதென **ஆக்ஷேபிக்கின்,**

(சித்தாந்தம்) சர்வவேதாந்தங்களினும் கூறப்படுவது **தகராதி** உபாசனை ஒன்றுதானே; கன்மவிதிகளிலே போல (ஈண்டு) விதிகளும், பலனும், தேவதாரூபமும், (உபாசனுப்) பெயர்களும் ஒன்றே. (முதலாவது) **அறிக, உபாசிக்க** என்னும் விதிகள் வெவ்வேறு சாகைக்கண்ணவாயினும் ஒன்றே; பிரமத்தை அடைதலாம் பயன்களும் ஒன்றே; வைசுவாநரப்பிரமம் போல, வேத்தியமும் (அறியப்படும் பொருளும்) ஒன்றே. வைசுவாநரவித்தை முதலிய போலப் பெயரும் ஒன்றே. ஆகலின், உபாசனை ஒன்றே. (அவனை **அறிக, உபாசிக்க** என்னும்) விதிகள் பேதித்தலான் உபாசனை வேறுபடாது. சாந்தோக்கியத்திலே,

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍍 (சாந். அ. க. க)

“**தகராகாயத்துள்** இருப்பது தேடற்பாற்று” என்பதினாலே **தகரவித்தை விதிக்கப்பட்டது.**

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 (தைக். ஆரணி. க௦. கஉ. உஅ)

“**உள்ளே** உள்ளது தியானிக்கற்பாற்று” எனத் தைத்திரீயத்தினும் (**விதிக்கப்படுகின்றது**). இந்த விஷயத்தில் (தியான) ஸ்தானாதி ஒன்றுமாதலினாலும், உபாசியமாகிய பிரமம் ஒன்றுமாதலினாலும், இரு உபநிடதங்களினும் கூறப்பட்டகுணங்கள் ஒன்றுக்கொன்று விரோதமுறாமையானும் வித்தை ஒன்றே. சாந்தோக்கியத்தினும் பிருகதாரணியத்தினும் ஆகாயம், மழை, பூமி, புருஷன், ஸ்திரி என்னும் பஞ்சாக்கினிவித்தைகள் அறியற்பாலன எனக் கூறப்பட்ட சொரூபம் இரண்டிடத்தும் சமானமே. ஆகலின், **வித்தையிற் பேதமின்று.** (௧)

𑌭𑍇𑌦𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇 𑌨𑍍𑌨𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌮𑌪𑌿 (௩. ௩. ௨)

(௩௱௯) (பேதமுண்மையான்) இங்ஙனமின்றெனின், **ஒன்றினும் (அது கூடும்).**

(ஆக்ஷேபம்) ஓர் உபாசனவிஷயத்தைச் சுருதி பின்னரும் மற்றோர் பிரகரணத்திற் கூறுவது பேதத்தை விளக்கின்றது. **ஆகலின், உபாசனை ஒன்றன்றெனின்,**

(உத்தரம்) உபாசனை ஒன்றாயிருந்தாலும் வெவ்வேறு சாகையில் உபாசகர் வேறுதலினால் உபாசனையும் பேதமுறும். (உ)

ஸ்வாத்யாயஸ்ய தயாத்வேந ஹி ஸமாசாரேऽதிகாராச்ச ஸவவச்ச தந்நியம: (௩. ௩. ௩)

(௩ௗ) (சிரோவிரதம்) வேதாத்தியயனத்துக்குரியது; (அந்தக் கருமத்தின்)பொருட்டுச் சமாசார கிரந்தத்தில் அதிகாரமுண்மையானும், சவஹோமம் போல அதன் நியமம்.

தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத (முண். ௩. உ. ௧௦)

"அவர்க்கே இந்தப் பிரமவித்தையைச் சொல்க" என்பதினால், அதர்வவேதத்திலே விதிக்கப்பட்ட * சிரோவிரதநியமம் அந்த வேதாத்தியயனத்துக்கு அங்கத்துவமாகவன்றி உபாசனைக்கு அங்கத்துவமாகவன்றாம்;

நைததசீர்ணவ்ரதோऽதீதே (முண். ௩. உ. ௧௧)

"(இந்த) விரதத்தை அநுஷ்டியாதவன் இதனைப் படிப்பானல்லன்" என அந்த வேதாத்தியயனசம்பந்தமாக அறியப்படலானும், சமாசாரம் என்னும் கிரந்தத்தில்,

நைதததீர்ணவ்ரதோऽத்யாயதே (?) வேதவ்ரதேந வ்யாக்யாதம்

"இந்த விரதமும் வேதவிரதம் எனக்கூறப்பட்டது" என வேதவிரதமாகக் கூறப்படுதலானுமாம். பிரமவித்தை என்பதிற் பிரமம் என்னும் சப்தம் வேதத்தின் மேற்று. ஆகலின், சவஹோமம் என்பது அவர்களுக்கே (ஆதர்வணிகர்க்கே) உளதாயினாற் போல, சிரோவிரதமுமாம். ஆகலின், அது உபாசனாபேதத்தைக் (காட்டப் போந்த) லிங்கமன்று. (௩)

---

*முண்டகோபநிடதத்து (௧. ௧. ௫, ௬) உபக்கிரமத்திலே, அபரவித்தையும் பரவித்தையுமாகிய கன்மகாண்டம் ஞானகாண்டம் இரண்டும் குறிக்கப்பட்டனவேயாக, அதர்வணகன்மகாண்டம் அத்தியயனஞ் செய்தற்குரியோர், அதற்கு அங்கமாகிய அக்கினிதாரணஞ்செய்யவேண்டினமையின், அம்முண்டகோபநிடதத்து (௩. உ. ௧௦) உபசங்காரத்திலே காணப்படும் சிரோவிரதம் என்றது அவ்வத்தியயனஞ் செய்வார் சிரசிலே தாங்கும் அக்கினிதாரணம் எனப் பொருட்படுத்தப்படுங்கால், அம்மந்திரத்திற் காணப்படும் பிரமவித்தியாஎன்னும் பதத்துப்பிரமம் என்பது வேதம் எனப்பட்டு அது வேதாத்தியயனத்தின் மேலதாமென்றும்; பரவித்தையாகிய ஞானகாண்டத்துக்குரியோரெல்லாம் அதற்கு அங்கமாகிய பாசுபதவிரதவிபூதிதாரணம் செய்யவேண்டினமையின், (அச்சிரோவிரதம்) என்றது அதர்வசிரசிலேயுள்ள பாசுபதவிரதவிபூதி எனப்பொருட்படுத்தப்படுங்கால், அம்மந்திரத்துப் பிரமவித்தியா என்பது தகராதி பிரமோபாசனையின் மேலதாமென்றும் ஓர்க. புராணேபப்பிருங்கணங்களினெல்லாம் சிரோவிரதம் என்பது பாசுபதவிரதத்துக்குப் பெயராமாறு எவர்க்கும் பிரசித்தமாய்த் தெரிந்ததொன்றாமாதலின், சைவபாஷ்யகாரர் அதனைப் பொருட்படுத்தாது விடுத்து, சிரோவிரதம் கன்மகாண்டத்துக்கிரியைப் பொருட்படுத்தப்படுங்கால்,பிரமவித்தியா என்றது வேதாத்தியயனத்தின் மேலதாமென விளக்கி, அது அவ்வேதாத்தியயனஜன்னியமாகிய பிரமோபாசனையின் மேலதாமென விளக்காது தவிர்த்தார். அதனால் விரோதம் இல்லை.

ஜஸ்யதி ச (௩. ௩. ௪)

(௩௫௮) (சுருதி) யும் கூறுகின்றது.

சுருதிதானே உபாசனையின் ஏகத்துவத்தைக் காண்பிக்கின்றது. தகரவித்தியா விஷயத்திலே,

ஜதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம் ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் (தைத். ஆரணி. ௧௦. ௨௩. ௪௧)

"இருதமும் சத்தியமுமாகிய பரப்பிரம (சிவனார்) புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்துவரேதரும், விரூபாக்ஷருமாம்" எனவும்,

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம் (கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தரும்" என்றற்றொடக்கத்தனவாகவும், (முறையே) மகோபநிடதத்தினும் கைவல்லியோபநிடதத்தினும் சிவபெருமானுடைய ரூபங் கூறப்பட்டது. ரூபமுடைமையின் சிவபெருமான் பாவம், ஜரை, மரண முதலியவற்றுக் காளாவாரோ எனின், சாந்தோக்கியத்திலே

அஸ் யதிதம் ஜஸ்மிந் (சாந். அ. ௧. ௧)

"இந்தப் பிரமபுரத்திலே" என்று தொடங்கி, அவர் அஷ்டகுணமுடைத்தாதன் மாத்திரம் கூறப்படுகின்றது. குணவிசேஷத்தைக் கூறுஞ் சுருதி பின்னர் உபாசனாபேதத்தைக் கூறுவதெனச் சிறிது ஆசங்கித்தற்கு இடமில்லை. ஆகலின், விதிகள் ஒன்றாயிருத்தலின், அவ்வுபாசனாபேதத்தைக் காட்டும் பிற சொற்கள் காணப்படாமையின், சகல வேதாந்தப்பிரத்தியயம் ஒரே உபாசனையின் மேற்றென்பது சித்தித்தது. (௪)

(௨) உபசங்காராதிகரணம்.

சர்வவேதாந்தங்களினும் விதிக்கப்பட்ட உபாசனைகளின் ஐக்கியத்தைப் பிரதிபாதிக்கும் பயனைச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

உபஸம்ஹாரோ ऽர்தாபேதாத் விதிஶேஷவத் ஸமாநே ச (௩. ௩. ௫)

(௩௫௯) அர்த்தத்திற் பேதமின்மையின், (குணங்களைப் பற்றி) உபசங்காரஞ் (செய்யப்படல்வேண்டும்); விதியின் சேஷங்களிற் போலவே சமானமாயுள்ள (உபாசனை) யினும்.

சண்டு உபாசனை ஒன்றாயிருப்பினும், ஒரு சாகையிற் சித்தித்த குணங்கள் மற்றோர் சாகையில் உபசங்காரஞ் செய்யப்படல் வேண்டாமா? வேண்டுமோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபசங்காரஞ் செயற்பாலனவன்று. என்னையெனின், சாந்தோக்கியத்துத் தகரவித்தையிலே பாவமிலாமை முதலிய குணங்கள் கூறப்பட்டன; தைத்திரீயத்திற் கூறப்படவில்லை. (சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட குணங்கள்) தைத்திரீயத்தில் உபசங்காரஞ் செய்யப்படலாகா; ஆண்டுத் (தைத்திரீயத்திற்) கூறப்படாமையின். உபாசனைக்குச் சகாயம் ஆண்டுக் கூறப்பட்ட கிருஷ்ணபிங்களத்துவாதி குணங்களினால் ஆகும். சுருதியில் விதிக்கப்படாதனவாய்ப் பிறிதோரிடத்திற் கூறப்பட்ட குணங்களை உபசங்காரஞ்செய்தல் எற்றுக்கெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. சாந்தோக்கியாதிகளிற் காணப்பட்ட தகராதி உபாசனைசம்பந்தமாகக் கூறப்பட்ட அபஹதபாப்மத்துவாதி குணங்கள் மற்றோர் தைத்திரீய முதலிய உபநிடதங்களில் உபசங்காரஞ் செயற்பாலன; உபாசனைக்கு உபகாரமாயுள்ள அபிப்பிராயம் ஒன்றாயிருத்தலின். முக்கிய விசேஷகன்மத்தில் அங்கங்களாக (வெவ்வேறு சாகைகளில்) விதிக்கப்பட்ட உபாங்கங்கள் அக்கினிகோத்திராதிகளில் உபசங்கரிக்கப்பட்டாற் போல, விதிவாக்கியங்களினாற் சமானமாயுள்ள தகராதி உபாசனையினும் (வெவ்வேறு சாகையிற் கூறப்பட்ட) குணங்கள் உபசங்காரஞ் செய்யப்படல் வேண்டும்; (ஆகலின் ஒரே உபாசனை குறித்து வெவ்வேறு சாகைகளிற் கூறப்பட்ட) குணங்கள் உபசங்காரஞ் செய்யப்படல்வேண்டும் என்பது யுக்தமே. (௯)

(௩) அந்யதாத்துவாதிகரணம்.

அந்யதாத்வம் ஶப்³தா³தி³தி சேந்நாவிஶேஷாத் (௩. ௩. ௬)

(௩-௬௦) சுருதியுண்மையாற் பேதமெனின், அன்று; பேதமின்மையான்.

பிருகதாரணியத்திலும் சாந்தோக்கியத்திலும் சத்துருவைத் தோற்கச் செய்யும் பிராணன்போலுள்ள உற்கீதாத்தியானம் விதிக்கப்படுகின்றது. அதிலே உபாசனைவைக்கியம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) விதிமுதலியன ஒன்றாதலின் உபாசனை ஒன்றே எனின்,

(பூருவபக்ஷியின் ஆக்ஷேபம்) பிருகதாரணியத்திலே விதிக்கப்பட்ட பிராணனைப் போன்ற உபாசனநோக்கம் உற்கீதத்தைப் பாடுபவனுடைய விஷயம் என்பது.

அத² ஹேமமாஸந்யம் ப்ராணமூசுஸ்த்வம் ந உத்³கா³யேதி ததே²தி தேப்⁴யோ ஏஷ ப்ராண உத³கா³யத் (பிரு. ௩. ௩. ௭)

“அவர்கள் வாய்க்குள் இருக்கும் பிராணனை நோக்கி, நீ எங்களுக்காகப் பாடுக என, பிராணன் ஆம் என்று சொல்லிப் பாடிற்று” என்னும் பிராண சப்தத்தினால் அறியப்படுகின்றது. சாந்தோக்கியத்திலோ எனின், (தியானநோக்கம்) உற்கானகர்மவிஷயத்தின் மேற்றும் என்பது

ய ஏவாயம் முக்ய: ப்ராண ஸ்தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே।

(சாந். க. உ. எ)

“வாய்க்குள்ளே இந்தப் பிராணன் வருகின்றது; அவர்கள் பிராணனைப் போல உற்கீதத்தைத் தியானித்தனர்” என்னுஞ் சுருதியினால் அறியப்படுகின்றது. ஆகலின், உபாசனைகள் பேதமாம் எனின்,

(பூருவபக்ஷியின் உத்தரம்) அன்று; (இரண்டின்) உபக்கிரமங்களும் ஒன்றுதலின்.

த்வயா ஹ ப்ராஜாபத்யா தேவாஶ்சாஸுராஶ்ச தத: கானீயஸா ஏவ தேவா ஜ்யாயஸா அஸுராஸ்த ஏஷு லோகேஷ்வஸ்பர்தந்த தே ஹ தேவா ஊசுர்ஹந்தாஸுராந்யஜ்ஞ உத்கீதேநாத்யயாமேதி।

(பிரு. ௩. ௩. க)

“பிரஜாபதியின் சந்ததியினர் தேவரும் அசுரரும் என இரு திறத்தினர்; தேவர் இளைஞர்; அசுரர் மூத்தவர்; இவ்வுலகங்களிலே வருத்தப்பட்டுக் கொண்டிருந்த தேவர்கள் உற்கீதவாயிலாக யாகங்களிலே அசுரர்களை செயிப்பேம் என்றனர்” எனப் பிருகதாரணியம் உபக்கிரமித்துக் கூறுகின்றது.

தேவா ஸுராஹவை யத்ர ஸம்யேதிர உபயே ப்ராஜாபத்யாஸ்தத்த தேவா உத்கீதமாஜஹ்ருரநேநைநாநபிபவிஷ்யாம:।

(சாந். க. உ. க)

“பிரஜாபதியின் சந்ததியினராகிய தேவரும் அசுரரும், யுத்தஞ் செய்யும் போது தேவர் அசுரரை செயிக்கும்பொருட்டு உற்கீதத்தைப் பாடத்தொடங்கினர்” எனச் சாந்தோக்கியம் உபக்கிரமிக்கின்றது. ஆகலின், உபக்கிரமங்கள் ஒன்றுமாதலின் உபாசனைகளும் ஒன்றே எனின், (௬)

(சித்தாந்தம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ந வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத் (௩. ௩. ௭)

(௩.௩.௭) இன்றேற் பிரகரணத்திலே பேதமுண்மையின், (அவை ஒன்று) அன்று; பெரிதினும் பெரிதாயிருத்தன் முதலிய போல.

இரண்டு உபநிடதங்களினும் கூறப்பட்ட வித்தைகள் ஒன்றன்று; பிரகரணபேதமுண்மையின்.

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍁𑌦𑍍𑌗𑍀𑌥𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 (சாங். ௧. ௧. ௧)

"உற்கீதமாகிய ஓம் என்னும் அக்ஷரத்தை ஒருவன் உபாசிக்க" என்ற வாக்கியத்திற் கண்டவாறு சாங்தோக்கியத்திற் கூறப்பட்ட தியானம் உற்கீதத்தின் அவயவமாகிய பிரணவத்தைக் குறித்ததாகும்; வாஜினர்களாற் கூறப்பட்ட தியானம் உற்கீதம் முழுதுக்குமாம். உபக்கிரமத்திலே பேதமுண்மையின் (தியான) ரூபமும் பேதம், உபாசனையும் பேதமாம். ஒரே சாகையிற் கூறப்பட்ட உற்கீதவுபாசனைகளுள்ளே பெரிதினும்பெரிதென்ற தியானம் இரண்டிய தியானத்துக்கு வேறாகின்றதோ, அங்ஙனமே ஈண்டும் உபாசனைபேதமாம். (எ)

சூத்திரகாரர் ஆக்ஷேபித்து உத்தரம் இறுப்பாராயினர்.

𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑍍𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑌿 𑌤𑍁 𑌤𑌦𑌪𑌿 (௩. ௩. அ)

(௩௬௨) பெயரைக் குறித்து ஒன்றென்று கூறின், அது இறுக்கப்பட்டதாயிற்று; இதுவும் (பெயர் ஒற்றுமையும்) கூடும்.

உற்கீதவித்தை என்னும் பெயர் ஒற்றுமையால் இரண்டு சாகைகளினும் உபாசனைகள் ஒன்றென்று கூறத்தகாது. விதிக்கப்பட்ட பொருள்கள் பேதமாயிருப்பினும், பெயர் ஒற்றுமையாயிருத்தல் கூடும். எங்ஙனம் நித்திய அக்கினிகோத்திரத்தினும் குண்டபாயின் யஞ்ஞத்துக்குரிய அக்கினிகோத்திரத்தினும் பெயர் ஒன்றாயிருந்தாலும், கிரியைகள் பேதமுறுகின்றன. அங்ஙனம் ஈண்டும் விரோதமில்லை. (அ)

(௫) வியாப்தியதிகரணம்.

𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌸𑌮𑌞𑍍𑌜𑌸𑌮𑍍 (௩. ௩. ௯)

(௩௬௩) வியாப்தியினாலும் பொருத்தம்.

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍁𑌦𑍍𑌗𑍀𑌥𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 (சாங். ௧. ௧. ௧)

"உற்கீதமாகிய ஓம் என்னும் அக்ஷரத்தை ஒருவன் உபாசிக்க" என்று சாங்தோக்கியத்திற் கூறப்படுகின்றது. இங்கே விதிக்கப்பட்ட பிரணவம் உற்கீதம் என்பவற்றின் உபாசனை ஒன்று? இன்றேல் தனித்தனி வேறு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரணவமும் உற்கீதமும் சமானாதிகரணமாகி விசேஷண விசேடியமாய் இருக்கின்றன. பிரணவந்தான் உற்கீதத்தினால் விசேடிக்கப்படுகின்றதென்றேனும், உற்கீதந்தான் பிரணவத்தினால் விசேடிக்கப்படுகின்றதென்றேனும் கோடற்குத் தீர்மானமில்லை. (ஆகலின்), தியானகருமத்தில் (அந்தத் தியானம் அவற்றை இருவேறு பொருளாகக் குறிக்கின்றதாம்) எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். (ஒரே தியானகருமத்தில் அடங்கிய இருவேறு பொருள்களாகப்) பிரணவத்தையும் உற்கீதத்தையும் தியானம் குறிக்க வில்லை.

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍁𑌦𑍍𑌗𑍀𑌥𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 ।
𑌓𑌮𑌿𑌤𑌿 𑌹𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑌾𑌯𑌤𑌿 (சாங். ௧. ௧. ௧)

"உற்கீதமாகிய ஓம் என்னும் அக்ஷரத்தை ஒருவன் உபாசிக்க" "ஓம் என்று உற்கீதம் பாடப்படுகின்றது" என்று சாந்தோக்கியத்து முதற்பிர பாடகத்தில் உபக்கிரமித்தாற் போல,

𑌖𑌲𑍍𑌵𑍇𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 ।
(சாங். ௧. ௧. ௧௦)

"இந்த அக்ஷரத்தின் உபவியாக்கியானம் இருக்கின்றது" என்று உத்தரத்திலும் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிரணவமானது உற்கீதத்தினால் விசேடிக்கப்படுகின்றது; உபாசனை பிரணவத்தையே குறிக்கின்றது எனக்கோடல் யுக்தமே. ஆகலின், பிரணவமே உபாசிக்கற்பாற்று. (௯)

(௫) சர்வபேதாதிகரணம்.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍇𑌦𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑍇𑌮𑍇 (௩. ௩. ௧௦)

(௩௬௪) அனைத்தினும் அபேதமாதலின் இவை பிறிதோரிடத்தில்.

𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌞𑍍𑌚 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌞𑍍𑌚 𑌵𑍇𑌦 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚 𑌹 𑌵𑍈 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌵𑌾𑌵 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚 ।
(சாங். ௫. ௧. ௧; பிரு. ௬. ௧. ௧)

"ஜ்யேஷ்டத்தையும், சிரேஷ்டத்தையும் அறிபவனே ஜ்யேஷ்டனும் சிரேஷ்டனுமாவான்; பிராணன்தான் ஜ்யேஷ்டமும் சிரேஷ்டமுமாம்" எனப் பிராணோபாசனை விதிக்கும் சந்தோகசாகையினரும், வாஜிசாகையினரும், கௌஷீதகினரும் பிராணவித்தையிலே பிராணன் ஜ்யேஷ்டத்துவமுதலிய வுடையதாகக் கூறுகின்றனர். வாக்கு முதலிய கரணசமூகத்தின் நிலையும், அவற்றின் காரியங்களும் பிராணனிலே முழுதும் நிலைபெறுதல் காரணமாகச் (சாந்தோக்கியசாகையினர் முதலிய) மூவரானும் பிராணனின் ஜ்யேஷ்டத்துவம் விளக்கப்பட்டது.

𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌵𑌾𑌗𑍁𑌵𑌾𑌚 𑌯𑌦𑌹𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍍𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍀𑌤𑌿 । 𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌵𑌾𑌚 𑌯𑌦𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌽𑌸𑍍𑌮𑌿 𑌤𑍍𑌵𑌂

அத்ர ஹோசு: ழவஸிஷ்டி। ஸ ஹோவாச யதஹம் வஸிஷ்டோஸ்மி த்வம் தத்வஸிஷ்டோஸி। அத ஹைநம் சக்ஷுருவாச யதஹம் ப்ரதிஷ்டாஸ்மி த்வம் தத்ப்ரதிஷ்டாஸி (சாந். ரு. க. கங, கச)

"பின் வாக்கானது அவனுக்குச் சொல்லியது, நான் மிக்க ஐசுவரியனுயிருப் பேனுயின், நீ மிக்க ஐசுவரியனுயிருப்பை; கண் அவனுக்குச் சொல்லியது, நான் பிரதிஷ்டனுயிருந்தால், நீ பிரதிஷ்டனுயிருப்பாய்; காது அவனுக்குச் சொல்லியது, நான் சம்பத்துடையனுனல், நீ சம்பத்துடையனுவை; மனசு அவனுக்குச் சொல்லியது, நான் வீடாயிருந்தால் நீ வீடாவை" என இரண்டிலும் (சாந்தோக்கியத்திலும் பிருகதாரணியத்திலும்) வாக்குமுதலிய வற்றோடு சேர்ந்த ஐசுவரியத்துவமுதலிய சம்பந்தம் பிராணனுக்குள்ள தென்று கூறப்பட்டிருக்கின்றது. கௌஷீதகிநர்களுடைய உபநிடதத்திலே கூறப்படாத ஐசுவரியமுதலிய குணங்கள் (உபாசனையில்) உபசங்கரிக்கப் படல் வேண்டுமா? வேண்டாமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஸஏவம் வித்வாந் (கௌஷீ. ச. உ0)

"இங்ஙனம் உபாசிப்பவன்" என்னும் மொழிகளினுற் கௌஷீதகியுபநிடதத் திற் கூறப்பட்ட குணங்கள் (தியானத்தின்பொருட்டு) உறுதியாக விதிக்கப் பட்டமையின், (அக் குணங்கள்) உபசங்கரிக்கப்படுவன அன்றாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். கூறப்படாதிருந்தாலும், ஐசுவரியமுதலிய குணங்கள் உபசங்கரிக்கற்பாலனவே; இங்ஙனம் என்னும் மொழியினுலே (தங்கள் உபநிடதத்திலே) கூறப்படாத குணங்களாயிருந்தாலும், கூறப்பட்ட குணங்கள் போலவே குறிக்கப்படுமாதலினுலும், (கூறப்பட்ட) குணங்களு டைய பிராணன் ஒன்றாதலினுலும், (அதின்) குணமெல்லாம் புத்தியிலமை தலினுலுமாம். மதுராபுரியிலே வேதாத்தியயனஞ் செய்விப்பவராகக் காணப் பட்ட தேவதத்தர் என்பார், (பின்னர்) மாஹிஷ்மதிபுரியில் அத்தியயனஞ் செய்வியாதிருந்தாலும், அத்தியயனஞ் செய்விப்பவராகவே அறியப்பட்டாற் போல, (பிராணன்) சாந்தோக்கியாதியுபநிடதங்களில் ஐசுவரியாதி குணங்க ளோடு கூறப்பட்டு, பின்னர்ப் பிறிதோரிடத்து அக்குணங்கள் இல்லாமற் கூறப்பட்டாலும், அக்குணங்களோடியைந்ததாகப் புத்தியிற் படுகின்றது. ஆகலின், "இங்ஙனம்" (ஸஏவம்) என்னும் மொழிக்குறிப்பினுற் (பிராணோ பாசனையில்) ஐசுவரியாதி குணங்கள் உபசங்கரிக்கற்பாலன. (சO)

(ரு) ஆனந்தாத்தியதிகரணம்.

ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய (ங. ங. கக)

(௩௬௫) (குணியாகிய) முக்கியமாயினார்க்குப் (பேதமில்லாமைபற்றி) ஆனந்தமுதலிய (குணங்கள் உபசங்கரிக்கற்பாலன).

அபேதாத் (பேதமில்லாமையான்) என்பது சூத்திரத்தில் எஞ்சினின்றது.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. ௧)

“சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்”

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ௩. ௬)

“ஆனந்தம் பிரமம்”

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்கலம்।
(தைத். ஆரணி. ௧0. ௨௩. ௪௧)

“இருதமும், சத்தியமுமாகிய பரப்பிரமம், புருஷரும், கிருஷ்ணபிங்களமும்”

ஆகாசஶரீரம் ப்ரஹ்ம (தைத். ௧. ௬)

“ஆகாசத்தைச் சரீரமாகவுடைய பிரமம்”

ஸத்யாத்ம ப்ராணாராமம் (தைத். ௧. ௬)

“சத்தியான்ம பிராணாராமம்”

மந ஆநந்தம் (தைத். ௧. ௬)

“மன ஆனந்தம்”

ஶாந்திஸம்ருத்தமம்ருதம் (தைத். ௧. ௬)

“சாந்திநிறைந்த அமிர்தம்” என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, ஆனந்தாதி குணங்கள் பிரதானமாகிய பிரமத்துக்குப் பரவித்தைகளிற் கேட்கப்படுகின்றன. அக்குணங்கள் அனைத்தையும் பிரமோபாசனையில் தியானித்தல்வேண்டுமோ? அன்றோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) எவ்விடத்தினும் அவை அனைத்தும் உபசங்கரிக்கற்பாலனவன்று; பிரமம் ஒன்றாயிருக்க (அதற்கு) ஆனந்தமுதலிய அநேக குணங்கள் விசேடித்து அநேகத்துவப்பிரசங்கம் எய்தலினாலும், அநேக விசேடணங்களால் விசேஷ்யங்கள் பேதமுறுதலானும், இன்றேல் அந்த அந்த இடங்களிலே (உபநிடதங்களிற்) கூறப்பட்ட குணமாத்திரத்தினாலும், அந்த உபாசனை நேர்ந்துவிடுமாதலினாலும் (உபசங்கரித்தல் வேண்டாம் எனின்),

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. குணியாகிய பிரமம் ஒன்றாதலின், ஆனந்தமுதலிய குணங்கள் பரவித்தை அனைத்தினும் உபசங்கரிக்கற்பாலன. நீலம், வெண்மை, சிவப்பு, உடைந்த கொம்பு, முறியாத கொம்பு என்றற்

றேடக்கத்தனவாய் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள குணங்கள் விசேடியத்தைப் பேதப்படுத்தும். ஆனால் நீலமாயும், சுகந்தமாயும், பெரிதாயுமுள்ள நீலோற்பலம் என்னுமிடத்தில் அங்ஙனமின்று. ஆகலின், ஒன்றுக்கொன்று விரோதமுறாத பிரமத்தின் பற்பல குணங்கள் அதனைப் பேதப்படுத்துவன அன்று. அதுபற்றி உபநிடதங்கள் அனைத்திலும் குணங்களினால் விசேடிக்கப்பட்ட பிரமம் ஒன்றாயிருத்தலின் (இங்கும் அங்கும் நேரும்) ஆனந்த முதலிய மற்றைக் குணங்கள் உபசங்கரிக்கற்பாலன. (௧௧)

(௭) பிரியசிரஸ்துவாதிகரணம்.

ப்ரியஶிரஸ்த்வாத்யப்ராப்திருபசயாபசயௌ ஹி பேதே।

(௩. ௩. ௧௨)

(௩௯௯) பிரியசிரஸ்துவாதி (குணங்கள்) இடம் பெறு; எதனாலெனின், பேதத்தினால் ஏற்றமும் குறைவுமுண்மையின்.

தஸ்ய ப்ரியமேவ ஶிர: (தைத். உ. ௫)

"பிரியமே அவர் சிரசு" என்றற்றொடக்கத்தவற்றின் பிரியசிரஸ்துவமுதலியன பிரமத்தின் குணங்களாகக் கூறப்படுகின்றன. ஆனந்தமுதலிய குணங்கள் போலப் பிரமோபாசனையில் இவைகளும் உபசங்கரிக்கற்பாலனவா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் போல இந்தக் குணங்களையும் உபசங்காரஞ் செய்தலில் யாது விரோதம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பரவித்தையிற் பிரியசிரஸ்துவமுதலியன உபசங்கரிக்கப்படுவன அன்று; சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் போல, அவை பிரமகுணமன்றாமாதலின். பிரமத்தின் குணங்களுள்ளே அவற்றைச் சேர்ப்பது பிரமத்தை அவயவங்களாலாயது போலாக்கி, அதனை வளர்தல் தேய்தல்களுக்கும் உட்படுத்தும். பிரியசிரஸ்துவ முதலியன பிரமத்தின் சுவாபாவிககுணங்களாமாயின், அது பேதிக்கப்படுமன்றே. ஆகலின், பிரமோபாசன சம்பந்தத்திலே இந்தக் குணங்கள் கொள்ளப்படுவன அன்று. (௧௨)

ஆனந்த முதலிய குணங்கள் போலச் சர்வஞ்ஞதாதிகளும் பிரமசொரூபத்தில் அந்தர்ப்பூதகுணங்களானமையின் விரோதமின்று. அங்ஙனஞ் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

இதரே த்வர்த்தஸாமாந்யாத் (௩. ௩. ௧௩)

(௩௯௭) ஆனால் மற்றவைகள் (சிந்தையில் உபசங்கரிக்கற்பாலன); பொருட் சுபாவத்தில் ஒற்றுமை இருத்தலான்.

சர்வஞ்ஞதை நித்தியதிருப்தி முதலிய மற்றைக் குணங்கள் பிரமசொரூபத்தில் அந்தர்க்கதமாயுள்ளன. (ஆனந்த முதலிய போல அவை) பொருளொற்றுமையாயிருத்தலின், எங்கும் உபசங்கரிக்கற்பாலன. பிரியசிரஸ்துவ முதலியவோ பிரமத்தில் அந்தர்க்கதமாகாமையின், (அவை) உபசங்கரிக்கற்பாலன அன்று. (௧௩)

(அ) ஆத்தியாநாதிகரணம்.

ஆஃ௱ாநாய ஷுயொஜநாஜாவாக (௩. ௩. ௧௪)

(௩௬அ) தியானத்தின் பொருட்டுப் பிரயோசனமின்மையான்.

ஈண்டு மேலே கூறப்பட்ட ஆனந்தமயாத்துமா தியானிக்கப்பட்டாற் போல, அன்னமயாதிகளும் தியானிக்கற்பாலனவா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அன்னமயமுதலிய அனைத்துள்ளே இருக்கும் ஆனந்தமய ஆன்மாவானது அன்னமயமுதலியவற்றைச் சிந்திக்கும் கிரமமொழிந்து அவற்றுக்குள்ளேயுள்ளதாக அநுசந்தானஞ் செய்யமுடியாமையின், அவைகளை அநுசந்தானஞ்செய்தல் நியமமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. அன்னமயமுதலியவற்றை அநுசந்தானஞ் செய்தல்நியமமின்று; பிரயோசனமின்மையின். அதற்கு (அன்னமயாதிகளை விரித்து விளக்கின நோக்கத்துக்கு) ஆனந்தமய (ஆனந்தமிக்குடைய) பிரமத்தைஅடைதலே பிரயோசனம். ஆகலின், அதைப் பெறும் வரையுமே அன்னமயாதிகளைச் சிந்திக்கவேண்டியது; அவற்றைத் தியானஞ் செய்தல் முழுமையும் ஆவசியகமில்லை. (௧௪)

ஆ௮ாஜா௯ (௩. ௩. ௧௫)

(௩௬௧) ஆன்மசப்தமுண்மையானும்.

அஜெயொ௨ாநெ௯ஸஂக்௱ (தைத். ௨. அ)

"அன்னமய ஆன்மா என்று உபக்கிரமித்து" என்றற்றொடக்கத்தவறில் தனித்தனி ஆன்மசப்தமுண்மையின், அன்னமயாதிகளுக்கு அன்னாதிகளை அதிஷ்டிக்கும் சேதனத்துவம் உளதாகப் பெறப்படுகின்றது. பிரமத்தையொழிந்த சேதனமெல்லாம் தியானத்துக்கு யோக்கியதை இலவாக ஒழிக்கப்பட்டமையான், (பரவித்தியாத்) தியானகாலத்தில் அவை அநுசந்தானம் பண்ணப்படுவன அன்று. அங்ஙனமே,

ஶிவ ஏகொ ஜெ௯யஃஶிவஂகா௱வ-௯௱ஷ்ரீ௲ (அதர்வசிகை)

"மற்றெல்லோரையும் விடுத்து ஆனந்தஞ் செய்பவராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என அதர்வசிகை கூறிற்று. இந்தச் சுருதியானது முமுட்சுக்களாற் றியானிக்கற்பாலர் சிவபெருமானைத் தவிரப் பிறர் ஒருவர் இலர் என நிஷேதிக்கின்றது. ஆகலின், அன்னமயமுதலியவற்றை அநுசந்தானஞ் செய்தல் நியமம் அன்று. (௧௫)

ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத் (௩. ௩. ௧௬)

(௩௭௦) இதரவிஷயத்திற் போல ஆன்மா குறிக்கப்படுகின்றது; உத்தரத்தினாற் காட்டப்பட்டாற் போல.

அந்யோந்தர ஆத்மாநந்தமய꞉ (தைத். ௨. ௫)

ஈண்டு, "அன்னியமாகிய அந்தரான்மா ஆனந்தமயர்" என்ற இடத்திற் போதரும் ஆன்மசப்தம் பரமான்மாவின்மேலதன்றி, பிரத்தியகான்மாவின் மேலதன்று.

ஆத்மந ஆகாஶ꞉ ஸம்பூத꞉ (தைத். ௨. ௧)

"ஆன்மாவிலிருந்து ஆகாயம் பிறந்தது" என்ற சுருதியில், ஆன்மசப்தம் பரமான்மாவின் மேலதானாற் போல,

ஆநந்தமயமாத்மாநமுபஸங்க்ராமதி (தைத். ௩. ௧௦. ௫)

"ஆனந்தமயமாகிய ஆன்மாவோடிசைந்து" என்னும் உத்தரவாக்கியத்தினால், இது (பரமான்மா) பெறப்படுகின்றது. ஆகலின், ஆனந்தமயமாய், (பரம) ஆன்மாவை அநுசந்தானஞ் செய்தலே முக்கியமான பிரமாநுசந்தானம். (௧௬)

அந்வயாதிதி சேத் ஸ்யாதவதாரணாத் (௩. ௩. ௧௭)

(௩௭௧) தொடர்ச்சியினால் எனின், வற்புறுத்தலினாலாம்.

(ஆக்ஷேபம்) அன்னமயமுதலியவைகளும் ஆன்மசப்தத்தோடு தொடர்ந்து வருதலாற் பரமான்மாவாய் அவைகளும் தியானிக்கப்படவேண்டுமென்பதில் யாதும் இழுக்கில்லையே எனின்,

(உத்தரம்) அன்று;

அந்யோந்தர ஆத்மாநந்தமய꞉ (தைத். ௨. ௫)

"அந்நிய அந்தரான்மா ஆனந்தமயர்" என்றதினால், ஆனந்தமயமாகிய சிவபிரான் அன்னமயாதிகளுக்குப் பின்னமாயினர் என்பது பெறப்படுகின்றமை பற்றி,

ஶிவ ஏகோ த்யேய꞉ ஶிவங்கர꞉ ஸர்வமந்யத் பரித்யஜ்ய (அதர்வசிகை)

"மற்றெல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்" என்னுஞ் சுருதி, அனைத்தையும் விடுத்துச் சிவபெருமான் ஒருவர்க்குமாத்திரம் தியேயத்துவத்தை வற்புறுத்திச் சாற்றுகின்றமையின். ஈண்டுச் சிவபிரான் என்றது சமஸ்தகளங்கமும் ஒழிந்து, நிகிலமங்கலகுணங்களுக்கு இருப்பிடமாகிய பரப்பிரமம் என்பதை விளக்குகின்றது. விருபாக்ஷரும் கிருஷ்ணபிங்களருமாகியவரை இடைவிடாது சிந்தித்தலாற் பிரமத்தோடு சாரூப்பியமடைதலே முத்தியாம். உபாசனையே பலமாதலின் சிவபெருமானையொழிந்து மங்களசூன்னியமாயிருப்பவற்றைத் தியானித்தல் சிவத்துவத்தை அடைவிக்காது. ஆகலின், ஆனந்தமயசிவபிரான் ஒருவரே வழிபடற்பாலர். (௧௭)

(௬) கார்யாக்கியாநாதிகரணம்.

கார்யாக்யாநாதபூர்வம் (௩. ௩. ௧௮)

(௩௭௨) காரியமாக விதிக்கப்பட்டமையின், (ஈண்டு) புதியதொன்றே (கருதற்பாற்று).

யோ ஹவை ஜ்யேஷ்டஞ்ச ஸ்ரேஷ்டஞ்ச வேத।

(பிரு. அ. ௧. ௧; சாந். ௫. ௧. ௧)

"எவன் ஜ்யேஷ்டத்தையும் சிரேஷ்டத்தையும் அறிகின்றனோ" என்று தொடங்கி,

கிம் மே வாஸ: (பிரு. அ. ௧. ௧௪)

"(வாக்குமுதலியவற்றை நோக்கி) எனக்கு யாது உடை" என்று பிராணன் வினவிய வினவுக்கு, "சலமே பிராணனுக்கு உடை" என்று கூறி, பின்னரும்

ஸ்ரோத்ரியா அஶிஷ்யந்த ஆசாமந்த்யஶித்வா சாமந்த்யேதமேவ தத‍

நமநக்நம் குர்வந்தோ மந்யந்தே (பிரு. அ. ௧. ௧௪)

"இதனை அறிந்த சுரோத்திரியர்கள் போசனத்துக்கு முன்னும் பின்னும் ஆசமனஞ் செய்து அவ்வன்னத்தை உடையுடையதாக்குகின்றேம் என நினைக்கின்றனர்" என்று கூறியதாகக் காணப்படுகின்றது.

ஈண்டுப் பிராணனுக்கு ஆசமனமும் வஸ்திரத்தன்மையுமாகிய இரண்டுமோ? இன்றேற் பிராணனுக்கு வஸ்திரத்தன்மைமாத்திரமா? விதிக்கப்படுகின்றதென்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இது அது என்று யாதுங் கூறப்படாமையின், இரண்டுமே விதிக்கப்பட்டன எனின்,

(சித்தாந்தம்) ஆசமனம் ஸ்மிருதி ஆசாரத்தினாற் பெறப்பட்டமையால், கூறப்படாத பிராணனுக்கு வஸ்திரமாயிருத்தலே புதிதாக விதிக்கப்படுகின்றது; புதிதாயுள்ளதொன்று விதிக்கப்படுமாயின், (சுருதியானது) அதுவாத சொரூபமாக விதி கற்பிக்கின்றது. ஆதலினால், முன் அறியப்படாததொன்றாயுள்ள பிராணனுக்கு வஸ்திரமாயிருத்தலே ஈண்டு விதிக்கப்பட்டதாகக் கோடற்பாற்றென்பது யுக்தம். (கஅ)

(கo) சமாநாதிகரணம்.

ஸமாந ஏவஞ்சாபேதாத் (ங. ந. கக)

(நஎந) பேதமில்லாமையால் இங்ஙனம் (குணங்கள்) ஒன்றாயிருக்கின்றன.

அக்கினிரகசியத்திலும் பிருகதாரணியத்திலும் சாண்டில்லியவித்தை கூறப்பட்டிருக்கின்றது; ஒன்றிலே,

ஸ க்ரதும் குர்வீத மநோமயம் ப்ராணசரீரம் பாரூபம் ஸத்ய ஸங்கல்பமாகாசாத்மாநம் (மத்தியந்தினசாகை)

"மநோமயமாய், பிராணசரீரமாய், ஒளிரூபமாய், சத்தியசங்கற்பமாய், ஆகாய வியற்கையாயுள்ள (பரம) ஆன்மாவை உபாசிக்க" என்றும், மற்றதிலே

மநோமயோऽயம் புருஷோ பா: ஸத்யஸ்தஸ்மிந்நந்தர்ஹ்ருதயே யதா வ்ரீஹிர்வா யவோ வா ஸ ஏஷ ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி: ஸர்வமிதம் ப்ரசாஸ்தி (பிரு. எ. சு. க)

"ஒளிரூபமாயிருத்தலின் மநோமயமாயுள்ள சத்தியபுருஷர் நெல்லேயேனும் யவையையேனும் நிகர்த்து இதயத்துளர், அவர் சர்வத்தையும் வசீகரிப்பவர், சர்வத்துக்கும் ஈசானர், அனைத்துக்கும் அதிபதி; (உள்ளனவாகிய) இவை அனைத்தையும் ஆளுகின்றனர்" என்றுங் கூறப்படுகின்றது.

ஈரிடத்துங் கூறப்பட்ட வித்தைகள் இரண்டும் பின்னமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஓரிடத்திலே (தியானப்பொருளாகிய புருஷர்) ஆகாயான்மாவாதலிற் பெரியர் என்றும், மற்றோரிடத்திலே யவைக்கொப்பாயிருத்தலிற் சிறியர் என்றும், ஒன்றிலே சத்தியசங்கற்பத்துவமுடையர் என்றும், மற்றொன்றிலே வசித்துவமுடையரென்றும் பிறவுமாகக் குணங்கள் ஒன்றுக்கொன்று பேதமுறக்கூறப்படலான், ஈரிடத்துங்கூறப்பட்ட வித்தைகள் பின்னமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈரிடத்திலும் ஞான (மனோ) மயத்துவமுதலிய சமமாய்க் கூறப்பட, ஆகாயான்மா என்றது ஆகாயம்போலச் சுவச்சமாயிருத்தலானும், தோத்திரஞ் செய்வதற்கு மகிமையைக் காட்டுவதினாலும், வசித்துவ முதலிய குணங்கள் சத்தியசங்கற்பத்துவ முதலிய குணங்களிலிருந்து பேதமுறுவன அன்றுமாதலினாலும் ஈரிடத்தும் உரைத்த வித்தை ஒன்றேயாம். (௧௯)

(௧௧) சம்பந்தாதிகரணம்.

ஸம்பந்தாதேவமந்யத்ராபி (௩. ௩. ௨௦)

(௩௭௪) (இரண்டுக்கும் ஒப்பாக அவர்) சம்பந்தமிருத்தலான், அங்ஙனமே பிறவிடத்தினும்.

ய ஏஷ ஏதஸ்மின் மண்டலே புருஷோ யஸ்சாயம் தக்ஷிணேக்ஷன் (பிரு. ௭. ரு. ௨, ௩)

"அந்த மண்டலத்திலேயுள்ள புருஷர் இங்கே வலக்கண்ணினும் உளர்" என்று பிருகதாரணியத்திலே தொடங்கி, வியாகிருதி சரீரங்கொண்டு சத்தியமாகிய பிரமமானது சூரியமண்டலத்தினும் வலக்கண்ணினுமாகத் தியானிக்கற்பாற்று என்று கூறப்படுகின்றது. பின்னரும்,

தஸ்யோபநிஷதஹரிதி (பிரு. ௭. ரு. ௩)

தஸ்யோபநிஷதஹமிதி (பிரு. ௭. ரு. ௪)

"அவரது இரகசியநாமமாகிய அஹ:" அதிதேவதை என்றும், "அவரது இரகசியநாமமாகிய அஹம்" அத்தியாத்மம் என்றும் இரு இரகசிய நாமங்கள் கூறப்படுகின்றன.

ஒவ்வோரிடத்தும் இந்த இரண்டு நாமங்களும் தியானிக்கற்பாலனவா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபாசிக்கப்படும் பொருளாகிய பிரமம் ஒன்றுமாதலின், வித்தை ஒன்றே ஈரிடத்துங் கூறப்பட்டது. ஆகலின், இரண்டிடத்தும் இரண்டு பெயர்களும் சிந்திக்கப்படல்வேண்டும் எனின், (௨௦)

(சித்தாந்தம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

நவா விஸேஷாத் (௩. ௩. ௨௧)

(௩௭௫) இன்றேல் (அங்ஙனம்) இன்று; பேதமுறலின்.

வித்தைகள் ஒன்றன்று; சூரியன் கண் என்னும் ஸ்தானசம்பந்தமாக உபாசனை ஈரிடத்தும் பேதமுறுதலின். ஆகலின், அவ்வவ்விடத்துக்கே அந்தந்த நாமம் இயைந்தது. (௨௧)

(௪௨) தர்சயத்யதிகரணம்.

दर्शयति च (௩. ௩. ௨௨)

(௩௭௬) சுருதியுஞ் சொல்கின்றது

சாந்தோக்கியத்திலும் தைத்திரீயத்திலும் மண்டலவித்தை கூறப்படுகின்றது. அந்த வித்தை ஒன்றா? வேறா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते हिरण्यश्मश्रुर्हिरण्यकेश आप्रणखात्सर्व एव सुवर्णः (சாந். ௧. ௬. ௬)

"பொற்றாடியும், பொற்கேசமுமுடையராய், நகம்வரையும் எல்லாம் பொன்மயமுடையராய்ச் சூரியனுள்ளே காணப்படும் பொன்மயபுருஷர்" என்று சாந்தோக்கியத்திற் கூறப்படுகின்றது.

य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषः (சாந். ௧. ௬. ௬)

"சூரியனுள்ளே இருக்கும் புருஷர் பொன்மயபுருஷர்" என மற்றொன்றிலே மூவேதங்களினுருவாய மண்டலத்தானிருக்கின்ற புருஷனுள்ளே இருக்கும் பொன்மயபுருஷனைப்பற்றுரைத்து,பின்னர் அப்பாகசாரத்திலே சுருதியானது

सर्वो वै रुद्रः (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரர்" என்று தொடங்கி,

नमो हिरण्यबाहवे हिरण्यवर्णाय हिरण्यरूपाय हिरण्यपतयेऽम्बिकापतय उमापतये पशुपतये नमो नमः (தைத். ஆரணி. ௧௦. ௨௨. ௪௦)

"பொற்கைகளுக்கு நமஸ்காரம், பொன்வர்ணர்க்கு நமஸ்காரம், பொன்வடிவினர்க்கு நமஸ்காரம், பொற்பதிக்கு நமஸ்காரம், அம்பிகாபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம், பசுபதிக்கு நமஸ்காரம்" என்பதிறுதியாகச் சர்வான்மகத்துவமும், இரண்ணியபாகுத்துவமும், உமாபதித்துவமும் கூறப்படுகின்றன. ஓரிடத்துச் சரீரமுழுமையும் பொன்மயமாகவும், மற்றோரிடத்திலே பாகுமாத்திரம் பொன்மயமாகவும் கூறப்படலின் ரூபபேதமும், ஓர் இடத்தில்

सर्वो वै रुद्रः (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரரே" எனச் சர்வான்மகத்துவமும், மற்றோரிடத்தில்

सर्वेषां ज्योतिषां नाथि(?)षे ।

"எல்லா உலகத்தையும் ஆளுகின்றனர்" எனச் சர்வாதிபத்தியமுமாகிய குண பேதமும் எய்துகின்றமையின், வித்தை ஒன்றன்றே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வித்தை பேதமின்று.

அஹரிதி (சாந். ரு. ௯. ௯)

"ஆதித்தியனுள்ளே உள்ளார்" என ஸ்தானம் ஒன்றாயிருத்தலின், வித்தை ஒன்றும் எனக் காட்டுகின்றது. தைத்திரீயத்திலே,

ய ஹிரண்மய: புருஷ:|

"பொன்மயபுருஷர்" என்று உபக்கிரமித்து, இரண்ணியபாகு என்னும் உப லக்ஷணையின்மேலே உபசங்காரத்தினும் சர்வாங்கமும் சுவர்ணத்துவமே என்று கூறப்பட்டது. சகத்துக்கு ஈசானனும், அவர் அதனைப் பிரவேசித்து நிற்கின்றமையான் உலகமாய் நின்றனர் என்பது யுக்தம் என நிரூபிக்கப்பட்டது. ஆகலின், ஈரிடத்தும் ஒன்றே பிரதிபாதிக்க வேண்டினமையின், உமாபதித் துவமுதலிய குணங்கள் இரண்டிடத்தும் (தியானத்தில்) உபசங்கரிக்கற்பால னவாம். (௨௨)

(௧௩) சம்பிருத்தியதிகரணம்.

ஸம்ப்ருதித்யுவ்யாப்த்யபி சாத: (௩. ௩. ௨௩)

(௩௭) ஆதலினாலும் தொகுத்தலும் ஆகாயவியாபக மும்.

இராணாயநீயர் உத்தரபாகத்தில்,

ப்ரஹ்மஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந | ப்ரஹ்மபூதாநாம் ப்ரமதோத ஜஜ்ஞே தேநார்ஹதி ப்ரஹ்மணா ஸ்பர்த்திதும்க: (தைத். பிராம். ௨. ௪. ௭. ௭௨)

"பிரமமானது வீரியமாய வலிய செய்கைகளைச் செய்தது; தொடக்கத்திலே ஜ்யேஷ்டமாகிய பிரமம் ஆகாயத்தை ஊடுருவிற்று; பிரமம் பூதங்களுக்கு முன்னே இருந்தது; அந்தப் பிரமத்தோடு எதிர்க்கவல்லார் யார்" என்று கூறப்படுகின்றது. ஹரி (நாராயணர்), அரன் (உருத்திரர்), இரணியகருப்பர் (பிரமா) முதலாயினார்க்கு ஜ்யேஷ்டமாயும், உற்கிருஷ்டகடவுளாயும், இவர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னே பரமாகாசபதத்தை வியாபித்ததாயும் எவராலும் மேற்கொள்ளப்படாதனவாய், முதிர்ந்தனவாய், பிறரால் செய்ய இயலாதனவாய், உலகத்திலே (பிரசித்த) மாயிருந்த திரிபுரதகனம் காள கூடகபளனமுதலியவற்றை ஸ்ரீகண்டமூர்த்தியாதி வடிவங்கள் வாயிலாகச் செய்துமுடித்ததாயுமுள்ள அந்த மஹத்தான பிரமத்தின் வீரியசித்திகளும்

ஆகாயவியாபகமும் பாவித்தைகள் அனைத்தினும் உபசங்கரிக்கவேண்டுமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) மற்றவைகள் போல, இந்தச் செய்கைகளும் பிரமத்தின் குணங்களானமையானும், ஓர் விசேஷவிதியைக் குறித்து இவைகள் கூறப்படாமையானும் பாவித்தைகள் அனைத்தினும் உபசங்கரிக்கற்பாலனவாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. வியாபகமானது எல்லா உபாசனைகளினும் உபசங்கரிக்கப்படுவது அன்று. சிறிய ஸ்தானங்கள் ஒழிந்த மற்றை இடங்களிலே சாமர்த்தியத்தினற் (காரியத்தின் இயற்கைகொண்டு) உபசங்கரிக்கப்படல்வேண்டும்.

தெவா ஹவெ ஸ்வஃ-லொகமாயஂஸ்தெ தெவா ருத்ரமப்ருச்சஂகொ ஭வாநிதி (அதர்வசிரசு)

"தேவர்கள் சுவர்க்கலோகத்தை அடைந்தார்கள்; நீவிர் யார்? என்று அந்தத் தேவர்கள் உருத்திரரைக் கேட்டார்கள்" என்னுஞ் சுருதியினல் நிரதிசயானந்தத்துக்கு ஸ்தானமாதலின் சுவர்க்கம் எனப்படும் அது, பிரமாதி பதவிகளினும் மஹத்தாகிய மகாஸ்தானமாகக் கேட்கப்படுகின்றது. ஆகலின், அற்பஸ்தானங்களுக்கு வேறுயுள்ள வைசுவாநராதி உபாசனைகளிலே ஆகாயவியாபகம் உபசங்கரிக்கப்படல்வேண்டும். அதனேடிசைந்தமையால் மகாவீரியச் செய்கைகளும் அங்கே உபசங்கரிக்கற்பாலன. (உரு)

(கச) புருஷவித்தியாதிகரணம்.

புருஷவித்யாயாமிவ செதரெஷாமநாம்நாநாத் (ரு. ரு. உச)

(ருஎஅ) புருஷவித்தையினும் அப்படியே; மற்றவைகள் கூறப்படாமையான்.

புருஷவித்தை சாந்தோக்கியத்தினும் தைத்திரீயத்தினும் கூறப்படுகின்றது.

புருஷொ வாவ யஜ்ஞஸ்தஸ்ய யாநி சதுர்விஂஶதி வர்ஷாணி தத்ப்ராதஃஸவநம் (சாந். ரு. கசு. க)

"புருஷனே யஞ்ஞம்; அவனுடைய இருபத்துநான்கு வயசும் பிராதஸ் சவனம்" என்று புருஷவித்தையானது ஒன்றிலே சொல்லப்படுகின்றது.

தஸ்யைவம் விதுஷொ யஜ்ஞஸ்யாத்மா யஜமாநஃ ஶ்ரத்தா பத்நீ ஶரீரமித்மமுரொ வெதிஃ (தைத். ஆரணி. கo. அo. கoக)

"யாகத்தில் ஆன்மா யஜமானன், அவனது சிரத்தை மனைவி, அவனது சரீரம் இந்தனம், அவனது நெஞ்சு வேதிகை என இங்ஙனம் அறிகின்றவன்" என்று மற்றொன்றிற் கூறப்படுகின்றது.

இந்த இரு உபநிடதங்களினுங் கூறப்பட்ட புருஷவித்தை ஒன்றா? பின்னமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இந்த இரண்டு உபநிடதங்களினுமுள்ள வித்தைகள் புருஷவித்தை எனப் பெயரினாற் பேதமுறாமையானும், யஞ்ஞத்தில் வெவ்வேறு அங்கங்கள் இரண்டினும் சமமாகக் கூறப்படலானும் வித்தைகள் ஒன்றேயாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. தைத்திரீயத்திற் கூறப்படும் யஜமானன் பத்தினி முதலிய யஞ்ஞ அவயவங்களும், மூன்று சவனங்களும் சாந்தோக்கியத்திற் பேசப்படாமையானும், ஆங்கு வேறு பிரகாரமாகச் சவநத்திரய முதலிய சொல்லப்படலானும் புருஷவித்தை இரண்டினும் பின்னமேயாம்.

யஷாயம் ப்ராதஃஸவநம் தாநி ஸவநாநி।

"மாலை காலை உச்சி என்பனவே சவனங்கள்" என்று தைத்திரீயத்திற் கூறப்படுகின்றது. சாந்தோக்கியத்திலோ புருஷனுடைய ஆயுசு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுச் சவனங்கள் மூன்றாகக் கூறப்பட்டன; தைத்திரீயத்திலே பலங் கூறப்படாமையின்.

ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத।

(தைத். ஆரணி. ௧0. ௭௬. ௧00)

"பிரமத்தினொளிக்காக ஒருவன் ஓம் என்று சொல்லி (பரம) ஆன்மாவைத் தியானித்தல்வேண்டும்" எனப் பிரமவித்தையைக் கூறி,

ப்ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி (தைத். ஆரணி. ௧0. ௭௬. ௧00)

"பிரமத்தின் மகிமைக் குணத்தை அடைகின்றான்" எனப் பலத்தையுங் கூறி,

ஏவம் வித்வாந்

"இங்ஙனம் அறிபவன்" எனக் கூறப்பட்ட புருஷவித்தை இப்போது கூறப்படும் பிரமவித்தைக்கு அங்கமாய் அதன் பலம் பிரமத்தை அடைதலேயாம் என்றும், சாந்தோக்கியத்தில்

ஸஹ ஷோடஶவர்ஷஶதம் ஜீவதி (சாந். ௩. ௧௬. ௭)

"அவன் ஆயிரத்தறுநூறு வருஷம் வசிக்கின்றான்" என்றும் வித்தையின் பலன் கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின் பலத்திலே பேதமுண்மையானும், யஞ்ஞ அவயவங்களிலே பேதமுண்மையானும் வித்தை ஒன்றன்று. (௨௬)

(௧௫) வேதாத்தியதிகரணம்.

வெயாஜ்யுபெஜ்ராக (௩. ௩. உ௫)

(௩௭௯) ஊடுருவுதல் முதலிய வேறு பொருள்கள் பேத முறுதலான்.

தைத்திரீயோபநிடத ஆரம்பத்திலே,

ஶந்நோ மித்ர ஶம் வருண: (தைத். க. க)

"மித்திரன் எங்களுக்கு இன்பத்தைக் கொடுக்க; வருணன் எங்களுக்கு இன்பத்தைக் கொடுக்க"

ஸஹநாவவது (தைத். உ. க)

"அவன் எங்கள் இருவரைக் காக்க" என்று கூறப்பட்டிருக்கின்றது.

இந்த மந்திரங்கள் வித்தைக்கு அங்கமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வித்தைக்குச் சமீபத்துளவாதலின் அவை வித்தியாங்கமாகும் எனின்,

(சித்தாந்தம்) ஆதர்வணிகருடைய உபநிடத ஆரம்பத்திற் கூறப்பட்ட

ஶுக்ரம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய

"சுக்கிரத்தை ஊடுருவி, இதயத்தை ஊடுருவி" என்றற்றொடக்கத்த மந்திரம் இதயத்தை ஊடுருவுவதை உணர்த்துவதாய்ச் (சத்துருவுக்கு மரணத்தை விளைவிக்க) அபிசாரத்தொழில் இருந்தாற்போலவேனும், ஐதரேய வாஜசநேய உபநிடதங்களின் ஆரம்பத்திற் கூறப்பட்ட மகாவிரத பிரவர்க்கிய கருமங்கள் வெளிப்படை விதிகளாக யஞ்ஞகருமங்களுக்கு அங்கங்களாயினாற் போலவேனும், மேலே உரைத்த அவ்விரு மந்திரங்களும்

ஸத்யம் வதிஷ்யாமி (தைத். ஆரணி. எ. க. க)

தேஜஸ்வி நாவதீதமஸ்து (தைத். ஆரணி. அ. க. க)

"நான் உண்மை சொல்வேன்; எங்கள் படிப்பு தேஜசாகுக" என்றவாறு வேதம் படிப்பதற்கு அங்கங்களாயமைந்தனவன்றி வித்தைக்கு அங்கங்களாவன அன்று; அவற்றின் பயன் வேறுதல்பற்றிச் சுருதி, லிங்கம், வாக்கியம் என்பவற்றினும் சந்நிதி துர்ப்பலமாதலின். (உ௫)

(௧௬) ஹாந்நியதிகரணம்.

ஹாநௌ தூபாயநஶப்தஶேஷத்வாத் குஶாச்சந்தஸ்ஸ்துத்யுபகாநவத்தது க்தம் (௩. ௩. உ௬)

(௩-௮௦) ஆயின் விமோசனவிஷயத்தில் (அது பிரவே சத்தோடு சேர்த்துக்கொள்ளப்படல்வேண்டும்); இது (விமோ சனம்) பிரவேச வாக்கியங்களுக்குச் சேஷமாயிருத்தலின்; குசங்கள், சந்தசுகள், துதி, கானம் என்பவற்றிற்போல; இது விளக்கப்பட்டதாயிற்று.

வேதசாகை ஒன்றிலே, பிரமத்தை அடையும் அறிஞன் புண்ணிய பாவவிமோசனத்தை அடைகின்றனன் என்று கூறப்பட்டிருக்கின்றது. வேதத்தின் மற்றோர் சாகையிலே, அவன் நீங்கப்பெற்ற புண்ணியபாவமிரண் டிற் புண்ணியம் சிநேகிதர்களையும், பாவம் சத்துருக்களையும் பிரவேசிக்கின் றன என்று கூறப்படுகின்றது. மற்றோர் சாகையிலே, அவ்விரண்டினின்று நீங்குதலும், அவற்றிற் பிரவேசமுமாம் இரண்டுங் கூறப்பட்டன. இஃதெல் லாந் தியானத்தின்பொருட்டேயாம்.

ஈண்டு (அவற்றை) விடுதலும் (அவற்றிற்) பிரவேசித்தலுமாகிய இரண் டும் எவ்விடத்துந் தியானிக்கற்பாலனவா? இன்றேல் அவற்றுள் ஒன்று சிந்திக்கற்பாலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இதனாற் பெறப்பட்டது யாது? சாட்டியாயனகத்திலே

தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்।

"அவனுடைய புத்திரர்கள் அவன் ஆஸ்தியையும், அவனது சிநேகிதர்கள் அவன் புண்ணியத்தையும், அவனது சத்துருக்கள் அவன் பாவத்தையும் அடைகின்றனர்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய (சாந். ௮. ௧௩., ௧)

"ஓர் குதிரை தன் உரோமத்தை உதறுவதுபோலப் பாவத்தை உதறி, இராகுவாயினின்று சந்திரன் விடப்படுவதுபோல" எனத் தாண்டிசாகையினர் கூறுவர்.

ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி (முண். ௩. ௧. ௩)

"அப்போது வித்துவான் புண்ணியபாவங்களை உதறி, நிரஞ்சனனாய்ப் பரம சாமியத்தை அடைகின்றான்" என அதர்வணவேதம் கூறுகின்றது. ஈண்டு வித்துவான் புண்ணியபாவத்தை ஒழித்தல்வேண்டுமென்று கூறிய சுருதியில் விடப்பட்ட அவற்றின் பிரவேச ஸ்தானம் உபசங்கரிக்கப்படவேண்டிய தின்று; அதனை ஒழித்தல்வேண்டுமென்று கூறிய சுருதி அதனை வெளிப்ப டையாகக் கூறுமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஹாநி என்பது விமோசனம். உபாயனம் என்பது பிரவேசம்; விமோசனமாத்திரஞ் சொல்லப்பட்டபோதாவது, பிரவேசமாத்திரஞ் சொல்லப்பட்டபோதாவது, அவற்றுள் ஒன்றை மாத்திரம் குறியாது இரண்டுங் தொகுத்துக் கூறப்பட்டனவாயே கொள்ளற்பாற்று; விகற்பமாயன்று (அஃதாவது இரண்டில் ஒன்றுமாத்திரம் எனக் கோடற்பாற்றன்று). பிரவேசத்தை உணர்த்துஞ் சப்தமானது விமோசனத்தை உணர்த்தும் வாக்கியத்துக்குப் பரிசிஷ்டமாயிருத்தலின், அது சேஷத்துவம் எனப்படும்; எதனாலெனின், விடுக்கப்பட்ட புண்ணியமும் பாவமும் பிரவேசிக்குமிடத்தைக் கூறுதலால் முந்தியதைப் பிந்தியது ஆவசியகம் அபேக்ஷிக்கும்.

(ஆக்ஷேபம்) (வேதத்தின்) ஓர் இடத்திற் கூறப்பட்ட வாக்கியத்துக்குப் பிறிதோரிடத்துக் கூறப்பட்ட வாக்கியம் சேஷமாவதெங்ஙனமெனின்,

(உத்தரம்)

வாநஸ்பத்யா: கபய:।

"பூக்காது காய்க்கும் மரத்தினின்று பிறக்கும் குரங்கள்" என்னும் வாக்கியத்துக்கு, விசேஷமாய்ப் பிறிதோரிடத்துப் போந்த

ஔதும்பர்யா: கபய:।

"உதும்பரத்தின் மக்களாகிய குரங்களே" என்பது சேஷமானாற் போலவும்,

தேவாஸுராணாம் ச²ந்தோபி⁴:।

"தேவர்களுடையவும் அசுரர்களுடையவும் சந்தசுகளால்" என்பதற்கு, பிறிதோரிடத்துள்ள

தேவச்ச²ந்தாம்ஸி பூர்வாணி।

"(தேவர்களுடைய சந்தசுகள் முதற்கண் வரவேண்டும்)" என்பது சேஷமானாற் போலவும்,

ஷோட³சிந: ஸ்தோத்ரம் உபாகரோதி (யசுர். வே. ௬. ௬. ௧௧. ௬)

"ஷோடசிகருமத்துக்கு ஸ்தோத்திரம் செய்கின்றான்" என்னும் வாக்கியத்துக்கு,

ஸமயாவிஷிதே ஸூர்யே ஷோட³சிந: ஸ்தோத்ரம்।
(யசுர். வே. ௬. ௬. ௧௧. ௬)

"சூரியன் பாதி உதயமாகும்போது ஷோடசிகருமத்தின் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும்" என்பது சேஷமானாற் போலவும்,

ருத்விஜ உபகாயந்தி|

"இருத்துவிக்குக்கள் பாடுகின்றார்கள்" என்பதற்கு

நாத்வர்யுருபகாயேத் (யஜுர். வே. ௬. ௩. ௧. ௫)

"அத்துவரியு கானஞ் செய்யப்படாது" என்பது சேஷமாவதுபோலவும், பிரவேசத்தைப்பற்றி உணர்த்துஞ் சுருதி (புண்ணியபாவ) விமோசனத்தை உணர்த்தும் வாக்கியத்துக்குச் சேஷமாகக் கொள்ளப்படுங்கால், அவற்றுள் ஒன்றுதான் (சிந்திக்கற்பாலது) என்பது நியாயமன்று. (மீமாஞ்சையின்) முதலாவது தந்திரத்தில்,

அபி து வாக்யஶேஷ ஸ்யாதந்யாய்யத்வாத்விகல்பஸ்ய|

(பூருவமீமாஞ்சை. ௧௦. அ. ௪)

"ஒன்றைமாத்திரம் அங்கிகரிப்பது நியாயமல்லாமையால், ஒன்றுக்குமற்றது சேஷமாகும்" என்று கூறப்பட்டிருக்கின்றது. (ஈண்டு இவ்விஷயத்திற் பிரவேசத்தை உணர்த்திய வாக்கியம் மற்றதிற் கூறப்பட்டதைத்) துதிக்கவேனும், இன்றேல் உயர்ச்சியைக் காட்டவேனும் (உதவுகின்றது).

(ஆக்ஷேபம்) ஓரிடத்தெய்தும் அர்த்தவாதம் மற்றோரிடத்தில் வரும் அர்த்தவாதத்தை அபேக்ஷித்தல் எங்ஙனமாம் எனின்,

(உத்தரம்) அங்ஙனங் கூறல் ஒவ்வாது.

ஏகவிம்ஶோ வா இதோஸாவாதித்ய:|

"இங்கிருந்து சூரியன் இருபத்தொன்றுவதாகக் காணப்படுகின்றது" என்னும் சாமத்தியானத்தைத் துதிக்கப்போந்த அர்த்தவாத சுருதியானது, (சூரியன்) இருபத்தொராவது என நிச்சயஞ் செய்யும்பொருட்டு

த்வாதஶ மாஸா: பஞ்சர்தவஸ்த்ரய இமே லோகா அஸாவாதித்ய ஏகவிம்ஶ: (யஜுர். வே. ௫. ௧. ௧௦. ௩)

"பன்னிரு மாசங்களும், ஐந்து இருதுக்களும், மூன்று உலகங்களுமாகிய இருபதும் நீங்கச் சூரியன் இருபத்தொராவதாகவும் (காணப்படும்)" எனத் தொகை நிர்ணயஞ் செய்தற்குக் கூறப்பட்ட (வாக்கியத்தைத்) தைத்திரீய சங்கிதையின் சத்திரப்பிகரணத்து அர்த்தவாதமாக அபேக்ஷிப்பதாகக் காணப்படுகின்றது. அர்த்தவாதமாயினும் பிரவேசம் உபசங்கரிக்கப்பட வேண்டியது. மேலும்,

தத்ஸுக்ருததுஷ்க்ருதே விதூநுதே தஸ்ய ப்ரியா ஜ்ஞாதய ஸுக்ருதமுபயந்த்யப்ரியா துஷ்க்ருதம் (கௌஷீ. ௧. ௪)

"அங்கே தனது புண்ணியபாவங்களை உதறுகின்றான்; அவனுடைய பற்றுள்ள பந்துக்கள் நன்மையைப் பெறுகின்றனர்; அவனுடைய சத்துருக்கள்

திமையைப் பெறுகின்றனர்" என்று கௌஷீதகியுபநிடதத்திலே விமோச னம் பிரவேசனம் என்னும் இரண்டும் ஒரிடத்திற் கூறப்பட்டன. ஆகலின், அவை இரண்டுஞ் சமுச்சயம். (உ௬)

(௧௭) சாம்பராயாதிகரணம்.

ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத்ததாஹ்யந்யே (ந. ந. உ௭)

(ந-அக) தேகவியோககாலத்தில் அடையவேண்டிய தொன்றுமில்லாமையான்; அங்ஙனமே பிறருஞ் சொல்கின் றனர்.

மேலுரைத்த புண்ணியபாவங்களின் விமோசனம்தேகவியோககாலத் திலா? மார்க்கத்திலா? சிந்திக்கற்பாலது என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரவர்த்திக்கின்றது. ஒரிடத்திலே,

அச்வ இவ ரோமாணி விதூய பாபம் விதூய சரீரம்

(சாந். அ. ௧௩. ௧)

"குதிரை தன் உரோமங்களை உதறுவது போல, பாவம் அனைத்தையும் உத றிப் பின்னர்த் தன் சரீரத்தை உதறி" என்னுஞ் சுருதியிற் றேகவியோக காலத்திலே புண்ணிய பாவவிமோசனம் கூறப்பட்டது. பிறிதோரிடத்தில்,

ஸ ஆகச்சதி விரஜாம் நதீம் தாம் மநஸாத்யேதி தத் ஸுக்ருத துஷ்க்ருதே விதூநுதே (கௌஷீ. க. ச)

"அவன் விரஜாநதியை அடைந்து, ஞானத்தினால் அதைக் கடந்து, அங்கே தனது புண்ணியபாவங்களை உதறுகின்றான்" என வழியிலே அவற்றை விமோசனஞ் செய்தல் கூறப்படுகின்றது. இங்ஙனம் இரண்டு சுருதியிருந்தா லும், தேகவியோககாலத்திலேதான் விமோசனம் சிந்திக்கற்பாற்று; அதன் பின்னர்ப் பிரமப் பிராப்திக்கு வேறாக அடையற்பாலதாம் கன்மத்துக்குச் சுகதுக்க போகமில்லையாதலின்.

தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே

(சாந். ௬. ௧௪. ௨)

"அவன் (புண்ணியபாவத்தினின்று) விடுபடாதவரையில், அவனுக்கு அங்கே தாமசமே; பின்னர் அவன் (பிரம) சம்பன்னனுவான்" எனப் பிறரும் கூறு கின்றனரன்றே. (அங்ஙனம்) தேகவியோககாலத்துக்குப் பின்னர்த்தான் பிரமம் அடையற்பாற்று. (உ௭)

ச்சந்தத உபயாவிரோதாத் (ந. ந. உ௮)

(௩அ௨) விரும்பப்பட்டவாறு; இரண்டும் விரோதமின்மையின்.

தேகவியோககாலத்திற் புண்ணியபாவவிமோசனத்தைப்பற்றிச் சுருதி யுண்மையானும், விமோசனத்துக்குப் பின்னர்ப் பிரமப்பிராப்தி எய்துவ தாகச் சுருதி யுண்மையானும், அவ்விரு சுருதிகளும் விரோதமுறுவண்ணம்

தத்ஸுக்ருதது்ஷ்க்ருதே விதூநுதே (கௌஷீ. க. ச)

"அங்கே அவன் தன்புண்ணியபாவங்களை உதறுகின்றனன்" என்னுஞ் சுருதி பாகங்கொண்டு, பிரகரணத்துக்கியையப் பொருள் கோடற்பாற்று.

ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்ய।

"இந்தத் தேவயான மார்க்கத்தை அடைந்து" என்னுஞ் (சுருதி) வாக்கியத்துக்கு முன்னே நேர்வதாக (அந்தச் சுருதிக்குப் பொருள்) கோடற்பாற்று. (௨அ)

உபபந்நஸ்தல்லக்ஷணார்தோபலப்தேர்லோகவத் (ந. ந. ௨க)

(௩அந) (அந்த எண்ணம்) நியாயமானது; அப்படிப் பட்டதொன்று காணப்படலான்; உலகத்திற் போல.

தேகவியோககாலத்திற் சர்வகர்மமும் க்ஷயமானாலும், தேவயானத்தை அடையும் விதி பிரமோபாசகர்க்கு நியாயமே; (பிரமப்பொருளை அடைந்த பின்னும் வீடுற்ற ஆன்மா) அங்கே சுகித்துக்கொண்டு சஞ்சரிக்கின்றனன் என்று பெறப்படலின். அது

ஸ ஸ்வராட்பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி (சாந். எ. உரு. உ)

"அவன் சுவராஜாவாகிச் சமஸ்தலோகங்களினும் இஷ்டப்பிரகாரம் திரிகின்றான்" என்னுஞ் சுருதியினால் அறியப்படுகின்றது; (இது) உலகத்திற் போல (நேர்கின்றது); இராஜனை ஆசிரயித்த புருஷர் பிறர்க்குக் கிட்டாத பொருள்களையெல்லாம் பெறுதல் போலாம். ஆகலின், மார்க்க சுருதிக்கும் விரோதமில்லை. தேகவியோககாலத்திலே சமஸ்த கன்மமும் ஒழிந்து போனாலும், உபாசனமான்மியத்தாற் சூக்குமசரீரமுளதாய், மார்க்கத்தில் எய்தும் இடங்களிற் சஞ்சரித்தலும், சந்திரனோடு சம்வாதஞ் செய்தல் முதலிய மற்றெல்லாப் பொருட்சித்திகளும் கூடுமே எனின், (௨க)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

யதோ ஸாம்பராயஸ்தர்தவ்யாபாவாத்ததா ஹ்யந்யே (ந. ந. ந0)

(ந-அச) இரு சமயத்தினும் (தேவயான) கதி பிரயோசனமுடைத்து; இன்றேல் அங்கே விரோதமுளது,

தேகவியோக காலத்தினும், விரஜாநதியைத் தாண்டிப் போகும் காலத்தினுமாகிய இரு சமயத்தினும், கன்மக்ஷயம் எய்தியபோதே தேவயான கதியிற் பிரயோசனமுளது. இன்றேல், தேகவியோககாலத்திற்றான் கன்மமுழுதும் க்ஷயமாக ஆன்மா உடனே முக்தனாகின்றான் எனின், தேவயானம் நிஷ்பிரயோசனமாய் முடியும். (இதனால்) தேவயானத்தையுற்றுப் பேசுஞ் சுருதிக்கும்,

பரஂஜ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாந். அ. கஉ. ந)

"பரஞ்சோதியோடிசைந்து தனது ரூபத்தை அடைகின்றனன்" எனத் தேவயானம் வாயிலாகப் பிரமத்தை அடைந்த பின்னர் அறிவுவிகசித்தன் முதலிய சொரூபாவிர்ப்பாவத்தை உணர்த்துஞ் சுருதிக்கும் விரோதமுண்டாம். ஆகலின், இந்த உபாசனா சாமர்த்தியத்தினால் தேவயானகதியும், அந்த அந்த இடங்களிற் சஞ்சரித்தலும், சந்திரனோடு சம்வாதஞ் செய்தலுமாகிய எல்லாம் பின் எய்துஞ் சஞ்சரித்தன் முதலிய போலப் பொருத்தமாம். அங்ஙனமாயினும், பிரமத்தை அடையும் வரையும் புத்தி சங்கோசமாய்ச் சம்சாரம் நிலைத்தலும் உபாசனா சாமர்த்தியத்தினால் எய்துவதின்று. சம்சாரத்துக்கு மூலகாரணமாயுள்ள கன்மலேசம் நிலைத்துளதாகக் கோடல் ஆவசியகம் அங்கிகரிக்கற்பாற்று. இந்தச் சம்சாராநுவிருத்தி கன்மத்தினாலன்றிப் பரமேசுவரர் சங்கற்பவிசேடத்தினால் எனக் கோடற்பாற்றன்று; சிவபெருமானது சங்கற்பந்தான் (ஆன்மாவின்) கன்மத்தை வரையறுத்தது என நம்மாற் கூறப்படுதலின். எங்கள் மதத்திலே (சுருதி) விதித்தனவும் விலக்கினவுமாகிய ஆசரணங்களினாலே பிரயோகிக்கப்பட்ட சிவபெருமானது சங்கற்பம் யாதுமில்லை யன்றோ; இன்றேல் அவர் சங்கற்பத்தை அபேக்ஷியாத புண்ணியபாவங்களுமில்லை.

(ஆக்ஷேபம்) பிரமத்தை அடைந்த பிற்பாடு அறிவு விகாச முதலியவும் சொரூபாவிர்ப்பாவமும் உளவாயின், அது பரியந்தம் புத்தி சங்கோசத்துக்குக் காரணம் கன்மம் நிலைத்தலால் எனக் கோடல் வேண்டும், விரஜாநதியைக் கடந்தவுடனே கன்மக்ஷயம் எங்ஙனமாகும்? எனின்,

(உத்தரம்) கூறப்படுகின்றது. பிராகிருத பிரபஞ்ச எல்லையைக் கடத்தல்தான் பரமாகாயரூபமாகிய சிவபதப்பிராப்தியாம்.

பரஂஜ்யோதி ரூபஸம்பத்ய (சாந். அ. கஉ. ந)

"பரஞ்சோதியை அடைந்து" என்னுஞ் சுருதியினால், அந்தப் பிரமப்பிராப்தி கூறப்பட்டது. விஷ்ணுபத சம்பந்தமாகிய விரஜாநதிதான் பிராகிருத பிர

பஞ்ச எல்லையாகும். நதியைக் கடக்கும்போது, சர்வகன்மங்களினின்றும் நீங்கிய யோகிகள் விஷ்ணுபதத்தைக் கடந்து, பரமானந்தமயமாகிய சிவபதத்தைப் பிரவேசிக்கின்றனர். இதுபற்றியே,

ஸோऽத்⁴வந꞉ பாரமாப்நோதி தத்³விஷ்ணோ꞉ பரமம் பத³ம் (கட. ௩. ௯)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அச்சிவபெருமானுடைய (பரமாகாய) பரமபதத்தை அடைகின்றான்" என்றது சுருதி. ஆதலால் விரோதமின்று. (௩0)

(௧அ) அதிகாரிகாதிகரணம்.

யாவத³தி⁴காரமவஸ்தி²திராதி⁴காரிகாணாம் (௩. ௩. ௩௧)

(௩அ௫) அதிகாரம் இருக்கும் வரையும் அதிகாரிகளுக்கு நிலை உளது.

உபாசகர்களுக்குப் புண்ணியபாவவிமோசனமாதலும் பிரமத்தை அடைதலும் மேலே கூறப்பட்டன.

ஈண்டு அதிகாரபுருஷர்களுக்கு அதிகார போகங்களைவிட்டு முத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வசிஷ்டர்முதலிய அதிகாரிகளுக்கு அந்தந்தப் புராணாதிகளிலே சென்மாந்தரம் கூறப்படுதலின், அவர்க்கு முத்தி இல்லையே. ஆகலின், தத்துவங்களை அறிந்தவருட் சிலரே மோக்ஷத்தை அடைகின்றனர், (மற்றவர் அடைகின்றிலர்) எனின்,

(சித்தாந்தம்) அதிகாரபுருஷர்க்குத் தேகம் விடுத்த பின்னரும், (தம்மைப்பற்றிய) பிராரப்த அதிகாரத்துக்குக் காரணமாயுள்ள கன்மம் நசிக்கவேண்டினமையின், (அதுவரையும்) வேறு பலன்கள் அநுபவிக்கவேண்டும். அங்ஙனமே அதிகாரம் முடியும் வரையும் அதிகாரங்களோடு தம்மிற்பொருந்த கன்மபலன்களைத் துய்த்து ஒழிக்கும் வரையும் அவர்கள் அங்கே நிலைத்தல் வேண்டும்; அதுவரையும் அர்ச்சிராதிகதி அவர்க்கின்று. ஞானிகளுக்கும் பிராரப்தகன்மம் அநுபவத்தினாற்றான் நசிக்கின்றது. ஆகலின், அதிகாரிகளுக்கு அதிகாரம் நிவிர்த்தியான பின்னர் (அர்ச்சிராதிவாயிலாக) முத்தி சித்திக்கும். இதனால் தத்துவஞானிகள் நியதமாய் மோக்ஷமடைகின்றார்கள் என்பதாம். (௩௧)

(௧௯) அநியமாதிகரணம்.

அநியம꞉ ஸர்வேஷாமவிரோத⁴꞉ ஶப்³தா³நுமாநாப்⁴யாம் (௩. ௩. ௩௨)

(௩-அகூ) எந்த வித்தைக்கென்று நியமமில்லை; (ஆக லின்) சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லை.

உபகோசலவித்தை முதலிய உபாசனைகளிலே அர்ச்சிராதிகதி கூறப் படுகின்றது.

அந்த அர்ச்சிராதிகதி அந்த (உபகோசலாதி) வித்தையுடையோர்க்கா? இன்றேல் உபாசகர் எல்லோர்க்குமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாந்தோக்கியத்திற் பஞ்சாக்கினி வித்தையினும் உப கோசலவித்தையினும் அர்ச்சிராதிகதி கூறப்பட்டது. அதர்வசிரசிலே பாசுபத வித்தையிற் சிறிது சூசிக்கப்பட்டிருக்கின்றது. சாண்டில்லியாதி வித்தையிற் கூறப்படவில்லை. பிரகரணவசத்தினால் எவற்றிற் கூறப்பட்டிருக்கின்றதோ, அவற்றிலேதான் நியதமாகக் கொள்ளற்பாற்று; மற்றவைகளுக்கின்று எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். எந்த வித்தைகளிலே சொல்லப்பட்டுளதோ, அந்த வித்தைகளிலேதான் (அர்ச்சிராதிகதி உண்டென்று கோடற்கு) நியம மில்லை. பின்னையோ, இது எல்லா உபாசனைகளுக்கும் செல்வதாகும். அப் போதுதான் சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமின்று.

𑌯𑍇 𑌚𑌾𑌮𑍀 𑌅𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌷𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 (பிரு. அ. உ. ௧௫)

"அரண்ணியத்திலிருந்து சிரத்தையையும் சத்தியத்தையும் உபாசிப்போர் அர்ச்சிராதிகதியை அடைகின்றனர்" எனச் சுருதியானது பஞ்சாக்கினி வித் தைபேசுமிடத்து எல்லோர்க்கும் அந்த மார்க்கத்தைப் பேதமின்றிக் கூறு கின்றது.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌹𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌃।

"அக்கினி, சோதி, பகல், சுக்கிலபக்ஷம்" என ஸ்மிருதியும் அதனையே (மார்க்கத்தையே) எல்லோர்க்கும் பேதமின்றிக் கூறுகின்றது. ஆகலின், உபாசகர் எல்லோர்க்கும் அர்ச்சிராதிகதி நியமமே. * (௩௨)

---

*மாயாவாதிகட்குரிய நிர்க்குணோபாசனை பற்றி எதுவும் பிரதிபாதிக்கப்படாத பிரம சூத்திரங்களுக்கும் இவற்றுக்கு மூலமாகிய முக்கியஉபநிடதங்களுக்கும் சங்கரா சாரியர் வலிந்து பொருள் செய்தீர்த்து அவற்றைத் தம்பக்கத்துக்கிணக்கத் துணிந் தாற்போன்றும், அப்பயதீக்ஷிதயோகியார் சைவபாஷ்யத்துக்கு உயர்வுகாட்டிமுதற் கண்ணேஇயற்றிவைத்த சிவாத்துவைதவிநிர்ணயம் என்னும் நூலைத்தீக்ஷிதயோகியார் க்குப் பின்னிருந்த மாயாவாத பண்டிதர்கள் திரிவுபடுத்திச் சிவாத்துவைதசைவத்தி னுக் தம் மாயாவாதத்துக்கு உயர்வுகாட்டிப் படைத்துவைத்தாற்போன்றும், அங்ங னம் அப்பண்டிதர்கள் அத்தீக்ஷிதயோகியார் இயற்றிய ஆனந்தலகரியையும் இரத்தினத் திரயபரீக்ஷையில் ஸ்ரீமத் கர்மேண ([illegible]) என்னும் சுலோகவியாக்

(உ௦) அக்ஷரத்தியதிகரணம்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌧𑌿𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌵𑌰𑍋𑌧𑌃 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍌𑌪𑌸𑌦𑌵𑌤𑍍𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍
(௩. ௩. ௩௩)

(௩௮எ) ஆயின் அக்ஷரத்தைப்பற்றிய (நிஷேத) குணங்கள் தொகுக்கற்பாலன; அது (பிரமம்) ஒன்றுயிருத்தலாலும், (அந்த அஸ்தூலத்துவாதி குணங்கள் பிரமத்தில்) இருத்தலாலும்; உபசத்துக்குரிய மந்திரவிஷயம் போல; இது விளக்கப்பட்டது.

கார்க்கிப்பிராம்மணத்திற் பிரமத்தைப் போதிக்கும்பொருட்டு

𑌅𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑌨𑌣𑍍𑌵𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌮𑍍 (பிரு. ரு. அ. அ)

"(அது) ஸ்தூலமல்லாதது, அணுவல்லாதது, குறுக்கமல்லாதது" என்றற்றொடக்கத்தவைகளிலே சில நிஷேதங்கள் கேட்கப்படுகின்றன; கடவல்லியிலே,

𑌅𑌶𑌬𑍍𑌦𑌮𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌰𑍂𑌪𑌮𑍍 (கட. ௩. கரு)

"சப்தமல்லாததும், பரிசமல்லாததும், ரூபமல்லாததும்" என்றற்றொடக்கத்தவற்றினும், ஆதர்வணத்திலே

𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑍍 (முண். க. க. சு)

"காணப்படாதது, பற்றப்படாதது, கோத்திரமில்லாதது, வர்ணமில்லாதது" என்றற்றொடக்கத்தவைகளினும் கேட்கப்படுகின்றன.

அந்த நிஷேதகுணங்கள் ஆனந்தாதி (குணங்கள்) போலப் (பிரமோபாசனையில்) உபசங்கரிக்கற்பாலனவா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆனந்தாதிபோன்ற குணங்களல்லாமையின், அந்த நிஷேதங்களைப் பரவித்தை அனைத்தினும் உபசங்கரித்தலின் யாது பயன் எனின்,

---

யானத்தையுந் திரிவுபடுத்திக்கெடுத்தாற் போன்றும், சைவபாஷ்யகாரரும் தீக்ஷிதயோகியாரும் "நிர்க்குணோபாசகர்க்கு அர்ச்சிராதிகதி அபேக்ஷையில்லை" என்றற்றொடக்கத்தனவாகவும், "அவ்வுபாசகர்கள் (போக்குமீட்சியின்றி) இங்கே இலயமடைந்து விடுகின்றார்கள்" என்றற்றொடக்கதனவாகவும் மாயாவாதிகட்குச் சார்பாக முறையே வரைந்து வைத்தாற் போல இந்த (௩. ௩. ௩உ-ஆஞ்) சூத்திர சைவபாஷ்யத்திறுதிக்கண்ணும் சிவார்க்கமணிதீபிகை இறுதிக்கண்ணும் அம்மாயாவாதிகள் பிற்காலத்திலே பொறித்துவைத்த அப்பொய்யுரைகளைப் பொருட்படுத்தாது, இந்தச் சூத்திரபாஷ்யத்து இறுதியிலே பொருத்திவைத்த அக்கற்பனுவாக்கியங்களை ஈண்டு மொழிபெயர்க்காது தவிர்த்துவிட்டேம்.

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. அக்ஷரசம்பந்தமாகிய நிஷேத குணங்களும் பரவித்தை அனைத்தினும் உபசங்கரித்தல் நியாயமே; குணியாகிய பிரமம் யாண்டும் ஒருபெற்றித்தாதலின். இந்தக் குணங்களினாலேதான் பிரமோபாசனையைப் பிறவனைத்தினின்றும் பிரிக்க இயல்வதாகும்; மற்றோர் பிரகாரத்தாலன்று. ஹேயகுணாசம்பந்தமுறாத ஆனந்தமுதலிய குணங்கள் பிரத்தியக்கான்மாவினின்றும் பிரமத்தைப் பிரித்துக் காட்டும்பொருட்டே போந்தன. பிரதானப்பொருளை இயைந்திருத்தல்தான் குணத்தின் சுபாவம். சாமதக்கினிக்குள்ள நான்கு இராத்திரிப்புரோடாசத்துக்குரிய உபசத்துக்குக் குணமாக விதிக்கப்பட்ட

அக்நே ஹோத்ரம் வேத்வரம்॥

"அக்கினீ! ஹோதாவின் செய்கையையும் யஞ்ஞத்தையும் அறிதி" (என்றற்றொடக்கத்த) மந்திரம் சாமவேதத்திலே கூறப்படுவதாய்ச் சாமவேத உச்சசுவரத்தோடு படிக்கப்படுவதாயிருந்தாலும், (அது) யசுர்வேதத்துக்குரிய பிரதான (குணியாகிய) உபசத்தைத் தொடர்ந்து உபாம்சுவாக (மெதுவாக) உச்சரிக்கப்பட வேண்டியதாகின்றது. இது முதற்காண்டத்திற் (பூருவமீமாஞ்சை, ௩. ௩. ௯) கூறப்பட்டுள்ளது. (௩௩)

இதனாற் குணங்களெல்லாம் தியானத்தில் உபசங்கரிக்கப்படவேண்டியதில்லையோ? என, சூத்திரகாரர் சொல்லாராயினர்.

இயதாமநநாத் (௩. ௩. ௩௪)

(௩௪) இவ்வளவுமாத்திரந்தான் தியானத்தின் பொருட்டு.

ஆமனனம் என்றது அன்பினோடு தியானஞ் செய்தல். இவ்வளவு குணத்தொகுதியும் எவ்விடத்தினும் உபசங்கரிக்கற்பாலன. இந்தக் குணத்தொகுதியினாற் பிறவனைத்தினின்றும் நீங்கியதாகப் பிரமத்தியானம் உண்டாகின்றது. ஆகலின், அக்ஷரப்பிரம சம்பந்தமாகக் கூறப்பட்ட அஸ்தூலத்துவாதி நிஷேத (எதிர்மறைக்) குணங்களே பிறவனைத்தினின்று பிரமத்தைப் பிரித்தறியச் செய்யும் குணங்களாதலால், அவை பரவித்தைகளில் உபசங்கரிக்கற்பாலன. "சர்வகர்மா, சர்வகாமர், சர்வகந்தர், சர்வரசர்" என்பவற்றை (உபசங்கரிக்கவேண்டியது) இன்று. (௩௪)

(௨௧) அந்தராபூதக்கிராமாதிகரணம்.

அந்தரா பூதக்ராமவத் ஸ்வாத்மந꞉ அந்யதா பேதாநுபபத்திரிதி சேந்நோபதேசாந்தரவத் (௩. ௩. ௩௫)

(கூருக) (அனைத்தின்) உள்ளும் (இருக்கிற அவ்வாரை யுற்றுப் பேசும் வாக்கியத்திலே), பூதத்தொகுதிச் (சரீரசம் பந்த) முடைய (தன்னைப்பேசுவதாகச்) சுருதி கூறுவதாகவும், இன்றேற் பேதஞ் சொல்ல இயலாதாகவுமிருப்பின், அஃ தன்று; (சத்வித்தையின்) உபதேசம்போல்வது.

பிருகதாரணியோபநிடதத்திலே,

யத்ஸாக்ஷா தபரோக்ஷா த்ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஸ்தம் மே வ்யாசக்ஷ்வ (பிரு. ரு. ச. க)

"(யாஞ்ஞவற்கியரே!) சாக்ஷாத்தாகவும் அபரோக்ஷமாகவும் உள்ளதாய், அனைத்துள்ளுமிருக்கின்ற (பரம) ஆன்மாவுமாகிய பிரமத்தை எனக்குச் சொல்க" என உஷஸ்தி கேட்க,

யஃ ப்ராணேந ப்ராணிதி ஸ த ஆத்மா ஸர்வாந்தரோ யோ அபாநேநாபாநிதி ஸ த ஆத்மா ஸர்வாந்தரஃ (பிரு. ரு. ச. க)

"உச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவரே உன் (பரம) ஆன்மாவாய் அனைத் துள்ளுமிருக்கின்றனர்; நிச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவரே உன் (பரம) ஆன் மாவாய் அனைத்துள்ளுமிருக்கின்றனர்,"

அதோ அந்யதார்த்தம் (பிரு. ரு. ச. உ)

"மற்றெல்லாம் தீமையின் பாலண" என உத்தரமிறுக்கப்பட்டது. பின்னர்,

யதேவ ஸாக்ஷாத்ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஸ்தம்மே வ்யாசக்ஷ்வ। (பிரு. ரு. ச. உ)

"(யாஞ்ஞவற்கியரே!) சாக்ஷாத்தாக அனைத்துள்ளும் இருக்கின்ற (பரம) ஆன்மாவாகிய பிரமத்தைக் கூறும்" என்று கஹோளர் கேட்ப, அதற்கு

யோऽஶநாயா பிபாஸே ஶோகம் மோஹம் ஜராம் ம்ருத்யு மத்யேதி ஏதம் வை தமாத்மாநம் விதித்வா ப்ராஹ்மணா பிக்ஷாசர்யம் சரந்தி (பிரு. ரு. ரு. க)

"பசி, தாகம், சோகம், மோகம், ஜரை, மரணம் என்பவற்றைக் கடந்தவ ராகிய அந்தப் (பரம) ஆன்மாவை அறிந்து (பிராமணர்கள் யாசகர்களாகத் திரிகின்றனர்),"

அதோ அந்யதார்த்தம் (பிரு. ரு. ரு. க)

"மற்றெல்லாந் தீமை" என்பதிறுதியாக உத்தரம் இறுக்கப்பட்டது.

ஈண்டு ஈரிடத்தும் கூறப்பட்ட வித்தை ஒன்றா? அன்றா? என்பது சந் தேகம்.

(பூருவபக்ஷம்) சண்டுப் பூதத்தோடியைந்த பிரத்தியகான்மவிஷயத்தை யுற்றே உஷஸ்தி வினவியது. இன்றேல்,

யஃ ப்ராணேந ப்ராணிதி ஸ த ஆத்மா (பிரு. ௫. ௪. ௧)

“நிச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவா ஆன்மா” என அந்த வினவுக்கு விடுத்த உத்தரவிஷயத்துக்கும், கஹோளர் விடுத்த வினவுக்கு, பசிமுதலியவற்றை செயிப்பதென உத்தரமாகக் கூறப்பட்ட விஷயத்துக்கும் பேதம் காண்டல் அரிதாமெனின்,

(சித்தாந்தம்) அங்ஙனம் கோடல் கூடாது; இவ்விஷயம் (சத்வித்தையின்) உபதேசம் போல்வது.

ய ஆத்மா ஸர்வாந்தரஃ (பிரு. ௫. ௪. ௧; ௫. ௪. ௨)

“எல்லாவற்றுள்ளும் இருக்கின்ற ஆன்மா” என ஈரிடத்தும் நிகழ்ந்த வினுக்கள் ஒன்றாயிருத்தலின், சிவபெருமானே ஈரிடத்தும் கொள்ளப்பட்ட பிரசினவிஷயம். உபாதியில்லாததாயும், உச்சுவாசாதிகளுக்குக் காரணமாயும், போசனாதிகளைக் கடந்திருப்பதாயும் இயைந்த (பிரசின) உத்தரம் அந்தச் சிவபெருமானிலே முற்றுகின்றது. சத்வித்தியாவிஷயத்திற் போல, வினவும் விடையும் ஒரே விஷயத்தில் முற்றுகின்றன. வினவினவரின் பேதமும் ரூபபேதமும் வித்தையிலே யாதும் பேதத்தை விளைக்கவில்லை. (௩௮)

அங்ஙனஞ் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வ்யதிஹாரோ விசிம்ஷந்தி ஹீதரவத் (௩. ௩. ௩௯)

(௩௯௦) மாறுபாடு (நிகழவேண்டும்); (அவை இரண்டும் பிரமத்தையே) விசேடிக்கின்றன; பிறவற்றிற் போல.

(ஓர்கால்) விஷயமொன்றென நிச்சயித்தபோது, வினவினோர்க்குள்ளே ஒருவர்க்கொருவர் கருத்து மாறுபாடு நிகழ்தல் வேண்டும். (அஃதாவது) உஷஸ்தி பசிமுதலியவற்றைச் செயித்ததாகப் பிரமத்தைத் தியானிக்குங்கால், கஹோளரும் நிச்சுவாசாதிக்குக் காரணமாக அதனைத் தியானிக்கவேண்டும். சத்வித்தையிற் போல ஈரிடத்துமுள்ள வாக்கியங்கள் சிவபெருமானை விசேடிக்கின்றன. ஆகலின், வினவினும் விடையினும் ஒரே விஷயமே கூறப்பட்டமையின், வித்தையிற் பேதமின்று. “அது நீயாகின்றனை” என்றதிற் போல, சந்தேகம் அறுக்கும்பொருட்டே புநருக்தி (எய்திற்று). (௩௯)

(௨௨) சத்தியாதியதிகரணம்.

மைவ ஹி ஸத்யாதயஃ (௩. ௩. ௩௭)

(௩௯௧) (தேவதை) ஒன்றே (கூறப்பட்டது); சத்திய முதலிய (கூறப்பட்டன).

திருட்டாந்தமாக மேலே அதிகரணத்திலே நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், சத்வித்தை பேதமா? அபேதமா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) பிரசினத்தில் ஆவிருத்தி (கூறியது கூறல்) காணப்படலாலும், உத்தரத்திலே பேதம் காணப்படலாலும் வித்தை பேதமென்றே கொள்ளப்படுமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சத்வித்தையிற் பேதமில்லை;

ஸேயம் தேவதா (சாங். ௬. ௩. ௨)

"இந்தத் தேவதை" என்றற்றொடக்கத்தவற்றால் உரைக்கப்பட்ட *மகா தேவதை ஒவ்வோர் வினாவினும் உத்தரத்தினும் காணப்படுகின்றமையின்.

தத் ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி (சாங். ௬. ௮. ௭)

"அது சத்தியம், அது (பரம)ஆன்மா, அது நீயாகின்றனை" என மீட்டும் மீட்டும் சத்தியமுதலிய குணங்கள் ஆவிருத்தியாகக் காணப்படுகின்றன. ஆதலின், வஸ்து ஒன்றாக, வித்தையும் ஒன்றாம் என்க. (௩௭)

(௨௩) காமாதியதிகரணம்.

காமாதீதரத்ர தத்ர சாயதநாதிப்ய: (௩. ௩. ௩௮)

(௩௯௨) (சத்திய) காமாதிகுணங்கள் அங்கங்கே (உபசங்காரஞ் செய்யற்பாலன); ஸ்தானமுதலியன (ஒன்று) யிருத்தலின்.

சாந்தோக்கியம், தைத்திரீயம், பிருகதாரணியம், கைவல்லியம் என்னும் உபநிடதங்களிலே தகரவித்தை கூறப்படுகின்றது.

இது அபின்னமா? இன்றேற் பின்னமா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்)

யதிதமஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம தஹரோஸ்மிந்நந்தராகாஶ: (சாங். ௮. ௧. ௧)

சாந்தோக்கியத்திலே,

---

* ஈண்டு மகாதேவதை என்றது (௪. ௨. ௧௪-ஆஞ்) சூத்திரபாஷ்யத்திற் குறிக்கப்பட்ட (௧. ௪. ௨௭-ஆம்) பாணினிசூத்திரவிதிப்பிரகாரம் மகாதேவரின் மேலாயிற்று.

"இந்தப் பிரமபுரத்துத் தகரபுண்டரீகத்திலே தகராகாயம் உள்ளது" என்று தொடங்கித் தகராகாச மொழியினுற் கூறப்பட்ட தகரபுண்டரீகத்திருப்பவர்க்குப் பாவமில்லாமை முதலிய எண் குணங்கள் முக்கியமாகக் கூறப்பட்டன.

தைத்திரீயத்திலே,

𑌦𑌹𑍍𑌰𑌂 𑌵𑌿𑌪𑌾𑌪𑍍𑌮𑌂 (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௩)

"பாவமில்லாத தகரம்" என்று தொடங்கித் தகரபுண்டரீகத்தில் இருப்பவர்க்குப் பிரணவப் பிரகிருதியாதலும், மகேசுவரர் எனப்படுதலும், கிருஷ்ணபிங்கள விரூபாக்ஷத்துவ முதலிய குணங்கள் உளவாதலும் காட்டப்பட்டன.

பிருகதாரணியத்திலே,

𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌞𑍍𑌛𑍇𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃 (பிரு. ௬. ௪. ௨௨)

"இதயத்துள்ளே ஆகாயம் உள்ளது; அதிற் சர்வத்தையும் வசீகரிப்பவரும், சர்வத்துக்கும் ஈசானரும், சர்வத்துக்கும் அதிபதியுமானவர் அமர்கின்றார்" என வசித்துவாதி குணங்கள் (கூறப்பட்டிருக்கின்றன).

கைவல்லியோபநிடதத்திலே

𑌹𑍃𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌵𑌿𑌰𑌜𑌂 (கைவ)

"துகளற்ற இதய புண்டரீகம்" என்று தொடங்கி,

𑌵𑌿𑌭𑍁𑌂𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦 𑌮𑌰𑍂𑌪 𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍁𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂
𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 (கைவ)

"வியாபகரும், சிதானந்தரும், அரூபரும், அற்புதரும், உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிநேத்திரரும், நீலகண்டரும், பிரசாந்தரும்" என்பதிறுதியாக இருதயபுண்டரீகத்திலிருக்கும் பரவஸ்துவுக்குத் திரிநேத்திரத்துவம், நீலகண்டத்துவம், சிதானந்தரூபத்துவம், உமாசகாயத்துவமுதலிய குணங்கள் (கூறப்பட்டிருக்கின்றன). ஈண்டு நீலகண்டத்துவமுதலிய குணங்கள் சரீரதர்மமாகவும், சத்தியகாமத்துவமுதலிய குணங்கள் ஆன்ம தருமமுமாகி விரோதமுறுதலின் உபசங்காரம் நியாயமின்று. ஆகலின், வித்தைகள் பின்னமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. ஆங்காங்குக் கூறப்பட்ட இருதய புண்டரீக ஸ்தானமுதலியன ஒன்றுமாதலின், வித்தைகள் ஒன்றே. ஆகலின், சத்தியகாமத்துவ முதலிய குணங்கள் யாண்டும் உபசங்கரிக்கற்பாலன. சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட அபகதபாப்மத்துவாதி குணங்களும், பிருகதா

ணியத்திற் கூறப்பட்ட வசித்துவாதி குணங்களும், தைத்திரீயத்திற் கூறப்பட்ட பிரணவவாச்சியத்துவாதி குணங்களும், கைவல்லியத்திற் கூறப்பட்ட சிதானந்தரூபத்துவாதி குணங்களுமாகிய இவையெல்லாம் தகரவித்தையிலே பிரமத்தின் குணங்களாக உபசங்கரிக்கற்பாலன. கைவல்லியத்திற் கூறப்பட்ட உமாசகாயத்துவமும் திரிலோசனத்துவமும் மற்றோரிடத்திற் (கூறப்பட்ட) கிருஷ்ணபிங்களத்துவமும் விரூபாக்ஷத்துவமும் (முறையே) ஒரே அர்த்தமுடையன. மீட்டும் மீட்டும் கூறுதல் ஆதரத்தை (பிரியத்தை) அறிவித்தற்காம். மீட்டும் மீட்டும் குணங்கள் கூறப்படும் இடங்களிலெல்லாம் அங்ஙனமே பொருள் கோடற்பாற்று. ஈண்டுக் குணமுடையதாகக் (கூறப்படும்) பிரமம் ஒன்றே உபாசிக்கற்பாலதாகலின், பாவமில்லாமை முதலிய குணங்களோடு சர்வேசுவரமும், ஓங்காரவாச்சியமும், உமாசகாயமும், திரிலோசனமும், நீலகண்டமும், சிதானந்தரூபமும், அனந்தமும், அமிர்தமும், அற்புதமுமாகிய பரப்பிரமம் தகரபுண்டரீகமத்தியிலே அநுசந்தானஞ் செய்யற்பாற்று. * இந்தத் தகரோபாசனையே பரவித்தைகளுட் பிரதானமாயிருக்கின்றது. சாந்தோக்கியத்திலும் கைவல்லியத்திலும் இந்தத் தகரோபாசகநிஷ்டன்,

ஸம்ஜ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே।
(சாந். அ. ௮. ௩.)

"பரஞ்சோதிரூபத்தை அடைந்து அதன் சொரூபமாய் விளங்குகின்றனன்" என்றும்,

த்யாத்வா முநிர் கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் (கைவ)

"முனியானவன் தியானித்துத் தமசுக்கு மேலே பூதயோநியும் சமஸ்தசாட்சியுமாயுள்ளாரை அடைகின்றான்" என்றும் கூறிச் சாக்ஷாத்தாகப் பிரகிருதி மண்டலத்துக்கு மேலே உள்ள அந்த உபாசியமாகிய பரப்பிரமத்தை அடைதலன்றோ பயனாகப் பெறப்படுகின்றது. நீலகண்டத்துவ திரிலோசனத்துவாதி குணங்களும், அபகதபாப்மத்துவாதி குணங்களும், பிரமத்தில் நித்தியமாயிருத்தலானும், அங்கியோங்கியமாய் ஒன்றை ஒன்று அபேக்ஷித்தலானும், அவை உபசங்கரிக்கப்படுதலின் விரோதமின்று. நிஷேதகுணங்கள்

* உபக்கிரமணிகை (௨0௧-ஆம் இலக்கந் தொடுத்து ௨௯௫-ஆம் இலக்கம்) வரையிற் கூறியாங்கு, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவசமயஸ்தாபனாசாரியர் முதலாயினோர் திருவுளப்பிரகாரம் இச்சைவபாஷ்யகாரராகிய ஸ்ரீநீலகண்டாசாரியர்க்கும் ருத்திரகாரராகிய வியாசருக்கும் சமஸ்த உபநிடதங்களின் முடிவாகிய திருச்சிற்றம்பலமே முடிந்தநிலையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றதன்றி, ஏகான்மமாயாவாதமதமேனும் வைணவமதமேனும் முடிந்தநிலையாகக் கொள்ளப்பட்டில தென்பது உறுதியேயாம்.

பொருத்தமில்லாவிடத்தது இடம்பெறுவாம். பரப்பிரமத்துக்குத் திரிநேத்திரங்களையுடைய திருமேனி கூறப்படுதலின், சரீரத்துக்குரிய பாவம், ஜரை, மரணம், பசி, தாகம், அசத்தியகாமம், அசத்தியசங்கற்பமென்னுங் குணங்கள் சொல்லநேருமெனக்கொண்டு, இவற்றை நிஷேதிக்கும்பொருட்டன்றோ அபகதபாப்மத்துவாதி குணங்கள் பிரதிபாதிக்கப்பட்டன. திரிலோசனத்துவமுதலிய லக்ஷணமுடைய சரீரமுடையதேனும், அப்பரப்பிரமம் பாவம், ஜரை, சோகம், பசி, தாகமென்பவற்றினின்று நீங்கி, சத்தியகாம சத்தியசங்கற்பிதானந்தரூபமாயிருத்தலின் விரோதமின்று. (௧௦)

(௨௪) அலோபாதிகரணம்.

(ஆக்ஷேபம்) பிரியசிரஸ்த்துவமுதலிய போல நீலகண்டத்துவாதி அவயவங்கள் பிரமத்துள் அந்தர்ப்பாவமாயுளவேல், பின் அவர் தேய்வு வளர்ச்சிகளுக்குட்படுதல் வாயிலாக, நீலகண்டத்துவாதிகள் இலவாயொழியுமோ? எனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஆதரா தலோப: (௩. ௩. ௧௧)

(௧௧௩) ஆதரத்தினாலாதலின் உலோபமில்லை.

மேலே நீலகண்டத்துவாதி விசிட்டரூபமும், உமை எனப்படும் பராசத்தியோடிசைதலும், சத்தியசங்கற்பத்துவமுதலிய குணத்தொகுதியும் நிருபிக்கப்பட்டன.

ஈண்டு அவை பரப்பிரமத்தில் ஓர்கால் உலோபமாய் இருக்குமா? இன்றேல் ஓர்காலும் இருக்கமாட்டாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தியானத்தின்பொருட்டுப் பரப்பிரமத்திலே கற்பிக்கப்பட்டமையின், அவை ஓர்கால் உலோபமாகும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பரப்பிரமத்துக்கு உமாசகாயத்துவாதி குணங்கள் சுருதியில் யாண்டும் அப்பியாச லிங்கத்தினாலும் ஆதரத்தினாலும் உலோபமின்றிக் கூறப்படுகின்றன. ஆகலின், அலுப்தசக்தியையுடையது பரப்பிரமம். எங்கே ஆதரத்தினாலும் அப்பியாசத்தினாலும் கூறப்பட்டதெனின்?

யாண்டுமே. கிருஷ்ணபிங்களம் விரூபாக்ஷம் என்றமையாற் சத்தியோடிசைதலும் திரிநேத்திரமுடைமையும் சித்தித்தவிடத்தும், மீட்டும் ஆதரத்தினால் அவை

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் (கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிலோசனரும்" என அப்பியசிக்கப்பட்டனவன்றே. ஆதித்தியமண்டலவித்தையிலும்,

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே (தைத். ஆரணி. க0. உஉ. ச0).

"இரண்ணியபாகுவினர்க்கு நமஸ்காரம், இரண்ணியபதிக்கு நமஸ்காரம், அம்பிகாபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம்" என ஆதரத்தினுல் உமாபதித்துவம் அப்பியசிக்கப்பட்டது. மற்றோரிடத்தில்,

நீலக்ரீவோ விலோஹித꞉ (யசர். வே. ச. ரு. க. ரு)

நீலக்ரீவாய ச ஶிதிகண்டாய ச (யசர். வே. ச. ரு. ரு. க)

"நீலக்கிரீவர், விலோகிதர்," "நீலக்கிரீவர்க்கு நமஸ்காரம், சிதிகண்டர்க்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவாக நீலக்கிரீவத்துவம் சிவபெருமானுக்கு ஆதரத்தினுல் அப்பியசிக்கப்பட்டது.

சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் ஓரிடத்திற் கூறப்பட்டிருந்தாலும் பிறிதோரிடத்திற் கூறினமை ஆதரத்தினுலேயாம்.

ஆகலின், உமாபதித்துவாதி குணங்கள் அப்பியாசத்தினுலும் ஆதரத்தினுலும் பரப்பிரமத்துக்கு உலோபமில்லையே. வேறு பிரமாணங்களால் அறியப்படாத தர்மம் பிரமம் என்னும் விஷயத்திலே திவ்விய சுருதியானது எவ்வியல்பினதாகிய சொரூபத்தைச் சொல்கின்றதோ, அவ்வியல்பையே சுருதியைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்கள் அங்கீகரித்தல்வேண்டும். இன்றேல் அதற்கு விருத்தமாகிய தர்க்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டால் உலக உபாதானத்துவாதிகம் சித்திக்கமாட்டாது. சுருதியே

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" எனச் சத்திய ஞானகாரமாய் அவற்றின்று பிரியாததாயுள்ளது பிரமம் என்று கூறி,

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம (தைத். ஆரணி. க0. உரு. சக)

"இருதம் சத்தியம் பரம் பிரம்ம" என்றற்றொடக்கத்தவாகக் கூறப்பட்டவருக்கே திரிலோசனத்துவமும் பரமசத்தியாகிய உமாசபளிதரூபமும் விசேஷமாகக் கூறுகின்றது. பின்னரும்,

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த꞉ (தைத். உ. அ)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என நிரதிசயானந்தமுடைமை கூறி, பின்னரும் அவர்க்கே

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம (தைத். க. ௬)

"ஆகாயசரீரம்பிரமம்" என்றதற்றொடக்கத்தவற்றால், சித்பிரகாசரூபத்தையும் ஆன்மராமத்தையும், பாஹ்ய கரணமின்றி அந்தக்கரணத்தினால் அநுபவிக்கப்படும் பரமானந்த விலாசத்தையும், சமஸ்த உபத்திரவகளங்கமில்லாமையையும், அநாதிமுத்தத்துவத்தையுஞ் சுருதி பிரகாசிப்பிக்கின்றது. இவர்க்கு விரூபாக்ஷத்துவாதி லக்ஷணங்களையுடைய சரீரசம்பந்தமுண்மையின், ஆன்மாவுக்குப் போல எய்தற்பாலனவாம் தோஷங்களை அபகதபாப்மத்துவாதி குணங்களாற் சுருதி நிராகரிக்கின்றது.

யஃஸவஜ்ஜஃஸவவிஜ (முண். க. க. கூ)

"சர்வஞ்ஞரும் எல்லாம் அறிபவரும்"

வராஸ்ய ஶக்திவிவிெயவ ஶ்ரூயெத (சுவே. கூ. அ)

"இவரது பராசத்தி நாநாப்பிரகாரமாகக் கேட்கப்படுகின்றது"

வஶூநாம வதயெ (யசுர். வே. ௪. ரு. உ. க)

"பசுக்களுக்குப் பதியாயுள்ளவர்க்கு" எனப்போந்தவாற்றால், அவருக்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவம், சுவதந்திரத்துவ முதலியன நிரூபிக்கப்படுகின்றன. இங்ஙனம் சுருதிதானே சமஸ்தப் பிரமாணங்களுக்கும் தலையாயதாகி, சத்தியஞானானந்தத்தினின்று நீங்காத சுவரூபத்தையும், சர்வஞ்ஞதையையும், நித்தியதிருப்தியையும், சுவதந்திரத்தையும், அநாதிபிரகாசத்தையும், அனந்தசத்தியையும், அலுப்தசத்தியையும், ஆன்மராமத்தையும், உள்ளே அநுபவிக்கப் பாலதாம் பரமானந்தத்தையும், உபசாந்தத்தையும், அமிர்தத்தையும், நீலகண்டத்தையும், விரூபாக்ஷத்தையும், உமாசகாயத்தையும் பிரமமுடையதாக யாண்டும் கோஷிக்கின்றது. இங்ஙனங்கூறுஞ் சுருதிகளைத் தடுக்கவல்லார் யார்? ஆகலின், மேலே கூறிய விசேஷகுணங்கள் பிரமத்தினின்று ஒர்காலும் இலவாயொழியமாட்டாவே. (௩கூ)

(உரு) தத்வசநாதிகரணம்.

உவஸூிெத ஜதவூஅவநாஜ (௩. ௩. ௪௦)

(௩௬௪) (பிரமத்தை) அடைந்தவன் விஷயத்தில்; அது பற்றி இதற்கு வசனமுண்மையான்.

ஈண்டு முத்தரால் அடையப்படும் பயன் பூருவாதிகரணத்திற் கூறப்பட்ட பிரமசொரூபமா? மற்றொன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

நிஷ்களம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் (சுவே. கூ. ௧௯)

"நிஷ்களமாயும், நிஷ்கிரியமாயும், சாந்தமாயும், தோஷமில்லாததாயும் பாவமிலாததாயும்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரமம் நிர்விசேஷ மாகவே கூறப்படுகின்றது.

ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி (முண். ௩. ௨. ௯)

"பிரமத்தை அறிபவன் பிரமமாயே ஆகின்றான்" என்னுஞ் சுருதியினால் முத்தன் பிரமசொரூபத்தை அடைதலே முக்தி. ஆகலின், நிர்விசேடப்பிர மமே முத்தனால் அடையற்பாற்று, மற்றொன்றன்றெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். முன்னர்க் கூறப்பட்ட சவிசேஷப்பிரமசொரூ பமே முத்தனால் அடையற்பாற்று; தகரபுண்டரீகத்துள்ளே இருப்பதாகப் பிரதிபாதிக்கப்பட்ட விருபாக்ஷத்துவமுடைய பரப்பிரமத்தைத் தியானித்த லால்,

பரம்ஜ்யோதி ரூபஸம்பத்ய (சாந். அ. ௧௨. ௩)

"பரஞ்சோதிரூபத்தை அடைந்து" என்னுஞ் சுருதிப்பிரகாரம் முத்தனால் அடையப்பட்டவிடத்து,

ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாந். அ. ௧௨. ௩)

"தனது ரூபத்தோடுதோற்றுகின்றான்" என்றவாறு தனது ரூபம் ஆவிர்ப்ப வித்தல் காரணமாக,

ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா।

(சாந். அ. ௧௨. ௩)

"பெண்களோடாயினும், யானங்களோடாயினும், ஞாதிகளோடாயினும், உண்டு திரிந்து விளையாடி மகிழ்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றால் [illegible] இஷ்டப்படி ஞாதி முதலாயினாரோடு சேர்தல் கூறப்படுதலானும்,

பரமம் ஸாம்யமுபைதி (முண். ௩. ௧. ௩)

"பரமாகிய சாமியத்தை அடைகின்றான்" என்னுஞ் சுருதியினாலும்

முக்தஸ்ஸிவஸமோ பவேத் (வாயு. பூ. ௨அ: ௨௨)

"முத்தன் சிவசமமாகின்றான்" என்னும் ஸ்மிருதியினாலும் முத்தன் பரப் பிரமசாமியத்தை அடைதல் கூறப்படுதலானுமாம். மேலே கூறப்பட்ட நீல கண்டத்துவாதி இலக்ஷணத்தையுடைய பரப்பிரமசொரூபந்தான் சாக்ஷாத் தாக முத்தன் அடையவேண்டிய மோக்ஷபயன்; இந்தப் பிரமசொரூபம் சம் சாரமில்லாமைக்குரியதன்று; அபகதபாப்மா (சாந். அ. ௧. ௫) என்றற்றொ டக்கத்தனவற்றால் சாம்சாரிக தருமம் நிஷேதிக்கப்படுதலால். ஆகலின், பர வித்தை சகுணமே. நிஷ்களம் [illegible]

குணங்கள் நிஷேதிக்கப்படுகின்றன; கல்யாணகுணங்கள் நிஷேதிக்கப்படவில்லை.

நிஷ்கலஂ நிஷ்க்ரியஂ (சுவே. ௬. ௧௯)

"நிஷ்களம் நிஷ்கிரியம்" என்றற்றொடக்கத்தவற்றாலும்,

ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶः (சுவே. ௬. ௧௬)

"பிரதானமாகிய (பாசத்துக்கும்), க்ஷேத்திரஞ்ஞனாகிய (பசுவுக்கும்) பதியாயினர் குணங்களையுடைய ஈசர்" என்றற்றொடக்கத்தவற்றாலும் நிர்க்குணத்துவமும் சகுணத்துவமும் சாமானியமாக எய்துமிடத்து,

அபஹதபாப்மா (சாந். அ. ௧. ௫)

"அபகதபாப்மா"

யः ஸர்வஜ்ஞः ஸர்வவித் (முண். ௧. ௧. ௯)

"எவர் சர்வஞ்ஞரும், எல்லாம் அறிபவரும்" என்றற்றொடக்கத்த விசேஷசுருதிகள்கொண்டு, நிர்க்குண சுருதிக்கு ஹேய குணம் இல்லையென்பதும், சகுணசுருதிக்குக் கல்யாணகுணம் உள்ளதென்பதும் பொருளாம் என்றறியப்படுகின்றது. மேலும், மோக்ஷபலம் சகுணமென்றே வசனமும் சாதிக்கின்றது.

ஸோऽஶ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா।

(தைத். உ. ௧)

"அவன் சர்வஞ்ஞதையுடைய பிரம (ஆனந்தத்) தோடு கூடச் சமஸ்த போகத்தையும் அடைகின்றான்" என்னும் வசனத்திலுள்ள கூட (ஸஹ) என்னும் சப்தம் பிரமானந்த போகத்தோடு கூட மற்றைப் போகங்களையும் ஏககாலத்திலே முத்தன் அடைகின்றனன் என்பதின் மேற்று. ஆகலின், சகுணப் பிரமசொரூபமே முத்தனால் அடையற்பாலதாம் பயன். (௪௦)

(௨௬) தந்நிர்த்தாரணாநியமாதிகரணம்.

தந்நிர்தாரணாநியமஸ்தத்த்ருஷ்டேः ப்ருதக்க்யப்ரதிபந்தः ப²லம்॥

(௩. ௩. ௪௧)

(௧௧௫) செய்யவேண்டுமென்பது நியமமில்லை, இது காணப்படலான்; தடையின்மையாகிய வேறு பயன் இருத்தலின்.

[illegible] உத்கீத வித்தை முதலிய உபாசனைகள் [illegible] அல்லவோ? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) (யஞ்ஞ) கருமாநுஷ்டானத்திலே கன்மங்களுக்கு அங்கமாயிருத்தலின், அந்தத் தியானங்கள் நியமமாக அநுஷ்டிக்கற்பாலன. கன்மப்பிரகரணங்களுக்குப் புறம்பாக அவை படிக்கப்பட்டாலும், வாக்கியத்தினாலே அவைகள் யஞ்ஞங்களோடு சம்பந்தப்படுகின்றன. எங்ஙனமெனின்,

யஸ்ய பர்ணமயீ ஜுஹூர் பவதி (யசுர். வே. ந. ரு. எ. உ)

"யஞ்ஞத்துக்குச் சட்டுவம் பர்ணத்தினாலாகின்றது" என்னுமிடத்துப் பூர்ணத்தினாலாவதென்பது புறம்பே கூறப்படினும், அது யஞ்ஞத்துக்கு இன்றியமையாத சட்டுவவாயிலாக யஞ்ஞத்தோடு சம்பந்தமுறுகின்றது. அங்ஙனமே,

ய ஏவம் வித்வாநுத்காயதி|

ய ஏவமேதம் வித்வாந் ஸாம காயதி (சாந். க. எ. எ)

"இங்ஙனம் அறிந்த எவன் உரத்துப்பாடுகின்றானோ", "இங்ஙனம் அறிந்த எவன் சாமத்தைப் பாடுகின்றானோ" என யஞ்ஞத்துக்கு இன்றியமையாத சாமம் முதலியவாயிலாக, அந்த உபாசனைகள் யஞ்ஞசம்பந்தமுடையவாகின்றன. ஆகலின், யஞ்ஞகன்மங்களில் நியமமாக உற்கீதாதி உபாசனைகள் வேண்டுவவாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். கோதோஹனமுதலியவை நியமமில்லாமை போல, உபாசனைகளும் (ஆவசியகமின்று); அஃதாவது,

சமஸேந ப்ரணயேத் கோதோஹநேந பசுகாமஸ்ய|

"சமசமென்னும் பாத்திரத்தில் அவன் சலத்தைக் கொண்டுபோக, (ஆயின்) பசுவை விரும்பியவன் விஷயத்திலே கோதோகனத்திற் கொண்டுபோக" எனச் சுருதி கூறுகின்றது. ஈண்டுச் சலங் கொண்டுபோதற்குக் கோதோகனத்தை விதித்தமையும் யஞ்ஞகருமத்தின்பொருட்டாகாது எஜமானுடைய இச்சாவிஷயம்பற்றியாம்; இது சலத்தைக் கொண்டுபோதல் போல நியதமின்று. அங்ஙனம், கன்மங்களை உத்தேசித்து விதிக்கப்படும் உபாசனைகள் யஞ்ஞகன்மபயன்பற்றி விதிக்கப்பட்டில;

தேநோபௌ குருதோ யச்சைததேவம் வேத யச்ச ந வேத|

(சாந். க. க. ய)

"இதனை இங்ஙனம் அறிந்தவனும் அறியாதவனுமாம் இருவரும் அந்த யஞ்ஞத்தைச் செய்கின்றனர்" என உற்கீதமுதலியவற்றின் உபாசனை இல்லாது யஞ்ஞாநுஷ்டானஞ் செய்யக்காண்டலான்.

யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரம் பவதி (சாந். க. க. ய)

“ஆதலின், ஞானத்தேர்க்கும், சிரத்தையோடும், உபநிடதத்தோடும் ஒருவன் செய்கின்ற யஞ்ஞம் அதிவீரியமுடையதாகின்றது;” “செய்கின்றனன்” (குரோதி) என்னும் வினை நிகழ்காலத்திருப்பினும், யஞ்ஞத்தை அதிவீரியமுடையதாக்குதற்குச் சாதனமாக உபாசநாவிதி கற்பிக்கப்படுகின்றது. அதிவீரியமுடையதாகின்றதென்பது பிரபலகன்மாந்தரத்தினல் தடை ஒன்றும் நேராது விரைந்து பயன் கொடுக்கவேண்டியதென்பதின் மேற்று. அங்ஙனம் காமமும் விருஷ்டிமுதலியவும் போல வேறு பலன்களைக் கொடுப்பனவாகக் கேட்கப்படலாலும், யஞ்ஞகன்மங்களில் உபாசனைகள் நியமமில்லை. (௪௧)

(௨எ) பிரதாநாதிகரணம்.

ப்ரதாநவதேவ தது³க்தம் (௩. ௩. ௪௨)

(௩௬௬) ஹவிகள் போலவே (உபாசனைகள் பேதம்); இது கூறப்பட்டது.

ஏகராகிய பரப்பிரமசிவனார் பரவித்தைகளிலே அந்தந்தக் குணவிசிஷ்டங்களோடு வெவ்வேறாகத் தியானிக்கற்பாலர் எனக் கூறப்பட்டது. இது ஈண்டுப் பொருந்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) குணங்களிற் பேதமிருப்பினும், குணியாகிய பிரமம் ஒன்றுமாதலின் உபாசனை பேதமுறாது; எங்ஙனம் ஒரே அரசன் பல்வகை ஆபரணவேறுபாட்டோடியைந்து கொலுவிருத்தல், தேகப்பயிற்சி செய்தல், போசனஞ் செய்தல், இருத்தல், வேட்டையாடல், போர்புரிதல் முதலிய அவ்வத்தொழில்களிலே சிங்காசனமுதலிய ஸ்தானபேதங்களினும் பேதமுறுமோ, அங்ஙனமே தகராதி ஸ்தானபேதத்தில் அவ்வக்குணங்கள் பேதமுற்றிருந்தாலும் பிரமம் ஒன்றுமாதலின் அதின் உபாசனையும் ஒன்றுமிருத்தல் வேண்டும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்; ஏகராகிய பரப்பிரம சிவபிரான் சொரூபத்தில் பேதமில்லையேனும், அந்தந்தக் குணவிசிஷ்ட சொரூபத்தினும் குணவிசேஷ பேதம்பற்றிப் பேதமெய்துவதாக, (அந்தம்) வெவ்வேறு குணங்களுடையவராகத் தியானித்தலால் உபாசனப்பிரயோகம் வேறுபடுகின்றது; இந்திரனுக்குப் பலிகொடுத்தல் போல. எங்ஙனமெனின்,

இந்த்³ராய ராஜ்ஞே புரோடா³ஶம் இந்த்³ராயாதி⁴ராஜாய இந்த்³ராய ஸ்வராஜ்ஞே (யசுர். வே. ௨. ௩. ௬. ௧, ௨)

“இராஜனுகிய இந்திரனுக்குப் புரோடாசத்தைக் கொடுக்க”, “அதிராஜனுகிய இந்திரனுக்கும், சுவராஜனுகிய இந்திரனுக்கும் (கொடுக்க)” எனச் சுருதி கூறியவாறு, குணங்கள் வேறுபடுதற்கியைய வெவ்வேறு புரோடாசங்கள் பலிகொடுக்கப்படுகின்றன. (அங்ஙனம்)

ஙா ஜாவூ-லெவகா வுரூயக்।

"(வெவ்வேறாகத் தியானிக்கப்படுதலின்) தேவதைகள் வெவ்வேறு" என்று சங்கர்ஷகாண்டத் (தேவதாதிகரண) த்திற் கூறப்பட்டவாறே, ஈண்டுப் பரப்பிரமம் ஒன்றேயினும் வெவ்வேறு குணங்கள்பற்றி உபாசனை பேதமுறுகின்றது. அரசன் ஒருவனேயிருப்பு, அவன் சொரூபம் பேதமுறாதிருந்தாலும், ஸ்தான குணமுதலிய பேதங்களால் வேலைக்காரராற் செய்யப்படும் வழிபாடுகளும் பின்னமே. (௪௨)

(௨௮) இலிங்கபூயஸ்த்வாதிகரணம்.

ஸிஂஹஹூயஷாத்தஹி ஹஜியஷூவி (௩. ௩. ௪௩)

(௩௪௭) இலிங்கத்திலே ஆதிக்கிய முண்மையின்; அதுவே அதிகபலம்; அதுவும் (கூறப்பட்டது).

முன்னர்ப் பரவித்தைகள் அனைத்தினும் பிரமம் உபாசிக்கற் பாற்றென் றுரைக்கப்பட்டது. அந்த உபாசியப்பிரமத்தை விசேடித்து நிச்சயிக்கும்பொருட்டே எழுந்தது இவ்வதிகரணம்.

ஸவொவை ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து।
புருஷோ வை ருத்ரஸ்ஸந்மஹோ நமோ நமः॥

(தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரே; அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்; சத்தும் மகத்துமாயுள்ள உருத்திரர் புருஷர்; அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம்" எனவும்,

விஶ்வம் பூதம் புவநம் சித்ரம் பஹுதா ஜாதம் ஜாயமாநஞ்ச யத்।
ஸர்வோஹ்யேஷ ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து॥

(தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"உலகமும் பூதமும், புவனமும், விசித்திரமாகப் பிறந்தனவும், பிறக்கின்றனவுமாகிய இவையனைத்தும் உருத்திரர்; அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்" எனவும்,

கத்ருத்ராய ப்ரசேதஸே மீடுஷ்டமாய தவ்யஸே। வோசேம

ஶந்தமꣳ ஹ்ருதே। ஸர்வோஹ்யேஷ ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து॥

(தைத். ஆரணி. ௧௦. ௨௫. ௪௩)

"மேலாகிய உருத்திரர்க்கும், மிகுந்த ஞானமுள்ளார்க்கும், அநுக்கிரகஞ் செய்பவர்க்கும், வணங்கற்பாலருக்கும், இருதயத்துள்ளார்க்கும் இந்த இனிய வார்த்தையைச் சொல்லுவோம்; இவையெல்லாம் உருத்திரர்; அந்த உருத்திரர்க்கு நமஸ்காரமாகுக

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே பசுபதயே நமோ நம: (தைத். ஆரணி. ௧௦. ௨௨. ௪௦)

“சுவர்ணபாகுவுடையார்க்கு, சுவர்ணவர்ணருக்கு, சுவர்ணரூபர்க்கு, அம்பிகாபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம், பசுபதிக்கு நமஸ்காரம் நமஸ்காரம்” எனவும் தைத்திரீயத்திற் கூறப்படுகின்றது.

சண்டு எல்லோர்க்கும் சர்வான்மகமாகவும் உமாபதியாகவும் கூறப்படுகின்ற பரப்பிரமம் பிரகிருதத்திலே ஆதித்தியமண்டல உபாசனையில் மாத்திரமா? இன்றேற் பரவித்தை அனைத்திலுமா? உபாசிக்கற்பாலது என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரகரணத்தில் யாதும் விரோதமின்மையின், இப்போது கூறப்பட்ட சூரியமண்டலவித்தையிலேதான் பிரமம் உபாசிக்கற்பாற்றெனின்,

(சித்தாந்தம்) சொல்லுதும். இந்தச் சர்வான்மகமாய் உமாசகிதமாயுள்ள பரப்பிரமமே பரவித்தைகள் அனைத்திலும் உபாசிக்கற்பாற்று; அவ்வவ்வுபாசனைகளிற் கூறப்படும் குணலிங்கசம்பந்தமாயுள்ள வாக்கியங்கள் இருத்தலைமயின். அங்ஙனமே,

ஸர்வோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

“எல்லாம் உருத்திரரே” என்னும் வாக்கியத்தில்,

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி ஶாந்த உபாஸீத।

(சாந். ௩. ௧௪. ௧)

“இஃதெல்லாம் பிரமம்; (இந்த உலகம்) அந்தப் பிரமத்திலே தோற்றி, சீவித்து, ஒடுங்குவதாக ஒருவன் தியானிக்க” என்று கூறும் சாண்டில்லிய வித்தையிற்றியானிக்கற்பாலதாகிய (பிரமத்தின் குண) லிங்கமுள்ளது.

புருஷோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

“புருஷர்தான் உருத்திரர்” என்னும் வாக்கியத்திலே, புருஷசூக்த உபகோசலவித்தைமுதலியவற்றிற் கூறப்பட்ட உபாசிக்கற்பாலதாம் (பிரமத்தின்) லிங்கம் (காணப்படுகின்றது). எங்ஙனமெனின், சண்டுப் போந்தது என்பது

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் (சாந். ௬. ௨. ௧)

“சௌம்ய, சத்தாய் இதுவே முதலில் இருந்தது” என்ற [illegible] உபாசிக்கற்பாலதாம் (பிரமத்தின்) இலிங்கமாப் போந்தது.

[Grantha text] (தைத். க. ூ)

"மஹ: என்னும் அது பிரமம்; அது ஆன்மா; அதின் அவயவங்கள் மற்றத் தேவதைகள்" என்னுமிடத்து மஹ: என்பது வியாகிருதி வித்தையில் உபாசிக்கப்படும் பிரமத்தின் இலிங்கம்.

[Grantha text] (தைத். ஆரணி. க0. உ௫. ௪௩)

"இருதயத்தில அதிக சாந்தம்" என்னும் சுருதியானது இருதயத்தைச் சுட்டுதலான், அது தகரவித்தையில் உபாசியமாகிய பிரமத்தின் குணலிங்கத்தைக் குறிக்கின்றது.

[Grantha text] (தைத். ஆரணி. க0. உஉ. ௪0)

"இரண்ணியபாகுவின் பொருட்டு" என்பதிற் சுவர்ணரூபத்துவம் ஆதித்திய மண்டலவித்தையில் உபாசிக்கப்படும் (பிரமத்தின்) லிங்கம்.

உமாபதயெ (தைத். ஆரணி. க0. உஉ. ௪0)

"உமாபதிக்கு" என்பது பரவித்தைகள் அனைத்திலும் உபாசிக்கப்படும் (பிரமத்தின்) லிங்கம். சம்சாரரோகத்தை உருக்கிவிடுதலால் உருத்திரர் எனப் படுவோர் பரமான்மாவாகிய சிவபிரானார். இங்ஙனம் உமாபதியாகிய பரப்பிரமமெனுர்க்குப் பரவித்தைகள் அனைத்திலும் உபாசியத்துவம் உளதென்பது (மேலே போந்த) வாக்கியங்களான் முடிவு பெறுகின்றது. வாக்கியம் பிரகரணத்திலும் பலமுடைத்தன்றே. இது பூருவமீமாஞ்சை, ௩. ௩. க௪-ற் கூறப்பட்டுள்ளது. ஆகலின், உமையோடிசைந்து சம்சாரரோகத்தை ஒழிக்கும் பரவஸ்துவானது எல்லா வித்தைகளிலும் உபாசிக்கற்பாலதென்பது சித்தித்தது. (௪௩)

(உக) பூருவவிகற்பாதிகரணம்.

[Grantha text] (௩. ௩. ௪௪)

(௩.௩.௪௪) பிரகரணத்தினால் முந்தியதற்கு விகற்பம்; (ஆகலின்) கிரியை உண்டு; மானசபாத்திரத்திற் போல.

[Grantha text] (சத்பதப்பிராம்மணம், அக்கினிரகசியம், ௯. ௩)

"மனோமயமாய், மனசினாற் கட்டப்பட்டுத் தனக்குரிய முப்பத்தாறாயிரம் பிரகாசம் பொருந்திய அக்கினிவேதிகைகளை அது கண்டது" எனச் (சதபதப்) பிராம்மணத்தைச் (சார்ந்த) அக்கினிரகசியத்திற் கூறப்படுகின்றது. அங்ஙனமே,

வாக்சித: ப்ராணசித: சக்ஷுஶ்சித: ஶ்ரோத்ரசித: கர்மசித: அக்னிசித: (அக்கினிரகசியம்)

"வாக்கினாற் கட்டப்பட்டனவும், பிராணனாற் கட்டப்பட்டனவும், கண்களினாற் கட்டப்பட்டனவும், காதினாற் கட்டப்பட்டனவும், கன்மத்தினாற் கட்டப்பட்டனவும், அக்கினியினாற் கட்டப்பட்டனவும்" ஆகிய வேறு அக்கினி வேதிகைகளும் கூறப்பட்டிருக்கின்றன. நூறு வருஷமடங்கிய மனுஷனுடைய சீவகாலத்தில் முப்பத்தாறாயிரம் தினங்கள் உள்ளன. ஒரே அக்கினியாக மனசின் முழுவிருத்தியையும் எவ்வளவென்று கணக்கிடின் முப்பத்தாறாயிரம் அக்கினிகளாம். இவைகள் பிரத்தியகான்மாவாகத் தியானிக்கற்பாலன. இவ்வாறே வாக்குமுதலியவற்றாற் கட்டப்பட்ட அக்கினிவேதிகைகளினும் கொள்ளப்படும்.

அவை வித்தியாமயமாகிய யஞ்ஞத்துக்கு அங்கமா? அல்லது கிரியாமயமாகிய யஞ்ஞத்துக்கு அங்கமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வாக்கு மனமுதலியவற்றால் ஆகி நினைக்கப்படும் இந்த அக்கினிகள்

அஸத்வா இதமக்ர ஆஸீத் (சதபதப்பிரா்ம்மணம், ௬. ௧. ௧)

"அசத்துத்தானே முதற்கண் இருந்தது" என்றற்றொடக்கத்தவற்றால் மேலே கூறப்பட்ட இஷ்டிகா அக்கினிக்குச் சேஷமாகிக் கிரியாமயமாகிய யஞ்ஞத்தில் இடம் பெறுகின்றன. ஆகலின், இந்த அக்கினிகள் மானசபாத்திரம் போல இஷ்டிகா அக்கினியோடு விகற்பமாய் வருகின்றன. அஃதாவது துவாதசாகம் என்னும் சோமயஞ்ஞத்தில் அவிவாக்கியம் எனப்படும் பத்தாம் தினத்திற் பூமி பாத்திரம் எனவும், பிரஜாபதி தேவதை எனவும், சமுத்திரம் (சோம) திரவியம் எனவுங் கொள்ளப்படலான், அம்மானசபாத்திரத்தை எடுத்தலும் வைத்தலும் ஒமித்தலும் (எஞ்சிய ரசத்தை) எடுத்தலும் (இருத்துவிக்குக்களை) அழைத்தலும் பானஞ்செய்தலுமாகியவெல்லாம் மனசினால் மாத்திரம் முடிக்கப்படுவனவாயினும், கிரியாமயமாகிய யஞ்ஞத்துக்கு அவை அங்கமாவன போல, இந்த மானசிக அக்கினிகளும் கிரியாமய யஞ்ஞத்துக்கு அங்கங்களாம். (௪௪)

அநுபந்தாதிப்ய: (௩. ௩. ௪௫)

(௩௯௯) பிறிதொன்றுக்கு இயைத்தலானும்.

தேஷா மேகைக ஏவ தாவாந்யாவாநஸௌ பூர்வ:

"அவைகளில் ஒவ்வொன்றும் முன்னிருந்தவைகள் அவ்வளவாயிருக்கும்" என்னும் சுருதியால் இஷ்டிகா அக்கினியோடு சம்பந்தப்பட்[illegible]

யங்கள் மனசினுலாய அக்கினி முதலானவைகளுக்கு இயைக்கப்படலான், இந்த அக்கினிகளும் கன்மயஞ்ஞத்துக்கு அங்கமாகின்றன எனின், (சடு)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

விெத்யெவ துநிஜ்ாரணாத் (ந. ந. சசு)

(சoo) ஆயின், வித்தையே வற்புறுத்தலானும் சுருதியினுலும்.

அவை வித்தையே; (அஃதாவது, அவை) என்பது வித்தியாமயமாகிய யஞ்ஞாங்கங்கள் என்பது. அவைகள் எண்ணப்பட்ட அக்கினிகளாயிருத்தலாலே அவைகளுக்கு வித்தியாமயம் எய்தியவிடத்தும்

தெ ஹைெத விஃ்ாவிக வாவ (அக்கினிரகசியம்)

“இவைகள் வித்தையினுற் கட்டப்பட்டவை” என்று வற்புறுத்தல் அவைகள் வித்தியாமய யஞ்ஞத்தின் அங்கங்களாம் எனக் காட்டும் பொருட்டேயாம். வித்தியாமய யஞ்ஞமாவது இங்கே

மநஸெவ வா ஷீயந மநஸெஷ்ா ஹூா ஸஹ்ஹந மநஸா ஸ்வ மநஸா ஸாஸூநீஷு யஜெ கூ் க்ியெத யஷு யஜீய கூ் மநஸெவ தெஷு மெநாமயெஷு மநஸிதா மெநா மயஂ க்ியெத (அக்கினிரகசியம்)

“அவை மனசினுற் கட்டப்பட்டன; இவற்றில் ஆகுதிகள் மனசினுற் செய்யப்பட்டன; மனசினுலே துதித்தன; மனசினுற் புகழ்ந்தன; யஞ்ஞத்தில் எந்தக் கன்மஞ் செய்யப்பட்டாலும், யஞ்ஞத்துக்கு எந்தக் கன்மம் உரித்தாயிருந்தாலும் இவையெல்லாம் மனசினுற் கட்டப்பட்ட மனோவக்கினிகளின் மனவடிவங்களாய் (மனசிலே) செய்யப்பட்டன” என்னுஞ் சுருதியினுற் கூறப்படுகின்றது. ஆகலின், இவைகள் வித்தியாமயமாகிய யஞ்ஞத்தின் அங்கங்களே.

ஶ்ுத்யாதி பலீயஸ்த்வாச்ச ந பாதஃ (ந. ந. சஎ)

(சoக) சுருதிமுதலிய அதிபலமாயிருத்தலானும்; பாதை இல்லை.

தெ ஹைெத விஃ்ாசித வாவ| விஃ்யாஹை வெத வாவ விஃசிதா ஹவந்தி| தாந் ஹைதாெநவ விதெ ஸவ-்தா ஸவ-்ாணி ஹூதாநி விநஜ்விஸ்வதெ (அக்கினிரகசியம்)

“அவை வித்தையினுல் மாத்திரம் கட்டப்பட்டன; இங்ஙனம் அறிபவனுக்காக அவை ஞானத்தினுற் கட்டப்பட்டன; நித்திரை செய்யும் அறிஞன் பொருட்டுச் சமஸ்த பூதங்களும் எப்போதும் அவைகளை (வேதிகைகளை)

கட்டுகின்றன" என்றது சுருதி. சுருதியையும், வாக்கியத்தையும், இலிங்கத்தையும் நோக்கத் துர்ப்பலமாகிய பிரகரணம் மேலே பெறப்பட்ட ஞானமய யஞ்ஞத்துக்கு அவை அங்கம் என்பதைப் பாதிக்காது.

(ஆக்ஷேபம்)

ஏத ஏவாஷ்டா ஹ்யாஹா அஹூயந்த (அக்கினிரகசியம்)

"இவைகளில் ஆகுதிகள் மனசினுற் கொள்ளப்படுகின்றன" என்றற்றொடக்கத்தவற்றில் விதிப்பிரத்தியயம் ஒன்றும் கேட்கப்படாமையான், கன்மயஞ்ஞத்தினின்று வேறாக ஞானமய யஞ்ஞம் ஒன்று இல்லையாமெனின், (௪௭)

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

அநுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தரப்ருதக்த்வவத் த்ருஷ்டஶ்ச ததுக்தம்)

(௩. ௩. ௪௮)

(௪௦௨) தொடர்ச்சிமுதலியவற்றினின்று மற்ற ஞானம் வேறுதல் போல, (கன்மயஞ்ஞத்தினின்று) இவை வேறும்; (அது பிறவிடத்தினும்) காணப்படுகின்றது; இது உரைத்தாயிற்று.

ஹ்யாஹா அஹூயந்த (அக்கினிரகசியம்)

"ஆகுதிகள் மனசினுற் கிரகிக்கப்படுகின்றன" என்றற்றொடக்கத்த சுருதிகளினும் வித்தியாமய யஞ்ஞவிதி கற்பிக்கற்பாற்று. தகரவித்தைமுதலியன கன்மயஞ்ஞங்களினின்று வேறாயினுற் போல, (ஈண்டும்) யஞ்ஞ சம்பந்த சுருதிகளினால் வித்தியாமய யஞ்ஞமும் (கன்மயஞ்ஞத்தினின்று) வேறெனப் பெறப்படுகின்றது.

யதேவ வித்யயா கரோதி (சாந். ௧. ௧. ௧௦)

"ஞானத்தினோடு செய்யப்படுவதுதான் அதிவீரியமுடைத்து" என்றற்றொடக்கத்த சுருதியில் அநுவாத ரூபமாய் விதிகள் காணப்பட்டன. இது பூருவமீமாஞ்சை, ௧௦. ௪. ௨௨.ற் கூறப்படுகின்றது. ஆகலின், (இந்த அக்கினிகள்) ஞானயஞ்ஞத்துக்கு அங்கம் என்று சொல்வதே யுக்தம். (௪௮)

சூத்திரகாரர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

ந ஸாமாந்யாதப்யுபலப்தேர் ம்ருத்யுவந்ந ஹி லோகாபத்தி:।

(௩. ௩. ௪௯)

(௪௦௩) (அங்ஙனம்) அன்று, ஒப்புமைபற்றி (இது) காணப்படலான்; மிருத்தியுவைப் போல; ஏனெனின், (மிருத்தியுவின்) உலகப் பிராப்தி இல்லை.

தேஷா ஏகைக ஏவ தாவாந்யாவா நஸௌ|

(அக்கினிரகசியம்)

"அவற்றின் ஒவ்வொன்றும் முந்தினதெவ்வளவோ அவ்வளவாய் இருக்கும்" என்னும் சுருதியினால் இஷ்டிகைகொண்டு கட்டப்பட்ட அக்கினி (சம்பந்தமுற்ற விஷயங்கள்) பயன் ஒப்புமைபற்றி மன அக்கினிக்கு மாற்றப்படுகின்றன. இஷ்டிகா அக்கினிக்கு யஞ்ஞவாயிலாக யாது பயன் கூறப்பட்டதோ, அந்தப் பயனே வித்தியாமய யஞ்ஞத்தின் பிரவேசத்துக்குமாம். இஷ்டிகையினாலே கட்டப்பட்ட அக்கினிபோல ஒரே அளவுள்ள இடத்தை இந்த மானசாக்கினிகள் கொள்வன (எனச் சுருதி கருத)வில்லை; சில ஒப்புவமைபற்றி ஒரே பொருளோடு சம்பந்தமுற்ற விஷயங்கள் மற்றொன்றுக்கும்செல்லக் காண்டலான்.

ஸ ஏவ ம்ருத்யு:| ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷ:|

(தைத். ஆரணி. ௧0. ௧௪. ௩௧)

"இந்த மண்டலத்திலே எந்தப் புருஷர் இருக்கின்றாரோ," "அவரே மிருத்தியு" என்னுஞ் சுருதியானது சங்காரஞ் செய்தல் மாத்திரத்தினால் மண்டல புருஷர்க்கு மிருத்தியுவைப் போலத் தக்ஷிணதேசவாசம் இருக்கவேண்டுமென்பதில்லை என்று கூறுகின்றது. ஆகலின், யாதாயினுமோர் ஒற்றுமைபற்றி அதிதேசஞ் செய்வதில் யாதும் விரோதமில்லை. (௪௯)

சூத்திரகாரர் மற்றோர் ஏதுக் கூறுகின்றனர்.

ப்ராஹ்மணாச்ச ததா ஹ்யநுபந்த⁴ஸ்தத்³ப³ஹுத்வாத்|

(௩. ௩. ௫0)

(௪0௭) பின் வரும் (பிராம்மணத்தி) னாலும் சப்தத்துக்கு அதுதான் பொருள்; ஆயின், மிகுதிபற்றி அநுபந்தம்.

பின்வரும்பிராம்மணத்தினால் "மனசினாற் கட்டிய அக்கினியையுற்றுப்" பேசும் வாக்கியத்துக்கு இந்த அக்கினிகள் வித்தியாமயத்தைப் பிரதிபாதிப்பதே பொருளாகப் பெறப்படுகின்றது.

அயம் வாவ லோக ஏஷோ௩க்³நிசித:|

(சதபதப்பிராம்மணம். ௧0. ௫. ௪)

"இந்த இட்டிகையாலாய அக்கினி வேதியே இந்த உலகம்" என்றற்றொடக்கத்த சுருதியினால் வேறு பலத்தைக் கொடுக்கும் உபாசனை விதிக்கப்படுகின்றது. கிரியாப்பிரகரணத்தில் மனசினாற் கட்டப்படும் அக்கினிகளையுடைய அநுபந்த (பிரகரண) மானது நினைக்கப்படுகின்ற அக்கினி அங்கங்களின் மிகுதியையுடைமையின், இவைகள் (இந்த அக்கினிகள்) ஞானயஞ்ஞத்துக்கு அங்கமாகின்றன. (௫0)

(ரு0) சரீரேபாவாதிகரணம்.

ஏக ஆத்மந꞉ ஶரீரே பா⁴வாத் (ரு. ரு. ருக)

(சூ0ரு) சரீரத்திலே ஆன்மா இருப்பதாற் சிலர் (அது யுக்தம் அன்று என்பர்).

இப்போது மேலே கூறப்பட்ட பிரமசொரூபத்தைப் பரவித்தைகள் அனைத்திலும் தியானஞ் செய்தல் பொருந்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபாசிப்பவன் சரீரத்துள்ளே இருத்தலானும், கர்த்தாவும் போக்தாவுமாகத் தான் இருத்தலானும், அங்ஙனமிருப்பவன் பரவித்தைகளிலே தனக்கு ஆன்மாவாகவும், முக்கணுடைமைமுதலிய இலக்ஷணமுடைய சொரூபராகவும் சிவபெருமானை அநுசந்தானஞ் செய்தல் கூடாதெனச் சிலர் கூறுகின்றனர் எனின், (ருக)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

வ்யதிரேகஸ்தத்³பா⁴வாபா⁴வித்வாந்ந தூபலப்³தி⁴வத் (ரு. ரு. ருஉ)

(சூ0கூ) ஆயின், (அது அங்ஙன) மன்று; (பின்) வியதிரேகம்; அதனியல்பை (அவன்) அடைதலின்; உபலப்தியிற் போல.

கர்த்தாவும் போக்தாவுமாகத் தன்னைக் குறிக்கும் உபாசகனிடத்துப் பரமான்மாவானவர் ஆன்மாவாகத் தியானிக்கப்படுவரல்லர்; பின்னையோவெனில், சாம்சாரிக சுவபாவத்தினின்று நீங்கினவனுக்கு (முக்தனுக்குப்) புலப்படும் எந்த (வியதிரேக) எதிர்மறைவியல்பினவாய அபகதபாப்மத்துவாதி குணரூபம் உண்டோ, அது தியானிக்கற்பாற்று; அங்ஙனம் எப்பொழுதுந் தியானித்துக்கொண்டிருத்தலினாலேதான், பிரமசொரூபம் புலப்படுகின்றமையின். எவ்வெவ்வாறு சொரூபப்பிரமத்தின் தியானபாவனை இருக்கின்றதோ, பிரமத்தின் சொரூபத்தை அடைதலும் அவ்வாறாம்;

யதா²க்ரதுரஸ்மிம்ˮல்லோகே புருஷோ ப⁴வதி ததே²த꞉ ப்ரேத்ய ப⁴வதி (சாந். ரு. கச. க)

"இந்த உலகத்திற் புருஷனுடைய கருத்து எங்ஙனம் இருக்கின்றதோ, இந்த உலகத்தை விட்டபின்னும் அவன் அங்ஙனமே இருப்பன்" எனச் சுருதி கூறுகின்றமையின். ஆகலின், சம்சாரத்துக்குரிய சுவபாவத்தினின்று நீங்கினவனைக் குறிக்கும் அபகதபாப்மத்துவாதி குணங்களையுடையனை உபாசிப்பவன் தியானிக்கற்பாலனாகலின், அப்பொழுது அவ்வுபாசகனுக்கு ஆன்மாவாகத் தியானிக்கற்பாலராகிய சிவபிரானைத் திரிலோசனமுதலிய இலக்ஷண சொரூபமுடையராகத் தியானஞ்செய்தலில் விரோதம் யாதுமின்று. (ருஉ)

(௩௧) அங்காவபத்தாதிகரணம்.

அங்காவபத்தாஸ்து ந ஶாகாஸு ஹி ப்ரதிவேதம் (௩. ௩. ௫௩)

(௪௦௭) அங்கங்களோடு சேர்ந்தவை அவைகளுக்கு மாத்திரங் கட்டுப்பட்டன அன்று; ஒவ்வோர் வேதத்தின் எல்லாச் சாகைகளுக்கும் (அவை பொது)வன்றே.

தியானத்துக்கு அங்கமாக வேதத்திற் சில சாகைகளிலே விதிக்கப்பட்டவை தியானங்கள் அனைத்திலும் அங்கங்களாகக் கொள்ளவேண்டுமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஆத்மாநம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்|
த்யாநநிர்மதநாப்யாஸாத் பாஶம் தஹதி பண்டித꞉ (கைவ)

"ஆன்மாவைக் கீழ்க்கடைகோலாகவும், பிரணவத்தை மேற்கடைகோலாகவுங் கொண்டு கடைதலாம் தியானப்பியாசத்தினாலே பண்டிதன் பாசத்தைத் தகிக்கின்றான்" எனக் கைவல்லியோபநிடதத்துத் தகரோபாசனையிலே பிரணவத்தியானம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

அக்நிரித்யாதிநா பஸ்ம க்ருஹீத்வா விம்ருஜ்யாங்காநி ஸம்ஸ்ப்ருஶேத்| தஸ்மாத் வ்ரதமேதத் பாஶுபதம் பஶுபாஶவிமோக்ஷாய|

(அதர்வசிரசு)

*"அக்கினி என்பது பஸ்மம் என்றற்றொடக்கத்த மந்திரத்தினாற் பஸ்மத்தை எடுத்து, அதனால் அங்கங்களிற் பூசி அவற்றைத் தடவுக; இந்தப் (பாசுபத) விரதம் பசுவைப் பந்தத்தினின்று நீக்குதற்குப் போந்த பசுபதிதருமம்" என அதர்வசிரசிற் கூறப்பட்ட பாசுபதவித்தையிலே பஸ்மோத்தூளனம் கேட்கப்படுகின்றது. மற்றோரிடத்திலே,

திஸ்ரோ ரேகா꞉ ப்ரகுர்வீத (காலாக்கினிருத்திரம்)

"அவன் மூன்று ரேகை செய்வானாக" எனத் திரிபுண்டரதாரணவிதி கூறப்படுகின்றது. அந்த வழிபாட்டுக்குச் சிவசாயுச்சியமே பலம் என்று கேட்கப்படுகின்றமையின், அது பரவித்தைக்கு அங்கமாம். இங்ஙனம் எந்தச் சாகைகளிலே (பஸ்மோத்தூளன முதலியன) கூறப்பட்டிருக்கின்றனவோ, அந்தச் சாகைகளிலேயுள்ள உபாசனைகளில் உபாசகர்களாற் சந்நிதிபற்றி அவை வித்தியாங்கமாகச் சேர்ந்தவெனக் கோடற்பாற்றெனின்,

---

*இந்தப் பாசுபதவிரதானுட்டானம் உபக்கிரமணிகையிலும் (௩௪௦—௩௫௪) சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடையிலும் (௧௩௪—௧௩௭) குறிக்கப்பட்டுள்ளது. மேலும், அது பாஷ்யகாரரால் (௩. ௪. ௪௮, ௪௧-ஆம்) சூத்திர பாசுபதவிரதாதிகரணத்திலும் உரைக்கப்பட்டிருக்கின்றது.

(சித்தாந்தம்) கூறுதும். பஸ்மோத்தூளனமுதலியன உபாசனங்கங்களாக எந்தச் சாகைகளிற் கூறப்பட்டனவோ, (அவை) அந்தச் சாகைகளுக்கேயாம் என ஓர் நியமமில்லை. பின், ஒவ்வோர் வேதத்துச் சாகைகள் அனைத்திலும் பிரமோபாசகர்கள் அனைவராலும் அவை அநுஷ்டிக்கற்பாலனவே. சுருதி கொண்டு சந்நிதி தவிர்க்கப்படல் வேண்டும். (௫௩)

மந்த்ராதிவத்வா விரோத: (௩. ௩. ௫௪)

(௫௦அ) அல்லது மந்திராதியிற்போல விரோதம் இன்று.

வா என்பது வற்புறுத்துதலின் மேற்று. எங்ஙனம் யஞ்ஞாங்கமாயுள்ள மந்திரங்கள் ஒவ்வோர் சாகைபற்றியிருப்பினும், அவை சர்வசாகைகளிலுமுள்ள யஞ்ஞத்துக்குப் பிரயோசனப்படுதலின் விரோதமின்றோ, அங்ஙனமே ஈண்டுமாம். (௫௪)

(௩௭) பூமக்ரதுவஜ்ஜ்யாயஸ்த்வாதிகரணம்.

பூம்ந: க்ரதுவஜ்ஜ்யாயஸ்த்வம் ததா ஹி தர்ஶயதி (௩. ௩. ௫௫)

(௫௦௧) யாகத்திற்போலச் சமஸ்தோபாசனை முக்கியம்; அங்ஙனமே சுருதி கூறுகின்றது.

ஈண்டு வைசுவாநரவித்தையிலே உபாசனை அம்சமாகவா? சமஸ்தமாகவா? கொள்ளப்படல் வேண்டும் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வானலோகம், சூரியன், வாயு, ஆகாசம், நீர், பூமி என்பன வைசுவாநரர்க்கு (முறையே) தலையும், கண்ணும், பிராணனும், உடலும், உபஸ்தங்களும், பாதமுமாகத் தியானிக்கவேண்டும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அத்த்யன்னம் பஶ்யதி ப்ரியம் பவத்யஸ்ய ப்ரஹ்மவர்சஸம் ய ஏதமேவம் வைஶ்வாநரமுபாஸ்தே (சாந். ௫. ௧௮. ௨)

"வைசுவாநரரைத் தியானிப்பவன் அன்னம் அயில்கின்றனன்; இனியதைப் பார்க்கின்றான்; இவன் பிரம தேஜஸை அடைகின்றான்" என வெவ்வேறாக வான முதலியவற்றுக்குப் பரியாயமாயுள்ள வாக்கியங்களினாலே, அவ்வவங்கங்களையும் வெவ்வேறாக உபாசிக்க எனக் கூறப்பட்டது. அங்ஙனமே, உபாசனா மொழியும் பலத்தைக் குறிக்கும் வசனமும் தனித்தனி வேறாகக் கூறப்படுதலின், அம்சவுபாசனை உசிதமாம் எனின்,

(சித்தாந்தம்) சமஸ்தோபாசனைதான் முக்கியமென்று கூறப்படுகின்றது. மூவுலகத்தையும் சரீரமாகவுடையராய்த் தியானிக்கற்பாலராகிய வைசுவாநரர்க்கு வானமுதற் பிருதிவியந்தமாயுள்ளவற்றைத் தலைமுதற் பாதாந்தமாகக் கூறிய பின்னர்,

யஸ்த்வேதமேவம் ப்ராதேஶமாத்ரமபிவிமாநமாத்மாநம் வைஶ்வாநரமுபாஸ்தே ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தீதி (சாந். ரு. ௧௮. ௧)

"சாணளவாகவும் தன் அளவாகவும் வைசுவாநரரைத் தியானிப்பவன் சர்வலோகங்களிலும், சர்வபூதங்களிலும், சர்வான்மாக்களிலும் போகந் துய்க்கின்றனன்" எனப் பிரமாநுபவமும் பலமும் கூறப்பட்டிருக்கின்றன. (அவர்நுடைய) தலை முதலிய அவயவோபாசனையினும், (வைசுவாநரருடைய) பிருதிவியாகிய சமஸ்தோபாசனையே பிராமாணிகமுடையதாய் முக்கியமாயிருக்கின்றது. இவ்வுபாசனையிலேதான் பிரமாநுபவமும் பலமும் கேட்கப்படுதலின். அங்கே (வைசுவாநரருடைய) அவயவோபாசனையும் (அதன்) பலமும் (சுருதியில்) யஞ்ஞம்போலக் கூறப்படவில்லை.

வைஶ்வாநரம் த்வாதஶகபாலம் நிர்வபேத் புத்ரே ஜாதே।
(யசு. வே. ௨. ௨. ௫. ௫)

"புத்திரன் பிறந்தபோது வைசுவாநரருக்குப் பன்னிரண்டு கபாலத்திலே ஆகுதி கொடுத்தல்வேண்டும்" என்று சுருதி விதித்த பின்னர்,

யதஷ்டாகபாலோ பவதி காயத்ரியைவைநம் ப்ரஹ்மவர்சஸேந புநாதி (யசு. வே. ௨. ௨. ௫. ௫)

"எட்டுக் கபாலத்திலே கொடுக்கப்பட்டது காயத்திரியைப் போலப் பிரமதேஜசாகச் சுத்திகரிக்கின்றது" என்றற்றொடக்கத்தவற்றாற் கூறப்படும் எட்டுக்கபாலத்தையும் அவற்றின் பலத்தையும் எடுத்துச் சுருதி விதவாமை போலவே, வைசுவாநரவித்தையினுமாம். அங்ஙனமே சுருதியானது சமஸ்தோபாசனையையே முக்கியமாகக் கூறுகின்றது.

ஔபமந்யவ கம் த்வமாத்மாநமுபாஸ்ஸே (சாந். ரு. ௧௨. ௧)

"உபமன்னியுபுதல்வனே! நீ எந்த ஆன்மாவை உபாசிக்கின்றனை?"

ப்ராசீநயோக்ய கம் த்வமாத்மாநமுபாஸ்ஸே (சாந். ரு. ௧௩. ௧)

"பிராசீனயோக்கியனே! நீ எந்த ஆன்மாவை உபாசிக்கின்றனை?" என்னும் வினாக்களுக்கு, (முறையே) பின்னர்

திவமேவ பகவோ ராஜந் (சாந். ரு. ௧௨. ௧)

"பகவானே, இராஜாவே, ஆகாயத்தையே உபாசிக்கின்றேன்"

ஆதித்யமேவ பகவோ ராஜந் (சாந். ரு. ௧௩. ௧)

"பகவானே, இராஜாவே, ஆதித்தியனையே உபாசிக்கின்றேன்" என்றற்றொடக்கத்த விடைகளான் அவயவோபாசனை கூறி,

மூர்த்தா தே வ்யபதிஷ்யத் (சாந். ரு. ௧௨. ௧)

"அன்னத்தை அயில்கின்றான்; இனியதைப் பார்க்கின்றனன்" என்றற் றொடக்கத்தவற்றால் அங்கங்கே (சுருதியிற்) பலம் குறிக்கப்பட்டாலும்,

ஃமூயா வா விஹு தாநஸ ஊவிஷ்ஹொவாஜ ஃமூயா வ விது வ்யவதி ஷாலுஜா நாஜகிஷெஷஹு (சாந். ரு. கஉ. உ)

"அது (பரம) ஆன்மாவின் தலை; நீ என்னிடம் வாராதபோனால் உன்தலை விழுந்துபோம்" என்றற்றொடக்கத்த இராஜவசனங்கொண்டு, அவயவத் தியானத்தினல் (விளையும்) அநர்த்தத்தைச் (சுருதி) கூறுகின்றது. ஆகலின், சமஸ்தோபாசனையே முக்கியம். (ருரு)

(கூகூ) நாநாசப்தாத்தியதிகரணம்.

நாநாஸ஬ாதிெஹஷாச (ந. ந. ருசு)

(சுகo) நாநாசப்தமுதலிய பற்றி, அவை பேதம்.

தகரவித்தையிலே (பிரமத்தைப்பற்றிய) உபாசனைகள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்துத் தியானஞ்செய்தல் வேண்டுமா? இன்றேல் ஒவ்வொன் றையும் வெவ்வேறாகத் தியானஞ்செய்தல் வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) நாநாசாகைகளையுடைய வேதங்களிலே பலவாறாகத் தியானங்கள் கூறப்படினும், உபாசியமாகிய பிரமம் ஏகமாயிருத்தலின் உபாசனை அனைத்தையும் ஒருங்கு சேர்த்து உபாசித்தல் வேண்டும் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. அனந்த சுருதிகளிற் கூறப்பட்ட அனந்த உபாசனைகளையும் ஒருங்கு சேர்த்து அநுஷ்டித்தல் கூடாமையின், சொரூபத்திலே (பிரமம்) ஒன்றுமாயினும், (அந்தப்) பிரமத்துக்குக் குணங் கள் வேறுபடுதலான் உபாசனைகளும் வேறுபடும். எந்தவிடத்திற் குண வேறுபாடுகள் இல்லையோ, அந்தவிடத்திலே ஸ்தானாதிபேதத்தினல் உபா சனைகள் பேதமுறும். அரசன் முதலாயினோருடைய குணபேதம்பற்றி இந் திரனுக்குக் கொடுக்கப்படும் புரோடாசங்கள் வெவ்வேறானாற் போலவே னும், கார்ஹபத்தியமுதலிய ஸ்தானாதி பேதத்தினல் யாகாக்கினிக்கு வழி பாடு வேறுபட்டாற்போலவேனும், உபாசனாபேதம் (உளதாதல்) பொருத் தமாம் என நிரூபிக்கப்பட்டது. ஆகலின், (உபாசனை) நாநாப்பிரகாரமா யுள்ளது; பெயரினுந் தொடர்ச்சியினும் பேதமுண்மையின்; என்பது நிர் ணயம். (ருசு)

(உபாசனா) வித்தை விதிக்கப்படவில்லை என்பதை நிரசிக்கும்பொ ருட்டே போந்தது இந்த அதிகரணம்.

(கூசா) விகற்பாதிகரணம்.

விகல்போ(அ)விசிஷ்டபலத்வாத் (௩. ௩. ௫௯)

(௪௩௩) விகற்பம்; (அவற்றின்) பயன் ஒன்றாயிருத்தலின்.

இங்ஙனம் நாநாப்பிரகாரங்களாகப் பரவித்தைகள் நிரூபிக்கப்பட்டன. உபாசகன் விஷயத்தில் அவ்வுபாசனைகள் விகற்பமாகக் கோடற்பாலனவா? அவை ஒருங்கு தியானிக்கற்பாலனவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) தகரவித்தை சத்வித்தை முதலியன ஒருங்கு தியானிக்கப்படல் வேண்டும்; முயற்சி மிகுதிப்படுங்கால், பலமும் மிகுதியாகுமாதலின் அவைகள் விகற்பமாகக் கொள்ளவேண்டும் என்றற்கு விதி இல்லையாமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஒரு உபாசகன் விஷயத்திற் பரவித்தைகள் எல்லாம் விகற்பங்களே; எதனாலெனின், நிரதிசயானந்தாநுபவ பிரமசாக்ஷாத்காரபலம் (எல்லாவற்றினும்) ஒன்றாமாதலின். ஒரே உபாசனையினாற் பலன் பெறப்படுமாயின், அப்பிரயோசனமாகிய பிறவற்றை ஒருவன் (அப்பியசித்தல்) எற்றுக்கு? மேலும், ஒரே உபாசனையினாற் பிரமாண ஜன்னியமாகிய பிரமசொரூபசாக்ஷாத்காரம் தியேயப்பொருளோடு தாதான்மியபாவனையுறுதல் காரணமாக நிரதிசயானந்த அநுபவத்தினாற் சித்திக்கின்றது. ஒன்றைவிட்டு மற்றொன்றைத் தொடர்வதாற் சித்தம் சலனமெய்தும். ஆகலின், அவை விகற்பங்களாகக் கொள்ளற்பாலன. (௫௯)

(௩௫) யதாகாமாதிகரணம்.

காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சீயேரந்நவா பூர்வஹேத்வபாவாத்। (௩. ௩. ௫௮)

(௪௩௨) காமியங்கள் காமித்தவாறு ஒருங்கு சேர்க்கப்படலாம் அல்லது ஒருங்கு சேராதுவிடலாம்; முந்திய ஏது இல்லாமையான்.

ஈண்டுப் பிரமசாக்ஷாத்காரபலத்துக்கு வேறாகிய பலத்தைத் தருவனவாகக் கருதப்படும் உபாசனைகளுக்கும் பூருவாதிகரணத்திற் (கூறப்பட்ட) நியாயம் செல்லுமா? என்பது சந்தேகம்.

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. மேலை அதிகரணத்திற் கூறப்பட்ட நியாயம் ஈண்டுச் செல்லாது; (இருவகை உபாசனைகளுக்கும்) பேதமுண்மையின்.

தேவோ பூத்வா தேவாநப்யேதி (பிரு. ௪. ௧. ௨)

"தேவனாகித் தேவர்களைப்போய் அடைகின்றனன்" எனப் பாவனாதிக்கிய வசத்தினால் தேவபாவத்தைச் சேவித்திருக்குங்காலத்திற்றான் அடைவதாகக் கூறப்படுகின்றது. (பரப்பிரமத்தைத்) தானாக உபாசிக்கும் பரவித்தைகள் போல, பிரமமுதலிய நாமங்களை உபாசித்தல் போன்ற காமியவுபாசனைகள் (பிரம) சாக்ஷாத்காரபலத்தைக் கொடுக்கும் என்பதற்குச் சிறிதும் பிரமாணமில்லை. அந்தப் பலமில்லாவிடத்து, ஆங்காங்குப் போகத்தை மிகுதியும் துய்க்கவேண்டும் என்னும் அபேக்ஷைகொண்டு அநேக உபாசனை செய்வதே யுக்தம்; பிரமத்தை அடைதலாம் பயன்போல ஒன்றாயிராமையின். ஆகலின், ஒன்றையேனும் பலவற்றையேனும் ஆசிரயித்து அநுஷ்டிக்கவேண்டும் என்பது நிச்சயம். (௫௮)

(௧௬) யதாசிரயபாவாதிகரணம்.

ஐ஗ேஷு யதாஶ்ரயபாவ: (௩. ௩. ௫௯)

(௪௪௩) (யஞ்ஞ கன்ம) அங்கங்களிற் போல, (அவை தமக்குரிய கன்மங்களை) ஆசிரயிப்பன.

ஈண்டு உற்கீத முதலிய அங்கங்களோடு சம்பந்தப்பட்ட (உபாசனைகள்) யஞ்ஞத்துக்கு அங்கமா? இன்றேற் சுவாதந்திரியமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) நியாயம் (சூத்திரகாரரால்) கூறப்படுகின்றது. (யஞ்ஞ கன்மங்களிலே) உற்கீதமுதலிய அங்கங்களிற் கூறப்படும் உபாசனைகள் உற்கீத முதலிய (அங்கங்கள்) போல யஞ்ஞ கன்மங்களுக்கு அங்கங்களே; கோதோகநாதிபோலச் சுருதியிலே பலங் கேட்கப்படாமையின். (௫௯)

ஶிஷ்டேஶ்ச (௩. ௩. ௬௦)

(௪௪௪) விதித்தலானும்.

உத்கீத²முபாஸீத (சாந். ௧. ௧. ௧)

"அவன் உற்கீதத்தை உபாசிக்க" எனச் சுருதி விதித்தல் காணப்படுதலானும்,

யதே³வ வித்³யயா கரோதி (சாந். ௧. ௧. ௧௦)

"உபாசனையோடு எவன் எதைச் செய்கின்றனனோ" என்னுஞ் சுருதியில் விதித்தல் காணப்படாமையானும், (குறிக்கப்பட்ட உபாசனைகள் யஞ்ஞ கன்மங்களுக்கு) அங்கமாகின்றனவே. (௬௦)

ஸமாஹாராத் (௩. ௩. ௬௧)

(௬௧௫) திருத்தமுண்மையான்.

அத² ய꞉ க²லூத்³கீ³த²꞉ ஸ ப்ரணவோ ய꞉ ப்ரணவ꞉ ஸ உத்³கீ³த² இதி ஹோத்ருஷத³நாத்³தை⁴வாபி து³ருத³்கீ³த²மநுஸமாஹரதி।

(சாந். க. ரு. ரு)

"உற்கீதத்தைப் பிரணவம் எனவும், பிரணவத்தை உற்கீதம் எனவும் அறிகின்றவன் ஹோதாவின் தானத்திலிருந்து உற்கீதவிஷயத்தில் (உற்காதா விடும்) பிழையைத் திருத்துகின்றான்" என்னுஞ் சுருதியினால் உபாசனையின் சமாகாரம் (பிழைதிருத்தம்) நியமமாகக் காணப்படுகின்றது; இந்த நியாயத்தினாலும் (உபாசனைகள்) யஞ்ஞங்களுக்கு அங்கங்களாகின்றன. ஞானமில்லாமையாற்றான் உற்கீதவிஷயத்திற் பிழை நேர்கின்றது. ஞானமில்லாவிடின் வேறு பிரகாரமாகத் திருத்துதலாம் சமாதானம் செய்யவேண்டும் என்று கூறும் சுருதியானது யஞ்ஞத்துக்கு உபாசனம் அங்கமென்று காட்டுகின்றது; இந்த நியாயத்தினாலும் உபாசனை யஞ்ஞத்துக்கு அங்கமாகின்றது. (௬௧)

கு³ணஸாதா⁴ரண்யஶ்ருதேஶ்ச (௩. ௩. ௬௨)

(௬௧௬) குணஞ் சாதாரணமென்று சுருதி கூறலாலும்.

தேநேயம் த்ரயீவித்³யா வர்ததே ஓமித்யாஶ்ராவயத்யோமிதி ஶம்ஸத்யோமித்யுத்³கா³யதி (சாந். க. க. ௯)

"அதினால் (அக்ஷரத்தினால்) அந்த மூன்று வேதத்தின் வித்தை உண்டாகின்றது; ஓம் என்று அத்தவர்யு ஓர் ஆஞ்ஞை கொடுத்தனர்; ஓம் என்று ஹோதாக் கூறினர்; ஓம் என்று உற்காதா பாடுகின்றனர்" எனப் (பிரணவம்) யாண்டுஞ் சேர்ந்திருக்கின்றது. (இங்கே கூறப்பட்ட) உபாசனை பிரணவத்தின் குணமாகச் சேர்தலான், உபாசனை (யஞ்ஞகன்மத்துக்கு) உபாதான நியமாங்கமென்று பெறப்படுகின்றது. பிரகிருதத்திற் கூறப்பட்டதொன்றைக் குறிக்கும் "அதனால்" (தேந) என்னும் சப்தமானது பிரகிருத உபாசனையோடு சேர்ந்த பிரணவத்தையே குறிக்கின்றது. ஆகலின், முன்னர்க் கூறிய உற்கீத முதலியவற்றோடு சேர்ந்த உபாசனைகள் (குறிக்கப்பட்ட யஞ்ஞகன்மங்களுக்கு) நியமமாம் எனின், (௬௨)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ந வா தத்ஸஹபா⁴வாஶ்ருதே꞉ (௩. ௩. ௬௩)

(௬௧௭) நிச்சயமாயில்லை; அவை ஒன்று சேருமென்று சுருதி சொல்லாமையான்.

(யஞ்ஞகன்மங்களோடு உபாசனைகள்) ஒன்று சேருமென்பது அங்கங்களாதலாம் என்பதின் மேலதன்றே. இது கூறப்படாமையால் உபாசனைகள் யஞ்ஞகன்மங்களுக்கு அங்கமாகமாட்டா:

யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம்

(சாந். க. க. கO)

"உபாசனையோடு செய்யப்படுவதுதான் அதிவீரியமுடைத்து" என்னும் சுருதியினால் வேறு பயன்களைச் சாதிப்பனவாக அறியப்படும் உபாசனைகள் (யஞ்ஞங்களுக்கு) அங்கமாகமாட்டாமையின்.

உத்கீத முபாஸீத (சாந். க. க. க)

"அவன் உற்கீதத்தைப் பாடுக" என்னுஞ் சுருதியானது கண்டு உபாசனைகள் உற்கீதத்தைமாத்திரம் சார்ந்தன என்று கூறுதலின், யஞ்ஞகன்ம அங்கங்களோடு சம்பந்தப்பட்ட அந்த உபாசனைகள் அந்த யஞ்ஞகன்மங்களுக்கு (நியம) அங்கங்கள் ஆகா. (சுா)

தர்சநாச்ச (ா. ா. கச)

(சக அ) (சுருதியிற்) காணப்படலானும்.

ஏவம் வித் ஹ வை ப்ரஹ்மா யஜ்ஞம் யஜமானம் ஸர்வாம்ச்சர்த்விஜோ ரக்ஷதி (சாந். ச. கஎ. கO)

"இருத்துவிக்குக்களுள் ஒருவனாகிய இதனை அறிந்த பிராமணன் யஞ்ஞத்தையும், யசமானனையும், மற்றெல்லாவற்றையும் இரக்ஷிக்கின்றனன்" என இங்ஙனம் பிராம்மணாசாரியின் ஞானத்தினால் எல்லாம் இரக்ஷிக்கப்பட்டனவாகக் கூறுஞ் சுருதியானது உற்காதா முதலாயினோர்க்கு ஞானம் நியமமில்லையாமாதலின், யஞ்ஞ கன்மத்திலே ஞானம் அங்கமில்லை என்று காட்டுகின்றது. ஆகலின், மேலே உரைக்கப்பட்ட உபாசனைகள் யஞ்ஞகன்மங்களுக்கு இருக்கவேண்டுமென்ற நியமமில்லை என்பது யுக்தமே. (சுச)

மூன்றும் அத்தியாயத்து
நான்காம் பாதம்.

---*---

(க) புருஷார்த்தாதிகரணம்.

புருஷார்த்தோ(அ)த: ஶப்தாதிதி பாதராயண: (ந. ச. க)

(சகக) அங்கிருந்து புருஷார்த்தம் (எய்துகின்றது), சுருதியுண்மையான்; இங்ஙனம் பாதராயணர் (கூறுகின்றனர்).

மூந்திய பாதத்திலே பரவித்தியாப்பிரகாரம் கூறப்பட்டது. ஈண்டு வித்தைக்கு உடன்றுணையாயுள்ள ஆச்சிரமதருமாதிகளை நிரூபிக்கும்பொருட்டு ஞானத்தினுலேதான் புருஷார்த்தம் என்று (சூத்திரகாரர்) காண்பிப்பாராயினர்.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் (தைத். உ. க)

"பிரமத்தை அறிபவன் பரமானந்தத்தை அடைகின்றுன்"

ஜ்ஞாத்வா ஶிவம் ஶாந்திமத்யந்தமேதி (சுவே. ச. கச)

"சிவத்தை அறிந்து அத்தியந்த உபசாந்தியை அடைகின்றுன்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் புருஷார்த்தம் ஞானத்தினுலேதான் எய்துகின்றதெனப் பகவானுகிய பாதராயணர் கொள்கின்றனர்.

சுருதி இருபிரகாரமாகக் காணப்படுதலின், அது கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம். (க)

(பூருவபக்ஷம்) வருமாறு.

ஶேஷத்வாத்புருஷார்த்தவாதோ யதா(அ)ந்யேஷ்விதி ஜைமினி: (ந. ச. உ)

(சஉ0) சேஷமுண்மையான், பிறவற்றிலே போலப் புருஷனைக்குறித்து (அது) அர்த்தவாதம்; இங்ஙனம் சைமினி கொள்கின்றனர்.

ஞானத்தினுற் புருஷார்த்தமில்லை; ஏதனுல்,

தத்த்வமஸி (சாந். சா. அ. எ)

"அது நீயாகின்றனை" என்றற்றொடக்கத்த சாமானுதிகரண (வாக்கியங்களாற்) கர்மங்களிற் கர்த்தாவாயுள்ளவனே பிரமமாம் என அறியப்படுதலான்; அந்த ஞானம் அதற்குச் சம்ஸ்காரமாய்க் கன்மத்துக்குச் சேஷமாயிருத்தலான். (ஞானத்துக்குப்) பலம் கூறுஞ் சுருதி (பூருவமீமாஞ்சை, ச, ந. க-ஆம் சூத்திர நியாயத்தினுல்) அர்த்தவாதமே. ஆகலின், புருஷார்த்தம் ஞானத்தினுல் எய்தவில்லை என்று சைமினியாசாரியர் கொள்கின்றனர். (உ)

ஆசாரத₃ர்ஶநாத் (௩. ௪. ௩)

(௫௨௧) (அது) ஆசாரமாகக் காணப்படலான்

(அதுபற்றி) ஆசாரமும் காணப்படுகின்றது.

யக்ஷ்யமாணோ வை ப₄க₃வந்தோऽஹமஸ்மி (சாந். ௫. ௧௧. ௫)

"பகவான்களே! நான் யஞ்ஞஞ் செய்யப்போகின்றேன்" என்று பிரமத்தை அறிந்த அசுவபதி கேகயர் என்பார் கூறுகின்றனர் என்பதினாற் கேகயர் முதலாகிய பிரமவித்துக்களுக்கும் கன்மம் பிரதானமாகப் புலப்படுகின்றது. அதனாலும், ஞானம் கன்மத்துக்கு அங்கமே. (௩)

தச்ச்₂ருதே: (௩. ௪. ௪)

(௫௨௨) அதற்குச் சுருதியுண்மையான்.

யதே₃வ வித்₃யயா கரோதி (சாந். ௧. ௧. ௧௦)

"ஞானத்தோடு ஒருவன் எதனைச் செய்கின்றானோ" என்னுஞ் சுருதி கொண்டே ஞானம் கன்மத்துக்கு அங்கமாகக் கூறப்படுதலின், கன்மத்துக்கு (ஞானம்) அங்கம். எவன் இதனைச் செய்கின்றானோ, அது ஞானத்தோடு செய்யப்படுகின்றதென்பதே சுருதியர்த்தம். (௪)

ஸமந்வாரம்ப₄ணாத் (௩. ௪. ௫)

(௫௨௩) ஒன்று சேர்ந்திருத்தலான்.

தம் வித்₃யாகர்மணீ ஸமந்வாரபே₄தே (பிரு. ௬. ௪. ௨)

"அவனை ஞானமும் கன்மமுந் தழுவுகின்றன" என்னுஞ் சுருதியினால் வித்தையும் கன்மமும் ஒரே புருஷனிடத்திற் சேர்ந்திருப்பனவாகக் காணப்படுகின்றது. ஆதலினாலும், ஞானம் கன்மத்துக்கு அங்கமே. (௫)

தத்₃வதோ விதா₄நாத் (௩. ௪. ௬)

(௫௨௪) அதனை (ஞானத்தை) உடையவனுக்கு விதியுண்மையான்.

ஆசார்யகுலாத்₃வேத₃மதீ₄த்ய யதா₂விதா₄நம் கு₃ரோ: கர்மாதிஶேஷேணாபி₄ஸமாவ்ருத்ய குடும்பே₃ ஶுசௌ தே₃ஶே ஸ்வாத்₄யாயமதீ₄யாநோ தா₄ர்மிகாந்வித₃த₄த் (சாந். ௮. ௧௫. ௧)

"விதிப்பிரகாரம் ஆசாரியர் குலத்திலே வேதாத்தியயனஞ் செய்து குருவுக்குச் செயப்படும் பணிவிடையினின்று நீங்கி, சுசிஸ்தானமாயுள்ள குடும்பத்திலே வேதாத்தியயனஞ் செய்து கொண்டு சற்புத்திரரைப் பெற்று" என்றற்றொடக்கத்த சுருதியினால், அர்த்த ஞானம் வரையும் வேதத்தைப் படிப்பவனுக்குக் கன்மம் விதிக்கப்பட்டிருக்கின்றது. அதனாலும், ஞானம் கன்மத்துக்கு அங்கமாம். (௬)

நியமாச்ச (ந. ச. எ)

(சஉரு) நியமமுண்மையான்.

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதஸமா: (ஈசா. உ)

"ஈண்டுக் கன்மங்கள் செய்துகொண்டே ஒருவன் நூறு வருஷம் சீவிக்க விரும்பவேண்டும்" எனப் (பரம) ஆன்மாவை அறிந்தவன் கன்மங்களுக் குத் தன் ஆயுளைச் செலுத்தவேண்டும் என்று நேரே நியமிக்கப்பட்டிருக் கின்றது. இதனாலும், ஞானம் கன்மத்துக்கு அங்கமாம். ஆகலின், புருஷார்த்தம் இன்றாமெனின், (எ)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

அதிகோபதேசாத்து பாதராயணஸ்யைவம் தத்தர்சநாத்। (ந. ச. அ)

(சஉசு) அதிகரை உபதேசித்தமையாற் பாதராயணரது (கருத்து உறுதியானது); அது காணப்படுகின்றமையான்.

ஞானம் கன்மத்துக்கு அங்கமன்று. பின்னையோ, ஞானத்தினாலே தான் புருஷார்த்தம் என்னும் பாதராயணர் மதமே யுக்தம்; கர்த்தாவாகிய பிரத்தியக்கான்மாவுக்கு வேறாயுள்ளதே அறியற்பாலதெனக் கூறப்படலான்.

பஹுஸ்யாம் ப்ரஜாயேய (சாந். சு. உ. ந)

"நான் அநேகமாக ஆவேனாக"

ஸ காரணம் கரணாதிபாதிப: (சுவே. சு. கூ)

"அவர் காரணம், கரணங்களின் அதிபர்க்கு அதிபதி"

விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (தைத். ஆரணி. கo. கஉ. உஅ)

"விசுவாதிகராகிய உருத்திரர் மகர்ஷி" என்றற்றொடக்கத்த வாக்கியங்களில் அறியற்பாலதாகிய பிரமத்துக்கு ஆதிக்கியம் காணப்படுகின்றது. ஆகலின், ஞானம் கன்மத்துக்கு அங்கமன்று. (அ)

ஆசாரம் காட்டுகின்றதென்றமைபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

துல்யந்து தர்சநம் (ந. ச. கூ)

(சஉஎ) ஆயின் துல்லியமாயுள்ளது சுருதி.

கேவலம் கன்மத்துக்கன்றி ஞானத்துக்கே பிரதானமென்று ஆசாரமுந் துல்லியமாய்க் காட்டுகின்றது.

ஏதத்த ஸ்ம வை தத்வித்வாம்ஸ ஆஹுர்ருஷய: காவஷேயா: கிம் அர்தா வயமத்யேஷ்யாமஹே கிமர்தா வயம் யக்ஷ்யாமஹே கிம் ப்ரஜயா கரிஷ்யாமஹ:।

"அவரை அறிந்த காவஷேய விருஷிகள் இதனைக் கூறினர்:— எதற்காக நாங்கள் படிப்பேம்? எதற்காக யாகஞ் செய்வேம்? சந்ததியைக் கொண்டு யாது செய்வேம்?" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரமத்தை அறிந்தவர்களுக்குக் கன்மத் தியாகம் காணப்படுகின்றதன்றோ. பலத்தை விரும்பாது செய்யும் கன்மம் ஞானத்துக்கு அங்கமென அநுட்டித்து, பலத்தை நோக்கிச் செய்யும் கன்மத்தை ஒழித்தல் வேண்டும் எனல் விரோதமின்மையான், கன்மமே ஞானத்துக்கு அங்கம் என்றமைகொண்டு ஞானம் பிரதானமே. (௯)

யதேவ வித்யயா (சாந். ௧. ௧. ௧௦)

"எதனை ஞானத்தோடு (செய்கின்றானோ)" என்னுஞ் சுருதிபற்றிச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

அஸார்வத்ரிகீ (சூ. ௪. ௧௦)

(சூஉ அ) எல்லாவற்றையுமின்று.

யதேவ வித்யயா கரோதி (சாந். ௧. ௧. ௧௦)

"எதனை ஒருவன் ஞானத்தோடு செய்கின்றானோ" என்னுஞ் சுருதியினால், வித்தையானது (கர்மாங்கமென்று) எல்லாவற்றையும் (எல்லாவித்தையையும்) கூறவில்லை, பிரசித்தமாயுள்ள வித்தையைப்பற்றி (அச்சுருதி) யுண்மையான்; பிரசித்தமாயுள்ளதும் உற்கீதவித்தையைப் பற்றியதே.

யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம்।

(சாந். ௧. ௧. ௧௦)

"எதனை ஒருவன் ஞானத்தோடு செய்கின்றானோ, அதுதான் அதிவீரியமுடைத்து" என்னுஞ் சுருதியினால், பிரகிருத உற்கீத வித்தையானது தன்னோடியைந்த கன்மத்தை அதிவீரியமுடையதாகச் செய்தற்குச் சாதனமாயுள்ளது என்று விதிக்கப்படுகின்றது. ஆகலின், ஞானம் கன்மத்துக்கு அங்கமாகவில்லை.

தம் வித்யாகர்மணீ (பிரு. ௬. ௪. ௨)

"அவனை ஞானமும் கன்மமுந் (தழுவுகின்றன)" என்னுஞ் சுருதிபற்றிச் சூத்திரகாரர் சொல்கின்றனர். (௧௦)

விபாகஶ்ஶதவத் (சூ. ௪. ௧௧)

(௪௨௯) பிரிவு நூற்றிற் போல.

வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே (ப்ரு. ௬. ௪. ௨)

"(அவனை) ஞானமும் கன்மமுந் தழுவுகின்றன" என்றவிடத்து, ஞானமும் கன்மமும் வெவ்வேறு பயனைக் கொடுப்பனவாக, "ஞானம் தன் பயனைக் கொடுப்பதற்கு (ஆன்மாவைச்) சேர்கின்றது; கன்மந் தன் பயனைக் கொடுப்பதற்கு (ஆன்மாவைச்) சேர்கின்றது எனப் பிரிவு எய்துகின்றது; நிலத்தையும் இரத்தினத்தையும் விற்றமையால் இருநூறு (கிடைத்தது) என்றவிடத்து, நிலத்துக்கு நூறும் இரத்தினத்துக்கு நூறுமாம் என ஓர் விபாகம் எய்துவது போல. (௧௧)

அத்யயநமாத்ரவத: (௩. ௪. ௧௨)

(௪௩௦) அத்தியயனமாத்திரமுடையனுக்கு.

வேதமதீத்ய

"வேதாத்தியயனஞ் செய்து" என்னுஞ் சுருதி அத்தியயனமாத்திரமுடையவனுக்கே கன்மத்தை விதித்தலால், ஞானம் கன்மத்துக்கு அங்கமன்று. அத்தியயனவிதியும் வேதத்தைப் படித்தலிலேமாத்திரம் முற்றுகின்றது. (இந்த விதியை) அர்த்தஞானம் வரையும் கொண்டாலும், வித்தை என்பது அதற்கு வேறுபட்டதாயிருக்கின்றது. "அவன் உபாசிக்க" என்னுமிடத்து விதிக்கப்பட்ட உபாசனையானது ஒன்றைப்பற்றி அன்பினாலாகும் ஆவிருத்தியின் மேற்று. ஆகலின், இது எவ்விடத்தும் அங்கமாகாது. (௧௨)

நாவிஶேஷாத் (௩. ௪. ௧௩)

(௪௩௧) (அங்ஙனம்) இல்லை, விசேஷமின்மையான்.

குர்வந்நேவேஹ கர்மாணி (ஈசா. ௨)

"ஈண்டுக் கன்மங்களைச் செய்துகொண்டே" என்னுஞ் சுருதியில், வித்துவானுடைய சீவியகாலமுழுமையும் சுவதந்திர கன்மத்துக்காகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதற்கு விசேஷ ஏது யாதும் காணப்படவில்லை.

ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம் (ஈசா. ௧)

"ஈசராலே இவையெல்லாம் காக்கப்படுகின்றன" என்னும் வித்தியாப்பிரகரணத்தினாலும் ஞானத்துக்கு அங்கமாயுள்ளது இந்தக் கன்மம் என அறியப்படுகின்றது. ஆகலின், ஞானம் கன்மத்துக்கு அங்கமன்று. (௧௩)

ஸ்துதயேऽநுமதிர்வா (௩. ௪. ௧௪)

(௪௩௨) இன்றேல், (ஞானத்தின்) ஸ்துதிக்காக அநுஞ்ஞை.

எப்போதும் கன்மங்களைச் செய்தாலும், ஞான மான்மியம்பற்றி அவைகளாற் றொடக்குறுவானல்லன் என்பது வாக்கியசேஷம். ஆகலின், ஞானமே பிரதானம். (கச)

காமகாரேண சைகே (ந. ச. கரு)

(௩௩௩) இச்சை காரணவாயிலாகச் சிலரும் (கன்மத்தை விடவேண்டும் என்பர்).

கிம் ப்ரஜயா கரிஷ்யாம: (பிரு. சு. ச. உஉ)

"புதல்வரைக்கொண்டு யாது செய்வேம்" என்றற்றொடக்கத்தவற்றால், இச்சை மிகுதியினாற் கிரகஸ்தாச்சிரமத்தை வித்துவான் ஒழிக்கலாம் எனச் சிலர் சொல்லுவர். ஆதலினாலும், ஞானம் பிரதானமாகத் தோன்றுகின்றது. (கரு)

உபமர்த்தம் (ந. ச. கசு)

(௩௩௪) அழிவும்.

க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே।

(முண். உ. உ. அ)

"உயர்வும் தாழ்வுமாயுள்ள அவர் காணப்படுங்கால், அவனுடைய கன்மங்களும் அழிந்துபோகின்றன" என்னுஞ் சுருதி பற்றி, ஞானத்தினால் எல்லாக் கன்மங்களும் அழிகின்றன எனச் சிலர் படிக்கின்றனர். ஆகலின், கன்மம் பிரதானமன்று. (கசு)

ஊர்த்வரேதஸ்ஸு ச சப்தேஹி (ந. ச. கஎ)

(௩௩௫) (ஞானம்) ஊர்த்துவரேதசுடையாரிடத்துக் (காணப்படுகின்றது); சுருதியினுமன்றோ (அவை கூறப்படுகின்றன).

ஊர்த்துவரேதசையுடைய ஆச்சிரமிகளினும் ஞானம் காணப்படலானும், அவருக்கு அக்கினி ஹோத்திரமுதலிய செய்யக் கூடாமையானும் ஞானம் கன்மத்துக்கு அங்கமாகாது. அங்ஙனம்

த்ரயோ தர்மஸ்கந்தா: (சாந். உ. உ௩. க)

"மூன்று தரும ஸ்கந்தங்கள்" என வேதத்திலே தருமத்தைப் பற்றிய மூவகை ஆச்சிரமங்களே கூறப்படுகின்றன. ஆகலின், ஞானந்தான் புருஷார்த்த ஹேதுவாய்ப் பிரதானமாகிப் பலத்தை நோக்காத விகிதகன்மங்களைத் தனக்கு அங்கமாகக்கொண்டுளதாம் என்று கூறுவதே முடிவு. (கஎ)

(உ) பராமரிசாதிகரணம்.

பராமர்சம் ஜைமினிரசோதநா சாபவததி ஹி (ங. ச. கஅ)

(சஙக) விதியின்மையாற் பராமரிசம் (என்று) ஜைமினி (கொள்கின்றனர்); சுருதியும் மறுக்கின்றதன்றோ.

"மூன்று தரும ஸ்கந்தங்கள்" என்னுஞ் சுருதியினல் மூவகை ஆச்சிரமங்களே தர்மத்துக்கு ஆதாரமென மேலே அதிகரணத்திற் கூறப்பட்டது. ஆகலின், நான்காவது ஆச்சிரமம் உளது என்பது பற்றிச் சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

த்ரயோ தர்மஸ்கந்தா: (சாந். உ. உங. க)

"மூன்று தரும ஸ்கந்தங்கள்" என்றற்றொடக்கத்தவற்றிலே நான்காவது ஆச்சிரமவிதியின்மையான்,

ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி।

(பிரு. ௬. ச. உஉ).

"அந்தப் (பிரம) லோகத்தை விரும்பித் துறவிகள் தங்கள் வீடுகளைத் துறக்கின்றார்கள்" என்றற்றொடக்கத்த சுருதியினுற் கூறப்பட்ட நான்காவது ஆச்சிரமவசனம் உபாசனையின் ஸ்துத்தியர்த்தவாதமே என்று சைமினி கொள்கின்றனர்.

வீரஹா வா ஏஷ தேவாநாம் யோऽக்நிமுத்வாஸயதே।

(யசுர். வே. க. ரு. உ. ௬)

"அக்கினியைத் தவிர்ப்பவன் தேவர்களின் புதல்வனைக் கொல்பவனே" எனச் சுருதியும் நான்காவது ஆச்சிரமத்தைத் தவிர்க்கின்றது; அக்கினி கோத்திரத்தை விடுதலாற் பெருந் தீமை விளைகின்றது. அதுபற்றி அதனை விடுதலால் எந்த ஆச்சிரமத்தையும் பிரவேசிக்கக் கூடாதெனக் கொள்ளப்படுமாம் எனின், (கஅ)

(சித்தாந்தம்) வருமாறு.

அநுஷ்டேயம் பாதராயண: ஸாம்யஸ்ருதே: (ங. ச. கக)

(சஙஎ) பாதராயணர் (கொள்ளுமாறு) அநுஷ்டிக்கற்பாற்று; சுருதி சமானமாகச் (சுட்டுதலான்).

கிரகஸ்தாச்சிரமமுதலியபோல, மற்ற ஆச்சிரமமும் அநுஷ்டிக்கற்பாற்றென்பது பகவானுகிய பாதராயணர் மதம்.

த்ரயோ தர்மஸ்கந்தா: (சாந். உ. உங. க)

ஏதமேவ ப்ரவ்ராஜினோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி।

(பிரு. ௪. ௪. ௨௨)

"மூன்று தருமஸ்கந்தங்கள்; அந்தப் (பிரம) லோகத்தை விரும்பித் துறவிகள் தங்கள் வீடுகளைத் துறக்கின்றார்கள்" எனச் சுருதியும் ஆச்சிரமங்கள் அனைத்தையும் சமமாகக் கூறுகின்றமையால், அக்கினியைத் தவிர்க்கும் தோஷம் கிரகஸ்தாச்சிரமவிஷயத்திலேதான். ஆகலின், நான்காவது ஆச்சிரம தருமம் உள்ளது. (௧௧)

விதிர்வா தாரணவத் (௩. ௪. ௨௦)

(௪௩௮) இன்றேல் ஒரு விதி; கொண்டு போதலிற் போல.

உபரி ஹி தேவேப்யோ தாரயதி।

"தேவர்களுக்காக அவன் அதனை மேலே கொண்டுபோகின்றான்" என்று, எந்தவிடத்தினும் விதிக்கப்படாதிருக்க, (தேவர்களுக்கு மேலே இந்தனத்தைக் கொண்டுபோதல்) விதிக்கப்பட்டிருத்தல் போல, இவ்விஷயத்து விதியுமாம். இன்றேல்

ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய க்ருஹீ பவேத் க்ருஹீ வா வனீ பூத்வா ப்ரவ்ரஜேத் (ஜாபாலம்)

"பிரமசரியத்தை முடித்துக் கிரகஸ்தாச்சிரமியாதல்வேண்டும்; கிரகஸ்தனாயாவது வானப்பிரஸ்தனாயாவது இருந்து துறவு செய்தல் வேண்டும்" என ஜாபாலசுருதியிற் பிரத்தியக்ஷமாக விதி இருக்கின்றது. இந்தக் கிரமத்தில் நியமமில்லை;

உத்ஸன்னாக்னிரனக்னிகோ வா யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத் (ஜாபாலம்)

"அக்கினியை விட்டேனும், அக்கினியை மூட்டாதேனும், எந்தத் தினத்தில் விரக்தியுண்டாயிற்றோ, அந்தத் தினத்திலே துறவு செய்க" எனச் சுருதியுண்மையான். முற் செனனங்களில் ஈட்டிய புண்ணியபரிபாகத்தினால், அந்தக்கரணங்கள் சுத்தமாயிருக்கப்பெற்ற ஒருவன் பிரமசரியத்தில் இருந்தவாறே துறவு செய்யலாம்.

ருணானி த்ரீண்யபாக்ருத்ய மனோ மோக்ஷே நிவேசயேத்।

அனபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமானோ வ்ரஜத்யத:।

(மனுஸ்மிருதி, ௬. ௩௫)

"முக்கடன்களையும் இறுத்தே ஒருவன் மனசை முத்திக்குச் செலுத்தல் வேண்டும்; கடன்களை இறுக்காது மோக்ஷத்தை விரும்புவோன் அதோ

கதி அடைகின்றனன்" என்னும் வாக்கியம் உலகத்தை வெறுக்காதோன் மேற்று.

வீரஹாவா ஏஷ தெவாநாம் யொ௨ஃநி முதவாஸயதெ|

(யசுர். வே. க. ரு. உ. ௯)

"அக்கினியை விடுப்பவன் தேவர்களின் புதல்வனைக் கொல்பவனே" என அக்கினியை விடுத்தல் கூடாதென நிஷேதித்தலான், துறவை அடைதல் பிரமசரியத்தினின்றே நிகழ்தல்வேண்டும் என்றும், கிரகஸ்தாச்சிரமத்திற் புகுந்தபின் அன்றும் என்றும் சிலர் கூறுவர். அங்ஙனமாயின்,

வநீ ஹூலா ப்ரவ்ரஜெத் (ஜாபாலம்)

"வானப்பிரஸ்தனாகி அவன் துறவு செய்க"

உஸ்வஸநாநி ரநநிகொ வா யதஹரெவ விரஜெத்தஹரெவ ப்ரவ்ரஜெத் (ஜாபாலம்)

"அக்கினியை விட்டேனும், அக்கினியை மூட்டாதேனும், எந்தத் தினத்தில் விரத்தி யுண்டாயிற்றோ, அந்தத் தினத்திலே துறவு செய்க" என்னும் விதிகள் வியர்த்தமாய்விடும். ஆகலின், பிரமசரியத்திருந்துதான், வானப்பிரஸ்தத்திலிருந்துதான் துறவு செயல் வேண்டும் என்று நிர்ப்பந்தமில்லை. அக்கினி கொண்டும் கொள்ளாமலும் உள்ள ஆச்சிரமம் இரண்டேயாம்; அவற்றுள்ளே பிரமசாரியும் துறவியும் அக்கினி கொள்ளாதவராவர்; கிரகஸ்தனும் வானப்பிரஸ்தனும் அக்கினிகொள்பவராவர்; அக்கினியை மூட்டிப் பின் அதனை விடுத்துத் துறப்பவனினும் பிரமசரியத்தினின்றவாறு துறப்பதுதான் முக்கியம் என்பதே பிரமசரியத்தினின்றே துறக்கவேண்டுமென்பவரின் அபிப்பிராயம். இங்ஙனம் பொருள் கொள்ளாக்காற் சுருதி விரோதமுறும். ஆகலின், எல்லா ஆச்சிரமதருமங்களும் சித்தித்தன. (௨0)

(௩) ஸ்துதிமாத்திராதிகரணம்.

ஸ்துதிமாத்ரமுபாதாநாதிதி செந்நாபூர்வத்வாத்|

(௩. ச. ௨௧)

(சரு௩) (யஞ்ஞ கன்மங்களை) யுற்றிருத்தலான் அவை ஸ்துதி மாத்திரம் எனின்; அன்று, அவை புதியவாதலின் (அபூர்வமாதலின்).

ஓமித்யெதத‌க்ஷரமுத்கீதமுபாஸீத (சாந். க. க. க)

"ஒருவன் உற்கீதம் எனப்படும் ஓம் என்னும் அக்ஷரத்தைத் தியானிக்க" என்று தொடங்கி,

ஸ ஏஷ ரஸாநாம் ரஸதம: பரம: பரார்த்ய: அஷ்டமோ யது௱்கீத: (சாந். ௧. ௧. ௩)

"அந்த உற்கீதம் இரசங்களுளெல்லாஞ் உத்தமமாயும், எட்டாவதாகிய உயர்ந்த தானத்தைப்பற்றி உயர்ந்ததாயும்" எனப் போந்த இவ்வியல்பினவாய உதாரணங்களில், உற்கீதமுதலியவற்றின் தியானம் இரசங்களுளெல்லாஞ் சிறந்ததாக விதிக்கப்படுகின்றதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இரசங்களுளெல்லாம் சிறந்ததாக உற்கீதமுதலியவற்றின் தியானம் விதிக்கப்படவில்லை. ஆயின்,

இயமேவ ஜுஹூ: ஸ்வர்கோ லோக ஆஹவநீய: |

"இதுதான் (பூமிதான்) சட்டுவம்; சுவர்க்கலோகம் ஆகவநீயம்" என்னும் வாக்கியங்களிற்போல, யஞ்ஞகன்மங்களுக்கு அங்கங்களாகிய உற்கீதமுதலியவற்றைக் குறித்து, இரசத்தில் இரசமாகச் சிறந்தது என்றதும் ஸ்துதிமாத்திரமாம் எனின்,

(சித்தாந்தம்) அன்று; அவை அபூர்வமாதலின். அவை ஸ்துதிமாத்திரங்களன்று; பின் இரசங்களுளெல்லாஞ் சிறந்ததாகவுரைத்த உற்கீதாதி தியானம் விதிக்கப்பட்டதொன்றே; அவை அபூர்வமாதலின். ஆகலின், சட்டுவமுதலியவாகக் கூறப்பட்ட நியாயம் ஈண்டு அடாது; சட்டுவமுதலியவற்றிற்போல உற்கீதாதி விதி சந்நிதியில் இல்லையாதலின். ஆகலின், இரசங்களுளெல்லாம் இரசமாகிய உற்கீதமுதலியவற்றின் தியானம் விதிக்கப்பட்டதேயாம். (௨௧)

பாவஶப்தாச்ச (௩. ௪. ௨௨)

(௪௪௦) விதிசப்தமுண்மையானும்.

உத்கீதமுபாஸீத (சாந். ௧. ௧. ௧)

"ஒருவன் உற்கீதத்தைத் தியானிக்க" என்னுமிடத்தில் விதிசப்தம் கேட்கப்படுகின்றது. இந்நியாயத்தினாலும் இரசங்களுளெல்லாஞ் சிறந்ததாக உற்கீத முதலியவற்றின் தியானத்துக்கு ஓர் விதி உண்டு. (௨௨)

(௪) பாரிப்பிலவாதிகரணம்.

பாரிப்லவார்தா இதி சேந்ந விஶேஷிதத்வாத் (௩. ௪. ௨௩)

(௪௪௧) பாரிப்பிலவ உபயோகத்துக்காக (அவைதாம்) (உரைக்கப்படுகின்றன) எனின், அன்று; அப்படிப்பட்டன விசேஷிக்கப்படுதலின்.

ப்ரதர்தநோ ஹ வை தைவோதாஸிரிந்த்ரஸ்ய ப்ரியம் தாமோபஜகாம யுத்தேந பௌருஷேண ச (கௌஷீ. ௩. ௧)

"திவோதாசன் குமாரனாகிய பிரதர்த்தனன் என்பான் யுத்தம் பௌருஷம் என்பன காரணமாக உண்மையாய் இந்திரனுடைய இனிய இல்லத்துக்கு வந்தான்" என உபநிடதங்களில் அந்தந்த வித்தைகளின் முதற்கண்ணே கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை பாரிப்பிலவத்தின் பொருட்டா? இன்றேல் உபாசனா ஸ்துதிபொருட்டா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பாரிப்பிலவத்தின் பொருட்டே அசுவமேதயாகத்திலே அரசனைக் குடும்பத்தோடிருக்கச் செய்து, அத்துவரியுவினாலே அவன் சமுகத்தில் வைதிகக் கதைகள் கூறற்பாலன.

வாரிப்லவமாசக்ஷீத (ஆசுவலாயன சிரௌதசூத்திரம். க௦. சு. க௦)

"அவன் பாரிப்பிலவத்தைச் சொல்க" என்னும் விதியினாற் பாரிப்பிலவம் என்னும் கர்மம் விதிக்கப்பட்டது;

ஸவாண்யாக்யாநாநி வாரிப்லவே ஶஂஸந்தி।

(ஆசுவலாயன சிரௌதசூத்திரம். க௦. சு. க௦)

"பாரிப்பிலவத்தில் எல்லாக் கதைகளையும் அவர்கள் கூறுகின்றனர்" எனக் கூறப்படலான், உபநிடத ஆரம்பத்திலே நேரும் கதைகள் பாரிப்பிலவத்தின் பொருட்டேயாம் எனின்,

(சித்தாந்தம்) "விசேடிக்கப்படுதலின்" (என்று சூத்திரகாரர் கூறுகின்றமையின்) அவைகள் பாரிப்பிலவத்தின் பொருட்டன்று;

ப்ரயமே'ஹநி ஸநுவெவஸ்வதோ ராஜா ஜ்விதீயெ'ஹநி யமோ வெவஸ்வதோ ராஜா (ஆசுவலாயன சிரௌத சூத்திரம். க௦. எ. க, உ)

"முதற்றினத்திலே விவஸ்வான் குமாரனாகிய மனு என்பான் அரசனாயிருந்தமையும், இரண்டாம் தினத்தில் விவஸ்வான்குமாரனாகிய யமன் அரசனாயிருந்தமையும் (கூறப்படல் வேண்டும்)" என்றற்றொடக்கத்தவற்றால், பாரிப்பிலவத்துக்குரிய கதைகள் விசேடிக்கப்பட்டமையான். (உங)

உபநிடதங்களிலே நேரும் கதைகள் அடுத்துப்போதரும் உபாசனாவிதிகளோடு ஏகவாக்கியமாயிருத்தலான், அவை உபாசனைகளைத் துதித்தலின் பொருட்டாம் என்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

தயாசெவகவாக்யொவவய௦யாத் (ங. ச. உச)

(சசஉ) **அந்தப் பிரகாரம் அவை ஏகவாக்கியமாகப் பொருந்தப்பட்டிருத்தலான்.**

ஸோ'ரோதீத் (யசுர். வே. க. இ. க. க)

"அவன் அழுதான்" என்றற்றொடக்கத்த கதைகள் எங்ஙனம் யஞ்ஞ கன்ம விதிகளோடு ஒன்றாய் இயைந்து நிற்கின்றனவோ, அங்ஙனம் இக்கதைகளும்

உபாசனுவிதிகளோடு ஏகமாய் இயைந்து உபாசனைகளைத் துதிக்கும்பொருட்டே உள்ளன. (௨௪)

(௫) அக்கினீந்தநாத்தியதிகரணம்.

அத ஏவ சாக்நீந்தநாத்யநபேக்ஷா (௩. ௪. ௨௫)

(௪௪௩) ஆகலின், அக்கினி யாதான முதலியவற்றுக்கு அபேக்ஷை இன்று.

மேலை அதிகரணத்தில் இறுதி ஆச்சிரமமுளதாகக் கூறப்பட்டது.

வித்தைக்குச் சாதனமாக அக்கினி யாதானம் ஆவசியகமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) கன்மம் ஞானத்துக்கு அங்கமாக விதிக்கப்பட்டமையான், வித்தையையுடைய துறவிகளும் வித்தைக்கு அங்கமாக யஞ்ஞாக்கினி முதலியவற்றை அநுட்டித்தல் சால்பாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அவர்களுடைய வித்தையானது யாகாக்கினி யாதான முதலியவற்றை அபேக்ஷிக்கவில்லை;

ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி।

(பிரு. ௬. ௪. ௨௨)

"அந்தப் (பிரம) லோகத்தை விரும்பித்துறவிகள் வீடுகளைத் துறக்கின்றார்கள்" என்றற்றொடக்கத்த சுருதியானது கன்மத்தை விடுத்தே வித்தையைப் பெற்றார் என அறிவுறுத்துகின்றமையின். ஆகலின், தமது ஆச்சிரமத்துக்குரிய தருமங்களைச் செய்வதில் அபேக்ஷையுடையது அவர்கள் வித்தை; அவர்களுக்கு அக்கினியை வளர்த்தன்முதலிய பொருந்தாமையின். (௨௫)

(௬) சர்வாபேக்ஷாதிகரணம்.

ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத் (௩. ௪. ௨௬)

(௪௪௪) யார்க்கும் அபேக்ஷை உண்டு; யஞ்ஞ கன்மமுதலியவைகளை விதிக்கும் சுருதியுண்மையான், குதிரை விஷயத்திற் போல.

மேலை அதிகரணத்தில் இறுதி ஆச்சிரமத்தார்க்குரிய வித்தைக்குப் பொருந்தாமையான், அது அக்கினி யாதானத்தை அபேக்ஷிக்கவில்லை என நிரூபிக்கப்பட்டது.

இப்போது கிரகஸ்தாச்சிரமவிஷயத்திலே வித்தை கன்மத்தை அபேக்ஷிக்கின்றதா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இங்ஙனமாகக் கிரகஸ்தர் விஷயத்திலும் யஞ்ஞாக்கினி யாதானமாகிய கன்மத்தை வித்தை அபேக்ஷியாது என்பேம். அது அந்தி

ஶ்ரமிகள் விஷயத்திற் சேராமையான், கன்மம் வித்தைக்கு அங்கமாக மாட்டாது. ஐயத்துக்கிடனுய வித்தையானது தனக்கு அங்கமாயுள்ள கன்மத்தை அபேக்ஷிக்கும், அங்கியாதலின்; பிரயாஜைமுதலியன தரிசம் பூரணமாச முதலியவைகளுக்கு (உதவுதல்) போல என்பது அனுமானம். ஈண்டு அக்கினியாதான முதலிய கன்மம் வித்தைக்கு எங்ஙனம் அங்கமாகும்? பிரயாஜை முதலிய (தரிசத்துக்கு) உதவுதல் போல, (வித்தைக்குப்) பலோபகாரியாயுள்ளதா? இன்றேல் உமியைப்போக்குதன்முதலிய தரிசத்துக்கு உபகாரமாதல் போல (ஆதானம் வித்தைக்குச்) சொரூபோபகாரியாயுளதா? முதற்கட் கூறியபிரகாரம் இருக்கமாட்டாது; கன்மத்தின்பயனுயிருப்பின், முத்தி அநித்தியமாய்விடும். பிந்தியதாயின் தரிசத்துக்கும் பிரயாஜைக்கும் அப்படிப்பட்ட சம்பந்தமில்லாமையால் திருஷ்டாந்தம் தவறுபடும். ஆகலின், கன்மம் ஞானத்துக்கு அங்கமாகாது. அதுபற்றிக் கிரகஸ்தர்விஷயத்தினும் ஞானமானது கன்மத்தை அபேக்ஷிந்திலது எனின்,

(சித்தாந்தம்) யஞ்ஞுகன்மங்களைச் செய்யவேண்டியவராகிய கிரகஸ்தர் விஷயத்திலே அக்கினிகோத்திரமுதலிய சமஸ்த கன்மங்களை ஞானம் அவாவிற்று;

𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾𑌽𑌨𑌾𑌶𑌕𑍇𑌨 (பிரு. ௬. ௪. ௨௨)

"பிராமணர் வேதாத்தியயனத்தினுலும், யஞ்ஞத்தினுலும், தானத்தினுலும், தவத்தினுலும், விரதத்தினுலும் அவரைஅறிகின்றுர்கள்" எனச்சுருதி கூறுதலானும், யாகாதிகளும் சிவபெருமானுல் நியோகிக்கப்பட்டிருத்தலானுமாம். குதிரை கமனத்துக்குச் சாதனமாயிருந்தாலும், அது கமனத்துக்கு உடுப்பு முதலியவற்றை வேண்டிநிற்றல்போல, ஞானம் கன்மத்தை அபேக்ஷிக்கும். பலத்தை அபேக்ஷியாது செய்யப்படும் கன்மமானது ஞானத்துக்குச் சொரூப உபகாரமாகி அங்கமாயிருத்தலின், முத்திபலம் அந்தக் கன்மத்தினுல் எய்தவில்லை. ஆனுல் சாக்ஷாத்தாக ஞானபலமேமோக்ஷம்; ஆதலின், கிரகஸ்தர் விஷயத்தில் ஞானம் யஞ்ஞமுதலிய கன்மங்களை அபேக்ஷிக்கின்றது. எல்லா ஆச்சிரமிகளுக்கும் அவ்வவர் ஆச்சிரமத்துக்குரிய கன்மங்களோடு ஞானம் இசைந்திருக்கவேண்டும். ஆகலின், வித்தை கன்மத்தோடு சேர்ந்திருக்கவேண்டும் என்பது யுக்தம். (௨௬)

(௭) சமதமாத்யதிகரணம்.

𑌶𑌮𑌦𑌮𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍇𑌸𑍍𑌤𑌦𑌙𑍍𑌗𑌤𑌯𑌾 𑌤𑍇𑌷𑌾𑌮𑌵𑌶𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 (௩. ௪. ௨௭)

(௪௪௫) மேலும் (அவன்) சமம் தமமுதலியவற்ருேடு இயைந்திருத்தல் வேண்டும்; அவைகள் விதிக்கப்பட்டபடி யாலும், அதற்கு அங்கங்களாதல்பற்றி அவை அவசியம் அநுஷ்டிக்கப்படல்வேண்டுமாதலினுலும்.

ஶாந்தோ தாந்த உபரத ஸ்திதிக்ஷு ஸமாஹிதோ பூத்வாத்மந்யேவாத்மாநம் பஶ்யேத் (பிரு. ௬. ௪. ௨௩)

"சாந்தமும், தாந்தமும், உபரதியும், பொறுதியும் இயைந்தவனுய் அவன் ஆன்மாவில் (பரம) ஆன்மாவைப் பார்க்கவேண்டும்"

ஶ்ரத்தாபக்திந்யாநயோகாதவேஹி (கைவ)

"சிரத்தையினுலும் பத்தியினுலும் தியானத்தினுலும் நீ அறிநி" என்றற்ருெடக்கத்த வாக்கியத்தினல், வித்தையானது சமை முதலிய சம்பத்தினை அபேக்ஷிப்பதாகக் கேட்கப்படுகின்றது.

கிரகஸ்தாச்சிரமிகளுக்குச் சமைமுதலிய சம்பத்தி எய்துமா? அன்ரு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) யஞ்ஞாதியோடியைந்தமையால் வெகுவியாபாரவியாகுலங்களையுடைய அவர்களுக்கு, அந்த உபரதிரூபமாயுள்ள சமதமாதிசம்பத்தி எய்தமாட்டாதெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. கிரகஸ்தன் விஹிதகன்மங்களில் வியாபரித்துக்கொண்டிருப்பவனுயினும், நிஷித்தகாமியாதிகன்மங்களில் வியாபாரரஹிதனுய்ச் சாந்திமுதலியவற்றையுடையனுயிருத்தல்வேண்டும்;

ஶாந்தோ தாந்த: (பிரு. ௬. ௪. ௨௩)

"சாந்தம் தாந்த" முதலியவற்றுனும்,

ஶ்ரத்தாபக்திந்யாநயோகா தவேஹி (கைவ)

"சிரத்தா பக்தி தியானயோகத்தினல் அறிகுதி" என்றற்ருெடக்கத்தவற்றுனும், சமைமுதலியன விதிக்கப்பட்டமையால், வித்தையை அடையும் பொருட்டு, அவை அங்கங்களாக அவசியம் கோடற்பாற்றுமாதலினுலுமாம். உள்ளுணர்ச்சிகளாகிய ராகத் துவேஷமுதலியவற்றை அடக்குதலே சமம்; விதிக்கப்படாத வியாபாரங்களிலிருந்து இந்திரியங்கள் அனைத்தையும் திருப்புவதே தமம்; நிஷித்தகாமிய கன்மவியாபாரத்திருந்து நீங்குதலே உபரதி; துவந்துவங்களைச் சகிப்பதே திதிக்ஷை; காமாதிதடைகளிலிருந்து நீங்கினவனுய்ப் பரத்தை நோக்குதலே சித்தத்தின் சமாதானம்; புருஷார்த்தமில்லாத சகல இதர சாஸ்திரங்களிலே பராமுகமாய்ப் பரவித்தியாமயமாகிய பரமான்ம தந்திர உபசிடத கோஷ்டியிலே மிகுந்த ஆசைகொண்டிருக்கின்ற சத்துவ

கலேயே சிரத்தை; சகல இதர தேவதா பூஜையிற் பற்றின்றி மூவித கரணங்களோடு அடையற்பாலதாய் விசிஷ்டமாயுள்ள அஷ்டாங்கங்களோடு இயைந்து சிவபெருமானுக்குத் தொண்டுசெய்தலாகிய வைதிகக் கிரியையே பக்தி; பரமானந்தாவேசமாகிய மகாமோக்ஷலட்சுமியைத் தரிசிக்கவேண்டும் என்னும் (ஆசையின்) வேகமே முமுட்சுத்துவம்; வைராக்கியமுடையனாய், இம்மை மறுமை இன்பங்களிலே நொதுமலனாய், நித்தியாநித்தியங்களை நிச்சயிக்கும் விவேகமுடையனாயுள்ள அவனாலே சமை தமை முதலியன அடைதல்வாயிலாக, இந்த மோக்ஷ இச்சை எய்துகின்றது. இந்த விவேகமுதல் முமுக்ஷை இறுதியாயுள்ள பரதருமங்கள் வித்தையின்பொருட்டு எல்லா ஆச்சிரமிகளாலும் விசேஷமாக அநுஷ்டிக்கற்பாலனவாம். (௨௭)

(௮) சர்வாந்நாநுமத்யதிகரணம்.

ஸர்வாந்நாநுமதிஶ்ச ப்ராணாத்யயே தத்தர்ஶநாத் (௩. ௪. ௨௮)

(௪௪௩) பிராணனுக்கு மோசம் வருங்கால் எவ்வகை உணவுக்கும் அநுமதி உண்டு; அதற்குச் சுருதி காணப்படலான்.

ந ஹவா ஏவம்விதி கிஞ்சநாநந்நம் பவதி (சாந். ரு. ௨.க)

"இதை அறிந்தவனுக்கு அன்னமாகாததொன்றுமில்லை" எனப் பிராணவித்தையிலே சுருதி கூறுகின்றது. இந்த வாக்கியம் பிராணவித்தையுடையானுக்கு எல்லா அன்னமும் (உண்ண) அநுமதி செய்யப்பட்டதாக அறிய வருகின்றது. இது நியாயமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வேறுவகையால் யாவர்க்கும் கிடைக்கற்பாலதாகிய போசனம் சுருதியில் விதிக்கப்படவேண்டியதின்மையின், அறியப்படாதனவாய்க் கிடந்த உணவுவகை அனைத்தையும் உண்ண அநுமதி செய்தலே ஈண்டு விதிக்கப்பட்டதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிராணவித்தியாநிஷ்டனும் எக்காலத்தும் எல்லா அன்னத்தையும் உண்ணுதற்கு அநுமதி செய்யவில்லை; ஆனால் பிராணாபாயத்திலாம். அதிகசத்தியுடைய உஷஸ்தி பிரமத்தை அறிந்தானாயினும், பிராணாபாயகாலத்திலேதான் உச்சிஷ்டபோசனஞ் செய்ததாகச் சுருதி கூறுகின்றது.

மடசீஹதேஷு குருஷ்வாடிக்யா ஸஹ ஜாயயோஷஸ்திஹ சாக்ராயண இப்யக்ராமே ப்ரத்ராணக உவாஸ| ஸ ஹேப்யம் குல்மாஷாந் காதந்தம் பிபிக்ஷே தம் ஹோவாச| நேதோऽந்யே வித்யந்தே யச்ச யே ம இம உபநிஹிதா இதி| ஏதேஷாம் மே தேஹீதி ஹோவாச

तानस्मै प्रददौ हन्तानुपानमित्युच्छिष्टं वै मे पीतं स्यादिति होवाच। न स्विदेतेऽप्युच्छिष्टा इति न वा अजीविष्यमिमानखादन्निति होवाच। कामो म उदपानमिति (சாந். க. ௧௦. க)

"கன்மழைகளாற் குருதேசங்கள் அழியும்போது, உஷஸ்தி சாக்கிராயணர் என்பார் தம் கன்னிகையாகிய மனைவியோடு இப்பியகிராமத்தில் யாசகராய் வசித்தார்; ஓர் பிரபு பயறுண்பதைக் கண்டு, அவரை இவர் யாசித்தார்; அதற்குப் பிரபு சேஷமாயிருப்பனவேயன்றி வேறு அதிகம் இல்லை என்றார்; உஷஸ்தி அவற்றை எனக்குக்கொடும் என்றார்; அவர் அந்தப் பயற்றை அவர்க்குக் கொடுத்துப் பானஞ் செய்தற்கும் சிறிது இருக்கின்றதென்றார்; பின்னர் அதற்கு உஷஸ்தி நான் அதைக் குடித்தால் மற்றொருவனுற் குடித்து எஞ்சியதை நான் குடித்தேனுகி அசுத்தனுவேன் என்றார்; அதற்குப் பிரபு அந்தப் பயறுகளும் சேஷித்தனவன்றோ, அதனால் அவைகளும் அசுத்தமன்றோ என்றார்; அதற்கு உஷஸ்தி (அங்ஙனம்) அன்று, நான் அவற்றை உண்ணுவிடிற் சீவித்திருக்கமாட்டேன்; ஆனால் ஜலபானம் பண்ணுதல் இன்பமாத்திரமேயாம்" என்று சுருதியிற் கூறப்படுகின்றது. ஆகலின், பிராணன் அபாயத்திருக்கும்போதுதான் பரவித்தையுடையானும் எவ்வகையாகிய உணவையும் உண்ணலாம் என்று அநுமதி உண்டு. (௨௮)

अबाधाच्च (௩. ௪. ௨௯)

(௪௪௭) பாதை இன்மையானும்.

आहारशुद्धौ सत्त्वशुद्धिः सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः (சாந். எ. ௨௬. ௨)

"ஆகாரம் சுத்தமாயிருக்குங்காற் சத்துவசுத்தி உண்டாகின்றது; சத்துவசுத்தியாகுங்கால் உறுதியாகிய ஞாபகம் எய்துகின்றது; ஞாபகம் உறுதியாகுங்கால் எல்லாக் கட்டும் மோசனமாகின்றன" என்னுஞ் சுருதிவாயிலாக ஆஹாரசுத்திக்குப் பாதை (தடை)யாதுமின்மையானும், உயிர் சந்தேகத்துக் கிடமாயிருக்கும்போதுதான் எவ்வகை உணவுக்கும் அநுமதி (செயற்பாற்று). (௨௯)

अपि च स्मर्यते (௩. ௪. ௩௦)

(௪௪௮) ஸ்மிருதியினுங் கூறப்படுகின்றது.

प्राणसंशयमापन्नो योऽन्नमत्ति यतस्ततः।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा॥

"ஆன்மா அபாயத்திருக்கும்போது எவ்விடத்திருந்தேனும் அன்னத்தை ஒருவன் உண்ணுங்கால், அவன் தாமரையில் நீர்போலப் பாவத்தினற்றொடக்குண்ணுன்" என ஸ்மிருதியிற் கூறப்படலான், சீவாபாயத்திலேதான்

எவ்வகை அன்னமும் (உண்ண) அநுமதி ஸ்மிருதியிற் கூறப்பட்டிருக்கின்றது. (௩0)

ஶப்தஶ்சாதோ௨காமகாரே (௩. ௪. ௩௧)

(௪௪௯) ஆகலின் இச்சித்தவாறு செய்தல் கூடாதெனச் சுருதியுண்மையானும்.

தஸ்மா ப்ராஹ்மண ஸுராம் ந பிபேத்

"ஆகலின், பிராமணன் சுராபானஞ் செய்யப்படாது" என்பதினால் ஆசை ஒழிக்கவேண்டுமென்பதுபற்றிச் சுருதியும் இருக்கின்றது. ஆகலின், பிராண சம்சயம் எய்துங் காலத்திலேதான் வித்துவானும் எவ்வகை உணவையும் உண்ணலாம் என்னும் அநுமதி (போதரும்). அஃதொழிந்து நிஷித்தாசரணஞ் செய்தாற் சிவபெருமானது ஆஞ்ஞைக்குத் துரோகியாவான் என்பது கருத்து. (௩௧)

(௯) ஆச்சிரமகர்மாதிகரணம்.

விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி (௩. ௪. ௩௨)

(௪௫0) விதிக்கப்பட்டமையானும் ஆச்சிரமதருமங்களும் (கவனிக்கற்பாலன).

யாவஜ்ஜீவ மக்நிஹோத்ரம் ஜுஹோதி

"சீவபரியந்தம் அக்கினிகோத்திரத்தைச் செய்கின்றான்" என விதிக்கப்பட்டமையானும்,

யஜ்ஞேந தாநேந (பிரு. ௬. ௪. ௨௨)

"யஞ்ஞத்தினாலும் தானத்தினாலும்" எனச் சுருதியானது வித்தையைத் தேடுதற்கு (அவை) சாதனமென்று கூறுதலானும், ஞானஹீனனாகிய கிரகஸ்தனுக்கு ஆச்சிரம கன்ம யாகமுதலியன அநுஷ்டிக்கற்பாலன எனப் பெறப்படுகின்றது. (௩௨)

ஸஹகாரித்வேந ச (௩. ௪. ௩௩)

(௪௫௧) உடந்தையாயிருத்தலானும்.

வித்தையுடையவன் விஷயத்தினும்,

வித்யாஞ்சாவித்யாஞ்ச (ஈசா. ௧௧)

"வித்தையையும் அவித்தையையும் (அறிந்தவன்)" என்னுஞ் சுருதியானது அன்ன வித்தைக்கு அங்கமாயிருப்பன என்று விதித்தலான், அவை அநுஷ்டிக்கற்பாலன எனப் பெறப்படுகின்றது. வித்தையில்லாதவனாலும் வித்தை

புடையவனும் யஞ்ஞமுதலியன வித்தியாசாதனமாகவும் வித்தியாங்க மாகவும் இரு முறையோ ஒரு முறையோ அநுஷ்டிக்கற்பாலன? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இரு விதியும் பலமாயுண்மையான், அவை இரு முறை அநுஷ்டிக்கற்பாலன எனின், (௩௩)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

𑌸𑌰𑍍𑌵𑌥𑌾𑌪𑌿 𑌤 𑌏𑌵𑍋𑌭𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 (௩. ௪. ௩௪)

(௪௫௨) எப்பிரகாரத்தாலும் அவை ஒன்றும்; உபய லிங்கங்களுண்மையின்.

இருவேறு பிரகரணங்களிலே நேரும் இரு விதிகளால் அந்த யஞ்ஞ முதலியன இருவகை உருவங்களை அடைவனவாகவிருந்தாலும், அவை எவ் விடத்தும் (ஒன்றும்); அங்ஙனம் அறியப்படலான். இங்ஙனம் கருமசொரூ பம் ஒன்றாயிருத்தலாற் சம்யோக பிருதக்த்துவ நியாயத்தினால் விரோதமின்று; ஒரேதரத்திற் பிரயோகிக்கப்பட்டாலும் இரு விதியின் பலத்தினால் ஒரே கன்மமானது இருவேறு உருவங்கள் எய்துமாதலின். "யஞ்ஞயூபம் காதிர மரத்தினால் ஆகின்றது" எனவும், "வீரியகாமன் காதிரமரத்தினால் யஞ்ஞ யூபத்தைச் செய்க" எனவும் போந்த இருவசனபலத்தினால் நித்தியகாமிய கன்மங்களுள்ளே ஒரே யஞ்ஞயூபம் (பிரவேசித்தல் போல), வித்தையுடைய வன் விஷயத்தில் அங்கமாகவும், வித்தியாஹீனன் விஷயத்திற் சாதனமாக வும் யஞ்ஞகன்மங்கள் விதிக்கப்பட்டமையால், இந்த (இரண்டுக்குமாக) ஓர் கால் யஞ்ஞமுதலியன அநுஷ்டிக்கற்பாலன. (௩௪)

𑌅𑌨𑌭𑌿𑌭𑌵𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 (௩. ௪. ௩௫)

(௪௫௩) இசைவாயிருத்தலையுஞ் சுருதி கூறுகின்றது.

𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌪𑌾𑌪𑌮𑌪𑌨𑍁𑌦𑌤𑌿 (தைத். ஆரணி. ௧௦. ௭௯. ௧௦௦)

"தருமத்தினாலே பாவத்தைப் போக்குகின்றான்" என்னுஞ் சுருதியானது வித்தையின் உற்பத்தியைத் தடுக்கும் பாவத்தைப் போக்குதல் வாயிலாக, வித்தைக்கு இசைவாகிய கன்மாநுஷ்டான காரியத்தையும் கூறுகின்றது. ஆகலின், முன் சொல்லியது விரோதமின்று. (௩௫)

(௧௦) அந்தராதிகரணம்.

𑌅𑌨𑍍𑌤𑌰𑌾 𑌚𑌾𑌪𑌿 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 (௩. ௪. ௩௬)

(௪௫௪) விலக்காயுள்ளோர்க்கும் அது காணப்படலான்.

ஆச்சிரமிகளுக்கு ஞானம் வேண்டற்பாலதாகக் கூறப்பட்டது. ஈண்டு

ஆச்சிரமங்களிலே சேராதோர்க்கும் ஞானம் வேண்டியதா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) (பிரமசரியத்தை விடுத்துக் கிரகஸ்தாச்சிரமத்திலே பிரவேசியாத) ஸ்நாதகனும், தாரமிழந்தவர்களும் அநாச்சிரமிகள் ஆவர். இவர்களுக்குப் பிரம்வித்தை எய்தாது; வித்தையைச் சம்பாதித்தற்குச் சாதனமாய்ப் போந்த ஆச்சிரம தருமங்கள் யாதுமின்றாமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். இரைவகர்முதலாயினோரும் வித்தையைப் பெற்றாரெனச் சுருதியிற் காணப்படுதலான் ஞானம் அநாச்சிரமிகளுக்கு எய்துகின்றதன்றோ. (௩௬)

வித்தைக்குச் சாதனமாகிய ஆச்சிரமதருமங்கள் இல்லை எனக் கூறப்பட்டதுபற்றிச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

அபி ச ஸ்மர்யதே (௩. ௪. ௩௭)

(௪௫௫) ஸ்மிருதியினுங் கூறப்படுகின்றது.

ஜப்யேநைவ து ஸம்ஸித்⁴யேத் ப்³ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய꞉|
குர்யாத³ந்யந்ந வா குர்யாந்மைத்ரோ ப்³ராஹ்மண உச்யதே|
(மனுஸ்மிருதி. ௨. ௮௭)

"செபத்தினன்மாத்திரம் பிராமணன் சித்தியடையவேண்டும்; இதிற் சந்தேகமின்று; ஏனையவற்றைச் செய்யினும் செய்யலாம், விடினும் விடலாம்; தண்ணளியுடையவனே பிராமணன் எனப்படுவன்" என்னும் ஸ்மிருதியினால், அநாச்சிரமிகளும் செபமுதலியவற்றால் வித்தியாநுக்கிரகம் எய்துகின்றார் எனக் கூறப்படுகின்றது. (௩௭)

விஶேஷாநுக்³ரஹஶ்ச (௩. ௪. ௩௮)

(௪௫௬) விசேஷகருமங்களானும் அநுக்கிரகம் எய்துகின்றது.

தபஸா ப்³ரஹ்மசர்யேண ஶ்ரத்³த⁴யா வித்³யயாத்மாநமந்விஷ்ய|
(பிர. ௧. ௧௦)

"தபசினும், பிரமசரியத்தினும், சிரத்தையினும், ஞானத்தினும் (பர)மான்மாவை நாடி" என்னுஞ் சுருதியானது ஆச்சிரமங்களுக்கு நியதமாகிய தருமவிசேஷத்தினும் ஞானனுக்கிரகம் எய்துவதாகக் கூறப்படுகின்றது. (௩௮)

அதஸ்த்விதரஜ்ஜ்யாயோ லிங்கா³ச்ச (௩. ௪. ௩௯)

(௪௫௭) ஆகலின் மற்றது உயர்ந்தது; இலிங்கவுண்மையானும்.

ஆச்சிரமம் யாதும் இலாமையைவிட ஆச்சிரமமுடைமை சிரேட்டமா கும்; தருமம் மிகுதியாய் எய்துவதாகலின்.

ஐநாஶ்ரமீ நதிஷ்டேத்து தினமேகமபி த்விஜ: (தக்ஷஸ்மிருதி. க. ௧௦)

"ஆச்சிரமங்கள் ஒன்றுக்கேனும் சேராமல் ஓர் தினமாயினும் இரு பிறப்பாளன் இருத்தல் கூடாது" என ஸ்மிருதியுங் கூறுகின்றது. இங்ஙனம் ஆச்சிரம மில்லாமையினும் ஆச்சிரமமுடைமை சிரேட்டமே. அங்ஙனமாயினும், ஆபத்தாகிய விஷயங்களில் ஆச்சிரமமில்லாதோர்க்கும் செபமுதலிய சாதனத்தினால் ஞானம் எய்துகின்றதே. (௩௯)

(௧௧) தத்பூதாதிகரணம்.

தத்பூதஸ்ய து நாதத்பாவோ ஜைமிநேரபி நியமாத்த்ரூப வாபாவேப்ய: (௩. ௪. ௪௦)

(௪௬௮) அவ்வாறாகிய புருடனுக்கு அவ்வாறாதலினின்று நீங்குதல் கூடாது; சைமினி அங்ஙனங் கொள்ளுதலான்; நிலையினின்று இறங்குதல் தடுக்கப்படுதலின்.

ஈண்டுத் துறவுபூண்டோர் பூருவாச்சிரமத்துக்கு மீடலாகிய இறக்கம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய க்ருஹீ பவேத்।
க்ருஹாத்வநீ பூத்வா ப்ரவ்ரஜேத் (ஜாபாலம்)

"பிரமசரியத்தை முடித்துக் கிரகஸ்தாச்சிரமியாதல்வேண்டும்; கிரகத்தை விட்டு வானப்பிரஸ்தனாகித் துறவு செய்தல்வேண்டும்" என்னும் வாக்கியத்தினால் ஆச்சிரம ஏற்றம் எவ்வாறு சுவேச்சாதீனமோ, அவ்வாறே (ஆச்சிரமத்தினின்று) இறக்கமும் எய்தலாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். நைஷ்டிகாதி ஆச்சிரமத்தை அடைந்தவனுக்கு அதினின்று இறங்குதல் கூடாது; அந்நிலையினின்று இறங்குதல் தடுக்கப்படுகின்றமையான்.

அத்யந்தமாத்மாநமாசார்யகுலே வஸாதயந் (சாந். உ. உ௩. க)

"ஆசாரியகுலத்திலே தன்னை மிகுதியும் ஒறுத்து" என்னும் சுருதியினால், அது நிச்சயமாய்த் தடைப்படுத்தப்படுகின்றது.

அரண்யமியாத்ததோ ந புநரேயாத்।

"அவன் காட்டுக்குப் போய் அங்கிருந்து மீண்டு வாராதிருப்பானாக" எனவும்,

ஸந்யஸ்யாக்நீந் ந புநராவர்த்தயேத்|

"அக்கினிகளை விடுத்துப்போய் அவன் மீண்டு வாராதிருப்பானாக" எனவும் சாஸ்திரங்கள் இறங்குதலைத் தடைப்படுத்துகின்றன. ஆச்சிரமத்தினின்று ஏறுதற்கு விதி இருத்தல்போல, இறங்குதற்குச் சாஸ்திரங்களில்லை. அவ்வாறே இறக்கத்தைச் சுருதிகள் வெளிப்படையாய்த் தவிர்த்தலானும், இறக்கத்துக்கு உடன்படுஞ் சுருதியின்மையானும், (உயர்ந்த ஆச்சிரமத்தினின்று இறங்குகின்ற அவர்களுக்கு) ஞானதிகாரமில்லை; சைமினிக்கும் இதுவே சம்மதம். (௪௦)

உயர்ந்த பதவியிலிருந்து இறங்கிறவனுக்குப் பிராயச்சித்தாதியினால் வித்தியாதிகாரம் இல்லை என்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ந சாதிகாரிகமபி பதநாநுமாநாத்ததயோகாத் (௩. ௪. ௪௧)

(௪௫௯) யோக்கியதையைக் கொடுக்கத்தக்க பிராயச்சித்தமும் இல்லை; ஸ்மிருதி கூறுமாறு வழுவுதல்பற்றி அது அவர்கட்கியையாமையின்.

மீமாஞ்சாதிகரணத்து (௬. அ. ௨௨-இல்) நெறி தவறிய பிரமசாரிக்குக் கர்த்தபபலி (கூறப்பட்டாற் போல, யோக்கியதா) அதிகாரத்துக்கு இலக்ஷணமாகச் சொல்லப்பட்ட பிராயச்சித்தமானது (ஆச்சிரமத்தில்) உயர்ந்து வழுவினவனுக்கு எய்தாது;

ஆரூடோ நைஷ்டிகம் தர்மம் யஸ்து ப்ரச்யவதே நர:|
ப்ராயச்சித்தம் ந பச்யாமி யேந சுத்த்யேத் ஸ ஆத்மஹா||

"நைஷ்டிகப் பிரமசரியத்துக்கு ஏறிய மனுஷன் அதினின்று தவறுவானாயின், அந்த ஆன்மாவைக் கொன்ற அவன் சுத்தி எய்துமாறுள்ள கழுவாயைக் காண்கிலேன்" என்று ஸ்மிருதியானது அவனுக்குத் தகுதியாக்கப் பிராயச்சித்தத்தை மறுத்தலான்; அவன் அந்தப் பிராயச்சித்தத்துக்கு யோக்கியனாகான். (௪௧)

உபபூர்வமபி த்வேகே பாவமசநவத்ததுக்தம் (௩. ௪. ௪௨)

(௪௬௦) உபபாதகம் (என்ப) சிலர்; போசன (விஷய)த்திற்போலப் (பிராயச்சித்தம்) உண்டு (என்ப); இது கூறப்பட்டது.

உபபாதகமாயிருத்தலான், சிலர் பிராயச்சித்தத்தை அங்கீகரிக்கின்றார்; மதுவை உண்டு பிராயச்சித்தங் கோடல் போல.

உத்தரேஷாம் சைததவிரோதி|

"பிரமசரிய விஷயத்திற் கூறப்பட்டது விரோதமில்லாவிடத்து உயர்ந்த ஆச்

சிரமிகளுக்கு எய்துவதாம்" என்னும் வாக்கியத்தினாற் பிரமசாரிக்கு எது கூறப்பட்டதோ, அது விரோதமில்லாவிடத்து மற்ற ஆச்சிரமிகளுக்கும் பொருந்தும் என்பது பெறப்பட்டது. (சஉ)

பஹிஸ்துஉஹயதாவி ஸ்ம்ருதே ராசாராச்ச (ந. ச. சந)

(சஅக) ஆயின் அவர் இரு பிரகாரத்தானும் புறத்தே நிற்கின்றார்; ஸ்மிருதியும் ஆசாரமுமுண்மையான்.

உபபாதகமாயிருந்தாலும் மகாபாதகமாயிருந்தாலும், இந்த (அதிக்கிரமிகள் வைதிக) கன்ம அதிகாரமுதலியவற்றினின்று பஹிஷ்கரிக்கப்படுகின்றனர்;

ப்ராயஸ்சித்தம் ந பஸ்யாமி யேந ஸுத்த்யேத் ஸ ஆத்மஹா।

"ஆன்மாவைக் கொல்பவன் சுத்தியடைதற்குரிய பிராயச்சித்தத்தைக் காண்கிலேன்" என ஸ்மிருதியிற் கூறப்படுதலானும், சிஷ்டர் (சங்கத்தி) னின்று பகிஷ்கரிக்கப்படுதலானுமாம். ஆகலின், ஆரூட பதிதற்கு (உயர்ந்து வழுவினர்க்கு) ஞானதிகாரம் எப்பிரகாரத்தானும் இல்லை. (சந)

(கஉ) சுவாம்மியதிகரணம்.

ஸ்வாமிந: பலஸ்ருதேரித்யாத்ரேய: (ந. ச. சச)

(சஅஉ) யஜமானனுக்குப் பலம் கூறப்படலான், என்பர் ஆத்திரேயர்.

முற் கூறப்பட்ட உற்கீதாதி உபாசனானுஷ்டானம் யஜமானனுக்கா? இன்றேல் இருத்துவிக்குக்களுக்கா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உற்கீதமுதலிய உபாசனை யஜமானன்பொருட்டே அநுஷ்டிக்கற்பாற்று; அவனுக்கே அதிவீரியமாகிய பலத்தைக் கொடுப்பதாகக் கேட்கப்படலான். இருத்துவிக்குக்களால் (அநுஷ்டிக்கற்பாலது) என்பது ஆத்திரேயர் கொள்கை (எனின்), (சச)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ஆர்த்விஜ்யமித்யௌடுலோமிஸ்தஸ்மை ஹி பரிக்ரீயதே।

(ந. ச. சரு)

(சஅந) அவை இருத்துவிக்கின் கன்மம் என்பது ஔடுலோமி (கொள்கை); அவர்க்குத் தக்ஷிணை கொடுக்கப்படுகின்றதன்றோ.

ஸைவம் விதம் ஹோதா ப்ரூயாத் (சாந். க. எ. அ)

"இதனை அறிந்த உற்காதா கூறுவாராக" என்னும் சுருதிவாக்கியசேஷத்தான், உற்காதாவே உபாசிக்கவேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்படுகின்றது. இருத்துவிக்குக்கே அவ்வநுஷ்டானம் உரியதென்பது ஔடுலோமிமதம்.

(ஆக்ஷேபம்) ஒருவன் ஒன்றைச் செய்ய, அதன் பலம் மற்றொருவனுக்குச் சேறல் எங்ஙனமெனின்,

(உத்தரம்) (முக்கிய) கருமத்துக்குப் போல மற்றை அங்க கருமங்கள் அனைத்தையுஞ் செய்யும்பொருட்டு யஜமானனாலே இருத்துவிக்குக்கள் (தக்ஷிணை) கொடுக்கப்படுதலான், சாங்ககருமாநுஷ்டானத்தின் பொருட்டே இருத்துவிக்குக்கள் எஜமானனால் (தக்ஷிணை) இறுக்கப்படுகின்றார்கள். ஆதலின் இருத்துவிக்கினாலே செய்யப்பட்டது யஜமானனாலே செய்யப்பட்டதே. ஆகலின், யாககர்த்தாவுக்கே பலமுஞ் சேருமென்பதில் விரோதமில்லை. (௪௫)

(௧௩) சககாரியந்தரவித்தியதிகரணம்.

ஸஹகாய்யாந்தரவிதி: பக்ஷேண த்ருதீயஸ்ய தத்வதோ விதியாதிவத்॥
(௩. ௪. ௪௭)

(௪௪௪) வித்தையுடையானுக்கு யஞ்ஞவிதிமுதலியபோல, மூன்றாவதாகிய (மௌனம்) மற்றோர் சககாரியாக விதிக்கப்படுகின்றது; பிரசித்தமாதலின்.

தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முநி: (பிரு. ௫. ௫. ௧)

"ஆகலின் பிராமணன் பாண்டித்தியம் எய்திய பின்னர்ப் பால்லியமாயிருக்க நாடுவானாக; பாண்டித்தியத்தையும் பால்யத்தையும் விடுத்த பிற்பாடு முனியாய் இருப்பானாக" என்று கஹோளப்பிராம்மணத்திலே கூறப்படுகின்றது. அநேக உபநிடதங்களின் தாற்பரிய நிர்ணய ரூபமாகிய பாண்டித்திய முழுமையும் அடைந்து (பிராமணன் ஒருவன்) பால்லியமாய் (இருக்கவேண்டும்; அஃதாவது) இராகத்துவேஷமுதலிய அனைத்தையும் விடுத்துப் பால்லியத்தை ஒத்த மற்றோர் நிலையிலே நிற்கவேண்டும் (என்பதே); பாண்டித்தியம் பால்லியம் என்பனவற்றை முழுதும் நாடிக்கொண்டு பின்னர் முனியாதல் வேண்டும்.

ஈண்டுப் பாண்டித்தியமும் பால்லியமும் விதிக்கப்பட்டாற்போல, முனியின் நிலையும் (மௌனமும்) விதிக்கப்பட்டதா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முனி என்றவிடத்து "ஆகுக" (ஸ்யாத்) என்னும் விதிப்பிரயோகமின்மையான், அது விதிக்கப்படவில்லை எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. வித்தையுடையானுக்கு யஞ்ஞாதிகள் போலப் பாண்டித்தியம் பால்லியம் என்பவற்றுக்கு மூன்றாவதாகிய மற்றோர் சககாரியமாய் மௌனம் விதிக்கப்படுகின்றதே; மிகுதியும் தியானஞ் செய்பவனுக்கே முனி என்னும் சப்தம் பிரசித்தமாதலின். வித்தையைப் பெறும்பொருட்டு உபாசியவிஷயமாயுள்ளதை இடைவிடாது அப்பியாசஞ் செய்வதாயுள்ள இந்தப் பிரகிருஷ்டமாகிய தியானத்தில் "அவன் நிற்க" (திஷ்ரேஸு) என்னும் சப்தத்தை வருவித்துக்கொள்வதினால் விதிக்கப்படுகின்றது. ஆகலின், வித்தையுடையானுக்கு மௌனவிதி நேர்ந்திருக்கின்றது. (சசு)

(கச) கிருத்ஸ்நபாவாதியதிகரணம்.

க்ருத்ஸ்நபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார: (௩. ௪. ௪எ)

(௩கூரு) ஆயின் எல்லோரினும் (வித்தை) உண்மையின், (சுருதி) கிரகஸ்தனோடு முடிக்கின்றது.

ஈண்டு வித்தை எல்லா ஆச்சிரமிகளுக்கும் சாதாரணமாயுள்ளதா? இன்றேற் சிலர்க்குமாத்திரம் உளதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமசாரிகள் வேதாப்பியாசம் செய்கின்ற ஆசாரியர் வசப்பட்டவராதலினாலும், கிரகஸ்தன் குடும்பத்தைத் தாங்குதலிலே முயற்சித்திருத்தலாலும், வானப்பிரஸ்தன் தறவிலே முயற்சித்திருத்தலாலும், அவர்களுக்கு ஞானமுந் தியானமும் எய்தமாட்டா.

வேதாந்தவிஜ்ஞாநஸுநிஸ்சிதார்தா: ஸந்ந்யாஸயோகாத்யதய: ஸுத்தஸத்வா: (கைவ)

"வேதாந்த ஞானத்தினாலே நன்கு நிச்சயிக்கப்பட்டவர்களாய், சந்நியாச யோகத்தினாலே சுத்தசத்துவமனமுடையவர்களாயுள்ள யதிகள்" என்னும் சுருதியினால் வேதாந்தார்த்த ஞானமுடையவர்களுக்குச் சந்நியாசயோகம் கேட்கப்படலானும்,

அத்யாஸ்ரமஸ்த: (கைவ)

"அத்தியாசிரமத்தினின்று" என்பதினாற் றியானவிதி பெறப்படலானும், துரியாச்சிரமிகளுக்கே ஞானமுந் தியானமுமாம், மற்றவர்களுக்கில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) வித்தை எல்லோர்க்கும் உரித்தே;

குடும்பே ஸுசௌ தேஸே ஸ்வாத்யாயமதீயாந:।
ஸவ்வேந்த்ரியாணி ஸம்ப்ரதிஷ்டாப்ய அஹிம்ஸந்ஸர்வபூதாந்யந்யத்ர
தீர்தேப்ய: ஸ கல்வேவம் வர்தயந்யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே।
ந ச புநராவர்த்ததே (சாந். அ. கரு. க)

"குடும்பஸ்தனாய், பரிசுத்தமாகிய ஸ்தானத்திருந்து வேதாத்தியயனஞ் செய்துகொண்டு" என்று தொடங்கி, "இங்ஙனம் ஆயுசுபரியந்தம் ஒழுகுகின்றவன் பிரமலோகத்தை அடைந்து மீளத்திரும்புவானல்லன்" எனச் சாந்தோக்கியத்திற் கூறப்பட்டமைபற்றி, எல்லா ஆச்சிரமிகளிடத்திலும் வித்தை உளதாகக் காணப்படலான். இங்கே கிரகஸ்தாச்சிரமத்தோடு சுருதி இங்ஙனம் உபசங்கரித்தல் எல்லா ஆச்சிரமிகளுக்கும் அது உண்டெனக் காட்டும் பொருட்டன்றே; இங்ஙனம் அத்தியாசிரமவசனமும் எல்லா ஆச்சிரமிகளுக்கும் அது உண்டெனக்காட்டும்பொருட்டேயாம். ஆகலின், எல்லா ஆச்சிரமிகளுக்கும் வித்தை உண்டே. சந்நியாசம் என்னும் பதம் பலங்களையெல்லாம் விடுத்தலின் மேற்று. யதித்தன்மை என்பது ஜிதேந்திரியத்தின் மேற்று. ஈதெல்லாம் எல்லா ஆச்சிரமிகளுக்கும் நேர்கின்றனவே. (௪௭)

(௧௫) பாசுபதவிரதாதிகரணம்.

मौनवदितरेषामप्युपदेशात् (௩. ௪. ௪௮)

(௪௯௯) மௌனம் போல மற்றவர்களுக்குங் கூறப்படலான்.

तृष्णां हित्वा हेतुजालस्य मूलं। बुद्ध्या संचितं स्थापयित्वा तु रुद्रे। रुद्रमेकत्वमाहुः। रुद्रं शाश्वतं वै पुराणमिषमूर्जं तपसा नियच्छत। व्रतमेतत्पाशुपतम् (அதர்வசிரசு)

"ஆசையை அறுத்து, ஏதுஜாலங்களின்மூலத்தைப் புத்தியினாற் சிந்தித்து உருத்திரரிடத்தே மனசை நிறுத்துக; உருத்திரரிலே ஏகத்துவம் கூறுப; அன்னமும் பலமுமாகி, நித்தியரும் பழையோருமாகிய உருத்திரரைத் தபசினாலே (ஞானத்தினாலே) நீவிர் ஒருக்கிப் பற்றுக, இது பாசுபதவிரதம்" எனப் பாசுபதவிரதம் அதர்வசிரசிற் கூறப்படுகின்றது. புராணங்களினும் பிரசித்தம்.

இந்தப் பாசுபதநிஷ்டர்க்கு ஞானப்பேறும் முத்தியும் எய்துமா? எய்தாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இந்தப் பாசுபதவிரதம் ஆச்சிரமங்களுக்குள் அடங்காமையானும், காலவரையறையுடைமையானும், கிருஷ்ணர் முதலாயினோராற் புத்திரப்பேற்றின் பொருட்டு அநுஷ்டிக்கப்பட்டிருத்தலானும், அவாந்தர பலப்பேறொழிந்து அவர்களுக்கு மோக்ஷசித்தியில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். இந்த விரதத்தை மரணபரியந்தம் அநுஷ்டிப்பவர்களுக்கு முத்தியே பேறு; ஞானப்பேறும் பரப்பிரமமாகிய சிவபெரு

மானைத் தியானஞ்செய்தலேயாம்; முனியின் நிலைமைபோலப் பிக்ஷைபேற்றலும் சமம் தமமுதலிய மற்றைப் பரதருமங்களும் பாசுபதம் எனப்படும் விரதத்திலும் உபதேசிக்கப்பட்டிருத்தலினாலும்,

ருத்ர ஏகத்வமாஹு:। ருத்ரம் ஶாஶ்வதம் வை புராணமிஷ மூர்ஜம் தபஸா நியச்ச। வ்ரதமேதச்ச பாஶுபதம்। அக்நிரித்யாதிநா பஸ்ம க்ருஹீத்வா விம்ருஜ்யாங்காநி ஸம்ஸ்ப்ருசேத்தஸ்மாத் வ்ரதமேதத்பாஶுபதம் பஶுபாஶ விமோக்ஷாய (அதர்வசிரசு)

"உருத்திரரில் ஏகத்துவம் கூறுப; அன்னமும் பலமுமாக நித்தியரும் புராணருமாகிய உருத்திரரைத் தபசினால் ஒருக்கிப் பற்றுக;' 'அக்கினி என்பது பசுமம்' என்றற்றொடக்கத்த மந்திரத்தினாலே விபூதியை எடுத்து, அங்கங்ளிலே தொட்டு, அவற்றைப் பூசிவிடுக; ஆகலின், இந்தப் பாசுபதவிரதம் பாசத்தினின்று பசுவை மீட்கும் பொருட்டுள்ளது" என அப்பாசுபத நிஷ்டர்க்கும் சிவத்தியானத்தினாற் பாசத்தை அறுத்தலாகிய மோக்ஷபலத்தின் சம்பந்தம் பெறப்படுகின்றமையானுமாம். ஆகலின், ஆயுசுபரியந்தம் (வைதிக)பாசுபதவிரதத்தைஅநுஷ்டிப்பவர்க்கு முத்திதான் பலம்.

ஆச்சிரமங்களுள்ளே அது அடங்கவில்லை என்பதுபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர். (௪௮)

அநாவிஷ்குர்வந்நந்வயாத் (௩. ௪. ௪௯)

(௪௯௭) தன்னைக் காட்டாமல்; சம்பந்தமுண்மையின்.

மற்றோர் ஆச்சிரமமாகத் தன்னைக் காட்டாது அவ்வியக்தமாயிருந்தாலும், பாசுபதாச்சிரமமானது ஞானசாதனத்துக்குரிய பிரமசரியமுதலிய யதிதர்மங்களை அடக்கி, அத்தியாசிரமம் எனப் பெயர் படைத்து, பரசிவனை அடைதற்குக் காரணமாய், சுவதந்திரமாய் (வாய்ந்தது) இந்த ஆச்சிரமபேதம்.

யாவச்சரீரபாதம் வா த்வாதஶாப்தமதாபி வா (வாயு. பூர். ௨௯: ௮)

"சரீராந்தம் வரையுமேனும், பன்னிருவருஷமேனும் அநுஷ்டிக்க" என்னும் சுலோகத்திற் கூறப்பட்டவாறு, பாசுபதவிரதமானது சீவபரியந்தமேனும், சொற்பகாலத்துக்கேனும் அநுஷ்டிக்கப்படுவதென இருவகைப்படும். இந்த இரண்டிலே சீவபரியந்தம் அநுஷ்டிக்கப்படுவது * அத்தியாசிரமம்

* உபக்கிரமணிகை (௩௪௧—௩௪௯-ஆம்) இலக்கம் வரையும் உபப்பிருங்கணப் பிரமாணசகிதமாய்க் காட்டப்பட்டவாறு இச்சைவபாஷ்யகாரரும் அத்தியாசிரமம் என்றதற்குப் பாசுபதவிரதம் என்று பொருட்படுத்தினாராக, சங்கராசாரியர் (சுவே. ௬. ௨௧-இற்) கண்ட அந்த அத்தியாசிரம சப்தத்துக்குப் பரமகம்சசன்னியாசியென்று உபப்பிருங்கணங்களுக்கெல்லாம் முரணுறப் பொருள்செய்து தவறுண்டனர். அர்

னப்பட்டு மோக்ஷத்துக்கு வாயிலாகும்; மற்றது போகஹேதுவாயுள்ளது. இங்ஙனம் போகமோக்ஷஹேதுவாய் இருதிறப்படும் அந்த விரதமானது சிவப்பிரசாதத்தைப் பாலிப்பதெனச் சுருதி விதிக்கின்றது. சுருதிவாக்கியம் அப்பிராமாண்ணியமாகாதிருக்கப் பொருள்செய்பற்பாற்று. (௪௯)

(௧௬) ஐகிகாதிகரணம்.

ஐஹிகமப்யப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்சநாத் (அ. ௪. ௫௦)

(௪௬௮) இந்தப் பிறப்பிற் பிரதிபந்தமில்லாதொழியிற் (பயன் சித்தியாகின்றது); அங்ஙனஞ் சுருதி காட்டுதலான்.

மேலே கூறப்பட்ட உபாசனநிஷ்டர்களுக்கு மோக்ஷபலம் இச்செனனத்திலா? இன்றேல் மறுசெனனத்திலா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது ஆராயப்படுகின்றது. இந்தச் சென்மத்திலே முக்தி எய்துவதென்று விசுவசித்துப் புருஷன் உபாசனையிற் பிரவர்த்திக்கின்றானன்றி, சென்மாந்தரத்தையுற்றன்று. பயனைக் குறித்து எவன் தாமசத்தை விரும்புவன்? ஆகலின், பயனுளதாயின் அது இச்செனனத்தில் முக்திபலம் எய்தும், இன்றேல் ஒர்காலும் எய்தாதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிரபலமாகிய மற்றோர் கருமப் பிரதிபந்தம் இல்லாதபோது, பரத்தின் உபாசனபலம் இந்தச் சென்மத்தில் எய்தும்; பிரதிபந்தமுளதாயின் அடுத்த சென்மத்தில் எய்தும்; உலகத்தில் நன்மையானது தனக்குச் சாதனமாயிருக்கும் புண்ணியஞ் செய்த பின்னர்த்தான் எய்த வேண்டும் என்பது நியமமன்று. பின் பிரதிபந்தங்கள் உள்ளபோது அது மற்றோர் சென்மத்தில் எய்துகின்றது. அதுபோலாம்; சென்மாந்தரத்திலே செய்யப்பட்ட சிரவணாதி பலத்தினாலே வாமதேவர் முதலியோரும் அப்பிரமவித்தியா பலத்தை அடுத்த சென்மத்திலே எய்தினர் என்று சுருதியிற் காணப்படலான். ஆகலின், இப்பிறப்பிலே வீடுபேறு எய்தவேண்டும் என்பது நியமமன்று. (௫௦)

(௧௭) முக்திபலாநியமாதிகரணம்.

ஏவம் முக்திபலாநியமஸ்ததவஸ்தாவத்ருதேஸ்ததவஸ்தாவத்ருதே:|

(அ. ௪. ௫௧)

(௪௬௯) இங்ஙனம் முக்திப்பயனிற் பேதமின்று; அதின்

தியாச்சிரமம் என்பது துரியாச்சிரமத்தின் மேற்று; அத்தியாசிரமம் என்பது (வைதிக)பாசுபதவிரதத்தின் மேற்று.

நிலைமை நிச்சயிக்கப்படுகின்றமையின், அதின் நிலைமை நிச்சயிக்கப்படுகின்றமையின்.

கேவலம் கன்மங்களினால் எய்தும் பலப்பேறுகள் போல முத்திப்பயனும் பிரபலகர்மாந்தரப் பிரதிபந்தமில்லாவிடத்து எய்துமென்று நிரூபிக்கப்பட்டது.

அந்த நியாயத்தினாலே (யஞ்ஞ) கன்மபலங்களிலே (பேதமுளதாதல்) போல, ஞானபலனாக எய்தும் முத்தியினும் பேதமுளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) கன்மபலம் போல முத்திபலமும் பேதமாம்.

ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோ யஜேத|

"சுவர்க்ககாமன் ஜ்யோதிஷ்டோமத்தினால் வேட்க"

வாஜபேயேந ஸ்வாராஜ்யகாமோ யஜேத|

"சுவராச்சியகாமன் வாஜபேயத்தினால் வேட்க" என்றற்றொடக்கத்தவற்றாற் கன்மபலம் பலவாகக் காணப்படுதல்போல, உபாசனாஞானபலத்துக்குமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. கன்மபலன்களைப் போல ஞானோபாசனாபலம் பேதமடையும் நியமம் இல்லை; பிரமசொரூபத்தையடைதலே பலமாயிருத்தலின். வித்தையுடையார் அனைவர்க்கும் பிரமசொரூபமடைதல் ஒன்றேயாதலின் ஈண்டுப் பேதம் எய்தாது. உபாசனையின் வேறுபாட்டினால் முத்திசொரூபமாகிய அந்தப் பலம் வேறுபாடுடையதெனக் கூறுதல் அடாது; உபாசனாகருமங்களுக்கு முத்தி பலத்தையொழிந்து வேறுபலமின்மையானும், பிரமம் ஒன்றாயிருத்தலின் அந்தப் பிரமரூப முத்திபலமும் ஒன்றாயிருத்தலானுமாம். ஆகலின், மோக்ஷபலத்திற் பேதமில்லை. (௫௧)

நான்காம் அத்தியாயத்து

முதலாம் பாதம்.

(க) ஆவிருத்தியதிகரணம்.

ஆவ்ருத்திரஸக்ருது பதேஶாத் (௪. க. க)

(௪௭௦) அடிக்கடி ஆவிருத்தி (கருதப்படுகின்றது); உபதேசத்தினால்.

மூன்றும் அத்தியாயத்திலே உபாசகன், உபாசியம், உபாசனபேதம், ஆச்சிரமதருமமுதலியன விசாரிக்கப்பட்டன.

ஈண்டுப் பின்னரும் நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்திலே உபாசனைப்பிரகாரமும்,

இரண்டாம் பாதத்திலே சிவோபாசகனுடைய உற்கிராந்திதசையும்,

மூன்றும் பாதத்திலே அர்ச்சிராதிகதியும்,

நான்காம் பாதத்திலே பிரமத்தைஅடைந்தவனுடைய நிலைமையும் நிரூபிக்கப்படுகின்றன.

ஈண்டு முதலதிகரணத்தில்

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் (தைத். உ. க)

ஜ்ஞாத்வா ஶிவம் ஶாந்திமத்யந்தமேதி (சுவே. ௪. கச)

"பிரமத்தை அறிந்தவன் பரமானந்தத்தை அடைகின்றான்;" "சிவபெருமானை அறிந்து அத்தியந்த சாந்திஅடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே மோக்ஷசாதனமாக விதிக்கப்பட்ட (வேதனத்தை) அறியுந்தொழிலை ஒருமுறை அநுஷ்டிக்க வேண்டுமா? இன்றேல் அடிக்கடி அநுஷ்டிக்க வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஒர்கால் அநுஷ்டிக்கற்பாற்று; "ஒருமுறை செய்தாற் சாஸ்திரார்த்தம் நிறைவேறிற்று" என்னும் நியாயத்தினாற் பிரயாஜாதிபோல,'ஒருமுறை அநுஷ்டித்தாலும் வேதனம் ஞானம் என்னும் மொழிகளின் அர்த்தம் சித்தியாய்விட்டது எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் (தைத். உ. க)

"பிரமத்தை அறிபவன் பரமானந்தத்தை அடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளில்மோக்ஷசாதனமாய் விதிக்கப்பட்ட (வேதனம்) ஓர்கால் ஆவர்த்திக்கத்தக்கது;

மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத (சாந். ௩. ௧௮. ௧)

"மனசைப் பிரமமாக ஒருவன் உபாசிக்க"

பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத (௩., ௧௮. ௩.)

யஸ்தத்வேத யத்ஸ வேத ஸ மயைதது(க்த) (சாந். ௪. ௧. ௪)

"இதனை (வேதத்தை) அறிகின்றவன் கீர்த்தியினாலும் யசசினாலும் பிரமவர்ச்சசினாலும், பிரகாசித்துத் தபிக்கின்றான், தான் அறிகிறதை அறிகிறவன் என்றால் இங்ஙனம் கூறப்படுகின்றான்"

அநு ம ஏதாம் பகவோ தேவதாம் ஶாதி யாம் தேவதாமுபாஸ்ஸே
(சாந். ௪. ௨. ௨)

"பகவானே, நீவிர் உபாசிக்கும் தெய்வதமதைச் சொல்லும்" என்றற்றொடக்கத்த சுருதிகளின் உபக்கிரமோபசங்காரங்களிலே, அறிதல் உபாசித்தல் என்னும் இரு மொழிகளும் மாறிமாறி எய்தலானும், மோக்ஷத்தின் சாதனமாகிய வேதனம் உபாசனரூபமாக இருக்கின்றமையானும், உபாசனைசப்தமும் இடையீடின்றிச் செல்லும் சிந்தனையின்மேற்றமாதலினாலுமாம். பிரயாஜாதிபோல என்றமை:— இதன் பயன் அதிர்ஷ்டமாதலின், இது ஒருமுறை அநுஷ்டித்தால் அமையும்: அறிதற்றொழிற் பயன் சாக்ஷாத்காரதிருஷ்டமாதலினால் அதன் பலோதயம் வரையும் ஆவிருத்தி செய்யவேண்டும், நெற்குத்தல் முதலிய போல. (௧)

ஸ்ம்ருதிஶ்ச (௪. ௧. ௨)

(சூ௧) குறிகளானும்.

க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்தி: பரமா மதா| மஹாபாதகயுக்தோ வா யுக்தோ வா ஸர்வபாதகை: | ஏகராத்ரம் ப்ரஹ்மஹத்யாம் ஸ்ம்ருதிர்வா |

ஆத்யாத்மிகயோகாநுஷ்டிதேஷு |
ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம்|

"சிவ ஞானத்தினால் ஆன்மாவுக்கு எய்தும் தூய்மை பரமாக மதிக்கப்படுகின்றது; மகாபாதகஞ்செய்தானாயினும், உபபாதகஞ்செய்தானாயினும் இரவில் ஓர்சாமம் பிரமத்தியானஞ்செய்வானாக;" "ஆன்மாவுக்கு விதிக்கப்பட்ட யோகத்தை ஒருவன்பயில்க;" "பொன்வண்ணரும் சொப்பனத்தில் அடையற்பாலருமாகிய பரமபுருஷரை அறிக" என்னும் (ஸ்மிருதி) வாக்கியங்கள் அவ்விஷயத்திற் குறிகளாயுள்ளன. ஆகலின், பிரம வேதனம் ஆவிருத்தி செய்யற்பாற்று. (௨)

(உ.) ஆத்துமாதிகரணம்.

ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச (ச. க. ௩.)

(௩எஉ) ஆன்மாவாகவே அவரை அடைகின்றார்கள்; பற்றுதலுஞ் செய்கின்றார்கள்.

மேலை அதிகரணத்திலே பிரமோபாசனை ஆவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்று கூறப்பட்டது. பிரமத்தைத் தனக்கு ஆன்மாவாய்க் கொண்ட ஆன்மா தன்னைப் பிரமத்தோடு ஒன்றாகவா? இன்றேல் அதற்கு வேறாகவா? கொள்ளல்வேண்டும் என்னும் விசாரம் உண்டாகின்றது. (முதலாவது)

விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (தைத். ஆரணி. க௦. கஉ. உஅ)
"விசுவாதிகர் மகர்ஷியாகிய உருத்திரர்" என்னுஞ் சுருதியினாலும், (உ. க. உஉ-ஆம்) சூத்திரத்தினாலும் பிரத்தியகான்மா எனப்படும் ஆன்மாவினின்று பதியாகிய பரப்பிரமம் வேறென்று நிரூபிக்கப்பட்டமையானும், (இரண்டாவது) சர்வஞ்ஞதையுடைய பிரமமாக ஆன்மா ஒர்போதும் ஆகாமையினானும், ஆன்மா பிரமத்தைத் தனக்கு வேறாகக் கொண்டுதான் உபாசிக்கவேண்டுமென்று கொள்ளின்,

(சித்தாந்தம்) சிவன் எனப் பெயர்கொண்ட பரப்பிரமம் ஆன்மாவுக்கு மேலாய விடத்தும், உபாசகன் "நான் பிரமமாகின்றேன்" என்றுஅவரைத் தியானித்தல்வேண்டும். பூர்வோபாசகர்களும்

த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே | அஹம் வை த்வமஸி|

"பகவானாகிய தேவரே! நீவிரே நான், நானே நீவிர்" என்று ஆன்மாவாகத் தியானித்தார்கள். உபாசகனுக்கு உபாசியர் வேறாயவழியும், பரப்பிரமம் தனது சொரூபத்தை அவர்க்குக் கொடுத்து அநுக்கிரகிக்கின்றது. "அது நீயாகின்றனை" என்றற்றொடக்கத்தவற்றால் அவர்களும் தமது சீடர்களுக்குப் (பிரமத்தைத்) தமது ஆன்மாவாகவே அறியுமாறு உபதேசிக்கின்றார். நிரதிசயதுக்கான்மகமாகிய நிகிலபாசபந்தச்சேதமும், எல்லையிறந்த பரமானந்தமய நிஷ்களங்கமாகிய சிவத்துவம் அடைதலுமே முக்தியாகும். ஆன்மாவுக்குப் பசுத்துவநிவிர்த்தியின்றிச் சிவத்துவப் பிராப்தி இல்லை. பசுத்துவநிவிர்த்தியும் அந்தச் சிவத்துவபாவனையின்றி இல்லை. ஆகலின், நிரந்தரம் சிவோகம் எனக் கொள்ளும் பாவனைப் பிரவாகத்தினாலே பாசம் இளக, அதனாற் பசுத்தன்மை நீங்கிய உபாசகன் சிவனேயாகின்றான். சமஸ்த தோஷகளங்கம் நீங்கிய நிரதிசயமங்களாஸ்பதமன்றோ சிவத்துவம். பரப்பிரமமும் அவ்வியல்பினதே. அவ்வப் பாவனையினாலே உபாசகனும் அவ்வாறேயாகின்றான். அதனாற்றான்,

ஶிவ ஏகோ த்⁴யேய ஶிவங்கர ஸர்வமந்யத் பரித்யஜ்ய (அதர்வசிகை)
"பிற எல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினாலே முமுட்சுவுக்குச் சிவபெருமானையொழிந்து பிறவெல்லாம் தியானயோக்கியமன்றெனப் நிஷேதிக்கப்படுகின்றன. பிராம்மணாதி தேகாபிமான முதலியவாய பசுவினியல்பு நீங்கி, நிரதிசயசொரூபானந்த சாட்சியாகிய சுவப்பிரகாச சிவரூபபராஹம்பாவத்தை அடைவதே முத்தி என்பது சமஸ்த சுருதிதாற்பரியமாதலின், பிரமபாவனையோடு பாசனை உபாசகனுக்கு முத்திகரமாகின்றது. இல்லையேற் சம்சாரநிவிர்த்தி எங்ஙனமாம்!! (௩)

(௩) பிரதீகாதிகரணம்.

சூத்திரகாரர் பின்னோர் விசேஷங் கூறுவாராயினர்.

ந ப்ரதீகே ந ஹி ஸ: (௪. க. ௪)

(௪எ௩) குறியில் (ஆன்மாவாகத் தியானம்) இல்லை, உண்மையாய் (அங்கே வழிபடற்பாலர்) அவர் அல்லர்.

மநோ ப்³ரஹ்மேத்யுபாஸீத (சாந். ௩. க௮. க)

"பிரமமாக மனசைத் (தியானிக்க)" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே மனமுதலியவற்றிற் பிரமத்தை உபாசித்தல் காணப்படுகின்றது. அவற்றினும் பிரமம் ஆன்மாவாகத் தியானிக்கற்பாலதா? இன்றேல் வேறாய்த் தியானிக்கற்பாலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

மநோ ப்³ரஹ்மேத்யுபாஸீத (சாந். ௩. க௮. க)
ஆதி³த்யோ ப்³ரஹ்மேத்யுபாஸீத|

"மனசைப் பிரமமாகத் தியானிக்க; சூரியனைப் பிரமமாகத் தியானிக்க" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் பெறப்பட்ட பிரதீகோபாசனைகளிலே பிரமதிருஷ்டியினாற் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட மனமுதலியன உபாசிக்கற்பாலன எனப் பெறப்படுகின்றது. ஆகலின், பிரதீகமானது உபாசகனாலே பிரமமாகப் பாவிக்கப்படுங்கால் அதனை ஆன்மாவாக உபாசித்தலில் யாது விரோதம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிரதீகங்கள் ஆன்மாவாகப் பாவிக்கப்படமாட்டா. பரப்பிரமம் உபாசிக்கப்படுவது அவைகளில் அன்று; ஆனாற் பிரமதிருஷ்டியினாலே மனமுதலிய உபாசிக்கற்பாலன. அங்கே மனாதிகளால் விசேடிக்கப்பட்ட பிரமமே உபாசிக்கற்பாலதாகக் கொண்டாலும், மனமுதலியவற்றுக்கும் பிரமகுணம் இல்லாமையால் விகாரமுறுதலின், இந்த விசேஷத்தையுடைய பிரமம் ஆன்மாவாகப் பாவிக்கப்படமாட்டாது. ஆயின்

சத்தியசங்கற்பமுதலிய (குணங்கள்) விசேடித்துள்ளபோது (பிரமமே ஆன்மாவாகப் பாவிக்கப்பட்டது); இன்றேல், ஆன்மாவும் விகாரமுறுதற்கு ஏதுவாகுமன்றே. ஆகலின், குறியிலே உபாசகர் (பரம) ஆன்மாவைத் தியானித்தல் கூடாது. ஈண்டுச் சிவபிரான் சாக்ஷாத்தாக உபாசியராகாரன்றே. (ச)

(ச) பிரமதிருஷ்டியதிகரணம்.

ப்ரஹ்மத்ருஷ்டி ருத்கர்ஷாத் (ச. க. ரு)

(சளச) (பிரதீகத்திற்) பிரமோபாசனை (கருதப்படுகின்றது); அதின் உற்கர்ஷத்தினால்.

பிரதீகோபாசனாவிஷயத்தில் மனம் சூரியன்முதலிய பிரதீகங்களைப் பிரமமாகத் தியானித்தல் வேண்டுமோ? இன்றேற் பிரமத்தை மனமுதலியவைகளாகப் பாவித்தல் வேண்டுமோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமத்தையே மனமுதலியவாகக் கருதிப் பிரமோபாசனை செய்யற்பாற்று. அவர் ஒருவரே பலதாதாவாக இருத்தலான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

விஶ்வாதிகோ ருத்ர: (தைத். ஆரணி. கo. கஉ. உஅ)

"விசுவாதிகர் உருத்திரர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரமம் உற்கிருஷ்டம் எனப் பெறப்படுதலின், நிகிர்ஷ்டமாகிய மனமுதலியவைகளைப் பிரமமாகக் கோடற்பாற்று. உலகத்திலே நிகிர்ஷ்டனாகிய இராசசேவகனை இராசாவாகக்கருதி அவனை வழிபடுகின்றார். பின், இராசாவைச் சேவகனாகக் கொண்டு எவரும் வழிபடுவாரல்லர். இதுதான் மிகவும் உசிதமானது. எது உற்கிருஷ்டமாகிய வஸ்துவாயிருக்கின்றதோ, அதனையே எல்லோரும் வழிபடுகின்றார். ஆகலின், பரப்பிரமம் சர்வோற்கிருஷ்டமாயிருத்தலின், அது சர்வநமஸ்காரவிஷயமாய்ப் போந்தது. "இருதம் சத்தியம்" என்னும் மந்திரத்திற் கூறப்பட்ட விசேஷத்தோடியைந்த யாதொரு பிரமமுண்டோ, 'அந்த விசுவரூபர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம் அனைத்தும் யாண்டும் மற்றையோர்க்கில்லை. இன்னும் அந்தப் பிரமம் உற்கிருஷ்டமாயிருத்தலின், நமஸ்காரவிஷயலக்ஷணம் கூறப்பட்டது. எங்ஙனமெனின்,

யஸ்ய வைகங்கட்யமாநஸ்ய ஶிரோ தர்ம உத்தரம் ஹநு: ருதம் பூர்வம் ஹநு:

யஜ்ஞோ தராவிஷ்ணுர்ஹ்ருதயம் ஸம்வத்ஸர: ப்ரஜநநம்।

(தைத். ஆரணி. உ. கசு. உரு)

"எவர் சிரசாயுள்ளாரோ, அவர்க்கு நமஸ்காரம்; தருமம் நெற்றி, பிரமா மேல் அலகு, யஞ்ஞம் கீழ் அலகு, விஷ்ணு இருதயம், சம்வற்சரம் பிரஜநநம்"

என்றற்றொடக்கத்த தைத்திரீய சுருதியிற் சிம்சுமாரான்ம நிரூபணவிஷயத்தில், இருதயாதி ரூபங்களையுடைய விஷ்ணுவாதியர்க்கு வேறாகச் சர்வோற்கிருஷ்டதேவராகிய *பரப்பிரமசிவனார்க்கே பிரதானசிரோரூபத்துவம்

𑌯𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑌚𑍍𑌛𑌿𑌰𑌃 (தைத். ஆரணி. ௨. ௧௯. ௨௫)

"சிரசாயுள்ள யாதொருத்தருக்கு நமஸ்காரம்" என்னும் நமஸ்காரவிஷயமாயுள்ள இலக்ஷணத்தினாலேதான் பொருத்திக் கூறப்பட்டது. இறுதியினும்,

𑌤𑍍𑌵𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑌸𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑌿।

(தைத். ஆரணி. ௨. ௧௯. ௨௫)

"நீவிர் செந்துக்களுக்கெல்லாம் அதிபதியாகின்றீர்; நீவிர் செந்துக்களுக்கெல்லாம்சிரேஷ்டராகின்றீர்" என அவரே சமஸ்த செந்துக்களுக்கும் அதிபதித்தன்மையாயுஞ் சிரேட்டத்தன்மையாயும் இருத்தலைக் கூறி,

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 (தைத். ஆரணி. ௨. ௧௯. ௨௫)

"உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! எல்லா நமஸ்காரமும் உமக்கே" எனச் சமஸ்த செந்துக்களுக்கும் உற்கிருஷ்டமாயிருத்தலினாற் சித்தித்த அகில நமஸ்கார பரியவசான எல்லை கூறப்பட்டது.

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌮𑌨𑍍𑌯𑌵 (யசு. வே. ௪. ரு. ௧. ௧)

"உருத்திரரே! உமது ஞானத்துக்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவைகளினால் எல்லாவற்றுக்கும் மேலாயிருத்தலினாலன்றோ மீட்டும் மீட்டும் நமஸ்காரங் குறிக்கப்பட்டது. செல்வமுதலியவற்றாற் சிறந்தவனையன்றோ உலகத்தில் வணங்குகின்றார். சர்வ நமஸ்கார விஷயத்தினாற் சர்வோற்கிருஷ்டரும், உமாசகாயரும், விரூபாக்ஷரும், ஈசுவர சப்தவிஷயமாயுமுள்ளார் பரப்பிரம வஸ்துவாகிய சிவபிரானே. சர்வோற்கிருஷ்டரும் அனைவராலும் நமஸ்கரிக்கற்பாலருமாகிய அவர் வியாபித்திருத்தலினால் மனம் ஆதித்தியன் முதலிய பிரதீகங்கள் அனைத்துக்கும் உபாசியத்துவம் எய்திற்று. ஆதலினாற்றான்

𑌶𑍍𑌵𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌵𑌪𑌤𑌿𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌵𑍋 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 (யசுர். வே. ௪. ரு. ௪. ௨)

"சுவானங்களுக்கும், சுவானபதிகளுக்கும் நமஸ்காரம், நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவைகளிலே சுவானமுதலிய அத்தியந்த நிகிருஷ்ட செந்துக்களினும் சர்வோற்கிருஷ்டராகிய பிரமம் வியாபித்திருத்தலின் சுருதியானது நமஸ்காரம் கூறுகின்றது. ஆகலின், உற்கிருஷ்டசம்பந்தத்தினாலே நிகிருஷ்ட செந்துக்களுக்கும் உபசாரம் சொல்லக் காணப்படலான், விசுவாதிகமாகிய பிரமதிருஷ்டியினாலே மனமுதலியவற்றுக்கும் உபாசியத்துவம் சித்தித்தது.

(ரு)

---

* சிவபெருமானைத் திவ்ய சிம்சுமார விருக்ஷத்தின் சிரசென்று கூறும் இவ்வுண்மையை அரதத்தாசாரியரருளிய யஸ்மை நம: (𑌯𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌃) என்னும் சதுர்வேத தாற்பரியசங்கிரகசுலோகத்தானும் அறிக.

(௫) ஆதித்தியாதிமத்தியதிகரணம்.

ஆதித்யாதிமதயஶ்சாங்க உபபத்தே: (௪. க. ௬)

(௪௭௫) அங்கத்திலே ஆதித்தியன் முதலாயினோர் திருஷ்டிகளும் (தியானிக்கப்படல்வேண்டும்); பொருத்தமாதலின்.

மேலை அதிகரணத்திலே பிரமம் மேலாதலின், ஆதித்தியன் முதலாயினோர் உபாசனையிற் பிரமமாக உபாசிக்கற்பாலர் எனக் கூறப்பட்டது.

ய ஏவாஸௌ தபதி தமுத்கீதமுபாஸீத (சாங். க. ௩. க)

"இங்கே எரிகிறவனை உற்கீதமாகத் தியானிக்க" என்றற்றொடக்கத்தவைகளிலே (விதிக்கப்பட்டவாறு), கர்மாங்கோபாசனைகளில், ஞாயிறு முதலியவற்றை உற்கீதமாகவா? அல்லது உற்கீதத்தை ஆதித்தியனாகவா? தியானிக்க வேண்டும் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உற்கீதமுதலியவும் ஞாயிறுமுதலியவும் (யஞ்ஞ) கன்மாங்கங்களாகவும் பிரமரூபங்களாகவும் இருத்தலினால், இரண்டில் ஒன்றாக்கேனும் நியமம் விதிக்கப்படவில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆதித்தியன் முதலாயினோர் கன்மங்களில் ஆராதிக்கற்பாலராய் உற்கிருஷ்டமாயிருத்தலின், கர்மாங்கமாயுள்ள உற்கீதமுதலியன ஞாயிறு முதலியவாக மதிக்கற்பாலன. அங்ஙனம் ஆதித்தியன் முதலியவாக மதிக்கப்பட்ட உற்கீதாதி கன்மங்கள் பெரும்பயனை விளைப்பனவாம்.

யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம் பவதி (சாங். க. க. ௧௦)

"ஞானத்தோடு செய்யப்படும் எதுவும் அதிபலமாகும்" என்னுஞ் சுருதியினால், சுவயமாகச் செய்யப்படும்போது வீரியமாயுள்ளது ஞானத்தோடியைந்து செய்யப்படும்போது மகாவீரியமுடையதாயும் பெரும்பயனை விளைக்கக் கூடியதாயுமிருக்கும் என அறியப்படுகின்றது. இங்ஙனம் அவ்விரண்டும் பிரமமுதலிய விஷயத்திற் சமமாயிருப்பினும், உற்கீதமுதலியன யஞ்ஞகருமங்களாக விதிக்கப்பட்டிருந்தாலும், அவ்வுற்கீதமுதலியன செய்யப்படவேண்டியவாய பலசாதனமுடைமையானும், ஆதித்தியன் முதலாயினோர் அதற்கு மாறுயிருங்குமியல்பினராய், அங்ஙனம் பலசாதனமாகாமையானும் உற்கீதமுதலிய கர்மாங்கங்கள் ஆதித்தியன் முதலியோராக உபாசிக்கற்பாலனவாம். (௬)

(௬) ஆசீநாதிகரணம்.

ஆஸீநஸ்ஸம்பவாத் (௪. ௧. ௭)

(௪௭௬) இருத்தல்; கூடுமாதலின்.

உபாசனை எப்படிச் செய்யவேண்டும் என்று விளக்கப்பட்டது. ஈண்டு உபாசனத்துக்கு ஆசன நியமம் உண்டா? இன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சுருதியானது ஒருவன் இருந்து உபாசித்தல் வேண்டும் என ஓரிடத்தும் நியமம் விதிக்காமையானும், மானச வியாபாரமாகிய உபாசனை எல்லா நிலையினும் பொருந்துமாதலானும், உபாசகனுக்கு ஆசன நியமம் இல்லை எனின்,

(சித்தாந்தம்) ஒருவன் இருந்துகொண்டே தியானித்தல் வேண்டும். ஏதனாலெனின், அவ்வியல்பினனுக்குத்தான் ஏகாக்கிரசித்தம் நேரும். ஆசன நியமச்சுருதியும் இருக்கின்றது. அது வருமாறு:—

விவிக்ததேசே ச ஸுகாஸநஸ்த²꞉ ஶுசி꞉ ஸமக்³ரீவஶிர꞉ஶரீர꞉। அத்யாஶ்ரமஸ்த²꞉ ஸகலேந்த்³ரியாணி நிருத்⁴ய ப⁴க்த்யா ஸ்வகு³ரும் ப்ரணம்ய। ஹ்ருத்புண்ட³ரீகம் விரஜம் விஶுத்³த⁴ம் விசிந்த்ய மத்⁴யே விஶத³ம் விஶோகம்। அசிந்த்யமவ்யக்தமநந்தரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்³ரஹ்மயோநிம்। ததா²தி³மத்⁴யாந்தவிஹீநமேகம் விபு⁴ம் சிதா³நந்தமரூபமத்³பு⁴தம்। உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபு⁴ம் த்ரிலோசநம் நீலகண்ட²ம் ப்ரஶாந்தம்। த்⁴யாத்வா முநிர்க³ச்ச²தி பூ⁴தயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ꞉ பரஸ்தாத் (கைவ)

"தனியிடத்திலே சுகாசனத்திருந்து, சுத்தனாகி நேரிய கழுத்துத்தலை சரீரமுடையனாய், வைதிக பாசுபதவிரதமுடையனாய், இந்திரியங்கள் அனைத்தையுமடக்கி அன்பினோடு தன் குருவை வணங்கி, இதயகமலத்தைத் தூளற்றதாய்ச் சுத்தமாகக் கருதி, அதனடுவே தெளிவுடையராய், சோகமிலராய், அனந்தராய், வெளிப்படாதவராய், நினைத்தற்கரியராய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமகாரணராய், முதனடுவீறிலராய், ஏகராய், வியாபியாய், சிதானந்தரூபியாய், நிஷ்களராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசன்னராயுள்ளாரைத் தியா

---

* ஆசன நியமம் கூறிய இச்சூத்திரத்துக்கு மூலமாயுள்ளது நீலகண்ட சிவாசாரியரால் இச்சூத்திர பாஷ்யத்திலே பிரமாணமாக உதகரிக்கப்பட்டதும், சிவபெருமானை உமாசகாயர் என்று நேரே உணர்த்தியதுமாகிய கைவல்லிய சுருதியேயாம். இப்பரசுருதியை நிர்க்குணப் பிரமத்துக்குத் தாழ்ந்த சகுணப்பிரம சுருதி என்று திரிபுபட உணர்ந்துகொண்ட சங்கராசாரியர்க்கும், சைவசுருதி என்றோர்ந்துகொண்ட இராமாநுஜர்க்கும் உருசிக்காமையால் இக்கைவல்லிய சுருதி இந்த ஆசனநியமம் உணர்த்திய சூத்திரத்துக்குப் பிரமாணமாக அவ்விருவராலும் உதகரிக்கப்படாது தவிர்க்கப்பட்டது. இதனால் வியாசர் சூத்திரக்கருத்து ஓர்புறமும் மாயாவாதாசாரியர் வைணவாசாரியர் கருத்து மற்றோர் புறமுமாக முரணுண்டு போனமை வெளிப்படை. அஃதன்றிக் கைவல்லியோபநிடதத்தை நவீனோபநிடதமென்பார் கூற்றும் போலியாமென மறுக்க.

னித்து, முனியானவன் பூதகாரணராய், சமஸ்த சாக்ஷியாயிருப்பவரை இருளுக்கு மேலே போயடைகின்றான்'' எனக் கைவல்லியோபநிடதம் கூறுகின்றது. ஆகலின், ஒருவர் இருந்தே பிரமத்தைத் தியானித்தல் வேண்டும். (எ)

த்⁴யாநாச்ச (ச. க. அ)

(சஎஎ) தியானத்தினாலும்.

த்⁴யாத்வா முநிர்க³ச்ச²தி பூ⁴தயோநிம் (கைவ)

"உயிர்களுக்குக் காரணராயிருப்பவரைத் தியானித்துப் போயடைகின்றான்''

காரணந்து த்⁴யேய꞉ ஸர்வைஶ்வர்யஸம்பந்ந꞉ ஸர்வேஶ்வர꞉ ஶம்பு⁴ராகாஶமத்⁴யே (அதர்வசிகை)

"சர்வைசுவரிய சம்பன்னரும், சர்வேசுவரரும், சம்புவும், காரணருமாயுள்ளார் ஆகாயமத்தியிலே தியானிக்கற்பாலர்''

த்⁴யாநநிர்மத²நாதே³வ (கைவ)

"தியானமாகிய மதனத்தினாலேதான்'' என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, பாசத்தைச் சேதிக்கும் காரணமாய உபாசனை தியானரூபமாய் இருப்பதாகப் புலப்படலானும்,

த்⁴யாயதிப³கோ த்⁴யாயதி ப்ரோஷிதம் ப³ந்து⁴ம்।

"கொக்குத் தியானிக்கின்றது; பந்துவானவன் இல்லாதோனையுற்றுச் சிந்திக்கின்றான்'' என்பவைகளிலே கூறுதல் போல, அங்கசேட்டையற்றவராய், உறுதியாகிய கட்பார்வை உற்றவராய், ஒரேவிஷயத்தில் மனஞ் செலுத்தினவராயுள்ளவர்களிடத்திலே தியானம் விவகரிக்கப்படுகின்றமையானும், மற்றோரியல்பினதாகிய அன்னிய சிந்தனையினால் தடுக்கப்படாது தைல தாரைபோலப் பிரிவுபடாத நினைவின் தொடர்ச்சிரூபமாகிய ஏகாக்கிரசித்தம் தியானத்தில் ஆவசியகம் இன்றியமையாதாதலினானும், தியானஞ் சித்திக்குமாறு ஆசனநியமம் ஆவசியகம் கவனிக்கற்பாற்று. (அ)

அசலத்வஞ்சாபேக்ஷ்ய (ச. க. கூ)

(சஎஅ) சலியாமையையும் அபேக்ஷித்து.

த்⁴யாயதீவ ப்ருதி²வீ த்⁴யாயதீவாந்தரிக்ஷம் (சாந். எ. சு. க)

"பிருதிவி தியானித்தல்போல, அந்தரிக்ஷம் தியானித்தல்போல'' என்றற்றொடக்கத்தவாக்கியங்களிலே பிருதிவியாதிகளின் சலியாமையை அபேக்ஷித்துத் (தியானம்) பிரயோகிக்கப்படுகின்றமையான், ஒருவர் இருந்தே தியானித்தல்வேண்டும். பூமிமுதலியபோலச் சலனமற்றிருப்பவனுக்கே தியானசந்ததி கூடும். (கூ)

ஸ்ம்ரந்தி ச (ச. க. கO)

(சஎகூ) ஸ்மிருதியும் கூறுகின்றது.

ஶுசௌ தே³ஶே ப்ரதிஷ்டா²ப்ய ஸ்தி²ரமாஸநமாத்மந꞉ । நாத்யுச்ச்²ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுஶோத்தரம்। தத்ரைகாக்³ரம் மந꞉ க்ருத்வா யதசித்தேந்த்³ரியக்ரிய꞉। உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யாத்³ யோக³மாத்மவிஶுத்³த⁴யே (பகவற்கீதை. சு. கக, கஉ)

"பரிசுத்தமாகிய ஓர் ஸ்தானத்திலே அதிக உயரமல்லாததும், அதிக தாழ்வில்லாததும், தருப்பை, மான்றேல், வஸ்திரம் என்பவைகளின் ஒன்றினால் ஆக்கப்பட்டதுமாகிய தன் ஆசனத்தை ஸ்திரமாக்கி, அதில் உட்கார்ந்து, மனசை ஏகாக்கிரமாக்கி, சித்த இந்திரியங்களை அடக்கி, ஆன்மசுத்தியின் பொருட்டு யோகஞ்செய்க என உபாசகர்களுக்கு ஆசனநியமாதிகளை ஸ்மிருதி விதித்தலின், ஒருவர் இருந்துகொண்டே பிரமத்தை உபாசிப்பாராகஎன்பது சித்திக்கின்றது. (கo)

(எ) யத்திரைகாக்கிராதிகரணம்.

யத்ரைகாக்³ரதா தத்ராவிஶேஷாத் (ச. க. கக)

(சூ௮o) எங்கே ஏகாக்கிரம் (இயலுமோ), அங்கே தியானம் கூடும்; பேதமில்லாமையான்.

உபாசகனுக்கு ஆசனநியமம் கூறப்பட்டது. அதுபோலத் தேசமும் காலமும் நியமமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அங்ஙனமோர் நியமம் இருத்தல்வேண்டும் என்பது யதார்த்தமே. எங்ஙனமெனின்,

ப்³ரஹ்மயஜ்ஞேந யக்ஷ்யமாண꞉ ப்ராச்யாம்ʼ தி³ஶி (தைத். ஆரணி. உ. கக. கரு)

"பிரம யஞ்ஞஞ் செய்யமுயன்றோன் கிழக்கு நோக்கி அங்ஙனஞ் செய்வானாக" எனத் திக்கு நியமமும்,

ப்ராசீந ப்ரவணே வைஶ்வதே³வேந யஜேத।

"கிழக்குச் சரிந்த இடத்தில் வைசுவதேவரைக்கொண்டு யஞ்ஞஞ் செய்க" எனத் தேசநியமமும்,

அபராஹ்ணே பிண்ட³பித்ருயஜ்ஞேந சரந்தி।

"பிண்டப்பிதிர் யஞ்ஞங்கொண்டு பிற்பகலில் யஞ்ஞஞ் செய்கின்றார்" எனக் காலநியமமும் இருத்தல் போல, ஈண்டும் உபாசனை கன்மம் சுருதியில் விதிக்கப்பட்டமையின் பேதமில்லையாமெனின், திக்கு முதலிய நியமம் யுக்தமாம் எனின்,

(சித்தாந்தம்) உபாசனாவிஷயத்திலே திக்குமுதலிய நியமம் இல்லை. ஏகாக்கிர சித்தமே உபாசனைக்கு முக்கியசாதனம். உண்மையில் அங்குத் திக்குமுதலிய அபேக்ஷை யில்லை. எங்கே இராகத்துவேஷ முதலிய குற்றங்களுக்கு ஏதுவில்லையோ, அங்கே மனசு ஏகாக்கிரமாய் இருக்கின்றது. அவ்வளவுதான் வேண்டியது;

விவிக்தே தேசே து ஸுகாஸநஸ்த: (கைவ)

"தனியிடத்திலே சுகாசனஸ்தனாய்" என்று சுருதி கூறுதலின். சிவசந்நிதியிற் செய்தால் அனந்தமாம் என்றது ஜபமுதலிய விஷயம் பற்றியன்றித் தியானவிஷயம் பற்றி அன்று. ஏகாக்கிரம் முக்கியமாய் வாய்ப்பின் அங்குஞ் செய்யலாம். ஆகலின், ஏகாக்கிரசித்தத்தைமாத்திரம் சாதகஞ் செய்யும் தியானரூபமாயுள்ள உபாசனைக்குத் திக்குத் தேச கால நியமமில்லை. (கக)

(அ) ஆப்பிராயணாதிகரணம்.

ஆப்ராயணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம் (சு. க. கஉ)

(சூஅக) (உபாசனை) மரணாந்தம் வரையும் (அப்பியசித்தல் வேண்டும்); யாதினாலெனின், அங்கும் அது காணப்பட்டிருக்கின்றது.

மேலை அதிகரணத்திற் பிரமோபாசனையிலே திக்காதி நியமம் இல்லை என்று கூறப்பட்டது. ஈண்டுப் பின்னர் அதற்கு ஒரு முடிபு உண்டா? இல்லையா? என விசாரிக்குமிடத்து,

(பூருவபக்ஷம்) விருப்பமுள்ளவரையில் உபாசனை அநுஷ்டிக்கலாம், இன்றேல் நிறுத்திவிடலாம் எனின்,

(சித்தாந்தம்) மரணபரியந்தம் தினந்தோறும் உபாசனை செய்யற்பாற்று, ஓர்போதும் நிறுத்தற்பாற்றன்று;

அஹரஹர்வா ஏவம்வித் ஸ்வர்க்கம் லோகமேதி (சாங். அ. ங. ங)

"இங்ஙனம் தினந்தோறும் தியானிப்பவன் சுவர்க்கத்தை அடைகின்றான்" எனவும்,

ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே।
(சாங். அ. கரு. க)

"சீவகால முழுமையும் இங்ஙனம் ஒழுகுகின்றவன் பிரமலோகத்தை அடைகின்றான்" எனவும் மரணாந்தம் வரையில் உபாசனை உளதாகச் சுருதியிற் கூறப்படலான்; பிரமநிலைக்குச் செலுத்தும் பிரமபாவனை செய்துவருங்கால் அதனை இடையில் விட்டுவிடுதலாகாது. உபாசகர்கள் பிரமத்தைத் தமது ஆன்மாவாக இடையீடின்றித் தியானித்த பின்னரே பிரமரூபம் உபாசகன்

களிற் பிரகாசிக்கின்றது. ஆகலின், பிரமரூபம் பிரகாசிக்கும்பொருட்டு முற்றறிவும், வரம்பிலின்பமும், சுவயம்பிரகாசமும், தன்வயமும், பேரருளும், முடிவிலாற்றலுமுடைய பரப்பிரமம் இடையீடின்றிப் பாவிக்கற்பாற்று.

யாதெ ருத்ர சிவா தநூரகோராபாபகாசிநீ | தயா நஸ்தநுவா சந்தமயா கிரிசந்தாபிசாகசீஹி (யசுர். வே. ச. ரு. க. க)

"உருத்திரரே! காருண்ணியமும் மனோகரமுமாய்ப் பாவமில்லாதோரிடத்து விளங்குவதாயும் ஆனந்தருபமாத்திரமாயுமுள்ள எந்தத் தனுவுண்டோ, அந்தத் தனுவோடு மங்களரூபமாகக் கிரியிலிருந்து உமது பூரணப் பிரகாசத்தோடு எங்களுக்கு விளங்குவீராக" என்னும் உருத்திரத்தினாலே, பிரமசொரூபம் உபாசகரிடத்துப் பிரகாசிப்பதாகக் கேட்கப்படுகின்றது. அஃதாவது: அநாதிமல கன்மவாசனைகளால் ஏறுண்ட தேவாதி சரீராபிமான பிரவாக சித்தமாயும், ஆத்தியான்மிகாதிபேத பின்னமாயும், சகித்தற்கரிதாயுமுள்ள சம்சாரநோயை உபாசகர்களிலிருந்து உருக்கிவிடுதலினால் உருத்திரர் எனப்படுகின்றார். பரப்பிரமசிவனாராகிய பரமேசுவரரே (ஈண்டு) உருத்திரர் என விளிக்கப்பட்டனர்.

ஹே ருத்ர=பரமேசுவரரே!

யாதெ தநூ: சிவா=உமது சரீரம் எதுவோ, அது சிவை(அருள்); அஃதாவது அது நித்தியப்பிரசித்தமாய், பாவமிலாததாய், (அதனால்) பரமவிசுத்தமாய், பரமமங்களமயமாய், பரமமங்களத்தைக் கொடுப்பதென்பது. (அதனால்) அது கோரமிலாது சிவத்துவத்தோடியைந்தது என்பது.

பாப என்றமையால் உபலக்ஷணைகொண்டு புண்ணியமுங் கொள்ளப்பட்டது. புண்ணியபாவங்களையெல்லாம் ஞானக்கினிகொண்டு தகிக்கும் முக்தான்மாக்கள் அபாபா எனப்படுவர்.

அபாபகாசிநீ=இவர்களிடத்தில் (சிவபிரான்) விளங்குதலால் அபாபகாசிநீ எனப்படுவர்.

தயா சந்தமயா=(ஸதேகோ ப்ரஹ்மண ஆநந்த:) "அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என்றற்றொடக்கத்த சுருதியினாலே சித்தித்தவாறு, ஒப்பிறந்த ஆனந்தருபமாகிய எந்த உமது தனு உண்டோ, அதனால் எங்களுடைய சம்சாரகாரணமாகிய புண்ணியபாவத்தொகுதியை அகற்றி, எங்களிடத்திலே சுவப்பிரகாசத்தோடு சாக்ஷாத்காரமாக மிகுதியும் விளங்குக" என உபாசகர் வேண்டுகின்றனர்.

ஆகலின், உபாசகருடைய ஆன்மாவிற் பிரமசொரூபம் பிரகாசிப்பதால் அந்தப் பிரகாசத்துக்குக் காரணபூதமாகிய பிரமபாவனையானது சிவபரியந்தம் அப்பியசித்தல்வேண்டும், ஒர்காலும் அதனை இடையில் விச்சேதம் செய்தல் கூடாது. (கஉ)

(கூ) ததநிகமாதிகரணம்.

ததயிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத் (ச. க. கங)

(சூஅ௨) இதன் பேற்றிலே, உத்தரபாவங்களின் பற்றுமையும், பூருவபாவங்களின் அழிவும் (எய்தும்); இது கூறப்பட்டிருத்தலின்.

மேலை அதிகரணத்திலே பாவங்கள் நீங்கிய உபாசகருடைய ஆன்மாவிலே மிகுதியும் பிரமசொரூபம் பிரகாசிப்பதென நியாயங்களோடு கூறப்பட்டது.

இப்போது உபாசகன் விஷயத்திற் பாவக்ஷயம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபாசகர்களுக்கும் (பாவ) போகமில்லாது பாபக்ஷயம் இல்லை;

நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி।

"கற்பகோடி காலஞ் சென்றாலும், துய்க்கப்படாது கன்மம் நசியாது" என்னும் வசன முண்மையான். போகத்தின்பொருட்டே சரீரமெய்துங்காற் பின்னரும் கன்மம் வருகின்றமையின், மோக்ஷத்துக்குக் காலம் வாராது எனின்,

(சித்தாந்தம்) உபாசகர் விஷயத்திற் சகல பாவகன்மமும் ஒழிந்து போம். என்னை! உபாசனை தொடங்கியபோதே அதின் சாமர்த்தியத்தினாலேதான் முன் செய்த பாவங்களின் விநாசமும், பின் செய்யும் பாவங்களிற் றொடக்குண்ணாமையும் எய்துகின்றன; எங்ஙனமெனின்,

தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாநஃ ப்ரதூயந்தே (சாந். ரு. உச. ங)

*"பஞ்சு அக்கினியிலிடப்பட்டு எரிந்துபோதல் போல, அவன் பாவங்க

யதாவஹ்நிர்மஹாதீப்தஃ ஶுஷ்கமார்த்ரம் ச நிர்தஹேத்।
ததா ஶுபாஶுபம் கர்ம ஜ்ஞாநாக்நிர்தஹதே க்ஷணாத்॥
பத்மபத்ரம் யதா தோயைஃ ஸ்வஸ்தைரபி ந லிப்யதே।
ஶப்தாதிவிஷயாம்போபிஸ்ததா ஜ்ஞாநீ ந லிப்யதே॥

"எங்ஙனம் பேரொளியுடைய அக்கினியானது உலர்ந்த விறகையும் உலராவிறகையும் தகிக்கின்றதோ, அங்ஙனம் ஞானாக்கினியானது புண்ணியபாவங்களை க்ஷணப்போதிலே தகித்துவிடுகின்றது" எனவும், எங்ஙனம் தாமரையிலையானது தனக்கு ஆதாரமாய் நிலைத்த ஜலங்களினாற்றொடக்குண்ணவில்லையோ, அங்ஙனம் ஞானி சப்தாதிவிஷயங்களினாற்றொடக்குண்ணான்" எனவும் சிவதருமோத்தராகமம் சாந்தோக்

ளெல்லாம் எரிந்துபோம்''

யயாவுஷ்கரவுலாஸ ஆவொ ந ஸ்ரிஷ்யந்த எவம்வேவம் விதிவாவம் உ-டிநஸ்ரிஷ்யதெ (சாந். அ. கச. ங)

'தாமரையிலையில் நீர் ஒட்டாதது போல, அதனை அறிந்தவரிடத்துப் பாவ கர்மம் பற்றாது'' என்று சுருதி கூறுதலின். ஆகலின், முற்பாவங்களின் நாசமும் பிற்பாவங்களின் தொடக்குறாமையும் எய்துகின்றனவே. பாவப்பயன் துய்க்கப்படாது தொலையாதென்பது அஞ்ஞானியின் விஷயமாதலின், ஈண்டு விரோதமுறாது. (கங)

(கo) இதராச்சிலேஷாதிகரணம்.

உதரஸ்யாப்யெவமஸம்ஸ்லேஷ: பாதெ து (அ. ச. கச)

(சஅங) மற்றதற்கும் அவ்வாறே பற்றில்லை; ஆனால் **மரணத்தில்.**

வித்துவானுக்குப் பாவலேசம் இல்லை என நிரூபிக்கப்பட்டது. ஈண்டு அதற்கு விரோதமாகிய புண்ணியலேசம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஞானவிரோதமாகிய பாவத்துக்கு க்ஷயமிருத்தல் யுக்தம். வித்தைக்கு அங்கமாக உடன் செல்லவேண்டுதலின் புண்ணியத்துக் கன்றாம் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கப்படுகின்றது. வித்துவானுடைய புண்ணியமும் முத்திக்கு விரோதமாய், விரும்பாத பலத்தையுடைமையால் (அவனைப்)பற்றாது நாசமுறும். வித்தைக்கு அநுகுணமாய ஆரோக்கிய முதலிய பயனாகிய புண்ணியம் மரணகாலத்தில் ஒழிந்துபோம். வித்தைக்கு அங்கமாகிய கன்மமோ எனின், காமிய பலாதி சம்பந்தமில்லாமையாற் பற்றாது. ஆகலின், வித்துவான் விஷயத்திற் புண்ணிய லேசமும் இல்லை என நிர்ணயிக்கப்பட்டது. (கச)

(கக) அநாரப்தகாரியாதிகரணம்.

அநாரப்தகாயெ்யெவ து பூவெ் தடவயெ: (அ. க. கரு)

(சஅச) ஆனாற் பயன்கள் கொடுக்க ஆரம்பிக்காத முந்

ஷிய சுருதிப்பொருட்கியைந்து கூறிற்று.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(திருக்குறள். கூகO)

திய புண்ணியபாவங்கள் மாத்திரம்; அது எல்லையாகக் குறிக்கப்பட்டமையின்.

மேலே அதிகரணத்திலே, வித்துவானுக்கு உத்தர பூருவ புண்ணிய பாவகளின் தொடக்குறமையும் நாசமும் நிரூபிக்கப்பட்டன.

ஈண்டு அந்தப் பிராரப்தகன்ம காரியங்களுக்கும் நாசமுண்டா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஸவெ-லவாவூாநஃ வூர-வியனெ

"பாவமெலாம் ஒழிகின்றன" எனச் சுருதியானது பேதமின்றிச் (சகலபாவங்களையும்) கூறினமையின், வித்தியாமார்க்கத்திற் பிரவேசித்தற்கு முன்னர்ச் செய்யப்பட்ட புண்ணியபாவங்களும் நாசமுறுமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வித்தையிலே பிரவேசித்தற்கு முன்னர்ச் செய்யப்பட்ட பலத்தைக் கொடுக்கப் பிரவிருத்திக்கும் புண்ணியபாவங்களுக்கு விநாசம் எய்தும்.

தஸ்ய தாவடெவ விரம யாவந விமொக்ஷ்யெ ஸம்பஸ்ஸ்யெ|

(சாந். சு. கச. உ)

"சரீரத்திருந்து விடுபடாதகாலம்வரையும் அவனுக்குத் தாமசம், பின்னர்ப் பூரணனுவன்" எனச் சுருதியானது சரீரபதனத்தை எல்லையாக வைத்துக் கூறலின், பேற்றைக் கொடுக்க முயன்ற பிராரப்த புண்ணிய பாவத்துக்கு நாசமில்லை. (கரு)

(கஉ) அக்கினிகோத்திராதிகரணம்.

அக்நிஹொத்ராதி து தத்காய்யாயெவ தத்ஶநாத் (அ. க. கசு)

(சஅரு) ஆயின் அக்கினி கோத்திரமுதலியன அது அடைதற்கே காரணமாகின்றன; சுருதியிலே காணப்படுகின்றமையான்.

மேலே அதிகரணத்திலே வித்துவானுக்குப் புண்ணியபாவங்கள் பற்றுமையும் (அவை) நாசமுறுதலும் நிரூபிக்கப்பட்டன. மரணபரியந்தம் உபாசனை நிலைக்கவேண்டும் எனவுங் கூறப்பட்டது.

ஆயின் இப்போது அக்கினிகோத்திரமுதலியவும் மரணபரியந்தம் நிலைத்தல் வேண்டுமா? இன்றேல் மத்தியில் விடப்படல்வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அக்கினிகோத்திரமுதலியன மரணபரியந்தம் அநுட்

டிக்கவேண்டியதில்லை; செய்தாலும் அது நாசமுறுதலான். அப்பிரயோசனமாகிய விஷயத்தில் எவனுக்கும் மனசு பிரவிருத்திக்காதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அக்கினிகோத்திரமுதலியன வித்தைக்கு அநுகூலமாயிருத்தலின், மரணபரியந்தம் அநுட்டிக்கத்தக்கது. அவ்வாறே சுருதியும்

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா(அ)நாசகேந (பிரு. சு. ச. உஉ)

"பிராமணர் வேதாநுவசனத்தினாலும், யஞ்ஞத்தினாலும், தானத்தினாலும், தபசினாலும், உபவாசத்தினாலும் பிரமத்தை அறிய நாடுகின்றனர்" என்று கூறுகின்றது. ஈண்டு வேதாநுவசனம் என்றது வேதாப்பியாசத்தின் மேற்று. (அஃதாவது) சிவபெருமானை அடைதற்குச் சாதனமாகிய பரமஞான ஹேதுவாயுள்ள அத்தியான்ம வாதங்களாகிய வேதமந்திரங்களின் ஜப ஆவிருத்தியேயாம்.

அத ஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசு:| கிம் ஜப்யேநாம்ருதத்வம் ப்ரூஹீதி| ஸஹோவாச யாஜ்ஞவல்க்ய: சதருத்ரீயேணேதி| ஏதாநி ஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி ஏதைர்ஹவா அம்ருதோ பவதி (ஜாபாலம்)

"பின்னர்ப் பிரமசாரிகள் அவரை நோக்கி, பகவானே! அமிர்தத்துவத்தை அடைதற்கு எம்மந்திரங்கள் செபிக்கற்பாலன என்று கேட்ப, யாஞ்ஞவற்கியர் சதருத்திரியத்தினாலே என்றும், இவை அமிர்தத்தின் பெயர்களாம் என்றும், அவற்றால் ஒருவன் அமிர்தத்துவத்தை அடைகின்றான்" என்றும் கூறினராக ஜாபாலோபநிடதத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

யஶ்சதருத்ரீயமதீதே ஸோ(அ)க்நிபூதோ பவதி| ஸவாயுபூதோ பவதி| ஸஸுராபாநாத் பூதோ பவதி| ஸ ப்ரஹ்மஹத்யாயா: பூதோ பவதி| அத்யாஶ்ரமீ ஸர்வதா ஸக்ருத்வா ஜபேத் அநேந ஜ்ஞாநமாப்நோதி ஸம்ஸாரார்ணவநாஶநம் (கைவ)

"தினந்தோறும் பிராமணன் சதருத்திரீயத்தைப் படிக்கின்றான்; அக்கினியினாலே சுத்தமாகின்றான்; வாயுவினாலே சுத்தமாகின்றான்; சுராபானத்தினின்று நீங்கிச் சுத்தனாகின்றான்; பிரமகத்தியினின்று சுத்தனாகின்றான்; ஈவன் அத்தியாசிரமியாய்ப் (பாசுபதவிரதனாய்) எப்போதுமேனும், ஓர் முறையேனும் ஒருவன் (அதனை) செபிக்க; இதனால் ஞானத்தை அடைகின்றான்; சம்சாரசாகரம் ஒழிந்துபோகின்றது" எனக் கைவல்லியோபநிடதத்திற் கூறப்படுகின்றது. (ஈண்டு) பிரமத்தைப் போதிக்கும் சதருத்ரீயமந்திரங்

களை அப்பியசித்தலாற் சம்சாரத்தை நாசமாக்கும் பரமஞானம் எய்துகின்றது. ஞானத்துக்கு விரோதமாகிய பாவத்தின் க்ஷயமும் எய்துகின்றதெனப் புலப்படுகின்றது.

ஸ்தாநிஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி (ஜாபாலம்)

“இவை அமிர்தத்தின் பெயர்கள்” என்றமையால் அமிர்தரும், அநாதிமுத்தருமாகிய சிவனாரது நாமங்களை அடக்கிய சதருத்திரீயசெபத்தினால், சகலபாவங்களும் க்ஷயமாகும் என்று பிரதிபாதிக்கப்படுகின்றமையின், பரமசிவனாரதுசிவமுதலிய நாமதேயங்களின் அப்பியாசமும் வித்தியாவிரோதியாகிய சகல பாவக்ஷய ஹேதுவெனப் பெறப்படுகின்றது. அங்ஙனம் முண்டகோபநிடதமும்,

ஸ்வபசோ யத்யபி சிவ இதி வாசம் வதேத் தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்வஸேத் தேந ஸஹ புஞ்ஜீத (முண். ந. உ. ௬)

* “சண்டாளனாயிருப்பினும் சிவனென்று சொல்வானேல், ஒருவர் அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடிருந்துண்க” என்று கூறுகின்றது. ஈண்டுப் பிரமத்தை உணர்த்தும் சிவசப்தத்தை உச்சாரணஞ் செய்தன்மாத்திரத்தினாலே, அத்தியந்த அசுத்தனாகிய பாதகனும் பரமசுத்தனாகின்றான் எனப் பெறப்படுகின்றது. பின்னரும் பிறிதோரிடத்தில்,

யோ அதர்வசிரஸம் ப்ராஹ்மணோ அதீதே|

“அதர்வசிரசைப் பிராம்மணன் தினந்தோறும் படிக்கின்றான்” என்றுதொடங்கி, அப்படிப்படிப்பவனுக்குச் சகல பாவமும் க்ஷயமாகும் என்று கூறி,

ஸக்ருஜ்ஜப்த்வா சுசி: பூத: கர்மண்யோ பவதி| த்விதீயம் ஜப்த்வா காணபத்யமவாப்நோதி| த்ருதீயம் ஜப்த்வா தேவமேவாநுப்ரவிசதி|
(அதர்வசிரசு)

“ஒருமுறை செபித்தாற் சுசியுடையனும், சுத்தனும், கன்மத்துக்கு யோக்கியனுமாகின்றான்; இருமுறை செபித்தாற் காணபத்தியத்தை அடைகின்றான்; மும்முறை செபித்தாற் சிவபிரானைப் போய் அடைகின்றான்” என மோக்ஷபலமும் பெறப்படுகின்றது.

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவஞ்சோத்தராரணிம் (கைவ)

“ஆன்மாவை அரணியாகவும், பிரணவத்தைமேல் அரணியாகவுங் கொண்டு” என்று கூறிய சுருதியாற் பிரணவாதியப்பியாசம் பாசத்தைச் சேதிக்குமெனது

*இந்தச் சுருதி சங்கராசாரியர் காலத்துக்குப் பிற்பட்டிலதாய், அச்சங்கராசாரியர் காலத்துக்கு முற்பட்டிருந்த நீலகண்டசிவாசாரியர் காலத்துளதாய்ப் போந்ததென்பதற்கு இச்சைவபாடியத்து (கூக-ஆம்) பக்கத்து உதகரிக்கப்பட்ட வாசிஷ்டலைங்கோபப்பிருங்கணமே போதியசான்றும்.

வாதல் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிறவிடத்திலும் காணப்படுகின்றது. ஆகலின், சிவசம்பந்தமாகிய வேதமந்திரங்கள் பாவக்ஷயம் செய்தல்வாயிலாகப் பரமஞானத்துக்கு ஹேதுவாகி மோக்ஷசாதனமாயிருத்தலினால், வித்துவானும் அந்த வேதாப்பியாசத்தைச் சிவபரியந்தம் அப்பியசிக்க. இங்ஙனஞ் சிவபெருமானுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பலங்களையுடையனவாய அக்கினிகோத்திராதி யஞ்ஞங்களும் அவரால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு அவரை ஆராதிக்கும் ரூபமுடைமையான் அவை அப்பியசிக்கப்படல் வேண்டும். இங்ஙனம் தானாதிகளும் ஆவசியகம் செயற்பாலன. ஆகலின், வித்துவானும் உபாசனையைப் பூரணமாக்குமாறு அக்கினிகோத்திரமுதலியவற்றை அநுட்டிக்க வேண்டும். ஈசுரோபாசனையானது கன்ம தப சேப தியான ஞானவடிவாய் உள்ளது. அவற்றுள்ளே கன்மம் அக்கினிகோத்திரம்; தபசு நியமம், அல்லது சரீரத்தை வாட்டுதல்; சேபம் மேலே கூறப்பட்ட பிரணவாதி அப்பியாசம்; இவை பாவத்தை நீக்குதல் வாயிலாக மோக்ஷகாரணமாம். ஞான தியானமும் பிரமசொரூபத்தை நேரே அடைதற்கு ஹேதுவாம். ஆகலின், யாவும் அநுஷ்டிக்க வேண்டும்.

(ஆக்ஷேபம்) அக்கினிகோத்திராதி கன்மங்கள் ஞானோற்பத்தியின் பொருட்டேயாமாயின், இவையொழிந்த முன்செய்யப்பட்ட நற்கருமங்கள் வித்தையிற்றொடங்கும்போது ஒழியும்; அங்ஙனமாயின், (மரணகாலத்திலே) வித்துவானுடைய மித்திரர் எந்த நற்கருமங்களை அடைவர் என, (௧௬)

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அதோ(அ)ந்யாபி ஹ்யேகேஷாமுபயோ: (௪. ௧. ௧௭)

(௫௮௬) இவற்றைப் பார்க்கினும் வேறு (கன்மங்க) ளும் (உண்டு; அவற்றின்) இருவகையைப்பற்றிச் சிலர் (கூறுவர்) அன்றோ.

தஸ்ய ஸுஹ்ருத ஸாதுக்ருத்யாமுபயந்தி த்விஷந்த: பாபக்ருத்யாம்।

"அவன் சிநேகிதர் நற்கன்மங்களையும் அவன் சத்துருக்கள் தீக்கன்மங்களையும்" அடைகின்றார் என்பது சாட்டியாயன சாகையுடையார் வசனம். ஞானத்தை உண்டாக்கும் அக்கினிகோத்திரமுதலியவற்றுக்கு அன்னியமாயும், பிரபல கன்மங்களினாலே தடைப்படுத்தப்படுகின்ற பயன்களையுடையனவாயும், சகாயமாகிய ஆரோக்கியம் சித்தசுத்திமுதலியவற்றைப் பிறப்பித்தற்கு இயைந்து ஞானத்துக்கு வாய்ந்த பயன்களை யுடையனவாயும், அதனால் ஞானத்தினாலும் அழிவு எய்தாதனவாயுமுள்ள பூருவோத்தர இருவகைக் கன்மங்களே ஈண்டுக் கூறப்பட்ட விஷயம். (௧௭)

யதேவ வித்யயேதி ஹி (௪. ௧. ௧௮)

(௫௮௭) வித்தையோடு எதுதான் (செய்யப்படுகின்றது)

என்று (சொல்லப்படுகின்ற) தன்றே.

யதேவ வித்யயா கரோதி (சாந். க. க. க0)

"ஞானத்தோடு செய்யப்படுவதே பலமுடைத்து" என்னுஞ் சுருதியிலே, கன்மபலத்தின் தடையை நீக்குவதே உற்கீதவித்தையின் நோக்கமெனக் கூறப்பட்டமையின், பிரபலமாகிய மற்றோர்கன்மம் குறிக்கப்பட்ட கன்மத்தின்பயனைத் தடுக்கலாம், இன்றேல் அப்பயனுக்குச் சகாயமாகலாம். ஆகலின், வித்தைக்குச் சகாயமாகிய கன்மபலப்பிரதிபந்தத்தை நீக்கும்பொருட்டே அக்கினிகோத்திரமுதலியன அநுட்டிக்கப்படல் வேண்டுமென்பது (சூத்திரத்தின்) கருத்து. (கஅ)

(கரு) இதராஸம்பருதிகரணம்.

போகேந த்விதரே க்ஷபயித்வாऽத ஸம்பத்யதே (௪. க. ககூ)

(௪-அ-அ) போகத்தினாலே பிறவற்றைப் போக்கிய பின்னர் அவன் உய்கின்றான்.

ஈண்டு உபாசனையுடையவர்களால், அதிகாரபதத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் பதங்களுக்கு வேறாக மோக்ஷபலம் உண்டா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிராரப்தபோகத்தின் பொருட்டு அநேக சென்மம் உண்டெனக்கொள்ளின், ஓர் சென்மத்திலே அடைந்த வித்தை அடுத்த சென்மத்திலே அழிந்துபோகின்றது. அதனால் யாதொருகன்மஞ் செய்யப்படுகின்றதோ, அதுவும் பலத்தை அநுபவித்தற்கு ஏதுவாகின்றது. ஆகலின், சென்மபரம்பரை இருத்தலால் அவர்களுக்கு முத்தியில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராரப்தகன்மம் தன்பயனை அடையுமாறு செலுத்துகின்றது. அவை முற்சென்மத்தீட்டிய வித்தியாலோபத்துக்கு ஏதுவாயிரா. ஆகலின், அவர்க்கு முத்தியே; சென்மபரம்பராகாரணமின்மையின். சுழுப்திகாலத்திலே மறைப்புளதாயினும் போல சுழுப்தி மறைப்பைப்போலிருக்கும் சனனமரணமறைப்பும் அவர்கள் வித்தியாலோபத்துக்கு ஏதுவாயில்லை. (ககூ)

நான்காம் அத்தியாயத்து
இரண்டாம் பாதம்.

(௧) வாக்ஙம்பத்தியதிகரணம்.

வாங்மநஸி தர்ஶநாச்சப்தாச்ச (௪. ௨. ௧)
அத ஏவ ச ஸர்வாண்யநு (௪. ௨. ௨)

(௪௮௯) வாக்குமனசிலே (இலயமாகின்றது); அநுபவமும் சுருதியும் (உண்மையின்).

(௪௯௦) அதினாலேதான் எல்லாம் (மனசைத்) தொடர்கின்றன.

முந்திய பாதத்திலே உபாசகனுடைய உபாசனவியவஸ்தைமுதலாயின கூறப்பட்டன. இந்தப் பாதத்திலே அவன் சரீரத்தை விடுத்து உற்கிராந்தி செய்வதைப் (புறப்படுவதைக்) குறித்து நிரூபிக்கப்படுகின்றது.

அஸ்ய ஸோம்ய புருஷஸ்ய ப்ரயதோ வாங்மநஸி ஸம்பத்யதே மந: ப்ராணே ப்ராணஸ்தேஜஸி தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்। (சாந். ௬. அ. ௬)

"சௌமிய, இந்த உற்கிராந்தி செய்பவனுடைய வாக்கு மனசிலும், மனசு பிராணனிலும், பிராணன் அக்கினியிலும், அக்கினி பரதேவதையினும் இலயமாகின்றன" என்னும் சுருதியிலே, உற்கிராந்தி செய்பவனுடைய வாக்காதிகள் மனசில் இலயமாகின்றன எனப் பெறப்படுகின்றது. இது நியாயமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) காரியம் உபாதானத்தில் இலயமாகின்றதன்றோ; கடமுதலாயின மண்ணிலே இலயமாதல் காணப்படலான். வாக்காதிகளுக்குப் பிரமம் உபாதானம்; மனம் அன்று. ஆகலின், பிரமத்திலேதான் அவை இலயமாதல் யுக்தமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

அஸ்ய ஸோம்ய புருஷஸ்ய ப்ரயதோ வாங்மநஸி ஸம்பத்யதே। (சாந். ௬. அ. ௬)

"சௌமிய! இந்த உற்கிராந்தி செய்பவனுடைய வாக்கு மனசிலே இலயமாகின்றது"

உத்க்ரமிஷ்யதி மநஸி ஸம்பத்யமாநை: (பிர. ௩. ௯)

'மனசிலே இலயமுறும் இந்திரியங்களோடு'' என்னும் சுருதிபற்றி, உற்கிராந்தியில் மனசுக்கு முன்னே வாக்குமுதலியவைகள் ஒய்ந்துபோதல்காணப்படுகின்றமையானும், முதற்கண்ணே வாக்கு மனசிலே இலயமாகின்றது. பின் எல்லா இந்திரியங்களும் மனசிலே இலயமாகின்றன. (காரியம்) உபாதானத்தில் இலயமாம் என்றது யுக்தம் அன்று. (காரியத்தின்) சொரூபலயத்துக்குத்தான் உபாதானம் அபேக்ஷிக்கப்படுவது. வாக்காதிகள் மனசில் ஒடுங்குதல் சொரூபலயம் எனப்படாது; பின் அது விருத்திலயம் (என்று கூறப்படும்); ஜலமத்தியிலே எறியப்பட்ட எரிகரியின் பிரகாசமுதலாயின விருத்தி லயமாதல் போல, உபாதானமல்லாதிருப்பினும் மனசில் எய்தும் வாக்காதிகளின் லயத்தை விருத்திலயம் எனக் கூறல் யுக்தமே; விருத்தியுடைய வாக்காதிகள் (மேலே கூறிய) இலய சுருதியினால் இலயமடைதல் விருத்திலயம் எனப்படும்; விருத்திகளுக்கும் அந்த விருத்தியையுடைய பொருள்களுக்கும் பேதமிலாது அங்கே கூறினமை உபசாரத்தினால். (க, உ)

(உ) மநவஸ்சம்பத்தியதிகரணம்.

தந்நஃ ப்ராண உத்தராத் (ச. உ. ரு)

(சகூக) அந்த மனசு பிராணனில், உத்தரவாக்கியத்தினால்.

மநஃ ப்ராணே (சாந். சு. அ. சு)

"மனம் பிராணனிலே (ஒடுங்குகின்றது)'' என்றமையான், வாக்குமுதலிய சர்வேந்திரியங்களோடு கூடிய மனசு பிராணனிலே லயமாகின்றது என்று கேட்கப்படுகின்றது. அந்த லயம் எவ்வியல்பினதென்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வாக்குமுதலியன உபாதானமல்லாத மனசிலே விருத்திலயம் எய்துக. மனசு பிராணனிற் சொரூபலயமே; பிராணன் மனசுக்கு உபாதானமாயிருத்தலின்.

அந்நமயம் ஹி ஸோம்ய மந ஆபோமயஃ ப்ராணஃ (சாந். சு. ரு. ச)

"சௌமிய! மனம் அன்னமயமே; பிராணன் அப்புமயம்'' என்னும் சுருதி பற்றி, அன்னமயமாதலினாற் பிருதிவியினாலாயது மனசு; அப்புமயமாதலினாற் பிராணன் மனசுக்கு உபாதானம்; (அதனாற்) சொரூபலயம்பற்றி விரோதமில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) முன்போல (வாகிந்திரிய விஷயத்திற்போல); மனசும் பிராணனில் விருத்திலயமே;

மநஃ ப்ராணே (சாந். சு. அ. சு)

"மனசு பிராணனில் (ஒடுங்குகின்றது)'' என உத்தரவாக்கியமுண்மையான்,

(மனசு பிராணனிலே) சொரூபலயமன்று; பிராணன் மனசுக்கு முக்கியோபாதானமல்லாமைபற்றி அம்மனசு அங்கிருந்து பிறக்காமையான். ஆகலின், பிராணனிலே மனசு விருத்திலயமாயிருப்பதே நியாயம். (௩)

(௩) பிராணசம்பத்தியதிகரணம்.

𑌸𑍋𑌽𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇 𑌤𑌦𑍁𑌪𑌗𑌮𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃 (௪. ௨. ௪)

(௪௯௨) அது (பிராணன்) அதிபனோடு (சேர்ந்திருக்கின்றது), அதனோடு இசைதன் முதலியன (கூறப்படலான்).

மேலே சர்வேந்திரியங்களோடு கூடிய மனசு பிராணனிலே இலயம் அடைகின்றதென்று கூறப்பட்டது. இப்போது பிராணன் எங்கே இலயமாகின்றதென்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌿 (சாந். ௬. அ. ௬)

"பிராணன் தேயுவிலே (ஒடுங்குகின்றது)" என்னுஞ் சுருதியினாற் பிராணன் தேயுவிலே ஒடுங்குகின்றதெனின்,

(சித்தாந்தம்) அந்தப்பிராணன் அதிபனாகிய ஆன்மாவோடு கூடுகின்றது; அது தேயுவில் இலயமாகவில்லை;

𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌅𑌭𑌿𑌸𑌮𑌾𑌯𑌨𑍍𑌤𑌿

(பிரு. ௪. ௩. ௩௮)

"இங்ஙனமே மரணகாலத்தில் ஆன்மாவைச் சூழ்ந்து எல்லாப் பிராணன்களும் கூடுகின்றன" என அந்தப் பிராணன் ஆன்மாவோடு இயைவதாகக் கேட்கப்படுகின்றமையின்.

𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌿 (சாந். ௬. அ. ௬)

"பிராணன் தேயுவிலே (ஒடுங்குகின்றது)" என்னும் சுருதியிலே தோற்றும் கிரமவிரோதத்தைச் சூத்திரகாரர் பரிகரிக்கின்றனர். (௪)

𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 (௪. ௨. ௫)

(௪௯௩) பூதங்களிலே (அது சேர்கின்றது), அவற்றைக் குறித்துச் சுருதியுண்மையின்.

"பிராணன் தேயுவில் ஒடுங்குகின்றது" என்னும் சுருதியில் மற்றைப் பூதங்களோடு கூடிய தேயுவே கூறப்படுகின்றது. ஆகலின், ஆன்மாவோடு கூடப் பிராணனானது பூதங்களிற் கூடுகின்றதென்பதுபற்றி விரோதமில்லை. (௫)

𑌨𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑍋 𑌹𑌿 (௪. ௨. ௬)

(௪௯௪) ஒன்றிலே அன்று; (அவை அங்ஙன)மன்றோ கூறுகின்றன.

தேயுவிலேமாத்திரம் பிராணன் இலயமாகவில்லை; முப்பிரகாரத்தைப் பற்றிக் கூறிய சுருதி மற்றைப் பூதங்களோடு இசைதலைக்காண்பிக்கின்றது. ஆகலின், ஆன்மாவோடு கூடப் பிராணன் பூதங்களில் இயைகின்றதென்பது பற்றிச் சுருதிவிரோதமில்லை. (௬)

(௪) அசிருத்தியுபக்கிரமாதிகரணம்.

ஸமா நா சாஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வஂ சாநுபோஷ்ய (ச. உ. எ)

(௪௩௫) மார்க்கத் தொடக்கத்துக்கு முன்னும் சமானமே; (சரீரசம்பந்தத்தை) தகிக்காமல் அமிர்தத்துவமும்.

ஈண்டு நிரூபிக்கற்பாலதாகிய உற்கிராந்தியானது அர்ச்சிராதி கதித் தொடக்கத்துக்கு முன் வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் சமானமா? இன்றேல் வேறா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சம்சாரபலமும் மோக்ஷபலமும் இரு வேறு காரியங்களாயிருத்தலின், ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் உற்கிராந்தி பேதமாயிருந்தாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அர்ச்சிராதி மார்க்கத்தொடக்கத்துக்கு முன் வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் உற்கிராந்தி சமமாய் இருந்தது. ஞானிக்குந் தலைநாடி வாயிலாகவே உற்கிராந்தியும் அமிர்தத்துவமுமாம்; மற்றவனுக்கன்று; இதுதான் பேதம்.

ஶதஂசைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாஂ மூர்தாநமபிநி:ஸ்ருதைகா। தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி॥ (கட. ௬. ௧௬)

"இதயத்தில் நூற்றோர் நாடிகள் உள்ளன; அவைகளுள்ளே ஒன்று தலையைப் பிரவேசிக்கின்றது; அதுவாயிலாக மேலே போய் ஒருவன் அமிர்தத்துவத்தை அடைகின்றான்; மற்றநாடிகளும் வெவ்வேறு திக்குநோக்கி உற்கிரமணஞ் செய்தற்கு உதவுகின்றன" என்னுஞ் சுருதியுண்மையின். இதற்கு முன் உற்கிராந்தி சமமாய் உள்ளதே. (எ)

(ரு) ததாபீத்தியதிகரணம்.

ததாபீதே: ஸஂஸாரவ்யபதேஶாத் (ச. உ. அ)

(௪௩௬) அதனோடு ஐக்கியமாதற்கு முன்னே (சுருதி) சம்சார நிலையைக் குறித்தலின்.

தலைநாடிவாயிலாக வித்துவானுக்கு உற்கிராந்தி உளதென்றும், பின் அர்ச்சிராதிகதி உளதென்றும் மேலே கூறப்பட்டது.

ஈண்டுச் சரீரத்தைவிட்டுப் புறப்பட்ட வித்துவானுக்கு அர்ச்சிராதிகதி இயையுமா? அன்றா? என்பது சந்தேகம்.

[illegible] (பிரு. சு. ச. எ)

"அவன் இதயத்தில் ஒர்காற் பிரவேசித்த எல்லா ஆசைகளும் அற்றபின்னர் மரணத்துக்குரியான் அமிர்தனாகின்றான், அங்கே பிரமானந்தத்தைத் துய்க்கின்றான்" எனத் தேகம் விழுந்தபின்னர் அமிர்தத்துவம் எய்துவதாகக் கூறப்படுகின்றது.

[illegible] (சாந். ரு. க௦. க)

"அவர்கள் அர்ச்சியை அடைகின்றார்கள்" என அர்ச்சிராதிகதியும் கேட்கப்படுகின்றது. அங்ஙனம் இரண்டும் கூறப்படலாற் சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமத்திலே லயமாகிய வாக்கு முதலியன பின்னர்த் தோற்றுதல் கூடாமையான், ஆன்மாவுக்குப் (புறத்தே செல்லும்) கதிகூடாமையான், முக்தான்மாக்களுக்கு அர்ச்சிராதி இல்லையாமெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. அர்ச்சிமுதலியவாயிலாகப் பிரமத்தை அடைதற்குமுன், சரீரசம்பந்தம் குறித்துச் சம்சாரம் நீங்கவில்லை. விரைவிலே பிரமத்தை அடைகுவன் என்னும அபிப்பிராயம் பற்றியே சுருதியானது (முக்தான்மா) உடனே (ஈஹ) அமிர்தத்துவத்தை அடைகின்றான் என்று கூறியதாம். ஆகலின், உற்கிராந்தனுக்கு அர்ச்சிராதிகதியுக்தமே. (அ)

வாக்குமுதலாயின ஒடுங்கிப்போனமையான் அவனுக்குக் கதி ஒவ்வாதாம் என்பது பற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

[illegible] (ச. உ. க)

(சூக்ஷ) அளவினாற் சூக்குமமாகிய (சரீரமுடையன்), அங்ஙனம் (சுருதியிற்) பெறப்படலான்.

அவன் சரீரத்திருந்து புறப்படலானும் சூக்குமசரீரம் கூடவிருக்கின்றது. இல்லாக்கால், கதி கூடாமைபற்றிச் சந்திரசம்வாதம் எய்தமாட்டாது.

[illegible] (கௌஷீ. க. உ)

"இவ்வுலகைவிட்டுப் புறப்படுகின்றவர்கள் சந்திரனை அடைகின்றார்கள்" என்று தொடங்கி,

[illegible]

கீடோ வா பதங்கோ வா மத்ஸ்யோ வா ஶகுநிர் வா ஶார்தூலோ வா ஸிம்ஹோ வா பரஶ்வாந் வா புருஷோ வா அந்யோ வா தேஷு தேஷு ஸ்தாநேஷு ப்ரத்யாஜாயதே யதாகர்ம யதாவித்யம் தமாகதம் ப்ருச்சதி கோऽஸீதி தம் ப்ரதிப்ரூயாத் (கௌஷீ. க. உ)

"சந்திரன்தான் சுவர்க்கலோகத்துக்கு வாயில்; சந்திரன் சொல்வனவற்றை அவன் ஆக்ஷேபிப்பானாயின், அவனை இஷ்டப்படி போகவிட்டுவிடுகின்றான்; ஒருவன் சந்திரனை ஆக்ஷேபியாதிருப்பானாயின், சந்திரன் அவனை மழையாகப் போமாறு கீழே அனுப்புகின்றான்; அவன் கன்மங்களுக்கும் ஞானத்துக்கும் இயையப் புழுவாயோ, பூச்சியாயோ, பட்சியாயோ, புலியாயோ, சிங்கமாயோ, மீனாயோ, பாம்பாயோ, மனிதனாயோ, வெவ்வேறிடங்களில் மற்றொன்றாயோ பின்னர்ப் பிறக்கின்றான். இங்ஙனம் பூமிக்குத் திரும்பி வருகின்றவனை (நோக்கி) நீ யார் என்று (ஓர் துறவி) அவனைக் கேட்கின்றான்; அவன் உத்தரமிறுக்கின்றான்" எனச் சுருதியிற் கண்ட பரியங்கவித்தையிலே தேவயானமார்க்கத்தில் ஓர் வித்துவானுக்கும் சந்திரனுக்கும் இடையே நேர்ந்த சம்வாதம் கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், சரீரத்தைவிட்டுப் புறப்படும் வித்துவானுக்கு அர்ச்சிராதிகதி எய்துவதாகும். (கூ)

நோபமர்தேநாத: (சூ. உ. கo)

(சகூ௦) ஆகலின் அழிவினால் அன்று.

மேலே கூறிய நியாயத்தினால்,

அத மர்த்யோऽம்ருதோ பவதி (பிரு. ரு. ச. எ)

"மனிதன் அமிர்தத்துவத்தை அடைகின்றான்" என்னுஞ் சுருதியிற் கண்ட அமிர்தவசனமானது சரீரசம்பந்தம் அற்றவுடனேதானே அமிர்தத்துவம் எய்துவதென்று கருத்தன்று. (கo)

அஸ்யைவ சோபபத்தேரேஷ ஊஷ்மா (சூ. உ. கக)

(சகூக) அதற்கே பொருத்தமாதலினாலும், இந்த உஷ்ணம் (உளது).

இந்தச் சூக்குமசரீரம் (தூலசரீரத்தின்) ஓரிடத்திருத்தல் பொருத்தமாதலினால், சூக்குமதேககுணமாயுள்ள உஷ்ணமானது உற்கிராந்தி செய்யும் வித்துவானுக்கும் ஓரிடத்திலே இருப்பதாகப் பெறப்படுகின்றது. அந்த உஷ்ணம் ஸ்தூலதேகத்தின் குணமன்று, பிறிதிடத்தின் (மரணத்தின்) உணரப்படாமையின். ஆதலினாலும் கதியிருத்தல் பொருத்தமே. (கக)

ப்ரதிஷேதாதிதி சேந்ந ஶாரீராத் ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம்।

(சூ. உ. கஉ)

(ருoo) நிஷேதித்தலினால் (அது அங்ஙனமன்று) என்று கூறின், அன்று; ஆன்மாவினின்று (பிராணன்கள் பிரிய) வில்லை; யாதினாலெனின், சிலசாகையில் (அது) வெளிப்படை.

தஸ்ய ஹைதஸ்ய ஹ்ருதயஸ்யாக்ரம் ப்ரத்யோததே। தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி। சக்ஷுஷ்டோ வா மூர்த்நோ வா அந்யேப்யோ வா ஶரீரதேஶேப்யஸ்தமுத்க்ராமந்தம் ப்ராணோ அநூத்க்ராமதி ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி।

(பிரு. சு. ச. உ)

"அவன் இதயத்தின் கொழுந்து பிரகாசத்தை அடைகின்றது; அந்தப் பிரகாசத்தினால் ஆன்மாவானது கண்வாயிலாகவோ, தலைவாயிலாகவோ, சரீரத்தின் பிறவிடங்கள் வாயிலாகவோ புறப்படுகின்றது; அவன் புறப்படுங்காற் பிராணன் அவனுக்குப்பின்னே புறப்படும்போது, எல்லாப் பிராணன்களும் அதற்குப்பின்னே புறப்படுகின்றன''' என்றற்றொடக்கத்த வாக்கியங்களால் அவித்துவான் (சரீரத்தினின்று) எவ்வாறு புறப்படுகின்றான் என்று கூறி,

இதி நு காமயமாந: (பிரு. சு. ச. சு)

"ஆசையுடையவனுக்கு அவ்வளவுதான்'' என அவித்துவத் விஷயத்தை முடித்துக்கொண்டு,

அதாகாமயமாநோ யோऽகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்யேதி।

(பிரு. சு. ச. சு)

"விரும்பாதவனாய், விருப்பத்தினின்று நீங்கினவனாய், தன் விருப்பங்களில் திருத்திப்பட்டவனாய், பரமான்மாவை விரும்புவோனாயுள்ள பற்றற்ற அவனுக்குப் பிராணன்கள் உக்கிரமிப்பதில்லை; பிரமமாகிப் பிரமத்தைப் போய் அடைகின்றான்'' என்று வித்துவானுக்கு உற்கிராந்தி (வெளிப்போதல்) மறுக்கப்படலான், இங்கேதானே பிரமத்தை அடைகின்றான் எனின்,

(சித்தாந்தம்) அன்று;

ந * தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (பிரு. சு. ச. சு)

---

* (ச. உ. கஉ-ஆம்) சூத்திரத்தைச் சங்கராசாரியர் இரண்டாகப் பிளந்தமையும்,

ப்ரதிஷேதாதிதி சேந்ந ஶாரீராத்।

என அவர் முற்பாதிச் சூத்திரத்தைத் தமது பாஷ்யத்து (ச. உ. கஉ-ஆம்) மூற்சூத்திரமாக, பிறத்தி அதிலே (தமது சூத்திரபாஷ்யத்திலே) நீலகண்டசிவாசாரியர் சார்பாகக் கூறுபவர் போலக் கூறி, பின் அதனை

ஸ்பஷ்டோஹ்யேகேஷாம் (வே. சூ. ச. உ. கங)

"பிராணன்கள் அவனுக்கு உற்கிரமிக்கின்றில" என்னுஞ் சுருதியினல் உற்கிரமணஞ் செய்து அர்ச்சிராதிகமனத்தின்பொருட்டுப் புறப்பட்ட வித்துவானுடைய பிராணன்கள் அவனைவிட்டுப் பிரிகின்றில என்று கூறப்படுகின்றது; இதன் பொருள் மாத்தியந்தினர் சாகையிலே வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றது;

பிற் சூத்திரமாக நிறுத்தப்பட்ட இந்தப் பிற்பாதிச் சூத்திரத்தினுற் கண்டித்தற்கு, மற்றோர் அவித்துவான் விஷயம்பற்றி

(க) யத்ராயம் புருஷோ ம்ரியத உதஸ்மாத்ப்ராணா: க்ராமந்த்யாஹோ3 நேதி (பிரு. ரு. உ. கக)

"இந்தப் புருஷன் (அவித்துவான்) சாகும்போது பிராணன்கள் அவனைவிட்டு உற்கிரமிக்கின்றனவா? அன்றா?" என்று ஆர்த்தபாகர் என்பார் வினவிய வினவுக்கு

(உ) நேதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய: அத்ரைவ ஸமவநீயந்தே ஸ உச்ச்வயத்யாத்மாயத்யாத்மாதோ ம்ருதஶ்ஶேதே (பிரு. ரு. உ. கக)

"யாஞ்ஞவற்கியர் அன்று (என்று தொடங்கி), இவனிலேதான் (பிராணன்கள்) கூடுகின்றன; அவன் வீங்கி உப்பிச்செத்துக்கிடக்கின்றான்" என்று அந்த யாஞ்ஞவற்கியர் உத்தரமிறுத்தாராக, அச்சங்கராசாரியர் இந்த (க) முதலாம் (உ) இரண்டாம் சுருதி வாக்கியங்களின் தலையையும் அடியையும் தட்டிவிட்டு, எஞ்சியவற்றிற் சில சொற்பொடியிட்டு உண்மைப்பொருள் பிறழ்ந்துபோகப் பொய்படத் திரித்து இயைத்து, (சு. உ. கரு-ஆம்) பிற்பாதிச் சூத்திர மாயாவாதபாஷ்யத்திலே

ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்த்யத்ரைவ ஸமவநீயந்தே।

"அவனைவிட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை;இங்கேதான் இலயமடைகின்றன" என்று பொருட்படப் பாவத்துக்கும் நிந்தைக்கும் சிறிதும் அஞ்சாது புகுத்தி உரைத்தமையும்,

ஏகேஷாம்।

சில சாகையினர் கூறுமாறு என்று சூத்திரக்கருத்துப் பிரகாரம் கண்ணுவசாகையாகிய பிருகதாரணியத்துக்கு அன்னியமாகிய மற்றோர் மத்தியந்தினசாகை முதலியவற்றினின்று (பிரமாணம் காட்டாது), அந்தக் கண்ணுவ சாகையினின்றே தவறுற அவித்துவான் விஷயமாகிய (பிரு. ரு. உ. கக-ஆஞ்) சுருதியை வித்துவான் விஷயமென்று பிழைபட அவர் உதகரித்தமையும், முற்சூத்திரத்தைப் பூருவபக்ஷத்தினிறுத்திப் பிற்சூத்திரம் கண்டிப்பதாயின் ஆனல் (து) என்னும் பதம் எய்தற்பாலதேயாக, முற் சூத்திரபாகத்தை மறக்காது நியாயம் கொண்டு சாதிக்குமாறு சூத்திரகாரராற் பிரயோகிக்கப்பட்ட (ஹி) என்னும் மொழியை நிறுத்திப் பிற் சூத்திரமாகத் தவறுண்டு அவர் (சு. உ. கரு-ஆஞ்) சூத்திரஞ் செய்தமையும் பிறவும் தவறுமென்று உபக்கிரமணிகை (உகஅ-ஆம்) இலக்கந் தொடுத்து (ருகரு-ஆம்) இலக்கம் வரையும், சசO-ஆம்) இலக்கம் தொடுத்து (சகூஉ-ஆம்) இலக்கம்வரையும் நிரூபித்திருக்கின்றோமன்றோ. அங்ஙனமாக,

நீலகண்ட சிவாசாரியாராற் பூருவபக்ஷத்தில் நிறுத்தி மத்தியந்தின சாகைகொண்டு, "அவனைவிட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" எனப் பொருட்படுத்தப்பட்ட (பிரு. ச. ச. சு-இல்), உள்ள

ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி

என்னுஞ் சுருதியையும், (பிரு. ரு. ரு. கக-இலே)

யோ(அ)காமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (மாத்தியந்தினசாகை)

"எவன் அகாமனாய், நிஷ்காமனாய், ஆப்தகாமனாய், ஆத்துமகாமனாய் இருக்கின்றானோ, அவனினின்று பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை" என்று கூறப்பட்டிருக்கின்றது. (௧௨)

*ஸ்பஷ்டமேவ (ச. உ. ௧௩)

(௫௦௧) ஸ்மிருதியுஞ் சொல்கின்றது.

ஊர்த்வமேகஃஸ்திதஸ்தேஷாம் யோ பித்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்॥

(யாஞ்ஞவற்கியஸ்மிருதி. ௩. ௧௬௭)

அத்ரைவ ஸமவநீயந்தே।

"இவனிலே பிராணன்கள் கூடுகின்றன" என்று சுருதி உள்ளபடி இருந்தமையானும், இது அவித்துவத்விஷயம்பற்றி யிருந்தமையானும் சைவபாஷ்யகாரராற் பொருட்படுத்தாது தவிர்க்கப்பட்டதேயாக, பின்னர் மேலே கூறியவாறு திரிக்கப்பட்ட

அத்ரைவ ஸமவலீயந்தே।

என்னுஞ் சுருதியையும் மாயாவாதிகளுக்குச் சார்பாக அப்பயதீக்ஷிதயோகியார் சித்தாந்தமாக எழுதிவைத்திருக்கின்றார் என்று யாரையும் வஞ்சிக்குமாறு, மாயாவாத பண்டிதர்கள் சிவார்க்கமணிதீபிகை (௩. ௩. ௩௨-இல்) ஆக்ஷேபத்துக்கிடனுமென்று முன்பின் ஆலோசனையின்றிப் புகுத்திவைத்தமை விந்தையினும் விந்தையேயாமென்று சைவநேயர்கள் யாவரும் உணர்வாராக. இங்ஙனம் சாமானியருக்கும் பிரத்தியக்ஷமாய் விளங்கக்கிடக்கும் சுருதியைப் பிரித்தும், திரித்தும், இயைத்தும் வஞ்சிக்கப்போந்த மாயாவாதாசாரியர் விசேஷவறிவினர்க்கும் புலப்படாத சூத்திரங்களுக்கு யாது திரிவுபொருள்தான் செய்துவைக்கமாட்டாரென்பதைச் சிறிது யூகிப்பாராக.

*இந்த (ச. உ. ௧௩-ஆம்) சூத்திரத்துக்குச் சைவபாஷ்யகாரர் உதகரித்த சுலோகத்துக்கு மாறுபடச் சங்கராசாரியரால் மாயாவாதிகளுக்குப் போக்குமீட்சி இல்லை என்று காட்டுதற்குத் தமது (ச. உ. ௧௪-ஆஞ்) சூத்திரபாஷ்யத்தில் உதகரிக்கப்பட்ட (ஸ்மிருதி) சுலோகமும் பொருத்தமில்லையாமென்று அறிஞர் உணர்ந்து கொள்வாராக. மாயாவாதிகள் போனகதி தேவர்களுக்கும் காணப்படாமை போல, காணப்படாக் கதியை உணர்த்திய அச்சுலோகமும் மகாபாரத ஸ்மிருதியில் எவ்விடத்தும் காணப்படவில்லை; சாந்திபருவத்து மோக்ஷதருமத்திலே

ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதா: பாசுபதம் ததா।

"சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வைதிகம், பாசுபதம்" என்னும் சுலோகத்தினால் தியானயோகத்தை உணர்த்தும் வைதிக பாசுபதத்தை முடிவாக உணர்த்திய மகாபாரதமானது ஞானத்து ஞானபாதத்தார்க்கு எய்துவதாகக் கொள்ளப்படும் போக்குமீட்சியில்லாத முத்தியை அம்மாயாவாதிகளுக்குச் சார்பாகக் கூறியதெனக் கருதிச் சங்கராசாரியர் புகுத்தி உதகரித்த அக்கபடச் சுலோகமானது அம்மகாபாரதத்தில் எப்போது காணப்படினும் அது ஓர்காலும் அப்போக்குமீட்சியில்லா முத்திப்பேற்றைப் பயக்காதென்றும், அங்ஙனம் அப்பொருட்பட மகாபாரதம் ஓர்கா

"அவைகளுள்ளே ஒன்று மேற்கொண்டு சூரியமண்டலத்தைப் பிளந்து போகின்றது; அதனால் அவன் பிரமலோகத்தை அடைந்துமேலான கதியை அடைகின்றான்" என வித்துவானுக்குத் தலைநாடிவாயிலாகக் கமனம் கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், அர்ச்சிராதிகதி வித்துவானுடைய உற்கிராந்தி செய்யும் ஆன்மாவுக்கியைந்ததே*. (கங)

(கா) பாசம்பத்தியதிகரணம்.

தாநிவரெ தயாஹ்யாஹ (அ. உ. கச)

(ருoஉ) அவைகள் பரத்திலே (ஒடுங்குகின்றன), அங்ஙனஞ் சுருதி கூறுகின்றதன்றோ.

மேலை அதிகரணத்திலே பிராணன்களோடு கூடிய சீவான்மா தேயுவோடு கூடிய பூதங்களிலே அடங்குகின்றதென்று கூறப்பட்டது.

தெஜஃ வாஸ்யாம் தெவதாயாஃ (சாங். கா. அ. கா)

"தேயுவானது பரதேவதையில்" என்பதினால் மற்றப் பூதங்களோடு இயைந்தும், ஆன்மாவோடு கூடியுமுள்ள தேயுவானது பரதேவதையிலே ஒடுங்குகின்றதெனப் பெறப்படுகின்றது.

அந்த லயம் பரப்பிரமத்திற் சொரூபலயமாகக் கூறப்படுகின்றதா? இன்றேற் பகுக்கக்கூடாதவாறு இயைகின்றதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சொரூபலயம் என்பதே யுக்தம்.

தெவாத்தல் (பா. வி. நி. அ. உள)

என்ற வியாகரணசூத்திரப்பிரகாரம், தேவ சப்தமே தேவதா எனப்படும். பரசப்தமானது மகத்துவத்தைக் காட்டுகின்றது. ஆகலின், பரதேவதை என்பது மகாதேவரின் மேற்று.

ஸெயம் தெவதெக்ஷத (சாங். கா. ங. உ)

"அந்தத் தேவதை விரும்பிற்று"

த்யாவாபூமீ ஜநயந்தேவ ஏகஃ (தைத். ஆரணி. கo. க. ங)

"ஆகாயத்தையும் பூமியையும் சிருட்டித்துத் தேவர் ஏகர்" என்னும் சுருதிகளான், அந்த மகாதேவரே சகல பூதகாரணராகிய பரப்பிரமம் எனக் கேட்கப்படுகின்றது. ஆகலின், அந்த உபாதானமாகிய அவரிலே ஆன்மாக்களோடு கூடப் பூதங்களும் சொரூபலயம் அடைகின்றன என்று கூறுதலே யுக்தமாம் எனின்,

---

*நிர்க்குணோபாசகர்களுக்கு அர்ச்சிராதிகதி இல்லை என்று (ங. ங. ஙஉ-இத்) போல ஈண்டும் புகுத்தப்பட்ட வாக்கியம் மொழிபெயர்க்காது தவிர்க்கப்பட்டது.

(சித்தாந்தம்) பிரமம் உபாதானமாயிருந்தாலும் பூதங்கள் சொரூப லயம் எய்தா? ஆனல் அவை பிரிக்கப்படாதிருத்தல் மாத்திரமே;

வாஜ்மநஸி ஸம்பத்யதே (சாந். சு. அ. சு)

"வாக்கானது மனசிலே இலயமாகின்றது" என்னும் சுருதியினுற் கூறப் பட்ட (இலய) அர்த்தம் இங்கே மற்றோர் பிரகாரமாகப் பொருள்கோடற்கு யாதும் பிரமாணமின்மையின். ஆகலின், மனமுதலியனபோல ஈண்டும் விருத்திலயமாம் என்று சுருதி கூறுகின்றது. (கச)

அவிபாகோ வசநாத் (அ. உ. கரு)

(௫0௯) பிரிக்கப்படாமை(கொள்ளப்படுகின்றது) வசன முண்மையான்.

சம்பத்திவசனத்தினுற் (சாந். சு. அ. சு) பிரமத்திலே பூதங்கள் பிரிக் கப்படாதிருத்தல் மாத்திரம் என்று பொருள் கொள்வதே யுக்தம். (கரு)

(எ) ததோகோக்ராதிகரணம்.

ததோகோக்ரஜ்வலநம் தத்ப்ரகாசிதத்வாரோ வித்யா ஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்தாநுக்ருஹீத: சதாதிகயா।

(அ. உ. கசு)

(௫0௪) அவன் உறைவிடத்தின் அக்கிரத்திற் சுவாலிப்பு உள்ளது; அதனுற் பிரகாசிக்கப்பெற்ற துவாரத்தனுல் வித்தியாசாமர்த்தியத்தினுலும், மார்க்கத்தின் அங்கதியானத் தினுலும், இதயத்துள்ள ஏகரால் அநுக்கிரகிக்கப்பட நூற் றுக்கு மேற்பட்டிருக்கும் பாதையினுலே புறப்படுகின்றான்.

மேலை அதிகரணத்திலே வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் அர்ச் சிராதிகதித் தொடக்கம் வரையும் உற்கிராந்தியானது சமானம் என்று கூறப்பட்டது.

புறப்படும் வேளையில் இருவர்க்கும் பேதம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்।

"தேயு பரதேவதையிலே" என்னும் சுருதியினுற் பூதங்களோடு கூடப் பரம காரணரும், பரதேவரும், பரப்பிரமமும், பரமாகாசரூபருமாயினுரிலே

வித்துவாலும் அவித்துவாலும் பிரிக்கப்படாது ஒடுங்கி, சூக்ஷ்மம் இளைப் பாறி இருக்கின்றார்கள் என்று சமமாகக் கூறப்பட்டது. ஆகலின், (அவர் களுக்கு) உற்கிராந்தி சமமே.

तस्य हैतस्य हृदयस्याग्रं प्रद्योतते । तेन प्रद्योतेनैष आत्मा निष्क्रामति चक्षुष्टो वा मूर्ध्नो वा अन्येभ्यो वा शरीरदेशेभ्यः (பிரு. சு. ச. உ)

"அவனது இதயக்கொழுந்து பிரகாசிக்கின்றது; அவ்வொளியினால் ஆன்மா கண்வாயிலாகவோ, தலைவாயிலாகவோ, சரீரத்தின் பிற இடங்கள் வாயிலா கவோ புறப்படுகின்றது" எனச் சுருதி கூறுதலின், அவ்விருவர்க்கும் இருத யப்பிரகாசமுதலிய சமமாகக் கேட்கப்படுகின்றன. அதுகொண்டு அவ்விரு வர்க்கும் உற்கிராந்தி சமமாயிருத்தலின் பேதமில்லை எனின்,

(சித்தாந்தம்) அன்புடையரும் இதயத்துள்ளாருமாகிய சிவபெருமா னுடைய ஆராதனரூபமாயுள்ள ஞானவலிமையினாலும், அந்த ஒளிமார்க்கத் தைத் தியானித்தலாலும், பிரீதிகொண்ட சர்வாநுக்கிரகராகிய அவரால் அநுக்கிரகிக்கப்பட்டு, தனது சொரூபத்தை மறைக்கும் மலமானது துவம் சம் பண்ணத்தக்க வன்மையுடைய அநுக்கிரகதிருட்டியினாற் பார்க்கப்பட்டு அந்த அநுக்கிரகத்தினாலே பிரகாசிக்கப்பெற்ற வாயிலையுடையனாய் நூற் றுக்கு மேற்பட்டுள்ள தலைநாடி வாயிலாக வித்துவான் புறப்படுகின்றான். அவ்வாறு மற்றவன் (போவானல்லன்), பின் அவன் மற்றை நாடிகள் வாயி லாகப் போகின்றான்.

शतं चैका च हृदयस्य नाड्यस्तासां मूर्धानमभिनिःसृतैका । तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति (கட. சு. கசு)

"இதயத்தில் நூற்றோர் நாடிகள் உள்ளன; அவைகளுள் ஒன்று சிரசைப் பிர வேசிக்கின்றது; அதனால் மேலேபோய் ஒருவன் அமிர்தத்துவத்தை அடை கின்றான், மற்றைநாடிகள் வெவ்வேறு திக்குகளில் உற்கிரமணஞ் செய்தற்கு உதவுகின்றன" என்று சுருதி கூறுகின்றது. வித்துவானுடைய உற்கிர மணத்தில் இதுதான் விசேஷம். மேலே கூறப்பட்டவற்றிற் பின்வருவன வெல்லாம் அமைந்துள்ளன:—

रुद्रो जनानां हृदये संनिविष्टः ।

"உருத்திரர் சனங்களுடைய இதயத்தின்கண்ணே வசிக்கின்றார்"

हृत्पुण्डरीकं विरजं विशुद्धम् (கைவ)

"இதயபுண்டரீகம் தூளற்றதும் அதி தூய்தாயுமுள்ளது" என்றற்றொடக் கத்த சுருதிகளினும்,

ஈஸ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஸே அர்ஜுந திஷ்டதி।
(பகவற்கீதை. ௧௮: ௬௧)

"அர்ச்சுன! எல்லாச்செந்துக்களுடைய இதயதேசத்திலே சிவன் இருக்கின்றார்" என்றற்றொடக்கத்த ஸ்மிருதிகளினும் சிவபிரான் சர்வஜன ஹிருதயங்களினும் இருக்கின்றார் எனப் பெறப்படுகின்றது. சுழுப்தியிலே சீவான்மா சுவேந்திரிய விருத்திகளோடுகூட லயமாகி அவரோடு ஏகரசமாகின்றான்.

விஸ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"விசுவாதிகராயுள்ள மகர்ஷி உருத்திரர்"

ஸர்வோ வை ருத்ர: (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரரே" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே நிமித்தகாரணமாயிருத்தலின் விசுவாதிகர் என்றும், உபாதானமாயிருத்தலால் விசுவான்மகர் என்றும் பெறப்படுகின்றது.

ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்து: (சுவே. ௩. ௨)

"உருத்திரர் ஏகரே! (அவர்கள்) இரண்டாவதற்காக நிற்கின்றிலர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே அவருக்கு விசுவாதிபத்தியம் கேட்கப்படுகின்றது.

ஸிவ ஏகோ த்யேய: (அதர்வசிகை)

"சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்"

யதா சர்மவதாகாஸம் (சுவே. ௬. ௨0)

"எப்போது ஆகாயத்தைத் தோலாக உடுக்கின்றாரோ" என்னுஞ் சுருதிகளான் இவரையொழிந்து முமுட்சுக்களுக்குத் தியேயமும் ஞேயமுமாகிய வஸ்து இல்லை என அறியப்படுகின்றது.

அஸ்ய ஹி ஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு ருத்ரஸ்தாரகம் ப்ரஹ்மவ்யாசஷ்டே யேநாஸாவம்ருதீபூத்வா மோக்ஷீபவதி: (ஜாபாலம்)

"அந்தச் செந்துவினுடைய பிராணன் உற்கிரமிக்கும் போது உருத்திரர் தாரகப்பிரமத்தை உபதேசிக்கின்றார்; அதனாலே அவன் சிவனாகின்றான்; உற்கிராந்திசமயத்திலே வித்துவான்களுக்குச் சொரூபப்பிரகாசமுள்ள தாரகப்பிரமத்தை உபதேசிக்கின்றார்" என்று (சுருதி) கூறுகின்றது.

ருத்ரோ ராஜாநமத்வரஸ்ய (இரு. வே. ௪. ௩. ௧)

"உன்னைக் காத்துக்கொள்ளும்பொருட்டு உன் யஞ்ஞத்துக்குக் கர்த்தாவாக உருத்திரரைத் தேடிக்கொள்" என்ற சுருதிகளிலே, அவர் ஆராதிக்கப்படுதலான் அவருக்குச் சர்வயஞ்ஞாதிபத்தியம் வர்ணிக்கப்படுகின்றது.

"உஹெள் வீரா ஜெ-ஷஜ ஹெஷஜெஷி ஷி-ஷஷஜ்ஜநாஷிஷஜாஜ் ஶு ஹெணாசி (இரு. வே. உ. ௩௩. ௪)

"உருத்திரரே! எங்கள் புதல்வர்களை உமது வைத்திய ஔஷதங்களினுற் பலப்படுத்தும்; ஏனென்றால் வைத்தியர்களுக்குள்ளே நும்மை மகாவைத்தியர் என்று கேள்விப்படுகின்றேன்" என்று சுருதி கூறுதலின், அவர் சம்சார நோய்க்கு உத்தமவைத்தியர் என நிரூபிக்கப்படுகின்றார்.

ஒாயாஜ ஶுகூதிம் விஷூா நாயிநஜ ஒஹெஜாரஂ (சுவே. ௪. ௧௦)

"மாயையைப் பிரகிருதியென்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக" என்னுஞ் சுருதியினுற் சகல பிரபஞ்சமாகிய விசித்திர புஷ்ப சமூகங்களைப்பற்றியிருப்பவராய், மாயை எனப்படுபவராயுள்ள பராசத்தியார் அவர்க்கு ரூபமும் ஏகதேச சுபாவமுமுடையராய்ப் பிரதிபாதிக்கப்படுகின்றார். இதயத்துள்ளாராய், இனியவராய், பிரமமாய், பரமேசுவரராய், பரமமங்கள சொரூபராய், உமாபதியாய், பரமான்மாவாயுள்ள அவர் தமது ஆஞ்ஞாரூபமாகச் சுருதியிலே விதிக்கப்பட்ட சுவாராதன ரூபமாயுள்ள அக்கினிகோத்திராதி கன்மங்களிலே நியதனும், விதிக்கப்படாத சமஸ்த கன்மங்களிலே நின்று நீங்கினவனும், தன்னுற் (சிவனுர்க்கு) அர்ப்பணஞ் செய்யப்பட்ட சகல கன்மபலத்தையுடையனும், அச்சிவனுர்க்கு ஒப்பிக்கப்பட்ட சித்தத்தையுடையனும், சிவனுருடைய ஞானமிர்தத்தினுலே நிறைந்தவனும், சமஸ்த காமியபலன்களையும் ஒழித்தவனும், விவேகாதியுடையனும், சிவபக்தியிலேமாத்திரம் விருப்புடையனும், சிவப்பிரசாதத்தை விரும்பினவனும், வித்தியாவந்தனும், சாதகனுமுள்ள பக்தனைப்பார்த்துச் சரீரம் நீங்குங்காலத்திலே, அவனிடத்திலே கிருபையுடையராய், சம்சாரகளங்கத்தை ஒழிக்கும் அநுக்கிரக திருஷ்டியை அவன்மாட்டுப் பாலிக்கின்றார். அவருடைய அநுக்கிரக விசேடத்தினுலே இவன் சம்சாரத்துக்குரிய மலம் நீங்கப்பெற்று, பிரகாசமுடைய பரமான்மாவினுல் விளங்கிய சோதியினுல் தலைகாடிவாயிலாகப் புறப்பட்டு ஒளிமார்க்கம் வாயிலாக அவருடைய அப்பிராகிருதமாய நிரதிசயானந்த இயல்புடைய பரமபதத்தை அடைந்து அந்தச் சிவாகாரமாகி, நித்தியநிரதிசயானந்த சொரூபனுகின்றுன். ஆகலின், வித்துவானுக்கும் அவித்துவானுக்கும் உள்ள கதி பேதமாம் என்பது யுக்தமே. (௧௬)

(அ) இரச்சுமியநுசாரியதிகரணம்.

ஶுஜ்ஜநாஷஜஷீ (௪. உ. கஎ)

(ஜ்ஒ) ஒளியைத் தொடர்ந்தவனுய்.

மேலை அதிகரணத்திலே இதயத்திருக்கும் சிவபெருமானால் அநுக்கிரகிக்கப்பட்ட பக்தன் தலைநாடிவாயிலாகப் புறப்படுதல் கூறப்பட்டது.

அங்ஙனம் புறப்படுபவனுக்கு ஊர்த்துவகதி இரவிலா? பகலிலா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

அத யத்ரைதஸ்மாச்சரீராதுத்க்ராமத்யதைதைரேவ ரச்மிபிரூர்த்வமாக்ரமதே (சாந். அ. ௮. ௬)

"இந்தச் சரீரத்தினின்று புறப்படும்போது, அந்த ஒளிவாயிலாக அவன் மேலே போகின்றான்" என்னுஞ் சுருதியினால், உற்கிராந்தி செய்பவனுக்கு ஒளிசம்பந்தமாய் மேலேறுக்கப்போதல் அறியப்படுகின்றது. ஒளிசம்பந்தமோ பகலிலேதான் எய்தக்கூடியது; இராத்திரியிலன்றாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். உற்கிராந்தனாகிய வித்துவான் ஒளிசம்பந்தத்தினாலேதான் ஊர்த்துவமாகப்போகின்றான் என்பது சத்தியம். அது பகலிலும் இரவிலும் நேரும். கோடை இராத்திரிகாலங்களிலே உஷ்ணம் காணப்படுதலின், இராத்திரியிலும் சூரியகிரணங்கள் உள்ளன. ஆகலின், இரவிலேனும் பகலிலேனும் (சூரியன்) ஒளியைத் தொடர்ந்து அவன் ஆன்மா மேலே போகின்றதெனை நிர்ணயிக்கப்பட்டது. (கஎ)

சூத்திரகாரர் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றார்.

நிசி நேதி சேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத்தர்சயதி ச|

(ச. உ. கஅ)

(சங்கா) இராத்திரியிலே (அது எய்தாது) என்றுகூறின், அன்று; சரீரம் இருக்கும் வரையும் சம்பந்த மிருத்தலின். சுருதியுஞ் சொல்கின்றது.

(ஆக்ஷேபம்) ஒருவன் இராத்திரியிலே இறந்தாலும் ஒளிசம்பந்தத்தினாற் பிரமப்பிராப்தி எய்தும் என்று கூறப்பட்டது. அது இரவில் இயையாது.

திவா ச சுக்லபக்ஷச்ச உத்தராயணமேவ ச|

முமூர்ஷதாம் ப்ரசஸ்தானி விபரீதம் து கர்ஹிதம்|

"பகற்போதும் சுக்கிலபக்ஷமும் உத்தராயணமுமாகிய இவை சாகப்போபவர்களுக்கு நல்லன; அதற்கு மாறானவை கண்டிக்கப்படுகின்றன" என்பதினால், இராமரணம் நிந்திக்கப்படுகின்றதே எனின்,

(உத்தரம்) அன்று; சம்சாரபந்தம் சரீரம் இருக்கும்வரையும் நிலைத்தலானும், இச்சென்மத்தில் எய்திய பிராரப்தகன்மமான அ—பந்தத்துக்கு

ஏதுவாய்த்தொடங்கப்படாதனவாயுள்ள கன்மங்கள் ஞானத்தினால் அழிந்து போம்போது—இறுதிச் சரீரம் முடியும் வரையும் இருக்கின்றமையாலும், இறுதித்தேகமுடிவில் அப்பிராரப்தம் நஷ்டமாகும்போது பிரமத்தை அடைதலில் விக்கினவேது யாதுமின்மையாலுமாம்.

தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே।
(சாந். ௬. ௧௪. ௨)

"சரீரத்திருந்து அவன் விடுபடாதவரையும் அவனுக்குத் தாமசமுண்டு; பின் அவன் பூரணனாயிருக்கின்றான்" என்னுஞ் சுருதியினால் இரவை மேலே நிந்தித்தமை பிறர் விஷயம்பற்றியது. ஆகலின், இரவில் இறந்தோனும் பிரமத்தை அடைதலின் விரோதமின்று. (௧௮)

அதஶ்சாயநேऽபி தக்ஷிணே (௪. உ. ௧௯)

(௩0௭) ஆகலினாலும் தக்ஷிணாயனகாலத்தினும்.

ஆகலின், பந்தகேதுத்துவம் இன்மையால் தக்ஷிணாயனத்தில் இறக்கும் வித்துவானுக்கும் பிரமப்பிராப்தி உண்டு. (௧௯)

யோகிந: ப்ரதி ச ஸ்மர்யதே ஸ்மார்த்தே சைதே (௪. உ. உ0)

(௩0௮) யோகிகளைக் குறித்து இவ்விரு (பாதைகளும்) நினைக்கற்பாலனவாக ஸ்மிருதியிற் கூறப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) மோக்ஷ இச்சையுடைய வித்துவானைக் குறித்துப் புநராவர்த்திக்கு ஏதுவாகிய காலவிசேஷத்தை ஸ்மிருதி கூறுகின்றது.

யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகிந:।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப।
அக்நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்।
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா:।
தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம்।
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே।
ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஶாஶ்வதே மதே।
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்த்ததே புந:।
(பகவற்கீதை. அ: உ௩—உ௬)

"பரதருள்ளே வலியனே! எக்காலத்துப் புறப்படின் யோகிகள் மீள்வார் என்றும் மீளமாட்டார் என்றும் உள்ள அந்தக் காலத்தை உனக்குச் சொல்வேன்; அக்கினி, சோதி, பகல், சுக்கிலபக்ஷம், உத்தராயணஆறுமாசம் என்பவற்றிற் புறப்படின் பிரமத்தை அறிந்தவர்கள் பிரமத்தை அடைகின்றார்கள், புகை, இராக்காலம், கிருஷ்ணபக்கம், தக்ஷிணயன ஆறுமாசம் என்பவற்

றில் யோகி சந்திரன் ஒளியை அடைந்து திரும்புகின்றான்; உலகத்தில் இந்தக் கிருஷ்ணசுக்கில பாதைகள் நித்தியம் என்றே மதிக்கப்படுகின்றன. ஒரு மார்க்கத்தினால் மீண்டு வராதிருக்க ஒருவன் போகின்றான். மற்ற மார்க்கத்தினாலே அவன் திரும்புகின்றான்''. ஆகலின், இராக்காலத்தையும் தக்ஷிணாயனத்தையும் நிந்தித்தமை அவித்துவான்களையுற்றே என்று கோடல் யுக்தம் அன்றெனின்,

(உத்தரம்) கூறுதும். இச்சூத்திரம் மேலே கூறிய ஆக்ஷேபத்துக்கு உத்தரம் என்று கொள்ளப்படுகின்றது. (மேலே கூறப்பட்ட வாக்கியங்களிலே) பிதிர்யானம், தேவயானம் என்னும் இரு பாதைகளுள்ளே (தேவயான) ஒளிமார்க்கத்தினால் வித்துவான்கள் செல்கின்றார்கள் என்றும், மற்றவர்கள் (பிதிர்யான) எதிர்மார்க்கத்தினாற் செல்கின்றார்கள் என்றும், யோகத்துக்கு அங்கமாகக்கொண்டு யோகத்தில் முயன்றோர் நாடோறும் தியானித்தல் வேண்டும் என்று ஸ்மிருதி சொல்கின்றது. முமுட்சுக்களுடைய மரணத்துக்கு ஏற்ற விசேஷகாலங்கள்தான் இயைந்தன என்று சொல்லப்படவில்லை.

நைதே ஸ்ருதீ பார்த² ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந।
தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ ப⁴வார்ஜுந॥
(பகவற்கீதை, அ: ௮)

"பிருதாவின் குமாரனே! இந்தப் பாதைகளை அறிந்து யோகி ஒருவனும் மயங்குவானல்லன். ஆகலின, அர்ச்சுன! எக்காலத்தும் யோகத்தில் உறுதியாய் இரு" என ஸ்மிருதியும் கூறுகின்றது. மேலே உரைக்கப்பட்ட இரண்டாவது மூன்றாவது சுலோகங்களிற் குறிக்கப்பட்டன பிதிர்யான தேவயான பாதைகளாம். மேலே கூறப்பட்ட வாக்கியங்களின் முதலிலே நேர்ந்த காலம் என்னும் பதம் ஆதிவாகிகசணங்களைச் சுட்டியது; காலாபிமான தேவதைகள் மிகுதியாயிருத்தலின். ஆகலின, எப்பிரகாரத்தாலும் வித்துவானுக்குப் பிரமப்பிராப்தியிலே இரா, தக்ஷிணாயனம், கிருஷ்ணபக்ஷம் என்னும் நிஷேதம் இல்லையே. எப்போது தேகம் நீங்குகின்றதோ அப்போதே பிரமப்பிராப்தி எய்துகின்றது. (உ0)

நான்காம் அத்தியாயத்து

மூன்றும் பாதம்.

(௧) அர்ச்சிராத்யதிகரணம்.

அர்சிராதிநா தத்ப்ரதிதே꞉ (௪. ௩. ௧)

(௫௦௬) ஒளி முதலியவற்றால், அது பிரசித்தமாதலின்.

முந்தியபாதத்தில் இதயத்துள்ள சிவபெருமான் அநுக்கிரகத்தினால் துவாரம் பிரகாசிக்க, உபாசகன் தலைநாடிவாயிலாகத் தேகத்தை விட்டுப் புறப்படுகின்றான் என்று கூறப்பட்டது.

இவ்வியல்பினனுக்குப் பிரமப்பேறானது ஒளியோடுதொடங்கிய மார்க்கத்தினாலேயா? இன்றேல் வேறு பிரகாரத்தினாலுமா? எய்துகின்றதென்பது முதற்கண்ணே விசாரிக்கப்படுகின்றது.

(பூருவபக்ஷம்)

யத்ராஸௌ கேஶாந்தோ விவர்ததே। வ்யபோஹ்ய ஶீர்ஷகபாலே। பூரித்யக்னௌ ப்ரதிதிஷ்டதி। புவ இதி வாயௌ। ஸுவரித்யாதித்யே। மஹ இதி ப்ரஹ்மணி। ஆப்னோதி ஸ்வாராஜ்யம் (தைத். ௧. ௬)

"உரோமத்தின் வேர் பிரியுமிடத்தில், அவன் தலையின் இரு பக்கங்களையும் பிளந்து, பூ என்று கூறி அக்கினியிற் பிரவேசித்து, புவ என்று சொல்லி வாயுவிற் பிரவேசித்து, சுவ என்று சொல்லி ஆதித்தியனிற் பிரவேசித்து, மஹ என்று சொல்லிப் பிரமத்தைப் பிரவேசித்து, அங்கே சுவராச்சியத்தை அடைகின்றான்" எனப் பிரமப்பிராப்தியானது ஒளிமார்க்கத்தை ஒழிந்தும் அடையப்படுவதாக ஓரிடத்திற் பெறப்படுகின்றது. ஆகலின், பிரமப்பிராப்திக்கு ஒளிமார்க்கம் நியமமின்றாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. வித்துவான் ஒளிமார்க்கத்தினாலே தான் பிரமத்தை அடைகின்றான்; பஞ்சாக்கினிவித்தை முதலியவற்றிற் (கண்டவாறு)

தே அர்சிஷமபிஸம்பவந்தி (சாந். ௫. ௧௦. ௧)

"அவர்கள் ஒளியை அடைகின்றார்கள்" என்றற்றொடக்கத்தவற்றால் ஒளிமார்க்கமே பிரமத்தை அடைவிப்பதாகப் பிரசித்தமாயிருத்தலின். "பூ என்று (கூறி) அக்கினியிற் (பிரவேசித்தனன்)" என்றற்றொடக்கத்த மந்திரங்களிலே பிரமத்தை அடையும் மார்க்கம் கூறப்படவில்லை. பின்னையோ அந்

தந்த விபூதிப் பிராப்தியே கூறப்பட்டது. ஆகவின், பரப்பிராப்தி ஒளிமார்க் கத்தினாலேயாம். * (௧)

(௨) வாயுவதிகரணம்.

வாயுமப்தாதவிசேஷவிசேஷாப்யாம் (௪. ௩. ௨)

(௫௧௰) வருஷத்திலிருந்து வாயுவை (அறியவேண்டும்), அவிசேஷத்தினாலும் விசேஷத்தினாலும்.

இங்கே கேட்கப்பட்ட அர்ச்சிராதி மார்க்கக் கிரமத்தின் மத்தியிலே மற்றோர் சுருதியில் எய்திய கிரமம் இங்கே புகுத்தற்பாலதா? இன்றேல் இதுவே மார்க்கக் கிரமமா? என்பது சந்தேகம்.

தே அர்சிஷமபிஸம்பவந்த்யர்சிஷோஹரஹ்ந ஆபூர்யமாணபக்ஷமாபூர்யமாணபக்ஷாத்யாந்ஷடுதங்ஙேதி மாஸாம்ஸ்தாந் மாஸேப்ய: ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸராதாதித்யமாதித்யாச்சந்த்ரமஸம் சந்த்ரமஸோ வித்யுதம் தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி।

(சாந். ௫. ௰. ௧, ௨)

"அவர்கள் ஒளியை அடைந்து, ஒளியிலிருந்து பகலுக்கும், பகலிலிருந்து பூருவபக்ஷத்துக்கும், பூருவபக்ஷத்திலிருந்து உத்தராயணத்துக்கும், (உத்த ராயண) மாசங்களிலிருந்து வருஷத்துக்கும், வருஷத்திலிருந்து சூரியனுக் கும், சூரியனிலிருந்து சந்திரனுக்கும், சந்திரனிலிருந்து மின்னலுக்கும் போகின்றனர்; அங்கே இருக்கும் ஓர் அமானவன் இவர்களைப் பிரமத்துக்கு வழிகாட்டுகின்றான்" என ஒளிமார்க்கக் கிரமம் சாந்தோக்கிய சுருதியி னாற் சித்தமாயிருக்கின்றது.

யதா வை புருஷோऽஸ்மால்லோகாத்ப்ரைதி ஸ வாயுமாகச்சதி தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே யதா ரதசக்ரஸ்ய கம் தேந ஸ ஊர்த்வ ஆக்ரமதே ஸ ஆதித்யமாகச்சதி (பிரு. ௭. ௰. ௧)

"இவ்வுலகத்தை விட்டுப் புருஷன் புறப்படும்போது அவன் வாயுவுக்கு வரு கின்றான்; வாயு ரதசக்கரத்தின் துவாரம்போல அவனுக்கு இடங்கொடுக்கின் றான்; அவன் அதற்கூடாக மேலே ஏறிச் சூரியனை அடைகின்றான்" என்னும் பிருகதாரணிய சுருதியினால் வருஷத்துக்கும் ஆதித்தியனுக்கும் இடையிலே வாயு ஒன்று கேட்கப்படுகின்றது.

---

* (௩. ௩. ௩௨-இற்) போல நிர்க்குணோபாசகர்களுக்கு அர்ச்சிராதிகதி இல்லை என்று இந்த இடத்திலும் புகுத்திய சபடவாக்கியம் மொழிபெயர்க்காது தவிர்க்கப் பட்டது.

அது அவற்றுக்கிடையில் வைக்கப்படவேண்டுமா? இன்றா? என்பது சந்தேகம்.

(பூர்வபக்ஷம்) இடையிற் புகுத்தப்படுவதன்று; சுருதியிற் கேட்கப்படாமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். க்ரமோபசங்காரநியாயத்தினாற் சம்வற்சரத்துக்குப் பின்னும், ஆதித்தியனுக்கு முன்னும் வாயு வைக்கற்பாற்று. பிருகதாரண்யத்து மற்றோரிடத்தில்,

மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யம் (பிரு. அ. உ.கரு)

"மாசங்களிலிருந்து தேவலோகத்தையும், தேவலோகத்திலிருந்து ஆதித்தியனையும்" என்று ஒளிமார்க்கத்திலே தேவலோகம் கூறப்படுகின்றது. சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட உபசங்காரத்தினால் (வருஷம்) அதிககாலத்தையுடைமையான், மாசங்களுக்கு மேல் வைக்கப்பட்ட வருஷங்களுக்கு அப்பால் தேவலோகம் எய்தவேண்டும். அந்தத் தேவலோகம் வாயுவே. தேவலோக சப்தமானது தேவர்களுடைய உலகம் என்னும் வியுற்பத்தியினால், அவிசேஷமாக வாயுவைக் குறிக்கின்றது. வாயுசப்தமே (விசேஷமாக) வாயுவைக் குறிக்கின்றது. இங்ஙனம் அவிசேஷ விசேஷங்களையுடைய தேவலோக வாயுசப்தங்களால், வாயு ஒன்றே குறிக்கப்படுகின்றான். ஆகலின், வருஷத்துக்குப்பின்னும் ஆதித்தியனுக்கு முன்னும் வாயு வைக்கற்பாலன்.

வாயுர்தேவாநாமாவஸதம்।

"வாயுவானவன் தேவர்களுக்கு இருப்பிடமானவன்" என்றும்,

யோऽயம் பவத ஏஷ தேவாநாம் க்ருஹம்।

"(ஈண்டு) வீசும் இந்த வாயு தேவர்களுடைய கிரஹம்" என்றும் கூறப்படுகின்றது. (௨)

(௩) தடிததிகரணம்.

தடிதோऽதி வருணஸ்ஸம்பந்தாத் (௪. ௩. ௩.)

(௩௧௧) மின்னலுக்குமேல் வருணன்; சம்பந்தமுண்மையான்.

ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி ஸ வாயுலோகம் ஸ வருணலோகம் ஸ இந்த்ரலோகம் ஸ ப்ரஜாபதிலோகம் ஸ ப்ரஹ்மலோகம் (கௌஷீ. க. ௩)

"அவன் இந்தத் தேவயானத்தை அடைந்து அக்கினி உலகத்தையும், வாயு

லோகத்தையும், வருணலோகத்தையும், இந்திரலோகத்தையும், பிரஜாபதி லோகத்தையும், பிரமலோகத்தையும் அடைகின்றனன்" எனக் கௌஷீதகி யுபநிடதத்திற் கேட்கப்படுகின்றது. அங்கே அக்கினி லோக சப்தத்தினுற் குறிக்கப்பட்ட ஒளியின் முதன்மை விரோதமுறுது. வாயுவுக்கும் ஆதித்திய னுக்கும் வேறு சுருதியிலே சித்தித்த சுருதிக்கிரமத்தோடு இந்தப் பாடக்கிர மம் பாதிக்கப்படுதலின், சம்வற்சரத்துக்குப்பின்னே அவை கிரமமாக வைக் கற்பாலன. ஈண்டு வருணுதியரும் கேட்கப்படுகின்றனர்.

அவர் அர்ச்சிராதி மார்க்கத்திலே வைத்தற்கு யோக்கியமுடையவரா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) நியாமகமில்லாமையான் வைத்தல் கூடாதாமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வருணுதியரை வைப்பது உசிதம்; அங்கே மின்னுலகத்துக்கு மேலே வருணலோக சம்பந்தமுண்மையின். அந்த விய வஸ்தை யுக்தம். மின்னல் பூருவமாக எய்தும் மழையை உண்டாக்குதற்கு வருணனே அதிபதி என்பது பிரசித்தமாயிருப்பது பற்றி, மின்னலுக்கும் வருணனுக்கும் சம்பந்தமுண்டு. அதற்குப் பின்னர் இந்திரபிரஜாபதிலோகங் களும் பாரிசேடக் கிரமத்தால் உண்டு. ஆகலின், விரோதமின்று. (௩)

(௪) ஆதிவாகிகாதிகரணம்.

ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத் (௪. ௩. ௪)

(நிகஉ) நடாத்துவோர்கள், அந்த இலிங்கமுண்மை யான்.

அர்ச்சிராதிகள் வழியின் அடையாளங்களாகிய ஸ்தானபேதங்களா? இன்றேல் வித்துவான்களைக் கூட்டிச்செல்லுந் தேவதாவிசேடங்களா? என் பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முதற்கட்பெறப்படுவதுயாதெனின்? ஸ்தானபேதங் கள்; அவற்றின் குறியுண்மையான். உலகத்திலே கிராமத்தைவிட்டுப் புறப் பட்டு, நதியை அடைந்து, இடைச்சேரியை அடைகின்றனர் என வியவ கரிக்கின்றார்கள். அதுபோல, ஒளிமார்க்க முதலியனவுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. ஒளிமுதலிய மார்க்கங்கள் மார்க் கத்தில் அபிமானிகளாய் வித்துவான்களைக் கூட்டிச்செல்லும் தேவதா விசே ஷங்களே;

தத்புருஷோऽமானவஸ ஏனான் ப்ரஹ்ம கமயதி (சாந். இ. ௧0. ௨)

"அந்த அமானவனுகிய புருஷன் இவர்களைப் பிரமத்தைபடையும் வண்ணஞ்

செய்கின்முன்'' என மின்னற் புருஷனுக்குக் கூட்டிச் செல்லும் இலிங்கமுண்மையால், சாமானியமாக அர்ச்சிராதிகளினற் குறிக்கப்பட்ட தேவதைகளுக்கும் கூட்டிச்செல்லுதலே சம்பந்தம் என நிச்சயித்தல் நியாயமாதலின்.

மின்னற் புருஷனுக்குப் பிரமத்தை அடைவித்தலிலே வருணன் முதலாயினோரால் யாதுபயன் எனச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வைஷுுதெநெவ தகதஸ்ஸுுதெஃ (ச. ங. ரு)

(ருகங) மின்னற்குரியவனாலே தான், அங்கிருந்து அதனைச் சுருதி கூறுகின்றமையின்.

மின்னற் புருடனை அடைந்த பின்னர், அவனே (மின்னற் புருஷனே) பிரமத்தை அடைவிக்கின்முன்;

தத்பூுஷொ உகா நவஃ ஸ ஏகா நூஹூமயதி (சாங். ரு. க0. உ)

"அமானவனாகிய அந்தப்புருஷன் அவர்களைப் பிரமத்தை அடையச்செய்கின்முன்'' எனச் சுருதியுண்மையின். வருணன் முதலாயினோர் அநுக்கிரகம் பண்ணுவது காரணமாகப் பிரமத்தை அடைவிக்கின்முர்கள் என்பதில் விரோதமின்று. (ரு)

(ரு) காரியாதிகரணம்.

காய்்் வாதரிரஸ்ஃ மதுூவவெத்தெஃ (ச. ங. சு)

(ருகச) காரியப் (பிரமத்துக்குக் கூட்டிப்போகின்முன்); அதனையே அடைதல் கூடுமாதலின் எனப் பாதரி (கூறுகின்றனர்).

அமானவபுருஷன் உபாசகர்களைப் பிரமத்துக்கு நேராகவே நடாத்துகின்முனு? இன்றேல் மற்றொருவரை அடைவிக்கின்முனு? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) காரியமூர்த்தியாகிய இரண்ணியகருப்பரையே அடைவிக்கின்முன். அவரை அடைதலன்றே பொருத்தமாகின்றது, வியாபியாகிய பரபிரமத்தை அன்று. (சு)

பின்னரும் பொருத்தமுண்மையைக் கூறுகின்றனர்.

விஸெஷிதக்வாச் (ச. ங. எ)

(ருகரு) (அது) விசேடிக்கப்பட்டிருத்தலானும்.

ப்ரஜாவதெ ஸஹாம வெரூவுவெறு (சாங். அ. கச. க)

"பிரஜாபதியுடைய சபையாம் வீட்டை அடைகின்றேன்'' என்று விசேடிக்

கப்படுதலின், (அமானவன் முக்தர்களை) இரண்ணியகருப்பருடைய ஸ்தா னத்தையே அடைவிக்கின்றான். (எ)

ஸாமீப்யாத்து தத்வ்யபதேஶ: (௪. ௩. ௯)

(௫௧௬) ஆயின் அப் (பிரமத்தைக்) கூறுதல் சாமீப்பி யத்தினால்.

ப்ரஹ்ம கமயதி (சாந். ரு. ௧௦. ௨)

"பிரமத்தை அடைவிக்கின்றனன்" என்றவிடத்தில், இரண்ணியகருப்பருக் குப் பிரமம் என்னும் பெயர் எய்தியது, (அவர்) அப்பிரமத்துக்குச் சமீபத் திருந்தமையின்.

ஹிரண்யகர்ப்பம் பஶ்யத ஜாயமாநம் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"இரண்ணியகருப்பர் பிறக்கக் காண்கின்றீர்" எனப் பிரதம காரியமாகக் கேட்கப்படலான் அவருக்குச் சாமீப்பியம் எய்திற்று. (அ)

கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதாநாத் (௪. ௩. ௯)

(௫௧௭) சிருட்டி யொழிவில் அந்த அத்தியக்ஷரோடு அவன் அதற்கு அப்புறம் போகின்றான் ; சுருதி கூறுதலின்.

முதற்கண்ணே இரண்ணியகருப்பர் பதத்தை அடைந்தாலும் மீளத் திரும்புதல் இல்லை என்னுஞ் சுருதியும் விரோதமுறாது. இரண்ணியகருப்ப லோகம் ஒழியுங்கால் அத்தியக்ஷராகிய இரண்ணியகருப்பரோடு கூட அதற்கு மேலாகிய காரியப்பிரமாவின் உலகத்துக்கு மேலேயுள்ள பரமபதத்தை அடைகின்றார்கள்;

தே ப்ரஹ்மலோகே து பராந்தகாலே பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே (கைவ)

"அவர்கள் பிரமலோகத்திலே அவருடைய ஆயுள்முடிவிலே, பராமிர்தராய்ப் பாசத்தினின்று வீடுறுகின்றனர்" என்னுஞ் சுருதியினால் அங்ஙனம் கூறப் படுகின்றது. ஆகலின் விரோதமின்று. (௯)

ஸ்ம்ருதேஶ்ச (௪. ௩. ௧௦

(௫௧௮) ஸ்மிருதி கூறலானும்.

ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே பரஸ்யாந்தே க்ருதாத்மாந: ப்ரவிஶந்தி பரம்பதம் |

"பிரளயகாலம் எய்திப் பரத்தின் (இரண்ணியகருப்பரின்) முடிவும் எய்திய போது, இவரெல்லாம் பிரமாவோடு கூடப் பரமபதத்தை அடைகின்றனர்

கள்'' என ஸ்மிருதியினாலும் பெறப்படுகின்றது. ஆகலின், இரண்ணியகருப்பர் பதத்தில் ஒளிமார்க்கத்துள்ள (தேவ) கணம் முதற்கண்ணே (அவர்களை) அடைவிக்கின்றது; பின்னர்ப் பிரளயகாலத்திலே அவரோடுகூடப் பரப்பிரமம் அடையப்படுகின்றது. (௧௦)

வரம் ஜைமிநி முக்யத்வாத் (௪. ௩. ௧௧)

(௫௧௯) பரத்தை (அடைகின்றான்) என்று சைமுனி கொள்கின்றார்; அது முக்கியப்பொருளாகலின்.

"பிரமத்தை அடைவிக்கின்றான்'' என்றதற்கு இரண்ணியகருப்பருக்குப்பரமோற்கிருஷ்டராகிய நாராயணரையே அர்ச்சிராதிதேவர் அடைவிக்கின்றார், (என்பது பொருள்; இந்தப்) பரப்பிரமமே (பிரபஞ்சத்துக்கு உபாதானமாயிருத்தலின். முக்கியார்த்தத்திலே நாராயணர் பிரமம் எனப் படலாம் எனச் சைமினி கொள்கின்றார். (௧௧)

அதற்குப் பொருத்தமாகச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

தர்சநாச்ச (௪. ௩. ௧௨)

(௫௨௦) (சுருதியிற்) காணடலானும்.

ஸோऽத்⁴வந꞉ பாரமாப்நோதி தத்³விஷ்ணோ꞉ பரமம் பத³ம் |

(கட. ௩. ௯)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாய அந்த விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றான்'' என அந்த விஷ்ணுவின் பதத்தை ஆன்மாவானது அடைவதாகக் காணப்படுகின்றது. ஆகலானும் ஆன்மா விஷ்ணுவையே அடையப் பெறுகின்றது. (௧௨)

ந ச கார்யே ப்ரத்யபி⁴ஸந்தி⁴꞉ (௪. ௩. ௧௩)

(௫௨௧) காரியப்பிரமத்தில் இலக்கில்லை.

ப்ரஜாபதே꞉ ஸபா⁴ம் வேஸ்ம ப்ரபத்³யே (சாந். அ. ௧௪. ௧)

"பிரஜாபதியினுடைய சபையாம் வீட்டை அடைகின்றேன்'' என்னும் வாக்கியத்திற் கூறப்பட்டது காரியமாகிய இரண்ணியகருப்பரை இலக்காகக் கொள்ளவில்லை; பிரஜாபதி சப்தமானது பிரசைகளைக் காத்தலினாலே நாராயணர்க்கு எய்துகின்றமையின்.

தே ப்³ரஹ்மலோகே து பராந்தகாலே

{தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮ முண். ௩. ௨. ௬; கைவ}

"அவர்கள்பிரமலோகத்திலே சரமதேகாவசான காலத்திலே[illegible]ல்லாரும்

பராமிர்தராய் வீடுறுகின்றனர்'' என்னும் வாக்கியத்திற் பிரம சப்தமானது நாராயணரின் மேற்று. அவருடைய உலகமாகிய பதத்திலே யோகிகள் இருந்து, இறுதித்தேகம் முடிந்தபோது பராமிர்தமாகிய விசுவாதிகப்பிரமத்தை அடைந்து முக்தராகின்றனர் என்பதுபற்றி விரோதமில்லை.

ஏதாநி ஹ வா அம்ருதஸ்ய நாமதேயாநி (ஜாபாலம்)

"இவை அமிர்தத்தின் பெயர்கள்'' என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சிவனாகிய பரப்பிரமத்துக்கு அமிர்த சப்தப்பெயர் அநாதிமுத்தத்துவத்தினாற் பெறப்பட்டது. ஆகலின், விஷ்ணு பதத்திலே யோகிகள் பிராரப்த போக பரியந்தம் இருந்து, பிராரப்தகாரியதேகம் முடிந்தபோது பராமிர்தமாகிய விச்வாதிகப்பிரமத்தை அடைந்து முக்தராகின்றார் (எனின்), (௧௩)

(சித்தாந்தம்) பின்னர்க் கூறப்படுகின்றது.

அப்ரதீகாலம்பநாந்நயதீதி பாதராயண உபயதா ச தோஷாத் தத்க்ரதுஶ்ச (௪. ௩. ௧௪)

(௫௨௨) பிரதீகங்களை வழிபடாதவர்களை அவன் (பிரமத்துக்கு) வழிகாட்டுகின்றான் என்று பாதராயணர் (கொள்கின்றார்); (மேற்கூறிய) இரு பிரகாரத்தினும் தோஷமுண்மையின்; பிரமத்தைத் தியானிப்போன் (பிரமத்தை அடைகின்றான்).

எவர்கள் சேதனத்தையோ அசேதனத்தையோ கேவலம் பிரமதிருஷ்டியினால் உபாசிக்கின்றார்களோ, அவர்கள் பிரதீகங்களை வழிபடுபவர்களே. ஆயின், எவர்கள் விசுவாதிகமாகிய பிரமத்தைச் சாக்ஷாத்தாக உபாசிக்கின்றார்களோ, அவர்கள் பிரதீகங்களை வழிபடாதவர்களே. சாக்ஷாத்தாகத் பிரமத்தை உபாசிப்போர்களைப் புருஷன் (அமானவன்) சாக்ஷாத் பிரமத்தையே அடைவிக்கின்றான். பிரமமானது விசுவாதிகமாயும், கிருஷ்ணபிங்களமாயும், விரூபாக்ஷமாயும் கூறப்படுகின்றது. சாக்ஷாத் பிரமோபாசகன்

பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே।

(சாந். அ. ௧௨. ௩)

"பரஞ்சோதியோடியைந்து அதன் சொரூபத்தை அடைகின்றான்''

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம்। த்யாத்வா முநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் (கைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிலோசனரும், நீலகண்டரும், பிர[illegible]கருமாயினரைத் தியானித்து, முனியானவன் பூதகாரணரும்,

சமஸ்தசாக்ஷியுமாயினுரை இருளுக்குமேலே போய் அடைகின்றான்'' என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சாக்ஷாத் பிரமப்பிராப்தி பெறப்படுகின்றமையின், மேலே கூறப்பட்ட இருபக்ஷத்தினும் தோஷம் சுருதியைவிரோதித்தலினல் எய்துகின்றது. பிரமோபாசகன் பிரமத்தையே அடைகின்றான். இடையிற்றுமதிப்பானல்லன்; பிரயோசனமின்மையின். சகல காரியசமஷ்டிரூபராயுள்ள இரண்ணியகருப்பரின் மேலாயுள்ளார் நாராயணர்; இரண்ணியகருப்பர்க்கு உபாதானமாயிருத்தலின். அவரினும் மேலாயுள்ளார் நிமித்தகாரணரும், விரூபாக்ஷரும், பரப்பிரமமும், சர்வஞ்ஞரும், சர்வ சக்தியினரும், நித்திய திருப்தரும், சுவதந்திரரும், சுவப்பிரகாசருமாயுள்ள சிவபெருமான் எனப் பெயர்படைத்தவரேயாம்.

பராத்பரதரோ ப்ரஹ்மா தத்பராத்பரதோ ஹரி: தத்பராத்பரதோऽபீச: (சிவசங்கற்போபநிடதம், சரபோபநிடதம்)

"பரத்துக்குமேற் பரமாயுள்ளார் (பிரமன்) இரண்ணியகருப்பர், அவருக்குமேற் பரமாயுள்ளார் அரி (விஷ்ணு); அவருக்குமேற் பரமாயுள்ளார் சிவபெருமான் என்று சிவசங்கற்போபநிடதத்தினும், மற்றோரிடத்தில்

நாராயண பரம்ப்ரஹ்ம (தைத். ஆரணி. ௧௦. ௧௩. ௨௬)

'நாராயண பரம்பிரம்ம'' என்றவிடத்தினும், நாராயணர்க்கு மேலாகவும்பிரமம் கூறப்படுகின்றது. அந்தப் பிரமம் எப்படிப்பட்டதென்று ஆக்ஷேபிக்குங்கால்,

ருதம் ஸத்யம் (தைத். ஆரணி. ௧௦. ௨௩. ௪௧)

"இருதம் சத்தியம்'' என்னும் மந்திரத்திறற் சர்வஞ்ஞதைபற்றி மனேவாக்குத்தோஷம் இல்லாததும், தனது சத்தி ஒளிகளிறைற் சகல செகத்தையும் நிறைந்திருப்பதும், தன்னிடத்தினின்று பிரியாத பரப்பிரகிருதிரூபமாய், பரமானந்த ஞான ஏகரச பரமாகாச இலக்ஷணமுடையதாய், தன்னிலையினின்று வேறுருத பரம சேதனராகிய நாராயணர் தொடங்கி இரண்ணியகருப்பாதி சமஸ்த காரியப்பிரபஞ்சமாய்ப் பரமசத்தியாயுள்ள உமையோடிசைந்த ரூபமுடையதாய், நிர்விகாரமாய், திரிலோசனமுடையதாயுள்ள பரப்பிரமமே எல்லாவற்றுக்கும் உயர்ந்ததெனநிரூபிக்கப்பட்டது.

விச்வாதிகோ ருத்ர: (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"விசுவாதிகர் உருத்திர:'' என்றமையால் விசுவத்தைக் கடந்திருத்தலும் புலப்படுகின்றது. ஆகலின், வைதிகர்க்கு இப்பிரமத்தை யொழிந்து மற்றொன்றைக் கற்பிப்பது அநியாயமே. (௧௪)

விசேஷம் ச தர்சயதி (௪. ௩. ௧௫)

(௫௨௩.) (சுருதி) பேதத்தையும் காட்டுகின்றது.

ஸாத்வதரோஸ்ய ஹா த்வாத்வதொஹரி: த்வாத்வதோ ஜிஹ: (சிவசங்கற்போபநிடதம்)

"பரத்துக்குப் பரமாயுள்ளவர் பிரமா; அதற்குப் பரமாயுள்ளார் நாராயணர்; அதற்குப் பரமாயுள்ளார் சிவபிரான்"

ஹிரண்யகர்ஜ-ம் ஸர்ய்த ஜாயமாநம் (தைத். ஆரணி. ௧௦. ௧௨. ௨௮)

"இரண்ணியகருப்பர் பிறக்கக் காண்கின்றீர்"

ஸுருஷொ வெருக்ஷ: (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"புருஷர் தான் உருத்திரர்" என்றற் றொடக்கத்த சுருதிகள் விசுவாதிகமாகிய பிரமத்தையும், அதன் அவஸ்தாபேதமாகிய உபாதான விஷ்ணுவையும், விஷ்ணுவினின்று உதித்த இரண்ணியகருப்பரையும் பேதித்துக் காட்டுகின்றன. பிரமவிஷ்ணுக்களுக்கு மேலாயுள்ள பரப்பிரம்மசிவனுருடைய பதமாகிய பரமாகாயரூப பரமானந்தமயத்தை அமானவபுருஷன் அடைவிக்கின்றான் என்பதே யுக்தம்.

ஸொ ஜ்வந: ஸாரமாெநாதி தஷ்ணொ: ஸாமம் ஸதம் |
(கட. ௩. ௯)

"அவன் அத்துவாவின் கரையாய அந்த விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றான்" என்று சங்கிக்கப்பட்ட வாக்கியத்தில் விஷ்ணு சப்தமானது பரப்பிரமத்தைக் காட்டுகின்றது. அறுவித அத்துவாவையும் கடந்த பதமானது விசுவாதிகராகிய சிவபெருமானுக்கே பொருத்தமாயுள்ளது; இன்றேல், பிரபஞ்ச அவஸ்தையையுடைய விஷ்ணுவுக்குப் பரமோற்கிருஷ்டமாய், பரமசொரூபமாய், பரமாகாசரூபமாய், பரமானந்த இலக்ஷணமாயுள்ளது பரப்பிரம சிவனுருடைய பதமென்று கூறுதலுமாம். இங்கேயுள்ள இந்தப்பரமான்மாவானவர் பிரபஞ்சாகாரமாயிருந்தாலும் சம்சாரியாகார். அதுபற்றி யாதும் விரோதமின்று *. (௧௫)

---

*(௨. ௨. ௪௨-ஆஞ்) சூத்திரபாஷ்யத்திறுதியிலே நூதனமாய்ப் புகுத்தப்பட்ட சில வாக்கியங்கள் மொழிபெயர்க்காது தவிர்க்கப்பட்டாற்போல, ஈண்டுச் சிலர் கூறுகின்றார்" என்றற்றொடக்கத்தனவாகப்போந்தனவும் கூறியது கூறலாய்முடிதலின், மொழிபெயர்க்காது ஒழிக்கப்பட்டன.

நான்காம் அத்தியாயத்து

நான்காம் பாதம்.

(க) சம்பத்தியாவிர்ப்பாவாதிகரணம்.

ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேந ஶப்தாத் (ச. ச. க)

(௫௨௪) (பரஞ்சோதியை) அடையுமிடத்துத் தனது ரூபத்தோடு ஆவிர்ப்பாவம் உளதாகின்றது; சுருதி கூறலின்.

மேலைப் பாதத்தில் அர்ச்சிராதிமார்க்கத்தினால் வித்துவான்களுக்கு இரண்ணியகருப்பர் நாராயணர் எனப்படுவோர் பதங்களுக்கு அதீதமாகிய பரப்பிரம சிவனுருடைய பரமானந்தரூப சுவர்க்கம் எனப்படும் பதம் எய்தப் பெறுவதென நிரூபிக்கப்பட்டது.

ஈண்டு அதை அடைந்தவர்களுக்குச் சொரூபாவிர்ப்பாவாதிப்பிரகாரம் நிரூபிக்கப்படுகின்றது.

ஏஷ ஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத்ஸமுத்தாய பரம்ஜ்யோதிரூபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாங். அ. கஉ. ௩)

"இந்தச் சரீரத்தினின்றெழுந்து பரஞ்சோதியோடியைந்து, தன்சொரூபத்தோடு ஆவிர்ப்பாவமாகின்றான்" எனப் பரஞ்சோதிரூபமாகிய மகாப் பிரகாச பரப்பிரமத்தை அடைந்தவனுக்குச் சோரூபாவிர்ப்பாவம் கூறப்படுகின்றது.

அந்தச் சொரூபம் அந்த யோகிக்குஅவ்வேளையில் உண்டானதா? முன்னிருந்ததா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முன் இருந்ததன்று. ஆனற் சுருதியானது அந்த வடிவம் எய்தப்பெற்றதாகக் கூறலின், அது சுவர்க்கம்போல இடையிற் போந்ததே. முன் இருந்ததாயின் இவனுக்குச் சம்சாரம் எங்ஙனம் எய்தும்? ஆகலின், அவ்வுபாசகர்களுக்கு எய்திய முக்திப்பயனாகிய வடிவம் ஆகந்துகமேயெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிரமத்தை அடைந்த ஆன்மாவுக்கு மலத்தினால் மறைபட்டபிரமசாமியகுணமாகிய சொரூபம் முன்னரே சத்தாயிருந்து மலாவரணம் நீங்கியபோது வெளிப்படுகின்றது. தன்ரூபத்தோடு என்றமையால் அங்ஙனம் பெறப்படுகின்றது. இன்றேல் இடையிற் போந்த சொரூபம் ஆன்மாவுக்கு அசாதாரணமாயிருத்தலின், தான் என்னும் விசே

ஷணம் பிரயோசனமின்றாய் முடியும். அங்கே சர்வாநுக்கிரகராகிய பரப்பிரம சிவனுருடைய பிரசாதத்தினாலே தன்னை மூடிய மலம் நீங்கும்போது, அப் பிரமசாமியகுணமாகிய ஆன்மசொரூபம் வெளிப்படுகின்றது. கன்மபலம்போல இது புதிதாக எய்தியதன்று. மலம் அநாதியாயிருத்தலின் சம்சாரம் உளதாயிற்று. பின்னர் முக்தனுக்குச் சர்வஞ்ஞதாதி விசிட்டகுணமுடைய ஞானனந்தகனமாயிருக்கும் அவனது இயற்கைச் சொரூபமே ஆவிர்ப்பவிக்கின்றது. (௧)

முக்த: ப்ரதிஜ்ஞாநாத் (௪. ௪. ௨)

(௫௨௫) முக்தன், பிரதிஞ்ஞையால்.

ஆன்மாவிலே சொரூபமாத்திரம் முன்னரே சித்தமாயிருந்தாலும், மலம் நீங்கிய முக்தனுக்கு அபரிச்சின்னமாகிய ஆனந்தமுதலிய ஆவிர்ப்பவிப்பனவாகக் கூறப்படுகின்றது;

ஏதம் த்வேவ தே பூயோऽநுவ்யாக்யாஸ்யாமி (சாந். அ. ௯. ௩)

"நான் உனக்குப் பின்னரும் ஆன்மாவின் சொரூபத்தை வியாக்கியானஞ் செய்வேன்" என மலத்தினால் எய்திய சாக்கிர முதலிய அவஸ்தையினின்று நீங்கினவனையுற்றுச் சொல்லவேண்டியதாகச் (சுருதி) பிரதிஞ்ஞை செய்தலின். (௨)

ஆத்மா ப்ரகரணாத் (௪. ௪. ௩)

(௫௨௬) (ஈண்டுக் கருதப்பட்டவன்) ஆன்மா; பிரகரணத்தினால்.

அங்கே

பூயோऽநுவ்யாக்யாஸ்யாமி (சாந். அ. ௯. ௩)

"பின்னரும் வியாக்கியானஞ் செய்வேன்" என்றவிடத்துப் பிரகிருதமாகிய அபகதபாப்மத்துவாதி குணங்களையுடைய ஆன்மா என்று கோடற்பாற்று. இது பிரகரணத்தினாற் பெறப்படுகின்றது;

ய ஆத்மா அபஹதபாப்மா (சாந். அ. ௧. ௫)

"மலத்தினின்று நீங்கிய ஆன்மா" என்றெற்றொடக்கத்தனவாகத் தொடங்கி, "மேலும் உனக்கு அதை விளக்குகின்றேன்" என்று சுருதி கூறுதலின். ஆகலின், சுவாபாவிக அபகதபாத்மத்துவாதி குணங்கள் ஆவிர்ப்பவிக்கப் பெற்ற முக்தான்மா பிரமசாமிய சொருபனாகின்றான் என்பது சித்தம். (௩)

(௨) அவிபாகேநதிருஷ்டத்துவாதிகரணம்.

ஃவிஹாமெந த்ருஷுகூாக (௪. ௪. ௪)

(ரு௨எ) பேதமின்றி (முக்தான்மா கூறப்பட்டவனுகக்) காணப்படலான்.

மேலை அதிகரணத்திலே பிரமகுணசொரூப சாமியம் முக்தனுக்குக் குணசொரூபம் என்று பிரதிஞ்ஞை செய்யப்பட்டது.

அந்தச் சாமியம் முக்தனுக்குப் பொருந்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இவ்விரண்டில் எது கோடற்பாற்று?

வஜக வஸவ ரூஜெடூா நஜிதீயாயதஷூஃ (சுவே. ௩. ௨)

"உருத்திரர் ஏகர்; (அவர்கள்) இரண்டாவதற்காக இலர்" என்றற்றொடக்கத்தவற்றிற் (சுருதியானது) பிரமத்துக்குச் சமானமாக இரண்டாவது வஸ்து இன்றென மறுத்தலின், எந்த (மல) பத்தனுக்கேனும் முத்தனுக்கேனும் அந்தப் பிரமசாமியம் பொருத்தமாகாதெனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. முக்தனுக்குப் பிரமசாமியகுணம் உண்டு. எதனால்?

நிரஞஜநஃ வாமஂ ஸாஜ்ஸ்ரூமெவெதி (முண். ௩. ௧. ௩)

"மல மிலனாய்ப் பரமசாமியத்தை அடைகின்றான்"

ஃசுகுஶிவஸமொ ஸவெஜ (வாயு. பூ. ௨அ: ௨௨)

"முக்தன் சிவசமமாகின்றான்" என முக்தனுக்குப் பிரமகுணசோரூபம் வேறுபடாது பிரமத்துக்குச் சாமியமாகவே காணப்படலான். ஆகலின்,

ஸுஜூவெட ஸுமெஜெவ ஸவதி (முண். ௩. ௨. ௯)

"பிரமத்தை அறிபவன் பிரமமாகவே ஆகின்றான்" என்பதிற் பிரமசாமியமே கூறப்படுகின்றது. முத்தான்மா சாமியத்தினாற் பிரமசொரூபத்தில் வேறுபடாதுநின்று சிவசொரூபத்தை அநுபவிக்கின்றான். "ஏகர்தான் உருத்திரர்" என்றற்றொடக்கத்தவற்றாற் சாதிருசிய நிஷேதம் செய்யப்படுகின்றதே எனின், அது ஆன்மாவுக்கு உலகவியாபாரமுதலிய இல்லாமைபற்றிப் போந்ததாம். சூத்திரகாரர் (௪. ௪. ௨௧-ஆம்) சூத்திரத்தில் (சீவான்மா) அநுபவமாத்திரத்திற் சாமியம் என்று கூறுவர். பிரமத்துக்குப்போலவேண்டியவெல்லாம் அவனுக்கெய்துதலிற் சாமியம் என்று கூறப்படுகின்றது.

ஸொ உஸுதெ ஸவகாநாநஸஹஸுஹணா விவஸ்ரிதா|
(தைத். ௨. ௧)

“முற்றறிவுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூட வேட்ட போகங்களை யெல்லாம் துய்க்கின்றான்” எனச் சுருதியும் கூறுகின்றது. அதுபற்றி முத்தனுக்குப் பிரமசாமியம் எய்துகின்றது. (௪)

(௩) பிரம்மாதிகரணம்.

ब्राह्मेण जैमिनिरुपन्यासादिभ्यः (அ. ௪. ௫)

(௫௨௮) பிரமகுணங்களினாலென்று சைமினி கொள்கின்றார்; (சுருதி) உபன்னியாசமுதலியன உணர்த்துதலின்.

மேலே ஆன்மா முத்தனாகுங்காற் சுவயம்பிரகாசமும் அபகதபாப்மத்துவாதி குணவிசிட்டமுமுடைய பிரமத்துக்குச் சமமாக முத்தனுடைய சொரூபம் ஆவிர்ப்பவிக்கின்றதென்று கூறப்பட்டது.

அவ்விரு ரூபமும் கூடுமா? கூடாதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இங்ஙனமாகப் பிறர் மதப்பிரகாரம் பூருவபக்ஷம் உண்டாகின்றது.

स्वेन रूपेणाभिनिष्पद्यते (சாந். அ. ௧௨. ௩)

“அவன் தன் சொரூபத்தோடு ஆவிர்ப்பவிக்கின்றான்” என்று சுருதி கூறியவாறு முத்தனுடைய சொரூபத்தின் ஆவிர்ப்பாவம் பிரமத்தின் அபகதபாப்மத்துவாதி குணங்களைக் குறிக்கின்றன (என்று சைமினி கூறுவர்). இந்தப் பிரமகுணங்களன்றோ பிரத்தியக்கான்மாவுக்கும் இயல்பாயுள்ளன;

य आत्माऽपहतपाप्मा (சாந். அ. ௭. ௧)

“இந்த ஆன்மா அபகதபாப்மத்துவாதிகுணங்களையுடையது” என்றற்றொடக்கத்த உபன்னியாசத்தினாலும்,

जक्षत्क्रीडन्रममाणः (சாந். அ. ௧௨. ௩)

“உண்டு, களித்து, ரமித்து” என்றற்றொடக்கத்தவற்றினாலும் பெறப்படுகின்றது. ஆகலின், பிரமசம்பந்தமாகிய குணத்தினோடு (முத்தன்) சாமியமாகின்றான் என்று சைமினிகொள்கின்றார். (௫)

चितितन्मात्रेण तदात्मकत्वादित्यौडुलोमिः (அ. ௪. ௬)

(௫௨௯) அறிவுமாத்திரத்தினால்; அது அவன் சொரூபமாயிருத்தலின்; என்று ஔடுலோமி கூறுகின்றனர்.

एवमप्युपन्यासात्पूर्वभावादविरोधं बादरायणः

யதா ஸைந்தவ கநோ ந்தரோ பாஹ்ய: க்ருத்ஸ்நோ ரஸகந ஏவ ஏவம் வா அரே அயமாத்மா அநந்தரோ பாஹ்ய: க்ருத்ஸ்ந: ப்ரஜ்ஞாநகந ஏவ (பிரு. சு. ரு. கங)

"உப்புக்கட்டி உள்ளுமின்றி வெளியுமின்றி எங்ஙனம் எல்லாம் உப்புரசமாயிருக்கின்றதோ, அங்ஙனம் உள்ளும் வெளியுமின்றி இந்த ஆன்மாவானது ஞானகனமாயே இருக்கின்றது" என்றும்,

விஜ்ஞாநகந ஏவ (பிரு. ச. ச. கஉ)

"விஞ்ஞானகனமே" என்றும் வற்புறுத்தலின் (முத்தனும் பிரமமும்)விஞ்ஞானசொரூபமாத்திரமாயிருத்தலினுற் சாமியம் என்று ஒளடுலோமிகூறுவர். இங்ஙனம் (அபிப்பிராயமும்) இருபிரகாரமாகச் (சுருதியிற்) காணப்படலான், (ஆன்மாவும் பிரமமும்) சவிசேஷமும் நிர்விசேஷமுமாம் என்று சித்திக்கும். (சவிசேஷம் நிர்விசேஷம்) இரண்டும் ஒரேகாலத்தில் நிகழமாட்டாமையின், அவை வெவ்வேறு காலத்தில் நிகழ்வன என்றே கோடற்பாற்றும் எனின், (சு)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ஏவமப்யுபந்யாஸாத் பூர்வபாவாதவிரோதம் பாதராயண:।

(ச. ச. எ)

(ஙுகo) (ஆன்மா) இப்படிப்பட்டவனுயிருந்தாலும், உபந்நியாசித்தலான் மேலே கூறப்பட்ட குணங்கள் அவனுக்குண்மையின், விரோதமின்றென்பர் பாதராயணர்.

பாதராயணரோவெனின் இரு அபிப்பிராயத்தினும் பரஸ்பர விரோதமின்மையின், இரு சுருதிகளானும் புலப்பட்ட சொரூபமும் குணமுமாம் இரண்டும் (பிரமத்துக்குச் சாமியமாக) முத்தனுக்கு உண்டென்று பிரதிபாதிக்கின்றார். எங்ஙனமெனின்,

விஜ்ஞாநகந ஏவ (பிரு. ச. ச. கஉ)

"விஞ்ஞானகனமே" என்றற்றொடக்கத்தவற்றல் முக்தன் சுவப்பிரகாசமுடையன் என்று கூறப்பட்டாலும்,

ய ஆத்மா அபஹதபாப்மா (சாந். அ. க. ரு)

"ஆன்மா அபகதபாப்மத்துவாதி குணமுடையன்" எனச் சுருதி உபந்நியாசிக்கின்றமையின், மேலே கூறிய அபகதபாப்மத்துவாதி குணங்கள் முக்தனுக்கு உரியன என்று பெறப்படுகின்றது. ஆகலின், உபயப்பிரமாண சித்தமாயுள்ள ரூபம் இரண்டும் பரஸ்பரவிரோதமில்லாது ஒருங்குளவாம் எனல் உசிதமாயிற்று. விரோதம்என்றது காலபேதமுதலியவற்றை அபேக்ஷித்தே.

புதுகொண்டு ஞானசொரூபத்தினுற் சுவப்பிரகாசமும், அபகதபாப்மத்து வாதிகுணங்களோடியைந்திருத்தலிற் கல்யாணகுண விசிட்டமுமே, பிரமசாமிய முற்ற முத்தனது சொரூபம் என்று கூறப்பட்டது. (எ)

(சு) சங்கற்பாதிகரணம்.

ஸங்கல்பாதேவ து தச்ச்ருதே: (சு. சு. அ)

(௫௯௧) சங்கற்பமாத்திரத்தினுலேதான் (அவன் போகம் அனைத்தையும் துய்க்கின்றான்); சுருதி அங்ஙனம் கூறுகின்றமையின்.

சுவப்பிரகாசனுகிய முத்தனுக்குச் சத்திய சங்கற்பத்துவாதி குணங்கள் கூறப்பட்டன.

அது பொருத்தமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முத்தனுக்குப் போக்கியவஸ்துவிஷயத்திலே சங்கற்பமாத்திரம் காரணமன்று; பாகியகாரணத்தை அபேட்சியாது அது சித்தியாதாமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சங்கற்பமாத்திரத்தினுலே (முத்தனுக்குச்) சகல போக்கிய வஸ்துக்களும் சித்தியாகின்றன. அங்ஙனம்,

ஸயதி பித்ருலோககாமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பிதர ஸமுத்திஷ்டந்தி (சாந். அ. உ. க)

"பிதிர்லோகத்தை விரும்பினுல் அவனது சங்கற்பமாத்திரத்தினுலே பிதிர்கள் (அவனை) எதிர்கொள்ளுமாறு எழுந்திருக்கின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளும் கூறுகின்றன. ஆகலின், சகல போக்கியவஸ்துவைச் சம்பாதித்தற்குச் சங்கற்பமாத்திரமே ஏதுவாயிருக்கின்றது. அதுபற்றிப் புறக்கரணம் யாதும் வேண்டியதில்லை. (அ)

அத ஏவ சாநந்யாதிபதி: (சு. சு. கூ)

(௫௯உ) ஆதலினுலும் அவனுக்கு அதிபதியாக மற்றொருவன் இல்லை.

எந்த நியாயத்தினுற் பிரமசொரூபத்தை அடைந்து இவன் அபகதபாப்மத்துவாதி குணங்களையுடையனுயிருக்கின்றானே, அந்த நியாயத்தினுல் மற்றோர் அதிபதி தனக்கின்றிச் சுவதந்திரனுய் இருக்கின்றான். ஓர்காலும் கன்மவசப்பட்டவனல்லன்; கன்மங்கள் நட்டமடைதலின். அவனுக்குச் சிவபெருமான் நியாமகரல்லர்; பிரவாகசித்தமாயுள்ள அவருடைய ஆஞ்ஞாரூப

விதிநிஷேதங்கள் கூறும் சாஸ்திரவழியைக் கடந்திருத்தலின். எங்ஙனமெனின், அவன் பசுத்துவம் நீங்கினமைபற்றி, மலம் நீங்கினமையாலன்றோ அவனுக்குச் சிவத்துவமே எய்தல் சித்தமாயிற்று. சிவத்துவம் என்பது சமஸ்த மலத்தொடர்ச்சியின்றி நிரதிசய மங்கலாஸ்பதரூபமெய்தலேயாம். சிவபெருமானுக்கு ஒப்பாகிய சுவதந்திரத்துவ சர்வஞ்ஞதாதி குணங்களையுடைமையே ஈண்டுச் சிவசாமிய இயற்கை (எனப்பட்டது). ஆகலின், சிவசாமியமுடைய அந்த முத்தனுக்குச் சர்வஞ்ஞதை, இயல்பாகவே பாசங்களினீங்கிநிற்றல், நித்தியானந்தம், தன்வயமுடைமை, சமஸ்த ஆற்றலுடைமை, பேரருளுடைமை, அனந்தசத்தியுடைமை உளவாம் என்க. ஆன்மஞான சங்கோசரூபமே சம்சாரம். ஆகலின், சங்கோசகாரணமாகிய மலம் நீங்கியபோது அவனுக்குச் சர்வஞ்ஞதை எய்துகின்றது. அதுபற்றிச் சம்சாரத்துக்குக் காரணமாகிய அஞ்ஞானம் மூலமாய் நிவர்த்தியாங்கால், பெரிதாயோர் [illegible] தேகாதியபிமானரூபப்பிரமையானது நீங்கிவிடுகின்றது. எதுபற்றி அவனுக்கு ஜரை, மரணம், சோகமுதலிய இல்லையோ, அதுபற்றிக் கன்மவசப்படாமையின் சுவதந்திரத்துவம் எய்துகின்றது. நிரதிசய சொரூபானந்தாநுபவத்தில் அமிழ்ந்தினமை பற்றி எய்தும் சுவாத்துமாராமத்தினாலும் அவனுக்கு வரம்பிலின்பமுடைமை (எய்துகின்றது); அதனால் அவனுக்குப் பசி தாகம் இன்று. பேரருளுடைமையாற் சத்தியகாமம் சத்தியசங்கற்பமுதலியன எய்துகின்றன. அங்ஙனமாதலின் முத்தனும் சிவபெருமானும் அந்த அபகதபாப்மத்துவாதி எண்குணங்களையுடையராகக் கூறப்படுகின்றார். அதுபற்றிச் சிவசாமியமுடைய முத்தனுக்குச் சுவாதந்திரியம் கூறல் யுக்தமே. (௯)

(௫) அபாவாதிகரணம்.

𑌅𑌭𑌾𑌵𑌂 𑌬𑌾𑌦𑌰𑌿𑌰𑌾𑌹 𑌹𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 (௪. ௪. ௧௦)

(௫௧௧) (சரீர)மின்மையைப் பாதரி கொள்கின்றார்; இங்ஙனம் (சுருதி) கூறுகின்றமையின்.

மேலை அதிகரணத்தில் முத்தனுக்குச் சுவம்பிரகாசத்தன்மையும் சத்தியசங்கற்பத்துவாதி விசிட்டகுணமும் உண்டெனக் கூறப்பட்டது.

ஈண்டு அவன் சரீரமுடையனாகவா? சரீரமிலனாகவா? இன்றேல் இரண்டுமுடையனாகவா? இருக்கின்றான் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பாதரியோவெனின் முத்தனுக்குத் தேகேந்திரியாதி உபகரணங்கள் இல்லை என்று கொள்கின்றனர்; "நிஷ்களம் நிஷ்கிரியம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் பிரமத்துக்கு அவை இல என்று கூறுகின்றனவன்றோ. (ஆகலின்), அந்தச் சொரூபமுடைய முத்தனும் அவ்வியல்பினனாகின்றான். (௧௦)

ஸாவம் ஜைமினிர் விகல்பாமநநாத் (ச. சூ. கக).

(ருகூச) (சரீர) வுண்மையைச் சைமினி கொள்கின்றனர்; சுருதியில் விகற்பங்களைப் பற்றிக் கூறப்படுகின்றமையின்.

ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி (சாந். எ. உகூ. உ)

"அவன் ஒருபிரகாரமாகின்றான், மூன்று பிரகாரமாகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே தேகேந்திரியாதிகளோடு கூட முக்தன் அநேக பிரகாரமாதலைப்பற்றிச் சுருதி கூறுதலின், அவனுக்குச் சரீரமுளதெனச் சைமினி கொள்கின்றனர். இங்ஙனம் முக்தனுக்கு உளதெனவும் இலதெனவும் சுருதி கூறலின், அவனுக்கு உண்மையானது யாது? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சரீரமில்லாமை உண்மை.

மநஸைதாந் காமாந் பஶ்யந் ரமதே (சாந். அ. கஉ. ரு)

"ஞானத்தினால் வேட்ட பொருள்களையெல்லாம் கண்டு களிக்கின்றான்" எனப் பாகியேந்திரியாதிகள் முக்தனுக்கு இல்லை என்று கூறப்படுகின்றது. பிரமத்துக்கும் பாகியேந்திரியம் இல்லை என்று கேட்கப்படுகின்றது.

ஸத்யாத்ம ப்ராணாராமம் மந ஆநந்தம் (தைத். க. சு)

"சத்தியான்ம பிராணாராமம்; மன ஆனந்தம்" எனச் சுருதி கூறுதலின் ஆன்மாவிலே (தம்மிலே) தான் ஆராமம் புறப்பொருளிலன்று என்பதும் ஞான சத்தியிலேதான் ஆனந்தம் புறக்கரணத்திலன்று என்பதுமே (அச் சுருதியின்) பொருள். அதுகொண்டு முக்தனுக்குத் தேகமில்லையே. தேகத்தோடு கூடினவனென்றது வெவ்வேறு அவஸ்தை அடையும் ஆன்மாக்களைப் பற்றியேயாமெனின், (கக)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

த்வாதஶாஹவதுபயவிதம் பாதராயணோ ஽த: (ச. சூ. கஉ)

(ருகூரு) பன்னிருதினத்து யாகம் போல, இரண்டும் கூடும் என்ற நியாயப் பிரகாரம் பாதராயணர் கொள்கின்றனர்.

சரீரம் உளதாதலையும் சரீரம் இலதாதலையும் சுருதி கூறலின், சுவேச்சையினாலே முக்தன் இருபிரகாரமாயும் உளனென்று பகவான் பாதராயணர் கொள்கின்றார். பன்னிரு தினஞ் செய்யப்படும் யாகமானது (அநேக முக்கிய ஐமான்கள் சங்கற்பத்தினாலாம்) சத்திரயாகமாகவேனும், (ஒருமுக்கிய யஜமான் சங்கற்பத்தினாலாகும்) அஹீநயாகமாகவேனும் செய்யப்படும் எனச் சுருதி இருபிரகாரம் கூறுகின்றது; அதுபோல முக்தனுக்கும் அங்ஙனமே,

ஸர்வஜ்ஞாஸ் ஸர்வகாஶ் ஶுத்தா: பரிபூர்ணாஶ் ஶிவோபமா:
ஶிவதுல்யபலா தேவா: பரமைஶ்வர்யஸம்யுதா:।
ஸதேஹாஶ்ச விதேஹாஶ்ச ஸம்பவந்த்யேதே யதாஸுகம்।

"இயல்பாகவே சர்வஞ்ஞர்களாயும், சர்வவியாபகர்களாயும், சுத்தர்களாயும், பரிபூரணர்களாயும், சிவனை ஒத்த பலமுடையர்களாயும், பரம்மசுவரியத்தோடியைந்தவர்களாயுமுள்ள (ஞானயோகியர்) தாம் விரும்பியவாறு சதேகர்களாயேனும் விதேகர்களாயேனும் மீண்டும் உளராயினர்" என்றற்ருடக்கத்தனவாகச் சிவபதத்தை அடைந்தவர்களின் நிலைமைபற்றிப் பௌராணிகரும் கூறுகின்றனர். ஆகலின், முக்தர்க்கு இருபிரகாரமும் பொருந்துகின்றன. (கஉ)

ஒருவனுக்கே வெவ்வேறு காலத்தில் இரு வியவஸ்தை உண்டென்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

தந்வபாவே ஸந்த்யவதுபபத்தே: (ச. ச. க௩)

(௬௩௬) சரீரமில்லாவிடத்துப் (போகந் துய்த்தல்) கூடுமாதலின்; கனவிற்போல.

முக்தன் சுவேச்சையினால் ஓர்கால் அநேகசரீரங்களைச் சிருட்டித்து அவற்றுட் பிரவேசித்து விளையாடுகின்றனன். சிலபோது சரீரங்களைத் தவிர்த்துவிட்டும் இருக்கின்றான். சரீரமுதலிய கொள்ளாவிடத்து முக்தனானவன்—சொப்பனத்திற் சிவபெருமானாற் சிருட்டிக்கப்பட்ட இரதமுதலியவற்றை மலத்தினாற் கட்டுண்ட புருஷன் மனசினாலே (அநுபவித்தல்) போல—சிவபெருமானால் ஆக்கப்பட்ட ஆனந்தத்தைத் துய்க்கின்றான். இதனால் என் சொல்லியவாறோ எனின்? எங்ஙனம் புருஷன் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட பொருள்களைச் சரீரேந்திரியங்கள் வேண்டாதுகேவலம் மனசினாலே சொப்பனத்திற் புசிக்கின்றானோ, அங்ஙனமே முத்தனும் தனது இயற்கை ஞானத்தினாலே பிரமசொரூபானந்தத்தை அநுபவிக்கின்றான். (க௩)

பாவே ஜாக்ரத்வத் (ச. ச. க௪)

(௬௩௭) (சரீர)மிருக்கும்போது நனவிற்போல.

சுவேச்சையினாலே சிருட்டிக்கப்பட்ட சரீரமுதலிய உபகரணமுள்ளவிடத்து நனவிற்புருஷன் போலச் சகல வேட்ட பொருள்களையும் புசிக்கின்றான்.

(ஆக்ஷேபம்) முக்தனுக்கும் பிரபஞ்சத்தைக் காண்டலாகிய இன்பம் உளதாயின், அபுருஷார்த்தமாகிய பிரபஞ்சத்தைக் காணும் அம்முக்தனுக்குச் சம்சார துக்கத்தொடர்ச்சி நீங்கமாட்டாதே யெனின்,

(உத்தரம்) அன்று. முக்தன் பிரபஞ்சத்தை அபுருஷார்த்தரூபமாகப் பாராமையான், முக்தனுக்கு இந்தப்பிரபஞ்சம் பிரமாகாரமாகவே காணப் படுகின்றது.

வாகத்தொ ஹவதி (தைத். க. சு)

"பின் இது (பிரமம்) ஆகின்றது"

ஆகாஶஶரீரம் ஬்ரஹ்ம (தைத். க. சு)

"ஆகாசசரீரம் பிரமம்"

ஸத்யாத்மப்ராணாராமம் மந ஆநந்தம் (தைத். க. சு)

"சத்தியான்ம பிராணாராமம்; மன ஆனந்தம்"

ஶாந்திஸம்ருத்தமம்ருதம் (தைத். க. சு)

"சாந்தியினால் நிறைந்த அமிர்தம்" என்று சுருதியிலே கூறப்படுகின்றது. மேலே,

ஆப்நோதி ஸ்வாராஜ்யம் ஆப்நோதி மநஸஸ்பதிம் (தைத். க. சு)

"அவன் சுவர்க்க ராச்சியத்தை அடைகின்றான்; அவன் ஞானத்துக்குப் பதியாயுள்ளதை அடைகின்றான்" என்னும் சுருதிகளில் ஸ்வாராஜ்யம் என்பது இன்பமே இரசமாயுள்ள பரப்பிரமசிவனுடைய பதத்தையும், மனசஸ்பதிம் என்றமையான் ஞானசத்திக்கு அதிபதியாயிருக்கும் இயல்பையும் (ஞான) யோகி அடைகின்றான் எனக் கூறப்பட்டது. அங்ஙனமிருப்பின், யாது விசேடம் என ஆக்ஷேபிக்கின்,

வாக்பதிஶ்சக்ஷுஷ்பதிஃ ஶ்ரோத்ரபதிர்விஜ்ஞாநபதிஃ (தைத். க. சு)

"வாக்குக்குப் பதி, கண்ணுக்குப் பதி, காதுக்குப் பதி, ஞானத்துக்குப் பதி" என்றற்றொடக்கத்த சுருதிகளான் வாக்கு முதலிய அனைத்தும் அவன் இஷ்டப்பிரகாரம் வசப்பட்டமையின், அவற்றுக்கு அதிபதியாகக் கூறப்பட்டான். இவ்வியல்பினனாகிய முக்தன் பரமாகாசரூப சிவபதத்தை அடைந்தவனாய்ச் சுவேச்சையினால் வசப்பட்ட தூயவாக்காதி கரணமுடையனாய், அந்தப் பதத்தை அடைந்தபிற்பாடு (அவனுக்கு) இந்தப் பிரபஞ்ச முழுமையும் ஆகாசசரீரமாய், அஃதாவது பரமானந்தலக்ஷண பரமாகாசசரீரமுடைய பிரமமாகவே ஆகின்றதென்பது; பரப்பிரகிருதி ரூபையாய், பரமசத்தையாய், பிரகாசானந்த சமரசமாயுள்ள பரமசத்தியே பிரமத்துக்குச் சொரூபத்தினாற் பரமாகாசம் என்று கூறப்படுகின்றது; எந்தச் சத்தி முக்தர்களுக்கும் சிவபெருமானுக்கும் சாக்ஷாத் அர்த்தத்தையும் கிரியையையும் அடைதற்கு ஏதுவாயுள்ளதோ, அதுவே மற்றையோர்கட்கும் பரம்பரையாயுண்டாம். என்னையெனின்,

கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்। யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத் (தைத். உ. எ)

"இந்த ஆகாயம் ஆனந்தமாகாவிடின், எவன் சுவாசிப்பான்; எவன் உயிர்ப்பான்"

ஏஷ ஹ்யேவாநந்தயாதி (தைத். உ. எ)

"இவர் ஆனந்தத்தை விளைவிக்கின்றனர்"

ரஸோ வை ஸ: (தைத். உ. எ)

"அவரே இரசம்"

ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி (தைத். உ. எ)

"இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்திக்கின்றான்" என அவனுக்குப் பராசத்தி சர்வாநுபவவிஷயமாக உளதென்று கேட்கப்படுகின்றது. அங்ஙனமே,

ஸ ஏகோ மாநுஷ ஆநந்த: (தைத். உ. அ)

"அது ஏகமாகிய மானுஷ ஆனந்தம்" என்று தொடங்கி,

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: (தைத். உ. அ)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" எனப் பிரமபரியந்தம் உபாதியின் மறைப்பினால் ஆனந்தத்தின் உற்பத்தி தாரதம்மியமாகக் கேட்கப்படுகின்றது. பிரமத்தினும் முக்தனிலும் நிருபாதிகத்தினால் அந்த ஆனந்தம் பரிபூரணமாய் இருக்கின்றது;

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய (தைத். உ. அ)

"அது பிரமத்தினதும் ஆசையறுத்த வேதவித்துவானதும் ஓர் ஆனந்தம்" என்று கேட்கப்படுதலின். பிரமத்துக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட புத்தியோடு நிஷ்காமமாய் அநுஷ்டிக்கப்பட்ட அக்கினிகோத்திராதி கன்மத்தையுடைய பரமவித்துவானே "ஆசையறுத்த வேதவித்துவான்" என்று கூறப்பட்டான். உயிரோடிருக்குங்கால் முக்ததசை அடைந்தவனுக்கும் பிரமத்துக்கும் ஆனந்தம் துல்லியமே. யோகமிகுதியினால் அந்தந்த உலகத்தை அடைந்த யோகிக்கு முன்முன் உள்ள பூமிகளை நோக்கிச் செய்த யோகாப்பியாசம் அற்பமாம். அந்தந்த (யோக) அநுசாரமாக அந்தந்தப் பூமியிலே அதற்குரியதாய் எய்தும் ஆனந்தத்தை மனுஷ்யாதி ஆனந்தத்தோடு சாமியமாகக் கூறல் விரோதமின்று. ஆகலின், இதுவே பரமானந்த பரப்பிரகிருதிப் பழமாகரசம்; இது பரத்தினின்று வேறுறுமையின்.

ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத் (தைத். ௩. ௬)

"ஆனந்தம் பிரமம் என அறிந்தான்" என்னுஞ் சுருதியினால், ஜகத்காரணமாகிய பிரமமாகவே (அது) கேட்கப்படுகின்றது.

ஸைஷா பா⁴ர்க³வீ வாருணீ வித்³யா பரமே வ்யோமந் ப்ரதிஷ்டி²தா |
(தைத். ௩. ௬)

"அந்தப் பார்க்கவி வாருணி வித்தையானது பரமவியோமத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது" என்னுஞ் சுருதியினால் இந்த ஆனந்தத்தின் அபிவியக்தி கேட்கப்படுகின்றது. ஆகலின், முக்தர்களுக்குப் பரமானந்தரூப பரமாகாச சரீரத்தையுடைய பிரமமாகவே பிரபஞ்சம் ஆகின்றது. அவர்கள் இந்தப் பரமானந்தத்திலே பிரவேசித்த முக்தர்களுக்குப் பிரமத்துக்குப் போலத் துக்கத் தொடர்ச்சி இல்லை. (௧௪)

(௬) பிரதீபவதாவேசாதிகரணம்.

ப்ரதீபவதா³வேஶஸ்ததா² ஹி த³ர்ஶயதி (௪. ௪. ௧௫)

(ரு௩அ) தீபம் போல வியாபிக்கின்றான்; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றதன்றோ.

மேலை அதிகரணத்திலே முக்தான்மாக்களும் சுவேச்சையினாலே அனந்த சரீரங்களை எடுக்கும் சாமர்த்தியத்தினால் வியாபகமுடையனவென்று சூசிப்பிக்கப்பட்டது.

அந்தச் சர்வவியாபகம் கண்டுப் பொருந்துமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஸர்வேஷு லோகேஷு காமசாரோ ப⁴வதி (சாந். எ. ௨௫. ௨)

"எல்லா உலகங்களினும் விரும்பியவாறு சஞ்சரிக்கின்றான்"

இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் (தைத். ௩. ௧0. ரு)

"வேண்டிய வடிவங்களை எடுத்து இவ்வுலகங்களிற் சஞ்சரித்து வேண்டிய போகங்களைத் துய்க்கின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, முக்தனுக்குப் பரிச்சின்னமாகச் சஞ்சாரம் பெறப்படுதலின், அவன் வியாபகமாதல் உசிதமில்லை. அதுபற்றி அநேக சரீரத்தை எடுத்தல் கிரமமாகவேயன்றி ஒரே காலத்தில் அன்று எனின்,

(சித்தாந்தம்) கடத்துள் இடப்பட்ட தீபமானது தடைநீங்கியபோது தன் பிரகாசத்தினாற் கிரகத்தை வியாபித்தல் போல, முக்தனும் சத்தியை மறைத்த மலம் நீங்கியவிடத்துத் தன் சத்தியினாலே பிரபஞ்சத்தைப் பிரவேசிக்க வியாபிக்கின்றான்.

ஸ நோ பந்துர் ஜநிதா ஸ விதாதா தாமாநி வேத புவநாநி விஶ்வா| யத்ர தேவா அம்ருதமாநஶாநாஸ் த்ருதீயே தாமாந்யப்யைரயந்த| பரி த்யாவா ப்ருதிவீ யந்தி ஸத்ய: பரி லோகாந் பரி திஶ: பரி ஸுவ:| ருதஸ்ய தந்தும் விததம் விச்ருத்ய ததபஶ்யத் ததபவத் ப்ரஜாஸு (தைத். ஆரணி. ௧௦. ௧. ௪)

"அந்தப் பரமான்மா நமக்குப் பந்து; பிதாவுமாகின்றனர்; அவர் பயன்களை விளைவிக்கின்றனர்; எல்லாப் புவனஸ்தானங்களையும் அறிகின்றனர்; எந்தப் பரமான்மாவிடத்திற் சிவானந்தத்தைப் பெரியோர்கள் அநுபவிக்கின்றார்களோ, அவர்கள் மூன்றாவதாகிய சிவலோகத்தை அடைகின்றார்கள்; அவர்கள் ஆகாயம் பூமிக்கு மேலும், எல்லா உலகங்களுக்கு மேலும், எல்லாத்திக்குகளுக்கு மேலும், சுவர்க்கலோகத்துக்கு மேலும் ஓர்கால் வியாபிக்கின்றார்கள்; கன்மத்தின் தந்துவை அறுத்துச் செந்துக்கள் அனைத்திலும் ஏகராயினரைக் கண்டு, அந்த ஏகராகின்றார்" என்று சுருதியும் கூறுகின்றது. இச்சுருதிகள் ஜகத்கர்த்தாவும் விசுவரூபருமாகிய மகாதேவருடைய பிரகரணத்திலே சேர்கின்றன. அச்சுருதிப் பொருள் வருமாறு:

ஸ:—அந்த மகாதேவர்

ந:—எங்களுக்கு

பந்துர் ஜநிதா—பந்துவாகிய பிதாவுமாயினர்;

ஸ விதாதா—சகல நன்மைகளுக்கும் கர்த்தா;

தாமாநி வேத—ஒளிமயமாகிய அப்பிராகிருத உலகங்களை அறிகின்றனர்;

அவர் நமக்குப் பந்துவாகி எல்லா உலகங்களையும் அறிதலினாற் போதரும் பிரயோஜனம் (முன்னர்க்) கூறப்படுகின்றது.

யத்ர—எந்த மகாதேவரிடத்தில்

அம்ருதம்—கைவல்லிய இலட்சுமியை

ஆநஶாநா:—அடைந்து அநுபவிப்பவர்களாய்

தேவா:—அநுபவத்தால் விளங்குகின்றவராயுள்ள பெரியோர்

த்ருதீயே—மூன்றாவதாகிய (திய எனப் பெயரிய மாயாதீதமாகிய அந்தப் பதத்திலுள்ள),

தாமாநி—ஒளியைப் பிரதானமாகக் கொண்டு தங்களால் அபிமானிக்கப்பட்ட ஸ்தானங்களை,

அப்யைரயந்த—சுவீகரிக்கின்றனர்.

இதனால் என் சொல்லியவாறோ எனின், உறவினர் போலப் பிதாப் போல, சமஸ்த உலகத்துக்கும் நன்மை செய்பவராயும், சர்வஞ்ஞராயும்

பரப்பிரம்மாயும், பிரசன்னராயுமுள்ள மகாதேவரால், நீங்கப்பட்ட பாச பந்தத்தையுடையராய், சிவத்துவத்தை அடைந்தவர்களாய், மகாப்பிரகாச முடையராயுள்ள முக்தர்கள் மூன்றாவதாகிய பரமாகாச இலக்ஷணமுடைய சுவ பதத்திலே கற்பிக்கப்பட்ட தாமங்களாகிய பிரகாசம் பொருந்திய பதங் களை அடைந்து இருக்கின்றனர் என்பதாம்.

அதன் பின் இவர்களுக்கு வியாபகம் கூறப்படுகின்றது.

வ்ரிஷ்வா வ்யாபிவ்ரியஹி=முக்தான்மாக்கள் சுவதந்திர ஒளிக ளினாலே ஆகாயத்தையும் பூமியை யும் வியாபிக்கின்றனர்;

வரி லோகாநீ=இரண்ணியகருப்ப லோகங்களையும் வியாபிக்கின்ற னர்;

திஶஃ=திக்குகளையும்

ஸுவஃ=சுவர்க்கத்தையும்

(வ்ரியஹி)=வியாபிக்கின்றனர்.

இன்னணம் சகல ஜகத் வியாபிகளாய் இருக்கின்றனர்; எங்ஙனமெனின்,

ருதஸ்ய=கர்மத்தின்

விததம்=விஸ்தீர்ணமாயுள்ள போகங்களை

விச்ருத்ய=ஒழித்து (அஃதாவது, புண்ணியபாவங்களினின்று) நீங்கி னவர்களாய்,

ப்ரஜாஸு=சர்வப்பிராணிகளினும்,

தத்=அந்த (மகாதேவர் என்று பெயர் கொண்ட பொருளை)

அபஶ்யந்=கண்டு, சர்வான்மகமாய் அவரேயாகி அவ்வியல்பினரா கின்றனர்.

ஆகலின், சிவானந்தத்தை அடைந்த முக்தான்மாக்களுக்கு வியாபகத் துவம் உளதே. அம்முக்தான்மாக்கள் சிவபெருமானுடைய குணங்களையு டையராய், ஆகாயமுதலியவற்றை வியாபிக்கும் தேவர்களாகக் கூறப்படுகின் றனர்.

யே தேவா திவிஷதஃ।

"சுவர்க்கத்திலிருக்கும் இந்தத் தேவர்கள்" என்று தொடங்கும் தேவவிர தம் எனப்படும் சாமவேதத்தினாலே துதிக்கப்படுபவராகின்றார்.

தே ஹி ஸாக்ஷா திவிஷதஸ்ஸஹரிக்ஷஸஹஸ்யா।

வ்யாபிவிஷத உத்யோதே தேவவ்ரதே ஸ்துதாஃ।

" அவர்கள் சுவர்க்கத்துள்ள தேவர்களாயும், அந்தரிக்ஷத்துள்ள தேவர்களாயும், பிருதிவியிலுள்ள தேவர்களாயும் இருக்கின்றார்கள்; இந்தத் தேவர்கள் தேவவிரதத்திலே துதிக்கப்படுபவராயினர்" என்று புராணத்திலும் கூறப்படுகின்றது. (ஈண்டுப்) பிருதிவி என்றது பிரமாண்டத்தையும், அந்தரிக்ஷம் என்றது இரண்டாவதாகிய மாயாபதத்தையும், தியௌ என்றது மூன்றாவதாகிய பரமாகாச பரியாயமாகிய சுத்த சத்திரூப சிவரூபபதத்தையும் குறித்தன. ஆகலின், முக்தான்மாக்களுக்கு வியாபகமுண்டு. (கரு)

ஸ்வாப்யயஸம்பத்த்யோரந்யதராபேக்ஷமாவிஷ்க்ருதம் ஹி (அ. சு. கசு)

(ருகக) நித்திரை மரணம் என்னும் இரண்டவஸ்தையின் ஒன்றை அது குறிக்கின்றது; அங்ஙனம் சுருதியில் விளக்கப்பட்டிருக்கின்றதன்றோ.

ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சநவேத நாந்தரம் (பிரு. சு. ந. உக)

(பூருவபக்ஷம்) "பிராஞ்ஞனாகிய (பரம) ஆன்மாவினாற் றழுவப்பட்டு அகம்புறம் அறிந்திலன்" எனப் பிரமத்தை அடைந்தவன் உள்ளும் வெளியும் அறிந்திலன் எனச் சுருதி கூறுகின்றது. அவனுக்குச் சத்திரூபமாகிய ஞானவியாபகம் எங்ஙனம் என ஆக்ஷேபிக்கின்,

(உத்தரம்) இது ஆக்ஷேபிக்கப்படுவதன்று. ஆன்மாவிடத்துள்ள அறிதலின்மையை உணர்த்தும் வசனம் சுழுப்தி மரணம் என்பவற்றில் ஒன்றைக் குறிக்கின்றது.

நாஹ கல்வயமேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாத்யயமஹமஸ்மீதி நோ ஏவேமாநி பூதாநி (சாந். அ. கக. க)

"உண்மையாய் அவன் நான் என்று ஆன்மாவை அறிந்திலன்; இருக்கின்ற மற்றொன்றையும் அறிந்திலன்" எனச் சுழுப்தியையும்,

ஏதேப்யோ பூதேப்யஸ் ஸமுத்தாய தாந்யேவாநு விநஶ்யதி ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி (பிரு. சு. ரு. கந)

"இந்தப் பூதங்களிலிருந்து எழுந்து பின் அவற்றுள்ளே அழிகின்றான்; அவன் புறப்பட்ட போது பிரஞ்ஞை இல்லை" என்று மரணத்தையும் குறிக்கும் சுருதியினால் வெளிப்படுத்தப்பட்டதன்றோ; இவ்விரு அவஸ்தைக்கும் வேறாகிய மோக்ஷதசையில் அங்ஙனம் அறியாமை முதலிய இல்லை; பின் மலமறைப்பு நீங்கியபோது (முக்தன்) சர்வஞ்ஞத்துவமும் சர்வகர்த்திருத்துவமும் எய்துகின்றான். (ஆகவே), முக்தனிடத்தில் ஞானமுதலாயின [illegible] இல்லை. (கசு)

(எ) ஜகத்வியாபாராதிகரணம்.

ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச (௪. ௪. ௧௭)

(௫௬௦) உலகத்தோடு சம்பந்தமுற்ற வியாபாரம் இல்லை; பிரகரணத்தினாலும் சமீபத்தின்மையாலும்.

முக்தான்மாக்களுக்குச் சுவப்பிரகாசத்துவம், வியாபகத்துவம், சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களினாற் சிவபெருமானோடு சாமியம் என்று கூறப்பட்டது. அங்ஙனமாகுங்கால் உலகசிருட்டிமுதலியவற்றினும் சாமியத்தைத் தவிர்த்தல் கூடாது;

பரமம் ஸாம்யமுபைதி (முண். ௩. ௧. ௩)

"பரமசாமியத்தை அடைகின்றான்" எனப்பேதமின்றிக் கேட்கப்படுதலின். உலகசிருஷ்டி முதலியவற்றிற் சாமியத்தை அங்கீகரிப்பின், அநேகேசுவரத்தினாற் சிவபெருமானுக்கு அத்துவிதீயத்துவ பங்கப்பிரசங்கம் எய்தும்; ஆகலின், சிவபெருமானோடு முக்தான்மாக்களுக்குச் சாமியம் எவ்வியல்பினதெனக் கூறப்பட்டது.

ஜகத் சிருட்டியாதியோடு சேர்த்தா? தவிர்த்தா? சாமியம் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) என் சொல்லியவாறோ எனின்,

ஸ யதி பித்ருலோககாமோ பவதி (சாந். ௮. ௨. ௧)

"அவன் பிதிர்லோக காமனாகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சங்கற்பமாத்திரத்தினாற் பிதிர்லோகமுதலியவற்றைச் சிருட்டிக்கும் சாமர்த்தியம் கேட்கப்படுதலானும்,

இமாம்ல்லோகாந்காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் (தைத். ௩. ௧௦. ௫)

"இந்த உலகங்களை அடைந்து தான் வேண்டிய ரூபங்களையுடையவனாய் வேண்டியபோகங்களை அடைகின்றான்" என்றுயாண்டும் வியாபாரம் கேட்கப்படுதலானும், சிவசாமியத்திற் சங்கோசமின்மையானும் முக்தனுக்கு உலகசிருட்டியாதி வியாபாரமும் உளதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். முக்தனுக்குச் சிவசாமியம் உளதாயினும் ஜகத்சிருட்டியாதி வியாபாரமின்றே; தனது போக்கிய வஸ்துக்களிலே சுவாதந்திரியம் உண்டு.

யதோ வா இமானி பூதானி ஜாயந்தே (தைத். ௩. ௧)

"எவ்விடத்திலிருந்து இந்தச் செந்துக்கள் பிறக்கின்றனவோ"

ஏகோ வா ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே (தைத். ஆரணி. ௧௦...)

"ஆகாயத்தையும் பூமியையும் சிருட்டித்துத் தேவர் ஒருவர்" என்றற்றொடக்கத்தவற்றிலே கேட்கப்படும் ஜகத் சிருட்டி முதலியன சிவபெருமானுக்கே பிரகரணத்தினாற் பெறப்படுகின்றது; சிருட்டியாதி பிரகரணங்களிலே ஆன்மாவுக்கு (அங்ஙனம் கூறச்) சிறிதும் இடமின்றே. ஆகலின், முக்தனுக்கு ஜகத் சிருட்டியாதி வியாபாரம் இன்று. (கஎ)

ப்ரத்யக்ஷோபதேசாதிதி சேந்நாதிகாரிகமண்டலஸ்தோக்தே:|

(ச. ச. கஅ)

(நிசுக) வெளிப்படையாகக் கூறப்பட்டமையால் எனின், அன்று; அதிகாரமுடையாரது மண்டலத்தில் இருப்பதையே அது குறிக்கின்றமையின்.

(பூருவபக்ஷம்)

இமாம்ல்லோகாந்காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் (தைத். ரு. க௦. ரு)

"இந்த உலகங்களை அடைந்து, வேண்டிய ரூபங்களை எடுத்து வேண்டிய போகங்களைத் துய்க்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றிலே, முக்தனிடத்தில் ஜகத்வியாபாரம் பிரத்தியக்ஷமாகக் கூறப்படுதலின் அந்தச் சம்பந்தம் உளதாமே எனின்,

(சித்தாந்தம்) அன்று; இந்தச் சுருதியானது வேண்டிய போகங்களைப் புசித்தலைக் குறித்தலாற் பிரமாதி சதாசிவாந்த அதிகாரிகள் மண்டலங்களிலேயுள்ள போகங்களை அடைதலே கூறப்படுகின்றது. ஆகலின், அவனுக்கு ஜகத்சிருட்டியாதி வியாபாரம் இல்லை. (கஅ)

(ஆக்ஷேபம்) அங்ஙனமாயின் போகசம்பந்தத்தினால் விகாரத்துவம் உளதாமோ என,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

விகாராவர்த்தி ச ததா ஹி ஸ்திதிமாஹ (ச. ச. கக)

(நிசுஉ) அது விகாரத்துக்கு அமைந்ததன்று; இங்ஙனம் சுருதி (ஆன்மாவின்) நிலையைக் கூறுகின்றது.

அவன் அநுபவிக்க வேண்டிய ஆனந்தம் விகாரத்தொடக்குண்ணாது தூய்தாய்ப் பரிபூரணமாயுள்ள பிரம சொரூபமே.

ரஸோ வை ஸ:| ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி|

(தைத். உ. எ)

"அவர் இரசம்;" "இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றான்" என இவனுடைய ஸ்திதியைச் சுருதி கூறுகின்றது.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தைத். ௨. ௧)
"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஆநந்தோ ப்ரஹ்ம (தைத். ௩. ௬)
"ஆனந்தம் பிரமம்" என்றற்றொடக்கத்தவற்றிற் பிரமசொரூபம் விகாரமில்லாததென்றே கேட்கப்படுகின்றது. ஆகலின், மோக்ஷவின்பம் பாசவின்பம் போல விகாரமிலாதது. சதாசிவர் முதற் பிரமாவீறுயுள்ள அதிகாரிகளுடைய மண்டலங்களிலே இஷ்டப்பிரகாரம் சஞ்சரிப்பவனாய், வேண்டிய ரூபங்களை யுடையனாய், மனுஷ்யாதி தேகாபிமான மில்லாதவனாய், விரிந்த முச்சத்தி வியாபாரமுடையனாய், பரமானந்த பிரகாச விபூதிமயமாகிய சத்தி சிவங்களின் சமரசமாகிய பரப்பிரமசொரூபைகரசமாகிய பிரபஞ்சத்துள் மூழ்கிய பரிபூரண அகம்பாவப் பிரகாசத்தை அநுபவிக்கின்றான்.

அஹமந்நமஹமந்நமஹமந்நம் | அஹமந்நாதோ(அ)ஹமந்நாதோ(அ)ஹமந்நாத: (தைத். ௩. ௧௦. ௬)

"நான் அன்னம்; நான் அன்னம்; நான் அன்னம்; அன்னம் புசிப்பவன் யான்; அன்னம் புசிப்பவன் யான்; அன்னம் புசிப்பவன் யான்" என்றற்றொடக்கத்தவற்றாற் போக்கிய போக்தா முதலிய சகலப் பிரபஞ்சான்மபாவ பரிபூரண அஹம்பாவனையானது அவனுக்கு எய்துகின்றது. ஈண்டு அகங்காரமானது சம்சாரத்துக்குரியதன்று; சமஸ்தப் பிரபஞ்சத்தினும் மூழ்கிப் பரிபூரணமாயிருத்தலின். பின் அந்த அகங்காரத்தினால் முக்தனுடைய இயற்கையே கூறப்பட்டமையால், "நான் தேவன்," "நான் மனிதன்" எனத்தேக மாத்திரமாய் அடக்கிக் கற்பிக்கப்படும் பரிச்சின்ன சாம்சாரிகமாகிய அகங்காரத்துக்கு இது வேறேயாம். ஆகலின், அதற்கு ஈண்டுப் பிராகிருத அகங்கார சம்பந்தமில்லை. அஃதொழிந்து அகம் (அஹம்) என்பது சத்தி சிவாத்துவயமாகிய பிரமத்தின் மேற்று. அந்த அன்னமுதலியவற்றை அடக்கிய பிரபஞ்சஜாலம் (நானன்றி வேறில்லை) என்பதே முக்தனுடைய பாவனை.

அநாத்மவிஷயம் ஸிவசக்த்யாத்மந:|
பராஹமேஷா நிர்ஹேயகுணதாஹமித்யுச்யதே விசேஷ:
ஹ்ருத்யகாரோ த்வாதசாந்தே ஹகாரஸ்திதம் விது:|
அஹமாத்மகமேவேதம் ப்ரகாசாத்மவிதோ புதா:|

"நிரதிசயமாய், முடிவிலதாய், சிவசத்தித்துவயமாய், வியாபகமாயுள்ள பரமான்மாவானது பரிச்சேதமாக ஹேயகுணமிலதாயிருத்தல்பற்றி அகம் (அஹம்) என்று கூறப்படும்; இதயத்தில் அகாரமாய், துவாதசாந்தத்திலே ஹகாரமாய் இருக்கின்றது, ஆகலின், பெரியோர் பிரகாசமாகிய ஆன்மாவிலே முற்றும் அத்துவைத அகமாக இதனைப் (பிரபஞ்சத்தை) அறிகின்றனர்" என்பது ஆப்தவசனம். ஈண்டு நிரதிசய பிரமானந்த பரத்தைப் பிர

வேசித்த முக்தனுடைய சகலப் பிரபஞ்சாகார சிவன் எனப் பெயரிய பிரசாத அக்ஷரத்தை அநுசந்தானஞ் செய்தல் பூருவமாக உள்ள கானம் செய்யப் படல்வேண்டும் என விதிக்கப்படவில்லை. பின் ஆனந்தத்தைத் துய்த்தலாற் பரம உல்லாசத்தை வெளிப்படுத்தும் பொருட்டுள்ளதே அந்த ஸ்தோத்திரம். ஆகலின், முக்தர்களுக்குப் பிரமானந்த அநுபவவியாபாரமன்றிச் சிருட்டியாதி வியாபாரம் சுவேச்சையினுல் இல்லை. (கக)

ப்ரத்யக்ஷாநுமாநே ச (சு. சு. உ0)

(ருசகூ) இங்ஙனம் பிரத்தியக்ஷமும் அநுமானமும் காட்டுகின்றன.

இங்ஙனம் மேலே கூறப்பட்ட பொருளை (முறையே) பிரத்தியக்ஷ அநுமானங்களாகிய சுருதியும் ஸ்மிருதியும் காட்டுகின்றன.

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: (தைத். உ. க)

"ஆகலின் இந்த (பரம) ஆன்மாவிலிருந்து ஆகாசம் பிறந்தது" என்றற்றொடக்கத்த சுருதிகளும்,

அப ஏவ ஸஸர்ஜாதௌ (மனுஸ்மிருதி. க. அ)

"அப்புக்களையே முதற்கட் சிருட்டித்தனர்" என்றற்றொடக்கத்த ஸ்மிருதியும் (கூறுகின்றன). ஆகலின் பிரமமே ஜகத்துக்குக் காரணமுதலியவாக உள்ளது.

(பூருவபக்ஷம்) அங்ஙனமாகுங்கால்,

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி (முண். ரு. க. ரு)

"துகளற்றவனுப் பரமசாமியத்தை அடைகின்றான்"

முக்தஶ்ஶிவஸமோ பவேத் (வாயு. பூ. உஅ: உஉ)

"முக்தன் சிவசமமாகின்றான்" என்றற்றொடக்கத்தவற்றில் முக்தனுக்கும் பிரமமாகிய சிவத்தோடு பரமசாதிருசியம் உண்டெனப் பிரதிபாதித்தலின், சிவபிரானுக்கு ஜகத்சிருட்டிமுதலியன இயற்றற்கு எவ்வதிகாரம் உண்டோ, அஃதெல்லாம் முக்தனுக்கும் வரையறுப்பின்றி உளவாம்; இன்றேற் பரம சாதிருசியம் என்றதற்கு ஹானி எய்தும் எனின், (உ0)

(சித்தாந்தம்) இதற்கு மாறுகச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

போகமாத்ரஸாம்யலிங்காச்ச (சு. சு. உக)

(ருசுசு) போகமாத்திரத்திலே சாமியம் என இலிங்க முண்மையானும்.

முக்தனுக்குப் பிரமத்தோடு சாமியம் சகல காமியபோகமாத்திரத்திலேயன்றி ஜகத்சிருட்டி முதலியவைகளால் அன்று. அங்ஙனம் இருக்கு

மேல், அநேகேச்வரப்பிரசங்கத்தினால் அநவஸ்தை (என்னும் தோஷம்) உளதாகும். அங்ஙனமே சுருதியும்,

𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾।

(தைத். ௨. ௧)

"சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூட அவன் சமஸ்த காமங்களையும் அநுபவிக்கின்றான்" என்று சுருதி கூறுகின்றது. பலவற்றையும் பார்க்கின்ற சித்ரூபமாகிய ஞானசத்தியோடியைந்தமையாற் பிரமமானது விபச்சித் எனப்படுகின்றது. தேசகால விசேஷ சூனியமாயுள்ள பிரமமாகிய சிவபெருமானுக்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வகாரணத்துவம், சர்வான்மகத்துவம், சர்வசக்திமத்துவம், அலுப்தசத்தித்துவம், சுவதந்திரத்துவம், நித்திய திருப்தத்துவம், நிரதிசய ஐசுவரியத்துவம், சர்வாநுக்கிராகத்துவம், சமஸ்த முக்தான்மாக்கள் அடையற்பாலதாம் ஆனந்தரூபத்துவம் என்பன இயற்கையாய் இதயமாய்ப் பரம சத்தாக ஸ்புரிக்கும் ரூபமாயுள்ள எந்த ஞானசத்தியினால் உண்டாகின்றனவோ, அவ்வியல்பினதாகிய ஞானசத்தியோடியைந்த பரப்பிரமசிவனார் விபச்சித் எனப்படுகின்றார். அவ்வியல்பினராகிய பரப்பிரமசிவனாரோடு முக்தனானவன் பரமசாமியத்தை அடைந்து சகல போகங்களையும் அந்தக்கரண இயற்கையாகிய மனசு எனப்படும் ஞானத்தினால் அநுபவித்துக் கண்டு களிக்கின்றனன். அங்ஙனமே,

𑌮𑌨𑌸𑍈𑌤𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌰𑌮𑌤𑍇। 𑌮𑌨𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑍈𑌵𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃।

(சாந். அ. ௧௨. ௫)

"ஞானத்தினாலே இப்போகங்களைக் கண்டு களிக்கின்றனன்; ஞானமே அவனுடைய திவ்ய கண்" எனச் சுருதி கூறுகின்றது.

𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌰𑌾𑌮𑌮𑍍। 𑌮𑌨 𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑍍 (தைத். ௧. ௬)

"சத்தியான்ம பிராணாராமம்; மன் ஆனந்தம்" என்றவிடத்துப் பிரமத்துக்கும் புறக்கரணம் வேண்டாத ஞானத்திலேதான் ஆனந்தபோகம்; பிரமத்துக்கும் முக்தனுக்கும் சரீரேந்திரியாதியைக்கோடல் இஷ்டப்படி போகத்தின் பொருட்டேயாம். இதுபற்றித் தோஷமில்லை. ஆகலின், எங்ஙனம் பிரமம் சமஸ்த போகங்களையும் புசிக்கின்றதோ, அங்ஙனமே முக்தனும் போகமாத்திரத்திலே சாமியம்; (இது தான்) முக்தன் பிரமத்தோடு (சாமியம் என்றதின்) உண்மைப்பொருள். உலகத்திலே சில குணங்கள் பொருத்தமாயிருத்தலினால் "தேவதத்தன் சிங்கம்" என்று கூறுமிடங்களிலே சாமியவியவகாரம் காணப்படலான், பிரமத்தோடு முக்தான்மா சாமியமுறுகின்றான் என்னும் வசனத்துக்கு ஹானி இல்லை. (௨௧)

𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 (௪. ௪. ௨௨)

(௫௪௫) திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின், திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின்.

முக்தான்மாக்களுக்குப் பிரமத்தோடு சாமியமாதலே சாயுச்சியம் என்று கூறப்பட்டது; போகமுதலியவற்றிற் சாதிருசியமுண்மையின்.

ஈண்டு அவர்களுக்குப் பின்னும் ஓர்காற் சம்சாரம் உளதா? அன்றா? என்பது சந்தேகம்.

கன்மவிசேஷத்தினால் இந்திராதிபதங்களை அடைந்தவர்க்கு மீளத்திரும் பிவருதல் காணப்படலின், அது சந்தேகத்துக்குக் காரணமாயிருக்கின்றது.

(பூருவபக்ஷம்) இதனால் என் சொல்லியவாறோ எனின்,

காமாந்நீகாமரூப்யநுஸஞ்சரந் (தைத். கூ. ௧௦. ௫)

"தான் வேண்டிய வடிவங்களை எடுத்து வேண்டிய போகங்களைத் துய்த்துச் சஞ்சரிக்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றினால் ஆன்மாக்களுக்கு அநேக சரீரம் உளதாதல் பெறப்படுகின்றது. முக்தான்மாக்களுக்கு அந்தச் சரீர சம்பந்தம் உளதாங்கால், பின்னும் அவர்க்குப் புண்ணியபாவச் செய்கை உண்டாகின்றது. முன் செய்த உபாசனையின் மிகுதிப்பாடு அநேகமாகப் போகத்தினால் க்ஷயமாகுங்கால், அக்காலத்திற் பாகமாகும் கன்ம வசத்தினால் மீளவும் ஹீந இன்பமாகிய சம்சாரம் எய்துகின்றது. அங்ஙனமே, * இந்திராதிபதங்களை அடைந்தவர்களும் புண்ணிய மிகுதிப்பாடு குறையுங்கால் அங்கிருந்து மீண்டுவந்து பிராமணர் முதலியோராய்ப் பிறக்கின்றனர். ஆகலின், பிரமபதத்தை அடைந்தவர்களும் போக்கியம் போக்தா முதலிய சம்பந்தம் காரணமாகப் போகத்துக்குரிய புண்ணிய மிகுதிப்பாடு க்ஷயமாகுங்காற் சம்சாரத்துக்கு மீளத்திரும்புவார் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சாக்ஷாத்கரிக்கப்பட்ட பரப்பிரம ஜ்யோதியினராய், அந்தப் பரப்பிரம பதத்தைப் பிரவேசித்தவர்களாயுள்ள முக்தான்மாக்களுககுச் சம்சாரத்திலே புநராவர்த்தி இல்லை. எதனால்,

ஸ கல்வேவம் வர்த்தயந்யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே நச புநராவர்த்ததே (சாந். அ. ௧௫. ௧)

"அவன் இந்தப் பிரகாரம் ஆயுள்வரையுமிருந்து * பிரமலோகத்தை அடைகின்றான், மீளத் திரும்புவானல்லன், மீளத்திரும்புவானல்லன்" என்றற்றொடக்கத்த சுருதியுண்மையின். பிரம விஷ்ணு முதலாயினோருடைய பதங்

---

* இந்திராதிபதங்களையடைந்தவர்க்குத் புநராவர்த்தியினாற் பிறப்புண்டாமாதலின், அப்பதங்களைச் சிவனடியார் பொருட்படுத்தார்;

மங்குறோய்மணிமாடமதிதவழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே.

(திருச்சாய்க்காடு. ஞான, ௭)

களைக் கூறி விடுத்து, அவற்றுக்கு விலக்ஷணமாயுள்ள சிவமாகிய பரப்பிரமத்தின் விசேஷத்தைப் புராணம் கூறுகின்றது. எங்ஙனமெனின்,

> உமாபதே꞉ ப்ரதமம் ஸ்தானம் கோடிஸூர்யஸமப்ரபம்।
> ஸர்வபோகஸமாயுக்தம் விஶுத்தம் நித்யமக்ஷயம்॥
> ஸம்ப்ராப்ய தத்பதம் திவ்யம் ஸகலக்லேஶவர்ஜிதா꞉।
> ஸர்வஜ்ஞா꞉ ஸர்வகா꞉ ஶுத்தா꞉ பரிபூர்ணாஶ்ச தே ஸதா॥
> விஶுத்தகார்யகரணா꞉ பரமைஶ்வர்யஸம்யுதா꞉।
> ஸதேஹாஶ்ச விதேஹாஶ்ச பவந்த்யாத்மேச்சயா புந꞉॥
> யே ஸம்ப்ராப்தா꞉ பரம் ஸ்தானம் ஜ்ஞானயோகரதா நரா꞉।
> ந தேஷாம் புநராவ்ருத்திர்கோரே ஸம்ஸாரமண்டலே॥

"உமாபதியாருடைய முதலாவதாய ஸ்தானம் கோடிசூரியப்பிரகாசமுடையதாய், சர்வபோகங்களோடு கூடியதாய், விசுத்தமாய், நித்தியமாய், அக்ஷயமாயுள்ளது; அந்தத் திவ்யபதத்தை அடைந்து சமஸ்த கிலேசமிலராய், சர்வஞ்ஞராய், சர்வவியாபகராய், சுத்தர்களாய், பரிபூரணராயிருக்கின்றார்கள்; அவர்கள் தாம் விரும்பியவாறு விசுத்தகாரியகரணங்களையுடையவர்களாய், பரமைசுவரியங்களோடியைந்தவர்களாய், விரும்பியவாறு சதேகர்களாயேனும் விதேகர்களாயேனுமாகின்றார்கள்; ஞானயோகத்திலே விருப்பமுடையர்களாய் எந்த மனிதர்கள் அந்தப் பரமஸ்தானத்தை அடைகின்றார்களோ அவர்களுக்குக் கோரமாகிய சம்சாரமண்டலத்திலே மீளத்திரும்புதல் இல்லை" என்பதாம்.

இதன் தாற்பரியம் கூறப்படுமாறு:—

> ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்ததே। *
>
> (சாந். அ. ௧௨. ௩)

---

*இப்பிரமலோகம் சிவலோகம் எனப்படும். இச்சாந்தோக்கிய சுருதிப்பொருட்கும் இச்சுருதியை ஆதாரமாகக்கொண்ட (௪. ௪. ௨௨-ஆம்) சூத்திரத்துக்கும் இயைந்தே தேவார முதலிய திராவிட வேதங்கள் அப்பிரமலோகத்தை சிவலோகம் சிவபுரம் என்றற்றொடக்கத்தனவாக விதந்து துதிப்பனவாயின.

> எய்தவொண்ணாவிறைவன்னுறைகின்றபுகலியைக்
> கைதவமில்லாக்கவுணியன்ஞானசம்பந்தன்சீர்
> செய்தபத்துமிவைசெப்பவல்லார்சிவலோகத்தி
> லெய்திநல்லவிமையோர்களேத்தவிருப்பார்களே.
>
> (திருப்புகலி, ஞான, ௧௧)

> பந்தணைவிரலாள்பங்காநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
> செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
> யந்தமிலமுதேயரும்பெரும்பொருளேயாரமுதேயடியேனை
> வந்துய்யவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே.
>
> (வாழாப்பத்து, ௮)

(க) பரஞ்சோதிரூபத்தை அடைந்து தன் குணங்களினால் ஆவிர்ப்ப விக்கின்றான்" எனப் பரஞ்சோதி ரூபமே முக்தனால் அடையப்படுகின்ற உமாசகிதமாகிய பரப்பிரமம் என்று கேட்கப்படுகின்றது. அளவிலா ஆதித்தியப் பிரகாசத்தையெல்லாம் மழுக்கும் அவரது பிரகாசத்தினால் இவை யெல்லாம் பிரகாசிக்கும்.

𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌨 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌂 𑌨𑍇𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍋
𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌤𑍋𑌽𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌃 | 𑌤𑌮𑍇𑌵 𑌭𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌭𑌾𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌾
𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 (கட. ரு. கரு)

"அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்திரதாரகைகளேனும், இந்த மின்னல்களேனும், இந்த அக்கினியேனும் பிரகாசிப்பதில்லை; அவர் பிரகாசிக்கும்போது அவரைத் தொடர்ந்து எல்லாம் பிரகாசிக்கின்றன; அவருடைய ஒளியால் இஃதெல்லாம் பிரகாசிக்கின்றன" என்று சுருதி கூறுகின்றது.

𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌂 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑍋𑌽𑌹𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍋𑌽𑌹𑌂 𑌅𑌗𑍍𑌰𑌂 𑌮𑌧𑍍𑌯𑌂
𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌜𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌮𑌹𑌮𑍇𑌵 𑌮𑌾𑌂 𑌯𑍋
𑌵𑍇𑌦 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦 (அதர்வசிரசு)

"பரமேசுவரன் நான், புஷ்கரம் நான், பவித்திரம் நான், நுனியும் நடுவும், வெளியும் முன்னும் ஜ்யோதியுமாகிய நானே ஏகன்; எல்லாம் நான் என்று என்னை எவன் அறிகின்றானோ, அவன் எல்லாத் தேவர்களையும் அறிகின்றான்" எனச் சிவபெருமானால் அதர்வசிரசில் நிரூபிக்கப்பட்டது.

𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌤𑍇𑌜𑍋𑌰𑌾𑌶𑌿𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ||

"எங்கும் கையும் பாதகமலமுமாய், எங்கும் கண்ணும் சிரசும் முகமுமாய் எல்லாவற்றையும் சூழ்ந்துநிற்கும் ஒளி சமூகத்தினதுமாயுள்ள சிவத்தைத் தியானிக்க" என்று ஸ்மிருதியுங் கூறுகின்றது.

ஆகனின், பரஞ்சோதி ரூபமாய் உமாசகித சிவன் எனப் பெயரிய பரப்பிரமம் அதிஷ்டித்த பதத்தைக் கோடியசூரியப்பிரகாசம் என்று கூறுவதிற் றடை என்னை? நிரதிசய தேஜோமாத்திர இரத்தினமயமாயுள்ளதுவே நிரதிசயாநந்தத்துக்கு உறைவிடமாயிருத்தலிற் * சுவர்க்கம் எனப்படும்.

---

* அதர்வசிரசு ஐதரேய முதலிய உபநிடதங்களிலே சிவலோகமானது சுவர்க்க லோகம் என்று கூறப்பட்டாற் போல, தேவார திருவாசகங்களினும் அச்சிவலோகம் வானுலகம் அண்டர்நாடு என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படுகின்றது;

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே.

(திருப்புகலி, ஞான, க)

ஸுவர்கோ லோகோ ஜ்யோதிஷாவ்ருத:।

(தைத். ஆரணி. க. உஎ. ககசு)

தேவா ஹ வை ஸ்வர்கம் லோகமாயம்ஸ் தே தேவா ருத்ரமப்ருச்சன்।

(அதர்வசிரசு)

"சுவர்க்கலோகம் ஜ்யோதியினாற் சூழப்பட்டது;" "தேவர்கள் சுவர்க்கலோகத்தை அடைந்தார்கள்; அந்தத் தேவர்கள் உருத்திரரைக் கேட்டார்கள்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கூறப்பட்ட ஸ்தானம் துரியமும் துரியாதீதமுமாம்; அங்ஙனமே உத்தரகிதையும்,

துர்யம் துர்யாதீதம் ச சிவஸ்தானம் நிராமயம்।

(உத்தரகீதை)

"துரியமும் துரியாதீதமுமாயுள்ளது அநாமயமாகிய சிவபிரானுடைய ஸ்தானம்" என்று (கூறுகின்றது).

(உ) சமஸ்த உலகங்களையும் கடந்திருத்தலானும், (அனைத்துக்கும்) காரணமாயிருத்தலானும் அந்த ஸ்தானம் ஆத்யம் (முதலாயது) எனக் கூறப்பட்டது.

சிவலோகாத்பஹிர்ஜ்ஞேயா ஹ்யண்டஸ்யாவரணானி ச।

"சிவலோகத்துக்குப் புறத்தே அறியற்பாலன அண்டத்தின் ஆவரணங்களுமாம்" என்றற்றொடக்கத்தவற்றால், சிவலோகத்துக்குப் புறத்தே கீழ்ப்பாகத்திற் பிரமாண்டத்தின் சப்தாவரணங்கள் உள்ளன என்பதாம்.

பராத்பரதரோ ப்ரஹ்மா தத்பராத்பரதோ ஹரி:। தத்பராத்பரத: சிவ: (சிவசங்கற்பம், சரபம்)

"பரத்துக்குமேற் பரமாயுள்ளார் பிரமா; அவருக்குமேற் பரமாயினர் விஷ்ணு; அவருக்குமேற் பரமாயுள்ளார் சிவன்" என்னுஞ் சுருதியினாற் பிரமாதி விசுவாதிகமாகிய பரப்பிரமத்தின் பதம் விசுவங்களுக்கெல்லாம் அப்பாலுள்ளது.

(௩) அது ஆதியாம் உமாபதி எனப்படும் பரப்பிரம சிவனாரது ஸ்தானம்.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம்

தொண்டர்காள்செல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
ரொண்டிறல்யோகிகளேபேரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாளவோமாமல்லற்படவாராமே.

திருப்படையெழுச்சி, உ)

ஊழ| ஸ்ரீகண்ட ஶரீரம் ஶ்ருதி ஸம்ஸ்காரம் ஸமஸ்தஸாக்ஷிணம் ஸர்வகாரணம் (கைவ)

"உமாசகாயரராய், பரமேசுவரராய், விபுவாய், முக்கண்ணரராய், நீலகண்டராய், பிரசாந்தராயுள்ளாரைத் தியானித்து, பூதகாரணரும், சமஸ்த சாட்சியாயுமாயினுரைத் துறவியானவன் இருளுக்குமேற் போயடைகின்ருன்" என்னும் சுருதியினுல் உமாசகிதரும், நீலகண்டரும், முக்கண்ணருமாகிய சிவபெருமானே தியேயப் பொருளாம் என்றும், தமசாகிய பிரகிருதிக்கு மேலேதான் அச்சிவபொருள் அடையற்பாலதாம் என்றும் அறியப்படுகின்றது.

ஸர்வோ வை ருத்ரः (தைத். ஆரணி. ௧௦. ௨௪. ௪௨)

"எல்லாம் உருத்திரரே" என்று தொடங்கி, எல்லாவற்றுக்கும் முதன்மை சிவனுக்காமெனக் கூறி, உபசங்காரத்திலே

ஹிரண்யபாஹவே ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே|

(தைத். ஆரணி. ௧௦. ௨௨. ௪௦)

"இரண்ணியபாகுவினர்க்கு, இரண்ணியபதிக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு (நமஸ்காரம்) என்று முடித்தது. பிரணவபரியாயமாகிய உமாசப்தத்திலே பரப்பிரகிருதிரூப பராசத்தியார் கூறப்பட்டனர்.

க்ருஷ்ணபிங்களம் ப்ரஹ்ம (தைத். ஆரணி. ௧௦. ௨௩. ௪௧)

"கிருஷ்ணபிங்களம் பிரமம்" என்றவிடத்து அவ்வுமையம்மையார் பிரமத்துக்குச் சாமரசியமாகச் சாதிக்கப்பட்டனர். ஆகலின், அந்த ஸ்தானம் உமாபதியாகிய பரப்பிரமத்துக்குரியதேயாம்.

(௪) அதுபின் எவ்வியல்பிற்று? அது சர்வகாமசமாயுக்தமாயது; (அஃதாவது) அது எஞ்ஞான்றும் போகங்களோடியைந்ததென்பதாம். அது பற்றியன்றே,

ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா|

(தைத். ௨. ௧)

"சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூடச் சமஸ்த போகங்களையும் அவன் துய்க்கின்ருன்" என முக்தான்மாவுக்குப் பிரமானந்தத்தோடு கூடச் சமஸ்த போகங்களும் எய்துவனவாக நிரூபிக்கப்பட்டது.

(௫) விசுத்தம் என்றது விகாரத்திறைற்றொடக்குண்ணுது என்னும் பொருட்டு;

ஸமஸ்தஸாக்ஷிணம் ஸர்வகாரணம் (கைவ)

ஶுத்தஸ்வரூபிணம் ஸர்வகாரணம் (தைத். ஆரணி. ௩. ௧௩. ௪௦)

"*தமசுக்குமேலே சமஸ்தசாட்சியாய்*" "*தமசுக்குமேல் ஆதித்தியவர்ணர்*" *என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரகிருதி விகாரங்களைக் கடந்திருத்தல் பெறப்படுகின்றமையின்.*

பிரகிருதி விகாரத்துக்குரிய இராகத் துவேஷ லோப முதலியவற்றைப் பிறப்பிக்காமையின் அது சிவமயமாகிய பதம் என்பது போதர விசுத்தம் எனப்பட்டது. இதனால் அது பரதத்துவப்பிரகாசமயமாய், மகானந்தத் தினைற் றேங்கிய பரமாகாசரூபமாய் (இருப்பதெனக்) கூறப்பட்டவாறாயிற்று.

(௬) *விகாரமுடைய பிராகிருதப் பொருள்கட்கே சிருட்டியாதி கேட்கப்படலாலும், அது அவற்றைக் கடந்திருத்தலாலும் நித்தியம் எனப்பட்டது. பூதாகாயமுதலிய தேகப் பிரபஞ்சத்துக்கே சிருட்டி முதலியன எய்தும். பரமாகாச ரூபமாயுள்ள அப்பதத்துக்கு அவை இல்லை.*

(ஆக்ஷேபம்)

𑌯𑌦𑌾 𑌤𑌮𑌸𑍍𑌤𑌨𑍍𑌨 𑌦𑌿𑌵𑌾 𑌨 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌨 𑌸𑌨𑍍𑌨 𑌚𑌾𑌸𑌚𑍍𑌛𑌿𑌵 𑌏𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃।
(சுவே. ௪. ௧௮)

"எப்போது இருள் உளதாய், பகலும் இரவும் இலவாய், சத்தும் அசத்தும் இலவாய் இருந்தவோ, அப்போதே கேவலப்பொருளாகிய சிவன் ஒருவரே இருந்தார்" என்று கேட்கப்படலாற் சிவபெருமானொழிந்த பிற அனைத்துக்கும் பிரளயம் எய்துகின்றது. அங்ஙனமாயின், முக்தான்மாக்களுடைய அந்தப்பதம் நித்தியமாதல் எங்ஙனமாமெனின்,

(உத்தரம்) அன்று; முக்தான்மாக்களுடைய அப் பதமும் சிவதத்துவத்துள் அர்தர்ப்பாவமாதலின். தூய்மையுடைமைபாற் சிவதத்துவமானது இவர்கட்கும் சமானமாயுண்டே. சிருட்டிமுதலிய சக்கரத்துட்பட்ட பசுபாசங்களுக்கு விலக்ஷணமாயுள்ளது சிவதத்துவம். ஆதலின், பசுபாச விலக்ஷணயுள்ள சிவபிரானார் பதத்துக்கு அநித்தியதத்துவப் பிரசங்கம் இல்லை.

(௭) அக்ஷயம் என்றது குறைதலும் கூடுதலும் இல்லை என்னும் பொருட்டு. குறைதல் மிகுதியாய்க்கொண்டு கன்மபலத்தையுடைய சுவர்க்க முதலியவற்றுக்கு விலக்ஷணமாதல்பற்றி அவ்வியல்பினதாயிற்று.

𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 (கட. ௩. ௯)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அந்தச் சிவபிரானாருடைய பரம பதத்தை அடைகின்றான்" என்று சுருதி கூறுகின்றது. "விஷ்ணுவின் பரமசோரூபம்" என்றது அறுவித அத்துவாவையும் கடந்த பரமாகாசம் எனப்படும் சிவனாருடைய ஸ்தானம் என்றன்றோ கூறப்படுகின்றது.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
(சாந். அ. ௧௫. ௪)

"பிரமலோகத்தை அடைந்து, அவன் மீளத் திரும்புவானல்லன்" என்ற விடத்து அநாவிருத்திலக்ஷணத்தையுடைய பிரமலோகம் என்று கூறப்படுவது இந்த ஸ்தானமே.

ஸம்ப்ராப்ய தத்பதம் திவ்யம் ஸர்வக்லேசவிவர்ஜிதா:|

(அ) "அந்தத் திவ்யபதத்தை அடைந்து சமஸ்த கிலேசங்கள் ஒழிந்தவர்களாய்" என்றமையால், அப்பதத்தை அடைந்த பிரமசாதிருசிய முற்ற முக்தர்களின் இலக்ஷணம் கூறப்படுகின்றது. வாக்கு மனசுக்கு அகோசரமாய்த் திவ்ய சுவபாவமாயுள்ள மகாதேவரது பதத்தை எய்தி, அதற்கு வாய்ந்த ஞானயோகத்தினால் அடைந்த முக்தான்மாக்களே சமஸ்த கிலேசம் ஒழிந்தவர்களாய் இருப்பார்கள்.

அஸ்தம் எனப்படும் விநாசமும் கிலேசம் எனப்படும் அவித்தை முதலியவும் முற்றும் ஒழிந்தவர்களாய் இருக்கின்றனர். இதனால் முக்தான்மாக்கள் ஹேயகுணம் இல்லாதிருப்பார்கள் என்று கூறப்பட்டது. ஆகலின், அவர்கள் கல்யாணகுணமுடையர் என்று கூறப்பட்டதாயிற்று.

(ஆ) சிவத்துவத்தை அடைந்த அவர்கள் சர்வஞ்ஞர் என்றமையால் அவர்கள் ஞானத்தை மூடியமலம் நாசமுற, யாண்டும் ஊடுருவிய ஞானசத்தியுடையவர்களாயும், சர்வஞ்ஞர்களாயும், எங்கும் நிறைந்தவர்களாயுமிருக்கின்றனர். அவர்கள் எங்கும் நிறைந்தவர் என்றது அனந்தசத்தியுடைமையின். இது (ச. ச. கடு-ஆம்) சூத்திரத்தினாற் கூறப்பட்டது.

(க0) அவர்கள் சுத்தர்கள் என்றது அவர்க்கு மலம் நீங்கியபோது உண்டாகிய சிவனுரியல்புகள் தூயனவாய்ப் பிரகாசரூபமாய் ஞானகனமாய் இருந்தமையினாலாம். (ச. ச. எ-ஆம்) சூத்திரத்தில் ஆன்மாவானது சுவயம் பிரகாசமுடையதென்றும் சத்தியசங்கற்பத்துவாதி விசேஷகுணமுடையதென்றும் கூறப்பட்டது.

(கக) பரிபூரணர்களாய் இருக்கின்றார்கள் என்றது நித்தியதிருப்தர்களாய் இருப்பவர்களின் மேற்று; நிரதிசயானந்த சொரூப முண்மையாலும், விரும்பிய சகல போகங்களையுடைமையினாலுமாம். நிர்விகாரநிரதிசயானந்தத்தை அநுபவித்தலே அவர்கள் சுபாவம். இது (ச. ச. கக-ஆம்) சூத்திரத்திற் கூறப்பட்டது: ஆதலின், அவர்கள் பரிபூரணர்களும், தூயகாரியகரணங்களையுடையவர்களும், விகாரங்களினாற் றொடக்குண்ணாத சரீரேந்திரியங்களையுடையவர்களுமாம் என்பது;

ஸஏகதா பவதி (சாந். எ. உக. உ)

"ஒரு பிரகாரமாகின்றனர்; மூன்று பிரகாரமாகின்றனர்" என முக்தன் சுவேச்சையினாலே அநேக சரீரமெடுப்பதாகச் சுருதியினாற் பெறப்பட்டது. ஆகலின், முக்தர்கள் விரும்பி எடுத்த சரீரமுதலியன தூயனவே; தூய்தாகிய மகாமாயையினின்றுண்டானமையின்.

விசுத்தம் என்றது ஆசிரயவிகாரத்துக்கு (முக்தான்மா) ஹேதுவாகா மையினலாம்.

ஊமெஷூா ரோயாஷிஃ வஹுஹாஷுவாமயமெ (பிரு. ௪. ௫. கக)

"இறைவர் (மகா) மாயைவாயிலாக அநேக வடிவங்கொண்டாராகத் தோற்றுகின்றது" என்ற மந்திரத்தினுற் சிவபெருமானும் மகாமாயாசத்திகள் வாயிலாக நீலகண்டத்துவாதி இலக்ஷணமுடைய அநேக சரீரங் கொள்வாராகக் கேட்கப்படுகின்றது.

ஷுிரொஷி ரூபமெஹுஃ வஹுஹாஷிவ உமூஃ।

(இரு. வே. ௨. ௩௩. ௯)

"உக்கிரர் (சிவபெருமான்) ஸ்திரமாகிய அங்கங்களோடு பலரூபமுடையர்" என்னும் மந்திரபாகம் சிவபெருமான் எடுக்கும் அப்பிராகிருதமாய் விசுத்த ஞானமயமாயுள்ள சரீரங்கள் உறுதியாயுள்ளன என்று கூறுகின்றது. எங்ஙனம் சிவபெருமான் விசுத்தமாகிய அநேக சரீரங்களை எடுக்கின்றாரோ, அங்ஙனம் முக்தர்களுமாம்.

(௧௨) பரமைசுவரியத்தோடு இசைந்தவர் என்பது சுவாதீனப் பிரவிருத்தியுடையவராய்ப் பிறரால் செலுத்தப்படுகின்ற கார்ப்பண்ணியம் இல்லாத பரம விபூதியோடிசைந்தவர் எனப் பொருள்படும். (௪. ௪. ௯-ஆம்) சூத்திரத்தில் முக்தன் கன்மமுதலியவற்றால் வசியப்படாது பரமசுவாதந்திரியமாயிருப்பன் என்று கூறப்பட்டது. ஆகலின், முக்தான்மாக்கள் சுவதந்திரர்களாதலிற் பரமைசுவரியத்தோடிசைந்தார்கள் என்பதாம்.

ஸமெஹஸாஹு விமெஹஸாஹு ஸஙஷூாமெதூவாஹுநஃ।

(௧௩) "பின்னரும் சுவேச்சையினுலே சதேகர்களாயேனும் விதேகர்களாயேனும் இருக்கின்றார்கள்" என்றமையாற் சிவபதத்தை அடைந்த அவர்கள் சிவ சங்கற்பமின்றி ஓர் கால் தூய சரீரேந்திரியங்களையுடையர்களாகப் போகந் துய்ப்பவராகின்றார்கள் என்பதாம். ஓர்கால் தேகேந்திரியங்களில்லாது கேவலம் இயல்பாகிய வியாபக ஞானத்தினுற் சகல போகத்தையும் அநுபவிப்பவர்களாகின்றார்கள். அதுமேலே (௪. ௪. ௧௨-ஆம்) சூத்திரத்தில் அதற்கு வாய்ந்த சுருதியை அநுசரித்துக் கூறப்பட்டது. ஆகலின், அவர்கள் இஷ்டப்பிரகாரம் சதேகர்களாயேனும் விதேகர்களாயேனும் ஆகின்றார்கள்.

விருஹெவெஷூா விஸூஹுெவெஷூா வொநஃ।

(யசுர். வே. ௪. ௫. ௪. ௧)

"விரூபர்க்கும் விசுவரூபர்க்கும் நமஸ்காரம்" என்று சுருதி கூறுகின்றது. சிவபெருமானுடைய சாமியகுணங்களுடையர்களாய் நித்திய சித்தர்களாயுள்ளார்க்கு ரூபமிலதாதலும் அநேகரூபங்கொள்ளுதலும் உளவாம். அநே

கசரீரமுள்ளவாய் விசுவரூபசரீரமெடுத்தலாற் சிவபெருமானுடைய சரீரங்கள் எவ்வாறோ, அவ்வாறே நீலகண்டத்துவாதி இலக்ஷணங்கள் அவர் சாமீப்பியமுண்டாயினார்க்கு உளவாம்; சிலர்

நீலக்ரீவா: ஶிதிகண்டா: (யசுர். வே. ச. ரு. கக. க)

"நீலக்கிரீவர் சிதிகண்டர்" என்றற்றொடக்கத்தனவாகச் சுருதிகள் கூறலான்.

(௧௪) இன்னனம் எவர்கள் இயமாதியுடையராய் வேதாந்த ஜன்னியமாகிய ஞானயோகத்திலே தாற்பரியமுடையவர்களாயிருக்கின்றார்களோ, மேலே கூறிய குணங்களையுடைய சிவ சாதிருச்சியமுற்று அந்த முக்தர்கள் அந்தச் சிவனுடைய பரமபதத்தை அடைந்து நிரதிசய தாபரூபமாய்ச் சகிக்கவியலாத கோரமாயுள்ள சம்சாரமண்டலத்திலே மீளத்திரும்புவாரல்லர். அவரைச் சம்சார தருமம் மீளப்பற்றாது. ஆகலின், *"பிரமலோகத்தை அடைந்து மீளத்திரும்புவானல்லன்" என்று கூறப்பட்டது. சர்வஞ்ஞரும், சர்வசத்தியினரும், சர்வைசுவரிய சம்பன்னரும், சர்வானுக்கிரகரும், சர்வகர்ம சமாராத்தியரும், நிரஸ்த சமஸ்த தோஷகளங்கரும், நிரதிசய மங்கலகுண இரத்நாகரரும், விரூபாக்ஷருமாகிய பரப்பிரம உமாபதியாருடைய எல்லையிறந்த ஆனந்த பிரகாசமாய், நித்தியமாய், அக்ஷயமாயுள்ள உலக பதத்தை அடைந்தவர்கள் சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடையவர்களாய் மீளத்திரும்புதலின்றி அங்கே வசிக்கின்றனர்.

யத்ர தேவா அம்ருதமானஶானாஸ் த்ருதீயே தாமந்நத்யைரயந்த।
(தைத். ஆரணி. ௧0. க. ௪)

---

*வேதாந்த சூத்திரத்து முதற் சூத்திரத்திற் கண்ட பிரமம் சத்தியோடியைந்த சிவபெருமான் என்று சிவபுராண கைலாசசங்கிதை (கக: ௬0-ஆஞ்) சுலோகங் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆகலின் இந்தப் பிரமம் (உ௩௭-ஆம், உ௩௯-ஆம்) உபக்கிரமணிகா இலக்கங்களிற் கண்ட (திருக்குறள், ௩) ஏகினுறுகிய ஆதிபகவன் மேற்று. (உ௪௭-ஆம்) இலக்கந் தொடுத்து (உ௯௭-ஆம்) இலக்கம் வரையினும், தகராதிகரணத்தினும் (க. ௩. ௧௩), அலோபாதிகரணத்தினும் (௩. ௩. ௩௩), மற்றைய அதிகரணங்களினும் ஒரே முடிவுற மிகுத்துத் துதிக்கப்பட்ட திருச்சிற்றம்பலத்தினராகிய சிஷ்கள பரப்பிரம சிவபிரானை ஆப்பிராயணாதிகரணத்தினும் (௪. க. கஉ), ஆத்துமாதிகரணத்தினும் (௪. க. ௩-ஆம், க. ௩. ௨க-ஆம்) கண்டவாறு, இடையீடின்றி மரணாந்தம் வரையும் சேர்தலாகிய உபாசனையினாற் பரமசாமியமுற்ற சிவயோகிகள் (௪. ௪. உஉ-ஆஞ்) சூத்திரத்துக்கு மூலமாய்நின்ற இந்த (சாந். அ. ௧௫. க-ஆஞ்) சுருதியிற் கண்ட பிரமலோகம் எனப்படும் சிவலோகமாகிய நிலத்தில், ஆத்தியானாதிகரணத்திற் (௩. ௩. ௧௪) கண்டவாறு சிவசாரூப்பியமடைந்து, (தைத். உ. க. ஆம், சாந். அ. கஉ. ௩) ஆம் கண்டவாறு பிரமானந்தத்தோடு சமஸ்தபோகங்களையும் துய்த்து ரமித்துக் கிரீடித்து நீடுவாழ்வார் என்று இந்த இறுதி அதிகரணத்தினால் நிரூபிக்கப்பட்டது.

சிவாகமங்களையும் சிவாலயங்களையும் ஆதிசைவர்களாகிய சிவத்துவிஜர்களையும் நிந்தனை செய்யும் இயற்கை பூண்ட மாயாவாதிகளுடைய வாயை அடக்குதற்கும், வேதோபப்பிருங்கண தெறியானே சைவசமயத்தை ஸ்தாபனஞ் செய்தற்கும் வாய்ந்த மகாபாசுபதசாஸ்திரமாகிப் பெருமை படைத்தது இந்த நீலகண்டசிவாசாரியாருளிய வைதிக சைவபாஷ்யமேயாம்.

(கஶ) "எங்கே வித்துவான்கள் சிவானந்தந் துய்த்து மூன்றுவதிலுள்ள தானங்களுட் பிரவேசிக்கின்றார்களோ" என்று சுருதி கூறுவதால் நிரதிசயானந்த பிரகாசகனமாகிய பரப்பிரம சிவத்திலே சமரசத்தை அடைந்த முக்தர்கள் பிரகாச சரீரங்களையுடையவர்களாய், சர்வஞ்ஞர்களாய், சர்வகதர்களாய், சாந்தர்களாய், பரிபூரணர்களாய் நித்திய பரமைசுவரியங்களுக்கு ஆதாரர்களாய், முற்றும் நீங்கிய மலாவரணங்களையுடையவர்களாய், யாண்டும் சிவத்தைப் பார்ப்பவர்களாய், அந்தச் சிவபிரானுரை ஆன்மாவாகக் கொண்டவர்களாய், அவர்க்குரிய பரமாகாசத்திலேயுள்ளனவாம் விரும்பிய ஸ்தானங்களை அடைந்து இஷ்டப்பிரகாரம் வாய்த்த சகல போகங்களைத் துய்ப்பவர்களாய், அவரோடு கூட எப்போதும் யாண்டும் பிரகாசிக்கின்றார்கள் என்பதாம். சர்வம் சமஞ்சசமே.

ஶ்வேதாசார்யஸுஹ்ருத்பாதயுக³ளீஸேவநோஜ்ஜ்வலா |
க்ருதஸ்ஸோயம் மயா பா⁴ஷ்யம் கேவலம் ப⁴க்திமாத்ரத꞉ ||

சுவேதாசாரியருடைய இரு பதங்களுக்குந் தொண்டு செய்தலாற் பிரகாசிக்கப்பட்ட மார்க்கத்தினுற் கேவலம் பக்தி மார்க்கமாய் இந்தப் பாஷ்யம் எம்மால் இயற்றப்பட்டது.

ஸ்ரீநீலகண்டசிவாசாரியர்

அருளிய

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாஷ்யம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியசுவாமிகள் விம்பப் பிரதிஷ்டை.

☞ மத்துவர்களுக்கு ஆனந்ததீர்த்தரும், வைணவர்களுக்கு இராமாநுஜாசாரியரும், ஏகான்மவாதிகளுக்குச் சங்கராசாரியரும் ஆசாரியர்களாய் அமர்ந்தாற் போல, சிவபெருமானை ஆண்டவர் என்றும் ஆன்மாக்களை அடிமை என்றுங் கொண்டு சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் சிவத்துவிஜர்களுக்கும் மற்றைச் சைவசமயிகளுக்கும் ஆசாரியராய், (ஒரே முக்கியப் பொருள் பொதிந்த) பிரமசூத்திரங்களுக்குச் சத்தியார்த்தஞ் செய்து வைதிகசைவசமயஸ்தாபனஞ் செய்த பரமாசாரியராகிய ஸ்ரீநீலகண்டசிவாசாரியரது திருவுருவவிம்பத்தைத் தொண்டைமண்டலத்து வடதிருமுல்லைவாயிலிற் போல மற்றைய சிவாலயங்கடோறும் பிரதிட்டை செய்து ஆவணி மாசத்துப் பூசநக்ஷத்திரத்திற் குருபூசை செய்து, இராப்போதிலே உற்சவம் நடாத்தி வைதிக சைவசமயப் பிரபுதிலகர்கள்யாவரும் பெரும் புகழையும் சிவபுண்ணியத்தையும் பெற்று நீடு வாழ்வாராக.

இங்ஙனம்,
ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

பிழைதிருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬	ச	பதினெட்மோகிய	எட்மோகிய
எ	சக	இர்கியாயக்கொண்டே	ஜஹ்ராத்ராஜ் (பா. வி. உ. உ. ௩ச) என்னுஞ் சூத்திரத்தைப் பொருட்படுத்தாது.
௩ச	௩0	ஜஹவநா	ஜஹ்வநா
ஷை	ஷை	கஹவவ	ஜஹ்வவ
ஷை	ஷை	ஜஹவநஃ	ஜஹ்வநஃ
கூச	க	பட்டது	பாலது
அஅ	கஉ	ஆயுர்யோ	ஆயுர்ாயோ
அக	க	உ) ற்	க) ற
உ00	கஅ	சூக்திர	சூத்திர
உஎக	உ௩	ஷிதாஃ	ஷிதாஃ
உஅ0	௩உ	தாமடிமை	தாமெடிமை
உஅக	௩க	துய்த்துபுத்	துய்த்துப்பு
உகக	ச	வ்யஜ	வ்யஜ்
உகஉ	க௬	ஸம்ய்யா	ஸம்ய்யர்
ஷை	கக	வாயிவீ	வ்யயிவீ
௩00	உக	ஹுமிஷ	ஹுமிஷ
௩0உ	௩க	வித்தலா	வித்தாலா
௩0௩	க	ரமிய	ரமிஷ
௩௩0	உக	என்று	என்றன்றோ
௩௩ச	௩0	எதனுற்	எதனுல்
௩சக	உச	படுவனவாய்	படுவதாய்
௩௬அ	க	இங்ஙனம்	(ஆக்ஷேபம்) இங்ஙனம்
௩எஉ	௩உ	(எ)	(அ)
௩எஅ	எ	உக. ௩க	க0. உக. ௩க
௩எக	௩எ	ஒஹுரு0	தஹுரு0
௩கஉ	உ௩	யாரிணி	யாரிணீ
ச00	௩0	ரூஷுஃ	ரூஷுஃ
ச0க	உக	கழ॥	கழ (வாயு. உத். ச: உஅ)
சகக	உ௩	போலிகளே	போலிகளே
சஉக	கஉ	களஷு	கீளஷு
சஉச	உஎ	னின்று	னின்றுமுதற்கண்
௬உக	எ	என்பதுவித்தி	வித்தி
௬௩0	௬	ரகயசிம்	ரகசியம்
௯0எ	உ0	வானன்	வானவன்

சுக-ஆம் பக்கத்து ச-ஆம் வரியில் "தேவனென்றே" என்றற்றொடக்கத்த எழு வரிகளையும் நீக்கி வாசிக்க.

பிருகதாரணியம் (ச. ச. ௬-இற்) காணப்படும்.

𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃।

"(பரம) ஆன்மாவானவர் காணற்பாலர், சிரவணஞ்செய்யற்பாலர், மனனஞ் செய்யற்பாலர், தியானஞ் செய்யற்பாலர்" என்னும் மந்திரத்துக்கு உபப்பிருங்கணமாக உள்ளது

𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌶𑌂𑌭𑍁𑌃 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌶𑍍𑌚𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍈𑌰𑌿𑌤𑌿 𑌶𑌂𑌕𑌰𑌃॥

"சம்புவானவர் எஞ்ஞான்றும் கேட்கற்பாலர், பொருந்துமாற்றாற் சிந்திக்கற்பாலர், வேதாந்தங்களால் எஞ்ஞான்றும் அறிந்து சங்கரர் தியானிக்கற்பாலர்" என்னும் உபதேசகாண்டத்து (சஅ: அ, கூ-ஆம்) சுலோகமேயாம். உபதேசகாண்டத்துள்ள சுலோகத்திற் சம்பு சங்கரர் என்னும் திருநாமங்களோடு சைவபாஷ்யத்தில் இந்தச் சுலோகம் காணப்பட்டதேயாக, பிற்காலத்து மாயாவாத பண்டிதரால் அத்திருநாமங்கள் தொலைத்துச் சுலோகம் சரிப்படுத்தப்பட்டிருந்தமையின், மேலே குறித்த உபதேசகாண்ட சுலோகத்தையும் அதன் அர்த்தத்தையும் (கஅக-ஆம்) பக்கத்து (கூ-ஆம்) வரியில் 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯 என்று தொடங்கி கரு-ஆம் வரியில் எதுக்கள் என்று முடியும் வரையுமுள்ள வரிகளுக்குப் பதிலாகக் கொண்டு வாசிக்க.